பெருஞ்சொல்லகராதி

தொகுதி ஏழு

கெ - ஙொம்மா



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 010

UG 7232

பெருஞ்சொல்லகராதி

தொகுதி ஏழு

கெ – ஙொம்மா



தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

ISBN : 978-81 -7090-464-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 421

திருவள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி செப்டம்பர் - 2016.

நூல்	:	பெருஞ்சொல்லகராதி, தொகுதி - 7
ஆசிரியர்	:	முனைவர். தா.இராபர்ட் சத்திய சோசப்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2016
பக்கம்	:	264
தாள்	:	TNPL மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டெம்மி 1 x 4
நூற்கட்டு	:	சாதாகட்டு
விலை	:	ரூ. 480.00
படிகள்	:	500
வெளியீடு	:	தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
அச்சு	:	குழந்தை இயேசு அச்சகம், தஞ்சாவூர்.

முனைவர் க. பாஸ்கரன்
துணைவேந்தர்

மின் அஞ்சல்: rg.bhaskaran@gmail.com
இணையதளம் : www.tamiluniversity.ac.in



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613010 – தமிழ்நாடு, இந்தியா
அலுவலகம் : 04362-227040
இல்லம் : 04362-226741
நிகரி : 04362 226159

அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மிகப்பெரிய பணிகளுள் பெருஞ்சொல்லகராதி உருவாக்கமும் களஞ்சிய உருவாக்கமும் முதன்மையானவை. பிற பல்கலைக்கழகங்கள் செய்ய முடியாத இத்தகு அரிய பணிகளை நிறைவேற்றவே தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. தமிழின் சொற்பெருக்கத்தையும் அதன் சொற்பொருண்மைத் திறனையும் உலகுக்கு உணர்த்தும் சான்றுகளாக பெருஞ்சொல்லகராதிகள் விளங்கி வருகின்றன.

பெருஞ்சொல்லகராதி ஏழாம் தொகுதி இன்று வெளி வருவதைக் கண்டு மிகவும் பெருமை கொள்கிறேன். தமிழ்ச் சொற்களின் ஆழ அகலங்களை இதில் இடம் பெற்றுள்ள சொற்களும் அவற்றுக்கான பொருள் விளக்கங்களும் சிறப்பாக உணர்த்தி நிற்கின்றன.

உலகின் தொன்மையான மொழிகளுள் மூத்த மொழியாக விளங்கும் தமிழ்மொழியின் வேர்ச்சொல் வளம் மிகப் பெரிது. ஏனைய பழம்பெரும் மொழிகளை ஒப்பிட நம் தமிழுக்கான சொற்பரப்பு பெருமைக்குரியது. இதனை உறுதி செய்யும் சான்றாக இப்பெருஞ்சொல்லகராதி திகழ்கிறது.

இப்பெருந்திட்டத்தில் பணிபுரிந்த அனைத்துப் பணியாளர்களையும் பாராட்டி மகிழ்கிறேன். இத்தகைய அகராதிப்பணி தொடர் பணியாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த வண்ணம் இருக்கும் எனும் உறுதியையும் இந்நூலின் வழி அறிவிப்பதில் பெருமையடைகிறேன்.

(க. பாஸ்கரன்)

பதிப்புக்குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் தா. இராபர்ட் சத்திய சோசப்

பதிப்பாசிரியர்கள்

திரு. ஆ.மதியழகன்

முனைவர் ஜி.வசந்தா

முனைவர் ச. நீலாயதாட்சி

முனைவர் சி. சேமசுந்தரி

திட்டத் தகைமையாளர்கள்

சத்தியா. சு.

மகாலெட்சுமி. த.

மகேசுவரி. நீ.

கணேசமூர்த்தி. வெ.

பெருஞ்சொல்லகராதியில் பணிபுரிந்தோர்

முதன்மைப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் மு.அருணாச்சலம்
முனைவர் தா.வே. வீராசாமி
முனைவர் முத்து. சண்முகம்பிள்ளை
முனைவர் சு.சிவகாமசுந்தரி
முனைவர் பழநி. அரங்கசாமி
முனைவர் இராம. சுந்தரம்
முனைவர் பெ. மாதையன்
முனைவர் சே. பிரேமா
முனைவர் எச். சித்திரபுத்திரன்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் கொ.இலட்சுமணசாமி
திரு. ச.கி. இராமராசன்
திரு. செ. வைத்தியலிங்கன்
திரு. ஜி. சேசாத்திரி
திரு. க. இராமையன்

தொழில் நுட்ப உதவியாளர்

திரு.பா.வே.நாகராசன்

சொல்திரட்டுநர்

திரு.இரா. அம்பைசங்கரன்

திரு.அ. வைத்தியநாதன்

திரு.மா. கணேசன்

திரு.க.வ. முத்தையா

முனைவர் பெ. மாதையன்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

முனைவர் சா. அறிவுடைநம்பி

முனைவர் வ. குருநாதன்

சொல்லடைவுப் பணியாளர்கள்

செல்வி சா. சத்தியம்மாள்

திருமதி யசோதா

திருமதி மா. கௌரி

திருமதி அ. இரசியா

திருமதி இலலிதாம்பிகை

திருமதி வே. மணிமொழி

முனைவர் ந. சாந்தி

முன்னுரை

தமிழ்மொழி பண்பட்ட வளம் மிக்க செம்மொழியாகும். ஒரு மொழியின் சொல் வளத்தையும் பொருள் வளத்தையும் பதிவு செய்து ஆவணப்படுத்தும் காப்பகங்களாக விளங்குவது அகராதிகளாகும். ஒரு மொழி வளர்ச்சியடைவதற்கும் அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்படுவதற்கும் அகராதிகள் மற்றும் களஞ்சியங்கள் பெரிதும் உதவுகின்றன. தமிழ்மொழியில் இலக்கிய இலக்கணப் படைப்புகள் மூலமும் புதிய கண்டுபிடிப்புகள் மூலமும் பல்துறைகளிலும் காலந்தோறும் ஏற்பட்டுள்ள சொல் வளர்ச்சியையும் பொருள் வளர்ச்சியையும் பதிவு செய்து ஆவணப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழ்ப் பல்கலைக்கழகப் பெருஞ்சொல்லகராதித்திட்டம் துவங்கப்பட்டது. காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள சொல், பொருள் மற்றும் மொழித்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விரிவான ஒருமொழி அகராதியை உருவாக்கும் பணியானது தமிழ்ப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களால் 1983-இல் தொடங்கப்பட்டது.

சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் (1992 வரை) ஆய்வு நூல்கள், இதழ்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள், பள்ளிப்பாடநூல்கள் போன்ற பல்வேறு நூல்களிலிருந்தும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. முந்தைய தொகுதிகளில் பின்பற்றப்பட்ட பதிவமைப்பு நெறிமுறைகளே இத்தொகுதியிலும் பின்பற்றப்பட்டுள்ளன. பதிவுகளில் சொல், இலக்கணக் குறிப்பு, பொருள், மேற்கோள் மற்றும் நூற்சுருக்கம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. கால வரிசையில் மேற்கோள்களைத் தருவது இந்த அகராதியின் தனிச்சிறப்பாகும். இவ்வகராதி சொற்களின் பொருள்களைத் தெரிந்துகொள்வதற்கு மட்டுமல்லாமல் சொல்லாய்வு, சொற்பொருண்மை ஆய்வு, வரலாற்று அடிப்படையில் சொல்-பொருள் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்தல் மற்றும் பொருண்மை அடிப்படையில் கலைச்சொற்களை உருவாக்குதல் போன்ற ஆய்வுப்பணிகளுக்கும் ஒரு அடித்தளமாக அமைகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பெருஞ்சொல்லகராதியில் முதன் நான்கு தொகுதிகள் வெளிவந்துள்ளன. 5 மற்றும் 6-ஆவது தொகுதிகள் அச்சில் உள்ளன. இத்தொகுதியில் **'கெ'** முதல் **'கௌனம்'** வரையிலான **5947** சொற்களும் **'ஙகர'** வரிசையில் **'ங்'** முதல் **'ஙொம்மா'** வரையிலான **10** சொற்களும் இடம் பெற்றுள்ளன.

பெருஞ்சொல்லகராதியின் 5,6,7 ஆகிய தொகுதிகளைத் தயாரித்து வெளியிடுவதற்குத் தமிழக அரசு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.15 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. மதிப்புயர் துணைவேந்தர் முனைவர் **ம.இராசேந்திரன்** அவர்களின் தூண்டுதலாலும், வழிகாட்டுதலாலும் 5 மற்றும் 6 ஆம் தொகுதிகள் நிறைவு செய்யப்பட்டு அச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இப்போது 7 ஆவது தொகுதி பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

துறையின் உதவிப்பேராசிரியர் திரு.ஆ.மதியழகன் அவர்கள் இத்தொகுதியின் பதிப்புப்பணியை ஏற்றுக்கொண்டு செவ்வனே நிறைவு செய்துள்ளார். இப்பணியை நிறைவு செய்வதற்குத் துணை நின்ற துறையின் ஆசிரியர்களுக்கும் இத்தொகுதியின் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டு அயராது உழைத்த திட்டத்தகைமையாளர்களுக்கும் கணினித் தட்டச்சர் க.நித்யாவிற்கும் நன்றி.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான பெருஞ்சொல்லகராதியின் ஏழாவது தொகுதி செம்மையாய் வெளிவர எல்லாவகையிலும் உதவிய அனைவருக்கும் நன்றிகள் உரியன.

தா. இராபர்ட் சத்திய சோசப்

முக்காலங்களில் வினைகள் வேறுபட்டு வழங்கும் முறையைக் காட்டும் வாய்பாடு

வ.எண்	வினைஅடி	நிகழ்கால முற்று	இறந்தகால முற்று	எதிர்கால முற்று	நிகழ்கால வினையெச்சம்
1.	செய்	செய்கிறேன்	செய்தேன்	செய்வேன்	செய்ய
2.	ஆள் ஆளு	ஆள்கிறேன் ஆளுகிறேன்	ஆண்டேன்	ஆள்வேன் ஆளுவேன்	ஆள
3.	கொல் கொல்லு	கொல்கிறேன் கொல்லுகிறேன்	கொன்றேன்	கொல்வேன் கொல்லுவேன்	கொல்ல
4.	அறி	அறிகிறேன்	அறிந்தேன்	அறிவேன்	அறிய
5.	ஆக்கு	ஆக்குகிறேன்	ஆக்கினேன்	ஆக்குவேன்	ஆக்க
6.	நடு	நடுகிறேன்	நட்டேன்	நடுவேன்	நட
7.	உண் உண்ணு	உண்கிறேன் உண்ணுகிறேன்	உண்டேன்	உண்பேன் உண்ணுவேன்	உண்ண
8.	தின் தின்னு	தின்கிறேன் தின்னுகிறேன்	தின்றேன்	தின்பேன் தின்னுவேன்	தின்ன
9.	கேள்	கேட்கிறேன்	கேட்டேன்	கேட்பேன்	கேட்க
10.	கல்	கற்கிறேன்	கற்றேன்	கற்பேன்	கற்க
11.	தீர்	தீர்க்கிறேன்	தீர்த்தேன்	தீர்ப்பேன்	தீர்க்க
12.	நட	நடக்கிறேன்	நடந்தேன்	நடப்பேன்	நடக்க
13.	தா,சா, காண் முதலியன முதனிலை திரிந்தும் பிறவாறும் வேறுபடும் வினைகள்.				

குறியீடுகள்

	குறியீடு	விளக்கம்
→	வலமுறை அம்புக்குறி	'காண்க' எனும் பொருளது
←	இடமுறை அம்புக்குறி	'இதிலிருந்து' எனும் பொருள்
+	கூட்டல்குறி	'முன்னொட்டு' அல்லது 'நிலைமொழி' யுடன் தொடர்ந்து வரும் மொழியைக் குறிப்பது
–	இடைவைப்புக்குறி	1. சொல்லுக்குப் பொருள் சுட்டல் 2. வினை முதனிலையைப் பிரித்துச் சுட்டல் 3. மேற்கோள் ஆசிரியரைக் காட்டல்
...	விடுபாட்டுக்குறி	மேற்கோளிடையே 'விடுபட்ட பகுதி'யைக் குறிப்பது
( )	பிறையடைப்புக்குறி	விளக்கத்திற்குரிய குறிப்புகள் குறுக்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கியவை
/	மேல்வலச் சாய்வுகோடு	'அல்லது' எனும் பொருளது
" "	மேற்கோள்குறி	சொல் அல்லது சொற்றொடர்களை மேற்கோளாக ஆண்டதைக் குறிப்பது
, ; : . !		இக்குறிகளை இடம்நோக்கி எளிதில் உய்த்துணரலாம்

நூல்மேற்கோள் ஆட்சிமுறை

1.	நூல்மட்டும்	செ.ப.அக.
2.	நூல், பக்க எண்	மலைய.ப.120
3.	நூல், அடி /நூற்பா/ கண்ணி / பாடல் எண் (உரை)	பொருந.115 நன்.125 குலோத்.உலா 11 சீவக.1372
4.	நூல், பாடலெண், அடியெண்	கலித்.10,10
5.	நூல்,உட்பிரிவின் எண் /பெயர், பாடல் / நூற்பா /கண்ணி /அடிஎண் (உரை)	திருவால.பு.18,10 திருக்கழுக்.பு.தினகர.14 சிலப்.6,125 தொல்.எழுத். 14நச்.
6.	நூல், தொகுதி எண்/ சிறுபிரிவு எண்/ பெயர், பக்கம்/ அடி /தொடர் எண்	தெ.இ.க.1,29 கலைச்.அக.1ப.24
7.	நூல். தொகுதி /எண் உட்பிரிவின் பெயர்/ எண், பாடலெண்/ கண்ணி/ பக்க எண்	சித்.பா.1,1,10 சித்.பா.1 சிவயோக.ப.418
8.	நூல், பெரும்பிரிவு எண் /பெயர், சிறுபிரிவு எண் /பெயர், பாடல் /அடி /வசனஎண்	பெருங்.1,36,45 கந்தபு. 4,12,158 விவிலி.மத்தேயு 4,4
9.	நூல், பெரும்பிரிவு எண்/ பெயர், சிறுபிரிவு எண் /பெயர், உட்பிரிவு எண் /பெயர், பாடலெண்	குமாரசு.சென்னை.2,2,8
10.	நூல், ஆசிரியர், பாடலெண்	தனிப்பா.ஔவை,10
11.	ஆசிரியர், நூல், பக்கவெண்	சித்பவா.இராமா.ப.12
12.	ஆசிரியர், நூல் பாடல் /கண்ணி /அடிஎண்	ஞான.உபதேசகா.1109
13.	ஆசிரியர், நூல், தொகுதி எண் /உட்பிரிவு எண் /பெயர், பாடலெண்	கோனேரி.உபதேசகா.515 சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.25 கண்ண.திரை.பா.1.5

14.	ஆசிரியர், நூல், பாடலெண், அடியெண்	குமர.நான்.மாலை 17,10
15.	ஆசிரியர், நூல், பெரும்பிரிவு எண் /பெயர், உட்பிரிவு எண் /பெயர், பாடலெண்	கம்பரா.5,5,125 செ.பாகவத.9,16,6
16.	நூல், நூற்பா, பிரிவுஎண் /பெயர் /பாடல்/ மேற்கோள் எண்	சி.போ.4,13
17.	நூல், பெரும்பிரிவு, (நூற்பா) பாடலெண்	சி.சி.சுப.145 சி.சி.சுப.1,5
18.	பாடநூல், வகுப்பு எண் /பெயர், பக்க எண்	அறிவி.9 ப.20
19.	நூல், பெரும்பிரிவு எண், பா வகை முதலியவற்றின் எண் /சிறுபிரிவு எண்/ உட்பிரிவு எண்	இராமநா.1,1 இராமநா.6,42 தரு2
20.	நூல், பெரும்பகுதி, சிறுபகுதி, பெரும் பிரிவு, உட்பிரிவு, பாடலெண்	சூத.எக்கிய. உத்.பிரமகீதை.10,3

பிற சுருக்கங்கள்

1.	அகப்.	அகப்பொருள்
2.	அடிக்.	அடிக்குறிப்பு
3.	அடியார்க்.	அடியார்க்குநல்லார் உரை
4.	அணி./அணியி.	அணியிலக்கணம்
5.	அந்.வ.	அந்தணர் வழக்கு
6.	அரபு.	அரபுச்சொல்
7.	அரும்.	அரும்பத உரையாசிரியர்
8.	அறிவி.வ.	அறிவியல் வழக்கு
9.	ஆங்.	ஆங்கிலம்
10.	ஆறா.	ஆறாயிரப் படி
11.	இ.இ.சொ.	இணைப்பு இடைச்சொல்
12.	இங். வைத்.	இங்கிலீசு வைத்தியம்
13.	இசுலா. / இசுலாமி.	இசுலாமியச் சமயம்
14.	இசுலாம்.வ. / இசுலா.வ.	இசுலாமியர் வழக்கு
15.	இசை.	இசைச் செய்திகள்
16.	இசையி.	இசையியல்
17.	இ.சொ.	இடைச்சொல்
18.	இந்தி	இந்தி
19.	இராமநாத.வ.	இராமநாதபுரம் வழக்கு
20.	இலக்.	இலக்கணம்
21.	இலக்கி.	இலக்கியம்
22.	இலங்.வ.	இலங்கை வழக்கு
23.	இலத்தீன்.	இலத்தீன் மொழி
24.	இளம்.	இளம்பூரணர்
25.	இறையி.	இறையியல்

26.	உயிரி.	உயிரியியல்
27.	உருது.	உருது
28.	உரைமேற்.	உரைமேற்கோள்
29.	எ டு.	எடுத்துக்காட்டு
30.	எழுத்து.	எழுத்திலக்கணம்
31.	ஏ.வி.	ஏவல் வினை
32.	ஒட்டக்.	ஒட்டக்கூத்தர்
33.	ஔவை.	ஔவையார்
34.	கட்ட.வி.	கட்டடவியல்
35.	கணக்.	கணக்கு
36.	கணக்கதி.	கணக்கதிகாரம்
37.	கணிதவி. / கணித.	கணிதவியல்
38.	கப்.வ.	கப்பல் வழக்கு
39.	கம்பர்	கம்பர்
40.	கல்.	கல்லாடனார் உரை
41.	கல்.வ.	கல்வெட்டு வழக்கு
42.	கல்வி.வ.	கல்வி வழக்கு
43.	கல்வெட்.	கல்வெட்டு
44.	கன்.வ.	கன்னியாகுமரி வழக்கு
45.	காண்டி.	காண்டிகையுரை
46.	காப்.	காப்பியம்
47.	கால்.இ.	கால்நடைவியல்
48.	காளமே.	காளமேகப் புலவர்
49.	காளிமுத்து.	காளிமுத்துப் புலவர்
50.	கிறித்.	கிறித்தவம்
51.	குய.வ.	குயவர் வழக்கு
52.	குறிப்.	குறிப்புரை

53.	கொங்கு.வ.	கொங்குநாட்டு வழக்கு
54.	கோவில் வ.	கோவில் வழக்கு
55.	கோவை வ.	கோயம்புத்தூர் வழக்கு
56.	சங்கர நமச்.	சங்கர நமச்சிவாயர் உரை
57.	சமண.	சமணம்
58.	சமய வ.	சமய வழக்கு
59.	சவ்வாது.	சவ்வாதுப்புலவர்
60.	சிவஞா.	சிவஞானம் சித்தியார்
61.	சிவாக்.	சிவவாக்கியார்
62.	சிற்./சிற்ப.	சிற்பம்
63.	சி.பாயி.	சிறப்புப் பாயிரம்
64.	சீட்டு.வ.	சீட்டுக்கம்பெனி வழக்கு
65.	செங்.வ.	செங்கற்பட்டு வழக்கு
66.	செட்டி.வ.	செட்டியார் வழக்கு
67.	செ.நா.வ. / செட்.வ.	செட்டிநாட்டு வழக்கு
68.	செய்.	செய்யுள்
69.	செய்தி.வ.	செய்தித்தாள் வழக்கு
70.	சென்.வ.	சென்னை வழக்கு
71.	சேனா.	சேனாவரையர் உரை
72.	சைவ.	சைவம்
73.	சைவசி. / சைவசித்.	சைவ சிந்தாந்தம்
74.	சைன.	சைன சமயம்
75.	சொக்கநாதப்.	சொக்கநாதப் புலவர்
76.	சோதிட வ.	சோதிட வழக்கு
77.	சோழ.செட்.வ.	சோழநாட்டுச் செட்டியார் வழக்கு
78.	ஞானப்.	ஞானப்பிரகாசம்
79.	தஞ்.வ.	தஞ்சை வழக்கு
80.	தத்./ தத்துவ. / தத்து.	தத்துவம்

81.	தமிழாக்.	தமிழாக்கம்
82.	தர்க்க.	தர்க்கம்
83.	தர்க்கவி / தருக்கவி.	தருக்கவியல்
84.	தற்.வ.	தற்கால வழக்கு
85.	தற்சி.பாயி.	தற்சிறப்புப் பாயிரம்
86.	தாவர.	தாவரவியல்
87.	திருச்சி வ.	திருச்சிராப்பள்ளி வழக்கு
88.	திருநெல்.வ.	திருநெல்வேலி வழக்கு
89.	து.வி.	துணை வினை
90.	தெய்வச்சி.	தெய்வச்சிலையார் உரை
91.	தென்.ச.வ.	தென்னார்க்காடு சலவைத்தொழிலாளர் வழக்கு
92.	தென்னார்க்.உப்.வ.	தென்னார்க்காடு உப்பளம் வழக்கு
93.	தென்னார்க்.வ.	தென்னார்க்காடு வழக்கு
94.	தொ.வ.	தொழில் வழக்கு
95.	தொன்.	தொன்மம்
96.	நகர.வ.	நாட்டுக்கோட்டை நகரத்தார் வழக்கு
97.	நச்.	நச்சினார்க்கினியர் உரை
98.	நாஞ்.வ.	நாஞ்சில் நாட்டு வழக்கு
99.	நாட்.பா.	நாட்டுப்பாடல்
100.	நாட்.வ.	நாட்டு வழக்கு
101.	நாட்டி.	நாட்டியம்
102.	நிரம்ப.	நிரம்ப அழகிய தேசிகர் உரை
103.	நீதி.வ.	நீதிமன்ற வழக்கு
104.	நெசவு.	நெசவுத்தொழில்
105.	ப.	பக்கம்
106.	பஞ்சாங்.	பஞ்சாங்க வழக்கு

107.	பதி.	பதிகம்
108.	பரத.வ.	பரதவர் வழக்கு
109.	பரிமே.	பரிமேலழகர் உரை
110.	பன்னீ.	பன்னீராயிரம் படி
111.	பா.பே.	பாடபேதம்
112.	பி.சே. / பிற்.சேர்.	பிற்சேர்க்கை
113.	பிரஞ்.	பிரஞ்சுமொழி
114.	புதுவை வ.	புதுச்சேரி வழக்கு
115.	புரா.	புராணம்
116.	புறப்.	புறப்பொருள்
117.	பெ.	பெயர்
118.	பெ.அ.	பெயரடை
119.	பேரா.	பேராசிரியருரை
120.	பொருளி.	பொருளியல்
121.	பௌத்.	பௌத்தம்
122.	மதுரை.வ. / மது.வ.	மதுரை வழக்கு
123.	மயிலை.	மயிலைநாதர் உரை
124.	மருத். / மருத்.வ.	மருத்துவம்
125.	மறைஞா.	மறைஞான சம்பந்தர்
126.	மீன.வ.	மீனவர் வழக்கு
127.	முக.	முகவுரை
128.	முன்.	முன் குறித்த நூல்
129.	மூவா.	மூவாயிரம் படி
130.	மேற்.	மேற்கோள்
131.	மொழியி.	மொழியியல்
132.	யாப்.	யாப்பிலக்கணம்
133.	யோகா.	யோகாசனம்

134.	வட்.வ.	வட்டார வழக்கு
135.	வர.	வரலாறு
136.	வருவாய்.வ.	வருவாய்த்துறை வழக்கு
137.	வானவி.	வானவியல்
138.	வி.	வினை
139.	வி.அ.	வினை அடை
140.	வியங்.	வியங்கோள்
141.	வியா. / வியாக்.	வியாக்கியானம்
142.	விருத்தி.	விருத்தியுரை
143.	விலங்.	விலங்கியல்
144.	விளையா.	விளையாட்டு
145.	விளையா.வ.	விளையாட்டு வழக்கு
146.	வேளாண். / வேளாண்.வ.	வேளாண்மை வழக்கு
147.	வைண. / வைண.வ.	வைணவ வழக்கு
148.	வைணவ.	வைணவம்

மாதிரிப் பதிவுகள்

கெங்கை பெ. கங்கை. கிளர்சே ணிமயமுங் கெங்கையுஞ் சிந்துவும் (பெருங்.5,4,122).

1.தலைச்சொல்/ பதிவுச்சொல்

கெச்சிதம்[1] பெ. முழக்கம். கெதியுனதடி யென்று உயர்கதியவரும் கெச்சிதமிட் டார்கள் (ராகம்பிரியா.பிள்.4,7).

2. ஒத்த வடிவச்சொல் வரிசை எண்

கைகோள் (கைக்கோள்) பெ. தலைவன் தலைவியரின் களவு, கற்பொழுக்கங்கள். கைகோள் இரண்டிற்கும் உரிய தேவியர் (பரிபா.9,11 உரைக்குறிப்பு).

3.பதிவுச்சொல்லின் மாற்று வடிவம்

கோனோலை (கோன்+ஓலை) பெ. அரசாணை எழுதப்பட்ட திருமுகம் (தெ.இ.க.2,351).

4. கூட்டுச்சொல்லின் சொற்பிரிப்பு

கோது பெ. சங்கை. (யாழ்.அக.)

5. இலக்கணக்குறிப்பு

கோப்பழி – த்தல் 11 வி. பெ. சீரழித்தல். குருமாமணி யூசலைக் கோப்பழித்து (திருக்கோவை 161).

6. வினைச்சொல் என்பதைக் காட்டும் குறிப்பு

7. வினைத்திரிபு வகை எண்

கொற்றவுழிஞை பெ. (புறப்.) பகைவர் பதியைக் கைகொள்ளுதற்பொருட்டு அரசன் படையெடுத்துச் செல்லுதலைக் கூறும் புறத்துறை. (புற.வெண்.6,5)

8. துறைக்குறிப்பான்

கெடு[3]**–த்தல்** வி. (புராண.) பெ. பெரும்புகழ் பெறும்படி அருந்துயர் கெடும்படி (அரிச்.பு.பாயி.1)

9. இதிகாசக் குறிப்பு

கேட்டுமுட்டு பெ. (சமண.) புறச் சமயத்தோரைப் பற்றிக கேள்விப்பட்டதனால் சைனர் மேற்கொள்ளும்தீட்டு. கேட்டுமுட் டியானும் என் றியம்பி (பெரியபு.28,684)

10. மதக்குறிப்பு

குலமாரி பெ. ஒரு கிராம தேவதை. (நாட்.வ.)

11. நடைமுறைக் குறிப்பு.

கைகந்நிதானம் பெ. கையால் நிறை முதலியவற்றை மதிப்பிடுகை

(இலங்.வ.)

12. இடக்குறிப்பு

கைம்மா பெ. (துதிக்கையை உடைய்) யானை இலங்கொளி மருப்பிற் கைம்மா (கலித்.23,1)

13. விளக்கக் குறிப்பு

கையறை[3] பெ. 1. ஒழுக்கமின்மை. 2. ஒழுக்கநெறி.

14. சொற்பொருள் வரிசை எண்

கெடி[3] பெ. 1.1. இடம்... 1.2. ஊர்

15. தொடர்புடைய பொருள் வரிசை எண்

கெடிலநதி பெ. → கெடிலம்[1]-1, மங்களஞ்செய் கெடிலநதி (சரபேந்தி.குற.42,2).

16. குறுக்கு நோக்கீடு

கெந்தகம்[2] பெ. ஒருவகைத் தாதுப்பொருள். பாடாண கெந்தக சூதமு னாதிடும் பல தேடும் (பழனித்திரு.10,314).

17. சொற்பொருள்

கோட்டிறால் பெ. கொம்புத்தேன். கோட்டிறால் பல மதுவைத் சிந்து பொழிலினிடத்து (பழனித்திரு.13,1,11,10).

18. மேற்கோள் தொடர்

கோடணை[2] பெ. கொடுமை. இறைபிறர்க்கு நீரும் கோடணை நித்தையோடு அழிவுடைகுலத்தேன் ... உழுநனைத் தெரிந்தான் (தேம்பா.2,4,12).

19. மேற்கோள் தொடர் விடுபாட்டுக் குறிப்பு

கோடி[1] பெ. ஆடை. மின்னுக் கோடி உடுத்து. (சிலப்.11,45).

20.மேற்கோள் நூல்

கெ 'க்' எனும் மெய்யும் 'எ' எனும் உயிரும் இணைந்த கூட்டெழுத்து, க் + எ = கெ.

கெக்கட்டம் பெ. மிகச்சிரிக்கை. கெக்கட்டமிட்டுச் சிரிக்கிறான் (வின்.அக.).

கெக்கரி[1] பெ. கொடிவகை. (இலங்.வ.)

கெக்கரி[2]**-த்தல்** 11வி. மிக இனித்தல். (முன்.)

கெக்கரி[3]**-த்தல்** 11வி. 1.→கொக்கரி[3]-த்தல்-3. (செ.ப.அக.) 2.குலுங்கச்சிரித்தல்.(வட்.வ.) 3.வேதனை ஒலி யெழுப்புதல். கெக்கரித்து இரை விக்கி விக்கிக் கொண்டு மேயிது கெம்பாரே (சின்ன.குளுவ.27).

கெக்காரீசம் பெ. செங்கழுநீர். (சித்.அக.)

கெக்கலக்கேவெனல் பெ. பெருத்த ஓசையுடன் சிரித்தற் குறிப்பு. (நாட்.வ.)

கெக்கலி[1] பெ.1.மகிழ்வு. (யாழ்.அக.) 2.குலுங்கச் சிரிக்கை. (முன்.)

கெக்கலி[2]**-த்தல்** 11வி. 1.மகிழ்தல். கீழ் மேலிரு புரமும் கெக்கலித்துத் தொடை தட்டிக் குலவையிட்டு (சிவகங். சரித்.கும்.ப.64). 2.குலுங்கச் சிரித்தல். நத்தி விட்புலர் கெக்கலித்து நகைத்து வப்ப இயற்றினார் (திருவாமாத். பு.பூர்வ.21,70). 3.இறுமாப்பு சிரிப்பு செய்தல். கால் தூக்கி கணக்கப் பிள்ளைக்கு மாதம் பத்து போய் என்று பாடி கெக்கலிக்கிறார்கள் (காலடி.ப.27). 4.ஆர்ப் பரித்தல். கெக்கலித்துச் சுற்றி நடம் ஆடுமயிலே (காவியப்பாவை 111).

கெக்கலிகொட்டு-தல் 5வி. 1.→ கெக்கலி[2]-த்தல்-2. கண்டவர்ரெ வருங்கெக்கலி கொட்டவே (இராமநா.4,4 தரு 1). கெக்கலி கொட்டிச்சிரிப்பதைக் கேட்ட செவிகள் கிழிந்தவே (உதயம் காரிருள்.18). 2.ஏளனமாகச் சத்தமிட்டுச் சிரித்தல். (நாட்.வ.)

கெக்கலிப்படு-தல் 6வி. →கெக்கலி[2]-த்தல்-2. அக்களிப்போடு கெக்கலிப்பட (சர்வச.கீர்த்.186).

கெக்களம் பெ. →கெக்கட்டம். (யாழ்.அக.)

கெக்களி-த்தல் 11வி. 1.நெளிதல். (இலங்.வ.) 2.துருத்துதல். (முன்.) 3.தோல்வி காட்டுதல். (முன்.)

கெக்களிப்பு பெ. நெளிவு. (யாழ்.அக.)

கெக்கேபிக்கேனல் பெ. அர்த்தமில்லாப்பேச்சு. நீயும் அதே மாதிரி கெக்கேபிக்கேன்னு திண்ணையிலே உட்கார்ந்து பேசணும் (உயிர்த்.ப.131).

கெக்கைகொட்டிச்சிரி-த்தல் 11வி.→கெக்கரி[2] -த்தல்-2. (இலங்.வ.)

கெகராசி (கெசராசி) பெ. பூலா. (மலை அக.)

கெகலைவித்தை பெ. உலக மெல்லாம் மயக்கும் வித்தை. செகலை வித்தை இவள் ஆடும் வித்தை (கருவூ.பு.பூசா.5).

கெங்கரிப்பு பெ. பிடிபடாத ஆனந்தம். என்ன இன்னிக்கு அவளுக்கு என்ன கெங்கரிப்போ தெரியேலை (கோவை வ.).

கெங்காதீரம் பெ. கங்கைக்கரை. கெங்காதீரத்துத் தேசம் (பெருங்.1,36,220).

கெங்கை பெ. கங்கை. கிளர்சே ணிமயமுங் கெங்கையுஞ் சிந்துவும் (பெருங்.5,4,122). கெங்கையிடை குமரியிடை குரால் பசுக்கொன்றான் பரம்மகத்தி கொள்வான் (கல்.கோப்.சிங்.9,1227).

கெச்சக்காய் பெ. 1.கழற்சிக்காய். (செ.ப.அக.) 2.கழற் கொடி. (முன்.)

கெச்சங்கெட்டவன் பெ. நாணமில்லாதவன். (வட்.வ.)

கெச்சட்டம் பெ. பறவைகளில் மகிழ்ச்சி ஆராவாரம். (ரா.வட்.அக.)

கெச்சட்டிகை பெ. மகளிர் கழுத்தணிவகை. (நாட்.வ.)

கெச்சநெறி பெ. செல்லும் வழி. கெச்சநெறி கெச்சநெறி என்றே ஓதும் வாக்கினர் (சிவதர்ம.கோபுர.129).

கெச்சம்[1] பெ. 1.முல்லை. கெச்சம் என்பது முல்லை எனப்படும் (அக.நி.கெம்முதல்). 2.அரசு. (சங்.அக.)

கெச்சம்[2] பெ. மகளிர் காலிலணியும் சிறு சதங்கை. பெண்கள் அணிமணிக் கெச்சமடா (திருக்குற்றா.குற. 123,12). கெச்சமும் பாதந்துணைச் சிலம்பும் (தெய்வச். விறலி.தூது 171). அரும் பூமலரடியில் கெச்சங்கட்டி (கும்மிப்பா.சௌமிய.6).

கெச்சி பெ. பேய்த்தும்மட்டிவகை. (சங்.அக.)

கெச்சிகா பெ. மயூரசிகை. (சித்.பரி.அக.ப.83)

கெச்சிதநடை பெ. →கெச்சிதநடை. (யாழ்.அக.)

கெச்சிதம்[1] பெ. முழக்கம். கெதியுனதடி யென்று உயர் கதியவரும் கெச்சிதமிட் டார்கள் (ப்ரகம்பிரியா.பிள்.4,7). கெச்சிதமாகவே பேசிய நாமள் கிராம வழியிலே செல்வ மென்றார் (கும்மிப்பா.சீனய்யங்கார்.148).

கெச்சிதம்[2] பெ. 1.உடல் நலம். வெகுபாங்காகவே கூடி கெச்சிதம் செய்தேதாள் (சின்ன.குளுவ.24). உடம்பு கெச்சிதமாய் வருகிறது (நாட்.வ.). 2.திருத்தம், ஒழுங்கு. ஓதரிய கெச்சிதம் சேரும் ஆதி கேசவரை (சங்.வி.தூது 105). 3.அழகு. கெச்சிதமாய்ச் சூட்டு முடி பாண்டியனும் (மேழிவி.32).

கெச்சிதம்[3] பெ. கம்பீரம், வீறு. (வட்.வ.)

கெச்சிநடை (கெச்சைநடை) பெ. →பெருமிதநடை. (யாழ்.அக.)

கெச்சு பெ. கோடுகளால் வரைந்து காட்டப்பெற்ற மனைமுதலியவற்றின் உருவம். அமீன் கெச்சு (செ.ப.அக.).

கெச்சுக்கெச்செனல் பெ. 1.தொந்தரைசெய்தற் குறிப்பு. (முன்.) 2.கீச்சிடுதற் குறிப்பு. (வின்.அக.)

கெச்சை[1] பெ. →கெச்சம்[2]. அடியிடத்தே சமைத்துக் கட்டின ... கெச்சையும் (கலித்.95 உரை). கச்சை தனிலாடியான் (திருவானைக்கா.உலா 84).

கெச்சை[2] பெ.→கெச்சம்[1]-1. (செந்.அக.)

கெச்சைக்குதிரை பெ. சிறுசதங்கை அணியப்பட்ட குதிரை. (செ.ப.அக.)

கெச்சைக்கொலுசு பெ. மகளிர் காலிலணியும் ஒரு வகை கொலுசு. (வின்.அக.)

கெச்சைநடை (கெச்சிநடை) பெ. பெருமிதநடை. (முன்.)

கெச்சைமிதி பெ. 1.கூத்தின் விரைந்த நடை. (முன்.) 2.→கெச்சைநடை.(யாழ்.அக.) 3.குதிரை விரைந்து செல்லும் நடைவகை. கெச்சைமிதியிலே போ (செ.ப. அக.).

கெசக்கணை பெ. யானைத்திப்பலிக்கொடி. (குண.1 ப.370)

கெசக்கன்னி (கெசகன்னி) பெ. வெருகு. (மலை அக.)

கெசகரணம் பெ. யானை காதை அசைப்பது போல் அசைக்கும் வித்தை. கோசரணம் கெச கரணம் இந்திர சாலம் (இலக்கச்.முதல்.15). குளவின்தகு வளை கழனியில் கெச கரணம் போட்டுவிடும் (சிந்.இலக்.2,29).

கெசகன்னம் பெ. 1.பெருமுயற்சியால் ஆக வேண்டிய காரியம். (யாழ்.அக.) 2.→ கெசகரணம். (முன்.)

கெசகன்னி (கெசக்கன்னி) பெ. வெருகு. (முன்.)

கெசகன்னிவாழை பெ. மொந்தன் வாழை. (சித்.அக.)

கெசட்டு பெ. அரசாங்க விளம்பரப் பத்திரிகை. (அரசு.வ.)

கெசந்தாதி பெ. → கெச்சம்[1]-2. (சங்.அக.)

கெசபுட்பி பெ. பெருவேம்பு. (சித்.பரி.அக.ப.83)

கெசபுடம் பெ. நூறு விரட்டி வைத்து எரிக்கும் புடம். நலியாமற் கெசபுடமே போடக் கட்டும் (போக.353).

கெசபூகம் பெ. துவரை. (சித்.அக.)

கெசம்[1] பெ. மதயானை. கெசதுரக முதலான சதுரங்கம் (தாயுமா.பா.7,1,6). கொட்டம் இடும்கெசமும் அட்டம் இடும் துசமும் (இராமநா.1,16 தரு 1). மத்தகெசம் போன்ற மகனாரைத் தான்பார்த்துக் காட்டிக் குடுத்தனன் (சீவே.சரி.1769). கெச நட்பு ஒழித்து (குருகூர்.பிள்.18). கொப்பத்து வீழ்ந்த கெசம் (மூவரை.விறலி.தூது 333). மத்தகெசந் தனக்குமுன்னே சிற்றெறும்பு நடந்ததென (செயங்.வ.காப்பு).

கெசம்[2] பெ. 1.(உருது) 90 செ.மீ. கொண்ட அளவு, இருமுழம். வந்த மனிதனுக்கு இரண்டு கெசம் சகலாத்துக் கொடுக்க வேணுமென்று சொன்னீங்க (ஆனந்த.தினசரிச்.3ப.154). பத்துக் கெசம் கல்லொடச்சு (கொங்கு நா.ப.316). 2.ஆழமான நீர் நிலை. (ரா. வட்.அக.)

கெசமாமுட்டி பெ. எட்டி. (மலை அக.)

கெசமுகன் பெ. விநாயகன். கெசமுகனுக்கு இளையவ காங்கேய (திருச்செங்.பு.3,21,18).

கெசமேதம் பெ. யானை வேள்வி. அத்துவரங் கெசமேதம் ... முழங்கா லாகநிற்கும் (கோலாச்ல.பு.104).

கெசராசி (கெகராசி) பெ. பூலா. (வைத்.விரி.அக.ப.114)

கெசராசினி பெ. →கெசராசி. (சித்.அக.)

கெசலீலை பெ. (இசையி.) நூற்றெட்டுத் தாளங்களுள் ஒன்று. (மத்தளவி.)

கெசவாலு பெ. அதிகமான சுட்டித் தனம் செய்பவன். (வட்.சொ.வி.ப.105)

கெசனிக்கீரை பெ. கீரைவகை. (சித்.அக.)

கெசாசைநா பெ. கையாந்தகரை. (மலை அக.)

கெசாசனை பெ. → கெசந்தாதி. (யாழ்.அக.)

கெஞ்சிக்கேள்(ட்)-(ட்)தல் 9வி. 1.மன்றாடிக் கேட்டல். (ஆட்சி.அக.ப. 146) 2.தாழ்ந்த குரலுடன் வேண்டுதல். (செ.ப.அக.)

கெஞ்சு-தல் 5வி. 1.நிலையிலிருந்து தாழ்ந்து எளிமையாக வேண்டுதல். கிளிகள் கெஞ்சியும் இரங்கி யினம் வந்திலர் (அழகர்.கலம்.91). கெஞ்சமத வெற்பு (சமுத்திர கவி.73). 2.இரந்து குறையுறுதல். மந்திர மோக மெழுப்பிக்கெஞ்சி (திருப்பு.171). மெய் நடுங்கி ... கெஞ்சினான் (திருமழுவாடிப்பு.சிவகங்.45). கெஞ்சு மாதங்கமுகம் பார்த்திரங்கும் (தனிப்பா.திர.1,339,50). ஒன்றி நின்று கெஞ்சிடாமல் ஓடிப் போதல் நன்மையே (திருவிடை.கலம்.49). கஞ்சிக்குந் தன்னிலே தான் கெஞ்சிப்புகுந் தவளல்ல (முக்.பள்.14,10). கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு (அவளும் அவனும் ப.25). கெஞ்சியபின் மறையவர் செய் பூசையெல்லாம் உனக்கெனவே கிருபை செய்தார் (செயங்.வ.43). கேட்டேன்டி உன்னை நான் பெண்ணே கெஞ்சினேனே நெஞ்சுலர (தமி.நா.பா.ப.194). 3.யாசித்தல். தஞ்சமென் றமரர் கெஞ்ச (திருவாமாத்.கலம்.காப்பு). உண்டி கலந்துபோய்க் கெஞ்சி ஒருமனிதனையும் அண்டி வாழ வேண்டாம் (மலரும்.537). 4.பரிதாபமாக வேண்டிக் கொள்ளுதல். இங்க நடந்தவற்றைத் திமமண் பால் இயம்ப வேண்டாம் என்றனன் கெஞ்சினான் (தமிழ். கத்தி ப.48). 5.மன்றாடுதல். தயவு செய்து இந்த ராஜா கூஜா பாட்டை முழுவதும் பாடி என்னைக் காப்பாற்று என்று அழாத குறையாகக் கெஞ்சினேன் (கரை.நதி ப.80).

கெட்ட பெ. அ. 1.தீய. நபாபு மாயூசுகான் சண்டை பண்ணிக் கோட்டை வாங்கவேணுமென்று கெட்ட கெட்ட ஒட்டுகளெல்லாமிட்டுக் கொண்டிருக்கிறான் (ஆனந்த. தினசரிச்.3 ப.91). 2.அழிந்த. துன்பமெனக் கெட்ட குடியே கெடும் (நாட்.வ.).

கெட்டகேடு பெ. 1.தாழ்நிலையைக் குறிக்கும் ஓர் இழிசொல். நீ கெட்டழி2டகேட்டுக்கு உனக்கு எண்ணெயும் வேண்டுமா? (நாட்.வ.). 2.அதிககேடு. (யாழ்.அக.)

கெட்டணை பெ. இறுகும்படி கெட்டிக்கை. (வின். அக.)

கெட்டதனம் பெ. →கெட்டநடத்தை. (செ.ப.அக.)

கெட்டதாயிரு-த்தல் 12 வி. செயலாற்றும் திறனற்றிருத்தல். உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும் (விவிலி.லூக்கா 11,34).

கெட்டநடத்தை பெ. தீயொழுக்கம். (செ.ப.அக.)

கெட்டநாள் பெ. கழிந்த நாள். கீரியாய்க்கீடமாய்க் கெட்டநாள் போதாதோ (பட்டினத்தார்.பா.அந்.24,1).

கெட்டநேரம் பெ. (சோதிட.) சோதிடத்தின்படி தீங்கு விளையக்கூடிய காலம், ஏதோ ஒரு காரணத்தின் பொருட்டு தீங்கு விளைய வாய்ப்புண்டு என்னும் அச்சம் தோன்றக்கூடிய நேரம். (இலங்.வ.)

கெட்டபாரை பெ. இரும்பு பாறை. (கிளை மொழியி. ப.154)

கெட்டபெயர் பெ. அவப்பெயர். (ஆட்சி.அக.ப.96)

கெட்டபேர் பெ. →கெட்ட பெயர். (முன்.)

கெட்டம் பெ. தாடி. (வின்.அக.)

கெட்டலை-தல் 4வி. நிலைகெட்டுத் திரிதல். (செ.ப.அக.)

கெட்டவள் பெ. தீ யொழுக்கமுள்ளவள். (நாட்.வ.)

கெட்டவன் பெ. தீ யொழுக்கமுள்ளவன். (முன்.)

கெட்டவார்த்தை பெ. 1.ஆபாசமான சொல். (முன்.) 2.→கெட்டபேர். (முன்.)

கெட்டவாரி பெ. நெல்வகை. (மதி.கள.1,16)

கெட்டவியாதி பெ. 1.கொடியநோய். (செ.ப.அக.) 2.ஆண் பெண் குறிகளில் உண்டாகும் துர்வியாதி. (முன்.)

கெட்டவேளை பெ. 1.பொல்லாங்கான காலம். (முன்.) 2.சமயமல்லாத சமயம். (முன்.) 3.அசுபகாலம். (முன்.)

கெட்டழி-தல் 4வி. 1.வீண் செலவினால் நிலைமை கெடுதல். (நாட்.வ.) 2.ஆண் பெண்கள் விபச்சாரத்தால் ஒழுக்கங் கெடுதல். (முன்.)

கெட்டாகெட்டி பெ. →கெட்டாரகெட்டி. (யாழ்.அக.)

கெட்டாரகெட்டி பெ. 1.மிகுந்த சாமர்த்தியம். (வின். அக.) 2.அதிசமர்த்தன். (முன்.)

கெட்டி[1] பெ. 1.உறுதி. இது மெய்யென்று கெட்டியாய்ச் சொல்வதற்கு (ஆனந்த.தினசரிச்.3 ப.4). மதில் கோட்டைகள் தான் கெட்டி வேலைகளாம் (வீர.கட்ட. கதைப்பா.ப.43). கீலுக்கு கீலாணி கெட்டியாய் தைத்தவுடன் உள்ளங்கால் வசியேறி உச்சியிற் பாய வேண்டும் (ஏணியேற்றம் ப.39). 2.இறுக்கம். கெட்டியாய்க் கட்டுமென்று கிட்ட வந்து நின்றாளே (பவளக்.மாலை ப.40). 3.அழுத்தம். கெட்டிப்படிப்பு (நாட்.வ.). 4.திறமை. கெட்டியென்றுன் அன்பர் மலங் கெட்ட யர்ந்தோர் (தாயுமா.பா.43,78). கெட்டித் தலைவ வனல்கரியாகக் கிளருமுற்பூண் கட்டி (தின்ன.அந்.96). கெட்டி கெட்டி இளையவள் (முக்.பள்.100,3). 5.திறமை சாலி. (செ.ப.அக.) 6.உரத்தகுரல். கெட்டியாய்ப் படிக்கிறான் (நாட்.வ.). 7.மிக நன்று. கெட்டியையா நல்லதென்பார் (பண. தூது 19). 8.உச்சிதம். (யாழ்.அக.)

கெட்டி[2]**-த்தல்** 11வி. 1.நிலம் முதலியவற்றைக் கெட்டிப் படுத்துதல். (நாட்.வ.) 2.துப்பாக்கியில் மருந்திட்டுக் கெட்டிப்படுத்துதல். (செ.ப.அக.)

கெட்டிக்கட்டடம் பெ. கற்கட்டடம். (முன்.)

கெட்டிக்காப்பு பெ. முழுமையும் பொன் அல்லது வெள்ளியினாலான உட்குழலில்லாது இறுகிய காப்பு என்னுங் கையணி. (நாட்.வ.)

கெட்டிக்காரத்தனம் பெ. →கெட்டி[1] -4. அவன் அளக்கும் கெட்டிக்காரத்தனத்தை என்னென்று சொல்வோம் (பவளக்.மாலை ப.43).

கெட்டிக்காரன் பெ. →கெட்டி[1] - 5.பொட்டி தூக்கக் கெட்டிக்காரன் நானே (திருவிடை.நா.ப.8). உன்னைப் பார்க்கிலுங் கெட்டிக் காரன்போல் (சிந்.இலக்.2,24).

கெட்டிக்கொடி பெ. அதிக தங்கத்தால் செய்யப்படும் தாலிக்கொடி. (இலங்.வ.)

கெட்டிகொலுசு பெ. உட்குழலில்லாத கொலுசு. (நாட்.வ.)

கெட்டிச்சாயம் பெ. அழுத்தமான சாயம். (முன்.)

கெட்டிசாவி பெ. உட்குழலில்லாத சாவி. (முன்.)

கெட்டித்தனம் பெ. 1.செட்டு. (செ.ப.அக.) 2.→கெட்டி[1]-4. (யாழ்.அக.)

கெட்டித்தாழு-தல் 4வி. தண்ணீர் அங்கங்கே தங்குதல். (தொ.வ.)

கெட்டித்தாள் பெ. அழுத்தமான தாள். (ஆட்சி.அக.ப.52)

கெட்டித்தீர்வை பெ. சோளம் முதலியன விளையும் நிலங்களுக்குரிய தீர்வை. (செ.ப.அக.அனு.)

கெட்டிதட்டிப்போ-தல் 4/5வி. மிகவும் இறுக்கமாதல். ஒருவகை மனத்தாபம் உறுதியாகிக் கெட்டிதட்டிப் போய் விட்டதை ரங்காவின் (செ.ஒரு.ந.199-22).

கெட்டிப்பணம் பெ. நாணயவகை. (செ.ப.அக.)

கெட்டிபண்ணு-தல் 5வி. 1.பலப்படுத்தல். (யாழ்.அக.) 2.நிலம் முதலியவற்றை உறுதியாக்குதல். (முன்.) 3.மருந்து முதலியவற்றை இறுகச்செய்தல். (முன்.)

கெட்டிபத்திரம் பெ. சாக்கிரதையான விசாரணை. (முன்.)

கெட்டிமூங்கில் பெ. உட்துளை சிறுகியுள்ள மூங்கில், கல் மூங்கில். (செ.ப.அக.)

கெட்டிமேளம் பெ. தாலிகட்டுகை முதலிய விசேடங்கள் நிகழும் போது முழங்கும் சகலவாத்தியம். (நாட்.வ.)

கெட்டியம் பெ. அரசர் முதலியோரைக் குறித்துச் சொல்லும் புகழ்த் தொடர், கட்டியம். பராக் பராக் கென கெட்டியந் தான் முழங்க (கும்மிப்பா.சிங்கை.83).

கெட்டில் பெ. பால், நீர் முதலியன ஊற்றிவைக்கும் மூக்குள்ள பாத்திரம். லலிதா கெட்டிலில் இருந்த காபியை மூன்று கப்களில் நிரப்பி (செ.பா.போ.295,9).

கெட்டிவராகன் பெ. பொன் நாணயம். (செ.ப.அக.)

கெட்டிவாத்தியம் பெ. →கெட்டிமேளம். (முன்.)

கெட்டு[1] பெ. 1.கதிர்க்கட்டு. (தொ.வ.) 2.வலையின் பாகம். (கிளைமொழியி.1 ப.202)

கெட்டு[2] பெ. பக்கக்கிளை. (இலங்.வ.)

கெட்டு[3] **-தல்** 5வி. இறுகக்கட்டுதல். அப்படியானா கெட்டி வைத்துக் குடில் பிப்போம் (இரண்டுபடி ப.29).

கெட்டுத்தூள் பெ. சுருட்டினுள்ளிருக்கும் புகையிலைத் தூள். கெட்டுத்தூள் ஒரே காரம் (இலங்.வ.).

கெட்டுப்புகையிலை பெ. புகையிலை வகை. (முன்.)

கெட்டுப்போ-தல் 4/5 வி. 1.அழிதல். ஆடவர்களுக்கு அடங்கி நடவாமல் கல்விச் செருக்கினால் கெட்டுப் போவார்கள் என்றும் (பெண்கல்வி ப.1). 2.ஒழுக்கங் கெடுதல். (செ.ப.அக.) 3.தீய வழிகளில் செல்லுதல். தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும் (விவிலி.யோவான் 3,15). 4.அழுகிப்போதல். (செ.ப.அக.) 5.காணாமற்போதல். (நாட்.வ.) 6.வறுமை யுறுதல். அந்தக் குடும்பம் கெட்டுப்போயிற்று (முன்.).

கெட்டுபோனவள் பெ. 1.கற்பழிந்தவள். (முன்.) 2.கற்பழிந்ததனாற் சாதியினின்று விலக்கப்பட்டவள். (முன்.)

கெட்டுவிடு[1]**-தல்** 6வி. →கெட்டுப்போ[1] -தல்-4. (செ.ப.அக.)

கெட்டுவிடு[2]**-தல்** 6வி. →கெட்டுவை-த்தல். (முன்.)

கெட்டுவை-த்தல் 11வி. கிளைவிடுதல். (இலங்.வ.)

கெட்டேன் இ.சொ. இரக்கக் குறிப்பு. இறைவனாங் குரைப்பக் கெட்டேனென்னைபாவம் (சூளா.529). அருளிதுவாயிற் கெட்டேன் பிழைப்பரோ வரக்கராயோர் (கம்பரா.6,4,127). எழுந்து ஓடவும் கருத்துண்டு கெட்டேன் இவ்விளங் கொடிக்கே (சடகோபரந்.27). குவடு இரண்டும் ஏந்தும் அருங் குல்கெட்டேன் (கப்.கோவை 22). வேனின் மன்னவன் புரமுஞ் சுட்ட வல்லவோ கெட்டேன் வாளா இன்னவை சுடாது போமோ வேழையேன் புரமு மென்றாள் (திருவிளை.பு.5,130). வெறும்புற் கையுமரி தாய்க்கிள்ளை சோரவென் வீடுகெட்டேன் எறும்புக்கு மாற்பத மில்லை கண்டாய் (பெருந்.1153). சாயுச்சியப் பயனைச் சொன்ன பிழை கெட்டேன் தொலைப்பரோ (ஒழிவி.1,6). வாழ்விற் களித்திருந் தந்தோ கெட்டேன் (சிவஞா.காஞ்சிப்பு.திருநெறி.15).

கெடங்கு பெ. பரவரையும் தோட்டத்தையும் இணைக்கும் வாய்க்கால். (கிளைமொழியி.ப.208)

கெடப்பிசகு பெ. தரை மேடுபள்ளமாக இருக்கும் போது அதில் படுத்துத் தூங்குவதால் உடம்பில் ஏற்படும் பிசகு அல்லது பிடிப்பு. (கோவை வ.)

கெடப்பிசடு பெ. →கெடப்பிசகு. (வட்.சொ.வி.ப.105)

கெடலணங்கு பெ. மூதேவி. (பிங்.188)

கெடலூழ் பெ. கெடுதற்குரிய தீவினை. கெடலூழாதலின் கேட்டபொழுதே ... ஆருணிதெளிந்து (பெருங்.3,25,168).

கெடலை பெ. இளம் வேளாண்மை. (கிளைமொழியி. ப.163)

கெடவரல் பெ. 1.மகளிர் விளையாட்டு வகை. கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு (தொல்.சொல். 313). பண்ணை கெடவர லோரை ... விளையாட்டாம் (உரி.நி.188). கேளி ஒப்பு ... கெடவரல் ... விளையாடல் (நாம.நி.701). 2.மகளிர் கூட்டம். (சூடா.நி.)

கெடா பெ. ஆட்டின் ஆண். ரெண்டும் கெடாக்குட்டி நல்ல யோகந்தான் (மழைக்கஞ்சி ப.65).

கெடாஅத்தீ பெ. வேள்வித்தீ. கெடா அத்தீயின் உருகெழு செல்லூர் (அகநா.220).

கெடாரம்[1] பெ. காரம். (யாழ்.அக.)

கெடாரம்[2] பெ. →கெடியாரம். (முன்.)

கெடாவடி (கிடா+அடி) பெ. மாடுகளைப்பிணைத்து வைக்கோல்களை வட்டமாக்கப்பரப்பி அதில் மாடுகளைச் சுற்றிவரச் செய்வது. கெடாவடி கட்ட மாடு வேணும் (தென்.வ.).

கெடி[1] பெ. நிறைவேறிவருங் காரியம். கெடியாயினவுங் கெடுமே (சினேந்.மாலை 451).

கெடி[2] பெ. (உருது) கடி, பிராணத்தில் எருது குதிரை களை மாற்றும் இடம். (செ.ப.அக.)

கெடி[3] பெ. 1.துருக்கம், மலைக்கோட்டை. எதிரிடும் அடையலார் கெடிபுக (குருகூர்.பிள்.5). 2.1.இடம். இமையோர் கெடிக்க லங்குறக் ககனமண் டலங்களைக் கிழிப்ப (திருக்குற்றா.பு.14,18). 2.2.ஊர். கெடிப்பயந்தன் படைக்கும் படைக்கும் ரகுநாத சேதுபதி (நாணிக். ஒருதுறைக்கோவை 210). 2.3.நாடு. கேள்வியற்றுப் போச்சு கெடி அதனில் (மேழிவி.232). 2.4.இராசதானி. (யாழ்.அக.) 3.அதிகாரம். கெடியாக அவள் தனக்குக் கொடுத்துப் போட்டு (போக.68). 4.அதிகாரஞ் செல்லு மிடம். (வின்.அக.) 5.வல்லமை. கெடிமன்னர் வணங்குந் தாளான் (சூடா.நி.9,10). 6.கீர்த்தி. மூன்று லோக கெடி பெற்றராவனோ (இராமநா.6,32). கெடி கொண்ட தலமாறும் (தாயுமா.பா.7,6). ஆண்மை கெடி கொண்ட சுக்கிராக் கினையும் (கறுப்பண்ண.சத.4). இராச கெடி முழங்க (ராம.அம்.304). கெடியுள்ள வீரச்சிங்கா (திருவிடை.நா.ப.12). பட்டையம் பரிசை கட்டி மட்டறப் போற சேனை மடியவே (ப்ர)ற்க வென்று கிட்டியே செனும் வந்த கெடிதனைச் சேனை கண்டார் (குச.கதைப்பா. 163). 7.அச்சம். வந்த தானவர் சேனை கெடிபுக (திருப்பு. 359). கெடியான பெண்ணு பொன்னாணினாலே (சித்.பா.சட்டைமுனி.68). கெடியான சிவ வடிவம் ஆக்கிக் கொண்டேன் (போக.56). கெடியால் குழைவிழியார்க்கு

ஆசை கொண்டவர் கேட்கில் ... அளவோ (கபிலை. கோவை 19). மாற்றோர் கெடி யதிர (சொக்க.பண.தூது 300).

கெடி[4] பெ. 1.தருணம், சமயம். கங்கை சத்தத்தைக் கேட்டபோது கெடி பார்த்திருந்த வேடுவனும் ... ஆனை ... என்று சொல்லி அம்பு ... பிட்டான் (அயோ.கதை ப.32, 33). 2.நிச்சயம். கூற்றை வென்று கொர்ச்சிக்கலாமே கெடி (திருப்பு.சிறப்பு.14).

கெடி[5] பெ. மிடுக்கு. கெடி துரை மக்கள் (குமார. குறவ. 112). இன்றோடு கெடுவாச்சு எழிலான வேதியரே (புலந். மாலை ப.106). ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான கெடு இன்று பிற்பகல் ... முடிவடைந்து விட்டது (செய்தி.வ.).

கெடு[1] பெ. 1.கேடு. கெடு நா மொழியலன் அன்பினன் என (அகநா.352). கெடுவின்று மறங்கெழு சோழர் (புறநா.39,7). 2.வறுமை,தரித்திரம். கெடுவாக வையா துலகம் (குறள்.117).

கெடு[2]-த்தல் 11வி. 1.அழித்தல். இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே கெடுக்குந் தகைமை யவர் (குறள். 447). பெருமால் கெடுக்கும் பிலமுண்டு (சிலப்.11,92). தக்கன் முத்தீக் கெடுத்தான் கெடல் இல்கல்லோன் (திருக்கோவை 226). கொற்றவர்தங் குலங்கெடுத்தால் வருகின்ற குற்றமும் (பகவற்.1,21). மறதியைக் கெடுக் குந்தன் னறிவினாற் காணாமல். (கைவல்ய.2,71). திங்கள் விளாங் கொளிகெடுத்து வெய்யவன் ... தோன்றி னான் (நைடத.இந்திரா.1). மேருகிரி உடல் அவுணன் மிடல் கெடுத்தாய் (திருவர.கலம்.7,39). அறம் கெடுத்தவன் அவற்றினும் வலியனோ (தேம்பா.1,3, 23).சீதைபண்பி ராவணற்குச் செப்பிக் குலங்கெடுத்த பாதகிமூக் கன்றிழந்த பங்கம்பார் (ஆத்திச்சூடி வெண். 45). குடி கெடுத்து விட்டு (மலரும்.533). 2.நீக்குதல், போக்குதல். கிழவோள்பால் நின்று கெடுத்தற் கண்ணும் (தொல்.பொ.148,19). பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் (குறள்.937). அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென (சிலப்.உரைபெறு.). இடர் கெடுத்து என்னை ஆண்டு (திருவிசைப்.1,2). சங்கை கெடுத்தாண்ட தவராசா(பெரிய தி.தமிழாக்.தனியன்.4). என்னை நினைப்பார்க் கரந்தை கெடுத்து (பகவற்.10,6). பெரும் புகழ் பெறும்படி அருந்துயர் கெடும்படி (அரிச்.பு.பாயி.1). காலையுடு மாலைவிது ஒத்து இருள் கெடுத்தருள் கொடுத்துயிர் களித்தல் நன்றோ (திருக்காவ.கலம்.20). வல்லி நுண்ணிடையாள் ... அவள் வெருவல் கெடுத்தவர் (தேவா.1,75,7). 3.ஒழுக்கங்கெடுத்தல். (செ.ப.அக.) 4.காரியத்தைசெய்தல். கொழுத்தவா வரணம் முற்றி கூடாமற் கெடுத்த கேடே (கைவல்ய.1,48). தன் வேலையைக் கெடுக்காதே (நாட்.வ.). 5.விடம் முறிய வற்றை முறியச்செய்தல். இந்தவேர் விடத்தைக் கெடுக்கும் (நாட்.வ.). 6.இழத்தல். அரசு கெடுத்து அலமரும் அல்லற்காலை (சிலப்.4,8). வயப்பிடி கெடுத்து மாழாந்த தொப்ப மதி மயங்கினான் (சீவக. 1590). துறையிலே பிள்ளைக் கெடுத்துத் திருவோலக் கத்திலே காண்பாரைப் போலே (அம.2 பெரி.ப.37). 7.தோற்பித்தல். (செ.ப.அக.) 8.காணப் பெறாது போதல். எற்கெடுத் திருந்த வறன்னில் யாய்க்கே (ஐங்.385). ஏற்கெடுத் திரங்கி (மணிமே.5,36). பாவையாற்போயின தன் சிந்தை கெடுத்ததனைத் தேடுவான் (நள.73). 9.1.குலைத்தல். முனிவோர் முரண்கெடுக்க விம்மு முலையாள் (மதுரைச்.உலா 298). வேலையைக் கெடுத்திருங்கள்ளன் (முக்.பள். 85,6). 9.2.நெகிழவிடுதல். பணியும் உடையும் கெடுத்து (பழமழையர்.59). 10.வீணாக்குதல். மனுசன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன்னைத்தான் கெடுத்து நட்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன (விவிலி.லூக்கா 9,25). 11.தீங்கு செய்தல். உரகப்படத்து அல்குல் உனைக்கெடுப்பேன் என்குதே (பட்டினத்தார்.பா.அந்.19,2). 12.மறைத்தல். இரவிடம் கெடுத்த நீரை விளக்கு மண்கண் கெடுத்த இம்மாநிலப் பெருந்துகள் (சிலப்.26,36,200). 13.தொலைத்தல். மேருகிரி உடல் அவுணன் மிடல் கெடுத்தாய் (திருவர. கலம்.7,39). 14.பழுதாக்குதல். கெடுத்தொழிந்தனை ... புதல்வனை (கம்பரா.2,2,76). 15.அவமாக்குதல். விரதங்களையெல்லாம் தீச்செயலால் கெடுத்துக் கொண்டான் (நாட்.வ.).

கெடு[3]-தல் 6வி. 1.நீங்குதல். ஆறன் உருபின் அகரக்கிளவி ஈருகு அகரமுனை கெடுதல் வேண்டும் (தொல்.எழுத். 116). இலங்கு கதிர் முத்தம் இருள் கெட இமைக்கும் (ஐங்.193). தன் மெய்க்கண் ஐம்பூதம் அன்றே கெடும் (ஆசாரக்கோவை 15). கெடும் பொழுதில் கண்டனவும் காணா கெடும் (நான்மணி.42). நல் கந்தம் பலவும் கலந்தாலும் உள்ளியது கந்தம் கெடுமோ கரை (நீதிவெண்.21). துயர்கெட வங்கவன் சொலவிடுத்த பின் (திருமழுவாடிப்பு.வைத்திய.65). மட்டதுயர் கெடுங் குடிசகம் (கைவல்ய.2,158). உன் அன்பர் மலங் கெட்ட யர்ந்தோர் (தாயுமா.பா.43,78). தீய மலத்தோடும் போதங் கெட்டார் உள்ளத்தார் (திருப்புலி.வெண்.17). 2.1.அழிதல். புடைகெடப் போகிய செலவே (தொல். பொ.61,2). அறம் நனி சிறக்க அல்லது கெடுக (ஐங்.7). இடர் கெட அருளும் (சிலப்.12,18,2). கெட்டது எழுபதில் கேடறி யீரே (திருமந்.163). வினைகெட மனநினைவது முடி கெனின் (திவா.1,10,4). [illegible] அடல்கெழு குரலால் [illegible] (பரிபா.2,8). [illegible] (பத்து.4,8,100).

கண் கெட்ட பேர்க்கும் வெளியாய்க் கண்ட தில (தாயுமா. பா.7,5). மருளாம் வினை கெடும் மார்க்கம் பெற்றேன் (ஞானசா.தனியன்). பொய்த்திறத் தேவர் புகழ்கெட (கித்தேரி.அம்.2 வி.2). கைக் கோயில் கெட்டால் கருணைப் பரத்துக்கென் (இ.ஒ.ப.3). 2.உடைதல். கெடுதல் உடைதலாம் (உரி.நி.187). 3.பழுதாதல். அந்தப் பட்டு கைபட்டால் கெடும் (செ.ப.அக.). 4.கேடு அடைதல். கெடலரு மேரு வரைக்கிடைவிட்டு கிளரொளி பரந்ததென்றிசை (செ.பாகவத.5,3,13). 5.மறைதல். விரிந்து விந்துறங் கெட்டது வீசம் (திருமந்.1278). வீபரீ தங்கள்... பழக்கத்தாலே... வரும்வந்தக்காலுயர் ஞானங் கெடும் (கைவல்ய.1,82). 6.இறத்தல். அடுத்த தொழில் செய்துகெடு மேனுமழகு (பகவற்.3,19). ஆண்மையை நிலையிடும் பேர்கள் கெட்டனர் (இறைவாச.பு.246). 7.குறைதல். கிரமம் அறியாதே கெட்டழிந்த வண்ணமது (சீவே.சரி.369). கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே (வாக்கு.4). இசைகெடின் மொழிமுதலிடை கடை நிலை (நன்.காண்டி.91). 8.பாதித்தல்.காதே கெட்டுப் போகும் (இளை.இலக்.39). 9.இல்லையாதல். கெடும் என்பது இல்லையாம் என நின்றது (திருக்கோவை.109 நுண்பொ). இடம் கெட அணிய (ஞானா.43,4). 10.வறுமையுறுதல். கெட்டார்க்கு உற்றார் கிளையிலு மில்லை (செ.ப.அக.). 11.ஒழுக்கங் கெடுதல். கெட்டுப்போனவள் (நாட்.வ.). 12.உருவழிதல். அந்தச் சித்திரங் கெட்டுவிட்டது (முன்). 13.தோற் றோடுதல். (செ.ப.அக.) 14.விகாரத்தால் கெடுதல். இறுதியிகர மெய்யோடுங் கெடுமே (தொல். எழுத்.240). 15.வழி தவறிப்போதல். கெடு மரக்கலம் கரைசேர்ந்தாற் போல (திருவாய்.1,2,3 ஈடு).

கெடுகாலம் பெ. அழிவுகாலம். (செ.ப.அக.)

கெடுகீடு-தல் 6வி. கெட்டொழிதல். வெந்துயர் கெடுகிட விண்ணவ ரோடும் (தேவா.1,76,11).

கெடுகு-தல் 5வி. சாய்தல். சாய்தல் ... கெடுகுதல் (அபி. மாலை 2185).

கெடுகுடி பெ. கெடுதலையான சமுசாரம். (யாழ்.அக.)

கெடுகுறி பெ. உற்பாதம். (நாட்.வ.)

கெடுத்தம் பெ. கெடு[1]-1. (மதுரை வ.)

கெடுதல் பெ. 1.பழுது. (செ.ப.அக.) 2.அழிவு. கெடுதல் வேண்டி சிதைத்தலும் உரித்தே (பன்னிருபா.73). 3.விபத்து. கெடுதலையுடையமாக்கள் (பெரும்பாண். 432 உரை). 4.தீங்கு. (செ.ப.அக.) 5.(இலக்.) மூன்று விகாரங்களுள் ஒன்று. தோன்ற றிரிதல் கெடுதல் (நன்.154). தோன்றல் திரிதல் கெடுதல் என மூன்றென்ப (நேமிநா.12). மிகுதல் திரிதல் கெடுதல் என மூவகைத்தே (இலக்.வி.56).

கெடுதலை பெ. 1.அழிவு. கிள்ளையால் இந்தக் கெடுதலை என்று விள்ளுவார் (கா.கடமை.ப.37). படு கொலையின் உட்புறத்தில் கெடுதலையுள்ளங்கள் ஆயிரமிருக்கும் (பிசிராந்.ப.51). 2.பழுது. (செ.ப.அக.)

கெடுதி பெ. 1.அழிவு. கிரியையிலரைமலங் கெடுதி யுற்றிடும் (வள்ள.பதிபசுபாச.பாச.ஆணவ.வி.). 2.கேடு. நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே (பு.ஏற்.அப்போசு.நட.16,28). 3.கெட்டுப்போன பொருள். (யாழ்.அக.) 4.நட்டம். காணாதபோழ்திற் கெடுதிகளுங் காணாது (சினேந்.157). 5.இழந்த பொருள். கெடுதிவினாதல் (தஞ்.கோவை 72 தலைப்பு). 6.ஆபத்து. வேடராற் கெடுதிவந்துறுவன காணா (ஞான.உபதேசகா.சிவவிரத.256). 7.தீமை. ஊரும் பேரும் கெடுதியும் பிறவும் (தொல்.பொ.99,11). ஊரும் பெயரும் கெடுதியும் ஒழிந்தவும் (நம்பியகப்.140 உரை). மறையின் புறத்துநூ லனைத்துங் கெடுதியே பயக்கும் (சிவஞா.காஞ்சிப்பு.ஒழுக்க.48). ஊர் பெயர் கெடுதியோடு ஒழிந்தவும் (இலக்.வி.507). எனக்கொரு கெடுதி செய்கிறதில்லை என்று ஒரு உறுதியும் (மதன.கதை ப.21). என்னிடையே கெடுதி யிருந்த தெனினும் (திருவருட்பா 3 இரங்கற்பா 28). 8.துன்பம். (செ.ப.அக.)

கெடுதோசி பெ. படுபாவி. மாண்டா ருயிரளிக்கு மாமருந்தை வேரோடு கீண்டெறி வாரிந்தக் கெடுதோசி களென்பார் (இரட்ச.சரி.322).

கெடுநர் பெ. தப்புவார். நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின் ... தேரின் கெடுநரும் உளரோ (குறுந்.130).

கெடுநாடு பெ. பாழான நாடு. முனை எழுந்து ஓடிய கெடு நாட்ட டாரிடை (அகநா.187).

கெடுநினைவு பெ. தீயஎண்ணம். (யாழ்.அக.)

கெடுப்பினை பெ. வங்கமணல். (சங்.அக.)

கெடுப்பு பெ. தீங்கு. கெடும் கெடுப்பும் கேட்டறியாதவர் (பிசிராந்.ப.28).

கெடுபடு-தல் 6வி. விபத்தடைதல். கெடுபட்டுப்போவார் ... விரைந்து போதலைக்கருதுவர் (பெரும்பாண்.432 உரை).

கெடுபாதை பெ. வரிவகை. (தெ.இ.க.8,214)

கெடுபிடி பெ. தடுபுடல். தினம் தினம் கெடுபிடிக்கு இங்கு அனுப்பி வைக்கவேணும் (அன்னீத.ப.46).

கெடுபுத்தி பெ. →கெடுநினைவு. (யாழ்.அக.)

கெடும்பு பெ. 1.→கெடுநினைவு. (ரா.வட்.அக.) 2.கேடு, தீங்கு. (சங்.அக.)

கெடுமதி பெ. 1.→கெடுநினைவு. கெடுமதி கண் தோன்றாமல் பாடுவரும் என்றறியேன் (பட்டினத்தார். பா.மகடூஉ.1). கெடுமதியுற்றிடும் அசுரக்கிளை (திருப்பு. 173). கெடுமதி அவனைத் தானே கெடுத்ததென் றறிந்திலானோ (இரட்ச.சரி.56). 2.துன்பம். கேடுவரும் போது கெடுமதிகண் தோற்றாது (கள்ள.அம்.ப.34). 3.தூராலோசனை. அரும்பொருள் கவர்வ தாகக்கெடுமதி யுரைப்பார் (திருவாத.பு.திருப்பெருந்.90).

கெடுவாய் இ.சொ. ஓர் இகழ்ச்சிமொழி. கெடுவாய் வகுத்த விடயத்திலன்றோ நாங்கள் நெஞ்சிழந்தது (திருவாய்.1,1,7ஈடு).

கெடுவான் பெ. ஓர் இகழ்ச்சி மொழி. (செ.ப.அக.)

கெடுவி[1] பெ. ஓர் இகழ்ச்சிமொழி. கெடுவிகாள்! நானன்றோ இவ்விடயத்துக்கு யோக்யனாய் உங்களுக்கு உபதேசிக்கும் படியானேன் (பெரியதி.1,1,8 வியாக்.).

கெடுவி[2]**-த்தல்** 11வி. கெடுத்தல். சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு வித்தது தூமொழியே (திருக்கோவை 138).

கெடுவீர் இ.சொ. ஓர் இகழ்ச்சிமொழி. அறிவாலே பற்றி யனுபவித்துவிட்ட கிறியால் வருமோ கெடுவீர் (ஒழிவி.4,12).

கெடுவு[1] பெ. அழிவு. கெடுவில் கேள்வியுள் நடுவாகுதலும் (பரிபா.2,25).

கெடுவு[2] பெ. 1.காலவரையளவு, தவணை. இரண்டு மாதம் பத்துநாள் கெடுவு இருக்கிறதே (ஆனந்த. தினசரிச்.3 ப.47). அல்லிமனமுருகி அவளும் வசமானாள் மூன்று தினக்கெடுவு மெய்குழலும் வைத்தாளே (ஏணியேற்றம் ப.30). 2.குறிப்பிட்ட காலம். (வரவேற்பு 1969 ப.45) 3.காலம் வரையறுக்கப் பட்ட முடிவு. அந்த கெடுவுக்கு அந்த வர்த்தகருக்கு விற்றர்களென்றும் (ஆனந்த.தினசரிச்.3 ப.14).

கெடுவை-த்தல் 11வி. 1.கெடுச்சொல்லுதல். (யாழ். அக.) 2.நாள் குறிப்பிடுதல். (நாட்.வ.)

கெடோரி பெ. பசுங்கன்று. (முன்.)

கெடை[1] பெ. மூங்கில். (செ.ப.அக.)

கெடை[2] பெ. கிடை. (நாட்.வ.)

கெடைகட்டியாடு-தல் 5வி. கழைக்கூத்தாடுதல். (செ.ப.அக.)

கெண்டகாரணி பெ. சிவதை. (சித்.அக.)

கெண்டம் பெ. ஆபத்து, கண்டம். (யாழ்.அக.)

கெண்டன் பெ. மிண்டன், தடியன். கொடா கெண்டன் விடா கெண்டன் (என்.பழ.தொ.1781).

கெண்டி[1] பெ. 1.→கெண்டிகை. ராசராச தேவர் குடுத்த பொன்னின் கெண்டி ஒன்று (கல்.கலைச்.அக.ப.152). நாளதினாலே கொடுத்த பொன்னின் கெண்டி ஒன்று (தெ.இ.க.11,3). கெண்டியில் தீர்த்தமும் கொண்டு வந்து வைத்தார்கள் (பிளக்.மாலை ப.48). அடைப்பை கெண்டி பொன்மணி களாசித் தட்டை ... ஏந்திச் செல்ல (ஆளவந். காஞ்சிப்பு.1167). கெண்டி இடை தடைபுரிந்த வெள்ளி கண் இழந்தது (குமணசரித்.99). மசக்குதடா கெண்டித் தண்ணி (திருநெல்.நாட்டுப்.தெம்மாங்குப்.15). குண்டும் கெண்டி யும் (இளை.இலக்.88). 2.நீர்க்கரகம். கபுல் கசன் கையி னாரமுற் றிருந்திடுங் கெண்டி கொடுத்தி வதனை (முகியித் தீன்பு.762). 3.மூக்குள்ள தண்ணீர்ப் பானை. (தென். வட்.வ.) 4.சமையல் பாத்திர வகை. (கல்வெட்டு 1 ப.23)

கெண்டி[2] பெ. துண்டு. (யாழ்.அக.) 2.தறிவாய். (முன்.)

கெண்டி[3]**-த்தல்** 11வி. 1.கடிந்து கூறுதல். (முன்.) 2.முடிவுக்கட்டிப்பேசுதல். (முன்.) 3.துண்டித்தல், வெட்டுதல். (முன்.) 4.பகிர்தல். (முன்.) 5.கண்டித்தல். (முன்.) 6.பருத்தல். (செ.ப.அக.)

கெண்டிக்கல் பெ. செங்கல். (தென்.வட்.வ.)

கெண்டிகை பெ. கமண்டலம், மூக்குச் செம்பு. கெண்டி கைப்புனல் கொடைத்தடக் கையன் விடுப்பநீர் (சீகாழித். பு.வடுக.24).

கெண்டிச்செம்பு பெ. மூக்குள்ள செம்புவகை. (வின். அக.)

கெண்டிவாய் பெ. 1.கோடாலிவெட்டு. (முன்.) 2.கெண்டி மூக்கு. (முன்.)

கெண்டு[1] பெ. →கெண்டை[1]-1. (யாழ்.அக.)

கெண்டு[2]**-தல்** 5வி. வருந்துதல். கெண்டிக் கெழு தகைமை யில்லேன் கிடந்தூட (யாப்.விருத்தி.ப.351).

கெண்டு[3]**-தல்** 5வி. 1.தோண்டுதல். கவ்வலை கெண்டிய கல்வாய்ச் சிறு குழி (குறுந்.233). இன் சிலை எழில் ஏறு கெண்டி (அகநா.265,12). இறவுளர் கிழங்குகெண் டுமிருங்குழியகத்துத் தோன்றும் (திருக்குடந்.பு.திருநாட்டுப். 32). 2.தோண்டிஎடுத்தல். குரும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை (அகநா.72,5). 3.கிண்டுதல். கேழல் கெண்டிய நிலவரை நிவந்த (நற்.399). திருந்தா மூரி பரந்து படக் கெண்டி (புறநா.391,5). முரல் வண்டுகள் கெண்டித் திசை யெங்கும் (தேவா.1,11,3). 4.அறுத்தல். மனை யோள் கெண்டிக் குடிமுறை பகுக்கும் (நற்.336). 5.அறுத்துத் தின்னுதல். முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டும் (அகநா.284). மன்றத்து மத விடை கெண்டி (பெரும்பாண்.143). 6.வெட்டுதல், துண்டித்தல். வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி நிணம் பெய் தோணியர் (நற்.11). 7.கொல்லுதல். இன்சிலை எழில் ஏறு கெண்டி (அகநா.265,12).

கெண்டூரம் பெ. 1.பாம்பு கொல்லி. (சித்.அக.) 2.கண்டூரம், சன்னிமிக்க காலத்துக் கொடுக்கும் ஒரு வகை கூட்டு மருந்து. (யாழ்.அக.)

கெண்டேறு[1]**-தல்** 5வி. உலாவுதல். என்னெஞ்சினுள்ளே அழகு கெண்டேறா நின்றது (அம்.5 பெரி.பள்.5 ப.55).

கெண்டேறு[2]**-தல்** 5வி. →கெண்டைபுரட்டு-தல். (நாட்.வ.)

கெண்டை[1] பெ. 1.நன்னீரில் வாழும் சேல்மீன். வயல் கெண்டையின் வேல் பிறழினும் (புறநா.287,4). தடமண்டு துறைக் கெண்டை (தேவா.2,48,4). கெண்டையோடு நின்றலர்ந்த கேழவாய்க் கிளர்ந்தவே (சூளா.479). கெண்டை விழிமையெழுதிக் கீறுதிரு நாமபிட்டு (நம்.திருத்தாலா.113). உரியே னொழிந்தும் உறை வதுண் டோகெண்டை யோடவென்ற (அம்.கோவை 15).

கெண்டையந் தடங்கட் குறக்கொடி களபக் கிளரொளி முலைவனப் பெழுத (திருச்செந்.பு.6). காவலனும் கண்டு உரைக்க கெண்டை விழியாளும் கேட்டு (சீவே.சரி.247). பற்றா அயிரை கெண்டை னகளிறு (முக்.பள்.51,9). கெண்டை நேரெழில் வாய்த்த விழியுறும் வள்ளி மோகா (பழனித் திரு.8,60). தங்க நிலவில் கெண்டை இரண்டு துள்ளித் திரிவதுண்டோ (கண்ண.திரை.பா.2,160). 2.புயத்தின் முன்பக்கத் துச்சதை. (செ.ப.அக.)

கெண்டை[2] பெ. சருக்கைத்தலைப்பு. (யாழ்.அக.)

கெண்டைக்கட்டி பெ. 1.வயிற்றுக்கட்டி. (சீவரட்.120) 2.பெண்களுக்கு நாத சயத்தில் காணும் கட்டி. (பைசச.241)

கெண்டைக்காரல் பெ. மீன்வகை. உருக்கமுடைய கெண்டைக் காரல் (பறாளை.பள்.16).

கெண்டைக்காரி பெ. உரோம வேங்கைமரம். (சித். பரி.அக.ப.83)

கெண்டைக்கால் பெ. முழங்காலுக்குக் கீழே உள்ள காலின் பகுதி, கணைக்கால். (ஆசையும் நேசமும் 1967 ப.20)

கெண்டைப்பீலி பெ. முகப்பில் கெண்டைவடி வமைந்த தாய்க் கால் விரலில் இடும் மகளிர் கால் அணிவகை. (செ.ப.அக.)

கெண்டையுரட்டு-தல் 5வி. பசி, தாகம் முதலியவற்றால் கைகால்கள் வலித்திழுத்தல். திண்ணையுங் கெண்டை புரட்டுங் கல்யாணத்திற் சென்றவர்க்கே (தமிழ்நா.190).

கெண்டைமீன் பெ. சேல் மீன். (சாம்.அக.)

கெண்டையேறல் பெ. ஒருவித வாயுநோய். (யாழ்.அக.)

கெண்டைவாதம் பெ. வலிப்புநோய் வகை. (முன்.)

கெண்டைவியாதி பெ. வயிற்றுக்கட்டியால் வரும் நோய்வகை. (செ.ப.அக.)

கெணசங்கியாபாகம் பெ. கணசங்கியாபாகம், கிராமங்களின் பிரிவுத்தொகை. (முன்.)

கெணம் பெ. →கெணறு. வளிய வாங்கிக்கிட்டுக் கெணத்துக்குப் போயி எறச்சிக்குடிங்க (மழைக் கஞ்சி ப.26).

கெணறு பெ.கிணறு. வெள்ளிப்படிக் கெணறு வெய்யிலுக்கு நல்ல சலொம் (கொங்கு நா.பா.ப.233).

கெணனை பெ. எண்ணிக்கை. அத்துவா சோதனை பண்ணுமிடத்துக் கெணனையில் அடங்காதாகையால் (சித்.மரபு கண்.11).

கெணாதியக்கன் பெ. விநாயகன். கெணாதியக்கன் அருள்சேர் பாலசந்திரன் (அரும்பாத்தை.பிள்.6,7).

கெத்தம் பெ. →கெட்டம். (தென்.குல.குடி.2 ப.360)

கெத்தமார் பெ. கத்தமார், மிகப்பெரிய காய்களை யுடைய புளிப்புமா வகை. (செ.ப.அக.)

கெத்தலி பெ. ஒருவகை மீன். சுரும்பு நெத்தலி கெத்தலி கத்தலை (கதிரை.பள்.50).

கெத்திடு-தல் 6வி. சில்லபொல்லமாய் வெட்டுதல். (யாழ்.அக.)

கெத்து[1] பெ. 1.தந்திரம். பொருளைக் கெத்திற் பற்றி (திருப்பு.1074). 2.தந்திரமானவார்த்தை. (வின்.அக.)

கெத்து[2] பெ. பலகொத்து. (யாழ்.அக.)

கெத்து[3] பெ. கோழி எழுப்பும் ஒலி. (ரா.வட்.அக.)

கெத்து[4]-தல் 5வி. கோழி முதலியன கொக்கரித்தல். (இலங்.வ.)

கெத்து[5]-தல் 5வி. 1.கிட்டிப்புள்ளை எற்றிவிடுதல். (நாட்.வ.) 2.ஏமாற்றுதல். (முன்.)

கெத்து[6]-தல் 5வி. 1.கீறிப்பிளத்தல். (இலங்.வ.) 2.நறுக்குதல். (முன்.) 3.மீன் முதலியவை அறுத்தல். (முன்.) 4.கண்டம்போடுதல். (முன்.)

கெத்துக்கெத்தெனல் பெ. 1.அச்சக்குறிப்பு. (வின். அக.) 2.ஓர் ஒலிக்குறிப்பு. (முன்.)

கெத்தை பெ. மயிர். (சங்.அக.)

கெதங்கெதமெனல் பெ. அச்சக்குறிப்பு. (செ.ப.அக.)

கெதபரிவிருத்தி பெ. (சோதி.) சோதிடவாய்பாட்டு வகை. (வின்.அக.)

கெதம் பெ. 1.போனது, சென்றது. (இலக்.சொ.அக.) 2.அடைகை. (செ.ப.அக.) 3.முடிந்தது. (இலக்.சொ.அக.)

கெதாயு பெ. ஆயுள் முடிந்தவன். சமர்புரிந்தவன் றானுங் கெதாயு வாயினன் (பாரதம்.7,4,37).

கெதானுகெதிகநியாயம் பெ. கதானுகதிக நியாயம், ஒருவர் சென்ற வழியே மற்றவர் செல்லுதலைக் குறிக்கும் நெறி. (சிவசம.33)

கெதி பெ. 1.நடை. (வட.நி.571) 2.விரைவு. (முன்.) 3.நிலை. இனிமேல் இங்கிலீசுக்காரர்கள் என்ன கெதியாய் போவார்கள் என்றும் (ஆனந்த.தினசரிச்.6 ப.374). 4.வலிமை. கெதி நாளுக்கு நாள் குறைந்த நிலையில் அதிகம் அக்கரை காட்டுவதில்லை (மழைக் கஞ்சி ப.45). 5.துணை, புகலிடம். பார்வதியே யுந்தன் பாதமே கெதி (மதுரை.கதை ப.89). கட்டழகி உன்னை விட்டா கெதி இல்லை வேறு (கண்ண.திரை.பா.1,246). 6.மோட்சம். கூச்சமறச் சிலந்திப்பூச் சியைக்கெதிசேர்த் திட்டசெயங் கொண்டார் (செயங்.வ.99). 7.துன்பம். கெதி அடங்கக் கொடுப்பான் (பட்டினத்தார்.பா.4 தில்லை.14,2).

கெதிய வி.அ. வேகமாக. (கிளை மொழியி.ப.160)

கெதிவுச்சாலி பெ. தாளபேதத்துள் ஒன்று. (மத்தளவி. கவுத்.)

கெதேசவுணர்வு பெ. ஒரு பொருளின் பலபண்புகளுள் சிலவற்றை அறிதல். கெதேச உணர்வு முற்றுணர் வைத் தடுப்பதாகலான் (சி.பே.7,1 அதி.).

கெதை பெ. தண்டாயுதம். வில் வாள் ... கெதை ... முதலாகியதை யெடுத்தார்கள் (கோலாசல.பு.146 உரை).

கெந்தகபூமி பெ. வெப்பமானபூமி. (யாழ்.அக.)

கெந்தகம்[1] பெ. நாய்வேளைச்செடி. (மலை அக.)

கெந்தகம்[2] பெ. 1.ஒருவகைத் தாதுப் பொருள். பாடாண கெந்தக சூதமுனா ஓதிடும் பல தேடும் (பழனித்திரு.10,3/4). கெந்தகம் நாறிச் சாவாக் கிருமிகள் கெழுமு (இரட்ச.சரி.178). 2.அப்பிரகம். (சங்.அக.) 3.கேரகண்டபாடாணம், பிறவிப்பாடாண வகை. (யாழ்.அக.) 4. →கெண்டுரம். (சித்.அக.)

கெந்தகவெடி பெ. பட்டாசு. (நாட்.வ.)

கெந்தகற்பம் பெ. வில்வம். (சங்.அக.)

கெந்தகாப்பிரகம் பெ. அப்பிரகத்தில் ஒருவகை. (சென்.இரா.சொற்பட்டி.ப.4)

கெந்தசாலி பெ. கந்தசாலி, ஒருவகை உயர்ந்த செந்நெல். பெரிய செந்நெற் பிரம்புரி கெந்தசாலி (தேவா.4,20,7).

கெந்ததாரணை பெ. நவதாரணையுள் ஒன்று. (தீவா.)

கெந்ததாளி பெ. வாய்ப்புண். (சங்.அக.)

கெந்தப்பொடி (கெந்தபொடி) பெ. சொக்குப்பொடி, பிறரை மயக்கித் தன்வசப்படுத்துவதற்கு உதவும் மாயப்பொடி. பெட்டியிலே கெந்தப்பொடி வைத்தனுப்பினாள் (தெய்வச்.விறலி.தூது 203).

கெந்தபத்திரம் பெ. முன்னை. (சங்.அக.)

கெந்தபந்தம் பெ. கவுரிபாடாணம். (யாழ்.அக.)

கெந்தபீசகம் பெ. சாரம் எனும் ஒருவகைமரம். (சங்.அக.)

கெந்தபுட்பபத்திரி பெ. துளசி. (சித்.பரி.அக.ப.84)

கெந்தபொடி (கெந்தப்பொடி) பெ. குளிக்கும் போது உபயோகிக்கும் ஒருவகை வாசனைப் பொடி. மடவா யுன்றனுக்குக் கெந்தபொடியேன் (தனிப்பா.தீர.1,88, 173). குருபளிங்கில் கெந்த பொடியும் (திருவிடை.நா. ப.24).

கெந்தம் பெ. 1.வாசனை. கெந்த நாறகிலு முத்துங் கிளரொளி விளக்கு மேந்தி (சீவக.1719). 2.சந்தனம். கெந்த நாறக் கிளருஞ் சடையெந்தை கேதாரமே (தேவா. 2,114,3). கெந்தமொடு குங்குமமும் கிளி மொழியாள் தான் குடுத்து (சீவே.சரி.2773). கெந்தம் கத்தூரி கீரினார் மார்புதனில் (மதுரை.கதை ப.75). வாசமுள்ள கெந்த மார்பிற்பூசி (திருவிடைநா.ப.7). காந்தங் கெந்தம் சவ்வாது புனுகு (சிவகங்.சரித்.கும்.ப.3).

கெந்தமாஞ்சில் பெ. சடாமாஞ்சில். (சித்.பரி.அக.ப.84)

கெந்தலவணம் பெ. உப்புவகை. (யாழ்.அக.)

கெந்தவடி பெ. வாசனையுள்ள தைலப்பொருள். (வின்.அக.)

கெந்தனம் பெ. →கோடகசாலை. (மலை அக.)

கெந்தா பெ. ஆத்திமல்லி. (சித்.பரி.அக.ப.84)

கெந்தாளிரோகம் பெ. குன்மநோய். (செ.ப.அக.)

கெந்தி[1] பெ. 1.ஒரு மருந்துச் சரக்கு. கதிர் உறு பொன் நிமிளை கெந்தி கடகம் அரிதாரம் (சோலை.குற.92). 2.பொன்நிமிளை. வல்லதொரு தேகமடா கெந்தி போலாம் (போக.210). ஆக்கிநின்ற கெந்தியினால் எறும்பு சென்று (சித்.பா.சட்டைமுனி.முன்.14). 3.கந்தகம். பாரு மென்ற விந்தவுடன் கெந்தி சேர்த்து (போக. சென்ன.343). 4.நாய்வேளை. (சித்.பரி.அக.ப.84)

கெந்தி[2]**-த்தல்** 11வி. தத்துதல், குதித்தல். கெந்தியா வுகளுங் கெண்டை (திருவிசை.கருவூர்.பதி.3,10).

கெந்திகபாளை பெ. ஆடுதின்னாப்பாளை. (சித்.அக.)

கெந்திகம் பெ. பாம்புக்கொல்லி எனும் ஒரு வகைப்பூடு. (வைத்.விரி.அக.ப.84)

கெந்திபரம் பெ. →கெந்திகபாளை. (மலை அக.)

கெந்திபாடாணம் பெ. கந்தகபாடாணம். (சங்.அக.)

கெந்தியுப்பு பெ. கந்தகவுப்பு. நள்ளவே வளையலுப்பு கெந்தி உப்பு ... கொள்ளே (போக.413).

கெந்தியுரிபாடாணம் பெ. வைப்புப்பாடாணவகை. (சித்.அக.)

கெந்திலவணம் பெ. பனியினுப்பு. (போகர் நி.4)

கெந்திவாருணி பெ. பேய்த்தும்மட்டி. (மலை அக.)

கெந்திவிருகன் பெ. கந்தகம். துடித்தாடும் சூதமொன்று நாற்றம் தோன்றிய கெந்திவிருகன் ஒன்றும் (சிந்.இலக். 4,255).

கெந்திவிருட்சோகம் பெ. →கெந்தபத்திரம். (சங்.அக.)

கெந்து[1] பெ. 1.ஒற்றைக்காலாற் கெந்தியாடும் சிறுவர் விளையாட்டு. (த.நா.விளை.ப.272) 2.கிட்டிப்புள் விளையாட்டு. (முன்.)

கெந்து[2]**-தல்** 5வி. 1.நொண்டுதல். ஆதுரன் நல்ல பக்கத்தில் கெந்துவான் (அறு.நோய்.ப.155). 2.புழு முதலியன நெளிதல். (இலங்.வ.) 3.தத்துதல். கொஞ்சிய தெனுங்குரல்கள் கெந்து பாயும் வெங்காயல் (திருப்பு.38). 4.கிட்டிப்புள்ளடித்தல். (நாட்.வ.)

கெப்புரு(கெப்புறு) பெ. திமிர். இது என்னா வெறும் கெப்புருதானே (நாட்.வ.).

கெப்புருத்தனம் பெ. திமிர்த்தனம். அவங்க குடும்பமே கெப்புருத்தனம் புடிச்ச குடும்பம் தான் (செ.ஒரு.ம.211-27).

கெப்புறு (கெப்புரு) பெ. திமிர். (தஞ்.வ.)

கெபி பெ. 1.குகை. (யாழ்.அக.) 2.வளை. (முன்.) 3.குழி,பள்ளம். (முன்.)

கெம்பட்டிகை பெ. பதக்கம் வைத்துக் கல்லிழைத்த அட்டிகையணி. (செ.ப.அக.)

கெம்பத்து பெ. இடம்பம், பகட்டாரவாரம். (வின்.அக.)

கெம்பரை பெ. நெற்கூடை. (யாழ்.அக.)

கெம்பளி-த்தல் 11வி. மகிழ்ச்சியில் திளைத்தல். (முன்.)

கெம்பளிப்பு பெ. 1.ஆடம்பரம். (முன்.) 2.மகிழ்ச்சி. (வின்.அக.)

கெம்பிதம் பெ. ஆரவாரம். விழி மருட்டிவிலை மாதெனக் கெம்பிதம் தாகி மீண்டே (அய்யன்.பிள்.9).

கெம்பீரம் பெ. 1.ஆழம். (யாழ்.அக.) 2.ஆழநீர். (ஆசி.நி.160) 3.ஆழ்ந்த அறிவு. கெம்பீரமாயுன் மகன் ... பரதாள்வானுக்கு யேந்த முதப்பட்டங் கெட்டவேணும் (அயோ.ப.152). 4.மேன்மை. (யாழ்.அக.) 5.வீரம். (முன்.) 6.வீறு. ஆழியைப் போல் கெம்பீரமாய் இருந்தார் (சீவே.சரி.186). பண் பலவும் கெம்பீரமாய்ப் படித்தார் கேட்டனையோ (பஞ்ச.திருமுக.917). கெம்பீரமாய்க் கட்டியங் கூற (வீர.கட்.கதைப்பா.ப.40). கெம்பீரமாகவே நம்பிக் கொண்டேன் (திருவிடை.நா.ப.61). சூருடலம் கீற்றுருவமாக வெல்லும் கெம்பீரம் சொல்லி (பழனித் திரு.2,42). நாளை தெரியவரும் நான் கொண்ட கெம்பீரம் கண்ணாலே பார்ப்பீர் நீர் கர்னரே (ஏணியேற்றம் ப.30). 7.பெருமிதத் தோற்றம். கெம்பீரப் பூம் பிரசமே (திருவேங்.வண்டு.தூது 316). கெம்பீரமாகிய வடிவுள்ள ஒருவர் வாசலில் வந்து (அவளும் அவனும் ப.293).

கெம்பீரர் பெ. எடுப்பானத் தோற்றம் உடையவர். கெம்பீரர் இங்கு உம்மைப் பக்லிரவாய்க் காணாதிருக்கப் பொருந்தாள் (ஆதி.வ.கோவை 69).

கெம்பீரி-த்தல் 11வி. 1.எடுப்பான குரலாற் பேசுதல். (செ.ப.அக.) 2.வீரங்காட்டுதல். (யாழ்.அக.)

கெம்பு[1] பெ. 1.மாணிக்கம். ஆண்டாள் அருள்கெம்புப் புல்லாக்குத் தானடா சிங்கா (சோலை.குற.172). 2.பதுமராகம். கெம்பு முதலானதையும் கீழ்ப்படுத்தி (பஞ்ச.திருமுக.408). கெம்பு வயிரம் வைத்துச் செய்வார் (இளை.இலக்.86).

கெம்பு[2]**-தல்** 5வி. 1.எழும்புதல். (தொ.வ.) 2.கிளர்தல். கெம்பு கிங்கரர் கண்மங் கெடுப்பவை ... கரங்களே (திருவலங்.திரட்.7,9). 3.கொந்தளித்தல். (யாழ்.அக.) 4.இரத்தங்கொதித்தல். (வின்.அக.) 5.உயர்த்துப் பேசுதல். கெம்பாறடையே (திருக்குற்றா.குற.97). கெம்பிலாமொழிக்கயவன்நீ அரசியல் கெடுத்தாய் (இராவணகாவி.4,6,22). 6.ஆரவாரித்தல். (வின்.அக.)

கெம்புநீலம் பெ. உயர்ந்த நீலம். (செ.ப.அக.)

கெம்புமல்லிகை பெ. மயிர்மாணிக்கம். (முன்.)

கெமனம் பெ. கமனம், செல்லுகை. (யாழ்.அக.)

கெமி-த்தல் 11வி. 1.போதல். அயல் கெமித்து (இரகு. தேனுவ.8). 2.புணர்தல். (நாட்.வ.)

கெமிளி-த்தல் 11வி. →கெம்பளி-த்தல். (யாழ்.அக.)

கெமிளிப்பு பெ. →கெம்பளிப்பு. (முன்.)

கெமுதம் பெ. ஆனந்தம். கெமுதம தாகிய கேடிலி தானே (திருமந்.1408).

கெய் பெ. மீன்வகை. (யாழ்.அக.)

கெயாகரன் பெ. கயாதர நிகண்டை இயற்றியவர். இடபகேதனன் பற்று மறவாத தேவைக்கெயாகரன்றொல் வேதியன் சொற்ற உரிச்சொற் பனுவல் (பெருந்.1663).

கெர்ச்சி-த்தல் 11வி. முழங்குதல். விட்டருள் கெர்ச்சித மயில்வீரா (திருப்பு.277).

கெர்ப்பத்தலைவன் பெ. சவ்வீரம். (செ.ப.அக.அனு.)

கெர்ப்பம் பெ. கர்ப்பம், கரு. தேவி நாலுமாசத்து கெர்ப்பம் (வீர.கட்ட.கதைப்பா.ப.195).

கெர்ப்பீகரி-த்தல் 11வி. கருவாய் மாறுதல். சுத்தசடமான சுக்கிலங் கெர்ப்பீகரித்து (சொரூபசாரம்.61).

கெர்வம் (கெருவம்) பெ. செருக்கு. கேழல் புலி யானைக் கெர்வங்களை யடக்க (கூளப்ப.காதல் 46).

கெர்விதம் பெ. 1.செருக்குள்ள வார்த்தை. மாந்தர் கெர்விதங்கள் பேசிவந்து (பட்டினத்தார்.பா.பத்திரகிரி. ப.343). 2.→ கெருவம். சிங்கந் தோன்ற அதனது மத கெர்வி தம் யாவும் கேட்டு (ஒழிவி.2 உரை).

கெரக்கம் பெ. மயக்கம். (கிளைமொழியி.128)

கெரக்கனடி பெ. ஆர்வ மனப்பரபரப்பு. அவனைக் காணாத கெரக்கனடியில் இருக்கிறேன் (நாஞ்.வ.).

கெரட்டுக்கெரட்டெனல் பெ. கபம் முதலியவற்றால் வருத்தப்பட்டுவிடும் மூச்சின் ஒலிக்குறிப்பு. (நாட்.வ.)

கெரடி பெ. 1.வாள்யுத்தம். கெரடி கற்றவன் இடறி வாழுந்தால் அதுவும் ஒருவரிசை என்பான் (என்.பழ. தொ.1831). 2.சிலம்பம் என்னும் ஆட்டம். கேடயம் கத்தி யோடு கெரடிகள் பழக ஆசை (அவளும் அவனும் ப.12).

கெரி-த்தல் 11 வி. கரித்தல். (யாழ்.அக.)

கெரு பெ. →கெர்வம். (திருச்செந்.அந்.55)

கெருடக்கிழங்கு பெ. ஆகாசகருடன்கிழங்கு. (சித். பரி.அக.ப.84)

கெருடக்கொடி பெ. கருடத்துவசம். கொற்றக் கெருடக் கொடியினான் (தெய்வச்.விறலி.தூது 56).

கெருடத்வனி பெ. (இசையி.) தீர சங்கரா பரணம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.170)

கெருடபட்சிக்கல் பெ. கார் கோடன். (போகர் நி.8)

கெருடமுகம் பெ. மாடுகளின் முகம் மட்டும் வெண் ணிறமாயிருக்கை. (பெரியமாட்.15)

கெருடர் பெ. பதினெண்கணத்துள் ஒருவர், கருடர். விஞ்சையர் இயக்கர் இராட்சதர் கெருடர் காந்தருவரும் (அய்யன் பிள்.10). அந்த அரக்கன் வரம் வாங்கியதும் உடனே கயிலாசத்தில் இருந்த ... கெருடர் கெம்புருடர் ... என்னையும் விரட்டி விட்டான் (தமிழ்வில்.பா.ப.136).

கெருடவாகனன் பெ. கோபுரம்தாங்கி. (சித்.பரி.அக. ப.84)

கெருடன் பெ. 1.கருடன், ஒருவகைப்பறவை. கெருட பட்சிபோல் பறக்குகிறான் (வீர.கட்ட.கதைப்பா.ப.126). 2.வைனதேவன். (செ.ப.அக.) 3.கொல்லங் கோவை. (முன்.)

கெருடி பெ. கருடி, சிலம்பு. கெருடி கட்டி யளவிலா மைந்தர்க் கூட்டி (திருவாலவா.பு.35,4).

கெருவம் (கெர்வம்) பெ. செருக்கு. கெருவமுட னகந்தை யுள்ளார் (தண்டலை.சத.92). பிரமனது கெருவரும் மாறன் புகழ்ச்சியும் (கயிலாச.சத.30). பிரமனது கெருவநோய் அற இடித்து (குன்றக்.முருக.கலம்.84). குடும்பன் செய்த கெருவமும் வஞ்சகமும் கேளும் பள்ளீரே (முக்.பள்.150,15).கீழவர்களும் பெருங்கெரு வத்தினருமாகும் (முசு.நா.நூல் 59). கெருவச் சமணாதியர் பலரும் கெடுமாறு (பழனித்திரு.13,3,3).

கெருவி பெ. → **கெருவம்.** இறுமாய் புடளளவடன கணவனுடத கெருவியாய் அவளும் அப்படியா கில் (விருந்தீ.சத.13). தன்னயே புகழ்ந்து பிறர் யாரையும் இகழ்ந்திடும் சண்டியேதனக்கெருவியாம் (கயிலாச. சத.35).

கெருவிதம் பெ. 1.→ **கெருவம்.** கெருவிதக் கோலப் பாரத னத்து (திருப்பு.151). 2.இறுமாப்பு. நெஞ்சிற் கெருவிதமுங் கூட்டி (மான்.தூது 91).

கெருவிதன் பெ. கருவமுடையவன். நடமாடு கனபத கெருவிதா (திருப்பு.132).

கெல்லிக்கம்பு (கெல்லுக்கம்பு) பெ. கூராம்பாய்ச்சி, தரை தோண்டும் முனை. (யாழ்.அக.)

கெல்லு-தல் 5வி. 1.களைதல். ஊன் விரும்புமவர் குலவோர் கெல்லிப் பாரணங்கின் சுமைதீர்த்து (திருவாமாத். பு. பூர்வ.12,48). ஞானத் தரித்திரத்தை வேரோடு கெல்லி (நேற்றின்.ப.23). 2.அகழ்தல், தோண்டுதல். மண்ணைக் கெல்லிய பின்பு தோன்றும் கிணற்றின் ஆகாசம் போல (கைவல்ய.1,100). கிழங்கு ஆனை மருப்பதனால் கெல்வோம் (சரபேந்திர.குற.37). மனை கோலவேகுழிகள் கெல்லி (கயிலாச.சத.68). கிணறு கெல்ல (தனிப்பா.திர.140,356). 3.கிண்டுதல். (யாழ். அக.) 4.வயிற்றை அரித்து விடுதல். (முன்.)

கெல்லுகம்பு (கெல்லிக்கம்பு) பெ. கல்லுகொம்பு, தரை தோண்டும் முனை. (செ.ப.அக.)

கெலி[1] பெ. பெருவயிறு. (யாழ்.அக.)

கெலி[2] பெ. ஆசை. (இலங்.வ.)

கெலி[3] பெ. 1.பெரும்பயம். கெலி யென்றுள்ளது வன்கலிப் போரை (கண்.பள்.28). கெலி மிகு வனசரர் சிறை கவர் திறலுறு கிழவா (பாண்டி நா.பிள்.3,10). 2.அச்சம். நலியாற் கெலிமிக் குறப்பெற்றோம் (கொளஞ்.பிள்.5,6).

கெலி[4] பெ. மகிழ்ச்சி. நாங்கள் பயிர்க் கிளை கூட்டம் கண்டு கெலி செய்வோம் (மேழிவி.168).

கெலி[5]**-த்தல்** 11வி. 1.ஆசை கொள்ளுதல். (யாழ். அக.) 2.அச்சம் கொள்ளுதல். (முன்.)

கெலி[6]**-த்தல்** 11வி. வெல்லுதல். தர்க்கமிட் டசுரரைக் கெலித்து (திருப்பு.520). நீன்முகனை வெட்டிக் கெலித்து வீர பட்டம் கட்டினவள் (பவளக்.மாலை ப.2). போரை கெலித்து வந்தேனேயானால் புகழ்ந்து கட்டுகிறேன் (தேசிங்கு.கதை ப.64). எதிர்த்த சாவலுஞ் சாய்ந்திடுமே அவன் எடுத்த சாவல் கெலித்திடுமே (வீர.கட்ட.கதைப்பா. ப.114). சூதில் பிள்ளை கெலித்திடல் கொண்டு (பாரதி. பாஞ்சாலி.38). நீதியே நிலைக்கும் ... நியாயமே கெலிக்கும் என்று சங்கூதுவோம் (நாமக்.பா.4,93).

கெலி[7]**-த்தல்** 11வி. மிகப்பெருகுதல். கெச்சிதம் செய்தே தான் கெலித்து மிகச் சேருதய்யே (சின்ன.குரு.24).

கெலிகெட்டவன் பெ. அங்கலாய்த்தவன். (யாழ்.அக.)

கெலிகொட்டு-தல் 5வி. ஆசைகொள்ளுதல். கெலி கொட்டி நடனமிடும் உன்தாதை உடுக்களைக் கிள்ளி வைத்துத் திலக மிட்டார் (தமிழ்.பிள்.15).

கெலிசு[1] பெ. ஆசை. (யாழ்.அக.)

கெலிசு[2] பெ. பயம். (முன்.)

கெலிசு[3] பெ. 1.பெருவயிறு. (முன்.) 2.முகம் வயிறு ஆகியவற்றில் காணும் வீக்கம். (இலங்.வ.)

கெலிப்பு பெ. → கெலிவு. (த.நா.விளை.ப.272) 2.மகிழ்ச்சி. (செ.ப.அக.)

கெலிபடு-தல் 6வி. வெற்றிகொள்ளுதல். வானோர் கெலிபட் டஞ்சுறத் தகுபிரா மணக்குலம் (திருவாமாத். பு.உத்தர.6,24).

கெலிவு பெ. வெற்றி. சேட்டபுத்ரன் என்னக் கெலிவு பெற்றோன் (நல்லதம்.காதல் 81).

கெலுழன் பெ. கருடன், ஒருவகைப்பறவை. கெலுழனோ நந்த னென்னா (சீவக.1926).

கெவ்வியம் பெ. நாய்வேளை. (மலை அக.)

கெவ்வியூதி (கெவியூதி) பெ. இரண்டு கூப்பிடுதூரம் கொண்ட நீட்டலளவு, நாலரை மைல் தூரம். பச்சியம் கெவ்வியூதி முன்றிடை (அகோர.வேதார.பு.44).

கெவரி பெ. வெள்ளைக்காக்கணம். (மலை அக.)

கெவலிகப்பூடு பெ. கொல்லைப்பல்லி. (சித்.அக.)

கெவி பெ. 1.குகை. புலிதாவுங் கெவிதாவும் (இராமநா. உயுத்.95). 2.பள்ளம். (செ.ப.அக.)

கெவிடு பெ. 1.அட்சரக்கூடு. (யாழ்.அக.) 2.எழுத்துப் பலகையின் அறை. (முன்.)

கெவியூதி (கெவ்வியூதி) பெ. இரண்டுகூப்பிடுதூரம் கொண்ட நீட்டலளவு, நாலரைமைல் தூரம். இரு குரோ சத்தைக் கெவியூதி எனக் கொள்க (சிவதரு.12,5). குரோச மிரட்டி சேர்ந்தது கெவியூதி (தணிகைப்பு.அகத்.443).

கெவின்பலுக்கா பெ. கப்பலறைக்கதவு. (கப்.வ.)

கெவின்வாசல் பெ. கப்பலறைக்குச் செல்லும் வழி. (முன்.)

கெவுடமாக வி.அ. பொருள்வெளிப்படையின்றி. செந்தமிழினும் கெவுடமாக உரைசெய்தார் (சிவதர்ம. சிவஞான.123).

கொய் கெழுத்தி (நீரரர் நி.2,2). 2.குளத்தில் வாழும் ஒருவகை மீன். குளத்து வளர்மீன் ... கெழுத்தி (நீரரர்நி.2,).

கெழுதகை பெ. 1.அன்பு. வேலன் ... முருகென மொழியுமாயின் கெழுதகை கொல் இவள் அணங்கி யோற்கே (ஐங்.245). கேழ் இதழித் தாரின் கெழுதகை யும் (ஆனந்த.வண்டு.தூது 245).வவ்விய மில்லாப் புலவர் குழீஇயழகிது சாவுங் கெழுதகையோ (திருக்கதிர. பிள்.20). கெழுதகைப் பரமேட்டி முதலாய அப்பிராகருத பூதங்கள் (ஆண்டாள் பிள்.86). கெழுதகை அன்பன் என்பேன் (தனிப்பா.தீர.34). கெண்டிக் கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னாள் அழுதகண்ணீர் துடைத் தகை (பெருந்.1431). 2.→கெழுதகைமை. கிள்ளி வளவனொடு கெழுதகை வேண்டி (மணிமே.25,14).

கெழுதகைமை பெ. உரிமை. கெழுதகைமையின் அழுதன தோழி (குறுந்.24). கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை (குறள்.808).

கெழுமணி பெ. ஒளிரும் இரத்தினம். கெழுமணி பித்திகையிற் தன்னிழலைப்பேணி (தென்பு.மணி. உலா 245).

கெழுமு[1] -தல் 5வி. 1.நெருங்குதல். அறிவில்லாதார் மிகவும் கெழுமிய நட்பமதனினும் அறிவுடையார் பகைமை கோடி மடங்கு மிக்க நன்மையை உண்டாக்கும் (குறள்.813 மணக்.). வேல் மறவோரைக் கெழுமி அன்பில் கட்டி (நாணிக்.ஒருதுறைக்கோவை 197). 2.பொருந்துதல். தேரோடத் துகள் கெழுமின (புறநா. 345,2). தேரோடத்துகள் கெழுமி (பட்டினப்.47). காமத்தால் கெழுமினார்க்குக் காமனிற் பிரிக்கலாமே (சீவக.754). சேகில் கெழுமி வளர் ஆகாச கேசன் (திருக்காளத்.உலா 99). திருக்குறள்களோடு முருகேசன் எனும் நாமம் கெழுமுதலின் ஆசு அகனறோம் குற்றமது நோக்கார் (முருகேச.வெண்.அவையடக்.). வார்கெழுமும் கொம்மை முலையோர் திகழுமைக்கதிபன் வாலையிரை யும்பர் (வைகுந்த.பிள்.முத்தப்.148). கதுவப் படாமர லிளை இளிதா முளைத்துக் கயங் கெழுமி (பாமணிக் கோவை 15,23). மிடியாருங் கேளிர் நிகர்த்துக் கெழுமத் தருவண்கை (பாரிகாதை 4,4). 3.பழகுதல். கேடு இலா மெய்ந்நூல் கெழுமியும் (கரு.4,4). 4.அடைதல். கற்பகத்தைக் கெழுமுதற்கு எவ்விடத் தேனே (சேந்.1,12). 5.கூடுதல். முரசும் முழவின் குழுவும் முடிசேர் அரசன் கைரின் குழுவுங் கெழுமி (கூளா.1072). கரை பொரு திரையொலி கெழுமிய கழுமலம் (தேவா.1,19,6). எற்கு ஏதமே தீர மேல் கூடவும் கொழுமோ (தேம்பா.1,9,4). இதன் பாலாகக் கெழுமியே பிறவித் துன்பம் வீட்டுதல் குறித்து (ஆளவந்.காஞ்சிப்பு.239). 6.சேர்தல். அசுடர்கள் கூட்டங் கெழுமி யவருள் அவாவலுற (கயற்.மாலை 61). 7.நட்புக் கொள்ளுதல். கெழுமியஅக்கோமகற்குத் தானினைந்த குற்றங்கள் (நள.182). மன்னன் கெழும மதித்து (பாரிகாதை 258). 8.உரிமை பாராட்டுதல். தகைவிலா வன்பினோடுந் தழுவினர் கெழுமினாரே (பாரதம்.1,2,115). 9.உறவு கொள்ளுதல். கிழவிர் போல கேளாது கெழீஇ (மலைபடு. 166). தும்பைத் துறைமுடித்துச் செருவில் வாகைத் திறற்கெழுமி (பெரியபு.39,3). 10.சொல்லுதல். கேட்டலும் அடிகள் வாயில் கெழுமிய மொழிகள் தம்மை (யசோதர.254). 11.கிட்டுதல். ஒன்னாதார் படைகெழுமி (புற. வெண்.47 கொளு). அடிமடக்காகக் கெழுமியசொல் (தொண்டை.சத.26). 12.விரும்புதல். பனிமலர்த் தடமா மீது கிடைப்பவும் ... கெழுமுதல் ... வாளா யங்கையை நக்கல் போலும் (சீகாழித்.பு.தீர்த்த.20). 13.காம விகாரங் கொள்ளுதல். இவன் கற்ற காலமின்றிக் காமத்துக் கண்ணே கெழுமி வருகின்றானாம் (இறை.அகப்.173,13 உரை).

கெழுமு[2]-தல் 5வி. 1.நிறைதல். எங்கும் போய்க் கெழுமி ... புணலும் கொள்ளுமே (சடகோபரந்.58). பொன் கெழுமு வான் நிமிர் புதுக்கரை (கருவூர்ப்பு.2,17). கெழுமிய தவமும் நீடி லோகமும் (செ.பாகவத.24). கதிர் கெழுமிக் கனிந்தழுகொழுக (ஞான.உபதேச கா.25). கிழக்கிலும் ... வடக்கிலும் கெழும உழக்கினுட் சுழலும் உருள்பொருள் (அனிச்சஅடி ப.110). 2.ஆழ்தல். பெருமகன் போல உவகையுள் கெழுமி (பெருந்.3,24, 72). 3.அமைதல். பண் கெழுமப் பாடி (காரை.பதி. 1,9). 4.ஒன்றுபடுதல். தூது ணம்புற வினம் ... கெழுமி ... ஊடியும் உணர்த்தியும் (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.54). 5.முதிர்தல். கெழுமுதல் ஈண்டு முற்றுதலை யுணர்த் திற்று (மலைபடு.114 உரை). 6.முளைத்தல். கெழுமுதல் தானே முளைத்தலாகும் (அக.நி.கெம் முதல்2). 7.உள்ளம் ஒன்று பட்டிருத்தல். மதியுடை யாளர் கேட்பர் கெழும்யிருந்து (அறநெறி.49). 8.மகிழ்ச்சியால் ஆரவாரித்தல். கிளையவர் உவகையில் கெழும ஈன்ற னள் (யசோதர.78). 9.காமவிகாரங் கொள்ளுதல். மிக்க அவாவினராய்க் கெழுமற்கழிவுற்ரு வியன்னார் (திருக்கோவை 37). கிரிகையை நினைந் துடல் கெழுமி (பாரதம்.1,1,104).

கெழுமை[1] பெ. வளமை. (சதுரக.)

கெழுமை[2] பெ. 1.நிறம். (முன்.) 2.பிரகாசம். (முன்.) 3.ஒரு சாரியை. (முன்.)

கெழுவ இ.சொ. ஓர் உவமவுருபு. அற்று கெழுவ (தொல்.பொ.286 பேரா.).

கெழுவு[1] பெ. நட்பு. கேளிர் மணலின் கெழுவு மிதுவோ (பரிபா.8,63).

கெழுவ்[2]-தல் 5வி. 1.நிறைதல். கெழுவுற்ற செல்வங்கள் (கலித்.149,8). விம்மும் பொழில் கெழுவும் வயல் விரிநீர் வியலூரே (தேவா.1,13,3). வண்டு அறை பொழில்

மழனம் கெழுவு கமபலைசெய் கீழ்க் கோட்டூர் (கரு.3,1). கெழுவிய கருணை நீலம் முற்றிய நெடுவரை ளங்கணும் குளிர (தேம்பா.1,6,72). கெழுவிய காதலை யென்று (தணிகைப்பு.களவு.530) 2.சேர்ந்து கொள்ளுதல். போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇ (தொல். பொ.113,8). கிளையொடு கெழீஇ ... பாய்புனல் பரத்தந்து (பரிபா.7,39). 3.சேர்த்தல். மறைசேர் வருங்கலை ஞானசம்பந்தன் ... மெலிகெழு துயரடையா வினை சிந்தும் (தேவா.1,79,11). 3.பற்றுக் கொள்ளுதல். (சூடா.நி.) 4.மயங்குதல். (முன்.) 5.மிகுதல். மாவலி மருமான் சீர்கெழு திருமகள் (மணிமே.19,45). உருகெழு கோலத் திருமுது சூரைக் கிளையோடும் அஞ்சக் கொன்று (திருச்செந்.கலம்.7,12).

கெழுவு[3]-தல் 5வி. 1.பொருந்துதல். உரு கெழு செலவின் ... பேய் மகள் (முருகு.57). அதர்பல கெழுவு தாழ்வரை (பரிபா.6,6). பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய (சிலப்.1,15). கலி கெழு நிலத்தைக் காவா தொழியுமோ காளைக் கென்றாள் (சீவக.1926). செந்நிறக் குருதியில் பைந்நிணம் கெழீஇ (பெருங்.1,46, 48). நன்கெழு சிந்தையராகி மலனொடு மாசு மில்லவர் வாழுமல்கு பெருந்துறையாரே (தேவா.1,42,4). நண்ணினன் வளம் கெழுவு கச்சிநகரே (கலிங்கத்துப். 300). ஓவா தளபெடுத்தூஉங் கெழுவும் உதாரணமாய் (யாப்.காரிகை 30). கெழுகசிப்பட அறுத்து இரு பிறைகள் ஆக்கிய ... அறவும் நோக்கிலா (தேம்பா.2,3, 75). மீ கெழு பரஞ் சுடர் வெளிப்பட்டு (குமர.பண்டாரமும். கோவை 2,13). 2.ஒத்தல். முலையாழ் கெழும மொந்தை கொட்ட முன்கடை மாட்டயலே (தேவா.1,63, 7). 3.கூடுதல். இளையொடு கெழீ இ (பரிபா.7,38). கெழுவுதிருப் பதிகத்திற் கிளர்ந்த ஓசை (பெரியபு.28, 445). 4.புணர்தல். கெழீஇக் கேளிர் சுற்ற...பாடும் பாட்டு (பரிபா.14,23,24). நளன் கெழுவி நாளும் வழிபாடுசெய் நள்ளாறே (தேவா.2,33,3). 5.பாய்ச்சுதல். கோல் கெழுவும் வெம் சிலை (பாரத வெண்.561,2).

கெளி[1]-த்தல் 11வி. 1.நெளிந்துபோதல். (யாழ்.அக.) 2.சுளுக்குதல். கழுத்துத் கெளிச்சுப் போட்டது (இலங்.வ.).

கெளி[2]-த்தல் 11வி. சரித்து ஊற்றுதல். (முன்.)

கெளிச்சல்லியம் (கெளிர்ச்சல்லியம்) பெ. மீனெலும்பு. (யாழ்.அக.)

கெளிசு (கெலிசு[3]) பெ. 1.முகம் வயிறுகளிற் காணும் வீக்கம். (முன்.) 2.காமாலைவீக்கம். (முன்.)

கெளிசுபற்று-தல் 5வி. 1.வயிறு முகம் முதலியன வீங்குதல். (முன்.)

கெளித்திப்பச்சை பெ. பச்சைக்கருப்பூரம். (மூலி.அக.)

கெளிதம் பெ. பெருகல். (சதுரக.)

கெளிப்பு பெ. நெளிவு. (யாழ்.அக.)

கெளிர்ச்சல்லியம் (கெளிச்சல்லியம்) பெ. மீன் எலும்பு. (வின்.அக.)

கெளிற்றுமீன் பெ. ஒருவகை மீன். (அம்.அக.)

கெளிற்றுமுள்ளி பெ. கெளிற்றுமீனைப் பிடித்தற் குரிய தூண்டில். (நாட்.வ.)

கெளிறு பெ. →கெளுத்தி. கேவேட ராகிக் கெளிறது படுத்தும் (திருவாச.2,17). நெண்டு வரால் கருங்கயல் புற்புதும் னகளிறு ஆமை (ஞான.உபதேசகா.1329). அம் கெளிறு திருக்கையிற் காட்டி (திருவிடை.கலம்.55). பாலைமீன் கெளிறு மலங்கு (கதிரை.பள்.50).

கெளுத்தி (கெழுத்தி) பெ. 1.எட்டங்குலம் நீளமுள்ள கெளிற்றுமீன். (செ.ப.அக.) 2.முள்ளும் மீசையும் கொண்ட நன்னீரில் வாழும் ஒரு வகை மீன். பசலி திருக்கை கசலி கெளுத்தி (முக்.பள்.50). 3.பதினெட்டங் குலம் நீளமுள்ள மீன்விசேடம். (செ.ப.அக.) 4.தேளி மீன். (முன்.)

கெளுத்திநாடு பெ. கெளிற்று மீனின் இருகடை வாயிலும் முதுகிலும் உள்ள நீண்ட முள். (இலங்.வ.)

கெளுத்திப்பூண்டு பெ. மீனெரிஞ்சான். (செ.ப.அக.)

கெளைதெரச்சி பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கெற்சி[1] பெ. சிறுவழுதலை. (சங்.அக.)

கெற்சி[2]-த்தல் 11வி. 1.கொக்கரித்தல். கெற்சிதக் கூற்றுற்றல் (சிங்.சிலே.வெண்.19). 2.முழங்குதல். வாயிலே அக்கினிப் பொறிகள் சிதற வாக்கிரமித்துக் கெற்சித்தான் (கோலாசல.பு.47 உரை). 3.உக்கிரமா யார்த்தல். (யாழ்.அக.)

கெற்சிதம் பெ. 1.முழக்கம். (முன்.) 2.இடியொலி. மேகக் கெற்சிதம் போற்குமற (கும்மிப்பா.சீரணி.99).

கெற்பக்குவளை பெ. கருப்பை. (யாழ்.அக.)

கெற்பகோளகை பெ. →கெற்பக்குவளை. கெற்ப கோளகையின் கண் பதிந்த கற்பம் (சிவதரு.சுவர்க்க.3).

கெற்பத்தலைவன் பெ. வீரம். (யாழ்.அக.)

கெற்பத்தி பெ. சாலக்கிராமம்.(முன்.)

கெற்பம் பெ. 1.கருப்பம். மாயனார் தம்மக்கண் மாமுனி யைக் கேட்ட கெற்பம் ... வையத்திற் சீருறா வஞ்சகம் பே சேல் (ஆத்திசூடிவெண்.27). கலப்ப தெங்கே கெற்ப மெங்கே (திருவேங்.வண்டு.தூது 261). அப்போதே கெற்பம் அடையும் காண் கரணங்கே (புலந்.மாலை ப.58). 2.கரு. கெற்பத் தாயினைப்போ லக்கிரியை வலம்வந்திங் கரங்கனடிச் சார்வீர் (கோலாசல.பு.14).

கெற்பவாயு பெ. கருப்பமுண்டாகாமற் பண்ணும் வாயு. (யாழ்.அக.)

கெற்பவிப்புருதி பெ. ஓர் விப்புருதி. (முன்.)

கெற்பனி பெ. கருப்பந்தரித்தவள். (முன்.)

கெற்பாதானம் பெ. கருப்பந்தரித்த நாலாம்மாதஞ் செய்யுமோர் சடங்கு, கர்ப்பாதானம். (முன்.)

கெற்பிரி-த்தல் 11வி. பற்றியெரிதல், சுவாலித்தல். (முன்.)

கெற்பு[1] பெ. வலிமை. (வின். அக.)

கெற்பு[2] பெ. தத்துவம். (யாழ்.அக.)

கெற்போட்டம் பெ. மார்கழிமாதப் பிற்பகுதியில் கருக்கொண்ட மேகத்தின் தென் சார்பான ஓட்டம், முகிலோட்டம். (முன்.)

கெறங்கு-தல் 11வி. சுற்றுதல். (நாட்.வ.)

கெறபி-த்தல் 11வி. கருப்பந்தரித்தல். (யாழ்.அக.)

கெறு பெ. 1.திமிர். (இலங்.வ.) 2.ஆங்காரம். (யாழ்.அக.)

கெறுவம் பெ. கர்வம், திமிர். (இலங்.வ.)

கெறுவமதம் பெ. செருக்கு. (தக்கயாகப்.11)

கெறுவி பெ. 1.கெட்டிக்காரன். (யாழ்.அக.) 2.ஆங்காரி, செருக்கன். (முன்.)

கெறுவி-த்தல் 11வி. கறுவித்தல். (முன்.)

கெறுவிதம் பெ. கெர்வமதம். கெறுவித மடரிடு சரணிடையும் உல்லாச மொடுகரமுறு குடையும் ... களத்துத்திரிந்தல்லால் ... நன்மை ... செயவிலையே (அந்தோனி.அண்.19).

கே

கே 'க்' எனும் மெய்யும் 'ஏ' எனும் உயிரும் இணைந்த கூட்டெழுத்து க் + ஏ = கே.

கேக்குவிதை (கேக்குவிரை) பெ. சீமைச்சோம்பு. (குண.333)

கேக்குவிரை (கேக்குவிதை) பெ. சீமைச்சோம்பு. (செ.ப.அக.)

கேகம்[1] பெ. வீடு. (யாழ்.அக.)

கேகம்[2] பெ. மயிற்குரல். (முன்.)

கேகயக்காரன் பெ. முருகன். கலபவண குலாவுறும் நெடிய கேகயக்காரனும் (குன்றக்.முருக.வகுப்பு 6,11).

கேகயப்புள் பெ. இன்னிசையில் விருப்பமுடையதாகக் கூறப்படும் ஒரு விலங்கு அல்லது புள், அசுணமா. வாடை அடித்தன் மயில் கேகயப்புள் (முத்துவீ. 790). கேகயப்புள் ஊர்வானை (பழனித்திரு.1,83).

கேகயம்[1] பெ. 1.ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்றானதும் சிந்து தேசத்துக் கருகிலுள்ளதுமான நாடு. மணிமுடிக் கேகயத்தரசன் (பெருங்.3,16,9). கேகய நாட்டு வேந்தன் (சூசேலோ.296). 2.கவுரி பாடாணம். (யாழ்.அக.) 3.பண்வகை. (சூடா.நி.) 4.→கேகயப் புள். கண்ணியில் வீழ்கேகயத்துடனே (சோலை.குற.135).

கேகயம்[2] பெ. 1.மயில். கேகயம் நவில்வன (கம்பரா. 1,2,49). மன்றற் கிளை வளர் சாரலிற் கேகயம் (அம். கோவை 174). புனக் கேகயம் அன்ன நின் அடி போற்றி (தஞ்.கோவை 394). இந்தச் சீரிய துரங்கங் கேகயம் (திருவிளை.பு.59,105). பெய் மலர்க் காவெலாம் ... கேகய மாடின (அரிச்.பு.3,24). நற்புடைக்கோ சொல் கேகயத்தூங் கயத்துங் களிப்ப (திருக்காளத்.உலா 178). மரகதப்பொன் னாக மானுங் கேகயத்தில் (திருச்செந். பு.1,11). கலபவண் குலாவுறும் நெடிய கேகயக் காரனும் (குன்றக்.முருக. வகுப்பு 6,11). பனி மலர்க் கா உண்டு கேகயம் உண்டு (திருவாரூர்க் கோவை 157). அரி நிறக் கேகய முலவ (முகியித்தீன் பு.216). 2.அன்னம். மடற் கேகய வனந்சூழ் கும்பகோணத்து மாதவனே (குடந்தையந்.17).

கேகயம்[3] பெ. மகிழ மரம். (சித்.பரி.அக.ப.84)

கேகயம்[4] பெ. வில். (அக.நி.117)

கேகயன் பெ. 1.ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்றானதும் சிந்து தேசத்திலுள்ளதுமான நாட்டில் வாழும் மக்கள். குலிங்கர் கேகயர் விதேகர்கள் (திருவிளை.பு. 5,75). குலிங்கர்கே கயர்கலி ங்கர் (இறைவாச.பு.357). 2.கேகய நாட்டு அரசன் கைகேயன். கேகயன் சேதிபன் ஆகிய வேந்தர்களுக்கு (பாரதவெண்.9 உரை).

கேகரம் பெ. 1.தலை. (ஆசி.நி. 92) 2.கடைக்கண் பார்வை. (கதிரை.அக.)

கேகலன் பெ. கூத்தாடி, நாடரி. (யாழ்.அக.)

கேகா பெ. →கேகை-2.(கதிரை.அக.)

கேகாபலம் பெ. →கேகயம். (யாழ்.அக.)

கேகி (கேகை) பெ. →கேகயம்[2]-1. (கதிரை.அக.)

கேகை (கேகி) பெ. 1.→கேகயம்[2]-1. வெள்ளிக்கிரியின் மருவாத கேகை (ஆனைக்கா.உலா 374). 2.மயிற் குரல். (யாழ்.அக.)

கேசகம் பெ. அத்தி. (சித்.பரி.அக.ப.84)

கேசசிதன் பெ. நாவிதன். (யாழ்.அக.)

கேசதகம் பெ. →கேசதம்-2. (சித்.பரி.அக.ப.84)

கேசதம் பெ. 1.கரிசலாங்கண்ணி. (மலை அக.) 2.கையாந்தகரை. (வைத்.விரி.அக.ப.115)

கேசதாரகம் பெ. →கேசதம். (சித்.பரி.அக.ப.84)

கேசபந்தம் பெ. 1. (சிற்.) தலையுச்சி மட்டத்திலிருந்து 1 முகம் 1/2முகம் அல்லது 2 முக உயரங் கொண்ட தாகவும் செங்குத்தானதாகவும் தூக்கி முடித்த பந்தமாகவும் அமைந்த தலைக் கோலம். (சிற்.செந். ப.82) 2.பூ முடித்த கொண்டை. (கதிரை.அக.)

கேசபந்தி பெ. 1.மயிரொழுங்கு. (யாழ்.அக.) 2.மயிர் முடி. (முன்.)

கேசபாசி பெ. குடுமி. (கதிரை. அக.)

கேசபாரம் பெ. பெண்மயிர். (முன்.)

கேசம் பெ. 1.மக்கள் தலை மயிர். கேச மணிந்த கிளர் எழிலோள் (கைந்நிலை 12). நுண்சிகை கேசமாம் (திருமந்.230). குறையிவட் குண்டேற் கேசங்குறைத் தற்கு (பெருங்.4,14,29). பாதாதி கேசம் பழிப்பு இலாள் (சேர.உலா 186). மைவந்த நிறக்கேச வடப்பூணு நூலும் (பெரியபு.12,23). கேசம் கோதவிழ்ந்ததனால் நிருமலன்

சந்நிதி யிகழ்ச்சி யானது (ஞான.உபதேசகா.1649). கேசமே யாதியாக (திருச்செந்.பு.43). பொன் நிறத்த கேசமும் (சிவஞா.காஞ்சிப்பு.வயிர.17). கேசம் கொள் கருமுகிலின் வார் கொண்டை (கதிரை.பள்.2). கேச வாசத்தார் கிடையாதோ (தென்பு.மணி.உலா 500). 2.விலங்கின் மயிர். ஆண்பெ ணஃறிணை மயிரிவை கேசம் (பிங்.3425) 3.அவுரி. (இலக்.சொ.அக.) 4.வேர். (இலக்.சொ.அக.)

கேசமதனி பெ. வன்னிமரம். (சித்.பரி.அக.ப.84)

கேசமார்ச்சகம் பெ. சீப்பு. (யாழ்.அக.)

கேசமார்ச்சனம் பெ. →கேசமார்ச்சகம். (முன்.)

கேசமுட்டி பெ. வேம்பு. (மூலி.அக.)

கேசயா பெ. தாழை. (சித்.பரி.அக.ப.84)

கேசரஞ்சகம் பெ. → கேசரஞ்சனம்-2. (தைலவ.134)

கேசரஞ்சனம் பெ. 1.பொற்றலைக்கையாந்தகரை. (சங்.அக.) 2.தலைமயிர் வளர்க்குந் தைலவகை. (செ.ப.அக.)

கேசரத்தரு பெ. மகிழமரம். (மருத.பு.24,2 உரை)

கேசரம்[1] பெ. 1.மகரந்தம். வாசம் வீசிய கேசரம் திகழ் வள் இதழ் (கருவூர்ப்பு.17,8). 2.பூந்தாது. கேச ரங்களை வருவியாக் கிளர் முதலீறு வீசி (மருத.பு.நகரச்.12). சூலதுடுக கேசரமாம்பர (அருணை.வேல்விருத்.8,3). தத்த தள்ளும் மது கேசரம் தாங்க (சமுத்திரவி.22). தேனனைசெய் கேசரத்தேடு விரி நாண்மலர் (கீழ்.முரு. பிள்.33). 2.மகிழமரம். கேசரத்தனித் தருவொன்று கெழுமலர் கொண்டு (மருத.பு.24,2). மகிழ் ... கேசரம் ... மகிழம் (அபி.மாலை 839). (ஆசி.நி.ப.127) 3.மகிழம்பூ. (தேரை.வெண்.172) 4.குங்குமப்பூ. (செ.ப.அக.) 5.சிங்கம். (தேரை.வெண்.172) 6.மயிர். சுரிந்த கேசரஞ் சுடரணி வளையெயிற் றொளியால் (சூளா. 72). பகலாலும் கேசரத்தில் மனந்தான் எட்டும் (சித்.பா. சட்டைமுனி.பின்.6). எரிஅன கேசரம் (பெரியதி. தமிழாக்.2,8,171).

கேசரம்[2] பெ. வண்டு. பார்ப்பெ டுத்திரி கின்றன கேசரப் பறவை (கந்தபு.4,4,177). கேசரத்தொலியன்னோர்கள் (சீகாளத்.பு.கன்னி.149). கேசரமே பரத்தையார் சொன்னாலும் தள்ளுவரே (திருவேங்.வண்டு.தூது 305). கேழ் கிளர் தரு நின்னடிக் கேசரமானேன் (வைண.ஆசா.2,6,7). கோன்மிளிர் கார்விழி கண்டிது கேசரமே (பது.பரிண.2,67).

கேசரம்[3] பெ. பெருங்காயம். (யாழ்.அக.)

கேசரம்[4] பெ. (இசையி.) கீரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147)

கேசரம்[5] பெ. அப்பிரகம். (மருத்.குண.2 ப.297)

கேசரம்[6] பெ. பன்னிமுள். (போகர் நி.32)

கேசரமுடையான் பெ. சீந்தில். (சித்.பரி.அக.ப.84)

கேசரர் பெ. 1.(இசையி.) சாருகேசி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.159) 2.(இசையி.) கீரவாணி என்னும் ராகத்தின் கிளை ராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147) 3.(ஆகா யத்தில் சஞ்சரிப்பவர்) வித்தியாதரர். கிளர்ந்தொளி துளும்புமேனிக் கேசர ரோடு (சூளா.530). கேசர னெனப்போம் விசும்பிடை (பாரதம்.1,1,104). கேசரர் தும்புரு சித்தர் (அரிச்.பு.2,26). கேசரரே வித்தியாதரர் ஆகும் (அக.நி.கே முதல் 2).

கேசரவரம் பெ. நாயுருவி. (சித்.பரி.அக.ப.84)

கேசராசம் பெ. ஓர்நாரத்தை. (யாழ்.அக.)

கேசராதனம் பெ. ஆசனவகை. (தத்துவப்.108 உரை)

கேசரி பெ. 1.நீலி என்னும்மலையிலுள்ள பொய்கை. கேசரி புண்டரீகை மகா புண்டரீகை ... என ஆறு பொய்கைகள் உள்ளன (சீவக.183 உரைக்குறிப்பு). 2.பாதரசம். (மருத்.குண.2 ப.130) 3.→கேசரி யாசனம். பாலம் ன்ற கேசரியாம் மறனத்தூன்றி (சித்.பா. சட்டைமுனி.75). 4.சிங்கம். கிரி முழைஞ்சுக டொறும் பதைத் தோடின கேசரிக் குலமெல்லாம் (பாரதம்.1,8,37). அவுணர்தந் திகிரி பூண்டிடு துனைவரு கேசரி துஞ்ச (கந்தபு.4,8,164). அயலோர் வழி போன கேசரி விறலுகிர்க் கொடு பொதி யவிழ்த்தி (ஞான.உபதேசகா.1589). பெருங் கிளையினோ டுற்ற கேசரி (அரிச்.பு.3,34). கவளக் கரிய குடுகு உணக் கேசரி கைநிமிர்க்கும் (தூக.கோவை 37). மயில் காப்ப மானை வெகுண்டெழுந்த நல்லிளங் கேசரி (நாணிக்.ஒருதுறைக் கோவை 31). இடிஏறு எனும்உரை வளர்கே சரிகள்எனா (ஆண்டாள் பிள்.56).பெட்புறு சாக்கிய மதமத கரிநிலை பிரிகேசரியானோன் (சோலை.குற.6). சிவபூசை செய்விக்கிரம கேசரியாம் (திருவிடை.நா.ப. 59,22). தந்தியை யடர்த்த கேசரியி னாசனந் தன்னின் மீதுற (நகுல.பு.தல.50). 5.குதிரை. (இலக்.சொ.அக.) 6.மயிர். நெடுங் கேசரியை வேணிச் சடை திருத்தி (திருவேங்.வண்டு.தூது 9). 7.கொம்மட்டி மாதுளை. நாடப்பா கேசரி மண்டைக்குள் வைத்து (போகர் நி.429). 8.மடங்கல். (அயற்.அக.) 9.புன்னை. (முன்.) 10.குங்கு மப்பூவுஞ் சர்க்கரையுங் கலந்து பக்குவஞ் செய்யப் பட்ட கோதுமை ரவைப்பண்டம். கேசரியும் சிற்றுண்டி யில் இடம் பெற்றிருந்தது (சிலேடை இலக்.ப.177). 11.(இசையி.) மாரரஞ்சனி எனும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.158)

கேசரிக்கிரியா பெ. (இசையி.) காமவர்த்தினி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.203)

கேசரித்தவிசு பெ. சிம்மாசனம். கேசரித் தவிசின் மயிலுடன் மேக வண்ணனை யிருத்தி (திருவேங்.பு. 41,25).

கேசரிப்பருப்பு பெ. பருப்பு வகையினுள் ஒன்று. (கலைச்.அக.2 ப.91)

கேசரிபாத்து பெ. →கேசரி-10. (செ.ப.அக.)

கேசரிமார்க்கம் பெ. ஆகாய மார்க்கம். அந்தரத் தினிற் றடையிலாமற் தாவு கேசரி மார்க்கமாகப் பறந்திடும் (கறுப்பண்ண.சத.94).

கேசரிமுத்திரை பெ. உள் நாக்கைத் தொடும்படி நாக்கு நுனியைத் திருப்பிக் கொண்டு செய்யும் யோகம். (சமய.அக.)

கேசரியர்சனம் பெ. கணைக்கால்கள் பிருட்டத்தைத் தொடவும் விரித்த கைவிரல்கள் துடையிற் படவும் வாய்மலர்ந்தும் பார்வை மூக்குநுனியை நோக்கியும் இருக்கும் யோகாசனவகை. (முன்.)

கேசரியாதனம் பெ. →கேசரியாசனம். (யாழ்.அக.)

கேசரியோகம் பெ. (சோதிட.) சென்மகாலத்தில் சந்திர னுள்ள இலக்கினத்துக்குக் கேந்திர லக்கினத்தில் வியாழன் இருக்கும் யோகம். (சங்.அக.)

கேசரீகம் பெ. நாய்புருவி. (வைத்.விரி.அக.ப.115)

கேசரை பெ. பருத்திச் செடி. (யாழ்.அக.)

கேசரோமம் பெ. பூனைக்காலி. (சித்.பரி.அக.ப.84)

கேசலகம் பெ. வேடர் முதலியோரின் தலைக்கட்டு. (கௌடலீயம் ப.222 உரை)

கேசவன் பெ. திருமால். கேசவன்றமர் (திருவாய்.2,7,1).

கேசவந்தி பெ. வன்னிமரம். (சித்.பரி.அக.ப.84)

கேசவபூபன் பெ. ஒரு கொடையாளி. வீரப்ப னல்கு மகராச யோகன் நங்கள் கேசவபூபன் (பெருந்.1968).

கேசவம் பெ. 1.(இசையி.) கீரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147) 2.அட்டாதசதருமநூலில் ஒன்று. (யாழ்.அக.) 3.நறு மணம். (முன்.) 4.பைசாசம். (முன்.) 5.வண்டு. (முன்) 6.பெண்வண்டு. (சூடா.நி.) 7.நிறைமயிர். (கதிரை.அக.)

கேசவர் பெ. வாசுதேவர். மன்முதல் பலவர்கே சவர்கண் மாற்றவர் (சூளா.400).

கேசவற்குத்தோழன் பெ. அருச்சுனன். (சூடா.நி.)

கேசவற்றோழன் (கேசவன்+தோழன்) பெ.→கேச வற்குத் தோழன். (யாழ்.அக.)

கேசவன் பெ. 1.நிறைமயிருள்ளோன். (முன்.) 2.திருமால். கேசவன் பூச்சக்கர கேயூரன் (சூலோ.உலா.316) கேசவன் சூதனாகிக் கீழிருந்திடவும் (அருணகிரி.பு.1,41). பெருவரம் கேசவன் அல்லாதருள் செயும் (திருவர.கலம். 36,1). பின்னை மாது இருக்கும் மணி வாசமார்பு அரங்கா கேசவா (திருவர.அந்.78). ஆல் கேசவனுக்கு அரியார் தியாகர் (திருவாரூர்க்கோவை 169). கேசவன் பேயாய் அகன்று கடிது தாயினன் (ஞானாமிர்.40,9). கேசவன் றனக்குமேல் தெய்வமும் இல்லை (சிவஞா.காஞ்சிப்பு. சார்ந்தா.8). மருளின் மேவினன் கேசவன் பரமென வலித்தான் (ஆளவந்.காஞ்சிப்பு.105). கேசவனை அல்லாத தேவர் அளித்த வரம் போல் சிறிதும் இல்லாது தேய்ந்த விடையினாள் (சிறுபு.உலா 241). கேசவன் திரி புரத்துறு கேடற்பாற் கிடைத்தாண் (மருத.பு.23,7). 3.சோழன். (பிங்.நி.748) .

கேசன் பெ. சிவபிரான். கவ்வெனச்சொல் விதிக் கீசன் ஆயஎமைக் கேசன்எனக் கழறும் வேதம் (சிவஞா. காஞ்சிப்பு.தழுவ.69).

கேசாங்காதனம் பெ. ஒரு வகை ஆசனம். (தத்துவப்.107)

கேசாதிபாதம்[1] பெ. கலி வெண்பாவால் ஒருவரை முடிமுதலாக அடிவரை வருணித்துக்கூறும் ஒரு பிரபந்தம். கலிவெண்பாப் பகரும்... கேசாதி பாதமுமாம் (நவநீதப் பாட்.43). கேசாதி பாதமே கலிவெண்பாவால் முடிமுதல் அடிவரை மொழிவர் (பிரபந்ததீ.73). கேசாதி பாதம் பாதாதி கேசமாகப் பாடுவ (முத்துவீ.1046).

கேசாதிபாதம்[2] வி.அ. முடிமுதல் அடிவரை. பெருவுடை யாரது கேசாதிபாதம் கூறப்படும் (தஞ்.பெரு.உலா 268 உரை)

கேசாந்தம் பெ. 1.தலையின் உச்சி. கேசாந்தம் உறும் ஆவி (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.68). 2.மயிர்களைந்து செய்யுமோர் சடங்கு. (யாழ்.அக.)

கேசாந்தமுத்தி பெ. ஆன்மாக்கள் இறுதியில் பெறும் முத்தி. ஆருயிர்கள் ... அந்தத்தை எய்தா நிற்கும் அவ்விடத்தில் ... கேசாந்த முத்தி (சிவஞா.காஞ்சிப்பு. தழுவ.69).

கேசாரநாட்டம் பெ. (இசையி.) சரசாங்கி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.162)

கேசாரவளி பெ. (இசையி.) சூரிய காந்தம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.136)

கேசரி பெ. கழுத்து மயிர். பலவாகிய கேசரியையுடைய குதிரைகள் (நெடுநல்.93 உரை).

கேசாவர்த்தம் பெ. குதிரைக்காலிலுள்ள தீய சுழிவகை. (அசுவசா.149)

கேசரவாதனம் பெ. இரண்டு முழந்தாளும் மாறி மடித்தான் றியிருமுழங்கையு முழந்தாளிற்பட கை நீட்டியிருப்பது. (யாழ்.அக.)

கேசி பெ. 1.உரோமத்தை உடையவன். மற்றை நேரிழை யாரோடு ... சதுரங்காதி யாடிய கொள்கையாளன் ... அற்பகேசி (சிவதர்ம.சுவர்க்க.விசேட.34). 2.அழகிய மயிர்முடியுடையவள். கனத்தினை முன் பழித்ததை அந்தரத்தில் விட்ட கேசி (சரபேந்திர.குற.66,3). மைப் பொரு கேசி வருப்பசி (புரூரவ உருப்பசி.15). நீலகேசி குண்டலகேசி (செ.ப.அக.). 3.வெள்ளிக் கம்பி

போன்ற தலை முடியினன். (தென்.குல.குடி.1 ப.427) 4.மயில். (சித்.பரி.அக.ப.166) 5.ஒரு அரசன். தேவ நாதனுஞ் சித்தியுங் கேசியும் மூவருந் தனித்தனி முதுகிட (பெருந்.786). 6.கிருட்டிணன். (யாழ்.அக.) 7.சிங்கம். (முன்.) 8.கஞ்சனால் கண்ணனைக் கொல்ல ஏவப்பட்டவன். கஞ்சன் செலுத்திட நண்ணிய கேசி (குசேலோ.686). 9.வாசுதேவனுக்குப் பத்திரை யிடத்துப் பிறந்த மகன். (கதிரை.அக.)

கேசிகர் பெ. சத்தியசாடா என்ற ஒரு முன்னோர் பெயரில் அமைக்கப்பட்ட ஒரே சூத்திரத்தைப் பின் பற்றுபவர், சுமார்த்தப் பிராமணருள் ஒரு வகை யார். (தென்.குல.குடி.1 ப.427)

கேசிகன் பெ. நிறைமயிருள்ளோன். (யாழ்.அக.)

கேசிசூதனன் பெ. கண்ணன். (முன்.)

கேசியா பெ. தாழை. (முன்.)

கேசினி பெ. சங்கங்குப்பி. (மலை அக.)

கேசீ பெ. அவுரிச்செடி. (சித்.பரி.அக.ப.84)

கேசு பெ. (இங்.) வியாச்சியம், குற்றச்சாட்டு. (செ.ப.அக.)

கேசுகம் பெ. கிழங்குவகை. (யாழ்.அக.)

கேசுப்புணர்ச்சி பெ. எதிர்வியாச்சியம், எதிர் குற்றச் சாட்டு. (செ.ப.அக.)

கேஞ்சலிகை பெ. 1.கிழங்குவகை. (யாழ்.அக.) 2.செடி வகை. (நாட்.வ.)

கேட்டல்மானி பெ.காது கேட்காதவர்கள் பயன் படுத்தும் கருவி. (மருத்.கலைச்.அக.ப.22)

கேட்டவாய்க்கேட்டல் பெ. பலராலுங்கேட்டல். (யாழ். அக.)

கேட்டவிவு பெ. (சமண.) கருமங்கள் சில கெட்டும் சில உபசமடைந்தும் நிற்கும் நிலை. கேட்டிற் கேட்ட விவுதன்கண் (மேரு.பு.790).

கேட்டாமூலம் பெ. கேட்டை மூலம் என்னும் நட்சத்திரம். கேட்டாமூலம் பாறாங்கல் என்னும் அல்விழ முடியுங் கொள்க (தொல்.எழுத்.284 நச்.).

கேட்டி பெ. 1.→கேட்டித்தடி. (இலங்.வ.) 2.மிலாறு. (யாழ்.அக.)

கேட்டித்தடி பெ. தாற்றுக்கோல். (இலங்.வ.)

கேட்டீரே இ.சொ. அசைநிலைச்சொல். (தொல்.சொல். 425 உரை)

கேட்டுக்கேள்வி பெ. 1.கேட்டறிகை. (இலங்.வ.) 2.அனுமதி. (முன்.)

கேட்டுக்கொள்(ளு)-தல் 2வி. வேண்டிக் கொள்ளுதல். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக (விவிலி.யோவான் 15,16).

கேட்டுப்போ[1]-தல் 4/5வி.பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் சடங்கு ஆகாரங்களுடன் செல்லுதல். நாளைக்குப் பெம்பிளை வீட்டார் கேட்டுப் போவினம் (இலங்.வ.).

கேட்டுப்போ[2]-தல் 4/5 வி. 1.காரியங் கெடுதல். (செ. ப.அக.) 2.முறிதல். வண்டியச்சுக் கெட்டுப் போயிற்று (வட்.வ.). 3.சாதல். (நாட்.வ.)

கேட்டுமுட்டு பெ. (சமண.) புறச் சமயத்தோரைப்பற்றிக் கேள்விப்பட்டதனால் சைனர் மேற்கொள்ளும் தீட்டு. கேட்டுமுட் டியானும் என் றியம்பி (பெரியபு.28, 684). கண்டு முட்டுக்கேட்டுமுட்டவர் இழந்ததும் (திருவாமாத்.பு.உத்தர.7,5).

கேட்டை[1] பெ. 1.பதினெட்டாவது நட்சத்திரம். கேட்டை யாற் கொண்டான் ... என வரும் (தொல்.எழுத்.286 நச்.). தெளிவுறக் கேட்டையில் வணங்கி மாடதானம் செய்திடின் (திருக்காளத்தி.பு.25,18). கேட்டையும் மூலமும் கெடுதி நாளென்று (புலந்.மாலை ப.105). கேட்டை நான்கும் ஈட்டி போல (சோதி.சிந்.ப.96). அனுதபனால் நாகமிது நங்கேட்டை (அப்பாண்டை.உலா 134). 2.மூதேவி. சீர்கேடி ... கேட்டையிவை மூதேவிக்கே (நாம.நி.69). அளவே வறுமை உறுங்காலம் கேட்டை யாகி யமர்ந்திடுவாள் (தேவி.மா.12,21). 4.தமக்கை. (ஆசி.நி.80)

கேட்டை[2] இ.சொ. ஓர் அசைநிலை. (தொல்.சொல். 422 தெய்வச்.)

கேட்டைக்கிழத்தி பெ. மூதேவி. கேட்டைக் கிழத்தியைப் பாடுங்கால் (அறநெறி.111).

கேட்டொறும் வி.அ. கேட்கும்பொழுதெல்லாம். தண்கடற் படுதிரை கேட்டொறும் (ஐங்.107).

கேட்பவன் பெ. 1.நூலைப் படிப்பதற்கு உரியவன். ஓதினவன்கேட் பவன் நூற்பெயர் வழி யாப்பு (சுவாமிநா.3). 2.பேச்சைக் கேட்பவன். (மொழியி.கலைச்.அக.ப.2)

கேட்பி-த்தல் 11வி. 1.கேட்கும்படி செய்தல். தம்பிரா னார்க் கெதிர்நின்று தமிழ்ச்சொன் மாலை கேட்பிக்க (பெரியபு.37,57). 2.திருப்பதிக முதலியன விண் ணப்பஞ் செய்தல். நாவலூரர் தம்முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார் (பெரியபு.37,69).

கேட்பு பெ. கேள்வி. (யாழ்.அக.)

கேட்புரை பெ. கேட்டல். (ஆட்சி.அக.ப.139)

கேட்பொலியியல் பெ. (மொழியி.) காதால் கேட்டு ணரும் ஒலி அமைப்பு கல்வி. (மானிட.கலைச்.அக. ப.72)

கேட்போர் பெ. 1.நூல் கேட்டற்கு அதிகாரிகளான மாணாக்கர். (நன்.47) 2.(அகப்.) இன்னார்கூற இன்னார் அதனைக் கேட்டாரென்னும் அகப்பாட்டு றுப்பு. (இறை.அகப்.56 உரை). 3.அவைக்களத்துத் தலைமை வகித்து அரங்கேறும் நூலைக்கேட்டவர். (இறை.அகப்.1,4) 4.புராணங்களைச் சிரவணம்

பண்ணுவோர். சிவகதையே இயம்பு வோரும் கேட் போரும் (சிவஞா.காஞ்சிப்பு.கயிலாய.5). 5.செவியால் கேட்பவர். கேட்போர்க்கு இன்றாயப்பிறருதல் (தொல். பொ.654,5).

கேடகசாரி பெ. கழுதை. (யாழ்.அக.)

கேடகம்[1] பெ. 1.பரிசை, படை வீரர் காப்புக்கருவி. சிங்கத்துரி போர்த்தசெழுங் கேடகமும் வாளும் (சீவக.2166). பொன்னை யணி கொண்ட புனை கேட மெடுத்து (சூளா.1285). வாளறை கழிப்பன கேட மலைப்பன (பாரத வெண்.212,22). கேடகம் வெயில்வீச (கம்பரா.1,12,33). வெரிமணித் தொடக்கிச் செய்த கேடகத்தி லங்கிமேவ (திருவாலங்.பு.திருவிழா.14). கேடகத்துட் டாழ்வுற் றடங்குவர் முளைப்பர் வாளை விதிர்ப்பர் (திருவிளை.பு.27,17). கதிர் செய் கேடகம் மலைமகளு தவினள் (செ.பாகவத.4,3,943). நுதலை அனையவாள் கேடகம் (பாண்டி நா.பிள்.4,5). பிணங்கிய ஞாட்பினுட் கேடகத்தோடு அற்ற தடக்கைகள் (மானவி. 5,62). அத்திரங்களை அகற்றும் கேடகம் (இரட்ச.சரி. 129). 2.பாசறை, பகைமேற் சென்றோர் உறைபதி. (பிங்.) 3.மலையை யடுத்த ஊர். நகரென்றும் அகர மென்றும் கேடகம் பாடியென்றும் (செ.பாகவத.4,3, 967). 4.ஊர்ப்பொதுப்பெயர். (வட.நி.572) 5.ஓர் யாறு. (கதிரை.அக.) 6.படிச்சட்டம். திருவாசகம்புகன்ற புண்ணியனும் ஆற்றவரும் பொன்கேடகத்தில் வர (முயிலை.உலா 185). 7.மஞ்சம், சப்பரம். சண்டேசன் கேடகத்தில் வந்தருள (வாட்போக்கி உலா 137). 8.→கேடயம்-2. (செ.ப.அக.)

கேடகம்[2] பெ. புறாமுட்டி. (மலை அக.)

கேடம் பெ. 1.மலையும் ஆறும் சூழ்ந்தவூர். (சூடா.5, 38) 2.கிளி. (அக.நி.) 3.ஆறு. (யாழ்.அக.) 4.(இசையி.) கீரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங் களுள் ஒன்று. (புதிய இரா.ப.147)

கேடயம் பெ. 1.→கேடகம்[1]-1. சாதிக்காய்க் கேடயமாம் (ஏற்றப்.ப.63). கேடயம் ஈட்டிகள் முதலானதுகள் ... அனுப்பச் சொல்லி (ஆனந்த.தினசரிச்.6 ப.48). கேடயம் கத்தியோடு ... பழக ஆசை (அவளும் அவனும் ப.12). சுழல வருங் கேடயமும் சுத்தியிட்ட பட்டயமும் (கள்ள.அம்.ப.52). 2.விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற வீரருக்கு அளிக்கப் படும் வெற்றிப் பரிசு. வெற்றி பெற்றோருக்கு சுழற் கேடயம் வழங்கப் பட்டது (செய்தி.வ.). 3.பாதுகாப்பு வளையம். தங்கள் தாக்குதல்களில் பொதுமக்களை கேடயமாக முன் வைத்து போராடுவதாகவும் (செய்தி.வ.). 4.திருவாசி யோடு கூடியதாய் விக்கிரகத்தை எழுந்தருளப் பண்ணுதற்கு உதவும் தோளுக்கினி யான் என்னும் வாகனம். (செ.ப.அக.)

கேடர் பெ. நீளமான இரும்பு தூலாம். (நாட்.வ.)

கேடன் பெ. 1.அழிப்பவன். வினைக்கேடா (திருவாச. 34,1). 2.கேடுடையவன். வினைக் கேடனேன் (திருவாச. 30,3). வாசிக்குச் சாவீரர் வைதாற் பொறாதது போல் ஆசைக்கேடர்க்கிதுவாம் (ஒழிவி.6,3).

கேடா பெ.அ. (உருது) பிரிந்துள்ள. (செ.ப.அக.)

கேடாய்-த்தல் 11வி. பங்கு பிரித்தல். (முன்.)

கேடி[1] பெ. 1.முரட்டுக்குணமும் திருட்டியல்பும் உடைய பழந்திருடன். அவன் கேடி தான் (வளர்ப்.ப.40).

கேடி[2] பெ. 1.அழிப்பவள். கேடியுன் தேட்டாலே வந்ததி ரவியமோ (மூவரை.தூது 283). 2.கொடுங்கள்ளன். (அயற்.அக.)

கேடிக்கை பெ. கேளிக்கை. (யாழ்.அக.)

கேடித்தனம் பெ. தீயனவற்றை அஞ்சாமல் செய்யும் முறை. (நாட்.வ.)

கேடில் பெ. புகழ். கையாடிய கேடில் கரி யுரிமூடிய வொருவன் (தேவா.1,15,1).

கேடிலி பெ. அழிவில்லாதவன்-ன்-ள். கேடிலியை நாடுமவர் கேடிலாரே (தேவா.6,67,1).

கேடிலுவகை பெ. மோட்சம். (யாழ்.அக.)

கேடு பெ. தீமை. கேடும் பீடும் கூறலும் தோழி (தொல். பொ.99,18). முற்பகல் செய்தான் பிறன்கேடு (சிலப். 21,3). கிள்ளைபோன் மொழியார்க்கெல்லாங் கேடுசூழ் கின்றே னன்றே (கம்பரா.3,8,77). வேத கேடு சூழும் நினதுவாய்ச் சூளின் (கந்தபு.1,4,57). கொழுந்தவா வரண முத்தி கூடாமற் கெடுத்த கேடே (கைவல்ய.1,48). நீசருரை வழியாகக் கேடனைத்தும் மண்டி யெங்கும் ஈண்டுமிக (கீத்தேரி.அம்.4 க.14). கேடுகெம்புகள் செய்தானே (வீர.கட்ட.கதைப்பா.ப.72). எதிர்பாராத நிலையில் உண்டாம் கேட்டை ஒழிப்பதற்கன்றி (கௌடலீயம் ப.191). என்றும் கேடு அற்ற வாழ்வினை ... மருவினாய் (பாரதி.தோத்திரம்.3). கேடு விலக என்று ஊதேடா காளம் (புதுமைவே.7,6). 2.துன்பம். திரவியமே கேடில்லா மெய்யுணர்வே (நம்.திருத்தாலா.119). அறஞ் செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை ... மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை (குறள்.32 பரிமே.). கேடு வரும் என்று அறியேன் (பட்டினத்தார்.பா.மகடூஉ.2,14). கண் கூடாப் பட்டது கேடெனினும் கீழ் மக்கட் குண்டோ உணர்ச்சி (நீதிநெறிவி.33). சொல்லும் ஐயா கேடு அறக் குருவே என்ன (கைவல்ய.1,48). காணுங்காற் கேடுகொடுக்குங் கோரமிகுக்கும் (சானந்த.பு.3,3). காவலூர் நங்கை நாடி வணங்கு நரரெல்லாங் கேடிலரே (திருக்காவ.கலம்.100). கேடுஞ் சுகமும் முதலெ எல்லாங் கீழ்படுத்தி (ஒழிவி.8,17). மாறனது கேட்டிலுறுதி யென (முதுமொழி மேல்.125). கேடு செய்யும் மனதை-கண்டால் கிள்ளி வீச வேண்டும் (கண்ண.திரை.பா.1,87).

3.அழிவு. அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும் (தொல். சொல்.350). கேடு இன்றாக பாடுநர் கடும்பு என (புறநா.160,10). போகம் பொருள்கேடு மான்வேட்டம் பொல்லாக்கள் ... ஏனை (ஏலாதி,18). கேடிலிம் மலை யின் மேலாற் கின்னர கீத மாளும் (சூளா.319). நளிர் காழியுள் ஞான சம்பந்தன்... கிளர்பாடல் வல்லார்க்கிலை கேடே (தேவா.1,35,11). பெருந்துயரும் கேடுமேயியற்று வதாய் (பகவத்.17,18). கேடில் விழுச் செல்வங் கேடெய்து சூதாடல் (நள.11). உன்னை நீ அறிவாயாகில் உனக்கு ஒரு கேடும் இல்லை (கைவல்ய.1,20). கேடில் பசு பாசமெல்லாங் கீழ்ப்படவும் (தாயுமா.பா.45,9,2). கேடுவரும்போது கெடுமதிகண் தோற்றாது (கள்ள.அம். ப.34). 4.பழிபாவம். யாவர்க்கும் கேடுசூ ழார் (நீதிநெறி வி.83). 5.குற்றம். கேடு இல் அம் கீர்த்தி (சேந்.1,12). கேட்கக் காதுகள் காண விழிகள் கேடில் ஆண்டவன் ஏனோ படைத்தான் (புதுமை வே.9,9). 6.நட்டம், இழப்பு. இவைநான்கினாலும் பொருட் கேடு கூறினார் (குறள்.16 மணக்.). நேராகக் காணுமேற்கே டொருவன் கைப்படும் (சினேந்.158). 7.வறுமை. கேட்டினும் உண்டோர் உறுதி (குறள்.796). 8.மரணம், இறப்பு. பிணிபிறவி கேடென்று (தேவா.935,1). பிறப்பு நிலை கேடு இவை ஆவான் (பாரத வெண்.476). தோற்றக் கேடு இல்லா தொன்மால் (நூற்றெட்.அந்.1,2). 9.பொல்லாங்கு. (யாழ்.அக.) 10.(இலக்.) கெடுதல் விகாரம். வந்த னகரந் திரிந்துழி நண்ணுங் கேடே (நன்.210). 11.குறை. (ஆட்சி.அக.ப.11) 12.குறைகை. வளமையில் கேடு இன்றிச் சென்றாருமில் (நான்மணி.76). 13.சிதைவு. வாரநிலத்தைக் கேடின்று வளர்த்து (சிலப்.3,67). 14.அழகின்மை. (வின்.அக.) 15.தீயஒழுக்கம். அல்லாரை அல்லார் உவப்பது கேடு (நான்மணி.56).

கேடுகெடு-தல் 6வி. நிலையழிதல். கேடு கெட்ட மானிடரே கேளுங்கள் (நல்வழி 22).

கேடுகாலம் பெ. அழிவுறுங்காலம். (யாழ்.அக.)

கேடுகெட்டவன் பெ. நிலைமையழிந்தவன். (செ.ப. அக.)

கேடுபாடு பெ. 1.அழிவு. (யாழ்.அக.) 2.நட்டம். (முன்.) 3.வறுமைநிலை. (முன்.) 4.துன்பம். (முன்.)

கேண்டு பெ. → கேண்டுகம். (முன்.)

கேண்டுகம் பெ. பந்து. (முன்.)

கேண்மை பெ. 1.நட்பு. ஒருமைக் கேண்மையில் உறு குறை தெளிந்தோள் (தொல்.பொ.109,18). குன்ற நாடன் கேண்மை என்றும் நன்றுமன் (குறுந்.38). வினைதீயார் கேண்மை (நாலடி.172). கலந்த கேண்மையின் கனக விசயர் (சிலப்.26,186). பெரியவர் கேண்மை போலும் பெற்றகரும் வாச வெண்ணெய் (சீவக.2737). நல்லார் தீ மேவுந் தொழிலார் நால் வேதஞ் சொல்லார் கேண்மையார் சுடர் பொற் கழலேத்த (தேவா.1,81,1). மற்றவர் தம் பெருங் கேண்மை மகிழ்ந்து கொண்டு (பெரியபு.28,466). மகிழ்நர் முன்னாள் உண்டாகிய பழங் கேண்மை இந் நாளும் ஒழிந்திலரே (தஞ்.கோவை 406). தேவுபுகழ் கேண்மையுறக் கல்லாருங் கேளாரோ (கித்தோ.அம்.3 க.1). கீழ்க் கோட்ட மேவுமன்பர் கேண்மையே (திருவருட்பா 1962, 92). கேண்மை கொள் சேசுவின் கீர்த்தி (பாரதிதா.மூன். சமத்.ப.208). 2.உறவு. பழங் கேண்மை கண்டு அறியாதேன் போல் (கலித்.39,39). அறனறிந்து மூத்த அறிவுடையர் கேண்மை (குறள்.441). புகழை வித்திக் கேண்மையை விளைத்தி (சீவக.1284). உடனாகு கேண்மை ஒழிந்தறியார் இவ்வுலகத்திலே (அம்.கோவை 371). துறந்த தொடர்போடு துன்னிய கேண்மை சிறந்தார்க்கும் பாடு செயலீயார் (தகடூர்யாத். 4). சரியை கிரியா யோகக் கேண்மையர் (சிவப்பிர.49). கடற்புறத்தரசை கேண்மையோடு (பாரதம்.1,1,97). மைத்துனக் கேண்மை படைத்ததன்றோ தொண்டை மண்டலமே (தொண்டை.சத.79). அமரர்தொழுங் கேழா ரடியணங் கின்புறுங் கேண்மை கிளர்கடற்கே (திருக்காவ.கலம்.26). நின் காந்தட் கரவிரலின் படிந்தே வந்தோம் எனுங் கேண்மை (கமலா.அம்.பிள்.87). 3.சுற்றம். மறப்பருங் கேண்மையோடு (சிலப்.2,85). 4.சுற்றத்தார். (ஆசி.நி.63) 5.அன்பு. உயர் திருவுருவைக் கேண்மையுடன் பணிந்தரசன் (இறைவாச.பு.328). கேண்மை சற்றுமில் வேசியர் (பழனித்திரு.10,1/25). 6.விருப்பம். சனக மன்னன் கேண்மையை மிக விரும்பிச் சேட்டமாஞ் சரிதம் தன்னைச் செப்பி வாட்டம் யான் தீர்ப்பல் (வேங்கடேச மகத்.123). 7.தகைமை. அஞ்செழுத்தை உச்சரிக்கும் கேண்மை உணர்த்தி (உமா.நெஞ்.தூது 94). 8.உரிமை. (இலக்.சொ.அக.) 9.வழக்கு. களவின் வழி வந்த கற்பிற் புணர்ச்சி கிளை ஞரின் எய்தாக் கேண்மையும் உடைத்தே (நம்பியகப். 57). 10.மதிப்பு. குருகுலக் கேண்மை கொண்டோர் கூட்டம் (பாரத வெண்.212,90). 11.கண்ணோட்டம். (திவா.)

கேண்மையாள் பெ. உமாதேவியார். கேண்மையா ளொடுங் கூடி மான்மறி அங்கையாடலன் (தேவா.2, 53,5).

கேணம் பெ. செழிப்பு. (யாழ்.அக.)

கேணாமுகம் பெ. சூழகழியிருக்கை. (வின்.அக.)

கேணி பெ. 1.கிணறு. ஊர் உண் கேணி உண்துறைத் தொக்க (குறுந்.399). தொட்டனைத் தூறும் மணற் கேணி (குறள்.396). கரப்பு நீர்க் கேணியும் (மணிமே. 19,104). கேணியிலும் பட்டத்திலும் ... கயல் பாய் குரு கூரர் (சடகோபரந்.81). மங் கையர்குளிப் பனமணற்

கேதகைவா னுறவுயர்ந்து (நகுல.பு.நகரப்.46). 2.தாழம்பூ. கேதகை யோதக் கேட்ட கிளர்சிறையனந் தோன் (திருச்செங்.பு.1,9,6). செம்பீரும் கேதகைப் போதும் (திருவாரூர்க்கோவை 487). அணி கேதகைக்கும் அருள் செய்தவன் (சேத்திரக்.பிள்.5,3). கேளாச் செவியானைக் கேதகைவாள் வேந்தன் (சொக்க.பண. தூது 51). சோலைதொறும் செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யெல்ல (பெருந்.1040). 3.மயிர். (போகர் நி.32)

கேதம்[1] பெ. 1.இளைப்பு. கேதம் பையத் தலைத்தான் (பாரதம்.5,2,48). கேதம் நீத்திடக் கற்பவர் மகிழ்ந்து கேட்கின்றோர்க்கு (ஞான.உபதேசகா.337). 2.1.துக்கம். கேதங் கெடுத்தென்னை ஆண்டருளும் (திருவாச. 43,9). கொடுங் காமக் கேதம் அடங்கி (குருகூர்.பிள். 62). வெப்புறு மனத்துக்கு கேதம் மேக்குற எழுந்த வேந்தன் (சீவல.கதை 174). இழவு வீட்டுக்கு கேதம் கேட்டு வருவோரை முன் சென்று வரவேற்பதும் (நகர். நாட்.கதைப்பா.ப.21). 2.2.சாவு. (கிளை.மொழியி. ப.137) 3.துன்பம். கேதத்தினையில்லார் சிவ கெதியைப் பெறுவார் (தேவா.1,9,1). வெங்கயம் கேதம் பொருந்தாது அருள் புகழ்வேந்து (நாணிக்.ஒருதுறைக்கோவை 116). உன் தன் கேதமெலாம் தளர்வுற (கோடீச்.கோவை 264). சித்தத்து உறுபெருங்கேதம்யாதென (பது.பரிண. 6,32). போர் மதன் செய் கேதத்தையும் (தனிப்பா.தி்ர.5 காளிமுத்து). கேதம் இன்றியொர் வைகல் ஒன்பதே (வைண.ஆசா.2,11). தமைப்பாடும் அன்பர் வெங் கேத மாற்றிய வாரூரர் (திருவாரூர்க்கோவை 347). மாதவத்தின் வடிவம் அதாகுமால் கேதம் நீங்கக் கமுனி கேட்டியால் (திருச்செந்.பு.675). வேதம்கொள் குலம் கேதம் ஒன்றியதென ... வளர் அகலுள் இட்டனர் (தேம்பா. 2,2,79). மனக்கேதமாற்றும் தணிகாசலத்தமர் வானவனே (திருவருட்பா 54). 4.குற்றம். கேதமில்தவத் தோர் சூழ் தரும்விருத்த கிரியமர் பெரியநாயகியே (பெரியபு.பதி.9). அளவற்ற செல்வத்தைக் கீர்த்தியைக் கேதம் எலாம் துடைத்தான் (தனிப்பா.தி்ர.94). கேதந் தொடுக்கத் தகாது (ஆதி.வ. கோவை 20). கேதமிலா ஆற்றின் ... பொருட்டு (முருகேச. வெண்.73). கேதமில் நாட்டம் ஒன்று உடையனாய் (இரட்ச.சரி.304). 5.வருத்தம். வளவர் பெருமான் மணியாரம் சாத்திக் கொண்டு வரும் பொன்னிக் கிளரும் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற (பெரியபு. 29,77). கேதம் இன்றியே கருத்தில் நாட்டியதோர் சந்தோசம் நல்கினன் (சீவே.சரி.2248).

கேதம்[2] பெ. வீடு. (யாழ்.அக.)

கேதம்விசாரி-த்தல் 11வி. துக்கம் விசாரித்தல். (நாட்.வ.)

கேதல் பெ. அழைக்கை. (பிங்.1996)

கேதன் பெ. காமன். காமன் கேதன் என்பது காமன் பெயரே (அக.நி.கேமுதல் 4).

கேதனம்[1] பெ. 1.இடம். (யாழ்.அக.). 2.வீடு. (முன்.) 3.வேலை. (முன்.) 4.அடையாளம். (இலக்.சொ.அக.)

கேதனம்[2] பெ. 1.கொடி. சூட்டுச் சாவற் கேதனம் (சூட்டி.15). தனது கேதனக் கேசரி யனையான் ... வீழுமாறு தைத்தான் (பாரதம்.2,1,27). பொருங் கேதனப்படை மன்னரை (திருவரங்.மாலை 73). மீன் கேதனமாக உம்ப ருலவ (கந்தபு.1,4,63). அன்னவா கனமும் ஆர்ந்த கேதனமும் (சோலை.குற.39,25). வாசலில் அசையும் விசைய கேதனம் எடுத்தார் (இராமநா.2,1 திதை 1). பிச்சம் வரைந்திடு கேதனம் (குசேலோ.247). வெம் பகுவாய்ப் பாந்தள் கேதனத்தான் (தேம்பா.1,11,8). கருட கேதனத்தையே அடுத்து வந்த (சமுத்திரவி.42). அதிர் சேவற் கேதனங் கொண்டாய் (பழனித்திரு.1,5). 2.விருதுகொடி. (யாழ்.அக.) 3.படர்கொடி. (முன்.) 4.பெருங்கொடி. (பிங்.1298) 5.தோரணம். உஞ்சல் வார்க் குழையை உன்னி மகர கேதனம் உய்ப்பாரும் (சீவல.கதை 30). 6.கருடன். செங்கையங் கேதனமால் ரகுநாயகன் (நாணிக்.ஒருதுறைக்கோவை 116). 7.(இசையி.) கீரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147)

கேதனன் பெ. துரியோதனன். நீ தூது வந்ததிற் பயனில்லையென்றாவ நெடிய கேதனனிசைப்ப (வைகுந்த.பிள்.முத்தப்.145,4).

கேதனாவலி பெ. (இசையி.) அசரித்ரா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.237)

கேதாரகவுளம் பெ. (இசையி.) ஓர்பண். (யாழ்.அக.)

கேதாரகௌரிவிரதம் பெ. ஐப்பசிக் கிருட்ணசதுர்த் தசியில் கேதார சேத்திரத்திலுள்ள கௌரியின் பொருட்டுப் பெண்பாலார் அனுட்டிக்கும் நோன்பு. (செ.ப.அக.)

கேதாரகௌளம் பெ. 1. (இசையி.) 28 ஆவது மேளம் சரிகமபதநியில் பிறந்த ராகம். (பரத.இராக.55) 2.(இசையி.) அரிகாம்போதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.164)

கேதாரநாட்டை பெ. (இசையி.) இராகவகை. (பரத. இராக.102)

கேதாரநாதன் பெ. இமய மலையில் உள்ள தலத்தில் எழுத்தருளியிருக்கும் கடவுள். ஆதி கேதார நாதனை வழுத்த ... வாழ்ந்தனன் (ஞான.உபதேசகா.2009).

கேதாரம்[1] பெ. 1.இமயமலையில் உள்ள ஒரு சிவதலம். கேதாரம் காசி சித்தி நல்கு பருப்பதம் (ஞான.உபதேசகா. 169). குன்ற வில்லி கேதாரம் கங்கை சூழ் குலவு காசி (கருவூர்ப்பு.20,22). கதலித்தான மலிகேதார்ந்திருவான்

மிக்கு (திருவாலங். பு.சுநந்தர்.31). கேதாரம் ஒப்பருங் காசிப் பருப்பதம் (திருப்பனந்தாள்.பு.ஞானோ.4). கேதாரம் ஒளி விளங்குகின்ற புட்கரம் (முருகன் பூண்டிப். பு.கருத்.1,25). கோகர்ணம் காசி வடகங்கை கேதாரம் (மூவரை.தூது 74). அருள் காசிக் கண் சீருர விறந்தோர்கள் கேதாரம் நீராடி (இறைவாச.பு.143). 2.ஒரு மலை. மன்னுதிருக் கேதாரம் வழிபட்டு (பெரியபு. 30,3). 3.விளைநிலம். (செ.ப.அக.) 4.பாத்தி. (இலக்.சொ.அக.) 5.வயல். (முன்.) 6.(இசையி.) தீரசங்கா பரணம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.170) 7.சுவர்க்கம். பெருமாளே தஞ்சமென்று கிந்தி நடந்து கேதாரந் சேர்ந்தது போல் (சிவகங்.சரித்.அம்.ப.236).

கேதாரம்² பெ. மயில். நல்லம் திகழும் கேதார மிசை நடனம் செய் ஏறே (திருவலங்.துக்கர.3). தழைசால் கேதார மிசை கொள் முருகனொர் தல்லி (பச்சை.அம். பிள்.தாலப்.10,2).

கேதாரமஞ்சரி பெ. (இசையி.) நீதிமதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.223)

கேதாரயோகம் பெ. (சோதிட.) ஏழுகிரகங்கள் இடையீடின்றி நான்கு இராசிகளில் நிற்கவரும் யோகம். (சங்.அக.)

கேதாரவிரதம் பெ. →கேதாரகௌரிவிரதம்.(யாழ்.அக.)

கேதாரன் பெ. சிவன். புலை அகலும் கேதாரன் (திருக்காளத்.உலா 104).

கேதாரி¹ பெ. 1.குதிரைக்கு உள்ள ஒரு பொருந்தாச் சுழி. பரவு செழுங் கேதாரி (திருவாத.பு.216). 2.கன்று ஈனாத பசு. (தென்.வட.) 3.குதிரைப்பிடர். (கலித். 96 உரை).

கேதாரி² பெ. → கேதாரகௌரிவிரதம். (யாழ்.அக.)

கேதாரிநோன்பு பெ. → கேதாரகௌரிவிரதம். (நாட்.வ.)

கேதாளி பெ.குறிஞ்சி யாழ்த்திறன் வகை. (பிங்.1382)

கேதானிக்குறிஞ்சி பெ. (இசையி.) அரும்பாலையிற் பிறக்கும் பண்களுள் ஒன்று. (புதிய இரா.ப.39)

கேதி¹ பெ. நீர் கொதிக்க வைக்கும் பாத்திரம். (இலங்.வ.)

கேதி²-த்தல் 11வி. வருந்துதல். கேளார் கொல் கேளா தனவரதம் கேதித்திருப்பாளை (திருவானைக்கா.உலா 426-427).

கேதீச்சரம் பெ. ஒரு கோவில். திருக்கேதீச் சரத்தண் ணல் செய்ய பாதம் உன்னிமிகப் பணிந்தேத்தி (பெரியபு. 28,890).

கேது¹ பெ. 1.பாம்பாகக் கூறப்படும் கோள், நவக் கிரகங்களுள் ஒன்று. நாடொறும் விரோ தமாடு கொண்டோன் கொடுத்துளோன் ராகு கேதுக்களெனலாம் (குமரே.சத.42). கதிர்திங்கள் ... இராகுகவிகேது தானவமாய்ப் பேரார் கோளொன்றே பிரி (உரி.நி.278). கெழிய ராகுவுங் கேதுவும் (கந்தபு.2,32,26). இராகுக் கேது சேர்ந்தநவக் கிரகங்கள் (நீதிநூ.பு.ஆலால.18). 2.பாம்பு. விடமுறு தறுகட் கேது விரைந்தொரு பாங்கர் புக்கு (கந்தபு.4,12,181). செய்ய கேது தலையற்ற வந்தாள் (கதிரை.பள்.12). 2.கொடி. (சூடா.) 3.பெருங் கொடி. (பிங்.1299) 4.விருதுக்கொடி. (இலக்.சொ. அக.) 5.அடையாளம். (யாழ்.அக.) 6.குறி. நான் மறை விதிசெய் நாசி கேது வாய் (அகோர.வேதார.பு. 4,50,24). நான்மறை விதிசெய்நாசி கேதுவாய் (வேதாரணியபு.உத்தகாலக.24). 7.நெருப்பு. (வட. நி.576) 8.ஒளி. (கம்பரந்.9) 9.நோய். (யாழ்.அக.) 10.(இசையி.) கிரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147) 11.(இசையி.) அனுமத்தோடி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.111)

கேது² பெ. (உருது) விளைநிலம். (செ.ப.அக.)

கேது³ பெ. → கேதாரம்². (அக.நி.)

கேது⁴-தல் 5வி. கதறியழைத்தல். கெடுவதிம் மனிதர் வாழ்க்கை காண்டொறுங் கேதுகின்றேன் (தேவா. 702,1).

கேதுக்கல் பெ. வயலின் எல்லைக்கல். (செ.ப.அக.)

கேதுகம் பெ. அடையாளக்கொடி. விடை படு கேதுக (நம்.கோயில்.).

கேதுச்சிலாங்கனம் பெ. புருடராகம். (யாழ்.அக.)

கேதுதரம் பெ. வாயு. (கதிரை.அக.)

கேதுதரன் பெ. கொடி பிடிப்போன். (முன்.)

கேதுதாரை பெ. வால்வெள்ளி. (யாழ்.அக.)

கேதுபம் பெ. மேகம். (கதிரை.அக.)

கேதுப்பிரியம் பெ. வைடூரியம். (சித்.பரி.அக.ப.166)

கேதுபார்வை பெ. (சோதிட.) கேது தான் இருக்கும் வீட்டிலிருந்து 7,11,3 ஆம் வீடுகளைப் பார்க்கை. (சுகர் நாடி ப.115)

கேதுபுரி பெ. கேது பூசித்த சீகாழி. கேதுபுரி யெனவாகிய தவ்வூர் (சீகாழித்.பு.கேடனுங்.29).

கேதுமால் பெ. → கேதுமாலம். கேது மாலோ டிம்பர் புகழ் பத்திரம் (கந்தபு.2,11,37).

கேதுமால்வருடம் பெ. → கேதுமாலம். கந்தமாதன மேற் புணரிநாப்பண் கேதுமால் வருடம் (கந்தபு.2,11,36).

கேதுமாலம் பெ. மேருவின் தெற்கிலுள்ள கந்த மாதன மலைக்கும் மேல் கடலுக்கும் இடையுரி லுள்ள தேயம், நவ கண்டங்களுள் ஒன்று. முரித்தேர் விட்டனன் கேதுமானலத்தின் மெல்லவே (செ.பாகவத. 243). குடகடற்குக்கீழ்க் கேதுமாலமெனக் குறித்திடுக (சிவதரு.கோபுர.53).

கேதுமாலன் பெ. (இசையி.) கிரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147)

கேதுரு[1] பெ. (இசையி.) கிரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147)

கேதுரு[2] பெ. 1.ஓர்வாசனைமரம்.(சாம்.அக.) 2.→கேக்கு விரை. (சித்.அக.)

கேதுவசம் பெ. கட்டுக்கொடி. (சித்.பரி.அக.ப.84)

கேதுவசனம் பெ. கொடி. (யாழ்.அக.)

கேதுவசூரன் பெ. புட்பராகம். (போகர் நி.32)

கேந்தகம் பெ. →கோடகசாலை. (மலை அக.)

கேந்தி பெ. 1.அடங்காத காமம். (நாட்.வ.) 2.சினம். (இலங்.வ.)

கேந்திதம் பெ. புன்கு. (சித்.அக.)

கேந்திரம் பெ. 1.வட்டத்தின்மத்தியம். (யாழ்.அக.) 2.(சோதிட.) இலக்கினத்திற்கு ஒன்று நான்கு ஏழு பத்து ஆம் இராசிகள். வெரி பசும் பொற்கோள் வந்து தேசொடு கேந்தி ரத்திற் சிறந்தநல் லோரை வாய்ப்ப (திரு விளை.பு.11,11). உச்சமொடு கேந்திரத்தில் ஒன்றுதலால் (பஞ்ச.திருமுக.1006). ஒன்று நான்கு ஏழு பத்தென்ப கேந்திரம் (சுகர்நாடி ப.128). எல்லாக்கிரகங்களும் சூரியனை ஒரு கேந்திரத்தில் கொண்ட ஆயுதங்களில் சஞ்சரிக்கின்றன (ஒளியும் ஒலியும் ப.6). உரைக்கு மொன்று நான்கேழு பத்து கேந்திரமாம் (சாதக.114). 3.நிலையம். என் கண்களுக்குக் கனவுகளை அனுப்பிக் கொண்டிருக்கும் கேந்திரம் அது தானோ (இது.நா.ப.11). சம்பல் நதி பள்ளத்தாக்கில் தங்கள் கேந்திரங்களை அமைத்துக் கொண்டார் (செய்தி.வ.). 4.உதையம். (யாழ்.அக.)

கேந்திரவள்ளி பெ. கண்ணழகுக் கொடி. (சித்.பரி. அக.ப.84)

கேந்திரி-த்தல் 11வி. கிரகம் கேந்திரம்பெற்றுநிற்றல். பொன்னவன் கேந் திரித்த புனிதலக் கினத்தில் (திருவிளை.பு.11,25).

கேந்துமுறியம் பெ. நாய்வேளை. (மலை அக.)

கேந்துவாலிகம் பெ. புகையிலை. (சித்.அக.)

கேப்பு பெ. மெல்லிதாய் வெடிக்கும் வெடி வகை. தீயேதும் இல்லாமல் வெடித்திடும் கேப்பு (பட்.கல்.பா. ப.285).

கேப்புமாரி பெ. 1.தென்னார்க்காடு செங்கற்பட்டு மாவட்டத்தில் திருட்டுத்தொழிலாற் பிழைக்கும் ஒரு தெலுங்குச்சாதியார். (செ.ப.அக.) 2.→ கேப்மாறி. (முன்.)

கேப்பை பெ. 1.கேழ்வரகு. கப்பரை ஓட்டிலே கேப்பைக் கூழைக்காச்சி (வீர.கட்ட.கதைப்பா.ப.190). கேப்பைக் களிக்குத்ததினாள் குடலை ஒட்டுதில்லை (அயோ.ப.299). கேப்பைக் கருது போல ... பெண்ணிருக்க (தமி.நா.பா.ப. 47). கம்பையும் கேப்பையும் கவிழ்த்தே நட்டிடும் கன்னியர்க்கே (கும்மிப்பா.ஆவுடை.21). சமச்சுச் சாப்பிட்டுக்கிறச் சொல்லி கேப்பை வரகு அரிசினு பஞ்சாயத்தாருக தருவாக (நகர்.நாட்.கதைப்பா.ப.25). கந்தசாமி மாடுகள் மிதிப்பதற்குத் தோதாக கேட்பைக் கதிர்களைக் கிளறிக் கொடுத்துக் கொண்டிருந்தார் (மழைக்கஞ்சி ப.11). 2.பால் அதிகமாகத் தரும் பெரிய மாட்டினம். (இலங்.வ.)

கேப்மாறி பெ. அயோக்கியன். அட கேப்மாறி நான் பத்தினின்று உன்கிட்ட வந்து சொல்லிக்கிட்டேனா (செ.வ.).

கேபம் பெ. அசைவு. (யாழ்.அக.)

கேபிகம் பெ. காவிக்கல். (முன்.)

கேமணம் பெ. →கோவணம். கேமணமே கவலும் நீற்று (கோமதி.அந்.10).

கேமாச்சி பெ. வெள்ளைக்காக்கணம். (வின்.அக.)

கேயசாரதர்ணி பெ. (இசையி.) நடனபைரவி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.142)

கேயம்[1] பெ. 1.இசைத்தற்குரியது. கேயத்தீங்குழ லூதிற் றும் (திருவாய்.6,4,2). 2.இசைப்பாட்டு. (இலக்.சொ. அக.) 3.காமரப்பாட்டு. (பிங்.1374) 4.→ கேகயப் புள்-1. (சூடா.54)

கேயம் பெ. அகழி. (இலக்.சொ.அக.)

கேயன் பெ. பாடுவோன். (யாழ். அக.)

கேயிகம் பெ. செங்கல். (முன்.)

கேயூரம் பெ. வாகுவலய மென்னும் ஒரு தோளணி. எண் தோளுக்கும் கேயூரம் பெய்து (சேர.உலா 20). கிண்கிணி தாட்கணிந்து கேயூரந் தோட்பூடிப் (குல. உலா 178). தோளிடை நற்கேயூர்ஞ் சூட்டி (தஞ்.பெரு. உலா 32). வரதநாக கேயூரபரமயோகி (திருப்பு.1293). வீரசங்கிலி கேயூரம் ... அழிஇவை முதலாய எல்லாக் கலனும் ... உறுப்பெலாம் அணிந்து (பிரபு.லீலை 5,9). வளைத்தழும்புபட்டவிடத்தே ... கேயூ பூட்டி (ஏகாம்.உலா 64). சுந்தரமார் திண் புய மேற் சோதி மணிக் கேயூரம் (மதுரைச்.உலா 54). அனந்த கேயூரந்திகழ்புயயோர் பாங்கும் (திருச்செங்.பு.1,5,31). குருமணிக் கேயூரம் தோள் கோத்து (ஆனந்த.வண்டு.தூது 151). தங்கம அழுத்தி அதில் தான்பதித்த கேயூரம் பொங்க முடன் இலங்க (நல்லதம்.காதல் 104).

கேயூரன் பெ. →கேசவன்-2. பூச்சக்ர கேயூரன் (கு.சோ.உலா 316).

கேயெனல் பெ. ஓர் ஒலிக்குறிப்பு. (நாட்.வ.)

கேயை பெ.ஒருநதி. நற்கேயை துங்கமாப் புரயாகை (முருகன்.பூண்டிப்பு.கருத்.1,25).

கேரண்டம் பெ. காக்கை. கேரண்டந்தான் காக்கை யெனுமே (அக.நி.கே முதல் 9).

கேரம் பெ. பலகை ஆட்டம் (விளையாட்டு வகைகளுள் ஒன்று). (விளை.அக.ப.107)

கேரலம் பெ. →கேரளம். (யாழ்.அக.)

கேரலி[1] பெ. ஓர்நெல். (முன்.)

கேரலி[2] பெ. வானசாத்திரம். (முன்.)

கேரளம்[1] பெ. 1.மலையாளநாடு. வனஞ்சூழ் கேரள தேயங்காவல்பூண்போன் (ஞான.உபதேசகா.455). சீதம் மிகும் கேரள தேசத்தே (தெய்வச்.விறலி.தூது 528). வாழையும் பலகமுகும் நெருக்குறு கேரளந் தனில் (பழனித்திரு.10;3/4). விருப்பு மலி கேரளத்துக்கு ஒற்றர் தம்மை விடுத்தான் (முசு.நா.நூல் 52). கேரளம் என்று பிரிப்பதுவும் (பாரதிதா.33,1,1). 2.மலையாள மொழி. (செ.ப.அக.)

கேரளம்[2] பெ. வாய்விளக்கம். (தைலவ.114)

கேரளன் பெ. 1.சேரன். கேரளன் என்பது சேரனாகும் (அக.நி.கே முதல்7). பாரளவும் தனிச்செங்கோற் கேரளனைப் பல முறையும் ... கோழியுள் வென்று கொண்டும் (பெருந்.889). 2.கேரளநாட்டான். வெற்றிக் கொடிக் கேரளர் (பாரதம்.4,5,21).

கேரளனார் பெ. சேரஅரசர். கரவில் ஈகைக் கேரளனார் தங்கள் கடல்சூழ் மலைநாட்டுப் பரவை யார்தங் கொழுநனார் (பெரியபு.37,127).

கேரளை பெ. இசைப்பாட்டு. (யாழ்.அக.)

கேரா பெ. தலையின் முன்பக்கமாக வளைந்துவரும் சிகை. (செ.ப.அக.)

கேராத்தி பெ. பெட்டி. (புது.கள்.வ.)

கேரிசு பெ. சொத்தை. (உடற் சொற்.)

கேரிசுபண்ணுதல் 5வி. கடை முதலியவற்றைக் கணக்கு முடித்து மூடுதல். (நகர.வ.)

கேரு-தல் 5வி. 1.முட்டையிடும் காலத்தில் கோழி முதலியன கொக்கரித்தல். (ரா.வட்.அக.) 2.தொண்டைக்கட்டால் வருந்தி மூச்சுவிடுதல். (செ.ப.அக.) 3.குரல் கம்மிப்பேசுதல். (வின்.அக.) 4.பயப்படுதல். (யாழ்.அக.) 5.திகைத்தல். (வின்.அக.)

கேரை பெ. கடல்மீன் வகை. (தொ.வ.)

கேரோ பெ. முற்றுகை (சுற்றி வளைத்திருக்கை). (அயற்.அக.)

கேரோசனை பெ. பசுவின் வயிற்றினின்று எடுக்கப் படும் மஞ்சள் நிறமுள்ள வாசனைப் பண்டம். (பதார்த்த.1085)

கேலகன் பெ. 1.கழைக்கூத்தாடி. (யாழ்.அக.) 2.வாள் மேல் நடனம்செய்வோன். (முன்.)

கேலம் பெ. 1.விளையாட்டு. விளையாட்டு ... கேலம் (அபி. மாலை 2009). 2.மகளிர் விளையாட்டு. (யாழ்.அக.)

கேலம்வுர்சாதி பெ. சிறு சண்பகம். (ஆசி.நி.137)

கேலன் பெ. →கேலம். (யாழ்.அக.)

கேலாசம் பெ. பளிங்கு. (முன்.)

கேலி பெ. 1.விளையாட்டுப் பேச்சு. கேலியாய்ப் பேசின பேச்சைக் கேட்டு (அவளும் அவனும் ப.183). 2.பரிகாசம். நடக்குமாருதி நாற்பெருங்காதம் போய்க் கிடக்குங் கொல்லெனும் கேலி என்றோர்மிகே (திருவாமத்.பு. பூர்வ.21,34). வாடி போடி என்கின்றான் வசை வேலி பண்ணுகின்றான் (பவளக்.மாலை ப.43). கீடம் நக்கபுல் ஆயும் முற்றளர் கேலிபட்ட எண் வேட்கையே (பழனித் திரு.10,1/25). பலவகைக் கேலிகள் செயினும் மைந்தர் களைப் பொறுப்போம் (தமிழரசி குற.58,11). கேட்ட பொழுதிற் பொருள்கொடுப்பான் சொல்லுங் கேலி பொறுத்திடுவான் (பாரதி.கண்ணன் பா.1,4). காலை நேரம் கேலி செய்யும் கண்ணாடிமுன்பு (கண்ணா.திரை. பா.1,31). வீண்பிரிவுக் கேலிகளால் பாரதமே கேவலத்தில் ஆழ்ந்ததுவே (உதயம் வேற்றுமை.5). கெலித்த படை எல்லாம் கேலிக்கு நிகரார்சே (ஏற்றப்.ப.27). சபையி லிருந்து பொங்கி வரும் ஒரு கேலி அலையில் நான் அடித்துச் செல்லப் படுவதாகத் திணறினேன் (இது.நா. ப.19). கேலிபோல் நினைத்து ... வாதுகள் செய்து (அவளும் அவனும் ப.95). 3.விகடம். (செ.ப.அக.) 4.இகழ்ச்சி. (யாழ்.அக.)

கேலிக்காரன் பெ. 1.விகடன். (செ.ப.அக.) 2.பரிகாசஞ் செய்பவன். (முன்.)

கேலிக்கிரகம் பெ. வசந்தமண்டபம். (யாழ்.அக.)

கேலிக்கூத்து பெ. 1.பரிகாசம். (செ.ப.அக. அனு.) 2.கேலிநாடகம். (நாட்.வ.)

கேலிகம் பெ. அசோகம், சிறுமரவகை. (மலை அக.)

கேலிசெய்-தல் 1வி. பரிகாசம்செய்தல். வருமோ சம தருமம் வறுமையினைப் பங்கிட்டுத்தருமோ என்றெல்லாம் தத்துவத்தைக் கேலி செய்வீர் (கண்ண.கவி.ப.106).

கேலிமாலி பெ. →கேலி-2,3,4. (யாழ்.அக.)

கேலிகலை பெ. 1.பகிடிப்பேச்சு. (முன்.) 2.சரசுவதி கையிலுள்ள வீணை. (முன்.)

கேலிவிருட்சம் பெ. கடம்பு. (சித்.பரி.அக.ப.84)

கேவசட்டையரம் பெ. ஒருவகை அரம். (கட்ட.நாமா. 40)

கேவணம் பெ. 1.மணி பதிக்கும் குழி. மணியொடு வயிரங் கட்டியபத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூல் (சிலப்.16,118). பெரியவென்றது, ஆகுபெயராற் கேவணங் களை (சீவக.2696 உரை). கேவண கிரண மணி முடி துளக்கி (அரிச்.பு.9,38). மெழுகிற் செய்த செய்யகே வணத்துக் கொப்பாச் செப்பிடுந் தகை (திருச்செந்.பு. 8,62). அமைவடிவில் பணிக் கேவணத்துள் பொன் தகட்டில் (ஆண்டாள் பிள்.76). 2.கோவணம். துன்னக்

கேவணச் சுண்ண வெண்ணீறணி ... புகலூரரோ (தேவா.5,46,1). 3.சிவிகை. கிரணமணி கேவனம் மேல் கேசரிப்போல் எங்கள் அருணகிரி நாதன் அணுக (சேயூர்முரு.உலா 135).

கேவர்த்தன் பெ. கரையான். (யாழ்.அக.)

கேவரல் பெ. வள்ளிக்கொடி. (மலை உக.)

கேவல்[1] பெ. தேம்புகை. அடங்கிய கேவலும் (அம்.வ.ப. 50).

கேவல்[2] பெ. கேவரல். (மலை அக.)

கேவலக்கிடை பெ. (சைவ.) ஆணவத்தால் மறைப்புண்டு ஆமூர்த்தமாய்ச் செயலற்றுக் கிடக்கும் ஆன்மாவின் நிலை. (சி.சி.4,38)

கேவலக்கிழவன் பெ. (சைவ.) அருகக்கடவுள். தோமறு கேவலக்கிழவன் மூதெயில்போல் (சீவக.856).

கேவலசாக்கிரம் பெ. (சைவ.) கேவலக்கிடைக்குச் செல்லும்பொழுதும் அதன் கணின்று மீளும் பொழுதும் ஆன்மாநிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய சாத்திரம். (சமய.அக.)

கேவலசுழுத்தி பெ. (சைவ.) கேவலக்கிடைக்குச் செல்லும் பொழுதும் அதன் கணின்று மீளும் பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய சுழுத்தி. (முன்.)

கேவலசைதந்யம் பெ. (சைவ.) ஆன்மா ஞான சொரூபமாக உள்ள நிலை. கேவல சைதந்யமாகிய ஆத்மாவினிடம் (சித்.சிகா.197,2 உரை).

கேவலசொப்பனம் பெ. (சைவ.) கேவலக்கிடைக்குச் செல்லும்பொழுதும் அதன் கணின்று மீளும் பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய சொப்பனம். (சமய அக.)

கேவலஞானம் பெ. (சைண.) திரிகாலஞானம், கலப் பற்ற தூய அறிவு. கேவல ஞானத்துக்கு முன்காணுங் காட்சியை (சீவக.3081 உரை). ஆனாலுங் கூர் அஞ்ஞானம் அகற்றுவது கேவல ஞானந் தானே யாகும் (ஞான.உபதேசகா.219). பாங்கினால் சிலர் கேவல ஞானமே பகருவ (திருக்காளத்தி.பு.19,2).

கேவலத்தன் பெ. 1.தாழ்ந்த நிலையினன். (நாட்.வ.) 2.நோயால் வாடியவன். (வின்.அக.)

கேவலதிரவியம் பெ. மிளகு. (மலை அக.)

கேவலதுரியம் பெ. (சைவ.) கேவலக்கிடைக்குச் செல்லும் பொழுதும் அதன் கணின்று மீளும் பொழுதும் ஆன்மாநிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய துரியம். (செ.ப.அக.)

கேவலதுரியாதீதம் பெ. (சைவ.) கேவலக்கிடைக்குச் செல்லும் பொழுதும் அதன் கணின்று மீளும் பொழுதும் ஆன்மாநிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய துரியாதீதம். (சமய அக.)

கேவலநெறி பெ. மோட்ச நெறி. கேவல நெறியே பாவமிலா நெறி (சிறு.தீர.ஞான.39).

கேவலப்படு-தல் 6வி. 1.மெலிதல். (யாழ்.அக.) 2.மயங்குதல். (முன்.)

கேவலப்படுத்து-தல் 5வி. அவமரியாதை செய்தல். (செ.ப.அக.)

கேவலப்பெண் பெ. முத்தியாகிய மங்கை,கேவலஞான மென்னும் பெண். கேவலப் பெண்ணென் பாளோர் கிளரொளி மடந்தை தன்னை (சூளா.560).

கேவலப்பொருள் பெ. பரப்பிரமம். நிமித்த காரணம் கேவலப் பொருளென்பதூஉங் கூறப்பட்டன (குறள். 352 பரிமே.).

கேவலம்[1] பெ. 1.கேவலாவத்தை. கவலஞ் சகலஞ் சுத்தமென்றுமூன் றவுத்தை யான்மா மேவுவன் (சி.சி. 4,37). மோகம் நீடிய கேவலம் (சிவப்பிர.49). மாநந்த மேலீடே கேவலத்தி னிற்பதுபோ லந்த நிலைகழன்றோர் (ஒழிவி.1,50).

கேவலம்[2] பெ. 1.1. ஆன்மாக்கள் தத்துவங்களோடும், மூவகை உடம்புகளோடும் கலவாமல் ஆணவ மலம் ஒன்றையே பற்றித் ஆணவத்தோடு கூடியிருந்து உடம்பொடு கூடாத நிலை, தனிநிலை. தொல்லை நாட்கண் மன்னு கேவலமே என்னச் செயலற இருள் வந்தன்றே (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண்.265). 1.2.சாக்கிரந்தினின்று துரியாதீதம் வரையிலுள்ள ஐந்து நிலையிலும் ஆன்மா கீழ்நோக்கி நெற்றியிலிருந்து முலாதாரத்திற்குச் செல்லும் நிலை. இருள்படு மலகேவலத்தருமயிர் (திருக்குடந்.12,10). 2.1.தனித்திருக்கும் நிலை. ஒன்றும் இல்லையெனும் இயல்பாய் ... நிற்பது கேவலம். கலாதியொடு குறியுருவம் ஒன்றும் மலம் அன்றி ஒன்றும் கல்லையெனும் (சிவப்பிர.33). தோத்திரங்கள் செய்தும் தொழுதே ... கேவலமாம் பூசை செய்தார் (சீவே.சரி.328). பகுத்தறிவைக் கெடுக்காத பெருமை அழிக்காத எதிலும் கேவலம் இல்லையடி (கண்ண.திரை.பா.1,359). 2.2.இறைவன் குணங்குறி கடந்து தனித்து நிற்கும் நிலை. கேவலமாய் சாந்தமாய் ... யாண்டும் அமைந்துள்ள பாவனம் நிர்க்குணம் (திருக்காளத்தி.புரா.18,29). 2.3.ஒன்றிலும் பற்றாது நிற்கும் பிரமம். கே வலம் துரியஞ் ... என்று ... விதி குணங்கண் மொழியும் வேதம் (கைவல்ய.2.136). 2,4.தனிமை. கேவல மகன் றெண்ணுவரம் வெளியினிற் சித்தொடொ ன்றிய வுயிர் (சீகாழித்.பு.மலை.25). கேவலம் துன்பமாகிக் கிளர்ச்சியாய் நின்றான் (மகா. துறவு.64). 3.மறப்பு. கேவல சகலமின்றி ... சேவடி சிந்தை செய்வாம் (தாயுமா.பா.24,14). 4.1.அற்பம். கேவலமல்ல விப்போர் (பாரதம்.7,3,100). மலமென்றும் அல்லாமற் குணங்குறிகள் வடிவு செயல் மாயைகன்மம்

பிலமின் றியுறுவது கேவலமாக்கும் (ஞான.உபதேசகா. 2542). கேவலத்தில் நான் கிடந்து கீழ்ப்படாது ... காவலன் பால் ஒன்றிக் கலதிடவும் காண்பேனோ (தாயுமா.பா. 46,2). கேவலம் நின்னை வலது அழித்தாள் (கபிலை. கோவை 20). அவன் மிக கேவலமானவன் (நாட்.வ.). 42.இழிவு. குணங்கேவலமலர் தெய்வந் தொழற்குக் குறுகுதுமென் (அம்.கோவை 344,3). கேவலமால் கொண்டுகுயிர் தோற்றேசுதலை (இரங்கேசவெண். 114). கேட்டவர்க்கு தானம் வைத்து நீங்கள் கேவலங்கள் அடையாதிர் (தமிழ்வில்.பா.ப.134). 4.3.இகழ்ச்சிப் பொருள்.தாங் கேவலமல்ல வச்தரை (அம்.) 4.4.எளிமை. இவர் கேவலரோ (தக்க.199 உரை). 4.5.விரும்பத் தகாதது. கேளாயோ என் குறியும் கேவலம் என்றெண் ணாதே (சித்திரா.நாயனார் கதை ப.38). 4.6.தாழ்நிலை. சொற்பனத்தே தோன்றித் துடிப்பற்றுக் கேவல மாய், நிற்பதுபோல் (ஒழிவி.1,2). கேவலம் தீங்கு அனுப்பான் (சடகோபரந்.58). 4.7.சிறுமை. கெட்டதைப் போற்றுதல் கேவலம் அல்லவோ (உதயம்.வஞ்சினம்.23). 5.மரணத் தறுவாய். (யாழ்.அக.) 6.முடிவிடம். (முன்.) 7.மெலிவு. (முன்.) 8.1.முத்தி. தொழுவிற்ரருன்றிய தோமறு கேவலக் கிழவன் (சீவக.856). விமலகேவல ஞானப்பொடி அணிந்து (திருக்கோவல்.பு.5). கேவல நிலைதோன் றாமற் (கைவல்ய.1,46). 8.2.மோட்சம். ஆன்மாவில் கிட்டும் அயிக்கியஉபாகிகெடாதவர் கேவலம் ஆகாரே கேவரம் ஆதி நின்றான் (மகா.துறவு.62). அவ்வீட்டிலே கேவல மடந்தையை நுகர்ந்த (சீவக.29 உரை). 9.அவமானம். அவரைக் கேவலம்பண்ணினான். (நாட்.வ.). 10.மரி யாதை. இண்டைக் அவனுக்குக் கேவலங் கெட்டுப் போச்சு (இலங்.வ.). 11.கேவல ஞானம், திரிகால வுணர்ச்சி. கேவல மூன்றுங் கிளரும் (திருமந்.2249). நிறைதரு கேவலத்தோய் நின்னடியார்க் கெல்லாம் (சூளா.541). பாட்டருங் கேவலப் பரவை மாக்கடற் (சீவக. 3060). உலக மூன்றும் ஒருங்குணர் கேவலத்து (யசோதர.1). திக்கறியப்பெற்றது கேவலம் (திருநூற்றெட். அந்.88). 12.பொருந்தா நிலை. தாவரு சொறி கேவல முறினும் (முக்.பள்.3,7). 13.இணையற்றது. ஆரும் சுரம் போய் முடிவார் அல்லர் கேவலமே (கப்.கோவை 295). 14.இட்டம். (யாழ்.அக.) 15.உறுதி. (முன்.) 16.துன்பம்.(முன்.) 17.ஒருங்கு. (முன்.) 18.பெருக்கம். (முன்.) 19.நிச்சயம். (இலக்.சொல்.அக.)

கேவலமா-தல் 5வி. ஆன்மா பரமான்மாவுடன் ஒன்றுபடுதல். முபாதி கெடாதவர் கேவல மாகாரே (கைவல்ய.2,39).

கேவலவுணர்வு பெ. பரஞானம். (குறள்.352 உரை)

கேவலவொழிபு பெ. தனித்திருக்கும் தன்மையி லிருந்து நீங்கப் பெறுகை. கேவலவொழிவும் சகல வொழிவும் அற்றநிலை (திருக்களிற்று 32 தலைப் புரை).

கேவலன் பெ. 1.கைவல்ய பதவிடைய முயல்பவன். கேவலன் ... யாவதாத்ம பாவி அசரீரியாய்க் கொண்டு திரிவானொருவன் (அட்டாதச.அர்த்தபஞ்.26). 2.தற் பிரியன். (யாழ்.அக.) 3.விருப்பு அறிவு செயலின்றி ஆணவமலத்தொடு மாத்திரம் பொருந்தும் உயிர். பன்னி கேவலன் சகலன் (ஞானாமிர்.8). 4.இழி குணமுடையவன். இடங்கினில் பட்ட ஆனையர் பல கேவலரே (சேர.பொன்.அந்.64).

கேவலாத்துவிதம் பெ. ஒரு பொருள், கொள்கை, ஏகான்மவாதம், அத்துவிதம் என்ற சொல்லின் பொருள் ஒன்று எனக் கூறி அதன் கருத்தைத் தெரிவிக்கும் போது கேவலம் ஒன்று ஒன்றே என்னும்படி இருத்தல் என விளக்கும் கொள்கை. (சமய அக.)

கேவலாவத்தை பெ. 1.(சைவ.) கீழாலவத்தை, சாக்கி ரத்தினின்று துரியாதீதம் வரையிலுள்ள ஐந்து நிலையிலும் ஆன்மா கீழ்நோக்கி நெற்றியிலிருந்து மூலாதாரத்திற்குச் செல்லும் நிலை. (சிவப்.கட்.) 2.(சைவ.) காரணகேவலம், காரணாவத்தை மூன்ற னுள் ஆன்மாக்கள் சர்வசங்கார காலத்தில் அசுத்த மாயா காரணத்திலே யொடுங்கி ஆணவ மலத்தாலே மறைப்புண்டு சிருட்டி காலமளவும் ஒன்றும் அறியாமற் கிடக்கும் அவத்தை. (திருவால.கட்.)

கேவலி[1] பெ. கேவல ஞானமுள்ளவன், கேவல ஞானி. முதற்பொருள் கேட்டார்க் குரைக்குமெங்கே வலியே (திருநூற்றெட்.அந்.10). கேவிலியன் அடியினை வணங்கி (நாக.கா.163). அந்நாளில் கேவலிகள் ஆகும் ஒருமுனிவன் தன்னால் அறங்கேட்டு தக்க வுலகைவிட்டு (சரீபார்சு.அம்.ப.13).

கேவலி[2] *எ.வ. வள்ளிக்கொடி.* (மூலி.அக.)

கேவலோத்பத்தி பெ. பஞ்சகல்யாணத்தொன்று. (திருநூற்றெட்.அந்.4 உரை).

கேவி-த்தல் 11வி. வருந்துதல். கேவித்த பாதாதி கேசத் தையும் எழுதி (சித்.மடல் 164).

கேவிக்கேவி வி.அ. ஏங்கியேங்கி. இதயம் கேவிக் கேவிப் புலம்ப கண்களில் நீர்வழிய (செ.வா.அ.171,24).

கேவியழு-தல் 1வி. ஏங்கியழுதல். (நாட்.வ.)

கேவியெதிரி பெ. உயிர்சத்து (சி) குறைவினால் ஏற்படும் நோயைக் குணப்படுத்த போடப்படும் பிளாத்திரி மருந்து. (மருத்.கலைச்.அக.ப.14)

கேவு[1] பெ. வெண்கடுகு. (மலை அக.)

கேவு[2] பெ. தோணி முதலியவற்றில் ஏற்றுதற்குரிய கூலி. (செ.ப.அக.)

கேவு[3]**-தல்** 5வி. மூச்சுத் திணறுதல். இத்தாரணிக்குள்...

கேவிக்கிடந்து (திருப்பு.155). மண்டுகம் மழை கண்டதும் கேவும் (கெங்.பள்.233).

கேவெனல் பெ. இரக்கக்குறிப்பு. (ஒலி.அக.)

கேவேடன் பெ. மீன்வலையன். கேவேட ராகிக் கெளிறது படுத்தும் (திருவாச.2,17).

கேழ்[1] பெ. 1.ஒளி. கேழாரம் பொற்ப வருவானை (பரிபா.9, 29).வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத் (சிலப். 4,37). அருங்கேழ் மணிப்பூண் அணங்கு (நள.129). நலம் கேழ் ஒண்படி (ஞானாமிர்.41,12). நயங்கேழ் பெருவள நல்கு நல்லூர (தஞ்.கோவை 392). அறம் வளர்த்த தந்தை கேழ்கிளார் அடிச் சுவட்டில் (தியாக.69). வயிரச் சுடர் மணி செங்கேழ்ப் பருதி கதிர் வீச (குருகூர்.பிள்.53). கேழிழையா மண்டவிர்ந்த விண்ட ளங்கள் ... வின்புமிழ்ந்த வென்று (திருக்காவ.கலம். 68). கெடலரு நின்றடந் தோளலர் வேட்ட வென் கேழ் கிளர்மான் (அம்பல.கலம்.89). 2.நிறம். மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப (குறுந்.49). பொன்கேழ் புனல் ஒழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட (நாலடி.212). செப்பிணை யனைய செங்கேழ் வனமுலை பொருது சேப்ப (சீவக.1691). பன் மலர் கேழ் கிளர மடுத்தான் (திருக்கோவை 226). செங்கேழ் விழியன்னமே (அம். கோவை 210). குருதிச் செங்கேழ்க் கொய்ம்மலர்க் குடுமிச் சேவல் (திருவிளை.பு.நகரச்.79). ஓவறு செங்கேழ் விம்பமது (சௌந்.96). கேழரக்குண் தாமரைவாய்க் (சித்தோ.அம்.6 க.13). கேழ்சிறை யொளிகு லாவ (முகியத்தீன் பு.95). 3.ஒப்பு. ஒண்கேழ்க்கழுநீ ரொளி முத்த முமிழ்வதேபோல் (சீவக.2346). கெண்டையோடு நின்றலர்ந்த கேழவாய்க் கிளர்ந்தவே (சூளா.479). கேழேவரையு மில்லோன் (திருக்கோவை 269). கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை (திருவெம்.8). கேழ் இல் சங்க நல்லூரனும் (வைண.ஆசா.2,4,2). கேழில் வாகையே மதரைலயுங் மறை முறையான் (கச்சி. காஞ்சிப்பு.நகரேற்.183). 4.புகழ். கேழ்கிளர்தண்ணளியே மறைத்தத னாற்கொடி யாரென் றறிந்தனமே (நாணிக். ஒருதுறைக்கோவை 105). 5.மிகுதி. கீழ்திரை கவிந்த வானம் கேழ் ஒளி சிவந்தது அன்றோ (தேம்பா.1,7,20). 6.அழகு. (ஆசி.நி.191) 7.வடிவு. ஒண்கேழ் ஒரு மருப்பு (ஞானாமிர்.2).

கேழ்[2] பெ. தலைவன். கேயூர மாசுணத்தாள் கேழ் கிளர்ந்து வீற்று இருக்கும் மாயூரம் என்னும் வளநகரும் (மயிலை.உலா 555).

கேழ்[3] பெ.அ. பொருந்திய. மண்கேழ் மணியினுழை யுந் துகினுலின் (சீவக.2346).

கேழ்த்த பெ.அ. 1.மிகுந்த. கேழ்த்த சீரான் (திருவாய். 3,1,7). 2.நிறங்கொண்ட. கேழ்த்த வடித்தாமரை (இயற்பா. 3,96). 3.சிவந்த. சிலைக்கழு நீர்க்கணும் சிவப்பிற் கேழ்த்தவே (சீவக.1016). 4.ஒத்த. யாழிசை கேழ்த்தன்ன இனம் (பரிபா.8,22).

கேழ்பவர் பெ. நன்மையுடையார். ஒருவர் நம்போல் வருங்கேழ்பவருளரே (திருவிருத்.45).

கேழ்பு பெ. 1. நலம். கேழிபு ஏறு வகை நல்கும் குரவர் (வைண.ஆசா.காப்பு.3).2. நன்மை. (திருவிருத்.45)

கேழ்வரகு பெ. கேப்பை. நாழி கேழ்வரகும் கம்பும் நாட்டினில் இரக்க நாணான் (அருணகிரி.பு.1,47). தினையும் கேழ்வரகும் (இளை.இலக்.37). மானாவாரி கரிசல் நிலங்களில் கேழ்வரகு அல்லது ஆரியம் ... முக்கிய உணவுப் பயிராகும் (செய்தி.வ.).

கேழ்வி பெ. நூற்பொருள் முதலிய கேட்கை. இடை விடாது நினைக்கும் பரம பாகவதர்களாலே கேழ்வி செய்த மாத்திரத்திலே (கோலாசல.பு.24 உரை).

கேழ்வு பெ. தோணிக்கூலி. (செ.ப.அக.)

கேழல் பெ. 1.பன்றி. கேழல் அட்ட பேழ் வாய் ஏற்றை (அகநா.6). கேழல் உழுத கரி புனக் கொல்லை (ஐந்.எழு.8). கேழல் ஆயபெருமாயனார் உலகு கேள்வி யின்மை இவை வந்தவே (இரணியவதைப்.205). பின்னு சடைகள் தாழக்கேழ லெயிறு பிறழப்போய் ... அழகாற் (தேவா.1,74,6). செந்தறுகண் கேழல் திறம் புரிந்து (நக்.அந்.69). காடு ஆடு பல்கணம் சூழக் கேழல் கடும்பின் நெடும்பகல் கான் நடந்த (திருமாலை.3,2). கேழல் கெண்டிய நிலவரை நிவந்த (நன்.39). கேழலின் மருப்பின்ன ஓடு (கந்தபு.1,6,15). மருவு கேழலும் மீனும் ஆமையும் மாயனுக்கு விருப்பமா (திருச்செந்.கலம் 41). கேழல் உறுமிக் கடாம்பொழி வெல்லும் (பூந்துறைப்பு. பாயி.29). 2.பன்றியின் ஆண். கேழற் கண்ணும் கடிவரை இன்றே (தொல்.பொ.580). கேழலொடு இரும்பனை வெளிற்றின் புன்சாயன்ன (முருகு. 311-312). பன்மயிர்ப் பிணவொடு கேழல் உகள (மதுரைக். 174). 3.வராகவவதாரம். கேழலாய் மருப்பின் உழுதோய் (பரிபா.3,24). வெற்றியாண் கேழலாய் விளங்கு மேல வன் (செ.பாகவத.6,4,5). 4.நிறம். கேழல் வாழைத் தண்டு (சேர.உலா 117). செங்கேழற்றாமரை (திருக் கைலா.உலா அரிவை 1).5.யானை.(அக.நி.) 6.பன்றிக் கொம்பு. (போக.நி.32) 7.வேளிர்க்கு உரிய கொடி. (ஆசி.நி.55) 8.குளநெல். நீர்விளை கேழலும் (சீவக.1422)

கேழற்பன்றி பெ. ஆண்பன்றி. சாரைப் பாம்பு கேழற்பன்றி (தொல்.சொல்.416நச்.).

கேழன் பெ. நிறத்தன். இனன் அந்தி அங்கி நிகர்த்த செங்கேழன் (திருச்செந்.நிரோ.அந்.14).

கேழாரம் பெ. ஒளிமிக்க முத்து. கேழாரம் பொற்ப வருவானை (பரிபா.9,29).

கேழிலாசனம் பெ. ஓர் யோகாசனம். (உத்தரகோ.பு. 2,5).

கேழிலான் பெ. நிறம் இல்லாதவன். எம் போலும் கேழிலார் மாண்நலம் உண்கோ (பரிபா.9,31).

கேழுலகு பெ. திக்கு. (ஆசி.நி.156)

கேள்[1] பெ. 1.சுற்றம். மல்லல் கேள் மன்னுக. (பரிபா.11, 121) கள் வடுப்படரும் பூசல் கேட்டிரா நாளையென்னீர் (சூளா.1183). நம் கேள் ஏய் பதி வருமென்ன நல்லோர் சொல்லக் கேட்டனம் (தஞ்.கோவை 353). தடை தீர்ப்ப தற்கோ கனக் கேளுனையன்றிக்காணேன் (திருக் குற்றா.மாலை 2). 2.அன்பு. கேள்கிளரு நாட்டி னிடை கேட்டுமிலிர் (பிரபோத.11,50). கேளணிந்த காவன லுர்க்கிளர் புணத்துப் புசும்புல்லாக் கிடவேன் நானோ (திருக்காவ.கலம்.36). 3.நட்பு. தொல் கேள் ஆகலின் நல்குமால் இவட்கே (ஐங்.271). கிளையமன் எம் கேள் வெய்யோற்கு (புறநா.144,7). சேணன் ஆயினம் கேள் என மொழிந்து (பதிற்றுப்.44,11). கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை (குறள்.808). இம்மூவர் கேள் ஆக வாழ்தல் இனிது (திரிகடு.12). கான் அதர் வெய்யிலில் கேள் நிலவும் கிளி, பாவையொடு ஆயமும் ஒழிய (நம்.ஆள்.காப்பு.7). கேளன்றிக் கொன்றாரே கேளாகி (தொல்.பொ.72 உரை). கேளாகி வந்துபின் கேட்டமுவோ (அம்.கோவை) 4.உறவு. நல்கான் ஆயினும் தொல் கேளன்னே (ஐங்.167). ஒன்றிய கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி (பொருந.73-74). தண்கேளலறச் சென்றான் (நாலடி.29). கேளல்லார் முனை கெடுத்த (புற.வெண்.44 கொளு). பண்ணினுக்குக் கேளான தேமொழியை (நள.272). நின் கேள் தரு ஆசையில் நின்று எல்லியம் போது சென்றேன் (தஞ்.கோவை 200). பைங்குங்கேளும் பதியுங்கதற (கந்தரலங்.84,3). கேளல மாயி னாமுங் கேளல மாது மாவி (யசோதர.101). ஒரு கேளுமின்றியுடையடைந் தேன் (சங்கர.கோவை 11). இந்துகேள் துணுக் கென எடுப்பர் மத்தளத்தையே (மத்தளவி.13). கேள் ஆம் ஐ எய்த (சிலேடை இலக்.ப.300). 5.கணவன். நேர் இறை முன்கை நல்லவள் கேள் (பரிபா.12,92). அவளுந்தன் கேட்குச் சொன்னான் (சீவக.1052). தாங்கிய கேளொடு தானு மெரிபுக (புற.வெண்.82). பை வருங்கேளும் பதியுங்கதற (கந்தரலங்.84,3). நயனு டையின் சொல்லான் கேள் எனினு மாதர்க்கு அயலார் மேலாகு மனம் (நீதிநெறிவி.82). 6.தலைவன். எம் கேள் போல் வன் கண்ண தோ நின்தணை (குறள். 1222). எம் கேளும் கிளையும் கெட்டழிந்தனவோ (கா. கடமை.ப.45). 7.காதலன். கேளுடைக் கேடுஞ்சுதுமே (நற்.359). 8.உறவுடைய தலைவி. கண்டிரும் அல்லமோ கொண்க நின் கேளே (ஐங்.121). 9.தோழி. கேள் அணங்குற மனைக் கிளந்துள (பரிபா.9,21). 10.கூட்டம். கேள் ஆமை எய்த (சிலேடை இலக்.ப. 300). 11.மதிப்பு. (யாழ்.அக.) 12.ஒப்பு. கேள் பாரில் யாருங்கிடையாத வள்ளன்மை வேள் பாரி (பாரிகாதை 1,38). கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை (வெற்றி.48).

கேள்²ளு-தல் (கேட்டல்) 9வி. 1.செவிக்குப் புலனாக் குதல். சொல்லுந போலவும் கேட்குந போலவும் (தொல். பொ.513). பல்காலுங் கேட்பாருங் காண்பாரும் ஆற்றியுளர் ஆகாதே (இறை.அகப்.45 ப.உரை). 2.1.பாடம்கேட்டல். சொல்லின் செவி கொடுத்துக் கேட்டீக (ஆசாரக்கோவை 74). ஒரு குறிகேட்போன் (நன். பொது.42). நவின்றுளோர் நவிலக் கேட்போர் சங்கை யில் உயர்ந்து வான்மேல் தகுங்கதி வழிபெற்று உய்வார் (கித்தேரி.அம்.1வி.3). 2.கவனித்தல். சேயிழை கேள் (சிலப்.9,73). வலிப்பல்யான் கேளினி (கலித்.11,5). 3.காதாற்கேட்டல். சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (குறள்.65). தேற மொழிந்த மொழி கேட்டுத் தேறி (நாலடி.379). பெண்ணெனப்படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா (சீவக.1597). உரைக்கப்படு வதும் ஒன்று உண்டு கேட்கின் (காரை.இரட்.மாலை 7) வென்ற பேரொளி யார்செய் விழுத்தவம் நன்று கேட்க விரும்பும் நலசயினோம் (பெரியபு.1,20). மொழிக்கு மொழி தித்திப்பு ஆக மூவர் சொலும் தமிழ் கேட்கும் திருச்செவி (தாயுமா.பா.42,14). பாடியிடும் பாட்டையும் தான் பண்புடனே கேட்டும் (சீவே.சரி.2407). அரண் திருநாமத்தை ... கேட்பவர் பிறவி தீர்வார் (தென்காசித். பு.மூர்த்தி.45). 4.செவியால் உணர்தல். இரவுக் குறியே இல்லகத்துள்ளும் மனையோர் கிளவிகேட்கும் வழிய துவே (தொல்.பொ.129). யாரும் கேட்பார் இல்லை யெனில் ஆற்றுதலைப் பயக்கும் (இறை.அகப்.144,17 உரை). 5.கேள்விப்படுதல். வணங்குஞ்சிறுத் தொண்டர் வைகலேத்தும் வாழ்த்துங் கேட்டணங்கும் (தேவா.1, 45,7). அவர்களை ரெண்டு போட்டு துரத்திவிட்டதாய்ச் சேதி கேட்டேன் (ஆனந்த.தினசரிச்.3 ப.121). 6.கேட்ட றிதல். கேட்டதே செய்ப புலன் ஆள்வார் (நான்மணிக். 38). அரசன் பொருளதிகாரம் இன்மையில் கவல்கின்றான் என்பது கேட்டு ... அருளிச் செய்தானாகும் (இறை. அகப்.ப.19). தேற்றுறை உரைத்த தூதன் செப்பிய யாவும் கேட்டு வேற்றுரை உரைத்திலாள் (தேம்பா.1, 7,17). உற்றவற்றைக் கேட்டபின் ... பூண்டணிய திருவுளமானாயோ (கித்தேரி.அம்.2.க.59). 7.வினா வுதல். பெருங்கோளக் கிள்ளி கேட்க (புறநா.67,11). மறைகுந்தவை கேட்கவற்றாகி (குறள்.587). உண்டது கேளார் குரவரை (ஆசாரக் கோவை 86). தீவேந்தன் தனைக்கண்டுத் இத்திறம் கேட்பல் (சிலப்.19,71).

சுபத்திரை மாதைப் புறங் கொண்டு போவதற்கே இனி என்ன வழி என்று கேட்கில் (பாரதி.கண்ணன் பா.1,1) அடைவுடன் விண்விக் கேட்டாய் (மகா.துறவு.69). உண்மை வைத்திவும் கேட்டிவும் ஈங்கு ஒருவர் உண்டே (தாயுமா.பா.28,77). கோன்மறுத்த நீங்களெவர் கூறுகெனக் கேட்டனனால் (கித்தேரி.அம்.4 க.79). 8.வேண்டுதல். கேழல்வினை போகக் கேட்எழிப்பார் ... ஆலங்காட் டெளம் அடிகள் (தேவா.1,45,11). ஈ என்று நான் ஒருவர் இடம் நின்று கேளாத இயல்பும் (திருவருட் பா 9,1). படிக்கப் புத்தகம் தருமாறு கேட்டான் (நாட்.வ.). மீனவன் கேட்ப (யாப்.காரிகை 2). உரித்துணை கிடைப் பக் கேட்கிலேன் (தேம்பா.1,5,52). 9.1.செவிமடுத்தல். கற்றிலனாயினும் கேட்க (குறள்.414). கேடு கெட்ட மானிடரே கேளுங்கள் கூடு விட்டு ... அந்தப்பணம் (நல்வழி 22). 9.2.பிறர் சொல்லக் கேட்டிருத்தல். சென்றெனக் கேட்ட நம் ஆர்வலர் பலரே (குறுந்.207). 10.விசாரித்தல். மிக்கா னுரைப்பதுவு மிக்கதே போலு மால் வினவிக் கேட்பேன் (சீவக.1544). களவு போனமை எங்ஙனே என்று கேட்டு (கல்.சோழவ.66) 11.உரிமை கொண்டாடிக் கொடுக்கச் சொல்லுதல். (செ.ப.அக.) 12.தண்டித்தல். தீயரைத் தெய்வங் கேட்கும் (நாட்.வ.) 13.நோய் முதலியன நீக்குதல். செயச் செயவூறு கேளாது ... அரவுகான்று வேகம் மிக்கிட்டதன்றே (சீவக.1274). 14.விலைகேட்டல். (நாட்.வ.) 15.ஏற்றுக் கொள்ளுதல். கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் (குறள்.643). எண்ணும் எழுத்தும் இலக்கணத்தின் சீரழகும் பண்ணு மறியாமற் பாடுகிறேன் கேளுமெல்லாம் (காஞ்சி.அம்.ப.2). 16.பொறுத்தல். கேளாராயர் குலத்த வரிப்பழி (பெரியாழ்.தி.3,1,8). 17.கேட்டு இரங்குதல். அழப்போகான் அஞ்சான் அலறினால் கேளான் (ஏலாதி 37). நல் திறம் கேட்கின் நகையாகும் (சிலப்.9,54). 18.முடித்தல். தென்னாசே யெபூசல் கேளா திறந் தனையே (சீவக.1803). 19.பின்பற்றுதல். சொன்னத கேட்ப மாட்டார் கொண்டன் (கைவல்ய.1.17).

கேள்-தல் (கேட்டல்) 9வி. 1.செவிக்குப்புலனாதல். தெவிட்டறக் கேட்க நற்பாட்டுகளும் (பாரதி.கண்ணன் பா.2,7). 2.ஒலி எட்டுதல். குண்டு போட்டால் இங்கே கேட்கும் (நாட்.வ.). 3.செவிப்புலனுணர்வைப் பெறுதல். அவனுக்குக் காது கேட்கும் (முன்.). 4.தணிதல். வாத நோய் அந்த மருதுக்குக் கேட்கும் (முன்.). 5.கீழ்ப்படிதல். பொல்லாத மனங்கேளாது (முன்). 6.அனுமதி பெறுதல். கேளா தேவந்து கிளைகளாயிற் றோன்றி (நாலடி.30). 7.செவி சாய்த்தல். சடைமுடிக் கடவுள் ... அந்தகன் சூழலச் சூலமேல் இட்டதூங் கேட்டிலை போலும் (கந்தபு.4,7,12).

கேள்ணா பெ. தொட்டிலில் தொங்கவிடும் பொம்மை. (செ.ப.அக.)

கேள்மை பெ. கேண்மை. (யாழ்.அக.)

கேள்வன் பெ. 1.கணவன். நிரைதார் மார்பின் நின் கேள்வனை பிறரே (புறநா.294,9). வழுதாடன் கேள்வனை யெங்கணா அவென்னா வினைந்தேங்கி மாழ்குவாள் (சிலப்.18,33). புள் வாய்போழ்ந் துமா நிலங்கீண்ட ... உமைகேள்வன் (தேவா.1,42,9). கேள்வனைக் கனவிற் காணாள் கிளர்மணிப் பூணினாளே (சீவக.1506). பூமங்கை கேள் வன் (இயற்பா.மூன்றாம் திருவந்.56). மற்றவடன் கேள்வனுக்குங் கீழ்மை கொடுக்கின் றேன் (நள.160). ஏந்திழை மாதர் தங்கள் கேள்வன தியற்கை கூற (கந்தபு.6,4,6). சேலி ரும்புனற் கேள்வனைச் சேர்ந்து (அரிச்.பு.நாட்டுச்.44). காத லுயர்தலு மொருத்தி கேள்வன் மாடுற நிற்ற னோக்கி (மருத.பு.43,26). ஒன்று சாற்றும் மான்கைதன்னது அல்குல் விழை கேள்வன் (பழனித்திரு.10, 1/4/30). 2.நாயகன். குயிலு மயிலுங் காட்டிக் கேள்வனை விடுத்துப் போக்கியோளே (தொல்.சொல்.279 நச்.). இபமினாள் மகிழ் கேள்வா (திருப்பு.143). இரு தாரை கேள்வனை (தனிப்பா.தீர.40 காளமே.). தன்னுடைக் கேள்வனைத் தலைவியை விழைவாப் பகைத்தலும் (அறு.இலக்.பொ.42). 3.தலைவன். ஆருயிர்க் கேள்வர்க் ககன்றன வாய்ச் சொல்லு (அம்.கோவை 216) 4.தோழன், நட்பினன். (தீவா.)

கேள்வி பெ. 1.கேட்கை. ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை (புறநா.26,12). சென்றுறு கேள்வியோடு (திருநெறிவி.81). ஆகமநூல் படித்தறியார் கேள்வி யையும் அறியார் (தண்டலை.சத.41). உரை வகை களுள் ஒன்று (வீரசோ.90). 1.2.அறிவையுடைய பராசரன். முரணி றைந்த மெய்க் கேள்வியோன் (பாரதம் 1,2,7). 2.வினா. வினவல் கடாவல் கேள்வி யுசாவல் வினா (பேரகத்.22). திக்கில்லாக் கேள்வி போலும் (திருவேங்.திருப்பா.39). துரை கேள்விக் கெல்லாம் பதில் சொல்லாமல் (வீர.கட்ட.கதைப்பா.ப.49). கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக் காததால் (அவளும் அவனும் ப.114). கேட்டும் அறிந்தும் கேள்விகள் தொடுத்தும் (இயேசுகா.ப.43). நீ கேள்வியென்றால் நான் பதிலாவேன் (கண்ண.திரை.பா.2,247). உபாத்தியாயர் மாணவனைக் கேள்வி கேட்டார் (நாட்.வ.). 3.காது. கேள்வி கேட்டன சிலசில (பரிபா.12,39). கேள்வியில் அமர்ந்தபால் திகழ் சுவேரதக் கோட்டுறு குழைகள் (முருகன் பூண்டிப்பு. சருக்.8,64). 4.நூற்பொருள் முதலிய கேட்டை. கேள்வி அந்தணர் கடவும் கேள்வி (கலித்.36,25) கேள்வியாற் றோட்கப்படாத செவி (குறள்:418) தள்ளியும் தாங்க அரும் கேளவி யாவர் (ஆசாரக்கோவை 50) கேள்வி கடுறைபோய் (சீவக.2386) சுருக்கமில் கேள்வித் துகள் தீர்புலவர் (யாப்.காரிகை 3) நூலன் சந்திலங்கு

மார்பின் நுணாங்கிய கேள்வி மேலோன் (பெரியபு.6,14). மெய்த்திருத்தகு கேள்வித் தனயனை (பாரதம்.1,1,89). பல கேள்வி சேர்ந்த திருச்செவி (குமணசரித்.75). கருதிய பொருளைப் பல் சான்ற பெருங்கேள்விப் பனி மலய முனி வினவ (திருச்செந்.கலம்.1). 5.அறிவு. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் (நாலடி.106). துயிற்றிய பல் கேள்வியினர் தூற்றிக் கொளப்பட்டார் (சீவக.2164). எண்ணப்பல கேள்வியும் தவத்தது பெருமையும் தங்கின (பெருங்.1,32,9-10). ஓங்கிய கேள்வியால் உணர்ந்து கொள்கன (சூளா.1589) வெளிறிலாக் கேள்வி மற்றவன் (செ.பாகவத.5,1,3). கல்வி கேள்வியும் ஆகி கலக்குற்றேனே (தாயுமா.பா. 16,6). முற்றொன்று கேள்விக்குட நாடன் (சங்கர. கோவை 214). 6.கல்வி. இம்மூன்றும் கேள்வியுள் எல்லாந்தலை (தீரிகடு.31). ஆயிர மறையுணர்ந் தான்ற கேள்வியான் (கந்தபு.4,7,2). பல்வகைக் கேள்வி யெல்லா மாய்ந்துணர் பயனும் (திருவிளை.பு.தலவி. 18). வரையெனக் கிடந்தனன் வரம் பில் கேள்வியான் (செ.பாகவத.306). பாய கேள்வி முனிவர் பரவினார் (திருக்குடந்.பு.14,5). பொய்யில் கேள்விசால் பிருகு (சிவஞான.காஞ்சிப்பு.அரிசாப.14). ஆரும் பரவும் அழகர் பண்ணையான் கேள்வி (முக்.பள்.112,3). கேள்வி முயல் (ஆத்திசூடி வெண்.40). கேள்வி பெருக என்று ஊதேடா காளம் (புதுமைவே.7,6). 7.எழுதப் படாமல் கேட்பதன் மூலம் அறியத்தக்க வேதம். உரைசால் வேள்வி முடித்த கேள்வி (பதிற்றுப்.64,4). நான்மறைக் கேள்வி நவில் குரல் எடுப்ப (பரிபா.திர. 7,8). கீதத் திசையோடுங் கேள்விக் கிடையோடும் (தேவா.1,82,2). தொன்னூற் கேள்விச் சார்பினாற் கண்டு (திருவிளை.பு.5,67). சிறப்புறு கேள்வி பெறு பாங்கன் (கோடீச்.கோவை 44). கேளிர் ஆர் என இவ்வாறு கேட்டனன் கேள்வி மிக்கான் (தந்திவனப்பு. 491). நூல் நகத் துளங்கு கேள்வி (தேம்பா.1,3,34). 8.நூல். வசையறு கேள்வி வகுத்தனன் (சிலப்.3,35). 9.யாழ். நங்கை கேள்வியும் நல்லவைப்புக்கென (பெருங்.1,37,85). 10.ஆகமம். விரிந்து அகன்ற கேள்வி (பரிபா.3,48). 11.சத்தம். எழுதாக்கேள்வியும் கேள்வி (ஞானா.5). 12.சொல். ஏனோர் கேள்வியுங் கேள்வி (ஞான.பாயி.5,6). 13.பிரத்தாபம். (நாட்.வ.) 14.விசாரணை.(கல்.வ.) 15.ஏலம் முதலியன கேட்கை. (செ.ப.அக.) 16.மந்திரம். ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி (முருகு.186). 17.உபதேசம். வேள்வி எடுத்த கேள்வியாளன் (ஞானாமிர்.46,7). 18.முத்தியுபாய விசாரம். நாடருங் கேள்வி நெடி யோர்க்கு (ஞானாமிர்.38,24). 19.சாத்திரம். சமணர் கேள்வி சகத்துக்குச் சிருஷ்டிகர்த்தா ஒருவனில்லை யென்னும் கேள்வி (தக்கயாகப்.189 உரை.). நன்மை யுற மூதறிவோர்க் கேள்விமுயல் (ஆத்திசூடி வெண்.39). 20.இசைச்சுருதி. நீடிக்கிடந்த கேள்விக் கிடக்கையின் (சிலப்.3,89). கிளையாற்றந்து பண்ணிய கேள்வியாழ்ப் பாணனும் (புற.வெண்.7,18). 21.இராசத குணம். (பிங்.343) 22.செயல். நண்ணிய கீர்த்தி நலங் கொள் கேள்வி (தேவா.1,4,11). 23.வசைச் சொல், பழிச் சொல். தேடியபொருள் நான் கொடுத்தேன் இந்த தேவடியாள் வாயால் கேள்வி கேட்டேன் (தமிழ்வில். பா.ப.268). 24.அரசன் வாய் மொழியாக இடும் உத்தரவுகளைக் கேட்டு உரியவர்களுக்கு அனுப்பும் அதிகாரி. (சாச.அக.) 25.நிர்வாக அதிகாரி. (முன்.)

கேள்விக்கச்சேரி பெ. வரிதண்டுஞ் சாலை. (நாஞ்.வ.)

கேள்விக்கடுதாசி பெ. 1.அபேசைப்பத்திரம். (இலங்.வ.) 2.நீதிமன்றத்தில் கொடுக்கும் எழுத்துமூலமான மனு. (செ.ப.அக.)

கேள்விக்களம் பெ. கேட்கும் பரப்பு. (கலைச்.அக.2 ப.4)

கேள்விக்காரர் பெ. 1.ஏலம் கேட்போர். (இலங்.வ.) 2.விலை கேட்போர். (முன்.) 3.உத்தியோகத்திற்கு விண்ணப்பஞ் செய்வோர். (முன்.)

கேள்விக்காரன் பெ. 1.விலை கேட்பவன். (யாழ்.அக.) 2.வாக்கில் வாதி. (முன்.) 3.வழக்கில் மன்றாடிக் கேட்போன். (முன்.)

கேள்வினை பெ. நட்புச்செயல். கேள் வினை பயின்ற நூலிற் கிளர்ந்து நீருரை மினென்ன (சூளா.1856).

கேள்விகேட்பாடு பெ. நியாயவிசாரணை. ஊரில் கேள்விகேட்பாடு இல்லை (நாட்.வ.).

கேள்விகொடுவை பெ. இரண்டு அல்லது மூன்று சாக்கி பெற்றுள்ள ஓர் ஆட்டக்காரன் தான் கேள்வி கேளாமலிருந்து கேட்டவற்கு உதவிபுரிந்து விளையாடும் ஒரு வகைச் சீட்டாட்டம். (விளை.வ.)

கேள்விகொள்(ளு)-தல் 2வி. ஐயங்கொண்டு கேட்டல். சர்வேசுரனைக் கேள்வி கொள்ள வேண்டாதபடி (திருவாய். 1,5,3 ஈடு).

கேள்விச்சாட்சியம் பெ. கேள்விப்பட்டதாகக் கூறும் சாட்சிகள். (செ.ப.அக.)

கேள்விச்செவியன் பெ. கேள்வியுற்றதையெல்லாம் நம்புவோன். கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான் (வின்.அக.).

கேள்வித்தாள் பெ. கேள்விகள் அடங்கிய தாள். அகல இந்திய தேர்வு கேள்வித்தாளில் செய்தி (செய்தி.வ.).

கேள்வித்தானம் பெ. (சோதிட.) சாதகன் பிறந்த இலக்கினத்துக்கு இரண்டு அல்லது மூன்றாமிடம். (சங்.அக.)

கேள்விப்பட்டியல் பெ. தரவு திரட்டப்பயன்படுத்தப் படும் வினா ஏடு. (மொழியி.கலைச்.அக.ப.70)

கேள்விப்படு-தல் 6வி. 1.அறிதல். அவர் வீட்டிலிருக்கிறா ரென்று சனங்கள் கேள்விப்பட்டு ... அநேகர் கூடி வந்தார் கள் (விவிலி.மாற்கு 2,1-2). 2.பிறர்வாய் மூலமாகச் செய்தி தெரிந்து கொள்ளுதல். (செ.ப.அக.) 3.கேள்வி யாதல். (யாழ்.அக.)

கேள்விப்பத்திரம் பெ. எழுத்துமூலமான விண்ணப்பம், மன்றாட்டுக்கடுதாசி. (முன்.)

கேள்விப்பந்தர் பெ. பலர் கூடி நூல்கள் கேட்டற்குரிய இடனாம்படி அமைத்த பந்தர். கீத சாலையுங் கேள்விப்பந்தரும் (பெருங்.2,7,131).

கேள்விமகமை பெ. வரிவகை. (செ.ப.அக.அனு.)

கேள்விமானி பெ. காது கேட்காதவர்களுக்குப் பயன் படுத்தப்படும் ஒரு கருவி. (மருத்.கலைச்.அக.ப.22)

கேள்விமுதலி பெ. அரசன் உத்தரவைப்பெறும் பொறுப்பு வாய்ந்த அரண்மனை அதிகாரி. (சாச.அக.)

கேள்விமுறை பெ. → கேள்விகோட்பாடு. (செ.ப.அக.)

கேள்விமூலம் பெ. 1.செவி. (யாழ்.அக.) 2.காதடி. (முன்.)

கேள்வியருத்தாபத்தி பெ. ஒருவன் வீட்டில் இல்லை என்பதைக் கேட்டவன், வேறு இடத்தில் அவன் இருக்கிறான் என்று ஊகித்துக் கொள்வதுபோலும் பிரமாணம். அகத்தினிலையுறு தேவதத்தனெனி லிருப்பவன் வேறோரிடத்தி லெனத் தெரிந்ததறிதல் ... கேள்வியருத்தாபத்தி (வேதா.சூ.22).

கேள்வியன் பெ. அறிஞன். சிறந்தமைந்த கேள்வியர் (இனி.நாற்.31). உழல்கின்ற என்னை ... கேள்வியன் ஆக்கிநின்றான் (இராமானுச.நூற்றந்.82).

கேள்வியா-தல் 5வி. கேள்வியால் தெரியவருதல். (செ.ப.அக.)

கேள்வியாட்டம் பெ. சீட்டு விளையாட்டு வகை. (த.நா.விளை.ப.273)

கேள்வியார் பெ. அமைச்சர். செஞ்சினைத் தெரியலான ருளிச் செய்தது தஞ்செவிக ணிசைத்தலுந்தணப்பில் கேள்வியார் (சூளா.239).

கேள்வியான் பெ. சதவிந்து என்ற நிமித்திகன். சிங்கம் வாய்பகத் தெறுவனென்பது தங்கு கேள்வி யான் றான்முன் சொன்னதே (சூளா.607).

கேள்விவரி பெ. அரசன் கட்டளைகளைப் பதியும் புத்தகம். (சாச.அக.)

கேள்வு[1] பெ. →கேவு[2]. (யாழ்.அக.)

கேள்வு[2] பெ. வெண்கடுகு. (இலங்.வ.)

கேள்வுத்தோணி பெ. கூலிக்குப் பொருந்தின தோணி. (யாழ்.அக.)

கேளல்கேளிர் பெ. பகையும் நட்புமில்லாத அயலார். கேளல்கேளிர் கெழீஇயின ரொழுகவும் (அகநா.93).

கேளலர் பெ. →கேளார்-1. (செ.ப.அக.)

கேளவர் பெ. 1.தலைவர். முகைமலியப் புனை தொங்க லெங் கேள்வர் தம் முன்பு கென்றே (அம்.கோவை 531). 2.உறவினர். கனக சித்திரன் வாளம ரழுவத்து மண்டி னானெனக் கேளவர் மொழிதலும் (சூளா.1390).

கேளவார் பெ. →கேளார்-1. உட்புகுந்தொளிக்கும் கேளவார் பிரதாபத்தைக் கெழீஇ (கச்சி.காஞ்சிப்பு. நகரேற்.213).

கேளன் பெ. 1.தோழன். (வின்.அக.) 2.உறவுடை யவன். நல்குவன் போலக் கூறி நல்காயினும் தொல் கேளன்னே (ஐங்.167).

கேளா வி.அ. ஒருபயனுமின்றி. (சூடா.நி.)

கேளாதகேள்வி பெ. 1.நிந்தை. (யாழ்.அக.) 2.வசை. (முன்.)

கேளாதவர் பெ. காது கேளாதவர். கண்டும் காணாதவர் களாயும் கேட்டும் கேளாதவர்களாயும் உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் ... பேசுகி றேன் (பு.ஏற்.மத்தேயு 13,13).

கேளாமை பெ. 1.கேட்காமை. குற்றம் ... செங்கோண்மை சென்று முறையிடினும் கேளாமை அன்று (நீதிநெறி வி.31). 2.கீழ்ப்படியாமை. (யாழ்.அக.)

கேளார் பெ. பகைவர். கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல் (குறள்.643). கேளாரை வாளால் விருந்திட்ட மன் (நள.61). கேளார் சினந்த புரஞ் சுட்டான் (நூற்றெட். திருப்.அந்.66,2).கேளார் சொல் கேளாது ... கேதித் திருப்பாளை (திருவானைக்கா.உலா 426,27). தடுத் தெனை யாளார - அழகரும் நடுத்தனைக கேளார் (முக்.பள்.85,14). கேளாரும் விழைந்துவர மொழியுஞ் சொல்லார் (ஊன்று.8,10). 2.செவிடர். காணார் கேளார் (மணிமே.13,111).

கேளி[1] பெ. 1. மகளிர் விளையாட்டு. மலர்கொய் கேளி (இரக.இந்தும.9). பொய்தல் கேளி வெண்ணைகையார் விளையாட்டாம் (உரி.நி.188). முதல்வனன் கருணை முதல்வியோடு ... கேளியின் மணங் கொளீஇ பள்ளி வைக வருமறை (சீகாழித்.பு.வடுக.2). ரதி கேளி யாடத் தொடுத்தேன் (தெய்வச்.விறலி.தூது 243). கேளொடுங் கழங் கம்மனை முதற் கேளியாலிரு வேனி றிர்ந்தவே (தென்காசித்.பு.குழல்வாய்.31). 2.இன்பம். அணிக் குறத்தி கேளியை வேட்ட முருகா (பழனித்திரு.14,93).

கேளி[2] பெ. கல். மணிவடம் புனைந்த கேளியாலுற வழுத்தியும் (சீகாழித்.பு.திருநகர.26).

கேளி[3] பெ. தென்னை வகை. (பதார்த்த.65)

கேளிக்கை பெ. 1.கிரீடை, மகளிர் விளையாட்டு. கான் என்ற ரகாமொடு கேளிக்கைப் பார்த்த (சித்.பா. சட்டைமுனி.முன்.96). கிரீடை கெடவரால் கேளிக் கையாம் (உரி.நி.178). பரதவித கேளிக்கை பாராட்ட (தெய்வச்.விறலி.தூது 565). கேளிக்கை பார்த்தும

அல்லோ இளிமொழியாள் வாராளே (பவளக்.மாலை ப.4). கேளிக்கை புரியாதீர் ... குமணவள்ளல் தலை கொணர்ந்தால் பரிசெனக்குத்தருவதுண்மை தானா (புலவர் உள்.ப.11). 2.மகளிர் நடனம். மெத்த கேளிக்கை மாதர்கள் ஆடினார் (இராம நா.1,2 திதை 4). கூலிக்குத் குத்துகிறவனைக் கேளிக்கை ஆடச் சொன்றாற்போல (என்.பழ.தொ.670). ஆடிய கேளிக்கையைப் பார்த்திட ஆயிரங்கண் வேணும் (திருவிடை.நா.ப.19,1). கேளிக்கை வேண்டுமென்றால் இளிமொழியாள் (புலந்.மாலை ப.36). 3.வேடிக்கை. கேளிக்கையாகக் கனிமொழியே முத்திறக்கும் (மாரியம்மன்.ப.23). 4.இன்பம். கேட்ட வற்றுள் இல்லையொரு கேவிக்கை (செவி.67).

கேளிக்கைமண்டபம் பெ. மகளிர் நடனம் செய்யும் அரங்கு. மெத்துடைகள் மாரன் ஒரு கேளிக்கை மண்ட பத்து முன்கட்டும் தோரண வாழைக்கு இணையாம் தோற்றத்தாள் (மயிலை.உலா 45).

கேளிக்கைவரி பெ. திரைப்படம், நாடகம் போன்ற வற்றிற்கு விதிக்கப்படும் ஒரு வகை வரி. 1952ல் சென்னை அரசாங்கம் நாடகத்திற்கு கேளிக்கை வரியி லிருந்து விலக்களித்தது (நா.கலை.ப.62). கேளிக்கை வரிவிதிக்கும் உரிமையை அரசு எடுத்துக் கொண்டது (இந்.பொருளி.11 ப.304).

கேளிச்சீடை பெ. செயந்தி அன்று பெருமாளுக்கு நிவேதிக்கும் கெட்டிப் பணியாரம். (தி.பி.அ.823).

கேளிதம் பெ. பெருங்கல். பெருங்கல் கேளிதம் (அபி. மாலை 1213).

கேளியிளநீர் பெ. → கௌளிபாத்திரம்-1. (சித்.அக.)

கேளிர் பெ. 1.உறவினர். எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர் (குறுந்.40). கேளிர் மணலின் கெழுவும் இதுவோ (பரிபா.8,63). தம் கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூண் (குறள்.615). உற்ற வருத்தம் உசாஅத்தன் கேளிரைக் காணக் கெடும் (நாலடி.201). கெட்டறிப கேளிரான் ஆய பயன் (நான்மணிக்.3). கிடப்பார்க்கு ஊண் கேளிர்க்கு ஊண் (ஏலாதி 71). ஆழிப் புவன மறியநங் கேளி ரடுத்தனரே. (அம்.கோவை 333,46). கேளிர் பொருள்களை எடுக்கும் பண்பிலர் (தியாக.குற.28). மிடியாருங் கேளிர் நிகர்த்துக் கெழுமத் தருவண்கை (பாரிகாதை 44). யாவருங் கேளி ரென்று ஊதேடா காளம் (புதுமைவே.7,8). 2.சுற்றத்தார். கேளிர் ஒழுக்கத்தும் புகற்சிக் கண்ணும் (தொல்.பொ.144,56). செழுங்கேளிர் நிழல் சேர (மதுரைக்.168). கேளிர் உவப்பத் தழுவுதல் (திரிகடு.58). கேளிர் ஓரீஇ விடல் (நான்மணிக்.20). கொண்டானில் துன்னிய கேளிர் மற்றில்ல (தஞ்.கோவை 406). கேளிரை அட்டனன் கீழ்மையர்போல் (கந்தபு.4,13,96). எதிர்பொரும் கேளிரும் தேனுகணும பட வதைத்தாய் (திருவர.அங்.88,3). நம்புறு மவன்றன் கேளிர் நரபதிக் கதுசென்றோத (மருத.பு, 40,18). கேளல் கேளிர் வேளாண் சிறுபத மதுகை யின்றி (மானவி.6,257). 3.நட்பினர். இடிக்கும்கேளிற் நும் குறைஆக (குறுந்.5,8). மாற்றோரும் இலர் கேளிரும் இலர் (பரிபா.4,54). கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி (பொருந.74). நமதுளத்தர் அலிகள் தம்மை அகங்குளிரக் கேளிரென ஏற்றுக்கொண்டார் (ஊன்று. 9,8). ஒன்றிய கேளிர் போல (பொருந.73-74). 4.தலைவர். கலப்பேன்கொல் கண் அன்ன கேளிர் வரின் (குறள்.1267). 5.காதலர். தம் கேளிர்த்திளைக்கும் உருகெழு தோற்றம் (பரிபா.11,58-59). கேளீர், நட்பிற் சிறந்தோர் தெய்வங்கொல் கேளீர் (திணை.ஐம்.49). கண்போல் சிறந்த கேளிர் வருவராயின (குறள்.1268 மணக்.). 6.கணவன். கேளிர் கெழீஇச் சுற்ற ... பாடும் பாட்டு (பரிபா.14,23-24). எம்முடைய கேளிரைப் போல வன்கண்ணையுடையதோ நின் துணையும் (குறள்.1226 மணக்.).

கேளிவிலாசம் பெ. 1.வேடிக்கையான காலப்போக்கு. (நாட்.வ.) 2.விளையாடிப்பொழுது கழிக்கை. (யாழ். அக.)

கேற்று பெ. 1.வாயலுக்கு போடும் இரும்பு கதவு. (இலங்.வ.) 2.சிறுநங்கூரம். (கப்.வ.)

கேறுதல் பெ. முட்டையிடும் பருவத்து கோழி எழுப்பும் ஒலி. (ரா.வட்.அக.)

கேனம்[1] பெ. பைத்தியம். (நாட்.வ.)

கேனம்[2] பெ. → கேனோபநிடதம். (செ.ப.அக.)

கேனவாயன் பெ. முட்டாள், பேதை. (ஐம்.அக.)

கேனன் பெ. பைத்தியக்காரன். (நாட்.வ.)

கேனி பெ. தெங்கு. (வைத்.விரி.அக.ப.115)

கேனோபநிடதம் பெ. தசோபநிடதத்தொன்று. (செ.ப. அக.)

கை

கை[1] 'க்' எனும் மெய்யும் 'ஐ' எனும் நெட்டுயிரும் இணைந்த கூட்டுச்சொல் க் + ஐ = கை

கை[2] பெ. 1.கரம். அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே (தொல்.எழுத்.315). பொன்செய் கொல்லன் தன் கைக் காட்ட (சிலப்.1,23). நான்மறை மூனிவர் ஏந்து கை எதிரே (புறநா.6.20). கைவேலைப்பாடிக் காஞ்சிபுர மும்பாடி ஆடாமோ (நந்திக்கலம்.29). கண்ணனெனும் பெயரு டையாள் என்னைக் கட்டிநிறை வான் என்னுந்தன் கையில ணைத்து (பாரதி.கண்ணன் பா.2,1). தங்கை யின் நல்லோர் யாருந் தரணிமேல் பணிந்து வாழ்த்த (தித்தேரி.அம்.1 வி.3). மாகநகக் கையால் மடுத்திருத்தும் போதினிலே (நம்.திருத்தாலா.127). செம்மலர்க் கை குவித் தருளி (பெரியபு.19,57). அங்கே கைகளற்று சில

பேர் மடிந்தார் (வீர.கட்ட.கதைப்பா.ப.175). பதுமச் செங்கை முனிதாங்கு மாமுனி (சங்கர.கோவை 14). 2.யானைத் துதிக்கை. தூங்குகையா னோங்கு நடைய (புறநா.22). பெண்ணுரைப் பிடிக்கைக் கூந்தல் (சீவக. 2663). கைபோணன்ற கனிகுலை வாழை (தேவா.1, 42,3). திண் கை மாதுயர் தீர்த்தவன் (பெரியதி. தமிழாக்.1,8,75). யானையின் கையிற் பிழைத்த வினை (பெரியபு.21,120). மதயானை ... கையால் நெகிடிக்கு எனப் பெரிய கட்டை மிக ஏந்தி வருமே (தாயுமா.பா.5.7). ஒரு கைக் கொண்ட ... தும்பிமுகன் (கதிரை.பள்.காப்பு). உருகி ஒழுகும் நஞ்சு உமிழ்மால் ஓங்கல் நெடுங்கைத்துண்டத்தான் (தேம்பா 2.11.6). கைக் கயமு கக்கடவுள் (கூளப்ப.காதல்). மாட்டுக்குக் கொம்பும் மதகரிக்குக் கையும் ஏன் (இ.ஒ.ப.16). 3.கரம். (செ.ப.அக.) 4.செங்கல் முதலியவற்றை எண்ணும் ஓரளவு. (பே.வ.) 5.அபிநயக் கை. (சிலப்.3,18 உரை) 6.பக்கம். எஃகு துரந்து எழுதரும் கைகவர் கடுந்தார் (பதிற்றுப்.49,6). வண்டு இசை முரலும் கைவார் திரை நிரை பொன் கொழி காவேரி (சீகாழி.ஆபத்.1). கை வளர் அல்குல் நலனுறு கூனி (கூர்மபு.1,30,14). கை அடைந்த களைகள் (தேவா.1,474). கை தழைத்த அம்பலத்தில் நின்று ஆடிடும் (குளத்தூர்.பதிற்றுப்.அந்). கைவரும் படையின் சால்பில் கலக்குறீஇப் பகைத்தது என்னோ (தேம்பா.2,3,45). இருகையு மிரைத்து மொய்த்தார் (கம்பரா.கைகேசி.83). கோளரி ஏந்தினான் தானிள்ற கை மேலே தாக்கினான் (பாரத.வெண்.535,2). மான் நில விடக்கை யான் வாழ்நிலை (திருக்கழுக்.சி.வெண்.53). மணிக்கை நெடுவரை மாமலைச் சாரல் (பெருங்.2,19,36). 7.பகுதி. வைகலந்த நெல் பகட்டினால் தெளித்து வை மறுத்துக் கை கலந்து அடுத்து ஏற்குநர்க்கு அளித்தபின் (தேம்பா.1,1,15). 8.கட்சி. எதிர்க்கையில் சேர்ந்திருப்பவர் யார் (பே.வ.) 9.கைம்மரம், வீட்டுறுப்பு ... சந்தனத்தை அறுத்துப் பண்ணிவைத்த நெடுங்கையை (சீவக.155 உரை). கால்தொடுத் திருகையேற்றி (தேவா.838,4). இல்லம் கையிற் போயவுஞ் செய்திட்ட தானை (கோடீச்.கோவை 182). 10.இரயிலின் கைகாட்டி. (நாட்.வ.) 11.சட்டையின் கை (முன்.) 12.கைப்பிடி. நெடுங்கை நவியம் பாய்தலின் (புறநா.36,7). 13.1.காம்பு. விறக்குறு மணிக்கை முகட்டுமுதல் வளைத்த பொங்குமயிர்க் கவரி (பெருங்.1,46,247-248) கை திரண்ட வேலேந்திக் காமன் போல் (சீவக. 2626). 13.2.விசிறிக் காம்பு. மணிக்கை யாலவட்டம் (பெருங்.உஞ்சைக்.34,217). தொழுதகச்செய்த வண்கை, மயிச் சிரற்சிறகு ... ஆலவட்டம் (சீவக.2478). 14.சிறகு. கோழி கைத்தலத்தைக் காட்டி (அரிச்.பு.விவா.195). 15.படை வகுப்பு. (ஆ.சி.நி.83) கைம்மான் கடற் படையுட் காவலனை யான் டொழிய (சீவக.1801). 16.சேனை. கைவகுத்து (தணிகைப்பு.கீபரி.467). 17.இடம். கைஉற வீழ்ந்த மையில் வானம் (ஐங்.235). கறைகெழு பாசத்துக் கையகப் படரும் (சிலப்.15,69). கணநிரை கைக்கொண்டு கையகலார் (புற.வெண்.9) மோகவல்லிக் கைக்கே மருவிப் பழகப் பழக (மூவரை. தூது 57). அஞ்ஞான நிலையைக் கெடுத்துப்பார்க்கில் (ஞானாமிர்.17-16 உரை). உபேந்திரனும் அருச்சித்து அகம் கை முடிப்பான் அருளால் வைகுந்த மடைந்தான் (ஞான.உபதேசகா.1848). 18.கைப்பொருள். அவரன்பும் கையற்ற கண்ணே யறும் (நாலடி.371). கை ஆர உண்டமையால் ... கூறுபவேன் (பழமொழி.44). 19.செய்யத்தக்கது. கையறியாமை யுடைத்தே (குறள். 925). 20.1.ஒப்பனை. மதுக்கை மாலையும் வண்டிமிர் சாந்தமும் (சீவக.1712). கையமைந் தியற்றிய செய்சுனை தோறும் (பெருங்.2,15,18). பொன் குருவை மேவும் பொலிந்து நின்றார் (குருகை.1). 20.2.அழகு. கை செய் பாவைத் துறைக்கண் (அகநா.181,19). 20.3.கட்டழகு. (ஆ.சி.நி.192) 21.ஆற்றல். ஆரிடம் உன்கையைக் காட்டுகிறாய் (நாட்.வ.). 22.கையளவு. (முன்.) 23.அளவு. கைமிக்கு அகன் சுடர் கல் சேர்பு மறைய (அகநா.47,8). இருவர் சினத்தீயாலும் இரண்டு படையும் கை குறைந்திட்டன (பெருந்.பாரதம்.700). 24.ஆள். எத்தனை கைவேலை செய்தன? (முன்.) 25.சிறுமை.கை கொள் கற்பு உற்றென (பரிபா.11,42). கைஞ்ஞானங் கொண்டொழுகுங் கார றிவாளர் (நாலடி. 311). அண்டையில் உளதோர் கைவழி (மனோன் மணீ.4,5,49). கைமரக்காலால் பாய்ச்சியே செந்நெல் முத்தளக்கின்ற (கதிரை.பள்.19). கைந்நாறு ... நடுதல் செய்வர் (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.77). கார் நிகருங் கைக் கொடையே (தித்தோ.அம்.2.க.18). 26.குற்றம். (வட.நி.581) 27.ஒழுக்கம். கைவளர் கரும் புடை கடவுள் (சீவக.1263). கட்கதல் செய் கையினால் சூதுவிட்டும் என் கண்டனிரே (நாணிக்ஒருதுறைக்கோ.284). திரிகைக்கு வினையோ னிடத்தில் (மறைசை.அந்.80). நயமுணராக்-கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்துரைப் பிம், வையார் வடித்த நூலார் (நாலடி.163). எவ்வுகங் களும் உள்ளது என்று யாவரும் ஏத்தும் கை விளங்கிய நிலைமது காஞ்சிமா நகரம் (பெரியபு.19,48). மெய்யைப் பொய் யென்று மயங்கயி கையொன்றறி கல்லாய் (கலித்.95,25). கை தவத்தர் மொழியே (தேவா.1,2,10). கை முறையின் ஒன்றுணராக் காயனெனுங் கோற் கொடியான் (தித்தோ.அம்.4 க.8). கை என்பது ஒழுக்கம் (நம்பியகப்.12 உரை). கைம்மாறு இவ் இழிவினை என் கருத்துற நான் தருமது கொல் (மண்ணியல்.ப.182). கை அலா அது கருதல் நீதியோ (பஞ்ச.தந்.1,145).

கையமை விளக்கம் (முல்லைப்.49). 28.1.உலக வொழுக்கம். கையொன்றறிகல்லாய் (கலித்.95). 28.2.நல்லொழுக்கம். கைந்நூல் திறத்து அறவோர் இயற்றி (தேம்பா.1,3,58). 28.3.கற்பொழுக்கம். கைவளர் கோதை கரந்தெழுந் திட்டாள் (சீவக.1767). 29.முறை. கை வாரம் செய்யும் (சிலேடைஇலக்.ப.30). 30.நீதி. களியானை மன்னர்க் கோ கைகடத்தல் ஏதம் (பழமொழி.287). 31.முறைமை. கை திருந்து தாழ்விடத்து நேர்கருதும் தட்டையும் (திரிகடு.15). 32.ஒழுங்கு. கையமை விளக்கம் (முல்லைப்.49). 33.வரிசை. அம்பு கை ஒலியென ஆர்ப்ப வண்டு (தேம்பா.1,12,37). 34.தங்கை. (பிங்.3429) 35.செயல், செய்கை. காலையும் பகலும் கையறு மாலையும் (குறுந்.32). கடவ தன்மையின் கையறவுடைத்தென (புறநா.38,15). கையற்றுப் பெயர்ந்தனள் (மணிமே.2,74). காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும் (இறை.அகப்.30,2). காலம் அறியா தோன் கையுறல் பொய் (முதுமொழிக். 7.4). நல்கூர் கட்டழல் நலிந்து கை யறுப்ப மானம் வீடல் அஞ்சி (பெருங்.4,2,21-22). கணியா அருள் மாகை கருத்து இதுவோ (தேம்பா.1, 11,66). செங்கரும்புக்குக் கை தரும் போல் (முக்.பள்.26,7). 36.தொழில். கவுரி கைவுறணீலன் வலி போ யுடைந்தவன் (அரும்பாத்தை. பிள்.8,3). 37.கைத்தலம். (பிங்.3429) 38.சார்பு. (வடநி.581) 39.வரிசை.ஒரு கையில் பாட விண்ணிள் (கங்கா.திரு.19). 40.தூரை. வைத்த நதி கை பரப்பி மார் பத்தைத் தை வரல் போல் (மதுரைச். உலா 55). 41.உதவி. மேவியெனைக் காத்தனவுன் கையறி வேன் (கித்தேரி.அம்.6 க.25). அன்பால் ஒம்பும் தாய் செய்கைம் முறையாம் என (தேம்பா.1,8,59). 42.முயற்சி. கை இகந்து தானே அலர் ஆகின்று (அகநா.116).

கை[3] சிங்காரத்தின் பெயர்களுள் ஒன்று. (பிங்.1955)

கை[4] கிரணம். செங்கைநீட்டித் தினகரன் றோன்றலும் (திருவிளை.விடை.20).

கை[5]-த்தல் 11வி. 1.கசத்தல். அக்காரம்- யாவரே தின்னினுங் கையாதாம் கைகுமாம்-தேவரே தின்னினும் வேம்பு (நாலடி.112). பெட்பமுற்று அமுதுங் கைப் பப் பெருங்குலக் கற்பினார் போல் (திருவிளை.பு.நகரச். 53). நிம்பம் கைப்பது போமோ (கந்தபு.6,2,19). தேனும் புளித்தறக் கைத்ததுவே (கந்தரலங்.6). குமுத மென் மலரின் தீந்தேன் கைக்குமோ குடித்தா லென்றான் (மருத.பு.43,51). முன்னர் யாம் உற்ற நோயைப் பிதிர் செயும் மருந்தாம் கைக்கும் பிணி உணத் தலையாய் வந்தான் (தேம்பா.1,9,122). வேம்பினை ஒப்பக் கைப்பினும் விள்ளார் (சிவஞா.காஞ்சிப்பு.பறசி.21). கைக்கும் எட்டியுறழ் சொற்றுடுக்கர் அதிகப் பொருட் பெற பழனித்திரு.10,1/2). உண்டியும் கைக்கும் உறக்கமும் கைக்கும் மற்றொன்றும் செயோன் (முசு.நா.நூல் 39) கைத்து என் கண்ணும் காதும் (மனோன்மணீ.ப.50) 2.உவர்த்தல். கைத்த கடலிற் பிறந்து விலை கருதா (கோமதி.பிள்.45). 3.நைந்து வருந்துதல். கைத்தன ளுள்ளம் (கம்பரா.மாயாசன.30).

கை[6]-த்தல் 11வி. 1.கோபித்தல். குஞ்சர நிரையால் ... மருவலரைக் கைக்கும் கனம் (தஞ்.வா.423). புலைச் சமயங்கள் ... கைத்த ... இராமாநுசன் (இராமானுச.நூற்றந். 25). மருவலரைக் கைக்கும் (தஞ்.கோவை 423). 2.அலைத்தல். கைத்தணன் தீய சமயக் கலகரை (இராமானுச.நூற்றந் 72). 3.வெறுத்தல். நிலத்தில மூரல் நிசாசரரைக் கைக்கும் திகிரியர் ஆதிவராகர் (ஆதி.வ.கோவை 48). அலகையைக் கொல் ஏலட் கையாத அருண் மால் ரகுநாதன். (நாணிக். ஒருதுறைக் கோவை 143). செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண் புடை வேந்தன் (குறள்.389) செங்கதத்தோடு ஏயாமே மாலோகத்துயர் களையவனது இடம் கைக்க (தேவா.1, 126,5). கைக்கும் பிணி யொடு (கபி.மூத் 2). கடு கைத்து ஆரான் (திருக்காளத்.உலா 109). அமரருக்கா உண்ட கடுக்கையார் ஊர் (திருப்புலி.வெண்.99). வேதா கமஞ்சள கத்தார் கைத்தோனிட்ட (திருவேரக யமக அந்.74). மாதவ முயலவுங் கைப் பேனான் மேனிலை யுறுவ தெவ் வாறு (திருவிடை.கலம்.23). கையாக் குடிமை யளி தூய்மை (திருக்கதிர.பிள்.20). இலம் கைக்கும் மம்ம குறவறத்தீர் (திருக்குற்றா.யமக.அந்.36). கைச்ச ரசமாகுது என்பார் கை நெரிப்பார் (மதன.மாலை 87). 4.ஒறுத்தல். ஆர்த்தி கைத் தாளும் அமரர் பிரான் (தென்பு.மணி.உலா.75). 5.ஒழித்தல். இரைக்குத்திலிந் துழலும் தீவிலங்கம் கையம்ன தொடராமல் (கந்.அந். 53). 6.போக்குதல். ஆர்த்தி கைக்கும் பொருட்டா அவ் வசுர ரென்று (தென்பு.மணி.உலா.36). 7.விலக்குதல். அக்கணத்து இன்னல் கைத்தல் சரதம் (திருச்செந். நிரோ.அந்.13).

கை[7]-த்தல் 11வி. 1.செலுத்துதல். சிலம்பிரங்கு மின் குரல் கைத்தெடுத்தலின் (சீவக.2683). 2.ஊட்டுதல். காழோர் கடுங்களிறு கவளங் கைப்ப (மதுரைக்.659). கருவியின் ... கவளங் கைப்ப (முல்லைப்.35,36).

கை[8]-த்தல் 11வி. மிகுத்தல். கறந்த பா லமிழ் தமுங் கைப்ப வுண்டு ... வந்தான் (தென்காசித்.பு.நாரதன். மான்மியம்.10).

கை[9]-த்தல் 11வி. 1.அலங்கரித்தல். மடமொழி யோருங் கைஇ மெல்லிதி னொதிங்கி (மதுரைக்.419) 2.கோலஞ் செய்தல். கை இ மெல்லிதின் ஒதுங்கி (மதுரைக்.419).

கை[10]-த்தல் 11வி. 1.தொழிற்பெயர் விகுதி. (செ.ப.அக.) 2.தமிழ் உபசருக்கம். (முன்.)

கைக்கட்டி பெ. 1.கைக்கவசம். (யாழ்.அக.) 2.அக்குட் புண். (வட்.வ.) 3.நெசவுக்கருவி. (இலங்.வ.)

கைக்கட்டு[1] பெ. 1.கைகளைக் கட்டிக் கொள்கை. (நாட்.வ.) 2.மகளிர் கையணி வகை. (வின்.அக.)

கைக்கட்டு[2]**-தல்** 5வி. 1.கையைமடக்கிக்கொண்டு வணக்கங்காட்டுதல். தாம் என்முன்னே கைக்கட்டிக் கொண்டு நின்றார் (திருநெடுந்.21,188 வியாக்.).

கைக்கட்டுபவளம் பெ. பவளத்தாலான ஒருவகைக் கையணி. (பரத வ.)

கைக்கடம் பெ. கையிலேந்திய குடம். கைக் கடந்தொடுஅக் காரிகை முன்செல (திருவாமாத்.பு.பூர்வ.21,40).

கைக்கடறு பெ. கையெழுத்தின் குறிப்பு. (யாழ்.அக.)

கைக்கடன் பெ. 1.கைமாற்றுக்கடன். (செ.ப.அக.) 2.கடப்பாடு. உம்முடைய கைக்கடந்தா னுயிர்காக்கக் கடவீர் (கம்பரா.6,15,353).

கைக்கடனாற்றல் பெ. 1.உதவி புரிதலாகிய வேளாண் மாந்தரியல்பு. (சூடா.நி.) 2.உறுதியின்றி நம்பிக் கைக்குக் கொடுத்தல். (யாழ்.அக.)

கைக்கடாசலம் பெ. யானை. (ஜம்.அக.)

கைக்கடிகாரம் (கைக்கடிகாரம்) பெ. கையின் மணிக் கட்டில் கட்டப்படும் கடிகாரம். கிருட்டிண சாமியைத் தாக்கி விட்டு ரொக்கம் மற்றும் கைக்கடியா ரத்தைப் பறித்துச் சென்றனராம் (செய்தி.வ.).

கைக்கடுதாசி பெ. → கைச்சீட்டு. (நாட்.வ.)

கைக்கண்டு பெ. →கையூதியம். கைக்கண்டு ஏவல் செய்பவர் (தேம்பா.2,11,25).

கைக்கணக்கு பெ. 1.பற்றுச்சீட்டு. (ஜம்.அக.) 2.ஒருமுதி. (யாழ்.அக.) 3.பொருளின் அளவு, எடை முதலியன வற்றை உரிய அளவை கொண்டு அளக்காது கை யால் எடுத்துப் பார்த்து ஊகித்து அளவு தீர்மானிப்பது. (இலங்.வ.) 4.கணக்குக் குறிப்புப் புத்தகம். (செ.ப.அக.)

கைக்கணக்குமுதல் பெ. பழைய வரிவகை. (செ.ப. அக.அனு.)

கைக்கணிசம் பெ. →கைமதியம். (யாழ்.அக.)

கைக்கத்தி பெ. சிறுகத்தி. (செ.ப.அக.)

கைக்கத்திரிகை பெ. மயிர் வெட்டுங் கருவி. கைக் கத்திரிகையிட்டு நறுக்கின தலையாட்டத்தை யுடைய பரிகள் (புற.வெண்.3,10 உரை).

கைக்கதவு பெ. சிறியகதவு. கைக்கதவும் தாழ்திறக்கக் காண்கிறேன் (நெல்.தூது 43).

கைக்கயம் பெ. துதிக்கையுடைய யானை. அடல் மலியும் கைக்கயத்து உலாவரு-குகன் (திருப்பு.பதி 2, 12). மருப்பிரு பிறை நிகர் கைக் கயமுனியை நடத்தியும் (திருவிரிஞ்சை.பிள்.81).

கைக்கரடு பெ. மணிக்கட்டு. (வின்.அக.)

கைக்கரண்டி பெ. சிறுகரண்டி. (செ.ப.அக.)

கைக்கரணம்[1] பெ. கையசைப்பு, கைச்சாடை. மறை ... நம் பூரிமார் கைக் கரணத்தால் எளிதாய்க் கற்பார்கள் (திருவளர்.விலா.195).

கைக்கரணம்[2] பெ. கொத்துக்கரண்டி வகை. (நாட்.வ.)

கைக்கரணை பெ. ஓர்சிலந்தி. (யாழ்.அக.)

கைக்கரத்தை பெ. ஆள் இழுப்பு வண்டி. (இலங்.வ.)

கைக்கரி பெ. யானை. செறிகரங் கைக்கரிகள் (திருக்கழுக். சிலே.வெண்.73).

கைக்கருவி[1] பெ. உடந்தையாயிருக்கை. உன்னதர் இலகு கைக்கருவியாய் இருந்து இயற்றி யோன் (இரட்.சரி.320).

கைக்கருவி[2] பெ. → கையுளி. (ஆட்சி.அக.ப.138)

கைக்கவசம் பெ. 1.கையுறை. (செ.ப.அக.) 2.கைச் சட்டை. (யாழ்.அக.)

கைக்கழுத்து பெ. முன்கை, மணிக்கட்டு. திருக் கைக்கழுத்தின் வளையில் (தெ.இ.க.6,81).

கைக்களிறு பெ. யானை. கைக் களிறு என்பது குஞ்சரத் தின் பெயர் (அக.நி.கைமுதல் 2).

கைக்கறிவாள் பெ. 1.ஏழிசையினொன்று. (ஜம்.அக.) 2.யாழின் நரம்பு. (ஜம்.அக.)

கைக்காகிதம் பெ. உடன்படிக்கைப் பத்திரம். கையெழுத் துப்போட்டு இவர்கள் கைக்காகிதமும் ஒருத்தருக் கொருத்தர் வாங்கிக் கொண்ட பிற்பாடு (ஆனந்த. தினசரிச்.3 ப.20).

கைக்காண்(ணு)-தல் 7வி. அனுபவத்தாலறிதல். சீராளன் திருமுன்புங் கைகண்ட விகடநடஞ் செய்து வேண்ட (சிவஞா.காஞ்சிப்பு.விடுவ.21).

கைக்காணம் பெ. →கைக்கூலி-4. (ஜம்.அக.)

கைக்காணி[1] பெ. காணிக்கை. இடபவிலச்சினையைக் கைக்காணியாக இட்டு (கலித்.82,12 உரை).

கைக்காணி[2] பெ. கையுறை. (ஜம்.அக.)

கைக்காணிக்கை[1] பெ. வெளிப்பாடு. (யாழ்.அக.)

கைக்காணிக்கை[2] பெ. 1.சிறுகாணிக்கை. (ஜம்.அக.) 2.தட்சிணை. (முன்.)

கைக்காந்தி பெ. கைக்காய்ச்சல் (முன்.)

கைக்காப்பு பெ. கையிலணியுங் காப்பு. (முன்.)

கைக்காய்ச்சல் பெ. கைச்சூடுகாட்டல். (யாழ்.அக.)

கைக்கார் பெ. யானை. (ஜம்.அக.)

கைக்காரன் பெ. 1.செல்வன், பணக்காரன். (முன்.) 2.சமர்த்தன், தீறமைசாலி. கனயூகி ராமசாமி நல்ல கைக்காரன் என்றவன் (திருவிடை.நா.ப.63,18). 3.உதவியுள்ளவன். (யாழ்.அக.)

கைக்காரியம் பெ. மேற்கொண்டிருக்கும் வேலை. (ஜம்.அக.)

கைக்கால் பெ. சிறுகால்வாய். (முன்.)

கைக்காளவாய் பெ. சுண்ணாம்பு சுடுவதற்குக் கிணறு

போலக் கட்டப்பட்ட காளவாய். (கட்ட.நாமா.9).

கைக்காறை பெ. ஒரு வகைக் கையணி, வளையல். திருக்கைக்காறையொன்று (தெ.இ.க.2,144).

கைக்கிட்டி பெ. 1.கைகளிலிட்டு இறுக்குங்கோல். (வின்.அக.) 2.இரண்டு தடிகளுக்கிடையே கையை வைத்து நசுக்கும் தண்டனை. (ஐம்.அக.)

கைக்கிரி (கைக்கரி) பெ. யானை. காரையொத்த கைக்கிரி (செ.பாகவத.116). கைக்கிரியு மாவுமாம் ... சூழ (மான்.தூது 103).

கைக்கிரியை பெ. கையினாற்செய்யும்வேலை. (யாழ். அக.)

கைக்கிழி பெ. மானியம் கொடுக்க எழுதிக்கொடுத்த கையோலை. கைக் கிழி கொடுக்கப் பட்டார் (சீவக.818).

கைக்கிள்ளை பெ. → கைக்கிளை-5. துத்தங் கைக் கிள்ளை விளரி (காரைக்.பதி.1,9).

கைக்கிளவன் பெ. → கைக்கோளன். (வட்.வ.)

கைக்கிளை பெ. 1.ஒரு தலைக் காமம், ஒருபக்க உறவு, ஆண் பெண் இருவருள் ஒருவரிடம் மட்டும் காதல் உணர்வு தோன்றுவது. கைக்கிளை முதலாப் பெருந்திணையிறுவாய் (தொல்.பொ.1). திருப்பதிகம் காதல்புரி கைக்கிளையாற் பாடியே கலந்தணைவார் (பெரியபு.29,305). இனித்தான் சுடவோ மருவாதெக் காலமு மிங்கிலைக் கைக்கிளை மாலையதே (திருக்காவ. கலம்.21). கைக்கிளை என்பது ஒருதலைக் காமத்தை நாலெட்டுச் செய்யுளில் நவிலுவர் (பிரபந்ததீ.74). ஒரு தலைக்காமப் பொருள் பெற்று விருத்தம் இருபத் தைந்தாய் வருவன கைக்கிளையாம் (வச்சண.மாலை 2,15 உரை). 2.வெண்பா கலித்துறை ஆசிரியம் ஆசிரிய விருத்தம் வண்ணம் இவற்றைத் தனித் தனியே மூப்பது மூப்பதாக ஒரு தலைக் காமமாகப் பாடுவது, மருட்பா. கைக்கிளைபரிபாட் டங்கதச் செய்யு ளோடு (தொல்.பொ.430). நண்பா லொருதலைக்காமம் ... கைக்கிளை யாமென்று பேசுவரே (நவநீதப்பா.42). 3.(இலக்.) ஐந்து விருத்தச் செய்யுளில் ஒருதலைக் காமத்தைப் பற்றிக் கூறும் பிரபந்தம். (இலக்.வி. 827) 4.(புறப்.) தலைவி ஒருத்தி தலைவனது மாலையைப் பெற விரும்பியதைத் தானே சொல்லி யதாகக் கூறும் புறத்துறை. கைக்கிளை வகையும் பெருந்திணைவகையும் (புற.வெண்.9,26). 5.ஏழிசை யுள் மூன்றாவதாகிய காந்தாரசுரம். மெய்க்கிளை நரம்பில் கைக்கிளை கொள்ள (சிலப்.3,74). கைக்கிளை துத்தங் குரலாதி (திருப்பு.460). சித்திர யாழ் வல்லோரும் கைக்கிளை பாராட்டும் (கலைசிலே.வெண்.22). அளி நறை ... கைக்கிளை ... பாட (ஆண்டாள்.பிள்.46). மற்று மெமை கைக்கிளையின் மோகிப்பித்து வலிதுடலம் ஞெமுங்க (ஞான.உபதேசகா.188). கைக்கிளை மாணு ழையொடு தாரமென்ன ... இசை ஏழ் (தென்காசித்.பு. நாரதன்.மான்மியம்.15). 6.யாழினோர்நரம்பு. (யாழ். அக.)

கைக்கிளைக்காமம் பெ. ஒரு தலைக் காமம். கன்னிமை கனியாக் கைக்கிளைக் காமம் (பரிபா.11,136). கைக்கிளைக்காமம் கனியச் செய்தே ... அவளை மாற்றி (பனிமொழி 1,3,148).

கைக்கிளைச்செய்யுள் பெ. கைக்கிளைப் பொருளைப் பற்றிய பா. கலி வெண்பாட்டே கைக்கிளைச் செய்யுள் ... என்றிவை தொகைநிலை மரபின் அடியில (தொல். பொ.462 இளம்.).

கைக்கிளைத்திணை பெ. (அகப்.) கைக்கிளையைப் பற்றிக் கூறும் திணை. (தொல்.பொ.1 உரை)

கைக்கிளைமருட்பா பெ. → கைக்கிளை-2. பண்யார் புறநிலை பாங் குடைக்கைக்கிளை ... மருட்பா வெனும் வையகமே (யாப்.காரிகை 48).

கைக்கிளைமாலை பெ. ஆடவரும் மகளிரும் வருந் தும்படி வருவதாகிய மயங்குதற்குக் காரணமான ஒருதலைக் காமமாகிய பொருள் அமைத்துப் பாடுவது. இரங்க வருவது மயங்கிய ஒருதலை இயைந்த நெறியது கைக்கிளை மாலை (பன்னிருபா.184).

கைக்கிளைவெண்பா பெ. வெண்பா கைக்கிளைப் பொருண்மேல் வருவது. (தொல்.பொ.423)

கைக்கீறல் பெ. 1.→கைக்கீறு-1. (செ.ப.அக.) 2.ஒரு வகைத் திருமணம். (ஐம்.அக.)

கைக்கீறு பெ. 1.தற்குறிக்கீற்று. (செ.ப.அக.) 2.கை ரேகை. (ஐம்.அக.)

கைக்குக்கைமாறு-தல் 5வி. இடம் விட்டு இடம் பெயர்தல். (முன்.)

கைக்குஞ்சரம் பெ. யானை. கைக்குஞ் சரமுதுகிற் கொட்டும் ரணபேரி (திருவேங்.வண்டு.தூது 153).

கைக்குட்டை பெ. 1.சிறுகுடை. ஞாயிற்றைக் கைக் குடையுங் காக்கும் (அறநெறிச்.43). கையில் கமண்டலமும் கைக்குடையும் முக்கோலும் மெய்யிற் புரிநூலும் மெய்ஞ்ஞானப் புத்தகமும் (காஞ்சி.அம்.ப.3). 2.கை, முகம் ஆகியவற்றைத் துடைப்பதற்குப் பயன்படும் சிறியதுணி. கைக்குட்டையிலே நனச்சுக் கலாம் (பட்கல். பா.ப.107). 3.கை விலங்கு. (வின்.அக.)

கைக்குண்டு பெ. 1.இராக்கெட்டுகளில் வைத்து எறியக்கூடிய சிறிய குண்டுகள்.(செய்தி.வ.) 2.கையால் வீசும் குண்டு. (இலங்.வ.) 3.தறியில் கைவைத்து இழுத்து அடிக்கும் மரம். (தென்னார்க்.வ.)

கைக்குணக்குமுதல் பெ. பழைய வரிவகை. (தெ.இ. க.33)

கைக்குத்தரிசி பெ. 1.புழுங்கலரிசி. (இலங்.வ.) 2.→கைக்குத்தலரிசி. (நாட்.வ.)

கைக்குத்தலரிசி பெ. கையினால் உலக்கைபிடித்துக் குத்தித் தீட்டிய அரிசி. (ஜம்.அக.)

கைக்குத்து பெ. 1.கைபொத்திக்குத்தகை. (யாழ்.அக.) 2.கைமுட்டியால் தாக்குகை. கைக் குத்தது படலும் (கம்பரா.6,14,176).

கைக்குதவி பெ. 1.கைக்கு உதவியாகப்பயன்படும் பொருள். (வின்.அக.) 2.சமயத்துக்குக் கிடைக்கு முதவி. (முன்.)

கைக்குதவு-தல் 5வி. சமயத்துக்கு உதவுதல். (செ.ப.அக.)

கைக்குநீர்கொள்(ளு)-தல் 2வி. சிறுநீர்விடுதல். (யாழ்.அக.)

கைக்கும்பூ பெ. வேப்பமலர். கைக்கும் பூவ லங்கலான் (திருவிளை.பு.41,65).

கைக்குவடு பெ. →கைக்குன்றம். அரிதிரி கைக்குவடு வாழ் மறைசை (மறைசை அந்.80).

கைக்குவா-தல் (கைக்குவருதல்) 13வி. கையிற் கிட்டுதல். (செ.ப.அக.)

கைக்குழந்தை பெ. நடைபயிலாத சிறு குழந்தை. மாநலிவால் கைக்குழந்தை ரெண்டு அலற (பஞ்ச. திருமுகவிலா.258). ஒரு கைக் குழந்தையும் பெறவில்லை (பிசிராந்.ப.21).

கைக்குழவி பெ. 1.→கைக்குழந்தை. மூர்த்திகைக் குழவி யேபோல் முதற்புரி யாடல் (கந்தபு.1,11,114). 2.சிறிய அம்மிக் குழவி. (செ.ப.அக.) 3.அக்குள், கமுக்கட்டு. (யாழ்.அக.)

கைக்குழி பெ. →கைக்குழவி-3. (ஜம்.அக.)

கைக்குழித்தாமரை பெ. அக்குளில் தோன்றும் ஒருவகைபுண். (முன்.)

கைக்குழைச்சு பெ. மணிக்கட்டு. (வட்.வ.)

கைக்குள் வி.அ. சடுதி, உடனே. (யாழ்.அக.)

கைக்குள்வை-த்தல் 11 வி. தன்வசப்படுத்துதல். (இலங்.வ.)

கைக்குளசு பெ. →கைக்குழைச்சு. (இங்கீ.வைத்.12)

கைக்குற்றம் பெ. 1.→கைத்தவறு. (செ.ப.அக.) 2.சிறு பிழை. (முன்.) 3.→ கைமோசம். (யாழ்.அக.)

கைக்குறி பெ. 1.கைவரை பார்க்குஞ் சாத்திரம். (முன்.) 2.வாழ்வின் போக்கினைக் குறிப்பதாகக் கருதும் கைரேகை. மலையுறைவாள் அங்கொருத்தி கைக்குறி பார்த்தோது மனநடையாள் (தஞ்.பெரு.உலா 192). 3.கையளவு. கைக்குறி யாப்பை வாங்குவது (திருவாய். 4,6 ஈடு).

கைக்குறிப்பு பெ. 1.ஞாபகக் குறிப்பு. (செ.ப.அக.) 2.→கைமதியம். (இலங்.வ.)

கைக்குன்றம் பெ. யானை. குளிர்த டம்புனல் அருவி தோய்ந் தகன்றகைக் குன்றம் (திருக்குற்றா.பு.18,25). கைக்குன்றம் காத்த நெடுமால் (ஆதி.வ.கோவை 60).

கைக்குன்று பெ. →கைக்குன்றம். (ஜம்.அக.)

கைக்கூச்சம் பெ. 1.உலோபத்தனம். (நாட்.வ.) 2.கை கூசுகை. (யாழ்.அக.)

கைக்கூட்டம் பெ. அணிவகுப்புக் கூட்டம். கைக்கூட்ட மிட்டாற்போலே என்னவுமாம் (பெரியாழ்.தி.5,2,2 வியாக்.).

கைக்கூட்டல் பெ. வைக்கோலைத் தற்காலிகமாகக் கூட்டி வைக்கை. (தொ.வ.)

கைக்கூட்டன் பெ. காவற்காரன். இராசபுத்திரனைச் சிறையிலே இட்டு வைத்தால் கைக்கூட்டனுக்கும் பாலுஞ் சோறும் இடுவாரைப்போலே (திருவாய்.7,10,8 ஈடு).

கைக்கூட்டு-தல் 5வி. இடையூறு இன்றி நிகழச் செய்தல். செய்தருமம் கைக்கூட்டும் (சிலப்.மூத்த.1).

கைக்கூப்பு பெ. அடிமுதல் கூப்பிய கைவரையுள்ள அளவு. (வின்.அக.)

கைக்கூலி பெ. 1.அற்றைக்கூலி. எனநீ கைக்கூலி தந்திடுவாய் (சரபேந்திர.குற.67). மையமாய்க் கைக் கூலி வாங்கினோர் (கறுப்பண்ண.சத.34). கைக்கூலி தான்வாங்குங் காலறுவான (தனிப்பா.திர.108,47). கைக்கூலி நூறு பொன்னும் நீட்டு வேன் உனக்கே (பாரதிதா.16,3 (5-6)கவ.3). 2.கையிலே கொடுக்கும் விலைப் பொருள். கைக்கூலி கொடுத்துக் கொள்ள வேண்டும் (திருவாய்.4,6,1 ஈடு). ரிஷிகளுக்குக் கைக் கூலிகொடுத் தெழுவித்துக்கொண்ட வித்தனை யாகாதே (திருப்பா.4 ஆறா.ப.79). கணக்கனுக்குக் கைக்கூலி கட்டியன்றோ குடியிருக்கக் கட னென் பாரே (செயங்.சத.47). 3.→கையூட்டு. எள்ளளவும் கைக் கூலி தான் வாங்கும் (தனிப்பா.திர.17 ஔவை.). முன் கொடுத்த கடன் போல் அனுதினங்கைக் கூலி வாங்கும் (திருக்குற்றா.மாலை 30). 4.மணமகனுக்குப் பெண் வீட்டார் கொடுக்கும் தொகை. (வின்.அக.)

கைக்கெளிமை பெ. இலேசு. (யாழ்.அக.)

கைக்கொட்டை பெ. கைத்திண்டு, கைக்கவசம். (வின். அக.)

கைக்கொடு-த்தல் 11வி. →கைகொடு-த்தல்-2. நவையிற் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே (இனி.நாற்.2). வாஞ்சையுடன் கைக்கொடுத்து உறுதி உபகாரம் ஒண்டொடிக்குச் சொல்லும் (சீவே.சரி.1717).

கைக்கொள்(ளு)-தல் 2வி. 1.கையில் எடுத்துக் கொள்ளுதல். கணவிரமாலை கைக்கொண்டென்ன (மணிமே.5,48). கணையும் கவணும் கைக்கொண்டு (திருமா.3,7). தீப்படு பூகப் பழக்காய் ... கைக்கொண் டணுகினர் (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.334). துரோணா சிலை ... கண்டதனஞ்சலனும் ... வில்தொழில் கைக் கொண்டான் (செயங்.சத.25). ஓர் மரத்தைப் பற்றியவர்

கைக்கொண்டு மெள்ளவே வந்து ... கரை ஏறி (சீவே.சரி. 1112). அரண்மனை யுள்ளுனைக் கைக்கொள எண்ணிப் புகுந்தவன் ஆர் (முசு.நா.நூல் 38). உனை தவக் கைக் கொண்டு உள்ளக் கூட்டில் இருத்தினர் (திருக்கண்ண. மாலை.82). 2.பேணிக்கொள்ளுதல். காலத்தி லேகுரு கூர்புக்குக் கைக்கொண்மினோ ... ஞானத்தெம் மூர்த்தியையே (சடகோபரந்.40). இந்நெறியை விரை வில் கைக்கொண்டு செய் (மகா.துறவு.29). நாங்கள் செய்குற்றேவல் ஒருவன் கைக்கொள் என்று (சேத்திரங்க. பிள்.1,5). தருமத்தைக்கைக் கொண்டு நடக்கிறார்கள் (செ.ப.அக.) 3.அங்கீ கரித்தல். சொன்ன வார்த்தை நம்பத்தகுந்தது என்று கைக்கொள்ள வேண்டும்படி (திருவாய்.4,7 ஈடு). 4.ஏற்றுக் கொள் ளுதல். இரசகைக் கொண்டருளதற் ... செய்வாய் (யசோதர.150). யாம் அரசனாலே கைக்கொள்ளப் பட்டேன் என்று நினைத்து (குறள்.698 மணக்.). பரிமாவுஞ் செல்வமும் யாவையு மீண்டுங் கைக்கொள் வீரே (பாரதம்.2,2,262) கன்னித் தேயமுங் கைக்கொண் டாள்க (திருவிளை.பு.5, 150). கலைத் தெளிவை வெண்பா வைக் கீந்தொருவன் வெண்பாவைக் கைக்கொண்பீர் (திருக்காளத்.உலா 564). மகரக்குழை யாய் எனைக் கைக்கொள் உடல் கைக்கும் சரம தசையிலே (திருவரங். அந்.15,3) அங்கம் தரவல்லான் நாளும் கைக்கொள (திருப்புலி.வெண். 32). எறித ருங்கலுங் கைக்கொளுங் காச்சியெம் பெருமான் (சிவஞா.காஞ்சிப்பு.பாயி.26). 5.திருமணம் செய்து கொள்ளுதல். கன்னியாள் மரியம் மை தான் கைக் கொள்ள இருந்த நாளில் (இயேசுகா.ப.11). 6.கவர்தல். கணநிரை கைக்கொண்டு (புற.வெண்.1,9). சிவதிரவியங் கைக் கோடல் (திருக்குடந். பு.21,16). கயலும் ... கூர்மமும் ... கைக்கொள்வார் (சிவஞா.காஞ்சிப்பு. நாட்டுப். 86). 7.அபகரித்தல். சிவதிராவியங்கைக் கோடல் (திருக் குடந்.பு.21,16). 8.பிறர் நாட்டையோ பொருளையோ கைப்பற்றுதல். நீடுவரை அடுக்கத்த நாடு கைக் கொண்டு (பதிற்றுப்.55,18). கூற்றுவர் மூவேந்தர் நிலமும் கைக்கொண்டாரே (சோமே.வெண்.62). மாவதன் கோடி வெறிந்து கைக்கொள்ளும் (பாரதம்.2,2, 120). 9.உரிமையாக்கிக் கொள்ளுதல். கன்னி மனக் கோயில் கைக்கொள்ள (நள.30). 10.1.பெறுதல், அடைதல். குலம் பெற்ற பேறுங் கைக்கொண்டாள் (மூவரை.தூது 500). தொகை பண்ணி வைத்திடுவர் கைக் கொண்டு போகவரு சொந்தமானவர் வேறுகாண் (குமரே.சத.92). நளனே ... மணமாலை கைக் கொண்டான் (நள.159). மாரிச் சிலையும்கைக் கொள்வர் (சங்கர.கோவை 79). கங்கா நதியுங் கடாரமுங் கைக் கொண்டு (கு.சோ.உலா49). 10.2.பெற்றுக் கொள்ளு தல். சிறியவர் இகழ்ந்து ஞானி செய்த பாவத்தைக் கொள்வர் (கைவல்ய.1,103). 11.மேற்கொள்ளுதல். அகிலமெலாந்தானேகைக்கொண்டிருந்தரசு புரிவதுகண்டு (ஆளவந்.காஞ்சிப்பு.427). 12.ஏற்றி நிர்வகித்தல். மதுராந்தக பிரசமாதிராசர் கைக்கொண்டு ரகிர்த்தமையில் (தெ.இ.க.308). 13.கடைபிடித்தல். பாரொருங்குங் கைக்கொளினும் பாடொருங்கு மொய்த்திடினும் ... சென்றொருங்கும்) ஓயினுநாம் (தித்தேரி.அம்.4,121). நீங்கள் உங்கள் பாரம் பரியத்தைக் கைக்கொள்ளும் படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது (விவிலி.மாற்கு.7,9). 14.வளைந்து கொள்ளுதல். கண்ணுதலோ னிருமருங்கு மொன் றாகக் கைக்கொண்டார் (கோயிற்பு.பதஞ்.18). 15.விழுங் குதல். கரும்பாம்பு வெண்மதியைக் கைக் கொண்ட காட்சி (நள.185). 16.அகப்படுத்தல். கற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு (தொல்.பொ.69,3).

கைக்கோரணி பெ. 1.→கைச்சித்திரம். (யாழ்.அக.) 2.கைச்சாடை. (வின்.அக.)

கைக்கோரணிகாட்டு-தல் 5வி. இறக்குந்தறுவாயி லிருத்தல். (நாட்.வ.)

கைக்கோல் பெ.1.ஊன்றுகோல். தன் கைக்கோல் அம்மனைக்கோ லாகிய ஞான்று (நாலடி.14). ஓரரசன் கைக் கோலால் ஐயனும் ஓரடிய வணங்கித் துணையடி தர (தமிழரசி குற.8). சூரியன் செல்லும் வழிதனைக் கைக்கோல் பிடித்தவன் காட்டுதலாம் (கும்மிப்பா. சிவயோக.21). 2.குத்துக்கோல் எனும் ஆயுத வகை. பெரும்புலியைக் கைக் கோலாற் கொன்று குத்தி (கூளப்ப.காதல் 55). 3.சாட்டைக்கழி. கழுந்தேர்க்கா லொன்று சிறு கைக்கோல் ஒன்று (முக்.பள்.110,4). 4.பற்றுக்கொடிறு. கைக்கோற் கொல்லன் (சிலப்.16, 108). 5.செங்கோல். எழுமேதினிக்குங் கைக்கோல் செலுத்துங் குலோத்துங்கன் (குலோத்.கோவை 391).

கைக்கோலிளையர் பெ. கையில் தண்டம்பிடித்துக் காவற்றொழில் புரிவோர். காவற்றொழிலொடு கைக் கோலிளையரும் (பெருங்.1,57,70).

கைக்கோள் (கைகோள்) பெ. தலைவன் தலைவியரின் களவு, கற்பொழுக்கங்கள். கைக்கோள் இரண்டிற்கும் உரிய தேவியர் (பரிபா.9,11 உரைக்குறிப்பு). திணையே கைகோள் (இறை.அகப்.24,102 உரை).

கைக்கோள்முதலி பெ. கைக்கோளச்சாதியாரின் தலைவன். கைக்கோளர்க்கும் கைக்கோள் முதலி களுக்கும் ... உள்ள மனையும் (தெ.இ.க.1,121).

கைக்கோளன் பெ. 1.நெசவுத் தொழில் புரியும் ஒரு இனத்தான், செங்குந்தமரபினர். நாட்டாரும் கைக் கோளர்ச் சிகலத்தில் பெறபட்டு போயி ஊர்க்குடி ஏருமல் யிருக்கையில் நிண்ணயம் பண்ணிந்து (தெ.இ.க.17,22). கைக்கோளன் மனைவியொருத்தி (காசிகா.கங்கை.4).

ஏரார் கயிலை இறைவர் இனிது ஈன்று அளித்த சீராரும் கைக்கோளச் சீரியரும் (திருமயிலை.உலா 200). நெய்கிறதை விட்டு நினைத்துக் கொண்டானும் கைக் கோளன் (என்.பழ.தொ.2890). தென் மாவட்டங்களில் காணப்படும் தமிழ்ப் பேசும் நெசவாளர்கள் (தென்.குல. குடி.3 ப.44). 2.தோள்வலி மிகுந்த காலட்படை யினர். (சாச.அக.) 3.கோயில் ஊழியர்களுள் ஒரு வகையினர். (முன்.)

கைகட்டிநில்-தல் (கைகட்டிநிற்றல்) 3வி. கையை மடக்கிக் கொண்டு வணங்கி நிற்றல். கடைசி இடத்தில் கைகட்டி நின்று (இயேசுகா.ப.187). வாய் பொத்திக் கைகட்டி நின்றிடும் கட்டமில்லை (அவளும் அவனும் ப.54).

கைகட்டு[1] பெ. 1.கூலியாட்களின் சேர்க்கைக் கூட்டம். (நாட்.வ.) 2.நெசவுக்கருவி. நெசவுக் கருவியாம் ... அசவிடும் படமரம் முளை பல கைகட்டாகும் (நீரரர்நி. 3,5).

கைகட்டு[2]**-தல்** 5வி. 1.கையை மடக்கிக் கொண்டு வணக்கங் காட்டுதல். வேள் மங்கைக்குக் காமகலை கைகட்டி வாய்புதைப்பக் கற்பிப்பாள் (திருமயிலை.உலா 529). கைகட்டி வாய்புதைத்து ... ரகசியங்கள் கேட்போரும் (தெய்வச்.விறலி.தூது 567). காவலர்கள் ஐவருடன் கைகட்டி சேவிப்பேன் (புலந்.மாலை ப.34). கைகட்டி வாய் புதைத்துக் கன்னியரும் ஏது உரைப்பார் (பவளக்.மாலை ப.43). எப்போதும் கை கட்டுவார் இவர் (பாரதி.தேசியம்.15,3). பொய்யப்பன் சபையிலே கைகட்டி நிற்பனேல் பொருளப்பன் துணை கிடைக்கும் (கண்ண.கவி.ப.77). 2.கால்தாண்டி விளையாட்டில் தலையைத் தாழ்த்தி கைகளைக் கட்டி நிற்கும் நிலை. (த.நா.விளை.ப.273).

கைகட்டுகால்கட்டு பெ. உரிமையில்லா நிலை. (இலங்.வ.)

கைகட-த்தல் 12வி. 1.நீங்குதல். காட்டை விட்டுப் பல் மிருகம்கைகடந்து வான் உலகம் தாட்டும் அது பார்க்க (நல்லதம்.காதல் 139). 2.தாண்டிப் போதல். கரணம் பதினான்கையுங் கை கடந்தவர் யோகமுங் கைகண்டார் (பகவற்.6,26). 3.வசப்படாமல் மீறுதல். நின்னைக் கைகடந்து நின் கண்களே எனக்குச் சொல்லல் உறுவதொருகாரியம் (குறள்.1280 மணக்.). மா மதக் கரி சில பாகையுங் கை க்டந்தன (பாரதம்.2,2,119).4. போய்விடுதல், கழுதையும் கை கடந்ததெனும் எண்ணம் தானே (தண்டலை.சத.11). 5.கைக்கு எட்டாமற் போதல். தோண் முயங்கிடாது ... கைகடக்க விட்டிருந்து (கம்பரா.1,12,54). 6.கையைவிட்டுப் போதல். (யாழ். அக.) 7.நெகிழ்தல். தன் நெஞ்சு தன்னையுங் கைகடந்து அவன் ஏவலைச் செய்து (தொல்.பொ.161 நச்.).

கைகடன் பெ. ஈடுறுதியில்லாக்கடன். (யாழ்.அக.)

கைகடிகாரம் (கைக்கடிகாரம்) பெ. மணிக்கட்டில் அணிந்து கொள்ளும் நேரம் காட்டும் கருவி. மணிப் பாத்து ... போவ கை கடிகாரம் வேணும் (திருநெல். நாட்டுப்.மணப்.2).

கைகண்ட பெ.அ. அனுபவசித்தமான. தீவினைக் கருக்கெடும்மிது கைகண்ட யோகமே (தேவா.5,81,5).

கைகண்டசாரம் பெ. நவசாரம். (யாழ்.அக.)

கைகண்டது பெ. 1.சித்தியுள்ளது. (முன்.) 2.தேறினது. (முன்.)

கைகண்டபலன் பெ. அநுபவ சித்தமான பலன். கண் கண்ட சுகம் இதே கைகண்ட பலன் (திருவருட்பா 2,3).

கைகண்டமருந்து பெ. சிறந்தவழி. (இலங்.வ.)

கைகண்டயோகம் பெ. அனுபவசித்தமான மருந்து. கைகண்டயோகந் தடவத் தீரும் (நாய்ச்சி.தி.12,5).

கைகம் பெ. கூலியாட்களின் சேர்க்கைக் கூட்டம். (செ.ப.அக.அனு.)

கைகயன் பெ. 1.கேகய நாட்டரசன். கைகயன் மகள் விழுந்தரற்ற (கம்பரா.1,13,40). 2.கேகய நாட்டினர். கைகயர் வேந்தன் (கம்பரா.1,13,64). கங்கர் சோனகர் கைகயர் சீனரென்று அறை கழல் வேந்தரும் (பெருந்.819).

கைகர[1]**-த்தல்** 12வி. ஒளித்தல். சான்றவர் கைகரப்ப (பழமொ.242).

கைகர[2]**-த்தல்** 12வி. கொடையளித்தல். கைகரக்கை யாவதுகொடை மாறுகை (திருப்பா.4 ஆறா.ப.76).

கைகல-த்தல் 12வி. 1.நெருங்கிப் போர்புரிதல். கருவிச் சேனை ... கைகலந் தமரின் மூண்ட (சிவஞா. காஞ்சிப்பு. வாணேச.45). இப்படி கைகலந்த சண்டையாக விடிந்து பத்து நாழிகை வரைக்கும் நடந்தது (ஆனந்த.தினசரிச். 3 ப.138). 2.புணர்தல். உன்னோடு தினம் கைகலந்தேன் (தெய்வச்.விறலி.தூது 302). கைகலக்கு முந்தக் குழலமிட்ட (கூளப்ப.காதல் 313). 3.கூடுதல். கொங்கையும் மார்பமும் கைகலந்தன (இரணியவதைப்.276). ஆசை யிற் கைகலந்து (திருப்பு.296). இரவு பகலாய்க் கைகலந்து ஒருகணமும் அகலாத (ஆண்டாள் பிள்.83). புன் மனத்தரும் கை கலந்தனர் (இரட்ச.சரி.325).

கைகலப்பு பெ. 1.தகராறின் போது இருதரப்பினரும் நெருங்கிப் பொருதுகை. (ஆட்சி.அக.ப.184) 2.ஒரு வரோடு ஒருவர் கைகளினால் அடித்துக் கொள்ளுகை, கைச்சண்டை. சண்டை கைகலப்பு அடிதடி ... ஆகிவிட்டது (விசித்திர.விநோ.ப.57). 3.அடிதடிச்சண்டை. காசியில் ஏற்பட்ட கைகலப்பு நிகழ்ச்சியில் ஏ.மகளீன் இறந்து விட்டதாக ... வந்த செய்தி முழுமையும் தவறானது (இந். இதழ்.ப.157). 4.ஆயுதங்கள் ஒன்றோடு ஒன்று மோதுவது போன்ற ஒலி எழுப்புகை. (ஆட்சி. அக.ப.61)

கைகவர் பெ. உலைத்துருத்தி. (வட்.வ.)

கைகவன் பெ. (இசையி.) கீரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147)

கைகவி-த்தல் 11வி. 1.புருவத்தில் கைவைத்துக் குறுக்கிப் பார்த்தல். கை கவித்துப் பார்க்க வேண்டும் படியிருக்கை (திருப்பா.3 மூவா.49 ப.65). 2.கைக் குறியால் அடக்குதல். மற்று அவனைக் கைகவித்து (பாரதவெண்.34 உரை). 3.அபயமளித்தல். அஞ்சே லென்று கைகவியாய் (பெரியாழ்.தி.5,3,7). 4.பிறரைச் சும்மா இருக்கும்படி கையைச் சற்று குவித்துக் காட்டுதல். கன்னன் சொல்லக் கேட்டுத் மற்றிவனைக் கைகவித்துத் துரியோதனனை நோக்கி (பெருந்.பாரதம் 48).

கைகழி-தல் 4வி. 1.எல்லை கடத்தல். அல்லாதது ஒன்றிலே கைகழியப் போய் (திருவாய்.4,6,8 ஈடு). 2.விலகுதல், அகலுதல். கலங்காப் பெருநரத்தில் புகப் பெறாதே கைகழியப் போனாரும் (பெரியதி.தமிழாக். 2,7,161 வியாக்.).

கைகழுவிவிடு-தல் 4வி. விட்டுவிடுதல். (ஐம்.அக.)

கைகழுவு[1]-தல் 5வி. (பயனில்லை என்று) விட்டு விடுதல். அதை கைகழுவ வேண்டியதுதான் (பழமொழி).

கைகழுவு[2]-தல் 5வி. நீரால் கையை சுத்தப்படுத் துதல். உம்முடைய சீசர்கள் ... கைகழுவாமல் போசனம் பண்ணுகிறார்களே என்றார்கள் (பு.ஏற். மத்தேயு 15,2).

கைகாட்டி பெ. 1.→ கைகாட்டிமரம். பாதையைச் சொல்லும் கைகாட்டி (கண்ண.திரை.பா.3,83). 2.மாமி யார்டத்தில் மருமகள் கைகாட்டியல்லது வாயாற் பேசுதல் கூடாதென்னும் வழக்கத்தையுடைய ஒருசார் கணக்கச்சாதியார். (தென்.குல.குடி.3 ப.44) 3.கை களால் சைகைகாட்டுபவர். (நாட்.வ.)

கைகாட்டிப்பேசு-தல் 5வி. மரியாதையின்றிப் பேசுதல். (இலங்.வ.)

கைகாட்டிமரம் பெ. அடையாளங்குறிக்கும் மரம். கைக்காட்டி மரம் போலவும் உருவேற்றல் செய்வதற்காக (பெண்கல்வி.ப.93). சைகை காட்டி கைகாட்டி மரங்கள் சாயுது பார் (திருநெல்.நாட்டுப்.களியல்.7).

கைகாட்டு[1] பெ. கைச் சைகை. கடவுணீ யுணர்த்துவதுங் கைகாட்டு (தாயுமா.பா.கல்.1).

கைகாட்டு[2]-தல் 5வி. 1.சைகை காட்டுதல், கையாற் குறிப்புக் காட்டுதல். பேதையார் கைகாட்டும் பொன்னும் (நாலடி.328). தம்மைக் கொல்லும் கூற்றத்தைக் கைகாட்டி அழைத்தாற் போலும் (குறள்.893 மணக்.). நீ தமியனேற்கு மோன குரு ஆகியும் கை காட்டினையே (தாயுமா.பா.24,32). மாதவனும் மற்றவனைத் தான் பார்த்துத் தயவுடனே கைகாட்டிச் சாற்றினர் (சீவே.சரி. 167). 2.அபநியம் பிடித்தல். (செ.ப.அக.) 3.சிறிது கொடுத்தல். ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கை காட்டி (திருப்பா.2). 4.நிவேதனஞ் செய்தல். (செ.ப.அக.) 5.திறமை காட்டுதல். யாரிடத்தில் கைகாட்டுகிறாய் (நாட்.வ.). 6.சீவனோபாயங் காட்டுதல். (முன்.) 7.கொடி யசைத்து அடையாளங் காட்டுதல். (முன்.) 8.இலஞ்சங் கொடுத்தல். (வட்.வ.)

கைகாண்[1](ணு)-தல் 13வி. 1.அனுபவத்தில் அறிதல். மருந்து கைகண்டேன் (பெரியபு.10,81). 2.அடைதல். கரணம் பதினான்கையுங் கை கடந்தவர் யோகமுங் கைகண்டார் (பகவற்.6,29).

கைகாண்[2](ணு)-தல் 13வி. 1.நிறைவேறுதல். (யாழ். அக.) 2.அத்தாட்சிப்படுதல். (முன்.) 3.நம்பிக்கை யாயறிதல். (முன்.)

கைகாய்த்து-தல் 5வி. எரியச் செய்தல். காடுகை காய்த்திய நீடுநாள் இருக்கை (பதிற்றுப்.82,9).

கைகாரன் பெ.→கைக்காரன். (ஐம்.அக.)

கைகாரி பெ. கெட்டிக்காரி. (முன்.)

கைகால் பெ. திறமையுடையவன். (ரா.வட்.அக.)

கைகாவல் பெ. 1.சமயத்திற்கு உதவுவது. (வட்.வ.) 2.கையுதவி. (யாழ்.அக.)

கைகாற்பிடிப்பு பெ. ஒரு வகை வாதநோய். (முன்.)

கைகீழ் பெ. →கையுறுதி. (முன்.)

கைகுலுக்கு-தல் 5வி. மகிழ்ச்சியைக் காட்டுவதற்கு ஒருவர் கையை ஒருவர் பிடித்து அசைத்தல். (நாட்.வ.)

கைகுவி[1]-த்தல் 11வி. 1. → கைகூப்பு-தல். கைகுவித்து எல்லா உயிரும் தொழும் (குறள்.259 மணக்.). போயா னளித்தலுங் கைகுவித் தேற்றபின் போற்றி (தஞ். கோவை 129). கவுசிகன் கை குவித்து வாழ்த்த (கோலாசல. பு.240). கண்ட யாவருங் கை குவித்தார் (சானந்த.பு. 4,77). நீடூழி தாம் வாழ்க என்று என்றே திக்கு அனைத்தும் கைகுவிக்கும் (தாயுமா.பா.28,19). மாலைக் கமலமெனா வந்தடியிற் கைகுவிய (தித்தேரி. அம்.3,6). நந்தி யெம் பெருமான் விரைந் தெழுந்து கை குவித்துமெய் வளைத்ததி வினயம் புரிந்து (ஆளவந். காஞ்சிப்பு.860). மொழி வேரனு முடிக்கிள்ளியு முன்னங்கை குவித்தார் (திருச்செங்.பு.3,22,14). நன்னகர் உள்ளவர் அம் கை குவித்து எய்த (சீவல.கதை 878). கண்ணீர் கலங்கக் கைகுவித் திறைஞ்சி (அவளும் அவனும் ப.229). 2.கொம்மை கொட்டுதல். (யாழ். அக.)

கைகுவி[2]-தல் 4வி. கைகூம்புதல். (நாட்.வ.)

கைகுளிர்-தல் 4வி. திருத்தியாதல். (யாழ்.அக.)

கைகுளிர வி.அ. தாராளமாய். கைகுளிரக் கொடுத்தான் (நாட்.வ.).

கைகுறண்டு-தல் 5வி. 1.வலிப்பால் கை மடங்குதல். (யாழ்.அக.) 2.உலோபஞ்செய்தல். (முன்.)

கைகூசு-தல் 5வி. 1.உலோகபத்தனங் கொள்ளுதல். (நாட்.வ.) 2.பயத்தால் அல்லது வெட்கத்தால் பின்னடைதல். (வின்.அக.)

கைகூட்டு-தல் 5வி. → கைகூப்பு-தல்-1. வணங்கித் தன் கைகூட்டினளாகி (பெருங்.4,13,34-35). ஆண்ட வரைக் கண்டுணர்ந்து கைகூப்பிக் ... கொட்டியசப் பாணியிதே (சித்தேரி.அம்.3 க.17).

கைகூடு[1]தல் 5வி. 1.கிட்டுதல். மண்முழுதன்றி வானும் வந்து கை கூடத்தந்தாய் (சீவக.1684). இவ் வொழுக்கம் கை கூடாதென்று கருது வானாயின் வரையும் (இறை. அகப்.47,2 உரை). கடுங்களிறு கண்கனலக் கைகூடி (புற.வெண்.7,12). கூற்றத்தைத் தப்புதலும் கைகூடும் (குறள். 267 மணக்.) மறுபடியு மந்தச் செல்வமெல்லாங் கை கூடி வாழ்வார்கள் என்றார் நாராயண மூர்த்தி (கோலாசல.பு.625). எனக்கு உன் அடியார் பால் செய்யும் பணியும் கைகூடும் (தாயுமா.பா.23,6). வருமென நினைத்து பொருள் கைகடி வரும் அதிக வல்லமைகள் மிகவும் உண்டாம் (குமரே.சத.67). 2.சித்தியாதல். விரைந்து கை கூடுமோ (திருக்குடந். பு.7,2,2). துன்னும் கருமம் கைகூடாதென்றுலுலமிட்டவர் சொன்னது மெய்யோ (சாத்.கும்மி 37). காரியங் கை கூடிற்று (நாட்.வ.). 3.கைவரப்பெறுதல். ஞாலம் கருதினும் கைகூடும் (குறள்.484). 4.இயலுதல். ஞாலம் கருதினும் கைகூடும் (குறள்.484).

கைகூடு[2]-தல் 5வி. சேர்தல். கணவனைக் கைகூடேன் (சிலப்.19,70).

கைகூப்பி பெ. சிப்பி (சித்.பரி.அக.ப.166)

கைகூப்பு[1] பெ. 1.ஐந்துமுழங்கொண்டவளவை. (யாழ். அக.) 2.கைகுவிப்பு. என் கைகூப்புச் செய்கையே (திருவாய்.4,3,2).

கைகூப்பு[2]-தல் 5வி. 1.கையைக் குவித்துக் கும்பிடுதல். பாசங் கைகூம்பத் தொழுது இரும் (திருமந்.1501). கையைக்குவித்துக் கும்பிடுதல் (சூடா.நி.). புகழ்ந்து கை கூப்பி யிருந்தனர் (ஞான.உபதேசகா.613). வியந்து போற்றினான் மன்றவந் தாமரை மலர்க்கை கூப்பியே (செ.பாகவத.313). இருடியர்களெல்லாம் சிரசின் மீது கை கூப்பித் தோத்தரிக்க (கோலாசல.பு.240 உரை). இரண்டு கண் அருவி வெள்ளமொடு கை கூப்பி (தாயுமா.பா.28,44). முளரியில் கைகூப்பி (குருகூர். பிள்.3). கமலம் தந்தை கைகூப்பி வந்து (அவளும் அவனும் ப.25). அயன் குட்டுண்ட தலைமிசைக் கை கூப்பி நயக்கவே (தமிழரசி குற.27,3). கைகூப்பி நின்று துதிக்க திருந்தார் கண் தரியார் காப்பு (திருப்புலி.வெண். 29). 2.கை கட்டுதல். ஏவலாளர் கை கூப்பியே ... உபசார நின்று விளம்புவார் (சானந்த.பு.2,19). 3.கொம்பை கொட்டுதல். (யாழ்.அக.)

கைகூம்பு-தல் 5வி. → கைகுவி-தல். (முன்.)

கைகெட்டுப்போ-தல் 5வி. ஏழையாதல். (ஐம்.அக.)

கைகெடு-தல் 6வி. வறுமையடைதல். (முன்.)

கைகேகி[1] பெ. 1.தசரதன் மனைவியருள் ஒருத்தி. உன்னப் பயந்த கைகேசி தன்சொற்கேட்டு (பெருமாள். தி.9,1). முடியுஞ் சூடாமலே கைகேசி தள்ளவே (முக்.பள். 167,5-6). 2.(இசையி.) கீரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.147)

கைகேகி[2] பெ. கையாந்தகரை. (சித்.பரி.அக.ப.84)

கைகேயன் பெ. ஓரரசன். (யாழ்.அக.)

கைகேயி பெ. → கைகேகி[1]-1. (முன்.)

கைகை[1] பெ. → கைகேகி[1]-1. தரயிமுழுதுங்கைகை (இரங்கேச.வெண்.66).

கைகை[2] பெ. வெறுப்பு. கைகை மிக்குக் கழிந்ததற் கேங்குதல் (இராவணகாவி.3,10,22).

கைகொட்டு-தல் 5வி.கைகளைத் தட்டுதல். கைகொட்டி யெல்லவரு மம்பலத்தி லேற்றோமோ (திருக்காளத். உலா 327). கைகட்டி வாய்பொத்தி நிற்பாரைக் கண்டே கைகொட்டிச் சிரிக்கின்றீர் (திருவருட்பா 5 உறுதி.9). கோவுஞ் சுடர்க்கை கொட்டி மகிழ்ந்தார் (பாரிகாதை 59). ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம் (பாரதி. பல்வகைப்.5,2).

கைகொடு-த்தல் 11வி. 1.ஒப்படைத்தல். காதல் மகளையும் என் கை கொடுத்து (தெய்வச்.விறலி.தூது 287). 2.உதவிசெய்தல். காத்தவை ... கைகொடுத்து வேத்தவையின் மிக்கும் செயும் (நீதிநெறிவி.47). விடையார்க்குக் கைகொடுக்கும் பணி பூண்டான் (திருக்குற்றா.பு.18,40). வாரும் என்று கைகொடுத்தாள் (தெய்வச்.விறலி.தூது 222). இணங்கும் உன்னை ரட்சிப்பேன் என்று கைகொடுத்தேனே (இராமநா.4,2 திதை 13). காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்து (பாரதி.பல்வகைப். 6,8). 3.(அரசர் முதலியவர்கள் நடக்கும் பொழுது மரியாதையாக) கை தாங்குதல். கைகொடுத்து, மண்மேல் திருமேனிவைத்து (நள.265). தேடித் தன் மக்களுக்குக் கைகொடுத்தார் (இயேசுகா.ப.17). 4.கையடித்து உறுதிகூறுதல். (நாட்.வ.) 5.எதிர் கொண்டு பொய்க்கைபிடித்தழைத்தல். (யாழ்.அக.) 6.கைகூடுதல். (முன்.) 7.கைகுலுக்குதல். (முன்.)

கைகோ-த்தல் 11வி. 1.தோளோடுதோள் பின்னுதல். (முன்.) 2.கைபிணைதல். கலியாணப் பந்தலுக்குள் கை கோர்த்து நின்றதுண்டு (பவளக்.மாலை ப.14). கணவனும் தானும் கை கோத்தவராய் ... நடந்தே வந்து (அவளும் அவனும் ப.123). 3.சண்டைபிடித்தல். (நாட்.வ.) 4.கையோடுகைபிடித்தல். (முன்.) 5.கூடிக் கொள்ளுதல். (முன்.) 6.நட்புச் செய்தல். வஞ்சகக்

காரர்கள் கைகோவாமல் நற்குணத்தார் கைகோத்து நான்றிரவது (தாயுமா.பா.45,11,6).

கைகோத்தாடு-தல் 5வி. குரவையாடுதல். (முன்.)

கைகோலு-தல் 5வி. 1.ஆரம்பஞ்செய்தல். (வட்.வ.) 2.சங்கற்பித்தல். கைகோலி ஞாலமளந்து (இயற். இரண்டாந்திருவந்.47). 3.கையைக்குவித்துக் கும்பிடு தல். தொழுதெழுமின் கைகோலி (இயற்.இரண்டாந் திருவந்.47 வியாக்.). 4.முயலுதல். (செ.ப.அக.)

கைகோவை பெ. பொற்கொல்லர் தொழிலி னொன்று. (யாழ்.அக.)

கைகோள் பெ. (அகப்.) தலைவன் தலைவியரின் களவு கற்பொழுக்கங்கள். மெய் பெறும் அவையே கைகோள் வாதிய (தொல்.பொ.489). களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனுள் களவினைச்சிறப் புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன் (இறை.அகப். 1 உரை ப.4). களவென்னுங் கைகோளிற் புணர்ச்சி ... பாங்கியற்கூட்டமென நான்கு வகையினை உடைத்தாம் (நம்பியகப்.27 உரை). களவுகற்பு என இரு கைகோள் வழங்கும் (இலக்.வி.396). அளவிலி இன்பத்தைந் திணை மருங்கிற் களவு கற்பென இரு கைகோள் வழங்கும் (முத்துவீ.829).

கைகோளன் பெ. நெய்வாரிலோர்சாதியான். (யாழ். அக.)

கைங்கர்யம் (கைங்கரியம்) பெ. 1.பணிவிடை. சிரீவை குந்தத்தில் கைங்கர்யம் செய்ய இடமுண்டு (அக்நி. வைண.ப.34). அடியனான நான் ... எல்லா விதமான கைங்கர்யங்களையும் செய்யப் போகிறேன் (சிரீவசன. ப.194). சித்திரங்களைக் கொண்ட ஒரு சித்திரக் கூடம் கலையுணர்வு இல்லாதவர்களின் கைங்கர் யத்தினாலும் ... சீரழிந்து கொண்டு இருக்கிறது (செய்தி.வ.). 2.பணி. (அரையர்.பின்னிணைப்பு-4)

கைங்கரியர் பெ. 1.உபயகாரர். (சாச.அக.) 2.கோயில் பணி விடை செய்வோர். (முன்.) 3.பணிசெய்பவர். (அரையர்.பின்னிணைப்பு-4)

கைங்கரியம் (கைங்கர்யம்) பெ. பணிவிடை, தொண்டு. கோவிலுக்குள்ளே யிருக்கிற திருக்குள கைங்கரியம் ... நாராயணரெட்டி பிச்சக் கவுண்டன் இவர்கள்கிட்ட உடன்படிக்கைபண்ணி (ஆனந்த.தினசரிச்.6 ப.245).

கைச்சக்கரம் பெ. சக்கரப்படை. கைச்சக்கரக்கெளரி (திருமுரு.பிள்.பா.8).

கைச்சங்கம்[1] பெ. நாகரவண்டு. (ஜம்.அக.)

கைச்சங்கம்[2] பெ. கைவளை. கைச்சங்கம் போயிற்று (கோடீச்.கோவை 285).

கைச்சங்கிலி பெ. →கைவிலங்கு. (வின்.அக.)

கைச்சட்டம்[1] பெ. 1.கூரையின் குறுக்குச் சட்டம். (யாழ். அக.) 2.கணக்கு குறித்த ஓலைத் துண்டு. கைச்சட்டம் கூட வரக் காண்கிலமே (பட்டினத்தார்.பா.அந்.7). 3.கைப் பிரம்பு. (நாட்.வ.)

கைச்சட்டம்[2] பெ. கம்பலை. (யாழ்.அக.)

கைச்சட்டை பெ. 1.அரைச்சட்டை. (செ.ப.அக.) 2.கையி லிடுங்கவசம். (யாழ்.அக.)

கைச்சதுரம் பெ. சுழுமுனை. கைச்சது ரத்துக் கடந்துள் ஒளிபெற (திருமந்.1145).

கைச்சம்பிரதாயம் பெ. → கைச்சித்திரம். (யாழ்.அக.)

கைச்சரக்கு பெ. 1.பொய். (வட்.சொ.வி.ப.109) 2.கற் பித்துக் கூறும் வார்த்தை. (செ.ப.அக.)

கைச்சரசம் பெ. 1.சரசவிளையாட்டு. கைச்சரசத் தோடே குடிவத்தால் கெஞ்சி (தெய்வச்.விறலி.தூது 342). 2.→கைச்சேட்டை. (செ.ப.அக.)

கைச்சரசலீலை பெ. கையால் தொட்டு விளையாடும் விளையாட்டு. கைச்சரச லீலையிலே காமசலம் போகு தையோ (மதன.மாலை 87).

கைச்சரடு பெ. வீரர்கள் கைக்கு அணியும் தோலால் ஆகிய கவசம். (பரிபா.19,9 குறிப்பு.)

கைச்சரம் பெ. 1.→கைச்சேட்டை. (யாழ்.அக.) 2.இலீலை விளையாட்டு. (முன்.)

கைச்சரி பெ. 1.பிரியகத்தைப் பிணைத்து நிற்கும் மணிச்சரம் அல்லது சங்கிலி. (சிற்.செந்.ப.100) 2.மகளிரது கையணிவகை. கைச்சரி சொலிவர மயல்கூறி (திருப்பு.260,1).

கைச்சல் பெ. →கைப்பு. (யாழ்.அக.)

கைச்சற்றிராய் பெ. திராய்வகை. (வின். அக.)

கைச்சற்றோடை பெ. →கைச்சனாரத்தை. (வின்.அக.)

கைச்சனம் பெ. →கைச்சனாரத்தை. (சித்.அக.)

கைச்சனாரத்தை பெ. புளிநாரத்தை. (மலை அக.)

கைச்சாத்து பெ. 1.கையெழுத்து. தந்தைதன் றந்தை தான்வே றெழுதுகைச் சாத்து (பெரியபு.6,61). கணக்கும் கொள்முதல் கைச்சாத்தும் கொடுக்கிறோம் (பஞ்ச. திருமுக.விலா.413). எழுதுக இன்றே இடுக கைச் சாத்தே என்றான் மன்னன் (கா.கடமை.ப.24). 2.சாமான் பட்டி, விலை விவரங்களுடன் கூடிய சரக்குப் பட்டியல். (செ.ப.அக.) 3.பற்றுச்சீட்டு. கரம் கொடுத்துக் கைச்சாத்து வாங்கு (நாட்.வ.). நாய்வட்டம் தரவு கைச்சாத்தும் பெறவும் (தெ.இ.க.8,251). 4.நிலவிறை யிறுத்த துண்டு. (யாழ்.அக.)

கைச்சார்ப்பு பெ. சார் மானம். (முன்.)

கைச்சார்த்து பெ. 1.கையெழுத்துத்துண்டு. (முன்.) 2.நிலவிறையிறுத்த துண்டு. (முன்.)

கைச்சால் பெ. நீரிறைக்குங் கைவாளி. (வின்.அக.)

கைச்சாண் பெ. (சிற்ப.) கைத்தலத்தை விரித்து பெரு விரல் முதல் நடுவிரல் வரை உள்ள நீள அளவு. (சிற்.செந்.ப.191)

கைச்சி பெ. 1.கழுகு. (மலை அக.) 2.ஊமற்கச்சி. (யாழ். அக.) 3.சிரட்டை, கொட்டாங்கச்சி. (முன்.)

கைச்சிட்டா பெ. தினசரிக்குறிப்புப்புத்தகம். (ஜம்.அக.)

கைச்சித்தி பெ. 1.→கைவாசி. (யாழ்.அக.) 2.வைத்தியத் தொழில். (ஜம்.அக.)

கைச்சித்திரம் பெ. 1.கைலாகவம், கைத்திறமுறை. (செ.ப.அக.) 2.தொழிற்திறமை. (யாழ்.அக.)

கைச்சிமிட்டு பெ. 1.தந்திரம். (ஜம்.அக.) 2.இரகசியமாக கைகாட்டுங் குறிப்பு. (செ.ப.அக.) 3.→கைச்சித்திரம். (யாழ்.அக.)

கைச்சில்லி பெ. சில்லி விளையாட்டு வகை. (த.நா. விளை.ப.273)

கைச்சிறை பெ. கைவசமானது. கைச்சிறையான வநேகமும் விழுங்கப்பட்டு (திருப்பு.579).

கைச்சினம் பெ. பாடல் பெற்ற சைவத்திருத்தலம். பரமர்திரு நெல்லிக்காப் பணிந்து பாடி உம்பர்பிரான் கைச்சினமும் பரவி (பெரியபு.28,574). கைச்சினத்தி னுட்கரையாக் கற்கண்டே (திருவருட்பா 1962,186).

கைச்சீட்டு பெ. 1.→ கைநறுக்கு. (யாழ்.அக.) 2.பணம் அல்லது பொருளைப் பெற உதவும் உரிமைச்சீட்டு. (ஆட்சி.அக.ப.79)

கைச்சீப்பு பெ. தோட்பட்டை யெலும்பு. (வின்.அக.)

கைச்சுத்தம் பெ. 1.திருத்தமான கைத்தொழில். (நாட்.வ.) 2.திருடாமை. அவனிடத்தில் கைச்சுத்தம் வாய்ச் சுத்தம் உண்டு (வட்.வ.) 3.இலஞ்சம் வாங்காமை. (நாட்.வ.)

கைச்சுத்தி பெ. →கைச்சுத்தியல். (தொ.வ.)

கைச்சுத்தியல் பெ. தட்டார் உபயோகிக்கும் சுத்தியல் வகை. (முன்.)

கைச்சுதா பெ. கையில் பிடித்துப் பால் கறக்கும் பாத்திரம். கைச்சுதாவில் கறந்தபாலும் (சிவவாக்.479).

கைச்சுரிகை பெ. உடைவாள். காலினையும் கைச்சுரிகை யினையுமுடைய கச்சார்ந்த கட்டிலும் (சீவக.558 உரை).

கைச்சுருக்கு பெ. 1.→ கைச்சித்திரம்-2. (செ.ப.அக.) 2.கையிறுக்கம். (முன்.)

கைச்சுருள் பெ. 1. மணமக்களுக்குத் தாம்பூலத்தோடு கொடுக்கும் பணம். (செ.ப.அக.) 2.கலியாணத்தில் நாகவல்லிக்கு முன்னும் மற்றும் சில சுபகாலங் களிலும் மணமக்களுக்குக் கொடுக்கும் வெற்றிலைச் சுருள். (முன்.)

கைச்சுவடி பெ. சிறிய குறிப்புப் புத்தகம். (ஆட்சி.அக. ப.138)

கைச்சுழி பெ. விதைக்கும் போது விதைகள் ஒன்று கூடி விழுகை. (யாழ்.அக.)

கைச்சுழிப்படு-தல் 6வி. சரியாக விதையாமையால் பயிர் ஓரிடத்துக் குவிந்து வளர்தல். (முன்.)

கைச்சுழியா-தல் 5வி. →கைச்சுழிப்படு-தல். (முன்.)

கைச்சுறுக்கு பெ. கைவிரைவு. (முன்.)

கைச்சூடு[1] பெ. 1.கையைத் தேய்த்தல் முதலியவற்றால் உண்டாக்கும் சூடு. (வின்.அக.) 2.பொறுக்கக்கூடிய சூடு. (செ.ப.அக.)

கைச்சூடு[2] பெ. வயலறுப்பவர்களுக்குக் கொடுக்கும் அரிக்கட்டு. (இலங்.வ.)

கைச்செட்டு பெ. 1.சிக்கனம். (யாழ்.அக.) 2.அன்றன்று கொண்டுவிற்றல், சில்லரை வியாபாரம். (முன்.)

கைச்செட்டை பெ. 1.கைச்சீப்பு. (வின்.அக.)

கைச்செய்கை பெ. வயல் முதலியவற்றிற் செய்யுங் கைவேலை. (முன்.)

கைச்செலவு பெ. 1.சில்லரைச் செலவு. (ரா.வட்.அக.) 2.சொந்தச் செலவு. (செ.ப.அக.)

கைச்செலவுப்பணம் பெ. அவ்வப்போது நிகழ்கின்ற செலவுக்காக கொடுக்கப்படும் பணம். (ஆட்சி. அகப்.138)

கைச்செலவோலை பெ. நிலம் வாங்கும்போது முதலில் சிறுதொகை கொடுத்து விற்பனை உறுதி செய்ய எழுதப் பெறும் ஓலை. (கல்.வ.)

கைச்செறி பெ. 1.தோலினாற் செய்த கையுறை. கார்விற்செறி நாணெறி கைச்செறி கட்டி (பெரியபு. 10,60). 2.மோதிரம். கைச்செறி முஞ்சி சமித்தொடு நற்றவர் கண்டு தொழத்திரிவார் (திருவெண்.பு.5,4).

கைச்செறிகட்டி பெ. கைக்கோதை விரல் உறை. நாணெறி கைச்செறி கட்டி கட்டி (பெரியபு.10,60).

கைச்சேட்டை பெ. கையாற்செய்யுங் குறும்புச் செயல். (யாழ்.அக.)

கைச்சைகை பெ. 1.→கைச்சாடை. (யாழ்.அக.) 2.கையொப்பம். (வட்.வ.)

கைச்சொலம் பெ. → கைச்சோலம். வெண்கலக்கைச் சொலம் ஒன்று நிறை நாற்பலனைகசு (தெ.இ.க.2,85).

கைச்சோரம் பெ. கச்சோரம், கிச்சிலிக் கிழங்கு. (தைலவ.77)

கைச்சோலம் பெ. திருக்கோயில்களில் வழிபாட்டிற் குரிய ஒருவகைப் பாத்திரம். வெண்கலக் கைச்சோல மொன்று (சாச.அக.). வெள்ளிச் சட்டுவ மொன்று-கைச்சோலம் ஒன்று (கல்.கலைச்.அக.ப.154).

கைசகர் பெ. வன்னியர். (அக.நி.)

கைசத்து பெ. ஒரு மலை. (அறபு.அக.ப.100)

கைசரி பெ. சிங்கம். காளிதேவி கைசரி உடல் காணாது ஆளியன்னவன் புரிந்து (தேவி.மான்.9,18).

கைசருவு-தல் 5வி. 1.எதிர்த்தல், கைகலத்தல். (இலங்.வ.) 2.திருடுதல். (முன்.) 3.தூர்த்தத் தனமாய்ப் பெண்களிடம் சேட்டை செய்தல். (செ.ப.அக.)

கைசலி-த்தல் 11வி. 1.கையோய்தல். வேதாவும் கைசலித்துவிட்டானே (பட்டினத்தார்.பா.பொது.ப.172).

2.வறுமையுறுதல். (நாட்.வ.)

கைசளை-த்தல் 11வி. → கைசலி-த்தல். (செ.ப.அக.)

கைசா பெ. இருகழஞ்சுகொண்ட நிறை, கால்பலம். (கணக்கதி.7,8)

கைசாலை பெ. 1.மண்ணால் அமைக்கும் மதில். கைசாலை இந்த மழையில் இடிந்து கிடக்கிறது (நாஞ். வ.). 2.வேலி. (தொ.வ.)

கைசிகத்துவாதசி பெ. கார்த்திகைச் சுக்கில பட்சத்து வருவதும் நம்பாடு வானுக்குரியதுமான துவாதசி. (செ.ப.அக.)

கைசிகநிடாதம் பெ. (இசையி.) சோடச் சுரங்களுள் ஒன்று. (நாட்.வ.)

கைசிகம்[1] பெ. 1.மயிர்க்கனம். (யாழ்.அக.) 2.விகாரம். (முன்.) 3.இச்சை. (முன்.)

கைசிகம்[2] பெ. (இசையி.) 22ஆவது மேளம் கரகரப் பிரியாவில் பிறந்த ராகம். (பரத.இராக.56)

கைசிகவேகாதசி பெ. கைசிகமென்ற பண்ணைப் பாடிக்கொண்டு நம்பாடுவானென்பான் திருமாலை வழிபட்டு முத்திபெற்ற நாளாகிய கார்த்திகை மாதத்துச் சுக்கிலபட்சத்து ஏகாதசி. (செ.ப.அக.)

கைசிகன் பெ. நம்பாடுவான். (இயற்.திருமாலை.33 வியாக்.ப.102)

கைசிகா பெ. (இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.150)

கைசிகி பெ. → கைசிகி விருத்தி. (செ.ப.அக.)

கைசிகிவிருத்தி பெ. (நாட.) காமப் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வரும் நாடக நடை. (சிலப்.3,13 உரை)

கைசு பெ. கேசம். (யாழ்.அக.)

கைசியம் பெ. → கைசாரி. சர்க்கரையமுது போது கைசாக (தெ.இ.க.2,70,14).

கைசும-த்தல் 12வி. கைகளைத் தலைமீது வைத்தல். கை சுமந்து அலறும் பூசல் (பதிற்றுப்.31,3).

கைசூப்பு-தல் 5வி. கைவிரலை வாயில் வைத்து சப்புதல். (கலைச்.அக.2 ப.40)

கைசெய்[1]**-தல்** 1வி. 1.அலங்கரித்தல். மானிட மகளிர்க்கு ... கைசெய்து பிறப்பிக்கும் அழகு (திருமுரு.17 உரை). கற்பக மாலை வேய்ந்து கருங்குழற் கை செய்வானை (சீவக.1710). 2. உதவிசெய்தல். அவர்களிலே சிலர் இவனோடே கைசெய்து (திருவாய்.4,8,7 ஈடு). இரங்கிக் கைசெயுங் கனிதமிழ் மொழியே (இராவண காவி. 1,6,3). 3.நடத்துதல். பாரதங் கைசெய்த (பெரியாழ். தி.2,1,1). 4.தொழில் செய்தல். நும் மெய்வருத்திக்கை செய் துய்ம்மினோ (திருவாய்.3,9,6). 5.பதித்தல். குருவயிரம் கை செய்த ... சூட்டுச் சுடர்வித்து (ஆனந்த. வண்டு.தூது 14). 6.கட்டுதல். வனைதல்-கைசெய்தல் (சீவக.323 உரை).

கைசெய்[2]**-தல்** 1வி. 1.பக்குவம்பண்ணுதல், சமைத்தல். கருப்புச் சாற்றொடு கலந்து கை செய்து (சீவக.2402). 2.புனைதல். பொன்னம் செய் பத்தங்கப் புகை யூட்டிக் கை செய்து (நீல.270). 3.அழகுசெய்தல். கலந்த கள்ளினைக் கைசெய்து ஐபென (சீவக.3130). 4.கலந் தமைத்தல். தையலார் கை செய்தாரே (சீவக.2473). 5.பழுதுதல். காகங்கழுகு களித்துண்ண கைசெய்வான் (இராவணகாவி.5,12,39).6.வினைத் திறமையோடு செய்தல். ஒரு நாணீளலே ழெட்டுத்தேர் செய்யுந் தச்சன் ஒரு மாதமாராய்ந்து கைசெய்த வுருளின் (இராவணகாவி. 5,2,70). கந்தர் புறத்திரு கனமுலைபுணரக் கை சோர்ந்தாள் (திருச்செங்.பு.2,10,39).

கைசேர்[1]**-தல்** 4வி. வாழ்தல். காதலர் கல்வி யுடன் கட்டழகின் கைசேர்வார் (திருச்செங்.பு.3,7,27).

கைசேர்[2]**-தல்** 4வி. செயலற்றுப் போதல். கைசோர்ந்தும் உண்டே யளித் தெனுயிர் (புற.வெண்.266). வாயின் இரை சோரக் கை சோர நின்று (நள.116). அந்த அலுவலரைக் கைசோர விட வேண்டாம் (இலங்.வ.). 2.ஒழுக்கம் தளர்தல். சேர்ந்தோர் கையற வுரைத்துக் கை சோர்ந் தன்று (புற.வெண்.267 கொளு). 3.கைவோய்தல். கை சோர்ந்தே அழுகின்றேன் (இயேசுகா.ப.114). 4.ஆர்வம் குறைந்து கைவிடுதல். (இலங்.வ.)

கைசோர்ந்துபோ-தல் 4/5வி. 1.வறுமைநிலையை அடைதல். (செ.ப.அக.) 2.கைவிட்டுப்போதல். (முன்.)

கைஞ்ஞானம் பெ. புல்லறிவு, சிற்றறிவு. கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர் (நாலடி.31).

கைடவசிதன் பெ. விட்டுணு. (யாழ்.அக.)

கைடவன் பெ. திருமாலாற் கொல்லப்பெற்ற ஓர் அசுரன். மதுகை டவரும் வயிறுருகி மாண்டார் (இயற். 3,66).

கைடவை பெ. துர்க்கை. (யாழ்.அக.)

கைடிகம் பெ. மலை எலுமிச்சை. (சித்.பரி.அக.ப.84)

கைண்டவள் பெ. பரபுருடனைச் சேர்ந்தவள். (ஐம். அக.)

கைத்தகோடரம் பெ. எட்டி. (மலை அக.)

கைத்தடி[1] பெ. 1.ஊன்றுகோல். ஒரு கைத்தடி கொண்ட டிக்கவோ வலியிலேன் (திருவருட்பா தெய்வமணி. 31). கைத்தடி இழந்த கிழவன் கணக்காய் (அவளும் அவனும் ப.277).

கைத்தடி[2] பெ. 1.பாகபத்திரம். (முன்.) 2.சிறுகோல். (செ.ப.அக.) 2.தற்குறிக் கீற்று, ஒப்பம் இடுவதற்குக் கையெழுத்துப் போடாமல் இடும் குறி. (சாச.அக.)

கைத்தண்டம் பெ. 1.கைநட்டம். (செ.ப.அக.) 2.ஊன்றுகோல். (முன்.)

கைத்தந்தி பெ. யானை. நீடு கைத்தந்திகணில விடும் பந்தியும் (சரபேந்திர.குற.9,16).

கைத்தப்பு பெ. → கைக்குற்றம். (செ.ப.அக.)

கைத்தபால் பெ. கற்றாழைப்பால். (சித்.பரி.அக.ப. 84)

கைத்தரவு பெ. → கைச்சாத்து-3. கார் தோறும் குடுத்து, அவர் கையால் தரவு கொள்வோமாகவும் (கல்.கலைச். அக.ப.154).

கைத்தராசு பெ. சிறு தராசு. (தொ.வ.)

கைத்தல் பெ. 1.அறுவகைச் சுவை. (பிங்.406) 2.சினம். (வடநி.582) 3.கறிவகை. கரியல் பொடித்தூவல் கைத்தல் (சரவண.பண.தூது 274).

கைத்தலக்கனி பெ. உள்ளங்கை நெல்லிக் கனி. கைத்தலக்கனியிற் காண்போய் (உத்தரகோச.பு.பாயி. 17). விழைந்த யாவையும் கைத்தலக் கனி யெனக் கூடும் காண்மின் (கச்சி.காஞ்சிப்பு.பன்னிரு.110).

கைத்தலசேவை பெ. இறைத் திருமேனியைக் கைகளில் எடுத்துச் சேவை சாதிப்பது. (அரையர்.பின் னிணைப்பு-4)

கைத்தலத்தாளம் பெ. கையாற் போடும் தாளம். மத்தளப் பாணியு மதனக் கீதமுங் கைத்தலம் தாளமுங் கலந்திசைத்தவே (சூளா.1716).

கைத்தலம் பெ. 1.கை. (பிங்.1019) 2.கரதலம், மணிக் கட்டுக்கும் விரல்களுக்கும் இடைப்பட்ட உள்ளங்கைப் பகுதி. நான் கொய்து அணிந்த குரவினம் போதே இன்னும் கமமும் என் கைத்தலம் (இறை.அகப்.202, 28 உரை). இத்தலத்து விழாத முன்னம் இரண்டு கைத்தலம் ஏற்றவே (இரணியவதைப்.393). ஒன்றுதன் செறிகுறங்கூன்றிக் கைத்தலம் (சூளா.1517). வாணன் வண்மைக் கைத்தல மான இனிப்பொழி வாழிய கார்முகிலே (தஞ்.கோவை 425). திருவரங்கர் கைத்தலத் தாழியும் சங்கமும் ஏந்தி ... விடேன்என் றிருக்கிலும் (இராமானுச.நூற்றந்.75). கருந்தனம் கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு (நீதி நெறிவி.8). கைத்தலத்தில் தங்கு முறைவிழியோ தையன்மதர்விழியோ (மதுரைச். உலா 330). சுத்த சுர வீணை யவிர் கைத்தலம் (கொளஞ். பிள்.6). கைத்த லத்தவிர் வேலன் (பழனித்திரு.14,78). கைக்தலத் துள்ளே காலத்தை அடக்கியும் (இயேசுகாவி. ப.38).

கைத்தலைப்பூண்டு பெ. சிற்றெழுத்தாணிப்பூடு. (சித்.அக.)

கைத்தவறு பெ. →கைப்பிழை. (நாட்.வ.)

கைத்தளம்[1] பெ. கேடயவகை. (சீவக.1561 உரை)

கைத்தளம்[2] பெ. →கைத்தலம்-2. என் னங்கைத் தளம் பற்றிய சாந்தனை ன்கோ (வைராக்.சத.தோத்.49).

கைத்தளை பெ. கைவிலங்கு. கைத்தளை நீக்கி யென்முன் காட்டு (பட்டினத்தார்.பா.பொது.42). அன்பர் பதங் காவல் ஆள் கைத்தளை போல் காண் (ஒழிவி. 8,31).

கைத்தறி பெ. கையால் நெய்யப்படும் நெசவுத்தறி. கைத்தறிக்கு நூல்வரும் கழனி ஏற்ற சால்பெறும் (நாமக். பா.5,104). மேகமெனும் கைத்தறியில் நெய்தது (கண்ண.திரை.பா.2,52).

கைத்தனம் பெ. கைப்பொருள். அமரேசற்கு என்றுங் கைத்தனமான குழந்தைக் குமாரர் (கபிலை.கோவை 55).

கைத்தா பெ. காட்டாமணக்கு. (மலை அக.)

கைத்தாக்கு பெ. 1.கைவேகம். (யாழ்.அக.) 2.கைக்குக் கனம். (முன்.) 3.கைக்குத்து. (முன்.)

கைத்தாங்கல் பெ. கையால் தாங்கி நிற்கை. (நாட்.வ.)

கைத்தாமணக்கு பெ. →கைத்தா. (சித்.அக.)

கைத்தாய் பெ. வளர்க்குந்தாய், செவிலித்தாய். திருவிசும்பு என்னும் கைத்தாய் ... தீம்பாலொரு நலம் கவினி ஊட்ட (சீவக.720). காமனென்னும் அக்காளைக் கைத்தாய் பெயர் சோமசுந்தரி (உ.கு.கா.345). வைத்து மதிக்கு மருங்கிற் கைத்தாயென (பழமலையந்.51). கல்லாத மறமுதலே கண்ணோடுங் கைத்தாயே (இராவணகாவி.5,13,56).

கைத்தாயர் பெ. வளர்க்குந் தாயர். தருகின்ற போது இரு கைத்தார் தம்பால் (திருமந்.475). வளர்த்த கைத் தாயர்தம்மை (சீவக.2570). கைத்தாயர் பஞ்சிப்போதே யெழுதி (சித்.மடல்.57). மலர்வதனக் கைத்தாயர் வாழ்த்தும் (மதுரைச்.உலா 201).

கைத்தாராளம் பெ. உதாரம், விரிந்த மனப்பான்மை. (செ.ப.அக.)

கைத்தாள் பெ. திறவுகோல். கைத்தாள் கொண்டாருந் திறந்தறி வாரில்லை (திருமந்.2605).

கைத்தாளம் பெ. 1.தாளக்கருவி. கொக்கரை கைத்தாள மொந்தை (தேவா.6,4,7). மத்தாளி வீரமுட்டி மல்லாரி கைத்தாளம் (காஞ்சி.அம்ப.13). நட்டுவன்கைத் தாளம் விற்றான் (மேழிவி.261). 2.கையால் போடும் தாளம். கைத்தாளமானதை ஒருத்தி எடுத்தாள் (அயோ.கதை 63). கைத் தாளம் ... கிணியெனும் தாளமே (அபி.மாலை 1779). கைத்தாளம் வாசிக்க கண்ணே மதிர மீனாளுக்கு கனகரத்ன மேடையில் (இராமநாத.நாட்.அள.ப.225). செத்தவ ரெழுவா ரென்று கைத்தாளம் போடு (திரு வருட்பா 6 நாமா.161). கைத்தாளம் பம்பை கடல் போல் ஒலியிடவே (சிவகங்.சரித்.அம்.ப.108).

கைத்தானை பெ. அணி ஒழுங்குக்கு உட்பட்ட சேனை. தழற்புகை நவின்ற கைத் தானை வீரர்தம்

அழற்படை யொடு புகுந் தமைக் காவலே (சூளா.905).

கைத்திட்டம் பெ. 1.→கைமதியம். (யாழ்.அக.) 2.அறுதியிட்ட கையிருப்புத்தொகை. (செ.ப.அக.)

கைத்திடுதாரான் பெ. வேப்ப மாலையையுடைய பாண்டியன். கைத்திடு தாரான் வீரங் கவர்ந்திசை திசையும் வானும் வைத்திட வல்லேன் (திருவிளை.பு. 45,36).

கைத்திரி பெ. இடக்கை என்னுந் தோற்கருவி. குழை யுடற்றளைவிரி கைத்திரி கறங்க (கல்லாடம் 8,12).

கைத்திறத்தொழில்[2] பெ. 1.இயந்திரத்தின் உதவி யின்றிக் கைவன்மையினால் செய்யப்படும் தொழில். (ஆட்சி.அக.ப.138) 2.நெசவு, மண் பாண்டம் போன்ற கைத்திறமை மிக்க தொழில். (ஆட்சி.அக.ப.80)

கைத்திறம் பெ. →கைவன்மை. நமை சீறும் பகை வர்க்குச் செந்தமிழர்க் கைத்திறத்தைக் கூறும் நமது குயில் (பாரதிதா.குயில்.ப.9).

கைத்திறமை பெ. கைவண்ணம். (கலைச்.அக.2 ப.26)

கைத்தீட்டு பெ. 1.சிறு குறிப்பு. (சாச.அக.) 2.கையெழுத் திட்டளித்த பத்திரம், உடன்படிக்கை. நகரத்தோம் ஒட்டிகைத் திட்டிட்டுக் கொடுத்த பரிசாவது (மெய்க்.முதல் ராசேந்திரன் 27-1045). 3.திருமுகப்பாசுரம். அடியார்க் ~~கெளியன் சிற்றம்பலவன்~~ கொற்றங் குடியார்க் கெழுதி யகைத் தீட்டு (பெருந்.1888).

கைத்தீபம் பெ. 1.கைவிளக்கு. (செ.ப.அக.) 2.→ கைத்தீ வட்டி. (பிங்/செ.ப.அக.)

கைத்தீவட்டி பெ. சிறு தீவட்டி. (செ.ப.அக.)

கைத்தீவத்தி (கைத்தீவர்த்தி) பெ. →கைத்தீவட்டி. (யாழ்.அக.)

கைத்தீவர்த்தி (கைத்தீவத்தி) பெ. →கைத்தீவட்டி. (முன்.)

கைத்தீன் பெ. கையில் வைத்து ஊட்டுமுணவு. (வின். அக.)

கைத்து[1] பெ. 1.கைப்பொருள். தன்கைத்தொன்று உண்டாகச் செய்வான் வினை (குறள்.758). யாதுங் கரவன் மின் கைத்துண்டாம் போழ்து (நாலடி.92). உண்ணார் கைத்து உண்ணார் பெருமை (இனி.நாற்.11). கைத்து உண்பான் காங்கி எனப்படுவான் (நான்மணிக்.61). கைத்தின்றி ஆகா கருமங்கள் (பழமொ.நா.400). இம்மூவர் கைத்துண்ணார் கற்றறிந்தார் (தீரிகடு.25). மெலிவுற்றவர் கைத்து அனைத்தும் உரமுற்றவர்க்கே (காந்திகாதை 2,14). 2.செல்வம். கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின் (நாலடி.19). தம் கைத்து உடையார்க்கும் எவ்வூரும் ஊர் (நான்மணிக். 81). கடம்பட்டார் காப்பில்லார் கைத்து இல்லார் ... மண்மேல் படையராய் வாழ்வார் பயின்று (ஏலாதி 53). 3.பொன். (ஆசி.நி.169)

கைத்து[2] பெ. வெறுப்பு. (சூடா.நி.)

கைத்துடுக்கு பெ. கையால் அடித்தல் முதலியன செய்யுந் தீய சுபாவம். (செ.ப.அக.)

கைத்துடுப்பு பெ. 1.படகுவலிக்குஞ் சிறிய தண்டு. (செ.ப.அக.) 2.கூழ் முதலியன துழாவுங் கருவி. கைத்துடுப்பால் ... துழாவித் துழாவிக்கொள் ளீரே (கலிங்கத்துப்.537).

கைத்துடையான் பெ. கையில் பொருள் உடையான். என் சொலினும் கைத்துடையான் காற்கீழ் ஒதுங்குங் கடல் ஞாலம் (நீதிநெறிவி.10).

கைத்துண்டு பெ. 1.சிறுகுறிப்பு. நான் குடுத்த கடனுக்கு அவனிட்டை கைத்துண்டு வாங்கேல்லை (இலங்.வ.). 2.→கைக்குட்டை-2. (செ.ப.அக.) 3.→கைமரம். (முன்.)

கைத்துண்டுவாய்க்கால் பெ. மிகச்சிறிய வாய்க்கால். (இலங்.வ.)

கைத்துணிகரம் பெ. → கைத்துணிச்சல். (செ.ப.அக.)

கைத்துணிச்சல் பெ. துணிகரமான செயல். (வட்.வ.)

கைத்துப்பாக்கி பெ. கையில் வைத்துக் கொள்ளும் சிறியதுப்பாக்கி. இன்றைய போர்வீரர்களுக்கு அவர்கள் பயன்படுத்தும் ... கைத்துப்பாக்கி ... பயிற்சி சிறப்பாக அளிக்கப்படுகிறது (புண்டைத்.வாழ்க்.நடவடிக்.ப.131). மாமனோ சென்னையில் வாங்கி வந்த கைத்துப் பாக்கியைக் கையில் கொடுத்தான் (இருண்ட் வீடு ப.23).

கைத்துருவுமணை பெ. பிரயாணத்துருவுமணை. ~~(யாழ்.அக.)~~

கைத்துவக்கு பெ. → கைத்துப்பாக்கி. (செ.ப.அக.)

கைத்துறு-தல் 6வி. வெறுத்தல். கைத்துறு துயரெனுங் கடலில் சார்தரால் (கந்தபு.6,3,15). மருந்துகள் ... கைத்துறா வகை ... ஊட்டினாள் (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய்.247).

கைத்தூக்கு பெ. கையினால் எடுக்கக்கூடிய ஒரு தூக்களவு. (செ.ப.அக.)

கைத்தூண்[1] பெ. சிறு தூண். (முன்.)

கைத்தூண்[2] பெ. பிறர் கையால் உண்கை. கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை (சிலப்.15,57).

கைத்தெளிப்பான் பெ. பூச்சிக்கொல்லி மருந்து ஊட்டச்சத்து கரைசல் போன்றவற்றைத் தூவி விட பயன் படுத்தும் கையின் உதவியால் இயங்கும் ஒரு கருவி. (கலைச்.அக.2 ப.101)

கைத்தேங்காய் பெ. 1.போரடிக்குந் தேங்காய். (யாழ். அக.) 2.வருடப்பிறப்பன்று தேங்காயை உருட்டி ஆடும் விளையாட்டு வகை. (த.நா.விளை.ப.273)

கைத்தேர்ச்சி பெ. ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து பழக்கப்பட்டிருக்கை. வேலை பகுப்பு முறை யினால் தொழில் தினமும் கைத்தேர்ச்சியும் ஆகும் (இந்.பொருள்.12 ப.108).

கைத்தொண்டு பெ. 1.கையினாற் செய்யும் கோயிற் பணி விடை. காசு வாசியுடன் பெற்றார் கைத்தொண்டாகு மடிமையினால் (பெரியபு.21,60). 2.குற்றேவல். (யாழ்.அக.)

கைத்தொழில் பெ. 1.வீட்டிலிருந்தபடி கைகளால் செய்யப்படும் சிறுத் தொழில், குடிசைத்தொழில். நல்ல பயிர் செய்யும் கைத் தொழிலில் (மேழிவி.49). காணரிய கைத்தொழிலும் கண்டு செய்வோம் (மலரும். 713). 2.கையாற் செய்யும் வேலை. கைத்தொழி லமைத்தபி னுய்த்தவட் குணர்த்தி (பெருங்.2,10,91). எவரேனும் ஓங்கு சுரிகை கைத்தொழில் உவப்பின் (இரட்ச.சரி.204). 3.மண்பாண்டம், மரவேலை, நெய்தல் போன்ற கைத்திறனால் செய்யப்படும் வேலை. கலையிலும், கைத்தொழிலும் மிக்க ஏற்றம் பெற்றிருந்தனர் (பாடம்.10 வரலாறு ப.6). 4.கையால் செய்யும் அபிநயம். வேக மருட்டு விழித்தொழில் கைத்தொழில் வேறாகா நடனமிட்டு (தால.6).

கைத்தொழும்பு பெ. →கைத்தொண்டு. (முன்.)

கைத்தோணி பெ. தெப்பம். சுடர் மணி மாளிகைத் தோணி புரத்தவன் (தேவா.1,127,5).

கைதட்டல் பெ. பாராட்டும் வகையில் இருகைளையும் கொட்டி எழுப்பப்படும் ஒலி. தாறுமாறான கேள்விகள் கேட்டுத் திக்கு முக்காட வைத்துச் சபையோரின் கை தட்டலைப் பெறுவார் (நா.கலை ப.39).

கைதட்டிப்பண்டாரம் பெ. வாய்திறவாது கைதட்டிப் பிச்சைவாங்கும் சைவப்பண்டாரம். (வட்.வ.)

கைதட்டிப்போடு-தல் 6வி. நீக்கிவிடுதல். (வின்.அக.)

கைதட்டிவை-த்தல் 11வி. இருதுமதியாகாத பெண்ணை ஆனவளாகக்கொண்டு உரிய சடங்குசெய்தல். (அந்.வ.)

கைதட்டு-தல் 5வி. 1.வியப்பு வெறுப்பு நகைப்பு முதலியவற்றின் குறியாகக் கைகொட்டுதல். கைதட்டி வெண்ணகை செய்வர்கண்டாய் (திருவருட்பா 2 புற மொழிக்.10). கைதட்ட ஆளிருந்தால் காக்கை கூட அழகனடி (கண்ண.திரை.பா.2,435). 2.பூட்பு எய்துதல். (நாட்.வ.) 3.புலையர் மாதவிடாய் கொண்டு வீட்டுக்கு விலக்காயுள்ள பெண் முதலியோர் ஒதுங்குவதற்குக் கையைத்தட்டுதல். (செ.ப.அக.) 4.→கையடி-த்தல். (வட்.வ.) 5.→கைதப்பு-தல். (வின்.அக.) 6.→கைவிடு -தல். (யாழ்.அக.)

கைதப்பு-தல் வி. 1.கையினின்று தவறிப்போதல். கான வர் வலையிற் பட்டுக் கைதப்பியோடும் (கைவல்ய.1,13). 2.நீங்குதல். (யாழ்.அக.) 3.இலக்குத்தவறுதல். (நாட்.வ.)

கைதம் பெ. தாழம்பூ. (சித்.பரி.அக.ப.84)

கைதல்[1] பெ. தாழை. கைதல் சூழ் கழிக்கானல் (தேவா. 3,66,2).

கைதல்[2] பெ. கோபம். (ஆசி.நி.196)

கைதலைப்பெய்-தல் 1வி. கையைத் தலைமீது வைத்தல். கைதலைப் பெய்து அளும் பூசல் இட்டு ... உய்தலைச் செய்ததும் பொய் என்னுமோ (சடகோபரந். 38).

கைதலைவை-த்தல் 11வி. பெருந்துக்கமடைதல். கறைகெழு குடிகள் கைதலை வைப்ப (சிலப்.4,9).

கைதவம் பெ. 1.மாயை. வைதேகியை நின்கருத்து உருக்கும் காதலை வானரர்த்த தேட விட்டாய் இது கைதவம் ஏ (திருவரங்.அந்.81,4). 2.அஞ்ஞானம். செய்தவ மறந்தாள் கைதவ மாளும் (கொன்றைவே. 32). 3.கபடம். செம்மைசூடு செந்தீக் கைதவ நுனித்த கவருடல் (சீவக.2873). பஞ்சவரிற் கைதவங்கள் செய்வாரைக் கண்டறியோம் (பாரத வெண்.415). யாம் மிகு கைதவம் மாய வினோதரை இப்படிக் கண்டிலமே (இரணியவதைப்.197). கற்றனை யினிப்பெரிது கைதவமு மென்ன (சூளா.1613). கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலும் (நம்.திருத்தாலா.3). எய்திய தெய்வச் சார்வால் இருதிறத் தீரும் தீரும் கைதவம் பேசமாட்டேன் என்று (பெரியபு.28,749). கை தவம் பெறாக் கருத்தி னீரென (கந்தபு.6,2,32). கைதவந் துன்னு வேடன் துருவாச கைவனே (ஞான.உபதேசகா. 176). கைதவம் அலாமல் இது செய் தவமது அல்லவே (தாயுமா.பா.7,5). கன்மநசை தீராத கைதவர்க்கும் (பழனித்திரு.1,77). 4.வஞ்சம். கடித்தா மரைகண்டு கைதவ மாயினள் (கப்.கோவை 208). 5.துன்பம். கைதவமே செய்யு மதுவின்களி (பிரமோத்.சிவராத்திரி. 17). கைதவ மென்பார்சிலவர் காரணமென்பார் சிலவர் (நம்.திருத்தாலா.175). செய்தவம் மறந்தால் கைதவமாம் (செயங்.வ.97). 6.பொய். கைதவம் புகலேன் (கந்தபு. 4,2,4). கைதவங்களைச் சாத்திரம் சொல்லுமோ (கைவல்ய.2,49). 7.சிறுமை. வெகுளி தாம்சேர் கைதவ மார்க்கம் எல்லாம் கருதி (தந்திவனப்பு.479). 8.மறைப்புச் சந்தி. ஐயர் கைதவ மறிவுறா தவர்கடி தணுகி (பெரியபு. 17,20). 9.ஓரிடத்திலிருக்கும் பொருள் மற்றொரு பொருளிடத்துச் சேர்ந்து அப்பொருளின் பெயரை ஏற்று வருவது. (குவலயா.1 அ.25) 10.வெறுக்கப் படும் தவம். அப்பரிசடியேன் கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ (அபி.அந்.45).

கைதவறு-தல் 5வி. 1.ஒழுக்கம் கெடுதல். கைதவறி உளந்தவறி இப்படிப்பட்ட குற்றம் செய்திருக்கலாம் (பிசிராந்.ப.32). 2.தொலைந்துபோதல். என் புத்தகம் கைதவறிவிட்டது (நாட்.வ.). 3.இறத்தல். குழந்தை கைதவறியது (முன்.). 4.கையினின்று தவறிப்போதல். கண்ணாடி ... அது கைதவறி விட்டால் உடைவது மெய் (இளை.இலக்.45).

கைதவன்[1] பெ. பாண்டியன். கைதவன் பார்புகழுங் கருமாணிக்கன் (திருக்கோவை 93). கைதவனுஞ் சொன்னான் (பெரியபு.28,749). கன்னடர் பல்லவர் கைதவர் காடவர் (கலிங்கத்துப்.329). கன்னிநாடு டையான் கைதவ னெனும்பேர்க் காரணந் தேற்றுவா னென (திருவிளை.பு.44,39). கைதவன் குலத்தில் தோன்றி ... அளிப்பன் (சிவராத்.பு.7,24). கைதவன் செய்தவப் பேறேதென் கூடற் கயற்கண்ணியே (கயற். மாலை 32). செம்பொன் மலையன்று சேலுக்கிடங் கொடுக்கக் சம்பன் மலை கைதவா (பெருந்.1201). அதற்கு இக் கயவனைக் கைதவன் அனுப்பினான் (மனோன்மணீ. ப.55). பாரி விழுப்புகழ் நீ டுள் சுடுமாற் கை தவனார் நெஞ்சிற் கடிது (பாரிகாதை 362). பாண்டியன் ... கைதவன் (அபி.மாலை 212).

கைதவன்[2] பெ. வஞ்சகன். இறைவன் தன்னை யான் கைதவனேயெனக் கருதலாகுமோ (கந்தபு.6,8,26). கைதவ னாமிக் கானவ னேயோ பிறரேயோ செய்தவர் யாரே (திருவிளை.பு.25,28). கைதவரோடு இணங்காமல் (பட்டினத்தார்.பா.4 தில்லை 6,2). கைதவனை இங்குவரக் கண்டிலையோ (திருவனந்.விலா.146). மன்னரிங்குச் சேரல ராணதிற் கைதவ ராவர் தெளிறறினே (கோடீச். கோவை 222).

கைதவிர்-த்தல் 11வி. நீங்குதல். காரணி கடலொலி கைத விர்த்ததே (சூளா.187).

கைதமுவு-தல் 11வி. கைகோத்தல். தொடர்ந்து கைதழீஇ நடந்து (பெருங்.1,41,110).

கைதளர்-தல் 4வி. 1.வறுமையுறுதல். (செ.ப.அக.) 2.சோர்தல். (யாழ்.அக.) 3.கைநெகிழ்தல். (முன்.)

கைதா-தல் (கைதருதல்) 13வி. 1.மிகுதல். உவகை கைதர (கம்பரா.6,33,268). 2.வறுமை இடுக்கண் முதலியவற்றில் உதவிபுரிதல். காவலனார் பெருங் கருணை கைதந்த படிபோற்றி (பெரியபு.28,1118). கலைகற்ற புலமையெலாங் கைதரா (தமிழரசி குற.34). 3.உறுதி செய்தல். எய்தவல்லையேற் கைதருக (பாரதம்.1,1,44). 4.மணம்புரிதல். கோதையாலுறவு கொண்டு கைதரல் குறித்த கோமகன் (பாரதம்.1,1,131).

கைதாங்கி பெ. 1.கைப்பிடி. (யாழ்.அக.) 2.நாற்காலி யினொருறுப்பு. (முன்.)

கைதாங்கியடி-த்தல் 11வி. 1.மெதுவாயடித்தல். (செ. ப.அக.) 2.ஓங்கிப் பலமாயடித்தல். (முன்.)

கைதாங்கியுழு-தல் 1வி. மேலாக உழுதல். (வின்.அக.)

கைதாங்கு-தல் 5வி. 1.அழிவெய்தாமற் காத்தல். (செ.ப.அக.) 2.கைகலாகு கொடுத்தல். (முன்.)

கைதாழ்-தல் 1வி. 1.கீழ்நிலை அடைதல். பருவரால் கைதாழ்ந்தேன் (பஞ்ச.திருமுகவிலா.466). 2.செல்வ நிலை குன்றுதல். (நாட்.வ.)

கைதி பெ. (உருது.) சிறைப்பட்ட குற்றவாளி. காதல் மகளே கைதி நீ விடிந்தபின் நின்சொல் லாய்ந்துன் நெடுமனைச் சேர்ப்பேன் (அனிச்ச அடி ப.143). அது ... அடுத்ததை நாடாமே ஆடவர்கள் கண்ணிரண்டைக் கைதியாக்கும் (கண்ண.திரை.பா.2,209). மயல் விழியின் வரிப்பார்வைக் கைதியாகி (நேற்றின்.ப.70).

கைதிகராசசிங்கம் பெ. திருஞானசம்பந்தர். (தக்க யாகப்.179)

கைதிட்டம் பெ. 1.→கைத்திட்டம். (செ.ப.அக.) 2.திருந்திய அலங்காரம். கைதிட்டமாக வருபவளே (தனிப்பா.திர. 2,163,404).

கைதிருந்து-தல் 5வி. கையெழுத்து முதலியன நேர்மையாதல். (செ.ப.அக.)

கைதீண்டு-தல் 5வி. 1.தூர்த்தத்தனமாய்ப் பெண்டிரை அணுகுதல். (முன்.) 2.அடித்தல். (முன்.)

கைது பெ. 1.தளைப் படுத்தம். (அயற்.அக.) 2.சிறைக் காவல். (செ.ப.அக.)

கைதுசெய்-தல் 1வி. 1.சிறைப் பிடித்தல். கண்ணிரண்டில் பெண்ணினத்தைக் கைது செய்பவனோ (கண்ண. திரை.பா.2,93). 2.அடிமை யாக்குதல். காலம் பார்த்து என்னை அவன் கைது செய்ததென்ன (கண்ண.திரை. பா.3,203).

கைதுடை-த்தல் 11வி. விட்டொழிதல். எமை கைதுடைத் தேகவும் (கம்பரா.2,4,155).

கைதூக்கிவிடு-தல் 6வி. 1.→கைதூக்கு-தல். (செ.ப. அக.) 2.கூட்டமத்தியில் கையைப்பிடித்து வெளியே இழுத்துவிடுதல். (நாட்.வ.) 3.கீழிருப்பவர் கையைப் பிடித்து மேலே ஏற்றிவிடுதல். (முன்.)

கைதூக்கு-தல் வி. 1.ஆமோதித்தற் குறியாகக்கையை உயர்த்துதல். (செ.ப.அக.) 2.வறுமையால் வருந்து வோர் நீரில் அழுந்துவோர் முதலியோரைக் காத்தல். (ஜம்.அக.) 3.விடுதலையாக்குதல். (யாழ். அக.)

கைதூவாமை பெ. 1.கையொழியாமை. பயன் பல பெருக்கக் கை தூவாத செய்தியோர்க்கும் (ஞானாமிர். 38,2). 2.ஒழியாவொழுக்கம். (யாழ்.அக.) 3.படையின் விகற்பம். (அக.நி.)

கைதூவு[1] பெ. செயலற்றிருக்கை. நனி விருந்தயருங் கைதூவின்மையின் (நற்.280).

கைதூவு[2]**-தல்** 5வி. கையொழிதல். ஊணொலி யரவமொடு கைதூவாளே (புறநா.334,7). கருமம் செயவொருவன் கைதூவேன் (குறள்.1021). கைதூ வாமை கையொழியாமை (திவா.). கரும மறுத்த கைதூ வமையம் (பெருங்.1,36,42). கைதூக்கொற்றா ... பூதா எனவும் வரும் (தொல்.எழுத்.65 நச்.). எய்யார் ஆகிக் கை தூவாமே (ஞானாமிர்.23,13). காலனுமுயிர்

கொளுங்கை வினைகை தூவான் (சீகாழித்.பு.பூத.11). கள்ளுண வாட்டியும் கைதூவாளே (புறத்திரட்டு).

கைதேர்-தல் 4வி. 1.சிறத்தல். சங்கீத வித்வான்கள் கை தேர்ந்த கலைஞர்கள் ... இப்படியாக அடுக்கிக் கொண்டே போகலாம் (விவே.பாரத்.ப.17). 2.ஒரு தொழில் செய்து திறையடைதல். பயணப்படுத்தி அனுப்புவதில் கைதேர்ந்தவர்கள் (பெண்கல்வி ப.21).

கைதை[1] பெ. 1.தாழை. கைதை தூக்கியும் நெய்தல் குற்றும் (நற்.349). கைதை சூழ் கானலுள் கண்ட (தினைமொழி.41). கண்டலுங்கைதையு நெய்தலுங் குலவுங் கழுமலநினையநம் வினை கரிசறுமே (தேவா.1, 79,2). கைதைப் பொழிலுலவும் (நந்திக்கலம்.46). கடி கமழ்வன கைதை (நீல.14). சோறா முழுமடற் கைதை (அம்.கோவை 294). கைதை அம் கான் (கப்.கோவை 339). கானுலாம் கைதை வேலி (செ.பாகவத.812). அடம்பிடிக் கைதை வளர் செம்பி நாட்டில் (நாணிக். ஒருதுறைக்கோவை 263). கைதை மாருற்றுக் கவலுதல் போல் (பஞ்ச.திருமுகவிலா.966). 2.தாழம்பூ. கைதை குடைந்து வரு வண்டின் குழாம் (திருப்பூவண.உலா 442). வெள்ளிதழ்க் கைதை (இறை.அகப்.20,24 உரை).

கைதை[2] பெ. வயல். (பிங்.571)

கைதைச்சுரிகையன் பெ. (தாழையை வாளாக உடைய) மன்மதன். (பிங்.145)

கைதையடிவயல் பெ. தாழை வகையான மரம் நிற்கும் இடத்தில் உள்ள வயல். (தொ.வ.)

கைதொடல் பெ. 1.திருமணம். (யாழ்.அக.) 2.உண்கை. கைதொடல் என்பது பொசித்தலாகும் (அக.நி.கைமுதல் 4). 3.ஆகாரம். கைதொடல் கண்படை வெய்துறு பெரும்பயம் (ஞானாமிர்.35).

கைதொடன் பெ. 1.புத்திபூர்வமாக ஒன்றைச் செய்வோன். கை தொடனாயிருக்க (திருவாய்.6,10,10 ஈடு). 2.உதவிசெய்வோன். தூசித் தலையிலவர்களே கைதொடராய் (திருவாய்.1,4,1 ஈடு).

கைதொடு[1]-த்தல் 11வி. திருமணஞ் செய்து வைத்தல். (ஐம்.அக.)

கைதொடு[2]-தல் 6வி. 1. உண்ணுதல். வெறி கமழ் கோலை நண்ணி வேண்டிய வடிசில் கைதொட்டு (சீவக. 1818). அனவள வாழ் மனை செல் கைதொடு எனப் புகல் ஐயா (தில்.யமக.அந்.45). 2.தொடங்குதல். அவன் கைதொட்காரியம் நல்லதே (நாட்.வ.). 3.உண்டாதல். வெந்திறல்காரி கைதொடினும் (ஞானாமிர்.44,9). 4.பரிசித்தல். சக்கரவர்த்தி திருமகன் இதனைக் கைதொட்டு சிட்சித்து (திருவாய்.4,2,8 ஈடு). 5.நிவேதனம் செய்தல். ஆரமுது ... இனிது கைதொட்டருளி (சுப்பிர. நெஞ்சு.தூது 69). 6.விவாகஞ் செய்து வைத்தல். (வின்.அக.)

கைதொடுமானம் பெ. உதவி. தன் வெறுமையைக் கைதொடு மானமாகக் கொண்டு (திருவாய்.6,10,8 ஈடு).

கைதொழு-தல் 1வி. 1.கும்பிடுவதற்காகக் கையைத் தலைமேல் உயர்த்துதல். கைதொழுஉப்பரவி (திருமுரு.252). புனைமணிக்கழலா னவனொடுந் தனது புரமெதிர்கை தொழ (பாரதம்.1,1,89). காவலராந் தேவரை முன் கைதொழுது (முக்.பள்.5,1). 2.வணங்கு தல். நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது (நெடுநல். 43). காதலி தன்னொடு கைதொழு தெடுத்து (மணிமே. 13,20). கரும்புசூழ் கிளவியர் சொரிந்து கைதொழ (சூளா.377). காமனை யென்றுஞ் சொல்லார் கணவற் கை தொழுது வாழ்வார் (சீவக.1598). அறிவாரைக் கண்டால் சென்று கைதொழுமே (சடகோபரந்.82). முடை நாறு தோளாயர் கை தொழ (பாரதம்.2,2,94). தெவ்வுந் திசைநோக்கிக் கை தொழூஉம் (நீதிநெறிவி. 88). சென் மப்பாவக் கறையொளிக்க ஐயனெனாக் கைதொழுது வேண்டினளால் (கித்தேரி.அம்.2,58). தெண்டன் அடி பயிந்தே சேயிழையார் கை தொழுதார் (சீவே.சரி.2370). தெய்வத்தைப் போற்றி வந்தாற் கைதருங் காண் (முக்.பள்.32,2).

கைதோணி பெ. சிறுதோணி. இணங்குகைத் தோணி (குசேலோ.209).

கைதோய்வு பெ. கையால் எட்டிப்பிடிக்கக் கூடிய நிலை. கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி (மலை படு.362).

கைந்தலை பெ. விதவை. கைந்தலை விரைந்து நோக்குந் தக்கபே ரன்பையும் (திருவால.திருவிளை.பு.41,28).

கைந்தோட்டம் பெ. கையால் நிர்ணயிக்கும் மதிப்பு. (ஐம்.அக.)

கைந்நட்டம் பெ. முதல்கூடாநட்டம். (யாழ்.அக.)

கைந்நடுக்கம் பெ. 1.கையிறுங்காமை. (முன்.) 2.ஓர்வியாதி. (முன்.)

கைந்நலப்பால் பெ. கன்றின்றிக் கைவல்லபத்தாற் கறக்கும்பால். (முன்.)

கைந்நலம் (கைநலம்) பெ. 1.→கைந்நலப்பால். (வட்.வ.) 2.→கைமலம். (முன்.)

கைந்நவிலாளர் பெ. கையால் தொழில் செய்யப் பழகியவர். கைந்நவி லாளர் காடெறிந்து (பெருங்.1,46, 66).

கைந்நறுக்கு பெ. கையுறுதி. (யாழ்.அக.)

கைந்நன்றி பெ. செய்ந்நன்றி. (முன்.)

கைந்நனை-த்தல் 11வி. உண்பதற்காக கை கழுவுதல். (முன்.)

கைந்நாகத்தான் பெ. யானை முகத்து விநாயகக் கடவுள். கைந் நாகத்தானைத்தான் காப்பு (குமர.மும். கோவை காப்.1,1).

கைந்நாகம் பெ. (கையையுடைய நாகம்) யானை. கைந்நாகம் இருநான்கும் கலங்க (இரணியவதைப். 222). கைந்நாகம் எட்டும் கழல்வணங்க (சேரமான். உலா 31). கைந்நாகம் ... கடல்வந்த தோர்காட்சி (கம்பரா.5,1,39). இவள் கைந்நாகங் கண்டுநம் மேல்விழுந்த அந்நாள் (திருவாரூர்க்கோவை.473). கைநாகத் தூக்குங் கயவாய் (கந்தபு.3,9,59). கைந்நாகம் பைந்நாக கங்கணம் பூணப் பொருமப் பைந்நாகம் கைந்நாகப்பட்டு உடு (திருக்காளத்.உலா 45). இருந்தழை பறித்திடும்கைந் நாகமும் துன்பம் நீங்கி (தந்திவனப்பு.102). பாரமணிக் கைந்நாகம் சூழ் கோயில் கண்மணியே (தமிழ்.தூது 249).

கைந்நாடிபார்-த்தல் 11வி. நாடியோட்டம்பார்த்தல். (யாழ்.அக.)

கைந்நிதானம் பெ. கையால் நிறை முதலியவற்றை மதிப்பிடுகை. (நாட்.வ.)

கைந்நிரை பெ. நிரைச்சல். கைந்நிரை கட்டிக் கொண்டி ருக்கிற நாளிலே (திருவாய்.4,6,6 ஈடு).

கைந்நிலை பெ. 1.பதினெண்கீழ்க்கணக்குளொன் றும் அகப்பொருள் பற்றியதும் புல்லங்காடர் என்ற புலவரியற்றியதுமான நூல். நாலடிநான் மணி ... இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு (தனிப்பா.). 2.படை தங்குமிடம். (பதிற்றுப்.13,21 குறிப்பு)

கைந்நிறுத்து-தல் வி. 1.நிலை நிறுத்துதல். காப்புக் கைந்நிறுத்த பல்வேற் கோசர் (அகநா.113). 2.அடக்குதல். கரந்த காமம் கைந்நிறுக்கல்லாது (அகநா.198,2).

கைந்நீட்டம் (கைநீட்டம்) பெ. 1.ஒவ்வொரு நாளும் முதன் முதல் கையில் கிடைக்கும் பொருள். (தொ.வ) 2.கடைதிறந்தவுடன் முதன் முதலாக விற்கும் பண்டத்திற்கு வாங்கும் ரொக்கத் தொகை. (ஜம். அக.) 3.கொணட். (வட்.வ.)

கைந்நீட்டு[1] பெ. கைப்பிடி. தமது கிடுகைக் காம்புடனே கைந்நீட்டுச் செறிக்கவும் (புறநா.98 உரை).

கைந்நீட்டு[2]**-தல்** வி. 1.கையை உள்ளே செலுத்துதல். கரும் பாம்பின் பேழ்வாயில் கைந்நீட்டி மாணிக்கம் ஒன்றெடுத்து (நல்லதம்.காதல் 47). 2.அடிக்க முந்துதல். (யாழ்.அக.) 3.இழவுவினவுதல். (முன்.) 4.களவெடுத்தல். (முன்.)

கைந்நீவு-தல் 5வி. அவமதித்துக் கடத்தல். மதமாகக் கொடுந்தோட்டி கைந்நீவி (பரிபா.10,49).

கைந்நீள்(ளு)-தல் 2வி. 1.திருடப்பழகுதல். (ஜம்.அக.) 2.அதிகமாய்க்கொடுத்தல். (யாழ்.அக.) 3.ஒன்றைச் செய்யமுந்துதல். (முன்.)

கைந்நூல் பெ. கையிற்கட்டும் காப்பு நாண். கைந்நூல் யாவாம் (குறுந்.218).

கைந்நெகிழ்-தல் 4வி. விட்டுவிடுதல். (யாழ்.அக.)

கைந்நெரி-த்தல் 11வி. துன்பம் முதலியவற்றால் மகளிர் கைவிரல்களை அழுத்திச் சேர்த்தல். ஒரு கள்வனிங் கேகலுற் றானென்று கைந்நெரித்தாள் (கோடீச்.கோவை 305).

கைந்நொடி[1] பெ. கையையொடிக்கும் நேரவளவு. மாந்தருடைய கண்ணிமையுங் கைந்நொடியும் (நன். 99 மயிலை.).

கைந்நொடி[2]**-த்தல்** 11வி. விரலைநொடித்தல். (யாழ். அக.)

கைநட்டம் பெ. 1.கைம்முதலுக்கு நேரும் நட்டம். (செ.ப.அக.) 2.கையிலுள்ளதை இழக்கை. (முன்.)

கைநடுக்கம் பெ. மூப்பு அச்சம் முதலியவற்றால் கைநடுங்குகை. (செ.ப.அக.)

கைநம்பிக்கை பெ. 1.கைக்கடன். கைநம்பிக்கையாகக் கொடு (முன்.). 2.கையடித்து உறுதிமொழி கூறுகை. (நாட்.வ.)

கைநம்மாட்டி பெ. சிறிய மண்வெட்டி. (தொ.வ.)

கைநலப்பால் (கைந்நலப்பால்) பெ. கன்றின் உதவி யின்றிக் கையாற் கறக்கும் பால். (யாழ்.அக.)

கைநலம் (கைந்நலம்) பெ. 1.→ கைநலப்பால். (முன்.) 2.கைராசி. (செ.ப.அக.)

கைநழுவவிடு-தல் 6வி. 1.வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளாமல் விடுதல். (ஜம்.அக.) 2.விட்டுவிடுதல். கண்ணனே யென்னைக் கை நழுவவிடுத லுமக் கழகல்ல (கோலாசல.பு.185 உரை).

கைநறுக்கு பெ. கையாலெழுதிய குறிப்புச்சீட்டு. (செ.ப.அக.)

கைநன்றி (கைந்நன்றி) பெ. செய்ந்நன்றி. (யாழ்.அக.)

கைநனை-த்தல் 11வி. பிறர் வீட்டில் உணவு கொள்ளுதல். (ரா.வட்.அக.)

கைநாகம் பெ. யானை. கை நாகம் துயிலெழும்பின் ஆகும் விளைக் கன்றோ வேலா (நீதி போத வெண்.30). இமயவரை இகலி வரும் கைநாக உரியர் அடி (கருவூர்ப்பு.19,42).

கைநாட்டு[1] பெ. 1.விரல்முத்திரை. (நாட்.வ.) 2.எழுதப் படிக்கத் தெரியாதவன். (முன்.)

கைநாட்டு[2]**-தல்** 5வி. கையெழுத்திடுதல். (செ.ப.அக.)

கைநாழி பெ. சிறிய நாழி. (ரா.வட்.அக.)

கைநிமிர்[1]**-த்தல்** 11வி. முன்னங்கால்களில் அறைதல். கேசரி கைநிமிர்க்கும் (தாக.கோவை 37).

கைநிமிர்[2]**-தல்** 4வி. வயதாகி வளர்தல். கைநிமிர்ந்த பிள்ளை (நாட்.வ.).

கைநிமிர்த்தாதனம் பெ. யோகாசன வகை. (தத்துவப்.108 உரை)

கைநிரை பெ. நிரைச்சல். கைநிரை கட்டிக்காண்டிருக்கிற நாளிலே (திருவாய்.4,6,6 ஈடு).

கைநிலை பெ. வீரர்கள் தங்குவதற்குப் பாசறையில் தனித்தனியே அமைக்கப்பட்ட குடிசை. (புற.வெண். 4,7 உரை)

கைநிறை பெ. 1.நடவு நடும்போது முன்னோக்கி நட்டுச் செல்கை. (நாட்.வ.). 2.கையால் தூக்கிமதிக்கும் நிறை. (செ.ப.அக.)

கைநீட்டம் பெ. 1.ஒவ்வொருநாளும் முதன் முதல் கையில் கிடைக்கும் பொருள். (தொ.வ.) 2.அன்றன்று கடைதிறந்தவுடன் முதன் முதலாக விற்கும் பண்டத்திற்கு வாங்கும் ரொக்கத் தொகை. (முன்.) 3.கொடை. (வட்.வ.)

கைநீட்டல் பெ. அடித்தல். (வட்.சொ.அக.98)

கைநீட்டு[1]**-தல்** 5வி. 1.கையிற் கொடுத்தல். வந்து தன்மனை கைந்நீட்ட (குசேலோ.68). 2.அடிக்கக் கையோங்குதல். (செ.ப.அக.) 3.இழவு விசாரித்தல். (யாழ்.அக.) 4.ஒரு பொருள் பெறக் கையேந்துதல். கை நீட்டி வேண்டு நர் நீக்க அளித்து (பரித்மோ.பு.3,66).

கைநீட்டு[2]**-தல்** 5வி. திருடுதல். (முன்.)

கைநீவு-தல் பெ. கைகடந்து செல்லுதல். கொடுந்தோட்டி கைந்நீவி (பரிபா.10,49).

கைநீளம் பெ. 1.தாராளம். (ஜம்.அக.) 2. திருடுங்குணம். (ரா.வட்.அக.)

கைநுணுக்கம் பெ. 1.உலோபத்தனம். (வின்.அக.) 2.அழகான வேலைப்பாடு. (முன்.)

கைநெகிழ்-தல் 4வி. கையை விட்டு நீங்குதல். மெள்ள மெள்ளக் கைநெகிழ விட்டாய் (தாயுமா.பா. பராபர.334). பூ எடுக்கக் கைநெகிழும் போது கமலம் என்றே (நல்லதம்.காதல் 230).

கைநெரி-த்தல் 11வி. துக்கம் அச்சம் முதலியவற்றால் கையைப் பிசைதல். (செ.ப.அக.)

கைநெரிப்பு பெ. துக்கம் அச்சம் முதலியவற்றால் கையைப் பிசைகை. கண்டம்மடிலே ஒழிப்பாம் கைநெரிப்பாம் (தெய்வச்.விறலி.தூது 296).

கைநெல்லி பெ. உள்ளங்கை நெல்லிக்கனி, அகங்கையிலுள்ள நெல்லிக்கனியை உண்பது உறுதி ஆதல் போல ஒரு பொருள் தெளிவாகத் தெரிவது. தோற்ற ரவடுக்குங் கைநெல்லிபோலெனல் (மணிமே.29,83).

கைநெறிப்பிடி பெ. சைக்கிளை திடீரென்று நிறுத்துவதற்காக நிறுத்துக் கம்பி பொருத்தப்பட்ட கைப்பிடி. திட்டமிடாதவன் வாழ்க்கை கைநெறி பிடி இல்லாத மிதிவண்டி ... போகிறது (பாதை.பாளவு.ப.76).

கைநொடி-த்தல் வி. 1.செல்வ நிலைமைகெடுதல். செட்டியார் கைநொடித்துப் போனார் (வட்.வ.) 2.கை விரலால் ஒலியுண்டாக்குதல். (செ.ப.அக.)

கைநொடுநொடு-த்தல் 11வி. கண்டதெல்லாவற்றையுங் கையால் தொடுதல். (யாழ்.அக.)

கைநோட்டம் பெ. 1.கைவேலைத் திறம். (செ.ப.அக.) 2.கையால் நிர்ணயிக்கும் மதிப்பு. (முன்.) 3.கையினாற் குறிப்பிக்குஞ் சாடை. (நாட்.வ.)

கைப்பக்கம் பெ.அ./வி.அ. அருகில். (முன்.)

கைப்பகர்ப்பு பெ. அனுமதியின்றிப் பெற்றுக் கொண்ட நகல். (வட்.வ.)

கைப்பங்கொட்டை பெ. மரவகை. (செ.ப.அக.)

கைப்பட்டை பெ. 1.தோட்பட்டை. (முன்.) 2.கைமரம் தாங்கும் சட்டம். (வட்.வ.) 3.நீர் முகக்கும் சிறுபட்டை. (வின்.அக.)

கைப்பட்டைகிடங்கு பெ. நீர் இறைத்தபின் சிறியப் பட்டையால் அள்ளும் அளவு நீருள்ள கிணறு. (இலங்.வ.)

கைப்பட வி.அ. சொந்தக்கையெழுத்தாக. (நாட்.வ.)

கைப்படம் பெ. சிற்றளவான நிலப்படம். (ஆட்சி.அக. ப.165)

கைப்படயெழுது-தல் 5வி. சொந்த கையெழுத்தில் எழுதுதல். (ஜம்.அக.)

கைப்படு[1]**-த்தல்** 11வி. 1.தெளிதல். நின் ... மாயப் பரத்தைதமை ... கைப்படுத்தேன் (கலித்.98). 2.நன்கு தெரிந்து கொள்ளுதல். மொய்வளம் பூத்த முயக்கம் யாம் கைப்படுத்தேம் (பரிபா.18,18). 3.கைவசமாதல். கடல்சூழ்வையங் கைப்படுத்தான் (சீவக.1058). 4.கைப் பற்றுதல், கைப்பிடித்தல். நகரங்கைப் படுத்தபிரா னந்தி (நந்திக்கலம்.38).

கைப்படு[2]**-தல்** 6வி. 1.கைவசமாதல். ஒள்வாள் தன் ஒன்னார் கைப் பட்டக்கால் (நாலடி.129). எனையே நினைய லுற்றார் கைப்படுவன் (பகவற்.8,13). கைப்படா வகை (பாரதம்.1,1,52). கைப்படுநெல் லியின்கனி போல் (திருப்பனந்.பு.தருமசேனன்.4). இருபாலர் ... கைப்படு விழுத்தவனை நோக்கி (சிவஞா.காஞ்சிப்பு. பரசி.14). கைப்படின் ஒறுப்பதிலை காட்டுவம் இரக்கம் (காந்திகாதை 2,69). 2.அகப்படுதல். கலையார் விடுக்கவல் லார்விடு வாரெவர் கைப்பட்டதே (அம். கோவை 119). பூயாவும் பறித்தபின் காவின் தோற்றம் ... பரத்தைமார் கைப்பட்டவர் நிற்றல் மானும் (பரித்மோத். பு.4,108). தொடரவும் கைப்படார் சிலபேர் (செ.பாகவத. 8 ப.17). என் சொல்கே ளான்எனது கைப்படான் (திருவருட்பா 22,3).

கைப்படு[3]**-தல்** 6வி. பார்த்தல். புனை செய் கோல் வளையைக் கைப்படுதி (சீவக.1600).

கைப்படை பெ. 1.கைக்கட்டி. (பிங்.1585) 2.ஆயுதம். வென்றிக் கைப்படை நவின்ற வெம்போர் (சூளா.128). 3.மணியாசுப்பலகை. (வட்.வ.)

கைப்பண்டம் பெ. கையிலுள்ள பொருள். (செ.ப. அக.)

கைப்பணம் பெ. 1.→ கைப்பொருள். கட்டளையும் கைப்பணமும் காணாதே (பட்டினத்தார்.பா.5 அன்னை. 30,2). 2.மூலதனம். (வட்.வ.) 3.சொந்தப் பணம். கைப்பணம்போட்டு இந்தப் புத்தகத்தை அச்சிட்டார் (செ.ப.அக.). 4.வியாபாரத்தில் கடனின்றிக் கைமேற் கொடுக்கும் பணம். (யாழ்.அக.)

கைப்பணி பெ. 1.குற்றேவல். என் கைப்பணி பொன்மி னென்பவனோத்தான் (சூளா.2). கைப்பணி கோடல் கருமுகில்வான் (திரிசிரா.அந்.3). 2.→கைப்பாணி-1. (இலங்.வ.)

கைப்பணிப்பலகை பெ. → கைப்பாணி-1. கைப்பணிப் பலகை முழக்கோல் (என்.வெ.கா.ப.59).

கைப்பத்து பெ. →கைபீது. (வட்.வ.)

கைப்பதட்டம் பெ. 1.கள்ளம், திருடுங்குணம். (வின். அக.) 2.அவசரத்தில் கைபதறுகை. (செ.ப.அக.)

கைப்பந்தம் பெ. →கைத்தீவட்டி. (நாட்.வ.)

கைப்பம்மி பெ. நீரிறைக்கும் கருவி. (இலங்.வ.)

கைப்பயிர் பெ. இளம்பயிர். (செ.ப.அக.)

கைப்பயில் பெ. 1.இரேகை சாத்திரம். (முன்.) 2.கைச் சயிக்கினை. (யாழ்.அக.)

கைப்பரிசு பெ. 1.சிறுதெப்பம். கைப்பரிசுகாரர்போ லறிவான வங்கமுங் கைவிட்டு (தாயுமா.பா.தேசோ.2). 2.இலஞ்சம். (வட்.வ.)

கைப்பலகை பெ. கேடயம். சுற்றும் ஆயத்துக் கைப்பலகை எல்லாம் (மூவரை.தூது 31).

கைப்பலன் பெ. கை கண்ட நன்மை. கடவுளைத் தொழின் ... முத்தியைக் கைப்பலனாச் சேர்வன் (திருக் காளத்தி.பு.19,23).

கைப்பலி பெ. 1.கையில் வாங்கும் பிச்சை. உடையுங் கோவண முண்டியுங் கைப்பலி யுறவென் றடையுங் கேளிரும் (திருவிளை.பு.58,40). 2.சிறிய உயிர்ப்பலி. கைப்பலி ... பணியிற் (யசோதர.136).

கைப்பழக்கம் பெ. 1.கைப்பயிற்சி. சித்திரமுங் கைப் பழக்கம் (தனிப்பா.திர.91,5).

கைப்பள்ளம் பெ. உள்ளங்கைக் குழி. (வட்.வ.)

கைப்பற்றம் பெ. 1.கைத்தாங்கல். (இலங்.வ.) 2.கைப் பிடி. (யாழ்.அக.)

கைப்பற்றல் பெ. கலியாணம். கைப்பற்றன் மணங் கலியாணம் (உரி.நி.178).

கைப்பற்று[1] பெ. 1.கையிற்பெற்றுக்கொண்ட தொகை. (செ.ப.அக.) 2.சாதனம். தான்தோன்றியான கைப் பற்றடியாக வந்ததொன்றல்ல (திருவாய்.9,4,9 ஈடு). 3.உரிமை மானியம். இளமண்டியம் என்கிற கிராமத்தை அவர்களுக்குக் கைப்பற்றாக விடுவித்து (குருபரம்.334). 4.கைத்தூக்கு. (யாழ்.அக.) 5.கைத் தாங்கல். (செ.ப.அக.)

கைப்பற்று[2]**-தல்** வி. 1.கடனுக்காக அல்லது வரி பாக்கிக்காகப் பொருளைப் பறிமுதல் செய்தல். (ஆட்சி.அக.ப.99) 2.கையிற் கொள்ளுதல். கைப்பற் றியவிற்கொடு (கந்தபு.1,4,35). பாலை வனத்திடையே தனைக் கைப்பற்றி நடக்கையிலே (பாரதி.தோத்திரம். 4,2). கம்பெனியார் இந்தியாவைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிப்பிறகு முழுமையாக ஆண்டனர் (இந்.அர.வர.ப.2). கடத்தல் தங்கத்தினை அதிகாரிகள் கைப்பற்றின (செய்தி.வ.). 3.அபகரித்தல். சுதைக் குடத்தை ... அவுணர் கைப்பற்ற (சிவஞா.காஞ்சிப்பு. மாசா.4). 4.மணம்புரிதல். கைபற்றின ருயி ருவப்ப (சீகாழித்.பு.கொச்சை.23). 5.கவருதல். காலர் வந்து கைப்பற்றி (குசேலோ.118).

கைப்பற்றுகை பெ. பறிமுதல் செய்கை. (ஆட்சி.அக. ப.254)

கைப்பற்றுநிலம் பெ. 1.குத்தகைக்குயெடுத்த நிலம். (ஆட்சி.அக.ப.141) 2.நீண்டகாலம் அனுபவத்தி லிருக்கும் நிலம். (செ.ப.அக.)

கைப்பற்றுப்பாத்தியம் பெ. நிலத்தில் சாகுபடி செய்யும் உரிமை. (வட்.வ.)

கைப்பாக்குவெற்றிலை பெ. திருமணம் உறுதி செய்கை. (செட்.வ.)

கைப்பாகம் பெ. பதமறிந்து மருந்து முதலியன பக்குவஞ்செய்யும் திறம். (செ.ப.அக.)

கைப்பாகன் பெ. துணையாள். அவருக்கு நான் தான் கைப்பாகன் (இலங்.வ.).

கைப்பாடு பெ. 1.கைவசம். (யாழ்.அக.) 2.கைநட்டம். (வின்.அக.) 3.கையால் உழைத்துச் செய்யும் வேலை. ஓயாமல் கைப்பாடுகள்பட்டும் அவர்களுக்குக் கிடைக்கிற கூலி (பெண் கல்வி ப.74).

கைப்பாடுபடு-தல் 6வி. அரும்பாடுபட்டு உழைத்தல். அவன் கைப்பாடுபட்டுப் பணம் சேர்க்கிறான் (இலங்.வ.).

கைப்பாணி பெ. 1.மணியாசுக்கட்டை. கைப்பாணியிட்டு மெழுக்குவாசியிலே பிரமிக்கும்படி (திருவாய்.5,1,5 ஈடு). 2.→ கைக்காணம். தானே வரக்கண்டுங் கைப்பாணி வாங்கியும் (தஞ்.சரசு.11,106). 3.முடவன் தவழ்வதற்குக் கொள்ளுங் கைப்பிடி. முடவனாய்க் கைப்பாணி கொண்டு தவழு வானொருவன் (பழ.16 உரை).

கைப்பாணிப்பு பெ. ஒரு பொருளைக் கையில் எடுத்து நிறுத்திடும் மதிப்பு. (நாட்.வ.)

கைப்பாதி பெ. இரண்டாய்ப் பிளப்பதிற் சிறுபாதி. (யாழ்.அக.)

கைப்பால் பெ. பால் வாங்குவோர் எதிரில் பசுவைக் கறவாது முன்னரே கறந்து கொண்டுவந்த பால். கைப்பால் அலைச் சங்கம் ஏந்து மணியரங்கன் (நூற்றெட்.அந்.20,2).

கைப்பாவை பெ. 1.ஆட்டுவித்த படி ஆடும் பொம்மை. நான் துண்டு துண்டானால் வல்லரசுகளின் கைப்பாவை ஆகிவிடும் என்றார்கள் (காலடி.ப.38). 2.சிறுமிகள் வைத்துவிளையாடும் மரப்பொம்மை. தன்கைப் பாவைப் பிள்ளைக்கு மூட்டுகின்ற பெற்றியாள் (மதுரைச். உலா 147).

கைப்பிச்சை பெ. களத்தில் தருமமாகக் கொடுக்கும் பிச்சை. (நாட்.வ.)

கைப்பிசகு பெ. 2.→கைமோசம். (யாழ்.அக.) 1.→கைக் குற்றம். (செ.ப.அக.)

கைப்பிடி¹ பெ. 1.கையாற் பிடிக்கை. இந்த நொடிக் குள்ளே அவனைக் கைப்பிடியாகப் பிடித்து (தனிப்பா. திர.காளமே.சரித்.ப.7). கைப்பிடி அளவே உள்ளது இதயம் (செய்தி.வ.). 2.கையிற்பெற்றுக் கொண்ட பொருள். இவ்வாடு திருவுண்ணாழிகை யுடையார் கைபிடி (தெ.இ. க.3,107). 3.படிக்கட்டு முதலிய வற்றின் பக்கங்களில் கையாற் பிடித்துச் செல்ல அமைக்கும் சுவர் சட்டம் முதலியன. பீடு உயர்ந்த கைப்பிடியில் குடத்தை வைத்து (இயேசுகா.வி.75). 4.பிடியளவு. (செ.ப.அக.) 5.கத்தி வகைகளில் மரத்தால் அல்லது மாட்டின் கொம்பினால் ஆனபகுதி. (தொ.வ.) 6.கலியாணம். கைப்பிடி நாயகன் (பட்டினத்தார்.பா.திருவே.மாலை 3). 7.உலக்கை. (கதிரை.அக.)

கைப்பிடி²-த்தல் 11வி. 1.பற்றுதல். வாசல் வரும் நாயகரை வாள் நுதலாள் கைப்பிடித்தே (சீவே.சரி.248). அறநெறியே கைப்பிடிமின் (பாரிகாதை 250). 2.உறுதி யாகப் பிடித்தல். இம்முறை கைப்பிடித்தல் (தணிகைப்பு. அகத்.415). 3.ஏற்றுக்கொள்ளுதல். தலின் யாமுனைக் காதலித்தனமாற் காதலினெமை அருட்கைப் பிடித்தருளி (குமர.பண்டார.மும்.கோவை 8,29). 4.மணம்புரிதல். கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப் பான் (நாய்ச்சி.தி.11,9). கற்புக் குணங்கு குலஞ்சேர் கன்னியை ... கைப்பிடித் தில்லறம் புரிந்தே (ஞான. உபதேசகா.572). கைப்பிடித்த மங்கையைப் போல ... மடந்தையை ... புடைத்தான் (திருமழுவாடிப்பு.சிவகங். 3). கைப்பிடித்த தேவியைத்தான் கல்லா நினைந்தான் (பாரிகாதை 196). காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்து (பாரதி. பல்வகைப்.6,8).

கைப்பிடிச்சட்டம் பெ. படிக்கட்டில் கைப்பிடி இணைக் கப்பட்ட சட்டம். (செ.ப.அக.)

கைப்பிடிச்சுருள் பெ. விவாகத்தில் மணமகளுடைய தந்தையால் வதூவரர்களின் விரல்களைச் சேர்த்துக் கட்டின பட்டை அவிழ்த்ததற்காக மணமகளின் சகோதரனுக்குச் செய்யும் சம்பாவனை. (முன்.)

கைப்பிடித்துக்கொள்(ளு)-தல் 2வி. மணந்து கொள்ளுதல். கலாவதிப் பேர்க் கன்னிகையைக் கைப் பிடித்துக் கொள்ள (கலா.ப.67).

கைப்பிடிமோதிரம் பெ. விவாகத்தில் மாப்பிள்ளைக்குப் பெண்வீட்டார் கொடுக்கும் மோதிரம். (வட்.வ.)

கைப்பிடியாய்ப்பிடி-த்தல் 11வி. கையுங் களவுமாய்ப் பிடித்தல். (நாட்.வ.)

கைப்பிடிவாள் பெ. 1.கைவாள். (சூடா.நி.) 2.கைரம்பம். (வின்.அக.)

கைப்பிணக்கிடு-தல் 6வி. கைக்கோத்தல். அவர்களோடே கைப்பிணக்கிடுகை முதலான இவன் செய்யும் விடமங்கள் வாசாமகோசர மாகையாலே (பெரியாழ்.2,7,4 வியாக்.ப.395).

கைப்பிணை பெ. 1.பாதுகாக்கும்படி கையில் ஒப்பிக்கப் பட்ட பொருள். (செ.ப.அக.) 2.வேண்டுங் காலங்களில் குற்றவாளி தவறாமல் ஆசர் ஆவதற்காகக் கோர்ட்டார் நியமிக்கும் சாமீன். (முன்.)

கைப்பிரதி பெ. கையெழுத்துப்படி. (ஜம்.அக.)

கைப்பிரம்பர் பெ. பிரம்பு கொண்டு தண்டிக்கும் அரசன் ஏவலாளர், பிரம்படிக்காரர். சுஞ்சுகியர் கைம்பிரம்பர் கட்டியர் முன் கைநீட்டி (கூளப்ப.காதல் 283).

கைப்பிரம்பு பெ. கையில் வைத்திருக்கும் பிரம்பு கம்பு. வண்டிக்காரன் மாடுகளின் முதுகில் தனது கைப்பிரம்பால் களீர் என்று ஒன்று வைத்தான் (நாட்.வ.).

கைப்பிழை பெ. →கைக்குற்றம். (செ.ப.அக.)

கைப்பிள்ளை பெ. கைக்குழந்தை. புரவலனோ எனில் எடுப்பார் கைப்பிள்ளை தடுப்பார் யாரே (மனோன்மணீ. ப.18). உன் கைப்பிள்ளையை என் மனந்தனில் சற்றே நீ வை (தேவ.அந்.43).

கைப்பீது பெ. →கைபீது. (வட்.வ.)

கைப்பு¹ பெ. 1.அறுசுவைகளில் ஒன்றாகிய கசப்பு. கைப்பன எல்லாம் கடை தலை தித்திப்ப (ஆசாரக்கோவை 25). மதுவினிற் கைப்புவைத் தாலொத்த (திருக்கோவை 146). அவை கைப்பு கார்ப்பு ... தித்திப் பென ஆறாம் (குறள்.420 பரிமே.). கைப்புடைச் சீற்றம் வெகுளி (ஞானாமிர்.33,5). கன்னலும் அமுதமுங் கைப்ப (பிரபு.லீலை 2,48). சிரீராசராசன் எழில் மலைவாய்க் கைப்பு அடையார் என (இராச.ஒருதுறைக்கோவை 58). விண்ணா ரொருசுனை கைப்பனமாலும் (திருச்செங்.பு.3, 1,2). பாலை பழத்தினைக் கைப்பு எனத்தள்ளி (தனிப்பா. திர.9390). ஊன்தோய் உடல் நோய் உறுகைப்பு அயிர்வாய் (தேம்பா.1,11,61). அடினும்பால் பெய்துகைப் பருது பேய்ச் சுரைக்காய் (வெற்றிவே.28). 2.வெறுப்பு. பவசங் கைப்பதைப் ... படிறின்றி. (நம்.ஏகா.10 உலர்). காம மென்னுங் கைப் பாய்வளர் கின்றது (பகவற்.3,21). தென்னன் உயதி கைப்பு அடங்கல்புகல் சேய் (கந்தரந். 65). கைப்பொடு விருப்பிலன் (சிவப்பிர.விசா.5). கைப்

பொழுகு பாவமெலா மினிப் பொழுக நடந்தானை (திருக்குற்றா.பு.12,125). அருள் அகன்ற கைப்பாரும் இலாமையால் (தேம்பா.1,1,79). காவலூர் கோதை கட்களனே கைப்பற்ற என்னாவிக் கேளர் தேன்றுளியே யாங்கு (திருக்காவ.கலம்.85). பொருள்களனைத் தையுமே தொலைத் நின்று கைப்படைந்து பாரினில் (மானவி.6,30). 3.துன்பம். நகைமேலும் கைப்பாய் விடும் (பழமொழி 304). 4.மாறுபாடு. கைப்புடைச் சீற்றம் வெகுளி (ஞானாமிர்.33,5). 5.கசப்புப் பண்டம். (தைலவ.பாயி.58) 6.வேம்பு. (சித்.பரி.அக.ப.84) 7.ஆடுதின்னாப்பாளை. (மலை அக.)

கைப்பு² பெ. குடிவெறி. (வட்.வ.)

கைப்புக்கோவை பெ. ஒரு வகை கோவைக்கொடி. (மருத்.குண.1 ப.294)

கைப்புச்சீந்தில் பெ. சீந்தில் கொடி. (செ.ப.அக.)

கைப்புச்சுரை பெ. காட்டுச்சுரைக்காய். (மருத்.குண.1 ப.340)

கைப்புட்டில் பெ. கைவிரலுறை. (யாழ்.அக.)

கைப்புடை பெ. 1.வாயில் காவலர் தங்குமிடம். தங்கள் கைப்புடைகளிலே இருத்தி (திருவாய்.10,9,9). 2.→கைப் புட்டில். கைப்புடைகட்டி வென்னில் ... தூணிதூக்கி (சிவராத்.பு.6,8). 3.பக்கம். பழன மடுத்த கழனிக் கைப்புடைப் போர்மா றட்ட பூங்கழன் மறவர் (பெருங்.2, 9,10-1). கோபுர வாசலுள் இருக்கிற ஒட்டுத்திண்ண பத்தராவி திருவாசலில் கைப்புடையிலே புகுந்து (சீரீவசன.ப.192). 4.அருகு. வெண்மதிக் கைப்புடை வியாழம்போல (பெருங்.2,19,92).

கைப்புண்ணியம் பெ. 1.கைராசி. (செ.ப.அக.) 2.தயாளம். (முன்.)

கைப்புரட்டு பெ. 1.கைமாற்று. (நாட்.வ.) 2.சாலவித்தை. (யாழ்.அக.)

கைப்புலி பெ. (கையையுடைய புலி) யானை. கைப்புலி தானே யானையின் பெயராம் (அக.நி.கைமுதல்.5).

கைப்புவேம்பு பெ. நிலவேம்பு. (சித்.பரி.அக.ப.84)

கைப்பூட்டு பெ. 1.கையினாற்பூட்டும்பூட்டு. (யாழ்.அக.) 2.மல்லரின் கைப்பிடி வகை. (வின்.அக.) 3.தோட்பொருத்து. (யாழ்.அக.)

கைப்பெட்டகம் பெ. →கைப்பெட்டி. (முன்.)

கைப்பெட்டி பெ. செலவின்போது உடைமைப் பொருள் களை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படும் சிறியப்பெட்டி. (ஆட்சி.அக.ப.273)

கைப்பை பெ. கையில் வைத்துக் கொள்ளும் தோல்பை. (இலங்.வ.)

கைப்பொட்டு பெ. கையில் அணியும் ஓர் ஆபரணம். ஓர் அணி திருக்கைப்பொட்டு ஒன்று (தெ.இ.க.2,80,7).

கைப்பொம்மை பெ. பிறர் சொற்படி நடப்பவர். (இலங்.வ.)

கைப்பொருள் பெ. கையிலுள்ள பொருள். கைப்பொருள் போகு ஊழால் தோன்றும் மடி (குறள்.371). கைப் பொருள் கொடுத்துங் கற்றல் கற்ற பின் கண்ணுமாகும் (சீவக.1595). இழிந்த மாந்தர் கைப்பொருள்கள் (திருவிளை.பு.நாட்டுச்.16). கைப்பொருட்கொடையினர் நடு நாடெனல் கடனே (திருவாமாத்.பு.பூர்வ.1,9). கைப்பொருளும் கேடாகி விழலர் ஆவார் (தண்டலை.சத.86). ஒருவன் றன் கைப்பொருளீந்து மானாக மலைச் சுனை படிவிக்கினும் (திருச்செங்.பு.3,7,35). காமுகர்க்கு அதிக சயமோ கைப்பொருளிலே (அறப்பளீ.சத.33). கைப் பொருள் தன்னை விட்ட கள்வனே (வேதா.கதை.10,40). கோள் நிகர் உணர்வில் கைப்பொருள் தந்து குறும் புகழ் கோடலே சிறிய வாணிகர் தொழிலாம் (தேம்பா.1,12,69). கைப்பொருள் அற்றார்க் கொன் றாற்றாதான் (இரங்கேசவெண்.101,10).

கைப்பொல்லம் பெ. சிறு துண்டு. (யாழ்.அக.)

கைப்பொலி பெ. கையாலள்ளும்பொலி. (முன்.)

கைப்பொழுது பெ. உதயாத்தமனங்களில் சூரியன் பூமிக்கு மேல் கைம்முழவுயரத்திலிருப்பதாகத் தோன்றுஞ் சிறுநேரம். (வின்.அக.)

கைப்பொறிப்பு பெ. நொய்வ முத்திரை. (ஆட்சி.அக.ப. 248)

கைப்பொறுப்பாய் வி.அ. சிரத்தையாய். அந்த காரியத்தைக் கைப்பொறுப்பாய்ப் பார்க்கிறான் (நாட்.வ.).

கைப்பொறுப்பு பெ. 1.வியாபாரம் முதலியவற்றில் செலவு நட்டங்கள் தன்பொறுப்பு ஆகுகை. (செ.ப. அக.) 2.நட்டம். (நாட்.வ.)

கைப்போதகம் பெ. துதிக்கையை யுடைய விநாயகக் கடவுள். முப்போது அகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்குங் கைப்போதகத்தின் கழல் (திருவாரூர். மாலை காப்பு.).

கைபடி-தல் 4வி. தொழிலிற் கைதிருந்துதல். கைபடியத் திருமகளைப்படைத் திவளைப் படைத்தனன் (தனிப்பா. திர.147,48).

கைபடு-தல் 6வி. கிடைத்தல். இவ்வுலகு கைப்படும் எனினும் (கலித்.353).

கைபத்து பெ. 1.ஆசராகாமை. (செ.ப.அக.) 2.(உருது) உரிமை கொண்டாடுவோரின்மையால் கருவூலத்தில் பட்டுவாடாசெய்யாமல் தனியாக வைக்கப்பட்டிருக்கும் தொகை. (நாட்.வ.)

கைபதறு-தல் 5வி. 1.அவசரப்படுதல். காரிய வசத்தி னர்கள் கைபதறல் செய்யார் (பிரபோத.5,24). 2.கைந் நடுங்குதல். (யாழ்.அக.)

கைபதில் பெ. கைமாற்றுக்கடன். (வட்.வ.)

கைபந்து பெ. கையால் எற்றி உயர்மட்டவலை மீதா டப்படும் பந்துவகை. (விளை.வ.)

கைபரி-தல் 4வி. ஒழுங்கு குலைதல். கார்மழை முன்பிற் கைபரிந்து எழுதரும் ... குருகின் (பதிற்றுப்.83,).

கைபரிமாறு[1]-தல் 5வி. 1.அசுத்தமாகும்படி தொடுதல். (செ.ப.அக.) 2.கற்பையழித்தல்.(முன்.) 3.அபகரித்தல். (முன்.)

கைபரிமாறு[2]-தல் 5வி. சண்டையிடுதல். (முன்.)

கைபழகு-தல் 5வி. கைப்பழக்கம் பழகுதல். (யாழ்.அக.)

கைபறி-தல் 4வி. 1.கைதவறுதல். (வின்.அக.) 2.கை விட்டுப் போதல். (யாழ்.அக.)

கைபாகம் பெ. கைப்பழக்கம். (முன்.)

கைபார்[1]-த்தல் 11வி. 1.கைத்தாதுவை அறிதல், நாடிபார்த்தல். பண்டிதர் வந்து கை பார்த்தனர் (மூலரும். 432). 2.இரேகை பார்த்தல். கட்டழகி மின்னிடைக்கு கைபார்த்து குறியுரைத்து ... கலந்து வாரும் (மின்.குறம் ப.23). 3.உதவி நாடுதல். இரந்தோர் கைபார்த் துய்பவர் பிறர்க்கு மாறா துதவி (திருவிளை.பு.42,5).

கைபார்[2]-த்தல் 11வி. 1.பழுதுபார்த்தல். (இலங்.வ.) 2.வியாபாரச் சரக்குகளைச் சோதித்தல். (செ.ப.அக.)

கைபார்த்திரு-த்தல் 12வி. நம்பிக்கொண்டிருத்தல். தன் கைபார்த்திருக்கிற தோழிமாரைப் பட்டினி கொள்ளா நின்றாள் (பெரியதி. தமிழாக்.2,7,162 வியாக்.).

கைபிசை-தல் 4வி. செய்வதறியாது திகைத்தல். (ஐம்.அக.)

கைபிடி[1] பெ. 1.நம்பிக்கை. (யாழ்.அக.) 2.உறுதி. (முன்.) 3.கையிற் பெற்றுக்கொண்ட பொருள். (சாச.அக.) 4.கைபிடிக்கவைத்திருப்பது. (யாழ்.அக.)

கைபிடி[2]-த்தல் 11வி. 1.மணம்புரிதல். (வட்.வ.) 2.கைக்கொள்ளுதல். கைபிடித்து விடுதற்குரியவோ (அரிச்.பு.நகர்நீ.123). பன்றிகுத் தும்பல்லயமும் பாரிசமுங் கைபிடித்து (பவளக்.மாலை ப.45). 3.நாடியறிதல். (யாழ்.அக.)

கைபிடிசீலை பெ. அடுப்பில் கூடான பாத்திரத்தை எடுப்பதற்காகப் பிடிக்கும் பழந்துணி. (தக்கயாகப்.)

கைபிடித்துப்பார்-த்தல் 11 வி. நாடிபார்த்தல். (நாட்.வ.)

கைபிடிபத்திரம் பெ. 1.நெருங்கிய அன்பு. (செ.ப.அக.) 2.சேமப்பொருள். (முன்.) 3.அந்தரங்கமான ஆள். (முன்.)

கைபிடியானவன் பெ. உற்றசினேகிதன். (யாழ்.அக.)

கைபியத்து பெ. →கைபீது. (வின்.அக.)

கைபியத்துநாமா பெ. பிரமாணபத்திரம், உறுதி மொழித்தாள். (செ.ப.அக.)

கைபிழை-த்தல் 11வி. 1.தரும நெறியை விடுதல். பேறு உயவு அல்லதும் இல்லை எனக் கைபிழைத்தீர் (சிவதரு.சுவர்க்க.194). 2.தப்பிப்போதல். கனவில் தொட்டது கை பிழையாகாது (பரிபா.8,103).

கைபிழைபாடு பெ. →கைப்பிழை. (வின்.அக.)

கைபீது பெ. (உருது) விவரக்குறிப்பு. (செ.ப.அக.)

கைபுகு-தல் 6வி. 1.வசப்படுதல். திருமந்திரங் கைபுகுந் தவாறே ஈசுவரன் கைபுகுரும் (சிவசன.97). 2.ஒருவன் பேரிலிருந்த பத்திரம் பிறனொருவன் பேருக்கு மாறுதல். இது கைபுகுந்த பத்திரம் (நாட்.வ.).

கைபுகுந்தவழக்கு பெ. கையில்வந்துவிட்ட தென்று டையவனுக்குமில்லை யென்பது. (கதிரை.அக.)

கைபுடை-த்தல் 11வி. 1.கைகளைத் துன்பத்தால் அடித்துக் கொள்ளுதல். கைபுடைய மேலிவுடை நெஞ் சினர் சிறுமை கூர (பதிற்றுப்.26,9). 2.இரக்கத்தால் கையைத் தட்டுதல். காணுநர் கைபுடைத் திரங்க (பதிற்றுப்.19,26).

கைபுனை[1] பெ. 1.அலங்கரிக்கை. (செ.ப.அக.) 2.பூத் தொடுக்கை. (சதுரக.)

கைபுனை[2]-தல் 4வி. 1.அலங்கரித்தல். கைபுனை நறுந்தார் கமழும் மார்பன் (ஐங்.182). கைபுனை தாரினர் கண்ணியர் (பரிபா.தி.2,1). கையுனைந்த பூமலிசேக்கை (புற.வெண்.12 பெண்பாற்.4). கைபுனைந் தியற்றல் செல்லா ... பட்டு (சிவஞா.காஞ்சிப்பு.திருமண.31). கலையிழந்த மதியமெனக் கைபுனையாதிருப்பதுவோ (மேகநா.2,15). 2.கையால் செய்தல். கை புனை கிளர் வேங்கை (பரிபா.10,46). 3.பூத்தொடுத்தல். (யாழ்.அக.)

கைபூசு-தல் 5வி. உண்டகையைக் கழுவுதல். மறையோ ரினிதருந்திக் கைபூசி (கூர்மபு.உத்தர.21,9). கலம்கழித்துக் கைபூசி (ஆனந்த.வண்டு.தூது 169).

கைபொறுப்பு (கைப்பொறுப்பு) பெ 1.தன்பொறுப்பு. (யாழ்.அக.) 2.கைநட்டம். (வட்.சொ.வி.ப.110)

கைபோ[1]-தல் 45வி. 1.முற்றுதல். காழகிலு நறுஞ் சாந்துங் கடிவாசப் பூம்பொடியுங் கமழ்ந்து கைபோய் (சூளா.1528). 2.முற்றும் வல்லவனாதல். வாய் மொழி விச்சை கற்றுக்கை போகிக் காணவும் பட்டது (பெருங்.3,12,20-21). ஓவியத்துறை கைபோய வொருவனை (நைட.அன். கண்.6).

கைபோ[2]-தல் 45வி. 1.கடந்து செல்லுதல். நிறை யெனுஞ் சிறையைக் கைபோய் (வீவக.710). 2.தொடர்தல். வெய்ய கையறு வினைகள் கைபோய்க் கடுந்துயர் விளைத்த போழ்தின் (சூளா.198).

கைபோடுதல் 6வி. 1.பிறரறியாமல் கைகளைத் துணியால் மறைத்துக் கொண்டு கைக் குறிப்பால் விலை பேசுதல். மற்றோர் புலவன் மடிமேல் கை போட்டிழுத்து விற்றால் அல்லாது (நல்லதம்.காதல் 56). 2.துணிதல். அவருடைய வேளை இன்னும் வராதபடி யினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை (விவிலி.யோவான் 7,30). 3.கைகொடுத்து உறுதி தருதல். (வட்.வ.) 4.தொழிலேற்கத் தொடங்குதல். வேலையில் இன்னுங் கைபோடவில்லை (வின்.அக.).

5.காமவிச்சையோடு தொடுதல். (நாட்.வ.)

கைம்பெண் பெ. விதவை, கணவனையிழந்தவள். காவலர்கள் கோவிலிலே கைம்பெண்டீர் என்பார்கள் (பவளக்.மாலை ப.10). கணவனைப்பறிகொடுத்தார் கைம்பெண்டாயிருப்பார்கள் (மின்.குறம் ப.14).சிகை யைக் கத்தரித்து விட்டாயே கைம்பெண்ணா நீ (கவிரா. கதை ப.25). கைம்பெண் நெற்றிக்கோ வெறுமை மிகச் சொந்தம் (கலைக்.கவிதை.85). கைம்பெண்களுக்கு மறுமணஞ் செய்கிற வழக்கமில்லாதபடியால் (பெண் கல்வி ப.113). அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந் தான், அவளோ கைம்பெண்ணாயிருந்தாள் (விவிலி. லூக்கா 7,12). கைம்பெண் பலபேர் இருந்தும் (இயேசு காவி.ப.131).

கைம்பெண்கூறு பெ. ஆண் சந்ததியில்லாத விதவைக்குக் குடும்பச்சொத்திலிருந்து கொடுக்குஞ் சீவனாம்சம். (வட்.வ.)

கைம்பெண்சாதி பெ. →கைம்பெண்டாட்டி. (செ.ப. அக.அனு.)

கைம்பெண்டாட்டி பெ. →கைம்பெண்சாதி. ஒரு கைம்பெண்டாட்டிக்கும் அடைத்துக் கொண்டிருக்கலாம் படி (அமலானது.4 அழ.ப.51). இருக்கண் குடியில் ... தானியங்களை வசூல் செய்து கஞ்சிவைத்து வழங்குவர், அத்துடன் ஒருகைம் பொண்டாட்டியான கிழவியிடம் ஒரு கூடையைக் கொடுத்து ... பங்சம் பிழைப்பதற்காக ஊர் எல்லையைத் தாண்டி விடுவர் (இராமநாத.நாட்.அள. ப.154).

கைம்பெண்வத்திரம் பெ. அமங்கலியுடுக்கத்தக்க புடைவை. (யாழ்.அக.)

கைம்பொண் பெ. →கைம்பெண். கைம்பொண்ணது முளைதெளிந்தால் கைலாசம் சேர்ந்திடுவர் (கம்.நாட்.பா.2).

கைம்பொண்சாதி பெ. →கைம்பெண். (வட்.வ.)

கைம்மகவு பெ. கைக்குழந்தை. கைம்மக வோடு காதலவ ரொடும் (பரிபா.15,47).

கைம்மட்டம் பெ. →கைமதியம். (யாழ்.அக.)

கைம்மட்டு பெ. →கைமதியம். (முன்.)

கைம்மடல் பெ. தோட்பட்டை. (முன்.)

கைம்மண்டை பெ. கையாகியபாத்திரம். (முன்.)

கைம்மணி பெ. பூசையில் வழங்கும் சிறு மணி. கரடிகைத் தொகுதியும் கைம்மணிப் பகுதியும் (பெருந். 1047). கைம்மணிச் சீரன்றிச் சீரறியா (தமிழ்நா.102).

கைம்மதக்குன்றம் பெ. (கையை உடைய) யானை. புனத்தெழு கைம்மதக் குன்றம தாய் (நம்.அந்.56).

கைம்மதம் பெ. யானையின் துதிக்கையினின்று வெளியேறும் மதநீர். (திவா.)

கைம்மதியம் (கைமதியம்) பெ. → கைமதிப்பு. (யாழ்.அக.)

கைம்மயக்கம் பெ. மோக மயக்கம். திரிகண்ணர் ஆனவர் செய்தகைம் மயக்கமோ (திருக்குற்றா. குற.72,26).

கைம்மயக்கு பெ. → கைம்மயக்கம். (யாழ்.அக.)

கைம்மரம் (கைமரம்) பெ. வீட்டுக் கூரையின் கை, வீட்டுறுப்பு. வீடு கைம்மரங்களினின்று நீங்கவுஞ் செய்திட்டது (கோடீச்.கோவை 182 உரை).

கைம்மருந்து பெ. 1.கணவனைத் தன்வசமாக்க பெண்டிர் உபயோகிக்கும் மருந்து. அவன் மைம்மருந்தான் மெய்ம்மறந்து திரிகின்றாயே (தனிப்பா. திர.323,18). 2.அனுபவப்பட்ட மருந்து. (வின்.அக.)

கைம்மலர் பெ. கையாகிய மலர். குலோத்துங்கன் வாசல்வந்தாற் றானே திறக்குநின் கைம்மல ராகிய தாமரையே (பெருந்.1489).

கைம்மலை பெ. (கையையுடைய மலை) யானை. கைம்மலை கொம்பு முறிந்தமை கண்டவர் காவல னைக்குறுகி (இரணியவதைப்.368). கைம்மலையே போலுமுலைக் கண்கள் கறுத்தன (திருவாமாத்.பு. உத்தர.7,34). கைம் மலைக்குலங் கார்மலை சூழ்தல் போல் (திருக்குற்றா.பு.17,21). கைம்மலையினூரி போர்த்து (தமிழரசி குற.57). கைம்மலை நேர் புதல்வர் களும் பிறந்தார் (முசு.நா.நூல் 25).

கைம்மறதி பெ. ஞாபகத் தவறு. (யாழ்.அக.)

கைம்மறி[1] பெ. 1.கையிற்றரித்த மான். இம்மணிவலனுடற் சீன்மென்னவக் கைம்மறி கரந்தவர் கூற (திருவிளை 17,18). 2.கையால் விலக்குகை. செம்பொன் னூக்கிக் கைம்மறியில் வணிகருக்கு விலைகொடுப்பான் வருவார் முன் (திருவிளை.பு.17,84).

கைம்மறி[2]**-த்தல்** 11வி. 1.கைகவித்து விலக்குதல். கைம்மறித்த காந்த ளந்தோ தகாதெனவே (சீவக.1227). 2.கையால் தடுத்தல். (நாட்.வ.) 3.கையேந்திநிற்றல். நாடகம் கண்டு கொன்றை பொன் சொரிந்த காந்தள் கைம்ம றித்தவே (சூளா.788).

கைம்மறு-த்தல் 11வி. →கைம்மறு-த்தல். (யாழ்.அக.)

கைம்மறை பெ. உடன்மறை. (முன்.)

கைம்மா பெ. 1.(துதிக்கையை உடைய) யானை. இலங் கொளி மருப்பிற் கைம்மா (கலித்.23,1). கைம்மாவின் றோல்போர்த்த காபாலி (தேவா.2,44,2). ஞால் கைம்மா வேக மும்மத வெள்ள மளாவிய போக மல்லிகை நாறும் புனல்களே (சூளா.128). பொன் னெயிற் குறுகிக் கைம்மாப் புரவலன் இழிந்து (நாக.காவி.14). கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்து (காரைக்.இரட்.16). கவிழ்மதத்த கைம்மா வயத்ததோ பாகு (நீதிநெறிவி.45). கோது உற்ற மால் இருள் கைம்மா இருள் நெறி (செழிய.தாக.கோவை 38). கைம்மா காத்த சேவிலே கொடுத்த தரிசனம் பெற்றார் (தனிப்பா.திர.18). பொறியரவு தலைமாலை வெள்ளென்பு

கைம்மாப் புலிச்சருமம் (செங்கழு.பிள். 41). கைம்மா தாக்கக் கடுநோய் உழந்தேன் (அனிச்சஅடி ப.163). 2.பன்றி. (ஆசி.நி.103)

கைம்மாச்சி (கைம்மாய்ச்சி) பெ. →கைவிலங்கு. (யாழ்.அக.)

கைம்மாட்டாங்கு பெ. தற்குறி. ஆளுடையானும் கைமாட்டாங்கானமைக்கும் (தெ.இ.க.7,406).

கைம்மாய்ச்சி (கைம்மாச்சி) பெ. →கைவிலங்கு. (ஐம்.அக.)

கைம்மாயம் பெ. →கைம்மயக்கு. (யாழ்.அக.)

கைம்மாற்று பெ. 1.கடன். (ஐம்.அக.) 2.உடன்மாற்று. (யாழ்.அக.)

கைம்மாறு[1] பெ. 1.பிரதியுபகாரம், மாற்றுதவி. கைம்மாறு வேண்டா கடப்பாடு (குறள்.211). கண்முழு துடம்பிற் பெற்றேன் காளைகைம் மாறு காணேன் (சீவக.1684). செஞ்சோறு அறச்செய்த கைம்மாறு காண்மின்களோ (கலிங்கத்துப்.490). தேரில் இதற்குண்டோ கைம்மா றென வுரைத்தாள் (நள.297). கைம்மாறென்று யின்னுயுயிர் காப்பதே கடன் (பகவற்.2,9). யான் செய்யுங் கைம்மாறா யெம் பிராற் கொன்றுண்டோ (திருவிளை.பு.17,86). பின் செய்த கைம்மாறோ (அரிச்.பு.6,15). உனக்கென்ன கைம்மாறு காட்டுவேன் (தாயுமா.பா.12,9). ஓர் கைம்மாறு உற்றவாறு இவள் கேட்பேன் (தேம்பா.1,6,7). என்றும் மறவேனடா - உயிர் மாமனே என்ன கைம்மாறு செய்வேன் (பாரதி. பாஞ்சாலி.54). 2.பிரதி, மாற்றீடு. கைம்மாறா நோயும் பசலையும் தந்து (குறள்.1183). 3.உதவி. நின் அன்பு உரிமைக்கு என் செய்வோம் கைம்மாறு (தனிப்பா. திர.24).

கைம்மாறு[2]**-தல்** 5வி. 1.மேற்கொள்ளுதல். களிற்றியல் கைம்மாறுவார் (பரிபா.9,50). தம்மாற் பயன்றூக்கா தியாவரையுந் தாங்கினும் கைம்மாறுங் கால முடைத்தன்றே (பெருங்.830). 2.விற்றல். (யாழ்.அக.)

கைம்மான் பெ. 1.குதிக்கையுடைய விலங்கு) யானை. கைம்மான் பிணிக்குக் கருமான் சிதைக்குங் கதை யெனவே (திருவாரூர்க்கோவை 268). முழங்கு கைம்மான் பேரொலி யெல்லாம் (திருவிளை.பு.நகரச். 45). கைம்மான் குதிக்கறி யாதென்று நீரென் கலைமதிக்கு இம்மான் குதிக்கு மென்றோ (நாணிக். ஒருதுறைக்கோவை 8). 2.விநாயகக்கடவுள். கைம்மானைச் சீராடியதுடை யான் (திருக்காளத்.உலா 350). 3.சிவபெருமான் கையிலேந்திய மான். கைம்மான் எருத்தர் (பரிபா.6, 33). கைம்மானும் சற்றே கலங்கி (கூளப்ப.காதல் 9).

கைம்மிகல் பெ. ஒழுக்கக்கேடு. கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல் (தொல்.பொ.256,4). இது கைம்மிகல் என்னும் மெய்ப்பாடு (சீவக.710 உரை).

கைம்மிகு-தல் 4வி. 1.அளவுகடத்தல். காதல் கைம் மிகக் கனவின் அரற்றலும் (தொல்.பொ.113,6). காதல் கைம்மிகக் கடீஇயாற்கு (நற்.313). மாயச்சூள்தேறி மயங்கு நோய் கைமிக (கலித்.85,26). கலங்கி நோய் கைம்மிகும் (சிலப்.18,12). கைம்மிகத் தண்ணிலா வுலகெலாந் தவழ்ந்து வான் கொள (சூளா.71). அரியை தூதல் கைம்மிகக் கண்டு (புற.வெண்.329 கொளு). காமங் கைம்மிகக் கலங்கி ஆற்றாள் (செ.பாகவத.508). கைம்மிக் கெழு காதல் (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.26).2.எல்லை கடத்தல். வெம்முனை அருஞ்சுரம் நீந்திக் கைம்மிக்கு (அகநா.47). 3.சாதி தருமத்திற்கு மாறுபட்டு ஒழுகுதல். கைம்மிக னலிதல் (தொல்.பொ.260). 4.துன்புறுத்தல். ஒருவரை ஒருவர் கைம்மிக்கு (கலிங்கத்துப்.260)

கைம்மிடிப்பு பெ. கையிலோன்றுமில்லாமை. (யாழ். அக.)

கைம்மீறு-தல் 5வி. அளவுக்கு மிஞ்சுதல். கண்ணனைக் காணாமல் காதல் கைம்மீறியது (மலரும்.150).

கைம்மீன் பெ. அத்தம், 13வது நட்சத்திரம். (பிங்.251)

கைம்முகிழ்-த்தல் 12வி. கடவுள் வழிபாடு வந்தனம் முதலியவற்றில் கையைக் கூப்புதல். (நாட்.வ.)

கைம்முட்டிசெய்-தல் 1வி. கையைப்பொத்துதல். (யாழ்.அக.)

கைம்முட்டு பெ. → கைம்மிடிப்பு. (முன்.)

கைம்முடக்கம் பெ. வினைக்கேடு. (முன்.)

கைம்முடிப்பு பெ. முடிப்புபணம். (முன்.)

கைம்முத்திரை பெ. கையால் காட்டப்பெறும் செய்கை, நாட்டிய அபிநயம் போன்றவை. முகபாவங்களைக் காட்டிக் கைம் முத்திரைகளோடு விளக்குவது நாடகம் (நா.கலை ப.22).

கைம்முதல் பெ. 1.சாதனம், வழிவகை. ஒரு கைம்முத லின்றிக்கேயிருக்க (திருவாய்.4,7,9 ஈடு). இக்கைம் முதலும் இல்லை யென்கிறார்கள் (திருப்பா.1 ஆறா.பத். 22 ப.28). 2.வியாபாரம் முதலியவற்றிற்கு வைத்த கைப்பொருள். கைம்முதற்கு நட்டமில்லை (பண.தூது 241). 3.திரவியம், பொருள். கைம்முதல் கொடுத்தனர் (உபதேசகா.சிவத்துரோ.72).

கைம்முற்று-தல் 5வி. முடிவு பெறுதல். கைமுற்றல நின் புகழே (புறநா.53,8).

கைம்முறை பெ. கைம்மாறும்முறை. (யாழ்.அக.)

கைம்மூட்டு பெ. கமுக்கட்டு, தோள் பொருத்து. (பிங். 1026)

கைம்மெய்காட்டு-தல் பெ. அபிநயங்காட்டுதல். (யாழ்.அக.)

கைம்மேலே வி.அ. உடனே. (முன்.)

கைம்மேற்பணம் பெ. வலைப்பொருள் முதலிய வற்றுக்காக உடன்கையிற்கொடுக்கும்பணம். (முன்.)

கைம்மை பெ. 1.கணவனை இழந்த நிலைமை. ஒண்ணுதல் மகளிர் கைம்மை கூர (புறநா.25,12). தம்முறு பெருங்கணவன் தழலெரி அகம் மூழ்க கைம்மைகூர் ... மகளிர் (சிலப்.18,43). கருந்தடங் கண்ணி கைம்மைகூறின்று (புற.வெண்.257). பெண்டிர் கைம்மையின் அறுத்த கூந்தல் (தகடூர்யாத்.33). கைம்மை யாம்பெயர் அணங்கினோர் பெறாவகை கறுத்த ... தெம்பிரான் (கந்தபு.2,38,6). கலனழிந்த கைம்மையார் பெண்மை நலம் போல் (நீதிநெறிவி.65). கைம்மையில் பலரையும் கலந்த தீமையால் (சிவராத்.பு.5,38). ஓர் கைம்மையைக் கலத்த னோக்கி (நைட.கலிதோன்று.9). கைம்மை அகற்று (பாரதிதா.ஆத்தி.21). 2.காதலனைப் பிரிந்திருக்குந் தனிமை. கைம்மையால் ஒண்கலையும் ... தோற்றவர்கள் (நம்.ஆளு.திருவுலா.128). கொழுநற் கொன்றுங் கைம்மை யதாய் நெடுங்காலஞ் சோரத்தயலோர் ஞெமுங்கப் புல்கி (ஞான.உபதேசகா.1025). 3.→கைமதிப்பு. (வின்.அக.)

கைமட்டு பெ. →கை மதிப்பு. (வின்.அக.)

கைமடத்தல் பெ. சுத்தியல் போன்ற கருவி. (இலங்.வ.)

கைமடல் பெ. கைச்சீப்பு. (யாழ்.அக.)

கைமடிப்பு பெ. வஞ்சகச் செயல். (முன்.)

கைமண்டை பெ. நீர் முதலியன ஏற்பதற்குப் பாத்திரம் போல் குவித்துக்கொள்ளுங் கை. குழந்தைக்குப் பாலைக் கைமண்டை வைத்துப் புகட்டு (செ.ப.அக.).

கைமணி பெ. பூசைமணி. தூப மோடு துலங்கிய கைமணி தீப நல்லுப சாரந் திகழ்ந்திட (நகுல.பு.மூர்த்தி.105).

கைமதவரை பெ. யானை. கைமதவரைத்தோல் போர்த்த கடவுள் (மருத.பு.43,71).

கைமதிப்பு பெ. 1.கையால் தூக்கி மதிக்கும் மதிப்பு. (செ.ப.அக.) 2.உத்தேசமதிப்பு. (நாட்.வ.)

கைமதியம் (கைம்மதியம்) பெ. → கைமதிப்பு. (யாழ்.அக.)

கைமயக்கு பெ. வசியமருந்து. (வட்.வ.)

கைமரம் (கைம்மரம்) பெ. 1.வீட்டுக்கூரையின் கை. (தொ.வ.) 2.உத்தரம். (ஆட்சி.அக.ப.233)

கைமல் பெ. நாயர்களுக்குரிய பட்டப்பெயர். (தென்.குல.குடி.3 ப.59)

கைமலம் பெ. கன்றிறந்தபின் பால்கொடுக்கும் மாடு. (நாட்.வ.)

கைமலிவு பெ. விலை நயம். கைமலிவு பார்த்து வாங்கு (வட்.வ.).

கைமலை பெ. யானை. கைமலை மீது கைமலை கண்டு ... பதுங்கி (பணிமொழி 2,1,71).

கைமற-த்தல் 12வி. இழத்தல். காமனார் கொள்ளையிலே கைமறந்தேன் (தெய்வச்.விறலி.தூது 532).

கைமறதி பெ. →கைத்தவறு. (வின்.அக.)

கைமறி[1]**-த்தல்** 11வி. கையைக் கவிழ்த்தல். வண்டாரார் வண்கடக மின்னத்தங் கைம்மறித்து (சீவக.1809).

கைமறி[2]**-தல்** 4வி. →கைமாறு[3]-தல்-1. (செ.ப.அக.).

கைமறு-த்தல் 11வி. கொடுக்க மறுத்தல். (முன்.)

கைமறை பெ. விதை விதைத்தபின் விதை உள்ளடங்க உழும் மேலுழவு. (இலங்.வ.)

கைமா[1] பெ. (உருது.) கொத்தின இறைச்சி. (வட்.வ.)

கைமா[2] பெ. யானை. பொன்னுலகக் கைமாப் பிடிக்கு ஏற்றார் (தணிகைவெண்.2). பனைக்கைமா நூற்றுப் பத்துத் தத்துமா னயுதம் (திருவிளை.பு.37,5). கைமாவி னுரியானைக் கழல்பணிந்து பாடினார் (பெரியபு.6,88). முடலை யடைந்த கைமா (சங்கர.கோவை 103). பரிமாக் கைமா ... விமானமேன் மேவிச் சென்றான் (குமணசரித்.195). கைமா கடிலக்க க் கவின்றழைய (தென்பு.உலா 622).

கைமாட்டாதார் பெ. வேலை செய்ய இயலாதவர். கைமாட்டாதார் ... நரகமென்று புகல்வர் (பிரபோத.13,10).

கைமாட்டிக்கொள்(ளு)-தல் 2வி. அகப்பட்டுக் கொள்ளுதல். (செ.ப.அக.)

கைமாட்டு-தல் 5வி. கையால் இயலுதல். கைமாட்டாதார் பாவம் வரும் பழி மேலுண்டு புகழ்வர் (பிரபோத.13,10).

கைமாத்து பெ. கடன். (உதயதாரகை 1969 ப.40)

கைமாயம் பெ. 1.கையினாற் செய்யும் மாயவித்தை. (செ.ப.அக.) 2.சாமர்த்தியத் திருட்டு. (வின்.அக.)

கைமாயவித்தை பெ. செய்யமுடியாத காரியத்தைச் செய்வதாகச் சொல்லிச் செய்யுந் தொழில். (செ.ப.அக.அனு.)

கைமாற்றம் பெ. →கைமாற்று. (செ.ப.அக.)

கைமாற்றம்பிள்ளை பெ. கைமாற்றுக் கடன் கணக்குப் பார்க்கும் உத்தியோகத்தன். (வட்.வ.)

கைமாற்று பெ. 1.கையை மாற்றிமாற்றி நீரிற்போட்டு நீந்தும் நீச்சு. (முன்.) 2.சீட்டில்லாமல் கடனாக வாங்கும் பொருள். (ரா.வட்.அக.) 3.கைக் கடன். சீட்டில்லாமல் சிறிது காலத்துக்கு வாங்கும் கடன். கருணையது வன்றியொரு கைம்மாற்றுக் கன்றே (மதுரைச்.உலா 372). மிகவும் சங்கோசத்துடன் ... கைமாற்று வாங்கி (அவளும் அவனும் ப.246). 4.பரிவர்த்தனை. (நாட்.வ.) 5.விற்பனை. (முன்.)

கைமாற்று[2]**-தல்** 5வி. 1.ஆளை வேலையினின்று முறை மாற்றுதல். (வின்.அக.) 2.பரிவர்த்தனை செய்தல். (நாட்.வ.) 3.விற்றல். (முன்.)

கைமாறாட்டம் பெ. 1.கைத்தவறு. (செ.ப.அக.) 2.கைவன்மையாற் செய்யும் ஏமாற்றம். (முன்.)

கைமாறாப்பு பெ. கைகளை மார்போடு சேர்த்து மாறித் தோள் மேல் வைக்கை. (வட்.வ.)

கைமாறு[1] பெ. 1.பதிலுதவி. கணங்குழையீர் யாமுமக்குக் கைமாறி லேமென்று (சூளா.1645). புவிகை மாறின்றிப் போற்றவந் தருளினார் போந்தார் (பெரியபு.28,232). கவருங் கிளியினுக் கின்றுகை மாறொன்றுங் கண்டிலமே (அம்.கோவை 84). அந்தநன்றிக் கைமாறா ஆண்டவன் நீங் காத்தொழுவீர் (கித்தேரி.அம்.3,47). நன்றி அனைத்தும் இணைந்து புகழ்ந்தாலும் கைமாறு ஆகிடுமோ (வழிபாடு.ப.111). 2.பிரதி. (நாட்.வ.) 3.→கைமாற்று. (முன்.)

கைமாறு[2]-தல் 5வி. பண்டம் மாறுதல். (வின்.அக.)

கைமாறு[3]-தல் 5வி. 1.ஒருவர் கையினின்றும் மற்றொருவர் கைக்குச் செல்லுதல். (செ.ப.அக.) 2.வேலையாட்கள் முறைமாறுதல். (வின்.அக.) 3.விட்டுவிடுதல். ஆசை கை மாறவே செய்வ செய்வது சத்துவத் தியாகமே (பகவற்.18.9). 4.கட்சிமாறுதல். (வின்.அக.) 5.ஒழுக்கத்தைக் கைவிடுதல். கடிதகன்று கைமாறி (கலித்.65).

கைமான் பெ. யானை. கைமான் கொள்ளுமோ என (புறநா.96,8).

கைமானோன் பெ. விநாயகன். வேந்தவள்ளத்துள்ள மால் நோவு தன்னைக் கைமானோன் ... கபிலை வெற்பு (கபிலை.கோவை 6).

கைமிகு-தல் 4வி. 1.மிகுதிப்படுதல். அற்றனர் அறிவும் நானும் ஆசை கைமிக்கு அழிந்தார் (திருக்காளத்.பு. 31,5). 2.அளவுகடத்தல். காப்பு கைமிகுதல் உண்மை யான (தொல்.பொ.256,4). கைமிகுத் தால வட்டம் ஏய்ப்ப ... வலைவீசி (சேர.மும்.கோவை 25,3). 3.பெருகுதல். கரைஇல் காதல் கைமி கத்தொழும் (சிவஞா.காஞ்சிப்பு.திருஓண.6).4.அதிகமாதல். மாயச் சூடேறி மயங்கு நோய் கைமிக (கலித்.85,26). கைமிக்குக் காட்டினால் (இயற்.இரண்டாந்திருவந்.56). காண்டகு காதல் கைமிக்கு ... புகழ்கிற்பான் (சிவஞா.காஞ்சிப்பு. புண்ணிய.15).

கைமிஞ்சு-தல் 5வி. 1.பிறரோடு சண்டை செய்ய முற்படுதல். (நாட்.வ.) 2.சண்டை முற்றுதல். கை மிஞ்சாது இடையே விலக்கினார் (தெய்வச்.விறலி.தூது 474). 3.வரம்புமீறுதல். போனா ளெனைவிட்டுக் கைமிஞ்சியே (தனிப்பா.தி்ர.138,351). 4.கை ஓங்குதல். சொன்னவிடத்திலே யவர்கள் கைமிஞ்சாமல் நாம் சண்டை பண்ணப் போகாது (ஆனந்த.தினசரிச்.3 ப.55).

கைமிடுக்கு பெ. சாமர்த்தியம். என் கைமிடுக்காலே யறிந்து சொல்லுகறேனல்லேன் (இரகசிய.135[1]).

கைமீன் (கைம்மீன்) பெ. அத்தம், 13வது நட்சத்திரம். (சுகர்நாடி ப.110)

கைமுகம் பெ. யானை. செருக்கும் படைமன்னர் கைம்முகஞ் சாய்த்தவர் (கப்.கோவை 126).

கைமுகம் பெ. உடலைவிட்டு உயிர்போகுங்கதிகளு ளொன்று. (சீவக.948 உரை)

கைமுகிழ்-த்தல் 11வி. கைகூப்புதல். கங்கைமக னுங்கலச யோனியுமே கைமுகிழ்த்தார் (பாரத வெண்.163).

கைமுட்டி பெ. 1.விரல்மடக்கியுள்ளகை. பொருவில் கைமுட்டி செய்து (திருக்குடந்.பு.50,12). 2.ஆடவர் தங்கள் பிறப்புறுப்பை உருவுகை. (நாட்.வ.) 3.பளிங்கு விளையாட்டில் தோற்றவர் விரலை மடக்கிக் கொண்டு புறப்பக்கத்தால் அல்லது முன்கையை மடக்கிக் கொண்டு முட்டியால் பளிங்கைக் குழிக்குத் தள்ளுகை. (விளை.வ.) 4.முட்டியுத்தம். (வட்.வ.)

கைமுட்டு பெ. 1.விரற்கணு. (செ.ப.அக.) 2.→கை முடக்கம். (முன்.)

கைமுடக்கம் பெ. 1.பணமுட்டுப்பாடு. (நாட்.வ.) 2.பொருள்முட்டு. (யாழ்.அக.) 3.செய்கைக்குக் கை உபயோகப்படாமை. (வட்.வ.)

கைமுடிப்பு பெ. 1.கட்டுச்சோறு. (முன்.) 2.கைப்பொருள். (வின்.அக.)

கைமுடை பெ. →கைமுடக்கம்-1. (செ.ப.அக.)

கைமுடைஞ்சல் பெ. →கைமுடக்கம்-1. (முன்.)

கைமுதல் பெ. 1.சாதனம். (முன்.) 2.திரவியம். (முன்.) 3.வியாபாரம் முதலியவற்றிற்கு வைத்த கைப்பொருள். கைமுதலை தோற்றேன் திருட்டை யெண்ணிப் பார்த்தேன் (திருவிடை.நா.ப.35,9).

கைமுதிகநியாயம் பெ. அதுவே அப்படியானால் மற்றதனைப் பற்றிக் கூறுவதேன் என்னும் வாத நெறி. குழறுபடை கைமுதிகநியாயத்தான் இனிது விளங்கும் (சித்.மரபு.கண்.21).

கைமுதிர்-தல் 4வி. இளமைப்பருவம் நிரம்புதல். (வட்.வ.)

கைமுந்து-தல் வி. 1.திருடுதல். அவன் கைமுந்துந் தன்மையன் (செ.ப.அக.). 2.→கைமிஞ்சு-தல். (முன்.)

கைமுழம் பெ. முழங்கை நீளம் உள்ள அளவு. (முன்.)

கைமுள் பெ. தோட்டத்தில் மண்ணைக் கிளறுவ தற்குப் பயன்படுத்தும் முள் போன்ற கருவி.(இலங்.வ.)

கைமுளி பெ. மணிக்கட்டிலுள்ள எலும்பு. (வட்.வ.)

கைமுளுத்தம் பெ. புத்தாண்டு பிறந்தற்குப் பின்பு முதன் முதலாக நல்ல முகூர்த்தலில் செய்யும் கொடுக்கல் வாங்கல். (இலங்.வ.)

கைமுறி[1] பெ. 1.ஓலைத்துண்டு. (செ.ப.அக.) 2.ஓலைச் சீட்டு. (முன்.)

கைமுறி[2]-தல் 4வி. துணையில்லாதுபோதல். சிநேகிதன் வெளிநாடு போனதாலை அவனுக்குக் கைமுறிஞ்சு போச்சு (இலங்.வ.).

கைமுறுக்கு பெ. அரிசிமாவைக் கையால் முறுக்கி ஒன்றையடுத்து ஒன்றாய் பல வட்டங்கள் வருமாறு செய்து எண்ணெயில் பொரித்தெடுக்கும் பணியாரம். வெள்ளைப் பிரம்புத் தட்டில் கைமுறுக்குகளும் உரித்து தோல் நீக்கிய வேர்கடலைப் பருப்பும் (செ.ஒரு.ம.64,6).

கைமுறை பெ. 1.விளையாட்டு முதலியவற்றில் மாறி மாறி வரும் முறை. (செ.ப.அக.) 2.மருந்து செய்யும் அனுபவமுறை. (முன்.) 3.நீர்த்தனம். நின்று பண்ணுங் கைம்முறை தப்பா (சரவண.தூது 417).

கைமூட்டு பெ. 1.தோட்பொருத்து. (பிங்.) 2.கழுக்கட்டு. (முன்.)

கைமூலம் பெ. 1.கைராசி. (வின்.அக.) 2.கமலம், கன்றிழந்தபசு. (வட்.வ.) 3.கழுக்கட்டு. (பிங்.)

கைமெய்காட்டு-தல் 5வி. அபிநயங் காட்டுதல். (வட்.வ.)

கைமெய்யாய் வி.அ. கையுங் களவுமாய். (முன்.)

கைமேசு பெ. கைவிரலுறை. (செ.ப.அக.)

கைமேல் வி.அ. →கை மேலே. (முன்.)

கைமேலே வி.அ. உடன்கையிலே. கை மேலே பணம் கிடைத்தது (நாட்.வ.).

கைமேற்படு-தல் 6வி. கொடுத்தல். கொள்ளற்க கொள்ளார் கை மேற்பட (நான்மணிக்.1).

கைமேற்பணம் பெ. விலைப்பொருள் முதலியவற்றுக்காக உடன்கையிற் கொடுக்கும் பணம். (செ.ப.அக.)

கைமேற்பலன் பெ. உடனடியாகி நேரும் பயன். புல்லையி னாயகி கைகை மேற்பலன் காட்டித் தருவளே (புல்லையந்.65).

கைமை (கைம்மை) பெ. விதவை,கணவனை இழந்த நிலைமை. கலங்கினள் கைமையுற்றி ருந்தான் (சிவராத்.பு.5,19). இறுதிஎனத்தகு வியந் வோய்க் கைமை (பிரமோத்.4). வகுத்தவர் யிரங்குற் றந்தான் வந்திடிற்கணிகையர்கும் மிகுத்தாயிரங் கொண்டுற் றாளினமையிற் கைமை யாகும் (திருப்பனந்.பு.நாக கன்னி.10). கொழுநன் இழந்த இளங்கைமை (தேம்பா. 2,7,30). அவுணர் மனைவியர்கள் திருநூல் இழந்து கைமை எய்த (திருமுரு.பிள்.பா.53). கைமை யாயெழு காதலன்றன்னுடன் (முகியித்தீன் பு.1919). கைமையிலே என்னைக் கலங்க வைப்பாயோ கருணை மனமிரங்கி வாழவைப்பாயோ (கண்ண.திரை.பா.2,321).

கைமோசம் பெ. 1.சதி. (செ.ப.அக.) 2.எதிர்பாராது நேர்ந்த கேடு. (வட்.வ.)

கைமோசம்போ-தல் 5வி. பிறர் வஞ்சகத்துக்குட்பட்டுக் கேடு அடைதல். (செ.ப.அக.)

கைமோதிரம் பெ. (மொழியி.) ஒலி அலைக்களின் அழுத்த வேறுபாடுகளைப் பதிவு செய்யும் கருவி. (மொழியி.கலைச்.அக.ப.42).

கைய்யடை பெ. பிறர் கையில் ஒப்புவிக்கை. சிவிகை பெற்றினும் எழுத்திட்ட கையடைப்படி கையடை ஒன்றுக்கு சேத்த கார் மறு நிலம் இருமா (தெ.இ.க.17, 599).

கையகப்படு-தல் 6வி. 1.வெளிப்படுதல். நின் மாய மதுவே கையகப்பட்டமை அறியாய் (அகநா.256,9). 2.வசப்படுதல். மாநிலங் கையகப்படுவது பொய் யாகாதே (புறநா.58).

கையகப்படுத்து[1]-தல் 5வி. கைக்குட்சேருதல். (யாழ்.அக.).

கையகப்படுத்து[2]-தல் 5வி. 1.தன்வசப்படுத்துதல். கள்வன் துணங்கையாடுங் களவைக் கையகப் படுப்பே மாகச் செல்லா நீற்க (தொல்.பொ.166 நச்.). அரசு தனியாரிடமிருந்து புறம்போக்கு நிலங்களைக் கையகப் படுத்தியது (செய்தி.வ.). 2.பிடித்தல். (யாழ்.அக.) 3.ஒப்புக்கொடுத்தல். (முன்.) 4.சிக்கவைத்தல். (முன்.) 5.காட்டிக்கொடுத்தல். (இலங்.வ.)

கையகல்(லு)-தல் 3வி. விட்டுநீங்குதல். தன்பொற் கனத்துறு பிரமலோகங் கையகன் றானும் (திருச்செங்.பு. 1,9,19). கைய கன்று ... பதர் அப்புறத் தோடுமால் (சிவஞா. காஞ்சிப்பு.நாட்டுப்.108). கரையும் மறை முனிவர் சிறார் கையகன்று அஞ்சினர் இரிந்தார் (கச்சி.காஞ்சிப்பு. நகரேற்.147). உடைந்துகை யகல வருரிமை தழீஇ (பெருங்.3,20,123). வயங்கொலி நீர்-கையகலக் கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே (புறவெண்.35).

கையகல்காலை 12வி.அ. நீங்கியபோது. காதல் மடந்தையர் கையகல் காலையும் (அம்.கோவை 37).

கையகற்று-தல் 5வி. நீக்குதல். வெய்யோன் கனையி ருளைக் கையகற்றி (பாரத வெண்.712).

கையசதி பெ. உடல் பலகீனம். பாவம் கையகற்றி (இயற்பா.இரண்டாம் திருவந்.20).மூன்று நாளாய் பேதி காண்பித்து கைஅசதி கண்டு அவத்தம் தப்பி யிருக்கிற தகப்பனை தரிசனம் பண்ணிக் கொண்டு ... இறங்கினான் (ஆனந்த.தினசரிச்.3 ப.82)

கையசை-த்தல் 11வி. அழைத்தல். அப்போது காசியி லிருந்து அத்தை கையசைத்தாள் (கவிரா.கதை ப.23).

கையசைப்பு பெ. கைகளை ஆட்டுதல். கையசைப்பின் மூலம் நிறுத்திவிட முடியும் (செ.க.எ.110-7).

கையட்சரம் பெ. →கையெழுத்து. (செ.ப.அக.)

கையடக்கம் பெ. 1.கைக்குள் அடங்குகை. கையடக்கப் பெட்டி எதும் தேவையில்லை உங்களுக்கு என்றார் (இயேசுகாவி.ப.123). 2.ஒளித்து வைக்கப்பட்ட பொருள். கோலா கலப்புலிநான் கையடக்கங் கொண்டு சிப்பாயி வேடங்கொண்டு (திருவிடை.நா.ப.41). 3.கைக்குள் அடங்கக்கூடிய பொருள். (செ.ப.அக.) 4.சேமித்து வைக்கப்பட்ட பொருள். (முன்.)

கையடி¹ பெ. களத்தில் கையாலடித்த தானியம். (முன்.)

கையடி²-த்தல் 11வி. 1.கைவேலை செய்தல். (வின். அக.) 2.கையடித்து உறுதி தருதல். (செ.ப. அக.) 3.→கைபோடு-தல். (செ.ப.அக.அனு.)

கையடி³-த்தல் 11வி. ஆண் துறவிகள் பிறப்புறுப்பைக் கையால் உருவி இன்பங்காணுதல். (நாட்.வ.)

கையடி⁴-த்தல் 11வி. விலைக்கு விற்றல். என் வண்டியை எப்படியாவது கையடிக்கப் பார்க்கிறேன் (வட்.வ.).

கையடி⁵-த்தல் 11வி. கைகொட்டுதல். பேய்கள் கையடித் தோடி (காரைக்.பதி.1,4).

கையடிப்படு¹-தல் 6வி. ஒரு பொருள் பல கைகளில் கடந்து செல்லுதல். (செ.ப.அக.)

கையடிப்படு²-தல் 6வி. கைக்குட்படுதல். (யாழ்.அக.)

கையடிப்படுத்து-தல் 5வி. ஆட்சிக்குட்படுத்துதல். (முன்.)

கையடியுண்(ணு)-தல் 7வி. ஈடுபடுதல். இங்கு இவன் நீர்மையிலே கையடியுண்டிருக்கை யாலே (திருவாய்,9, 9 பிர.).

கையடு¹-த்தல் 11வி. அடைக்கலம் புகுதல். (நாட்.வ.)

கையடு²-த்தல் 11வி. →கையடை²த்தல்-1. அடைக்கல நினக்கென வவன்வயிற் கையடுத்து (பெருங்.3,23,49).

கையடுப்பு பெ. கையால் எடுத்துச் செல்லத்தகும் சிற்றடுப்பு. (நாட்.வ.)

கையடை¹ பெ. 1. அடைக்கலம். கழிகின்ற நாணமும் நெஞ்சமும் நானும்உன் கையடையே (அம்.கோவை 35). காசினி மதிவல்லோர் பால் கையடை கொடுத்த பின்னர் (கருவூர்ப்பு.13,115). கையடை யெனலே ணடைக் கலமாகும் (அக.நி.கைமுதல்.8) செய்யதவத் தோருந் திரிமருப்புப் போர்த்தகருங் கையடையா ருஞ்சீர்க் கலசையே (கலை.சிலே.வெண்.51). அடைந்தேன் உனைக் கையடை எனவே (கருணையந்.51). 2.பிறர் கையில் ஒப்புவிக்கை. அறத்தொடுநிலை ... தோழி தலை மகளைக் கையடை தந்தாள் (இறை.அகப். 206,32 உரை). கையடை யிருத்திய பொருளை நெடிதுநா ளாகன்ற பின்றம தெனவே நின்றுபோ ராடினர் (சானந்த.பு.3,42). கையடை கொடுத்தல் (கோடீச். கோவை 324 தலைப்பு). கையடை மகிழ்ச்சி கண்டோர் கூற்றே (தமிழ்நெறிவி.23). 3.பாதுகாக்குமாறு ஒப்பித்த பொருள். பாங்கி கையடை கொடுத்தலும் (நம்பியகப். 182). நின்கணே கையடை புகுந்தனங் காத்தி யாலென் றான் (கந்தபு.3,10,16). கையடைப்படலம் (செ.ப.அக.). 4.(அகப்.) உடன்போக விரைந்த பின்றேத் தலை மகளைக் காட்டிக் கொடுத்துத் தோழி தலை மகனுக்கு ஓம்படை சொல்லுதல். உற்ற நெறிகையடை சுரத்துய்த்தல் (களவி.காரிகை.51). 5.இலஞ்சம். (நாட்.வ.)

கையடை²-த்தல் 11வி. 1.பிறர்கையில் ஒப்புவித்தல். (செ.ப.அக.) 2. கடனைத் தீர்த்தல். (நாட்.வ.)

கையடை³-தல் 4வி. சிறுமையடைதல். கை யடையாத் தவத்துறைமெய் யாம் (அம்பல.கலம்.93).

கையடைப்பு பெ. கைவசமான பொருள். நெஞ்சும் இவள் தனக்குக் கையடைப் பாகையாலே (திருவாய்.2, 4,3 ஈடு).

கையடையாக்கு-தல் 5வி. ஒப்படைத்தல். வஞ்சகி மகனுக்கெம்மைக்கையடையாக்குச்செல்வல்கடமையோ (இராவணகாவி.3,8,160).

கையணை பெ. → கைக்கொட்டை. (வட்.வ.)

கையம்¹ பெ. 1.நீர். (அக.நி.) 2.கடல். (முன்.)

கையம்² பெ. கீழ்மை. கையத்தின் ஊனுக்கே கன்றி கலாய்த் தனவும் (நீல.257).

கையம்பாய வி.அ. 1.கிடைத்தற்கு எளிதாய். (செ.ப. அக.) 2.நிச்சயமாய். (வின்.அக.)

கையம்பு பெ. 1.உறுதி. (யாழ்.அக.) 2.நம்பிக்கை. (முன்.)

கையமர்த்து-தல் 5வி. 1.கையால் சைகை காட்டி உட்காரச் செய்தல். மன்னவர்களைக் கையமர்த்தி (பாரத வெண்.159 உரை). மன்னவரைக் கையமர்த்தி மாது வெளியில் வந்தாள் (புலந்.மாலை ப.77). கையமர்த்தி மரியாதை செய்வான் காளை குழந்தையவன் (தேசிங்கு.கதை ப.23). 2.விளக்கை அணைத்தல். (நாட்.வ.) 3.கையாற் சைகைகாட்டிச் சத்தமடங்கச் செய்தல். (செ.ப.அக.) 4.அடக்கி யாளுதல். சிறு பிள்ளைகளைக் கையமர்த்திக் கொண்டு போவது எளிதான காரியமல்ல (வட்.வ.).

கையமை-த்தல் 11வி. 1.அபயங் கொடுத்தல். கஞ்சம் அனைய தடக்கை அமைத்த மாத்திரத்தில் ... கவலை நீங்கினேன் (தெய்வச்.விறலி.தூது 582). 2.அமைந் திருக்கக் குறிப்புக்காட்டுதல். (யாழ்.அக.)

கையயர்-தல் 4வி. 1.நிலைமை தாழ்தல். (செ.ப.அக.) 2.கைசோர்தல். (யாழ்.அக.) 3.சோர்வடைதல். (செ.ப.அக.)

கையர் பெ. 1.கீழ்மக்கள். சமண்கையர் (தேவா.2,35, 10). உய்யப்படால் நின்று கையர்க் குபாயம் (திருப்பு. 317). கையரை யாதுக்கு மக்கள் என்று பயந்தனன் (திருக்காளத்.பு.4,12). தழைகொண்ட கையர் கதிர் கொண்ட (திரிசிரா.அந்.17). கைய ராங்கர தூடணர் தங்கள்பால் (நகுல.பு.இராம.19). கங்குல் முற்றிய கையரைக் கொண்ட தேல் (தேம்பா.1,9,39). தமிழ்க்குரிசி னீறிட அமண்கைய ருண்ணீறிட (குளத்தூர் அமுதா. பிள்.4,4). கையர் செயுங்கொலை கண்ணினு நோக்கார் (திருக்குடந்.பு.44,16). 2.வஞ்சகர். கடன்கொண்டு நெற்குத்துக் கையரை யூட்டி (திருமந்.2086). வஞ்சரைக் கையரென்றும் (தொல்.சொல்.400 நச்.). கையர் முப்புரத்திட்டதீ கடும்பசி யுருவாய் (திருவிளை.பு.4,7,22).

கையர் காணாக் கருத்தனே (திருக்குடந்.பு.38,7).ஏச்சும் ஈங்கு சொன்ன கையர் மனம் நாணி அச்ச மிஞ்சி (பழனித்திரு.10,1/30). 3.கள்ளர். கையர் தானே கள்ளர் எனப் படும் (அக.நி.கைமுதல்7). கைவந்தவா செய்யுங் கையர் (திருநூற்றந்.94). கையர் செயுங் கொலை கண்ணினு நோக்கார் (திருக்குடந்.பு.44,16). 4.மூடர். ஓராக் கையர்கள் தம்மைத் தாமே காதலித்து (சிவதரு.பலவிசிட்.41). கையர் காணாக் கருத்தனே (திருக்குடந்.பு.38,7).

கையரி பெ. தேடல். கையரி என்பது தேடலாகும் (அக.நி. கைமுதல் 9).

கையரிக்கொள் (ளு)-தல் 2வி. 1.தேடுதல். (தீவா.) 2.வாரி அரித்துக்கொள்ளுதல். காடு கையரிக்கொண்டு (சீவக.30). காழகிற்றுணி சந்தொடு கையறிக்கொண்டு (நைட.த.3). 3.சேர்த்துக்கொள்ளுதல். (யாழ்.அக.)

கையரியம் பெ. இரும்பு. (மூலி.அக.)

கையரிவாள் பெ. சிற்றரிவாள். (செ.ப.அக.)

கையல்லது பெ. தகாதது. காதன்மை கையல்ல தன்கண் செயல் (குறள்.832).

கையல-த்தல் 12வி. கைக்கண் இருந்ததை இழத்தல். கையலந் தொண்றற்றார்கு மில்லா திரப்பவர்க்குப் (பாரதவெண்.234)

கையலகு பெ. கைமரம், இறைவாரக்கை. கூறேறு கொடு மழு வாள் கொள்ளக் கண்டேன் கொடுகொட்டி கையலகு கையிற் கண்டேன் (தேவா.6,97,8). உத்தரமுதலியன பயில அவற்றின்மேலே பளிக்குக் கையலகாலே கைபரப்பி (சீவக.593 உரை).

கையலம்பு-தல் 5வி. நீரினால் கை கழுவுதல். அத்தளிகையுண்டபின்பு ... கையலம்பிக் கொண்டு (புலந்.மாலை ப.91). தம்பி கையலம்பிச் சாப்பிடு (பிசிராந்.ப.58).

கையலாதம் பெ. →கைலாசம். (திருவரங்.அந்.23)

கையலு-த்தல் வி. 1.→கையயர்-தல். (செ.ப.அக.) 2.→கைசலி-த்தல். (யாழ்.அக.)

கையலை-த்தல் 11வி. துன்புறுத்துதல். கையலைத் தோடுமோர் களிமகற் காண்மின் (பெருங்.1,40,98).

கையழி-தல் 4வி. செயலறுதல். கையழிந்து புலவர் வாடிய பசியராகி (புறநா.240).

கையளவு பெ. ஒரு கைப்பிடியளவு. (ஆட்சி.அக.ப. 138)

கையளி-த்தல் 11வி. 1.பிறரிடம் ஒப்புவித்தல். வழி வழியாகக் கையளிக்கப்படுவது ... படைத்தவர் பெயரில்லாதது (நகர்.நாட்.கதைப்பா.ப.7). பக்தி பாடல்கள் எவ்வாறு வழிவழியாகக் கையளிக்கப்பட்டன என்பதிலும் அவற்றின் இலக்கிய அம்சத்தைக் காண முயல்கிறார் சிவத்தம்பி (செய்தி.வ.). 2.கொடுத்தல். அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு ... தரித்திரரை நினைத்துக் கொள்ளும் படிக்கு மாத்திரம் சொன்னார்கள் (பு.ஏற்.கலா.எழு.நீரூ 2,8-10). 3.ஒப்புக்கொடுத்தல். (யாழ்.அக.)

கையளிப்பு பெ. பிறரிடம் ஒப்பிக்கை. (செ.ப.அக.)

கையற்று பெ. மனமழிந்து. எவ்வளவு உடைத்தெனக் கையற்று (ஞானாமிர்.38-22).

கையற பெ. முற்றும். இவன் கையற நசிக்கின்ற நசிக்கின்ற காலத்து (நீல.187 உரை).

கையறம் பெ. 1.கையறுநிலை, இரங்கற்பா. கையறத்தி னோங்கிக்கோ வெனக் கொன்றிட்டானே (இராவண காவி.5,11,26). கம்பன்போற் பாடிய கையறம் (தமிழ்நா. 92). 2.பெருந்துன்பம். வாளமர்க்கட் கையறமாம் (பாரத வெண்.176).

கையறல் பெ. 1.செயலற்ற நிலை. கையறல்-செய்யா தொழிந்த வகைகளுக்கு வருந்துதல் (தண்டி.45,8 உரை). பரவசம் கையறல் வன்படல் (இலக்.வி.650). 2.துன்பம். (செ.ப.அக.) 3.மரணம். (மூன்.) 4.தரித்திரம். (மூன்.) 5.ஒழுக்கமின்மை. (மூன்.) 6.மனமழிந்து போதல். எவ்வளவு உடைத்தெனக் கையற்று (ஞானா. 38;22).

கையறல்விலக்கு பெ. (அணியி.) செய்யா தொழிந்த வினைகளுக்கு இரங்கிக் கூறி இனி அவை செய்ய வியலா வென அவற்றை விலக்குவதாகிய அணிவகை. (தண்டி.45)

கையறவு பெ 1.துன்பம். கையறவு எய்தேல் குமண (கலித்.297). யான் பட்ட கையறவு காணாயோ (கம்பரா. 3,5,107). பறம்படுத்த கையறவு பாடினேம் (பாரிகாதை 518). 2.ஊடல். கையறவு வட்டித்து (பரிபா.10,33). 3.செயலற்ற நிலை. வாராள் காயசண்டிகை யெனக் கையறவெய்தி (மணிமே.20,26). கடியர ணின்மையிற் கையற வெய்தி (பெருங்.1,47,79). கலைபிணை தீரியக் கையற வெய்தி (சேர.மும்.கோவை 7,9). சட்டநான் பெறா தொழிந்த தளர்வினால் கையறவாம் இட்டளத்தை இவளெதிரே கொடுத்தருளும் (பெரியபு.29,133). காணத்தவஞ்செய்த கஞ்சமென்றே யென்றுங் கையறவு (அம்.கோவை 271,2). ஆடற் பறம்பி னடுத்தபெருங் கையறவு பாடற் கெழுந்தேம் பரிந்து (பாரிகாதை 437). 4.வீரர்கள் போரில் இறந்ததைக் கண்டு வருந்துகை. பிள்ளை யாட்டே கையறவு நெடு மொழியே (சுவாமிநா. 131). 5.இறப்பு, மரணம். கருவு மாக்கள் கையற வுரைத்தன்று (புற.வெண்.31 கொளு). கையற வுரைத்துக் கைசோர்ந்தன்று (புற.வெண்.10 சிறப்பிற்.14 கொளு). 6.ஒழுக்கமின்மை. (வின்.அக.) 7.உதவியின்மை. (யாழ்.அக.) 8.வருத்தம். (இலக்.சொ.அக.) 9.வறுமை. காமரு நாடு மூன்றுங் கையற வெய்த (திருவிளை.பு.14,2).

10.காம நோய். காதன் முகத்தரும்பக் கையறவு தீரக் கலப்பேன் (திருவிளை.பு.43,10). 11.ஒன்றும் செய்ய மாட்டாமை. கையுறவுடையள் (பெரியதி.தமிழாக்.2,7,5).

கையறி-தல் 4வி. 1.செய்யுமுறைமை அறிதல். கையறியாப் பேதை (குறள்.836).2.பழக்கமாதல். (செ.ப.அக.)

கையறு-தல் 6வி. செயலற்றுப் போதல். கார் நாள் உருமொடு கையறப் பிரிந்தென (ஐங்.441). செயலற்றப் போதில் காணா வுயிர்க்குங் கையற் றேங்கி (மணிமே.3, 89). கண்ணீர் கவுளலைப்பக் கையற் றியாமினைய (சீவக.2050). காப்புச்சிறை மிக வினாற் கையற்றுச் சொல்லுஞ் சொற்களும் என்றவாறு (இறை.அகப்.143,12 உரை). காதலார் கையற்றார் தங்கள் உடல்போலும் ஒத்தார் உயிர் (நள.314). கையறு கனிட்டன்றன் (பாரதம்.1,2, 6). கடித்துணர் புனையாக் கைகள் கையறு கைகளாமால் (செ.பாகவத.339). உயிர் உண்டு என்ன இன்று எனக் கையற்று ஏங்கி (தியாக.68). கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக் கலுழ்தல் காரணம் கூறலும் (இலக்.வி. 533). குறட்டைகேள் கையறு நித்திரை (மனோன்மணீ. 3,3,1). 2.ஒழுக்கம் நீங்குதல். கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல் (குறள்.627). 3.அளவு கடத்தல். காப்பின் கடுமை கையற வரினும் (தொல்.பொ.114). 4.மனமழிதல். கையற்றின்ன லெய்தலும் (ஞானா.31, 22). 5.இறத்தல். சேர்ந்தோர் கையறவுரைத்துக் கைசோர்ந் தன்று (புறப்.வெண்.267 கொளு). காதி மலைந்தே கையற்றார் (பாரதம்.8,1,2). 6.மீட்சியரிதாதல். கையறு துன்பங் காட்டினுங் காட்டும் (சிலப்.10,71).

கையறுகிளவி பெ. (அகப்.) தாய்துஞ்சாமை நாய்துஞ் சாமை முதலாய காப்பு மிகுதி சொல்லி வரவுவிலக்கு தலைக் கூறும் அகத்துறை. (களவி.காரி.99)

கையறுத்துக்கொள்(ளு)-தல் 2வி. பொருள் நட்ட மடைதல். (செ.ப.அக.)

கையறுதி பெ. 1.கையடித்து விலையுறுதி செய்கை. (முன்.) 2.அறுதியாக விற்கை. (வின்.அக.) 3.முற்றும் கைவிட்டு நீக்குகை. (முன்.)

கையறுநிலை பெ. 1.துயர். கையறுநிலையுற்றுக் கதறினர் (இராவணகாவி.5,13,43). 2.செயலற்ற நிலை. கலங்கினள் உறைவோள் கையறுநிலையே (அகநா.64,17). அம்மாவை நினைத்தாள், தொண்டை அடைக்கத் தன்கையறு நிலையை நினைத்து அழுதாள் (கனவு.வேண்.ப.14). நிறைவுறுங் கைகால் இல்லார் நெடும்புனல் நீந்தவந்தால்...கையறுநிலை தான்உண்டு (ஊன்று.7/4). 3.(புறப்.) மன்னன் இறந்தானாக உடனிருந்தோர் வருந்துதலைப் பற்றிக் கூறும் புறத்துறை. கையறு நிலையுளப் படப்பதி னொன்றும் (புற.வெண்.11,6). வலங்கெழு வேந்தர் வான்புகக் கவிஞர் கலங்கித் தொடுப்பது கையறு நிலையே (பன்னிருபா.230). 4.(புறப்.) பசுக் கூட்டத்தை மீட்கும் பொழுது போரில் இறந்துபட்ட வீரர்களைப் பாணர் புகழ்ந்து அவர்களுக்காக இரங்குதலைப் பற்றிக் கூறும் புறத்துறை. பிள்ளை யாட்டொடு கையறு நிலையே (புற.வெண்.2,5). 5.(புறப்.) தலைவனேனும் தலைவியேனும் இறந்தமைக்கு அவர் ஆயத்தார் முதலானோர் செயலற்று மிக வருந்தியமை கூறும் புறத்துறை. கழிந்தோர் தேஎத் தழிபட ருறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும் (தொல்.பொ.79). கணவ னொட மனைவி...செயலறுநிலையைநிகழ்த்துவதுகையறு நிலையாகும்மே (முத்துவீ.1100). கையறு நிலையே கணவனொடு மனைவி கழிந்துழிக்காமக் கவலையுள் அழுந்தி (பிரபந்ததீ.67). 6.கையறுநிலையைப் பற்றிய பிரபந்தம். (வின்.அக.)

கையறை[1] பெ. செயலறுகை. கலன் மாய்த்தவர் கையறைபோல் (தணிகைப்பு.களவு.104).

கையறை[2] பெ. சிறிய உக்கிராண அறை, கோயிலில் பொருள் வைக்கும் சிறிய அறை. (செ.ப.அக.)

கையறை[3] பெ. 1.ஒழுக்கமின்மை. (யாழ்.அக.) 2.ஒழுக்க நெறி. (சூடா.நி.)

கையன் பெ. 1. இழிந்தவன். கையனெனு முய்யுநிலை வேறிலை (நக்கீர.ஈங்.பதி.10). கையனென் றாலு மருள் வாய்தென் கூடற் கயற்கண்ணியே (கயற்.மாலை 74). அறியாமைத் தொடக்குண்ட கையரேம் (சிவஞா.காஞ்சிப்பு. மணிகண்.40). 2.வஞ்சகன். கையன் இருக்கை ஈதாகும் (திருநெல்.பு.வில்வலன்.6). 3.திருடன். ஈட்டினார் தனந் தன்னையிறைக்குறக் காட்டினானும் கருதிய கையனும் (சிவதரு.பாவ.58). கையன் கபடன் (அரிச்.பு.2,35).

கையன்கவீனம் பெ. (இசையி.) நவநீதம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.186)

கையாக்கம் பெ. →கைராசி. அவன் கையாக்க முள்ளவன் (நாட்.வ.).

கையாகாயா பெ. சில்லு விளையாட்டில் புறங்கை யிலும் உள்ளங்கையிலும் சில்லு வைத்துச் செல்லும் முறை. (த.நா.விளை.ப.273)

கையாட்சி பெ. 1.கைப்பழக்கம். (செ.ப.அக.) 2.தொழில். ஆலயத்தின் களவுகை யாட்சியான் (திருக்குற்றா.பு.12, 90). 3.ஒருவன் வசமானது. (செ.ப.அக.) 4.அனுபவத் தால் நன்மையெனத் தெளிந்தது. (வின்.அக.) 5.கைக் கண்டது. (யாழ்.அக.) 6.எடுத்து வழங்குவது. (முன்.) 7.நிலம் முதலானவற்றைச் சொந்தமாக பயன் படுத்தும் உரிமை. இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில் (பு.ஏற்.அப்போஸ்.நட.7,5).

கையாட்டி பெ. பெட்டிப் பலகையைத் தறியுடன் இணைக்கும் சட்டம். (தென்னார்க்.வ.)

கையாடல் பெ. 1.நிர்வாகத்தில் உள்ள பணத்தினைத் தன்னுடைய சொந்த பயனுக்காக தகாத முறையில் பயன்படுத்துகை. (ஆட்சி.அக.ப.108) 2.நம்பிக்கைக்கு மாறாய்ப் பிறர்பொருளை அபகரிக்கை. (செ.ப. அக.) 3.துர்வினியோகம். (வர்த்.ப.313) 4.திருடுதல். சுமார் ரூ.20 ஆயிரம் பெறுமான உணவுப்பொருட்கள் கையாடல் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது (செய்தி.வ).

கையாடு-தல் 5வி. 1.கையாலெடுத்து ஆளுதல். (செ.ப.அக.) 2.வழக்கத்துக்குக் கொண்டு வருதல். (முன்.) 3.தானியங்களை அறுவடை செய்தல். தன்னியம முற்றக்கை யாடிக்கோடி (திருவிடை.கலம். 39). சாகுபடி எல்லாம் கையாடி ஆயிற்றா (விவசா.வ.). 4.அபகரித்தல். பொன்னை யெல்லாம் கையாடிப் போவென்று சொன்னவள் (தெய்வச்.விறலி.தூது 517). 5.வங்கி போன்றவற்றிலுள்ள பணத்தைத் திருடுதல். அவன் அலுவலகப் பணத்தில் கையாடி விட்டுப் பிடிபட்டான் (செய்தி.வ). 6.எடுத்துவழங்குதல். (யாழ்.அக.) 7.கைப் பற்றுதல். (முன்.) 8.கற்பழித்தல். (செ.ப.அக.)

கையாணி பெ. கைம்ரத்திற் சட்டத்தையிறக்கும் ஆணி. (முன்.)

கையாந்தகரை பெ. கரிசலாங்கண்ணி. அறுகு கையாந்தகரை முள்ளி (அரும்பாத்.பிள்.6,8). கையாந் தகரை - நெல்லிக்காயுடன் (திருவிடை.நா.ப.29,15).

கையாப்பு பெ. கைக்கட்டு, விலங்கு. கள்ளனும் தானேயாய்க் கையாப்புண் டவனே போல் (நீல.196).

கையாப்புடை பெ. மரவகை. (சென்.இரா.சொற்பட்டி. ப.114)

கையாம்பல் பெ. யானை. கையாம்பல் கோடு செந்நீரால் (சங்கர.கோவை 67).

கையார வி.அ. கைக்குத் திருப்தியாக. (செ.ப.அக.)

கையாலா-தல் 5வி. செய்யும் ஆற்றல் பெறுதல். (முன்.)

கையாலாகாதவன் பெ. எவ்வேலையும் செய்யத் திறமையற்றவன். (வட்.சொ.வி.ப.112)

கையாலேபாணி-த்தல் 11வி. கையால் தூக்கிப் பார்த்து நிறையறிதல். (செ.ப.அக.)

கையாள்[1] பெ. 1.உதவி செய்வோன். (நாட்.வ.) 2.குற்றேவல் செய்வோன். உனக்குக் கையாளாய் உன் இசைவுபார்த்து (அட்டாதச.முமுட்சுப்.சாம.26). 3.வேலைக்காரன். கப்பல் ஓட்டும் அறிஞர் அவர் கையாட்கள் பலர் உண்டு (இளை.இலக்.80).

கையாள்[2] (ளு) **-தல்** 2வி. 1.பயன்படுத்துதல். சங்க காலத்துப் பழம் புலவர்கள் சிலேடையணியை வெகுவாகக் கையாள வில்லை (சிலேடை.இலக்.ப.10). செயற்கை முறைகளைக் கையா ளாதே (புதுமைவே.11, 194). கலையைக் கையாள் பவரிடையேயும் கூட இவ்வாறு இரண்டு வேறுபட்ட கொள்கைகள் இருந்து வருகின்றன (நா.கலை ப.113). 2.வழக்கத்துக்குக் கொண்டு வருதல். வில்லுப்பாட்டிற்குரிய பழமையான அமைப்புகளையே பிச்சைக்குட்டி போற்றிக் கையாண்டார் (தமிழ்வில். பா.ப.89). 3.கையாலெடுத்து ஆளுதல். (செ.ப.அக.) 4.வழக்கத்துக்குக் கொண்டு வருதல். (முன்.) 5.கைக்கொள்தல். ஆலயத்தின் களவு கை யாட்சியான் (திருக்குற்றா.பு.12,90). 6.எடுத்து வழங்கு தல். (யாழ்.அக.) 7.கற்பழித்தல். (வின்.அக.)

கையாளன் பெ. குற்றேவல் செய்வோன். கையாளனாய் நிற்பது அச்சிதற்கு (அமலனாதி.8 பெரி.ப.86). கையாளர் ஊழியப்பேர் காரியத்தர் (நல்லதம்.காதல் 127).

கையாளி[1] பெ. 1.பாசாங்கு செய்பவன். (யாழ்.அக.) 2.துட்டன். (முன்.) 3.மாய்மாலன். (முன்.) 4.சமர்த் தன், திறமையானவன். (செ.ப.அக.)

கையாளி[2]**-த்தல்** 11வி. ஒப்படைத்தல். (சாச.அக.)

கையாற்றி பெ. 1.தொழிலுக்கு உதவுகை. (செ.ப.அக.) 2.இளைப்பாறல். நீ வருவாயானால் எனக்குக் கையாற்றி யாயிருக்கும் (நாட்.வ.). 3.உதவி. (யாழ்.அக.)

கையாற்று-தல் 5வி. 1.உதவி செய்து இளைப்பாறச் செய்தல். (முன்.) 2.அடையல்மாற்றுதல். (முன்.)

கையாறு[1] பெ. 1.செயலறுகை. கையாறு கடைக்கூட்ட (கலித்.31,7). வீணையொழிந்து அயர்தலாகிய கையா றுற்றிருந்தமை ... உணர்க (சீவக.739 உரை). அவலக் கவலைக் கையாற்றின் நீங்கி (குறள்.4 மணக்.). 2.துன்பம். கையாறு செய்தானை (கலித்.147,48). கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல் (குறள்.627). ஐயா உன்றன் அடிமலர் இவண்பட கையாறென்னை (அனிச்சஅடி ப.8). 3.வருத்தம். கொடுக்கின்ற நீறுங்கை யாறும் உயிர்ப்பும் (செழிய. தாக.கோவை 57). 4.தரித்திரம். (யாழ்.அக.)

கையாறு[2] பெ. 1.ஒழுக்க நெறி. இடு துனி கையாறா (பரிபா.8,780). கையாறென்பது ஒரு சொல் இதற்கு ஒழுக்கநெறி யென்று ரைப்பாருமுளர் (குறள்.627 பரிமே.). கையாறு மாறும் (சிலேடை.இலக்.ப.301). 2.ஒழுக்கம். (யாழ்.அக.)

கையாறு[3] பெ. உயிர்ப்பு. தன் தோழி கூந்தலில் வண்டு கெடும்படி அவளைச் சேர்ந்து இது கையாறென்னும் மெய்ப்பாடு (சீவக.715 உரை).

கையாறு[4] பெ. சிறிய ஆறு, சிற்றாறு. கையாற்றை அடைத்து ஏரியும் வெட்டி தூம்பும் இட்டு (கல்.கலைச். அக.ப.155). காற்செய்யும் இதினுக்குப்படும் கையாற்கும் எல்லையாவது (தெ.இ.க.5,10). கையாற்றை அடைத்து மூம் (மெய்க்.இராசராசன் 20,1236).

கையாறு[5] பெ. தக்கசமயம். (நாட்.வ.)

கையாறு[6] பெ. →கைலாகு, கைத்தாங்கல். (செ.ப. அக.அனு.)

கையாறு[7] பெ. ஏமாற்ற உணர்வு. கையாறு இருக்கண் பொச்சாப்புப் பொருமை (தொல்.பொ.256,8).

கையாறு[8]**-தல்** 5வி. இளைப்பாறுதல். பண்ணுமயன் கையாறவும் (பட்டினத்தார்.பா.பொது.திருவை).

கையான்[1] பெ →கையாந்தகரை. (தைலவ.)

கையான்[2] பெ. செயலுடையவன். கரவு செய்யுங் கையான் கலந்து (பாரத வெண். 73).

கையான்திரை பெ. →கையாந்தரை. (தொ.வ.)

கையானை பெ. காண்டாமிருகம். (போகர் நி.32)

கையிக-த்தல் 4வி. 1.மீறுதல். கரப்பினுங் கை யிகந்து (குறள்.1271). 2.அளவுக்கு மேற்படுதல். கைகடத்தல் கயக்கிய நோயவாய்க் கையிகந்து நம்மை இயக்கிய யாக்கை (புற.வெண்.188). ஊடல் கையிகந்து துனியாகிய வழி (தொல்.பொ.159 நச்.). கதிப்பட்ட நூலினைக் கையிகந் தாக்கி (அறநெறி.74). 3.நீங்குதல். கருவி கையிகப்பில் போதமலம் (சுப்பிர.மாலை 18). 4.அகன்று நிற்றல். (யாழ்.அக.) 5.ஒழுங்குதப்புதல். (முன்.) 6.கடத்தல். (முன்.) 7.இழத்தல். (முன்.) 8.கைவிடுதல். கயவரைக் கையிகந்து வாழ்தல் (இனி.நாற்.29). 9.வரம்பு கடத்தல். கை இகந்த தண்ட மில்லாய் (மீனா.சரித்.2 உரை மேற்).

கையிசை-தல் 4வி. மனம் இணங்குதல். காஞ்சன மாலை கையிசைத்து (பெருங்.1,44,150).

கையிடு-தல் 6வி. 1.கையைத் தோய்த்தல். நெய்யிலே கையிட வல்லாரார் (திருவாய்.6,1,5 ஈடு). 2.ஒரு தொழிலில் வேண்டாது தலையிடுதல். (செ.ப.அக.) 3.காரியத்திற் பிரவேசித்தல். (முன்.) 4.நேர்ப்படுதல். (யாழ்.அக.)

கையிடை பெ. இலஞ்சம். (செ.ப.அக.)

கையிணக்கம் பெ. 1.பொருத்தம். (முன்.) 2.கை கலந்து சண்டை யிடுகை. (முன்.) 3.வைப்பாட்டி வைக்கை. (முன்.) 4.அடங்குகை. (முன்.) 5.கைக்குள் அடங்கக்கூடிய பொருள். (முன்.)

கையிணக்கு பெ. கூட்டுறவு. கயலுற்ற கண்ணியர் கையிணக் கற்று (திருமந்.1678).

கையிப்பூச்சி பெ. நல்ல பாம்பு. படமெடுத்து ஆடுது என்று கையிப்பூச்சி பாம்பு படமெடுத்தது என்கின்ற னராமம் (ஆனந்த.தினசரிச்.6 ப.348).

கையிருப்பு பெ. 1.சேமித்து வைத்திருக்கும் தொகைப் பொருள். கையிருப்பை யார்க்கும் ... கொடாமல் (பஞ்ச. திருமுக.விலா.1964). கையிருப்பில் குறைந்தபட்சம் ஒரு கோடி டன் தானியங்கள் இருப்பது அவசியம் (செய்தி.வ.). 2.இருப்புத் திட்டம். அன்னியச்செலாவணி கையிருப்பு ரூபாய் (செய்தி.வ.). 3.→கையுரக்கம். (யாழ்.அக.) 4.கைவலிமை. கையிருப்பைக் காட்ட எழுந்திரு (பாரதிதா.இரண்டாம்.43,1,18 கவி.2).

கையில்[1] பெ. தேங்காயிற்பாதி,கயில். (இலங்.வ.)

கையில்[2] பெ. பிடர். (ஆசி.நி.88)

கையில்[3] பெ. குயில். பா மொழிக் கையில் (தேம்பா.2, 5,4).

கையில்[4] பெ. கடைப்புணர்வு. (ஆசி.நி.185)

கையிலாகாதவன் பெ. →கையாலாகாதவன். கையில் ஆகாதவன் போல் கண்டார் பழிக்க (இராமநா. ஆரணி.24).

கையிலாதம் பெ. கைலாசம். (செ.ப.அக.)

கையிலி பெ. மிதுனம். (ஆசி.நி.28)

கையிலை பெ. →கைலாசம். சேரனும் தண் கையிலை மலைக்கு உடம்போடு சென்றான் (கொங்குசத.வாலி.8).

கையிளகு-தல் 5வி. 1.கைப்பிடிப்பு நெகிழ்தல். (இலங். வ.) 2.தாராளமாதல். (முன்.) 3.கொடுக்கச் சம்மதித்தல். (யாழ்.அக.)

கையிளை-த்தல் 11வி. 1.செல்வநிலை குன்றுதல். (செ.ப.அக.) 2.→கைசலி-த்தல். (யாழ்.அக.)

கையிற்கடி-த்தல் 11வி. செலவு கூடிப்பற்றாக்குறை ஏற்படுதல். (இலங்.வ.)

கையிறக்கம் பெ. 1.கொடை. (யாழ்.அக.) 2.சீட்டு விளையாட்டில் முதலில் சீட்டை இறக்குகை. (த.நா. விளை.ப.273) 3.செல்வநிலை குன்றுகை. (செ.ப. அக.) 4.கையைவிட்டிறங்குகை. (யாழ்.அக.)

கையிறக்கு-தல் 5வி. கையிலிருந்திறங்கச்செய்தல். (முன்.)

கையிறங்காமை பெ. பிசுனித்தனம்.(முன்.)

கையிறங்கு-தல் 5வி. கொடுக்கவிளங்குதல். (முன்.)

கையிறுக்கம் பெ. 1.உலோபம், பிசுனித்தனம். (முன்.) 2.சிக்கனம். (செ.ப.அக.)

கையிறுப்பு பெ. →கையிருப்பு-1. தங்கள் கையிறுப் பிவ்விடம் செல்வதுண்டோ (பாரதிதா.மூன்.திராவிடர்.ப. 170).

கையிறை பெ. 1.→ கைரேகை.(பிங்.) 2.கைவிரலின் இடுக்கு.(இலங்.வ.)

கையீடு பெ. 1.பணம் செலுத்திய பற்றுச்சீட்டு. கணக்குப் பார்த்து நேர் கையிடு தரவும் (தெ.இ.க.8,251). 2.பணஞ்செலுத்துகை. பதினெட்டாவது தியதி கையீடு ஒன்றினால் காசு (தெ.இ.க.5,134).

கையுங்கணக்கும் பெ. 1.இருந்ததுஞ் சென்றதும். (யாழ்.அக.) 2.வரையறை. அங்கே வந்த கூட்டத்துக்குக் கையுங் கணக்குமில்லை (நாட்.வ.).

கையுங்களவுமாய் வி.அ. →கைமெய்யாய். (செ.ப. அக.)

கையுடன் வி.அ. →கையோடு. (முன்.)

கையுடனே வி.அ. உடனே. (யாழ்.அக.)

கையுடை பெ. கைக்கவசம். (வின்.அக.)

கையுண்ணு)-தல் 7வி. பிறர்கைபார்த்து உண்டு வாழ்தல். சான்றவர் கையுண்டுங் கூறுவர் மெய் (பழமொ.நா.83).

கையுதவி பெ. 1.கையினால் செய்யப்படும் சிறு உதவி. (வின்.அக.) 2.சமயத்தில் உதவும் உதவி. (செ.ப.அக.) 3.துணையான உதவிப்பொருள். (முன்.) 4.இலஞ்சம். (முன்.) 5.ஆளுதவி. (யாழ்.அக.)

கையுதிர்க்கோடல் பெ. விட்டு விலகும்படி கையசைத்துக் குறிப்பிடுகை. காணி மிலியெனக் கையுதிக் கோடலும் (மணிமே.1,16,10).

கையுபகாரம் பெ. 1.→கையுதவி. (செ.ப.அக.) 2.கைக் கூலி. (யாழ்.அக.)

கையும்மெய்யும் பெ. 1.உறுதி. (யாழ்.அக.) 2.அத்தாட்சி. (முன்.)

கையுமெய்யுமாய் வி.அ.→கைமெய்யாய். (செ.ப.அக.)

கையும்மெய்யுமாய்ப்பிடிக்கப்படு-தல் 6வி. தவறு செய்யும் போது அகப்படுதல். இந்த பெண் விசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள் (விவிலி.யோவான் 8,4).

கையுயர்-தல் 4வி. 1.மேன்மைப்படுதல். (செ.ப.அக.) 2.செழித்தோங்குதல். (முன்.)

கையுயர்த்து¹-தல் 5வி. அடித்தல். (முன்.)

கையுயர்த்து²-தல் 5வி. கும்பிடுதல். (முன்.)

கையுரக்கம் பெ. கைவசத்திலிருக்கும் பணம். (யாழ்.அக.)

கையுருவிச்சுவர் பெ. கைப்பிடிச்சுவர். கையுருவிச்சுவர் கிழக்குப்பொதும்மிடத்து வடக்கு நொக்கிப்பொகிற (செ.ப.அக.அனு.).

கையுருளை பெ. பல்சக்கரம் பொருத்தப்பட்டிருக்கும் உருளை. (தென்னார்க்.வ.)

கையுரை¹ பெ. →கையுடை. (மருத்.கலைச்.அக.ப.109)

கையுரை² பெ. பரிசப்பொருள். சித்தமொடு கையுரை கொண் டுய்க்கும் வெற்பின்றிரள் (திருப்பெருந்.பு.502).

கையுழற்றி பெ. கைநடுக்கம். (வின்.அக.)

கையுழைப்பு பெ. வேலை. (யாழ்.அக.)

கையுறவு பெ. கலக்கம். காளை வடிவொழிந்து கையுறவோ டையுறவாய் ... நலியாமுன் (ஐயடி.சேத்.4).

கையுறாப்பொருள் பெ. கைக்கு அரிதில் கிடைக்கும் பொருள். (வின்.அக.)

கையுறு¹-தல் 6வி. 1.கைவசமாகக் கிடைத்தல். வானகங் கையுறினும் (நாலடி.300). கண்விழைந்து கையுறினும் காதல் பொருட்கின்மை (திரிகடு.29). 2.தொழிற்படுதல். கையுறுமுலகெலாங் கருணை மாலுழை (செ.பாகவத.4,6,24). 3.சிறுமை அடைதல். கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறு உம் குற்றம் (நீதிநெறிவி.24). 4.பக்கத்திற் பொருந்துதல். கவிழும் கருவியொடு கையுற வணங்கி (பதிற்றுப்.24,26). 5.ஒழுக்கமுறுதல் (தெளிய வைத்தல்). கையுற தேற்றிடும் கடத்துள் தோயம்போல (பிர.7,49).

கையுறு²-தல் 6வி. 1.தீண்டுதல். பூப்பு மகளிர் கையுறாப் பொருட்டே (தீவா.). 2.கைப்பற்றுதல். கரவால் ஒரு காளையர் கையுறலால் (திருச்செந்.பு.397). 3.கைக் கொள்ளுதல். அச்சின்மொழியார் கையுறாப் பாணி பெரிது (நாலடி.362).

கையுறுதி பெ. 1.கையடித்து விலையுறுதி செய்கை. (செ.ப.அக.) 2.அட்டவணைசேர்க்கப்படாதவுறுதி. (யாழ்.அக.) 3.கடனுக்கு வைக்கப்படும் ஈடு. (செ.ப. அக.)

கையுறை¹ பெ. 1.அரசர் பெரியோர் போன்றவர்களைக் காணச்செல்லும்போது கொடுக்கும் காணிக்கைப் பொருள். மருப்புப் பூண் கையுறையாக அணிந்து (கலித்.82,12). மையறு சிறப்பிற் கையுறை யேந்தி (சிலப்.8,22). கையுறை பாராட்டிச் சென்று நிற்றல் (இறை.அகப்.62,30 உரை). பந்தையும் மாலையையும் கையுறை யாகக் கொடுத்து (சீவக.2928 நச்). தத்த மனக்கிசைந்த கையுறைக ளாங்கொடுத்து (திருவிளை. பு.2,8). ஒள்ளியவிருப்பின் ... கையுறை (திருக்குடந்.பு. 34,6). கணேசனை வணங்கினர் கையுறை ... உதவினர் (சிவஞா.காஞ்சிப்பு.வலம்புரி.15). அரசர் முன் சொரி கையுறை அனைத்தும் (கச்சி.காஞ்சிப்பு.நகரேற்.173). கையுறை வேள்வி கருவுயிர்த்தல் ... இன்னோரன்ன செயல்களுக்குரிய பண்டம் (கௌடலீயம் ப.303). அவர்க்குத் திருந்து கையுறை தருகுவம் (காந்தி காதை 2,2,55). 2.பரிசுப்பொருள். கோட்டுத் தனத்திற்குக் கையுறை தேடிக் கொணர்ந்ததுமே (ஆதி.வ.கோவை 83). எந்த வாறுகை யுறையிலா தையன்முன் (குசேலோ.166). 3.வரிசைப் பொருள்கள். கையுறை எழுதினர் (சீவக.829). 4.மொய்ப்பணம். (செ.ப.அக.) 5.உழவர் முதலியோர் இடத்தினின்றும் பெறுவது. கையுறைப் பொருளாகிய ஊதியத்தையும் தந்தையின் பாற் சேர்த்தல் வேண்டும் (கௌடலீயம் ப.105). 6.காட்சி. கையுறை தானே காட்சியாகும் (அக.நி. கைமுதல் 10). 7.இலஞ்சம். (நாட்.வ.) 8.(அகப்.) தலைவிக்கு அன்பு பாராட்டித் தலைவன் கொடுக்கும் தழை முதலிய நன்கொடை. தோழி கையுறை மறுத்தது (ஐங்.187 உரை). அவள் தேற்றலும் கையுறை ஏற்றலும் (நம்பியகப்.146). ஒருமையின் போந்து கையுறை ஏந்தி நின்று (இலக்.வி.507). 9.→கையுடை. (யாழ்.அக.)

கையுறைபுனை-தல் 4வி. தலைவன் தலைவி யினிடம் கொடுக்கத் தேர்ந்தெடுக்கும் பொருளைப் பற்றி நினைத்தல். கையுறை புனைதலும் வேட்டை மேலிட்டுக் காட்டுத்திரிதலும் தலைவற்கு மறத்தல் (தொல்.பொ.100 நச்.).

கையுறையெழுது-தல் 5வி. விவாக முதலியவற்றில் மொய்க் கணக்கெழுதுதல். கையுறை யெழுதினர் (சீவக.829).

கையூக்கம் பெ. →கையூற்றம். (நாட்.வ.)

கையூக்கு பெ. →கையூற்றம். (முன்.)

கையூட்டு பெ. இலஞ்சம், ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் பொருட்டு அதிகாரத்தில் உள்ளவருக்கும் பிறர்க்கும் இரகசியமாகக் கொடுக்கும் பொருள். கையூட்டினுக்குக் கைந்நீட்டிக் கைந்நீண் டிருக்கும் பேய்கோடி (வங்கத்துப்.6,26). மயலுறு புன்கை யூட்டினில் ஆசை மருவாரே (காந்தி காதை 4,13). கையூட்டுப் பெற்றார் களவாடல் செய்தவர்கள் (மனித. தேடு.ப.32). எப்பேர்ப்பட்ட கையூட்டுங் கொண்டான் (சோழ.சரித்.53). செய்தி சேகரிப்பவர்கள் கையூட்டினைப் பெற்றுக் கொண்டு தங்கள் கடமையிலிருந்து வழுவியுள் ளனர் என்பதை அறிய முடிகிறது (இந்.இதழ்.ப.22). பீரங்கிபேரத்தில் கையூட்டு பற்றி விசாரிக்க நீதிபதிகள் குழு தேவை (செய்தி.வ.).

கையும் பெ. (உருது) நிலையானவன். அல்லாகுவின் அழகிய திருநாமங்களுள் ஒன்று (அறபு.அக.ப.101).

கையூழ் பெ. 1.வண்ணத்திற் செய்த பாடலெல்லாம் இன்பமாக யாழிற் பாடுகை. (சீவக.657 உரை) 2.காரண காரியம். கையூழ் தடுமாற்றம் நன்று (பரிபா.17,46).

கையூற்றம் பெ. (கையின் வலிமை) வல்லமை. (நாட்.வ.)

கையூன்று-தல் 5வி. கைவைத்தல். கவுள் மிசைக் கையூன்றி நிற்பாள் (ஐந்.ஐம்.10).

கையெடு[1]-த்தல் 11வி. 1.வரவேற்றல். இந்திரனும் தேவாதியும் இளங்கொழுந்து வந்தாலும் எல்லையிலை ரெண்டு கிளி எதிரே வந்து கையெடுக்கும் (கொங்கு.நா. பா.2 ப.271). 2.உயர்த்துதல். கையெடுத்தே மன்ன நின் மனத்தது விடுத்திடு (யசோதர.281). கையெடுத் துக்கும்பிட்டான் காளையந்த அர்ச்சுனனும் (பவளக். மாலை ப.20). 3.வணங்குதல். சூதாடத்தான் தெரியாமை சூரியனைக் கையெடுத்தோம் (கொங்கு.நா. பா.2 ப.105). 4.கும்பிடுதல். அவன் எவரையும் கையெடுப்பதில்லை (நாட்.வ.).

கையெடு[2]-த்தல் 11வி. 1. யாசித்தல். (செ.ப.அக.) 2.தேர்ந்தெடுப்பு முதலியவற்றில் கையுயர்த்தித் தம் கருத்தை உணர்த்துதல் (முன்.) 3.சத்தியம் பண்ணு தல். வாயெடுத்தார் கையெடுத்தார் (மூவரை.தூது 236).

கையெடுப்பு பெ. கையையுயர்த்தி நிற்கும் ஒருவனது உயரத்தினளவு. அந்த கிணற்றில் கையெடுப்பு சலம் இருக்கிறது (நாட்.வ.).

கையெழுத்து பெ. 1.கைஒப்பம். கையெழுத்தும் முத்திரை வைத்து (வீர.கட்ட.கதைப்பா.ப.29). எடு னுல்லாம் பார்க்கிறதும் கையெழுத்து போடுகிறதும் நாளது வரைக்கும் அனுப்பவேண்டிய ... கணக்கெல்லாம் பார்த்து (ஆனந்த.தினசரிச்.3 ப.10). நீரி லெழுதுங் கையெழுத் தென்றும் (திருவருட்பா.தெய்வமணி.17). தன்னுடைய கையெழுத்தையே பிழையற யெழுதத் தெரியாதவனுக்கு (பெண்கல்வி ப.25). மிசோ தேசிய முன்னணியுடன் உடன்பாடு கையெழுத்து ஆகியதை அடுத்து அங்கு அமைதி ஏற்பட்டுள்ளது (செய்தி.வ.). 2.கையால் எழுதிய எழுத்து. முன்னைச் சென்மத்து, எகினமுளான் கையெழுத்தால் தவஞ்செய் திட்டோர் எனைச்சிவனிற் பிரித்திகழார் இடர்தீர் வாரே (திருவாமாத். பு.பூர்வ.22,12). நீரி லெழுதும் கையெழுத் தென்றும் (திருவருட்பா 17,3). என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேனென்று பாருங்கள் (பு.ஏற்.கலா.எழு.நிரூ 6,11). 3.தனக்கே உரித்தான முறையில் கையினால் எழுதும் எழுத்து. என் கையெழுத்தே போலும் இது (பஞ்ச. திருமுகவிலா.1642). 4.பெயரின் தலைப் பெழுத்து. (கலைச்.அக.ப.2,80) 5.→கைரேகை. (நாட்.வ.) 6.சட்டத்திட்டம். நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து ... வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் (பு.ஏற்.கொலோ. எழு.நிரூ 2,14-15). 7.உடன்படிக்கை. சதுர்வேதி மங்கலத்து சபையோம் யையெழுத்து (தெ.இ.க.2,103). 8.தீர்மானித்து எழுதிக் கொடுத்த பத்திரம். (சாச.அக.) 9.கடிதம். பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன் (பு.ஏற்.கொரி.1எழு.நிரூ 16,21).

கையெழுத்துவல்லுநர் பெ. கையால் எழுதுவதில் வன்மையுடையவர். (ஆட்சி.அக.ப.138)

கையெழுத்துப்படி பெ. கையால் எழுதியப்படி. (ஆட்சி. அக.ப.181)

கையெழுத்துப்பிரதி பெ. கையாலெழுதிய நூற் பிரதி. (செ.ப.அக.)

கையெழுத்துப்போடு-தல் 6வி. கையொப்பமிடுதல். (நாட்.வ.)

கையெழுத்துவை-த்தல் 11வி. →கையெழுத்துப் போடு-தல். (முன்.)

கையெழுத்தோலை பெ. 1.கடன்சீட்டு. (சாச.அக.) 2.எழுதிக் கொடுத்த பத்திரம். (முன்.)

கையெழுது-தல் 5வி. ஏடெழுதுதல். சாத்தன் கையெழு துமாறு வல்லன் (தொல்.சொல்.40 கல்.).

கையெறி-தல் 4வி. 1.கை கொட்டுதல். கையெறிந்து நக்கார் (சீவக.582). குறும்பூர்ப்போர் கையெறிந்து கொற்றம் பெறுதல் இறும்பூ தென்றியாமாடல் வேண்டா (பெருந்.717). நம்பன்ஈ துரைத்தலும் நக்குக் கையெறிந்து (சிவஞா.காஞ்சிப்பு.வாணேச.18). 2.கையைத் தட்டுதல். கைஇ மெல்லிதின் ஒதுங்கி கையெறிந்து (மதுரைக்.419). 3.உறுதி கூறிக் கையடித்தல். சென்றங்குப் பாரதங் கையெறிந் தானுக்கு (பெரியாழ்.தி. 2,6,4). 4.துன்பத்தால் வயிற்றி லடித்துக் கொள் ளுதல். கையெறிந்தெழு திரங்கி வீழ்ந்தரற்றுவ கடுக்கும் (சிவஞா.காஞ்சிப்பு.வலம்புரி.25). 5.கோபத்தால் கை வீசுதல். வீழ்ந்து புரண்டுகை யெறிந்தால் என்ன (சிவஞா.காஞ்சிப்பு.தக்கே.56).

கையெறிகாலெறி பெ. கைகால்களை உதைத்து கொள்ளுகை. (நாட்.வ.)

கையேகுபடி-த்தல் 11வி. முற்காலத்தில் புராணம் படித்துப் பிரசங்கம் செய்வோருக்குக் கருகில் இருந்த புராணத்தை ஓதப்படித்தல். (முன்.)

கையேடு பெ. 1.வழிகாட்டி ஏடு. (ஆட்சி.அக.ப.137) 2.சிறிய ஏட்டுப் புத்தகம். (தொல்.பொ.இளம்.) 3.நடைமுறை நூல். (ஆட்சி.அக.ப.181) 4.நாள் வழிக்கணக்கு. (செ.ப.அக.) 5.நாள்வழிக்கணக்கில் ஏற்றுதற்கு அவ்வப்போது எழுதிவைக்கும் சிறிய குறிப்புப்புத்தகம். (முன்.) 6.பெருஞ்செலவிற்கு. விவரங்காட்டுந் தனிக்கணக்குப் புத்தகம். (முன்.) 7.சொல்லைத்தொடுப்பவர். மாணிக்க வாசகர்க்கு வந்துகையே டாய்க்கோவை பூணிக்கை யாயெழுதும் பொற்கரத்தான் (சங்.விறிலி.தூது 75).

கையேந்தி பெ. இரப்போன். (வின்.அக.)

கையேந்து-தல் 5வி. (கையையேந்துதல்) யாசித்தல். மையேந்து கண்ணியர் வேள் மாலைநமக்கு ஈவன் என்று கையேந்தி அங்கே கருத்துருகி நிற்பாரும் (நல்லதம்.காதல் 373).

கையேயி பெ. →கைகேசி. கைகேயி கருத்திதுவோ (கம்பரா.6,22,15).

கையேல்-தல் (கையேற்றல்) 11வி. 1.காரியத்தை ஏற்று நடத்துதல். (செ.ப.அக.) 2. →கையேந்து-தல். மென் காந்தள் கையேற்கு மிழலை யாமே (தேவா.575,4).

கையேற்பு பெ. 1.பெறுகை. (செ.ப.அக.) 2.யாசிக்கை. (யாழ்.அக.) 3.கைப்பிச்சை. (முன்.) 4.களப்பிச்சை வாங்குகை. (வின்.அக.) 5.பிச்சைக்காரர் வரி. (சாச. அக.) 6.ஒரு தொழிலை ஏற்றுக்கொள்ளுகை. (செ.ப. அக.)

கையேற்றம் பெ. செல்வப்பெருக்கான நிலை. (முன்.)

கையேறல் பெ. நடுத்தரமானமுத்து. கழிப்புக்கு அழியுக் கையேறல் குறுகலாணி (பாகம் பிரியா.பிள்.5,3).

கையேறு-தல் 5வி. 1.ஒருவர் கையினின்றும் மற்றொருவர் கைக்குச்செல்லுதல். (செ.ப.அக.) 2.கையிற் கிடைத்தல். இன்னும் பணங் கையேற வில்லை (நாட்.வ.).

கையேன் பெ. கீழ் மகன். கொன்றாரைக் கையேன் வேறுங் கண்டில னென்றான் (திருவிளை.பு.25,24).

கையை பெ. தங்கை, பின்பிறந்தாள். (பிங்.914)

கையைக்கட்டு-தல் 5வி. முயற்சி செய்யாதபடி தடுத்தல். (இலங்.வ.)

கையைக்கடி-த்தல் 11வி. 1.எதிர்பார்த்ததற்கு மேல் செலவாதல். (செ.ப.அக.) 2.நட்டமாதல். (ரா.வட்.அக.)

கையைக்குறுக்கு-தல் 5வி. 1.செலவைக் குறைத்தல். (செ.ப.அக.) 2.உலோபஞ் செய்தல். (முன்.)

கையைப்பிடி-த்தல் 11வி. நட்டப்படுதல். (ரா.வட்.அக.)

கையைப்பிடி[1]-த்தல் 11வி. →கையைக்கடி-த்தல். (செ.ப.அக.)

கையைப்பிடி[2]-த்தல் 11வி. 1.விவாகஞ்செய்தல். (முன்.) 2.→கையைப்பிடித்திழு-த்தல். (முன்.)

கையைப்பிடித்திழு-த்தல் 11வி. தீயநோக்கத்தோடு ஒருத்தியைக் கைப்பற்றி யழைத்தல். (முன்.)

கையைப்பிடித்துக்காலைப்பிடித்துச்செய்-தல் 1வி. பிறரை மிகவும் கெஞ்சி ஒரு காரியத்தைச் செய்தல். (இலங்.வ.)

கையையுதறு-தல் 5வி. வருத்த உணர்வினால் கையை அசைத்தல். (வின்.அக.)

கையொட்டி பெ. கைக்குழந்தை. (நாட்.வ.)

கையொட்டுக்கால் பெ. கருப்பூரவகை. (சிலப்.14,109 உரை)

கையொடி-தல் 4வி. துணைப்படுதல். (ரா.வட்.அக.)

கையொடுகாவலாய் வி.அ. சமயத்துக்குதவியாய். (வட்.வ.)

கையொத்து-தல் 5வி. அஞ்சலி செய்தல். கையொத்துச் செல்லுங்கோள் (திருவாய்.6,1,5 ஈடு).

கையொப்பம் பெ. 1.→கையெழுத்து. (நாட்.வ.) 2.கீறற் கையெழுத்து. (செ.ப.அக.) 3.கையெழுத்துச் செய்யப் பட்ட தொகை. (முன்.)

கையொலி பெ. பெரும்பாலும் ஐந்து முழமுள்ளதும் விக்கிரகங்களுக்குச் சாத்துவதுமான சிறிய ஆடை. கையொலியைத் தலையிலே கட்டுகிறதும் (கோயிலொ.).

கையொலியல் பெ. →கையொலி. (தொல்.பொ.1 இளம்.)

கையொழி-தல் 4வி. 1.→கைதூவு-தல். எண்ணிய கருமஞ் செய்தற்கு யான் கை யொழியேன் (குறள்.1021 உரை). 2.கைவேலை நீங்குதல். (நாட்.வ.)

கையொழியாமை பெ. 1.அவகாசமின்மை. (செ.ப. அக.) 2.முயற்சி நீங்காமை. (திவா.) 3.ஒழியா வொழுக்கம். (யாழ்.அக.)

கையொழுக்கம் பெ. வேறுபாடின்றி ஒரே மாதிரியாக ஒழுகுந் தன்மை. (வின்.அக.)

கையொற்றி பெ. 1.பத்திரப்பதிவு செய்யப்படாத ஒற்றி. (செ.ப.அக.) 2.கையுறுதியில்லைக்கப்படும் காணியீடு. (யாழ்.அக.) 3.நியமனம்பெற்ற பதிவுச்சான்று அலுவலரால் எழுதப்பெறாமல் வைக்கப்படும் ஒற்றி. (வின்.அக.) 4.சிக்கனச்செலவு. (யாழ்.அக.)

கையொறுப்பு பெ. 1.இச்சையடக்குகை. (செ.ப.அக.) 2.சிக்கனச்செலவு. (முன்.)

கையோங்கு[1]**-தல்** 5வி. அடித்தல். பிள்ளைகளைக் கையோங்குவது அவன் சுபாவம் (நாட்.வ.).

கையோங்கு[2]**-தல்** 5வி. 1.செழித்தோங்குதல். (வின்.அக.) 2.மேன்மைப்படுதல். அவனுக்கு இப்போது கையோங்குங் காலம் (நாட்.வ.).

கையோட்டம் பெ. 1.எழுதுதல் முதலிய வேலைகளில் கைவிரைவு. (செ.ப.அக.) 2.செல்வநிலை. (முன்.)

கையோடு[1]**-தல்** 5வி. 1.ஒரு தொழிலில் மனஞ் செல்லுதல். (முன்.) 2.வேகமாக எழுதுதல். கையோட வல்லவர் ... எழுதினும் (திருவருட்பா.1 திருவருள்.10).

கையோடு[2] வி.அ. 1.தாமதமின்றி. சொன்னதுங் கையோடே போனேன் (நாட்.வ.). 2.உடன். கையோடு கூட்டிவா. (செ.ப.அக.). 3.சித்தமாய். மருந்து கையோடு இருக்க வேண்டும் (முன்.).

கையோடுகையாய் வி.அ. 1.→கையோடு[2]-1. (முன்.) 2.காரியத்துடன் காரியமாக. கையோடுகையாய் அக்காரியத்தையும் முடித்துவிடு (நாட்.வ.).

கையோடே பெ. →கையோடு. (செ.ப.அக.)

கையோலை பெ. 1.→கையுறுதி. (யாழ்.அக.) 2.→கை முறி. (செ.ப.அக.)

கையோலைசெய்-தல் 1வி. 1.முடிவு செய்தல். கையோலை செய்து கொடுக்கிறார்கள் (திருப்பா.23 ஆறா.310). 2.தீர்மானித்தல். கவிழ்ந்திருந்து கையோலை செய்து கொடுக்கிறார் (திருவாய்.2,9,4 ஈடு).

கைர் பெ.அ. நல்ல. (செ.ப.அக.அனு.)

கைரசீது பெ. ஒப்பமிட்ட பணக்குறியீடு. அலாயிதா ஆபித்து சாயபு சம்மதியென்று காசிதாசு புக்கான்சி கை ரசீது வாங்கி ... பெண்சாதி வசம் கொடுத்தான் (ஆனந்த. தினசரிச்.3 ப.103).

கைரவம் பெ. ஆம்பல். (தீவா.)

கைரவாவிகம் பெ. புளிச்சைக்கீரை. (சித்.அக.)

கைரவி பெ. 1.சந்திரகாந்தி. (முன்.) 2.வெந்தயம். (முன்.)

கைராசி பெ. கைபடுவதனால் உண்டாவதாகக் கருதும் நன்மை. (நாட்.வ.)

கைராட்டு பெ. கையால் நூல் நூற்கும் எந்திரம். (முன்.)

கைராட்டை பெ. →கைராட்டு. (முன்.)

கைராத்தாசாமி பெ. 1.(உருது) பிச்சைக்காரன். (செ.ப.அக.) 2.ஒன்றுக்கும் உதவாதவன். (முன்.)

கைராத்தினாம் பெ. தருமக் கொடை. (வட்.வ.)

கைராத்து பெ. 1.(உருது) தருமம். (செ.ப.அக.) 2.உபயோகமற்றது. (முன்.)

கைராதம் பெ. நிலவேம்பு. (சித்.அக.)

கைரிகம் பெ. 1.பொன்னூமத்தை. (முன்.) 2.காவிக்கல். (செ.ப.அக.) 3.பொன். (சதுர.அக.)

கைரியத்து பெ. சௌக்கியம். (நாட்.வ.)

கைரியம் பெ. இரும்பு. (யாழ்.அக.)

கைரேகை பெ. கையில் அமைந்திருக்கும் வரை. (நாட்.வ.)

கைரொக்கம் பெ. கையிலுள்ள முதல். (முன்.)

கைலஞ்சம் பெ. 1.→கையூட்டு. கைலஞ்சம் வாங்கிடும் பேர்களையும் (கும்மிப்பா.சீனய்யங்கார்.11). 2.→கைக் கூலி. (யாழ்.அக.)

கைலஞ்சி பெ. →கைக்குட்டை. (இலங்.வ.)

கைலாகு பெ. →கைத்தாங்கல். வந்தொகுத்தி கைலாகு தந்தாள் (தெய்வச்.விறலி.தூது 198). கைலாகின் மெல்ல மெல்லத் தாம் நடத்தி (கூளப்ப.காதல் 327). மின்னாளைக் கைலாகு கொண்டு சென்று கன்னி மனை புகுந்தார் (நல்லதம்.காதல் 416). துப்பட்டி கீழ்பரப்பி ... மெல்லியரை ... கைலாகு கொண்டு தூக்கி (மதுரை.கதை ப.80). கைலாகு வரிசையுடன் கொடுத்த அருமை சொல்லவோ (திருவிடை.நா.ப.21,1). அவன் தடுமாறி கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான் (பு.ஏற். அப்போசு.நட.13,11).

கைலாகுகொடு-த்தல் 11வி. 1.அரசர் முதலியவர் நடக்கும்பொழுது மரியாதையாக அவர் கைகளைத் தாங்குதல். (செ.ப.அக.) 2.உடல் வலியற்றவரைக் கைகொடுத்துத் தாங்குதல். (முன்.)

கைலாகுதரு-தல் 13வி. கைத்தாங்குதல். சுக்ரீவன் கைலாகு தந்து தோள் பிடிக்க (இராமநா.6,100 தரு 3).

கைலாகை பெ. →கைலாகு. (யாழ்.அக.)

கைலாசநாதன் பெ. (கைலாசத்துக்கு இறைவன்) சிவன். (நாட்.வ.)

கைலாசபதி பெ. →கைலாசநாதன். (செ.ப.அக.)

கைலாசம் பெ. எண்வகைமலைகளுள் ஒன்றும் சிவபிரான் வாழ்விடமுமான ஒருமலை, கயிலை மலை. கைலாசம் காணி ஆகும் (தண்டலை. சத.1). கழனியில் விழுந்த கழுதைக்கு அதுவே கைலாசம் (யென்.பழ.தொ.174). கருத்த குதிரையேறி கைலாசம் சேர்ந்தேளோ (திருநெல்.நாட்டுப்.குழந்தைப்.47). காடியைக் குடிக்கு முன்னே கைலாசம் போனாயோ (தமி.நா.பா.ப.36).

கைலாஞ்சு பெ. →கைக்குட்டை. (இலங்.வ.)

கைலாயம் பெ. →கைலாசம். பிறை அணிந்த மிக்க கைலாய மலை வித்தகனே (தாயுமா.பா. 28,47). காரிகையே நீங்களிருவர் கைலாயஞ் சேருமென்றார் (மதுரை.கதை ப.87).

கைலாரம் பெ. பனங்கிழங்கின் உட்பகுதி. (இலங்.வ.)

கைலி[1] பெ. 1.→கையொலி. அழகிய மணவாளப் பெருமாள் சாத்தியருளின கைலியில் (கோயிலொ.30). 2.திருமஞ்சன காலத்தில் பெருமாளுக்குச் சாத்தும் கட்டம் போட்ட சிவப்புப் பரிவட்டம். (இலங்.அக.825)

கைலி[2] பெ. முகமதியர் பயன்படுத்தும் பல வண்ணக் கட்டக் கோடிட்ட துணிவகை. (வட்.வ.)

கைலேசு பெ. →கைக்குட்டை. (நாட்.வ.)

கைலேஞ்சி பெ. →கைக்குட்டை. (அயற்.அக.)

கைலை பெ. →கைலாசம். கந்தவேள் தான்மகிழ் கைலை (சூட்டி.60). இமயகரி கைலை மந்தர ... பார் காத்து நிவந்திலங்கு மந்த மலை பெட்டு மரம் (உரி.நி.274). வடிவமாகச் செய்யப் பெற்ற வாகனம் துலங்குமாலிடபம் கைலை ... திடத்து வாகனம் (ஆச்சாபுர.பு.287). ஓடுடன் கந்தலும் ஒட்டுக் கோவணமும் ... கைலையும் உடுக்கும் (சோலை.குற.39,44). கைலையம் பொருப்பன் (செ. பாகவத.81). இலிங்கத்தைத் தெரிசித்தோர் ... கைலையில் இனிது வாழ்வரால் (சிவஞா.காஞ்சிப்பு. பலபத்.18).

கைலைமலை பெ. →கைலாசம். சங்கரனார் கைலை மலை தனிலுறையச் சென்றோம் (சரபேந்திர.குற. 40,1).

கைலையாளி[1] பெ. (இசையி.) மாயா மாளவ கௌளை என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.132)

கைலையாளி[2] பெ. சிவன். (பிங்.94)

கைவகு-த்தல் 11வி. படை வகுத்தல். கைவகுத்துப் பாராளு மன்னர் படையிரண்டு மார்த்து (பாரத வெண். 772). இரு படைஞருங் ... வஞ்சி னங்கொடு கைவ குத்தமர் செய்வரால் (திருவிளை.பு.50,1).

கைவசப்படுத்து-தல் 5வி. 1.ஒருவனைத் தன் கீழ் வரும்படி செய்து தான் நினைத்தபடி ஆட்டிப் படைத்தல். ஒருவன் உங்களைக் கைவசப்படுத்தினாலும் ஒருவன் தன்னை உயர்த்தினாலும் ... சகித்திருக்கிறீர்களே (பு.ஏற்.கொரி 11 எழு.நிரூ 11,20). 2.மீட்டெடுத்தல். (நாட்.வ.) 3.தன்வசப்படுத்தல். (மூன்.)

கைவசம் பெ. 1.உரிமை. இவன் நமது கைவசம் ஆனான் (மூவரை.தூது 265). 2.சுவாதீனம், பொறுப்பு. கூட்டிப்பாளையம் அவர்கள் கைவசமாய்ப் போனபடி யினாலே இவர்களுக்கு அங்கே நிற்க இடமில்லை (ஆனந்த.தினசரிச்.3 ப.138). வாளப்பா கைவசமேயானாராலால் ... சித்தரையும் காண்பாய் (போக.215). கண்ணாடியிற் கடலைக் கைவசமாக் காட்டுதல் போல் (ஒழிவி.1,19). தன் ஆளுகையின் கீழ் இருப்பது நம்முடைகை வசமாகச் சீமை தந்தால் (அன்னீதநா.ப.34).

கைவசமாகு-தல் 5வி. கைக்குட்படுதல். (நாட்.வ.)

கைவசி பெ. 1.(இசையி.) நீதிமதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.223) 2.(இசையி.) ஏமவதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.219)

கைவட்டகை பெ. பாத்திர வகை. கை வட்டகை யொன்று (தெ.இ.க.2,418,81).

கைவட்டணை பெ. கையாற்செய்யும் அபிநயம். (சீவக.1257 உரை)

கைவட்டி பெ. சிறிய ஓலைப்பெட்டி. (செ.ப.அக.)

கைவண்டி பெ. கையா லிழுக்கும் வண்டி. (நாட்.வ.)

கைவண்டில் பெ. சிறுவண்டில். (யாழ்.அக.)

கைவண்ணம் பெ. 1.வள்ளற்றன்மை. அக்குரன் அனைய கைவண்மையை (பதிற்றுப்.14.7). கைவண் மத்தி கழாஅர் (ஐங்.61). 2.கைத்திறம். கைவண்ணமருள் வண்ணங் காட்டும் வண்ணம் சொல்வண்ணங் காட்டுங் கொல்லோ (இரட்சணிய யாத்.1,9,159). சில வீடுகளில் நாகரீகம் அழமாட்டாக் குறையாகத்தன் கைவண்ணத்தைக் காட்டி (தலைமுறை ப.1). 3.கையால் பொருள் வழங்குகை. மண்ணக மகளிர்கை வண்மை கண்டயாம் (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.93).

கைவந்தவன் பெ. பழகித் தேர்ந்தவன், வித்தை கை வந்தவன். (செ.ப.அக.)

கைவந்தி பெ. 1.தோளின் கீழாகக் கையில் அணியப் படும் ஓரணி.விளக்கமுற்றிய கைவந்தியினையும் (மதுரைக்.415 உரை). வெறுப்பாம் இடுங் கைவந்தியே (சங்.நயி.அந்.47).

கைவர் பெ. உலைத்துருந்தி. (ஐம்.அக.)

கைவர்த்தம் பெ. பிரமவைவர்த்தம், பதினெண்புராணத் தொன்று. (கூடா.நி.)

கைவர்த்தன் பெ. பல்லக்கு முதலியன தூக்குவோர். (திருவாய்.ஈடு)

கைவரப்பு பெ. தாற்காலிகமாக இட்ட சிறுமண்ணணை. (நாட்.வ.)

கைவரப்பெறு-தல் 6வி. கிடைக்கப் பெறுதல். கலைஞா னங்கள் கைவரப் பெறுவர் (சென்னி.ஆற்றுப்.362).

கைவரம்[1] பெ. கைதூக்கிக் கூறும் வாழ்த்து. புறப்பட்டருளி னவுடனே ஐயசப்தங்களாலே கைவரம் பண்ணுகிறதும் (கோயிலொ.89).

கைவரம்[2] பெ.1. குமுதம். கைவரம் என்பது குமுதமாகும் (அக.நி.கைமுதல் 15). 2.வெள்ளாம்பல். (பிங்.302)

கைவரல் பெ. கைப்பழக்கம். (யாழ்.அக.)

கைவரிசை பெ. 1.திறமை. தெய்வரம்பை ஊர்வசி ... கைவரிசை காட்டி நடங்காட்ட (பஞ்ச.திருமுகவிலா.ப.2). வந்தாயோ உன்கை வரிசையெல் லாங்காட்ட (தமிழரசி குற.37). 2.கொடை. (செ.ப.அக.) 3.சீட்டாட்டத்தில் முதலில் சீட்டை இறக்கும் உரிமை. (விளை.வ.)

கைவரை[1] பெ. யானை. கைவரையன்றி நில்லாக் கடுஞ்சின மடங்கல் அன்னான் (சீவக.407). கைவரைக் காத்து கராவைக் கடிந்து (கேசவப்.இரட்.மாலை 9). பருக்கை வரையுரித்தார்த்தம் பந்தணை நல்லூர் பணிந்து (பெரியபு.28,289). கைவரைமேல் வேல் குளிக்க நின்றான் (நள.147). கைவரை யெருத்திற் கனவரை கிடந்த காட்சியிற் பொலிந்தொளிர் கோயில் (திருவிளை.பு.3,44). கைவரை ஒன்று உரித்தருளும் ... கண்ணுதல் (சிவராத்.பு.3,125). கைவரை யழைப்ப வந்த கார்ணற் கன்பு பூண்டு (செ.பாகவத 5,1,33). 2.துதிக்கை. இமையள வினிறகை வரைமுறைஇட (குசேலோ.704).

கைவரை[2] பெ. தற்கட்டுப்பாடு. கைவரை நில்லாது கனன்றகத்து எழுதரும் வெய்துயிர்ப்பு (பெருங்.2,17, 178-179).

கைவரை[3] பெ. →கைரேகை. (யாழ்.அக.)

கைவரைச்சம்பா பெ. சம்பா நெல் வகை. (புதார்த்த. 803)

கைவரைநூல் பெ. 1.கைரேகையியல். (ஆட்சி.அக. ப.208) 2.தோல் கோட்டியல். (கலைச்.அக.2 ப.32)

கைவல்யநவநீதம் பெ. தாண்டவராய சுவாமிகள் இயற்றிய வேதாந்த நூல். கைவல்ய நவநீதத்தை அடைந்தவர் விடய மண் தின்ற அலைவரோ (கைவல்ய. பாயி.6).

கைவல்யம் பெ. 1.ஏகமான தன்மை. நிர்விடய கைவல்யமா நிட்கள (தாயுமா.பா.கருணா.1). பரமஞானம் ... பரமகைவல்ய நிமலம் (திருவருட்பா 1960,3). 2.→கைவல்லியம்-4,5,6. (செ.ப.அக.)

கைவல்லபம் பெ. 1.கைச்சாமாத்தியம். (யாழ்.அக.) 2.புயவலிமை. (செ.ப.அக.) 3.தொழில் செய்கைத் திறம். (முன்.)

கைவல்லியநவநீதம் பெ. →கைவல்ய நவநீதம். கைவல்லிய நவநீத நூலைக்கற்றோர் ... ஞானிகளாய் வாழ்வோர் (கைவல்ய.2,180).

கைவல்லியம் பெ. 1.ஏகமான தன்மை. (செ.ப.அக.) 2.உபநிடத முப்பத்திரண்டினொன்று.(யாழ்.அக). 3.சித்தி. (முன்.) 4.மோட்சம். கைவல்லியம் நின்றருளும் கருணைக் கடல் (பிரமோத்.14,33). மோக்கம் ... கைவல்லியம் (அபி.மாலை 1172). 5.அனுகூலம். (செ.ப.அக.) 6.நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று. (முன்.)

கைவலச்செல்வன் பெ. மோட்சமாகிய செல்வத்தை யுடையவன், அருகன். கருமக்கடல் கடந்த கைவலச் செல்வன் (சீவக.2741).

கைவலம் பெ. 1.முத்தி, மோட்சம். கருமக் கடல் கடந்த கைவலச் செல்வன் (முன்.). கைவலம் மறப்பார் (செ.பாகவத.7,3,33). இவை விடுத்தறானே யடையுங் கைவலம் (பிரபோத.42,15). கைவலம் எளிதிற் பெற்றோர் பலர் (திருக்கோவ.பு.மெய்ப்.81). 2.பணிக்கை. கைவலம் என்பது பணித்தல் ஆகும் (அக.நி.கைமுதல் 1). 3.ஒழுக்கத்திடம். தீதிலார் நோக்கி நெய்தலுங் கைவலத் தொழிந்தார் (சீவக.2103). 4.கைந்நலம். (யாழ்.அக.)

கைவலன் பெ. கைவலிமை. கன்னியர் கவரிக்கற்றை கைவலனசைப்பக் காய்பொன் னின்னிசைக் குழைவில் வீச (சூளா.997).

கைவலான் பெ. கைவல்ல சித்திரக்காரன். கலவிப் பகுப்பெலாங் கைவலாற் கொண்டு (குசேலோ.252).

கைவலி-தல் 4வி. கைகடந்து போதல். சிறுமானி வணம்மைக் கைவலிந்து (திருவாய்.6,5,7).

கைவலை பெ. சிறுவலை. (செ.ப.அக.)

கைவழக்கம் பெ. 1.கையின் கொடைக்குணம். திருக் கைவழக்கம் (செ.ப.அக.). 2.கைவிளக்கம், தொழிலின் திறமை. (முன்.) 3.கோயிலில் பூசகர் முதலியோருக்கு உரிய உரிமை. (முன்.) 4.இழவுக்குக் கொடுக்கும் பணம். (யாழ்.அக.) 5.ஈமக்கடனாற்றிய பின்பு குடி மக்கள் ஐவர்க்குக் கொடுக்கும் பணம் முதலியன. (இலங்.வ.)

கைவழங்கு[1]**-தல்** 5வி. 1.கொடுத்தல். (செ.ப.அக.) 2.இழவுக்குக் கொடுத்தல். (யாழ்.அக.) 3.கையேவுதல். (முன்.)

கைவழங்கு[2]**-தல்** 5 வி. விலைக்குவிற்றல். வெஞ்சமர் விளைக்கவே கைவழங்குகென (பாரதம்.5,4,120).

கைவழம் பெ. வழங்குங்கைப்பக்கம். (யாழ்.அக.)

கைவழி[1] பெ. 1.ஆள். (செ.ப.அக.) 2.கைராசி, கைபடுவ தனால் உண்டாவதாகக் கருதும் நன்மை. (நாட்.வ.) 3.சிறுபாதை, ஒற்றையடிப்பாதை. அண்டையில் உளதோர் கைவழி (மனோன்மணீ.4,5,49). 4.சிறு கிளைநதி. (செ.ப.அக.) 5.யாழ். கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி (புறநா.149,3). 6.ஒருவன் கைவசமாக அனுப்பிய பொருள். (செ.ப.அக.)

கைவழி[2] பெ. →கையொலி. பெரும்பாலும் ஐந்து முழமுள்ளதும் விக்கிரங்களுக்குச்சாத்துவதுமான சிறிய ஆடை (நாட்.வ.).

கைவழிப்பொருப்பு பெ. மகா மேருவின் சிகரம். (தக்கயாகப்.382)

கைவளச்சம்பா பெ. நிறமும் இனிமையுமுள்ள சம்பா நெல்வகை. (வின்.அக.)

கைவளப்பம் பெ. கொடை. கைவளப்பத்தை யுடைய தலைவன் (பெரும்பாண்.420 உரை).

கைவளம் பெ. 1.→கைராசி. (செ.ப.அக.) 2.கைப் பொருள். கைவளம் இன்றிக் கருக்கடந்தேனே (திருமந். 2977). 3.செழிப்பு. கைவளமான தேசம் (நாட்.வ.). 4.செல்வம். காரினை வென்ற கவிகையான் கைவளம் வாரினை கொண்டு வரற்கு (புற.வெண்.217). 5.கைத் தொழில். திறம் கண்டோர் மருளக் கைவளங் காட்டி (பெருங்.2,4,194). 6.நட்டபாடை. (பிங்.1390)

கைவளர்-தல் 4வி. 1.பரவுதல். சேனையொடு கை வளர்ந்து சென்றது கன்னிசூழ் நாட்டிற் கயலாணை கைவரள (புற.வெண்.6,5,155). 3.விஞ்சியிருத்தல். தீம்பிலே கைவளர்ந்த பிரசையைக் காலிலும் கழுத்திலும் விலங்கிட்டு வைக்கும் பித்ராதிகளைப் போலே (பெரியதி. தமிழாக்.2,9,8). 2.போற்றப்பட்டு வளர்தல். கை வளர் மயிலனாளை (கம்பரா.1,21,18). 4.பழக்க முறுதல். விடயாந்தரங்களிலே கைவளருகிற கரணங்களை (அட்டாதச.ப.22).

கைவளை[1] பெ. 1.கடகம், வளையல், மணிக்கட்டுக்கு அருகில் அணியப்படும் அணிவகை. வேர்ப்பு எழ கயல் விழியர் கைவளை ஆர்ப்பு எழ (தேம்பா.1,1,22). ஒளிமணிவாய் விட்டொலிக்கும் ஓவியம்போற் கைவளை யும் (தித்தேரி.அம்.4 க.100). மணிக்கை வளையென்ன வரும்பேர் (திருப்பு.உலா 56). 2.மேற்கூரையைத் தாங்குமாறு சுவர் முதலியவற் றிலமைக்குஞ் சட்டம். (செ.ப.அக.) 3.போர்க்கருவி. மடங் கண்ணான் கைவளை சுழற்றி (திருவிளை.பு.14,53).

கைவளை[2]**-தல்** 4வி. வேலை செய்ய பழக்கப்படுதல். ஒரு வேலையும் செய்யாத அவளுக்கு இப்பதான் கைவளையுது (இலங்.வ.).

கைவற்று-தல் 5வி. கையிற்பொருளறுதல். (செ.ப.அக.)

கைவறள்(ளு)-தல் 2வி. →கைவற்று-தல். (முன்.)

கைவறுண்டி பெ. சீன மிளகாய். (சித்.அக.)

கைவன்மை பெ. 1.புயவலிமை. (செ.ப.அக.) 2.தொழிலில் வல்ல கைத்திறமை. கைவன்மகடூஉத் தூய்மையும் நுண்மையுமுடைய வாக ஓரிழைப் படுத்தினாற் போல (தொல்.எழுத்.1 நச்.).

கைவா[1] (வரு)**-தல்** 13வி. 1. சித்தியாதல். கண்டுயிலை யறத்துறப்பா ரவர்க்கிதுகை வாராதால் (பகவற்.6,13). 2.ஒருங்கே நிகழ்தல். காட்டிய பத்துங் கைவரு மெனினே (நம்பியகப்.36). சங்கரற்குக் கைவந்த தீயும் தலைவந்த ஆறும் (அபி.அந்.98). 3.அகப்படுதல். கைவாரா வந்த இடுக்கண் (ஆசாரக்கோவை 89). 4.கை கூடுதல். அறியா தனக்குக் கைவாராத பொருளின் கண்மை செய்தல் (குறள்.832 மணக்.). காலான முதற் பூமி கைவந்தால் முந்தியும் கைவந்த தாமே (கைவல்ய.2,155). கைவந்தவர்க்கு ஆட்டம் (ஒழிவி.8,11). மன்னு நித்ய வாழ்வு கைவந்தது என (இரட்ச.சரி.513). 5.கைக்கெட்டுதல். மோட்ச கதியின் வாழ்வு தன் கைவரக் கழித்து (இரட்ச.சரி.17). 6.தேர்ச்சி பெறுதல். வேததாற்பரியங் கைவந்திருக்குமவர்கள் (திருவாய்.10,1,2 ஈடு). இவனுக்கு இந்நூல் கைவரும் என்று அறுமித்தறிதல் (சிசி.சுப.17 மறைஞ.). மன்மதனால் கைவந்தோர் மற்றிலை (திருப்பு.உலா 449).

கைவா[2](வரு)**-தல்** 13வி. ஒன்றைச் செய்யக் கையெழுதல். அடிக்கடிக் கைவரவில்லை (நாட்.வ.).

கைவா[3](வரு)**-தல்** 13வி. வழித்தோன்றுதல். மா மறை யோன் கைவார வேதக் குலக்கொடியான் (பாரதவெண். 681).

கைவாக்கு பெ. →கைவாகு. (செ.ப.அக.)

கைவாகு பெ. 1.→கைராசி. (முன்.) 2.கையால் ஆளுதற்கு உரிய நிலை. (முன்.)

கைவாங்கியுண்(ணு)-தல் 7வி. நிறையவுண்ணுதல். (வட்.வ.)

கைவாங்கு[1]**-தல்** 5வி. 1.நீங்குதல். காய்வானைக் கை வாங்கிக் கோடலும் (நீரிகடு.4). ஓடுதல் இருள் போய்க் கைவாங்க (நள.281). ரகிணத்தினின்றும் கைவாங் கினாயோ (திருநெடுந்.16,128 வியாக்.). கைவாங்கின கசேந்த்ராழ்வானை (திருப்பா.1 மூ.வாபத்.17 ப.21). 2.திரும்புதல். இரண்டு படையும் கைவாங்கித் தம் பாடிவீடு புக்காரா ஆகக் கருதுவது (பாரத வெண்.706 உரை). 3.பின்னிடுதல். அத்தனை தூரஸ்தன் என்று கைவாங்க வேண்டா உனக்காகக் கிட்டவந்து நிற்கிறவன் காண் என்றார் (பெரியதி.2,8,174 தமிழாக்.). 4.கைசலித் தல், கையோங்குதல். மாரன் பொரவந்தான் கை வாங்கிப் போனான் (இராச.உலா 536).

கைவாங்கு[2]**-தல்** 5வி. கையைவெட்டுதல். (நாட்.வ.)

கைவாசி பெ. 1.கைமுறை. (தேரை.வெண்.290) 2.சந்தை விற்பனைக்கு வந்த நெல் போன்ற பண்டங்களில் ஒரு கையெனக் கொள்ளும் உரிமை. (சாச.அக.) 3.→கைராசி. (செ.ப.அக.)

கைவாட்சம்பா பெ. ஓர்நெல். (யாழ்.அக.)

கைவாய்க்கால் பெ. சிறுகால்வாய். (தொல்.பொ.1 இளம்.)

கைவாய்ச்சி பெ. சிறுவாய்ச்சிக்கருவி. (வின்.அக.)

கைவாய்ப்பு பெ. கைமாற்று, கைக்கடன். மூன்று ரூபாய் கைவாய்ப்பாய் வாங்கியிருக்கிறேன் (நாட்.வ.).

கைவாரங்கொள்(ளு)-தல் 2வி. 1.கூத்தை நிறுத்தும் பொருட்டுக் கையை உயரவெடுத்து வீசுதல். (ஒழிவி. பொது.1 உரை) 2.அதிகாரதோரணை கொள்ளுதல். (செ.ப.அக.)

கைவாரணம் பெ. 1.யானை. கைவாரணமுங் கொடுவந்

தையை கவுரிக்கு (ஞான.உபதேசகா.126). 2.கைவளை. மால் உழந்து கைவாரணமும் கலையும், சிறுபுலியூர்ச் செய்வாரண மறுகுசேர்வித்தார் (சிறுபு.உலா 177).

கைவாரம் பெ. 1.செய்கைப்பங்கு. (யாழ்.அக.) 2.பனங்கிழங்கு உண்டாக்குதல், முதலியவற்றுக்குக் கொடுக்குங்கூலி. (இலங்.வ.) 3.கைத் தூக்கிக் கூறும் வாழ்த்து. புறப்பட்டருளினவுடனே சயசப்தங்களாலே கைவாரம் பண்ணுகிறதும் (கோயிலொ.89). கைவாரந் தான் வாழ்த்துதல் ஆகும் (அக.நி.கைமுதல் 12). செய்யார் மலருழக்கிச் செங்கமலப் பொய்கைபுகுங் கைவார நாடன்மிகுங் கார்மேகம் (பெருந்.1123). 4.கைதட்டல். (ஜம்.அக.) 5.கூத்தடக்குகை. பானலம் உனக்கும் கைவாரம் (பாகம்பிரியா.பிள்.8,1). 6.சிவாரம். (செ.ப.அக.) 7.வயிரமுதலியவற்றின் முனை. (முன்.)

கைவாரம்செய்-தல் 1வி. ஒழுக்கமும் அன்பும் செய்தல். ஐவாயவேட்கையன்றவருமாகதருங்கைவாரஞ் செய்யுங் கலைசையே (கலை.சிலே.வெண்.100).

கைவாரி பெ. வார் கழியை விட மிகச் சிறியதாக உள்ள பலகை. (தொவ.)

கைவாரிகள் பெ. நின்றேத்துவார். (சிலப்.5,48 அரும்)

கைவாள் பெ. 1.கைரம்பம். கைவாளிற் சிரம்பொடிப்ப விபுதர் கோமான் (கோலாசல.பு.48). 2.சிறுவாள். இவனைப் பலி கொள்ளெனக் கைவாள் கொடு பாலன் சிரமரிந்தான் (வேதா.கதை 4,23). 3.கையில் ஏந்தும் கத்தி. படை கண்டால் அஞ்சுமவன் கைவாள் பிடித்தாற் போல (குறள்.616 மணக்.). 4.துர்க்கையின் படை. (பிங்.125)

கைவாளப்பை (கைவாளைப்பை) பெ. →கைவாளை-1. பாக்கிட்ட கைவாளப்பையும் (விறலி. தூது 661).

கைவாளம் பெ.→ கைவாளை-1. தொங்கிய கைவாள மென்று தூக்கி (விறலி.தூது 809).

கைவாளரம் பெ. சிறிய அரவகை. (செ.ப.அக.)

கைவாளி பெ. ஒரு வகை நீர்ச்சால். (தொ.வ.)

கைவாளை பெ. 1.அடைப்பை. பட்டுக் கைவாளையும் ... வெண்டயமும் (தெய்வச்.விறலி.தூது 216). தம்முடைய கைவாளையிலேயிருந்த தீர்த்த விக்கிரகத்தை (குருபரம். 571 பன்னீ).2. புடைவைவகை. (யாழ்.அக.)

கைவாளைப்பை (கைவாளப்பை) பெ. →கைவாளை-1. (வின்.அக.)

கைவாளைவட்டுவம் பெ. →கைவாளை-1. (முன்.)

கைவாறு பெ. 1.கைத்தூக்கு. (யாழ்.அக.) 2.கைத் தாங்கல். (முன்.) 3.தக்கசமயம். (இலங்.வ.) 4.அட்ட காசம் செய்வோ, கேடி. (முன்.)

கைவகு-த்தல் 11வி. சேனைகளை அணிவகுத்தல். கானிரையைக் காய்களிற்றைக் கைவகுத்து (பாரத வெண்.689).

கைவண்டி பெ. கையால் இழுக்கும் வண்டி. கரியனின் கை வண்டி (இளை.இலக்.70).

கைவண்டு பெ. கை வளையல். கைவண்டுங் கண்வண்டும் ஓட (சேரமான்.உலா 99).

கைவரிசை பெ. 1.கைத்திறமை. கும்பல் தங்களது கைவரிசையைக் காட்டியுள்ளதாகப் புலன் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (செய்தி.வ.).

கைவல்லவன் பெ. தேறினவன். (ஆட்சி.அக.ப.8)

கைவாங்கு-தல் 5வி. வருந்துதல். நாமோ திருத்தக் கடவரம் என்று கைவாங்கி (குருபரம்.ஆறா.ப.284).

கைவித்தாரி பெ. கையால் சித்திர அலங்காரம் செய்வோர். (அரிச்.வெண்.22 உரை)

கைவிசேடம் பெ. 1.→கைராசி. மருத்துவர்க் கோசமயம் கைவிசே டந்தன் னிலே (அறப்பளீ.சத.33). 2.பரிசு. (நாட்.வ.)

கைவிசை பெ. கைமுறை, மருந்து செய்யும் அனுபவ முறை. (யாழ்.அக.)

கைவிசை-தல் 4வி. செய்வதறியாது திகைத்தல். (வட்.வ.)

கைவிஞ்சு-தல் 5வி. அளவுகடத்தல். கைவிஞ்சி மோகமுற (திருவாய்.நூற்றந்.62).

கைவிட்டமதிப்பு பெ. அரை குறையாகக் கட்டப்பட்டு நிறுத்திய காப்புறுதி சீட்டின் உயர்வான மதிப்பு. (கலைச்.அக.2,ப 84)

கைவிட்டபடை பெ. அத்திரம். (ஆசி.நி.178)

கைவிட்டம் பெ. வீட்டின் சுற்குவிட்டம். (நாட்.வ.)

கைவிடப்படு-தல் 6வி. விலக்குதல். அடிப்படையும் நோக்கமும் இல்லாத பகுப்பும் வகைப்பாடும் கைவிடப்பட வேண்டிய ஒன்றாகும் (தமிழிலக்.கோ.9). இரண்டுபேர் வயலில் இருப்பார்கள், ஒருவன் ஏற்றுக் கொள்ளப் படுவான், ஒருவன் கைவிடப்படுவான் (பு.ஏற்.மத்தேயு 24,40).

கைவிடல் பெ.1.உரிமை துறப்பு. (ஆட்சி.அக.ப.241) 2.கொள்ளாதொழிகை. குணமது கைவிடேல் (ஆத்திசூடி வெண்.36).

கைவிடாப்படை பெ. சத்திரம். (பிங்.)

கைவிடு¹-த்தல் 11வி. நீக்குதல். நன்னகர் வாயிற் காவல் கை விடுத்துக் கடமையிற் பிறழ்ந்தும் (மனோன்மணீ. 4,123).

கைவிடு²-தல் 6வி. 1.விட்டொழிதல். அவுக் கைவிடுதும் அமனும் பொருளே (கலித்.14,18). மூத்தோர் குழலி எனும் இவரைக் கைவிட்டு (சிலப். 21,54). பெரியோர் கண்டு கைவிட்ட மயல் (நாலடி.43). காவல்நடாத் தியசெங்கோல் கைவிட்டா திருமாலோ (இரணியவதைப்.435). பேரரசு மெங்கள் பெருந்திருவுள் கைவிட்டுச் ... சேர்தற்கு (நள.10). நெய்விட் டவியிற் படைநே ரலன்முன் கைவிட்

டெனையே குவதுன் கடனோ (கந்தபு.4,8,237). போற்றுஞ் சுவர்க்கங் கைவிட்டு (திருக்குடந்.பு.59,7). சுகத்திலே இருக்கும் போதியா வண்ணம் கைவிடல் முறையோ (தாயுமா.பா. 22,4). கல்லாது மூத்தாரைக் கைவிட்டுக் கற்றிளைய நல்லார் (பாரிகாதை 171). புன்மைநெறி கைவிடார் (திருவருட்பா 11,2). 2.நீங்குதல். கண்டு கை விட்ட மயல் (நாலடி.43). இம்மூவர் கல்விப் புணை கைவிட்டார் (திரிகடு.17).கெடும் இடம் கைவிடுவார் (இன்.நாற்.36). கற்பக மரத்தைப் புல்லிக் கைவிடா தொழிந்து காமத் துப்புர வுமிழுங் (சீவக.169). கைவிட லறியாக் காதலிற் களித்தன்று (புற.வெண்.317). கறை யணற் பாப்பணை கை விட்டு (செ.பாகவத.10,1,71). 3.கைப்பிடியிலிருந்து விட்டு விடுதல். கான யானை கைவிடு பசுங்கழை (குறுந்.54). 4.ஒழித்திடுதல். களித் தறியேன் என்பது கைவிடுக (குறள்.928). 5.கவனிக் காமல்விட்டுவிடுதல்.கைவிடாமல்காக்கவேண்டும்அம்ம (கண்ண.திரை.பா.1,33). 6.துறத்தல், இழந்து விடுதல். மற்றின்பம் யாவையும் கைவிடுப (நீதிநெறிவி.88). 7.ஒதுக்குதல். மறைநெறி கைவிட்டார் (சிவஞா. காஞ்சிப்பு.கயிலாய.15). 8.போக்குதல். சினங்கை விடுதல் செருக்கவித்தல் (சீவக.2816). களித்தறியேன் என்பதனைக் கைவிடுக (குறள்.929 மணக்.). 9.தள்ளிப் போடுதல். (யாழ்.அக.) 10.செலவு செய்தல். கடங் கொண்ட ஒண்பொருளைக் கைவிட் டிருப்பார் (பழமொழி. நா.304). 11.பற்றறவிட்டு விடுதல். காமன் ஆவி கொண்டி வளைக் கைவிட்டகலுமோ வென்று (சூளா. 167). கைவிட்டு விட்டால் ஒருவர் ஆதரவு வேறில்லை (சிவஞா.தேசி.திருவருட்.3,8).

கைவிடுபடை பெ. →கைவிட்டபடை. (யாழ்.அக.)

கைவித்து பெ. (கோடைப்) பொடிப் பருவத்தில் கையினால் விதைக்கும் விதை. (தொ.வ.)

கைவிதிர்-த்தல் 11வி. மறுப்பு அச்சம் வியப்பு புகழ்ச்சி என்பவற்றின் குறியாகக் கையை அசைத்தல். மாந்தர் கள் வியந்துகை விதிர்ப்ப (சீவக.2366). அங்கை விரித்தால் கரசலை புகழ (பெருங்.1,32,58). இனித்தவிர் விச்சையெனக் கைவிதிர்த்தலுமே (கலிங் கத்துப்.160). அடியார் சூழ்ந்து கைவிதிர்க் கொண்டு (திருவாலவா. திருவிளை.பு.37,39). விளங்க நோக்கிக் கைவிதிர்த்திந் திரனகன்று பலபலவோ சனை நிகழ்த்த (கோலாச.பு.50). தீப்பாய் மகளிர் திகழ்நலம் பேர நோக்குநர் நோக்குநர் நொந்துகை விதிர்க்கும் தாக்கருந் தானை (பெருங்.1429).

கைவிதை[1] பெ. வெந்தயம். (மலை அக.)

கைவிதை[2] பெ. நாற்றைப் பெயர்த்து நடுகையின்றி விதைத்த படியே பயிர் செய்கை. (வேளாண்.வ.)

கைவிதைப்பு பெ. 1.புழுதி விதைப்பு.(தொ.வ.) 2.கலப்பை மாடு இல்லாமல் கையால் விதைக்கை. (ரா.வட்.அக.)

கைவியளம் பெ. பரிசு. (செ.ப.அக.)

கைவிரசு பெ. பிடிச்சீட்டு ஆட்டத்தில் அடிக்கடி கையாளப்படும் வார்த்தை. (வட்.சொ.வி.ப.114)

கைவிரசு பெ. →கைவிரைவு. (செ.ப.அக.)

கைவிரி[1]**-த்தல்** 11வி. 1.யாசித்தற்காகக் கைநீட்டுதல். கைவிரித் தெவரளித்தாலும் நன்றென வேற்ற வளநிதி (பிரமோத்.6,54). காளமுகில் அன்னான் முன் கைவிரித்தோம் (தெய்வச்.விறலி.தூது 581). 2.தன்னால் இயலாமை குறிப்பித்தல். (செ.ப.அக.) 3.மறுத்தல். (யாழ்.அக.)

கைவிரிதவம் பெ. செந்நாகதாளி. (சித்.அக.)

கைவிரைச்சம்பா பெ. →கைவளச்சம்பா. (செ.ப. அக.அனு.)

கைவிரைப்பு பெ. நிலத்தில் பரவலாகவும் ஒரே சீராகவும் கையால் விதைக்கும் விதைப்பு. (வேளாண். செய்முறை ப.158)

கைவிரைவு பெ. கையினால் விரைந்து தொழில் செய்யுந் தன்மை. (செ.ப.அக.)

கைவிலக்கம் பெ. மகளிர்சூதகம். (யாழ்.அக.)

கைவிலக்கு[1] பெ. 1.சூரிய கிரணம் கண்ணிற்படாதபடி கையால் மறைக்கை, கைமறைப்பு. (யாழ்.அக.) 2.களப்பிச்சை கொடுத்து யாசகர்களை அனுப்புகை. (மூன்.)

கைவிலக்கு[2] பெ. →கைத்தளை. (வட்.வ.)

கைவிலக்குவைத்துப்பார்-த்தல் 11வி. கிரணத்தைக் கையால் மறைத்துப்பார்த்தல். (யாழ்.அக.)

கைவிலங்கு[1] பெ. கைத்தளை. உங்களைக் கள்ளருன்னு சொல்லியல்ல கைவிலங்கு பூட்டுனாரா (கொங்கு.நா. பா.2 ப.121).

கைவிலங்கு[2] பெ. யானை. ஏனமென் குருளைகட் கிரங்கிக் கைவி லங்கினை யெய்தநீ (திருவிளை.பு. 46,4). கைவிலங் குயிர்மாள வெதிரிட்டுவென்றன (தில். கலம்.13).

கைவிலா பெ. மூட்டைக் கட்ட உதவும் வைக்கோலால் முறுக்கப்படும் சிறு கயிறு. (புதுவை வ.)

கைவிலை[1] பெ. அடிமை. மொழி பேசி மனம் கண்டு கொண்டு கைவிலையாக் கொண்டு விடும் மானார் (தாயுமா.பா.45,5,3).

கைவிலை[2] பெ. 1.ரொக்க விலை. (செ.ப.அக.) கைவிலையாய்க் கொண்டேன் சுவர்க்க பலன் கொண்டேனே (தனிப்பா.தீர.44). 2.கைப்பணத்துக்கு விற்றல். (யாழ்.அக.) 3.சிறுவிலை. பரிமளப்பூங் காடெலாம் பூங்குழலாற் கைவிலைகொண்டாள் (திருக்குற்றா.பு.31,50). 4.அப்போதைய விலை. பிடாகைதோறும் கைவிலைப்படிக்கு நாடொறும் தரவெழுதவும் (சாச.அக.).

கைவிழுது பெ. கடலில் ஆழங்குறைவாயுள்ள இடங்களில் ஆழத்தை அறிய உதவுங் கயிறு. (கப்.வ.)

கைவிளக்கம் பெ. 1.தொழிலின் திறமை. (செ.ப.அக.) 2.→கைராசி. அவன் கைவிளக்கமில்லாதவன் (நாட்.வ.).

கைவிளக்கு பெ. சிறுவிளக்கு. கைவிளக்கேந்தி (சீவக. 1542). பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார் தீயுகந்தரட (தேவா.1,98,7). கை விளக்கு மெங்குங் கலந்தெரிய (பாரத வெண்.672). இருவரும் காலை மாலையும் புகுந்து கைவிளக் கெடுப்பரே (இணையதைப். 89). கங்குலில் கைவிளக்கு ஏந்தியே முன்சென்று (ஆண்டாள் பிள்.1). கை விளக்கு இடில் வினை கழியுமே கொலாம் (இரட்ச.சரி.322). கன்னியர் பதின்மர் கைவிளக்கெடுத்தனர் (இயேசுகாவி.ப.293).

கைவிளி பெ. 1.கையால் உதட்டை மடித்து ஊதி யெழுப்பும் சீழ்க்கை யொலி. மறவாழைத்த கைவிளி (சேதுபு.சங்கரபா.7). 2.கைதட்டியேனும் சமிஞ்ஞை செய்தேனும் அழைக்கை. சேடு கொண்ட கைவி ளிச்சிறந்த ஓசை (பெரியபு.10,72).

கைவிறிசு பெ. ஒரு வகை வாணம். (இலங்:வ.)

கைவினை பெ. 1.கைத்தொழில், கையால் செய்யும் தொழில். கைவினை மாக்கள் தம் செய்வின் முடிமார் (குறுந்.309). வெண் பொற் கைவினை எழிற் பொலி படியகம் (சீவக.2472). குரவரை யயர்த்தோர் கைவினை கரந்தோர் பொய்க்கரி புகன்றோர் (சீகாழித்.பு.கழுமலவு. நதி.34). கைவினை கரவேல் (ஆத்திகூடி வெண்.40). கைவினைப் பொருட்கள் காட்சி விற்பனை அரங்கு (செய்தி.வ.). 2.கைதொழில் திறம். கைவினை கடுப்பத் தகை வனப்பு (நற்.313). கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ் (கலித்.85,3). வித்தகரியற்றிய... கைவினைச் சித்திரம் (மணிமே.19,5). கைவினை செய்த சொற்பூக் கை தொழு தேத்தினேனே (சீவக.3145). கைவினைப் புலவர் தேம்பிழி மகிழ்குரவை பொங்குமே (சூளா.34). 3.சிற்பநூல். கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில் (திருவிளை.பு.52,77). 4.முத்திரை. கைவினையும் உட்கோளும் புறங்காப்பும்...உணர்வித்து (கந்தபு.6,14,67).

கைவினைசெய்-தல் 1வி. ஆராய்தல். கைவினை செய்த சொற்பூக் கைதொழு தேத்தினேனே (சீவக.3145 நச்.).

கைவினைக்குடி பெ. கைத்தொழில்வேலை செய்யும் இனத்தார். உழவுகுடி கைவினைகுடி காசாயக் குடியிற் கொள்ளும் (தெ.இ.க.5,35).

கைவினைஞன் பெ. 1.கலைஞன். (கலைச்.அக.2 ப.47) 2.கைத்திறன் மிக்க தொழிலினைச் செய்பவன். கைவினைஞர்களுக்கு ரூபாய் 2 கோடி வரை கடன் வழங்கப்படும் (செய்தி.வ.). 3.கம்மாளர். (யாழ்.அக.)

கைவினையாளன் பெ. 1.பயிர்த்தொழில் செய்யும் மள்ளன். காடுந் துணிந்திட்ட கைவினை யாளர் (அம். கோவை 115,3). 2.சிற்றாட்கள். கோயில் கைவினை யாளர் கடிது எனைக் கடிந்திட (சிவராத்.பு.7,9).

கைவித்தாரம் பெ. 1.கைவிற்பன்னம். (யாழ்.அக.) 2.அலங்காரம். (நாட்.வ.)

கைவீச்சன் பெ. ஓர் பணியாரம். (யாழ்.அக.)

கைவீச்சு பெ. 1.கைவீசுகை. கைவீச்சொன்றே பெறு மைம்பதுபொன் (தனிப்பா.தீர.132,334). கைவீச் சுடனன்ன மன்னமென் னடையும் (சரபேந்தீர.குற. 36,2). 2.கைத்திறம். அரக்கன் கைவீச்சு (இராமநா.1,4 தரு.3). 3.அடி. (யாழ்.அக.) 4.கையிருப்புத் தொகை. (வின்.அக.) 5.மிகுகொடை. (யாழ்.அக.)

கைவீசி பெ. கையாந்தகரை. (சு.வை.ர.181)

கைவீசு-தல் 5வி. நடக்கும்போது கையை முன் பின் அசைத்தல். நீ கைவீசியே வரும் போதிலே ... தென்றலைக் காண்பேன் (கண்ண.திரை.பா.2,294).

கைவீடு பெ. விட்டு நீங்குகை. கொடிதா மெனக் கைவீ டெண்ணிச் செய்த நட்பன் (குறள்.799 உரை).

கைவீணை பெ. ஒருவகை நரம்புக்கருவி. கைவீணை முழங்கு (கொண்டல்.தூது 51).

கைவீது பெ. →கைபீது. (செ.ப.அக.)

கைவெட்டு பெ. 1.இடிகொம்பு. (நாட்.வ) 2.மண் தோண்டு கருவி. கைவெட்பால் தாழ்குழியாய் வெட்டி (காம்பிரியா. பிள்.9,10).

கைவேட்டு பெ. →கைவெட்டு-1. (செ.ப.அக.அனு.)

கைவேகம் பெ. →கைவிரைவு. (செ.ப.அக.)

கைவேணி பெ. (இசையி.) காந்தாமணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.224)

கைவேல் பெ. கப்பணம், எறிவதற்குரிய பளுக் குறைந்த ஈட்டி, எறிவேல். கைவேல் களிற்றொடு போக்கி (குறள்.774). கப்பணந் தோமரமே கைவேல் (உரிநி.145). சென்னி வீட்டினார் தம்மை நின்ற குறையுடல் கைவேல் குத்தி நூக்குவ (திருவிளை.பு.50,32).

கைவேலை பெ. 1.கையினால் செய்யும் சிறுதொழில். அவரே தாம் கைவேலை செய்யாமல் (பெண்கல்வி ப.42). 2.கைத்தொழிற்றிறம். (செ.ப.அக.) 3.கையாற் செய்தது. (யாழ்.அக.)

கைவேழம் பெ. (துதிக்கையை உடைய) யானை. கைவேழம் நீங்கக் கொங்கை வேழம் (செழியதாக. கோவை.40).

கைவை¹-த்தல் 11வி. மேற் கொள்ளுதல். இவள் மடலூராதே நோன்பிலே கைவைப்பானென்னென்னில் (திருப்பா.1 வா.மூ.ப.6). 2.திருடுதல். கைவாளை வெண் டயத்தில் கைவைத்தேன் (தெய்வச்.விறலி.தூது 453).

3.பிரவேசித்தல். பகவத்விஷயத்திற் கைவைத்தார் (திருவாய்.பிர.6,2 ஈடு). 4.கைவைத்துக் குரு புனித மாக்குதல். (கிறித்.வ.) 5.(இசையி.) துணைக்கருவி களில் பண்களுக்கு ஏற்பத் துளைகளில் விரல் களை வைத்துச் சுரங்களை அடக்குதல். கை வைத்து இமிர்புகுழல் காண்குவோர் (பரிபா.19,41). 6.தொடுதல். (யாழ்.அக.) 7.ஏற்படுதல். (முன்.)

கைவை²-த்தல் 11வி. 1.அடித்தல். (நாட்.வ.) 2.கற்பழித் தல். (முன்.)

கைவைத்தியம் பெ. வீட்டுவைத்தியம். பேச்சுவழக்கில் கைவைத்தியம் ... என்றும் தமிழில் பெயர்கள் உள்ளன (நாட்.பா.ஒப்.77)

கைளாரம் பெ. சாகுபடியில் செய்கைக்குரிய பங்கு. (யாழ்.அக.)

கைனி¹ பெ. கைம்பெண். (தீவா.)

கைனி² பெ. அத்தம், 13 வது நட்சத்திரம். (பிங்.251)

கொ

கொ¹ 'க்' எனும் மெய்யெழுத்தும் 'ஒ' எனும் உயிரும் இணைந்த கூட்டெழுத்து, க் + ஒ = கொ.

கொ² இ.சொ. சில உறவு முறைச் சொற்களில் உன்னுடைய என்ற பொருளை உணர்த்தும் உருபு. கொ-க்காள்(ர்) & கொக்கை; கொ-ப்பான்/ர்; கொ-ம்மா, கொ-ம்மை; கொ-ண்ணன்; கொ-த்தான் (நாஞ்.வ.).

கொஃறகை (கொல் + தகை) பெ. கொல்லப்படும் தன்மை. கொடுவினைக் கொஃறகை (பரிபா.5,6).

கொக்கச்சியன்கல் பெ. தொண்டை மண்டலத்தில் பொன்னை நிறுக்க நாட்டு வழக்கில் நிலவிய நிறைக் கல்.(கல்.கலைச்.அக.ப.208)

கொக்கச்சியன்கோல் பெ. கொக்கச்சியன் என்னும் பெயரால் தில்லை நடராசப் பெருமான் கோயிலில் நிலவளவைக்குரியதாக இருந்த அளவு கோல். சொக்கச்சியன் கழுகு திரு நந்தவனம் நிலம் அறுபத்து மூன்றுமா முக்காணிக்கீழ் முக்காலும் சொக்கச்சியன் கோலால் அளந்த இடத்து (கல்.கலைச்.அக.ப.209).

கொக்கட்டி பெ. 1.குறண்டல், வளைவு. (யாழ்.அக.) 2.குறுகி வளைந்த பனங்கிழங்கு. (இலங்.வ.) 3.சிறு மரவகை. தேயா லாக்கடை கள்ளி கொக்கட்டி விளாத்தி யீர்வாகை (நீரரர்நி.1,6).

கொக்கத்தடி பெ. நுனி வளைந்த அல்லது நுனியில் சத்தகம் பொருத்தியுள்ள துறட்டி. (இலங்.வ.)

கொக்கர் பெ. கொக்கிறகணிந்தவர். கொக்கனவர் கண்மதியர் (வட்.வ.).

கொக்கரி¹ பெ. 1.வாத்தியவகை. கொக்கரி கிடுபிடி கொட்ட (வள்ளி.கதை). 2.முன் வளைந்த கொம்புள்ள மாடு. (ரா.வட்.அக.)

கொக்கரி² பெ. கர்ச்சனை. குருதி குடிகாளி கொக்கரி செய் (திருப்பு.179).

கொக்கரி³-த்தல் 11வி. 1.ஆணவத்தால் ஆர்ப்பரித்தல், கர்ச்சனை செய்தல். ஒரு முகமாய் அணி வகுத்தே கொக்கரித்து ஆர்ப்பரித்தார் (சீவே.சரி.3029). வருகின்ற சேனைதன்னை மன்னருங் கண்டுநின்று திறமுடன் கொக்கரித்து சினத்துடன் தாமுரைப் பா (குச.கதைப்பா. 177). நீ கொக்கரித்து வாளெடுத்தால் கோடி படை ஓடிடுமே (கள்ள.அம்.ப.69). படை மன்னர் கொக்கரிக்க (மாரி யம்மன்.ப.10). தேவர் அடங்கலும் வென்று கொக்கரித் தோன் (கும்மிப்பா.சிவயோக.12). கூண்டதனில் அடைத்து விட்டு மேடை ஏறிக் கொக்கரித்தான் (மனித.தேடு.ப.37). 2.ஆரவாரித்தல். கொக்கரித் தலகை சுற்ற (கலிங்கத்துப். 150). கொக்கரித்திடும் அசுரர் கொல்லார்கள் (ஞான. உபதேசகா.481). கொக்கரித்து எறிந்த சூலம் (வரத. பாகவத.1,109).கூளி நடனமிடக் கொக்கரித்தே (மான். தூது 121). அல்லியென்று பேர்சொன்னால் அறுந்த தலை கொக்கரிக்கும் (பள்ளிக்.மாலை ப.4). பலர்பல தூடணம் சொல்லிக் கொக்கரித்து இகழ்ந்தனர் (இரட்ச. சரி.326). பெண்ணைக் கடத்திச் செல்ல கொக்கரித்து அரண்மனைக்குள் நுழைந்த கான் (நேற்றின்.ப.100). கொத்துக் கனல் விழியக் கோவினிப் பெண்ணைக் கொங்கத்து மூளிகண்டு கொக்கரித்ததும் (பாரதி. கண்ணன் பா.11,3). வெள்ளையன் கொக்கரிப்பதை ... கவி புனைந்தார் (பாட்பாரதி.ப.36). 3.கோழி முதலியன ~~கூவுதல்~~ ஒருவகைகூடிக் கொக்கரித்தி (இரகுவீட்சி.47). கோழிச்சேவல் ... பேராற்றலுடனே கொக்கரித்துக் கொத்த (பூந்துறைப்பு.173). யவுணரின் கூட்டத்தைக் கண்டு கொக்கரித்து அண்டம் குலுங்க நகைத்திடும் சேவலாய் (பாரதி.தோத்திரம்.3). கொன்ன வாயன் கோழி வந்து கொக்கரிக்குது (தமி.நா.பா.ப.292). 4.மகிழ்ச்சியால் கூக்குரலிடுதல். தம்பி செல்வனுமைத்துரை கொக்கரித் தார் (வீர.கட்ட.கதைப்பா.ப.84).

கொக்கரிப்பு பெ. 1.ஆரவாரம். கொம்பைதிக் கொக்கரிப் பையும் சீழ்க்கையையும் எழுப்பினார் (சீவக.447 உரை). 2.கெற்சிப்பு, கர்ச்சனை. (யாழ்.அக.) 3.பறவை கொக்கொக்கென வொலிக்கை. (முன்.)

கொக்கரை பெ. 1.வளைவு. (நாட்.வ.) 2.வைக்கோ லெடுக்குங் கருவி. (வட்.வ.) 3.சங்கு. கொக்கரை தக்கையொடு (காரைக்பதி.1,9). கொக்கரைப் பாலனந்தம் ஒலிதர (திருக்கோவல்.பு.காரண்ட.123). கொக்கரை வளை கோடு ... சங்கு (நாம.நி.269). கரையே கடவாது உலாவிய கொக்கரையே (சமுத்திரவி.75). 4.வலம் புரிச்சங்கு. சாரிகை ... கொக்கரை எக்காளம் ... இந்தப் பல்லியம் முழக்கினார்கள் (திருநெல்.பு.இமயமலை.6). கொக்கரை பணவம் ... இயம்பி மல்க (சிவஞா.காஞ்சிப்பு.தக்கே.46).

5.தாளம். (அக.நி.) 6.வாத்தியவகை. தாளமலி கொக்கரை (தேவா.3,79,7). சங்கந் தடாரி சலஞ்சலங் கள் மண்ணிய கொக்கரையும் மத்தளமும் (குலோ.உலா 104). கொக்கரை விம்மக் கொண்டு இடி யென (கருவூர்ப்பு. 19,23). கொக்கரை சச்சரி மத்தளி (திருப்பு.281). மொந்தை கொக்கரை தடாரி தாளம் (மருத.பு.7,74). 7.வலை. (அக.நி.) வலை கண்ணி கொக்கரை (அபி. மாலை 165). 8.வில். கலித்த காள கொக்கரை யினான் (திருக்கோவல்.பு.தெய்வீக.104). 9.பனை தெங்கு முதலியவற்றின் இளமடல். (யாழ்.அக.) 10.பாம்பு. (முன்.)

கொக்கரையுடும்பு பெ. ஒருவகை உடும்பு. (செ.ப. அக.)

கொக்கறை பெ. →கொக்கரை-9. (முன்.)

கொக்கறையுடும்பு பெ. →கொக்கரையுடும்பு. (யாழ். அக.)

கொக்காட்டல் பெ. சீராட்டுகை. (முன்.)

கொக்காணிக்காட்டு-தல் 5வி. மற்றவரிடம் இல்லாத ஒருபொருளைத் தான் வைத்திருக்கும்போது அவரைப் பழித்துக்காட்ட ஆட்காட்டி விரலை மடித்துக் காட்டி சைகை செய்தல். அம்மா! அருணா பிசுகட்டு வைத்துக்கொண்டு என்னிடம் கொக்காணி காட்டுகிறாள் (கோவை வ.).

கொக்காம்பாளை பெ. 1.ஓர் மரம். (முன்.) 2.செடிவகை. (இலங்.வ.)

கொக்காமணி பெ. மணிவகை. வக்காமணி கொக்கா மணி வாங்கலையோ ஆயாளோ (செ.ப.அக.அனு.).

கொக்காளை பெ. பனைமரத்தில் உலர்ந்திருக்கும் பாளை. (இலங்.வ.)

கொக்கான்[1] பெ. ஏழு கூழாங்கற்களைக் கொண்டு ஆடும் மகளிர்விளையாட்டு வகை. (த.நா.விளை.ப. 273)

கொக்கான்[2] பெ. ஓர்மரம். (யாழ்.அக.)

கொக்கான்வெட்டு-தல் 5வி. கொக்கான் விளையாடு தல். (வின்.அக.)

கொக்கி பெ. 1.மாட்டி, கொளுவி. (கலைச்.அக.2 ப.101) 2.துறட்டி நுனியிற் செருகும் இருப்புக்கருவி. கொக்கியுடன் கருதரையின் கத்தி கடப்பாரையும் (மேழிவி.78). 3.தூண்டிலின் அடியில் உள்ள கம்பி. (தொ.வ.)

கொக்கிச்சான் பெ. குளத்தில் வாழும் ஒருவகைமீன். குளத்து வளர்மீன் ... கொக்கிச்சான் (நீரரர்நி.2,1).

கொக்கிசித்தம் பெ. மனத்தை ஒன்றிலேயே நிறுத் துகை. பலன் கருதாதே கொக்கி சித்தமாய் (பேரூ.சங். பஞ்சதி.32).

கொக்கிப்புழு பெ. 1.குடல் பகுதிகளில் காணப்படும் புழு. (மருத்.கலைச்.அக.ப.121) 2.காவடிப்புழு. (கலைச். அக.2 ப.105)

கொக்கிப்பூட்டு பெ. ஆபரணத்திலுள்ள பூட்டு. (வின். அக.)

கொக்கிமாட்டு-தல் 5வி. கொளுவியில் சொருகுதல். (தொ.வ.)

கொக்கிமுள்ளு பெ. காட்டுக்கத்தரி. (செ.ப.அக.)

கொக்கில் பெ. ஆபரணக்கொக்குவாய், கொழுவி. (முன்.)

கொக்கில்லாபூக்கம்பாளை பெ. கூட்டுவதற்குப் பயன்படுத்தும் பாளை. (இலங்.வ.)

கொக்கிவாய் பெ. → கொக்குவாய். கொக்கிவாய் முத்தாரமாகச் செய்து (சிலப்.6,101அரும்.).

கொக்கிறகு பெ. கொக்கு மந்தாரை என்னும் மலர். கொக்கிற கொடு கூவிள மத்தங் கொன்றையொடு எருக்கணி சடையர் (தேவா.1,41,2). கொக்கிறகும் கொன்றையும் துன்று சென்னி (திருமாலை 2,10). கொக்கிறகு மதிக் கொழுந்தும் குளிர் புனலும் ஒளிர்கின்ற செக்கர்நிகர் சடைமுடியார் (பெரியபு.28,122). கொக்கிறகு அணிமந்தார கொந்தலர் குலாவு தோற்றம் (திருமழு வாடிப்பு.மழுவாடி.32). புன்னையொடு கொக்கிறகு புகன்றிடு சண்பகம் கோங்கு (ஆச்சாபுர.பு.266). கொக்கினிறகே தாரன் (திருக்காளத்உலா 104). கொக்கிற கில் மாயோன் (சிவஞா.காஞ்சிப்பு.சிவபுண்.61).

கொக்கு[1] பெ. நீண்ட கால்களையுடைய வெள்ளை நிறப் பறவை. பைங்காற் கொக்கின் (புறநூ.342). கொக்கொக்க கூம்பும் பருவத்து (குறள்.490). கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம் (தேவா.1,99,4). குயில் ஒத்து இருள் குஞ்சி கொக்கு ஒத்து (ஐயடி.சேத்.12). கொக்கெனவே நினைத்தனையோ? கொங்கணவா (தண்டலை.சத.6). எக்குளத்துக் கொக்கும் இகலி வந்து முட்டையிடும் (தனிப்பா.தி்ர.48 சவாதுப்.). குயில் கொடி சிரவம் கூகை கொக்கினம் ... தொறுதொறும் துஞ்சிற்று அன்றே (தேம்பா.2,2,116). வக்காவுங் கொக்குகளும் ... எய்து விட்டாள் (பவளக்.மாலை ப.34). உறுமீன் வரும் அளவும் வாடி இருக்குமாம் கொக்கு (வாக்குண்.16). வகை சினைமந்தி கொக்கை நோக்கும் (மலரும்.34).

கொக்கு[2] பெ. 1.மாமரம். துணர்த்தேக்கொக்கின் தீம் பழம் கதூஉம் (குறுந்.164). நெடுமரக் கொக்கி னறுவடி (பெரும்பாண்.309). முழுமுதற் கொக்கின் தீங்கனி (குறிஞ்சிப்.188). பக்கம் வாழைப் ... கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம் (தேவா.1,99,4). கொக்கினுக் கொழிந்த தீம்பழம் கொக்கின் (தொல். சொல்.107நச்.). கொண்டலின் இருதுவிற் கொக்கின் மாலைகள் (கந்தபு.4,13,36). கொக்கு வரையோடு துனை குருகு வரை பெயர (திருச்செந்.பு.872).

பராரையொடு கடலுறுங் கொக்கினைப் பிளவா வகிர்ந்தன (குன்றக்.முருக.கலம்.11,27). நெடுந்தளிப்பூங் கொக்கின் இனத்தொரு சுருதிச் சூதம் (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண். 279). கொக்கிரண்டு கூறாக வென்றாய் (பழனித்திரு. 1,49). 2.கொக்கு உருவில் வந்த கொக்காசுரன். கொக்கு இறகு சூடி நின்ற கொண்பிட்டம் (பட்டினத்தார். பா.அந்.60,1). 3.குதிரை. வேரியம் பணைசூழ் மக்க மிக் கொக்கு (திருவிளை.பு.59,105). 4.ஓநாய். உங்கு உறும் கொக்கு இனத்து எறிந்து அவ் ஒண் வாயில் கடந்தாராய் (வீர.விச.11,50). 5.மூல நட்சத்திரம். கொக்கு ... மூலம் (சுகர் நாடி ப.11). கொக்கு பல வனம் சூழ் (சிலேடை இலக்.ப.301). மூலநாளின் பெயரது மொழியின் ... கொக்கு எனச்செப்புவர் (அபி.மாலை 104). மூலம் கொக்குச்சோதி (விதான.குணாகுண.12). 6.செந்நாய். கொக்கேவிருகம் செந்நாய் (நாம.நி. 229). 7.நாரை வகை. மாரி ஆம்பல் அன்ன கொக்கின் (குறுந்.117). 8.தவளை. (வட.நி.585) 9.சிறுமியர் விளையாட்டு வகை. (த.நா.விளை.ப.273) 10.கொக்கு போன்ற உருவமுடைய போரில் பயன்படுத்தும் இயந்திரம். கொற்புனைசெய் கொள்ளிபெருங் கொக்கெழில் செய் கூகை (சீவக.102).

கொக்குக்கல் பெ. 1.மாந்தளிர்க்கல். (யாழ்.அக.) 2.சிலமான்கல், ஒருவகை விலையுயர்ந்த கல். (வின்.அக.)

கொக்குக்காலி பெ. மாமரம். (சித்.அக.)

கொக்குச்சத்தகம் பெ. அலக்கரிவாள். (இலங்.வ.)

கொக்குச்சம்பா பெ. சம்பாநெல்வகை. (செ.ப.அக. அனு.)

கொக்குச்சான் பெ. ஆறு, குளம் முதலியவற்றில் வாழும் மீன்வகை. (இலங்.வ.)

கொக்குடம் பெ. எட்டி. (சித்.பரி.அக.ப.84)

கொக்குநோய் பெ. 1.இளம் பயிரில் காணப்படும் நோய். (தொ.வ.) 2.கோழிக்கு வரும் வெள்ளைக் கழிச்சல் நோய். (ரா.வட்.அக.)

கொக்குநோவு பெ. 1.ஆடுகட்குக் காணும் எரிநோவு. (செ.ப.அக.) 2.நெல் நோய் வகை. (முன்.) 3.நாற்றைப் பாதிக்கும் ஒருவகையான நோய். (புதுவை வ.)

கொக்குமட்டி பெ. சிப்பிவகை. (வின்.அக.)

கொக்குமணி பெ. →கொக்காமணி. வக்காமணி கொக்குமணிகளையும் (மதி.கள்.II,139).

கொக்குமந்தாரை பெ. 1.காட்டாத்தி. (வைத்.விரி.அக. ப.115) 2.வெள்ளை மந்தாரை. (செ.ப.அக.) 3.புடைவை வகை. (முன்.)

கொக்குமாநிறம் பெ. →கொக்குக்கல்-1. (போகர் நி.33)

கொக்குமீன் பெ. ஊசிக்கழுத்தி. (செ.ப.அக.)

கொக்குமேனி பெ. தில்லை மரம். (சித்.பரி.அக.ப.84)

கொக்குவம் பெ. →கொக்கோகம். மையறு கொக்குவம் பரதமலி கணிதஞ் சத்தம் (வள்ள.சுருதி.பாயி.9).

கொக்குவாய் பெ. ஆபரணத்தின் படுகண்ணிற் செருகும் பூட்டு. கொக்குவாய் என்னும் (தெ.இ.க.2, 396,150).

கொக்குறோச்சி பெ. கரப்பாம் பூச்சி. (இலங்.வ.)

கொக்கேறி பெ. நெட்டிப்புல். (முன்.)

கொக்கை பெ. 1.கொளுவி. (யாழ்.அக.) 2.கொழுவுதடி, துறட்டி நுனியிற் செருகும் இரும்புக் கருவி. (முன்.)

கொக்கைக்கல் பெ. ஆட்டுக்காற்கல். (வின்.அக.)

கொக்கைச்சத்தகம் பெ. ஒரு வகைச் சிறு கத்தி. (முன்.)

கொக்கைச்சால் பெ. 1.உழவுச்சால்படாத தரை. (செ.ப.அக.) 2.வளைந்த உழவுசால். (யாழ்.அக.)

கொக்கோ பெ. →கொக்கோகம். (அதிவீரராம. பாண்டியன் 1898)

கொக்கோகம் பெ. வரகுணராம பாண்டியனால் வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு காமநூல்.கொக்கோக விலக்கணப்படி தேவதாசிகள் ... மோகனத்தால் மயங்கி (கோலாசல.பு.348 உரை). சுகந்த பரிமளமுந் திமிர்ந்து கொக்கோக நூற் சுரதம் செய்து (கறுப்பண்ண.சத.56). உச்சாய மாயவளுங்-கொக்கோக உண்மை யெல்லாமறிந்து (திருவிடை.நா. ப.26,15).

கொக்கோகமார்க்கம் பெ. கொக்கோக முனிவரால் கூறப்பட்ட காமவழி. கொக்கோக மார்க்கமுடன் கூடும் இளையோர் (முதன.மாலை 93).

கொக்கோகமார்க்கர் பெ. காம வெறியன். கொக்கோக மார்க்கருடன் கூடாதே (மூவரை.தூது 138).

கொக்கோகர் பெ. கொக்கோகம் எனும் மதனநூல் செய்த ஆசிரியர். கருதினார் மதனநூல் தனிலே கொக்கோகர் (கயிலாய.சத.91).

கொக்கோவெனல் பெ. ஓர் ஒலிக் குறிப்பு. சேவல் ... கொக்கோவென்னக் கொக்கரித்துக் கூவிற்று (இரட்.சரி. 259).

கொகீலம் பெ. 1.உலக்கை. (இலக்.சொ.அக.) 2.கலப்பை. (முன்.)

கொகுடி பெ. ஒருவகை முல்லைக்கொடி. நறும் பாதிரியும் நாண்மலர்க் கொகுடியும் (பெருங்.2,12,20). குளிர் கொடியன குழைமாதவி குவிமுகையன கொகுடி (சூளா.434). திருக்கருப்பறிய லூரின் தலவிருட்சம் பெருமான் கொகுடிக் கோயில் (தேவா.2,31,10). கூற்றுதைத்தார் திருக்கொகுடிக்கோயில் நண்ணி (பெரியபு.29,117). கொகுடி நறுங் கொத்து இணைதரு சங்கக் குழையாட (திருமழுவாடிப்பு.மழுவாடி.96).

குளிர் கொடியன குழை மாதவி குவிமுகையன கொகுடி (பெருந்.2147).

கொகுடிக்கோயில் பெ. ஒரு சிவத்தலம். கூற்று உதைத்தார் திருக் கொகுடிக் கோயில் நண்ணி (பெரியபு. 29,117).

கொகுடிமுல்லை பெ. முல்லை விசேடம். கொம்பார் குரவு கொகுடி முல்லை குவிந்தெங்கும் (தேவா.2,64,6).

கொகுநீர் பெ. கழுதை மூத்திரம். (சித்.பரி.அக.ப.166)

கொங்ககொழுரி பெ. இளம் பருவப்பெண். (பணித்துளி 1944 ப.43)

கொங்கடை பெ. மழையைத் தாங்க உடலிற் கவிக்கும் கூடை. தென்னைமட்டைக் கொங்கடையும் பின்னி வையுங்கோ (செங்.பள்.321).

கொங்கணம் பெ. 1.மேற்குத் தொடர்ச்சிமலைக்கு மேற்கும் அரபிக்கடலுக்குக் கிழக்கும் கூர்ச்சரத்துக்குத் தெற்கும் கோவாவுக்கு வடக்குமாக உள்ளதும் ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்றுமான நாடு. கொங்கணக் கூத்தரும் (சிலப்.26,106). கூபமும் கொங்கணமும் துளுவும் (தொல்.சொல்.400 நச்.). கொங்கணங் குதிரம் போசளங் குச்சளம் (பெருந்.91). சீனங் கொங்கணந் தெலுங்கம் (தமிழரசி குற.55,64). மச்சம் கொங்கணம் ஈழமலையாளம் (சரபேந்திர.குற. 27,3). 2.தமிழ் நூல்களில் கூறப்படும் பதினெட்டுப் பாசைகளுள் ஒன்று. (தீவா.)

கொங்கணர் பெ. 1.கொங்கண நாட்டார். கங்கர் கொங்கணர் விராடர் (திருவிளை.பு.5,74). குலிங்கர் கொங்கணர் விதேகர்கள் (கச்சி.காஞ்சிப்பு.நகரேற். 251). 2.பண்டைத் தமிழ்ச் சித்தரு ளொருவர். கும்பமுனி தேரர் கொங்கணர் (அறப்பளீ.சத.51).

கொங்கணவர் பெ. →கொங்கணர்-1. கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா (செ.ப.அக.).

கொங்கணன் பெ. →கொங்கணர்-2. (யாழ்.அக.)

கொங்கணி[1] பெ. 1.→கொங்கணர்-1. (செ.ப.அக.)

கொங்கணி[2] பெ. 1.தலையில் அணியும் தொப்பி போன்ற உடைவகை. சிங்கன அங்கியும் குறக் கொங்கணியும் அவர் தந்தார் (குமார.குற.தரு.43). 2.→கொங்காணி. (வின்.அக.)

கொங்கணிப்பூண்டு பெ. பயிரின் இடையே முளைக்கும் ஒரு வகை பூடு. (நாட்.வ.)

கொங்கணியர் பெ. →கொங்கணர்-1. (யாழ்.அக.)

கொங்கணியான் பெ. ஓர்மீன். (முன்.)

கொங்கம் பெ. 1.கோயம்புத்தூர் சேலம் மைசூர்ப் பகுதியுமாக அடங்கிய தமிழ்நாடு. கொங்கத்து விற்கொடியு (கு.சோ.உலா 172). உம்மையால் கொங்கத்துழவு வங்கத்து வாணிகம் என அத்துப் பெற்றன (தொல்.எழுத்.419 இளம்.). வாட்டாறு கொங்கம் வடகலிங்கந் தென்மதுரை (பெருந்.807). கனல்விழியக் கோவினிப்பெண்ணைக் கொங்கத்து மூளிகண்டு கொக்க ரித்ததும் (பாரதி.கண்ணன் பா.11,3). 2.→கோளக பாடாணம். (செ.ப.அக.)

கொங்கராயர் பெ. 1.தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் கொங்கராயபாளையத்திலுள்ள உடையார் சாதியைச் சார்ந்த பாளையக்காரர்களின் பட்டப்பெயர். (செ.ப.அக.) 2.கள்ளர் சாதி வகை யினரின் பட்டப்பெயர். (தஞ்.வ.)

கொங்கரி பெ. ஏல அரிசி. (மலை அக.)

கொங்களம் பெ. →கொங்காளம். (யாழ்.அக.)

கொங்கன் பெ. 1.→கொங்கணர்-1. ஒளிறு வாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே (குறுந்.393).கொங்கர் நாடு அகப்படுத்த (பதிற்றுப்.22,15). கொன்னார் அயில் வேல் மறவர் பயில் கொங்கர் நாடு கடந்தருளி (பெரியபு.37,50). கொங்கரும் வந்துநின் றேத்த வடவரசர் (கந்.கோவை 42). கொங்கர் சிங்களர் பல்லவர் வில்லவர் (திருவிளை.பு.5,74). கொங்கர் மகதர் (இறையா.ச.பு.357). கலிங்கர்கள் கொங்கர் சீனர் குருநாடர் (கச்சி.காஞ்சிப்பு.நகரேற்.251). கொங்கர் வடகலிங்கர் கூட்டம் இடும் வாசலினான் (நல்லதம். காதல் 39). 2.கொங்கு நாட்டு மன்னன். கொங்கர் செங்களத்து (சிலப்.25,153). 2.சேரன். உள்ளந்தகை கவலைக்கடற் கண் யோய்ந்திடு கொங்கன் (பது.பரிண. 1,34). கொங்கன் என்பது சேரனாகும் (அக.நி. கொமுதல் 1). கொங்கன் என்று உரைக்கும் கோதை (குமணசரித்.4). சேரன் ... கொங்கன் (அபி.மாலை 210).

கொங்கனேயன் பெ. காட்டுமிராண்டி. (ரா.வட்.அக.)

கொங்காடை பெ. கொங்கரது தலைக்கட்டு வகை. (எங்களூர்.74)

கொங்காணி பெ. மழையைத் தாங்க ஓலையால் முடையப்பட்ட ஒருவகை மழைத் தடுப்பு. படல் தாழைக்குடை கொங்காணியும் வேளைக்கே வேண்டும் (முக்.பள்.42). கொங்காணி கணக்கா ஒட்டுப் போட்ட சட்டை கணக்கா சை வீடு மாதிரி இல்லையே (மழைக்கஞ்சி ப.106). ஓங்கி உயர்ந்திருந்த கொங்காணிக் கோரைப் புற்கள் (என்.வெ.கா.ப.36).

கொங்காரம் பெ. குங்கும மரம். குங்கும மரம் கொங்காரம் (அபி.மாலை 835).

கொங்காரமாசுக்கீரை பெ. பிண்ணாக்குக்கீரை. (சித்.அக.)

கொங்காரி பெ. →கொங்காரம். (வைத்.விரி.அக. ப.115)

கொங்காளம் பெ. பதினெண் மொழிகளுள் ஒன்று. (முன்.)

கொங்காளன் பெ. 1.குதிரைவகை. (அசுவசா.151) 2.குதிரை வகையின் நிறம். மௌவழகன் கொங் காளன் ... பொல்லான் ... என்று கூறுந் தன்மையுள பன்னிறமும் (திருவாத.பு.4,41).

கொங்கான் பெ. அறிவிலி. (செ.ப.அக.அனு.)

கொங்கிறீற்று பெ. சிமிண்டினால் இடப்பட்ட தரை. (இலங்.வ.)

கொங்கு பெ. 1.மணம்,வாசனை. கொங்கவிழ் நறுந்தார் (சிலப்.30,177). சத்தியும் ஆனந்த சத்தியும் கொங்கே (திருமந்.1176). கொங்கலர் தெரியலான் கூறி (சூளா.11). கொங்கு விம்மு கோதையே (நந்திக்கலம்.9). ஆளுடை நாயகி கொங்கு சேர் குழல் காமலர் கொய்திட (பெரியபு.1, 23). பெருக்குதண் சண்பகவனத் திடங் கொங்கொடு (திருப்பு.18). கொங்கு திகழ் பத்மா சனத்தாய் (அய்யன். பிள்.11). கொங்கவிழ மலர்ந்த பைங்குழற் சிவகாமி (பாண்டிநா.பிள்.10,2). கொங்கு கமழ் கோதை மலர்தங்கு நற அண்டுகிள கொண்டுலவு வண்டுமூரலுங் (வைகுந்த பிள்.வாராணைப்.158,1). கொங்கிவர் பூங்குழ லாள் திருமேனி (அபி.அந்.75). 2.தேன். கொங்கு உண் வண்டின் பெயர்ந்து புறமாறி (ஐங்.226). கொங்குகொப் புளிக்கும் நீலப் பனிமலர்க் காடு போன்றார் (சீவக. 2199). கொங்கவி ழைம்பான் மடவார் (புற.வெண். 223). கொங்கேர் நறுங்குழற் கோதையர் (அம். கோவை 448). எங்கு நின்னு மெம் இடைக்கு வந்தாய் என உரைத்த கொங்கு அலர் தார் மாயன் (பாரத வெண்.12,2). கொங்க விழ்தேன் வாய்க்கின்று கூந்தன் (நள.180). கொங்கு அணுகி வண்டு முரல் கோயில் (திருவர.கலம் 84,2). கொங்கு வாய்மடுத்தின வண்டு கூட்டுணுங் கூந்தல் (நைட.27,7). கொங்கு அவிழ் நறுமலர் (சிவஞா.காஞ்சிப்பு.இரேணு.1). நறுங்கொங் குதவழாத்தியும் வன்னியும் (குளத்தூர் அமுதா.பிள். 7,3). 3.பூந்தாது, மகரந்தம். அணிற் பல் அன்ன கொங்கு முதிர் முண்டகத்து (குறுந்.49). கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின் (சிறுபாண்.71). கொங்கு முதிர் நறுவழை (குறிஞ்சிப். 83). கொங்கு அலர் தார்ச் சென்னி (சிலப்.1,2). கொங்கலர் கண்ணியான் கொம்மைதான் கொட்டலும் (சீவக.1834). கொங்கலர் தார்ச் செய்சுடர்ப்பூண் மன்னவன் (புற.வெண்.122). கொங்கு அவிழும் குழலாள் (குலோத்.கோவை 2). கண்மலர் காட்டிலை கொங்கைமுன் காட்டினை (நாணிக். ஒருதுறைக்கோவை 13). கொங்குலவு முல்லை மல்லிகை (அய்யன்.பிள். 45). கொங்கு அலர் மாலை மார்பன் குடதிசை நோக்கிப் போனான் (சீவல.கதை 159). 4.கருஞ்சுரை. (மலை அக.) 5.புறத்தோல். (நாட்.வ.) 6.சருக்கரை. (வைத்.விரி.அக.ப.115) 7.ஒருவகை யான மரம். கொங்கு செருந்தி கொன்றை மலர் கூடக் கங்கை புனைந்த சடையார் காழியார் (தேவா.1,24,6). 8.கொங்கை. எண்ணிறந்த சராசங் களீன்றுந் தாழாக் கொங்கயற்கண் மலர் கூந்தற் குமரி (திருவிளை.பு. கடவுள்.8). 9.→கொங்கம்-1. இவளோ கொங்கச் செல்வி! (சிலப்.12,47). கொங்கு புக்கரொடு வாணிபம் செய்தது (திருமந்.2930). கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன் (நம்.திரு.65). கொங்கில் குடபுலம் சென்ற டைந்தார் கோதின் மெய்ஞ்ஞானக் கொழுந்தனை யார் (பெரியபு.28,323). ஈழமுங் கொங்குங் கயவேட்டை யாடி (நாணிக்.ஒருதுறைக்கோவை 242). கொங்கன் என்று உரைக்கும் கோதை ... காவல் பெறுதலாற் கொங்கு (குமணசரித்.4).

கொங்குபுகு-தல் 4வி. துன்பம் அனுபவித்தல். கோர நெறி கொடு கொங்கு புக்காரோ (திருமந்.273).

கொங்குமுளை பெ. பழைய நாணயவகை. (பண. தூது 132)

கொங்குரை பெ. கொங்கு நாட்டில் கிடைக்கும் உரையும் மாற்றும் உயர்ந்த பொன். கொங்குரை யாறிறிலிட்டு (மதுரைக்.74).

கொங்குவேண்மாக்கதை பெ. பெருங்கதை என்னும் தமிழ்க் காவியம். உருத்தக்க கொங்குவேண் மாக்கதையைக் கூறேங் குறளணுகேம் எங்கெழிலென் ஞாயி றெமக்கு (பெருந்.1981). கொங்வேண்மாக்கதை முதலியவற்றோடு ... ஒன்றாக்குவர் (இலக்.வொத்து ப.14). தலை மணி காவியம் தாள் எனும் புகழ்சேர் கொங்கு வேண் மாக்கதை (கொன்மிலை ஆற்றுப் 613).

கொங்குவேள் பெ. பெருங்கதையென்னுந் தமிழ்க் காவியம் இயற்றிய ஆசிரியர். கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் (சீவக.முகவுரை 13).

கொங்குவேளாளர் பெ. கொங்கு நாட்டு வேளாளர். (செ.ப.அக.)

கொங்கை பெ. 1.முலை. கொங்கை முன்றில் குங்கும் எழுதாள் (சிலப்.4,49). கொங்கை போதரு வான்குமிழ்க் கின்றன (சூளா.155). சந்தள றேறு தடங்கொள் கொங்கை (தேவா.1,4,5). கொங்கை திரங்கி (காரைக்.மூத்த.1,1). வடக்குங் குமக்கொங்கை வம்பற வேவிம்ம (அம்.கோவை 20,1). தங்கநெடுங் குன்றினால் செய்தனைய கொங் கையாய் (நன்னெறி 3). கொங்கைக் குறிகண்டு நாணமால் கொள்வார் (மதுரைச்.உலா 124). கொங்கை வரிசை காட்டும் துப்பு இதழ் மடந்தையர் (தாயுமா.பா.12,2). வார்பூத்த கொங்கை தரு பாலும் புசித்து (பாண்டிநா. பிள்.2,1). அரி ஓர் எழிற் கொங்கை பாதியிற் காட்டுவான் (பழனித்திரு.13,1,1,4,10). 2.நகில்.தன் கொங்கை யாற்சிறி தேகுழை வெய்தினாள் (சூளா.156). மண்ணுங் கொங்கை மதம் படு வேழமே (செ.பாகவத.4,3,1020). 3.மரக்கிளை. துன்றுபெருங் கொங்கைகளால் ...

நிழல்கள் தோன்றச் செய்து (திருநெல்.பு.வேணு.46). அந்தப் பெரிய கொங்கையை வெட்டிப் போடு (நாஞ்.வ.). 4.கம்பு, சோளம், நெல் போன்றவற்றின் உமி. (செ.ப.அக.)

கொங்கையார் பெ. பெண்கள். கொங்கையார் மலருங் குடைந்தாட (தேவா.7,87,5).

கொங்கொலி பெ. இலந்தைமரம். இலந்தை ... கொங்கொலி (அபி.மாலை 905).

கொச்சக்கயிறு பெ. தெங்கின் கதம்பைநாராற் செய்யப்படுங் கயிறு. சுருணை சுருணையாக கொச்சகக்கயிறு (என்.வெ.கா.ப.124).

கொச்சகக்கலிப்பா பெ. (யாப்.) தரவு வந்தும் தரவு இரண்டாய் வந்தும் தாழிசை சிலவந்தும் தாழிசை பல வந்தும் தரவு முதலாகிய ஆறுஉறுப்பும்தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் மயங்கியும் வரும் கலிப்பாவகை. தரவே தரவிணை தாழிசை தாமும் ... கொச்சகம் என்னும் குறியின வாகும் (யாப்.விருத்தி.86). தளை பிறழ்ந்துள்ள கலிப்பாத் தானே கொச்சகக் கலிப்பா (அறு.இலக்.27யாப்பு).

கொச்சகம்[1] பெ. 1.→கொச்சகக்கலிப்பா. வெண்கலி ஒத்தாழிசைக்கலி கொச்சகம் என்றொரு மூன்றர கலியென மொழிப (காக்கைபாடி.69). கொச்சகத் தன்மையிற் கொச்சகம் என்ப (பன்னிருபா.124). வேற்றுத்தளை தட்டும் வெண்பா இயைந்தும் ஈற்றடி மூச்சீராயின் ... அமைந்த கொச்சகமும் (இலக்.வி.738). 2.ஆடையுள் ஒரு வழிக் கொய்தடுக்கிக் கட்டுவது. பலகோடு பட அடுக்கி உடுக்கும் உடையினைக் கொச்சக மென்ப (தொல்.பொ.464 பேரா.). ஆடை மாச்சீர் மயங்க விட்டீர் கொச்சகம் விடுத்தீர் (நாணிக்.ஒருதுறைக் கோவை60). 3.அம்போதரங்க வுறுப்புக் களுள் ஒன்று. (தொல்.பொ.464) 4.பரிபாடல் உறுப்புக்களுள் ஒன்று. (தொல்.பொ.433)

கொச்சகம்[2] பெ. இழிவு. சிறப்பில்லாததனை ஒருசாரார் கொச்சை யென்றும் கொச்சகமென்றும் வழங்குவர் (யாப்.விருத்தி.79).

கொச்சகவொருபோகு பெ. (யாப்.) தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் உறுப்புக்கள் மயங்கியும் மிக்கும் குறைந்தும் வருவது. வரன்முறை பிறழ உறுப்பு மயங்கி ... கொச்சக, ஒரு போகாம் என உரைத்தனர் புலவர் (பன்னிருபா.123).

கொச்சங்காய் பெ. குரும்பைத் தேங்காய். (செ.ப.அக.அனு.)

கொச்சம் பெ. 1.→கொச்சக்கயிறு. (கன்.தென்.வ.) 2.மகளிர் காதணிவகை. செவிதனில் தோடு மேலீடுகம்மலும் கொச்சவாளி ... மாதர ணியும்பூணே (நீரரர்நி.5,3).

கொச்சன் பெ. சிறுபையன். (செ.ப.அக.)

கொச்சாளை பெ. →கொய்ச்சாளை. (யாழ்.அக.)

கொச்சி[1] பெ. 1. சேரநாட்டிலுள்ள ஒரு நாடு. துலுக்காண மராடஞ் சீனத்தோடு கொச்சி (சரபேந்திர.குற.27,3). கொச்சி மலையாளர் குருதிரே ஆதியாய் (தெய்வச். விறலி.தூது 575). கொம்புத் தொனிகேட்டுக் கொச்சி மலைஏற (கூளப்ப.காதல் 70). கொச்சியிலும் மலையாளத்திலும் (சாத்.கும்மி.259). கோணை கொம்பு ஓசையின்சூல் கொச்சி குடிவாங்க (நல்லதம். காதல் 143). 2.ஓர் ஊர். (செ.ப.அக.) 3.கொச்சி மிளகாய். (மலை அக.) 4.மிளகுச் செடி. (சித்.பரி. அக.ப.84)

கொச்சி[2] பெ. நெருப்பு. (அக.நி.)

கொச்சி[3] பெ. 1.விளாம்பழத்தின் உள்ளீடு. (வின்.அக.) 2.சவரிலோத்திரம், குறட்டைப்பழம். (வைத்.விரி. அக.ப.115)

கொச்சி[4] பெ. இளங்கொட்டங்காய்ச்சி. (இலங்.வ.)

கொச்சிக்காய் பெ. 1.→கொச்சிமிளகாய். (யாழ்.அக.) 2.மிளகாய் வற்றல். (இலங்.வ.)

கொச்சிக்குழந்தை பெ. வைப்பரிதாரம். (வின்.அக.)

கொச்சித்தமரத்தை பெ. புளிச்சை மரவகை. (சென். இரா.சொற்பட்டி.ப.98)

கொச்சிநாய் பெ. கொச்சியிலிருந்து வரும் சிறுநாய்ச் சாதி. (நாட்.வ.)

கொச்சிமஞ்சள் பெ. மஞ்சள் வகை. கொச்சிமஞ்சட் பூசிக் குளித்ததிரு மேனியில் (கூளப்ப.காதல் 129). சுகந்தம் போட்டரைத்த கொச்சி மஞ்சள் அன்பாய்க் குளித்த அருமைத் திருமேனி (நல்லதம்.காதல் 214). செக்கச் சிவந்த கொச்சி மஞ்சள் (திருவிடை.நா.ப.30). கொச்சி மஞ்சள் பூசவா (மலரும்.251).

கொச்சிமஞ்சாடி பெ. குன்றிமணி. (சித்.பரி.அக.ப. 84)

கொச்சிமலை பெ. சேரநாட்டிலுள்ள ஒருமலை நாடு. கொச்சிமலை குடகுமலை வாழுகின்ற நாங்கள் குமரேசர் வள்ளியற்குங் குறியுரைக்கும் குறத்தி (மின்.குறம் ப. 48).

கொச்சிமிளகாய் பெ. ஊசிமிளகாய். (செ.ப.அக.)

கொச்சியேலம் பெ. ஓரேலம். (யாழ்.அக.)

கொச்சிலித்தி பெ. ஓர்புல். (முன்.)

கொச்சிலித்திப்புல் பெ. மேகப்படையைப்போக்கும் புல்வகை. (செ.ப.அக.)

கொச்சிவடி பெ. சாராயம் வடிக்கின்ற ஒருமுறை. அங்கை கொச்சிவடி முறையாலை தான் சாராயம் வடிக்கிறது (இலங்.வ.).

கொச்சிவீரம் பெ. சவ்வீரம் என்னும் பாடாணம். (மருத்.குண.2 ப.165)

கொச்சு[1] பெ. →கொச்சன். (நாட்.வ.)

கொச்சு[2] பெ. குஞ்சம். (கோயிலொ.97)

கொச்சு[3] பெ. கத்தரிக்காய் மாங்காய் முதலியவற்றில் புளி மிளகாய் உப்பு முதலியவற்றைச் சேர்த்துப் பதப்படுத்திய குழம்பு வகை. (செ.ப.அக.)

கொச்சை பெ. 1.இழிவு. கொச்சை இகழ்வு பிச்சை பிறர்பெய்யப் பின்சாரக் கோசாரக் கொச்சை (தேவா.2, 44,10). கொச்சைத் தேவரைத் தேவர் என்று எண்ணி (நக்.கோப.1,82). கொச்சை மானுடர் (கம்பரா.6,2,101). கொச்சையிலே பாலுமுண்டோ (தண்டலை.சத.99). கொச்சை வேட்டுவர் (திருப்பு.310). என்னுளிந்தக் கொச்சைத்தீ யைக்கையிற் கொண்டீர் (திருக்காளத். உலா 569). கொச்சை மதியுற்ற நிருதக்கிளையெனுங் கடல் குறைந்தமெது துன்பநீக்குங் (வைகுந்தபிள். முத்தப்.149,9). கொச்சை ஆருயிர்த் தொகை மலம் அகற்றிடும் (ஆளவந்.காஞ்சிப்பு.902). கொச்சையாய்க் கவது சொன்ன குறிஇது (முகியித்தீன் பு.485). கொச்சைக ளோடும் காதலைக் குழப்பும் ... வண்ட வழக்கம் (அவளும் அவனும் ப.90). 2.இழிந்தவன். கொச்சைத் துன்மதி (கம்பரா.6,2,112). 3.→கொச்சைச்சொல். திருத்தமுறச் சொல் வட்டிலிற் கொச்சைப் பிள்ளை முன்னுண்டு (நெடுங்கழி.4). 4.சீகாழி. கொச்சை அமர்ந்தோங்கு தலம்ார் தமிழ் ஞான சம்பந்தன் (தேவா.1,85,11). கொச்சை எனும் பெயர்பெற்ற நகராகிய சீகாழிப் பதியிடத்து (குத்து.வி.1 உரை). கொச்சை யகன்று புதிக்கு ... வள நுகர்ந்து துணைவனமலர்த் தாளிணை சேர்ந்தான் (சீகாழித்.பு.கீளி.37). கொச்சையிற்பிள் ளைக் குதவும் தண்டலையார் (தண்டலை.சத.16). கொச்சை நகரில் வந்தருட் சீர் (கொளஞ்.பிள்.10,5). தெண்ணீர்ப் பொய்கைக் கொச்சை நகர்ப் புலவோனே! (குன்றக்.முருக.பதி.3,8). கொச்சைமா நகரிக் கவுணியன் (பழனித்திரு.4,8). 5.திருத்தமில்லாத மழலைச் சொல். மிகையாற் கொச்சையறக் கிளிபேசிய சீர் திகழ் குன்றக் குடி (குன்றக்.முருக.பதி.2,6). 6.ஆடு. கொச்சை வணம் ஏறு புலி கூடி விளையாட (பாத்மோ.பு.2,19). நடைதரு கொச்சை நாகுடன் புனிற்றா (சிவராத். பு.5,27). கொச்சை முக மாமனுக்கன்று ஒட்டிக்கங் கூட்டினார் ஊர் (திருப்புலி.வெண்.86). 7.வரட்டாடு. கொச்சையிலே பாலுமுண்டோ (தண்டலை.சத.99). 8.ஆண்வெள்ளாடு. (ஆசி.நி.113) 9.வெள்ளாடு. (தீவா.) 10.→கொச்சை நாற்றம். (செ.ப.அக.) 11.புலால் நாற்றம். கொச்சை அண்ணலைக் கூடகிலார் உடல் மூடரே (தேவா.1,127,11). 12.பச்சை. கொச்சைமயில் பாகர் திண் கொச்சைவரு பாகருட் கொண்டனர் (திருச்செங்பு. 2,3,10). 13.மெலிவு. கொச்சை இடையாள மகவேரி (மீனா.திருப்பு.30). 14.எச்சில். பட்டையில் மிச்சப் பட்டதை வழித்துச் சேர்க்கும் கொச்சைப்பட்டவர் (என்.வெ.கா.ப.123).

கொச்சைக்கயிறு பெ. தேங்காய் நாரினால் திரிக்கப் படும் கயிறு. (வட்.சொ.வி.ப.115)

கொச்சைகுறவன் பெ. விரைந்து பொருள் விளங்கா சொல் பேசும் குறவன். கொச்சைக் குறவர் குலச்சிறுமி (திரு.முரு.பிள்.பா.5).

கொச்சைச்சொல் பெ. 1.இழிசொல், அருவருக்கத் தக்கப் பேச்சு. (செ.ப.அக.) 2.திருந்தாப்பேச்சு. (முன்.)

கொச்சைத்தனம் பெ. 1.→கொச்சைப்பழக்கம். (யாழ்.அக.) 2.சின்னத்தனம். (முன்.)

கொச்சைநாற்றம் பெ. 1.ஆட்டுப்பால் நாற்றம். (செ.ப.அக.) 2.பால் முதலியவற்றின் முடை நாற்றம். (முன்.)

கொச்சைப்பழக்கம் பெ. கீழ்மையான பரிட்சை. (யாழ்.அக.)

கொச்சைபடு-தல் 6வி. இழிவு படுதல். பெண் அதிகம் கொச்சைப் படுவது அவள் ஏற்றுக்கொண்டிருக்கும் திருமணபந்தத்துக்குள்ளேதான் (கனவு.வேண்.ப.2).

கொச்சைமுந்திரிகை பெ. → கொட்டை முந்திரிகை. (வைத்.சத.ப.76)

கொச்சைமுனி பெ. (சீகாழியிற் பிறந்த முனிவர்) திருஞானசம்பந்தர். சிட்டர்புகழ் கொச்சைமுனி (திருவாலவா.38,1).

கொச்சைமொழி பெ. திருத்தம் இல்லாத மொழி. பச்சைக்கிளி கொச்சை மொழி (கண்ண.திரை.பா.1,52).

கொச்சையர் பெ. 1.இளையார். கொச்சைய ரெண்மர்கள் (திருமந்.1394). 2.இடையர். கொச்சையர் மனையி லிடைச்சியர் (திருப்பு.260).

கொச்சையோன் பெ. இழிந்தவன். கொச்சை யோர்தமை விடுவதோ கொடுமலச் செருக்கு (சிவஞா.காஞ்சிப்பு. சார்ந்தா.11).

கொச்சைவயம் பெ. சீகாழி. கொடியாடு கொச்சைவயமே (தேவா.2,83,1).சண்பை நகர் வளர் காழி கொச்சைவயம் பரவுதிருக் கழுமலமாம் (பெரியபு.28,14).

கொச்சைவழக்கு பெ. செம்மையற்ற மொழி. குறு மொழி. (ஆட்சி.அக.ப.259)

கொச்சைவீச்சம் பெ. →கொச்சைநாற்றம்-2. கொச்சை வீச்சம் மாறாமல் போனாலும் பையன் பேச்சுத் துடுக்கா யிருக்கிறது (செ.ப.அக.).

கொசக்காரன் பெ. பட்டாதார், பட்டவுடன்படிக்கை பெற்றவன். (நாட்.வ.)

கொசக்குடி பெ. குயவர் குடியிருப்பு. கொசக்குடி மோயி அல்லோகொசப் பாத்திரம் வாங்கிக் கொண்டு (மந்தி.ப.216).

கொசகம் பெ. →கொய்சகம். (செ.ப.அக.)

கொசப்பு பெ. 1.அரட்டை. (இலங்.வ.) 2.வீண் வம்பு பேசுகை. கொசப்புக் கதைக்கிறது தான் அவளின்ரை வேலை (முன்.).

கொசம் பெ. →கொய்சகம். கொசத்துல வெட்டுவிளுக மாரிக்கு பூப்போல ரெத்தமும் ஒழுக (இராமநாத.நாட். அள.ப.379).

கொசமசக்கு பெ. குழப்பம். (யாழ்.அக.)

கொசர் பெ. (உருது) குசர், பிசிர். (செ.ப.அக.)

கொசலி பெ. →கொசவேலை. (செ.ப.அக.அனு.)

கொசலை பெ. குசலை, சுவர்த் தலையிற் கட்டும் ஆரல். (முன்.)

கொசவம் பெ. →கொய்சகம். (முன்.)

கொசவேலை பெ. கட்ட எழுதக வேலை. (செ.ப.அக.அனு.)

கொசறு பெ. 1.சிறு சிறு தொல்லைகள். (நகர.வ.) 2.→கொசர். (செ.ப.அக.)

கொசாப்பு பெ. வீண்வம்பு. (இலங்.வ.)

கொசாம் பெ. →கொய்சகம். (நாட்.வ.)

கொசான் பெ. →கொய்சகம். (செ.ப.அக.)

கொசிகம் பெ. 1.புடவை. கொசிகம் தானே புடவையாகும் (அக.நி.கொமுதல் 2). 2.ஆடை. (அக.நி.)

கொசு[1] பெ. 1.பெருங்கொதுகு. கொசுக்கள் போலே தெய்ப்பேன் என்றான் மோவுத்துக் காரனும் (தேசிங்கு. கதை ப.6). கொசுவின் இனத்தைப் பெருங் காற்றடித்தது போலே (முசு.நா.நூல் 59). குடைக்குங் கீழே படுத்த உன்னை கொசுவந்து கடிச்சிருச்சோ (தமி.நா.பா.ப.26). கொசுவைத் தள்ளி ஒட்டகம் விழுங்குவீர் (இயேசுகா.ப. 284). மைத்துணர் எதிரில் மாட்டுக் கொட்டில் மொய்க்கும் கொசுக்களால் மூடுண்டிருந்தார் (இருண்டவீடு ப.20). அணுவாய்க் கொசுவாய் அரிக்கும் புழுவாய் (ஆசிய. ப.42). மருந்துகளையும் சமாளித்து பெருகும் வல்லமை கொசுக்களுக்கு வந்துவிட்டது (செய்தி.வ.). 2.சிறு கொதுகு. கொசுத்திரள் புரையும் வானவர் விருப்பால் (திருவாமாத்.பு.பூர்வ.7,32). 3.மலேரியாவை உண்டு பண்ணும் ஒருவகை பறக்கும் சிற்றுயிரி. (கலைச். அக.ப.) 4.கொடுக்கு. (யாழ்.அக.)

கொசு[2] பெ. கச்சம், இருப்பின் முன்பகுதியில் இடுப்பில் செருகிக் கொள்ளும் வேட்டி மடிப்பு. (வின்.அக.)

கொசு[3] பெ. ஈகை. (இலங்.வ.)

கொசுக்கட்டை பெ. நுண்ணிச்சிறை என்னும் குருவி. (யாழ்.அக.)

கொசுக்கை பெ. சிறிய மீன் குஞ்சு. (இராமநாத.வ.)

கொசுகம் பெ. →கொய்சகம். (வின்.அக.)

கொசுகாந்தேன் பெ. →கொசுத்தேன். (யாழ்.அக.)

கொசுகு பெ. 1.துளம்பு. கொசுகீ ... எய்திடம் (காசிக்.40, 17). அந்தரத்தை உண்டுழிமிழ்ந்தேரர் கொசுகெனு மவர்களை நகையாரோ (கைவல்ய.2,88). கருடன் முன்பு கொசுகு பறப்பது போலவும் (கறுப்பண்ண.சத.1). எறும்பும் கொசுகும் பலபல செந்துக்கள் வீழ்ந்திறந்தும் (சாத்.கும்மி.514). குருடரான வழிகாட்டிகளே ... கொசுகில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர் களாயிருக்கிறீர்கள் (பு.ஏற்.மத்தேயு 23,24). 2.மலேரி யாவை யுண்டுபண்ணும் (கொசு) ஒரு சிறு பூச்சி. கொசுகு பறந்த குணம் போல் (பஞ்ச.திருமுக.ப.14). 3.தேனி லையான். (யாழ்.அக.)

கொசுகுதலை பெ. நெல்வகை. (செ.ப.அக.)

கொசுத்தேன் பெ. சிறு கொசுவினங்கள் சேர்த்து வைக்குந் தேன். (இலங்.வ.)

கொசுத்தேனீ பெ. சிறுதேனீ வகை. (செ.ப.அக.)

கொசுதாப்பர் பெ. போலிசு சேவகன். (இலங்.வ.)

கொசுமிளகாய் பெ. →கொச்சி மிளகாய். (நாட்.வ.)

கொசுமூட்டம் பெ. கொசுக்களைப் போக்குதற்கு மூட்டும் புகை. (வின்.அக.)

கொசுரு (கொசுறு) பெ. காய்கறி வாங்கும் பொழுது மேலும் கொஞ்சம் இலவசமாக கேட்டு வாங்குவது. கத்தரிக்காய் வாங்கி பூசணிக்காய் கொசுரு (என்.பழ. தொ.971).

கொசுவம் பெ. 1.→கொய்சகம். கொசுவச் சீலையை இழுக்கும் (தமி.நா.பா.ப.321). 2.சுருக்கம், ஓரங்கொய்து சுருக்கப்பட்ட உடை. (கலைச்.அக.2 ப.129)

கொசுவலை பெ. கொசு வராதவாறு தடுக்கும் வலை. கொசுவலை கட்டிய குழந்தைத் தொட்டிலும் (அவளும் அவனும் ப.129).

கொசுவு-தல் 5வி. ஆடையைக் கொய்து அடுக்குதல். (நாட்.வ.)

கொசுவுள்ளான் பெ. சிறிய உள்ளான் வகை. கொசுவுள்ளான்றன் கறியை (பதார்த்த.884).

கொசுறு (கொசுரு) பெ. விலைக்கொடுத்து வாங்கிய பொருளுக்காகக் கடைக்காரனால் கூடுதலாகத் தரப்படும் பொருளின் அளவு. (அயற்.அக.)

கொஞ்சக்காரி பெ. அற்பத்தனமுடையவள். கொஞ்சக் காரித் கஞ்சுவேனோ (முக்.பள்.158,5).

கொஞ்சக்குலம் பெ. தாழ்ந்தகுலம். கௌஞ்சகுல மல்லவோ (வள்ளி.கதை).

கொஞ்சங்கொஞ்சமாய் வி.அ. சிறிது சிறிதாய். (நாட்.வ.)

கொஞ்சத்தனம் பெ. எளிமை. கொஞ்சத் தனத்தை அறிந்து (குற்றா.குற.114,3).

கொஞ்சநஞ்சம் பெ. சிறிதளவு. கொஞ்சம் குடிவாங்கிப் போயிருந்தவர்கள் பணங்காசுகள் கொஞ்ச நஞ்சத்தைத் தட்டுமுட்டுகளுங்கொண்டு (ஆனந்த.தினசரிச்.3 ப.77), கொஞ்சநஞ்ச மிருந்த தையும் கொடுத்து விட்டான் (செ.ப.அக.).

கொஞ்சப்படு-தல் 6வி. சின்னத்தனப்படுதல். (யாழ்.அக.)

கொஞ்சப்படுத்து-தல் 5வி. இழிவுபடுத்துதல். (நாட்.வ.)

கொஞ்சப்பேச்சு பெ. சிறுமைத்தனமான வார்த்தை. கொஞ்சப்பேச்சுகள் சொல்லாதே (முக்.பள்.99,3).

கொஞ்சப்பேர்[1] பெ. சிலர். (நாட்.வ./செ.ப.அக.)

கொஞ்சப்பேர்[2] பெ. அபகீர்த்தி. (இலங்.வ.)

கொஞ்சம் பெ. 1.சிறிது, சிறிதளவு. தண்டலையார் வள நாட்டில் கொஞ்சமேனும் உப்பிட்ட பேர்கள் ... உலகந் தானே (தண்டலை.சத.12).கொஞ்சங் கொஞ்சம் துரையே (திருப்பு.67). உன்றன் கொஞ்சஉருப் பார்த்தனன் (திருவாமாத்.பு.பூர்வ.21,28). பண்டை உள வாதனை யால் நீ அலைந்து கொஞ்சம் உற்றாய் (தாயுமா.பா.29, 4). கொண்டமயக்கம் என்ன கொஞ்சமோ (தெய்வச். விறலி.தூது 421). மக்கள் தம்மைக் கொஞ்சம் இல் களிப்பினேடும் கொடுத்தனன் (பஞ்சதந்.கதை 6). எனக்குக் கொஞ்சமும் தூக்கமே இல்லை (அவளும் அவனும் ப.34). கொஞ்சமென்றன் சிந்தனைக்குச் செவி சாய்த்தீரேல் கோல் உமது கையில் (புலவர் உள். ப.8). பல்வகை மாண்பினிடையே கொஞ்சம் பயித்தியம் அடிக்கடி தோன்றுவதுண்டு (பாரதி.கண்ணன் பா.3,2). பாடுகிற பாட்டைக் கொஞ்சம் கேளடி பொண்ணே (கண்ண.திரை.பா.2,131). 2.எளிமை. (யாழ்.அக.) 3.அற்பம். கொஞ்சமல்ல என் விரகக் கோட்டாலை (தெய்வச்.விறலி.தூது 179).

கொஞ்சமதி பெ. அற்பபுத்தி. கொஞ்சமதியிற் பெரிய மதியுடையோர் (திரு.முரு.பிள்.பா.62).

கொஞ்சல் பெ. 1.நிரம்பா மென்மொழி, மழலைச் சொல். (பிங்.2022) 2.சரசப்பேச்சு. (செ.ப.அக.) 3.செல்லங் கொஞ்சுகை, சீராட்டு. (நாட்.வ.)

கொஞ்சவிலக்கம் பெ. சிறிதாக வருஞ் சூதகநீர். (செ. ப.அக.)

கொஞ்சன் பெ. அற்பன். வஞ்சன் கொஞ்சன் (திருப்பு. 609).

கொஞ்சி பெ.1.கிஞ்ஞா, பசுமையான சிறுஇலைகளை யுடைய செடிவகை. (யாழ்.அக.) 2.குலப்பண்ணை. (தென்.குல.குடி.2 ப.385) 3.கொழுஞ்சி. (சித்.பரி. அக.ப.84) 4.காட்டுக்கொஞ்சி, குத்துச்செடிவகை. (செ.ப.அக.) 5.சீமைக்கொஞ்சி, சிறுமரவகை.(முன்.) 6.பூவை மரம். (முன்.) 7.கும்பாதிரி, பெரிய மரவகை. (மரஇன.தொ.)

கொஞ்சிவஞ்சி பெ. →கொஞ்சி-7. (நாட்.வ.)

கொஞ்சு[1] பெ. ஒருவகை மீன். (செ.ப.அக.)

கொஞ்சு[2]**-தல்** 5வி. 1.இன்பமாய்ப் பேசுதல். இராமா னுசன் புகழன்றி என்வாய் கொஞ்சிப் பரவகில்லாது (இராமானுச.நூற்றந்.28). மழலைக் கனி யூறல் கலந்து கொஞ்சுஞ் சொல்லா லுருக்கி (பாரதம்.1,2,59). அஞ்சுகங்களும் குஞ்சுடன் கொஞ்சும் ஆரண்ங்கள் (வரத.பாகவத.4,13). 2. மழலைபேசுதல். கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே (தேவா.1, 62,5). கிள்ளை பூம் பொதும்பில் கொஞ்சி (கரு.3,4). கொஞ்சிய வுன்சொற் கேட்டு (உத்தரரா.சம்புவ.21). தண்கழல் சிலம்புடன் கொஞ்சவே (திருப்பு.103). கொஞ்சு மங்கையராடலும் (அருணகிரிநாத.பு.5,4). கொஞ்சுபஞ்சரப் பரம தத் தையே (ஆளவந். காஞ்சிப்பு.15). குறிஞ்சிக் குறவர் இளங்குயிலும் கொஞ்சி யணையும் பொதுக்கணவா (பழனித்திரு.13,5,5). கொஞ்சும் பால்மணம் மாறாத வேலாயுதும் (கண்ண. திரை.பா.2,12). 3.இனிதாய் ஒலித்தல். கொஞ்சிய கிள்ளை கொய்தளிர்ச் சேக்கை (பன்னிருபா.185). சிலம்பு கொஞ்சவே (பாரதம்.3,1,148). பைங்க டம்பு தண்டை கொஞ்சு (திருப்பு.69). கொஞ்சும் கிளி மொழியாள் கூனியரும் தாம் உரைப்பாள் (சீவே.சரி. 639). காரிகையாள்-கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள் (திருவிடை.நா.ப.21,17). ஆர ணச்சிலம்பு கொஞ்ச ஆடல்... துறத்த ரித்த தாளினாள் (வங்கத்துப்.5,2). கொஞ்சும் சதங்கை ஒலிகேட்டு (கண்ண.திரை.பா.2,10). 4.செல்லம் கொடுத்தல். வாரி யெடுத்து வைத்துக் கொஞ்சுவாள் (அவளும் அவனும் ப.165). கொஞ்சி வளர்ந்து குழந்தையில் இருந்து (இயேசுகா.ப.38). 5.முத்தமிடுதல். கொஞ்சி மலரனைமேல் கூடியிரு (தெய்வச்.விறலி.தூது 341). 6.அன்பு பாராட்டுதல். வாரி அணைத்து அதைக் கொஞ்சுகையில் (காவியப் பாவை ப.79).

கொஞ்சுகிளி பெ. குதலைபேசு கிளி. (யாழ்.அக.)

கொஞ்சுகுதிரை பெ. மென்னடையுள்ள குதிரை. (செ.ப.அக.)

கொஞ்சுநடை பெ. மெதுவான நடை. (வின்.அக.)

கொஞ்சுமீன் பெ. சிறிய இரால் மீன். (தொ.வ.)

கொஞ்சூண்டு பெ. சிறிதளவு. எனக்குக் கொஞ்சூண்டு சோறு போதும் (கோவை வ.).

கொட்கு[1] பெ. குலாலசக்கரம். குலால சக்கரம் கொட்கு (அபி.மாலை 1841).

கொட்கு[2]**-தல்** 5வி. 1. சுழலுதல். நிலவு மணல் கொட்கும் ஓர் தேர் உண்டு எனவே (அகநா.20). மேழகத் தகரோ டெகினம் கொட்குங் (பெரும்பாண்.326). வளிவலங் கொட்கு மாதிரம் (மணிமே.12,91). கொட்கு நிமிருங் குறுகுங் ... பேய்மகள் (புற.வெண்.77). கொட்கும் கடல் சேப்ப (கு.சோ.உலா 470). கருந்தாது கொட்கும் இருஞ்சிலை (ஞானாமிர்.64,29). பயிரவிதிக் கொட்க நடிக்க (திருப்பு.6). மடுகொட்கு மலங்குண் அலகு திறந் தெடுத்து வரு போதா (ஞான.உபதேசகா.2194). சுரும்புந்

தேனும் இன்மது நுகர்ந்து கொட்கும் (கச்சி.காஞ்சிப்பு. திருக்கண்.249). மலர்தலை உலகத்துக் கொட்கும் பிறப்பே (ஆசிரியமாலை 15). 2.பிரிதல். வள் எயிற்று அரவொடு வயமீன் கொட்கும் (அகநா.340). நாரை ... துணையொடு கொட்கும் (ஐங்.158). கொடும்புலி கொட்கும்வழி (சிறுபஞ்.80). நெறியிறாக் கொட்கு நீர் சுழி (தினை.ஐம்.43). 3.சூழவருதல். அறா அல் இன்று அரி முன்கைக் கொட்கும் (கலித்.147,36). காலுண வாகச் சுடரொடு கொட்கும் (புறநா.43,3). 4.மயங்குதல். கூடவென வூடலுணர் வித்து மதி கொட்கும் (கச்சி. காஞ்சிப்பு.திருக்கண்.208). 5.வெளிப்படுதல். மாவீன்ற தளிரின் மேல் கணிகாரங் கொட்கும் (கலித்.143,5). கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை (குறள்.663). 6.புலப்படுதல். கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்சின் எற்றா விழுமம் தரும் (குறள்.663). 7.வளைதல். (யாழ்.அக.)

கொட்டக்காரன் பெ. 1.தப்பிலி. (முன்.) 2.அடாபிடிக் காரன். (வின்.அக.)

கொட்டக்குழம்பு பெ. கொட்டைப்பால் போல் கட்டியாக இருக்கும் நிலை. (மூன்று அழைப்புகள் 1969 ப.196)

கொட்டகச்சி பெ. →கொட்டாங்கச்சி. (யாழ்.அக.)

கொட்டகம் பெ. 1.உடம்பு. குறுநரிக் கொட்டகத்து (திருமந்.2881). 2.→கொட்டகை. (வின்.அக.) 3.சிற்றில். ஊரில் பெண்களாய்க் கொட்டகமெடுத்து விளையாடிக் திரிகிறவர்களுடைய (பெரியாழ்.தி.1,2,9 வியாக்.).

கொட்டகாரம் பெ. 1.அரசர் தங்க அமைக்கப்பெறும் சிறப்பிடம். ஊரிருக்கையும் கொட்டகாரமும் மாதேவர் இருந்த திலும் (கல்.கலைச்.அக.ப.156). 2.கொட்டகை. அட்டில், கொட்டகாரம், பண்டசாலை ... இவற்றுள் நீங்கி (இறை.அகப்.115,142உரை). 3.நெல் முதலிய பண்டம் வைக்கும் அறை. நற்கூட்டின் நிரைசெறிந்த புரிபலவா நிலைக்கொட்ட காரத்தில் (பெரியபு.54,7).

கொட்டகை பெ. 1.பந்தல் விசேடம், கொட்டில். கொட்டகைத் தூண்போற் காலிலங்க (திருக்குற்றா.குற. 84,4). கொட்டகை கூடாரம் போட்டுக் கொள்வீர் (மலரும். 516). பரதேசி சனங்களும் ஏழை சனங்களும் பசியினால் துன்புறுவதை அறிந்து ... கொட்டகை போடுவித்து அதில் அவர்களுக்கு உணவளித்து வருமாறு செய்தார் (மீனா.சரித்.1 ப.190). 2.சமையலறை. (திருச்சி.வ.)

கொட்டகைச்சி பெ. →கொட்டங்காய்ச்சி. (யாழ்.அக.)

கொட்டங்கச்சி பெ. →கொட்டாங்காய்ச்சி. (முன்.)

கொட்டங்காய் பெ. 1.ஓர்மரக்காய். (முன்.) 2.தேங்காய். (மூலி.அக.)

கொட்டங்காய்ச்சி பெ. தேங்காய் ஓட்டின் ஒரு பகுதி, சிரட்டை. (செ.ப.அக.)

கொட்டடி பெ. 1.சமையல் முதலியவற்றிற்கு உதவும் அறை. கொட்டடி மெளுகிசாணம் போடவைத்தாய் எச்சிலையும் என் கையால் எடுக்க வைத்தாய் (இராமநாத.நாட்.அள.ப.761). 2.மாட்டுக்கொட்டில். (செ.ப.அக.) 3.குதிரைகட்டுமிடம். குதிரை கொட்டடி கொண்டு போய் வையும் (தேசிங்கு.கதை.ப.8). 4.சிறைச்சாலை அறை. கொட்டடி தன்னில் அடைத்திடும், வேங்கையை ... திறந்து விட்டார் (சிவகங்.சரித்.கும்மி. ப.7). 5.நெல்லுக்கொட்டிவிற்கும் இடம். (யாழ்.அக.) 6.உடலில் கட்டம் போட்ட பழங்கால புடவை வகை. திருமண ஆடை கொட்டடிப் பரிசமாகக் கோசல நாட்டை மீந்து (இராவணகாவி.3,8,2). கொட்டடிச் சேலை கட்டிய பெண்ணை கட்டிக்க வந்ததும் நீதானே (கண்ண.திரை. பா.2,221).

கொட்டடியாசாமி பெ. கரடிக்கூடத்தில் பயின்ற பயில் வான். (நாட்.வ.)

கொட்டடைப்பன் பெ. மாட்டுநோய் வகை. (பெரியமாட். 62)

கொட்டைப்பான் பெ. மாட்டு நோய் வகை. (முன்.)

கொட்டணக்காரி பெ. கூலிக்கு நெற்குத்துபவள். (நாட்.வ.)

கொட்டணம் பெ. 1.பஞ்சுகொட்டுகை. (முன்.) 2.நெற் குத்துகை. (முன்.) 3.திரை. கொட்டணக் கோட்டை விடு ரகுநாத குபேரன் (நாணிக்.ஒருதுறைக் கோவை 282).

கொட்டணை பெ. கசிவு நிலத்தில் வளரும் ஒருவகைப் பூடு. (வின்.அக.)

கொட்டத்திரட்சி பெ. திராமலை. (யாழ்.அக.)

கொட்டந்தேங்காய் பெ. நன்றாகக் காய்ந்த தேங்காய், கொப்பரைத் தேங்காய். (இலங்.வ.)

கொட்டம்[1] பெ. 1.இறுமாப்பு. கொட்டம் அறப்புற்றரவ (திருப்பு.887). கறங்கு எனவே கொட்டம் இட்ட துட்டர் குடல் புறப்பட (மயிலை.உலா 504). வேடர் கொட்டம தடங்க (தாயுமா.பா.சிற்சு.4). கொட்டமிடு மன்னரெலாங் ... பிறிக்க மாட்டாரால் (திருக்குற்றா.பு.31,58). கொட்டம் இடும் கைசமும் (இராமநா.1,16தரு). கொட்ட மலி துட்டர் மனை முட்ட நெய் தற்பறைகள் கொட்ட (பச்சை.அம். பிள்.சப்பாணி.2,2). நமன் கொட்டத்தை அடக்கியே வெருட்டி அடிக்கலாம் (புல்லையந்.82). கொட்டம் மிக்க வெஞ்சூர் இடம் கூடினான் (முருகன்பூண்டிப்பு.சருக். 4,10). மன்டின் கொட்டத்தை அடக்கி அந்தக் குமணனோடு கோலோச்ச வானுலகுக் கனுப்புகின்றேன் (புலவர் உள்.ப.88). கொழுக்கும் குருமாரின் கொட்டம் அறுத்து (பாரதிதா.மூன்.இராப்.ப.172). 2.சேட்டை, குறும்பு. கொட்டமிடு துட்டவசுரப் படையடக்குகுயில் (சொர்ண.பிள்.4,7). கொட்டம் செய்வது சரியில்லை (இளை.இலக்.53). கோர ஆட்சி புரிந்தவரின் கொட்டம்

அடங்கு (மலரும்.930). செங்கோனப் படிவரினுங் கொட்டம் அடங்கிடுமே (இராவணகாவி.2,4,13). 3.கடுகடுப்பு. (நாட்.வ.) 4.முழக்கம். துட்டர் கொட்டந் தனைத் தூளிடுவோன் (கும்மிப்பா.சீரணி 84). கொட்ட மிடுங்கெசம் (இராமநா.பாலகா.18). 5.கும்மாளம். காவேரியினிடம் அவன் கொட்டம் ஒன்றுஞ் செல்லாது (அம்பி.அமரா.ப.11). 6.ஆர்ப்பாட்டம். நாவலமே கோலாக அதன்மேல் நின்று நம்பர்தமைக் கொட்டம் என நவின்று பாட (பெரியபு.28,898). கொடுங்கோலர் கொட்டத்தை எதிர்த்து நின்றார் (மனித.தேடு.ப.37). காமத்தின்வேட்கையிலேதவிக்கும்நெஞ்சின்கொட்டத்தை அடக்குதற்கு (நேற்றின்.ப.87). இந்தக் கால ஆம்பளைங்க அடிப்பது கொட்டம் (கண்ண.திரை.பா.3,466). 7.பொல்லாங்கு. கொட்டமொ டெதிர்த்த அசுரக்குமுவை வெட்டு முனி (திருவிரிஞ்சை.பிள்.39). கொட்டமிட்டே யுத்தரத்திற் கோக் கொள்ளையாட வந்து துட்டனரவக் கொடியோன் ... கொள்ளை விரும்பேல் (ஆத்திசூடி வெண்.41). 8.தவறு. கொட்டமிட மிட்டபரி எட்டுமசை யட்டதிசைக்கு கொப்பினவள் (மீனா.திருப்பு.76). 9.நீர் முதலியன ஒழுகுகை. கொடுங்காற் குண்டிகைக் கொட்ட மேய்ப்ப (பெருங்.1,43,130). 10.மாட்டிற்கு மருந்து கொடுக்கும் மூங்கில்குழாய். (நாட்.வ.) 11.பால் கறக்கும் பாத்திரம். கொட்டத்து வெண்பால் குனிந்து கறப்பார் (அழகர்கிள்ளை. தூது 18). 12.கொட்டக்காரன். (செ.ப.அக.) 13.எருதின் கூட்டம். (ஆசி.நி.111) 14.துன்பம். கொட்ட மார்கலி போன பின் (செவ்வந்திப்.ப. 3,31). 15.நூற்குங் கொட்டை. (சிறுபாண்.166 உரை) 16.குராமரம். நறும் பொற் கொட்டமுந் துறும்பு களுலி (பெருங்.2,12,30). 17.அழகிய வேலைப்பாடுள்ள சிறிய பெட்டி. கொழுங்குடி முசுண்டை கொட்டங் கொள்ளவும் (சிறுபாண்.166). கொடிப்பல விரீஇய கொழுந்து படு கோலத்துக் கொட்டம் (பெருங்.1,46, 216-217).

கொட்டம்² பெ. 1.வீடு. ஒருகொட்டம் ஒழிச்சுக்குடுத்துருங்கோ (எங்களூர் 47). 2.மாட்டுத் தொழுவம். ஐம்பது பசுக்கள் அடங்கிய கொட்டமும் (அவளும் அவனும் ப. 26). அடா கெண்டவளம் மேஞ்சிருக்கு களுத்திவளம் மேஞ்சிருக்கு அட வயிரவள பண்ணிருக்கு மச்சா அதுதாண்டா நம்ம கொட்டம் (இராமநாத.நாட்.அள.ப. 317). எருது நினைத்தவிடத்திற் கொட்டங்கட்டுவார்களா? (செ.ப.அக.).

கொட்டம்³ பெ. 1.ஒருவகை வாசனைப்பண்டம். சந்தனம் கொட்டமோடு அரைத்துக் கொண்ட மார்பினன் (சிலப். 22,24). கொட்டமே கமழும் ... மொய்குழல் (சீவக. 2575). கடுவுங் கொட்டமும் காழகிற் குறையும் (பெருங். 2,18,45). கொட்டம் ... சீதாரி ... கொடுவரலால் வணிகனை நிகர்த்தது பொருள் (திருநெல்.பு.நாட்டு. 26). 2.ஆமணக்கு. வோளப்பயிறு கொட்டத்தலை தின்ன ஆடுமாறு சொக்கிக் கிடக்க (கொங்கு நா.பா.2 ப.173).

கொட்டம்பண்ணு-தல் 5வி. போக்கிரித்தனம் செய்தல். நாலு திசை எங்கும் வால் சுழற்றிகொட்டம் பண்ணும் அனுமான் (ராம.அம்.2017).

கொட்டமடி-த்தல் 11வி. மனம்போனபடி துட்டத்தனஞ் செய்தல் (செ.ப.அக.).

கொட்டமிடு-தல் 6வி. 1.மனம் போனபடி ஒருசெயலைச் செய்தல். கொட்டமிட்டுச் சூறையிட்டுக் கொள்ளை யிட்டான் (மூவரை.தூது 121). 2.விளையாடுதல். கொட்டமிடும் மஞ்சு அள் உறும் (சிலேடை இலக்.ப. 302). 3.ஆர்ப்பாட்டம் செய்தல். பாரறியக் கொட்ட மிட்ட சண்டன் உயிர் (தனிப்பா.திர.சொக்.3).

கொட்டரிதாளம் பெ. (இசையி.) குபேரசந்தியில் இசைக்கத்தக்க தாளம். (பண்.ஆரா.54)

கொட்டலம் பெ. மசாலைச் சாமான் இடிக்க உதவும் சிறிய இரும்புப் பாத்திரம். (கோவை வ.)

கொட்டலை பெ. →கொட்டடி. (வின்.அக.)

கொட்டன் பெ. 1.கொட்டாப்புளி. (இலங்.வ.) 2.பருத்த சரீரமுள்ளவ-ன்-து. (யாழ்.அக.) 3.சிறு கடகம், மாடுகளைச் சாய்ப்பதற்கு பயன்படுத்தும் தடி. (இலங்.வ.) 4.நெற்கள முதலியவற்றில் உபயோ கிக்கும் தேங்காய். (செ.ப.அக.) 5.குறும் பொல். கொட்டனுக்குள்ளை வெங்காயம் கிடக்கு (இலங்.வ.). 6.ஓர்மம். (யாழ்.அக.)

கொட்டன்கட்டை பெ. →கொட்டாப்புளி. (யாழ்.அக.)

கொட்டன்பொல்லு பெ. குறும்பொல்லு. (முன்.)

கொட்டனஞ்செய்-தல் 1வி. தோண்டுதல். கொட்டனஞ் செய்து குளிக்கின்ற கூவலுள் (திருமந்.2906).

கொட்டாகை பெ. →கொட்டகம். (யாழ்.அக.)

கொட்டாங்கச்சி பெ. 1.→கொட்டங்காச்சி. (முன்.) 2.→கொட்டம்¹-10. (நாட்.வ.)

கொட்டாங்கச்சித்தாட்டுப்பத்தினி பெ. சேலை வகை. (செ.ப.அக.அனு.)

கொட்டாங்கரந்தை பெ. →கொட்டைக்கரந்தை. (யாழ்.அக.)

கொட்டாங்கச்சி பெ. →கொட்டங்காய்ச்சி. (செ.ப.அக.)

கொட்டாங்கோரை பெ. கோரைவகை. (முன்.)

கொட்டாச்சி பெ. தேங்காய் ஓடு. (இராமநாத.வ.)

கொட்டாஞ்சி பெ. →கொட்டாச்சி. (மத்.கிளை மொழியி.)

கொட்டாட்டுப்பாட்டு பெ. நிருத்த கீத வாத்தியங்கள். இக்கோயில்களில் நாள்வழிபாடுகளும் நடைபெற்ற போது கொட்டாட்டுப் பாட்டு என்ற கீத வாத்திய இடம் பெற்றிருக் கின்றன (தமிழ்க்கலை த.3 க.1,2 ப.10).

கொட்டாணிமறவன் பெ. மறவருள் ஒரு சாதியார். (செ.ப.அக.)

கொட்டாப்பி-த்தல் 11வி. மக்கள் அல்லது விலங்குகள் உண்ணுதல். (இலங்.வ.)

கொட்டாப்பிடி பெ. →கொட்டாப்புளி. (யாழ்.அக.)

கொட்டாப்பிளி பெ. →கொட்டாப்புளி. (முன்.)

கொட்டாப்பு பெ. →கொட்டாப்புளி. (நாநார்த்த.1048)

கொட்டாப்புளி பெ. மரச்சம்மட்டி, உளி மேல் அடிக்கும் ஆயுதம். கொட்டாப்புளி துடை தட்டிடவும், கடை நெட்டுவழி சென்று முட்டிடவும் (வீர.கட்ட.கதைப்பா. ப.64). கொட்டாப்புளி முளை யிட்டோடவே (திருவிடை. நா.ப.62,24). கொட்டாப்புளி எலி மேலே புரண்டது (இளை.இலக்.120).

கொட்டாப்பெட்டி[1] பெ. 1.→கொட்டாப்புளி. (செ.ப.அக.)

கொட்டாப்பெட்டி[2] (கொட்டப்பெட்டி) பெ. →கொட்டைப் பெட்டி. (முன்.)

கொட்டாம்பாரை பெ. மீன்வகை. (தொ.வ.)

கொட்டாம்பிளி பெ. →கொட்டாப்புளி. (நாட்.வ.)

கொட்டாமட்டை பெ. ஓலையை இளைதாயிருக்கும் போது வெட்டி விடுவதால் நார்நீரம்பிக் கடினமா யிருக்கும் பனைமட்டையின் அடிப்பகுதி, தும்பு மட்டை. (இலங்.வ.)

கொட்டாய் பெ. 1.→கொட்டகம். (யாழ்.அக.)

2.பசு, குதிரைகளை கட்டும் இடம்,கொட்டகை. ஆனைக்கு டேராவும் குதிரைக்குக் கொட்டாயும் (பிளாக். மாலை ப.86).

கொட்டாரம்[1] பெ. 1.நெல் முதலிய தானியம் குத்துமிடம். (செ.ப.அக.) 2.களஞ்சியம். படைக்கலக் கொட்டிலும் புடைக் கொட்டாரமும் (பெருங்.3,14,19). எண்ணென் கலைக்கும் ஒரு கொட்டாரமாகும் குருகையே (குருகை.91). நன்னூற் கட்டுபொற் கொட்டாரம் வாணி சிங்காதனம் (பெருந்.1249). கொட்டாரங் கொள்ளை யடித்தானே வலு துட்டனடா (வீர.கட்டகதைப்பா. ப.142). 3.நெற்சேர். சங்கை தணிக்கும் கொட்டாரம் (சிவதரு. சிவஞான.70). 4.யானைக் கூடம். திருக்கொட்டாரம் தேர் ஒன்று உமைக்குச் செய்தான் (திருவால.திருப்பணி. 65). 5.கொட்டகை. சிலந்தியைக் கூப்பிடுங்க கொட்டாரம் போட (தமி.நா.பா.ப.233). 6.அரண்மனை. கொட்டாரம் தீக் கொளுத்திய நீசர் (மலரும்.172). 7.அரண்மனை முதலியவற்றின் தலைவாசல். தன் இல்லோகடைத்தலையோகொட்டாரமோசந்தைக்கூட்டமோ (சொக்க.பண.தூது 153).

கொட்டாரம்[2] பெ. 1.சேட்டை. கொட்டாரம் பண்ணாதே கெட்டியாத் தூக்கு (ஏற்றப்.ப.81).

கொட்டாவி[1] பெ. களைப்புக் காரணமாக வாயைத் திறந்து வெளிவிடும் நெட்டுயிர்ப்பு. நகையொடு கொட்டாவி காறிப்புத் தும்மல்...அசையாது நிற்கும் பழி (ஆசாரக்கோவை 73). கொட்டாவி கொள்கின்றான் (பெரியாழ்.தி.1,4,6). நஞ்சு கலந்தவனுடைய முகம் உலந்து... கொட்டாவி மிக்கநடுக்கம்... இவை உண்டாம் (கௌடலீயம் ப.124). வாயில் கொட்டாவி விட்டாலும் குற்றமே (காவியப்பாவை ப.115). கோட்டையின் வாசலைக் காப்போர் பெருங்கொட்டாவி விட்டுக் கிடந்தார் (தமிழ.கத்தி ப.80).

கொட்டாவி[2] பெ. நாயுருவி. (சித்.பரி.அக.ப.84)

கொட்டாவிச்சுரம் பெ. கொட்டாவி முதலியவற்றோடு கூடிய சுர நோய் வகை. (சீவரட்.48)

கொட்டாவிவிடு-தல் 6வி. 1.களைத்துப் போதல். (நாட்.வ.) 2.வாயால் நெட்டுயிர்த்தல். (செ.ப.அக.) 3.இறத்தல். (முன்.)

கொட்டாறு பெ. உப்பளம். (முன்.)

கொட்டான் பெ. →கொட்டன்-4. பேய்க் கொமட்டி கொட்டான் (திருவிடை.நா.ப.29). 2.தேங்காய். (சித்.பரி.அக.ப.84) 3.சிறுநார்ப்பெட்டி. வாணக் கொட்டான் ரெண்டெடுத்து (மந்தி.ப.69). வண்ணக் கொட்டான் விக்குதிண்டு வாங்கித் தரச்சொல்லி (நாட்.பா.ஒப்.ப.241). உள்ளூர் திருமணங்களுக்கு ... வண்ணக்கொட்டான்கள் பெட்டிகள்... செய்து கொடுப்பது ... கொட்டு வோர் பணியாரும் (நகர்.நாட்.கதைப்பா. ப.19).

கொட்டி[1] பெ. 1.நீர்க்கொடிவகை. பூவுண் வண்டன கொப்பிற் புண்ணியர் நாவின் வேட்கையு (சீவக.3133). வட்டில் சுமந்து மருங்கு அசையக் கொட்டிக் கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் (தனிப்பா.தீர.44 கம்பர்). பொய்கை மலர்ந்தகொட்டி (கந்தபு.1,4,47). கோகனகப் பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில (பெருந்.1478). வாவிதனில் ஆம்பல் கொட்டிகள் அதனில் நீர் வற்றில் வற்றிடும் (குமரேச.சத.48). வாவியிற்றான் கொட்டி பூப்பதெனவும் (கறுப்பண்ண.சத.1). கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி உறுவார் உறவு (வாக்குண்.17). நீர் வற்றிய நிலை கொட்டியை நெஞ்சுற்றிடு வேனே (இராவணகாவி.5,2,60).

கொட்டி[2] பெ. 1.→கொடுகொட்டி. (சிலப்.3,14 உரை) 2.முருகன் ஆடல்களில் ஒன்று. குமரா! உனது கொட்டி விண்ணே பரவ நடித்தி (ஞான.உபதேசகா.2112). 3.தாளம். கொட்டி யளந்தமையாப் பாடலும் (திரிகடு.57).

கொட்டி[3] பெ. 1.கோபுரவாசல். (செ.ப.அக.) 2.வாயில். (அக.நி.) 3.கூட்டம். (முன்.)

கொட்டிக்கிழங்கு பெ. ஒரு வகைக் கிழங்கு. (வைத். விரி.அக.ப.117)

கொட்டிக்கொடு[1]**-த்தல்** 11வி. அடிக்கடி கண்டித்தல். (நாட்.வ.)

கொட்டிக்கொடு²-த்தல் 11வி. அதிகமாகக் கொடுத்தல். (செ.ப.அக.)

கொட்டிக்கொள்(ளு)-தல் 2வி. 1.நிரம்ப உண்ணுதல். (முன்.) 2.மேற்போட்டுக்கொள்ளுதல். என் வயிற் றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே (நாட்.வ.).

கொட்டிக்கோரை பெ. கோரை வகை. (யாழ்.அக.)

கொட்டிகலை-த்தல் 11வி. சிதறடித்தல். (முன்.)

கொட்டிகிட-த்தல் 12வி. குவிந்து கிடத்தல். தமிழ் நாட்டின் மூலை யெல்லாம் தனம் கொடிக் கிடக்குமென எண்ணினாயா (புலவர் உள்.ப.109).

கொட்டிச்சேதம் பெ. 1.ஆதித்தாள ஆவர்த்தத்தில் உள்ள எட்டு எண்ணிக்கையை மூன்று, மூன்றாகக் கொட்டிச் சென்றால் இறுதியில் இரண்டு எண்ணிக்கை மிச்சமாகும் கொட்டு முறை. (மத்தளவி.1 உரை). 2.→கொடுகொட்டி. இமையவ னாடிய கொட்டிச்சேதம் (சிலப்.28,75). சிவனும் பார்வதியும் ஆடிய புகழ் படைத்த கொட்டிச் சேதம் என்ற கூத்தை நடித்துக் காட்டினர் (சேரன்வஞ்சி ப.61).

கொட்டிட்டை பெ. தஞ்சாவூர் மாவட்டத்தில் கருவிலி என்னும் தலத்தில் உள்ள சிவாலயம். கருவிலிக் கொட்டிட்டை யுறைவான்கழல்கூடுமே (தேவா.5,69,1).

கொட்டிப்பேசு-தல் 5வி. குத்திப்பேசுதல். (நாட்.வ.)

கொட்டிமத்தளம் பெ. பெரிய மத்தளம். கொட்டிமத்தளம் ஒன்றுக்கு காந்தர்வதாசனுக்குப் பங்கு ஒன்றும் (தெ.இ.க.2,66).

கொட்டியப்பூச்சி பெ. பயிரை யழிக்கும் ஒரு வாழைப்பூ. (செ.ப.அக.அனு.)

கொட்டியம் பெ. 1.எருது. (சூடா.நி.) 2.பொதி எருது. (ஆசி.நி.11) 3.பொதிமாட்டுத்திரள். (வின்.அக.) 4.மாட்டுக் கொட்டம். சோலமார் ஒருத்தல் ஏறும் கொண்ட கொட்டியங்கள் (பாத்மோ.பு.4,159).

கொட்டியம்பலம் பெ. முகடு வேய்ந்த வாசல்நடை. (நாஞ்.வ.)

கொட்டியான் பெ. 1.பயிரில் விழும் நோய் வகை. (செ.ப.அக.) 2.சுமைகாரன். (முன்.) 3.கெடுதியை உண்டு பண்ணுவது. அந்த ஊருக்கு அவன் குடியிருக்கப் போனது ஒரு கொட்டியான் விழுந்தது போலாயிற்று (முன்.).

கொட்டில் பெ. 1.மாடு, குதிரை கட்டுமிடம். கொட்டில் விளங்குதேர் புக்கதன்றே (சீவக.471). கொட்டி லொன்றெடுத்து (அரிச்.பு.7,63). பகடும் ஏறும் குலவிய கொட்டில் (திருவாமாத்.பு.பூர்வ.2,17). ஏறு கட்டிய கொட்டில் (தனிப்பா.திர.169 காளமே.). வாய்ந்த பசுக் கொட்டில் இரதம் (நீதிபோதவெண்.22). கொட்டிலில் வாழ்பசு வீந்தவர் பாடியிற் கோகுலரே (கோகுலச.82). குதிர கொட்டில் வந்து நின்றார் கோடிதுரைமார்கள் (தேசிங்கு.கதை ப.13). கொட்டிலும் சோலையும் குடையும் குன்றலும் (அறு.இலக்.91அணி.). சகதிக் கட்டை எறக்கி நிரத்தணும் பின்னே கொட்டில் கெட்டணும் (இரண்டு படி ப.28). 2.ஒதுக்கிடம். (யாழ்.அக.) 3.தேர் நிற்கும் இடம். பட்ட மார்நெடுந் தேர்பைம் பொனான் மிடை கொட்டில் சேர்ந்தன (சூளா.894). 4.குடிசை. பன்னூ றாயிரம் பாடிக் கொட்டிலும் (பெருங்.1,43,199). நாய்க் கொட்டில் என்ன நல்வினை பண்ணிற்றோ (பாரத வெண்.152 உரை). ஊற்றைச் சரீரம் ஆபாசக் கொட்டில் (பட்டினத்தார்.பா.3,27,1). கொல்லும் கள்வர்தம் கொட்டில் குறுகலும் (திருவாமாத்.பு.பூர்வ.11,11). விடக்கினருக்குள கொட்டிற் றழையாதே (பாண்டிநா. பிள்.8,9). 5.வில்வித்தை பயிற்றும் இடம். கல்லூரி நற்கொட்டிலா (சீவக.995). ஏஎக் கொட்டில் சாலை ... புழை என வரும் (தொல்.எழுத்.277 நச்.).

கொட்டிவிடு-தல் 6வி. அடித்தல். வட்டமிடும் கண்கள் ரெண்டும் கொட்டிவிட்ட பாவமென்ன (கண்ண.திரை. பா.2,144).

கொட்டிவை-த்தல் 11வி. பண்டங்களைக் கொட்டுதல். கொட்டி வைத்தே முத்தே! கண்ணேநீ குவித்துவைத்த ரத்தினமே (தமி.நா.பா.ப.11).

கொட்டிறக்கு-தல் 5வி. 1.மணல் நிலத்தினுள் கிணறு வெட்டும் போது மரம் அல்லது கல் அல்லது சிமிண்டு ஆகியவற்றால்செய்த குழாய்களைப் பதித்து மணல் விழாவண்ணம் செய்தல். (இலங்.வ.) 2.மணல் நிலத்துள் மரக்கிணற்றைப் பதித்தல். மண்ணினில் மடுவைத் தோண்டிமாயமாய்க் கிணறெடுக்க ... மண்ணதை உள் அகற்றிப் பதித்தற் கொட்டிறங்கல் என்பர் (நீரரர்நி.5,21).

கொட்டு¹ பெ. 1.அடி. (யாழ்.அக.) 2.வாத்திய அடிப்பு. மள்ளர் கொட்டின் மஞ்ஞையாலும் (ஐங்.371). முக்காலைக் கொட்டுனுள் மூடி தீக் கொண்டு எழுவர் (நாலடி.24). 3.வாத்தியம். பதினோராடலும் பாட்டுங் கொட்டும் (சிலப்.3,14). முழவொடும் கொட்டமைந்த ஆடலான் (தேவா.2,99,10). கொட்டுந் துடியும் குறித்தகரிக் கொம்புகளும் (கூளப்ப.காதல் 64). கொட்டு மிழற்றி அருச்சனையிட்டுயர் கொற்றத் தனி வேலா (பாண்டிநா. பிள்.8,8). 4.தாளம். (இலக்.சொ.அக.) 5.மேளமும் தவிலும். (ரா.வட்.அக.) 6.தப்பு, பறை. கீழ்க் குடியான வர்கள் வீட்டுக்கு ஒருவர் வீதம் கொட்டுக் கொட்டச் சென்றாக வேண்டும் (நகர்.நாட்.கதைப்பா.ப.19). 7.தாளத்தில் அரைமாத்திரைக் காலம். (சிலப்.3,16 உரை) 8.பறை முழக்கம். நதி கரந்த கொட்டு தாட்சான் சடைமேல் (கபி. சிவ.இரட்.மாலை 29). கொட்டும் குரவையும் முன் இட்டு (கண்.பள்.50). கொட்டுமுழக்கம் ... கூத்துக்கும் கொட்டுக்கும் நல்லான் (முக்.பள்.86,4). 9.உட்டுளையானமரத்

துண்டு. (யாழ்.அக.) 10.துளையுடைப் பொருள். (முன்.) 11.தேள் முதலியன கொட்டுகை. (வட்.வ.) 12.சில்விடக் கடி. (யாழ்.அக.) 13.மண்வெட்டி.(முன்.) கொட்டும் கோத்தன மேழியும் (கலிங்கத்துப்.141). கொட்டு வாங்கிக் குதித்து நிவப்புமண் வெட்டுவார் (அரிச்.பு.நாட்டுச்.30). எண்ணிடாதவர் நெஞ்சை ... கொட்டால் திருத்திடுவேன் (கண்.பள்.15). மண்வெட்டி புற்றெனவே கொட்டால் வெட்டுவேன் (முக்.பள்.11,8). கொட்டுஎடுத்துப் பாரளை அகழ்ந்து வெட்டிப் பார்க்க நான் ஓடிப் போனேன் (பஞ்ச.தந்.2,85). ஓர் கொட்டும் கொடுக்குடனே கூடையுமா (திருக்கேதீச்.தூது 196). 14.களைக்கொட்டு. கொட்டுப் பிடிபோலுங் கூனும் (சீவக.2798). 15.மண்வெட்டியின் வாயாகிய தகடு. கொட்டுமண் சுமந்து செல்வர் (திருவிளை.பு.61,36). 16.மண் வெட்டியின் கொள்ளளவு மண். (தஞ்.வ.) 17.1.கூடை கருகு. முருட்டுக் கைகளால் கொட்டை வாங்கிக் கருத்தின்வழித் தருகைக் கயிறுந் தறியுமுடன் பறித்தார் (பெரியபு.31,10). 17.2.பிரப்பங்கடை. (நாட்.வ.) 18.சரீரம், உடம்பு. நாய்க் கொட்டார்த்தார் செய்யுங் கோலங்கள் வண்ணம் (நீல.130). உயிர் அங்கே கொட்டு இங்கே (வின்.அக.). 19.நெற்குவியல். நெற்கூடு கொட்டு நெல்லிராசி ஆம் (அபி.மாலை 389). 20.நெற்கூடு. கொல்லிமேல் கொட்டு வைத்தார் (பழமொழி.99). 21.சொரிகை. (செ.ப.அக.) 22.பனந் துண்டு. (நாட்.வ.) 23.தென்னம் கன்று நாற்றினைச் சுற்றியமைந்துள்ள வேலி. (இலங்.வ.) 24.தானியங்களின் கதிர்களை அறுவடை செய்த பின்னர் வரும் மீதி. (முன்.) 25. கொட்டகை. (யாழ்.அக.)

கொட்டு² பெ. மலடி. (முன்.)

கொட்டு³-தல் 5வி. 1.வாத்தியம் முழக்குதல். மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும் (ஐங்.371). பேய் (முழவம் கொட்ட) கொட்ட முழவம் (காரைக்.பதி.2,1). மத்தளங் கொட்ட (நாய்ச்சி.தி.6,6). ஊர்ந்தமா ... துடியன் துடி கொட்டும் பாணியிற் கொட்டும் குளம்பு (தகடூர்யா.37). கொட்டி முழக்கி அமுவார் (பட்டினத்தார்.பா.3,2-3). இயமென்பது கொட்டு வன ஊதுவன (தொல்.சொல். 46நச்.). வாத்தியம் முழக்குதல் சட்டாநவப்பறைகள் கொட்டா (திருப்பு.155). மத்தளம் கொட்டவும் ... பாவைகள் ஆடவும் செய்வித்தான் (திருநெல்.பு.உரை 21). குன்ற வாணர் பிணங்கிக் கொட்டும் (சங்கர.கோவை 153). மத்தளம் கொட்டித் தலையசைப்பார் (ஆசிய.ப.17). கொட்டுந் துடியும் குறித்தகிக் கொம்புகளும் (கூளப்ப. காதல் 64). தாளம் கொட்டித் திசைகள் அதிரவே ... நின்றாடுவோம் (பாரதி.பல்வகைப்.5,5). கொட்டுங்கள் மேளமெனக் குரலொன்று கேட்கும் (கண்ண.திரை.பா. 2,103). 2.கம்மியர் சம்மட்டியால் அடித்தல். கொட்டு வினைக் கொட்டிலும் (பெருங்.3,4,16). மாடுசென் றிசைப்பவும் மருங்குபம்பை கொட்டவும் (பெரியபு.10,72). 3.கைதட்டுதல். கொட்டினான்றோள் (கம்பரா.5,8,18). சந்தணி தடந்தோள் கொட்டியார்த் தெழுந்தான் (பாரதம். 2,1,22). கோயில் முளைப் பாட்டுரைத்துக் கொட்டி விளையாடியபின் (கண்.பள்.60). ஆண்ட வரைக் கண்டு... அடியைத்தாந்தொழுதற்கொட்டியசப்பாணியிதே (தித்தேரி.அம்.3 க.17). கைத்தலத்தைக் கொட்டிக் கலார் எனவே தான் நகைக்க (சீவே.சரி.276). துடி தங்கச்சி யையும் புயம் கொட்டும் உத்துங்கனே (தனிப்பா.தி.29 நாகூர்முத்து). துணைமரக் கரங்கள் கொட்ட (கமலா.அம். பிள்.58). மடக்கொடி கொட்டுக சப்பாணி (கோமதி.பிள். 39). வெள் அலைக் கைகளை கொட்டி முழக்கும் படல் (பாரதி.தோத்திரம்.3). கும்மி கொட்டிப் பாடுங்கடி (கண்ண. திரை.பா.2,464). 4.பூசுதல். பூங்கேழ்த் தேய்வை ... இளமுலைக் கொட்டி (முருகு.33,35). கொடியன குங்குமங்கொட்டப்பட்டன (சீவக.1483). பூ ஆர் குழலில் ... காசறை உள் கொட்டும் (கலைசைச்.வெண்.46). களபச் சேறு முகைத்தனம் புதையக் கொட்டி (சிவஞா. காஞ்சிப்பு.திருமண.49). விழுமிய சந்தனம் மெய்யெலாம் கொட்டுவார் (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண்.218). 5.பஞ்ச ரைத்தல். கொட்டிய பஞ்சுபோல் (இராமநா.2,3 தரு 3). 6.நெற்குத்துதல். கொட்டி வீழுமி குத்தல் போல் (பிரபு லீலை.சித்திரா.9). 7.அடித்தல். குன்றின் மேல் கொட்டுந் தறி போல் (நாலடி.257). முலையாழ் கெழும மொந்தை கொட்ட முன் கடை மாட்டயலே (தேவா.1,63,7). கொட்டாத செம்பொன் (பட்டினத்தார்.பா.மகடூஉ 99). துடி கொட்டின ரெங்குமே (அரிச்.பு.4,5). தொண்டர் யாவரும் குணமோ மிந்தனர் கொட்டிலார் (திருவாமாத்.பு.பூர்வ.6,19). குன்றிற் கொட்டுந் தறி (அபி.அந்.63). 8.சொரிதல். சோரி கொட்ட (திருமுரு.பிள்.பா.37). 9.பெய்தல். மாமழை கொட்டுக் கொட்டென்று கொட்ட அருள் செய்வாய் (தனிப்பா.தி.41). கொட்டும் மழை மின்னலென்ன (கண்ண.திரை.பா.2,20). 10.ஊற்றுதல். (ஆட்சி. அக.ப.264) 11.சிந்துதல். உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரங் கொட்டுதடி (பாரதி. கண்ணன் பா.8,7). 12.கூடை சாக்கு முதலியவற் றினின்றும் பண்டங்களைக் கவிழ்த்தல், கொட்டு தல். தோன்றி மவ்வலை மதுகொட்டி (முக்.பள்.44,4). வாய்ப் பேச்சைப் பிடுங்கிவ மாற்றெரிச் சலைக் கொட்டிக் கொள்கிறது (என்.பழ.தொ. 310). கூடையோ எழும்ப வில்லை கொட்டி னார்கள் சாணியெல்லாம் (இராமநாத. நாட்.அள.ப.377). 13.பொருள்களைக் கலத்தில் ஒரு சேர இடுதல். வெந்தது போதும் முன்றானையில் கொட்டு (என்.பழ. தொ.1287). 14.குவித்தல். மாசில் வணிகரும் ... பொற் காசு அறை உள் கொட்டும் (கலைசைச்.

வெண்.46). 15.தேள், குளவி முதலியன கொட்டுதல். கருங்குளவி கொட்டும் (அரிச்.பு.நகர்நீங்.41). தேள் கொட்டிட (அறப்பளீ.சத.27). தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க் குரங்கு (தாயுமா.பா.43,172). கதண்டுகள் கொட்டாதோ காவலரே யுங்களையும் (பவளக்.மாலை ப.28). 16.அணிதல். மான மதாணிகள் பல கொட்ட (அரும்பாத்தை.பிள்.4,7). 17.இமைத்தல். கண்ட கண்ணிமை கொட்டால் கரங் குவித்தது (வேதாளக்.25, 27). 18.பாடுதல். மயலிசை கொட்டுந யப்பனையே (இறைவாச.பு.249). 19.அதிகமாகக் கூறுதல். சொல்லைக் கொட்டிக் கொட்டி வர்ணனைகள் அளக்கும் (கண்ண. திரை.பா.2,217). 20.காலால் உதைத்துக் கொள்ளுதல். கிண்கிணிக் கால் கொட்டிய அவர் மீளாமை உன் செய்கை இதுவாகில் (பெரியபு.28,57). 21.முடித்தல். மூன்றளந் தொன்று கொட்டி யதனை ஐதுமண்டி லத்தாற் கூண்டப் போக்கி (சிலப்.3,15). 22.பதஞ்செய்தல். வைகலும்-கொட்டியுண்பாரும் குறடு போல் கைவிடுவர் (நாலடி.208). 23.கெடுத்தல். பல கிளையோடு கொட்டியே யுயிர் கொன்றனன் (இராவணகாவி.4,1,38). கொட்டும் வாலில் விசம் உண்டு தேளினுக்கு (மலரும்.727).

கொட்டு⁴-தல் 5வி. 1 ஆடுதல். ஆவலம் கொட்டும் (சிலேடை இலக்.ப.276). 2.விழுதல். குபுகுபு வென்று கொட்டிக் கொண்டு ... தண்ணீர் வந்தது (அவளும் அவனும் ப.21). 3.உதிர்தல். கொட்டிய சருகு (இளை. இலக்.12). மயிரெல்லாம் கொட்டிப் போயிற்று (நாட்.வ.). 4.அறைந்து கொள்ளுதல். கைகளான் முலைமேற் கொட்டி (கம்பரா.6,28,44). 5.பல்லி சொல்லுதல். கொட்டாய் பல்லிக் குட்டி (பெரியதி.10,10,4). 6.அதிர்தல். திமிலை கொட்டின (இறைவாச.பு.230).

கொட்டுக்கன்னார் பெ. 1.கொட்டுவேலை செய்யுங் கன்னார். (யாழ்.அக.) 2.செம்படிக்குங் கன்னார். (முன்.)

கொட்டுக்காரன் பெ. 1.மேளகார சாதி. (செ.ப.அக.) 2.மத்தள முதலிய வாசிப்பவன். (இலங்.வ.)

கொட்டுக்கிடாரம் பெ. பெரிய கொப்பரை. (வின்.அக.)

கொட்டுக்கிணறு பெ. 1.சங்களைக் கிணறு, பலகைக் கட்டுக்கிணறு. (யாழ்.அக.) 2.பனந்துண்டுகளை வைத்துக் கட்டிய கிணறு. (இலங்.வ.)

கொட்டுக்குடவை பெ. உடுக்கைபோல் வடிவமைந்த பாத்திரம். (செ.ப.அக.)

கொட்டுக்கூடை பெ. 1.கூடைபோன்ற வடிவுள்ள உலோகபாத்திரம். கொட்டுக் கூடை எண்ணெய்க் கிண்ணம் (தெய்வச்.விறலி.தூது 439). 2.காய்கறி போட்டு வைக்கும் மூங்கிற் கூடை கொட்டுக்கூடையில் பழம் போட்டு வை (கோவை வ.). 3.கிண்ண வடிவான கூடை. (வின்.அக.)

கொட்டுச்சீட்டு பெ. குலுக்கியெடுக்கும் சீட்டு. (நாட்.வ.)

கொட்டுச்செத்தல் (கொட்டைச் செத்தல்) பெ. அறக் காய்ந்த தேங்காய். (யாழ்.அக.)

கொட்டுச்செம்பு பெ. தகடடித்துச்செய்த தாமிரச் செம்பு. (வின்.அக.)

கொட்டுண்(ணு)-தல் 7வி. சிந்துதல். (முன்.)

கொட்டுத்தட்டு பெ. மிருதங்கத்தினுள் வலந்தரையின் நடுப்பாகம். (கலை மகள் 12.40).

கொட்டுத்தழும்பு பெ. கலைக்கொட்டினால் ஏற்படும் தழும்பு. என் கையில் கொட்டுத் தழும்பைக் காட்டிக் கிழியை அறுக்கலாமே (குரு.ஆரா.40).

கொட்டுப்பனை பெ. தறிபட்டபனையினடி. (யாழ்.அக.)

கொட்டுப்பிடி பெ. →கொட்டாப்புளி. கொட்டுப்பிடி போலுங் கூனும் (சீவக.2798).

கொட்டுப்பித்தளை பெ. கொட்டுவேலை செய்யும் பித்தளை. (யாழ்.அக.)

கொட்டுப்புரி பெ. சிறுதுடைப்பவகை. (செ.ப.அக. அனு).

கொட்டுமரம் பெ. ஆடையைச் சாயத்தில் தோய்த்து அடிக்குங் கட்டை. (வின்.அக.)

கொட்டுமண் பெ. எடுத்துக்கொண்டுவந்து இடும் மண். (செ.ப.அக.)

கொட்டுமண்வெட்டி பெ. பாதிக்கு மேல் தேய்ந்த மண்வெட்டி. (வட்.வ.)

கொட்டுமா பெ. யானை. (ஆசி.நி.96)

கொட்டுமுழக்கு பெ. 1.விசேடகாலங்களில் முழக்கப் படும் வாத்திய ஒலி. கொட்டு முழக்குனே குரவையிட்டு (கண்.பள்.59). 2.மேளதாளமுதலியவாச்சியம். (யாழ்.அக.)

கொட்டுமுறி பெ. உயர்ந்த பித்தளை வகை. (செ.ப. அக.)

கொட்டுமேளம் பெ. 1.நட்டுவமேளம். (யாழ்.அக.) 2.மேளவாத்தியம். (செ.ப.அக.)

கொட்டுரசம் பெ. பருப்பிடாத இரசம். (முன்.)

கொட்டுவாத்தியம் பெ. பறை முதலிய வாத்தியம். கொட்டுவாத்தியக் கொடைவந்து சேர்ந்தார் (தலைமுறை ப.59).

கொட்டுவாய் பெ. 1.தேள் முதலியவை கொட்டின இடம். (செ.ப.அக.) 2.நெருக்கடியான சமயம். கொட்டுவாயில் வந்து கேட்கிறான் (நாட்.வ.).

கொட்டுவான் பெ. 1.தேள். (செ.ப.அக.) 2.தேள் முதலியசெந்து. (யாழ்.அக.) 3.→கொட்டாப்புளி. (செ.ப.அக.) 4.→கொட்டுக்கன்னான். (முன்.)

கொட்டுவேலை பெ. 1.கொட்டிச் செய்தவேலை. (யாழ்.அக.) 2.கொட்டுக்கன்னார் வேலை. (வின்.அக.)

கொட்டுளு பெ. ஊமைச்சி. (செ.ப.அக.)

கொட்டுபி-த்தல் 11வி. செதுக்கு வித்தல். கொட்டுபித்த அ பளிஇய் மங்குளம் (தா'ழ்ப்பிராமி-கி.மு.2-1).

கொட்டை பெ. 1.விதை. காட்டை செப்பில் விதையாகும் (உரி.நி.96). 2.அண்டம். (செ.ப.அக.) 3.தாமரைக் கொட்டை. தாமரை மைஉதபு கிளர் கொட்டை (கலித்.74,3-4). சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை (சிறுபாண்.75). பொறி வரிக் கொட்டை (பரிபா.5,70). தாமரை வள்ளிதழ் பொதிந்த கொட்டை போல (பெருங்.1,38,258). கொடி குவளை கொட்டை நுசுப்புண் கண்மேனி (தொல்.சொல்.405 நச்.). வெள்ளை யேலம் கொட்டைக் கரு நீலி (திருவிடை.நா. ப.29). 4.பலா பூசணிகளின் பிஞ்சு. (வட்.வ.) 5.உருண்டை வடிவம். மணிபுனை செம்பொற் கொட்டை வம்பணி முத்த மாலை (சீவக.113). கொட்டை யெழுத்து (செ.ப.அக.). 6.மகளிர்தலையணி. கொட்டையம் பூரோசை தானிரு வடங் கொண்டுடன் கட்டினான் (சீவக.1835). 7.ஆடைத்தும்பினைத் திரளமுடிந்த முடிச்சு. கொட்டைக் கரைய பட்டுடை நல்கி (பொருந.155). ஆரம்பல பூண்டு ஆபரணம் மேலணிந்து பட்டுடுத்துக் கொட்டைக்கட்டிப் பாரவடி வாளெடுத்து (காஞ்சி.அம்.ப.4). 8.சிற்றணை. கால் கைக்குக் கொட்டை இட்டு (பட்டினத்தார்.பா.அ.அன்னை.32,3). 9.தலையணை. மண்கூடை வேணித் திருமுடிக் கோட்டையாக (திருவாத.பு.5,42). 10.சிறு தலையணை. பஞ்சின் நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பி (திருவிடைம.மும்.கோவை 19). 11.திண்டு. (தலையணை போல் பெரிதாக உருண்டு திரண்டது) நெட்டணை அருகாக் கொட்டைகள் பரப்பி (பட்டினத்தார்.பா.மும். கோவை 19,42). 12.கடுக்கன். குஞ்சி திருத்தி முகந் துடைத்துக் கொட்டை அரைநாண் துகள் நீக்கி (பெரியபு. 36,60). (பிங்.1174). 13.குமிழ். யெரிமணிக் கொட்டை நெற்றி வாய்ந்தபொன் குயிற்றிச் செய்த மரவடி (சீவக.1300). பவழக் கொட்டைப் பல்வினை நுனித்த திகழணிச் செருப்பு. (பெருங்.2,4,110-111) 14.பாத குறட்டின் குமிழ். பவழக் கொட்டைப் பொற்செருப் பேற்றி (பெருங்.3,22,202). 15.மிதியடிக் குமிழ். (இலக்.சொ.அக.) 16.காதுவளர்க்குந் திரி. (நாட்.வ.) 17.யானையின் அணிவகை. பட்டம் அடுத்த கொட்டையொடு பாறவும் (பெருங்.3,27,75). 18.கிடுகு தாங்குங்கால், முதலியவற்றின் தலைப்பகுதி. மணி புனை செம்பொற் கொட்டை (சீவக.113). 19.நூற்குங் கதிரின் கொட்டை. (செ.ப.அக.) 20.பஞ்சுச்சுருள். கொட்டைத் தலைப்பால் கொடுத்து (பெரியாழ்.தி.3,5,1). 21.பருத்தி. தினமும் கொட்டை நூற்றுச் செல்வங் கூடுநரும் (நீதிபோத.வெண்.18). 22.சும்மாடு. (வின். அக.) 23.ஆண் குறியின் இருபக்கமும் தொங்கும் சிறுமுட்டைபோன்ற உறுப்பு. (வட்.வ.) 24.→கொட்டை யிலந்தை. (செ.ப.அக.) 25.ஆமணக்கு. (முன்.) 26.→கொட்டைக் கரந்தை. (மலை அக.) 27.பருப்பு. (கலைச்.அக.2 ப.108)

கொட்டைக்கச்சி பெ.→கொட்டங்காய்ச்சி. (இலங்.வ.)

கொட்டைக்கட்டு-தல் 5வி. உருட்டிக்கட்டுதல். அவையவங்கள் எல்லாவற்றையும் கூட்டிக் கொட்டைக் கட்டாகக் கட்டி (சிவதர்ம.சுவர்க்க.155 உரை).

கொட்டைக்கரந்தை பெ. விட்டுணுக்கரந்தை. (செ.ப. அக.)

கொட்டைக்கவரி பெ. குதிரையின் நெற்றியுச்சியிற் கட்டும் குமிழையுடைய கவரி. பைங்கதிர்க் கொட்டைக் கவரிசூழ்ந் தணிந்த பகரினத் தொகையன பாய்மா (சீவக.2157).

கொட்டைக்காய் பெ. 1.விதை பெருத்தேனும் நிறைந் தேனும் உள்ள காய். (செ.ப.அக.) 2.தசையற்றகாய். (யாழ்.அக.)

கொட்டைக்காய்ச்சி பெ. சதைப்பற்று அதிகமின்றிக் கொட்டை பருத்துள்ள காய் காய்க்கும் மாமரம். (நாட்.வ.)

கொட்டைக்கையில் பெ.→கொட்டங்காய்ச்சி. (இலங்.வ.)

கொட்டைகட்டு-தல் 5வி. 1.இலுப்பைக்காய் வைத்துச் சூதாடுதல். (வின்.அக.) 2.நாய்ப்புலி விளையாட்டில் புலியைக் கட்டுதல். (த.நா.விளை.ப.273).

கொட்டைச்செத்தல் (கொட்டுச்செத்தல்) பெ. →கொட்டைத் தேங்காய். (இலங்.வ.)

கொட்டைசெத்தவன் பெ. (அண்டத்தில் வீரியமற்றவன்) கையாலாகாதவன். (நாட்.வ.)

கொட்டைத்தணக்கு பெ. தணக்குவகை. (செ.ப.அக.)

கொட்டைத் தேங்காய் பெ. கொப்பரைத் தேங்காய். (இலங்.வ.)

கொட்டைதாழ்த்து-தல் 5வி. பழக்கொட்டையைப் பூமியில் விதைத்தல். (வின்.அக.)

கொட்டைநாகம் பெ. நாவல்மரவகை. (செ.ப.அக.)

கொட்டைநாவல் பெ. →கொட்டை நாகம். (முன்.)

கொட்டைநூல்-தல் (கொட்டைநூற்றல்) 10வி. 1. பஞ்சு நூற்றல். கப்பலோடிப் பட்டகடன் கொட்டைநூற்றுத் தீருமோ (செ.ப.அக.). 2.பயனற்ற வேலை செய்தல். (முன்.) 3.வீண்காலம் போக்குதல். (முன்.) 4.கொஞ்சங் கொஞ்சமாய்க்கவர்தல். (யாழ்.அக.)

கொட்டைப்பயறு பெ. மணற்பாங்கான நிலத்தில் புரட்டாசியில் விதைத்து நான்கு மாதங்களில் விளையும் பயறுவகை. (வேளாண்.வ.)

கொட்டைப்பாக்கன் பெ. மாட்டுவகை. படப்புப் பிடுங்கி கொட்டைப்பாக்கன் (முக்.பள்.109,5).

கொட்டைப்பாக்கு பெ. வேகவைக்காமல் உணக்கிய முழுப்பாக்கு. கொட்டைப்பாக்கென்றுரைக்கிற் கோழை மலம்போம் (பதார்த்த.1437). கொட்டைப் பாக்கு ஆயிரம் பொன்னாய்ப் பாவியாய் (மூவரை.தூது 140). கொட்டைப் பாக்குப் புழு (திருவிடை.நா.ப.31,10). சிறுகடுகு மேல வேதான் ஒரு சிவந்த கொட்டைப்பாக்கு வைத்தான் (தமிழ்வில்.பா.ப.116).

கொட்டைப்பாக்குத்தலைப்பா பெ. குஞ்சுத்தலைப்பா. (யாழ்.அக.)

கொட்டைப்பாசி பெ. நீர்ப்பாசிவகை. கொட்டைப் பாசியின் வேரையொத்த சிதரின சீரையை (பெரும் பாண்.468 உரை).

கொட்டைப்புளி பெ. விதையெடுக்காத புளி. (யாழ்.அக.)

கொட்டைப்பெட்டி பெ. 1.பனைநாராற் செய்த சிறுபெட்டி வகை. (செ.ப.அக.) 2.மடிப்பெட்டி. (யாழ்.அக.) 3.தாம்பூலப்பெட்டி. (வின்.அக.) 4.நெசவுக்குரிய பஞ்சுசுருள் வைக்கும் பெட்டி. (செ.ப்.அக.)

கொட்டைபரப்பு-தல் 5வி. (கொட்டை முத்து விதைத்தல்) பகைவரது நாட்டை அழித்துத் தரைமட்டமாக்குதல். திரிபுரஞ் சுட்டுக் கொட்டை பரப்புங் குரிசில் (திருப்பு.1084,3).

கொட்டைபற்று-தல் 5வி. பிஞ்சுகளுக்குட் கொட்டை பிடித்தல். (யாழ்.அக.)

கொட்டைபோடு-தல் 6வி. 1.விதை விதைத்தல். (செ.ப.அக.) 2.பலாமரம் முதலியன பிஞ்சுவிடுதல். (முன்.) 3.தொழில் முதலியவற்றில் பழக்கப்படுதல். (முன்.) 4.இறத்தல். (நாட்.வ.)

கொட்டைமுத்து பெ. சிற்றாமணக்கு விதை. (மலை அக.)

கொட்டைமுதல் பெ. 1.கைமுதல். (யாழ்.அக.) 2.விதை முதல். (முன்.)

கொட்டைமுந்திரி பெ. முந்திரிமரம். (பதார்த்த.742)

கொட்டைமுந்திரிகை பெ. →கொட்டை முந்திரி. (வின்.அக.)

கொட்டையாசாசி பெ. ஒருவகைக் கொடி. (செ.ப. அக.)

கொட்டையாடு-தல் 5வி. →கொட்டையிடு-தல்-2. (யாழ்.அக.)

கொட்டையிடு-தல் 6வி. 1.கொட்டைபோடு-தல்-1,2. (செ.ப.அக.) 2.பஞ்சுச் சுருள் செய்தல். (வின்.அக.)

கொட்டையிலந்தை பெ. சதைப்பகுதி குறைவாக உள்ள பழங்களைத் தரும் இலந்தை மரம். (சென். இரா.சொற்பட்டி.ப.66)

கொட்டையிலை பெ. →கொட்டைக்கரந்தை. (சங். அக.)

கொட்டையூர் பெ. கும்பகோணத்திற்கருகில் காவிரி யாற்றின் வடபால், தேவாரப்பாடல் பெற்ற கோடீச்சுரம் என்னும் ஊர். கொட்டையூர் ஈசனையே கூறு (ஐயடி.சேத்தி.25). குடந்தை கொட்டையூர் திருவையாறு (சரபேந்திர.குற.நூன்.ப.281). கொட்டை யூருட்கிளருங் கோமளமே (திருவருட்பா 1962,45).

கொட்டையெடு-த்தல் 11வி. பஞ்சிலிருந்து கொட் டையை நீக்குதல். (தொ.வ.)

கொட்டைவாழை பெ. கொட்டை மிகுந்திருத்தலால் உண்ண உதவாத கனியுடைய வாழைவகை. (செ.ப. அக.)

கொட்படி-த்தல் 11வி. (குதிரை திருப்பும் அது உடனே திரும்பப் பழகுதற்குக் கழுத்திற்குக் கழுத்திற்கயிறு கட்டிச் சாட்டை கொண்டு) சுற்றிசுற்றி அடித்தல். (தனிப்பா.திர. 16 காளமே.உரை)

கொட்பாட்டன் பெ. → கொள்ளுப்பாட்டன். (செ.ப.அக.)

கொட்பு[1] பெ. 1.வேகம். கொட்பொடு அவ்வீதி குறுகுதலும் (தென்பு.மணி.உலா 292). 2.சுழற்சி. கோடு புலம் கொட்பக் கடல் எழுந்து முழங்க ... கலம் உகைக்கும் (ஐங்.192). விளரிக் கொட்பின் வெள்நரி கடிகுவன் (புறநா.291,4). பாற்கதிர்த் திங்கட் கொட்பிற் பருமித்த களிறு போல (சீவக.2826). கொட்புஉறு நெஞ்சினத்திட் பங் கொளீஇ (பெருங்.4,13,142). கொட்புறு கலினப் பாய்மா (கம்பரா.1,10,13). விதியின் கொட்பால் ... சூதின் மேல் மனம் வைத்தானே (சிவராத்.பு.8,9). கொட்பமை யிந்திய மற்றவர் (திருக்குடந்.பு.45,1). 3.திரிபு. குப்பாச ... கொட்படைந்த (கந்தரலங்.14,1). 4.மனச் சுழற்சி. கலகலெனுங் கொட்புற்றுடன் (திருப்பு.968). கள்ளி னைக் கொட்பொடு களிக்கும் நெஞ்சினார் (கந்தபு.2, 40,18). 5.சுற்றித்திரிகை. கொட்பின் அல்லது கொடுத்தல் ஈயாது (சிலப்.5,116). எங்கணுங் கொட்புறீஇ ... கயிலைக் கிரி மேவினர் (சிவஞா.காஞ்சிப்பு.அந்த.4). 6.நிலை யின்மை. குப்பாச ... கொட்படைந்த (கந்தரலங்.14,1). 7.வேறுபாடு. நட்பிற்கு ... கொட்பின்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை (குறள்.789). 8.வளைவு. கொட்புற நெரித்த புருவச் சிலை குனித்தே .... களித்தான் (சிவராத். பு.3,82). 9.செலவு. கழிப்பு வாய் மண்டிலங் கொட்டி (இன்.நாற்.34). 10.வசம். ஈட்டு வல்வினையின் கொட்பால் ... யாக்கை (சிவராத்.பு.3,70). 11.சரராசி. கொட்புதய மாகின் (சினேந்.385). 12.கொள்கை. (இலக்.சொ.அக.)

கொட்பு[2] பெ. கொடுந்தன்மை. விதியின் கொட்பால் வீடினன் (கம்பரா.5,4,81).

கொட்பு[3] பெ. கருத்து. கூட வைக்கும் கொட்பின ளாகி (மணிமே.21,77).

கொட்புறு-தல் 6வி. சுழல்தல். பைங்கழல் வரிந்த வன்கண் எல்லையில் படைஞர் கொட்புற் றெழுந்தனர் எங்கும் எங்கும் (பெரிய.பு.8,30). முட்புறக் கனிகள் தாக்கக் கொட்புறும் (திருவாரூர் நான்.மாலை 40).

கொட்புற் றமராடு மிக்கொள்கையர் தம்மில் (திருவிளை.பு.5,36). கட்புலன் தெரியாது கொட்புறும் ஒருவற்கு (பட்டினத்தார்.ப¯.கழுமல.10,24). முதுகூகை கொட்புற்றெழ (திருப்பு.6). சந்திர சூரியர் ... தத்தம் முறை வழுவாது கொட்புறுதலானும் (பேரூ.சங்.பஞ்சதி.17). வான் பள்ளிக் கொட்புற்றெழு பளிக்கு மேகங்கள் (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய்.102). மாதர்களித்திடவே கொண்டாடியே தோழியர் கொட்புறவே (இராவண காவி.2,3,59). செயலற்றனர் பகைவர் ... பற்கட்டறக் கொட்புற்றனர் (வங்கத்துப்.8,175).

கொட்பூ பெ. பூவடிவில் திருகாணியோடு செய்யப்படும் காதணி. (கல்.கலைச்.அக.ப.156).

கொட்பேரன் பெ. →கொள்ளுப் பேரன். பிரம தேவனுக்குக் கொட்பேரன் (இராமநா.3,19).

கொடக்கல் பெ. மாவறைக்கும்கல், ஆட்டுக்கல். (வட்.வ.)

கொடக்கூலி பெ. வீட்டுவாடகை. (வட.கி.மொழி.கிளை. மொழியி.ப.153)

கொடகம் பெ. நஞ்சறுப்பான். (செ.ப.அக.)

கொடகுத்துவா பெ. →கோடக்குத்துவா. (முன்.)

கொடரி பெ. எழுத்தாணிப்பூடு. (சித்.பரி.அக.ப.85)

கொடவர் பெ. கோயிற்கொத்துக்களுள் ஒரு பகுதியார். கொடவர் கொடுவாளெடுப்பார் (கோயிலொ.44).

கொடாக்கண்டன் பெ. சிறிதும் ஈயாத உலோபி. உம்மைக் கொடா அதவரென்பர் குண்டு நீர் வையத்து அடாஅ அடுப்பி னவர் (நாலடி.94).பொருளற்றார்க்கு யாதானும் ஒன்றைக் கொடாதவனுடைய செல்வம் (குறள்.1004 மணக்.).

கொடாப்பு பெ. 1.வாழைக்காயைப் பழுக்க வைக்கு மிடம், புழுக்கறை. (நாட்.வ.) 2.பெட்டி. (முன்.)

கொடாரி பெ. →கோடாலி. கிளையைச் சாடுங் கொடாரி யின் காம்பு போன்றாய் (பிரபோத.2,28).

கொடாலகல் பெ. வெந்தோன்றி. (சித்.பரி.அக.ப.85)

கொடி பெ. 1.படரும் தன்மை வாய்ந்த தாவரம். கொழுங் கொடி அவரை பூக்கும் (குறுந்.82). அ ரி ம ா கொடிப்புல் கறிக்குமோ மற்று (நாலடி.141). நுடங்கு கொடி மருங்கின் (பெருங்.1,41,80). வாசமலர்க் கொடியில் ஊசலாடுதும் (இறை.அகப்.32,3 உரை). கொடியிடை பொருள் தருபடுகளி றினதுரி புதையுட லினன் (தேவா.1,19,4). சாராது பேர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியதாம் (காரைக்.அந்.82). கனக மென் கொடி யூசல் ... மறந்திட்டாள் (பாரதம்.1,2,27). தருக்களுங் கொடியும் பலநிறைந்திடு புதற்களும் (சானந்த.பு.1,23). பைங்கொடி சேர் செம்பயிரை நாடி (தாயுமா.பா.44,4). பசுங்கொடி படரில் பரமன்கோயில் (புதுமை வே.11, 205). 2.சித்திரமூலம். (மூலி.அக.) 3.ஆடையுலர்த்தும் கொடி. கொடியெலாம் உடைகளில்லை (இராவண காவி.5,16,18). சட்டையைக் கழற்றி உதறி கொடியில் போட்டு விட்டு (மழைக்கஞ்சி ப.80) 4.கொப்பூழ்க் கொடி.கருக்கொடி ஒழிக்கும் பொன்னி (சீகாழித்.பு. புராண.38). 5.மகளிர் கழுத்தணி வகை. மென்றோட் கொடியென நடுங்கும் (பெருங்.1,41,71). 6.அரைஞாண். (சாச.அக.) 7.ஏற்றத்தின் கோல் அல்லது கயிறு. (வின்.அக.) 8.கண்வரி முதலியன. (முன்.) 9.ஒழுங்கு. கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும் (மதுரைக்.391). விடும்கொடி வில்லிரவு (சிலப்.20,6). பெயன்ம ழைப்பிற முங்கொடி (சீவக.1310). குளிர்முதற் கலவையிற் கொடிபெறச் குலாஅய் (பெருங்.2,18,11). மற்றொர்நா ளமரிகைக் கொடிகொண்மாமணிச் சுற்றுவான் சுடரொளி தழுவி (சூளா.85). புகைக்கொடி உளுண்டெள்றே பொற்பு நல் ஒளிவிளக்கை இகழ்ச்சியின் நீப்பார் இல்லை (நாக.காவி.3). 10.நீளம். பழன வெதிரின் கொடிப் பிணையலளே (ஐங்.91). எழுதி யன்ன கொடிபடு வெருகின் (அகநா.297). மதியின்னொடுசேர் கொடி மாடம் மதியம் பயில்கின் றவையாறே (தேவா.1,36,2). 11.நீட்சி. ஒழுகுபொற் கொடிமூக்கும் முருப்பசியை யுருக்குமே (சீவக.165). கொடிப்பசுந் துளவ நாறு கோகுலம் (செ.பாகவத.10,1,95). 12.ஏரியிலிருந்து வழியும் நீரைக் கொண்டு செல்லும் வாய்க்கால். (செ.ப.அக.) 13.கிளைவாய்க்கால். விறற் பெருங்கொடி யுயர்த்தி வான் கோடையை வென்று (பாத்மோ.பு.3,24). 14.துவசம், துகிற்கொடி. ஏந்து கொடி இறைப்புரிசை (புறநா.17,27). மதிற் சிகர நுதி மாளிகை மேல நுடங்கு கொடி (சூளா.812). கொடியெழுந் தலமருங் கோயில் வாயில்கள் (சீவக.2406). கொடி வாரணங் காண் (திருக்கோவை 285). படையழகு என்றது ... கொடியும் குடையும் முரசும் காகனமும் முதலாயின வற்றால் அழி பெறுதல் (குறள்.767 மணக்.). பணைக் குலமிரைக்கவுங் கொடி நிரைக்கவும் (பாரதம்.2,1,54). துவசம் கொடி யாடிற்று (தொல்.சொல்.114 நச்.). கொடிமேற் பறக்கக் கண்டோம் (திருவிடை.கலம்.42). சிங்க நெடுங்கொடி நிழற்றுக் திருக்காவலூர் (திருக்காவ.கலம்.1). சன்மார்க்க வெண் கொடி சேர்வோம் (புதுமைவே.1,1). 15.கயிறில் கட்டி உயரப்பறக்கவிடும் துணி. (ஆட்சி.அக.ப.125) 16.1.தேரில் கட்டப்படும் அடையாளக் கொடி. தேரில் கட்டிய கொடிகள் கொடி அறுபு இறுபு (பரிபா.2,38). கொடித்தேர் அரக்கன் (சேர.அந்.15). வேந்தர் படைத் திரளும் அத்தியுடன் தேர்புரவி ஆடும் கொடி முரசும் (சீவே.சரி.78). 16.2.வெற்றிக் கொடி. கொடியெடுத் தவர்க்கு நல்கு (சீவக.291). 17.காலத்துவசம் என்னும் யோகம். பிரமதண்டங் கொடியென்று பொல்லா யோகங்கள் (விதான.குணாகுண.34) 18.1.கேது.

(பிங்.3430) 18.2.கீழ்க்குதிசை. பொய் தீர் உலகம் மெடுத்த கொடிமிசை (கலித்.141,11). 19.காக்கை. நல சேட்டைக் குலக்கொடியே (திருக்கோவை 235). மேற்கிருந்த கொடி ஞாயிற்றின் மேல் செல்லவே கொடி வலமாம் (சீவக.1252 உரை). படர்சிறை சுலவு கருங்கொடி படர்வன சுழல்வன (பெரியபு.9,23). இப்பதி உவகைக் கொடியே வரக் கரை நீ (தஞ்.கோவை 334). கானுலா வியகொடியுங் கழுகுமிடைந்தன (கந்தபு.6, 16,1). கொடி அருந்தும் படியே தருவன் (கப்.கோவை 309). கொடியினங் கருங்குயில் களைத்துரப்பன குறியாய் (அரிச்.பு.1,263). குறி யாணனகாத்தவனைப் பாடினேன் கொடி கூப்பிடினும் குறியா நயப்பவர் போல் (திருவர.அந்.97,3). புன்னை தொறும் பொதுளுங் கருங்கொடி (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.141). ஓம்பு கொடி வாதிற் கரிக்குடுவி (தமிழ்.விடு.தூது 226). 20.அவிட்டம். (சங்.அக) 21.கொடியடுப்பு. கொடி யெரிகிறதா (நாட்.வ.). 22.காற்றாடி (செ.ப.அக.) 23.உச்சம். (யாழ்.அக.) 24.மின்னல். கொடியிடை மாதர்கண் மைந்தரோடும் (தேவா.1,8,9). 25.கொடி ரேகை. துவசரேகை கொடியொடு தாமரைக் குளிசி ரேகை (செ.பாகவத.257). 26.கணவன் மணந்த பிறகு அடையாளமாக மனைவியின் கழுத்தில் கட்டும் அடையாள உரு. (மலா.வ.கி.மொழி.87) 27.எழுது கொடி. கொடிசேராத் திருக்கோவை காழ் கௌ (பரிபா. 615) கொடியணி யலங்கன் மார்பில் (சீவக.2900). 28.முருகன் கூத்து. அருமறைச் சிரத்திற் கொடிபுரி திருத்தாள் (குன்றக்.முருக கலம்.99). 29.கபோலம். (கூயா.நி.139) 30.வெற்றிலை. (தொ.வ.) 31.1.வல்லி. வல்லியும் கேதுவும் படமும் கொடியெனல் (பிங்.3431). 31.2.தார் (மாலை). கொன்றை கொடியிணர் ஊழ்ப்ப (பரிபா.8,24). 32.வழி. பொன்னிக் கரைக்கொடி யடைந்து (சீகாழித்.பு.புராண.38). எத்திக்கும் காட்டும் கொடியோ (சிவகாமி.அந்.83) 33.தொடர். சோலைப் படு மருவிக்கொடி தூதாகவே (இராவணகாவி.2,2,39). மலை ... பரி கொடி மாலையானை தொழில் இவை பத்தும் தசாங்கம் (அறு.இலக்.67அணி). பனைமுன் கொடிவரின் மிகுமென மொழி (முத்துவீ.289). 34.கொடிக்கவி, தில்லையிலுள்ள கோயிலிற் கொடி யேறும்படி உமாபதி சிவாசாரியரால் இயற்றப் பட்டதும் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றுமான சைவ சமய நூல். அருட் பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவீடு (பெருந்.2044). 35.பெண். கல்லைக் கொடியாக்கி கானில் அட்சபாத முனி இல்லம் (தென்பு.மணி.உலா 207). 36.தீக் கொழுந்து. கொடி விடு சுவர் ஏரி (அகநா.475). காடி விடு குரூஉப் புகை (பதிற்றுப்.15,6). அறவோர் மருங்கில் அழல் கொடி விடாது (சிலப்.22,113). 37.முதுகுத் தண்டின் ஊடே கீழிருந்து மேல் வரை செல்லும் சித்ரணி என்னும் நாடி. கொடியாறு சென்று குலாவிய குண்டம் (திருமந்.1040). 38.எண்ணுப்பெயர். ஆடக மாயிர கோடியு மல்லது (சூளா.663). 39.வாசனை. தூமழை வளர் கொடி துவன்றி (சூளா.1898).

கொடிக்கடமை பெ. கொடிவேலி என்றும் சித்திர மூலம் என்றும் வழங்கப் பெறும் மருந்துச் சரக்கைப் பயிரிடுவதற்கான வரி வகை. (சாச.அக.)

கொடிக்கடலை பெ. மண்ணுக்குள் கொடிபோல வேரோடிக் காய்க்கின்ற பழைய பெரிய வேர்க் கடலை. (தொ.வ.)

கொடிக்கத்தரி பெ. கத்திரிவகை. (சித். அக.)

கொடிக்கப்பல் பெ. கொடிகட்டிய சிறுமரக்கலம். (செ.ப.அக.)

கொடிக்கம்பம் பெ. 1.கோயில்களின் முன்புறம் உள்ள கொடியேற்று மண்டபம். சேதுபதி செய்த கொடிக்கம்பம் (கண்.பள்.45). குண்டை யண்மிய வேய் கோயில் கொடிக்கம்ப திகராங் (திருக்கழுக்.சி.வெண்.2). 2.கோயில்களின் முன்புறம் கொடியேற்றுவதற் காக நடும்மரம். திருக்கொடிக் கம்பத்திலே (கோயிலொ. 73). மேதினியோர் துதிக்கும் கொடிக்கம்ப மண்டபம் ஒன்று துலங்கச் செய்தான் (திருவால.திரப்பணி.52). தக்ககலை தெரியறன்னால் வியாசரை யொப்புக் கொடிக்கம்பஞ் சேர்புலியூர் (திருப்புலி.வெண்.89). 3.கொடி பறக்கவிடப்படும் கம்பம். (ஆட்சி.அக. ப.125)

கொடிக்கயிறு பெ. 1.கட்சிக்கொடிகள் ஏற்றப்பயன் படும் கயிறு. (நாட்.வ.) 2.கொடியாகக் கட்டுங் கயிறு. (முன்.) 3.முறுக்கேறின கயிறு. கொடிக் கயிற்றொடுங் கொணர்ந்தனர் (ஞான.உபதேசகா.சிவநாம.155).

கொடிக்கருக்கு பெ. (சிற்.) பட்டிகை போன்ற நெட்டோடிய இடங்களிலும் தூண்களிலும் வாயில் நிலைகளிலும் கொடியும் இலையும் சேர்ந்த தொடர்க்கருக் கணிகள். (சிற்.செந்.ப.115)

கொடிக்கருணை பெ. கருணைவகை. (நாட்.வ.)

கொடிக்கரும்பு பெ. நேராக வளர்த்த கரும்பு. கொடிக் கரும் புடுத்த வேலி (சீவக.1184).

கொடிக்கவி பெ. தில்லையிலுள்ள கோயிலிற் கொடி யேறும்படி உமாபதி சிவாசாரியரால் இயற்றப் பெற்றதும் மெய் கண்டசாத்திரம் பதினான்கனுள் ஒன்றுமான சைவ சமய நூல். (செ.ப.அக.)

கொடிக்கழல் பெ. கழற்சிக்கொடி. ஆலம் ... கொடிக் கழல் (திருவ.16,1).

கொடிக்கழற்சி பெ. → கொடிக்கழல். (யாழ்.அக.)

கொடிக்கள்ளி பெ. 1.கள்ளி வகை. கொடிக்கள்ளிப்

பாலுக்குக் கூறு (பதார்த்த.124). 2.கொடிவகை. (செ.ப.அக.)

கொடிக்காக்கட்டான் பெ. ச க்கு ான் வகை. (முன்.)

கொடிக்காய் பெ. மணிலாக் கொட்டை, வேர்க்கடலை. (சே.வ.)

கொடிக்காரன் பெ. வயலில் வெற்றிலைக்கொடி நடுபவன். (தொ.வ.)

கொடிக்கால் பெ. 1.திராட்சை, வெற்றிலைக் கொடிகள் படரும் கொம்பு. குத்தும் முள்ளில் கொடிக்கால் திராட்சையா (இயேசுகா.ப.110). ஆத்துக்குள்ளே கொடிக்காலாம் அரும்பு அரும்பா வெத்திலையாம் (திருநெல்.நாட்டுப்.தெம்மாங்குப்.27). 2.வெற்றிலை. (மலை அக.) 3.வெற்றிலைத் தோட்டம். ஓடை கொடிக்கால் புறவும் ... தரளராசி சந்திரோதயம் காட்டும் (கண்.பள்.36). கொடிக்கால் முருக்கம் பூவு நிகராகுமோ (கறுப்பண்ண.சத.38). ஆத்தோரம் கொடிக்காலாம் அரும்பரும்பா வெத்திலையாம் (தமி.நா.பா.ப.193). 4.காய்கறித் தோட்டம். (செ.ப.அக.) 5.கொடிக் கம்பம். கோயிலின்முனுற்ற கொடிக்காலை (தனிப்பா. திர.361,98). 6.கையாந்தகரை. (யாழ்.அக.)

கொடிக்கால்மூலை பெ. ஊரின் வடமேற்கு மூலை. கொடிக்கால் மூலையில் மின்னுகிறது (நாட்.வ.).

கொடிக்கால்வேளாளன் பெ. கொடிக்காற்பயிர் செய்யும் வேளாள வகையினன். (செ.ப.அக.)

கொடிக்குறிஞ்சா பெ. நஞ்சறுப்பான். (பதார்த்த.568)

கொடிக்குறிபார்த்தல் பெ. (அகப்.) உடன் போக்கு சென்ற தலைவி எவ்விடம் சென்றாள் என நற்றாய் தெய்வத்திடம் குறிபார்த்தல். (முத்துவீ.850)

கொடிக்கூடை பெ. நாணற் கூடை. (வின்.அக.)

கொடிக்கையான் பெ. கையாந்தகரை வகை. (முன்.)

கொடிக்கொத்தான் பெ. முடக்கொத்தான். (சித்.பரி. அக.ப.85)

கொடிகட்டிநில்-தல் 3வி. 1.→கொடிகட்டு-தல்-2,3. (செ.ப.அக.) 2.நோயாளி முதலியோர் கயிற்றைப் பிடித்துக் கொண்டு நிற்றல். (இலங்.வ.) 3.உறுதிப் பாட்டுடன் முயற்சியை மேற்கொள்ளுதல். (நாட்.வ.) 4.அவசரப்படுதல். (யாழ்.அக.)

கொடிகட்டிப்பற-த்தல் 12 வி. புகழோங்குதல். அவரது ஆட்சியில் பாண்டியர் பெருமை கொடிகட்டிப் பறந்து உச்சநிலையில் இருந்தது (வரலாறு.10.ப.83).

கொடிகட்டிவாழ்-தல் 4 வி. மிகுந்த செல்வவாழ்க்கை யில் இருத்தல். (நாட்.வ.)

கொடிகட்டு-தல் 5வி. 1.→கொடியேற்று-தல். (செ.ப. அக.) 2.போருக்கு வருதல். (முன்.) 3.→கொடி யெடு-த்தல். (முன்.) 4.இயலாதொன்றை விடாமல் முயன்றுநிற்றல். (யாழ்.அக.)

கொடிச்சண்பகம் பெ. →கொடிச்சம்பங்கி. (வின்.அக.)

கொடிச்சம்பங்கி பெ. கொடிவகை. (செ.ப.அக.)

கொடிச்சி[1] பெ. 1.குறப்பெண், குறிஞ்சிநிலத்துப் பெண். அணி மயில் அன்ன அசை நடைக் கொடிச்சி (ஐங்.258). தலைமகள் பெயர்-கொடிச்சி, குறத்தி (இறை.அகப்.20,6 உரை). வள்ளி என்னும் கூந்தல் கொடிச்சி (இளம்.மும். கோவை 48). இளைய கொடிச்சிக்கும்பாக சாதனன் (திருப்பு.843). கொடிச்சிதன் றிற்மினி யறைவாம் (சிவராத்.பு.4,31). கொடிச்சியர் கண்போல் ... தழ்குவிந்து அலர (அழகர்.கலம்.5,2,12). கொடிச்சினி யார்பொருட் டிங்கே (சங்கர.கோவை 242). நுண்மருங்குறு கொடிச் சியரும் (சொர்ண.பிள்.9,3). குறத்தி கொடிச்சி குறவர் (இலக்.வி.388). குறத்தி கொடிச்சி (முத்துவீ.802). 2.கொடிபோன்றவள். மின்றி ருந்தினக் கொடிச்சி ... அணைந்தான் (சிவராத்.பு.4,6). 3.→கொடுவேலி. (மலை அக.) 4.காவட்டம் புல். (முன்.)

கொடிச்சி[2] பெ.கொடிறு, கன்னம். (ஆசி.நி.90)

கொடிச்சி[3] பெ. புற்றாஞ்சோறு. (யாழ்.அக.)

கொடிச்சிங்கேரி பெ. கருடக்கொடி. (சித்.அக.)

கொடிச்சித்தாமரை பெ. நீலத்தாமரை (சித்.அக.)

கொடிச்சியர் பெ. குறிஞ்சி நில மகளிர். கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல் (கலித்.40,11). கொடிச்சியர் புனத்தயற் குறிஞ்சி (கூளா.33). குன்றவர் வரிகொண் டாடக் கொடிச்சியர் துணங்கை யாட (பெரியபு.10,39). பிறைதவழ் சாரல் கொடிச்சியர் விசும்பில் (கருவூர்ப்பு. 1,28). கொடிச்சியரேம் காக்கும் புனமருங் கேதனி யேவரக் கண்டிலேம் (தஞ்.கோவை 78). குருவி வீழ்ந்திடக் கொடிச்சியர் கோத்தெறி கவண்கல் (திருவிளை. பு.நாட்டுச்.49). துடி மருங்கில் கொடிச்சியர் தோயவே (அரிச்.பு.நாட்டுச்.15). கொடிச்சியர் குழுக்கள் (சிவஞா. காஞ்சிப்பு.நாட்டுப்பு.45). படைக்கன் கொடிச்சியர் இளமை மகளிர் உணங்கு வாலறைக்கண் (கச்சி.காஞ்சிப்பு. இருபத்.95). குன்றக் குறவர் கொடிச்சியர் தம்முடன் மலையிருஞ் சுனையில் மகிழ்ந்து நீராடி (சென்னி. ஆற்றுப்.313).

கொடிச்சிவால் பெ. 1.நுனிவெண்மையான பசுவின் வால். (இலங்.வ.) 2.நுனி வெளுத்த வாலுள்ள பசு. (முன்.)

கொடிச்சீலை பெ. 1.சித்திரப்படாம். (முன்.) 2.துகிற் கொடி. (முன்.) 3.கொடியின் செண்டா, நீண்டு குறுகிய முக்கோண வடிவுடைய படைத்துறைப் பிரிவின் அடையாளக் கொடி. (செ.ப.அக.)

கொடிச்சுவாளி பெ. பொல்லாதவள். அவள் சரியான கொடிச்சுவள் (இலங்.வ.).

கொடிச்சூரை பெ. சூரை வகை. (வின்.அக.)

கொடிச்சேலை பெ. மணப்பெண் தாலிகட்டும்போது

உடுத்திருக்கும் சேலை. நஞ்சிதத்தின் புருடன் அவள் உடுத்திருந்த கோடிச்சேலையை வாங்கித்தீயிட்டுப் பொசுக்கினான் (மழைக்கஞ்சி ப.59).

கொடிசுற்றிப்பிற-த்தல் 12வி. பெற்றோர்க்கும் தாய் மாமனுக்கும் தீங்கு விளைதற்கு அறிகுறியாகத் கொப்பூழ் கொடி சுற்றிக் கொண்டு குழந்தை பிறத்தல். (நாட்.வ.)

கொடிஞ்சி பெ. 1.கைக்குதவியாகத் தேர்த்தட்டின் முன்னே நடப்பட்டுத் தாமரைப்பூ வடிவுள்ள அலங்கார உறுப்பு. மணிதேர்க் கொடிஞ்சி கையாற் பற்றி (மணிமே.4,48). ஒடிந்தன கொடிஞ்சி மான்றே ரொதுங்கின வொழிந்த சேனை (திருவிளை.பு.50,30). மின்னவிர் கொடிஞ்சிக் கப்பல் மீதேறி வேலை நாப்பன் படர் வளியால் (ஞான.உபதேசகா.680). அணிந் நெடுந்தேர்க்கொடிஞ்சி விலகுற (பிரபு.லீலை 229). புனைவன் கொடிஞ்சியம் தேரிவன் (சங்கர.கோவை 280). விண் கிழித்து ஓங்கி மின்பயில் கொடிஞ்சி ... தேர்த்திரள் காப்போ (தேம்பா.1,6,36). ஒற்றை அழியங் கொடிஞ்சி வையம் (சிவஞா.காஞ்சிப்பு.சித்தீ.4). வாம்பரியும் சகடமும் கொடிஞ்சியும் புனைந்து (முருத.பு. நகரச்.19). சிறுவளிக் கொடிஞ்சித் திண்டேர் செலுத்தி வந்து (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண்.34). சேணிற் குலவு புட்பராக்க் கொடிஞ்சி (தென்பு.மணி.உலா 169). 2.தேர். புரவி பூண்ட பொன்னுதக் கொடிஞ்சி (பெருங்.1, 48,15). கொய்யுனைக் கொடிஞ்சி குஞ்சரம் (ஞானாமிர். 14,18). கோல மாப்பதி னாயிரம் பூண்டதோர் கொடிஞ்சி (கந்தபு.2,12,2). அவுணன் கொடிஞ்சி சோரப் புதைத் தனன் (திருக்கோவல்.பு.காரண்ட்.20). கொண்டு மாயக் கொடிஞ்சி இருத்தியே (வீரநா.விசய.3,54). கொற்றை யில்வீற்ற அருளப்பர மேயர் கொடிஞ்சி செலப் பெற்றதன் பிள்ளையை வெட்டி (கொங்கு.சத.கார்.94). பகைத்தகுவர் சேனைக் கடற்திடைத்தோணியிற் பாயுங் கொடிஞ்சி (செங்கமு.பிள்.47). அரியேறு போல் கொடிஞ்சி நின்று குதித்து (இராவணகாவி.5,13,20). 3.தேரின் மேற் பரப்பு. குன்று போல் உயர் கொடிஞ்சி அம் தேர்மிசைக் கொள்ள (நைட.26,8). கொடிஞ்சி இடம்படும் இரதம் (குசேலோ.233). 4.தேரில் வீற்றிருப்போன். கைப்பற்றுதற் கமைந்ததோர் தேருப்பு வாய்ந்த கொடிஞ்சியிமிழ் சிறுதேர் (திருக்கதிர.பிள்.35).

கொடிஞ்சில் பெ. →கொடிஞ்சிற் பலகை. (செ.ப.அக.)

கொடிஞ்சிலடி-த்தல் 11வி. கொடிஞ்சிற்பலகையால் ஆற்றுக்கால் தோண்டுதல். (முன்.)

கொடிஞ்சிற்பலகை பெ. எருதுகளைக்கொண்டு ஆற்றுக்கால் தோண்டும் பலகை. (முன்.)

கொடித்தக்காளி பெ. தென் அமெரிக்கநாட்டுத் தக்காளி வகை. (மூலி.அக.)

கொடித்தட்டு[1] பெ. காற்றாடிச்சண்டை. (வின்.அக.)

கொடித்தட்டு[2] பெ. கூடைத்தட்டு. மம்பட்டியால் மண்ணை வெட்டி கொடித் தட்டுல போடு (நாட்டுப்.க.ந.ஆய்வு.பி.சே).

கொடித்தடக்கி[1] பெ. மரவகை. (மூலி.அக.)

கொடித்தடக்கி[2] (கொடித்தடக்கி) பெ. நாய்க் கால் மேல்விரல். (யாழ்.அக.)

கொடித்தடம் பெ. ஒற்றையடிப்பாதை. (நாட்.வ.)

கொடித்தடை பெ. கொடியேற்றுள்ள திருவிழாக் காலங் களில் பயணம் கூடாதேன்னுங் காப்புத்தடை. (வட்.வ.)

கொடித்தண்டு பெ. →கொடிக்கம்பம்-2. கருடப்புள் ளெழுதிய கொடித் தண்டு (சிலப்.11,136 உரை).

கொடித்தம்பட்டன் பெ. வாளவரை வகை. (செ.ப.அக.)

கொடித்தம்பம் பெ. கொடிகட்டுந்தறி. (யாழ்.அக.)

கொடித்தரம் பெ. சூரியனது உதயாதமன காலங் களில் உச்சியில் தோன்றும் அட்டமிசந்திரன். (வின்.அக.)

கொடித்தலம் பெ. கொடியைத் தாங்கியுள்ள படைப் பகுதி. சண்டையிற்பொ ருங்கொடித்த லம்தகர்த்து (கூளப்ப.காதல் 16).

கொடித்தாமரை பெ. குளம் குட்டைகளில் வளரும் நீர்த்தாவரம். (தமிழ்நாட்.தா.ப.670)

கொடித்தாலி பெ. சரட்டுத்தாலி. (நாட்.வ.)

கொடித்திருப்பாடகம் பெ. ஓர்காலணி. (யாழ்.அக.)

கொடித்திரும்பு-தல் 5வி. கிரகங்கள் வான உச்சியைக் கடத்தல். கொடித்திரும்பின உடனே (இலங்.வ.).

கொடித்தீ பெ. →கொடிச்சி'-3. (தைலவ.17)

கொடித்துத்தி பெ. சிறுதுத்திவகை. (வின்.அக.)

கொடித்தூக்கு-தல் 5வி. துவசங்கட்டுதல். (யாழ்.அக.)

கொடித்தேர் பெ. கொடியை உடைய தேர். குரங்கின் கொடித்தேரைக் காண குழால சிதறிஓடும் (பாரத வெண். 55,3).

கொடிதடக்கி (கொடிதடக்கி) பெ. நாயின்கால்மேல் விரல். (இலங்.வ.)

கொடிதரை பெ. வயலில் முளைக்கும் புல்வகை. (முன்.)

கொடிதாங்கி பெ. புடலைக்கொடி முதலியவற்றிற் கான பந்தல். (முன்.)

கொடிதிருப்பு-தல் 5வி. பெண்கொண்ட குடும்பத்தில் பெண் கொடுத்தல். (அந்.வ.)

கொடிது பெ. 1.கொடுமையானது. கொடிதிது பெரிதெனக் குழைந்து போயினார் (கூளா.2104). மந்தாநில மெமக்குக் கோடையினும் தீது கொடிதென்பார் (கு.சோ.உலா 238). 2.தீமை. கொடிது அறி பெண்டிர் சொற்கொண்டு (அகநா.20). கொடிது ஆய குத்திரக் கூடு அங்கி கொளுந்தாமுன் (நூற்றெட்.அந்.30,2). பசி கொடி தேனாமல் இலைசரு கெனினும் (பழனித்திரு.11.1/3).

கொடிநரம்பு பெ. வெளியே தெரியும்படி ஓடியுள்ள உடல் நரம்பு. (செ.ப.அக.)

கொடிநாரத்தன் பெ. நாரத்தைவகை. (சித்.அக.)

கொடிநாரத்தை பெ. நாரத்தை வகை (முன்.)

கொடிநாய் பெ. 1.தோல்நாய். (யாழ்.அக.) 2.சோணாங்கி நாய், நீண்ட மெல்லிய கால்களும் கூரிய பார்வையும் விரைவோட்ட முடைய முயல் வேட்டை நாய்வகை. (வின்.அக.)

கொடிநாவல் பெ. நாவல் வகை. (முன்.)

கொடிநிலை பெ. 1.(புறப்.) அரசனது கொடியை மும்மூர்த்திகளுள் ஒருவரது கொடியோடு ஒப்பிட்டுப் புகழ்தலைப் பற்றிக் கூறும் புறத்துறை. கொடிநிலை கந்திழி வள்ளி குணஞ்சால் (புறப்.வெண்.சூ.9,22). 2.கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம். கொடிநிலை கந்திழி வள்ளி யென்ற (தொல்.பொ.88 நச்.).

கொடிநெட்டி பெ. நீர்ச்சுண்டி. (மலை அக.)

கொடிப்பசலை பெ. 1.செடிவகை. (செ.ப.அக.) 2.கொடிவகை. (முன்.)

கொடிப்பசளை பெ. →கொடிப்பசலை. (நாட்.வ.)

கொடிப்பட்டை பெ. நீரிறைக்கும் ஓலைப்பட்டை. (வின்.அக.)

கொடிப்படை பெ. சேனையின் முன்னணிப்படை. கொடிப்படை கோமக னாகக் கூழை வடுத்தீர் வயந்தகன் வாள்வலம் பிடித்து (பெருங்.1,53,138-139). கொடிப் படையுங் கொடியுங் குடையும் (தொல்.பொ.626 பேரா). கொலைத்தொழில்குறிக்தெழுகொடிப்படையின்முன்னம் (செ.பாகவத.784).

கொடிப்பந்தர் பெ. கொடிகள் படர்ந்த பந்தர். எழுதுநிலை மாடமு மிடுகுகொடிப் பந்தரும் (பெருங்.2,15,11).

கொடிப்பயறு பெ. பயறுவகை. (வின்.அக.)

கொடிப்பவழம் பெ. பவழம். கொளுவொடு படாஅக் கொடிப்பவழத்து (பெருங்.2,2,127).

கொடிப்பவளம் பெ. பவளக்கொடி. செய்ய கொடிப்பவளஞ் செம்மணிகள் ஈன்றதுபோல் (கூளப்ப.காதல் 135).

கொடிப்பாசி பெ. நீர்ப்பாசிவகை. (யாழ்.அக.)

கொடிப்பாசூரி பெ. நத்தைச்சூரி. (சித்.பரி.அக.ப.85)

கொடிப்பாதை பெ. →கொடித்தடம். (நாட்.வ.)

கொடிப்பாலை பெ. 1.(இசையி.) பாலையாழ் வகை பலவற்றுள் ஒன்று. கூறியபட்ட டைக்குரலாங் கொடிப் பாலையினினிறுத்தி (பெரியபு.14,25). 2.பாலை வகை. (செ.ப.அக.)

கொடிப்பிணை பெ. வங்க மணல். (யாழ்.அக.)

கொடிப்பிள்ளை பெ. 1.காக்கை குஞ்சு. (வின்.அக.) 2.பள்ளையாடு. (முன்.)

கொடிப்புடவை பெ. விதவையானவருக்கு முதல் வருட உபயோகத்திற்காகச் சுற்றத்தார் கொடியில் இடும் புதுச்சீலை. (செ.ப.அக.அனு.)

கொடிப்புல் பெ. அறுகு. கொடிப்புல் லென்று கறிப்பான் (சீவக.932).

கொடிப்புலி பெ. சோணாங்கி நாய் போன்ற உடலுள்ள புலி வகை. (வின்.அக.)

கொடிப்புள் பெ. காக்கை. அள்ளியவாயோதனம் ஒன்று அந்தணன்வாய் வீழ்த்த கொடிப்புள் அருள் பெற்றுய்யும் புலியூரே (திருப்புலி.வெண்.10).

கொடிப்புன்கு பெ. கொடிவகை. (செ.ப.அக.)

கொடிப்பூ பெ. (கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ) நால்வகைப்பூக்களுட் கொடியில் பூப்பது. சினைப்பூ வணிந்துங் கொடிப்பூக் கொய்தும் (பெருங்.2,12,130). முல்லை முதலாம் கொடிப்பூ முழுவதும் புட்பிக்க (திருவனந்.விலா.61). பூங்கொடிப்பூ ... எடுத்தே மயல் ஆனாள் (நல்லதம்.காதல் 236). தூ ய கொ டி ப் பூவெடுத்து (கூளப்ப.காதல் 153).

கொடிப்பூகம் பெ. →கொடிச்சம்மங்கி.(சித்.அக.)

கொடிப்பூளை பெ. பூளை வகை. (வின்.அக.)

கொடிப்போடு-தல் 6வி. 1.உறுதியாயிருத்தல். (முன்.) 2.போருக்கு அழைக்கவேனும் வெற்றி குறிக்க வேனும் துவசம் நாட்டுதல். (செ.ப.அக.)

கொடிபடு-தல் 6வி. ஒழுங்குண்டாகுதல். கொள்ளி மண்டிலம் போற்கொடி படத்திரிந் திடுவ (சீவக.1771).

கொடிபோடு-தல் 6வி. யாதொன்றைத் தனக்காக்க வழிபண்ணல். (யாழ்.அக.)

கொடிமரம் பெ.கோயில்களின் முன்புறம் கொடி யேற்றுவதற்காக நடும் மரம், கொடிக்கம்பம். அல்லெ னுங்களத் தண்ணற ணணிவிழாத் தருப்பைப் புல்லொ டும்பிணிப் புண்டபொற் கொடிமரம் போலும் (திருவிளை.பு.நகரச்.8). கோவில் கொடிமரம் (அயோ. கதை ப.108).

கொடிமல்லிகை பெ. 1.சாதி மல்லிகை. (செ.ப.அக.) 2.மல்லிகை. (பிங்.)

கொடிமலர் பெ. →கொடிப்பூ. கொடிமலர் மன்றல மலர (பரிபா.8,24-25). காட்டு மாமலர் கொடிமலர் கொண்டு (திருவிளை.பு.திருக்கைலாயச்.6).

கொடிமாசி பெ. நிலையற்றோடும் மேகம். (வின்.அக.)

கொடிமாடன் பெ. திருநெல்வேலிப் பகுதியில் வழங்கும் ஆண்தெய்வம். (திருநெல்.சிறு.வழி.ப.77)

கொடிமாடு பெ. நீண்ட தளர்ந்த உடலுள்ள மாடு. (வின்.அக.)

கொடிமாதுளை பெ. மாதுளைவகை. (மூலி.அக.)

கொடிமின் பெ. →கொடிமின்னல். இருள் போழும் கொடி மின்னால் (பரிபா.18,25).

கொடிமின்னல் பெ. கொடிபோல வீசி ஒளிரும் மின்னல். (செ.ப.அக.)

கொடிமின்னை (கொடிமுன்னை) பெ. மூக்குத்திக் கொடி. (சித்.பரி.அக.ப.85)

கொடிமுகாக்கினி பெ. நெல்லி. (வட்.வ.)

கொடிமுடி பெ. கிளைகள் பிணைந் திருக்குஞ் செடி வகை. (வின்.அக.)

கொடிமுடிந்தவழக்கு பெ. ஓயாத சிக்கல் வழக்கு. (செ.ப.அக.)

கொடிமுடியன் பெ. →கொம்பேறி மூக்கன். (யாழ்.அக.)

கொடிமுந்திரி பெ. திராட்சை. கொழுகொம்பைத் தொற்றிக் கொண்டு படர்ந்து பிழைக்கும் கொடிமுந்திரியா (கரை.நதி.ப.79). கொடி முந்திரியின் குலைகள் முட்ட (அவளும் அவனும் ப.223).

கொடிமுந்திரிகை பெ. →கொடிமுந்திரி. (செ.ப.அக.)

கொடிமுந்திரிதேறல் பெ. திராட்சைச் சாற்றிலிருந்து தயாரிக்கப்படும் மதுப்பானம். (கலைச்.அக.2 ப.119)

கொடிமுருங்கை பெ. ஒரு வகை முருங்கை மரம். (குண.1 ப.554)

கொடிமுல்லை பெ. 1.முல்லைக்கொடி. குறிஞ்சி யெல்லையினீங்கிக் கொடிமுல்லை மகண்மொழிந்தாட (சீவக.1563). மழைக்கரும்புங் கொடிமுல்லை மருங்கேற வரம்பணைந்து (சூளா.1816). வாய்மொழி இன்றி இருந்தனள் அக் கொடிமுல்லை (தமிழ்.கத்தி ப.43). 2.ஊசிமுல்லை. (சித்.அக.)

கொடிமுறுக்கு பெ. 1.நன்றாக ஏறின முறுக்கு. (செ.ப. அக) 2.அதிகம் முறுக்கிற கயிற்றில் விழுகின்ற மடிப்பு. (ரா.வட்.அக.) 3.நூலின் மிகச் சுற்றியேறிய முறுக்கு. (செ.ப.அக.)

கொடிமுன்னை (கொடிமின்னை) பெ. மூக்குத்திக் கொடி. (முன்.)

கொடிமூக்கு பெ. 1.நீண்ட மூக்கு. ஒழுகுபொற் கொடி மூக்கும் (சீவக.165). 2.மூக்கின் நுனி. கோதில் நயனங் கொடிமூக்கி லேயுற (திருமந்.562).

கொடிமூலி பெ. செங்கொடிவேலி. (மருத்.குண.1 ப.272)

கொடிய பெ.அ. 1.கொடுமையுடைய. இவளை இங்ஙனம் ஆற்றாளாகப் பிரிந்த அவரினுங் கொடிய இவளது ஆற்றாமை கண்டும் (இறை.அகப்.135,2 உரை). அடியவாய்ப்பயப் பட்டங் காவலர்க் கொடிய வாயின கொங்கவிழ் சோலையே (சூளா.145). 2.தீய. கொடிய விழி வேடன் உயிர் இற்றுப் போக விழித்துரைத்தான் (பாரதி.கண்ணன் பா.12,8). 3.மிகுந்த. என்வேலைக் காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் (பு.ஏற்.மத்தேயு 8,6).

கொடியகற்பி பெ. திருகுக்கள்ளி. (சித்.பரி.அக.ப.85)

கொடியடுப்பு பெ. 1.பக்க அடுப்பு. (செ.ப.அக.) 2.அடுப்பு வகை. (முன்.)

கொடியத்தி பெ. நீரத்தி. (மலை அக.)

கொடியது பெ. 1.துன்பம் தரத்தக்கது. அகல் முகில் உருக்கொடு ... கொடிய தோர் இராகத்தன் எதிர்த்தான் (தேம்பா.1,3,10). 2.கொடுமையானது. (யாழ்.அக.)

கொடியபீசம் பெ. சீதாங்கபாடாணம். (முன்.)

கொடியமன்னன் பெ. →கோடாசொரிப் பாடாணம். (முன்.)

கொடியரசன் பெ. வீடுமன். தாலமுயர் கொடியரசன் (பாரதம்.1,1,141)

கொடியரசு பெ. 1.அவரை. (மலை அக.) 2.அரசுவகை. (செ.ப.அக.)

கொடியராகு பெ. →கோமேதகம். (யாழ்.அக.)

கொடியலூர்தி பெ. யானை தந்தத்தாற் செய்யப்பட்ட வாகனம். கோடிய லூர்தியுங் கொண்டு விசியுறுத்து (பெருங்.1,37,219).

கொடியலை பெ. →கொடிப்பசலை. (மருத்.குண.1 ப.232)

கொடியவரை பெ. அவரைவகை. (இலங்.வ.)

கொடியவள் பெ. கொடுமையானவள். ஓ கொடியவளே காண் (இறை.அகப்.16,3 உரை). கொள்ளரி யுருவு கொண்டான் கொடியவன் கடிய சூழ்வான் (சூளா.697).

கொடியவன்[2] பெ. 1.ஒட்டன். கொடியவர் எறிந்தகல் குவிய (பிரபு.லீலை 13,26). 2.பொல்லாதவன். கொடியவர் செய்த கொடுமையினும் (குறள்.1168 மணக்.).

கொடியவிடகாரி பெ. சீந்தில். (சித்.பரி.அக.ப.85)

கொடியவீரன் பெ. →கோடாசொரிப்பாடாணம். (வின்.அக.)

கொடியறுகு பெ. அறுகுவகை. (செ.ப.அக.)

கொடியன்[1] பெ. கேது. (வட.நி.590)

கொடியன்[2] பெ. 1.தீயன். அன்பிலன் கொடியன் (இறை. அகப்.193,18 உரை). சதுர்முகன் முதலோர் ... துயர் அகற்றவுங் கொடியரை யறுத்து ... சுலகெலாம் போற்றவும் (கந்தபு.3,12,145). 2.கொடுமையாளன். கொலைத்தொழிலை மேற்கொண்டவரினும் கொடியன் அலைத்தல் தொழிலை மேற்கொண்டு நீதி அல்லாதன செய்து ஒழுகீன்ற அரசன் (குறள்.558 மணக்.). எதிர் கண்டிடிலை மருங்கொடியர் (திரிசிரா.அந்.4). அவர்கள் மிகவும் கொடியராயிருந்த படியால், அந்த வழியாக ஒருவனும் நடக்கக்கூடாதிருந்தது (பு.ஏற்.மத்தேயு 8,28).

கொடியன்[3] பெ. மன்மதன். கொடியன்மேல் மாகாதல் வைத்ததோ (நள.122).

கொடியன்[4] பெ. கொடியையுடையவன். கனற்கண் மீனக் கொடியனை வேவ நோக்கி (திருவிளை.பு.கடவுள்.18).

கொடியன்[5] பெ. கீழ்மக்கள். (ஆசி.நி.69)

கொடியாடு பெ. வருடத்துக்கு ஒருமுறை ஒரு குட்டி ஈனும் நீண்ட காலுள்ள ஆடு. கொடியாடு நற்கறியாம் (பதார்த்த.845).

கொடியாடை பெ. →கொடிச்சீலை. கொடியாடை முதலானதுகளைத் தைக்கிறதும் (கோயிலொ.94).

கொடியாந்தரம் பெ. கொடுமை. (யாழ்.அக.)

கொடியார்கூந்தல் பெ. அம்மையார் கூந்தல். (செ.ப. அக)

கொடியால் பெ. ஆலமரவகை. (வின்.அக.)

கொடியாள்[1] பெ. கொடி போன்றாள். பூங்கொடியாள் பூசலிட (சிலப்.19,33). கொடியாளை ... மருமானுக் கருள்செய்ய (சீவக.1057).

கொடியாள்[2] பெ. கொடுமையானவள். உள்ளமுங் கோடிய கொடியாள் (கம்பரா.2,2,89). தீக்கொடியோள் ஆற்றில் உமை விட்டெறிய (தித்தேரி.அம்.3 க.38).

கொடியாள்கூந்தல் பெ. →கொடியார் கூந்தல். (வின்.அக.)

கொடியாளன் பெ. கோடாசொரிபாடணம். (யாழ்.அக.)

கொடியான் பெ. 1.கொடுமையானவன். கோள் வேங்கை போல் கொடியார் என்னையன்மார் (திணை மாலை.20). கொடியார் ஆவார் கள்வர் அறலைப்பார் சூறைகொள்வார் (குறள்.543 மணக்.). கொடியார் வருமென்று குலாவுவதோ (கம்பரா.5,4,9). 2.கடு வினையாளன். கொடியான் கூர்ங்கணை குளிப்ப (புற.வெண்.263 கொளு). 3.அசுரர். கொடியார் உயிர் மலைக் கோதண்டம் வாங்கிக்குடித்த (கருணை அந்.6). 4.அரக்கரினம். கொடியோர் பலர்க்கோர் நமனாகும் கொற்றத்தானும் கொளலாகும் (பழனித்திரு.13,7,7).

கொடியிலந்தை பெ. ஓரிலந்தை. (யாழ்.அக.)

கொடியிறக்கம் பெ. 1.முடிவுபண்ணுகை. (முன்.) 2.துசவமிறக்குகை. (முன்.)

கொடியிறக்கு-தல் 5வி. 1.காற்றாடியை இறக்குதல். (இலங்.வ.) 2.திருவிழா முடிவாகக் கொடியைக் கீழிறக்கி விடுதல். (செ.ப.அக.) 3.ஏற்றின கொடியைத் தாழ்த்துதல். (முன்.)

கொடியீச்சு பெ. சவ்வரிசி. (முன்.)

கொடியுயர்த்து-தல் 5வி. செயலை உறுதியாகச் செய்வேன் என்று உறுதியாயிருத்தல். குறையெலாம் தவிர்த்தல் வேலை எனக்கொடியுயர்த்த கோமான் (திருவெண்.பரா.4,32).

கொடியூணு-தல் பெ. வயலிற்கான வரியைக் கட்டாதவர் வயலில் அறுக்கக்கூடாது என்பதற்கு அறிகுறியாக அரசாங்கத்தாரால் ஊன்றி வைக்கும் வெள்ளை நிறக் கொடி. (தொ.வ.)

கொடியூர்புதுக்காசு பெ. செய்யூர்க் கல்வெட்டில் கூறப் பெறும் ஒருவகை நாணயம். (சாச.வ.)

கொடியெடு-த்தல் 11வி. வெற்றிக்கு அறிகுறியாகத் துவசம் பிடித்தல். நுண்கலை நீத்த நீந்திக் கொடியெடுத் தவர்க்கு நல்கு (சீவக.291). கொடி யெடுத்துக் கொண்டு நின்றேன் (சடகோபரந்.28).

கொடியெலுமிச்சை பெ. எலுமிச்சைவகை. (பதார்த்த.678)

கொடியேற்றம் பெ. 1.திருவிழாத்தொடக்கத்தில் கொடி மரத்தில் கொடியை யுயர்த்துகை. (செ.ப.அக.) 2.திருவிழாத்தொடக்கம். (யாழ்.அக.) 3.பூங்கொடி ஏறுகை. பூங்கொடியேற் றமும்மதன் றேரோ டுவதும் குறித்து ... பார்த்திட (திருவாரூர்க் கோவை 158).

கொடியேற்று[1] பெ. →கொடியேற்றம்-1. காமன் கொடியேற்றென வியப்ப (குமர.பிர.முத்துக்.77).

கொடியேற்று[2]**-தல்** 5வி. 1.கோயில் திருவிழாத் தொடக்கத்தில் துவசம் உயர்த்துதல். திருக்கொடி யேற்று நான்று (தெ.இ.க.2,125). கொற்றவிழாவுக்குக் கொடியேற்றி (தெய்வச்.விறலி.தூது 162). 2.கொடி யினைக்கயிற்றில் கட்டி கம்பத்தின் மேலே ஏற்றுதல். (ஆட்சி.அக.ப.125) 3.படங்களைப்பறக்க வுயர்த்துதல். (யாழ்.அக.)

கொடியேனம் பெ. அமுரி. (சித்.பரி.அக.ப.166)

கொடியோடு-தல் 5வி. 1.கொடியுண்டாகிப் படர்தல். (நாட்.வ.) 2.இரேகை நீளுதல். (முன்.) 3.மரண காலத்தில் மூச்சு இழைதல். (முன்.)

கொடியோன்[1] பெ. 1.கொடுமைசெய்வோன், தீயவன். மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள் கொடியோர்த் தெறூஉம் (குறுந்.87). கொடியோர்த் தெறுதலும் (புறநா.29,9). வெங்கலியால் அங்கவன்மேல் வெல்லுங் கொடியோன் தெரிந்து (நள.206). காகம் கொடியோர் புலாலுண்போர் (கொளஞ்.பிள்.5,3). முழுதுமாய் புலையரேனும் கொடியோரேனும் ... திருவரசைக் கண்ணால் கண்டோர் (புல்லையந்.21). கொடி யோனைத் தேம்பிடும் வண்ணஞ் செற்றிடல் வேண்டும் (சிவஞா.காஞ்சிப்பு.பரசி.21). அசுரக் கொடியோனுடக்கே (திருமுரு.பிள்.பா.7). நம் மேற் குறியாய் வருவதை உணர்க (பாரதிதா.2,3,8). 2.வீமன். (ஆசி.நி.47). 3.கஞ்சன். கூற்றம் போலுயிர் குடிப்ப வென்றுணர்ந்தனன் கொடியோன் (செ.பாகவத.10,1,37).

கொடியோன்[2] பெ. 1.கொடியை உயர்த்தியவன். சேவல் அம் கொடி யோன்காப்ப (குறுந்.க.வா.5). 2.கொடியை யுடையோன். மீன்ஏற்று கொடியோன் (சிலப்.5,210).

கொடியோன்[3] பெ. கற்றாழை. (மலை அக.)

கொடிரோசா பெ. ரோசா வகை. கொடிரோசா செண்டு கட்டும் கொங்கு (நா.பா.2 ப.262).

கொடிவசலை (கொடிவயலை) பெ. →கொடிப்பசளை. (மருத்.குண.1 ப.232)

கொடிவயலை (கொடிவசலை) பெ. →கொடிப்பசளை. (பதார்த்த.597)

கொடிவரை-தல் 4வி. தொய்யிலெழுதுதல். கொடி வரைந் தெழுதப் பட்ட குங்குமக் குவவுத் தோளான் (சூளா.553).

கொடிவலி-த்தல் 11வி. 1.காற்றாடிக்கயிற்றை இழுத்தல். (செ.ப.அக.) 2.வளார்களைக் செடியினின்றும் எடுத்தல். (இலங்.வ.)

கொடிவழி பெ. 1.ஒற்றையடிப்பாதை. (செ.ப.அக.) 2.வமிசாவளி. (முன்.)

கொடிவழித்தீர்த்தம் பெ. திருப்பதி மலையிலுள்ள ஒரு புண்ணிய தீர்த்தம். கொடி வழித்தீர்த்த முதலிய மிக்க ... வேங்கடம் (சிலப்.11,41 உரை).

கொடிவழுதலை பெ. வழுதுணைவகை. (யாழ்.அக.)

கொடிவள்ளி பெ. ஒரு வகை கிழங்கு. ஆசியா போன்ற கண்டங்களில் வெப்பமண்டல நாடுகளில் கொடி வள்ளி முக்கியமான உணவுப்பயிராகும் (காய்.ப.271).

கொடிவாகனன் பெ. (காக்கையை வாகனமாகவுடையவன்) சனி. (சோதிட.சிந்.)

கொடிவிட்டுச்சரி-தல் 4வி. நிரையேநெடுகப்போதல். (யாழ்.அக.)

கொடிவிடு-தல் 6வி. 1.→கொடியோடு-தல்-1. (செ.ப.அக.) 2.மிகுதியாதல். காமங் கொடிவிட (பரிபா. 6,103).

கொடிவிவேளாளர் பெ. கொடிக்கால் வேளாளர். (வேளா.காட்ட.3,7)

கொடிவீசு-தல் 5வி. → கொடிவிடு-தல்-1. (செ.ப.அக.)

கொடிவீடு பெ. படர்கொடிகளால் அமைந்த வீடு. உல்லாச வனத்தில் ஒரு கொடி வீட்டில் இன்பமாய் (முல்லை.ப.22).

கொடிவெள்ளி பெ. சிலுவை வெள்ளியின் பின் தெரியும் இரண்டு விண்மீன் வகை. (தொ.வ.)

கொடிவேம்பு பெ. ஒருவகைவேம்பு. (யாழ்.அக.)

கொடிவேலன் பெ. தீவிதீவி, தோலைப்பதனிடுதற்குத் தென்அமெரிக்காவிலிருந்து 1842-ல் கொண்டு வரப்பட்ட கோண வேலன் என்னும் மரம். (செ.ப.அக.)

கொடிவேலி பெ. 1.சித்திர மூலம் எனும் கொடி. சித்திரமூலங் கொடுவேலி யாகும் (பிங்.2866). 2.கொடு வேலிவகை. (செ.ப.அக.)

கொடிவை-த்தல் 11வி. வயலில் வெற்றிலை நடுதல். (தொ.வ.)

கொடிற்றுக்கோல் பெ. செங்கல் முதலியவற்றைப் பெயர்ப்பதற்குக் கள்வர் உபயோகிக்குங் கருவி. (சிலப்.16,142 உரை)

கொடிற்றுச்சன்னி பெ. பற்கள் பூட்டிக்கொள்ளும்படி செய்யும் சன்னிவகை. (செ.ப.அக.)

கொடிறு பெ. 1.கதுப்பு,கன்னம். கொடிற்றுப்புண் செய்யாது ... துடைத்து (கலித்.95,19,20). உகிரும் கொடிறும் உண்ட செம் பஞ்சியும் (பரிபா.6,17). கொடிறுடைக்குங் கூன்கையர் அல்லாத வர்க்கு (குறள்.1077). கொம்புஒலிப் பாரைப் போலக் குவிந்து இரு கொடிறும் வீங்க (இரணியவதைப்.676). கொட்டக் குழிந்து ஒழிந்தவா கொல்லோ ... போயின் கொடிறு (கபி.சிவ.இரட்.மாலை 27). பாங்கிரு கொடிறு மொற்றிப் பதமுறப் பருகிக் கொண்டு (திருவிளை.பு.61,33). மணிவாயிற் கொடிறு உள் நாசோதித்து (ஞான. உபதேசகா.1176). கொடிறுடைத்துக் கொல்வான் போல் (நீதிநெறிவி.73). கொடிறு வீங்கப் புடைத்தனன் (சிவஞா.காஞ்சிப்பு.பரசி.32). கன்னம் கதுப்பு கொடிறு (அபி.மாலை 475). 2.கன்னத்தின் மூட்டுவாய். சுடுபாளங் கொடிற்றிடை யிருத்தி (சீகாழித்.பு. திருவிழா. 14). 3.யானை மதச் சுவடு. (பிங்.2434) 4.யானை உறுப்பு. வாளத்தைக் கொடிற்றி னேந்திப் பகுத்துவாய் புகுத்த லாற்றார் (சீவக.2768). குறிப்பல சொல்லிய நாவைக் கொடிற்றால் (சூளா.1938). கொடிறும் பேதையுங் கொண்டது விடாது (திருவாச.4,63). ளிவாய் ஏலும் கொடி றேந்தித் தசை ஈர்ப்பச் சிலர் இனைவார் (கச்சி.காஞ்சிப்பு.இருபத்.366). யானை மத்தகம் கும்பம் ... கொடிறு (அபி.மாலை 542). 5.குறடு. கொடிறு முரித்து அன்ன கூள்தான் அலவன் (கபி.சிவ.இரட். மாலை 28). 6.பூசநட்சத்திரம். குருமகிழ் பூசமுங் கொடிறென லாகும் (பிங்.3432). பூசம் கொடிறு ... பூசம் (சுகர்நாடி ப.110). 7.(இசையி.) கரகரப் பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.151)

கொடு¹-த்தல் 11வி. 1.1. ஈதல். இழைத்தாங்காக்கிக் கொடுத்தற் கண்ணும் (தொல்.பொ.148,9). கொடுப்பதூஉம் துய்ப்பாதூஉம் இல்லார்க்கு (குறள்.1005). கொடுக்கும் விழுப் பொருள் (கலித்.61,13). கூரார்தரு கொலைவாளொடு குண நாமமுங்கொடுத்த (தேவா.1, 17,8). கொடுக்கும் பொருள் இல்லான் (இன்.நாற்.36). கொடுப்பின் அசனம் கொடுக்க (நான்மணி.79). பெருகியொரு காசே கொடாதவரை (திருப்பு.138). கோடுறு மரமும் தன்னைக் கொடுத்தலே நன்றோ (தேம்பா.1,4, 35). 1.2.தருதல். கொடுத்தலும் இன் சொலும் ஆற்றின் (குறள்.525). குரங்கு அருந்து பண்ணியம் கொடுப்போர் (பரிபா.19,38). கொடுத்து விடாமை கவிக்கு இன்னா (இன்.நாற்.39).மருங்களி யார்பிடி வாயில் ... கருங்களி யானை கொடுக்கும் (தேவா.1,43,4). வேய்ந்திண ரொசிந்த சோலை வேனிலான் வென்றி யோகைத் தேந்துணர் கொடுப்ப மூழ்கித் (சூளா.162). கொடுக்கின்ற விடலையார்கோ (நந்திக்கலம்.86). கிடைந்த பூகம் சுமந்துதன் காயைச் சூத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும் (மூக்.பள்.25,3). நாலு நகைதானும் நலமாக வேகொடுத்துச் சால வெகுமானம் தான்தந்தார் (சீவே.சரி. 24,12-13). மோன நன்னெறி கொடுத்த போது (தாயுமா.பா.31,1). 1.3.வழங்குதல். இறந்தோர் வேண்டிய கொடுத்து அவை தா எனக் கூறலின் (குறுந்.349,6). இசைவ கொடுத்தல் (நாலடி.95). திருந்து அடி தோயத் திறை கொடுப்பானை (பரிபா.9,37).

மன்னராய்க் காண் கொடுத்து வாழ்வார் கலந்து (ஏலாதி 80). பசுக் கொடுப்பின் பார்ப்பார்கைக் கொள்ளாரே (ஆசாரக்கோவை 90). பிறந்த பொழுதேயும் பெய்தண் தார் மன்னர்க்குடம்பு கொடுத்தாரே மூத்தார் (தகடூர்யா. 22). 1.4.நல்குதல். மங்கிலியப் பிச்சை யருள் என்பவளுக்கே கொடுத்து ஈடேறினான் அன்பதனால் (ஆத்திசூடி வெண்.9). 2.பெற்றெடுத்தல். பார்வதி யேழுலகுங் கொடுத்தாள் (பிரமோத்.9,61). 3.உண்டாக்குதல். மனக்கம் பிதங் கொடுக்கு மாதே (மூவரை.தூது 7). போர் செய்யும் போதினில் தேர் நடத்திக் கொடுப்பான் (பாரதி.கண்ணன் பா.7,2). 4.உடன் படுதல். மலரன்றி மிதிப்பக் கொடான் (திருக்கோவை 303). 5.ஒத்தல். வேல்கொடுத்த வடிமுறுவல் வெருகு (குமணசரித்.121). 6.புரிதல். ஒரே மொத்தமாய் நாலு முகத்திலேயும் வெகுசண்டை கொடுத்தார்கள் (ஆனந்த. தினசரிச்.குறி.3 ப.138). 7.அருளுதல். இச்சைக் கிசைந்த வரங்கொடுக்கும் (திரு.முரு.பிள். பா.5). ஊரன் வரைக எந்தையும் கொடுக்க (ஐங்.6). வழுத்த வரம் கொடுப்பர் நாகர் (நான்மணி.60). பின்னைப் பணிந் தேத்தப்பெரு வாள்பேரொடுங்கொடுத்த (தேவா.1,11,8). 8.உதவிசெய்தல். சாதல் பொருள் கொடுத்தல் இன்சொல் புணர்வு உவத்தல் (ஏலாதி 68). 9.அளித்தல். உடையதம் மாற்றலி லுண்டி கொடுத்தோர் (சூளா. 1998). உம்மை கொடுத்தது எற்றிற்கொ எனின் ... சொல்லப் பட்டது (இறை.அகப்.64,36 உரை). எள்ளே பருத்தியே எண்ணெய்உடுத்தாடை ... அன்புற்று அசனம் கொடுத்தான் (ஏலாதி 50). சுர தருவைப்போலே கொடுக்கின்ற புன்னைவனநா (ஆத்திசூடி வெண்.32). கொடுத்தல் விலக்கி விழி தோற்றுலகில் (இரங்கேச. வெண்.17). கொடுத்த பரமன் சிராமலைப் பாடிருந்துங் (திரிசிரா.அந்.3). கொடார் தமைப் பற்கெஞ்சியேற் திருவேரக (யமக.அந்.19). துர்க்கையின் வாழ்விடமாகக் கொடுத்தவன் புயம் கொடுத்தோன் (பாரதம்.ஆதி.22). விரந்தினர் மூத்தோர் பசு சிறைபிள்ளை இவர்க்கு ஊன் கொடுத்து அல்லால் உண்ணாரே ... பிழையா தவர் (ஆசாரக்கோவை 21). 10.பாடஞ்சொல்லுதல். கொள்வோன் கொடுத்தல் கோடல் (சுவாமிநா.4). 11.அணைவித்தல். (யாழ்.அக.) 12.விடுத்தல். செல் இனி அகத்து எனக் கொடுப்போற்கு (அகநா.66,16). 13.திட்டுதல். நன்றாய்க் கொடுத்தாளா வேணும் வேணும் (செ.ப.அக.). 14.சாகக் கொடுத்தல். நீ பயந்த கோட்டானைத் தானே கொடு (தனிப்பா.தீர.35,68). 15.அடித்தல். (செ.ப.அக.). சொல்லிக்கொடு, முடித்துக் கொடு ஒரு துணை வினை (செ.ப.அக.). 16.பங்கிடுதல். இந்தத் தொகையைப் பத்துப்பேருக்குக் கொடு (செ.ப.அக.). 17.விற்றல். தில்லைமுன்றிற் கொடுக்கோ வளை (திருக்கோவை 63). 18.கொப்புளித்தல். அரத்தவாய்க் கொம்பனார் கொடுத்த முத்த நீர வாய கோழரை (சூளா.131). 19.கல்யாணம் பண்ணிக் கொடுத்தல், மணமுடித்தல். ஊரான் வரைக எந்தையும் கொடுக்க (ஐங்.6) மல்லக மார்பி னான்றன் மருமக ளிவளைக் கூவி வல்லிதிற் கொடுக்க மன்னன் வாழ்கதன் கண்ணி மாதோ (சூளா.515). அறிந்து பாவையைக் கொடும்பத் தோன்றி யஞ்சுட ரேந்த (சீவக.1563). நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் சனங்கள் புசித்துக் குடித்தார்கள் பெண் கொண்டு கொடுத்தார்கள் சலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது (விவிலி.லூக்கா 17,28). பொறையனைப் பொய்கைக்குப் பண்டு கொடுத்து (கு.சோ.உலா 404).

கொடு[2] து.வி. ஓர் துணைவினை. சொல்லிக்கொடு, முடித்துக்கொடு. (செ.ப.அக.).

கொடுக்கல்வாங்கல் பெ. 1.பணம் பொருள் முதலான வற்றை கொடுத்தும் பெற்றுமிருத்தல். கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்ட தேயல்லாமல் வேறொரு சபையும் உடன்படவில்லை (பு.ஏற்.பிலி.எழு.நிரு 4,15). 2.லேவா தேவி. (ரா. வட்.அக.)

கொடுக்கள்ளி பெ. பீநாறிச் செடி. (என்.வெ.கா.124)

கொடுக்கறு-த்தல் 11வி. குறும்புத் தனத்தை அடக்குதல். (செ.ப.அக.)

கொடுக்கன்[1] பெ. 1.தேள்வகை. (இலங்.வ.) 2.கொடுக் குள்ளசெந்து. (யாழ்.அக.)

கொடுக்கன்[2] பெ. மகன். வயிரமேகனார் கொடுக்கன் சிற்றண்புலியூர் நாடன் (தெ.இ.க.8,32).

கொடுக்காடுபிடிக்கை பெ. →கொழுத்தாடுபிடிக்கை. (வின்.அக.)

கொடுக்காய் பெ. →கொடுக்காய்ப்புளி. (செ.ப.அக.)

கொடுக்காய்ப்புளி பெ. மரவகை. (இயற்.விஞ்.ப.160)

கொடுக்கான் பெ. →கொடுக்கன்-2. (இலங்.வ.)

கொடுக்கி பெ. 1.கதவையடைத்து இடும் இரும்பு பட்டை. (வின்.அக.) 2.ஆபரணத்தின் பூட்டு. (முன்.) 3.தேட்கொடுக்கி. (யாழ்.அக.)

கொடுக்கு[1] பெ. 1.தேள்முதலியவற்றின் கொட்டும் உறுப்பு. தேளுக்கு வாய்த்த விடம் கொடுக்கில் நீதிவெண். 18). தேளுக்குக் கொடுக்கிலே விடம் தேவடியாளுக்கு உபம்பிலே விடம் (என்.பழ.தொ.453). தேளைக் கண்டால் கொடுக்கை நசுக்கு (இளை.இலக்.49). தேளின் கொடுக்கினை நசுக்க வில்லை (குறிஞ்சித்.ப.30). 2.நண்டு முதலியவற்றின் இடுக்கிக் கால். (நாட்.வ.) 3.கவர், பிளவு. (யாழ்.அக.) 4.மூலத்தாறு. உடையைத் திரட்டிக் கொடுக்காக வரிந்து கட்டி (திருச்செந்.அக. 35உரை).

5.இடுப்புத்துணி. அரிவாளைக் கொடுக்கில் போடு (நாஞ்.வ.). 6.ஆடை முதலிய வற்றிற் கட்டிவிடுந் தொங்கல். கச்சைபுனைந் ததிலே விட்டான் பெருங் கொடுக்கு (திருவாலவா.பு.30,9). 7.ஒருவகைச் சிற்ப வேலைப்பாடு. கொடுக்குள்சீர்க்கமு மடுத்தூழ் வளைஇய (பெருங்.3,9,36). 8.சிறுமியர் விளையாட்டு வகை. (த.நா.விளை.ப.273) 9.குறும்புப் பையன். குறும்புப் பையன் கொட்டும் கொடுக்குடனே கூடையுமா (திருக்கேதீச். தூது 196).

கொடுக்கு[2] பெ. →கொடுக்கன்-2. (நாட்.வ.)

கொடுக்கு[3]-தல் 5வி. கொடுத்தல். (யாழ்.அக.)

கொடுக்கு[4]-தல் 5வி. நடுக்குதல். (திருநெல்.வ.)

கொடுக்குக்கட்டிநில்-தல் 3வி. 1.விடாப்பிடியாய் இருத்தல். (செ.ப.அக.) 2.ஊக்கமாயிருத்தல். (முன்.)

கொடுக்குக்கட்டு-தல் 5வி. ஆயத்தமாதல். (இலங்.வ.)

கொடுக்குப்பிடி-த்தல் 11வி. ஒருவனை விடாது ஊழியன் போன்று பின் தொடர்ந்து திரிதல். (செ.ப.அக.)

கொடுக்குமதி பெ. கொடுக்க வேண்டியது. (யாழ்.அக.)

கொடுக்கை பெ. 1.கொடை. அங்கவள நாட்டை உடையாய் கொடுக்கை ஒழி (பாரத வெண்.269,4). விரும்பின கொடுக்கை பரம்பரற்கு என்று (பட்டினத்தார். பா.இடை.28,53). அயிங்கிதை ... கொடுக்கை ... நன்று (சிவதரு.சிவதரும.3). 2.தொடுக்கை. எதிரியுடனே சண்டை கொடுக்கையிலே (ஆனந்த.தினசரிச்.கு.3 ப.70).

கொடுகடி பெ. மிகுகூச்சம். (யாழ்.அக.)

கொடுகு[1]-தல் 5வி. 1.குளிரால் ஒடுங்குதல். மந்தை ஆடுகள் போலக் கொடுகிநிற்போம் (மலரும்.825). 2.குளிரால் நடுங்குதல். வாடையில் ஆடிக் கொடுகுவதும் ... வஞ்சகச் செய்கையோ (ஆசிய.ப.53). 2.பற்கூசுதல். (செ.ப.அக.)

கொடுகு[2]-தல் 5வி. கொடுமையாதல். கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் (தேவா.7,48,1).

கொடுகொட்டி பெ.1.பதினோராடல்களுள் திரிபுரமெரித்த காலையில் சிவனாடிய கூத்து. கொடுகொட்டி ஆடுங்கால் கோடு உயர் அகல் அல்குல் (கலித்.1,6). கொடுகொட்டி யாடலும் (சிலப்.6,43). கொடுகொட்டி பாண்டரங் கோடு சங்காரம் (திருமந்.2733). குண்டைப் பூதங் கொடு கொட்டி கொட்டிக்குனித்துப்பாட (தேவா.6,35,5). பரம னாடல் கொடுகொட்டி (அபி.மாலை 1988). சிவன்தான் ஆடிய கொடுகொட்டி ஆட்டத்தில் (முத்தளவி.உரை). 2.முருகனா டல். (யாழ்.அக.) 3.ஒருவகைப் பறை. பூதங் கொடுகொட்டி குடமுழாக் கூடியு முழவ (தேவா.1,75,4).

கொடுகொடு-த்தல் 11வி.1.மிகக்குளிர்தல். (யாழ்.அக.) 2.குளி ரால் நடுங்குதல். (செ.ப.அக.) 3.அவசரப் படுதல். (முன்.)

கொடுகொடுப்பு பெ. சினக்குறிப்பு, கடுகடுப்பு. சோதி முகத்தில் கொடு கொடுப்பும் (சமுத்திரவி.81).

கொடுகொடெனல் பெ. 1.கூதிர்நடுக்கக்குறிப்பு. (யாழ்.அக.) 2.சினக்குறிப்பு. (நாட்.வ.)

கொடுங்கண் பெ. 1.கொடுமை. (இலக்.சொல்.அக.) 2.தீமை விளைவிக்கும் பார்வை, கொடும்பார்வை. (நாட்.வ.) 3.வளைந்த இடம். கொடுங் கண் இஞ்சி (பதிற்றுப்.16,1).

கொடுங்கரி பெ. பொய்ச்சாட்சி. (யாழ்.அக.)

கொடுங்கனவு பெ. கனவில் காணும் பயங்கர பொய்த் தோற்ற காட்சி. (கலைச்.அக.2 ப.30)

கொடுங்காய் பெ. (வளைவுள்ளகாய்) வெள்ளரி. வாள்வரிக் கொடுங்காய் பசுங்காய் (சிலப்.16,25).

கொடுங்காயம் பெ. பயங்கர காயம். கொடுங்காயம் பட்டதும் என் பாவமே (அந்தோனி.அண்.13).

கொடுங்கால் பெ. 1.காரி என்னும் வள்ளலின் கடற்கரை ஊர். நெடுந் தேர்க் காரி கொடுங்கால் முன்துறை (அகநா.35,15). துப்பாய் நின்றான் கொடுங்கா னெடுங்காரி (பாரிகாதை 568). 2.குடிலில் இடப்பட்ட கொடுங்கை. கொடுங்கால் விலா என்பு கோலி (அறநெறி.124). 3.உள்வளைந்தகால். கொடுங்காற் சிலையை (கு.சோ.உலா 496). 4.ஈன்ற புதுக் கன்றின் முன் கால்களில் காணப்படும் வளைவு. (நாட்.வ.)

கொடுங்காலம் பெ. கொடுமையானகாலம். (யாழ்.அக.)

கொடுங்காறல் பெ. சுதுப்புநாங்காறல், ஒருவகை மீன். (நாட்.வ.)

கொடுங்கீறு பெ. கிழித்தசிறுகீற்று. (யாழ்.அக.)

கொடுங்கு-தல் 5வி. →கொடுகு[1]-தல். (யாழ்.அக.)

கொடுங்குழை பெ. வளைந்த காதணி. கொடுங் குழைக்கு அமர்த்த நோக்கு (பதிற்றுப்.81,29).

கொடுங்குளிர் பெ. கொடுமையான குளிர்ச்சி. கொடுங் குளிர்க் காற்று வந்து (குசேலோ.452).

கொடுங்குன்றம் பெ. →கொடுங்குன்று. வன் கொடுங் குன்றம் பூவணம் (பெருங்.87). கொடுங் குன்றத்தெம் ஊதியமே (திருவருட்பா 1962,198).

கொடுங்குன்று பெ. திருக்கொடுங்குன்றம், பிரான் மலை. கொடுங்குன்றுங் கொப்பூழ் அங்க மேதிருச் சுழியல் (திருவிளை.பு.நகரச்.2).

கொடுங்கை பெ. 1.வளைவு. கொடுங்கையாழ் குழலினிசை தில்லைச் (சிவகாமி.பிள்.9,7). 2.வளைந்த கை, மடித்த கை. உள்ளங்கை கொய் மலரைக் கொடுங்கை யினால் அணைத்து (நள.177). இந்திரா மந்திரமேற் றளநெடிய கொடுங்கை திங்கள் நுழை மங்கல சாளரம் (ஞான.உபதேசகா.1172). மன்னர் மன்னவன் கொடுங்கைமேற் றுயின்றனள் (நைட.கான்புகு.21). மாத்திரைக் கோலக் குறக்கூடை கொடுங்கையில் ஏற்பரித்தே (சிதம்.குற.20). மற்றைத்துகில் கொடுங்கை தாங்கினாள் (தெய்வச்.விறலி.தூது 267). பேய்

கொடுங்கையிலும் நின்று இழுத்து (இரட்.சரி.134). குருட்டுப் பேயின் குடல் நிறையக் கொடுங்கை தன்னிற் சொரியரே (வங்கத்துப்.11,5). 3.பிச்சைக் கேந்தும் வளைந்த கை. வஞ்சகை ப[illegible]யற்க நீள் கொடுங்கை (திருவருட்பா 18,3). 4.வீடு முதலியவற்றின் வெளிப் புறம் நீண்டு வளைந்துள்ள உறுப்பு. தொல்லைத்திருக் கொடுங்கை பொன் வேய்ந்தான் (பெருங்.1059). மீனாட்சி சந்நிதிக் கோபுரக் கொடுங்கை மட்டும் (திருவால. திருப்பணி.97). அச்சுமச்சுக் குத்துக்கால் கொடுங்கை ... சிங்காசன முதலாகிய நவரத்தினம் (கோலாசல.பு.152 உரை). மரகதக் கொடுங்கை சுற்றமைய வைத்தனன் (திருத்தணிகைப்பு.வள்.12). மாமணி உத்திரக் கொடுங் கைகள் அமைத்து (திருவெண்.பூரா.1,4). குருமணி நீலகி கொடுங்கைகள் அமைத்து (வருணா.குற.10). கோபுரம் கொடுங்கை நீளணி மண்டபம் (அய்யன்.பிள்.42). கொடுங்கை தன்னில் படுத்திருந்த கோதை லெட்சுமி (அயோ.கதை ப.297). 5.கொடுமையான கை. கொடுங்கையவரோடு நண்ணுவரே (திரிசிரா.அந்.82).

கொடுங்கைத்தாடி பெ. நீண்டு வளைந்த தாடி. (வின்.அக.)

கொடுங்கொடிச்சிலை பெ. மஞ்சட்கல், ஒருவகை மஞ்சள் நிறக் கல். (யாழ்.அக.)

கொடுங்கோண்மை (கொடுங்கோன்மை) பெ. முறை தவறிய ஆட்சி. கொடுங்கோண்மையாவது கொடுங் கோன்மை யால்வரும் குற்றம் கூறுதல் அதுமுறைமை செய்யாமை ... எனப் பலவகைப்படும் (குறள்.56 மணக்.அதி.அவ.).

கொடுங்கோப்பிச்சிலை (கொடுங்கோபிச்சிலை) பெ. →கொடுங்கொடிச்சிலை. (போகர் நி.33)

கொடுங்கோபிச்சிலை (கொடுங்கோப்பிச்சிலை) பெ. →கொடுங்கொடிச்சிலை. (வின்.அக.)

கொடுங்கோல் பெ. 1.→கொடுங்கோண்மை. கொடுங் கோல் மறமன்னர் (இன்.நாற்.3). கொடுங்கோ லுண்டு கோல் (சிலப்.23,11). செங்கோலைவிட்டு கொடுங்கோல் செலுத்தினமோ (நம்.திருத்தாலா.35). நல்குரவினும் செயல்வம் துன்பமாகும் முறை செய்யா அரசனது கொடுங்கோலின் கீழே குடிஇருக்கின்றன (குறள்.553 மணக்.). நீதிவிட்டனன் கொடுங்கோல் கொண்டான் (திருச்செங்.பு.3,11,4). நயம் செய்து உயிர் உண் கொடுங்கோலோ (தேம்பா.1,6,52). தரைமிசை கொடுங்கோல் நடவிய (சேலோ.253). பிறவு மெல்லா நெறிமாறுபடுமே ... கொடுங்கோல் வேந்தன் காக்கு நாடே (பெருந்.350). கொடுங்கோல் அரசின் குணமெலாங் காட்டி (அவளும் அவனும் ப.93). கொடுங்கோல் வீழ்க என்று ஊதேடா காளம் (புதுமைவே.7,7). 2.அநீதி. (யாழ்.அக.)

கொடுங்கோலன் பெ. நீதி நெறி தவறிய அரசன். இரணிய போல் அரசாண்டான் கொடுங்கோலன் (பாரதி.தேசியம்.52,2).

கொடுங்கோள் பெ. பின்புறணி. (யாழ்.அக.)

கொடுங்கோளூர் பெ.மேற்கடற்பக்கத்துச் சேரர்க்குரிய ஊர். கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூரும் (தொல்.சொல்.394 தெய்வச்.).

கொடுங்கோன்மை (கொடுங்கோண்மை) பெ. நீதி தவறிய அரசாட்சி. இவன் செய்யுற கொடுங் கோன்மை (அன்னீத.ப.45).

கொடுசூரி (கொடுசூலி) பெ. →கொடுஞ்சூரி. (செ.ப.அக.)

கொடுசூலி (கொடுசூரி) பெ. →கொடுஞ்சூரி. (முன்.)

கொடுசூலித்தனம் பெ. மிக்க மூர்க்கத்தன்மை. (முன்.)

கொடுசெல்(லு)-தல் 3வி. கொண்டு செல்லுதல். கொடு சென்று அளப்பதாக (மெய்க்.முதல் ராசேந்திரன் 16, 1034)

கொடுஞ்சி பெ. →கொடிஞ்சி-1. கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந் தேர் (குறுந்.212). பூண்ட பொன்னுகக் கொடுஞ்சிப் ... கடுஞ்செல லாழித் திண்டேர் (பெருங்.1, 48,15). இருவரு மாமணிக் கொடுஞ்சிய விவுளித்தேர் காலாள் (சூளா.709). நிரைசெலற் கொடுஞ்சி நன் னேமி யூர்தியும் (நீல.25). ஒற்றை யந்திகிரிக் கொடுஞ்சி (ஞான. உபதேசகா.25). பவளக் கொடுஞ்சி ஏற்றி (குருகூர்ப் பிள்.64).

கொடுஞ்சியோன் பெ. சூரியன். ஒற்றையந்திரிக் கொடுஞ்சியோன் அனந்தம் உற்றனன் (ஞானமிர். உபதேசகா.25).

கொடுஞ்சிலை பெ. வளைந்த வில். தொடுத்த கொடுஞ் சிலை நாண் தோள் புரளவாங்கி (பாரத வெண்.543). புருவக் கொடுஞ்சிலை துரப்பினும் (ஞானா.43,5).

கொடுஞ்சூரி பெ. மூர்க்கம் மிக்கவள். (வின்.அக.)

கொடுஞ்சொல் பெ. வன் சொல், கொடிய வார்த்தை. என்ன முன்னிறைஞ்சி யிவன் மொழி கொடுஞ்சொல் (பாரதம்.1,1,95). பாங்கி கொடுஞ்சொல் சொல்லலும் (இலக்.வி.527).

கொடுஞ்சொறி பெ. மிருகங்களுக்குக் காணுஞ் சொறி நோய் வகை. (செ.ப.அக.)

கொடுத்துவிடு-தல் 6வி. கொடுத்தனுப்புதல். (நாட்.வ.)

கொடுத்துவை¹-த்தல் 11வி. நம்பிக்கையா யொரு வரிடம் பொருளை வைத்தல். (செ.ப.அக.)

கொடுத்துவை²-த்தல் 11 வி. முன்பிறவியில் செய்த புண்ணியத்தால் நற்பேறு பெற்றிருத்தல். கூட்டத்திலே யார்தான் கொடுத்து வைத்தவரோ (கண்ண.திரை. பா.3,53).

கொடுத்துவை²-த்தல் பெ. பணம் முதலியன செலுத்துகை. (செ.ப.அக.)

கொடுதலைமடிப்பு பெ. →கொடுமுடிச்சு-1. (யாழ்.அக.)

கொடுதலைமுடிச்சு பெ. →கொடுமுடிச்சு-1. (செ.ப. அக.)

கொடுதலைவிற்பூட்டு பெ. →கொடுமுடிச்சு-1. (யாழ்.அக.)

கொடுதி[1] பெ. மடிப்புத்தொழில். (முன்.)

கொடுதி[2] பெ. மரஆணி. (முன்.)

கொடுந்தமிழ் பெ. செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்திருக்கும் நிலங்களில் வழங்கும் தமிழ்மொழி. கொடுந்தமிழ்ப் புணர்ச்சி வண்ணம் ஆயினும் (அறு.இலக்.77 யாப்பு).

கொடுந்தமிழ்நாடு பெ. கொடுந்தமிழ் பேசப்படுவன வாகிய தென் பாண்டி,குட்டம்,குடம்,கற்க, வேணாடு, பூழி,பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புன்னாடு என்னும் பன்னிரு நிலங்கள். (தொல். சொல்.400 சேனா.)

கொடுந்தலை பெ. வளைந்ததலை. (யாழ்.அக.)

கொடுந்தலைப்பொருவா பெ. ஆறங்குல நீளமும் பொன்மை கலந்த வெண்ணிறமும் உள்ள கடல் மீன்வகை. (செ.ப.அக.)

கொடுந்துயர் பெ. (மிக்கத்துயரம்) சாவு. குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டு (மணிமே.3,18).

கொடுந்துறை பெ. வளைந்த நீர்த்துறை. வண்டுவாழ் கொடுந்துறைக் கன்னி வாளைமேல் (சீவக.1443).

கொடுந்தொழிலாளன் பெ. யமன். கொடுந்தொழிலா ளன் கொன்றனன் குவிப்ப (மணிமே.100).

கொடுநா பெ. தீயநாக்கு. அவையார் கொடுநாத் திருத்தி நவையாக நட்டார் குழிசி சிதையாதி (பெருந்.580).

கொடுநாக்கு பெ. 1.தீயநாக்கு. (செ.ப.அக.) 2.தீய நாக்குள்ளவ-ன்-ள். (முன்.)

கொடுநாக்கெறி-தல் 4வி. விருப்பக்குறியாக நாவால் வாய்ப்புறத்தைத் துழாவுதல். (அகநா.56 உரை)

கொடுநாவி பெ. கொடிவேல். (சித்.பரி.அக.ப.85)

கொடுநிமித்தம் பெ. தீக்குறி. கொடு நிமித்தம் விண்ணகத்தே தோன்றினவே (பாரத வெண்.639).

கொடுநுகம் பெ. 1.கலப்பை. கொடுநுக மேழிக் கூற்றா கும்மே (பிங்.1628) 2.நுகத்தடி. கொடுநுக நுழைந்த கணைக்காலத்திரி (அகநா.350). 3.மகநட்சத்திரம். கொடுநுகம் ... மகத்தின் போங்கு (சுகர்நாடி ப.110). மகநாள் ... கொடுநுகம் (அபி.மாலை 95).

கொடுநெறி பெ. 1. தீயவழி. உம்முடைய சாமதந்திரத்தை வேதாகமங்கள் ... காடுநெறி என்று நிந்திக்கும் (கொலை. மறு.15 உரை). 2.இறுதியாத்திரைவழி. கூற்றங் கொண்டோடத் தமியே கொடு நெறிக்கட் செல்லும் யோழ்தின் (சீவக.1550).

கொடுநோய் பெ. மாட்டுநோய்வகை. (பெரியமாட்.117)

கொடுப்பரளை பெ. வாய்நோய்வகை. (பரராக.1,219)

கொடுப்பனவு பெ. 1.கொடுக்குந்தன்மை. (யாழ்.அக.) 2.பெண்ணை விவாகம் பண்ணிக்கொடுக்கை. (முன்.)

கொடுப்பனை பெ. →கொடுப்பனவு. (முன்.)

கொடுப்பினை பெ. 1.→கொடுப்பனவு. (முன்.) 2.அதிர்ட்டம். (தென்.வட.வ.) 3.வங்கமணல். (போகர் நி.33)

கொடுப்பீறி பெ. →கொடுப்புப்பீறி. (யாழ்.அக.)

கொடுப்பு[1] பெ. கதுப்பு. (வின்.அக.)

கொடுப்பு[2] பெ. 1.கொடுக்கை. (போகர் நி.3) 2.விளை யாட்டாக அடிக்கை. (வின்.அக.)

கொடுப்புப்பல் பெ. கடைவாய்ப்பல். (யாழ்.அக.)

கொடுப்புப்பீறி பெ. கதுப்பின் ஓரத்தில் உண்டாகும் சிலந்தி வகை. (வின்.அக.)

கொடுப்பை பெ. பொன்னாங்காணி. ஒன்றான வகைபத்தும் கொடுப்பைச் சாற்றில் ஊறவைத்து (போகர் நி.489). கோடைமழை பெய்யலையே கொடுப்பை தழைக்கலையே (தமி.நா.பா.ப.237).

கொடுபச்சை பெ.→கொடுப்பை. (சித்.பரி.அக.ப.85)

கொடுபடு-தல் 6வி. கடன் முதலியன செலுத்தப் படுதல். (செ.ப.அக.)

கொடுபாடு பெ. →கொடுதலை. (நாட்.வ.)

கொடுபோ-தல் 4/5 வி. 1.கொண்டுசெல்லுதல். துரோணரை யோணான் கொடுபோயிற்று என்றாரு சொல் வழுத்த (செயங்.சத.38). 2.கொண்டுவருதல். வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து வைத்தார (நள. 25).

கொடும்பகல் பெ. நண்பகல். (வட்.வ.)

கொடும்பசி பெ. மிகுந்தபசி. ஞானக்கனியை யஞ்ஞானக் கொடும்பசிக்குத் தின்றேக (திருக்குற்றா.மாலை 26).

கொடும்பனிக்காலம் பெ. பனி மிகுந்துள்ள மாசி பங்குனி மாதங்கள், கூதிர்காலம். கூதிர் காலமுங் கொடும்பனிக் காமு (பிங்.297).

கொடும்பாடன் பெ. கொடியவன். கண்ணறையன் கொடும்பாட னென்று ரைக்க வேண்டா (தேவா.6,78,9).

கொடும்பாடு பெ. 1.பொய். மன்றில் கொடும்பாடு உரைப்பானும் (திரிகடு.62). 2.நடுவு நிலைமை இல்லாமை. கொடும்பாடு உடையார் வாய்ச் சொல் (இன்.நாற்.6). கெடுமே கொடும்பாடு டையான் குடி (பழமொழி.194). 3.கொடுமைப்பாடு. கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை (சிலப்.15,121). 4.மாறுபாடு. கொடும்பாடு அறியற்க எம் அறிவு (பரிபா.2,76). 5.வழக்கழிவு. மன்றில் கொடும்பாடு உரையாத மாண்பு (இனி.நாற்.31).

கொடும்பாதகம் பெ. 1.அநீதம். (யாழ்.அக.) 2.கொடிய துரோகம். (முன்.)

கொடும்பாவி¹ பெ. 1.பாவம் செய்வதில் வல்லவன். கோதையைத் துகிலுரிந்த கொடும்பாவி வாசலிலே (புலந்.மாலை ப.15). 2.பெரும்பாதகன். சத்தியக் கல்லினைச் செயிக்குமாறு எண்ணி ஓர் கொடும்பாவி தடத்தில் மாய்ந்தவாறு உரைக்குதும் (திருவாமாத்.பு. பூர்வ.6,10). 3.அநீதன். (யாழ்.அக.)

கொடும்பாவி² பெ. 1.பஞ்ச முதலிய உண்டான காலங்களில் அவை தீரும்படி கிராமசாந்தியாகத் தெருக்களில்கட்டியிழுத்துக் கொளுத்தப்படும் வைக்கோலுருவம். தூதர் காய்ந்தே யிக் கொடும்பாவி தனை நரகத் தடுகின்ற காலையம்மா (ஞான. உபதேசகா.430). 2.வேண்டாதவர் ஒருவரைப்போல் உருவவைப்புள்ள ஒருமாதிரி வடிவம். (மானிட. கலைச்.அக.ப.93)

கொடும்பாவியிழு-த்தல் 11வி. (கிராமத்தில்) மழை இல்லாததனால் தீமைகளும் பாவங்களுமே அதற்குக் காரணம் என்று அதனைப்போக்க வைக்கோல் அடைக்கப்பட்ட பெரிய அளவினதான துணிப் பொம்மையினைக் கொளுத்தி இழுத்துச் செல்லுதல். கொடும்பாவி இழுத்தல் சடங்கில் பாடப்படும் பாடல் ஒன்று (மந்தி.ப.3 7).

கொடும்பாவை பெ. → கொடும்பாவி²-1. (செ.ப.அக.)

கொடும்பாளூர் பெ. புதுக்கோட்டை மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புள்ள ஓர் ஊர். கோனாட்டுக் கொடி நகரங் கொடும்பாளூர் (பெரியபு.54,2). தஞ்சைக்கோன் கொளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெறிந் தான் (பெருந்.1014).

கொடும்பி பெ. யானைக் கொம்பின் நடுப்பகுதி. (ஆசி.நி.98)

கொடும்பு பெ. 1.சிம்பு. வெண்சிறுகடுகளவும் கொடும் பில்லையாம்படி தீற்றி (மலைபடு.24 உரை). கோடுதல் வேறுழைத் தேள்திக் கொடும்பு அடைய வெகுநாட்டன் (கந்தரந்.27). 2.தவிட்டுப்பொடி. (செ.ப.அக.) 3.கொடுமை. (முன்.)

கொடும்புரி பெ. 1.→கொடிமுறுக்கு. (முன்.) 2.கடுஞ் சூழ்ச்சி. (வின்.அக.)

கொடும்புலி பெ. 1.சிங்கம். யாளி கொடும்புலி சிங்கம் (உரி.நி.29). 2.சிங்கராசி. (சூடா.நி.)

கொடும்புறம் பெ. வளைந்த முதுகு. கொடும்புற முதியாண் முன் போய்க் கூறுவார் (திருவிளை.பு.61,32).

கொடும்பை¹ பெ. 1.நீர் அருவி. (அக.நி.) 2.குளம். (முன்.) 3.குன்றம். (முன்.) 4.மதகு. (யாழ்.அக.) 5.தூம்பு. (சதுரக.) 6.பச்சிலைப் பூடுவகை. (யாழ். அக.) 7.தாமரை. (முன்.)

கொடும்பை² பெ. →கொடும்பாளூர். கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் (சிலப்.11,71). கொடிமாடத் தண்கொடும்பைக் கூடாத மன்னர் நெடுமா மதிலிடிந்த நீறு (பெருந்.1015). கொடி மாடத்தன் கொடும்பை (கல்.கலைச்.அக.ப.156).

கொடும்போக்கு பெ. வீட்டிற்குத் திரும்பிவருங் கருத்தின்றி வெளியேறுகை. (வட்.வ.)

கொடுமடி பெ. பண்டம் இடுவதற்காக வளைத்துக் கட்டிய மடி. கொடு மடி உடையர் கோற் கைக் கோவலர் (அகநா.54,10). இடையராயிற் கோற்கையும் கொடுமடி யுடையும் (தொல்.பொ.260 பேரா.). இடையராயின் கோல்கையும் கொடுமடி உடையும் (இலக்.வி.579 உரை).

கொடுமணம் பெ. ஆபரணத் தொழிலால் சிறப்புற்ற பழையதோர் ஊர். கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம் (பதிற்றுப்.74,5).

கொடுமணி பெ. கொடியமணி. நா நவில் கொடு மணி நல் கூர் குரலே (குறுந்.86).

கொடுமரம் பெ. 1.வில். கொடுமரம் பிடித்த கோடா வன்கண் ... ஆடவர் (அகநா.215,9). கொடுமரம் தேய்த்தார் (கலித்.12). கொடுமரங் குழைய வாங்கி (சீவக.2256). கொடுமரக் கொலை ஓர் (கல்லா.6,19). வில் கொடுமரம் சிலை (உரி.நி.142). கொடுமரத் தேய்த்தார் (தொல்.சொல். 71 நச்.). கூர் செயம்பு கொடுமரமாக (செ.பாகவத.4,3, 1019). கொடுமரம் வாங்கி அருசமர் கூட (அழகர்.கலம். 94,24). கொடுமரம் என்பது வில் லெனப்படுமே (அக. நி.கொமுதல் 4). கொளையுடுத்த கொடுமரத்தர் வரையாட்டின் குலமேய்ப்ப (திருக்குற்றா.பு.17,24). 2.தனுசுராசி. கொடுமரம் ... தனுசு (சுகர்நாடி ப.112). 3.ஏணிப்படி. கொடுமரம் பற்றி நெட்டிதண் பொலிந்தும் (கல்லா.22,38). 4.(இசையி.) கரகரப் பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கொடுமலையாளம் பெ. 1.அரிதிற்பொருள்படும் மலையாள மொழிவகை. (செ.ப.அக.) 2.கொடுமலை யாளம் பேசும் மலை நாட்டுப் பகுதி. கொடுமலை யாளக் குடியிருப் புடையேன் (மனோன்மணீ.பாயி.).

கொடுமறவி பெ. கள். (ஆசி.நி.174)

கொடுமுடி¹ பெ. 1.மலைச்சிகரம். அரங்கொள் வெம்பர லணிவரைக் கொடுமுடி யவைதாம் (சூளா.716). குலகிரியின் கொடுமுடிமேல் கொடிவேங்கைக் குறியெழுதி (பெரியபு.41,1). கார் தவழ் கொடுமுடி (பாரதம்.2,2,101). கொடுமுடித் தெய்வச் சிராமலை (திரிசிரா.அந்.6). கொடுமுடி என்பது மரையின் உச்சி (அக.நி.கொமுதல் 1). கொடுமுடி தங்குறு மிறாலின் ... தேறலும் (நீதிநூ.பு.2,8). சேண்பொலியுங் கொடுமுடிகாள் (பாமணிக் கோவை 12,1). 2.கோயில் முதலியவற்றின் சிகரம். கொடு முடியில்லாத மதசம் (பாரத வெண்.68). 3.உப்பரிகை. கோடுயர் மாடத்துக் கொடுமுடி (பெருங்.3,8.15).

4.பாண்டிக்கொடுமுடி. (செ.ப.அக.) 5.ஓர் அரசன், ஆமூரையுடையவன். கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடு மதில் (அகநா.159).

கொடுமுடி² பெ. கொடுமை. என் கூனதுவும் நிமிர்ந்திடவே நீ கொடுமுடிகள் செய்யலாமா (தமிழ்வில்.பா.ப.21).

கொடுமுடிச்சு பெ. 1.அவிழ்க்கமுடியாத முடிச்சு, படுமுடிச்சு. (யாழ்.அக.) 2.காரியங்களைக் கட்டுச் சுற்றாய் முடிக்கை. (முன்.) 3.கேடுசூழும்சூழ்ச்சி. (வின்.அக.)

கொடுமுடிந்தவழக்கு (கொடிமுடிந்த வழக்கு) பெ. →ஓயாத சிக்கல் வழக்கு. (வட்.வ.)

கொடுமுண்டி பெ. சொட்டைக்களா. (செ.ப.அக.)

கொடுமுறுக்கு பெ. 1.நூலின் மிகச் சுற்றியேறிய முறுக்கு. (முன்.) 2.சிம்பு. (செ.ப.அக.அனு.)

கொடுமூக்கு பெ. குமிழ்மா முதலியவற்றின் கனிகளில் உள்ள மூக்கு போன்ற பகுதி. அந்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி (நற்.6).

கொடுமூர் பெ. இராமநாதபுரத்திலுள்ள ஓரூர். வயற்சாலைக் கிராமங் கண்டான் தென் கொடுமூர் வேணாடச் செல்வன் றானே (பெருந்.1231).

கொடுமூலை பெ. எளிதில் அறிந்து செல்லக்கூடாத மூலையிடம். (வட்.வ.)

கொடுமை பெ. 1.குரூரம். எஞ்சாது எல்லா கொடுமை நுவலாதி (கலித்.42,25). கொள்ளா மாந்தர் கொடுமை கூற (புறநா.211,9). கொடுமை என்பது தகான் எனப் படுதல் என்றவாறு (இறை.அகப்.182,5 உரை). கொடுமை பல செய்தன (தேவா.4,1). கோணேச ... கொண்டனர் கொடுமை மாய (திருக்குடந்.பு.56,4). கொன்றான் வென்றான் கொடுமைகள் செய்தான் (அவளும் அவனும் ப.49). குழலிக் குற்ற கொடுமைகள் என்னும் அழலின் வெம்மையை ஆற்றுதல் எவ்வணம் (அனிச்ச அடி ப.58). 2.கடுமை. இருமையுங் கொடுத்தற் கொடுமை பற்றி (குறள்.188 பரிமே.). குறவருஞ் சாலைக் கொடுமையரே (திரிசிரா.அந்.59). என் பாவம் என் கொடுமை ஏது என்று எடுத்து பொழிவேன் (தாயுமா. பா.12,10). இடும் சாபம் கொடுமை களைத் தாங்கி நின்று (இயேசுகா.ப.98). 3.முரட்டுத்தன்மை. மனமொருப் படாத கொடுமையாற் ... குயிற்று நெடியபூசை (திருக்குமுக். பு.வசுதேவச்.71). 4.தீமை. நிம்பிரி கொடுமை வியப்பொடுபுற மொழி (தொல்.பொ.270). கொடுமைதான் பேணாமை செய்வார் கண் நிற்குமாம் (நான்மணி. 89).கொடுமையின் கடிய துன்பம் பின்னவர் பிறவி தோறும் பெற்றன (யசோதர.250). செவ்விய கணை கொடுமையைச் செய்யும் (குறள்.280 மணக்.). கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்ப (கம்பரா. கவா.). கொடுமையா லரவொப்பாரை ... புற்றவைதோறும் ... விழுத்துகின்றேன் (பகவற்.16,16). கோணேச ... கொண்டனர் கொடுமை மாய (திருக்குடந்.பு.56,4). கொடுங்குணத்தினோர் வாதானே (கொளஞ்.பிள்.3,10). சாகம் வருந்தி வரக் காதிருளி னன்மை செய்த கூகை பகற்பட்ட கொடுமையினால் ... மோசமென மாற்றானுக் கிடங்கொடேல் (ஆத்திசூடி வெண்.88). வடமொழியால் செந்தமிழை மாற்றும் கொடுமை படமுடியாதன்றோ (பாரதி.குயில்.ப.8). 5.கேடு. பத்தியில் லாதுகெட் டேனே கொடுமை பல படைத்தே (சிவகாமி.அந்.22). 6.துன்பம். முறுந்தவ ரென்றறியாதே கொடுமை பல செய்தனமியா (சானந்த.பு.5,18). மாலையின் கொடுமையை இப்பவன்றோ அறிந்தேன் (சோலை.குற.51). தீய அருரேசர் கொடுமைதீர எண்ணிக் (கொளஞ்.பிள்.2,1). எந்த கொடுமைகள் வந்தாலும் கலையாது இரு மனிதா (காவியப்பாவை ப.87). 7.துன்புறுத்துகை. பொய்யுங் கொடுமையு மாய்ப்போக்கி (சிவகாமி.அந்.33). 8.தகாமை, இரக்க மற்ற செயல். கொடியார் கொடுமை யின் தாம்கொடிய (குறள்.1169). புகழும் கொடுமையும் கிழவோன் மேன (இறை.அகப்.45). 9.அறனறியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி. நிம்பிரி கொடுமை வியப்பொடு (தொல்.பொ. 270 இளம்.). 10.→கொடுங்கோன்மை. (யாழ்.அக.) 11.பொல் லாங்கு. (முன்.) 12.கோட்டம், வளைவு. கொடுமையும் செம்மையும் வெம்மையும் தண்மையும் (பரிபா.4,50). 13.மனக்கோட்டம். என்னை மாலிட்டு வைத்து இக் கொடுமை தான் கொடுத்த மன்னன் மாலிட்ட மருந்தறிவார் இல்லையல்லோ (காஞ்கிஅம்ப.9). 15.நேர்மையல் லாத செய்கை, அநீதி. கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது (தொல்.பொ.145,25). 16.பாவம். இயைவது கரத்தலின் கொடுமை இல்லை (முதுமொழிக்.6,5). என் கொடுமை யிருட்டுக் கொண்டு நீடுவிழாவொடு (கோடீச்.கோவை 213). 17.வக்கிராந்த பாடாணம் (சங்.அக).

கொடுமைசொல்(லு)-தல் 5வி. இரக்கமற்றுப் பேசுதல். (வட்.வ.)

கொடுமைத்தானம் பெ. (சோதிட.) இலக்கினத்துக்கு எட்டாமிடம். (சங்.அக.)

கொடுமைப்படுத்து-தல் 5வி. மிருகத்தனமாக நடத்துதல். (ஆட்சி.அக.ப.145)

கொடுவரி பெ. வளைந்த வரிகளையுடைய புலி. கொடுவரி வழங்குங் கொடுயர் நெடுவரை (புறநா.135,1). கொடுவரி பாயத் துணை இழந்து அஞ்சி ... கோள்மாப் படுகை பார்க்கும் சுரம் (ஐந்.எழு.37). குஞ்சரம் பெருங் கொடுவரி கடுவிடை கொலைசூழ் (நீல.55). கரியுங் கொடுவரி யுங்கானி யாறுங் (அம்பி.கோவை 192). அஞ்சலம் யாந் ... கொடுவரி கேழற் குழாம் பொரு கொல்லையும் (தஞ்.கோவை 165). வடவரை வரைபடு

கொடுவரி உயரிய (தாக.பி.29). கரிகொடு வரிசேரடவியின் ... தடைந்தான் (சிவராத்.பு.6,28). கொடுவரி ஆனை அடர்ந்துறும் அ' று என (பழ.அந்.40). சோழன் குறிபடு வண்ணம் கொடுவரிக் கொடியை ஏந்துவென் (அனிச்சஅடி ப.126).

கொடுவரிக்கொடி பெ. சோழர்க்குரிய புலிக்கொடி. கொடுவரிப் பொற்கொடி யொன்றின் (கு.சோ.உலா 173-174).

கொடுவரிவேங்கை பெ. வளைந்த கீற்றினையுடைய புலி. கொடுவரி வேங்கையெய் ஆமான் (குசேலோ.173).

கொடுவா பெ. கடல் சேர்நீர் நிலைகளில் வாழும் ஒருவகை மீன், கழப்பு மீன். வலைய பிக்குது கொடுவா வயிறு பெருத்தது பேத்தை (பரத.வ.) கொடுவா திருக்கை (நீரரர்நி.2,2).

கொடுவா-தல் (கொடுவருதல்) 13வி. கொண்டுவருதல். கொடுவருதிர் இரதமெனக் கூற லோடும் (கந்தபு.1, 20,31).

கொடுவாக்கத்தி பெ. 1.கொடுவாய்க்கத்தி, பெரிய வளைந்த வெட்டுக் கத்தி (இலங்.வ.) கொடுவாய்க்கத்தி இட்டலித் தட்டுக் குண்டான் (குடும்பவி.1 ப.13). 2.வளைந்த சிறிய கூரிய கத்தி. அதோ மூலையிலே ஒரு கொடுவாக் கத்தி கிடக்குது (செ.ஒரு.ம.111,29).

கொடுவாட்கத்தி பெ. →கொடுவாக்கத்தி. (யாழ்.அக.)

கொடுவாமீன் பெ. →கொடுவா. (பரத.வ.)

கொடுவாய்[1] பெ. 1.1.வாள் முதலியவற்றின் வளைந்த வாய். கொடுவாய்க் குயத்து (சிலப்.16,30). 1.2.வளைந்த வாய். கொடுவாய்ப் பேடைக்கு அல்கு இரை தரீஇய (அகநா.3,4). வடிவாய வேலாற்கு மலர்ச்சின்னம் சொரிவனபோற் கொடுவாய கிளி கோதிக் குளிர் நறும்போது குத்தனவே (சூளா.171). 2.குறளை (கோள் சொல்லி). குஞ்சங் குறளை கொடுவாயே (உரி.நி.195). 3.பழிச்சொல். கன்னியர் காமியெனுங் கொடுவாய் (சீகாழித்.பு.கொச்சை.31). 4.ஐந்தடி நீளமும் சாம்பல் நிறமும் உள்ள மீன்வகை. (பரத.வ.) 5.புலிவகை. (வட்.வ.)

கொடுவாய்[2] பெ. தூங்கும் போது வாயோரம் வடிந்து காய்ந்த எச்சில் கறை, கோடைவாய். (நாட்.வ.)

கொடுவாயிரும்பு பெ. தூண்டில் முதலியவற்றிலுள்ள இரும்புக்கொக்கி. கொடுவாயிரும்பின் கோளிரை துற்றி (அகநா.36,2).

கொடுவால் பெ. ஒருவகை மீன். கொடுவால் உழுவை கும்பிளா (கதிரை.பள்.50).

கொடுவாவல் பெ. →கொடுவாய்[1]-4. (செ.ப.அக.)

கொடுவாள் பெ. 1.அரிவாள். சருவாணியும் கொடுவாள் கூறு கொழுமுட்டி கோடாலியுடன் (மேழி வி.76). கரும்பு வெட்டும் கொடுவாள் (இளை.இலக்.90). 2.மழு. வலக்கை யஞ்சுடர்க் கொடுவாள் பிடித்தோன் (சிலப்.23, 8). கொடுவாள் வட்டவாள் ... இவைவாள்வகை (கௌடலீயம் ப.283). கொடுவாள் கோடாலி தோளில்வைத்து அவ்வழி யாகவேதான் புறப்பட்டான் (சீவே.சரி.251).

கொடுவாளி பெ. ஒளிசெயல். (ஆசி.நி.199)

கொடுவாளை பெ. →கொடுவாய்[1]-4. (வின்.அக.)

கொடுவிடம் பெ. 1.கொடியநஞ்சு. கொடுவிடமாய் வடவையாய்ப் புகுந்து (குசேலோ.79). 2.வெள்ளைப் பாடாணம். (யாழ்.அக.) 3.தேள்கொடுக்கி எனும் பூடு. (வைத்.விரி.அக.ப.117)

கொடுவிழுதை பெ. பெரு நெல்வகை. (செ.ப.அக. அனு.)

கொடுவினை பெ. 1.பொல்லாங்கு. (யாழ்.அக.) 2.முற்பிறப்பிற் செய்த தீவினை. கொடு வினை கொல் தகை (பரிபா.5,6). கொடுவினையா ரென்றுங் குறுகாவடி (தேவா.6,5,2,).

கொடுவேரி பெ. →கொடுவேலி. செங்கொடுவேரி தேமா மணிச்சிகை (குறிஞ்சிப்.64).

கொடுவேலி பெ. சித்திரமூலம் என்னுங்கொடி. அரைகொடுவேலி (திருவ.16,1). குணமாக் கொடுவேலிச் சாற்றில் கோதி யரைப்பீரி (இலக்க.நான்காம்.64).

கொடுவை பெ. துட்டத்தனம். கொடுவைப் பசுக்களை (திருவாய்.4,8,4 ஈடு).

கொடூரம் பெ. குரூரம், கடுமை. (யாழ்.அக.)

கொடூரி பெ. கொடூரத்தன்மை நிறைந்தவ-ன்-ள். புல்லைதொழில் நிதமுமுற்ற கொடூரியாம் (புல்லையந்.72).

கொடை[1] பெ. 1.ஈகை.செலவினும் வரவினும் தரவினும் கொடையினும் (தொல்.சொல்.28). கொடை மடம் படுதல் (புறநா.142,5). கொடையளி செங்கோல் ... வேந்தர் கொளி (குறள்.390). முகிலனைய கொடைச் செம்பொன் (நந்திக்கலம்.11). வேழந்தரு கொடை வாணன் பொற்பரப்பினாற் (தெ.இ.க.8,97,2). கொடைக் கஞ்சியமுகி லாற்பொழிற் செம்பியர் (நாணிக். ஒருதுறைக்கோவை 215). உறையினோடு இகல் உவந்திடும் கொடை மறையினோடு இகல் முனிவர் மாண்பு (தேம்பா.1,1,35). தமிழ் நாவலர்கொண் மூவாய செங்கைக் கொடையாளி (சங்கர.கோவை 128). உன்னருங்கொடைக்கிறையவன்கொடாததொன்றுளதோ (சானந்த.பு.1,18). கொடையினால் உலகடக்கிய வேந்தர் (தென்காசி.பு.நகரச்.106). 2.நன்கொடைப் பொருள். கொடை போற்றலையே இரவலர் நடுவண் (பதிற்றுப். 79,2). 3.தியாகம். இல்லான் கொடையே கொடைப் பயன் (நாலடி.65). ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது (இறை.அகப்.11,25 உரை). கொடை யென்பது உயிரும் உடம்பும் ... கொடுத்தல் (தொல்.பொ.257 பேரா.). கலை நிலவியபுலவர்

களிடர்களைதரு கொடைபயில்பவர்மிகு (தேவா. 1,20,3). இடமிலி கைக்கொடைஇலி (திருப்பு.173). கொண்டலென நல்கிடும் கொடை (கொளஞ்.பிள்.2,6). கொடை பகை சிறப்புக் காதல் தகுதி (முத்துவீ.518). கன்னன் கடையிற் கொடை போல (ஓதிவி.2,15). காலம் கொடுக்கும் கழிபடர்க் கொடையினை ஏல்வதே யல்லால் எதிர்ப்பதி யாங்ஙனம் (அனிச்ச அடி ப.178). தார் வேந்தல் காணாத கொடையாய் என்றும் தமிழ்காக்கும் வள்ளால் (புலவர் உள்.ப.10). 4.(புறப்.) கைப்பற்றி வந்த பசுக்கூட்டத்தைப் பொருநன், பாணன், விறலி முதலியோர்க்கு விரும்பிக் கொடுத்தலைப்பற்றிக் கூறும் புறத்துறை. உண்டாட்டு உயர்கொடை புலனறி சிறப்பே (புறப்.வெண்.1,5). கொடைத் தொழில் யாவையும் உண்ணிலாவ உவந்து வழங்கினும் (சீவல. கதை 133). கொடை கொண்ட மதயானை உயிர் கொண்டு நடந்தது (கண்ணா.திரை.பா.1,174). 5.ஒற்றைப்பயன் கருதாது வழங்குகை. கொடை பகை நேர்ச்சி தகவு (நன்.298). 6.வழங்கும் தன்மை. கொடையே பகையை உறவாக்கும் (சிவஞா.காஞ்சிப்பு.புராண.15). கர்ணன் கொடைகளும் காதாற் கேட்டதே (அவளும் அவனும் ப.40). கொடைக்கரம் விரித்து நீட்டி (இயேசுகா.ப.93). 7.வள்ளன்மை. கொல்டையளி செங்கோல் குடியோம்பல் நான்கும் (குறள்.390). இடும்பை உடையார் கொடை இன்னா (இன்.நாற்.7). கரம் பயில் கொடையினர் (தேவா.1,124,7). தக்கோர் குணம் கொடை யால் (நல்வழி 16). கொடை விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு (நள.3). கார் நிகருங் கைக்கொடையே (சித்தேரி.அம்.2.க.18). முகத்துறை கண்டே தருங் கொடை (சங்கர.கோவை 30). உடையுண்டு கொடையு முண்டு (திருவருட்பா 28,2). 8.அன்பளிப்பு. அமுதமாம் கொடையை அளியுடன் நாடி (சென்னிமலை.ஆற்றுப். 167). முற்றிய பெருவளன் இன்றியும் முற்படு கொடை நிலை நின்றிட (பெரியபு.9,22). 9.அடி. (செ.ப.அக.) 10.வசவு. அவள் கொடுத்த கொடை ஏழுசன்மத்துக்குப் போதும் (முன்.). 11.அளிக்கை. குலவுவேற் சேரன் கொடைத்திறங் கேட்டு (சிலப்.23,62). 12.மனம். உவந்து கொடுக்கும் பொருள் தான் நீயும் நற்கொடையே (பஞ்ச.திருமுக.901). 13.சிறு தெய்வத்துக்கு மூன்று நாள் செய்யும் விழா. பேய்க்கொடை மட்டுக் கட்டில்லான் (முக்.பள்.86,2). நம்ம குல தேவதைக்குக் கொடை கொடுக்க நேர்ந்திடுங்கோ (மெச்சும்.கதை 375). 14.இறைப்பொருள். கொடை அளிக்கண் பொச்சாவார் (ஆசாரக்கோவை 66). 15.விலை. கொடையென கிளவி விலையென நுவல்வர் (பிங்.2293)

கொடை[2] பெ. குடை. கொடையாகக் கிரியை ஏந்தும் கொவிந்தா (திருவேங்.திருப்பா.7). கொடை போல்மலை யெடுத்து (சொக்க.பண.தூது 235). பொண்ணாளுக்கு கொடை விளக்க ஏத்திடுங்களே (கொங்கு நா.பா.2.ப.130).

கொடைக்கடம் பெ. கொடையாகிய கடமை. கொடைக் கடம் பூண்ட கொன்கைய னாகி (பெருங்.5,8,43). ஞாலத்துச் செம்மையின் வழாஅது கொடைக்கடம் பூண்டு (பெருந்.272).

கொடைக்கடன் பெ. கொடுப்பதாகிய கடமை. கொடைக் கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன் (பதிற்றுப்.20,23).

கொடைக்கானல் பெ. →கோடைக்கானல். (செ.ப.அக.)

கொடைக்குமேல் கொடை பெ. தலையில் நெற்றியின் நேரே மேலாக இருக்கும் சுழி. (தொ.வ.)

கொடைக்கை பெ. வீட்டின் முகடு. விடங்கமுங் கொடைக்கையு மஞ்சு முகடே (பிங்.669)

கொடைசாலி பெ. ஈகையாளன். (யாழ்.அக.)

கொடைத்தம்பம் பெ. தியாகத்திற்கு அறிகுறியாக நாட்டுந் தம்பம். (வின்.அக.)

கொடைநேர்[1]-தல் 4வி. மகளை மணஞ்செய்து கொடுக்க உடன்படுதல். ஆர்வுற்று எமர் கொடை நேர்ந்தார் (கலித்.104).

கொடைநேர்[2]-தல் 4வி. தேவதைக்கு விழாச் செய்யத் தீர்மானித்தல். (செ.ப.அக.)

கொடைப்பணக்காரன் பெ. மிகுந்த செல்வமுள்ளவன். (வட்.வ.)

கொடைமடம் பெ. வரைவின்றிக் கொடுக்கை. கொடை மடம் படுதல் அல்லது (புறநா.142,5). கொடைமடம் படுதல் (ஞானாமிர்.24,25). கிருட்டிண ராயன்கைபோற் கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்த லாமே (பெருந்.1243). மன்னன் கொடைமடம் தென்று குறிக்கொண்டு வந்தார் (பாரிகாதை 85).

கொடைமுடி பெ. சரக்கொன்றை. (சங்.அக.)

கொடைமை பெ. கொடைத்தன்மை, வள்ளன்மை. கொடுத்தீதல் எய்தி கொடைமை யானும் (தொல்.பொ. 65,3) கோபத்தை மிக்க பகடு அளித்தாய் உன் கொடைமை நன்றே (நாணிக்.ஒருதுறைக்கோவை 260).

கொடைமொழி பெ. (மொழியி.) மொழிக் கூறுக்களை ஏனைய மொழிக்குக் கொடுத்து உதவும் மொழி. (மொழியி.கலைச்.அக.ப.43).

கொடையடி-த்தல் 11வி. வண்டியில் இருக்கும் பொருள்களை இறக்கும் பொருட்டு வண்டியைப் பின்புறமாகச் சாய்த்தல். (புதுவை வ.)

கொடையாமடம் பெ. வரையாவீகை. (இலக்.சொ.அக.)

கொடையாளன் பெ. ஈகையாளன், வள்ளன்மை யுடையவன். ஈகையுள்ளவன் கோலக்கா மேவுங் கொடையாளா (திருப்பா.1962).

கொடையாளி பெ. →கொடையாளன். கொற்றவர் மெச்சுங் கொடையாளி (கும்மிப்பா.சீரணி.87). பெரியவர்

களுக்குத் தகுந்த கொடையாளியிடம் இருந்து எலும்பு மச்சையை எடுத்து (செய்தி.வ.).

கொடையான் பெ. →கொடையாளன். கற்பக தரு என்று ஏத்தத் தரும் கொடையான் (திரு ாலை.திருப்பணி.74).

கொடையெதிர்-தல் 4வி. 1.கொடுத்தலை மேற் கொள்ளுதல். குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி (தொல்.சொல்.99 இளம்.). 2.கொடுப்பதனையேற்றல். கொடையெதிர்க் கிளவியெனக் கொள்வோனாகவும் (இலக்.கொத்.ப.5).

கொடையொப்பாவணம் பெ. நன்கொடைச்சீட்டு. (ஆட்சி.அக.ப.133)

கொடையோடு-தல் 5வி. வெப்பம் மிகுதியால் பயிர் காய்தல். கோடை யோடின பயிரிலே (திருப்.அவ.மூ. பத்.2 ப.304).

கொடையோன் பெ. →கொடையாளன். வள்ளல் கொடையோன் வள்ளியோன் பெயரே (பிங்.864).

கொடைவஞ்சி பெ. (புறப்.) போரில் வென்றுகொண்ட பொருளைப் பாடிய பாணார்க்கு அரசன் பரிசாக அளிப்பதைக் கூறும் புறத்துறை. நீடவும் குறுகவும் ... பாடியபாணர்க்குப் பயந்த கொடைவஞ்சியும் (இலக்.வி. 606). பாணர் கொடைவஞ்சி (சுவாமிநா.133).

கொடைவரி பெ. நன்கொடை பொருளின் மீது விதிக்கப்படும் தீர்வை. (கலைச்.அக.2 ப.54)

கொடைவலம்படு-தல் 6வி. கொடையிற்சிறந் தோங்குதல். யாவிடும் கொடைப்படு வீரகொடைவலம் படுமின் (பெருந்.919).

கொடைவிழா பெ. சிறுதெய்வ வழிபாட்டில் வேண்டுதலுக்காக நடத்தப்படும் ஒருவகை நிகழ்ச்சி. (தமி.நாட்.கலை.ப.103)

கொடைவினா பெ. கொடுக்கும் நோக்கத்தோடு கேட்கும் வினா. சாத்தற்கு ஆடையில்லையோ என்பது கொடை வினா (நன்.385 உரை).

கொடைவீரம் பெ. தியாகத்தில் காட்டும் வீரம். நேர்ந்த கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட் படைவீர மோசென்னி பண்பு (பெருந்.587).

கொண்கன் பெ. 1.கணவன். கண்ணே போல் கொண்கள் பழிகாணேன் கண்ட இடத்து (குறள். 1285). கூடிய கொண் கன் குறுக (புறப்.வெண்.316). சடகோபன் குமரி கொண்கன் (சடகோபரந்.7). அறிவின் கொண்க (ஞானாமிர்.31,2). குருகு செறிமலர்க் கையுமை கொண்கன் (ஞான.உபதேசகா.67). தாமரைத்தலைவி கொண்கன் (செ.பாகவத.4,3,858). கடற்றுறைக் கொண்கனிசை (நாணிக்.ஒருத்துறைக் கோவை 270). ஓர் மடந்தை கொண்கனொடு கூடுங்கால் நெட்முயிர்ப்பு கொண்ட தென்னே (தனிப்பா.திர.1101). கொண்கன் என்றே மற்றத் திருமகளிர் சூழ முதன.மாலை 2,3). கொண்கர் தம் உள்ளக் குறிப்பு மாமே (அறு.இலக். பொ.33). 2.நெய்தனிலத் தலைவன். கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந் தேர் (குறுந்.212). நோய்க்கு மருந்து ஆகிய கொண்கன் (ஐங்.101). இமிழ் திரைக் கொண்க கொடியை காண்நீ (கலித்.125,11). கொடிகைக் கொண்கன் (சிலப்.23,11). தலைமகன் பெயர்-துறைவன், கொண்கன் சேர்ப்பன் (இறை.அகப்.20,22 உரை). குலவுப் படுகரையோ கண்டிலாய் கொலென் கொண் கரையே (கோடீச்.கோவை 263). 3.(இசையி.) கரகரப் பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கொண்கானம் பெ. ஒரு மலை. பொன் படு கொண் கான நன்னன் (நற்.391).

கொண்சாணிக்கொடி பெ. நஞ்சறுப்பான். (வைத். விரி.அக.ப.118)

கொண்ட இ.சொ. ஓர் உவம வாசகம். யாழ் கொண்ட இமிழ் இசை (கலித்.29,17).

கொண்டக்கடலை பெ. பருப்பு வகை. (தொ.வ.)

கொண்டக்காரன் பெ. மீன்வலைஞரில் ஒரு வகுப்பினன். (யாழ்.அக.)

கொண்டக்கிரி பெ. (இசையி.) ஓர்பண். (யாழ்.அக.)

கொண்டகச்சான் பெ. தென்கிழக்கிலிருந்து வீசும் காற்று. (தொ.வ.)

கொண்டகம்புகுதல் பெ. (புறப்.) தலைவனை மாலை யினாற் கட்டிக் கொணர்ந்து தலைவி தன்வீட்டிற் புகுதலைப் பற்றிக் கூறும் பகுதி. கொண்டகம் புகுதல் கூட்டத்துக் குழைதல் (புறப்.வெண்.16,7).

கொண்டகால் பெ. பிராணவாயு. குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கியே (திருமந்.482).

கொண்டகுளம் பெ. எட்டிமரம். (யாழ்.அக.)

கொண்டங்கட்டிப்பாய்ச்சு-தல் 5வி. அணைகட்டி மேட்டு நிலத்தில் நீர்பாய்ச்சுதல். (வட்.வ.)

கொண்டங்கொட்டு-தல் 5வி. கும்மியடித்தல். பொம்பளைங்க கொண்டங் கொட்டிக்கிட்டிருக்காங்க (தென்.ஆற்.மா.வ.).

கொண்டச்சாணி (கொண்டைச்சாணி) பெ. நஞ்சறுப்பான். (வைத்.விரி.அக.ப.118)

கொண்டடிக்கட்டு பெ. மீன்பிடிக்க பயன்படுத்தப்படும் கலம். திரைபடு மீன்பிடி கலந்தோறிணி கொண்டடிக்கட்டு இரண்டே (நீரரர்நி.3,3).

கொண்டதும்பை பெ. மலைத்தும்பை. (சித்.விரி.அக.ப.85)

கொண்டபாடு பெ. கோட்பாடு. நெறியின்றி ஒருவர் தம்மை மனத்தின்கட் கொண்டக் கால் அக்கொண்ட பாட்டினின்றும் மீட்டுத் தெருட்டுதல் (பழ.37 உரை).

கொண்டபாரம் பெ. 1.பொறுக்கும்பாரம். (வட்.வ.) 2.நிறைபாரம். (யாழ்.அக.)

கொண்டம்[1] பெ. 1.மேட்டு நிலத்தில் பாய்ச்சுதற்காகத் தேக்கிய நீர்நிலை. (வட்.வ.) 2.அணை. (செ.ப.க.அனு.) 3.தீமிதி குண்டம், பள்ளம். (மூன்று அழைப்புகள். 1969 ப.199)

கொண்டம்[2] பெ. கொண்டைச்சாணி. (மலை அக.)

கொண்டமுதலியார் பெ. கொண்டைகட்டி வேளாளர் என்னும் இனத்தார். விள்ளலெனும் கொண்ட முதலியார் (சங்.வி.தூது 65).

கொண்டமேய்-தல் 4வி. பட்டிமேய்தல். (செ.ப.அக. அனு.)

கொண்டயம் பெ. போர்க்கருவிகளுள் ஒன்று. ஈட்டி கத்தி கட்டாரி கொண்டயம் ... முதலானது (ஆனந்த. தினசரிச்.6 ப.14).

கொண்டருளு-தல் 5வி. கருதுதல். என்ன வழுக் கண்டாலும் இன்பமெனக்கொண்டருள்வான் (கூளப்ப. காதல் 9).

கொண்டல்[1] பெ. 1.கொள்ளுகை. உணங்கற் றலையிற் பலிகொண்ட லென்னே (தேவா.7,9,5) 2.மேகம். கொண்டல் வளர்ப்பக் கொடி விடு புகவினி (மதுரைக். 530). மழைக் கொண்டலுள் மின்னுப் புக்கு ஒளித்தாற் போல (இறை.அகப்.46,7 உரை). கல்லார் கொண்டல் பெயல் போலும்கணையின் மாரி கழல் வேந்தன் (கூளா.1343). நிரந்தரமுங் கொண்டல் பூமாரி பெய்யப் (நம்.திருத்தாலா.52). கொண்டலை அன்ன மென் பூங்குழல் (அம்.கோவை 68). கொண்டல் வாகனுங் குபேரனு நிகரெனக் குறித்து (பாரதம்.1,1,29) கொண்டல்கள் முழவின் ஆர்க்குங் கோதைவெள் ளருவி (பிரபு.லீலை 19,22). குலம் ஆன பெண்டிர்த்துணை மணம் மேல் கவி கொண்டல் உறும் (தாக.கோவை 7). பூணுதல் இழையிடங் கொண்ட தடமுலை மீதிளங் கோமதலை (திரிசிரா.அந்.66). வான் வளர் துளிநலம் வழங்கும் கொண்டலோ (தேம்பா.1,1,38). கொண்டல் நீல மேனியனை ... வீற்று டவீற்றாக வோட்டி வெரிந் கண்டேன் (மேகநா.1,14). 3.மழை. கோடையுங் கொண்டலுங் கண்டறியாத (அம்.கோவை 151,1). குறும்பிக் கொண்டலை (ஞானா.50,14). கொண்டலிற் படுமுத் தென்னத் தாரகை (கந்தபு.2,2,23). கோடையால் வற்றிப் பெய் கொண்டலால் பெருகு ஓடையால் நிகர்த்தன ஓகைச் சிந்தையான் (தேம்பா.1,8,36). 4.மழைக்காலம். கொண்டல் அவரைப்பூவின் (ஐங்.209). 5.திருமால். அந்தரங்க மொழியே வென்ற கொண்டல் (திருப்பு.371). கொத்தலர் துளவணி கொண்டல் கூறிய அத்தியும் (செ.பாவகத.4,617). சிலைதாங்கு மேரு மலைதாங்கு கொண்டறிருவடியி (நாணிக்.ஒருதுறைக்கோவை 255). 6.(அகப்.) கலம்பக உறுப்பினுள் ஒன்று. தலைவி பிரிந்து சென்ற தலைவன் பால் மேகத்தைத் தூது செலுத்துதல் தோன்றப் பாடுவது. கொண்டல் மருஞ்சம் பிரதம் வெண்டுறை (பன்னிருபா.129). 7.ஓர்விளை யாட்டு. (யாழ்.அக.) 8.மேடராசி. (செ.ப.அக.) 9.கொண்டற்கல். (சங்.அக.)

கொண்டல்[2] பெ. 1.கிழக்குத் திசையிலிருந்து மேற்கு நோக்கி வீசும் காற்று. கொண்டலின் தொலைந்த ஒண் செங் காந்தள் (குறுந்.185). கொண்டல் மா மழை பொழிந்த ... துளி (புறநா.34,22). கொண்டலொடு குரூஉத் திரைப் புணரி உடை தரும் எக்கர் (அகநா.10,8). கொண்டல் எண் திசையும் வரும் மாலுடன் (திருக்கோவை 326). கொண்டலையுந் தண்மலையே (திருச்செங்.பு. 1,3,17). கொண்டலாடி விலங்கல் கொண்ட குளிர்ந்த கொண்டல் பரந்தெழா (திருக்காவ. கலம்.58). கொண்டல் வரத்து உதிக்கும் (சிலேடை இலக்.ப.302). கோட்டை யலங்காரம் பார்க்கையிலே கொண்ட உறங்கிடும் பாங்குறவே (கட்ட.கூத்து ப.37). கருங்குழலோ கார்க் கொண்டல் (அம்பி.அமரா.ப.153). 2.காற்று. கொண்டல் கோடை யென்றிவை காற்றே (பிங்.23). 3.முன்பனிப் பருவத்தின் காற்று. (யாழ்.அக.) 4.கிழக்கு. (கப்.வ.)

கொண்டல்மிதித்தல் பெ. தீமிதிக்கை. (யாழ்.அக.)

கொண்டல்மேனி பெ. நீலத்தாமரை. (சித்.பரி.அக. ப.85)

கொண்டல்வண்ணன் பெ. (மேகம் போன்ற நிற முடைய) திருமால். கொண்டல்வண்ணனை (அமலனாதி. 10). பார்த்தனக் கொண்டல்வண் ணன்றனை ... பணிந்திது சொல்லுவான் (பகவற்.17,1). கொண்டல் வண்ணனுக் குரிய மருகன் (கதிரை.பள்.96).

கொண்டலடித்தல் பெ. மகளிர்விளையாட்டினொன்று. (யாழ்.அக.)

கொண்டலாத்தி[1] பெ. (இசையி.) கரகரப் பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.152)

கொண்டலாத்தி[2] (கொண்டிலாத்தி) பெ. 1. ஒருவகைக் குருவி. வெம்போர் துடங்கு கொண்டலாத்தி வலிசாக் குருவி (ஞான.உபதேசகா.1528). 2.குருவிவகைப் பறவை. (சென்.இரா.சொற்பட்டி.ப.102) 3.குருவி வகை. (செ.ப.அக.)

கொண்டலூர்தி பெ. மேகத்தை வாகனமாகக் கொண்ட இந்திரன். கொண்ட லூர்தியும் எதிர்த்தனன் (திருவிளை.பு.1,19). கொண்ட லூர்தியு மமரரும்பெறு ... வீறெலா ... மாதவத்திறலாம் (சீகாழித்.பு.பூந்தரா.3). கொண்ட லூர்தியும் விரிஞ்சனும் (மருத.பு.நகரச்.2).

கொண்டலூர்பவன் பெ. →கொண்டலூர்தி. குரவன் வாய் மாற்றங் ... கொண்டலூர்பவ னப்போதே (திருக்குடந்.பு.34,15).

கொண்டலை பெ. 1.சமுத்திரக்கடம்பு. (செ.ப.அக.) 2.மேகம். கொண்டலை யளவிய கோங்கு பூத்தவே (கந்தபு.2,29,18).

கொண்டவள் பெ. மனைவி. கொண்டவளின் மனசு என்றும் கணவனின் சொந்தம் (கண்ண.தீரை.பா.2, 265).

கொண்டவன் பெ. கணவன். கொண்டவனைப் பேணாத கொடும் பாவியானவர்கள் (சித்.புத்.கதை ப.5).

கொண்டவாகை பெ. மலைவாகை. (சித்.பரி.அக. ப.85)

கொணடற்கல் பெ. மந்தாரச்சிலை. (யாழ்.அக.)

கொண்டற்கிரி பெ. (இசையி.) செவ்வழிப் பாலையாற் பிறக்கும் பண்களுள் ஒன்று. (புதிய இரா.ப.38)

கொண்டற்குலம் பெ. மேகக்கூட்டம். கொண்டற்குலம் விளையாடிய கோவத்தன கிரியும் (செ.பாகவத.10,5,2).

கொண்டனிறத்தான் பெ. →கொண்டல்வண்ணன். தரணி யாவு முண்டகொண்ட னிறத்தானை (ஆளவந். காஞ்சிப்பு.3).

கொண்டாட்டக்காரன் பெ. 1.உற்சாகமுள்ளவன். (செ.ப.அக.) 2.தோழன். (வின்.அக.)

கொண்டாட்டம் பெ. 1.சந்தோம், மகிழ்ச்சி. கொம்மை முலை பகர் வார் கொண்டாட்டம் வெறுமைக்கு வித்து (நல்வழி.20). கொக்கிறகு சூடிநின்ற கொண்டாட்டம் பாரேனோ (பட்டினத்தார்.பா.அந்.60). பண்டாட்டங் கற்றுருகிய கொண்டாட்டம் பெற்றழி தரு (திருப்பு.80). கீலகத்தில் ... மானிடர்க்கு கொண்டாட்டம் (அறுபது வருட.42). சிறுவர்கள் தம் கொண்டாட்டம் (இயேசுகா. ப.63). செண்டாட்டம் சின்ன பொண்ணு கொண்டாட்டம் போடும் (கண்ண.தீரை.பா.3,13). குற்றங்கள் என்றால் கொண்டாட்டம் (பெண்கல்வி ப.37). 2.→கொண்டாட்டு-2. காதலன் கொண்டாட்டத் தாலே களித்து (சீவக.229 உரை). 3.உற்சவ முதலிய விசேடங்கள். (செ.ப. அக.) 4.சங்காத்தம். (யாழ்.அக.) 5.பொழுது போக்கு. (முன்.)

கொண்டாட்டு[1] பெ. 1.மகிழ்ச்சி. கொண்டாட்டு எனினும் மகிழ்ச்சி எனினும் ஒக்கும் (குறள்.அதி.112 அவ.மணக்.). 2.பாராட்டு. கொண்டாட்டும் குலம்புனைவும் (திருவாய். 4,9,3). கொண்டாட்டால் ஆள் அக்கிராமத்தால் அல்லல் பேர் பூணாமல் (நூற்றெட்.அந்.108). 3.சீராட்டு. (முன்.) 4.கொள்கை. (யாழ்.அக.)

கொண்டாட்டு[2]**-தல்** 5வி. செலவிடுதல். அங்குமிங்கும் கொண்டாட்டுவ தெல்லாம் (முக்.பள்.69,7).

கொண்டாடு[1]**-தல்** 5வி. 1.பாராட்டுதல். கொண்டாடுதல் புரியாவரு தக்கன் (தேவா.782,9). செற்றங் கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் (புறப்.வெண்.42). பயனில்லாத சொல்லைக் கொண்டாடு ஆசை மகன் என்னாது ஒழிக (குறள்.197 மணக்.). நளனை ... கொண்டாடினார் தம்மைக் கொல் க என்று (நள.288). மெய்ம் மாந்தர் தம்மை நயந்துகொண் டாடலில்லார் (பகவற்.16,14). அம்புவி கொண்டாடும் அறிவாரின் (தெய்வச்.விறலி. தூது 93). குத்துமணி விளக்கைக் ... கோமான் அமைச்ச ரெல்லாம் சென்று சென்று கொண்டாடி (காஞ்சி.அம். ப.14). அவனைக் கொண்டாடி விடைகொடுத்தான் (சிவஞா.காஞ்சிப்பு.விடுவ.9). தண்டாத சங்கத் தமிழழகர் முக்கூடல் கொண்டாடுங் கோனேரிக் கோன் (முக்.பள். 81). நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் என்று. (செ.ப.அக.). 2.உற்சவ முதலியன கொண்டாடுதல். குன்றவர் களிகொண் டாடக் கொடிச்சியர் துணங்கை ஆட (பெரியபு.10,39). 3.சிறப்பித்துப் பேசுதல். ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும் (பரிபா.தீர.11,1). 4.விளக்குதல். குரவெனுடுங் குழைகொண் மாதர் பாவை கொண்டு ஆடுகின்ற பருவத்தே பயின்ற காமன் (கூளா.167). 5.சீராட்டுதல். (யாழ்.அக.)

கொண்டாடு[2]**-தல்** 5வி. கூடிக்குலாவுதல். (செ.ப.அக.)

கொண்டாரணியம் பெ. நுழைய முடியாத பெருங்காடு. கொண்டாரணியமான பிரதேசம் (வட்.வ) .

கொண்டான் பெ. 1.→கொண்டவன். தற்காத்துத் தற்கொண்டான் பேணி (குறள்.56). கொண்டான் கொழுநன் உடன் பிறந்தான் ... நற்கு இயையக் காப்பார் (சிறுபஞ்.52). மடவிய ளானாற் கொண்டான் அறிவன் (திருமந்.2946). கொண்டானிற் பின்னையும் இருந்து சோறு தின்று வாழ்கிறாள் (இறை.அகப்.16,1 உரை). கொண்டானுக் கல்லால் இறவாத ஏந்திழையாள் (நள. 361). கொண்டானில் துன்னிய கேளிர்மற் றில்லைக் (தஞ்.கோவை 406). கொண்டார்குச் செய் தவம் வேறு (நீதிநெறிவி.80). மாலை கொண்டானை வண்டாருஞ் சிராமலை வாய் (திரிசிரா.அந்.88). மகளென்றே என்னை மறித்துக் கொண்டான் (முக்.பள்.155,4). கொண்டான் ... வாழ்க்கையிலும் ... நெய்யும் வெண்மலரும் பெண்டான் அணிய இயலாத பேரவலம் ... உண்டோ (அனிச்சஅடி ப.88). 2.ஓர்விளையாட்டு. (யாழ்.அக.)

கொண்டான்கொடுத்தான் பெ. கொண்டுங் கொடுத் துஞ் சம்பந்தஞ் செய்தோன். (நாட்.வ.)

கொண்டானடி-த்தல் 11வி. மகிழ்ச்சியால் கூத்தாடுதல். பேயெழும்பியெழும்பிக்கொண் டாடிக்க (இராமநா. 6,65 தரு 2).

கொண்டி[1] பெ. 1.கொள்ளை. கொண்டியும் பெரிது என (புறநா.78). மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கொண்டி (அகநா.10,1). கொண்டி மள்ளர் கொல் களிறு பெறுக (பதிற்றுப்.43,25). பல் பண்டம் பகர்ந்து வீசுந் தொல் கொண்டி (பட்டினப்.211-212). கொண்டிய வண்டு

கதுப்பின் குரல் உத (பரிபா.10,120). கொண்டி மறவர் மறலிக்கு உயிர் நேர்ந்தார் (தகடூர்யா.14). ஐவர் வன்கொண்டி கடந்த மேலோர் (சிவஞா.காஞ்சிப்பு. தழுவ.110). கொள்ளையின் பெயர் சூழற கொண்டி ஆமே (அபி.மாலை 228). 2.திறை, பகைவரிடமிருந்து கொள்ளப்படும் பொருள். கொண்டி வேண்டுவன் ஆயின் (புறநா.51,6). பகை வரை அடக்கி அவர்தம் பொருளைக் கவர்தல் அல்லது பகைவர் பணிந்து திறை செலுத்துதல் என்ற நிலையில் கொண்டி பெறப்பட்டது (பண்டைத்.வாழ்க்.நடவடிக்.ப.140). 3.களவு. கொண்டி யிலே பிடியுண்டு (திருவாய்.7,7,2 ஈடு). 4.கொள்ளுகை. ஐவர் கொண்டியிற்பட்டு மறக்கினும் (தேவா.4,95,6). 5.கொள்ளையிற் பெற்ற பொருள். கொண்டி மிகை படத் தண்டமிழ் செறித்து (பதிற்றுப்.63,9). பரிவு உடையளாகையாலே கொண்டியாடேபிடித்துக் கொண்டு (பெரியதி.தமிழாக்.2,10,196 வியாக்.). 6.மிகுதி.கொண்டி யுண்டித் தொண்டையோர் (பெரும்பாண்.454). தும்பையில் கொண்டிஎன்று இவ்வுலகில் ஆசைத் தொடக்கு அறுத்து (ஆண்டாள் பிள்.87). 7.உணவு. கட்கொண்டிக் குடிப்பாக்கத்து (மதுரைக்.137). 8.அடங் காத-வன்-வள்-து. கொண்டி யாயினவா றென்றன் கோதையே (தேவா.5,7,7). 9.பரத்தை. வீழ்ந்த கொண்டி மல்லன் மார்பு மடுத்தனன் (நற்.174). 10.கதவிற்குடுமி. (யாழ்.அக.) 11.சங்கிலி மாட்டும் இரும்பு. (செ.ப.அக.) 12.ஏர்க்கொழு மாட்டும் ஆணி. (முன்.)

கொண்டி[2] பெ. 1.மனவருத்தம். உனக்கு அவன் மீது என்ன கொண்டி இப்படியெல்லாம் அவதூறாகப் பேசுகிறாயே (முன்.) 2.பகைமை. நான் உண்மையைச் சொன்னேன், அவன் மீதுள்ள கொண்டியினால் ஒன்றுங் கூற வில்லை (முன்.). 3.புறங்கூறுகை. (முன்.)

கொண்டிக்கடுக்கன் பெ. காதணிவகை. (பரத.வ.)

கொண்டிக்கதவு பெ. குடுமிக்கதவு. (வின்.அக.)

கொண்டிக்காவல் பெ. புஞ்சை புறம்போக்கு நிலத்துக்கு ஊர்ப் பொதுவில் அமைக்கும் காவல். (ரா.வட்.அக.)

கொண்டிகை பெ. கமண்டலம். (சமய.அக.)

கொண்டிசொல்(லு)-தல் 5வி. →கொண்டிபேசு-தல். (நாட்.வ.)

கொண்டிடு-தல் 6வி. ஏற்றுக்கொள்ளுதல். கொண் டிடென் றொருத்திபூஞ் செண்டுகை உதவ (சேலோ. 375).

கொண்டித்தொட்டி பெ. →கொண்டித்தொழு. (செ.ப. அக.)

கொண்டித்தொழு பெ. பட்டிமாட்டை அடைக்குந் தொழுவம். (முன்.)

கொண்டிப்பசு பெ. அடங்காத பசு.கொண்டிப் பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப் போல (அக்நி.ப.86).

கொண்டிப்பணம் பெ. ஆடு மாடுகள் பட்டி மேய் தலுக்கிடுந் தண்டம். (வின்.அக.)

கொண்டிபேசு-தல் 5வி. 1.கோட் சொல்லுதல். (செ.ப. அக.) 2.குறை கூறுதல். (முன்.) 3.குற்றம் சுமத்திப் பேசுதல். (முன்.) 4.பகைமையால் கொடுமை பேசுதல். (முன்.)

கொண்டிமகளிர் பெ. 1.→கொண்டியர். வண்டிற்று உறக்கும் கொண்டி மகளிரை (மணிமே.18,109). 2.சிறைபிடிக்கப்பட்ட மகளிர். கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி (பட்டினப்.246).

கொண்டிமாக்கள் பெ. பகைவர் நாட்டைக் கொள்ளை கொள்ள வல்ல வீரர்கள். ஆள்வினைக் கொண்டி மாக்க ளுண்டியின் முனிந்து (பெருந்.453).

கொண்டிமாடு பெ. பட்டிமாடு. (யாழ்.அக.)

கொண்டிமேய்-தல் 4வி. பட்டிமேய்தல். (செ.ப.அக.)

கொண்டியம் பெ. குறளை, இழிப்புரை. குறளை கொடுவாயே கொண்டியம் (உரி.நி.195).

கொண்டியர் பெ. பரத்தையர். வேசிக் கொண்டியர்க்குட் சண்டையிட்டு (திருவிடை.நா.ப.8,2).

கொண்டியாரம் பெ.1.இறுமாப்பு. (யாழ்.அக.) 2.செருக்கு. (செ.ப.அக.) 3.நிந்தைமொழி. (முன்.) 4.பிறர் காரியத்தில் தலையிடுகை. (முன்.) 5.சிறப்பு. (முன்.)

கொண்டியோட்டி பெ. கொண்டித்தொழுவுக்குப் பட்டிமாட்டைச் செலுத்துவோன். (முன்.)

கொண்டிரு-த்தல் 12வி. 1.பெற்று இருத்தல். கண் மூன்றுங் கொண்டிருந்த தொன்று (திருவருட்பா 1961). 2.முகசாடையில் அல்லது குணத்தில் குறிப் பிட்ட முன்னோரைப் பின்பற்றி அமைந்திருத்தல். பெண்கள் அப்படியே தகப்பனைக் கொண்டிருந்தார்கள் (சுயிரத்.ப.17). இப்பிள்ளை தாத்தாவையே கொண்டிருக் கிறான் (நாட்.வ.). 3.தன்னுள்ளே வைத்திருத்தல். துயர் கொண்டிருக்கும் பொழுதின்றி (திரிசிரா.அந்.5).

கொண்டிலாத்தி (கொண்டலாத்தி)[2] பெ. 1.ஒருவகைக் குருவி.(யாழ்.அக.) 2.குருவி வகைப்பறவை. (முன்.) 3.குருவிவகை. (முன்.)

கொண்டிலான் பெ. →கொண்டைக்கிளாறு. (முன்.)

கொண்டிழு-த்தல் 11வி. வழிநடத்துதல். தகப்பன் இறந்தபின் பெத்தமகன் தான் குடும்பத்தைக் கொண்டிழுக்கிறான் (இலங்.வ.).

கொண்டின்னி பெ. தும்பை. (சங்.அக.)

கொண்டீச்சுரம் பெ. பாடல்பெற்ற சோழநாட்டுச் சைவத் திருத்தலம். களிக்குங் கொண்டீச்சுரத்தமர்ந்த கோமானே (திருவருட்பா 1962,137).

கொண்டீர் இ.சொ. ஓர் அசைச்சொல். கண்டீர் என்றா கொண்டீர் என்றா (தொல்.பொ.419).

கொண்டு இ.சொ. 1.மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. வேங்கை மலர்சில கொண்டு ... கடவுள் வழுத்தி, கடுவன் ... சிறுசோல் கொண்டு ... மாரி மொக்குள் புடைக்கும் (ஐங்.275). குருநூல் வெளிச்சங் கொண்டு புரமன்று புவனமன்று பூதங்க ளன்று (கைவல்ய.1,39). அது கொண்டு கதிர்மதி கணம் போகுமோ (அறப்பளீ. 23). இருநாழி நெற்கொண்டே அறமெ லாம்நிறை விக்கும் (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.110). நெறி கொண்டே அன்பள்ளி யோங்கு மறிவுடையோர் (திருவருட்பா 1962,107). 2.முதல். அடியிற்கொண்டு முடிகாறும் (இறை.அகப்.3,45). 3.குறித்து. குடதிசைக் கொண்டு (சிலப்.10,34). கோடை போய்விட்ட சோபானங் கொண்டு (முக்.பள்.17,5). பீடுகொண்டு மன்னியு ரெல்லாம் வணங்க (திருவருட்பா 1962,23). 4.அசை நிலை. எனக்குமுன் றனக்குங் கொண்டு (திருவிளை.பு. 59,83). விருந்து செய்தார் உண்டு கொண்டு அவன் இருந்தார் (பஞ்சதந்.5,46).

கொண்டுகட்டுவியாபாரம் பெ. பண்டங்களை மலிந்த போது சில்லறையாக வாங்கிக் கட்டி விலையேறின காலத்தில் விற்கை. (நாட்.வ.)

கொண்டுகண்மாறு-தல் 5வி. நட்புக் கொண்டு புறக்கணித்தல். கொண்டு கண்மாறல் கொடுமையிற் றுவ்வாது (முது.காஞ்.37).

கொண்டுகூட்டல் பெ. (இலக்.) எண்வகைப் பொருள் கோளுள் செய்யுளின் அடிகள் பலவற்றிலும் உள்ள சொற்களைப் பொருளுக்கேற்ற இடத்தில் எடுத்துக்கூட்டிப் பொருள் கொள்ளும் முறை. ஆற்றொழுக்கு ... கொண்டு கூட்டல் ... உயர்ந்தோரே (சுவாமிநா.69).

கொண்டுகூட்டு பெ. →கொண்டு கூட்டல். யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை ஏற்புழி இசைப்பது கொண்டுகூட்டே (நன்.48). யாப்பினுள் பற்பல அடிகளினின்ற இருமொழிகளைப் பொருளேற்கு மிடத்துக் கூறு வதைக் கொண்டு கூட்டாகுமென்ப (முத்துவீ.1286).

கொண்டுகூட்டுப்பொருள்கோள் பெ. →கொண்டு கூட்டல். (யாப்.விருத்தி 95)

கொண்டுகூற்று பெ. (இலக்.) அயலார் நேரிற் சொல்வதாகக் கூறும்மொழி. கொண்டகூற்றாகக் கூறப்படுவனவும் (தொல்.பொ.115 உரை).

கொண்டுகொடு-த்தல் 11வி. பெண்ணைக் கொண்டுங் கொடுத்துஞ் சம்பந்தஞ்செய்தல். (செ. ப.அக.)

கொண்டுகொடுப்பனை பெ. பெண்ணைக் கொண்டுங் கொடுத்துஞ்செய்யும் விவாக சம்பந்தம். (முன்.)

கொண்டுகொடுப்பு பெ. →கொண்டுகொடுப்பனை. (முன்.)

கொண்டுசெல்(லு)-தல் 3வி. 1.எடுத்துச் செல்லுதல். (ஆட்சி.அக.ப.286). 2.ஓரிடத்திலிருந்து மற்றோரிடத் திற்கு கொண்டு போதல். (ஆட்சி.அக.ப.53). 3.நிர்வகித் தல். எனக்கு இனிமேற் கொண்டு செல்லாது (வட்.வ).

கொண்டுசெலுத்து-தல் 5வி. காரியத்தை வருந்தியும் முடிவுவரை நடத்துதல். (செ.ப.அக.)

கொண்டுணி பெ. குண்டுணி, கோட் சொல்வோன். (யாழ்.அக.)

கொண்டுதலைக்கழிதல் பெ. (அகப்.) தலைவியைத் தலைவன் உடன் கொண்டு போதலைக் கூறும் அகத்துறை. (தொல்.பொ. ப.64)

கொண்டுதொளுவு பெ. பட்டி. (தென்.கிளைமொழியி.)

கொண்டுநடத்து[1]-தல் 5வி. கொடுக்கல் வாங்கல் செய்தல். (செ.ப.அக.)

கொண்டுநடத்து-[2]தல் 5வி. கொண்டு செலுத்து-தல். (முன்.)

கொண்டுநிலை பெ. (அகப்.) குரவைக் கூத்தில் தலைவனது வரைவுவேண்டிப் பாடும் பாட்டு. குரவையுள் கொண்டு நிலை பாடிக் காண் (கலித். 39,29). என்றும்யாம் கொண்டு நிலைபாடி ஆடுங் குரவையை (சிலப்.24,12). 2.(அகப்.) புணர்ச்சி வேண்டி நின்ற தலைவனிடம் தலைவியின் நிலைமை கூறல். (மாறனகப்.37).

கொண்டுநிலைக்கூற்று பெ. (அகப்.) இறந்துபடாமல் தலைமகனைத் தாங்கிக் கூறுந் தோழியின் சொல். இதனைக் கொண்டு நிலைகூற்றென்னு சொல்வது (இறை. அகப.9 உரை).

கொண்டுபோ-தல் 4/5வி. 1.எடுத்துக்கொண்டு செல்லுதல். கொண்டு போவான் வந்துநின்றார் (பெரியாழ்.தி.2,2,7). சீதா தேவியைக் கொண்டு போன பாவி (இராமநா.6,6 தரு). அதைத் தன் தாயினிடத்தில் கொண்டுபோனாள் (பு.ஏற்.மத்தேயு 14,11). 2.கவர்ந்து செல்லுதல். செங்கண்மால் தான் கொண்டு போனான் (பெரியாழ்.தி.3,8,4). 3.அழைத்துச் செல்லுதல். குருடனை வெளியிற் கொண்டு போய்விடு (நாட்.வ).

கொண்டுமுதல் பெ. வியாபார மூலதனம். (செ.ப. அக.)

கொண்டுமொழி-தல் 4வி. அயலார்சொல்லை அவர் சொல்வதாகவே எடுத்துக் கூறுதல். (முன்.)

கொண்டுவா(வரு)-தல் 13வி. கூடவே ஆட்கள் அல்லது பொருள்கள் ஆகியவைகளைக் கூட்டி அல்லது எடுத்து வருதல். இயேசுவுக்குள் நித்திரை யடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார் (பு.ஏற்.தெச.எழு.நிரு 4,14).

கொண்டுவிடு-தல் 6வி. விலைக்குப் பெற்றுத் தானமாகத் தருதல். கொண்டுவிட்ட ... பிடாகை (தெ.இ.க.8,44,4).

கொண்டுவில்-தல் (கொண்டுவிற்றல்) 3வி. 1.அப்போதைக்கப்போது வியாபாரத்துக்காகப் பண்டங்களை வாங்கி விற்றல். கொண்டு விற்றல் கூலித்தொழில் (திருத்தணிகைப்பு.அகத்.197). 2.லேவாதேவி வியாபாரம் முதலியவை செய்தல். (நாட்டு.வ.)

கொண்டுவிலை பெ. லேவாதேவி விபாயாரம் முதலியன. (செ.ப.அக.)

கொண்டுவிற்கப்போ-தல் 4/5வி. வாணிபத்திற்கு வேற்று நாடு செல்லுதல். (நகர.வ.)

கொண்டுவிற்றல் பெ. எதிர்ச்செட்டு. (யாழ்.அக.)

கொண்டேசன் பெ. சுக்கு. (சித்.பரி.அக.ப.85)

கொண்டை[1] பெ. 1.மயிர்முடி. கருங்கொண்டை ரெண்டாய் (முக்.பள்.6,3) 2.மகளிரின் ஐம்பால் முடியுள் கூந்தலைத் திரளாகச் சேர்த்துக் கட்டும் முடிவகை. கொண்டைக் கூழைத் தண்தழைக் கடைசியர் (புறநா. 61,1). பிறன்வரைப் பூங்கொண்டை மாரைப் புணரு மவரும் (சூளா.1952). கொங்கவி ழைம்பான் மடவர்-சுருள் ... கொண்டை (புற.வெண்.223 உரை). முறுக்கி முடியும் கொண்டையையுடையீர் (தக்கயாகப்.13). உன் கொண்டை குலைத்துக் குறவேர்வு தந்த குளிர் சனையே (திருவாரூக்கோவை 77). கொண்டலெனும் கொண்டை (சங்கர.கோவை 230) கருமுகிலின் வார் கொண்டை (சுதிரை.பள்.2). கட்டிய கொண்டை வனப்புறு சென்னி (சரபேந்திர.குற.6). குடமல்லியாய்ப் பிறந்து கொண்டை யிலே போயிருப்பேன் (பவளக்.மாலை ப.33). கொண்டை முடிப்பதற்கே மணங் கூடு தயிலங்களும் ... (பாரதி.கண்ணன் பா.15,2). 3.சொருக்கு. (செ.ப. அக.) 4.பறவையின் தலை உச்சியில் பூபோல் காணப்படும் ஒருபகுதி, பறவைச் சூட்டு. கொண்டை பறிகொடுத்த கோழி போலானார்கள் (மின்.குறம்.ப.45). 5.தென்னை மரத்தின் உச்சிப் பகுதி. (கன்.தென்.வ.) 6.குழந்தைகளுக்கு உச்சிக் கொண்டை கட்ட உதவும் நார்வளையம். (முன்.) 7.மாட்டின் திமில். கொண்டைக்கு அலர் முடிக்கும் (சிலேடை இலக்.ப. 302). 8.எருது. (ஆசி.நி.111) 9.நாதசுர இசைக் கருவியில் ஊதும் பகுதிக் கருகுள்ள அணேகில் பொருத்தப்படும் சொட்டித்த கட்டுக் குழாய். (தொ.வ.) 10.ஆணி முதலியவற்றின் தலை. குத்து மணி விளக்குக் குறைவறவே தான் சமைக்க சந்தனத்தூண் தன்னைச் சதிராகத தானிறுத்தி ... இடையிடையே செப்புத்தகட்டுடனே செம்பொன் தகடுகளும் கொண்டை படுத்துக் கொங்கை வளைபரப்பி (காஞ்சி.அம்.ப.11) 11.மண்மேடை, வீட்டுத் திண்ணையில் அமைக்கப் படும் தலையனை. (தஞ். வ.)

கொண்டை[2] பெ. இலந்தை. (தேரை.வெண்.391)

கொண்டைக்கடலை பெ. பருப்பு வகைகளுள் ஒன்று. (கலைச்.அக.2ப.91)

கொண்டைக்கரிச்சான் பெ. உச்சிக் கூட்டுள்ள கரிக்குருவி வகை. (வின்.அக.)

கொண்டைக்காடு பெ. தரிசு நிலம். (கல்.வ.)

கொண்டைக்காரன் பெ. 1.தலைமயிரைத் திரளாக முடித்துக் கட்டியவன். (செ.ப.அக.) 2.மேன்மை யுடையவன். (நாட்.வ.) 3.செருக்குடையவன். (வின். அக.)

கொண்டைக்கிரி பெ. 1.செவ்வழி யாழ்த்திறன் வகை. (பிங்.1384) 2.முல்லைநிலப் பண் வகை. (பிங்.)

கொண்டைக்கிளாறு பெ. 1.குருவி வகை. (இலங்.வ.) 2.சடைக் குச்சு. (செ.ப.அக.)

கொண்டைக்குச்சு[1] பெ. கொண்டைக்கிளறு-2. (முன்.)

கொண்டைக்குச்சு[2] பெ. கொண்டையிற் செருகும் ஊசி வகை. (வின்.அக.)

கொண்டைக்குத்தி பெ. மகளிர் தலையணிவகை. கொண்டைக்குத்தி யருணால் கவின்சேர் திருகுபூ ... மாதரணியும் பூணே (நீரரர்நி.5,3).

கொண்டைக்குருவி பெ. ஒருவகைக் குருவி. (இலங்.வ.)

கொண்டைக்குலாத்தி பெ. →கொண்டலாத்தி. கொண்டைக்குலாத்தியும் மாடப் புறாவும் (திருக்குற்றா. குற.87,2).

கொண்டைக்கோல் பெ. 1.முனிவர்கள் கையில் உள்ளகோல். ரிசிகள் கொண்டைக் கோல் கொண்டாடுகை தவிர்ந்து (அம.4 பெரி.ப.53). 2.மகிழ்ச்சிக்குறியாக உயர்த்தியசைக்கும் ஆடை கட்டிய கோல். கொண்டைக்கோலொடு குணலை யிட்டார் (கோயிற்பு. இரணிய.130). 3.தலையிற் கொண்டையுள்ள கழி. (செ.ப.அக.) 4.ஆழத்திற்கு அறிகுறியாக நீரிடையில் நடுங்கோல். ஆழங்காலிலே இழிந்து அமிழ்ந்துவார் அவ்விடத்தே கொண்டைக் கோல் நாட்டு மாபோலே (திருவாய்.10,7,1 ஈடு).

கொண்டைகட்டி பெ. →கொண்டைகட்டி வேளாளர். (செ.ப.அக.)

கொண்டைகட்டிமறவன் பெ. மறவர் வகை. (முன்.)

கொண்டைகட்டிவேளாளர் பெ. விவாகத்தில் கொண்டையாகத் தலைமயிரை முடிக்கும் வேளாள வகையினர். (நாட்.வ.)

கொண்டைகரிச்சான் பெ. நெற்பயிரையழிக்கும் ஒருவகை நோய். (வேளாண்.வ.)

கொண்டைகரிச்சானோலை பெ. பனையின்வண்டு அரித்த குருத்தோலை. (தொ.வ.)

கொண்டைகருகல் பெ. நெற்பயிரை யழிக்கும் ஒருவகை நோய். (முன்.)

கொண்டைகுலைந்துபோ-தல் 4/5 வி. அவமானப் படுதல். (நாட்.வ.)

கொண்டைச்சன் பெ. →கொடைச்சான். (யாழ்.அக.)

கொண்டைச்சாணி (கொடைச்சாணி) பெ. நஞ்சறுப்பான். (முன்.)

கொண்டைச்சான் பெ. →கொண்டலாத்தி. (முன்.)

கொண்டைச்சி பெ. →கொண்டைச்சான். (வின். அக.)

கொண்டைச்சுத்தியல் பெ. தட்டார் கருவிகளுள் ஒன்று. (இலங்.வ.)

கொண்டைசாணிக்கிழங்கு பெ. நஞ்சறுப்பான். (யாழ்.அக.)

கொண்டைத்தலை பெ. மயிர்முடித்தலை. (முன்.)

கொண்டைத்தாவரம் பெ. →கொண்டை மாலை. (தி.பி.அ.825)

கொண்டைத்திருகு பெ. மகளிர் தலையிலணியும் செவ்வந்திப்பூ வடிவினதான திருகணி வகை. (செ.ப.அக.)

கொண்டைத்துலா பெ. கயிறு நழுவிவிடாதபடி கொண்டை கட்டிய துலாவகை. (வின்.அக.)

கொண்டைதிருகி பெ. கதவுக்குடுமி செருகுந் துவாரம். (முன்.)

கொண்டைநரம்பு பெ. முதுகுப்புறக் கழுத்திலுள்ள நரம்பு. (இராமநா.வ.)

கொண்டைப்பட்டை பெ. →கொண்டைத் தாவரம். (தி.பி.அ.825)

கொண்டைப்பனை பெ. கூந்தற்பனை. (மருத்.குண. 1 ப.266)

கொண்டைப்புல் பெ. மயிற்கொண்டை. (செ.ப.அக.)

கொண்டைப்பூ பெ. 1.→கொண்டைத் திருகு. (செ.ப. அக.) 2.சேவற் கோழியின் தலையின் மேல் பகுதியில் உள்ள ஒரு வகை அமைப்பு. (நாட்.வ.)

கொண்டைபழு-த்தல் 11வி. கதிரின் முனைப்பக்க நெல் பழுத்தல். (தொ.வ.)

கொண்டைமாலை பெ. பெருமாளுக்குத் தலையில் அணியும் அலங்கார புட்பம். (தி.பி.அ.825)

கொண்டைமாறு பெ. 1.மரத்தின் உச்சியிலிருந் தெடுக்கும் சிறு கள்ளி. (செ.ப.அக.) 2.கொண்டை போன்ற அடிப்பக்கமுடைய வளார். (முன்.) 3.கொண்டையுள்ள விளக்குமாறு. (முன்.)

கொண்டைமுசு பெ. பெரிய கருங்குரங்கு வகை. (வின்.அக.)

கொண்டைமுசுறு பெ. →கொண்டைமுசு. (செ.ப.அக.)

கொண்டைமேற்காற்றடிக்க வி.அ. குலைமயிரின் மேல் காற்று வீசும்படி உல்லாசமாய். கொண்டை மேற்காற்றடிக்கத் திரியப் பெறாதே (திருவிருத்.23 வியாக்.ப.150).

கொண்டையங்கோட்டைமறவன் பெ. →கொண்டை கட்டி மறவன். (செ.ப.அக.)

கொண்டையடுப்பு பெ. கூட்டடுப்பு. (நாட்.வ.)

கொண்டையன் பெ. உச்சி கொண்டையுள்ள பருந்து வகை. (இலங்.வ.)

கொண்டையாணி பெ. மேற்கொண்டையுள்ள ஆணி. (செ.ப.அக.)

கொண்டையூசி[1] பெ. குண்டூசி. (யாழ்.அக.)

கொண்டையூசி[2] பெ. →கொண்டைக் குச்சு[2]. (செ.ப. அக.)

கொண்டைவலை பெ. கடலின் கரையிலிருந்து வீசி மீசைப்பிடிக்கும் ஒரு வகை வலை. (நாட்.வ.)

கொண்டைவாகை பெ. வாகைமர வகை. (செ.ப.அக.)

கொண்டோடி பெ. 1.ஏற்றத்தில் துலாவையும் கொடியையும் பிணைக்குங் கயிறு. (யாழ்.அக.) 2.ஊரில் புதிய செய்திகளைக் கொண்டு சொல்லித் திரிந்து பரப்புபவ-ள்-ன். (இலங்.வ.)

கொண்டோள் பெ. காதற்பரத்தை. மடவன் அம்மநீ இனிக் கொண்டோளே (ஐங்.67).

கொண்டோன் பெ. 1.கணவன். முலையும் முகனும் சேர்த்திக் கொடோன் தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ (தொல்.பொ.77,16). கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப் பெண்டிர் (மணிமே.18,101). 2.நாயகன். (யாழ்.அக.)

கொண்ணை பெ. கொன்றை. (சித்.பரி.அக.ப.85)

கொண்துணி பெ. குட்டுணி, பிறரால் குட்டுண்பவ-ன்-ள். (யாழ்.அக.)

கொண்மூ பெ. 1.மேகம். மாமலை அணைந்த கொண்மூப் போலவும் (பட்டினப்.95). கருங்காண்மூ வாய் திறந்த மின்னுப் போற் றோன்றி (நாலடி.8). நீருடைக் கொண்மூ (பெருங்.1,43,101). பருவக் கொண்மூ (ஆல.பாசு.1,5). வானிறை கின்ற கொண்மூ வார்துளி தலைஇய பின்றை (கந்தபு.2,29,13). பெரும்போர் முடித்து நாமென வருதல்போல் மொய்த்தன கொண்மூ (திருவிளை.பு.நாட்டுச்.3). செந்திலில் கொண்மூ உயங்கு தோளினும் முந்தறும் (திருச்செந்.கலம்.62). கொண்மூ வருவிக்கும் பெரு மஞ்ஞை (சிவஞா. காஞ்சிப்பு.விம்மித.13). ஆரணக் கடலை யுண்டங் கமுதமே பொழியுங் கொண்மூ (முகியித்தீன் பு.415). கொண்மூ என்னும் கொள்கலம் கொண்ட அமிழ்து (மனோன்மணீ.ப.39). 3.மேகம் போன்ற யானை. நிலம் சேறு படுத்த கருங்கைக் கொண்மூ (ஞானாமிர். 48,4). 2.ஆகாயம். கொண்மூ மேகமா காய மிரண்டே (பிங்.3435).

கொணங்கு பெ. குறிஞ்சா. (செ.ப.அக.)

கொணசில் (கொணிசில்) பெ. கோணல், வளைவு. (நாட்.வ.)

கொணா-தல் (கொணர்தல்) 13வி. 1.கொண்டு வருதல். கொன்று அச்சிலம்பு கொணர்க (சிலப்.16,153). மடக்கொடியவர்கள் ... படப்பையிற் கொணர்ந்து பருமணி சிதறும் பாம்புர நன்னகர் (தேவா.1,41,8). குறவன் கைக்கொணருஞ் செந்தேன் (நக்.ஈங்.மலை.20). ஆயர் கொணர்ந்த அடு பாலின் தோயல் (நள.274). வாம்பரி கடாவித் திண்டேர் வலவனுங் கொணர்ந்தான் வையம் (திருவிளை.பு.5,6). இருகண்களும் உள்ளமுங் களிகூரக் கொண்டல்காள் ... குமரனைக் கொணர்வீரே (திருச்செந்.கலம்.15). கோதிலா வனத்தும் தன்னைக் கொணர்ந்த கால் விளையும் வெம்போர் (தேம்பா.1,4, 38). குருதி நீர்ப்பலி புவனநா யகரிடைக் கொணர்ந்து (ஆளவந்.காஞ்சிப்பு. 379). நிலத்தின் அடியில் நிகழினும் மறையை ... பொருந்து வழிக் கொணரும் ஒற்றர்கள் (அனிச்சஅடி ப.99). படை கொணர்ந்து இன்னல் செய்கிறார் (பாரதி தேசியம்.32). 2.வருதல். இனிய சோலைக்கு என்னைக் கொணர்ந்தாய் (முல்லைப்.ப.8). 3.எடுத்து வருதல். மனம் புகு வெம்பினித்தீரக் கொணர்ந் திட்ட மாமருந்தே (தீரிசிரா.அந்.74). நமக்கினிய பொருள் கொணர்ந்து (பாரதி தேசியம் 5,4). ஆக்கிக் கொணர்ந்த அறுசுவை உண்டிகள் (அவளும் அவனும் ப.122). 4.கதையிற்கொள்ளுதல். குன்ற மொன் றெடுத்தலுங் கொணர்ந்து கூறினார் (சூளா.1509).

கொணாரம் பெ. எருமையின் சத்தம். (செ.ப.அக.)

கொணாவாய்ப்பு பெ. மாடு, எருமைகள் திடீரெனக் கொள்ளும் களிப்பு. (ஒலிக்.அக.)

கொணிசல் (கொணசில்) பெ. கோணல், வளைவு. (வட்.வ.)

கொத்தச்சக்கை பெ. பலாப்பிஞ்சு. (செ.ப.அக.)

கொத்தடிமை பெ. 1.குடும்பத்தில் உள்ள அனைவரும் நாட்கூலிபெறும் உரிமையற்ற கூலியாட்கள், குடும்பத்தோடு அடிமையாகை. கொத்தடிமை யான குடி நான் பரபாபரமே (தாயுமா.பாபரக்.148). கொத் தடிமை பூண்டேன் குளிகையினால் (பஞ்ச.திருமுக. 845). 2.முற்றிலும் அடிமையாய் இருக்கை. பத்தடியிட்டு அன்பில் பணிந்தோரையும் தடுத்துக் கொத்தடிமை கொள்ளும் குருகையே (குருகை.35). கொத்தடி மைக்குடும்பர் அத்தனைபே ரும்வந்து (கண்.பள்.50). குதித்து நெளிந்தோடி கொத்தடிமை யின்றி (மனித.தேடு.ப.50). 3.வழிவழியாக பிறர்க்குக் கீழ்ப்படியும் ஆள். கொத்தடிமை யாக்கி குடிகுடியாய் ஆண்டு வரும் (புகை.தூது 42). கொந்து மொரு கொத்தடிமை நீக்கிடுதல் உங்கடனே (பாரதிதா. மூன்.இராப்.ப.173). விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் ஒப்படைப்பு (செய்தி.வ).

கொத்தடியான் பெ. பரம்பரையடியான். முத்தமிழ் நாட்டழகர் கொத்தடியான் (முக்.பள்.13,14).

கொத்தம்[1] பெ. →கொத்தமல்லி. (சங்.அக.)

கொத்தம்[2] பெ. எல்லை. எல்லை ... கொத்தம் ஆமெனக் கூறினர் (அபி.மாலை 1449).

கொத்தம்பரி பெ. →கொத்துமல்லி. (கல்.கலைச். அக.ப.157)

கொத்தமல்லி (கொத்துமல்லி) பெ. 1.சமையலுக்குப் பயன்படும் ஒரு வகை செடி. பச்சை பச்சைக் கொத்தமல்லி (தமி.நா.பா.ப.337). பருத்திகொத்த மல்லிகையும் பயறு (மேழிவி.142). 2.குழம்புணவின் கூட்டுப்பொருள்களுள் ஒன்றாகும் தானியம், பலசரக்கு வகை. கொத்தமல்லி மஞ்சள் முத்தக் காசு (திருவிடை.நா.ப.30,12). குடிப்பீர் குடிப்பீர் கொத்தமல்லி நீர் (பாரதிதா.மூன்.நல்ல.ப.127).

கொத்தமல்லித்தண்ணி பெ. கொத்தமல்லியிட்டு அவித்த நீர். (இலங்.வ.)

கொத்தமல்லியம்மை பெ. →கொப்புளிப்பான். (நாட்.வ.)

கொத்தமல்லிவசூரி (கொத்தமல்லிவைசூரி) பெ. →கொப்புளிப்பான். (செ.ப.அக.)

கொத்தமல்லிவைசூரி (கொத்தமல்லிவசூரி) பெ. →கொப்புளிப்பான். (யாழ்.அக.)

கொத்தமலி பெ. ஒரு சிவதலம். பூந்துருத்தி கொத்தமலி கண்டி குருகாவூர் (பெருந்.1459).

கொத்தமூரி பெ. →கொத்தமல்லி. உருளரிசி கொத்த மூரி என்றாற் போல (இறை.அகப்.29,1 உரை).

கொத்தரளி பெ. →கொத்தலரி. கொத்தரளி பூ பெடுத்தொ ஏலோலொக்கும்மி ஏலேலோ (கொங்கு நா. பா.2 ப.10).

கொத்தரி-த்தல் 11வி. கொடுத்திடுதல். (யாழ்.அக.)

கொத்தரிவாள் பெ. அரிவாள்வகை. (செ.ப.அக.)

கொத்தல் பெ. 1.பறவை முதலியன கொத்துகை. நெடுங்கணார் தோட்கிளி கொத்தலின் (சீகாளத்.பு. நக்கீர.30). 2.துன்பம். அப்பால் கொத்தலாயிரம் கோடியாலாயிர மென்று (ஆனந்த.தினசரிச்.குறி.3 ப.42).

கொத்தலரி பெ. அலரிவகை. (வின்.அக.)

கொத்தவரங்காய் பெ. உண்ணும் காய்க்காக பயிரிடப் படும் ஒரு செடிவகை. கொத்தவரங்காய் பொறியல் (கொங்குநா.பா.2 ப.58).

கொத்தவரங்காய்ப்பின்னல் பெ. கொத்தவரங்காய் போலக் குழந்தைகட்குப் பின்னும் பின்னல்வகை. (செ.ப.அக.)

கொத்தவரை பெ. →கொத்தவரங்காய். கொத்தவரைக் காய்கறிகள் கூட்டிப் பொரியல் இட்டாள் (பவளக்.மாலை ப.57). தேய்பிறை போல் கொத்தவரை வற்றல் (குடும்ப வி.2 ப.43).

கொத்தவன் பெ. முடக்கொத்தான். (சித்.பரி.அக.ப.85)

கொத்தவால்[1] பெ. 1.(உருது) நகரமுதலியவற்றின் காவற் றலைவன். (செ.ப.அக.) 2.முகலாயர் காலத்தில் காவல் துறைத் தலைமை அலுவலர். கொத்தவால் என அழைக்கப்பட்டார் (இந்.பண்பாடு 12 ப.191).

கொத்தவால்[2] பெ. சந்தைவிசாரணைகாரன். (யாழ். அக.)

கொத்தவாற்சாவடி பெ. 1.நகரமத்தியில் உணவுப் பொருள்கள் முதலியன விற்கப்படும் வியாபாரத் தலம். (செ.ப.அக.) 2.(உருது) டாணா, காவலிடம். (முன்)

கொத்தவாற்சேவகன் பெ. கொத்தவாலின்கீழ் வேலைபார்க்குங் காவலாள். (நாட்.வ.)

கொத்தழி-தல் 4வி. நிர்மூலமாதல். (வின்.அக.)

கொத்தள-த்தல் 12வி. 1.அறுவடை செய்தவருக்கு நெல்லைக் கூலியாகக் கொடுத்தல். (நாஞ்சில்.வ.) 2.கூலியாகத் தானியங் கொடுத்தல். கூலி வேலை செய்தால் கொத்தளக்குமாறு போல (சி.சி.2,21 மறைஞா.).

கொத்தளம் பெ. 1.கோட்டையும் அதைச் சார்ந்த இடங்களும். (ஆனந்த.தினசரிச்.3ப.13) 2.கோட்டை மதிலுறுப்புக்களுள் ஒன்று. கொத்தளக் கோட்டையும் சக்ரவாளமென (திருவால.திருப்பணி.4). முற்றங்கள் நீள் கொத்தளங்கள் (ஞான.உபதேசகா.1143). கோட்டை கொத்தளப் புரிசையும் (குருகூர்.பிள்.58). கோட்டை கடந்து கொத்தளமும் தாண்டி (பவளக். மாலை ப.18). கொத்தளம் ஆற்றுக்கு எந்தண்டையிலே இருக்கிறது (ஆனந்த.தினசரிச்.3 ப.152). கோட்டை கடந்து கொத்தளமும் தாண்டி (புலந்.மாலை ப.109). நாலு கொத்தள மெட்டுக்கும் பீரங்கி (வீர.கட்ட.கதைப்பா.ப.49). கொத்தளஞ் சேர்ந்த மஞ்சுச் சிகழி (முகியித்தீன் பு.1370). கொத்தளம் தாண்டி வாரான் குழந்தை தேசிங்கு (தேசிங்கு.கதை ப.17). கொத்தளத்தைக் கோட்டையினைக் ... யெல்லா அணுவாக்கி (மான்.தூது 99). கோட்டை கொத்தளங்கள் ... இடித்துத் தகர்த்து (பெண்கல்வி ப.61).

கொத்தளி பெ. →கொத்தளிப்பாய். (யாழ்.அக.)

கொத்தளிப்பாய் பெ. புற்பாய். ஆரைகொத் தளிப்பாய் (பிங்.1676).

கொத்தன்[1] பெ. சவண்டிக்கொத்தன். (செ.ப.அக.)

கொத்தன்[2] பெ. →கொத்தச்சக்கை. (நாட்.வ.)

கொத்தன்[3] பெ. 1.வேலையில் தலைமை ஏற்பவன். (ரா.வட்.அக.) 2.கட்டிட வேலை செய்வோன். மன்னிய கொத்தர்கள் தன்னுடனே (திருவிடை.நா. ப.57). தொழிலாளி தேர்வேலைக் கொத்தர்கள் (கண். பள்.31). வீடு கட்டுமொரு கொத்தன் விடுதி இல்லாமல் (மலரும்.850).

கொத்தனார் பெ. 1.அறுவடைக் குழுவின் (கொத்தின்) தலைமையாள். (ரா.வட்.அக.) 2.கட்டிட வேலை செய்வோர். கொத்தனார் சுத்துவேலை நானா நன்னாளே (ஏற்றப்.ப.80). வீட்டைச் செய்த கொத்தனாரும் அவரே (பெண்கல்வி ப.43). தெருவில் வீடுகள் கொத்தனார் வேலை (இளை.இலக்.87).

கொத்தனை பெ. கூட்டமாகச் செல்லும் சிறுமீன் வகை. கொத்தனை யுகளு நன்னீர் (பாரதம்.2,2,14).

கொத்தாள் பெ. 1.வயலில் தினக்கூலிக்கு வேலை செய்யும் ஆள். (வட்.சொ.வி.ப.119) 2.தானிய கூலி பெற்று வேலை செய்யும் ஆள். (ரா.வட்.அக.) 3.அடிமை. (செ.ப.அக.)

கொத்தான் பெ. 1.நத்தை. நத்தை கொத்தாள் (பிங். 2900.). 2.வாகைவகை. (புற.வெண்.8,2 கொளு உரை)

கொத்திடு-தல் 6வி. சோறிடுதல். குடவற்குந் தாட்டிக்குங் கொத்திட்டு மாய்வதல்லால் (பெருந்.1606).

கொத்தித்தின்னு)-தல் 8வி. மிகுதியாகத் துன்பப் படுத்துதல். (வட்.வ.)

கொத்திதழி பெ. சரக்கொன்றை. (தைலவ.135,26)

கொத்திப்பறத்து-தல் 5வி. துன்பப்படுத்தி வெருட்டுதல். (செ.ப.அக.)

கொத்திப்பறி-த்தல் 11வி. மண்வெட்டியால் வரப்பில் காணப்படும் புற்களைவெட்டுதல். (தொ.வ.)

கொத்திப்பிடுங்கு-தல் 5வி. →கொத்தித்தின்னு)-தல். (செ.ப.அக.)

கொத்திப்புரட்டு-தல் 5வி. மண்வெட்டியால் மண்ணை வெட்டிக் கீழது மேலதாக மாற்றுதல். (தொ.வ.)

கொத்தியரி-த்தல் 11வி. நாசமாக்குதல். (யாழ்.அக.)

கொத்தியிறக்கு-தல் 5வி. மண்வெட்டியால் உயரமான இடத்தில் இருந்து மண்ணை வெட்டித் தாழ்த்துதல். (தொ.வ.)

கொத்தியிறுக்கு-தல் 5வி. காலால் நன்கு பதப்படுத்திய சேற்றினால் வரப்பு அமைத்தல். (முன்.)

கொத்திலை பெ. நிலவேம்பு. (சித்.பரி.அக.ப.85)

கொத்திவை-த்தல் 11 வி. வரப்பு அமைத்தல். (தொ.வ.)

கொத்து[1] பெ. 1.கொத்துகை.(யாழ்.அக.) 2.கொத்து வேலை. (செ.ப.அக.) 3.கொத்தனது ஒரு நாள் வேலை. (முன்.) 4.கொத்துவேலை செய்பவன். (நாட்.வ.) 5.களை பறிக்க உதவும் சிறுமண் வெட்டி. தாறு கொழு ஒண்டி கொத்துக் கருவாணியும் கொடுவாள் (மேழிவி.76).

கொத்து[2] பெ. 1.1.பூ முதலியவற்றின் குலை, பூங் கொத்து. கொத்தார் மலர் குளிர் சந்தகில் (தேவா.1,12,1). கொத்துறு போது மிலைந்து (திருவாச.6,30). கொத்துலா மலர்க் கோதை (செ.பாகவத.4,5,62). மடற்கொத்து மாலை வனைந்து (மதுரைச்.உலா 297). கொத்தவர் தேடித் திரிவண்டுகோள் (ஆதி.வ.கோவை 21). கொத்தார் கருக்குழலார் (கூளப்ப.காதல் 14). 1.2.மயிர்க்கொத்து. (வைத்.விரி.அக.ப.118) 1.3.மரத் தின் குலை. கோடுங் கொத்து மரத்தின் குலையே (பிங்.2816). 2.1.கூட்டம். கொத்து உறும் மைந்தர் (குசேலோ.121). வாளரவச் சேடன் முடிக் கொத்து அசைத்து (திருவேங்.வண்டு.தூது 100). பஞ்சமலக் கொத்தறுமப் பா (ஒழிவி.10,10). கொத்துக் கொத்தாய்ப் பூவிருக்கும் (இளை.இலக்.62). 2.2.திரள். செல்வத் திரவியமும் செம்பவளக் கொத்தும் (திருவேங்.வண்டு. தூது 106). கொத்து இலகு சத்தம் (குருகூர்.பிள்.25). அனைத்துக் கொத்துப் பரிசனங்களும் (குருபரம்.). 2.3.தொகுதி. பசுநூல் கொத்தத்து வந்து குறுகாதன (தத்து.வி.1). கொத்தனை யுகளு நன்னீர்க் குருநிலக் கோமான் (பாரதம்.2,2,14). கொத்து வெம்பாதகம் (செ.பாகவத.6,1,17). கொத்துகந்தேறிச் சுரும்பார்க்கும் சோலை (சங்கர.கோவை 47). வாளரவச் சேடன் முடிக் கொத்து அசைத்து (திருவேங்.வண்டு.தூது 100). 2.4.தொகை. பன்னிரண் டாகிய கொத்துறும் பரிதியுங் கூறுருத் திரரெனா (திருச்செந்.பு.13,8). 2.5.அறுவடை செய்யும் ஆண், பெண் தொழிலாளர் குழு. (கோவை வ.) 3.பணி செய்யும் பிரிவு. (அரையர்.பின்னிணைப்பு 4) 4.இனம். கொத்துவகை யத்தனையுங் கூட்டி (முக்.பள்.66,3). 5.குடும்பம். அவன் கொத்துக் கொடியை அறிவேன் (வின்.அக.). 6.குடி. வான் கொத்தால் விளங்கும் உபய குலோத்தமன் (கப்.கோவை 69). 7.குலம். குரைகழல் நாடித் தொழுநெறி சேர் கொத்து அடியவர் தங்கள் துன்பங்களைந்தன (திருச்செந். கலம்.7,7). 8.திருமாலுக்குத் தொண்டு செய்வோர் செய்யும் தொண்டு. (தி.பி.அ.825) 9.சோறு. அரும் புக்கும் கொத்துக்கும் வந்தார் (தனிப்பா.திர.87,174). குடவற்கும் தாட்டிக்கும் கொத்து இட்டி (தனிப்பா.திர.166 காளமே.) 10.ஆடையின் மடி. (செ.ப.அக.) 11.தானியமாகக் கொடுக்குங் கூலி, தானிய தினக் கூலி. (ரா.வட்.அக.) 12.வண்டிக் கொத்தன். (செ.ப. அக.) 13.கைப்பிடி அளவு, ஒரு கொத்துச் சோறு கொடு (நாட்.வ.). 14.நாழி. (யாழ்.அக.)

கொத்து[3] **-தல்** 5வி. 1.1.பூமியைக்கிண்டுதல். கொத்திய மண் மீதில் விதைத்த விதை இருந்தால் (பஞ்ச.திருமுக. ப.14). கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை (விவிலி.லூக்கா 16,3). தோட்டங்கள் கொத்திச் செடி வளர்க்கச் சொல்லி சோதனை போடு (பாரதி.கண்ணன் பா.22,6). தோட்டங்கள் கொதுதற்குத் தொண்ணூறு பேர் (குடும்பவி. 2 ப.59). ஓராண்டளவும் யான் சுற்றிக் கொற்றி வேண்டுரழிட்டு (இரட்சணிய யாத்.1,9,110). 1.2.தோண்டுதல். கொதித்தெழுந்து தருக்களிறக் கொத்தியெடுத் தெத்திசையும் (திருவிளை.பு.18,12). 2.மண்வெட்டுதல். (யாழ்.அக.) 3.அலகால் குத்தி யெடுத்தல். கழுகு கொத்திக் களத்திடைக் கவிழ்ந்தனர் (காசிக.தக்கன்வேள்வியை 48). கொத்திக் கொறிக்குஞ் சித்திரச் சரணப்படைச் சேவற்கொடியோன் (திருச்செந். கலம்.11). வனக் கொக்குக் கொத்தி யெடுத்து (கதிரை. பள்.102). பழுக்கும் கொத்தி இழுக்கும் (சிந்.இலக். 3,225). மீனைக் கொத்திட ... கழுத்தைக் குறுக்கிக் கொள்ளும் கொக்கெனக் (அவளும் அவனும் ப.218). கொத்திக் கொத்தித் தின்னவா (மலரும்.247). கொத்தித் திரியும் அந்த கோழி (பாரதி.பல்வகைப்.2,3). அதை வந்த பறவைகளே கொத்திப் போகும் (இயேசுகா.ப.137). 4.இரைகொத்தியெடுத்தல். (யாழ்.அக). 5.குத்திக் கடித்தல். குருதிகுடித்துச் செறியூனைத் தின்றிடுமரவுங் கொத்தும் (சானந்த.பு.3,11). கோவைப்பழம் என்று நூறு கிளி வந்து கொத்தி எடுத்ததனாலே (கண்ண.திரை. பா.2,249). 6.எழுத்து முதலியன செதுக்குதல். (தொ.வ.) 7.வெட்டுதல். இறைச்சி யெல்லாம் கொத்தி அறுத்து (பெரியபு.36,65) ஆணை மத்தகம் கொத்தத் தோட்டி பாகனுக்கு ஈந்த வாறாம் (பஞ்ச.தந்.1,47). கொல்லிமலைப்பக்கங்களில் பலாக்காய் கொத்து கிறார்கள் (நாட்.வ.). 8.தீண்டுதல். குத்திக் கடித்தல் கொத்தும் பாம்புடன் குடியிரந்தேனே (கண்ண.திரை. பா.2,369). 9.குத்தியெடுத்தல். பக்கிக் கூட்ட முத்தணியு மணிமாலை கொத்தியபோற் பொற் குச்சு முகப்பிற் சேர்த்து (கோலாசல.பு.632). 10.தறித்தல். (யாழ்.அக.)

கொத்துக்கட்டி பெ. 1.மண்கட்டி. (இலங்.வ.) 2.இடமண். (யாழ்.அக.)

கொத்துக்கடலை பெ. குறுகிய காலத்தில் விளைவதும் ஒரே இடத்தில் கொத்தாய்ப் பிடுங்கிக்கொள்ளத் தக்கதுமான வேர்க்கடலை வகை. (நாட்.வ.)

கொத்துக்கணக்கு[1] பெ. கொத்தன் சம்பளக் கணக்கு. (மூன்.)

கொத்துக்கணக்கு[2] பெ. பரம்பரைக் கணக்கு வேலை. (மூன்.)

கொத்துக்கத்தரி பெ. 1.ஒருக் கத்தரி. (யாழ்.அக.) 2.சுண்டை. (செ.ப.அக.) 3.கொத்துப்பசளை. (வைத். விரி.அக.ப.118)

கொத்துக்கம்பு பெ. கம்பு வகை. (செ.ப.அக.)

கொத்துக்கரண்டி[1] பெ. கொத்து வேலைக்குரிய அரசிலைக்கரண்டி. (மூன்.)

கொத்துக்கரண்டி[2] பெ. →கொத்துச்சட்டி. (நாட்.வ.)

கொத்துக்காடு பெ. உழவினாலன்றிக் கொத்திப் பயிரிடுதற்குரிய நிலம். (முன்.)

கொத்துக்காரன்[1] பெ. வேலையாட்களின் தலைவன். தங்கப்பட்டுக் கொத்துக்காரன் தங்கறது தெய்யக்கடை (கொங்கு நா.பா.2 ப.93).

கொத்துக்காரன்[2] பெ. சவண்டிக்கொத்தன், சவண்டி தின்னும் பார்ப்பான். (செ.ப.அக.)

கொத்துக்காரி பெ. கோயிலிற் பரம்பரை உரிமை யுடைய தேவடியாள். (நாட்.வ.)

கொத்துக்கூலி பெ. 1.விவசாயத் தொழிகளின் பொருட்டுக் கொடுக்குங் கூலி. (செ.ப.அக.) 2.கொத் தர்க்குக் கொடுக்குங் கூலி. (முன்.)

கொத்துக்கோடரி பெ. கடப்பாரை. (ஆட்சி.அக.ப.216)

கொத்துக்கோரை பெ. கோரை வகை. (செ.ப.அக.)

கொத்துங்குறடு பெ. (கொத்துதற்குக் குறடுபோன்ற உறுப்புடைய) நண்டு. (யாழ்.அக.)

கொத்துங்குறையுமாய் வி.அ. அரைகுறையாய். (வின்.அக.)

கொத்துச்சட்டி பெ. காய்கறிகள் வைக்கும் நான்கு குழிகள் உள்ள பாத்திரம். (சோழ.செட்.வ.)

கொத்துச்சரப்பணி பெ. மகளிர் கழுத்தணி வகை. (செ.ப.அக.)

கொத்துச்சரப்பளி பெ. →கொத்துச்சரப்பணி.(முன்.)

கொத்துச்சரம் பெ.→கொத்துச்சரப்பணி. அலர் கொத்துச் சரமும் (பாகம் பிரியா.பிள்.9,9). வம்பு பவிழுங் கொத்துச் சரம்தூக்கி (திருவேங்.வண்டு.தூது 165).

கொத்துசவடி பெ. →கொத்துச்சரப்பணி. (நாட்.வ.)

கொத்துணி பெ. 1.பலர்க்குப் பொதுவான அடிமை. (செ.ப.அக.) 2.பலர்க்குப் பொதுவான தோட்டம். (முன்.)

கொத்துத்தாவடம் பெ. 1.பலவற்றைப் பிணைத் திருப்பது. (யாழ்.அக.) 2.→கொத்துத் தாழ்வடம். (முன்.)

கொத்துத்தாழ்வடம் பெ. பவளங்கள் இடையிட்டு முகப்பில் தங்கக்கட்டமைந்த உருத்திராக்கமாலை. (செ.ப.அக.)

கொத்துத்தூர்வை பெ. கொத்து தலாலாகுந் தரையின் இளக்கம். (இலங்.வ.)

கொத்துப்பசளை பெ. →கொடிப்பசளை. (செ.ப.அக.)

கொத்துப்பற்று-தல் 5வி. (கூலித்தானியம்பெறுதல்) பலனடைதல். (நாட்.வ.)

கொத்துப்பாசி பெ. பாசிவகையுளொன்று. (செ.ப. அக.)

கொத்துப்புடல் பெ. புடல் வகை. (வின்.அக.)

கொத்துப்புடோல் பெ. மஞ்சள். (வைத்.விரி.அக.ப.118)

கொத்துமல்லி (கொத்துமல்லி) பெ. 1.குழம்புணவின் கூட்டுப் பொருள்களுள் ஒன்றாகும் தானியம், பலசரக்கு வகை. (வைத்.விரி.அக.ப.118) 2.ஒரு வகைச் செடி. குடிக்க இனிய கொத்துமல்லி நீர் இறக்கி (குடும்ப வி.1 ப.7).

கொத்துமல்லிச்சம்பா பெ. கொத்துமல்லி அளவில் உருண்டையாய் மணமிக்க அரிசி தருவதாய் ஐந்தரை மாதம் அல்லது ஆறரை மாதங்களில் அறுவடையாகும் இருவகையான நெல்வகை. (நாட்.வ.)

கொத்துமலி பெ. →கொத்தமல்லி. (தீவா.)

கொத்துமாலை பெ. பல சரங்கள் சேர்த்து ஒன்றாகக் கட்டிய பூமாலை. கொத்துமாலை நிறைந்த பெரிய தோளினையும் (திருக்கோவை 391 உரை).

கொத்துமானம் பெ. நகாசுவேலை, நகை முதலிய வற்றிற் செய்யப்படும் அலங்கார வேலை. (செ.ப. அக.)

கொத்துமானவேலை பெ. →கொத்துமானம். (நாட்.வ.)

கொத்துவடம் பெ. ஒரு வகை அணிகலன். மாலையோ கொத்து வடமோ (மூவரை.தூது 289).

கொத்துவால் (கொத்தவால்) பெ. நகரமுதலிய வற்றின் காவற் தலைவன். (நாட்.வ.)

கொத்துவானம் பெ. மேகங்கள் கொத்துக் கொத்தாக உள்ள வானம். (வின்.அக.)

கொத்துவேலி பெ. முட்புதரும் செடிகொடிகளுமான வேலி. (நீரர்நி.4,1)

கொத்துவேலை பெ. 1.உளியாற் கொத்திச் செய்யுஞ் சித்திரவேலை. (யாழ்.அக.) 2.கட்டிட வேலை. (ஆட்சி. அக.ப.182)

கொத்துவேலைச்செம்பு பெ. வேலைப்பாடுள்ள செம்பு. (வின்.அக.)

கொத்தை பெ. 1.சொத்தை, பழுது. (யாழ்.அக.) 2.ஈனம். அவர் வமிசத்துக்குக் கொத்தையாங்காண் (திருவாய்.5,47 ஈடு). 3.நூல் முதலியவற்றின் சிம்பு. கொத்தையும் நெருடுமான சீலை (வின்.அக.). 4.அரை குறை. வெந்தது கொத்தையாக வாயிலிடு மாபோலே (திருவாய்.1,3,1 ஈடு). 5.குருட்டுத்தன்மை, குருடு. கண்ணாற் கொத்தை (தொல்.சொல்.63 சேனா.). கொத்தை தீர்ந்த குடீசகன் ஆகியும் (திருக்காளத்தி.பு. 20,19). மூங்கையாய்க் கொத்தை யாகி முடவனா யிடு மொருத்தன் (திருநெறிவி.75). 6.குருடன். கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து (தேவா.4,99,2). 7.குற்றம். சன் மத்துக்குக் கொத்தையும் அதற்குப் பரிகாரமும் (பரீவசன.ப.358). 8.கழிவு. (ரா.வட்.அக.) 9.அஞ்ஞானம். பித்தரசு பதையாத கொத்தை நிலை (நம்.ஏகா.உலா 6). கொத்தை மாந்தர் (சங்கற்ப. பாடாணவாதி சங்கற்ப.38). 10.பாவி. செத்தல்

கொத்தைத் சிதம்பரை (திருமாலை.4,4). அறிவற்ற சிந்திய சித்தக் கொத்தைப் பேய்கள் (சிவதர்ம. சிவஞான.84).

கொத்தைநூல் பெ. சிம்புவிழுந்த பருத்தி நூல். (வின். அக.)

கொத்தொலக்கை[1] பெ. மகளிர் விளையாடும் தட்டாங்கல் ஆட்ட முறை. (த.நா.விளை.ப.274)

கொத்தொலக்கை[2] பெ. பெருமாள் பிரசாத விநி யோகத்தில் ஒரு பகுதி. (தி.பி.அ.825)

கொதம்பு பெ. மரத்தில் தேங்காயை மூடிக் கொண்டி ருக்கும் பகுதி. (கண்.தென்.வ.)

கொதி[1] பெ. 1.நீர் முதலியவற்றின் கொதிப்பு. கொதியடக்கச் சிவிறி (தைலவ.வைத்.14). 2.வெப்பம். கனலில் நின்றதன் கொதி பொறுக்கினும் (அருணைக் கலம்.7). 3.1.உடம்பிற்காணும் காங்கை. (செ.ப. அக.) 3.2.காய்ச்சல். மாந்தக்கொதி, வாதக்கொதி (வின்.அக.). 4.→கொதிக் கழிச்சல். (மூன்.) 5.அசீர ணத்தால் உண்டாகும் வயிற்றுப்போக்கு. வயிற்றுப் போக்கு நிகழுவதை கொதி என்று நெல்லை சிதம்பரனார் மாவட்டங்களில் குறிப்பிடுவார்கள் (மந்தி.ப.184). 6.உக்கிரம். கொதியினால் வருகாளி தன் கோபம் (தேவா.7,70,4). 7.கோபம். (யாழ்.அக.) 8.வருத்தம். (வின்.அக.) 9.துக்கம். (யாழ்.அக.) 10.ஆசை. ஒண்ணு கண்ணெடுத்துப் பார்க்கச் கொதியாயிருக்கு காண்டு (இரண்டுபடி ப.49). 11.கோயிலில் நிவேதனத் துக்கான சோறு. (சகஅக.)

கொதி[2]**-த்தல்** 11வி. 1.நீர் முதலியன காய்ந்து பொங்குதல். கொதித்த அலைகடல் (திருப்பு.188). குண்டிகை யிருந்தநீருங் ... கொதித்த தன்றே (கம்பரா. 6,6,61). கொதித்து வீழ்தந்த ... வான்யாற்றை (சிவஞா. காஞ்சிப்பு.சிவபுண்.26,3). 2.வெப்பமாதல், வெப்ப மடைதல். கானமும் கல்லும் கடலும் எல்லாம் கொதிக் கத்தவம் செய்யும் (இராமானுச.நூற்றந்.14). எரியெனக் கொதியாப் பரிதி (கந்த பு.4,4,100). கொதிதாழ் சூற்படை யானை (திருக்குடந்.பு.43,10). கொதிக்கும் தீப்போன்ற வேலை ஏந்திய காஞ்சி மன்னனுடைய குடை (இலக்.வி. 615 உரை). கொதிக்க தென்றல் குளுகுளுப் பாக (அவளும் அவனும் ப.37). கொதிக்கும் நெஞ்சையும் குளிர் விக்கும் மாலை மறைந்தது (கா.கடமை.ப.18). நஞ்சு போல் தனது நெஞ்சங் கொதிக்க (மனோன்மணீ.3,1,171). வெய்யில் கொதிக்கின்ற நேரம் (பாரதிதா.22,1,3 கண்ணி). பூமி கொதிக்கிறது (நாட்.வ.). 3.சுடுதல். கொந்தழலில் வெந்து கொது கொதுவென கொதிக்கும் ... செம்புகள் திணிப்ப (யசோதர.290). கந்தரத்தண் குளக்கண்போல் கொதிக்கும் (அழகர்.கலம்.89). இரு கன்னமும் குளிர்ந்துங் கொதியா நிற்கும் (சங்கர.கோவை 171). மண்கொதிப்ப அறல் கெதிப்ப (குசேலோ.179). மூளை கொதிக்க வேலை செய்யாதே (புதுமைவே.11,128). கொதிக்கும் செங்கதிர் மேற்கில் நடந்தது (இளை. இலக்.15). தென்றல் கொதிக்குமோ (காவியப்பாவை ப.10). 4.கோபித்தல். கொடிய வேலான் கொதித்து அரங் கினீக்கு (சீவக.2587). விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக் கொதியாவரு கூற்றை யுதைத்தவர் (தேவா. 1,30,1). வேந்தனைக் கண்டு வடவைபோற் கொதித் தெழுந்து மருள (இறைவாச.பு.180). கொதித்துலாஞ் சுடுவன சுரத்துத் தொல்லா விஞ்சுந் திருவடியாளே (திருக்காவ.கலம்.59). 5.வயிறு நழுக்குதல். (வின்.அக.) 6.வெகுண்டெழுதல். மற்றவடன் கேள்வனுக்கு கீழ்மை கெடுக்கின்றேன் என்றான் கொதித்து (நள.157). நந்துயி ருய்ய நகைக்கதிர் பரப்பிக் கொதித்தனைத் திருளினைக் கொய்தீங் குதித்தனை (திருக்காவ.கலம்). குற்றங்களைக் கண்டு கொதித்தாளோ (கண்ண.திரை. பா.2,20). 7.வருத்தமுறுதல். கோதமன் றனக்குளங் கொதிக்குமாறு கூறுவான் (பாரதம்.1,3,67). கூத்து ஆடில் குற்றம் என்று என் நெஞ்சே கொதிக்கும் (தாயுமா.பா.43,37). கொதிபி றப்பிற் கொட்பு றாதென ... கருளிச் செய் (சிவஞா.காஞ்சிப்பு.பிறவா.3). குனிந்து வேலை செய்வோர் கும்பி கொதிக்கலாமோ? (மலரும். 852). அவன் செய்த தீங்கால் என் நெஞ்சு கொதிக்கிறது (நாட்.வ.). நெஞ்சு கொதித்துக் கொதித்து மெய் சுருங்கு கின்றனரே (பாரதி.தேசியம்.53,1). 8.வெதுப்புதல். நிறையுத்தே கொதியழற் சூட (சீகழித்.பு.பூத.10). 9.நடுங் குதல். (யாழ்.அக.) 10.ஆசைமிக்கக் கொள்ளுதல். காலன்...கொதித்து வாழ்நாள் பிடுங்காமல் அருள் ...பரம்பொருளை (சிவஞா.காஞ்சிப்பு.மணிகண்.67). மறவன் கொதித்த மறநிலையும் (இலங்.வ.613) தியகரத்து நாட்டிற் பரவுதல் கண்டுகொதித்தார் (பாரதிதா. மூன்.அகத்.ப.11). அவன் உன்னைப் பார்க்கக் கொதிக்கிறான் (நாட்.வ.).

கொதிக்கண் பெ. →கொடுங்கண். (செ.ப.அக.)

கொதிக்கழிச்சல் பெ. வெப்பத்தால் உண்டாகும் பேதி. (மூன்.)

கொதிகஞ்சி பெ. உலைநீரில் கொதிக்கும் அரிசியி னின்று வடிக்குங் கஞ்சி. (மூன்.)

கொதிகருப்பநீர் பெ. 1.சுடவைத்த இனிப்புச் சாராயம். (மூன்.) 2.சுட வைத்த பதநீர். (இலங்.வ.)

கொதிகளுப்பநீர் பெ. →கொதிகருப்பநீர்-1. (மூன்.)

கொதிகுடல் பெ. பசிதாங்கா வயிறு. (யாழ்.அக.)

கொதிகுடலன் பெ. பசி தணியாத வயிறுள்ளவன். (இலங்.வ.)

கொதிகெண்டி பெ. கைப்புடி வைத்த வெந்நீர்க் கொதிகலன். (நாட்.வ.)

கொதிகொதி-த்தல் 11வி. உலைப்பெய்த அரிசி முதலியவற்றினின்றும் கொதியெழும்புதல். (செ.ப. அக.)

கொதிகொள்(ளு)-தல் 2வி. வெப்புக் கொள்ளுதல். (யாழ்.அக.)

கொதித்திடு-தல் 6வி. மேல் எழுதல். கொதித்திடும் பாற்கடல் (தந்திவ்னப்பு.77).

கொதித்தெழு-தல் 1வி. கோபித்துப்புடையெழுதல். (தக்க.197 உரை)

கொதித்தைலம் பெ. முத்துக்கொட்டை முதலியவற்றை இடித்து நீரிற் கொதிக்க வைத்து இறக்குந் தைலம். (பைசச.3)

கொதிதண்ணீர் பெ. →கொதிநீர். (யாழ்.அக.)

கொதிநீர் பெ. 1.(சோறு ஆக்கும்போது) அரிசியைப் போட்டுப் பின்னர் பொங்கிவரும் நீர். சோற்றுப்பானை பொங்க கொதிநீர் குமுட்டி யிலுள்ள நெருப்பில் வழியும் சத்தம் (செ.க.அ.43,9). 2.வெந்நீர். (யாழ்.அக.)

கொதிநீர்ப்பீச்சு பெ. குறிப்பிட்ட இடை வெளி நேரத்தில் பூமியிலிருந்து வென்னீர் வெப்ப வாயுடன் வெளி வருகை. (கலைச்.அக.1 ப.21)

கொதிப்பாற்றி பெ. வெப்பம் தணிக்கும் மருந்து. (செ.ப.அக.)

கொதிப்பி-த்தல் 11வி. 1.சிறுபோசனஞ்சமைத்தல். (யாழ்.அக.) 2.கூடச் செய்தல். (முன்.)

கொதிப்பு பெ. 1.பொங்குகை. (செ.ப.அக.) 2.வெப்பம். மலைச் சந்தனத்திற் கொதிப்புந் தரளக் கொதிப்பும் (மதுரைச்.உலா 387). சித்திரைத்திங்கள் வந்தால்... செத்தேபோகும் செங்கதிர்க்கொதிப்பு (பாரதிதா.குயில். ப.23). நிழலும் குளிர்ச்சி யின்றிக் கொதிப்பே கொடுக்க (அவளும் அவனும் ப.104). 3.கோபம். மறவன் கொதி புரைத்தன்று (புற.வெண்.8,27கொளு). 4.காய்ச்சல். (யாழ்.அக.) 5.வயிற்று எரிச்சல். மதுரையிலே கூனகற்றி னான்வெங் கொதிப்பகற்றினான் (திருக்காளத். உலா 547). கும்பிக் கொதிப்பை அடக்கி நெய்த கதராடை (மலரும்.899). கோபமும் கொதிப்பும் கமுறிடும் படிபல கொடுமைகள் நடக்குது வடநாட்டில் (நாமக்.பா.2,24). 6.துன்பம். உள்ளக் கொதிப்பு அகல ... கருணை வேண்டும் பராபரமே (தாயுமா.பா.43,368). 7.பரபரப்பு. கொழு நரைத் தழுவுறுங் கொதிப்பால் (கம்பரா.5,13,27).

கொதிபிடித்தல் பெ. 1.உண்ணும்போது நேர்ந்த தீக்கண் பார்வையால் உண்டி குன்றிப்போகை. (செ.ப.அக.) 2.அசீரணத்தால் உண்டாகும் வயிற்றுப் போக்கிற்கான சிசிச்சை முறை. இந்நோய்க்குச் செய்யும் சிகிச்சையினை கொதிபிடித்தல் என்பார்கள் (மந்தி.ப.184).

கொதிபோடு-தல் 6வி. ஆசைமிகக் கொள்ளுதல். (நாட்.வ.)

கொதிமந்தம் பெ. வெப்பால் வரும் மந்த நோய். (யாழ்.அக.)

கொதியல் பெ. நெகிழ்ந்த ஆபரணவுறுப்பை இறுகச் செய்யும் வேலை. (செ.ப.அக.)

கொதியல்போடு-தல் 6வி. நெகிழ்ந்த ஆபரண வுறுப்பை இறுகச் செய்தல். (நாட்.வ.)

கொதியன் பெ. 1.கோபக்காரன். அவன் ஒரு கொதியன் (இலங்.வ.). 2.உணவில் ஆசைமிக்கவன். (நாட்.வ.)

கொதியாயிரு-த்தல் 12வி. ஆசையாயிருத்தல். ஒண்ணுகண்ணெடுத்துப் பார்க்கக் கொதியாயிருக்கு (இரண்டுபடி ப.49).

கொதியாயிருக்கு-தல் 5வி. ஆங்காரங்குறைத்தல். (யாழ்.அக.)

கொதியுறு-தல் 6வி. வேதல். கொதியுற்றபிட்டுதின்று (கதிரை.பள்.126).

கொதியெடுக்கு-தல் 5வி. →கொதியாயிருக்கு-தல். (யாழ்.அக.)

கொதியெண்ணி பெ. போசனத்துக்குக்காத்திருப் போன். (முன்.)

கொதியெண்ணெய் பெ. 1.கொதிப்பிக்கும் மருந் தெண்ணெய். (முன்.) 2.கொதிக்க வைத்தெடுத்த மருந்தெண்ணெய் வகை. (வின்.அக.)

கொதுக்கு பெ. நுரைத்துக் கொண்டு மலம் வெளிப் படுதலின் ஒலிக்குறிப்பு. (நாட்.வ.)

கொதுகு பெ. கொசுகு. கொதுகறாக் கண்ணினோன் பிகள் (தேவா.5,32,9). கொதுகு செவி கொதுகின் சில் பாடல் இவ்விரவில் கேட்டவா என்றழுதாள் (நள.262). கொதுகென எண்ணி வேற்றுக்கும்பலை அழித்தல் நோக்கி (காந்திகாதை 2,48).

கொதுகுலசவையார் பெ. தூதர் எனப்படுஞ் சாதியார். கொதுகுலசவையாயிற் சூரியன் (செ.ப.அக.).

கொதுகுலம் பெ. மழலைகொஞ்சுகை. (யாழ்.அக.)

கொதுகுலி-த்தல் 11வி. குழைந்துருகுதல். (முன்.)

கொதுகை பெ. →கொதுகு. கொதுகையடு கருபினன் உறுதி குலைய குலைய (வங்கத்துப்.8,146).

கொதுகொதுத்தல் பெ. ஓர் ஒலிக்குறிப்பு. (யாழ்.அக.)

கொதுகொதுப்பு பெ. குளிரால்நடுங்குகை. (செ.ப. அக.)

கொதுகொதெனல் பெ. 1.ஓர் ஒலிக்குறிப்பு. (யாழ். அக.) 2.கொதித் தெழும்புதற்குறிப்பு. (முன்.) 3.நோவெடுத்தற்குறிப்பு. (வின்.அக.) 4.இலேசாய் உடம்பு காய்தற்குறிப்பு. (செ.ப.அக.) 5.விரணம் வீங்கிப் பழத்திருத்தற் குறிப்பு. (முன்.)

கொதும்பு பெ. கதம்பை நார். (நாட்.வ.)

கொதுவை பெ. அடைமானம். (செ.ப.அக.)

கொதை பெ. கலப்பையிலுள்ள ஏர்க்காலில் கயிற்றைக் கட்டும் இடம். (வட்.வ.)

கொந்தக்குலம் பெ. மதுரைக்கு அருகிலுள்ள கொந்தகையூரினரும் பாண்டியர் படைத்தலை வருமான பழைய வேளாள மரபினர். உயிர்கொந்தக் குலத்துட் டோன்றி (திருவாலவா.பு.39,1).

கொந்தகன் பெ. படைத்தலைவன். கொந்தகன் வாக்கிது (திருவாலவா.பு.30,45).

கொந்தகை பெ. குந்திநகரம். வைகைத் தீரம் கொந்தகை யென்றே செப்பும் குந்தி புரியிலே (சோலை.குற.2).

கொந்தம் பெ. மயிர்க்குழற்சி. கொந்தக் குழலை (பெரியாழ்.தி.2,5,8).

கொந்தமணி பெ. மகளிர் கழுத்தணி வகை. (வட்.வ.)

கொந்தராத்துக்காரன் பெ. பணி ஒப்பந்தம் செய்து கொள்பவன். (இலங்.வ.)

கொந்தரிவாள் பெ. முட்செடிகளை அழித்து நீக்க உதவும் அரிவாள் வகை. (நாட்.வ.)

கொந்தல் பெ. 1.கொத்துகை. (செ.ப.அக.) 2.அணில் முதலியவற்றாற் கொந்தப்பட்டது. (யாழ்.அக.) 3.ஊனப்பட்டது. (முன்.) 4.தணியாக் கோபம். கோம்பலுங் கொந்தலுங் கணிதலும் வெம்பலும் (பிங்.1875). 5.முன்கோபம். (ஆசி.நி.196) 6.கொடுங் குளிர், ஆனி. ஆடி மாதம் கொந்தலிலே (மலரும். 825). கொந்தலிற் கொடுகிக் கிடக்கிறான் (செ.ப.அக.). ~~7.போலியோசாரம். (நாட்.வ.)~~

கொந்தல்மாங்காய் பெ. சேதப்பட்ட மாங்காய். (இலங்.வ.)

கொந்தவக்காய் பெ. சமுத்திராப்பம், கீழைத்தீவு களினின்று மருந்தின் பொருட்டுக் கடல்வழியாகக் கொண் வரப்பட்ட குந்தளங்காய். (வைத்.விரி.அக. ப.118)

கொந்தழல் பெ. 1.தீத்திரள். (யாழ்.அக.) 2.முறுகிய தீ. கொந்தழற் புண்ணொடு (பெருங்.4,13,71).

கொந்தளகம் பெ. 1.கூந்தல். சொருகு கொந்தளகம் ஒரு கை மேல் அலைய (கலிங்கத்துப்.46). 2.குழற்கொத்து. கொந்தளக பந்திக் குயிலே (போரூ.சங்.மீனாட்சி.87).

கொந்தளகு பெ. ஐவகை கொண்டைகளுள் ஒன்று. கொந்தளகுக்குழல் சரிந்திட (திருப்பெருந்.பு.திருநாட்.11).

கொந்தளம்[1] பெ. 1.1.கூந்தல், மாதர் தலைமயிர். நறுத்துளிப் பூங் கொந்தளத்தாய் (திருக்கண்ண. மாலை 43). பொற்கவரி கொந்தளத்தின் மீதேற (குலோ. உலா 264). கொங்க மரவம் கெழுமு கொந்தளம் அவிழ்ந்து (ஞான.உபதேசகா.140). மங்கையர் கொந்தள தேசமேல் கூடிவண்டு உறை குந்தளதேசம் (திருக்காளத்தி.வழி.2). உம்பர் கொந்தளத்தி னுத்தி வலம்புரி யுடனின்று றார்ப்ப (திருக்கழுக்குன்றப்பு. நந்தி.28). புயலுண்டு இருண்ட குந்தளமும் (முத்துக். பிள்,5,5). கள் ஆர் இருண்ட கொந்தளம் (சிறு.தீர.பஞ். 1,1). கொந்தளப் பொன் னோலையிட்டு (கூளப்ப.காதல் 140). 1.2.வளரும் மயிர். (ஆசி.நி.93) 2.தலைமயிர். சைவலக் கொத்து ... கொந்தளப் பந்திநிகரும் (பாதம்பிரியா. பிள்.9,1). 3.மாதர் தலை மயிர்ச்சுருள். (பிங்.3436) 4.குழற்கொத்து. செறி படர் துஞ்சின் கருங்குஞ்சி கொந்தளமாக பரப்பி (பெரியபு.36,26). 5.சாளுக்கி யர் ஆண்ட நாடு. அயிர் முனிக் கொந்தளவரசர் தந்தளம் கிரிய வாளுறை கழித்து (பெருந்.799).

கொந்தளம்[2] பெ. எல்லாச் சௌகாரியங்களுமுள்ள இடம். (நாட்.வ.)

கொந்தளம்[3] பெ. 1.குழப்பம். கொந்தள மாக்கி (நாய்ச். சிதி.12,3). 2.கூத்தின்விகற்பம். (யாழ்.அக.) 3.காண்டாமிருகம். (சங்.அக.) 4.காண்டாமிருகக் கொம்பு. (யாழ்.அக.) 5.விலங்கினிளமை, குறளை. (அக.நி.)

கொந்தளம்[4] பெ. பொன்னோலை. (ஆசி.நி.183)

கொந்தளி[1] பெ. கூந்தலுடையவள். பாரிசாத மணம்வீசு கொந்தளி (தில்லை.பிள்.11,8).

கொந்தளி[2]**-த்தல்** 11வி. பொங்கி எழுதல். திரைகள் மேல்நோக்கிக் கொந்தளித்து (திருவிருத்.52,292 வியாக்.). மண்டலஞ்சூழ் வாரிதியின் கொந்தளிப்பும் (இரட்சணிய யாத்.1,9,16). கோடி முறை அழைத்திட்டான் ~~உளம் கொந்தளிப் புற்றுப் புரண்டான்~~ (பாரதிதா.குயில். பா.ப.67). தாபத்தால் கொந்தளிக்கும் இதயத்து வேதனையை (நேற்றின்.ப.103).

கொந்தளிப்பு பெ. 1.பதட்டநிலை, அமைதியில்லாத நிலை. பொதுமக்கள் பலர் இக்கிளர்ச்சியில் பங்கு கொண்டனர் கொந்தளிப்பு மிகுதியாகிறது (இந்.இதழ் ப.234). பஞ்சாப், அசாம் நடப்புக்கள் கொந்தளிப்பு களுக்கு உதாரணங்கள் (செய்தி.வ.). 2.கட்டுப்பாடற்ற நிலை. அவர் எழுந்து காற்றையும் சலத்தின் கொந் தளிப்பையும் அதட்டினார் (விவிலி.லூக்கா 8,24). 3.அலைகள் பொங்கியெழுகை. (தொ.வ.)

கொந்தளை பெ. கடற்பக்கத்து மரவகை. (செ.ப.அக.)

கொந்தளோலை பெ. மாதர் காதணி வகை. காதில் கொந்தளோலை ஆணித்தரமாக என களித்தாள் (சிதம்.குற.45.).

கொந்தன் பெ. மயிர்ச் சூழற்சியுடையவன். கொந்தத்தை உடையவன் கொந்தன் (இலக்.வி.உரை ப.293)

கொந்தனை பெ. பேய்க்கொம்மட்டி. (சித்.பரி.அக.ப.85)

கொந்தாரரத்தக்கல் பெ. ஈரல்கல். (போகர் நி.33)

கொந்தாலி பெ. குத்திக் தோண்டுங் கருவி வகை, கணிச்சி. (இலங்.வ.)

கொந்தாவி பெ. கல்வெட்டுமோர் கருவி. (யாழ்.அக.)

கொந்தாழம் பெ. 1.→கொந்தாளம். (முன்.) 2.ஓர்மரம். (முன்.)

கொந்தாழை பெ. கடற்றாழை. (வின்.அக.)

கொந்தாளம் பெ. விடநீக்கும் மருந்து வகை. (இலங்.வ.)

கொந்தாளி-த்தல் 11வி. →கொந்தளி[1]-த்தல். (யாழ்.அக.)

கொந்தி பெ. வரிகூத்து வகை. (சிலப்.3,13 உரை)

கொந்திக்காய் பெ. 1.மகளிர் கைமுட்டுக்குமேல் அணியும் ஆபரண வகை. (செ.ப.அக.) 2.மிடறு. (செ.ப.அக.அனு.)

கொந்திடு-தல் 6வி. ஒற்றைக் காலால் குதித்து வருதல். கொந்திட்டுப் பின்னளக்க (மூவரை.தூது 192).

கொந்து[1] பெ. 1.பூங்கொத்து. கொந்தோடு உதிர்த்த கதும்பின் அம் தீம் கிளவி (அகநா.288). கொந்தா ரிளவேனல் (சிலப்.8 வெண்பா). கொந்தவிழ்ந் துமிழப் பட்ட குளிர் மதுத்திவலை தூவச் (கூளா.165). கொந்தண வும்பொழில் சூழ் ... செங்குன்றூர் (தேவா.1,107,1). உமை அறியக் கொந்து அணை தாரீர் (சேர.அந்.46). கொந்தார் மலர்க்குழல் வல்லி (அம்.கோவை 240). கொந்த ளைந்த குந்தளந்த (திருப்பு.69). கொந்தேறு கொன்றைய ராரூர்த் தியாகர் (திருவாரூர்க்கோவை 7). காதினிற் கொந்தொளி மகரகுண் டலங் கொளத்தினான் (கச்சி.காஞ்சிப்பு.நகரேற்.195). தடம்பொழிலில் கொந்தணவுங் கார்க்குழலார் (திருவருட்பா 1962,36). 2.பூந்தாது. கொந்து கொரியன கொற்றையே (தக்கயாகப்.62). 3.தீரள். கொந்து தேனொடு குலாயிணர் கூடி (கூளா.1578). கொந்து அணைந்த பொன் கண்டால் பூணாதே (காரைக்.இரட்.மாலை 4). கொந்திலங்கு பைந்தொடை (குதீசிபு.19). பதற விதமுறுங் கந்துக் கொந்துக் குழல்காயப் (திருப்பு.54). கொந்தினாற் பொலியும் வீதி (இரகு.இரகுவு.53). பந்தி பந்தி நிறுத்திய பானிறங் கொந்து உலாவுங் கொடிக் கணம் (முகியித்தீன் பு.1369). கொந்தார் குழலி ... நன்னலந் தானா (அனிச்சஅடி ப.9). 4.தொகுதி. கொந்தளக மலர் சொரியக் கூப்பிடுவாள் (பாரதம். 2,2,253). 5.கற்றை. கொந்தளகப் பந்தியின் மேல் கோல மலர் சூட்டுவார் (முதன.மாலை 274). 6.கொத்து மாலை. கொந்தார் தடந்தோள் (திருக்கோவை 391). 7.நெய்வோர்கதிர். (யாழ்.அக.) 8.தானியக்கதிர். கொந்து உலாவும் குளிர் புனல் நாட்டிலும் (பூந்துறைப்பு. 192). 9.திசை மாடு. கொந்து கொந்தாகப் போய்விட்டது (நாஞ்.வ.).

கொந்து[2] பெ. கோபம். கொந்தா ரழல்போல் வருகூற் றுவனை (கந்தபு.1,4,27).

கொந்து[3] பெ. ஒற்றைக்காலால் குதித்து விளையாடும் விளையாட்டு வகை. (த.நா.விளை.ப.274)

கொந்து[4] பெ. பிரதேசம். இந்த மழை கன்னியாகுமரிக் கொந்திற் பெய்யவில்லை (செ.ப.அக.).

கொந்து[5]**-தல்** 5வி. 1.எரிதல். கொந்தழல் வேற்க ணாலென் னாவிகூட் டுண்ட கொம்பே (சீவக.1499). கொந்தழல் புணைணொடு நொந்துயிர் வாழ்தல் ஆற்றே (பெருங்.4,13,71). கொந்தழல் வாளிதூற்றிக் கொல்லென (பாகவத.4,3,972). கொந்தழல் ஆழியான் (செ. பாகவத.170). 2.கோபம் மூளுதல். (பிங்.) 3.மூர்க்கங் கொள்ளுதல். (யாழ்.அக.) 4.மிகுதல். சுடர்ந்த கொந்தழல் (சீவக.2846).

கொந்து[6]**-தல்** 5வி. 1.கொத்துதல். நாமவேறிகிரி கொந்து அழற்கழுமுள் ... நவியம் (சிவராத்.பு.3, 140). 2.பழமுதலியவற்றை அலகாற் குதறுதல். (யாழ்.அக.) 3.குத்துதல். கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின் (தேவா.2,79,2). சந்தின் இலையதனுள் தண்பிண்டி தேன் கலந்து கொந்தி இனிது உண்ண (நக.ஈங்.மாலை 39). கொந்தியயி லலகம்பால் (பெரியபு.10,145). கொந்துமுத் தலைச்சூலத்தில் (சிவஞா.காஞ்சிப்பு.அந்த.30). கொந்தி நின்னை யான் கொலை புரிந்து ஒழிப்பன் (மண்ணியல்.ப.303). 4.அச்சுறுத்தல். கொந்தி இரும்பின் பிணிப்பர் கயத்தை (நான்மணி.10). 5.இடித்துப்பேசுதல். கொந்தி இரும்பில் பிணிப்பர் கயத்தை (நான்மணி.12). 6.மகளிர் ஆட்டத்தில் மேலெறிந்த காய் விழுவதற்குள் தரையிலுள்ள காய்களை எடுத்தல். அவள் புளிய விதையைக் கொந்தி விளை யாடுகிறாள் (நாட்.வ.). 7.கொடியிலிருக்கும் ஆடையைக் கோல் கொண்டு எடுத்தல். (முன்.) 8.ஒற்றைக்காலாற் குதித்தல். (செ.ப.அக.) 9.மிக்க ஆசாரங் காட்டிக் கொள்ளுதல். (முன்.)

கொந்துகோல் பெ. யானைக்குரிய அங்குசம். (தொ.வ.)

கொப்பம்[1] பெ. 1.பெல்லாரி மாவட்டத்தையடுத்து நிசாம் இராச்சியத்திலுள்ள ஓர் ஊர். கொப்பையில் பொரு களத்திலே (கலிங்கத்துப்.205). திண் போர்புரி கொப்பத் தன்றெதிர்ந்தோர் பெறு கொற்றத் தொங்கல் (பெருந்.79). கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனும் (விக்கிரம.உலா 40). 2.ஒரு தேசம். பப்பரங் கொப்பம் வங்கம் (பாரதம்.5,5,19).

கொப்பம்[2] பெ. 1.யானை பிடிப்பதற்கு வெட்டிய பெருங்குழி. கைம்மலைசெல் கொப்பத்து வீழ (குமர.மீனா.பிள்.1). பருந்தாட்டங் கொண்டு கொப்பத்தில் (முக்.பள்.98,5). கொப்பத்து வீழ்ந்த கெசம் போல் அடங்கி (மூவரை.தூது 332). 2.1.குழி. குலம் பெற்ற

மாவுத்த சேரல்மின்னார் அல்குல் கொப்பத்திலே (தாக.கோவை 68). 2.2.படுகுழி. அணை ஒரு கொப்பம் ஆக (திருக்குற்றா.பு.31,66). கொப்பத்து வீழ்ந்த கெசம் போல் அடங்கி (சொக்க.பண. தூது 382). தகைப்படு கொப்பத்துற்ற தந்தியும் (முகியித்தீன் பு.164). கொப்பத்தழுந்திட்ட கோள் பாட வம்மின் (வங்கத்துப்.2,29).

கொப்பரத்தூள் பெ. நன்றாகக் காய்ந்த தேங்காய்த் துண்டு. (இலங்.வ.)

கொப்பரம் பெ. 1.மற்போர் வகை. (செ.ப.அக.) 2.முழங்கை. (முன்.)

கொப்பரம்பாய்ச்சு[1]**-தல்** 5வி. அதட்டுதல். (யாழ்.அக.)

கொப்பரம்பாய்ச்சு[2]**-தல்** 5வி. மல்லுக்குக் கை கோத்தல். (செ.ப.அக.)

கொப்பரி பெ. 1.→கொப்பரை-1. கொப்பரை கொப்பரி கடாரந் தசும்பு (பிங்.1738). 2.உண்பொருள்களைப் பொரிக்கும் பெரிய வாணலி. கொப்பரிகள் கொண்ட சுவை ஆறினெடு தூங்க (பது.பரிண.2,83).

கொப்பரை[1] (கொப்பறை) பெ. 1.பிடியோடு கூடிய பெரும் பாத்திரம். கும்பம் வட்டகை கொப்பரை (பிரபோத. 11,31). கொப்பரை கொதித்திடுமகொப் பரையில்விழும் புழுவைப் போலும் (இராமநா.2,19). நான் வருகிற போது நீ ஒரு கொப்பரை வெந்நீர் காய்ச்சி வைத்துக் கொண்டிரு (முதன.கதை ப.141). கொப்பரை யிலுள்ள சீமைச் சாராயமும் சிப்பாகி மார்க்குக் கொடுத்தார்கள் (வீர.கட்ட.கதைப்படல.ப.120). வெல்லக் கொப்பரையை லைக்கரண்டி (மேழிவி.80). குளத்திலே தண்ணீரு நம்ப கொப்பரையில் வெந்நீரு (தமி.நா.பா.ப.295). கூடயில சோறு கொண்டு கொப்பறையில் மோரூகொண்டு (இராமநாத.நாட்.அள.ப.261). 2.குடம். (யாழ்.அக.)

கொப்பரை[2] பெ. 1.நீர்வற்றிய தேங்காய். கொப்பரையை வாங்கி வந்தாள் (பஞ்ச.திருமுக.1052). 2.காயவைத்த தேங்காய். (கலை.அக.2 ப.93)

கொப்பரைத்தேங்காய் பெ. →கொப்பரை[2]-1. (செ. ப.அக.)

கொப்பரைத்தேங்காய் பெ. பழைய நாணயவகை. (பண.தூது 136)

கொப்பளம் (கொப்புளம்) பெ. 1.குமிழி. கொப்பளம் காணப் பொரித்தெடுத்தார் (இளை.இலக்.98). வெண்ணிலா எண்ணெயில் பொறித்த அப்பளம் போலக் கொப்பளம் கொண்டது (பராதீதா.குயில்.பா.ப.74). 2.கொப்புளம் போன்ற பரு. (செ.ப.அக.)

கொப்பளி[1]**-த்தல்** 11வி. 1.வெப்பமிகுதியால் கொப்புளம் உண்டாதல். இட்டடி நோவ எடுத்தடி கொப்பளிக்க (தனிப்பா.தி.44கம்பர்). புறத்திற் சுழுவிக்கை கொப்பளிக்க (சைவச.பொது.314). உள்ளங்கால் கொப்பளிக்க உச்சி வெடித்துவிட ... வெளியில் திரிவானேன் (மின்.குறம் ப.42). கருமையான வெயில் ... கால் கொப்பளித்து விட்டது என்கிறார் (நா.கலை ப.88). 2.பீறிட்டுக் கிளம்புதல். உதிரவெள்ளம் கொப்பளிக்க (மூவரை.தூது 36). 3.நீர் முதலியவை குமிழி யிட்டு வெளிவருதல். பொகுட்டியற் கலுமி இமிழ் மது முருகு கொப்பளிக்கும் பதுமம் (ஞான.உபதேசகா. 22). நறவு கொப்பளிக்கு மிதழி யந்தார் புனிதன் (சானந்த.பு.4,34). பனி நறவு கொப்பளிக்கும் பங்கயப்பூ (மயிலை.உலா 308).

கொப்பளி[2]**-த்தல்** 11வி. 1.நீர் முதலியவற்றை உமிழ்தல். பொருப்பில் வானரம் தேன்கொப் பளிக்கும் (கண்.பள். 37). 2.நீர் முதலியவற்றால் வாயை அலசி உமிழ்தல். தன்வாய்நீர் கொப்பளித்தாங்கு (திருவாமாத்.பு.உத்தர. 7,45). உண்டு பசியாறி கைகாலலம்பிக் கனிவாய்க் கொப்பளித்து (மதுரை கதை ப.51). கனிவாயும் கொப்பளித்து (புலந்.மாலை.ப.18). 3.வெளிப்படச் சொரிதல். தேக்க நிலவு கொப்புலித்துத் திறம்பா மங்குல் (திருக்கதிர.பிள்.27). 4.கக்குதல். (யாழ்.அக.)

கொப்பளிப்பானம்மை பெ. ஒருவகை அம்மை நோய். (மதுரை.சிறு.வழி.ப.130)

கொப்பறா பெ. →கொப்பரை[2]-1. (வின்.அக.)

கொப்பறாத்தேங்காய் பெ. கொப்பரை[2]-2. (யாழ்.அக.)

கொப்பரை (கொப்பரை[1]) பெ. பிடியோடு கூடிய பெரும் பாத்திரம். அனல் கொப்பறையில் சுற்றினுமி தந்த வுயிர்கள் (கோலாசல.பு.201).

கொப்பாட்டன் பெ. மூன்றாம் பாட்டன். (இலங்.வ.)

கொப்பாடை பெ. ஓர் அம்மை நோய். (ரா.வட்.அக.)

கொப்பாந்தேன் பெ. சுத்தமான தேன், மரக் கொம் பிலுள்ள தேன் கூட்டிலிருந்து எடுக்கப்படும் தேன். (இலங்.வ.)

கொப்பாளை பெ. 1.சோளப்பயிர் வளர்ச்சி முடிவ டைந்ததும் வெளியிடும் பாளை. (தஞ்.வ.) 2.மக்காச் சோளத்தின்பூ. (வேளாண்.வ.)

கொப்பி பெ. 1.காளை மாட்டுக் கொம்புகளின் நுனிப் பாகத்திற்கு அணியப்படும் பித்தளை அணி. (தஞ்.வ.) 2.தலையணி. கொண்டையில் முத்து பொற் கொப்பியிட்டு (கும்மிப்பா.நல்லாண்.28). 3.கும்மி யாட்டம். (செ.ப.அக.)

கொப்பிகொட்டு-தல் 5வி. கும்மியடித்தல். (முன்.)

கொப்பிப்பொங்கல் பெ. குப்பிப் பொங்கல், தைமாதம் முதல் தேதியில் குப்பியெருவை எரித்துப் பொங்கல் சமைத்து உண்ணும் சிறுமிகளின் பண்டிகை. (நாட்.வ.)

கொப்பிள்கொடி பெ. →கொப்பூழ்க்கொடி. கொப்பிள் கொடி தானறுத்தார் எட்டு குலவைகளும் இட்டாராம் (தமிழ்.வில்.பா.ப.107).

கொப்பு பெ. 1.மரக்கிளை. விற்பவளக் கொப்பில் வகுப்பித்த விரற்பத்தி (இரணியவதைப்.107). கொப்படி விரித்த நெடுங் கோளி நுனி நின்றாய் (ஞான. உபதேசகா.152). இப் புளியம் கொப்பு ஒடிய வேணும் (தனிப்பா.தீர.121). கொப்பும் கிளையும் தாவும் (சமுத்திரவி.61). சீக்கர்ங்கட்டப் புளிதனிலே அதில் மேற்கு கொப்புத்திட மாகு மென்றான் (வீர.கட்ட. கதைப்பா.ப.141). கொண்டைதளில் உருமாலை கொப்பு பிடித்து இழுத்திடுமாம் (மெச்சும்.கதை 667). பழம் உகும் பொழிற் கொப் பண்டர் நகர மரங்கள் (பழனித்திரு. 10,2). கொப்பு குழைதாவும் (சிலேடை இலக்.ப.303). கொண்டை சுடிகை முடி கொப்பு (அபி.மாலை 499) தழை உதிர்ந்த கொப்பானேன் (தமி.நா.பா.ப.132). 2.மாட்டுக் கொம்பு முதலிய வற்றில் செருகும் பூண். மாடு ரெண்டம் மதுரை வெள்ளை ... கொப்பு இரண்டும் கும்பகோணம் (தமி.நா.பா.ப.256).

கொப்பு² பெ. 1.மகளிர் காதணி வகை. படிந்தரத்தினக் கொப்பணிந்து (நம்.திருத்தாலா.107). கொப்பிட்ட உமை ... உலகந்தானே (தண்டலை.சத.12). ம ழு ட க் கொப்பாடக்காதினில் (திருப்பு.497). நற்சம்பு கொப்புமுரு கொடும்பு னைந்து (கோலாசல.பு.647). குழைக் கொப்பி மேற் பாயும் குருகையே (குருகை.10). வச்சிரக் கொப்பாட (சொர்ண.பிள்.9,6). வகையுள் ஒன்று தோகையர் தந்திடும் மாகனகக் கொப்புச் சிங்கா (குமார.குற.76,36). மாதரம் பொற் கொப்புகளும் ... காது அலையப் போடும் (கலைசைச்.வெண்.44). செவிக்கு மணிக் கொப்புமிட்டாள் (மூவரை.தூது 106). கொப்புக்குத் தான் அரும்பு வச்சாண்டி (தமி.நா.பா. ப.178). 2.மயிர்முடி. அல்லிடுளை யொத்த அளகக் கொப்பிலே ... அமுங்கனலாமோ (குமர.சுவாமி.பா. 6,5). 3.பெண்மயிர்முடி. (பிங்.1067) 4.கூந்தலை அள்ளிச் செருகுகை. (ரா.வட்.அக.)

கொப்பு³ பெ. ஒரு வகைச் சிவப்பு. (விறலி.தூது 713)

கொப்புக்குடை பெ. கொப்பணியிலிருந்து தொங்கும் குடையவடிவான உறுப்பு. (நாட்.வ.)

கொடுப்புசம்பல் பெ. காதணி வகை. (தாசில்தார் நா. ப.40)

கொப்புமயிர்மாட்டி பெ. மகளிர் மயிரில் மாட்டும் காதணி வகை. (செ.ப.அக.)

கொப்புவர்ணம் பெ. சேலைவகை. கொப்புவர்ணமாய்த் தீர்ந்த கொப்புவர்ணம் (விறலி.தூது 713).

கொப்புவாளி பெ. மகளிரணியும் வாளி என்னுங் காதணி வகை. (முன்.)

கொப்புள்¹ பெ. →கொப்பூழ். (வின்.அக.)

கொப்புள்² பெ. 1.நீர்க்கொப்புளம், நீர்க்குமிழி. கொன்னுமா நாகங் கொண்டாற் கொப்புளாம் (சீவக.1288). அரத்தக் கொப்புளொடு வருத்தங் கொண்டகொல் (பெருங்.3,8,16). கோலத் தவிசின் மிதிக்கிற் பதைத்தடி கொப்புள் கொள்ளும் (திருக்கோவை 238). கொள்ளும் இப்புறஞ் சிலம்பியின் கொப்புள் என்றருள (பெரியபு. 26,18). கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்குங் கொப்புட் செய்கை (பட்டினத்தார்.பா.கோயில்.20,17). நாபி வெள்ளக்குளச் சுழிக் கொப்பாங் கொப்புள் கொண்டாள் (தென்பு.மணி.உலா 521). 2.சேற்றில் எழும் குமிழி. (ஆசி.நி.153) 3.நீர்க்கோர்க் கட்டி. கொதிக்கும் மணலை மிதித்தால் கொப்புளம் (இளை. இலக்.12). அந்த நீர் அவர் காலடிகளில் ... கொப்புளத்தைத் தோற்றுவிக்கும் கொதிப்பைக் கக்குகிறது (கரி.மணி.ப. 1). விரலெல்லாம் கொப்புளங்க (தமி.நா.பா.ப.149). 4.கொப்புளம் போன்ற பரு. மெத்தும் பதங் கொப் புளமாகிச் (திருவாரூர்க்கோவை 375). எழுந்த தங்கவள் மேனி (வேதாளக்.11,6). 5.உடம்பில் நீர்க்குமிழி போலச் சீயுடன் தோன்றும் சிலந்தியாகிய புண். போலாவேல் கொப்புளங்கள் போலும் (கலிங்கத்துப். 93). கொப்புளமாம் புண்ணைக் குளக்கணென்று சொல்வதன்றி (முதன.மாலை 12).

கொப்புளம் பெ. 1.→கொப்புள்²-1.(பிங்.)2.கொப்புள்²4. கோவத்தன்ன கொப்புளம் (பெருங்.1,54,59) வாரிய முத்தைக் கொப்புளம் என்று ஊதும் குரங்கு (தனிப்பா. தீர.95 காளமே.). உலமகள் உடல் கொப்பளித்த கொப்புளம் (வங்கத்துப்.3,6).

கொப்புளி¹-த்தல் 11வி. 1. நீர் முதலியவை குமிழியிட்டு வெளி வருதல். குருதிகொப் புளிக்கும் வேலான் (சீவக.1889). இரத்தம் முகத்து எழுவே கொதித் தெதிர் கொப்பளித்தனைக் குடித்து (இரணியவதைப்.575). மலர்க் குலங் கொப்புளிக்கு நறாப்புனலாடியும் (தமிழரசி குற.60,11). 2.பொங்கித் ததும்புதல். கொப்புளிக்கும் பெருமையோடு (நேற்றின்.ப.14). 3.குமிழியிட்டு வெளிவருதல். பிரசமூற்றிருந்து முருகு கொப்புளிப்ப (குமர.பண்டாரமும்.கோவை 2,6). 4.கொப்புளங் கொள்ளுதல். எடுத்தடி கொப்புளிக்க (தனிப்பா.தீர. 146,44). 5.வாய் குமிழ்த்தல். செய்யவாய் கொப்பளிப்ப (பெரியாழ்.தி.3,6,8).

கொப்புளி²-த்தல் 11வி. 1. வாயை அலசி உமிழ்தல். வாய்த் தண்ணீர் குடித்தலுங் கொப்புளித்தலும் ஆமே (முக்.பள்.99,4). 2.உமிழ்தல். பொங்கு தாதொடு பூமதுக்கொப்புளித் தங்க ராகம ளாவிய மங்கையர் (சூளா.124). 3.நீரை வெளியிடுதல். குடித்த நீரெலாம் கொப்புளித்து (தேம்பா.1,1,4). 4.வெளிப்படுத்தல். விரைகொப் பளிக்குஞ் செழுங்கமல வீட்டுக் கிறையும் (திருச்செந்.பு.பதி.12). கடல் கொப்பளித்துமிழ் வாயினான் (சீகாழித்.பு.பூந்தரா.2). வேனிலிற் கொதித்த வெப்பின்

யாகம் மேனி கொப்புளித்த போலுமால் (கச்சி.காஞ்சிப்பு. கழுவாய்.39). உலகமகள் உடல் கொப்பளித்த கொப்புளம் (வங்கத்துப்.3,6). 5.கக்குதல். தூமங் கொப்புளிக் குந்துகிற் சேக்கை (சீவக.2505). முழைஞ்சு கொப்புளிக்கும் ஆரழல் (செ.பாகவத.5,7,8). 6.உட்கொண்ட நீரை உமிழ்தல். நீர்வாய்ப் பெய்து கொப்புளித்து ... நீர்குடித்து (சிவஞா.காஞ்சிப்பு.ஒழுக்க.6). 7.சிதறடித்தல். குரவம் பாவை கொப்புளித்துக் குளிர்சந் கீர்ந்த துகளே (சீவக.2690).

கொப்புளித்திடு-தல் 6வி. கைவிடுதல். கோமான் கொப்புளித் திட்ட வெம்மை (சீவக.2949).

கொப்புளிப்பான் பெ. சிற்றம்மை. (மருத்.கலைச். அக.ப.44)

கொப்பூழ்[1] பெ. 1.நாபி, உந்தி. நீனிற வுருவினெடி யோன் கொப்பூழ் (பெரும்பாண்.402). மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை (பரிபா.திர.8,1). கொப்பூழடி யாகத் தோன்றி முந்துகின்ற உதான னென்னுங் காற்று (தொல்.எழுத்.83 நச்). அகன்சுனை யென்னுங் கொப்பூழ்ப் பொருவில்வே யென்னு மென்றோள் (திருவிளை.பு.நாட்டுச்.7). கொப்பூழ் தானே உந்தியாகும் (அக.நி.கொமுதல் 16). பூண் நேமி பற்று கரதலன் அள்ளு கொப்பூழ்ப் பொலி பூமீது உதித்து (பச்சை.அம்.பிள்.காப்பு.5,1). நுகத்துக்குப் பகலாணி போலவும் மக்கட்குக் கொப்பூழ்போலவும் (பெருந்.349). 2.உந்தித்தாமரை. திங்களை நேர்கண்ட திருமால் சீர்க் கொப்பூழ் போல் (திருஇலஞ்சி உலா.244). 3.வாழைப் பூவில் உள்ளிருக்கும் மென்மையான மடல். குளிர் வாழைப்பூக் கொப்பூழ் போன்ற ஒளி இமை விலக்கி (பாரதிதா.48,2,1).

கொப்பூழ்[2] பெ. → கொப்புள்[2]-4. நங்கை சீறடி நீர்க் கொப்பூழி னறியன தொடர்ந்து சென்று (கம்பரா.2,5,52).

கொப்பூழ்க்கொடி பெ. தாயின் வயிற்றில் வளர்ந்து வரும் கருவின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டப் பொருள்களை யெடுத்துச் செல்லும் கொடிநாளம். (கலைச்.அக.2 ப.130)

கொப்பூழ்ப்பரன் பெ. திருமால். கொப்பூழ்ப்பரன் வலலுரத்தினில் வாழும் எல்லி தில்லை (சிவகாமி.பிள்.1,9).

கொப்பூழறு-த்தல் 11வி. பிறந்த குழந்தையின் நாபிக்கொடியை அறுத்தல். (நாட்.வ.)

கொப்பெனல் பெ. விரைவுக் குறிப்பு. குறியும் குறையாமல் கொப்பெனவே வரும் என்றான் (பவளக். மாலை ப.16). சேவகனை... கூட்டியிங்கே வாரு மென்று கொப்பெனவேயுரைத்தார் (மதுரை.கதை ப.60). செப்பியவசனம் தப்பாத் திறத்தொடு மனையிற் புக்கிக் கெப்பென மனவிக்கோதி (முகியித்தீன் பு.726) கொப்பென வந்தார்கள் (வின்.அக.). கூப்பிட்ட குரல் கேட்டுக் கொப்பெனவே ஓடி வந்தார் (ஏணியேற்றம் ப.34).

கொப்பை பெ. →கொப்பம்[1]. கொப்பையிற் பொரு களத்திலே (கலிங்கத்துப்.191).

கொம்பங்கமுத்தி பெ. ஒருவகை மீன். (கிளை மொழியி. ப.204)

கொம்பஞ்சிறா பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கொம்படி[1]**-த்தல்** 11வி. 1.கொம்பால் முட்டிப் பொருதல். (யாழ்.அக.) 2.அதிகாரம் செலுத்துதல். (முன்.) 3.முதன்மை செலுத்தல். (முன்.)

கொப்படி[2]**-த்தல்** 11வி. (இளம் ஆண் பசுக்கன்றுக்கு) கூட்டுக்கோலினால் கொப்பைத்தீய்த்தல். (நாட்.வ.)

கொம்பத்தாள் பெ. →கொம்பாள். (வின்.அக.)

கொம்பர் பெ. 1.மரக்கொம்பு. கொம்பர் குவிமுலை நோக்குவோ (பரிபா.12,50). நுனிக் கொம்பர் ஏறினார் (குறள்.476). குரவங் கோங்க மலர்ந்தன கொம்பர் மேல் (சிலப்.12,4,2). அஞ்சுடர் முருக்கி னங்கே ழணிமலர விழ்ந்த கொம்பர் (கூளா.164). தாம்பு அணைக் கொம்பராய் (கருவூர்ப்பு.14,15). அமுதின் வந்த கொம்பரனை யாரமுது (சீகாழித்.பு.திருவிழா.9). கொம்பர்விரித் தும்பர்மிசை யோங்கு மாதோ (நீடூர்.பு. சந்திரன்.8). சேணி பூட்டிய கொம்பரேந்திய தேறல் ஊட்டிய காவலு (திருக்காவ.கலம்.15). கொம்பர் விண் உறவு கொண்டிட (குசேலோ.39). மலர்ந்த கொம்பரால் (இரட்.சரி.149). 2.கோல். கொம்பரை இழந்த ... கொடி (சிவஞா.காஞ்சிப்பு.சலந்த.15). 3.இளஞ்செடி. தெய்வப்பூங் கொம்பரன்ன செல்வி (சிவஞா.காஞ்சிப்பு. திருவே.19). 4.இளைய மரம். வாடை உளர் கொம்பர் போன்ம் (பரிபா.21,63). 5.→கொம்பனார். மாநாயகன் குலக்கொம்பர் (சிலப்.1,23). புனைவளர் கொம்பரன் னாய் (திருக்கோவை 118). அருளின் கொம்பரோடு ஞானமிர். 6). 6.விலங்கின் கொம்பு. (யாழ்.அக.)

கொம்பரக்கு பெ. ஒருவகை அரக்கு. நிலையான கொம்பரக்கால் வாயை மூடி (போகர் நி.357).

கொம்பரை பெ. மாட்டுநோய் வகை. (தஞ்.சர.3,119)

கொம்பரைகொம்பரை பெ. சிறுவர் சிறுமியர் விளையாட்டு வகை. (த.நா.விளை.ப.274)

கொம்பல் பெ. முன்கோபம். (ஆசி.நி.196)

கொம்பறை பெ. நெல்லைப் பாதுகாப்பாக வைக்கும் இடம். நேற்றுக் கொம்பறைக்குள்ளை நெல்லுக் களவுபோட்டது (இலங்.வ.).

கொம்பன் பெ. 1.கொம்புள்ள விலங்கு. (யாழ்.அக.) 2.ஆண்யானை. (முன்.) 3.கொம்பை உடைய விநாயகன். தானவன் தன்னுடலம் பிளந்த ஒரு கொம்பனே (நம்.நாரை.2). 4.சமர்த்தன், திறமைச்சாலி. (யாழ்.அக.) 5.வசூரி அல்லது பேதி வகை. (முன்.) 6.மீன் வகை. (முன்.)

கொம்பன்கெளுத்தி பெ. →கொம்புக்கெளிறு. (செ.ப.அக.)

கொம்பன்சம்பா பெ. ஆனி புரட்டாசி மாதங்களில் விதைக்கப்பட்டு 5 மாதங்களில் விளையும் சம்பா நெல்வகை. (வேளாண்.வ.)

கொம்பன்சுறா பெ. சாம்பனிறத்துடன் 7 அடிவரை நீண்டு வளரக் கூடிய சுறாமீன்வகை. (செ.ப.அக.)

கொம்பன்திருக்கை பெ. ஊதா நிறமுள்ளதும் 18 அடிக்குமேல் வளர்வதுமான கடல் மீன் வகை. (முன்.)

கொம்பன்தெரச்சி பெ. மீன்வகை. (தொ.வ.)

கொம்பன்பாகல் பெ. →கொம்புப்பாகல். (செ.ப.அக.)

கொம்பன்மாடு பெ. நீண்ட கொம்புகளையுடைய மாடு. (தொ.வ.)

கொம்பன்யானை பெ. பெரிய கொம்புகளுடைய யானை. (செ.ப.அக.)

கொம்பனார் பெ. கொம்புபோல் ஒல்குந்தன்மையுள்ள பெண்டிர். கொம்ப னார்சிலர் உற்ற மங்கலக் கலங்க ளோடுடன் முற்ற (சூளா.584). கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே (திருப்பா.17). குன்றி லாதர வில்லையென் நாடவர் கொம்பனார் முலை குன்றிற் பதுங்க (முக்.பள்.18,4).

கொம்பனாள் பெ. →கொம்பனார். புனைமலர்த் தாரி னானும் போதணி கொம்ப னாளும் (சீவக.1495).

கொம்பனையார் பெ. →கொம்பனார். பொன்னங் கொம்பனை யார்புலம் பெய்தினார் (சீவக.1948). கொம்பனையார் குத்து விளக்குக் காணென்பாரும் (காஞ்சி.அம்.ப.14).

கொம்பாக்கு பெ. பொன்மெழுகு. (யாழ்.அக.)

கொம்பாசு பெ. 1.திசையறிகருவி. (செ.ப.அக.) 2.வட்டத்தை நேராக்க உதவும் தச்சுக் கருவி. (ரா.வட்.அக.)

கொம்பாசுகூடு பெ. கப்பலில் திசையறிகருவி வைக்குங் கூடு. (கப்.வ.)

கொம்பாசுபெட்டி பெ. →கொம்பாசுகூடு. (செ.ப.அக.)

கொம்பாபிள்ளை பெ. 1. செல்வமுதலிய தகுதிகளால் உயர்ந்தவன். (முன்.) 2.திகாரக் குடியிற்பிறந் தோன். (யாழ்.அக.)

கொம்பாலயம் பெ. தெய்வம் தங்குவதாகக் கொண்டு பூசிக்கப்பெரும் சில மரக்கிளைகள். (சமய அக.)

கொம்பாள் பெ. 1.மரத்திலேறியிருந்து காவல் புரிவோன். (வின்.அக.) 2.உளவாள். (முன்.)

கொம்பி பெ. சனி. கொம்பி யருக்கன் குசன் (சினேந்.மாலை 198).

கொம்பிலேயேறு-தல் 5வி. (கிளையிலேறுதல்) வீண்கர்வங் கொள்ளுதல். (செ.ப.அக.)

கொம்பினர் பெ. →கொம்பனார். குளிர்மணற் கேணியுட் கொம்பினர் படர்ந்தும் (கல்லா.71,31).

கொம்பீதி பெ. நத்தை. (போகர் நி.33)

கொம்பு¹ பெ. 1.மரக்கிளை. கொம்பின் மேல் சிதரினம் இறை கொள (கலித்.34,12). நுனிக் கொம்பர் ஏறினார் (குறள்.476). பொன்மலர் மணிக்கொம் பன்ன தேங்குழன் மங்கை மார்கள் (சூளா.64). தேமாங்கனி கடுவன்கொள விடுகொம் பொடு (தேவா.1,10,2). கற்பகத்தின் பூங்கொம்போ காமன் றன் பெருவாழ்வோ (பெரியபு.6, 140). கொம்பார் இளங் குருகே! (நள.339). இளஞ் சோலைகளாய்க் கொம்பாலையங் கொண் டிருந்துமென் (திருவாரூர்க்கோவை 394). சின்மயம் பூத்த பசுங் கொம்பை அடக்கி (தாயுமா.பா.19,10). கொம்பிற் பழுத்த கொய்யா மா (இளை.இலக்.37). கோணிக் கொம்பாட்டிய செங்கொத்தலரிப் பூக் கண்டாள் (பாரதிதா.19,3,1 வெண்பா). 2.குச்சி. கலை ஆகி கொம்பு ஆகி காட்டகத்தே நிற்கும் (வாக்கு.13). கூரிய கொம்பதனால் கொன்ற பயந்தானும் (சித்.அமர.கதை ப.80). 3.தண்டு. புடையே யகன்றகொம் பீந்தீர் (ஒருதுறைக் கோவை 79). 4.மரம். பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம் (வேணா.3). 5.கோல். சின்னப்பாம் பானாலும் பெரி கொம்பங் அடி என்று செப்புவாரே (செயங்.சத.38). 6.பூங்கொம்பு. கொம்பி னொத்தொ துங்கி யுங்கு ழுங்கன் மாலை தாங்கியும் (சீவக.2037). கணவன் காதற் கொம்பிற்கு மாயிற்றே கூற்று (புறப்.வெண்.83). கொம்பு ஆர் மருங்குனல் லாய் (கப்.கோவை 11). குடை கொம்பு மாய்ச்சகந்தாங்க (கபிலை.கோவை 1). நேற்று மின்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே (முக்.பள்.35,5). 7.விலங்கின் கொம்பு. ஏன முளைக்கொம்பவை பூண்டு (தேவா.1,1,2). நின்னால் நாட்டிய அகிய மாயை காண் முயல் கொம்பே (தாயுமா.பா.15,1). கழுந்திருகு கொம்பு இருவர் கையொடு பெயர்ந்தே (தேம்பா.2,11,53). விறற் கொம்பிரண்டு கொண்டு ... விரைந்துவரும் ஆபொன் றினைச் (கொளஞ்.பிள்.2,4). காளை ஒன்று ... கொம்பால் முடுகி மிகப் பாய (பஞ்ச.திருமுக.723). யமன் வாசலில் இருக்கும் பசுவின் கொம்பில் ஏறி பசுவை மிரட்டச் செய்தான் (மதன.கதை ப.157). மாட்டுக் கொம்பிலே சல்லி கட்டி (சாத்.கும்மி.545). எருமைக் கொம்பு நெட்டை (இளை.இலக்.14). நீள முகமும் நிமிர்ந்திருக்கும் கொம்புகளும் (பாரதி.குயில்.7,22). காளையென்றால் கொம்புமில்லை (கண்ண.திரை.பா.2, 243). 8.ஒருவகை மீன். (பாரத.வ.) 9.1.தந்தம். வேழ வெண்கொம் பொசித்தமாலும் (தேவா.1,52,9). கொம்பு உயர்வு ஆம் மை நாகம் (நந்திக்கலம்.81). யானையின் கொம்பினைப் பறித்து (பெரியதி.4,2,4). களிற்றின் வெண் கொம்பாற் கல் லுரல்வாய் (நக்.ஈங்.மாலை 20). கொம்பொசித்த (இயற்.இரண்டாம் திருவந்.68). பெரிய

தோர் கரியிரு கொம்பு (திருப்பு.177). தம்பி யொருவன் தமையன் கொம்பன் (தீரிசிரா.அந்.10). கொம்பு ஒருகைக் கொண்ட ... தும்பிமுகன் (கதிரை.பள்.காப்பு). ஒற்றைக் கொம்புடையாய் போற்றி (தெய்.மாலை 8). திண் கரியின் கொம் கொடித்து நடுவர் சுற்றும் வேலி (தமிழரசி குற.58,3). 9.2.பல். பைம்மாநாகம் பன்மலர் கொன்றை பன்றிவெண் கொம்பொன்று பூண்டு (தேவா.1,42,1). 10.ஊதுகொம்பு. கொம்புந்து வகுயிலாலு வக்ளர்காழி (தேவா.1,10,11). கொம்பு ஊதி இயம் ஆர்ப்ப குழல் ஊதி நடப்பனவே (இரணியவதைப். 132). கொம்பு ஒலிப்ப (மதுரைக்.185 உரை). சில்லரித் துடியுங் கொம்புஞ் சிறுகணா குளியும் கூடி (பெரியபு. 10,5). கம்பு கொம்பு விதங் கொண் மாமுரசு ... அதிர்தலான் (பாரதம்.2,1,134). கொம்பின் அரவம் பெறினல்ல வோ ... மயிலாலிப்பதே (திருவாரூர்க் கோவை 220). சங்கொடு பேரி கொம்பு தண்ணுமை தடாரி (நகுல.பு.தல.18). கூத்தருடன் ஆசாரிக்கொம்பும் எழுதினனே (காஞ்சி.அம்.ப.13). பின்பட்டக் கொம்பொடு தம் பட்டமும் (திருவிடை.நா.ப.62,20). ஊது கொம்புகள் ஆடுகளி கொண்டே (பாரதி.பல்வகைப்.5,6). 11.தேர்க் கொம்பு குயிலைச்சிலம்படிக்கொம்பினைத்தில்லையெங் கூத்தப் பிரான் (திருக்கோவை 30). 12.கொடி. கொம்புருவ நுண்ணிடை (சேர.உலா 33). படர வாய்த்த தனிக் கொம்பு (திருஇலஞ்சி.உலா 33). 13.பெண். கோதைபோல்வாயொளித் தொழிதல் கொம்பே குணனாகுமே (கீவக.1586). மாமையும் இழந்தென் கொம்பல மருந்தகைமை கண்டு (பட்டினத்தார்.பா. கோயில்.31). 14.பல்லக்கு முதலிய வற்றின் கொம்பு. முற்கொம்பு தாங்கி முன்ன டக்கும் ... முனிவன் (திருவிளை. பு 65). 15.கூடிடு மிடத்தில் விளிம்பில் ஒதுங்கும் நெல். ஒதுங்கும் நெல் பேற்றாங் கொம்பு (நீரரர் நிக.3,19). 16.நாற்றுமுளை. (வட்.வ.) 17.சுழு முனை. கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட்டாரே (திருமந்.626). 18.நீரைவீசுங் கருவி. சிவிறியுங் கொம்புஞ் சிதறு விரைநீரும் (மணிமே.28,10). 19.கெ. கொ: கெ, கொ முதலிய எழுத்துக்களில் முற்பகுதியாயமைந் திருக்கும் அடையாளக் குறி. வரைந்திடுந் திறனடைந்த கொம்புபோல (திருவேங்.கலம்.27). கொம்பொன்று முன் இசையிற் கெகரம் ஆம் (அறு.இலக்.எழுத்து. 18,16). 20.நத்தை. (யாழ்.அக.) 21.கொடுவயிர். கொம்பு ஆம்பல் இரலை கொடு வயிர் (அபி.மாலை 1753). 22.மேன்மை. குமர குருபரர் சன்னிதிச் சத்திரம் நடக்க வென்றே கொம்பு பெறவே (சிந்.இலக்.3,178). 23.ஏரிக்கரையின் கோடி. (செ.ப.அக.)

கொம்பு²-தல் 5வி. மிக்க எழுச்சியோடு ஒலித்தல். கொம்பு குறைகடல் போல் கொம்ப சேயூர் (முரு.உலா 105).

கொம்பு³-தல் 5வி. முயலுதல். (யாழ்.அக.)

கொம்பு⁴-தல் 5வி. 1.கோபித்தல். ஈசன்மேற்கொம்பி (பஞ்ச.திருமுக.107). 2.மூர்க்கங்கொள்ளுதல். (இலங்.வ.)

கொம்புக்கடமை பெ. மீன்படகுக்குரிய வரி. (வின். அக.)

கொம்புக்கத்தி பெ. கொடுவாட்கத்தி. (இலங்.வ.)

கொம்புக்கயிறு பெ. காளை மாட்டின் இரு கொம்பிலும் சுற்றி அணியும் நிறக்கயிறு. (முன்.)

கொம்புக்கள்ளி பெ. கள்ளி வகை. (செ.ப.அக.)

கொம்புக்காரன் பெ. 1.வாந்திபேதிக்குரிய தேவதை. (முன்.) 2.கொம்புவாத்தியம் ஊதுபவன். (முன்.)

கொம்புக்கால் பெ. 1.(ெ,ே,ை) கொ, கோ முதலியவற்றில் உள்ள கொம்புங் காலும். (வின்.அக.) 2.முகடு தாங்கும் கவட்டுமரம். (செ.ப.அக.)

கொம்புக்குமண்ணெடு-த்தல் 11வி. யானை முதலிய களிப்புக் கொண்டு கொம்பினால் மண்ணெடுத்தல். (யாழ்.அக.)

கொம்புக்குழாய் பெ. காளை மாட்டின் கொம்பின் மேற்பகுதியில் அணியும் அணிகலன். (இலங்.வ.)

கொம்புக்குழை பெ. →கொம்புக்குழாய். (முன்.)

கொம்புக்கெளிறு பெ. ஆறடி நீளமும் மங்கல் நீல நிறமும் உள்ளதாய் நன்னீரில் வாழும் கெளிற்று மீன் வகை. (செ.ப.அக.)

கொம்புக்கோழியமரை பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கொம்புகன்னம் பெ. கொம்பு போல் நீண்டதாகிய குதிரைக் குற்றம். கொம்புகன்ன திருகுகன்ன ... மொழிந்தபழு திவை (திருவா.பு.4,35).

கொம்புகாவி பெ. பல்லக்குக் தூக்குவோன், சிவியான். (இலங்.வ.)

கொம்புகொள்(ளு)-தல் 2வி. ஆணி முதலியவற்றிற் பட்டு ஆடை கிழிதல். (செ.ப.அக.)

கொம்புச்சங்கிலி பெ. காளை மாட்டின் கொம்பி லணியும் சங்கிலி. (இலங்.வ.)

கொம்புச்சுத்தியல் பெ. தட்டார் உபயோகிக்கும் சுத்தியல் வகை. (தொ.வ.)

கொம்புச்சுழி பெ. 1.ஏ, ே எனும் சுழி. (செ.ப.அக.) 2.கொம்புகளுக்கிடையில் இருக்கும் சுழி. (ரா.வட்.அக.)

கொம்புசாய்-தல் 4வி. கதிர்முற்றிச் சாய்தல். (வின்.அக.)

கொம்புசீவிவிடு-தல் 6வி. 1.உற்சாகப்படுத்துதல். (நாட்.வ.) 2.சண்டை மூட்டி விடுதல். (செ.ப.அக.)

கொம்புசீவு-தல் 5வி. எதிர்ப்புக்குத் தூண்டிவிடுதல். (ரா.வட்.அக.)

கொம்புத்தாலி பெ. 1.சிவனும், பார்வதியும் அமைந்த தாலி. அவள் கொம்புத்தாலி போட்டிருக்கிறாள் (இலங்.வ.).

2.சிவனுக்கும் பார்வதிக்கும் காணப்படும் தாலி. (முன்.)

கொம்புத்தேங்காய் பெ. மேற்பகுதி கொம்பு போல் வளைந்திருக்கும் தேங்காய். (முன்.)

கொம்புத்தேன் பெ. மரக்கொம்பிலுள்ள தேன் கூட்டிலிருந்து எடுக்கப்படும் தேன், சுத்தமான தேன். (பதார்த்த.198)

கொம்புத்தேனீ பெ. தேனீவகை. (செ.ப.அக.)

கொம்புத்தொனி பெ. குழலொலி, கொம்பு வாத்திய ஒலி. கொம்புத் தொனிகள் முழங்கிடவே (கும்மிப்பா. சீனய்யங்கார் 149).

கொம்புதீய்-த்தல் 11வி. காளைக் கன்றுகளுக்குக் கொம்பு வளராதிருக்கும் பொருட்டு இளமையில் வளரப்போகும் கொம்புகளைப் பழுக்க காய்ச்சிய இரும்பால் சுட்டுத் தீய்த்து விடுதல். (தஞ்.வ.)

கொம்புதெரச்சி பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கொம்புப்பயறு பெ. தானிய வகை. (வின்.அக.)

கொம்புப்பழம் பெ. எலுமிச்சை. (சித்.பரி.அக.ப.85)

கொம்புப்பாகல் பெ. நீண்ட பாகல் வகை. (பதார்த்த.712)

கொம்புப்பிடி பெ. கத்தி முதலியவற்றிற்குக் கொம்பு முதலியவற்றால் செய்யும் பிடி. (செ.ப.அக.)

கொம்புப்பிறை பெ. ணை, ணோ, ணெ, ணே முதலிய எழுத்துக்களில் உள்ள கொம்பும் பிறையும். (வின்.அக.)

கொம்புப்புடல் பெ. குட்டைப்புடல். (இலங்.வ.)

கொம்புப்புழு பெ. கொம்புகளையுடைய ஊர்ந்துச் செல்லும் புழு. (கலைச்.அக.2 ப.102)

கொம்புப்பூண் பெ. கொம்பின் துனியில் இருக்கும் அணி. (தொ.வ.)

கொம்புபடு-தல் 6வி. →கொம்புகொள்(ளு)-தல். (செ.ப.அக.)

கொம்புபிடி-த்தல் 11வி. கொம்பையூதுதல். (வின்.அக.)

கொம்புமஞ்சள் பெ. விரலிமஞ்சள். கொம்புமஞ்சளை நிறுப்பார் (குடும்பவி.1 ப.23).

கொம்புமுளை-த்தல் 11வி. பிறர்க்கில்லாத சிறப்புண்டாயிருத்தல். அவன் கொம்புமுளைத்தவன் (நாட்.வ.).

கொம்புமுறி-த்தல் 11வி. புகையிலையின் தலைப்பு (குருத்து) முறித்தல். (இலங்.வ.)

கொம்புமுறிவிளையாட்டு பெ. ஒருவகையான சமய விளையாட்டு. (இலங்.வ.)

கொம்புமுறை பெ. 1.நாற்றுக்கு ஒருநாள்விட்டு ஒரு நாள் விடும் தண்ணீர். (தொ.வ.) 2.விதைத்த ஐந்தாம் நாளிலிருந்து பதினொராம் நாள் வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் நீர்ப்பாய்ச்சி வடிய விடுகை. இன்று ஏழாம் கொம்பு முறை (நாஞ்.வ.).

கொம்புமுறைவை-த்தல் 11வி. சேற்றில் விதைத்த 3,5,7 என்று ஒற்றைப்பட வரும் நாட்களில் தண்ணீர் பாய்ச்சி வடித்து எடுத்தல். (தொ.வ.)

கொம்புவள்ளி பெ. கிழங்குவகை. (இலங்.வ.)

கொம்புவாணம் பெ. முக்கோண உருண்டை வடிவ மத்தாப்பு வகை. (வட்.வ.)

கொம்புளவு பெ. கொம்மை முதலிற் கொண்ட எழுத்தாகிய ளகரம். (நாட்.வ.)

கொம்புளி-த்தல் 11வி. உமிழ்தல். நறைகொப் புளிக்கும் நறும்பொகுட்டு நளினம் (சிவஞா.காஞ்சிப்பு.மாசா.1).

கொம்பூதி பெ. 1.கொம்பூதுவோன். (செ.ப.அக.) 2.நத்தை. (சங்.அக.)

கொம்பேந்தி பெ. விநாயகன். கொம்பேந்தி தந்தை பணி கொட்தோ (தனிப்பா.தி.83 காளமே.).

கொம்பேறிமூக்கன் (கொம்பேறிமூர்க்கன்) பெ. மரப் பாம்பு வகை. நல்ல பாம்பு விரியன் வழலை கொம்பேறி மூக்கன் (சிந்.இலக்.4,5).

கொம்பேறிமூர்க்கன் (கொம்பேறிமூக்கன்) பெ. மரப்பாம்புவகை. (வின்.அக.)

கொம்பை[1] பெ. துச்சம். (வைத்.விரி.அக.ப.118)

கொம்பை[2] பெ. நரி. (ஆசி.நி.105)

கொம்மட்டி[1] பெ. 1.தும்மட்டி. (செ.ப.அக.) 2.கொடி வகை. (சைவ.பொது.297) 3.நீர் முலாம்பழம். குட்டித்தி லிட்டதோர் கொம்மட்டி யாமே (திருமந்.2904).

கொம்மட்டி[2] பெ. பேரின்பம். (சித்.பரி.அக.ப.33)

கொம்மட்டிக்கீரை பெ. செங்கீரை. (வின்.அக.)

கொம்மட்டிச்சுரை பெ. கறிக்குரிய சுரைச்செடிவகை. (முன்)

கொம்மட்டிமாதளை பெ. சீதளை, ஓர் நாரத்தை. கஞ்ச வயல் சூழ கொம்மட்டி மாதளையின் மேல் கயல் குதி கொள் ஆதனூரும் (திருவால.திருப்பணி.49).

கொம்மட்டிமாதுளை பெ. மரவகை. (சிலப்.16,25 உரை)

கொம்மடி பெ. 1.நீர் மொலாம்பழம். சுரை கொம்மடி பழச்சோறு (அறப்பளீ.சத.65). 2.கொம்மட்டிக்காய். சார்வு ஒழி கொம்மடியாதி தாவரத்து (கொலை மறு.22).

கொம்மாச்சன் பெ. மாமன். கொம்மாச்சன் மகளைக் கட்டிக்கிட வேண்டியதுதானே (நாஞ்.வ.).

கொம்மாதி பெ. நெட்டிலிங்கமரம். (சித்.பரி.அக.ப.85)

கொம்மாந்தன் பெ. இறுமாப்புக் கொண்ட தலைவன். பூசே பரிதி சென்னைப்பட்டணத்துக்குக் கொம்மாந்தானாகி ழசே பரிதி கொள்ளையிட்டுத்தின்று கொண்டு சுகத்திலே யிருக்கிறான் (ஆனந்த.தினசரிச்.3 ப.77).

கொம்மாளம் பெ. குதித்தாடும் ஓர் அநாகரிகக்கூத்து, கும்மாளம். கொம்மாளம் போட்டுத் தின்னக் கொடுத்தார் (இளை.இலக்.98).

கொம்மி பெ. மகளிர் கைகொட்டிப் பாடியாடும் விளையாட்டு, கும்மி. மடவார் கொம்மியே பாடி (திருவருட்பா 6 மாயாவிள.7).

கொம்மெனல் பெ. 1.பெருக்கக் குறிப்பு. (தொல். சொல்.298 உரை) 2.விரைவுக் குறிப்பு. கொம்மென வுயிர்த்து நெஞ்சிற் கொட்புறு கவலை நீங்க (சீவக.315). கொம்மென எழுந்தனள் (கந்தபு.5,2,9). வாளெயி றதுக்கும் வீழுங் கொம்மென வோடு மீளுங் கொதித்தழு (திருவிளை.பு.1,59). கொம்மென எழுந்தனர் (செ. பாகவத.782). கொம்மெனப் போய்த் தூது இதுவால் (ஆனந்த.வண்டு.தூது 434). 3.ஒலிக்குறிப்பு. கூர நாண்குரல் கொம்மென ஒலிப்ப (பரிபா.19,44). கொடும்பாவங் கொம்மென்றுருக் கொண்டு (கச்சி. காஞ்சிப்பு.தீர்த்த.98). 4.அணுகரணவோசை. ஆர்ந்திட்டிழுமெனல் கொம்மெனல்... அணுகரணம் சூழ் (உரி.நி.203).

கொம்மை பெ. 1.வட்டம். கொம்மை யார்ந்தன கொடிபட வெழுதின குவிந்த (சீவக.2364). கொம்மையின்றி வட்டு ஆடினாற் போலும் (குறள்.401 மணக்.). சந்தாடும் கொம்மை வருமுலையும் (சூலோ.உலா 607). கொம்மை முலை மேகலைகள் கூற்றமடு கூற்றம் பொய்ம்மை யல (ஞான.உபதேசகா.141). இழை கிழித்தெழுந்த கொம்மையிள முலை (செ.பாகவத.5,1, 19). கோலி நாட்டமுங் கொம்மை வதனமு மேலு மாதரை (சீகாழித்.பு.திருநாட்டு.22). தரள வடக் கொம்மை முலையார் குழாத்தொருத்தி (தஞ்.பெரு.உலா 103). 2.திரட்சி. கொம்மை வரி முலை செப்புடன் எதிரின (குறுந்.159). கொம்மை வரிமுலை (சிலப்.28,16). கொம்மை வரிமுலை கோங்கரும்ப (புறப்.வெண்.290). கொம்மை முலை பகர் வார் கொண்டாட்டம் ... வெறுமைக்கு வித்து (நல்வழி 20). கொம்மைப் பணை முலை கூட்டும் பரிசு கொடியிடையார் (அம். கோவை 120). கொம்மை முலை மேகலைகள் கூற்றமடு கூற்றம் பொய்ம்மை யல (ஞான.உபதேசகா.141). கொம்மை வெம்முலை கொடியொடும் இனிது வீற்றிருக்க (திருக்கருவை.அந்.82). மடலே றுகை பெரினமன்றோ வார்கொண்ட கொம்மைப் புளகப் படாமுலை வஞ்சியர்க்கே (நாணிக்.ஒருதுறைக்கோவை 16). கொம்மை முலை மடமாதர் தோற்றென்ன கொய் தளிர்க்கை இளைத்து நீத்தார் (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண்.75). கொம்மைக் கமடத்திற் பரம்பின் செய்கை இலகுறச் செய்வர் மள்ளர் (மருத.பு.நாட்டுச்.33). 3.பெருமை. குங்குமங் குயின்ற கொம்மைக் குவிமுலை குளிர்ப்ப (சீவக.2064). அம்மையு மழகும் கொம்மையொடு கழுமி (பெருங்.1, 40,210). கொம்மை முலையினாள் கூடநீடு கோல்ங் குலாவு மிழலை தன்னில் (பெரியபு.28,557). கொம்மை வெம் முலைத்தடம் பொன் தயங்கு பசலை (நைட.5,22). கொம்மை மழவிடைப் பெருமான் (திருக்குடந்.பு.39,38). கொம்மை முலை மலையுயிர்த்த கொழுங்காந்தள (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய்.206). 4.பருமை. கொம்மை வாடிய இயவுள் யானை (அகநா. 29). வண்டு ஆர்க்குங் கொம்மை (கப். கோவை 62). பருத்திருத்கை கொம்மை மேடைகள் (பாத்மோ.பு.4, 185). எங்கள் அம்மே யம்மே என்று கொம்மை வரிமுலை (சோலை.குற.85). 5.முகடு. கொம்மையா முலையுடைக் கோதையைக் கண்டபேர் (வேதாளக்.14,7). கூந்தலென் றிலங்கிய கொம்மை வெம்முலை (முகியித்தீன் பு. 1799). 6.மதிலின் மேல் உறுப்பு. கயிறு பற்றித் தாளொத்த கொம்மைமீதில் தரத்தினால் இழிந்தான் (உ.கு.கா.84). 7.குப்பைமேடு. குப்பை மேடு குருகுவையென் கொம்மை திடர் என்றுங் கூறப்படுமே (பிங்.491) 8.கொத்தளம். கொம்மைகள் பொம்மைகள் முற்றம் எல்லாம் தணல் (இராமநா.6,11 தரு 3). கோட்டைச் சிதறவும், கொம்மை தகரவும் (வீர.கட்ட.கதைப்பா. ப.96). 9.இளமை. கொம்மை அம்புகர்ப்பிற் கருங்கண் வெம்முலை (நற்.314). கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ (நாலடி.85). பெரிய தொன்றிரண்டு கொம்மைப் பிறைகௌவி யிருந்த தொப்பான் (சூளா.1138). மணிமுடி அதனைக் கொம்மை முலை என அமைத்து (நைட.11,92). கொம்மைவார் முலையா ரமுது முத்தமிழுங் குழைத்து (சிவரா.பு.4,75). கொம்மை வெம்முலைக் களிற்றொடும் (திருச்செங்.பு.பாயி.12). கொம்மைவெள் விடையினான் (சிவஞா.காஞ்சிப்பு.வாணேச.8). சார்பவை தமை நகையாக் கொம்மை மலர்க்கைகள் (செங்கழு.பிள்.18). 10.அழகு. கொம்மை வெம்முலைக் கொடியொடும் (திருக்கருவை.அந்.82). கொம்மை சேர் வதிமுலைக் கூறனார் தமை (சிவபுண்ணிய.7). கொம்மை வெம் முலைக் கோதையர் (நகுல.பு.தீர்த்த.53). 11.வீக்கம். கொம்மை முலை (தக்கயாகப்.351). 12.முலை. வார் அணி கொம்மை வகை அமை மேகலை (பரிபா.22, 30). குங்குமம் கொம்மை மட்டித்தார் கொடியனாளையே (சீவக.991). தூமணி மார்பந்தைத்த துடியிடை மடவாள் கொம்மை (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய்.397). ஆடவர் கெஞ்சு கொம்மை இரண்டு கிளைத்தது (வீரநா.விசய. 3,34). 13.மார்பு. (பிங்.) 14.தனங்களிலணியும் பூண். வார்கலந்திலங்கு கொம்மை வனமுலை மகளிரிட்ட (சூளா.506). 15.கம்பு, சோளம், கேப்பையின் மேலிருக்கும் உமிபோன்ற பொருள். (இராமநாத. வ.) 16.கைகுவித்துக் கொட்டும் ஒருவகை விளையாட்டு. மடந்தையர்கள் கொம்மை கொட்ட (பச்சை.அம்.பிள். சப்பாணி.2,1). வாதாடல் கொம்மை குரவை புலவிமுதற் காப்பியம் போல் (சுவாமிநா.172). 17.வலிமை. கொம்மை மழ விடைப் பெருமான் (சிவஞா.காஞ்சிப்பு.மணிகண்.28). 18.அடுப்புக் குமிழ். (நாட்.வ.) 19.கதவுக் குடுமி. (செ.ப. அக.) 20.வீடு. உன்

கொம்மையிலே போய் முடங்கிக்கொள் (நாட்.வ.). 21.அழுக்குத் துணியிடும் பெட்டி. (முன்.) 22.கொம் மட்டி. (சித்.பரி.அக.ப.85) 23.புரட்டாசியில் விதைத்து மார்கழியில் அறுவடை செய்யும் கம்பு வகை. (செ.ப.அக.) 24.யானையின் முதுகுபுறம். கொங் கலர் கண்ணியான் கொம்மை தான் கொட்டலும் (சீவக. 1834). 25.அகங்கைவிரித்துக் கொட்டல். (யாழ்.அக.)

கொம்மைக்கட்டை பெ. ஆலையைத் தாங்கி நிற்கும் கட்டை. (தென்னார்.வ.)

கொம்மைகொட்டு-தல் 5வி. 1.தட்டியழைத்தல். குஞ்சரங் கூற்றொடு கொம்மை கொட்டுவ (சீவக.2230). கூற்றம் புறம்கொம்மை கொட்டினார் இல் (பழமொழி. 126). 2.புகழ்தற் குறியாக முதுகுப்புறத்தைத் தட்டிக் கொடுத்தல். குடங்கை யாற்கொம்மை கொட்டுவ போன்றவே (சீவக.529).

கொம்மையடி-த்தல் 11வி. கைகுவித்துக்கொட்டுதல். வரிவளக்கை கொட்டி மகிழ்வொடு கொம்மையடித்தும் (திரிபுரசு.பிள்.9,8).

கொம்மைவேள் பெ. பெருமையுடைய குமரக்கடவுள். கொம்மைவேளினி தமரிடம் (திருக்குடந்.பு.திருநாட்டுப்.14).

கொமட்டி பெ. கொடிவகை. கனிமாதுளை கொமட்டி மிகு மாதுளை (ஞான.உபதேசகா.2197).

கொமர் பெ. நெற்கூட்டின் அடியில் முதலில்வைக்கும் கட்டு. (தொ.வ.)

கொமளம் பெ. கறவைப்பசு. ஆவேசித்துக் கட்டின கொமளம் (தெ.இ.க.7,1,103,2).

கொமாரப்பாறை பெ. ஐந்தடி நீளமுள்ளதும் பசுமை நிறத்ததுமான கடல் மீன் வகை. (செ.ப.அக.)

கொமுரி பெ. இளம்பெண், குமரி. நம்மூரு ஊருக் கவுண்டரு கொமுரி வேட்டைக்கும் போறாங்கோ (கொங்கு நா.பா.2 ப.97).

கொமுவணிகன் பெ. இரும்பு வணிகன். கொமு வணிகன் எளசந்தன் (அழகர்மலை-த.பிராமி-கி.மு.2,1).

கொமுளி பெ. கடல் மீன்வகை. (தொ.வ.)

கொமை[1] பெ. அவமரியாதை. (கன்.வட்.)

கொமை[2]**-த்தல்** 11வி. வருந்துதல். (ஆசையும் நேசமும் 1967 ப.29)

கொய்[1] பெ. எட்டரை அங்குலம் நீளமுள்ளதும் நன்னீரில் வாழ்வதும் பசியநிறத்ததுமான மீன் வகை. செம்புனல் கொய்யனைத்துங் கொணரும் (தேவா.5,75,3). கழப்புமீன் ... கிழக்கன் முரல் கொய் (நீரரர்நி.2,2).

கொய்[2] பெ. (இசையி.) கரகப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.151)

கொய்[3]**-தல்** 1வி. 1.நீக்குதல். கொய்யும் புரைதீர் இறைவனருள் கொடுக்கும் துறவே (தேம்பா.1,6,55). 2.பறித்தல். படப்பைக் கொய்த அடகின் கண்ணுறையாக (புறநா.140,3). வேங்கை நறு மலர் பெற்பிடை யாம் கொய்து (ஐந்.ஐம்.15). கொய்மலரால் ஏலவிண்டை கட்டிநாம மிசையவெப்போ ... மேயதுமு துகுன்றே (தேவா.1,53,9). நறும்போது கொய்ய (சேர.மும். கோவை 10,15). பன்மலர் கொய்து செல்லப் பனிமலர் அன்ன மன்னவரும் கொண்டகன்றபின் (பெரியபு. 1,26). தஞ்சைத் தருவாய்த் தழை கொய்து தண் புனம் காத்து (குஞ்.கோவை 35). செல் லாநிற்குஞ் சென்றுமலர் கொய்யும் (திருவாரூர்க்கோவை 72). கொய்விரைக் கடம்பணி கோவும் (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.348). வயற் கதிரைக் கொய் தெடுத்துத் தின்னலானார் (இயேசுகா.ப.87). புன்னைப்பூக் கொய்யவந்த புலந்திரனை யாராடித்தார் (தூலாட்டு. ப.40). 3.அறுத்தல். சிலம்பில் தலைவிளை கானவர் கொய்தனர் (ஐங்.270). சிறுதினை கொய்ய (மதுரைக்.271). வினையைக் கொய்யும் மெய் வாள் வலவன் (சடகோபரந்.31). கொய்கின்ற ஏனல் (அம்.கோவை 186). யாணர் வச்சிரஞ் சீரிப் பான்போற் பொய்தவன் றலையைக் கொய்தான் (திருவிளை.பு.1,58). புடையகத்தினில் புணர்ந்தவான் உருவி ... இருஞ்சிரம் கொய்தான் (தேம்பா.1,3,30). தன் மாம்சன கஞ்சன் தலை கொய்து (பாண்டிநா.பிள்.1,1). செந்நெல் கூட்டமிட்டே கொய்யத் தொடுத்தே (கதிரை.பள்.104). கொய்து கொய்து குவித்திடப் பின்னருமைது போதில் பசும் பயிராய் விளைந்து (ஆளவந்.காஞ்சிப்பு.989). வள்ளல் ... தலை கொய்யத் தந்த வாள்பார் (புலவர் உள்.ப.122). 4.கத்தரித்தல். குரங்கு உளைப் பொலிந்த கொய்சுவற் புரவி (அகநா.4,8). கொய் சுவல் புரவி (பதிற்றுப்.62,3). கொய்யுளை மான்தேர்க் கொடித் தேரோன் (பரிபா.17, 45). ஐ ராயிரம் கொய்யுளைப் புரவியும் (சிலப்.26, 134). கொய்தகைய பூம்பொதும்பர்க் குளிருமரப் பலகை (சீவக.1782). கொய்தார் மன்னவன் (புற.வெண்.3,3 கொளு). கொய்யுஞ் சுவற்பரி யும்குலப் பாகுமுட் கோலு (அம்.கோவை 505). கொய்யுளை வெங் கலினவாம் பரி (சிவஞா.காஞ்சிப்பு.திருவே.77). கொய்யுளைப் புரவியின் குரத்தெழும் ஓதையும் (மனோன்மணீ.1,1,8). 5.வெட்டுதல். பாங்கு அணை மரங்கொய்து ஒக்கப் பகைத்த சாசனையும் கொல்வாய் தீங்கு அணை கொடியோய் என்றான் (தேம்பா.2,8,48). செங்கையில் கொய்த தன்பூஞ் சிரமெடுத்து ஏந்தி (தித்தேரி.அம்.1 வி.3). வாள்கொடே குயமு டன்குமிழ் தன்னையுங் கொய்தனன் (நகுல.பு.இராம.18). 6.களைதல். சிலிர்த்தல் கொய் சுவற் புரவி (மலைபடு.574). கொதென யாவும் உளத்து அறக்கொய்மினிர் (திருக்காவ.கலம். 48). 7.அரிதல். பிரம னார்சிரம் உகிரினிற் பேதுறக்

கொய்தாய் (சிவஞா.காஞ்சிப்பு.சார்ந்தா.31). 8.ஒழித்தல். நந்துயிர் உய்ய நகைக் கதிர்பரப்பிக் கொழித்து அனைத்து இருளினைக் கொய்து ஈங்கு உறித்தனை (திருக்காவ.கலம்.1). 9.அகற்றுதல். தாதைதன் தளை கொய்த கடவுளை (பாண்டிநா.பிள்.1,1). 10.சேலை போன்ற துணியின் நுனியை மடித்தல், கொசுவ மிடுதல். கோடிப் பூந்துகில் கொய்து விளிம்புரீஇ (பெருங்.2,5,165). கொய்தார மார்பி னெங் கோ (புறப்.வெண்.95). கொய்பூங் கலைகள் மெய்தாங்கி (சீகாழித்.பு.பிரமபுர.22). கோலவர்ணச் சோமனையும் கொய்து மிகவுடுத்தி (சிந்.இலக்.5,26). பூசை வேட்டியுந் தோளில் போட்டார் ... யோக வேட்டியுங் கொய்துடுத்தார் (அயோ.கதை ப.67). ஓங்குநாட் கதிர் கொய்தார் (முக்.பள்.137,6). துசைத்த ஆடைகளைக் கொய்து ஊற்றின் குறுக்கே போடுவித்து (மீனா.சரித்.2 ப.266). 11.அணிதல், சாத்துதல். கடவுளைத் தழை கொய்து இறைஞ்சுவோமே (பாண்டிநா.பிள்.1,1). 12.தெரிந் தெடுத்தல். பொருந்துவ தொன்றை மக்குக் கொய்துரை (கோயிற்பு.பதஞ்.54). 13.எஃகிவாங்குதல். (யாழ்.அக.)

கொய்[4]-தல் 1வி. அழிதல். கொய்யா வலியே குறையாத் திருவே (தேம்பா.1,11,69).

கொய்ச்சாளை பெ. ஓர்மீன். (யாழ்.அக.)

கொய்சகம் பெ. ஓரங்கொய்து சுருக்கப்பட்ட உடை. கோதையுங் குழைவின் பட்டின் கொய்சகத் தலையுந்தாழ (சூளா.1640). கொய்சக மருங்குறச் சேர்த்தி (கம்பரா.6,35,6). பூந்து கிற்படாங் கொய்சகத் தானைபின் போக்குகோ வணஞ்சாத்தி (திருவிளை.பு.5,97). பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கியுங் கொய்சக மென்று சிதைத்தும் வழங்குப (தொல்.பொ.464 பேரா). சேலைப் பூங் கொய்சகத்தில் சிந்தை எல்லாம் கட்டி வைக்கும் மாயம் (தாயுமா.பா.45,5,10).

கொய்சுவனம் பெ. →கொய்சகம். (வட்.வ.)

கொய்தடி பெ. வண்ணம் தீட்ட பயன்படும் தடி. (இலங்.வ.)

கொய்திடு-தல் 6வி. பறித்திடுதல். மலரெல்லாம் கொய்திடுவோமடி தோழிப் பெண்காள் (கும்மிப்பா.சிங்கை.9). திராவிடர் சேராது அழித்திடச் செய்திடும் சூழ்ச்சி அண்ணே அதைக் கொய்திட வேண்டும் அண்ணே (பாரதிதா.33,1,(3-5 கவி.2).

கொய்துகட்டு-தல் 5வி. நெரிபிடித்துக்கட்டுதல். (யாழ்.அக.)

கொய்துவாங்கு-தல் 5வி. எஃகிவாங்குதல். (முன்.)

கொய்தென வி.அ. சட்டென, கூவியக் காமனுந்தான் கொய்தெனவந்து ... என்று தக்கான் (தீத்தேரி.அம்.6 க.70).

கொய்ப்பசிரிக்கீரை பெ. நீடுமரி. (செ.ப.அக.)

கொய்பொழில் பெ. காயும் கனியும் கொய்யும் சோலை. குன்றும் குரைகடலும் கொய்பொழிலும் தான் கடந்து (பாரத வெண்.11,1).

கொய்ம்மலர் பெ. பறிக்கப்படும் மலர். கொய்ம்மலர்த் தருத்தோறும் (குசேலோ.449).

கொய்மீன் பெ. மீன்வகை. கொய்மீன் செப்பலி (குருகூர்ப்பிள்.20).

கொய்யகச்சட்டி பெ. விளிம்புள்ள சட்டிவகை. (வின்.அக.)

கொய்யகம் பெ. 1.→கொய்சகம். (வட்.வ.) 2.மண்டபத்தில் அலங்காரமாகக் கொய்து மேலே தொங்க விடப்படும் ஆடை. பசும் பொனுடுக்கை கொய்யக மீப் படநாற்றினர் (ஞான.உபதேசகா.சிவபுண்ணிய.62).

கொய்யடி[1] பெ. (இசையி.) கரகப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.151)

கொய்யடி[2] பெ. →கொய்யடிநாரை. நாரை ... கொய்யடி (அபி.மாலை 738).

கொய்யடிநாரை பெ. வண்டானம் என்ற நாரை வகை. (தீவா.)

கொய்யம் பெ. சேலையின் தொங்கல். (இலங்.வ.)

கொய்யல் பெ. கொய்யாமரம். கொங்கார் கோடலொடு கொய்யல் குழைஇ (பெருங்.1,51,51).

கொய்யா[1] பெ. 1.→கொய்யல். கொய்யாக் கருப்புச் சீலை (கொங்குநா.பா.2 ப.243). 2.ஒரு வகைக் கனி. கொல்லையிலே கொய்யாப்பூ (இளை.இலக்.36).

கொய்யா[2] பெ. நெய்வார் கருவிவகை. (யாழ்.அக.)

கொய்யாக்கட்டை பெ. 1.சன்னல் கதவு இரண்டையும் மூடி அது திறந்து கொள்ளாமல் இருக்க இரு கதவுக்கும் நடுவே பொருத்தப்படும் ஒரு திருகுக் கட்டை. (வட். சொ.வி.ப.119) 2.இடுக்கிச் சட்டம். (செ.ப.அக.) 3.அச்சின்மீது இரண்டருகுகளிலும் வண்டிச் சட்டத்தைத் தாங்கும்படி குறுக்காக வைக்கப்படும் கட்டை. (நாட்.வ.)

கொய்யாக்கயிறு பெ. நெச்வு கருவிவகை. (செ.ப.அக.)

கொய்யாக்குறிஞ்சி பெ. (இசையி.) குறிஞ்சிப் பண். கொய்யாக் குறிஞ்சி பல பாடி (புறப்.வெண்.79).

கொய்யாப்பழம் பெ. ஒருவகைப்பழம். அந்தபடிக்குக் கொய்யாப்பழம் அனுப்பச் சொல்லி உத்தாரங் கொடுத்தார் (ஆனந்த.தினசரிச்.3 ப.93). கோவை படர்ந்திட்ட கொய்யாப்பழந் தரும் தோட்டம் (தமிழ.கத்தி ப.42).

கொய்யாமரம் பெ. மரவகை. கொய்யா மரஞ் சாய்க்க வில்லை (கொங்குநா.பா.2 ப.243).

கொய்யான் பெ. மண்ணாலான பரணி. (யாழ்.அக.)

கொய்யுளை பெ. 1.குதிரை. கொய்யுளை கொடிஞ்சி குஞ்சரம் (ஞானாமிர்.7,18). கொய் யுளையடிச் சுவடு

தோறும் (சிவஞா.காஞ்சிப்பு.நகரப்.17). கொய்யுளைகள் சண்ட வுலவை யென்றழகாய் தம்மோடு (கச்சி. காஞ்சிப்பு.திருக்கண்.43). பாயிருள் படலங் கிழித்திலகு கொய்யுளை (சொர்ண.பிள்.ப.5). கொய்யுளைத் திரைக்கடற் கூட்டமும் (மனோன்மணீ.3,2,119). 2.குதிரைபிடர் மயிர். ஐஈ ராயிரங் கொய்யுளைப் புரவியும் (சிலப்.26,134). கொய்யுளை வயப்பரி (கந்தபு.3,15,36). உண்டுடுத்தலங்கு கொய்யுளைக் கோரம் (திருக்குடந்.பு.52,11). மிகு கொய்யுளைப் புரவியும் சூழ (குருகூர்.பிள்.5). மொய் குரம் அற்றன மூளை தகர்ந்த கொய்யுளை வெம் பரியின் குழுவெல்லாம் (சீவல.கதை 388).

கொய்யோ பெ. சயக்குறிப்புச்சொல். (யாழ்.அக.)

கொய்யோக்கூறல் பெ. வெற்றிகூறல். (முன்.)

கொய்லி பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கொய்வாள் பெ. அரிவாள். அரிநர் கொய்வாள் மடங்க (பதிற்றுப்.19,22).

கொய்னா பெ. 1.சுரப்பட்டை மரம். (செ.ப.அக.) 2.காய்ச்சல் மருந்து. (முன்.)

கொயா பெ. குழாய். (கிளை.மொழியி.150)

கொயினாமரம் பெ. மருந்து தயாரிக்க உதவும் ஒருவகை மரம். (கலைச்.அக.2 ப.92)

கொர்னிசு பெ. (இங்.) எழுதகவேலை. (செ.ப.அக.அனு.)

கொரக்கை பெ. குறட்டை. இண்டிலுக்கென்றும் அனுகரணத்தால் கொரக்கை விடுதலால் சாக்கியனுக்கு உயிருண்டெனில் (நீல.375 உரை).

கொரடா பெ. குதிரைச் சவுக்கு. (செ.ப.அக.)

கொரநாடு பெ. கூறைநாடு. (முன்.)

கொரலி பெ. 1.தினை. (முன்.) 2.வெண்தினை. (முன்.)

கொரவை பெ. குரவைமீன். (முன்.)

கொராக்குட்டி பெ. பெண் ஆட்டுக் குட்டி. (அரி.நாட்.வ.)

கொராகணி பெ. ஒரு மருந்து வகை. (வைத்.விரி.அக. ப.118)

கொரான் பெ. (உருது) குறான், இசுலாம் சமயத்தின் முதல் நூல். (செ.ப.அக.)

கொரி பெ. கன்றின் வாய்ப்பூட்டு. (நாட்.வ.)

கொரிக்கம் பெ. எழுத்தாணிப்பூடு. (மலை அக.)

கொரிகாமரம் பெ. →கொறுக்காப்புளி. (சித்.அக.)

கொரிகை பெ. →கொரிக்கம். (சித்.பரி.அக.ப.85)

கொரித்தலை பெ. நிலவேம்பு. (முன்.)

கொருக்காப்புளி (கொறுக்காப்புளி) பெ. →கொடுக் காய்ப்புளி. (செ.ப.அக.)

கொருக்கு (கொறுக்கு) பெ. ஆண் குறியில் புண் ஏற்படுத்தும் ஒருவகை பால் வினை நோய். (பைசச.200)

கொருக்கை பெ. நாணல் வகை. (வைத்.சத.ப.76)

கொருசாமுறுக்கு பெ. அச்சு முறுக்கு. (சோழ.செட்.வ.)

கொருடன் பெ. கோவைக்கொடிவகை. (மலை அக.)

கொருவாய் பெ. பல் உடைந்து ஓட்டையாய் இருக்கும் வாய். (ரா.வட்.அக.)

கொருவோடு பெ. தட்டோடு. (சென்.வ.)

கொரைச்சல் பெ. வெட்கம். (தொ.வ.)

கொல்[1] பெ. 1.கொலைத்தொழில். கொல்களிறு கோட்டால் நோய்செய்யும் (நான்மணி.14). கொல்வார் மழுவாட் படையாய் (தேவா.6,5,1). கொன்னுனை வேல் அம்பலவற்றொழாரின் (திருக்கோவை 231). 2.வருத்தம். (சூடா.நி.) 3.துன்பம். வாரல் குறவர் கொல் யானைக் கொள்ளி (திரிச்சிரா.அந்.63). 4.இரும்பு. நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் (தொல்.எழுத்.372). மின்வெள்ளி பொன் கொல்லெனச் சொல்லும் (தக்கயாகப்.550). 5.கொல்லன். (கோடீச்.கோவை 348 உரை) 6. பூட்டு. (பிங்.) 7.கதவு முதலியவற்றில் தைக்கும் இரும்பு முதலியவற்றாலாகிய பட்டை. (வட்.வ.) 8.பஞ்சலோகம். (யாழ்.அக.) 9.செம்பொன். (வட.நி.594) 10.உலோகம். (நாம.நி.318)

கொல்²(லு)-தல் 3வி. 1.வதைத்தல். கொல் ஏற்றுக் கோடு அஞ்சு வானை (கலித்.103,63). கொன்றன்ன வின்னா செயினும் (குறள்.109). அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் (நாலடி.213). எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் (முதுமொழி மேல்.23). நினைக் கொல்லற்கு இயன்ற விதம் (குமணசரித்.322). 2.துன்பப்படுத்துதல். நின்னலம் காட்டி யெம்மைக் கொன் றாயெனக் (சீவக.642). கூச்சம் இனிப் பொறேன் (தெய்வச்.விறலி.தூது 346). என்மனமே எனைக் கொல்லும் (குமணசரித்.322). 3.அழித்தல். மதில் கொல் யானையின் கதழ்பு நெறி வந்த (ஐங்.78). நல்லவர்க்கு வைத்த அறப்புறங் கொன்றானும் (திரிகடு.25). கொன்றான்காண் புரமூன்றும் (திருவாச. 12,16). வெய்ய கனலுமிழ் திகிரி யெம்மான் கஞ்சனைக் கொல்லும் (செ.பாகவத.10,1,49). கரை கொன்றிரங்கும் திரைசெய்நீர் பட்டது (குமர.பண்டார.கோவை 5,4). திரு முதுசூரைக் கிளை யோடும் அஞ்சக் கொன்று (திருச்செந். கலம்.7,12). உயிரை வதைத்தவனும் கொன்றவனும் ... நரகுறுவர் (தண்டலை.சத.27). முன் மூவர்கள் கோட்டை கொன்ற வொரு மந்த காசப் படையாய் (திருக்குற்றா. மாலை 5). எங்கள் கையினால் இவனைக் கொல்ல மனதொண்ணாதே (காஞ்சி.அம்.ப.28). கும்பகன்னனை வென்று நின்ற காளையைக் களத்திற் கொன்று துன்னிய வாகை சூடித் தோன்றுபன் மைந்தன் (மேகநா.1,10). 4.கெடுத்தல். எஞ்ஞான்றும் கொல்லல் கொல்லல் செய்ந்நலங்கொல்லல் (பெருந்.231). 5.சிதைத்தல். எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் (குறள்.110).

6.முறித்தல். மரங்கொல் யானையின் மதநா றருஞ்சுர மவன்செலற் கெழுந்தான் (சீவக.1557). 7.போக்குதல். ஈரங் கொன்றபினி ருண்ம ணிச்சுடர் நீர வாய்நிழ லுமிழுங் குஞ்சியை (சீவக.2422). 8.கொலை செய்தல். கொன்று ண்பான் நாச்சாம் (சிறுபஞ்.8). தம்மைக் கொன்றாலொத்த இன்னாமையைப் பின்பு செய்யினும் (குறள்.109 மணக்.). கறங்கு அடுத்தகால் கழுத்தினை முருக்கி நான் கொன்றேன் (தேம்பா.1,3, 23). வேல்வழியே ஆவிவிட வெஞ்சினத்தாற் கொல்லுவனால் (தித்தேரி.அம்.2க.49). ஒண்டொடியை யானை இப்போ ஓடியே கொல்லும் (சீவே.சரி.1629). உனதுதந்தை தனைமாளக் கொன்றநிருதர் (ஆளவந். காஞ்சிப்பு.169). மேலொருசன் மத்திலன்னோன் மீண்டு கொண்றான் (ஆத்திசூடி வெண்.38). கொன்றுயிர் தரும் விழிக் கோதை (அறு.இலக்.15 பொருள்). கொல்லும் கல்வி வளர்க்கும் அரசு (புதுமைவே.9,14). மன்று னாயகன் சரபமாய் மானிட வரியைக் கொன்று (குதீசிப்பு.2). 9.இரசமுதலியவற்றின் விசத்தன்மை யைக்கெடுத்தல். (செ.ப.அக.) 10.மரத்தை வெட்டுதல். மரம் கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய (குறுந்.214). குறவர் கொன்ற குறைக் கொடி நறைப் பவர் (நற்.5). மரம்கொல் தச்சர் (சிலப்.5,29). 11.வளைத்தல். கொன்றாரைக் கொல்லுமல்லாற் கொலைவிடா தென்று உலகோர் கூறுவாரே (செயங்.சத.64). 12.எறிதல். இடைமகன் கொன்ற வின்னா மரத்தினேன் றந்த துன்பக் கடலகத் தமுந்த (சீவக.1914). 13.மறுத்தல். அமைச்சர் கழறிடுஎம காற்றைக் கொன்று கொடுநெறிமேற்படர் (செ.பாகவத.4,3,926). 14.கதிரறுத்தல். நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்து (தொல்.பொ.76 உரை). 15.உண்ணுதல். எரிகொன் றீன்ற விலைப்பலி போ லிருத்தி யாலென் னின்னுயிரே (சீவக.1662). 16.வெல்லுதல். அமிழ்தினைக் கொன்ற தீஞ்சொற் குமரனை ஏத்தினாள் (செ.பாகவத.690).

கொல்[3] இ.சொ. 1.ஐயப்பொருளில் வரும் ஓர் இடைச் சொல். கொல்லே ஐயம் (தொல்.சொல்.268). யாதுகொல் மற்றவர்நிலையே (அகநா.139,17). கற்றதனாலாய பயன் என்கொல் (குறள்.2). என்று கொலென நினைந் திருந்த செவ்வியுள் (சீவக.1703). யாதுகொன் மற்றிவ் வேந்தல் பணி (பெருங்.1,34,70). பொன் மகிழ் ஆயிழைக்கு ஈயும் சொல் (சடகோபரந்.48). எனது காதலன் ... ஈசன்மேல் அமருக்கு ஏகினாள் வந்திலன் ... மாய்வுற்றான் கொலோ (கந்தபு.6,13,278). துயர் களையும் பதம் ஈதன்று கொல் (பகவற்.9,1). ஈங்கிதென கொல்லோ வென்றன்றிதயங் களிப்ப (திருச்செங் கோட்டுப்பு.1,4,3). கடல் நீர் கொலோ கபடமோ (திருவருட்பா 15,1). 2.பெரும்பாலும் செய்யுளில் வரும் ஓர் அசைநிலை. என் னுற்றனகொல் இவையெனில் அல்லது (தொல்.பொ.200). வருகென்றார் யார்கொலோ ஈங்கு (கலித்.85,3). எரிவாய் நரகத்து வீழ்வர் கொல் என்று (நாலடி.58). மேயிடை பெறுவ னாயின் வேந்துகாண் குறுவன் கொல்லோ (கூளா.103). நீயும் வந்த வரவென் கொல் என (இரணியவதைப்.282). அரிவருவாம் இவர் ஆர் கொல் என்ன (பெரியதி.தமிழாக்.2,8,17). விதி என்று கூடுங் கொலோ (இராமனுச.நூற்றந்.29). வயந்தனி னுலவு மதன் கொலோ (பாரதம்.1,1,85). வேண்டும் இடர் கொல்லோ (தேம்பா.2,2,6). பல வேசி மாரிடை உழலொரு துட்டன்கொல் என்றும் சொலினாள் (பழனித்திரு.12,1).

கொல்குறும்பு பெ. கொல்லும்வேடர் நிறைந்த சிற்றூர், பாலை நிலத்தூர். (இறை.அகப்.1,18)

கொல்கை பெ. பிறவுயிர்களை வதைக்கை. கொல்கை மாற்றலும் (பகவற்.16,4).

கொல்கொதா பெ. கபாலத்தலம். கபாலத்தலம் என்று அர்த்தங் கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவரைக் கொண்டுபோய் (விவிலி.மாற்கு 15,22).

கொல்செய்களன் பெ. கொல்லர் தொழில் செய்யும் கூடம். கொந்தெரி யிரும்பெறிஞர் கொற்செய்கள னொத்தும் (கூளா.1292).

கொல்சேரி பெ. கொல்லர் வசிப்பிடம். வைகொண்ட வூசிகொல் சேரியின் விற்று (திருக்கோவை 386).

கொல்யானை பெ. 1.கொலைத்தொழில் வல்ல யானை. பைம்பொற் பட்ட மணிந்தகொல் யானையான் (கூளா. 147). 2.மதயானை. பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய் (முத்தொள்.21).

கொல்லங்கொவ்வை பெ. கொடிவகை. (பதார்த்த.346)

கொல்லங்கோவை பெ. →கொல்லங்கொவ்வை. கொன்றை வேர் கொல்லங் கோவைக் கிழங்கு (தெய்வச். விறலி.தூது 403).

கொல்லச்சி (தொல்லிச்சி) பெ. கொல்லச்சாதிப்பெண். (இலங்.வ.)

கொல்லச்சேவகன் பெ. →கொல்லா-2. (யாழ்.அக.)

கொல்லத்தி பெ. →கொல்லச்சி. (தொ.வ.)

கொல்லத்து பெ. சிற்பம். (யாழ்.அக.)

கொல்லத்தெரு பெ. கொல்லர் வசிக்கும் தெரு. கொல்லத் தெருவில் ஊசி விற்றால் விலை போமோடா (இராமநா.6,3 தரு).

கொல்லபுரம்மா பெ. குறவர் வணங்கும் ஒரு தெய்வம். (வருணா.குற.118)

கொல்லம் பெ. 1.→கொல்லாமாண்டு. (செ.ப.அக.) 2.கடல் கொண்டதாகக் கருதும் தென்தமிழ் நாடு களுள் ஒன்று. கொல்லமும் கூபமும் (தொல்.சொல். 400 நச்.). குமரி கொல்ல முதலிய பன்மலைநாடும் (சிலப்.8,1 உரை). குடமலை நாடுங் கொல்லமுங்

கலிங்கமும் (பெருந்.780). 3.சேர நாட்டிலுள்ள ஒரு கடற்கரைப் பட்டினம். குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் (கல்.கலை உ.அக ப.158). கொல்லம் செழிச்சிடுத்து (தமி.நா.பா.ப.150).

கொல்லம்பாகல் பெ. ஒரு வகை கொடி. (குண.472)

கொல்லமா பெ. 1.→கொட்டைமுந்திரி. (செ.ப.அக.) 2.ஆனைக்குரு. (மூன்.)

கொல்லமாண்டு பெ. கி.பி.824 ஆம் வருடம் தொடங்கி தென்றமிழ் நாட்டிலும் மலைநாட்டிலும் வழங்கும் அப்தவிசேடம். (மூன்.)

கொல்லர்[1] பெ. 1.இரும்பு வேலை செய்வோர், கருமான். அவந்திக் கொல்லரும் (மணிமே.19,108). தச்சர் கொல்லர் தட்டார் (தொல்.சொல்.167 நச்.). தேரிரும்பு கொல்லர்கள் உலை பிணித்து (திருச்செங்.பு.3,20,4). கொல்லத் தெருவதனில் ஊசி விற்கும் வினைய தாமே (தண்டலை.சத.அவை அடக்.). கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம் (பாரதி.தேசியம்.5,12). 2.கம்மாளர். (யாழ்.அக.)

கொல்லர்[2] பெ. அரண்மனை வாயில் காப்போர். கொல்லரிற் பத்துப் பேரையழைத்து (மதன.கதை ப.93). கொல்லரென யாரென்றா ரப்பா நான் வித்து வானென்று சொன்னேன் (விறலி.தூது 1035).

கொல்லர்[3] பெ. கொல்லம் நாட்டிலுள்ளோர். கொல்லரிவ ரையவிவர் (திருவிளை.பு.30,32). கங்கர் கொல்லர் கருநாடர் மாக்தர் (கச்சி.காஞ்சிப்பு.நகரேற்.251).

கொல்லர்பட்டறை (கொல்லன்பட்டரை) பெ. கருமான் உலைக்களம். (ஆட்சி.அக.ப.260)

கொல்லவர் பெ. கொலையுடையார். கொல்லவருடன் பழகு புன்மையில ரேயாம் (திருவாமாத்.பு.பூர்வ.1,30).

கொல்லவன்பட்டு பெ. ஒருவகைப் பட்டு. கொல்லவன் பட்டு உளவோ என்றால் கோசிகம் அல்லது இல்லை (தொல்.சொல்.33 தெய்வச்.).

கொல்லற்றுக்காரன் பெ. கொத்தன். (செ.ப.அக.)

கொல்லற்றுவேலை பெ. கொத்துவேலை, கட்டுமான வேலை. (மூன்.)

கொல்லறு பெ. கொத்தன் கரண்டி. (மூன்.)

கொல்லன்[1] பெ. 1.கம்மாளன், பொன் வேலை செய்பவன். கங்கை கிழக்கொல்லன் ஒக்கும் அவ் வெண்பிறை (தனிப்பா.தீர.138 காளமே.). பொன் செய் கிழக் கொல்லனொக்கும் அவ் வெண் பிறையே (திருவாரூர் நான்.38). 2.கருமான், இரும்பு வேலை செய்யும் ஆசாரி. மென்றோன் மிதியுலைக் கொல்லன் (பெரும்பாண்.207). கொல்லன் உலையூதுந் தீயேபோல் உள்கனலும் கொல்லோ (நாலடி.298). கொல்லன் செய்த வாள் (இறை.அகப்.112,19 உரை). கொல்லனே தேடி இரும்பு அடிப்பான் (தனிப்பா.தீர.112 காளமே.). கொல்லனுளி நாடாத கோல வர்ண பூந்தேரும் (கள்ள.அம்.ப.102). குறடுசுத்தி கொல்லன் உலை யாணிவிற்றான் (மேழிவி.262). மாயக் கொல்லனின் சதியால் கோவலன் மாண்டதை அறிந்தாயே (கண்ண. திரை.பா.2,457).

கொல்லன்[2] பெ. சிவன். (சித்.பரி.அக.ப.33)

கொல்லன்[3] பெ. கருவூலகப் பொறுப்பாளன். (செ.ப. அக.அனு.)

கொல்லன்கம்மாலை பெ. →கொல்லன்பட்டரை. (இலங்.வ.)

கொல்லன்கோவை பெ. 1.கொல்லங்கொவ்வை. (பதார்த்த.422) 2.காக்கணங்கொடி. (யாழ்.அக.)

கொல்லன்பகை பெ. அஞ்சனபாடாணம். (மூலி.அக.)

கொல்லன்பட்டடை பெ. அடைகல். (செ.ப.அக.)

கொல்லன்பட்டரை (கொல்லர்பட்டறை) பெ. கொல்லன் உலைக்கூடம். (வட்.வ.)

கொல்லா[1] பெ. 1.கலம் சமமாக நீரிலிருக்க கட்டப்படும் சிறுதோணி. கலமது கவிழா வண்ணங் கட்டுசிற் றோடங் கொல்லாவாம் (நீரரர்நி.3,2). 2.படகுகளில் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் இரு தடிகள். (இலங்.வ.)

கொல்லா[2] பெ. கருவூல வேலை பார்க்கும் நம்பிக்கையான வேலையாள். (நாட்.வ.)

கொல்லாக்கொலை பெ. சித்திரவதை. (வட்.வ.)

கொல்லாநோன்பு பெ. →கொல்லவிரதம். கொலை மலிந்த நாளில் கொல்லா நோன்பு நிலை பெற வேண்டி நெடுந்தவம் புரிந்த (பாரதிதா.23,3,5).

கொல்லாப்பண்டி (கொல்லாவண்டி) பெ.→கோரதம். (சிலப்.6,120 உரை)

கொல்லாபுரி பெ. 1.பல்லவ நாட்டிலுள்ள ஓரூர். செங்கருப்பஞ் சாற்றினுஞ் சங்கந் தவழுங்கொல் லாபுரிச் சந்திரனே (பெருந்.1233).

கொல்லாம்பழம் பெ. விளாங்காய். (என்.வெ.கா. ப.110)

கொல்லாமற்கொல்லல் பெ. நன்மை செய்கிறதாகத் தீமை செய்தல். (யாழ்.அக.)

கொல்லாமை பெ. உயிர்க் கொலை செய்யாமை. கொல்லாமையாவது யாதோர் உயிரையும் கொல்லாமை (குறள்.அதி.33.மணக்.). தன்மம் பத்தாவன ... பிரியம் கொல்லாமை ... என்பன (சதாசிவ.94 உரை). கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும் (தாயுமா. பா.8,1).

கொல்லாரி பெ. கடபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒருகுலம். (தென்.குல.குடி.2 ப.384)

கொல்லாவண்டி (கொல்லாப்பண்டி) பெ. →கோரதம். உருவுதிரையை யுடைய கொல்லாவண்டி (சீவக.858 உரை).

கொல்லாவிரதம் பெ. உயிர்களைக் கொல்லாமையாகிய நோன்பு. தனிவிரதத்திற் கொல்லாவிரதமும் (சீகாழித்.பு.தீர்த்த.22). கொல்லாவிரதங் குவையெல்லாமோங்க (தாயுமா.பா.பராபர.54). எல்லா உயிரும் இயல் மகார் எனக்கொடு கொல்லா விரதம் குறிக்கொள்பேரருளும் (பழனித்திரு.7,35). கொல்லா விரதம் கொண்டோர் ... இசைந்தாரடி (பாரதிதா.மூன்.சமத்.ப.184). கொல்லா விரதம் குவலயத்தில் ஓங்கநினை (இ.ஒ.ப.49).

கொல்லாவிரதர் பெ. உயிர்களைக் கொல்லாமையாகிய நோன்புடையோர். கொல்லா விரதர்க் கருள்குமரா கொட்டி யருளாய் சப்பாணி (பழனித்திரு.13,4,6).

கொல்லாவிரதியர் பெ. →கொல்லாவிரதர். கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே (தாயுமா.பா.பாயப்புலி.22). கொல்லாவிரதியர் தம் கூட்ட மிக நீடுதலால் (தில்.நெல்.32).

கொல்லாவேதம் பெ. (கொல்லாமையை விதிக்கும் மறை) சமணவேதம். (யாழ்.அக.)

கொல்லாவேதன் பெ. (கொல்லாமை வேதத்தை அருளிச்செய்தவன்) அருகன். (சூடா.நி.)

கொல்லி[1] பெ. கொல்லு-பவன்-பவள்-வது. சின மென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி (குறள்.306).

கொல்லி[2] பெ. 1.→கொல்லிமலை. பேஎம் முதிர் கொல்லிக் கருங் கட் தெய்வம் (குறுந்.89). மா இருங் கொல்லி உச்சித் தாஅய் (அகநா.303). கொல்லி ஆண்ட வல் வில் ஓரியும் (புறநா.158,5). கொல்லிமேல் கொட்டு வைத்தார் (பழமொழி.99). குடையலர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய் (புறப்.வெண்.240). உயிர்ப்பாவை கொல்லிக்குமுண்டு (கு.சோ.உலா 289). வளர்கொல்லியோவியமோ (அம்.கோவை 3). இமயம் குடக் கொல்லி கல்லின் திணியார் அருவியின் ஆர்த்த சிராமலை (பட்டினத்தார்.பா.அந்.57). நன்மீனவனும் புறஞ்சாய்ந்து கொல்லியினும் ... குடியேற (திருச்செங்.பு.3,23,5). கூறுபுகழ்ச் சேரலன்றன் குவ டனைந்தோம் அப்பால் கொல்லியிது வென்றுரைத்தார் (சரபேந்திர.குற.40,4). 2.கொல்லி என்னும் ஆறு. படர்ந்து எழு கொல்லி எனும் நாலாறும் (கலிங்கத்துப்.367). 3.கொல்லிப்பாவை. வகையமை கொல்லியின் வசையறத் துடைத்து (பெருங்.2,4,185). கவுத்துவத்தைக் கொல்லிக் கிறையாக்கி (நம்.திருத்தாலா.255). 4.(இசையி.) மருதயாழ்த் திறன் வகை. நாயன் மார்களது பதிகங்களில் ... கொல்லி முதலிய பண்கள் பயின்றுள்ளன (இந்.பண்பாடு 12 ப.72).

கொல்லிக்கிழங்கு பெ. கார்த்திகைக் கிழங்கு. (சித்.பரி.அக.ப.85)

கொல்லிக்கூற்றம் பெ. கொல்லிமலையைச் சார்ந்த நாடு. வேளாவிக் கோமான் பதுமன் றேவி யீன்ற மகன் கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசை (பதிற்றுப்.எட்டாம் பத்து.பதி.). தாமே அதிகப் போர் செய்யாமலேயே கொல்லிக் கூற்றம் எனப்படும் பகுதியை ... சேர்த்துக் கொண்டனர் (சேரன்வஞ்சி ப.170).

கொல்லிக்கௌவாணம் பெ. (இசையி.) முற்காலத்து வழங்கிய ஒருவகைச் சிறு பண். (தீவா.)

கொல்லிகாவலன் பெ. குலசேகராழ்வார். கொல்லி காவலன் சொல் பதிக்கும் கலைக்கவி (நூற்றைம்.அந்.14).

கொல்லிச்சி (கொல்லிச்சி) பெ. →கொல்லத்தி. கொல்லிச்சி தட்டாத்தி (தொல்.சொல்.167 நச்.).

கொல்லிச்சிலம்பன் பெ. சேரன். (தீவா.)

கொல்லிட்டுப்போ-தல் 4/5 வி. ஒலியடங்குதல். (நாட்.வ.)

கொல்லிடம் (கொள்ளிடம்) பெ. காவிரியினின்று பிரியும் ஒரு நதி. (யாழ்.அக.)

கொல்லித்திறம் பெ. (இசையி.) முற்காலத்து வழங்கிய பண் வகை. (செ.ப.அக.)

கொல்லிப்பாவை பெ. கொல்லி மலையின் மேற் புறத்தில் தெய்வத்தால் அமைக்கப்பட்ட கொடிய பெண்ணுருவப்பாவை. (சிலப்.6,61 உரை)

கொல்லிமலை பெ. நாமக்கல் மாவட்டத்திலுள்ள ஒரு மலை. மாதவா கொல்லி மலையுடைய கொற்றவா (பெருந்.1500). வளம் றாத குடதிசைக்குக் கொல்லிமலை (இறைவாச.பு.168). பொதியமலை நேரிமலை கொல்லி மலை மூன்றும் (தமிழரசி குற.58,9). கொல்லி மலை தேன்சிட்டு எங்கே போறே (கண்ண.திரை.பா.1,83).

கொல்லிமேடு பெ. 1.புன்செய் நிலம். (புதுவை வ.) 2.விளைச்சல் செய்ய முடியாத மேட்டு நிலம். (வட்.வ.)

கொல்லியம்பொருப்பன் பெ. கொல்லி மலையையுடைய சோழன். பரிமா வூர்ந்து கொல்லியம் பொருப்பன் சேனைக் கடலெதிர் குறுகினானே (திருவிளை.பு.37,11).

கொல்லியருவாத்தி பெ. தேய்ந்த மண் வெட்டி. (தொ.வ.)

கொல்லியோவியம் பெ. →கொல்லிப்பாவை. வளர் கொல்லியோவியமோ (அம்.கோவை 3).

கொல்லிவராடி பெ. (இசையி.) பாலையாழ்த் திறவகை. (பிங்.1381)

கொல்லிவயல் பெ. விவசாயத்திற்கும் பயன்படும் நிலம். (புதுவை வ.)

கொல்லிவெற்பன் பெ. →கொல்லிச்சிலம்பன். கொல்லி வெற்பன் ஆள் கொங்கினில் ... வைப்பில் முருகன் (பூண்டிப்பு.சருத.3,7)

கொல்லு பெ. கொல்லர் செலுத்தும் தொழில் வரி. தைச்சும் கொல்லும் குகமும் (தெ.இ.க.8,79,5).

கொல்லுக்கொலை பெ. கொடுங்கொலை. அவன் கொல்லுக்கொலைக்கு அஞ்சாதவன் (நாட்.வ.).

கொல்லுத்தடியாணி பெ. கதவில் தைக்கும் ஆணி வகை. (வின்.அக.)

கொல்லுலை பெ. கொல்லனுலை. கொல்லுலைக் கூடத்தினால் (நீதிநெறிவி.14).

கொல்லெனல் பெ. 1.ஓர் ஒலிக்குறிப்பு. புள்ளும் கொல்லென ஒலி செயும் பொழில் (கூளா.729). 2.ஒலியடங்குதற் குறிப்பு. (பிங்.2116)

கொல்லேறு பெ. காளை. கொல்லேறு பாய்ந்திறுத்த கோடு போற் றண்டிறுத்து (பெருந்.534).

கொல்லேறுகோடல் பெ. (அகப்.) மணம் முடிக்கும் பொருட்டுக் காளையைப் பிடித்தல். அசுரமாவது கொல்லேறு கோடல் ... முதலியன செய்து கோடல் (தொல்.பொ.92 நச்.).

கொல்லை பெ. 1.முல்லைநிலம். கொல்லைப் புனத்த முல்லை மென் கொடி (குறுந்.186). கொல்லை தருவான் கொடிகள் ஏறுவகாண் (திணைமாலை.105). கொல்லை பயின்று வல்லை யோங்கிய (பெருங்.1,49,110). கொல்லை விடைமுன் பூதங் குனித்தாடுங் கல்ல வடத்தை யுகப்பார் காழியார் (தேவா.1,24,7). கொல்லைமழ விடையார்தங்கோயிலினுள்ளும்புறம்பும்...திருவிளக்கின் அணிவிளைத்தார் (பெரியபு.45,7). கொல்லை யானிரை மேய்ப்பவர் (திருவிளை.பு.நாட்டுச்.35). கொல்லையங் குறிஞ்சிக் கோட்டுக் குறவர்தங் குடிலின் (திருச்செந்.பு. 6,46). வேடுவச் சிறார் ... கொல்லை யம்புற முயலினைத் தொடர் வருங் குறித்தே (தென்காசித்.பு.நாட்டுச்.43). கொல்லை யெங்கணுங் கொழுமலர் (சிவஞா.காஞ்சிப்பு. நாட்டுப்.57). கொல்லை மான் மறிவோர் கையவன் (குளந். பதிற்றுப்.அந்.94). 2.புன்செய் நிலம். கரி புனம் மயக்கிய அகன்கண் கொல்லை (புறநா.159,16). கொல்லை சூழ்குன்றத் துச்சி (சீவக.3062). கொல்லைதான் சாவி போய் விட்டாலும் அங்கு வரு குருவிக்கு மேய்சலுண்டு (குமரே.சத.79). பயிர்களொடு கொல்லையிற் றீயூடுவது தான் முளைத்து மென்னாம் (கறுப்பண்ண.சத.27). கொல்லை உழவர் இது கொளுத்தியே சுட்டமரம் (சீவே.சரி.1330). கொல்லை முழுதும் மறுநாள் வெட்டி விட்டான் (முக்.பள்.122,1). 3.உழப்படாத நிலம், தரிசு. கொல்லை யிரும்புனத்துக் குற்றி அடைந்த புல் ஒல்காவே ஆகும் (நாலடி.178). 4.காடு. செல்வமல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக் கொல்லைமுல்லை மெல்லரும் பீனுங் குற்றாலம் (தேவா.1,99,3). 5.தோட்டம். கொல்லை யிற் பாற்பசு மேய்ப்போன் ... கவிசொல்ல (தொண்டை. சத.52). கொல்லைப் புறத்துக் குளிரடகைத் தாம் பறித்தார் (பாரிகாதை 597). கொல்லையின் மணந்த முல்லைக்கொடி (பாரதிதா.20,1,2). இருவாட்சி முல்லை பயிராகும் கொல்லை (ஏற்றப்பா.ப.11). நீ வந்ததால் கொல்லை குளிர்ந்தது வெண்ணிலவே (இளை.இலக். 31). 6.வீட்டின்பின்புறம், புழைக்கடை. (கிளை. மொழியி.ப.174) 7.பயிர்க் கொல்லை.கொல்லை விடை புகுந்தாற் போல (பாரத வெண்.724). 8.மஞ்சள் பயிரிடும் நிலம். பசுமஞ்சள் காப்புக் கொல்லை (கல்.வ.). 9.நிலம். (வட்.வ.) 10.தினைப்புனம். கொல்லை நெடுங் கை வன் மான் கடும் பகை (குறுந்.141). கொல்லைக் கலாஅல் கிளிகடியும் கானக நாட (நாலடி.283). 10.இடுகாடு. கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தன் (திருமந்.542). 11.மூலாதாரம். கோம்புல னாடிய கொல்லையு மாமே (திருமந்.1515). 12.மலம். குழந்தைக்குக்கொல்லை எப்படிப் போகிறது (நாட்.வ.). 13.மலங்கழிக்குமிடம். (செ.ப.அக.) 14.வரம்பு கடந்து ஒழுகுபவ-ன்-ள். கொல்லை யென்பர்கொலோ குணம் மிக்கனளென்பர் கொலோ (திருவாய்.6,7,4).

கொல்லைக்காரன் பெ. 1.குப்பை யெடுப்பவன். (நாட்.வ.) 2.தோட்டம் வயல் முதலியவற்றில் வேலை செய்பவன். (பஞ்சதந்.)

கொல்லைக்கீரை பெ. குப்பைமேனி. (சித்.பரி.அக.ப.85)

கொல்லைக்குப்போ-தல் 4/5 வி. மலங்கழித்தல். (ரா.வட்.அக.)

கொல்லைநாள் பெ. அதிக நாள். (முன்.)

கொல்லைப்பயறு பெ. வயற்பயறு. (செ.ப.அக.)

கொல்லைப்பயிர் பெ. மேட்டுநிலப் பயிர். (நாட்.வ.)

கொல்லைப்பல்லி பெ. ஓர்பூடு. (யாழ்.அக.)

கொல்லைப்புறம் பெ. 1.காய்கறித் தோட்டங்கள் பூங்காக்கள் அமைந்த இடம். (தொ.வ.) 2.வீட்டின் பின் பக்கம். (ஆட்சி.அக.ப.33)

கொல்லைமை பெ. வரம்பழிந்து ஒழுகுகை. ஆய்ச்சியர் தம்மொடும் கொல்லைமை செய்து (திருவாய்.4,2,2).

கொல்லைவிளைவி-த்தல் 11வி. தோட்டம் பயிரிடுதல். (இலங்.வ.)

கொல்லைவெளி பெ. வயல்வெளி. (நாட்.வ.)

கொல்லோடியன் பெ. (மருத்.) காயத்திற்குப் பூசும் ஒருவகை பைராக்சிலின் கரைசல். (கலைச்.அக. ப.2,92)

கொல்வாய் பெ. 1.மதகு. (ஐம்.அக.) 2.மணல் வாரி. (முன்.)

கொலஞ்சி பெ. காய்ந்த ஓலை. (வட்.வ.)

கொலப்படு-தல் 6வி. கொலை செய்யப்படுதல். என்னைக் கொலப்படுவாய் என்று சொல்லிக் கூறினான் (பாரத வெண்.26).

கொலர் பெ. கட்டையின் கழுத்துப்பகுதி. (இலங்.வ.)

கொலவை பெ. குலவை, விசேட காலங்களில் மகளிர் நாவாற் குழறியிடும் மகிழ்ச்சியொலி. (தென்.கிளை மொழியி.)

கொலிள் பெ. ஓர்மரம். (யாழ்.அக.)

கொலு[1] பெ. (இசையி.) கரகரப் பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152).

கொலு[2] பெ. 1.ஓலக்கஇருக்கை. சபாமண்டபக் கொலுக் கோபுர வுச்சியினின்றும் பார்த்து (கோலாசல.பு.409 உரை). சிங்கர்தனத்தின் மிசை கொலு வீற்றிருக்கும் நின்னைக் கும்பிட்டு (தாயுமா.பா.5,8). இருந்திடுங் கொலுவில் (மச்சபு.நைமிசா.6). சிங்காத்சனக்கொலுவில் தேவேந்ரன் (கூளப்ப.காதல் 39). அமரர்களோடு பொன்னும் வெள்ளியுஞ் சதமகன் கொலுவினிற் போகி (மருத.பு.15,8). குவலயத்துள் வீரர்எல்லாம் கொலு முகமாய்ச் சேவிக்க (சீவே.சரி.3133). வெள்ளை வாரணன் கொலுவிடை வியாழன் வந்திடலும் (திருநெல்.பு. திருப்புடை.12). தேசத்து ராங்கராவு கொலுவுக்கு வாரானாம் (தேசிங்கு.கதை ப.38). புவிதனைப் புரக்க வந்து கொலுவிருக்கும் பொலிவு தானோ (மலரும்.945). கொலுவோ கொல்லிது மணவறை (மனோன்மணீ. 5,3,45). 2.நவராத்திரிப் பண்டிகையில் பொம்மை முதலியவற்றை அலங்காரமாக அமைக்கை. (செ. ப.அக.) 3.கூத்தில் பலர் ஒரே தடவையிற் தோன்றல். தென்வட மோடியென் கூத்தி ... முன் வரு கூடத்தராட் டம்வரவுடன் கொலு என்பேராம் (நீரரர்நி.5,10).

கொலு[3] பெ. சித்தர மூலம். (சித்.பரி.அக.ப.85)

கொலுக்கூடம் பெ. →கொலு மண்டபம், ஆத்தான மண்டபம். காமக் கொலுக் கூடம் (கூளப்ப.காதல் 107). கொற்றவர்கள் தங்களது கொலுக்கூடம் காட்டினானே (புலந்.மாலை ப.30).

கொலுகொலு-த்தல் 11வி. 1.கலகலத்தல். (வின்.அக.) 2.மட்கிப்போதல். (முன்.) 3.அசைதல். (யாழ்.அக.) 4.ஈடாடுதல். (முன்.)

கொலுகொலுப்பு பெ. 1.ஓயாமல் வாய்பேசுகை. (நாட்.வ.) 2.கலகலத்துப்போகை. (செ.ப.அக.) 3.ஈடாட்டம். (யாழ்.அக.) 4.உல்காசம். (முன்.) 5.ஆடம்பரம். (இலங்.வ.)

கொலுச்சட்டம் பெ. கதவின் முன்புறத்தில் கதவுப் பலகைகளை இணைப்பதற்காகக் கீழ், மேல்,நடு என்னும் மூவிடங்களிலும் அமையும் சட்டம். கொலுச் சட்டம் இல்லாத கதவு கோணை (தென்.வ.).

கொலுச்சாவடி பெ. உல்காசவீற்றிருப்பு மண்டபம். (யாழ்.அக.)

கொலுசு[1] பெ. 1.பெண்கள், குழந்தைகள் காலில் அணியும் பொன் அல்லது வெள்ளியிலான ஒருவகை அணிகலன். காலிலிடும் கொலுசு கண்ணிலிடும்மையி (கம்.நாட்.பா.11). கொலுசால் குரண்டி கன்னத்தில் உதைத்தனள் (தனிப்பா.தீர.5 ஒட்டக்.). தாள் சதங்கை கொலுசும் குலசிலம்பும் (திருப்பு.845). சங்கிலி நடுக்க முத்திற் கொலுசுகளாம் (புலந்.மாலை ப.19). அன்பது விராகனிடை பொன் கொலுசு வேணும் என்று சொன்னார் (ஆனந்த. தினசரிச்.6 ப.81). வியன் பொற் கொலுசு அணிந்து (பஞ்ச.திருமுக.76). சிலம்பு சொலுசு முதலிய பல கால் விலங்குகளையும் (பெண்கல்வி 21). உனக்கு ஏழு மாமே கொலுசு செஞ்சு போடுவாங்க (கொங்குநா. பா.2 ப.48). பாடகம் ... கொலுசு பொற்பாதம் அதற்குத் தரித்து (கும்மிப்பா.சீரணி.23). 2.22 கசம் நீளமுள்ள அறைச்சங்கிலி. (அரசிதழ்)

கொலுசெழுத்து பெ. கூட்டெழுத்து. (நாட்.வ.)

கொலுநிலை பெ. கூத்தாட்டத்தில் மேடையில் முதல் தடவையாக ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் தோன்றும் காட்சி. அவைமுன் வரவுவந் தாலதன் பேர்கொலு நிலையாகும் (நீரரர்நி.5,11).

கொலுப்பலகை பெ. வண்டியில் வண்டியோட்டி அமரும் இடம். (புதுவை வ.)

கொலுமண்டபம் பெ. ஆத்தான மண்டபம், திருவோலக்க மண்டபம். உயர் கொலுமண்டபத்தி டையோ (சிவரக.விசையை.13). மதன்கொலு மண்டபம். வளைத்திடு திரைபோல் (சரபேந்திர.குற.30,5).

கொலுமுகம் பெ. →கொலு மண்டபம். மதுரை கொலு முகத்தில் மரவேணி விழுந்ததுவே (ஏணி யேற்றம்.ப.51).

கொலுவா(வரு)-தல் 13வி. அரசன் கொலுவில் வீற்றிருத்தல். பெருமாள் பெரிய கொலுவாகி (தெய்வச். விறலி.தூது 589).

கொலுவிரு-த்தல் 12வி. 1.சபைமண்டபத்தில் வீற்றிருத்தல். இந்திரன் கொலுவிருந்திடும் அவை (அருணகிரிநாத.பு.7,13). அருட்டிரு மலைக்குடுமியிற் கொலுவிருப்பவனோடு (திருமுரு.பிள்.61). கொலு விருக்கும் தீர்த்தன் அருள் மேவும் செகதீசன் (பஞ்ச. திருமுக.ப.2). அட்ட சிங்கந்தாங்கு ஆத்தான மண்டபத்தில் பட்டமனனோடு பண்பாய் கொலுவிருந்தான் (மதுரை. கதை.ப.9). பொலிவிருக்கும் புதுப்பூ என்று கொலுவிருக்கும் கூடம் கடந்தான் (கா.கடமை.ப.77). பொதிகையிற் கொலுவிருந் துலகினைப் புரந்தனை (தமிழ்.பிள்.14). நீலமேனி நெடியோள் எம் நிமலை அமலை கொலு விருந்தாள் (வங்கத்துப்.7,4). நீதி மன்னர் வாசலிலே நேராய் கொலுவிருந்தாய் (மாரியம்மன்.ப.17). தித்திக்கும் பாலெடுத்து தெய்வத் தோடு கொலுவிருந்து (கண்ண. திரை.பா.3,24). 2.மணப்பந்தலில் மாப்பிளை மணக் கோலத்துடன் இருத்தல். (இலங்.வ.)

கொலுவிருப்பு பெ. வீற்றிருப்பு. (யாழ்.அக.)

கொலை பெ. 1.உயிர்வதை. பெண் கொலை புரிந்த நன்னன் போல (குறுந்.292). கொலையே களவே (மணிமே.24,125). வல் வில் கொலை பிரியா வன்

கண்ணார் (ஐந்.ஐம்.34). கொலையென்று திண்ணிய வாறையர் கையிற் கொடுஞ்சிலையே (திருக்கோவை 101). உயிர் அஞ்ச வரும் வஞ்சக் கொலை ஒழிமின் (வளையாபதி 34). சிலையினார் வேசையின் மிசைத்தெறு கொலைமத கரிகொலை யுற்றவே (பெரியபு.41,21). தானப்பகடு முதலாய சனங்க ளெல்லாம் மானச் சரத்தாற் கொலை செய்தனன் (பாரதம்.1,2,47). கொலை களவு ... கோபம் விட்டால் அன்றோ மலை இலக்கா நின் அருள்தான் வாய்க்கும் (தாயுமா.பா.43,288). தூய பார்ப்பினி யினாளைத் துணித்தனை கொலைமேற் கொண்டாய் (ஆளவந்.காஞ்சிப்பு.227). கொலை செய்வதைப் போல் ஒரு இன்பமில்லை (கண்ண.திரை. பா.1,367). 2.கொல்லும் தொழில். கொலை முகந்து அழன்றவேல் (தேம்பா.1,3,45). தானக் களிறு படிந்திடக் கொலை ஏனக் களிறு மடிந்திட (முக்.பள்.40,5). கொலை என்றியம்புபா தகனும் (திருவருட்பா 6,2). 3.கொல்லும் குணம். புலிப்பிணவின் பறழுக்கருத்திக் கொலை மறந்த (திருமுரு.பிள்.பா.22). 4.இமிசை. ஒல்லைக் கொலையேறு டம்படைய (குலோத்.உலா 33). கொலை துறத்தலுங் காமங் குறைத்தலும் ... காயத்தவம் (பகவற்.17,15). படுகொலைபுரி ... குவளைக் கண்ணே (நைட.நாட்டுப்.24). கொலை செய்யாதிருப் பாயாக (பு.ஏற்.மத்தேயு 5,21).

கொலைக்கடம்பூட்டு-தல் 5வி. கொலைத் தண்டனை நிறைவேற்றுதல். குற்றங் காட்டிக் கொலைக்கடம் பூட்டும் (பெருங்.3,25,103).

கொலைக்கருவி பெ. கொலை செய்தலுக்குப் பயன் படுத்தப்படும் கருவி. வாள் தொழுதகையுள்ளும் கொலைக் கருவி ஒடுங்கும் (குறள்.827 மணக்.). கொலைக் கருவி வாளா வேலா கட்டாரியா (பிசிராந். ப.41). கலைக் கழகு நல்கு திருக் கண்ணமுதை மாய்க்கக் கொலைக் கருவி யான் கொண்டதை அறியாள் (கா.கடமை.ப.78).

கொலைக்கழு பெ. கொல்ல உதவும் கழு மரம். உருத்துக் கொலைக் கழுவில் இட்டனர் (யசோதர.294).

கொலைக்களம் பெ. 1.கொல்லப்படும் இடம். கொலைக் களத்துப் பகைவரைப் போல வரும் (குறள்.1228). கொலைக் களக்காதை (சிலப்.16). கொளைக்களங் குறித்துச் சென்றே மீளினும் (குண்டலகேசி 10). கொலைக் களங் குறுகி (யசோதர.59). குழாக்களிற் றரசர் குறித்தெழு கொலைக்களம் (பெருந்.532). கொலைக்களங்கள் முழு மையும் அழிக் குந்திறமை தருவாயே (பழனித்திரு.8,37). கொலைக் களப்படுத்த வல்ல குற்றங்கள் இவன் பால் உண் டென்று (இரட்ச.சரி. 233). கொலைக் களம் ஆக்கிவிட்டார் குளிர் நாட்டை (பாரதிதா.மூன்.சமத்.ப.187).

கொலைக்களன் பெ. →கொலைக்களம். உலகமெலாம் கொலைக்களனாய் உருவெடுத்த வேளை (புதுமைவே. 8,6).

கொலைக்குற்றம் பெ. உயிர்வதை செய்தலாகிய குற்றம். (வட்.வ.)

கொலைக்குன்றம் பெ. யானை. குசைமாவுங் கொலைக்குன்றமுங் குருதியார முங்கொணர்ந்தும் (பெருந்.892).

கொலைகாரன் பெ. 1.கொலை செய்பவன். கொல்ல நினைத்திடுவான் கொலைகாரன் தானும் அவன் (சீவே.சரி.635). கொலை காரன் கொள்ளைக் காரன் முதலியவர்களைக் கண்டால் மக்கள் எப்படி பயந்து ஒதுங்கி வாழ்வார்களோ அதேநிலைதான் நாடகக்கார னுக்கும் இருந்து வந்தது (நா.கலை.ப.13). 2.பழிபாவங் களுக்கு அஞ்சாதவன். (செ.ப.அக.)

கொலைச்சிறை பெ. சிறைச்சாலையில் கொலைத் தண்டனைக்குரிய குற்றவாளிகளை அடைத்து வைக்கும் அறை. கொலைச்சிறை யிருவரை (பெருங். 2,17,71).

கொலைசுற்று-தல் 5வி. கொலைப்பாவம் வழி வழியாகத் தொடர்தல். (நாட்.வ.)

கொலைசூழ்-தல் 4வி. 1.→கொலைசுற்று-தல். (முன்.) 2.கொல்லும் உபாயத்தை நாடுதல். (செ.ப.அக.)

கொலைசெய்-தல் 1வி. 1.உயிரை ஆயுதங்களால் பறித்தல். கொலை செய்யும் அரக்கரை மனிதன் கொலை செய்வானோ (இராமநா.6,3 தரு 1). அவுணரைப் போரிற் கொலைசெய்திவ் வுலகம் ... ஓம்புதல் (சிவஞா.காஞ்சிப்பு. விடுவ.3). தோட்டக்காரர் அந்த ஊழியக்காரரைப் பிடித்து ஒருவனை அடித்து, ஒருவனைக் கொலைசெய்து ஒருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள் (பு.ஏற். மத்தேயு 21,35). 2.ஏதாவது ஒரு செயலைக் கெடுத்தல். அந்த நாடகத்தையே கொலை செய்து விட்டான் (நாட்.வ.). 3.துன்பஞ் செய்தல். கண்கொடு கொலைசெய (கலிங்கத்துப்.71).

கொலைஞன் பெ. 1.→கொலைகாரன்-1. கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப (நாலடி.331). அருளிலாக் கொலைஞர் பகையும் (குமரே.சத.22). கொலைஞன் யார்?ஏன்? இன்றுவரைக்கும் ஒன்றுமே புரியவில்லை (பிசிராந்.ப.35). சேரி தன்னில் கண்டு பிடிப்பீர் கொலைஞர் தம்மை என்றார் (தமிழ.கத்தி ப.96). 2.வேடன். (சூடா.நி.) 3.சண்டாளன். (தீவா.)

கொலைத்தொழில் பெ. உயிர்வதை செய்கை. கொலைத் தொழில் நினைத்தவர் படைக்கலம் எடுத்து எறியவே (இரணியவதைப்.349).

கொலைநவில்(லு)-தல் 3வி. கொலை செய்தல். கொலைநவில் வேட்டுவர் (மணிமே.13,31).

கொலைநன் பெ. →கொலைகாரன்-1. வாழுயிர்க் கூற்ற மான கொலைநரை (சீவக.2770).

கொலைப்பட்டினி பெ. அதிகமான பட்டினி. (ரா.வட்.அக.)

கொலைப்பழி பெ. →கொலைப்பாதகம்-1,2. (செ.ப. அக.)

கொலைப்பாதகம் (கொலைபாதகம்) பெ. 1.பெருந்தீச் செயல். (முன்.) 2.கொலையாலுண்டான பாவம். (வட்.வ.) 3.கொடூரக் கொலைக்குற்றம். அந்தப் பரபாசென்பவன் நகரத்தில் நடந்த ஒரு கலகத்தினி மித்தமும் கொலை பாதகத்தினிமித்தமும் காவலிலே வைக்கப்பட்டிருந்தான் (விவிலி.லூக்கா 23,19). 4.கொடிய கொலைச் செயல். இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும் ... புறப்பட்டுவரும் (பு.ஏற்.மத்தேயு 15,19).

கொலைப்பாதகன் (கொலைபாதகன்) பெ. →கொலை காரன்-1. குருமொழி மறந்தவர் கொலைப் பாதகர் (குமரே.சத.18).

கொலைப்பாவம் பெ. கொலைசெய்வதனால் வரும் பாவம். அதனாலும் விலைக்குக் கொண்டு தின்பதாலும் கொலைப்பாவம் வரும் (குறள்.255 மணக்.).

கொலைபாகன் பெ. கொலைத்துரோகி. (யாழ்.அக.)

கொலைபாதகம் பெ. →கொலைப்பாதகம். (நாட்.வ.)

கொலைபாதகன் (கொலைப்பாதகன்) பெ. →கொலை காரன்-1. ராசா ... தன் சேனைகளை அனுப்பி அந்தக் கொலைபாதகரை அழித்து அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான் (பு.ஏற்.மத்தேயு 22,7).

கொலைபுரி-தல் 4வி. உயிர்வதை செய்தல். நாளும் கொலைபுரியும் பாவிகட்குக் கொடி பிடித்தேனா (கண்ண. திரை.பா.2,340).

கொலைமகள் பெ. துர்க்கை. கொலைமகள் கவினை (பிரமோத்.7,26).

கொலைமலை பெ. யானை. பெருமதக் கொலைமலை (கல்லா.4).

கொலைமறுத்தல் பெ. கொலைசெய்தல் கூடாதென் பதைப்பற்றிச் சாந்தலிங்க சுவாமிகளால் பாடப் பெற்ற நூல். (செ.ப.அக.)

கொலைமாது பெ. →கொலை மகள். கொலைமாது வாழும் தமது இரு தோள்கள் (பழமலைக் கோவை 382).

கொலைமுட்டி பெ. சுவாசப்பை இறுகவும் வயிறு வீங்கவும் மூச்சுத் திணறவுஞ் செய்யும் கால்நடை நோய். (செ.ப.அக.)

கொலைமை பெ. கொலைசெய்யும் பண்பு. கொலைமை அசரமதில் குறைதரும் (கொலை.மறு.9)

கொலையாளன் பெ. →கொலைகாரன்-1. காதகன் சாருகன் கடுங்கொலை யாளன் (பிங்.831).

கொலையாளி பெ. 1.→கொலைகாரன்-1. கொலை யாளி கொலை செய்ததற்குள்ள காரணத்தைக் கூற வில்லையோ (பிசிராந்.ப.46).

கொலையுண்(ணு)-தல் 7வி. கொலை செய்யப் படுதல். (செ.ப.அக.)

கொலையுயிர் பெ. நீங்கப்போகும் உயிர். குற்றுயிரும் கொலையுயிருமாக் கிடக்கிறான் (நாட்.வ.).

கொலையோர் பெ. →கொலைகாரன்-1. கொலை யோர் ... செயும் கொடிதாற் கொதிக்கும் துயரும் (பாண்டி நாய.பிள்.6,2).

கொலைவர் பெ. கொல்லும் தொழிலையுடைவர். கொலைவர் கொடுமரம் தேய்த்தார் (தொல்.சொல்.71 நச்.).

கொலைவன் பெ. 1.→கொலைகாரன்-1. கொலைவன் சூடிய குழவித் திங்கள் (கலித்.103,15). கொலைவ னல்லையோ கொற்றவ னாயினை (மணிமே.25,174). 2.வேடன். கொலைவர் கொடுமரந் தேய்த்தார் (கலித்.12). 3.சிவன். கொலைவன் சூடிய குழவித் திங்கள் (கலித். 103,15).

கொலைவாளை பெ. ஒருவகை நெல். (செ.ப.அக. அனு.)

கொலோவு-தல் 5வி. உலாவுதல். குறங்காட்டு நால்விரற் கோவணத்துக் கொலோவிப்போய் (தேவா.2,41,10).

கொவ்வங்காய்ப்பதம் (கொவ்வைக்காய்ப்பதம்) பெ. கொவ்வைக்காய் போற் பசுமையாய் நெற்பயிரில் தோன்றும் இளம்பதம். (இலங்.வ.)

கொவ்வை பெ. 1.படர்கொடிவகை. குவளையும் குமிழும் கொவ்வையும் கொண்ட (சிலப்.8,75). கொவ்வைக் கனிவாய் (நக்.ஈங்.மாலை 35). கொவ்வை அங்கனிவாய் அணங்கு (இரணியவதைப்.81). குலம்பொலி யாதொண்டை கொவ்வை (உரி.நி.111). சேகறு பவளம் கொவ்வை ... ஆம்பல் காகுலம் புரிய (சீவல.கதை 1024). கொவ்வையில் வீழியிற் குலவு செங்கனிகளும் (அறு.இலக்.25 அணி). 2.கோவைக்கனி. கொவ்வை போல் செவ்வாய் (ஏலாதி 34). கொவ்வைச் செவ்வாய் (திருவாச.6,2). கொவ்வை வாயவள் முகிழ்விரல் கவர்ந்தது குறித்து (பெரியபு.28,1057). திருமறு மார்பன் தன்னை கொவ்வை வாய் மகளிர் வாழ்த்த (சீவல.கதை 320). கொவ்வை வாய்மலர்க் கோதையை (செ. பாகவத.577). கொவ்வை இதழும் (மயிலை.உலா 318). கொவ்வை வாய்த் துப்பு இதழி வாமத்தார் (கலைசைச்.வெண்.71). கொவ்வை இதழ்திருக்கண்டு தன் ஆகம் குளிர்த்தனவே (கபிலை.கோவை 57). கொவ்வை வாய்உமை (சிவஞா.காஞ்சிப்பு.வலம்புரி.21). கொவ்வை வாயானீர் முக்கிக் கொழுநர் மேற்றூவு வாரும் (இராவண காவி.2,2,88). கொவ்வைவாய் நனி துடி துடித்துப் ... பேசல் செவ்விதோ (மேகநா.3,29).

கொவ்வைக்காய்ப்பதம் (கொவ்வங்காய்ப்பதம்) பெ. கொவ்வைக்காய்போற் பசுமையாய் நெற்பயிரில் தோன்றும் இளம்பதம். (இலங்.வ.)

கொவல் (கோவல்) பெ. திருக்கே... ளூர். பெண்ணையும் கொவலும் மெவுகை (தெ.இ.க.8,69,3).

கொவளை[1] பெ. வெள்ளைத்தகரை. (நாட்.வ.)

கொவளை[2] பெ. ஒருவகைப்பாத்திரம். கொவளை நிறைய தண்ணி வச்சு (பட்.கல்.பா.ப.195).

கொவிந்தம் பெ. செம்முள்ளி. (நாட்.வ.)

கொவிள்[1] பெ. மரவகை. (முன்.)

கொவிள்[2] பெ. (இசையி.) கரகப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கொழஞ்சிப்பழம் பெ. கீச்சிலிப்பழம். (மருத்.குண.1 ப.224)

கொழப்படி பெ. நாற்றங்காலில் விதை பள்ளத்தில் போய் ஒன்றாய் சேர்தல். (புதுவை வ.)

கொழலி பெ. படரும் கொடிவகை. (தொ.வ.)

கொழி¹-த்தல் 11வி. 1.1.தெள்ளுதல், கல், மண், போன்றவற்றை முறத்தினால் பிரித்தெடுத்தல். விளைந்த நெல்லை வீசித் தூற்றிக் கொழித்து (ஆசிய.ப. 69). கடும்புனல் கொழித்த விடுமணல் (மதுரை.கலம். 17,25). இன்பங் கொழித்த இயலிசைகள் கொங்கை (பாரிகாதை 2). கொழித்தல் தெள்ளல் தாத்தலேன் (நீரரர்நி.3,24). 1.2.தெள்ளி யெடுத்தல். கோதிலாக் குணங்க டேற்றிக் கொழித்துரை கொளுத்த லென்றான் (சூளா.566). 2.ஒதுக்குதல். செழிக்கும் ... சங்கங் கொழிக்கும் (திருப்பு.88). முழுத்திரை கொழிக்கும் முத்த வெண் நகை (தில்.கலம்.9). கொழிக்குமணித் தடந்திரை நீர் இலஞ்சி (சிவஞா.காஞ்சிப்பு.திருமாற்.18). வேலை கொழிக்கும் மென் துரையே (சமுத்திரவி.6). ஒளஸீ ஒளி சேர் நித்ததிலமும் கத்து அம் கொழிக்கும் (கலைசைச். வெண்.68). குன்றமும் வனமும் கொழி திரைப் புனலும் மேவிட (பாரதி.புதிய.தனிமை.4). பிள்ளை என்னத்துக்கு ... ஆற்றுமண்லை அள்ளி விளையாட கொழுந்து மணலைக் கொழிச்சுவிளையாட (தமி.நா.பா.ப.96). 3.நீக்குதல். நெல்லெடுத்து குத்துங்கள் பச்சரிசி கொழியும் என்றார் (திருநெல்.நாட்டுப்.குழந்தைப்.16). 4.வாருதல். கிரியுள வெல்லாம் கொழித்து வந்துற வனைதரும் பாலி (கந்தபு.ஆற்றுப்.23). 5.வடித் தெடுத்தல். பல்வகைச் சுவையும் கொழித்த நாவினர் (சிவஞா.காஞ்சிப்பு.பாயி.24). 6.அரித்தல். அரிய சோதி மணி கொழித்தருவி பாய்ந்த (அரிச்.பு.4,83). 7.பொழிதல். தேன் கொழியாத் திகழும் பொழிகெழில் (திருக்கோவை 29). ஆனைத்துள் ஒவ்வொன்று கதுமெனச் சிறந்து கருணையே கொழிப்ப (ஞான உபதேசகா.22). கொடிய வெண்டிங்காள் கொழிக்கு நினதுகதிர் (நைட.சந்திரோ.6). அண்டமெல்லாம் பயவாழ விழித்து விழிகளில் அனல் கொழித்து (திருவிரிஞ்சை.பிள்.15,2,4). கழையினற்றண் கதிர் கொழிக்கும் தரளம் (கமலா.அம்.பிள்.92). அருள் பொறித்த முகத்தின் மாமை கொழித்த கதிர் உண்டார் (தேம்பா.1,3,54). நறு நறாக் கொழிக்கும் பொங்கர் (சிவஞா.காஞ்சிப்பு.மணிகண்.66). 8.பெருக்குதல். தண்ணருள் கொழித்து வாழ்ந்து (சிவஞா.காஞ்சிப்பு. தான்.11). 9.சேர்த்தல். கூற்றி னுயிர்ருண் டுயர்முத்தி கொழிக்கும் பொன்னங் குரைகழற்றாள் (கூர்மபு.1,7,13). 10.ஆராய்தல். கொழித்த கலங் காட்டாதார் சொற்கள் (நாலடி.319). கொழித்துக் கொளப்பட்ட நண்பினவரை (பழமொழி.182). கொழிக்குங்கால் பல்லார்முன் பேணாமை (சிறுபஞ்.39). இளையமாதர் பொன்னும் மணியும் கொழித்தெடுத்து (தேவா.1,7,7). கொழிக்கு நூலினர் கோட்டமில் சிந்தையர் (திருக்கழுக்.பு.நாட்டுப். 28). பழமறை கொழிக்கும் நெடுந்தகை (சிவஞா. காஞ்சிப்பு.காயாரோ.4). 11.தீங்கை நீக்கி நன்மையைத் தேர்தல். கொழித்துணர் குமரவென்றான் (சீவக.291). குற்றபாகு கொழிபவர் கோள் (கம்பரா.நாட்டுப்.29). கருமணற் கொழித்தல் போன்ற கவின்குழல் (திருப்பனந் தாள்.பு.நாககன்னி.6). 12.குற்றங் கூறுதல். வையங் கொழிக்கும் பழிக்கு (சீவக.1149). 13.குலுக்குதல். வாங்கிரும் பரவை முந்நீர்மணி கொழித்தனைய சொல்லான் (சூளா.330). 14.புறத்துவீசுதல். பொன்னும் துகிரும் முத்தும் கொழிக்கும் பொன்முகரி (திருக்காளத்தி. பு.7,31). 15. உகுத்தல். கரிசறு மலர்கொழி மதுவும் (குசேலோ.6). 16.எடுத்துக் கூறுதல். வையம் கொழிக்கும் பழிக்கென் செய்கோ (சீவக.1149). 17.சொல்லுதல். வீணாள் கழிக்கும் தமிழரின் காதில் தமிழ்ச்சீர் கொழிக்கும் ... குயில் (பாரதிதா.குயில்.ப.8). அவன் தன்புகழைக் கொழித்துக் கொண்டிருக்கிறான் (நாட்.வ.). 18.புடைத்தல். இனவளைகள் கொழித்து எறிந்து ... உயர் காவிரிவாய் (நீடூர்.பு.5). 19.வெளிப்படுத்துதல். கார்க் கடல் கனலைக் கொழிக்கும் தலுகண் குழிசிறுகண் (ஆண்டாள் பிள். 17). 20.பாடுதல். குன்றுதொறும் போய்த் தமிழ்ப்பாடல் கொழிக்கும் புகழும் கைகூடும் (பழனித்திரு.13,7,7).

கொழி²-த்தல் 11வி. 1.செழிப்புறுதல், செழித்தல். கடிக்குருக் கத்திக் கொடி பிடித்து...பொன் கொழித்து மணி வரன்றி...நோக்கி நின்றாள் (இறை.அகப்.32,32 உரை). பாரார்வைகைப் புனல்வாய்பரப்பிப் பன்மணி பொன் கொழித்துச் ... தென்றிருப்பூவணமே (தேவா. 1,64,3). பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பால் (பெரியபு. 29,1). திங்கள் தோறும் மும்மாரி கொழிக்கவே (இராமநா. 1,2 தரு 1).வெள் திரை கொழித்து (தனிப்பா.திர.1சிவப்பிர.).

கொழிநலமலி கும்பகோணம் (திருக்குடந்.பு.41,9). அருளினாற் கொழிக்கும் இன்பத்தமிழ் மொழி (சிவஞா.காஞ்சிப்பு.தமுவ.217). நவமணி கொழிக்கும் கோனாடு உடைய குபேர துல்லியன் (சின்ன.குளுவ.9). கொடுத் துவக்கும் பெருமையினைக் கொழி தமிழாற் கூறுதுமே (புலவர் உள்.ப.11). 2.பெருகுதல். அருள் கொழிக்கும் குரு வடிவு ஆன குறைவு இலா நிறைவே (தாயுமா.பா.55,1). இந்தத் திருநாடும் அருள்பெற்று நலங்கொ ழிக்கும் (இயேசுகா.ப.14). குத்திய அரிசியில் சத்தியல் கொழிக்கும் (புதுமைவே.11,98). 3.மேலே கிளம்புதல். பாந்தள் ... ஆடிகைக்கணே கொழிக்கும் சோதி (பாத்மோ.பு.4,70). 4.மேலேயாதல். கடற்றி நன்பொன் கொழிப்ப (மதுரைக்.274). 5.ததும்புதல். கொழிதி ரைச் சுவைப்பாலியின் குளிர்புனல் (சிவஞா. காஞ்சிப்பு.நாட்டுப்.70). 6.சிறத்தல். பண்கள் கொழிபாடற் சுரும்பினஞ்சூழ் (சிவஞா.காஞ்சிப்பு.பரசி.1). 7.முழங்குதல். விடும்திரை கொழித்த விம்முஒலி (தேம்பா.1,12,66). 8.தொனித்தல். தொழித்தல் குரைத்தல் கொழித்த னரற்ற (பிங்.211). 9.சிறத்தல். பழித்தபண் கொழித்து மழலை வண்டுழலும் (சீகாழித். பு.கொச்சை.10). 10. தெரித்தல். கொழித்திழி அருவி (நக்.மும்.கோவை 1,4).

கொழிகாளான் பெ. சமைப்பதற்கேற்ற ஒருவகைக் காளான். (தென்னார்க்.வ.)

கொழிஞ்சி (கொழுஞ்சி) பெ. 1.→நாரத்தை. கன்னலே வாழையே கொழிஞ்சியே கதலியே (கோலை.கற.158). 2.கிச்சிலி. (நாட்.வ.) 3.பூவாதுகாய்க்கும் மரம். (வின்.அக.) 4.கொள்ளுக்காய்வேளை. (நாட்.வ.)

கொழித்திடு-தல் 6வி. தோன்றுதல். சங்கமலை வாயின் முத்தம் கொழித்திடு சக்கர தீர்த்தம் (புல்லையந்.2).

கொழித்துணர்-தல் 4வி. தீங்கை நீக்கி நன்மையை உணர்தல். கொழித்துணர் குமர வென்றான் (சீவக. 2911).

கொழிதவிடு பெ. கொழித்தெடுக்கும் மென்மையான தவிடு. (தென்னார்க்.வ.)

கொழிப்பு பெ. 1.குற்றம். (ஆசி.நி.197) 2.கொழிக்கை. (யாழ்.அக.) 3.செழிப்பு. (செ.ப.அக.)

கொழிப்பூண்டு பெ. குப்பை மேனி. (மலை அக.)

கொழியல் பெ. 1.→கொழிப்பு-2. (யாழ்.அக.) 2.→கொழியலரிசி. நெல்லு இடிசல் கொழியல் இல்லாமல் (கோயிலொ.62).

கொழியலரிசி பெ. நன்றாகக் குத்தித் தீட்டப்படாத அரிசி. குற்றாத கொழியலரிசியை (பெரும்பாண்.275 உரை). கொழியலரசி யிட்டாலுங் குப்பை கிண்டும் கோழி (முக்.பள்.94,5).

கொழிற்பூண்டு பெ. →கொழிப்பூண்டு. (யாழ்.அக.)

கொழு[1] பெ. 1.உலோகக் கோல். ஒள்வாள் எழுக்கொழு எனப்பல எடுத்திடு படைக்கலம் (இரணியவதைப்.350). வன்னெடுங் கொழுக்கள் வீசுவன (திருவிளை.பு.நகரச். 24). முச்சிர வயிற்படை யினைக் கொழுவ தாக்குவோம் (பெருந்.1937). 2.கலப்பையின் முன்பகுதியில் உழுது செல்லும் இரும்பாலான பகுதி, ஏர்க்காறு. கொழுச் சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமது போல (இறை.அகப்.1,11 உரை). ஏதிகளுங் கொழுவும் வளையும் (அரிச்.பு.1,63). உழுநர் மண்கிழித்துஉழ வழங்கிய கொழுவினை நீட்டிப்புண் கிழித்து ... பகையே (தேம்பா.1,5,13). குற்றம் இல்லாதவே ளாளருக் கோசயம் குறையாத கொழுமு னையிலே (அறப்பளீ.சத.33). கூர்வாளும் சேர்த்தடித்த கொழுவாயிரம் (முக்.பள்.111,6). வயல்தனில் வரகுக்காக வளம்பெறும் பொன்னாற்செய்த உயரிய கொழுவைப் பூட்டி உழுவதற்கொப்பா மென்றார் (ஊன்று.17,16). மாட்டுக்காலுல கொழுவ விட்டுபாத என எச்சரிப் பார்கள் (நாட்டுப்.க.ந.ஆய்வு.பி.சே.). கொழு ஒண்டிக் கொத்து சருவாணியும் (மேழிவி.76). 3.கலப்பை. கொழு நுதியிற் சாய்ந்த குவளை (நள.31). 4.ஏர்க்கொழுவின் மீது இறுக்கும் வரி. (சாச.அக.) 5.துளையிடும் பெரிய ஊசி. கொழுச் சென்றவழித் துன்னூசியினிது செல்லுமாறு போல (தொல்.எழுத்.சி. பாயி.நச்.). கூரான கொழுவெடுத்துக் கோத்தனைய பல்லினவே (வங்கத்துப்.6,15). நிணம் எய்துவரோ ... கொழுவுங் ... குரம்பையில் (அபி.அந்.48).

கொழு[2] வி. கொழுப்பு. ஒழுகை உய்த்த கொழுவில் பைந்துணி (பதிற்றுப்.44,17). குடரும் கொழுவும் (நாலடி.46). குடரும் கொழுவும் புரளியும் நரம்பும்... புனைய வேண்டா (இறை.அகப்.10,13 உரை). கொழுவார் தினையின் குழாங்களெல்லாம் (திருக்கோவை 142). உதிரமொடு குடரும் கொழுவும் (சுட்டி.48). ஊளவிடத்தைச் ... கொழுவூறு (திருப்பு.556). கொழுவோடு உதிரத் தசை (அரிச்.பு.10,12). எங்கணும் நிணங்குடர் இறைச்சிகொழு மூளை (சிவஞா.காஞ்சிப்பு.வாணேச.65). குடரும் கொழுவும் குருதியும் என்பும் (சுப்பிர.நெஞ்சு.தூது 51).

கொழு[3]-த்தல் 11வி. 1.செழித்தல். கொழும் பல் கூந்தல் (ஐங்.196). குடிகொழுத்தக்கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள் (நாலடி.96). கொழுங்கொடி யெழுந்தெங்குங் கூவிளங் கொள்ள (தேவா.1,76,4). கொழுமுகைய சண்பகங்கள் குளிர்செருந்தி வளர்கைதை (பெரியபு. 45,4). செழுங்கொழு வால்வளை சேர்கம லேசர் (திருவாரூர்க்கோவை 39). அருட் கொழுந் துகிலின் நீவி (தேம்பா.1,12,78). உழவு கொழு மீதியில் செல்வம் படைத்து (குருகூர்.பிள்.33). தின்று கொழுத்துச் சுகமாய்த் திரிய (அவளும் அவனும் ப.152). உள்ளங் கொழுக்க மகிழ்ந்தாள் குளிர்ந்து (பாரிகாதை 294).

செயற்கையிலே பொருளாளி தான் கொழுக்கச் செத்தொழியும் தொகை மக்கள் எண்ணில்லாதார் (பாரதிதா.குயில்.பா.ப.76). 2.பருத்தல். எழுத்தாளர் போல நின்று கொழுத்தாகள் நாட்டுக்குப் பயனே இல்லை (மனித.தேடு.ப.28). கொழுத்த பன்றியின் கழுத்தை யறுத்துப் (கா.கடமை.ப.51). இடையன் சின்னானாலே கொழுக்கும் நத்தம் வாழை (ஏற்றப்பா.ப.15). 3.மிகுதல். பலவின் பழம் தூங்கு கொழுநிழல் (ஐங்.216). கோனினம் போல் தொழ எவருங் கொழுஞ்சிறப் பாயினவாறு (சித்தேரி.அம்.4வி.2). 4.திமிர்கொள்ளுதல். ரசவாதி கொழுத்திருக்குஞ் செல்வங் குறைப்பாய் (சொக்க.பண. தூது 66). கொழுத்துக் குறும்பு செய்தாலோ (இளை. இலக்.52). ஏழைகளைச் சுரண்டிக் கொழுப்போரை எதிர்த்துப் போராடுவது (செய்தி.வ.). 5.வலிமையுற் றிருத்தல். கொழுத்த ஆவரணம் முத்தி கூடாமற் கெடுத்த கேடே (கைவல்ய.1,55). 6.(மனம்) கடினமாகுதல். அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது (பு.ஏற்.மத்தேயு 13,15). 7.உடற் கொழுப்பு மிகுதல். சிறுமியர் எலாங் கொழுத்தே (தனிப்பா.திர.). தச்சச்சி உச்சி கொழுத்தினால் மிகத் தாண்டி வீழ்ந்து சவமானாள் (சாத்.கும்மி.360). ஏழை நாட்டின் இருப்பை யெல்லாம் குந்தித் தின்று கொழுத்திருக்கின்றனர் (கா.கடமை.ப.15). 8.தழைத்தல். மாதிரம் கொழுக்க (மதுரைக்.10). 9.திரட்சியுடையதாதல். வலைவர் தந்த கொழுமீன் வல்சி (ஐங்.180). 10.அடர்தல் (நெருக்கமாதல்). கொழு நிழற் ஞாழல் (கலித்.56,2). 11.குழம்பாயிருத்தல். சந்தனத்தைக் கொழுக்கப் பூசு (நாட்.வ.). 12.மூக்கினால் கோதுதல். மாந்தருளாங் கொழுதியுணும் வல் எருவை (பிரமணிக் கோவை 12,15). 13.பூமி மதர்த்தல். (செ.ப.அக.)

கொழுக்கட்டு-தல் 5வி. கலப்பைக்காறு மாட்டுதல். (வின்.அக.)

கொழுக்கட்டை பெ. வெல்லம் முதலியன சேர்த்து அரிசி மாவால் உருண்டை வடிவமாகச் செய்யும் சிற்றுண்டி வகை. கொழுக்கட்டை வகைகள் கொண்டு வந்துதான் படைத்து (சித்.புத்.கதை ப.4). மற்றும் கொழுக்கட்டையாய் பிறந்தோம் நாங்கள் என்றார் (பாரதிதா.26,4,8 (கவி.3). தேறிய அரிசி ... மாவாகிற் ... இடியப் பழுங்கொழுக் கட்டையே (நீரரர்நி.5,4). குத்துப் பட்டுக்க கொழுக்கட்டை சுட்டுப் போடுறேன் (தமி.நா.பா.ப.206).

கொழுக்கட்டைப்புல் பெ. கோயம்புத்தூர் மாவட்டத்தி லுள்ளதும் கால் நடைகள் மேய்தற்கு உரியது மாகிய புல்வகை. (செ.ப.அக.)

கொழுக்கட்டை மரம் பெ. மோதகவல்லி மரம். (மருத். குண.1 ப.566)

கொழுக்கத்தி பெ. துறட்டியில் கட்டும் வளைந்த கத்தி. கொழுக்கத்தியை கூராக்க வேணும் (இலங்.வ.).

கொழுக்கூசி பெ. குண்டூசி. (இலங்.வ.)

கொழுக்கொடு-த்தல் 11வி. 1.இளக்காரங் கொடுத்தல். நீ நியமியாமல் கொழுக் கொடுத்தன்றோ இப்படி இவன் தீம்பிலே தகணேற வேண்டிற்று (பெரியாழ்.தி.2,9, 2வியாக்) 2.பெருமையுண்டாக்குதல். (பெரியாழ்.தி. 2,9,2 சீயர்)

கொழுக்கொம்பு பெ. →கொழு கொம்பு. (வின்.அக.)

கொழுகழுவுகாலம் பெ. உழவு முடியுங்காலம். (நாட்.வ.)

கொழுகளைகட்டு பெ. ஏர் கொழுவினை ஒத்திருக்கும் ஒருவகைக்களை வெட்டி. (தென்னார்க்.வ.)

கொழுகொம்பு பெ. 1.மரத்தின் நடுக்கொம்பு, கொடிகள் ஏறிப் படர்தற்கு நடும் கொம்பு. பர்த்தாவாகிற கொழுகொம்பேயொழிய (திருப்.11 மூ.பத். 108 ப.16). வேதநறுங் கொடிபடருங் கொழுகொம்பே (செவ்வந்திப்பு.1,9). கிளை உலகில் மற்றோர் கொலு கொம்பில்லான் (அருணகிரிநாத.பு.3,19). கழுகு உம்பரின் நின்று இம்பர்க் கொழு கொம்பா வீழக் கொடியில் (ஆண்டாள்.பிள்.39). கொடிக்கொரு கொழுகொம் பில்லாக் கொள்கை போலே (இராமநா. 3,22). கொடிகளோர் கொழு கொம்பேறிக் குலவிமேற் பிடித்தல் போலும் (மருத.பு.43,27). கோதில் நல் உதவி செய் கொழு கொம்பாகி (தேம்பா.1,3,6). 2.பற்றுக் கோடு. கோதில் 3ல் உதவி செய் கொழு கொம்பாகி (தேம்பா. 1,3,6) கொடிகளெலாம் ஊன்று கொழு கொம்பிலதால் வீழும் (சித்தேரி.அம்.6,125). நல்லாசையே படர் கொழு கொம்பதாய் (வேதாளக்.14,6). படரும் முந்திரி கொழு கொம்பு பற்றியே (இரட்.சரி.158). அகப்படும் கொழு கொம்பைத்தொற்றிக்கொண்டுபடர்ந்து பிழைக்கும்கொடி முந்திரியா (கரை.நதி.ப.79). 3.மரத்தின் நடுக்கொம்பு. (வின்.அக.)

கொழுகொழுப்பான் பெ. நச்சுச்செடிவகை. கோழி நிணந்தீற்றி கொழுகொழுப்பான் வேர்தீற்றி (காஞ்சி. அம்.ப.30).

கொழுகொழுப்பு பெ. 1.செழுமை. (செ.ப.அக.அனு.) 2.ஊழற்சதை. (முன்.)

கொழுங்கண் பெ. கிருபைக்கண், அருட்கண். (யாழ்.அக.)

கொழுங்கள்ளர் பெ. செல்வமுடைய கள்ளர். கொழுங் கள்ளர் தம்முடன் கும்பிடுங்கள்ளர் (தண்டலை.சத.80).

கொழுங்கிரி பெ. மல்லிகை. (மலை அக.)

கொழுங்குறை பெ. வளமான இறைச்சித் துண்டு. வால் நிணக் கொழுங் குறை (பதிற்றுப்.21,10).

கொழுங்குறைப்பாகு பெ. கொழுவிய இறைச்சிக் குழம்பு. பானாறடிசிலு மூணார் கொழுங்குறைப் பாகுமுற்ற (அம்.கோவை 446).

கொழுச்சிராய் பெ. கலப்பையிற் கொழுவை இணைக்கும் மரத்துண்டு. (இலங்.வ.)

கொழுஞ்சி (கொழுஞ்சி) பெ. 1.நாரத்தை. கன்னலே வாழையே கொழுஞ்சியே சூதமே (சோலை.குற.158). 2.கிச்சிலி. (செ.ப.அக.) 3.பூவாது காய்க்கும் மரம். (மூன்.) 4.கொழுமிச்சை, கொள்ளுக்காய்வேளை. (வைத்.விரி.அக.ப.119)

கொழுஞ்சுடர் பெ. நெருப்பின் பிழம்பு. கற்குடி மேய கொழுஞ்சுடரே (திரிசிரா.அந்.75).

கொழுத்தட்டு-தல் 5வி. கொழுவைக் கூர்மையாக்குதல். (வின்.அக.)

கொழுத்தமாடு பெ. நல்ல வலிமையும் சதையும் உள்ள மாடு. (தொ.வ.)

கொழுத்தமுரல் பெ. 7அங்குல நீளமுள்ள திருவன் கோலாமீன். (பாரதவ.வ.)

கொழுத்தாடுபிடிக்கை பெ. நரி ஆட்டுமந்தையிற் புகுந்து பிடிப்பதுபோலும் விளையாட்டு. (த.நா. விளை.ப.274)

கொழுத்தாடுபிடித்தல் பெ. →கொழுத்தாடு பிடிக்கை. (யாழ்.அக.)

கொழுத்தாடை பெ. கரும்பு நெற்பயிரின் நுனிப் பகுதி. (நாட்.வ.)

கொழுத்திரு-த்தல் 12வி. மனம் கடினமாயிருத்தல். அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது (பு.ஏற்.மத்தேயு 13,15).

கொழுத்து-தல் 5வி. பற்றவைத்தல். குத்துவிளக்கு ஆயிரமாம் கொழுத்தினார் ஒருப்போலே (அயோ.கதை. ப.83).

கொழுதமேனி பெ. குப்பைமேனி. (சித்.பரி.அக.ப.85).

கொழுதனாவண்டி (கொழுதனாபண்டி) பெ. கொழுந்தனார் மனைவி. (நகர.வ.)

கொழுதனாபண்டி (கொழுதனாவண்டி) பெ. →கொழுதனார் மனைவி. (மூன்.)

கொழுது-தல் 5வி. 1.குடைதல். வண்டு கொழுதிமிருங்குழல் (அம்.கோவை 320). சுரும்புந் தேனுங் கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகம் (திருவிளை.பு. கடவுள்.16). தொழுத மங்கையைச் சுடர்மணித் தடங்கையால் எடுத்துக் கொழுதி வண்டினம் கூட்டுணும் (நைட. 28,13). கொழுதமது வண்டருக்குதவும் (திருக்குடந். பு.நாட்டுப்.79). சுருப்பினம் போய்க் கொழுதி முழுவதும் பரந்து குடிகொண்ட கமல மலர் (கச்சி.காஞ்சிப்பு. திருக்கண்.103). 2.கோதுதல். மா நனை கொழுதிய மணி நிற இருங் குயில் (அகநா.25,6). கொழுது மலர்க்குழற் கொம்புநற் பைம்பொற் (அம்.கோவை 257). வண்டுகொழுது இயல்ஆர் செய்குழல் மடவீர் (தஞ். கோவை 4). பன்முறை தொழுத (ஞானாமிர்.23,4). குயில்கள் ஆர்பு மென்றளிர் கொழுதி நின்று ஆலுவ (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண்.23). தோட்டிளம் பூந்தார் கொழுதித் துதைந்தாடி (திருநல்.பு.5). கொழுதிவண்டுழக்கு (குசேலோ.662). 3.கீண்டுதல். செம் முகை முருக்கினப் போது அவிழ் அலரி கொழுதி (அகநா.229, 17). 4.துளைத்தல். கொன்றை அம் சினை குழல்பழம் கொழுதி (அகநா.15,15). 5.பறித்தல். ஞாழல் அம்சினைத் தாழிணர் கொழுதி (நற்.106). மென்றளிர்க் கொழுங் கொம்பு கொழுதி (மதுரைக்.586-587). 6.கிழித்தல். பௌவநீர்ச் சாய்க்கொழுதி (கலித்.76). 7.தின்றல். மா நனை கொழுதிய மணி நிற இருங் குயில் (அகநா.25).

கொழுந்தடி-த்தல் 11வி. குருத்து வெட்டுதல். இண்டைக்கு கொழுந்தடிக்க வேணும் (இலங்.வ.).

கொழுந்தன் பெ. 1.கணவனுடன் பிறந்தவன். நேரிலாக் கொழுந்தன் வரிலெதிர்நின்ற நீலியிவள் (சானந்த.பு. 6,76). வாரும் கொழுந்தனார் வாரும் என்றாள் (தெய்வச்.விறலி.தூது 200). ஏறி உலுக்குங்களேன் இளைய கொழுந்தன் மாரே (தமி.நா.பா.ப.173). கொழுந்தன் அடிச்சானோ (ஏற்றப்.ப.6). கொழுந்தன் மார் நாத்தனார் முதலியவர்களை (பெண்கல்வி ப.36). 2.கணவன். கொழுந்தா வென்றாள் (கம்பரா.6,22,9).

கொழுந்தன்கோடி பெ. கணவன் இறந்த அன்று மனைவிக்குக் கணவனின் சகோதரர் அல்லது பங்காளிகள் எடுத்துக் கொடுக்கும் சேலை. (வட்.வ.)

கொழுந்தன்பு பெ. இளகிய அன்பு. கொழுந்தன்பு செய்தருள் கூர (திருமந்.280).

கொழுந்தனார் பெ. 1.→கொழுந்தன்-1. கொண்டவன் அடிக்கக் கொழுந்தனார் மேல் விழுந்தாளாம் (என்.பழ. தொ.3557).

கொழுந்தி பெ. 1.மனைவியின் சகோதரி. சொந்தக் கொழுந்தி மகன் (சிவகங்.சரித்.கும்.ப.56). தாமரைப்பூ நாச்சி தனது கொழுந்தியரும் (கள்ள.அம்.ப.11). பொன்னி என் கொழுந்தி (பாரதிதா.1,1,3 விரு.3). நங்கை கொழுந்தியத்தை நன் மருகி (மேழிவி.20). நீ என் அருமையுள்ள என் கொழுந்தி (திருநெல்.நாட்டுப். தெம்மாங்குப்.25). 2.சகோதரன் மனைவி. எம்பி நின்றம்பி நீதோழன் மங்கை கொழுந்தி (கம்பரா.5, 3,23). அப்போது தருமலிங்கம் ... கொழுந்தி யரைத் தான்பார்த்து (கர்ண.சண்டை ப.64). கொழுந்தி பக்கத்தில் விழுந்ததற்கு (முக்.பள்.134,13). 3.கணவனுடன் பிறந்தவள். (இலக்.சொ.அக.)

கொழுந்திணம் பெ. மணமகனுக்குப் பெண்ணின் சகோதரி முறை உள்ளவர்கள் கொடுக்கும் மொய். (நாட்.வ.)

கொழுந்தியர் பெ. →கொழுந்தி-1. கொழுந்தியரெழின் மகப்பெற (பாரதம்.1,2,4).

கொழுந்தியா பெ. →கொழுந்தி-1. (நாட்.வ.)

கொழுந்தியார் பெ. →கொழுந்தி-1. கொழுந்தியார் குஞ்சுக்கிட் டெடுத்தான் (முக்.பள்.89,3).

கொழுந்தியாள் பெ. →கொழுந்தி-1,2. (செ.ப.அக.)

கொழுந்திலை பெ. 1.மரம் செடி கொடிகளின் இளந்தளிர். இலை பல செடிகளின் கொழுந்திலை களைப் பறித்து ... பொடியாக்கி (நாட்.பா.ஒப்.ப.98). 2.தேயிலை. (சித்.அக.)

கொழுந்து[1] பெ. 1.இளமையானது. ஓவியப் பொற் கொழுந்தை (திருக்கோவை 23). பிறைக் கொழுந்தை ஒன்றாத வண்ணம் உபாயம் இயற்றியது (சடகோபரந். 53). மரகதச் சித்திரத் தெற்றி எறித்த பைங்கதிர்க் கொழுந்தையு மெட்டிநா வளைத்துப் பறித்து (திருவிளை. பு.நகரச்.33). பிறைக் கொழுந்து (நைட.அன்.தூது 12). கொழுந்து கொண்டுவகை யோங்க (திருக்குடந்.பு. 64,11). மதிக் கொழுந்தணிவார் (சிவஞா.காஞ்சிப்பு. அந்த.20). கொழுந்து அடம் (சிலேடை இலக்.ப.303). 2.→கொழுந்திலை-1. ஏற்ப விரீஇய விலையுங் கொழுந்தும் (பெருங்.2,2,143). சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே (காரைக்.அந்.82). கற்பகக் கொழுந்தே (திருமாலை.1,7). கொழுந்தோடு மலையும் முகையும் எல்லாம் கொய்யும் (சடகோபரந்.27). திங்கட் கதிரிளங் கொழுந்தோ (பெரியபு.5,134). கண்ணபிரான் மாற்றிலாத பொற்கொழுந்தின் மாமணி விளக்கு (செ.பாகவத.10,1,37). பற்றும் பயிர்க்குப் படர் கொழுந்து போல் (தாயுமா.பா.43,89). கொழுந்துறம் குளிர்ந்த முல்லை கொண்டகோவர் கூட்டம் (தேம்பா.1, 11,2). தளிர் குணங்குறிகள் காணாக் கொழுந்தை (திருஇலஞ்சி. உலா 38). முதிராதது கட்டவிழ்த்த கொழுந்திலையைக் கழுவிச் சேர்த்து (பாரதிதா.15,2,5). அழுத்திச் சீவி பின்னலிட்டு செவ்வந்திப் பூவும் கொழுந்தும் சூடிய கன்னிகள் (என்.வெ.கா.ப.110). 3.முனைப்பாகம். வளை களைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன (அகநா.24): கோதற்ற ஞானக் கொழுந்தின் முன் செல்க (சடகோபரந்.1). பவளக் கொழுந்தேறிச் செந்நெற் குலை சாய்க்கும் நாடன் (நள.172). விரகத் தழற் கொழுந்து மூள (திருக்கண்ண.மாலை 63). கொண்ட லெழுந்து கொழுந்து சுருண்டே (அரிச்.பு.6,68). 4.தீச்சுவாலை, சுவாலை. அழற்கொழுந்து (கந்தபு.4,4,359). நீள் கொழுந்தோடி நிமிர்ந்ததன்றே (அரிச்.பு.2,39). கொழுந்து படர்ந் தோங்கா நின்ற வனலை வலஞ்செய் (கோலாசல.பு.656 உரை). வானரச் சேனைக் கொழுந்தின் முன்னே சென்று (இராமநா.6,5). மண்டு இசை கொழுந்து தீயால் ... பழிபழுத்து எரிந்த தன்றோ (தேம்பா.2,5,19). துன்மார்க்கர்க்கு முன் வன்னிக் கொழுந்தொத்துப் பின்ன (சிவகாமி.அந்.5). மண்டு அழற் கொழுந்து உகுக்க (பஞ்ச.திருமுக.67). செந்தழல் கொழுந்து வீசி (இரட்.சரி.178). 5.ஒளி. கொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்றும் (திருமந்.1769). 6.மென்மை. வாழை ... மடல்போலக் கொழுந்துள செவி (சூடா.12,150). தென்றற் கொழுந் துலவுந் தெய்வமணி மண்டபத்தின் (மதுரைச்.உலா 404). கொழுந்து கொண்டுவகை யோங்க (திருக்குடந். பு.64,11). 7.நடுதற்குரிய பதியம். (வின்.அக.) 8.மருக் கொழுந்து. கொழுந்து செவ்வந்தி (கந்தபு.2,21,42). மன்றல் கொழுந்து மடமாதர் ஓதி மணமும் கொண்டு (திருவாரூர்க்கோவை 222). மருவார் கொழுந்து வேர் மலியும் (அய்யன்.பிள்.36). 9.சாமரை முதலியவற்றின் நுனி. கொழுந்துடைய சாமரை (கம்பரா.கோல்ங்.25). 10.இளங்கிளை. (யாழ்.அக.) 11.வெற்றிலைக்கொடி. (முன்.) 12.சேனை முதலியவற்றின் முன்னிரை. சேனையின் கொழுந்து போய்க் கொடிமதின் மிதிலையி னெல்லை கூடிற்றே (கம்பரா.1,13,24). 13.உச்சி சிகரம். குன்றென நின்மினுங்கள் கொழுந்திடை யடைவோம் (திருக்கழுக்.பு.வேதகிரிச்.22). 14.நீர்த் துளி. பைங்க முகின் கூந்தன்மேற் கங்கைக் கொழுந் தோடு (நள.56). 15.முதன்மை (மூலம்). மெய்யராகி ... செய்யரானார் சிந்தையானே தேவர் குலக் கொழுந்தே நைவனாயே னுன்றனாம நாளுந்நவிற் றுகின்றேன் (தேவா.1,50,4).

கொழுந்து[2]**-தல்** 5வி. 1.காய்ச்சப்படுதல். எரியழற் கொழுந்தும் வேலுய்த் திட்டென (இரகு.யாகப்.27). 2.வெயிலிற் கருகுதல். (வின்.அக.) 3.சுவாலித்தல். எண்ணமும் ஆசையும் ... கொழுந்தாய் வளரும் நெருப்பிடை நீறாய்க் கனிந்தது (அனிச்ச அடி ப.50).

கொழுந்துக்கால் பெ. 1.வெற்றிலைக்கொடிக்கு நடும் கொழுகொம்பு. (வின்.அக.) 2.கொழுந்தின் கொளு கொம்பு. (யாழ்.அக.)

கொழுந்துகிள்ளி பெ. மித்திரபேதஞ் செய்பவன். (செ.ப.அக.அனு.)

கொழுந்துநீரோட்டம் பெ. சிறுநீரோட்டம். (செ.ப.அக.)

கொழுந்துபடு-தல் 6வி. கிளைத்தல். குரவனை யிகழ்ந்தபாவங் கொழுந்துபட் டருந்துஞ் செவ்வி வருவது நோக்கி (திருவிளை.பு.1,7).

கொழுந்துபதி-த்தல் 11வி. கிளைக்கும்படி கொடியை நடுதல். (செ.ப.அக.)

கொழுந்துவிடு-தல் 6வி. 1.தளிர்விடுதல். கொழுந்துவிட் டோடிப் படரும் (நூற்றெட்.அந்.61). 2.சுவாலைவிடுதல். கொழுந்துவிட்டெரியும் பசித்தழல் (குசேலோ.52). கொழுந்து விட்டெரியும் செறி துயர்க் கனலிடை வீழ்ந் தேன் (மேகநா.3,15).

கொழுந்தொட்டி பெ. பூடுவகை. (யாழ்.அக.)

கொழுந்தோடு-தல் 5வி. 1.→கொழுந்துவிடு-தல்-1.

கோலத்திலே முளைத்துக் கொழுந்தோடிக் குணம் கடந்த (சடகோபரந்.40). படர்ந்து கொழுந்தோடுதென் மனப்பந்தலிலே (தனிப்பா.தீர.137,347).

கொழுநன் பெ. 1.கணவன். தெருமரும் அம்ம தானே தன் கொழுநன் (புறநா.247,7). தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள் (குறள்.55). திங்களங் கொழுநனைச் சேர்ந்து தாரகை (சூளா.1044). நம்மாவிநங்கொழுநர் பாலதாம் (நந்திக்கலம்.10). பேணும் கொழுநர் பிழைகள் எலாம் பிரிந்த பொழுது நினைந்து (இரணியவதைப்.52). உமையமகள் கொழுநரைத் தூது ஏவினாரை (கங்கா.தீரு.6). மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிகளாய்ந்து (பெரியபு.4,22). கொழுநனைப் பேணப் பெரும்பகலே ... தவஞ் செய்த கஞ்சம் (அம்பி.கோவை 27). கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் (நள.179). கலைமகள் கொழுநன் நல்கும் காட்சிசால் மரீசி (செ.பாகவத.703). கொழுநன் இழந்த இளங்கைமை (தேம்பா.2,7,30). குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல் (வெற்றி.12). 2.தலைவன். கொழுநரோடும்இளமகளிர் (மதுரை.கலம்.55). வழிமுறை மனைவியைக் கொழுநனொடு உவந்து எதிர்கோடலும் (இலக்.வி.462). 3.எப்பொருட்கும் இறைவன். (ஆசி.நி.44)

கொழுநனார் பெ. கணவர். இலக்கண மிசைத்தவள் கொழுநனார் தலை குலுங்கக் கட்டிய கடவுள் (அறு.இலக்.1 புலமை).

கொழுநீர் பெ. 1.வளமானநீர், கழுநீர். கயல் பாயும் கொழுநீர் வயல் சூழ்ந் தகுரங் கணின் முட்டம் (தேவா.1, 31,1). 2.பெருகியநீர். கோமுகி யென்னுங் கொழுநீர் இலஞ்சி (மணிமே.11,39). 3.வியர்வை. (யாழ்.அக.)

கொழுப்பிரத்தம் பெ. கொழுப்பு பொருளின் விகிதம் அதிகம் இருக்கும் இரத்தம். (மருத்.கலைச்.அக.ப. 1510)

கொழுப்பு பெ. 1.தசையில் சேர்ந்துள்ள நிணம். செழுமை வளனும் கொழுப்பும் ஆகும் (தொல்.சொல். 346). 2.செழிப்பு. (பிங்.) 3.புட்டி. கழிப்பு நீ ராரலொடு கொழுப்பிறாக் கொளீஇய (பெருங்.3,4,42) 4.குழம்பா யிருக்கை. (செ.ப.அக.) 5.திமிர். (மூன்.) 6.நிலத்தின் மதர்ப்பு. (மூன்.)

கொழுப்புக்கட்டி பெ. நிணக்கழலை. (இங்.வைத்.306)

கொழுப்புக்கல் பெ. 1.ஈரல்கல். (போகர் நி.33) 2.சிவப்புக்கல் வகை. (வின்.அக.)

கொழுப்புக்குடல் பெ. ஆட்டின் சிறுகுடல். (வின்.அக.)

கொழுப்புச்சதை பெ. ஊழற்சதை. (வட்.வ.)

கொழுப்புமடி பெ. பாலின்றித் தசை நிறைந்த மாட்டுமடி. (நாட்.வ.)

கொழும்பு பெ. இலங்கைத் தீவின் தலைநகரம். கயக்கால்லி நாறுங் கொழும்பிற் பிரசண்டா (தமிழ் நா.146).

கொழும்புக்கிழங்கு பெ. →கொழும்பு வேர். (இலங்.வ.)

கொழும்புப்பாக்கு பெ. →கொட்டைப்பாக்கு. (செ.ப. அக.)

கொழும்புவேர் பெ. ஒருவகைக் கொடி. (சென்.இரா. சொற்பட்டி.ப.120)

கொழும்பொன் பெ. கொழுமையான பொன். கொழும் பொன் மாளிகை (குசேலோ.2).

கொழுமரம் பெ. செம்மரம். (மலை அக.)

கொழுமலர் பெ. செழிப்பான மலர். வார்சினை மல்கிய கொழுமலர் (குசேலோ.32).

கொழுமலை பெ. செழிப்புள்ள மலை. கொழு மலைத் துணைத் தேவுக்கும் (குசேலோ.167).

கொழுமிச்சை பெ. →கொள்ளுக்காய் வேளை. (வைத்.விரி.அக.ப.110)

கொழுமீதி பெ. அரசுதீர்வை போக நிலஉரிமையாளர் அடையும் நில வருமானம். (வின்.அக.)

கொழுமீன் பெ. கொழுமையான மீன். கொழுஞ்சுறாக் கொழுமீ னோடு (குசேலோ.21).

கொழுமுகம் பெ. ஏர்க்காறு. கருமலங்கு மிளிரக் கொழுமுகந் தியக்கிய பழஞ்சேற்றுப் பரப்பிற் (பெருந். 2097).

கொழுமுகை பெ. செழிப்பான அரும்பு. நீர்வார் கொழு முகை (குறுந்.168).

கொழுமுட்டி பெ. கொழு. ஒண்டி கொத்து ... கூறு கொழு முட்டி கோடாலியுடன் (மேழிவி.76).

கொழுமுதல் பெ. மரத்தின் பருத்த அடிப்பாகம். கொழுமுதற் றெங்கொடு (பெருங்.3,19,40).

கொழுமுனை பெ. கலப்பையிலுள்ள இரும்பாலான கூர். கொழுமுனை முறிஞ்சு போச்சு (இலங்.வ.). கொழுமுனைக் கொருகை யகலம்தாள் அம்புவி தன்னீற் குடையாதோ (கும்பிப்பா.சீனய்யங்கார்.129).

கொழுமை பெ. 1.செழுமை. (பிங்.) 2.இளமை. (சிலப். 4,39) 3.வளமை,வளம். (சிலப்.2,8) 4.கொழுப்பு. (இலக்.சொ.அக.) 5.அழகு. (பொருந.26) 6.நிறம். (திவா.) 7.குளிர்ச்சி. (மதுரைக்.406)

கொழுமோர் பெ. குழந்தைகள் திடீரென்று கொண்ட அச்சத்தை நீக்குவதற்குக் காய்ச்சிய கொழுவைத் தோய்த்துக் கொடுக்கும் மோர். (நாட்.வ.)

கொழுலாபம் பெ. விவசாயத்திற் கிடைக்கும் ஊதியம். (நாட்.வ.)

கொழுவடுக்குஞ்சி பெ. →கொழுச்சிராய். (யாழ்.அக.)

கொழுவல் பெ. சண்டை, வலிந்து எதற்கும் சண்டை (இலங்.வ.)

கொழுவாணி பெ. கொழுவையும் கலப்பைக் குற்றியையும் இணைக்கும் ஆணி. (தொ.வ.)

கொழுவாரம் பெ. பயிரிடுவோனுக்கு உரிய வாரம். மேல்வார நீக்கிக் கொழு வாரத்தால் பூசை நடக்கும்படி (தெ.இ.க.8,234).

கொழுவு[1] பெ. கலப்பையில் உழும் நுனியிலுள்ள இரும்புப்பட்டை (புதுவை.வ.)

கொழுவு[2] பெ. கொழுப்பு, நிணம். கொழுவும்வார் வழும்பும் (குசேலோ.115). 2.நிணம். குடருங் கொழுவுங் குருதியும் தோயும் குரம்பையிலே (அபி.அந்.48).

கொழுவு[3]**-தல்** 5வி.1.சண்டை போடுதல். என்னோடை அம்மா வீனாணக் கொழுவ வேண்டாம் (இலங்.வ.). 2.ஒரு பொருளை மற்றொன்றில் மாட்டுதல். துறப்பை அந்த ஆணியிலை கொழுவி விடு (முன்.).

கொழுவுகயிறு பெ. ஏடு கட்டும் கயிற்றின் முடிப்பு. (இலங்.வ.)

கொழுவுகோல் பெ. →கொழுகொம்பு-1. கொழுவு கோலுறாக் கொடியென (வாத.பாகவத.நாரசிங்.64).

கொழுவை பெ. கடல் மீன்வகை. (தொ.வ.)

கொழுனி பெ. மனைவி. துயில் கூர்ந்து கொழுனி யரோடு அமைவுற்றான் (கருவூர்ப்பு.8,3).

கொழை[1] பெ. தழை. ஆட்டுக் குட்டிக்கு கொழை கட்டிக் கொண்டிருந்த மாரிச்சாமி அவளைச் சமாதானப் படுத்துகிறான் (மழைக்கஞ்சி ப.67).

கொழை[2]**-த்தல்** 11வி. குழைத்தல். கூடைத் தவுட்டை வாறியெடுத்து கொழைச்சிப் போட்டுத் தட்டுங்கடி (கண்ண.திரை.பா.1,200).

கொள்[1] பெ. 1.முற்காலத்து வழங்கிய சிறு நிறையளவு. கொள்ளே ஐயவி என நிறைப்பெயரே (தொல்.எழுத். 164 நச்.). 2.குடைவேல். வெள்வரகு உழுத கொள் உடைக் கரம்பை (பதிற்றுப்.75,11). வெள்வரகு கொள்வித்திடினும் விளியாதால் (புற.வெண்.120). மதிலையழித்துக் கழுதையேரான் உழுது வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தி (தொல்.பொ.91 நச்.). 3.காணம், குதிரைக்கு உணவாகப்பயன்படும் ஒரு வகை தானியம். கொள்ளொடு பயறு பால் விரைஇ (அகநா.37,12). கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கென றொருங்கொப்பக் கொண்டானாம் ஊரன் (நாலடி.387). எள்ளும் கொள்ளும் அவரையும் (தொல்.பொ.633 பேரா.). எடுத்துவரு வெள்வரகு கொள்ளுடன் இறைத்து (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப். 28). உண்ணாவரகு கொள் உழுதுவித்திடுதலும் (இலக்.வி.608). கொள் புல் தண்ணீர் கூசாமல் வையும் (தேசிங்கு.கதை ப.8). போற்றலில் வரவு கொள் (குசேலோ.229).

கொள்[2]**(ளு)-தல்** வி. 1. (ஒரு பொருளைப் பிறர் வழங்கப்) பெற்றுக் கொள்ளுதல். கொண்டனை சென்மோ மகிழ்ந நின்குநே (குறுந்.238,5). கடிகொள் இருங் காப்பிற் புல்லினத்து ஆயர் (கலித்.110,1). கொளக் கொளக் குறையாச் செல்வம் (பதிற்றுப்.82,12). வரம்கொள் எனச் சாற்றினான் (சிவஞா.காஞ்சிப்பு.முத்தீ.12). 2.ஏற்றுக் கொள்ளுதல். பணிந்து திறை பகரக் கொள்ளுதை (பதிற்றுப்.17,3). எள்ளே பருத்தியே ... இவற்றோடு கொள்ளென அன்புற்று அசனம் கொடுத்தான் (ஞானாதி 50). மண்டைப் போதிய வரோதும் முரை கொள்ளார் (தேவா.1,16,10). கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங் கொள (நன்.36). புண்ணிய பாவமும் பொய்யென்றே கொள்வர் (பகவற். 16,7). கர்த்தாவும் ... வேண்டியதோற் உருவைத் தானே கொள்ளுவன் (சி.சி.சுப.58 மறைஞா.). சீர் துவர் என்று ஈங்குரைத்த தெய்வப் பயன் கொள்ளாரோ (சித்தேரி. அம்.1 க.15). முனி பொழியும் ஆசீர்வாதம் கொண்டான் (இராம நா.3,1 தீபதை 1). குடியோடும் எனையடிமை கொண்டாய் (சிவஞா.காஞ்சிப்பு.வாணேச.85). மனுசர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை (பு.ஏற். அப்போய்.நட.17,25). 3.எடுத்துக் கொள்ளுதல், கைப்பற்றிக் கொள்ளுதல். இகல் மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலமும் (தொல்.பொ.69,10). நலமலி தருமறை பொழியொடு நதியுறு புனல் புகையொளி முதல் மலர் அவை கொடுவழிபடு திறன் (தேவா.1,20,7). 4.பெறுதல். பிறந்த வழிக்கூறலும் பண்புகொள் பெயரும் (தொல்.சொ.110,3). நொதுமலாளர் கொள்ளார் இவையே (ஐங்.187). நல்லா றெனினுங் கொளறீது (குறள்.222). சந்தளறேறு தடங்கொள் கொங்கை (தேவா.1,4,5). கொண்டாய், எறிகடல் வடிவமும் இவை இவை கொண்டாய் (நந்திகலம்.82). பூக்கமழ் நாற்றம் கொண்டு பொருவளி போமால் (பகவற்.15,13). பற்றலரை மோதலங் கொண்ட பெலராமன் (சங்கர. கோவை 2). பன்னாள் உலகம் கொண்ட பழிப்பகையை எண்ணுவது நன்றோ (தேம்பா.1,5,19) கூடு கொள்கையால் மஞ்சள் நீர்க் கூந்தன் என்று பேர் கொண்ட நாயகன் (சிவஞா.காஞ் சிப்பு.சித்தீ.3). மனைதொறு மிரக்க நடை கொள்ளும் பதம் (திருவருட்பா 1960,105). 5.மேற்கொள்ளுதல். சாறுகொள் ஊரின்புகல் வேள்மன்ற (குறுந்.41). இகறலைக் கொண்டு துனிக்கும் தவறிலர் (பரிபா.9,24). குடிபிறந்தார் குன்றா வொழுக்கமாக் கொண்டார் (நாலடி.143). நிறை இல்லான் கொண்ட தவம் (இன்.நாற்.24). தொழு கொண்டேன் என்று சொல்லு (நந்திக்கலம்.3). குற்ற நெறியார் கொள்ளார் கோலக்கா (தேவா.1,23,10). குளிர்வு இலாமை மனத்திற் கொளாமையும், மானதமாதவம் (பகவற்.17.14). தாம் கொண்ட விரதத்தை விடுவர்களே ... மேலோர் (சிவஞா. காஞ்சிப்பு.திருமாற்.10). 6.உடன்படுதல். கூடத்தவுயிர்

கொள்ளில் ... தூதான்மியம் வந்துறும் (வேதா.சூ.124). ஈதெல்லாம் உளம் கொள்ளாது அரசன் இருந்திட (பஞ்ச.தந்.3.127). 7.ஒத்தல். மாகொள் நோக்கமொடு மடங்கொளச் சாஅய் நின்று (அகநா.261,9). வண்டினம் யாழ் கொண்ட கொளை (பரிபா.11,125). இருள் கொண்ட வெந்துயர் (இராமானுச.நூற்றந்.39). 8.பெற்றிருத்தல். படையும் பவழக் கொடி நிறம் கொள்ளும் (பரிபா.19,98). புடை வாசங்கொள மாலம் பூங்கவாரி யெடுத்தெறிய (சூளா.170). அருள் கொண்ட முகம்மது (சீறாப்பு.1 பாந்தன்.5). 9.பற்றுதல். செந்நாய் ... மறியுடை மான் பிணை கொள்ளாது கழியும் (ஐங்.354). 10.கவர்ந்து கொள்ளுதல். சேர்ப்ப ... தந்தனை சென்மோ கொண்ட இவள் நலனே (ஐங்.159). 11.உட்கொள்ளுதல். வாய்க்கசப்பு என்றாலும் மருந்து கொள்வர் (தித்தேரி. அம்.1 க.14). 12.தன்னுட் கொள்ளுதல். நெஞ்சில் கறை கொண்ட கஞ்சன் (இராமானுசநூற்றந்.28). ஒருதுணைவினை கடன் தீர்த்துக் கொள்வேன் (சிவஞா.காஞ்சிப்பு.8). 13.உரிமையாகக் கொள்ளுதல். விடலையைக் காணவோடி ... வீதி கொண்டார் (சீவக.457). சிவமே ... சச்சிதானந்தமே யுடல் பொறிகள் தகு கரணங்களாய்க் கொண்டே ... நடித்தும் (சுத்தசா. 28). 14.அங்கீகரித்தல். பாடேற்றுக் கொள்பவர் பாய்ந்து மேலூர்பவர். (கலித்.104,55). ஊர் கொண்ட பெரு விழ நாளாய்க் கண்படையில்லை யாமாக (இறை.அகப்.101, 15 உரை). உய்ஞ்சனனிருத்தலுமுலகங் கொள்ளுமோ (கம்பரா.உருக்கா.17). இலிங்கமும் கொள்ளும் அப்பேர் (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.132). 15.திருமணம் செய்து கொள்ளுதல். தாங்கொண்ட மனையாளை (நாலடி.3). காமத்தில் மனநானால் கொள்ளும் பெண்டொடு கலவிசெய் (கைவல்ய.2,75). கொண்ட பாரதி குவிமுலைத்தது விடாதிருந்தான் (திருக்கழுக்.பு. சதுமுகச்.1). 16.கையில் எடுத்துக் கொள்ளுதல். கொண்ட வாளொடும் (சீவக.430). அவர் கரம் கொண்டு ஏகி (வேதா.சூ.18). தர்ப்பணம் அழுக்கறத் துலக்கினால் போம் (கைவல்ய.2,68). 17.வைத்துக் கொள்ளுதல். மெய்கண்டான் நூல் சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க (சிசி.சுக.பாயி.2). 18.மேற்கொண் டிருத்தல். சாறு கொள் ஊரின் புகல் வேள்மன்ற (குறுந்.41,2). 19.அழைத்துக் கொள்ளுதல். இல்லாம் சிறியாரைக் கொண்டு புகாஅர் (ஆசாரக்கோவை 68). 20.பிடித்தல். போரில் கொண்ட பொருகரி முழக்கமும் (சிலப்.13,145,146). குழியிற் கொண்ட மராசு யானை (அகநா. 13,7). 21.விலையாகப் பெற்றுக் கொள்ளுதல். வெண்கோடு கொண்டு ... பிழிநொடை கொடுக்கும் (பதிற்றுப்.30.1). 22உண்ணுதல். குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால் (ஏலாதி 41). குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால் ... பாடு இறப்ப பன்னும் இடம் (ஏலாதி 41). மரணாந்தம் உணல் கொடுமை கொள்க சிலநாள் (சிவ.தரும.பரிகார.73). 23.கடித்தல். ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் திங்கள் (நாலடி.148). கொண்டது நாகம் என்பார் (சீவக.1276). 24.கொண்டாடுதல். தண்பதங் கொள்ளுந் தலைநாட்போல (சிலப்.6,160). அரங்கன் கமலப் பதங்கள் கொள்ளாமனிதர் (இராமானுச. நூற்றந்.2). 25.மிகுதல். துகிலாடை மெய் போர்த்துச்சி கொளாமையுண்டு (தேவா.1,5,10). 26.மாலை, ஆபரணம் முதலியவற்றை அணிந்து கொள்ளுதல். குவிமுகிழ் ஊசி வெண்தொடு கொண்டு (பதிற்றுப். 70,7). 27.தழுவுதல். ஏறு கொண்டெறியும் பணை (சூளா.14). 28.நிறைதல். புலி சிங்கமொடு கரடி நுழை நூழை கொண்ட கானம் (தாயுமா.பா.11,6). 29.நன்குமதித்தல். கொளப்பட்டே மென்றெண்ணி (குறள்.699). 30.கடைப்பிடித்தல். மெய்மறைதான் கொண்டதனால் வெங்கொலைக்கே அஞ்சினள் (தித்தேரி.அம்.2 க.56). 31.மனம் பொருத்தல். போதிய அறுங்கூந்தல் கொள்வதை (கலித்.80,23). தற் பொருட்டில் வரும் ஒருதுணை வினை அவன் சீர் வெள்ளவாரியை ... உண்டு கொண்டேன் (இராமானுச. நூற்றந்.84). 32.கருதுதல். கிளப் பெயரெல்லாம் கொளத்திறிபிலவே (தொல்.எழுத்.308). நோக்கார் செவிச் சொல்லும் கொள்ளார் பெரியார்அகத்து (ஆசாரக் கோவை 75). வந்தது மொழிமின் என்றான் வலியஆட் கொள்ளும் உள்ளது (பெரியபு.6,6). இல்லாப் பொருள் போய் அழியும் என சரங்குகின்றது மன் கொண்டோ (பகவற்.2,27). கொண்டதெலாம் மெய்ஞ்ஞானம் (தித்தேரி.அம்.3 க.13). யார்க்குங் கொடுத்தியெனக் கொள்கின்றிலம் (இலக்.வி.650 உரை). 33.ஆராய்தல். பிறரொடு மந்திரம் கொள்ளார் (ஆசாரக்கோவை 78). 34.செய்தல். பொலன் கொள் காப்பு (அரிச்.பு.1,306). 35.அறிதல். வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய் கொள்ளார் (நாலடி.315). 36.ஆராய்தல், எண்ணுதல். கடனீர்மை கையாறக் கொள்ளும் மடமொழி மாதர் (நாலடி.382). 37.சொல்லுதல். கல்லா தான் கோட்டி கொளல் (இன்.நாற்.29). 38.அறுத்துக் கொள்ளுதல். கொள்பவளம் கோத்தனைய கால (சீவக.70). 39.முகந்து கொள்ளுதல். மழை கொளக் குறையாது (பதிற்றுப்.45.19). 40.முகத்தல், நீர் முதலானவை பாத்திரத்தில் பிடிக்கும் அளவைக் குறிப்பிடுதல். குணகடல் கொண்டு குடகடன் முற்றி (மதுரைக்.238). வானம் கடற்கோள் மறப்பவும் (பொருந.236). கொள்ளக் குறைவற்று ... ஓங்கிய ...

வள்ளல் தனம் (இராமானுச.நூற்றந்.27). ஒவ்வென்றும் இரண்டு மூன்றுகுடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாவடிகள் அங்கே வைத்திருந்தது. (விவிலி.யோவான். 2.6). தலைவனாக ஒருவனை மதித்தல் கொள்ளாத் தெவ்வர் (பரிபா.21,8).

கொள்[3](ளு)-தல் 3வி. 1.பொருந்துதல். கடிகொள் வேங்கையின் நறுமலர் (பெரியதி.தமிழாக்.1,2,13). 2.உடலிற் காயம் ஏற்படுதல் கல்லுக் காலிற் கொண்டது (நாட்.வ.)

கொள்[4] து.வி. 1.அடித்துக்கொண்டான். தற்பொருட்டில் வரும் ஒரு துணைவினை. (செ.ப.அக.) 2. அஞ்சாதே கொள். எதிர்மறைஏலலொருமை வினையொடு சேர்க்கப்படும் ஓர் அசை (கலித்.115 உரை)

கொள்-இடை பெ. ஒலிக் குறிப்பு. கொள் என்று இசை பாட (காரை.பதி.2-9).

கொள்கலம் பெ. 1.பாத்திரம். கொண்மூ என்னும் கொள்கலம் கொண்ட அமிழ்து (மனோன்மணீ.ப.39). 2.பண்டம் இடுங்கலம். இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ (குறள்.1029). இறத்தலு முடைய இடும்பைக் கொள்கலம் (மணிமே.18,137). கோதறு குணங்கள் பெய்த கொள்கலம் அனைய ராகி (யசோதர.56). இடும்பைக்கே கொள்கலமாய் ஏழ் நரகுக்கு ஈடாம் (ஒழிவி.7,12). 3.அணி ஆடை சாந்து முதலிய பெய்கலம். (யாழ்.அக.) 4.பனையோலை மூங்கில் இவற்றால் ஆகிய பிழா. (சதுரக.)

கொள்கலன் பெ. →கொள்கலம்-2. எம்புலனெனுங் கொள்கலன் முகந்தவகை சிறி துலையா மரபினுரைக்கற் பாற்று (பெருந்.1536).

கொள்கிராயம் பெ. 1.விலைக்குக் கொண்ட பொருள். (இலங்.வ.) 2.→கொள்முதல்-1. (செ.ப.அக.)

கொள்குருசி பெ. கொலைத்தண்டை. கொடுக்கப்படும் குருசி நள்ளிரவிற் பிறந்து மெய்யாய்க் கொள்குருசி லிறந்து (அந்தோனி.அண்.20).

கொள்கை பெ. 1.பெறுகை. பலியிடிற் கொள்கை பழுது (சைவச.பொது 388). தன்னுயிர்த் துணையாக் கொள்கை தருமமோ வடிகளென்றாள் (திருவிளை.பு. 62). 2.1.கோட்பாடு. தாவில் கொள்கைத் தத்தம் (தொல்.பொ.73). நன்றுபுரி கொள்கையின் ஒன்றா இன்றே (குறுந்.374). குடிப் பிறப்பாளர்தங் கொள்கையிற் குன்றார் (நாலடி.141). கோல நற் குண்டிகை தாங்குங் கொள்கையால் (பெரியபு.நாட்டுச்.4). கொதிக்கத் தவஞ்செயுங் கொள்கையற்றேன் (இராமானுச.நூற்றந். 14). ஆர் பூண்ட கொள்கைக்கும் ஆதியாய் (திருக்காளத். உலா). கவிஞருக்கு உதவும் கொள்கையோர் (குளத்தூர். பதிற்றுப்.அந்.100). குரு உரு ஆகி மௌனியாய் மௌனக் கொள்கையை உணர்த்தினை (தாயுமா.பா. 19,9). கொள்கை எங்கும் சொல்க இதிலேது தடை வந்த போதிலும் அஞ்சற்க (பாரதிதா.60,ர்). கோலம் வேறு கொள்கை வேறு காணச் சொல்கிறான் (கண்ண.திரை. பா.3,22). 2.2.(மொழியி.) கண்டு கொண்ட உண்மைகளை ஒழுங்கு படுத்தப்பட்டக் கருத்துகளாக வெளியிடும் முறை. (மொழியி.கலைச்.அக.ப.86) 3.1.குறிக்கோள். அசைவில் கொள்கையர் (பதிற்றுப். 69,11). கொலை தவிர் வண்மை ஆதிய கொள்கையும் (அறு.இலக்.பொ.102). கொள்கையினை மாற்றி நிற்பார் (மனித.தேடு.ப.23). கொள்கையில் நிலையாய் இரு மனிதா (காவியப்பாவை ப.87). 3.2.மனத்தில் மேற்கொண்ட கருத்து. மனையோள் ஒத்தலின் தன்னோர் அன்னோர் மிகையெனக் குறித்த கொள்கைக் கண்ணும் (தொல்.பொ.149,12). 4.கருத்துப் பாங்கு. (ஆட்சி.அக.ப.144) 5.அறிவு. (யாழ்.அக.) 6.ஒழுக்கம். குலந்தீது கொள்கை யழிந்தக்கடை (நான்மணி.94). குலம் சுடும் கொள்கை பிழைப்பின் (திருக்கோவை.1019 நுண்பொ.). துணிவில் கொள்கையோடு நோன்மை எய்தி (இலக்.வி.613). 7.குணம். மாண்பு இல் கொள்கையோடு மயங்குதுயர் செய்த அன்பில் அறனும் (ஐங்.394). கூர் இருள் ஆடிடும் கொள்கையனே (சிவதர்ம.சென்ன. 98). 8.1.விரதம், நோன்பு. அறம்புரி அரு மறை தவின்றநாவின் திறம்புரி கொள்கை அந்தணிர் (ஐங்.387). எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை (பதிற்றுப்.21,3). சான்ற கொள்கை ... அறிஞர் (மதுரைக்.480-481). தாவில் கொள்கை (திருமுருகு. 89). வடுவில் கொள்கை உயர்ந்தோர் (பரிபா.2,24). வஞ்சமில் கொள்கை யாற்குப் பாவம் வந்து அடைந்ததாக (சீவக.396). வழுவில் கொள்கை வானவ ரேத்தும் கழிபெருங் கடவுளை வழிபடின் (பெருங்.1,42,7). கோட்டமில் கொள்கைப் பராசர முனிவன் (சிவஞா. காஞ்சிப்பு.பதி.5). 8.2.இயல்பு,தன்மை. இனிது இருந்தனனே நெருந்தகை துனிதீர் கொள்கைத் தன் புதல்வனொடு பொலிந்தே (ஐங்.408). வாளரவம் ... துற்றலான கொள்கையானே (தேவா.1,51,7). குழல் போல நின்றுழலுங் கொள்கைத்தே (நள.76). இனைய கொள்கையாற் பன்னகப் பெரும்படை ஏகி (கந்தபு.4, 5,97). மாமட மகளெழி னலங் கொண்ட கொள்கை யளாகி (பாரதம்.1,2,38). குடம்பையுட் புழுமுன் னூதுங் குளவியின் கொள்கை போல (கைவல்ய.1,11). கருத்து கூவத்தைக் கண்டு கடல் ஒற்றிப் போன கொள்கை போல் (இராமநா.6,4 தரு3). கோது அகன்று அளிக்குவார் அருத்திக் கொள்கை போல் (தேம்பா.1,2,19). வளை நேமி சேர்ந்திடுங் கொள்கையால் (சிவஞா.காஞ்சிப்பு.புராண. 6). 9.நட்பு. உடண் புணர் கொள்கைக் காத லோரே (ஐங்.381). 10.செருக்கு. தங்கிய கொள்கைத் தருநிலைக்

கோட்டத்து (சிலப்.5,145). 11.மிகுதி. பெரு வெள்ள மெனத் தேன்கமுநீர்க் கொள்ளையின் ஊறும் (சோலை.குற.104). 12.நிகழ்ச்சி. புகுந்த கொள்கை யுடனுறைந் தறிந்தா னென்ன (கம்பரா.6,14,132). தனந்தமுவிக் கொள்கை தவறோ (கு.சோ.உலா 6). இந்திய அரசு அக்கொள் கையை முற்றிலும் எற்றுக் கொள்கிறது (இந்.அர.வர. ப. 94). 13.விக்கிரகங்களுக்கு இடும் கவசம். (சாச.அக.) 14.பாத்திர வகை. (முன்.) 15.செய்கை. (யாழ்.அக.)

கொள்கையிடம் பெ. தவச்சாலை. கோலங் குயின்ற கொள்கையிடங்களும் (மணிமே.28,67).

கொள்கொம்பு பெ. →கொழுகொம்பு-1. கொள்கொம் பொடியக் கொடி வீழ்ந்ததுபோல் (கம்பரா.3,10,44). மெய்ஞ்ஞானம் படரந்திட யான் ஓர் கொள் கொம்பாய் உணர்நிதனன் (வரத.பாகவத.2,26).

கொள்திறம் பெ. கொள்ளளவு. (ஆட்சி.அக.ப.51)

கொள்முதல் பெ. 1.வாங்கின விலை. கணக்கும் கொள் முதல் கைச்சாத்தும் கொடுக்கிறோம் (பஞ்ச.திருமுக. 413). குடும்பத்து வாழ்விலும் கொள்முதல் வாணிபம் குவித்திடும் செல்வமதிலும் ... முன்னேற வேண்டும் (கண்ண.கவி.ப.88). புஞ்சை தானிய கொள் முதல் விலை ரூ2 அதிகரிப்பு (செய்தி.வ.). 2.வாங்கிச் சேர்க்கை. (ஆட்சி.அக.ப.225) 3.வியாபாரம். இந்த ஆண்டு நெல் கொள்முதல் இல்லை (நாட்.வ).

கொள்முறைப்பாகு பெ. காணிக்கைபோல் கிரமமாகக் கொள்ளும் வரி. (சாச.அக.)

கொள்வரி பெ. நெல்லாய வகை. (தெ.இ.க.4,195)

கொள்வழி பெ. ஏற்பதற் கேற்றநெறி. தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்குக் கூறதற்குரியர் கொள்வழியான (தொல்.பொ.304).

கொள்வனவு பெ. 1.→கொள்வனை. (வின்.அக.) 2.சினேகம். (யாழ்.அக.)

கொள்வனை பெ. 1.பெண் கொள்ளுகை. (செ.ப. அக.) 2.கொள்ளுகை. (முன்.)

கொள்வனைகொடுப்பனை பெ. 1.கொடுக்கல் வாங்கல். (வட்.வ.) 2.பெண்ணைக் கொடுத்துப் பெண்ணை வாங்கும் கலியாண சம்பந்தம். (நாட்.வ.)

கொள்விலை பெ. 1.→கொள்முதல்-1. (ஆட்சி.அக. ப.8) 2.பொருளை வாங்குகை. வர்த்தகர் கொள் விலையும் விற்பனையும் (குமரே.சத.5).

கொள்விலைக்காணி பெ. விலைக்கு வாங்கின நிலம். (இலங்.வ.)

கொள்வினை பெ. →கொள்வனை. (செ.ப.அக.)

கொள்வினைகொடுப்பனை பெ. →கொள்வனை கொடுப்பனை. (நாட்.வ.)

கொள்வோன் பெ. 1.வாங்குவோன். (செ.ப.அக.) 2.கற்போன், மாணாக்கன். கொள்வோன் கொள் வகை யறிந்து (நன்.பொது.36). கொள்வோர் கற்பிக்கப் படுவோரும் கற்பிக்கப்படாதோரு மென இருவகையர் (தொல்.எழுத்.சிறப்.பாயி.இளம்.). பொதுக்குருக்கொள் வோன் கொடுத்தல் (சுவாமிநா.4). 3.நான்காம் வேற்றுமை. பலவு மறைந்தனர் கொள்வோன் (இலக். கொத்.36).

கொள்ள[1] வி.அ. 1.இன்னும். கொள்ளக்கொடு (இலங்.வ.). 2.நிரம்ப. உணவு கொள்ளக் கிடைத்தது (செ.ப.அக.).

கொள்ள[2] து.வி. காரணப்பொருளிலேனும் காலப் பொருளிலேனு முள்ள செயவெனெச்சத்துடன் கூடி வருந் துணைவினை. நான் போகக்கொள்ளக் காரியம் நடந்தது நான் வரக்கொள்ள மழைபெய்தது (முன்).

கொள்ளட்டு பெ. செடிவகை. (வின்.அக.)

கொள்ளப்படு[1]-தல் 6வி. 1.அங்கீகரிக்கப்படுதல். (செ.ப.அக.) 2.நன்கு மதிக்கப்படுதல். கொளப்பட்டே மென்றெண்ணி (குறள்.699).

கொள்ளப்படு[2]-தல் 6வி. 1.மனத்துக்கொள்ளுதல். கொள்ளப்படாது மறப்ப தறிவில் என் கூற்றுக்களே (திருக் கோவை 87). 2.வாங்கப்படுதல்: நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் (பு.ஏற்.கொரி.எழு.நிரு 7,23).

கொள்ளம் பெ. 1.குழைசேறு. பாசடை பூத்த கொள்ள புகுந்து (கல்லா.73,17). அசும்பு சேதும்போ டங்கணம் பூதியிசைந்த யிருபத் தொன்றுஞ் சேறே (பிங்.606). கொள்ளந் தானே குழைசேறாகும் (அக.நி.கொமுதல்.5).

கொள்ளம் பூதூர் பெ. 1.தஞ்சை மாவட்டம் நீடாமங்கலத் தருகே உள்ள சிவதலம். ஆறுவந்தனையும் கொள்ளம் பூதூர் (தேவா.3,6,7). நினைந்த தள்ளற் பழனக் கொள்ளம் பூதூர் இக்கரை யோட மக்கரைச் செலவே (நம்.மும்.கோவை 4). செம்பொன்நேர் சடையார்தங் கொள்ளம்பூதூர் தனைச்சேர அக்கரையில் சேர்ந்தபின்பு (பெரியபு.28,899). பொன்னாருந் திருக்களரங் கொள்ளம் பூதூர் பூளைவனம் பருதிவனம் (பெருந். 1962). கண்டுணர்வு கொண்டவர்சூழ் கொள்ளம்பூ தூர்வான் குலமணியே (திருவருட்பா 1962,177).

கொள்ளம்மை பெ. ஒருவகை அம்மை நோய். (மதுரை.சிறு.வழி.ப.130)

கொள்ளமிளகு பெ. மிளகாய் வகை. (மர.இன.தொ.)

கொள்ளரி பெ. →கோளரி. கொள்ளரி யுருவு கொண்டான் கொடியவன் கடிய சூழ்வான் (சூளா.697).

கொள்ளாக்கொள்ளி பெ. தணியாத உண்டி விருப்ப முள்ளவன். (செ.ப.அக.)

கொள்ளாக்கொள்ளை பெ. மிகுதி. (யாழ்.அக.)

கொள்ளாதசிறை பெ. அடிமையைப்போல் உழைப் பவ-ன்-ள். (வின்.அக.)

கொள்ளாப்பாடல் பெ. கருத்தைத் தன்பால் பெற்றிராத கவிதை. கொள்ளாப் பாடற்கு எளிதினின் றும் (பிற்றுப்.48.6)

கொள்ளாமை பெ. 1.கொள்ளாதிருக்கை. (அரு.செ.71) 2.மிகை. (செ.ப.அக.) 3.அடங்காமை.(யாழ்.அக.) 4.மனதிலேபிடியாமை. (முன்.) 5.பகை. (செ.ப.அக.)

கொள்ளார் பெ. 1.ஒருமைப் படாதவர், ஒருமைப் பாடில்லாதவர். இன்னாதே ஒற்றுமை கொள்ளாதார் நட்பு (நாலடி.237). 2.பகைவர். கொள்ளார் தேளங் குறித்த கொற்றமும் (தொல்.பொ.67). கொள்ளார் ஒட்டிய நள்ளியும் (புறநா.158,16). 3.மனம் பொறாதவர். பொறாதரைக் கொள்ளாரென்பவாகலின் (தொல்.பொ.147 உரை).

கொள்ளி பெ. 1.நெருப்பு. கைக்கொள் கொள்ளியர் (நெடுநெல்.8). கொள்ளி கொண்டிரண்டு (கலிங்கத்துப். 138). கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய் (நள.111). கால் மடிந்து கொள்ளிக்குள் மூழ்கி (திருப்பு.318). குறவர் கொல் யானைக் கொள்ளி (திரிசிரா.அந்.63). கொள்ளி வட்டமொத்து (சிவகாமி.அந்.56). இருதலையிற் கொள்ளி யெறும்பொயும் (ஒழிவி.7,22). இருதலையாங் கொள்ளி இளிற்றுன்பு எய்தி (பஞ்ச.திருமுக.913). புருடன் குடிக்கு அவள் பெருங் கொள்ளி (பெண்கல்வி ப.141). அள்ளிக் கொடுத்த அழகுக் கரங்களையே கொள்ளியிலே வைத்தாமே (கண்ண.தீரை.பா.2,444). 2.→கொள்ளிக்கட்டை-1. புனவர் கொள்ளி யில் (ஐங்.295).கடைக்கொள்ளி வாங்கி (காரைக்.பதி.1,2). சூழிருட்டுக் கொள்ளி சுடர் விளக்கமாம் (நீதி போத வெண்.20). பரவை நீரில் ... கொள்ளி புக்கால் செறிபுனல் வற்றிடாது (பஞ்ச.தந்.2,57). குரங்குமாய் ... யிஞ்சி தின்று கொள்ளி பிடித் தெழுந்தாற் போல (பெருந்.262). கூரை எரிந்தது கொள்ளிகள் வீழ்ந்தன (தமிழ.கத்தி ப.57). கொள்ளிதனை விளக்கிருக்க தேடுவார் போல் குருடனார்க் கறைவதெவன் (புலவர் உள்.ப.50). 3.தீவட்டி. கொள்ளி திகழத் துருவி வந்தனிர் (இரட்.சரி. 208). 4.விசும்பிலிருந்துவிழும் கொள்ளி. கொள்ளிக் கட்டை விசும்புவீழ் கொள்ளியின் பைம்பயிர் துமியர (குறுந்.189). 5.பொறாமையும் முன்கோப முள்ளவன். (செ.ப.அக.) 6.மகன். (திருநெல்.வ.) 7.எருமைநாக்கி. (மலை அக.) 8.விறகு. (இலங்.வ.)

கொள்ளிக்கட்டை பெ. 1.எரிகட்டை. சுட்ட வெம்பிணத்தோ டொக்கத் தொலைந்து வெந்தெரிந்த கொள்ளிக் கட்டையும் (அரிச்.பு.7,63). பொருமை நெஞ்சிலே கொள்ளிக் கட்டையால் சுடவேண்டும் (என்.பழ.தொ.587). 2.கொடிய வன். (யாழ்.அக.) 3.நெருப்புக் கொள்ளி. (முன்.)

கொள்ளிக்கட்டைதேக்கு பெ. பீநாறி. (செ.ப.அக.)

கொள்ளிக்கண் பெ. தீய கண். (முன்.)

கொள்ளிக்கண்ணன் பெ. 1.கோபக் கண்ணுள்ளவன். (யாழ்.அக.) 2.கண்ணுறுகாரன். (முன்.)

கொள்ளிக்கரப்பான் பெ. குழந்தைகட்கு வரும் கரப்பான் வகை. (செ.ப.அக.)

கொள்ளிக்கருவாடு பெ. ஒரு வகை கருவாடு. (பதார்த்த.929)

கொள்ளிக்காசு பெ. பிணம் சுடுவதற்குக் கொடுக்கும் கூலி. கொள்ளிக் காசன்றி உம்மக்களுக்கு எங்கள் குடும்ப வகையில் உரிமை உண்டோ (மலரும்.1122).

கொள்ளிக்காடு பெ. பாடல் பெற்ற சைவத் சிவத்தலம். ஓங்கு புகழ்த் திருக்கொள்ளிக் காடும் போற்றி (பெரியபு. 28,574). கொள்ளிக் காட்டி லமர்ந்தஎன்கண் காட்சியே (திருவருட்பா 1962,179).

கொள்ளிக்கால் பெ. 1.ஒற்றைக்கால் வெளுத்திருத் தலாகிய குதிரைக் குற்றம். நஞ்ச பாதங் கொள்ளிக்கால் வெள்ளிக்கண் (திருவாத.பு.குதிரையிட்.35). 2.தூர திருட்ட முடைய கால். அவன் கொள்ளிக் காலுள்ளவன் (வட்.வ).

கொள்ளிக்கொட்டான் பெ. →கொள்ளியெறும்பு. (வின்.அக.)

கொள்ளிக்கொம்பு பெ. தீமை பயக்கும் என்று கருதப்படும் மாட்டுக்கொம்பின் நுனியில் இருக்கும் வெள்ளை. (ரா.வட்.அக.107)

கொள்ளிகம் பெ. 1.அமுரி. (சித்.பரி.அக.ப.166) 2.புன்கு. (சித்.பரி.அக.ப.85)

கொள்ளிசொருகு-தல் 5வி. 1.தீவைத்தல். (செ.ப.அக.) 2.கேடுசெய்தல். (முன்.)

கொள்ளிடம் பெ. காவிரியின்று பிரியும் ஒரு நதி. குங்குமங்களுந்திவருங் கொள்ளிடத்தின் (தேவா. 210,6). கொள்ளிடத்தின் தென் திருவாப் பாடியான் (ஐயடி.சேத்.19).செழுமணித் திரள்முத்தும் கொண்டி ரட்டிவந் தோதமங் கெதிர்கொளக் கொள்ளிடங் கடந்தேறி (பெரியபு.28.146).

கொள்ளித்தேள் பெ. கடுமையாகக் கொட்டுந் தேள்வகை. வெங்கொள்ளித் தேன்போன்ற வினை (திருவருட்பா 2 எழுத்தறி.28).

கொள்ளிப்பாக்கை பெ. இராசாதிராசன் வென்ற ஊர். சயங்கொண் டென்னார் கொள்ளிப் பாக்கை யுள்ளெரி மடுப்பி (பெருந்.783).

கொள்ளிபெறு-தல் 6வி. இறந்த தேவதாசியின் தகனத்திற்காக கோயிலினின்று நெருப்புப் பெறுதல். கொள்ளி பெற்றவர்களாயிருக்கிற எம்பெருமானடி யாளுக்கு (கோயிலொ.95).

கொள்ளிமண்டிலம் பெ. →கொள்ளிவட்டம்-1. கொள்ளி மண்டிலம் போற்கொடி படத்திரிந் திடுவ (சீவக.1771).

கொள்ளிமாலை பெ. பிணத்திற்கு அணியும் மாலை. கொள்ளி மாலையுங் கொடிபடு கூறையும் (மணிமே. 6,94 உரை).

கொள்ளியம் பெ. →கொள்ளிகம். (யாழ்.அக.)

கொள்ளியறை பெ. சுடுகாடு. கொள்ளி யறையிற் கொளுந்தாமற் காக்கலாம் (திருமந்.611).

கொள்ளியெறும்பு பெ. கடியால் மிக்க கடுப்பை உண்டாக்கும் சிற்றெறும்பு வகை. (செ.ப.அக.)

கொள்ளிவட்டம் பெ. 1.கொள்ளியைச் சுழற்றுவதால் தோன்றும் வட்ட வடிவம். ஒள்ளழற் கொள்ளிவட்டம் போல் குலாய்ச்சுழல (சீவக.2203). கறங்கோலை கொள்ளி வட்டம் (திருமந்.2313). கொள்ளிவட்டம் போலவும் கறங்கு போலவும் ... திரிகிற அந்த விவகாரங்களும் (சி.சி.சுப.42 நிரம்ப). வடிவு கிஞ்சலிலா அஞ்சு இடத்தும் கொள்ளிவட்டம் ஆகவே (ஒழிவி.1,33). கொள்ளி வட்டம் என ... கொட்புறீஇ (சிவஞா.காஞ்சிப்பு. அந்த.4). 2.→கொள்ளிக்கட்டை-1. சூறை ... கொள்ளி வட்டமெனும் மாறு கருணையினால் மாற்றினாள் (உமா.நெஞ்.தூது 104).

கொள்ளிவாய் பெ. →கொள்ளிவாய்ப் பிசாசு. வைதவர் சீறிடுங்கொள்ளிவா யாகி ... உழல்வர் (சானந்த.பு.1,10). கொள்ளிவாய் அடியிட்டாற்போல் குறுமுகடு ஒன்று சேர்ந்து (பஞ்ச.தந்.119). அருளில் குறும்பரை கரையாக்கன் குறளிக் கொள்ளிவாய் (நீரரர்நி.1,11).

கொள்ளிவாய்க்குணங்கு பெ. →கொள்ளிவாய்ப்பி சாசு. கொள்ளிவாய்க்குணங் குள்ளுதோ றிவறிய (கல்லா.95,11).

கொள்ளிவாய்ச்சர்ப்பம் பெ. கொள்ளிவிரியன். (வின். அக.)

கொள்ளிவாய்ப்பிசாசம் பெ. கொள்ளிவாய்ப்பிசாசு. (யாழ்.அக.)

கொள்ளிவாய்ப்பிசாசு பெ. வாயில் நெருப்புடை யதாகக் கருதப்படும் பேய் வகை. (நாட்.வ.)

கொள்ளிவாய்ப்பேய் பெ. →கொள்ளிவாய்ப்பிசாசு. அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய் (காரைக்.பதி.1,7). கொள்ளி வாய்ப் பேய் காக்கும் கோபுரமும் (கலிங் கத்துப்.104).

கொள்ளிவாய்விரியன் பெ. →கொள்ளிவிரியன். (ஐம்.அக.)

கொள்ளிவாயலகை பெ. →கொள்ளிவாய்ப்பிசாசு. கொள்ளி வாயலகை வாய் திறந்துகனல் கொப்புளிப்ப (திருவிளை.பு.நகரச்.26).

கொள்ளிவாயெறும்பு பெ. →கொள்ளியெறும்பு. (வின்.அக.)

கொள்ளிவாலி பெ. கறுப்புடலும் வெள்ளை வாலு முள்ள பசு அல்லது நாய். (இலங்.வ.)

கொள்ளிவாலெறும்பு பெ. →கொள்ளியெறும்பு. (யாழ்.அக.)

கொள்ளிவிரியன் பெ. விரியன் பாம்பு வகை. (செ.ப. அக.)

கொள்ளிவீங்கு பெ. மாட்டுக்கு வரும் தொண்டை நோய் வகை. (மூன்.)

கொள்ளிவை-த்தல் 11 வி. 1.கலகமூட்டுதல். (மூன்.) 2.நெருப்புவைத்தல். நடுவீதியில் கொள்ளி வைத்து நானறியேன் என்றிடுவாய் (மாரியம்மன்.ப.34). 3.இறந்தோர் உடல்மீது அடுக்கப்பட்ட விறகடுக்கிற்குத் தீ வைத்தல். ஆண் குழந்தைகள் பெற்றோர்க்குக் கொள்ளி வைத்து ... துன்பம் வரும் பொழுது பகிர்ந்து கொள்ளும் இயல்புடையன (நாட்.பா.ஒப்.ப.122). 4.கேடுவிளைத்தல். (யாழ்.அக.)

கொள்ளு பெ. காணம். கொள்ளல்ல தில்லை என (தொல்.சொல்.30 சேனா.). கூனலங் காய்தினை யவரை கொள்ளு மாறவும் (திருவிளை.பு.நாட்டுச்.42). கழைகள் கொள்ளருந்தினைக்களை மட்டிற்கும் (தென்காசித்.பு.நாட்டுச்.48). உள்ளே இருப்பவர் உயிரோடிருந்தால் கொள்ளுக் கட்டிய குதிரைபோல வாய் திறக்காமலா வம்பு செய்வார்கள் (இருண்ட வீடு ப.36). குதிரை குருடானாலும் கொள்ளுதின்கிறதில்குறையா (என்.பழ.தொ.1194).

கொள்ளுக்கஞ்சி பெ. கொள்ளும் அரிசியும் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சி. (முருத்.குண.1 ப.434)

கொள்ளுக்காய் பெ. →கொள்ளுக்காய்வேளை. (வைத்.சத.ப.76)

கொள்ளுக்காய் வேளை பெ. செடி வகை. (குண.1 ப.282)

கொள்ளுநர் பெ. 1.கொள்வோர். (செ.ப.அக.) 2.கற்போர். கொள்ளுநர் கொள்ளக் குறையா தாதலின் (கல்லா.11,21).

கொள்ளுப்பாட்டன் பெ. பாட்டனுக்குத் தந்தை. (வட். வ.)

கொள்ளுப்பேரன் பெ. பேரன் மகன். (மூன்.)

கொள்ளுபானிதம் பெ. சூரியகாந்தி. (சித்.பரி.அக. ப.85)

கொள்ளெனல் பெ. 1.மிகுதிக் குறிப்பு. கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் (திருவாய்.4,9,4). 2.பறை முதலியவற்றின் ஒலிக்குறிப்பு. கொள்ளென் குரலொடு கோட்பறை கொளீஇ (பெருங்.4,5,62).

கொள்ளை பெ. 1.சூறை கொள்ளுகை. கொள்ளை மேவலை ஆகலின் (புறநா.7,9). கொள்ளை மாந்தரின் ஆனாது கவரும் (அகநா.3,10). நாடு அடிப்படுத்தலின் கொள்ளை மாற்றி (பதிற்றுப்.81,15). கொள்ளை கண்டு அளியினம் கூவென் ஓதையும் (தேம்பா.1,1,52). காமனார் கொள்ளையிலே கைமறந்தேன் (தெய்வச். விறலி.தூது 532). கொள்ளை விரும் பேல் (ஆத்திசூடி வெண்.41). கொள்ளை கொண்ட அமராவதி வாழ்வு குலைத்தவன் (பாரதி.தோத்தீரம்.3). குத்து வெட்டு கொள்ளை ரத்தக் கொடும் புரட்சி வேண்டா (புதுமைவே. 8,3). 2.களவு. கொள்ளைகொள் காமன் கொடும்

பகைக்கு (கு.சோ.உலா 41). 3.மிகுதி. குணகடல் முகந்த கொள்ளை வானம் (அகநா.278). கொள்ளை வெள்ளம் ... தேரை ... உதைக்கின்றதே (சூகோபரந்.42). கொள்ளை வன் குற்றம் (இராமானுச.நூற்றந்.50). கொள்ளைமா மதத்த நால்வாய்க் குஞ்சரம் (பாகவ.1,5,14). கொள்ளைப் பிறப்பு அறுக்க (பட்டினத்தார்.பா.மகடூ உ2). கொள்ளை கொண்டுண் ணுமாபோல் (செ.பாகவத. 4,3,103). கொலைமதக் களிறுஞ்சாயக் குமைத்தது முதுநீர்க் கொள்ளை (சீகாழித்.பு.தோணி.16). விண் வாய் கொள்ளை நெடுந்தூரம்போய் கோலாகலப் பார்ப்பதியாள் (திருவாமாத்.பு.பூர்வ.8,16). கொள்ளை யாய் இறந்த காக்கை (பஞ்ச.தந்.3,76). கொள்ளை மழை பெய்யலியே (தமி.நா.பா.ப.146). 4.ஏராளம். நீரில் குளித்தெழு காண்டங் கொள்ளை (சிவராத்.பு.3,70). 5.கூட்டம். கொள்ளை யிற்பலர் கூறலும் (கந்தபு.5,3,14). கொள்ளை வண்டிழிந்து தாது குடைந்து ... கள்ளழிந் தொழுகு ... கடுக்கை (பிரபு.லீலை 2,4). கொள்ளை வண்டுழு மாலையான் (குருகூர்.பிள்.2). வயமான் புலவுவேட்டுத் தொடங்கிய வாளெயிற்றுக் கொள்ளையிற் றங்கினன் கதுவ (பெருந்.192). 6.பெருவாரி நோய். (செ.ப.அக.) 7.கொள்ளையிட்ட பொருள். (யாழ்.அக.) 8.விலை. வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றி (நற்.4). கொள்ளை சாற்றிய கொடு நுக ஒழுகை (அகநா. 159,2). கொள்ளை சாற்றிய ... வலைஞர் (முதுரைக்.256). சில் பத உணவின் கொள்ளை (பெரும்பாண்.64). 9.கபடத் தன்மை. உங்கள் உள்ளமோ கொள்ளியினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது (விவிலி.லூக்கா 11,39). 10.பயன். நானிருந்தென்ன கொள்ளை (இராமநா.1,9). 11.தடை. அதைச் செய்ய உனக்கு என்ன கொள்ளை (செ.ப.அக.). 12.துன்பம். கொள்ளை ஆர் வன்பிறப்பு நீங்கும் (திருப்போரூர் மாலை 13).

கொள்ளைக்கணக்கு பெ.பொய்க்கணக்கு. கொள்ளைக் கணக் கெழுதி ... பணக்கோட்டை கட்டினாள் (தெய்வச். விறலி.தூது 390).

கொள்ளைக்காய்ச்சல் பெ. விடசுரம். (செ.ப.அக.)

கொள்ளைக்காரன் பெ. 1.பிறரின் உடமைகளைக் கொள்ளையடிப்பவன். கொலைகாரன் கொள்ளைக் காரன்முதலியவர்களைக்கண்டால்மக்கள் எப்படி பயந்து ஒதுங்கி வாழ்வார்களோ அதே நிலை தான் நாடகக்கார னுக்கும் இருந்து வந்தது (நா.கலைப.13). 2.வழிப் பறிக்காரன். வாசல்வழியாய்ப் பிரவேசியாமல் வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக் காரனுமாயிருக்கிறான் (விவிலி.யோவான் 10,1).

கொள்ளைக்கொடு-த்தல் 11வி. பறிகொடுத்தல். கூர்த்த அறிவு அத்தனையும் கொள்ளை கொடுத்து (தாயுமா.பா.43,31).

கொள்ளைகொள்(ளு)-தல் 2வி. 1.கொள்ளையடித் தல். வேற்றுப் புலத்தைக் கொள்ளைகொண்ட தொழிலை (புற.வெண்.3,15 கொளு.உரை). பொன் பொருளைக் கொள்ளை கொள்ள ஓடுவான் (கண்ண.திரை.பா.2,77). 2.மிகுதியாகக் கொள்ளுதல். மாந்தர் கொள்ளை கொண்டுண்ண மாநிலம் ஏந்த லாம்படித்தன்றியீட்டுவார் (சீவக.2403). 3.வசீகரித்தல், கவர்தல். கொள்ளை கொண்ட ... சங்கும் (சேர.மும்.கோவை 25,6). மான்மருள் நோக்கெலாம் கொள்ளை கொண்ட இவளையங் கண்ணினார் (செ.பாகவத.761). நின்முக நீங்கா வழகினைக் கொள்ளைகொண்டு (திருவாரூர்க் கோவை 10). கொள்ளை கொண்ட கண்ணீரும் கம்பலையும் ஆகி (தாயுமா.பா.17,6). உள்ளம் கொள்ளை கொண்டு பிள்ளை யன்னம் போல் தெள்ளுநீர் ஆடிச் செல்லுகிறாள் (கா.கடமை.ப.26). உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு (பு.ஏற்.எழு.நிரூ 218). 4.கவர்ந்து செல்லுதல். காம வெங்கனல் புறத்தோடிக் கொள்ளை கொண்டுடன் மறைத் தென (பாரதம்.1,7, 58,58).

கொள்ளைசெய்-தல் 1வி. சூறையிடுதல். வள் நுரைத்து எதிர் வழிந்(து) எலாம் ... அடக் கொள்ளை செய் பொருந்தலர் போன்றே (தேம்பா.1,1,6).

கொள்ளைசாற்று-தல் 5வி. கொள்ளையூட்டு-தல்-1. (செ.ப.அக.)

கொள்ளைநீர் பெ. கடல். (இலக்.சொ.அக.)

கொள்ளைநோய் பெ. 1.ஒரு வகைத் தொற்றுநோய். (மானிட.கலைச்.அக.ப.31) 2.எல்லா இடங்களிலும் பரவிப் பயிரைத் தாக்கும் ஒரு நோய். (கலைச். அக.2ப.97) 3.எலிகளினால் மனிதனைத்தாக்கும் கொடிய நோய். (மருத்.கலைச்.அக.ப.205) 4.பெருவாரியாக பரவக்கூடிய ஒரு வகை நோய், சோதாரி. பஞ்சங்களும் கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் (பு.ஏற்.மத்தேயு 24,7).

கொள்ளைப்பொருள் பெ. களவு செய்த பொருள். அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக் கொண்டு அவனுடைய கொள்ளைப் பொருளைப் பங்கிடுவான் (விவிலி.லூக்கா 11,22).

கொள்ளைபோ-தல் 4/5வி. 1.களவுபோதல். கொள்ளை போகின்ற துயிரென்னு (நள.104). கொள்ளைபோய் நனிவறங் கூர்ந்த காலையும் (சிவஞான.காஞ்சிப்பு. நாட்டுப்.92). 2.பொருள் முதலியன பலவாறாக அழிபடுதல். கொள்ளை போகின்ற செல்வம் (கம்பரா. 3,8,77).

கொள்ளையடி-த்தல் 11வி. 1.சூறையாடுதல். பட்டப் பகல் ஊரைக் கொள்ளையடித்து (பஞ்ச.திருமுக.38).

கொள்ளை யடித்திடத் தேவையில்லை (அவளும் அவனும் ப.53). வணிகரின் மிதவைகள் மறித்து ... பண்டத் தொகுதியைக் கொள்ளை யடிக்கும் ... சிறப்பை வெள்ளநீ ரலைகளே விளம்பும் (அனிச்ச அடி.ப.156). ஒருவருக்கும் தெரியாமல் ஒளிந்து மறைந்து கொள்ளையடிக்க வரும் திருடன் (நா.கலை ப.38). தனுகு நகரில் மக்கள் 720டன் அரிசியை கொள்ளை யடித்து விட்டனர் (செய்தி.வ.). 2.பறித்தல். (யாழ்.அக.)

கொள்ளையள்ளு-தல் 5வி. 1.திருடுதல். (முன்.) 2.பறித்தல். (முன்.)

கொள்ளையாடு-தல் 5வி. 1.→கொள்ளையடி-த்தல்-1. கொள்ளையாட்டயர் கொடியகோ லரசனை (காஞ்சிப்பு.பன்னிரு.336). கொட்டமிட்டே யுத்தரத்திற் கோக் கொள்ளை யாட வந்து துட்ன றிவக்கொடியோன் ... கொள்ளை விரும்பேல் (ஆத்திசூடிவெண்.41). 2.பலவந்தமாக கவர்தல். வெள்ளைக்காரனையும் மாயேசிப்பாய் களையும் கொள்ளையிடச் சொன்ன விடத்திலே (ஆனந்த.தினசரிச்.3 ப.69). 3.பறித்தல். (யாழ்.அக.)

கொள்ளையிடு-தல் 6வி. 1.பொருளை அபகரித்தல். மதுரை கடைத்தெருவை வந்துமெள்ள கொள்ளையிட்டு (மதுரை.கதை ப.7). கூடிக் கவிச்சுவையைக் கொள்ளை யிடக் காத்திருந்தோம் (பாரதிதா.24,2,12 கவி.2). 2.கவர்ந்து செல்லுதல். அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும் (பு.ஏற்.மத்தேயு 12,29). ~~3.திருடுதல். (யாழ்.அக.)~~

கொள்ளையூட்டு-தல் 5வி. கொள்ளைகொள்ளும் படி விடுதல். வேற்றுப்புலத்தைக் கொள்ளையூட்டி (புற.வெண்.3,15 கொளு உரை).

கொள்ளையெடு-த்தல் 11வி. 1.பறித்தல். (யாழ்.அக.) 2.திருடுதல். (முன்.)

கொள்ளைவல்சி பெ. வழிப்பறி செய்தலால் கிடைத்த உணவு. கொள்ளை வல்சிக் கவர்காற் கூளியர் (பதிற்றுப்.19,1).

கொள்ளைவை-த்தல் 11வி. →கொள்ளையடி-த்தல். (நாட்.வ.)

கொளகொள-த்தல் 11வி. 1.இறுகலான தன்மைமாறி இளகிப்போதல். பழம் கொளகொளத்துப் போயிற்று (முன்.) 2.தளர்தல். (யாழ்.அக.)

கொளகொளெனல் பெ. ஓர் ஒலிக்குறிப்பு. (சூடா.நி.)

கொளஞ்சி பெ. 1.→கொழிஞ்சி. (பதார்த்த.683) 2.நுங்குகள் பிரித்தெடுக்கப்படபின் உள்ள தண்டுப் பாகம். (இராமநா.வ.)

கொளஞ்சியப்பர் பெ. மணவாளநல்லூரில் எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமான். கொளஞ்சியப் பப்பெயர் கொள் அண்ணலை (கொளஞ்.பிள்.).

கொளபாத்திரம் பெ. பஞ்சபாத்திரம். (செ.ப.அக.)

கொளமா பெ. கும்பாதிரி. (செ.ப.அக.அனு.)

கொளல்வினா பெ. ஒரு பண்டத்தைக் கொள்ளும் நோக்கத்தோடு கேட்கும் கேள்வி. (நன்.385 உரை)

கொளவடை பெ. ஒப்படைப்பு. (வட்.வ.)

கொளவிப்பிடி-த்தல் 11வி. 1.வசப்படுத்துதல். (முன்.) 2.சண்டைக்கிழுத்தல். (முன்.)

கொளளவு பெ. உள்பரிமாணம். (மானிட.கலைச்.அக. ப.7)

கொளாஅல் பெ. கொள்ளச்செய்கை. கொள்வழிக் கொளாஅல் (தொல்.பொ.307).

கொளி[1] பெ. 1.நாய். (ஆசி.நி.105) 2.கொள்ளி. கொளிக் குறை பாடை மீதில் குதித்து (வேதாளக்.வர.17).

கொளி[2]-த்தல் 11வி. அரிசியைப் புடைத்து தூசி உமி, தவிடு ஆகியவை போக்குதல். (நாட்.வ.)

கொளிஞ்சி பெ. சாயம் எடுக்கப் பயன்படும் ஒரு வகைச் செடி. (திருநெல்.வ.)

கொளியலாக்கு-தல் 5வி. →கொளி[2]-த்தல். கடையரலிலிட்டுக மொல்லெனக் குத்தல் நவித்தல் குமைத்துக் கொளியலாக்கல் (நீரரர் நி.3,24).

கொளிவாளை பெ. கடல் மீன்வகை. (தொ.வ.)

கொளு[1] பெ. 1.செய்யுள் முதலியவற்றின் கருத்து விளக்கும் சொற்றொடர். (புற.வெண்.) 2.கருத்து. கொளு கருத்து (திருக்கோவை 1,1 அடிக்.). 3.பழ வெலும்பு. கொளமிடை வீணாதண்டு (ஞானாமிர். 7,14). 4.பொருத்துவாய். தோடமை கொளுவத் தூடுற வளைஇ (பெருங்.1,47,208). 5.உருவு திரையை மாட்டுங்கருவி. கஞ்சிகைக் கொளுவொடு கயிற்று நிலையமைத்து (பெருங்.1,58,522).

கொளுக்கி பெ. →கொக்கி. (இலங்.வ.)

கொளுகொம்பு பெ. →கொழுகொம்பு-1. கொழு கொம்பிலாத தனிக்கொடிபோல் (கந்தரலங்.99).

கொளுகொளு-த்தல் 11வி. →கொளகொள-த்தல். (யாழ்.அக.)

கொளுங்குவி பெ. வேலிப்பருத்தி. (சித்.பரி.அக.ப.85)

கொளுச்சொல் பெ. செய்யுள் முதலியவற்றின் கருத்துக்களை விளக்க பயன்படுத்தப்படும் குறிப்புச் சொல். (ஆட்சி.அக.ப.54)

கொளுசாளைபேத்தா பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கொளுசு பெ. குழைச்சு. (யாழ்.அக.)

கொளுத்தி பெ. நன்னீரில் வாழும் ஒரு வகைமீன். (தொ.வ.)

கொளுத்து[1] பெ. 1.உடற்பொருத்து, மூட்டு. கொளுத்து முட்டுக் கந்து உடற்பொருத்தம் (நாம.நி.597). 2.ஆபரணங்களின் பூட்டு. கொளுதுச்செறிந்த முன்கைக்கணிந்த கடகத்துடனே (புறநா.150 உரை).

கொளுத்து[2]-தல் 5வி. 1.கொள்ளச் செய்தல். பூ நாற்றத்தவாகிய புகையைக் கொளுத்தி அமைத்த ஊனையும் (புறநா.14 உரை). புலங் கொளுத்தி வீடு உய்க்கும் பதி (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.59). அம் பொன் வாய் மகரமீன் கொளுத்தி (கச்சி.காஞ்சிப்பு. இருபத்.27). 2.விளக்குதல். விதியோர் கொளுத்திய வீரிய முடையது (பெருங்.1,38,294). 3.அறிவுறுத் துதல். சேணெறி செல்லக் கோணெறி கொளுத்தி (பெருங்.1,58,70). அவல நீக்கி அறிவு ஆசாரமுங் கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே (நம்பியகப்.11). துகடவிர் நெஞ்சத் தின்ன வர்க்குநூல் கொளுத்து வதறனென விசைப்ப (திருவிளை.பு.54,24). நல்லறிவு கொளுத்தலும் (இலக்.வி.465). மெய்யறிவினைக் கொளுத்தி ஆண்தகைபால் மனந்திருப்பி (இரட். சரி.557). 4.1.தீப்பற்ற வைத்தல். குத்து மணி விளக்கில் கோதிநல்லநெய்வார்த்து திரியை முறுக்கி யிட்டுத் தீபங் கொளுத்தினரே (காஞ்சி.அம்.ப.15). அணி விளக்கிலே கொளுத்தும் பந்தத்தைப் போல் (தெய்வச்.விறலி.தூது 364). சுடலைதனில் ... யிட்டுக்கரி கொளுத்து (திருப்பு.139). குருட்டரசனுக்குக் கொளுத்திய விளக்கும் இருட்டறை இருந்து கண் சிமிட்டலும் என்ன (மனோன்மணீ.ப.89). 4.2.எரியூட்டுதல். வேய் ஒன்று எரிபரப்ப மூங்கிற்காடு கொளுத்தினற்போல் (பாரத வெண்.48,4). 4.3.தீயிடுதல். வெள்ளைக்காரர் இனிமேல் வெளியே புறப்பட்டுக் கிராமங்களிலே தாம்தாம் பண்ணாமலும் ஊர்களைக் கொளுத்தாமலும் ... பாச்சாக்கொடி போடவும் (ஆனந்த.தினசரிச்.3 ப. 209). கொல்லை உழவர்இது கொளுத்தியே சுட்டமரம் (சீவே.சரி.1330). 4.4.மூட்டுதல். கொளுத்திய வெந்தழல் (மனோன்மணீ.ப.102). இன்பத் தணல் உணர்வைக் கொளுத்திவைத்து (நேற்றின்.ப.5). 4.5.எரித்தல். நெடிய பரந்த ஊர்களைத் தீயிட்டுக் கொளுத்துதல் (இலக்.வி.606 உரை). 4.6.எரியச் செய்தல். குலவு மறையும் பலகலையும் கொளுத்து வதன்முன் கொண்டமைந்த (பெரியபு.20,15). அழிச பாக்கம் கிராமங்களைக் கொளுத்தின பேர்களில் (ஆனந்த.தினசரிச்.3). பலர் ஒரு வீட்டில் பந்தம் கொளுத்து கிறார்கள் (பிசிராந்.ப.16). 5.விளக்குமுதலான வற்றை ஏற்றுதல். ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தினாலே மூடமாட்டார் (விவிலி. லூக்கா 8,16). 6.வீணை முதலியன வாசித்தல். நரம்பினாய கருவியைக் கொளத்து மாக்கள் (கூடா.2, 39). 7.நாடகமுதலியவற்றை நடப்பித்தல். கூடிய நெறியின கொளுத்துங் காலை (சிலப்.3,17). 8.கண்டித்தல். நான் அவனை நன்றாய்க் கொளுத்தி விட்டேன் (வின்.அக.). 9.சண்டை மூட்டுதல். (முன்.) 10.பொருத்துதல். (இலக்.சொ.அக.) 11.பூட்டுதல். மாசறு கந்தின் மென்றோன் மணித்தொடர்க் கொளுத்தி வாட்கண் (சீவக.1690). 12.கற்பித்தல். கொளைப் பொருள் தெரிதரக் கொளுத்தாமல் (பரிபா.11,126). 13.சொல்லுதல். கோதிலாக் குணங்க டேற்றிக் கொழித்துரை கொளுத்த லென்றான் (சூளா.566). 14.தூற்றுதல். (வின்.அக.) 15.அணி செய்தல். நகரைமணக் கோலம் பெருகக் கொளுத்தினார் (திருவிளை.பு.12,11).

கொளுத்து[3]-தல் 5வி. 1.வெயில் போன்றவை மிகக் கடுமையாய் வெம்மைசெய்தல். கோடை வெயில் கொளுத்து கிறது (நா.கலை ப.84). 2.வியக்கும் படி காரியம் புரிதல். (செ.ப.அக.)

கொளுந்தியாள் பெ. கணவன் அல்லது மனைவியின் தங்கை. (வரவேற்பு 1969 ப.27).

கொளுந்து[1]-தல் 5வி. 1.தீப்பற்றுதல். தீக்கொளுந் திணவுந் தெரிகின்றிவர் (கம்பரா.5,13,5). கொங்கை அனலிற் கொளுந்தியோ (நள.107). ஆதவன் கோயி லழல்கொளுந்த வேலைம் போடுழல் வீர்பரி (தஞ். கோவை 143). காமமாய்க் கொளுந்தி ... வெகுளியா யெரியும் (பகவற்.2,52). மேக்கொளி கொளுந்துங் காயர் வெண்மணி மாலை வேய்ந்து (கச்சி.காஞ்சிப்பு. திருக்கண்.45). 2.எரிதல். வெங்கனல் கொளுந்தலின் வெந்த வான் புலம் (பாரதம்.1,3,16). 3.சுடுதல். கொளுந்து இரும்பு போல் (பிரமோத்.1,26).

கொழுந்து[2]-தல் 5வி. 1.எரிய வைத்தல். விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல் விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள் (பு.ஏற்.மத்தேயு 5,15). 2.பற்ற வைத்தல். கற்பூரம் கொளுத்திக் காட்டுவதால் (மலரும்.559).

கொளுப்பு பெ. செழிப்பு. (யாழ்.அக.)

கொளுமீதி பெ. இறைகொடுத்து மிஞ்சினதானியம். (முன்.)

கொளுமுதல் பெ. →கொளுமீதி. (முன்.)

கொளுமோர் பெ. நீரில் முழ்கியவர்களுக்குத் தரப்படும் காய்ச்சிய இரும்புக் கம்பியிட்ட மோர். (ரா.வட்.அக.)

கொளுவா பெ. மீன்வகை. (தொ.வ.)

கொளுவி பெ. →கொக்கி. (இலங்.வ.)

கொளுவிக்கொள்(ளு)-தல் 2வி. 1.பின்னிக் கொள்ளுதல். சங்கிலி கொளுவிக் கொண்டது (நாட்வ). 2.சண்டையிட்டுக் கொள்ளுதல். (இலங்.வ.)

கொளுவிப்பிடி[1]-த்தல் 11வி. 1.மாட்டிவிடுதல். (வின். அக.) 2.வசப்படுத்துதல். (முன்.)

கொளுவிப்பிடி[2]-த்தல் 11வி. வழக்குத் தொடுத்தல். (செ.ப.அக.)

கொளுவிப்போடு-தல் 6வி. சண்டையிடுதல். (இலங்.வ.)

கொளுவியிழு-த்தல் 11வி. 1.துன்பத்துக்கு உள்ளாக்குதல். (செ.ப.அக.) 2.சண்டைக்கிழுத்தல். (முன்.)

கொளுவிவிடு-தல் 6வி. 1.சண்டைமூட்டுதல். (வின். அக.) 2.காதணி முதலியன பூட்டுதல். (முன்.) 3.வேலையில் அமர்த்துதல். (முன்.) 4.தகாத இடத்தில் மணம் புரிவித்தல். (முன்.)

கொளுவு[1]**-தல்** 5வி. 1.கொள்ளச் செய்தல். மலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ (புறநா.55,1). சரங்கள் கோடி கோடிமற் றொருதொடை யாகவே கொளுவி (கந்தபு.1,20,100). கொழுநனுடற்றழற் கொளீஇ யொன்னழன் வீழ்கி வீடுற்றாள் (செ.பாகவத.4,3,997). ஆலம் ... தண்ணிழல் கொளுவி (இரட்சணிய.யாத்.1, 8,7). 2.தீமூட்டுதல். ஒண்சுடர்க் கொளீஇ நடுநாள் வேட்டம் போகி (நற்.986). தீக்கொளுவும் விடங்க (திருவாச.6,19). கொளுவி கொளுத்தி படர்ளரி கொளுவிப் பதிகளை அழிய (கலிங்கத்துப்.372). விண்டொடர் துறக்க முற்றும் வெங்கனல் கொளுவி (கந்தபு.2,43, 99). மூவெயில் ஒல்லனல் கொளுவி (பட்டினத்தார்.பா. கோயில்.40,15). அனல் கொளுவ ... சுட்டனன் (செ. பாகவத.9,9,77). எரி கொளுவி ... உடலின் குளிர் போக்கி (பஞ்சதந்.3,121). இருவிழியிற் கனல்கொளுவ வெரிந்து (ஆளவந்.காஞ்சிப்பு.1114). மறவர் தம்மைப் பருந்தினுக்கு விருந்தூட்டி ... எரிகொளுவி ... பால் படுத்தான் சீறி (இரட்சணிய.யாத்.1,9,95). 3.தூண்டுதல். கொளுவிய பலபடைக் குழுக்கொண் டோச்சினர் (ஆளவந்.காஞ்சிப்பு.26). 4.தூண்டிவிடுதல். கதநாய் கொளுவுவென் (கலித்.144,20). 5.அகப்படுத்துதல். கோதையை அங்கையிற் கொளுவிச் சுற்றினான் (கந்தபு. 4,3,23). 6.கூட்டுச்சேர்த்தல். (வின்.அக.) 7.1.அணிதல். நாசித் திருவணி கொளுவி (சிவஞா.காஞ்சிப்பு.திருமண. 47). 7.2.மிதியடி முதலியன அணிதல். (யாழ்.அக.) 8.உண்டாக்குதல். புல்லறி வாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்றானதும் இயைவதன் றென்பதாம் (குறள்.849 பரிமே.). பெருங்காதல் கொளுவியநற் பழனங்காள் (பாமணிக்கோவை 12,3). 9.மேற் கொள்ளச் செய்தல். நற்பவுத்தர் நெறி கொளுவி நடாத்தி (ஆளவந்.காஞ்சிப்பு.343). 10.தொங்கவிடுதல். தயங்கும் பொன்மணி கோர்த்தன தரளமேல் கொளுவும் தோரணம் (தேம்பா.1,2,20). இட்டு தாள் கொளுவி (இயற்.மூன்றாம் திருவந்.12). 11.பொருத்துதல். நாண் இறை கொளீஇச் சினைக் கயல் மாய்க்கும் துறைவன் (ஐங்.111). ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ (பரிபா.5,22). 12.பூட்டுதல். இட்டன னிரண்டுட னிமிழ்க் கொளீஇ யிலங்குபொற் பட்டமும் (சீவக.1835). அறிவென்னுந் தாள் கொளுவி (இயற்.3,12). விடை கொளுவு யாகர் (திருப்பு.254). வரி யரவு நாண் கொளுவி (கூர்மபு,1,12,15). 13.நாட்டுதல். சந்திர நெடுங்தூண் அதனொடுங்கொளுவி (திருநெல்.பு.91). 14.தொடுத்தல். கருங்கழ லாடவர் கருவில் வாய்க் கொளீஇ (சீவக.2224). 15.மீட்டுதல். பாலையாழ் கொளுவி (திருக்கதிர.பிள்.காப்பு 3). 16.மாட்டுதல். பாணன் ... நான் இரை கொளீஇச் சினைக் கயல் மாய்க்கும் (ஐங்.111). 17.கலத்தல். சிவசங்கின் நாதங் கொளுவி (திருமந்.880). 18.உடுத்தல். நூலாக் கலிங்கம் வால் அரைக் கொளீஇ (பதிற்றுப்.12,21).

கொளுவு[2]**-தல்** 5வி. 1.குடல் தூக்கிக் கொள்ளுதல். (இலங்.வ.) 2.தந்திரஞ் செய்தல். (வின்.அக.) 3.வேலையில் அமர்தல். (முன்.) 4.மனத்திற் பதிதல். (முன்.) 5.சிக்குதல். (முன்.)

கொளுவுகயறு பெ. ஏருகட்டும் கயிற்றின் முடிப்பு. (வின்.அக.)

கொளுவுண்(ணு)-தல் 7வி. பொருத்தப்படுதல். மவுலி யணி கொளுவுண்ட வணிகள் சிதற (நகுல.பு.இராம.38).

கொளுவை பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கொளை[1] பெ. 1.பிடிப்பு. நாரியின் கொளை நீக்கி (சீகாளத்.பு.சிலந்தி.57). 2.கோட்பாடு, கொள்கை. கொளைதளரா தவர்தீமை மறைப்பெண் (கலித்.34,17) 3.பயன். தெளியெனக் கொண்டதன் கொளையன்றோ (கலித்.132,17). 4.1.இசை. புரிநரம்பின் கொளை (பரிபா.7,77). கொளை யாய்ந் தகைவிளங்கும் பாடலொ டாடவருமே (புற.வெண்.144). மன்னுங் கொளையாழ்ப் புலவனைமுன் வைத்துப் பின்னே தானிருந்து (திருவிளை.பு.42,24). 4.2.யாழின் இசை. உருமு நிலன் அதிர்க்கும் குரலொடு கொளை புணர்ந்து (பதிற்றுப்.30,42). 5.பாட்டு. யாழ் கொண்ட கொளை (பரிபா.11,125). 6.கைமுதலியவற்றால் தாளமிட்டு ஒற்றுக்கை. கொளை புணர் சீர்நரம்பு (சிலப்.17 ஒன்றன்பகுதி.2). கொளைபடு நடையாய் (அனிச்ச அடி ப.128). 7.இசைக்கருவி. கோல் எரி கொளை நரை புகை கொடி ஒருங்கு எழ (பரிபா.17,6). 8.பண். காடுகெழு நெடுவேள்பாடு கொளைக்கு ஏற்ப (அகநா.382). கொளைவிட் டவாமொழி யீர்காரி (நாணிக்ஒருதுறைக்கோவை 60).

கொளை[2] பெ. மிகுதி. கொங்கலரை யம்புயைான் கொடுங் கொளைப் போர் புரிகின்றான் (திருவிடைகலம்.79).

கொளை[3] பெ. கொலை. கொளையுடுத்த கொடுமரத்தர் வரையாட்டின் குலம் (திருக்குற்றா.பு.17,24).

கொளைபொறுக்கு-தல் 5வி. மரத்திலிருந்து வெட்டி இட்ட தழைகளைப் பொறுக்கி அடுக்குதல். (தொ.வ.)

கொளையமை-த்தல் 11வி. வில்லை நாணேறி டுதல். கொடுவெஞ் சிலையைக் கொளையமைத்து (சீவக.1659).

கொற்கை பெ. பாண்டி நாட்டில் தாமிரபரணியின் சங்கத்தமைந்த பழைய துறைமுகப் பட்டினம். கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை (ஐங். 188). அறத்தின் காக்கும் கொற்கை அம் பெருந்துறை (அகநா.27,9). விளைந்து முதிர்ந்த விழுமுத்தின் கொற்கை (மதுரைக்.217). பிணையில் கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு (சிலப்.14,80). பொற்றேர்ச் செழியன் கொற்கையம் பேரூர் (மணிமே. 13,84). தென்னவன் கொற்கைக் குருகு இரிய (கைந் நிலை 60). திரைவரவு பார்த்திருக்குந் தென் கொற்கைக் கோமா (பெருந்.677). கொற்கைத் துறைதனில் தேடிக்கிடைத்த நல் முத்துக்கள் (காவியப் பாவை ப.49). 2.(இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கொற்கைவேந்தன் பெ. பாண்டியன். (யாழ்.அக.)

கொற்சேரி (கொல் + சேரி) பெ. கொல்லர் வசிக்குமிடம். கொற்சேரி நுண் துளை துன்னூசி விற்பார் (ஐந்.ஐம்.21). வைகொண்ட வூசிகொற் சேரியின் விற்று (திருக்கோவை 386). குறுமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரி யூசி உறுவிலைக்கு விற்றதனோ டொக்கும் (பெருந்.1998).

கொற்சை பெ. வெள்ளாடு. (ஆசி.நி.113)

கொற்றக்கன்னி பெ. விசயலக்குமி. அன்னவை தடுத்து ... கொற்றக்கன்னியின் முறுவல் கண்டு காதல் நோக்குருளி நின்றான் (மேகநா.1,20).

கொற்றக்குடை பெ. வெண்கொற்றக் குடை, அரசாங்கக் குடை. கொற்றக் குடையும் வெற்றி வேலும் (பெருங்.1,57,56). கொற்றக் குடையும் குரு நாடும் கூட அருள் (பாரத வெண்.137,3). வான் பவளக் கொற்றக் குடையும் ஒரு வெள்ளி பாத்திரமும் கொடுத்து (திருவால. திருப்பணி. 29). கொற்றக்குடை எடுக்கு அவகளுக்கு (தெ.இ. க.5,860). கொற்றக் குடைபிடிக்கக் கொம்பூதப் (கூளப்ப.காதல் 48).

கொற்றங்குடி பெ. 1.சந்தான குரவருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் தோன்றிய இடம். அடியார்க் கெளியன்சிற்றம்பலவன் கொற்றங் குடியார்க் கெழுதி யகைத் தீட்டு (பெருந்.1888). 2.கொத்தன் குடியிருக்கும் இடம். (தொல்.எழுத்.350 நச்.)

கொற்றடு-தல் 6வி. உணவிடுதல். புறத்தடியார்க்குக் கொற்றட்டுக (தெ.இ.க.8,68,3).

கொற்றத்தேவி பெ. பட்டத்தரசி. கொற்றத் தேவி செற்றந் தீர்க்கும் பெற்றியர் (பெருங்.4,14,18).

கொற்றப்பெருங்கணி பெ. அரசாங்கத் சோதிடன். வெற்ற வேந்தன் கொற்றப் பெருங்கணி (பெருங்.3, 22,244).

கொற்றம்[1] பெ. 1.அரசு. கொற்றம் கொளக் கிடந்ததில் (குறள்.583). கொற்றங் கொண்டு கோலினி தோச்சென (பெருங்.2,5,73). செங்கோற் கொற்றஞ் செலவரிசை சிறந்த கட்டிலில் (திருக்கதிர.பிள்.14). குன்றாக் கொற்றமுள தசமுகனை (தந்தி.பு.306). கொற்றம் பழிக்கும் ... திதனை இழைத்தது தானென் (அனிச்ச அடி ப.40). கொற்றம் வேட்டதைக் கொள்ளற்கு (இராவண காவி.3,11,32). கொற்றம் எங்கே கொற்றம் எங்கே (கண்ண.திரை.பா.2,457). 2.அரசன். கெடலருங் குரைய கொற்றங் கெடப் பிறந்ததுவு மன்றி (சீவக.1914). 3.தலைமை. கொற்ற நிலையானும் கற்ற கலையானும் (பழனித்திரு.14,79). அரவு பிடித்துச் சடை அணிகொற்றத் தரனார் (திருமுரு.பிள்.பா.4). 4.ஆட்சி செய்யும் திறன். பரிசுக்குச் சென்ற பாவலர் புகழும் கொடையும் கொற்றமும் (பிரபந்தத்தீ.7). 5.செங்கோன்மை. கொற்றக் குலோத்துங்க சோழன் (கு.சோ.உலா 57). 6.அரச உரிமை. வீற்று இருந் கொற்றத்துச் செல்வர் செல்வ (பதிற்றுப்.59,9). கொற்ற மெய்திக் கொண்டனை போந்த மிகுதி வேந்தே (பெருங்.2,1,30-31). கொற்ற மென்பதற்கு அரசுரிமை யென்றும் பொருளுண்டு (சீவக.2582 அடிக்). 7.வன்மை. (சூடா நி.) 8.வீரம். பெரும்படைக் கொற்றம் பீடழிந்து (பெருங்.3,3,90). கொற்றமார் குரைகழல் குழைந்து போற்றுவாம் (சிவபுண்ணிய.13). கொற்றம துடைய போர் கோலங் காணுவாம் (இராவணகாவி.5,5, 2). 9.வெற்றிச் சின்னம். கொற்றமணி முச்சி உச்சிக் கொண்டையாள் (மயிலை.உலா 281). 10.வெற்றி. கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும் (தொல்.பொ.68,). பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே (புறநா.21,11). மன்னவன் கொற்றங் கொளக் கிடந்தது இல் (குறள். 583). உரவோன் கொற்ற முயர்ந்ததே (சீவக.2582). கொற்றம் மருவுகொல் லேறு (திருக்கோவை 346). ஆலங் காட்டினில் ... காளிதன் கொற்றம் போய் (ஈட்டி.18). மலைமுழு தும் கொற்றம் வைக்கின்ற வாணன் (தஞ். கோவை 41). கொற்ற மல்லினா லுயர்ந்த பொற்றோள் வலம்புரி மாலை வேந்தன் (பாரதம்.2,2,31). கொற்றம் புனைந்த குலச்சிறையும் (மதுரைச்.உலா 95). திருந்திய கொற்றம் தன்னைக் காகுத்தன் சிலையே கொள்ள (மேகநா.1,9). 11.சிறப்பு. தென்னவன் கொற்றமும் (சிலப்.15,9). கொற்றக் கிரணத்தது என (ஞானாமிர்.63,3).

கொற்றம்[2] பெ. (இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கொற்றம்வை-த்தல் 11வி. அரசாட்சியை ஒருவரிடம் ஒப்புவித்தல். நீயொருவன்மேற் கொற்றம் வைப்பின் (சீவக.204).

கொற்றமாது பெ. வெற்றித்திருமகள். தரையெலாம் பொடிபடப் போர்புரியும் அசரனைச் சாடிய கொற்றமாதை (கமலா.அம்.பிள்.11).

கொற்றமுரசு பெ. அரசாங்கத்திற்குரிய வெற்றி முரசு. கொற்ற முரசிற் கோடணை கொட்டி (பெருங். 2,11,186).

கொற்றலம் (கொல்+தலம்) பெ. போர்க்களம். கொற்ற லம்பெறு (கலிங்கத்துப்.137).

கொற்றவஞ்சி பெ. (புறப்.) கரையில் மோதி மீளும் அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட உலகத்தவர் தன்னை வணங்குமாறு படைக்கலங்களைச் செயற்படுத்திய அரசனை வழுத்துதல். மறிதிரை உலகம் வணங்க எஃகு உயர்த்த குரிசிரை வழுத்திய கொற்றவஞ்சியும் (இலக்.வி.606). 2.(புறப்.) பகைவரை வாளோச்சி அழித்த அரசனது புகழைப் பெருக வுரைக்கும் புறத்துறை. கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி (புற.வெண்.சூ.3,3). இறையை வழுத்து கொற்ற வஞ்சி (சுவாமிநா.132).

கொற்றவளை பெ. 1.(புறப்.) பகைவர் நாடு கெடுவதற்கு வருந்துவதைக் கூறுமுகத்தான் அரசன் புகழைச் சொல்லும் புறத்துறை. குற்றமில் சிறப்பிற் கொற்ற வள்ளை (புற.வெண்.சூ.3,4). வேந்தனைப் புகழ்ந்து வேற்று நாட்டு அழிபு கூர்ந்தமைக்கு இரங்கிய கொற்ற வள்ளையும் (இலக்.வி.606). கொல்லிறையைப் புகழ்ந்துபிற நாடு அழிபுக்கு இரங்கு கொற்ற வள்ளை (சுவாமிநா.132). 2.பகைவர் நாடழிகை. (திவா.) 3.தோற்ற அரசன் அளிக்கும் திறை. குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும் (தொல்.பொ.65).

கொற்றவன்[1] பெ. 1.அரசன். ஊர்கொண்ட வுயர் கொற்றவ (மதுரைக்.88). கோத்தெரிழி லாவரோடு கொற்றவன் கோடி (சிலப்.11,60). கோல்வளை வுறாமற் காக்குங் கொற்றவ னெடிய னேனும் (சூளா.243). குருநாட்டுக் கொற்றவன் தருமன் (பாரத வெண்.125,7 உரை). கொற்றவன் அநபா யன்பொற் குடைநிழற் குளிர்வ தென்றால் (பெரியபு.நாட்டுச்.35). மாநுடர் ராணோரி யார்க்குங் கொற்றவ (பகவற்.16,16). கொற்ற வர்க்கு அடிமையின்மை (தண்டலை.சத.60). கூன்பிறை எயிற்று மாபோல் கொற்றவர் இருவர் ... அரிது அமரின் நேர்ந்தார் (தேம்பா.2,4,39). கொலை ஆர் அயிற் படைக் கொற்றவ (கபிலை.கோவை 22). கொற்றவன் புதல்வன் என்னுயிர்த் தலைவன் (மேகநா.3,22). 2.வெற்றியுடையவன். அடுபோர்க் கொற்றவ (புறிற்றுப்.55,2). தீங்கிற் புகச்செற்ற கொற்றவன் (திருக்கோவை 13). 3.இறைவன். கூன்முக மதியணிந்த கொற்றவன் கைலைக் குன்றம் (பிரபுலீலை 2,3). 4.வெற்றி பொருந்திய தலைவன். குனிதரு திண்சிலைக் கோடுசென் றான்சுடர்க் கொற்றவனே (திருக்கோவை 98). திருவீழி மிழலைவீற் றிருந்த கொற்றவன் (சேந்.திருவிசை.1,2). கொற்றவன் தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா (திருவர.கலம்.58,1). கொற்றவரைக் காய் வெண்யிலா (கண்ண.திரை.பா.2,190).

கொற்றவன்[2] பெ. முடக்கொற்றான். (மலை அக.)

கொற்றவாயில் பெ. ஆசாரவாசல், நுழைவு மண்டபம். கோப்புக வமைத்த கொற்ற வாயிலும் (பெருங்.4,3,32). மோதுந் தனிக்கொற்ற வாயிலாய் மூதண்ட முழுதும் பரந்த சீர்த்தி முருகுமழ் தருகமலை வருவைத்ய நாதகுரு (பெருந்.1713).

கொற்றவி பெ. 1.அரசி. கொற்றவி மகனை நோக்கிக் கூறினள் (சீவக.2609). 2.தலைவி.(இலக்.சொ.அக.)

கொற்றவுழிஞை பெ. (புறப்.) பகைவர் பதியைக் கைக்கொள்ளுதற்பொருட்டு அரசன் படையெடுத்துச் செல்லுதலைக் கூறும் புறத்துறை. (புற.வெண்.6,5).

கொற்றவை[1] பெ. 1.(வெற்றிக்குரியவள்) துர்க்கை. வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ (முருகு.258). முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சி (பெருங்.2,2,31). வரித்த கொற்றவை மலர்க்கை பற்றின வலத் திருக்கை பலவே (இரணியவதைப்.519). கூளிமலிபடைக் கொற்றவை (புற.வெண்.20). கொற்றவையேல் மற்றை யருகி வளை வைத்திலனே (கு.சோ.உலா 587). கொற்றவை ஆடுறு கோநகர் (கந்தபு.4,6,68). பெற்றமூர் கடவுள ... கொற்றவை ... விடுத்துப்பின்னு ரைப்பான் (ஞான.உபதேசகா.2250). திருமகள் கலைமகள் போற்றும் குடிலைத் தெய்வம் நீ (கருமாரி.பிள்.2,5). செற்றவர் செங்குருதி யாடற்கு வாள் சேர்ந்த கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொல் (பெருந். 498). தண்டு வில்வாள் ... கொள்ளவை செல்வி (சென்னிமலை.ஆற்றுப்.172). 2.காளி. கொடுத்த சிரம் கொற்றவையை (கலிங்கத்துப்.111). கொற்றவை தனக்குக் கொற்றவர் எறியும் (பன்னிருபா.208). குருதிப் புனலுக் கதுகொற் றவை யுண்ட தென்ன (திருவிளை. பு.5,33). கொற்றவை பின்னங்கூறும் (திருவாலங்.பு. நிருத்த.33).

கொற்றவை[2] பெ. (இசையி.) தேனுகா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.114)

கொற்றவைசீர் பெ. (புறப்.) வெற்றியைத் தந்த கொற்றவை என்ற தெய்வத்தின் சிறப்புக்கூறும் புறத் துறை. துடிநிலை கொற்றவை சீர் (சுவாமிநா.130).

கொற்றவைநிலை பெ. (புறப்.) வெற்றி தந்தன் பொருட்டுத் துர்க்கா தேவிக்குபலியிட்டு வழிபடுதலைப் பற்றிக் கூறும் புறத்துறை. மறங்கடை கூட்டிய ... சிறந்த கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே (தொல்.பொ.62). கொற்றவை நிலையே வெறியாட் டுளப்பட (புற.வெண்.சூ.1,7).

கொற்றவைமாலை பெ. (இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கொற்றள-த்தல் 12வி. கூலியாக அளத்தல். சைவப் புலவனுக்குக் கொற்றளந்த மாடக்கொடி நகரும் (ஏகாம். உலா 245).

கொற்றன் பெ. 1.கொத்தன். (நன்.130 மயிலை.) 2.குருடன். (தொல்.சொல்.34 சேனா.)

கொற்றாள் பெ. கல்மண்களில் வேலை செய்பவ-ன்-ள். என்போலத் திருந்து கொற்றாள் கிடையாது (திருவால வா.பு.30,11).

கொற்றான் பெ. 1.இலையற்ற கொடிவகை. (செ.ப.அக.) 2.→கொற்றவன்[2]. (சித்.பரி.அக.ப.85)

கொற்றி[1] பெ. பசுவின் இளங்கன்று. இளங்கொற்றி நற்பசுவே உன்னுஞ்சிவன் ... இலைபவமே (ஞான. உபதேசகா.616). அப்பும் கொற்றியும் கொங்கும் (அறு.இலக்.137). இளங்கன்று கொற்றி என்றியம் பப்படுமே (அபி.மாலை 588).

கொற்றி[2] பெ. 1.துர்க்கை, கொற்றவை. பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு (கலித்.84,8). பழைய கொற்றி இனம் இயம்புதலும் குறள்கள் பிடித்து இறக்கினவே (இரணியவதைப்.664). வீரமடந்தை அம்மை ... கொற்றி ... எனவரும் (தொல்.எழுத்து.30 நச்). பழைய பார்வதி கொற்றி (திருப்பு.153). யாமனை ... கார்த்திகை கொற்றி (அருணா.வேல்விருத்.2,4). திறற் கொற்றியை வணங்கிக் கொட்டில் ஈழரும் (திருவாமாத்.பு.பூர்வ.1,24). கொற்றிக்கிசைத்த புயத்தார் (திருவெங்.கோவை 67). கோவிநதர் திருவடிகள் சேவிக்கும்படி வந்த கொற்றியாரே (தில்.கலம்.56). கொற்றிக்குள படையும் புகழ் கோரர்சமர் வீரா (வேலூர்ப்பு.2,2). வருணனைக் கொற்றியை வணங்குநர் தாமே (அறு.இலக்.62 பொருள்.). 2.ஒரு வகை வரிக்கூத்து. (சிலப்.3,13 உரை) 3.ஓர்பிசாசம். (யாழ்.அக.)

கொற்றி[3] பெ. (இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத் தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இராக.)

கொற்றிக்கோரை பெ. கோரை வகை. (செ.ப.அக.)

கொற்றியம்மை பெ. →கொற்றியார்-1. (குரும.ஆறா. 254)

கொற்றியார் பெ. 1.துளசி மாலை முதலிய சின்னங் களை யணிந்து திருமாலடியராய்த் திரியும் பெண் துறவிகள். கோவிந்தர் திருவடிகள் சேவிக்கும்படி வந்த கொற்றியாரே (தில்.கலம்.56). தாசிரிச்சி கச்சிமறுகுலவு துளவ மணக்கொற்றியாரே (கச்சிக்கலம்.82). 2.ஒரு கலம்பகவுறுப்பு. (செ.ப.அக.) 3.பிள்ளை பேற்றின் அதி தேவதை. (இலங்.வ.)

கொற்றியாரைவழிவிடு-தல் 6வி. மகப்பேறு பெற்ற ஐந்தாம் நாள் பிள்ளைப்பேற்றின் அதிதேவதையை வழியனுப்பும் பாவனையாகப் மகப்பேறு பெற்ற பெண் படுத்திருந்த பாயுடன் அவள் கொண்ட உணவின் ஒவ்வொரு வகையிலும் சிறிது எடுத்துக் கொள்ளச் சொல்லி மருத்துவச்சியை ஊருக்குப் புறத்தே போகச்செய்தல். (இலங்.வ.)

கொற்றிலக்கை பெ. 1.ஒரு பழைய வரி. அதிகாரிபேறு ... ஓலை எழுத்துவத்தனை அவதரவத்தனை அதிகாரி பேருன கொற்றிலக்கை (தெ.இ.க.17,532). 2.சோறும் தங்கும் இடமும். (சாச.அக.)

கொற்றிலம் பெ. எவ்விதமான ஊதியம் இன்மை. (கலிங்கத்துப்.137 உரை)

கொற்று[1] பெ. உணவு. (சாச.அக.)

கொற்று[2] பெ. 1.கொற்றுவேலை. கொற்றுள விவரில் (திருவாலவா.பு.30,23). கோயிலுக்குப் படைப்பது சம்மந்தப்பட்ட ... இலக்கைக்கும் கொற்றுக்கும் சேர்க்கச் சியன் கமுகுதிருநற்ற வணக்குடிகள் பெற்று வருகிற படியே (தெ.இ.க.8,53). 2.ஒரு தொழிலுக் கமைந்த பலர் சேர்ந்த குழு. திரு நந்தவனத்துக்கும் திருநந்த வனப்புறமாக கொற்றுக்கும் விலை கொண்ட நிலம் (கல்.கலைச்.அக.ப.159). 3.கொத்தன். (நாட்.வ.) 4.ஒரு கொத்தன் செய்யும் வேலையளவு. இந்த சுவர் கட்ட எத்தனை கொற்றுச் செல்லும் (முன்.). 5.கூலி. கரும்புஞ்செந்நெல் காடுந் துணிந்திட்ட கைவினை யாளர் கவருங்கொற்று (அம்.கோவை 115).

கொற்று[3]**-தல்** 5வி. 1.கோதுதல். (யாழ்.அக.) 2.கொத்தல். (முன்.)

கொற்றுறை பெ. கொல்லன் பட்டடை. கொற்றுறைக் குற்றில (புறநா.95). கொற்றுறை வாய்த்த கொலை வேலோர் (பெருந்.465).

கொற்றை பெ. கொத்தை, ஈனம். பிரேமத்துக்குக் கொற்றையாகையாலே (பெரியாழ்.தி.2,4,1 வியாக்.).

கொற்றையார் பெ. கொற்றவன்குடி. (திருத்தொண். சத.1)

கொற்றொழில் (கொல் + தொழில்) பெ. கொல்லுதல் தொழில். கொற்றொழிலிலே அடிப்பட்டு (சீவக.435 உரைக்குறிப்பு).

கொறக்காளி பெ. தீங்கு செய்பவன், ஏமாற்றுபவன். (திருநெல்.வ.)

கொறகொறெனல் பெ. 1.தொண்டையின் கரகரப்புக் குறிப்பு. (செ.ப.அக.) 2.ஈரடுக்கொலிக்குறிப்பு. (யாழ். அக.)

கொறட்டை பெ. ஒருவகைச் செடி. (வைத்.விரி.அக. ப.119)

கொறடர் பெ. →கொறடா. (யாழ்.அக.)

கொறடா பெ. குதிரைச் சவுக்கு. (செ.ப.அக.)

கொறடு பெ. ஒருவகைப் பிடிப்புக்கருவி. கொல்லங் கொறட்டாலே பல்லப் புடுங்கி (கொங்கு நா.பா.2 ப.96).

கொறவன் பெ. குற இனத்தைச் சேர்ந்தவன். குள்ளநரி மாட்டிக்கிட்டா கொறவனுக்குச் சொந்தம் (பட்.கல்.பா. ப.127).

கொறவாளவன் பெ. பயிருக்குத் தீங்கு விளைவிக்கும் புழு.(இலங்.வ.)

கொறளி பெ. அற்பக் குணமுள்ள பெண். (திருநெல்.வ.)

கொறான் பெ. முகமதியர்களின் வேத நூலாகிய குரான். அப்துல் சலில் கச்சேரியிலிருந்தவன் தன் தலைப்பாய், நீமா கத்தி உக்கா செபமாலை கொறன் எல்லாம் வைத்துவிட்டுக் கோவணச் சிலையுடனே (ஆனந்த.தினசரிச்.3 ப.63).

கொறி[1] பெ. 1.ஆடு. கொறியினவுணர்தம் வெள்ளங்கள் ... கொன்றதிலோ (திருவரங்.மாலை 32). கொறி என்பதுவே ஆடெனலாகும் (அக.நி.கொமுதல் 7). கொல் அரி எதிர்ப்பக் கையால் கொறி என வகிர்ந்து கொல்வான் (தேம்பா.2,5,16). கொறியாகிப் பரியாகி (இலக்.பத்தாம்.காப்பு). 2.செம்மறிஆடு. (ஆசி.நி. 113) 3.மேடவிராசி. அருணம் கொறிமறி மேடம் (உரி.நி.28). மேடம் ... ஆடு உதள்தகர் கொறி ஆகுமென்ப (அபி.மாலை 73).

கொறி[2] பெ. (இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய. இரா.ப.152)

கொறி[3] பெ. கண்ணேறு. நான் சாப்பிடுவதைப்பார்த்து கொறிபோட்டு விடாதோ (மதுரை.வ.).

கொறி[4]**-த்தல்** 11வி. 1.சிறிது சிறிதாகப் பொறுக்கி உண்ணுதல். உடுத்திரள் பொரியிற் கொறிப்ப (கல்லா. முருகன்துதி). 2.கடித்துண்ணுதல். கொத்திக் கொறிக்குஞ் சித்திரச் சரணப்படைச் சேவற்கொடியோன் (திருச்செந்.கலம்.11). கொத்திக் கொறித்துனையும் (திரு.முரு.பிள்.பா.67). 3.பல்லாலும் அலகாலும் தானியத்தைப் பிரித்துத் தின்னுதல். வனிதையர் உணக்கு நெற்கண்டது கொறிக்க வருங்கோழி (ஞான.உபதேசகா.1180). நிறந்தழை தினைகள் கொறிப்ப முன் தூவி நெடுஞ்சிறை மஞ்ஞைபைங் கிளிகள் (கச்சி.காஞ்சிப்பு.இருபத்.95). நெல்லைக் கொறிக்க நின்னலாகுமோ (மலரும்.617). கொறிப்ப வுணக்கும் பாறைமிசை (திருக்கதிர.பிள்.24). 4.விட்டு விட்டு ஒலித்தல், அலப்புதல். (இலங்.வ.)

கொறித்தலை பெ. நிலவேம்பு. (யாழ்.அக.)

கொறித்துப்பார்-த்தல் 11வி. 1.குத்துதற்குத் தக்கபடி காய்ந்துள்ளதா என்பதை அறியப் புழுங்கல் நெல்லை வாயிலிட்டுப் பதம்பார்த்தல். (வின்.அக.) 2.அகங் காரங்கொண்டு வெறித்துப் பார்த்தல். (முன்.)

கொறிதலை பெ. →கொறித்தலை. (மலை அக.)

கொறிதொடு-தல் 6வி. கண்ணேறுகழித்தல். கொறி தொட்டதிற்கப்புறந் தான் என் வயிற்றுவலி நின்றது (மதுரை வ.).

கொறிப்பான் பெ. கடி. (இலங்.வ.)

கொறிபோடு-தல் 6வி. ஆசையால் வயிற்றெரிச்சல் கொள்ளுதல். நீதின்னும் பண்டத்தை எனக்குத்தரா விட்டால் கொறிபோடுவேன் (நாட்.வ.).

கொறு பெ. கன்று பாலூட்டாதபடி முகத்திற்கட்டும் வாய்ப்பூட்டு. (இலங்.வ.)

கொறுக்கங்கி பெ. நாணல். (வைத்.விரி.அக.ப.119)

கொறுக்கச்சி பெ. →கொறுக்கை[2]-1. (குறிஞ்சிப்.68 உரை)

கொறுக்கல் பெ. →கொறுக்கை[2]-1. (நாட்.வ.)

கொறுக்கா பெ. →கொறுக்காய்ப்புளி. (மலை அக.)

கொறுக்காப்புளி (கொடுக்காய்ப்புளி) பெ. ஓர்புளி. (யாழ்.அக.)

கொறுக்காய் பெ. →கொடுக்காய்ப்புளி. (செ.ப.அக.)

கொறுக்காய்ப்புளி பெ. 1.கொறுக்காப்புளி. (முன்.) 2.ஈழப்புளி. (முன்.)

கொறுக்கு பெ. இலிங்கவிரணம். (நாட்.வ.)

கொறுக்குவலி பெ. குரக்குவலி, கை கால்களில் வரும் ஒருவகை வலிப்பு. (வின்.அக.)

கொறுக்கை[1] பெ. 1.குறட்டை, மூச்சு. (பிங்.2052) 2.உயிர்ப்பு. சுவாதம் ... கொறுக்கை (அபி.மாலை 486). 3.சுக்கிலம் புறம் போகாமல் தடுத்தல். அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே (திருமந்.346).

கொறுக்கை[2] பெ. 1.நாணல் வகை. (மலை அக.) 2.கடல் மீன்வகை. (செ.ப.அக.) 3.→கொறுக்கு. (முன்.)

கொறுக்கச்சி பெ. →கொறுக்கைச்சி. (பிங்.2993)

கொறுக்கைச்சி பெ. →கொறுக்கை[2]-1. (யாழ்.அக.)

கொறுக்கைபேணி பெ. பேய்ப்பாற்சோற்றி. (சித்.பரி. அக.ப.86)

கொறுகொறு-த்தல் 11வி. 1.கோபங்காட்டுதல். இட்டிடை கோறுநாங்க ளெனக் கொறுகொறுப்ப (சீவக.2040). 2.கருகருத்தல். (யாழ்.அக.) 3.குறட்டை விடுதல். (முன்.)

கொறுகொறுப்பு பெ. 1.அலட்டுகை. (முன்.) 2.குறட்டை. (முன்.)

கொறுகொறுவெனல் பெ. 1.ஈரடுக்கு ஒலிக்குறிப்பு. பாற்கடல் கொறுகொறுவென்ன (தணிகைப்பு.நாக மருள்.3). 2.கோபக்குறிப்பு. (செ.ப.அக.)

கொறுகொறெனல் பெ. ஈரடுக்கொலிக்குறிப்பு. (யாழ்.அக.)

கொறுங்கோல் பெ. →கொறு. முன்னணைக் கன்று பசுக்களோடே போனால் மூலையுண்ணாமைக்குக் கொறுக் கோலென்று அதின் மூஞ்சியிலே கட்டி விடுவர்கள் (திருவாய்.4,8,4 ஈடு).

கொறுடு பெ. கன்னம். பெரிய பெருமாள் கொறுட்டை மோந்து பார்த்தால் ... நாறா நிற்கும் (அம்.10 பெரி. ப.105).

கொறுவாய் பெ. உடைந்த விளிம்பு. (செ.ப.அக.அனு.)

கொறை பெ. பயிரிடப்படாமல் கிடக்கும் தரிசு நிலம். பண்டாரந்தான் காரைக் கொறை முருகையா... நீ மரமாய் நின்றாய் (கொங்கு நா.பா.2 ப.19).

கொன் பெ. 1.பயன் இன்மை. உயங்கும் நின் ஒளி எனக்கொன்னும் சிவப்போள் (அகநா.60). மின்நேர் இடையார் சொல்தேறான் விழைவு ஓரான் கொன்னே வெகுளான் (ஏலாதி 20). எவ்வளையோ கொன்னே யுதிர்வன போல வுள (திணைமொழி.18) கொன் மனசில் எள்ளளவு நீக்கும்மதி (திருவலங்.கலியியல்.155). கொன் ஒளித்திறத்தில் நின்ற குணங்கு இனம் (தேம்பா.2,10,14). கொன் குறியாய்க் குறிக்கும் (சங்கர. கோவை 191). 2.வீண். கொன் அலர் தூற்றும் தன் கொடுமை யானே (குறுந்.320). கொன்னே கடவுதி (ஐங்.366). பெரிது கொன் ஒன்று மருண்டனென் (பதிற்றுப்.32.9). கொன்னே கழிந்தற்று இளமையும் (நாலடி.55). கொன்னே வெகுளி பெருக்கலும் (திரிகடு. 38). கொன்னே குறமாதல் குமூஉவர (திருச்செந். பு.289). கொன்னே சுமந்தெய்ப்ப தென்னே (சங்கர. கோவை 282). கூர்மை கொன்னுனை அழுந்தி வெங்குருதி பீறிட (இரட்சரி.327). புன் பஞ்சி முன்றிலுள கொன் கிற்றிலுள்ளதுமாங்கொல் (பாரிகாதை 535). பகுதி கொன் நாளும் கலம் செலுத்தி (இராவண காவி.1,5,6). 3.காரணம் இன்மை. துய்க்கும் இந்நுகர்வு கொன்னே வைத்தன சாவ (சிவப்பிர.விசா.145). வீண் கொன்னே குலையேல் குலையேல் குழைவு ஏன் (தேம்பா.1,5,67). 4.பெருமை. கொன் ஊர் துஞ்சினும் யாம் துஞ்சலமே (குறுந்.138). கொன் இனம் பருதியும் குறு முயலின் குருதியும் (சீவக.173). கொன்னவில் வேலவன் குலத்துட் டொன்றினால் (சூளா.401). கொன்னவின்ற மூவிலைவேற் கூர்மழுவாட் படையன் (தேவா.1,51,6). கொன்னகு தமிழாற் சொன்ன குருபர தத்துவத்தில் (திருவாமாத்.பு.பூர்வ.12,27). கொன்மலி தாரை யன்றிக் குளிர்மழைத் தாரை போலும் (திருக்குற்றா. பு.16,9). கொன்னாருங் கார்க்குருவிக்கு அருள் புரிந்த (கயற்.மாலை 40). மாதுரைக் கொன் துவர் அம்மேனி வைத்தவ (பழமலை.அந்.43). கொன்புனைவேல் கையா (திருப்போரூர்.மாலை 29). தம் உருக் கொன்புனற் றோன்றலும் (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.8). 5.அச்சம். கொன் முனை யிரவூர் போல (குறுந்.91). விடியற்காலம் கொன்னிளம் பரிதி (சீவக.173). கொன்ன கர்க் காவற்றுடி (அம்.கோவை 241). தென் மாறை வெற்பர் கொன்பதி வேல்வலங் கொண்டுவந் தால் ... ஊரை யெழுப்பும் ... புள்ளினமே (தஞ்.கோவை 208). கொன்னுறற் கொற்ற வடிவேல் அரக்கர் (செ.பாகவத.4,3,892). வெகுண்டோருச் கெல்லாம் கொன்பூத்த வேல் (குலோத். கோவை 1). கொன் வார் கணைகளும் (கோடீச். கோவை 32). கொன்னுறு கணிச்சிச் செங்கைக் கூற்றினூர் புகுந்தொ ளித்தான் (மருத.பு.43,5). கொன்னுற வளர்ந்தனன் (சிவஞா.காஞ்சிப்பு.அபிரா. 6). கொன் வேற் பெருந் தோட் குலபேள் (பாரிகாதை 537). 6.அழகு. கொன்ச மைந்த குருபர தத்துவம் (திரு வாமாத்.பு. உத்தர.9,1). கொன் கலப் சிகியாய குரகத்தில் (குன்றக். முருக.கலம்.42). 7.பொழுது. பொழுது செல்வி ... கொன் (அபி.மாலை 118). 8.விடியற்காலம். கொன்னிளம் பரிதி (சீவக.173).

கொன்டித்தனம் பெ. அடங்காத்தன்மை. (நாட்.வ.)

கொன்முனை பெ. கொல்லன் உலைக்களம். கொன்முனைபோல் வினைநீங்கக் குளிர் நிழற்கண் மகிழ்ந்தனிர் போல் (பெருந்.166)

கொன்றார் பெ. மறந்தவர். செய்ந் நன்றி கொன்றாரிற் குற்றம் உடைத்து (நாலடி.111).

கொன்றான் பெ. வாழை. (சித்.பரி.அக.ப.86)

கொன்றுண்(ணு)-தல் 7வி. பிறவுயிர்களை அழித்து உண்ணுதல். கொன்றுணல் அஞ்சாக் கொடுவினை (பரிபா.5,6).

கொன்றுபோடு-தல் 6வி. உயிரை அழித்தல். வேறு அநேகரையும் அனுப்பினான் அவர்களில் சிலரை அடித்து, சிலரைக் கொன்று போட்டார்கள் (விவிலி. மாற்கு 12,5).

கொன்றை பெ. 1.சரக்கொன்றை. பொலனணி கொன்றையும் (ஐங்.435). செறிந்த பொன்னிதழ்ப் பைந்தார்க் கொன்றையஞ் செல்வதற்கு (சீவக.1563). கார் தளிர்த்த கானக் கொன்றையின் (நந்திக்கலம். 23). சடைமேல்அக் கொன்றை தருகனிகள் போந்து (காரைக்.அந்.50). வன்னி கொன்றை வாழை சண்பகம் (பெரியபு.5,94). கொன்றை காயா மன்றலங் குருந்தம் (நம்பியகப்.22). கொன்றை மலர் பிரணவ வடிவ மாதலின் மா என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது (தஞ்.பெரு.உலா 7,8 உரை). கள் அவிழும் பூங்கொன் றைக் கண்ணியான் (தாயுமா.பா.28,45). கொன்றை காயா ... முல்லைக் கருப்பொருளே (இலக்.வி.390). கொன்றை காயா குருந்தம் முல்லை (முத்து வீ.804). 2.செங்கொன்றை. (செ.ப.அக.) 3.மஞ்சள் கொன்றை. (முன்.) 4.ஒருவகை மலர். வண்டம ரும்மலர்க் கொன்றைமாலை (தேவா.1,5,10). கமழ் கொன்றை துன்றும் அலங்கலைச் சூழ்ந்தசிற் றம்பலத் தான் (திருக்கோவை 24). கையிற் கொன்றையும் (நந்திக்கலம். 1,2). கொன்றைப் பொதும்பர் (காரைக்.இரட்.மாலை 3).

இளங்கொன்றை கொந்து தொடாதே (கு.சோ.உலா 323). மட்டுண்ட கொன்றை அரன் மலர் மேலோன் (திருவர.கலம்.98,4). கண்ணி கார் நறுங் கொன்றை (தொல்.சொல்.455 நச்.). கொந்தேறு கொன்றைய ராரூர்த் தியாகர் (திருவாரூர்க்கோவை 7). பைங் கொன்றையு மத்தமுன் சூழ்சடையின் (திரிசிரா. அந்.94). செல்வச் செழுமலர் கொன்றை திரட்டி (பாரதிதா.19,4 அக.கவி.3). 5.ஒருவகைப் பழம். கோவலர் கூறு கொண்டெழு கொன்றையந் தீங்குழல் (சூளா.14). 6.(இசையி.) ஓர் பண். உந்த வாக்குநீங் கொன்றை மீன் பாடரவத் தீங்கொன்றை மாற்றத் தேக்கு வேய் (இரகுவம்.நாட்டுப்.61). 7.வண்டினம். புரளும் கொன்றையந் தொடையார் (திருவாமாத்.கலம்.5). 8.பசலை நிறம். கொங்கைக்குத் தேமலர்க் கொன்றை நிறம் பணித்தான் (சேர.பொன்.அந்.49).

கொன்றைக்குழல் பெ. முதிர்ந்த கொன்றைக் காயைத் துளைத்து ஆக்கிய குழல். கொன்றைக் குழல் பூங்குழலி செவிக் காகாதே (முக்.பள்.46,4).

கொன்றைச்சடையான் பெ. →கொன்றையன். தார்கொண்ட கொன்றைச் சடையான் குமாரன் தலத்துட ரியான் (சென்னிமலை.ஆற்றுப்.காப்பு.).

கொன்றைகூடி[1] பெ. 1.→கொன்றையன். (திவா.) 2.சிவகரந்தை. (சித்.பரி.அக.ப.86)

கொன்றைகூடி[2] பெ. (இசையி.) தேனுகா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.114)

கொன்றைப்பழக்குழல் பெ. →கொன்றைக்குழல். கொன்றைப்பழக்குழற் கோவலர் (சிலப்.17 பாட்டு.உரை).

கொன்றைமூலம் பெ. கொன்றை மரம். கொன்றை மூலங் குறுகியும் (குசேலோ.448).

கொன்றைமாலையன் பெ. →கொன்றையன். (பிங்.94)

கொன்றையந்தீங்குழல் பெ. →கொன்றைக்குழல். கொன்றை அம்தீங்குழல் மன்று தோறு இயம்ப (நற்.364).

கொன்றையரன் பெ. →கொன்றையன். மட்டுண்ட கொன்றையரன் மலர்மேலோன் (திருவர.கலம்.98,4).

கொன்றையன் பெ. கொன்றைமாலை சூடிய சிவன். நறுங் கொன்றையன் மூலட் டானம் சூழ்திரு மாளிகை வாயில்புக்கார் (பெரியபு.6,124). பூங் கொன்றையாற்கு ஒருத்தியைக் கொடுத்தான் (செ.பாகவத.730). கொன்றையனூர் மைக்காலன் ... அஞ்சு நெல்லையே (தில்.நெல்.40). பாட்டளி துதைமலர்க் கொன்றையான் (சிவஞா.காஞ்சிப்பு.அனேக.4). வரங்கள் கொன்றை யானிடம் பெற்றனன் (திருநெல்.பு.திருப்புடை.32).

கொன்றைவேணிக்குழகன் பெ.→கொன்றையன். கொன்றை வேணிக் குழகனுக்கு அன்பினால் (சிவ புண்ணிய.55).

கொன்றைவேய்ந்தன் பெ. ஔவையார் இயற்றிய கொன்றைவேய்ந்தன் என்னும் ஒரு நீதிநூல். (செ.ப.அக.)

கொன்னக்கோல் பெ. 1.(இசையி.) இசைக் கச்சேரியில் ஒருவர் தம் வாயினாலும் தசைநார் களின் அசைப்பினாலும் செய்யும் தாள ஒலி. கச்சேரியில் ... கஞ்சிரா கொன்னக்கோல் ... பட்டாசு போல வெடிக்கின்றன (அம்.வ.ப.134). 2.(இசையி.) இசை யரங்கில் இசைப்பாடகரது இசையைப் போல இராகமின்றி நையாண்டியாகப்பாடுகை. (புதிய இரா.)

கொன்னம் பெ. அச்சம். கொன்னப்படைவிழி ளரிசிந்தினு முயிர் குழையா திரிதர (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய்.383).

கொன்னவாயன் பெ. திக்குவாயன். (நாட்.வ.)

கொன்னல் பெ. (மொழியி.) பேச்சுத் தொகுப்பில் ஒரு ஒலியின் உச்சரிப்பிலிருந்து மற்றொரு ஒலியின் உச்சரிப்புக்குச் செல்லும் போது ஏற்படும் இடர்ப் பாடு. (கலைச்.அக.ப 2.126)

கொன்னன் பெ. நாயுடு.(தெருக்.குழூஉக்.)

கொன்னாளன் பெ. பயனற்றவன். நம்மருளாக் கொன்னாளன் (கலித்.42,18). வடதிசையும் கொன்னாளர் சாலப் பலர் (நாலடி.243).

கொன்னி-த்தல் 11வி. பேசநாத்திரும்பாதிருத்தல். (யாழ்.அக.)

கொன்னிப்பு பெ. நோய்வகை. (செ.ப.அக.அனு.)

கொன்னு-தல் 5வி. 1.குழறுதல். ஒன்னார்கள் வாய் கொன்ன (தனிப்பா.திர.38 நாகூர்முத்து). கொன்னும் இம்மயக் கெவ்விடைப் பெற்றனை (சிவஞா.காஞ்சிப்பு. சார்ந்தா.15). 2.திக்கிப்பேசுதல். (செ.ப.அக.)

கொன்னெச்சன் பெ. மாட்டின் உடலில் பற்றும் ஈ வகை. (இலங்.வ.)

கொன்னை[1] பெ. 1.பயம். கொன்னையே வினை வெவ்விடம் ஒழிப்பதும் (நாய்ச்சி.தோத்திரப்.26). 2.இகழ்ச்சி. தாசியாகிக் கொன்னை யுற்றிடுதி (அகோர. வேதார.பு.சேடன்.7).

கொன்னை[2] பெ. 1.கருகிய வெற்றிலைக்கட்டு. கொன்னைப்பேர் மெல்லிலை கருகலா கடில்மே (நீரரர்நி.3,26). தட்டத்திலை கொன்னை இருக்கு (இலங்.வ.). 2.தொன்னை. (நாட்.வ.)

கொன்னை[3] பெ. 1.தெற்றுவாய். கொன்னையன் பேசினால் என்ன தெரியும் (நாஞ்.வ.). 2.குழறுகை, திருத்தமற்ற பேச்சு. (யாழ்.அக.)

கொன்னை[4] பெ. →கொன்னன். (தெருக்.குழூஉக்.)

கொன்னைத்தெங்கு பெ. காய்க்காத தெங்கு. (செ.ப. அக.அனு.)

கொனை பெ. நுனி. பிரம்பின் கொனையால் (திருவரங். மாலை 89).

கொன்னைவாய் பெ. தீக்குவாய். அங்கே கொன்னை வாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து அவர்(இயேசு) தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள் (விவிலி.மாற்கு 7.32).

கொன இ.சொ. அச்சப் பொருண்மை தரும் ஓர் இடைச் சொல். கொன்முனை யிரவூர் போல (தொல்.சொல்.254 சேனா.).

கொனட்டு²-தல் 5வி. மூழ்கச் செய்தல். கொங்கைக்குள் என்னை வைத்துக் கொனட்டித்தால் உன்றனக்கு (பழனி. காதல் 180).

கொனட்டு¹ பெ. கோமாளித்தனம். (வட்.சொ.வி.ப.121)

கொனட்டை பெ. துடுக்குத்தனம். (பிரா.வழ.கி.மொழி.174)

கொனை பெ. நுனி. பிரம்பின் கொனைபடலால் (அட்டப். திவரங்.மா.89).

கோ

கோ¹ 'க்' எனும் மெய் யெழுத்தும் 'ஓ' எனும் உயிர் நெடிலும் இணைந்த கூட்டுச் சொல், க் + ஓ = கோ.

கோ² பெ. 1.தலைமை. கோநகர் சீறினேன் குற்றமிலேன் (சிலப்.21,421). ஐவர் வந்து கோச்செய்து குமைக்க (தேவா.4,69,6). வண் டமிழ்பாடிக் கும்பிடும்ஆ தரவுடன்அக் கோநகரில் இனிதமர்ந்தார் (பெரியபு. 28,326). பரமேசன் ஏ ஆர்கட் கோ கவுரி நன் மாயோன் இடம்தின் (ஞான.உபதேசகா.125). கோவா மணிசேர் குருகையே (குருகை.64). கோமேவிக் காக்கும் சரவணத்தான் (குமரே.சத.காப்பு). 2.தலைவன். இருவருங் கோவென் றிகல (திருமந்.362). கோவினை யன்றி யெந்நாக் கோதையர்க் கூறலுண்டே (சீவக. 3098). செங்கோல னுங்கோ (புற.வெண்.238). நாதன் கொம்பொசித்த கோ (இரண்டாம்.திருவந்.68). வானவர் கோ ஐ சங்கக் குறியால் நைவித்த திருவரங்க ஈசன் (திருவரங்.அந்.97). கண்மணியே யுன்றனக் கென் கோவிடத்திற் போயிருக்கக் கூடுமோ (திரு இலஞ்சி. உலா 246). கோ ஆம் வில்லி (மதுரைக்கலம்.65). கோமுனிவர் கொண்டாடும் (கூளப்ப.காதல் 5). குன்றி விழிக்குயில் காளுயி ரன்னவெங் கோவினைக் கண்டனிரோ (பாமணிக்கோவை 16,1,7). மடவாட்கோர் கூறை யுவந்தளித்த கோவே (திருவருட்பா 1962,160). 3.சக்கரவர்த்தி. கோக்கண்ட மன்னர் குரைகடற் புக்கிலர் (தமிழ் நா.126). 4.அரசன். எம்கோ வாழிய (புறநா. 9,8). தாவாக்குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோ உயரும் (சிறுபஞ்.44). அரசன் வாழ்க எங்கோ (சிலப்.11,15). குலநலமிகு செய்கைக் கோவொடொப் பார்கள் வாழும் (கூளா.572). ஒன்று ஆகி மீண்டு பலவாகி நிற்கின்றான் குன்றாத சீர்க்கயிரைக் கோ (நக்.அந்.67). தங்கோவின் முன் வைத்தார் தாழ்ந்து (நள.25). மாமன்னன் திரைகடற்கோவென (திருப்பு.164). கோ நந்தன் மைந்தனை நான்முகன் (திருவர.கலம்.15,3). கொட்புறுத் தலைத்தது பறவைக் கோவினை (சிவஞா.காஞ்சிப்பு. தழுவ.89). புலையோ களவோ கொலையோ புரிந்தார் குற்றம் என்ன கோவே (கா.கடமை.ப.56). 5.இறைவன், கடவுள். பூவுலகம் எங்குநிழல் போக்கி ... ஓம்புங் கோவதென நின்றது ... குன்றம் (கந்தபு.6,14,195). குலவும் அவ்வருகன் எம் கோவே (பிரபோத.33,3) கல் ஆல் அடிக்கீழ் வைகும் கோ (தாயுமா.பா.27,35). கோயில் அன்புடையாள் (திருக்காவ.கலம்.78). 6.பெருமை. கோக்குல மன்னர் (இராமானுச.நூற்றந். 56). வான் கோ உலகு இஞ்சி சூழ்த்த குவளை நீள் அகழித் தோற்றம் (தேம்பா.1,2,8). செஞ்சி-கோ செய்து கொள் (பிரா.வ.). 7.பெருமையிற் சிறந்தோன். கடம்பு அணி கோ (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.348). 8.சிறப்பு. ஒண்டாரைக் கோமாலை வேலான் (நள.155). 9.தகப்பன். நின்கோ வரினு மிங்கே வருக (கலித்.116). 10.கணவன். தருமற்கும் தம்பிக்கும் தாமரையாள் கோக்கும் (பெருந்.பாரதம் 354). 11.மலை. கோமருவு தோள் எவ்வுள் வீரராகவ மாயன் திருவெவ்வுள் (பதிற்று. துதி.1). கோ ... சலங்குலிச மாவரை (உரி.நி.214). கோக்க டோறு மின்வாள் வீசி (சிவப்பிர.வெங்கைக்கலம்.84). கோத்தேர் வண்டில்கள் முதலாம் ... வையம் மேற் போவார் (பாத்மோ.பு.4,205). இருகோவை ஒத்த புயத்து ஏந்தும் ... தொடையல் (ஆனந்தரங்.தனிப்பா.தீர.1). கோவேரி துன்னி விளை நாடன் (கபிலை.கோவை 23). வேலை சூழ்ந்த வியலிடத்துக் கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கி (பெருந்.889). நீர்வளம் கண்டு கோமா நிலவளம் படுக்கு மாக்கள் (இரட்சணிய.யாத்.1,4,11). 12.குசவன். மூதுர்க் கலஞ்செய்கோவே (புறநா.256,7). 13. அரசாட்சி. பளிர் ஊரிடை அரசு ஆகையில் மிகை கோ இயல் பகர்வாம் (தேம்பா.1,2,70). 14.மேன்மை. கோவிடைப் பாகனினி தெழுந்தருளி (சீகாழித்.பு.வேணு.40). 15.அழகு. நேரலர்கோவிற் கடங் காணத் தெறுரகு நாதனல் (நாணிக்.ஒருதுறைக் கோவை 246).

கோ³ பெ. 1.பசு. கோவினத்து ஆயர் (கலித்.103,37). கோத்தரு நிதியம் வாழ (சீவக.2376). கோக்குலம் மேய்ப்போன் (நம்.திரு.36). கொந்தலர்த்தார் மைந்தனை முன் கோவதைசெய் தார்க்கு (பெரியபு.நகரச்.34). பொருள் சுரக்கும் கோவை (சடகோபரந்.57). கோவின் பேர் பெறு தீர்த்தம் (சிவபுண்ணிய.54). கன்று கோவினைக் கூப்பிடுதல் போல் (சேத்திரக்.பிள்.6,6). கோக்களின் வாலினும் ... கற்றவிடத்தினும் திருமகள் இருப்பிடம் (கயிலாச.சத.26). கோவதைக்கும் பொல்லார்

குடிகேடு காண்பதன் முன் (பழனித்திரு.1,3). கோ வதைசெய்யப் பிடித்த கோளரிக்குத் தன்னுடலை ஈ வனென்றானே திலிபனென்னது மன்னன் (ஆத்தி சூடி வெண்.83). 2.எருது. கோமளக் கொடியோன் (சீகாழித். பு.தீர்த்த.19). குறிக்கும் கோவுடையானே (சிவராத்.பு.9, 25). ஒரு கோவை யேறி (இலக்.வி.907 உரை). ஒரு கோவை யேறியுயர் கோவைத் (பெருந்.2068). 3.தேவலோகம், சுவர்க்கம். கோ ... பார்சுவர்க்க மம்பு (உரி.நி.214).கோவீற் றிருந்து மகிழ்வோய்நீ (தேம்பா. 1,10,140). உயர் கோவைத்-தருகோவை (பெருந். 2068). உயர்கோவைத் தருகோவை (இலக்.வி.907). 4.ஆகாயம். மதியணியுங்கோவே (திருவாலங்.பு. தேவர்துதி.10). கோவானஞ் சுவர்க்கம் ... மேலுலகம் (உரி.நி.20). கோதண்டம் கோதண்டலில் மலையாக் கொண்டவள்ளல் (கங்கா.இரட்.மாலை 2). கோவீற்று உறைதனி நாதனைக் குறையாப் புக ழிடவும் (தேம்பா. 1,2,65). கோவுறை தாரகை நாப்பணில் ... எழும் ஒரு முழுநிலா (குமணசரித்.19). அருவானகோ எங்கும் போய் வருமாறில்லை (கலைசைச்.வெண்.158). பொரு கோவைத்தமுவு பிரம்பூர் (தனிப்பா.தீர.1). குடைவெயில் காய் கோவாய வர்க்கே குலைந்தெம்போ லாகாது,நீவா ழியரோ நிலத்து (ஞாரிகாதை 528). 5.பூமி. கோவேந்தர் தம்மை, மலர்வேய்ந்து கொள்ளும் மனம் (நள.55). கோ ... சலங்குலிசமா வரைகண்பார் (உரி.நி.24). உருக் கோவையங்கொள் கலைசைத் தியாகரை (கலைசைச். வெண்.காப்பு). கோபால நிற்கும் பின்னவர்க்கும் கூறுவல் (தேவி.மா.1,31). அம்பிகை, சீர் இலக்குமி கோ (சிவஞா.காஞ்சிப்பு.வயிர.23). 6.திசை. ஒருகோவை யாம்பாட எண் கோவை ... நீ பெரும் (ஆனந்தரங். தனிப்பா.தீர.1). வளை கோவை சாத்தி (பெருந்.2068). வான் கோ முழுது இறைஞ்சிய கொற்றக் கொற்றபன் (தேம்பா. 1,9,106). 7.1.கிரகணம். கவியாயிரம் பாடி நடித்தனித்த கோவகத்தாற்கு (சடகோபரந்.78). கோவிறை திக்குக் கிரணம் (உரி.நி.214). அனலுறு கோவினை (கச்சிக்கலம்.1). எப்பொழுதும் கோ வணத்தான் (திருக்காளத்.உலா 93). 7.2.சூரிய கிரகணம். (பிங். 212) 7.3.கோவிறை திக்குக் கிரணம். (உரி.நி.214). 8.வச்சிராயுதம். கோ ... சலங்குலிசமா வரை (உரி.நி. 214). கோ தரித்திடும் மகபதிப்பகை சொன்ன (திருக்கடல். ம.பதிற்றுப்.அந்.82). 9.அம்பு. கோ ஏந்தி அரக்கன்றனை புனிதா திருஎவ்வுள் (பதிற்றுப்.79). வெம்பகழி கோப்பல்லம் ... அம்பு (உரி.நி.142). நிழலில் வந்த கோ மான் (சமுத்திரவி.76). வில்கோ ஏற்தி அரக்கன்றனை கோறும் புனிதா திருஎவ்வுள் (பதிற்று.அந்.79 அரசு.அந்.செ.). 10.வேல். பொருகோவைத் தழுவு பிரமபூர்த் திருவேங்கட தீரன் (ஆனந்தரங்.தனிப்பா.தீர.1). 11.கண். கோலானைக் கோவழலாற் காய்ந்தார் (தேவா.5,20,7). அருள் கோ என் மிசை நோக்கே திருஎவ்வுள் (பதிற்றுப்.அந்.79 அரசு.அந். செ.). கோ ... மாவரை கண்பார் (உரி.நி.214). கோ இணையில் நீர் உகுத்தமாது (வரத,பாகவதம் 4,1). கோலோச்சும் கோ இருகோக்கள் சேப்ப (சிவராத். பு.3,57). கோ வார் நுதலினார் (கோடிச்.கோவை 111). எற்கோ வரையாகி வரலால் ஐங்கரனோர் பொற்கோபுரஞ் சேர் புலியூர் (திருப்புலி.வெண்.85). கோவினில் உலகினைத்தருதால் (கோமதி.பிள்.10). பூவுடன் வாழ் புகழ்ச் சீராசராசன் பொருப்பினும் பாற்கோவுடனே (ஒருதுறைக்கோவை 1). துன்னுகோ முகமே நாசி (தேவி மா.1,46). 12.சொல். கோமுறை வழுவாத் தூய கொற்றவன் (இரட்சணிய.யாத்.1,2,22). 13.நீர். கோமதலை நம்மால் வெலப்படான் (பெருந்.பாரதம். 633). சிதகறு கோவின் பெருக்கெனும் பெருக்கிற் சிறந்தசீர்ச் சரச்சுவதியாயும் (நாய்ச்சி.தோத்திரப்.6). கோவிறை ... கிரணஞ்சலம் (உரி.நி.214). கோவிடை அன்னம் துஞ்ச (தேம்பா. 2,6,28). வருகோவைச் சூடி (இலக்.வி.907 உரை). மங்கை எந்தன் கோவைக்காய் (கண்ண.திரை.பா.2,190). 14.இரசம். (தைலவ.) 15.ஆன்மா. கோவுணர்த் துஞ்சத் யாலே குறிவைத்து (திருமந்.2389). 16.சூரியன். (யாழ்.அக.) 17.சந்திரன். (முன்.) 18.யாகம். (இலக்.சொ.அக.) 19.இடி. (ஆசி.நி. 38) 20.புல். (வட.நி.597) 21.1.பிரகாசம். கோ வேந்தன் எழில்சேர் குனும் (திருஎவ்வுள்.பதிற்றுப்.79). 21.2.ஒளி. விண்டலம் மண்டலி கோதரித்தவனே (திருக்கடல்.ம.பதிற்று.82 அரசு.அந்.கொ.). உயர் இன்ன வாழ்பதி அதனிடை ஒயர் கோக்குடிதான் (பெரியபு.29,5). 22.மண்டல். எல்கோ வரை ஆகி வரலால் சிலேடை (இலக்.ப.283). 23.இரங்கற் குறிப்பு. பூவிலிருக்கின்றவன் கோ என ஓர் தலையைக் கொண்டிரந்தோன் (குன்றக்.முருக.கல்வி.வண்.1,2). பனிக்கால்மும் வந்தது என் செய்கோயான் (திருவிடை. கலம்.93). 24.அலை. உன் கோ வங்கம் குலாவ (சமுத்தர வி.74). 25.பாண்டியவேந்தன். குசவன் மூதுர்க் கலஞ் செய்கோவே (புறநா.256,7). ஆன்மா கோ உணர்த்தும் சத்தியாலே குறிவைத்து (திருமந். 2389). கோவே மாலைமாலையாகக்கொண்ட (நந்திக் கலம்.50). நேத்திரம் சத்தியச் செல்வஞ் சடகோபன் தந்த தமிழுரையே (அரி.அந்.29). சக்கரவர்த்தி கோன் கண்ட மன்னர் குரை கடற் புக்கிலர் (தமிழ்நா.126).

கோ[4] பெ. இலந்தை மரம். (மலை அக.)

கோ[5]-த்தல் 11வி. 1.மணி முதலிவற்றினூடு நூலைப் புகுத்தி இணைத்தல். ஆங்கு ஒருங்கு உடன் கோத்த உருள் அமைமுக் காழ் (கலித்.85,12-13). கோவா மலையாரம் கோத்த கடலாரம் (சிலப்.17,29,1).

கருவினாற் கோத்தின்னா கூறி உரையாக்கால் (நாலடி.335). கோப்பார் பார்த்த னிலைகண்டருளுங் குழகர் (தேவா.1,72,6). சே வாத மணி முத்தம் குவளை மலர் சொரிந்தன (கரு.5,5). கோத்தணிந்த ஏற்புமணி (பெரியபு.12,22). பலநிற மணிகோத் தென்னப் பன்னிற வேறு பூட்டி (திருவிளை.பு.நாட்டுச்.19). பவளத்தினிடை முத்தை வைத்திடிற் கோபிதம் படிகமணி கோக்கின் என்னாம் (குமரே.சத.98). வெண்பளிங்கில் செந்நூல் கோத்தால் (இலக்.வி.661 உரை). 2.பிணைத்தல். கோலமுடன் மன்னவர்க்கே கோத்தமுத்து எட்டு (சீவே.சரி.403). 3.ஒன்று சேர்த்தல். ஊழி வாய் அண்ட கோளம் உடைபடக் கோத்த தெண்ணீர் (செ.பாகவத.10,1,43). நல் குணத்தார் கை கோத்து நான் திரிவது அந்நாளோ (தாயுமா.பா.45,11,16). அறிவிழந்தமக்களிடை நுண்ணறிவைக் கோக்கும் நமது குயில் (பாரதிதா.குயில்.ப.8). தொள்ளமுதைப் பையத் திரட்சி செய்து கோக்கல் போல் தண்தரளக் கோவையிட்டு (திரு.இலஞ்சி.உலா 96). கோத்த கொடிய பொலி எருதை இருமூக்கிலும் கயிறொன்று கோத்து வசவிர்த்தி கொள்வார் (அறப்பளீ.சத.42). 4.மலர் களின் இடை நாரை நுழைத்தல். நிணந்தவை கோத்தவை (பரிபா.19,80). 5.ஊடுருவுதல். கழனி வந்து கால் கோத்தென (பரிபா.7,33). 6.தொடுத்தல். பைநனை அவரை பவழம் கோப்பவும் (சிறுபாண்.164). கூரார்வாளி சிலையிற்கோத்து (தேவா.1,64,5). கணை ஒன்றினால் கோத்த எம் சங்கரனே (காரைக்.இரட். மாலை 5). கூர்வாளி கோப்புண்டு கிடந்தது (திருவிளை. பு.25,8). வின்மாரன் கோத்த மலர்மறைப்பக் கூசுவார் (மதுரைச். உலா 131). 7.ஒழுங்குபடுத்துதல். பொலியக் கோத்த புலமையோன் (சிலப்.3,94). மொழி முறையே கோத்த முனி (நள.5). பூமியாண் முறையுங் கோத்தார் (பாரதம். 1,2,113). கோத்த வெண்டிரையில் வளர்திரு பச்சைக் குழவி (செ.பாகவத.5,1,5). கோத்திட்ட மீன்போல் குறைந்திட்டேன் (சித்.மடல் 135). வேணிக் கொத்தினைக் கோட்டினிற் கோத்தவைத்து உதறிவான் (செங்கமு.பிள். 41). பார்த்தவிடமெங்கணுங் கோத்த நிலை குலையாது (தாயுமா.பா.கருணாகர.4). பாட்டுக் கோக்கப் பதங்கள் பொறுக்கவோ (அவளும் அவனும் ப.62). 8.சூழ்தல். ஓதப்புணரி புறங்கோப்ப ... நாதப் பெருந்தோணியி லிருந்த நம்பன் (சீகாழித்.பு.கிளி. 35). 9.முட்டுதல். எருவை கோப்ப எழிலணி திருவில் வானில் அணித்த வரியூதும் பல்மலரால் (பரிபா.18, 48-49). 10.பூட்டுதல். பார வில கோத்து (அரிச்.பு. நாட்டுச்.3). 11.எதிர்த்தல். கடுங்கதிர்க் கனலிகோப்ப (சீவக.1290). முத்தம் கோத்த வளை ஈனும் (குருகை.66). 12.கவிந்து கொள்ளுதல். வல்லிருள் கோத்தது கருங்கடல் கொள்ளை கொண்டென (கம்பரா.6,5,3). கோக்கும் தெண்டிரைக் கருங்கடல் அளறெழக் குளித்தான் (செ.பாகவத.492). 13.ஆலோசித்தல். கோத்த கோவை நன்றாயினுந் தகுவதோ குருகுலந் தனக்கு (பாரதம்.2,2,64). 14.உடுத்துதல். கோத்த கல்லாடையும் (தேவா.3,103,2). 15.திரட்டுதல். திரை கோத்த முத்தம் (ஒருதுறைக்கோவை 70). 16.சாதுரிய மாகக் கதை முதலியன புனைதல். (செ.ப.அக.) 17.கைபிணைத்தல். குரவை யாய்ச்சிய ரோடு கோத்ததும் (திருவாய்.6,4,1). 18.நிரல்பட தொடுத்தல். வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்கும் சேர் திருநாட் டூர்களின் முன் (பெரியபு.6,2). கோத்த முத்துவடம் அசைய (மாரியம்மன்.ப.8). 19.விளை யாடுதல். குரவை கோத்தானை (பெரியதி.தமிழாக்.2,5, 144). 20.அச்சு கோர்த்தல். கருவினாற் கோத் தின்னா கூறி உரையாக் கால் (நாலடி.335). 21.முறையாகக் கூறுதல். பூமியாண் முறையுங் கோத்தார் (பாரதம்.1, 2,113). 22.தொகுத் துரைத்தல். கோபின் தூய்முடி ஆதியஞ் சோதி குணங்களே (திருவாய்.4,1,7).

கோ[6] பெ. இ.சொ. இரங்கற்குறிப்பு. (சூடா.நி.)

கோபதி பெ. இந்திரன். (ஆசி.நி.11)

கோறி-த்தல்ம வி.மணி முதலியவற்றினோடு நூலைப் புகுத்தியிணைத்தல். சங்குவளை கோர்க்கும் சாரைக் குடல் நானெனவே (காஞ்சி.அம்.ப.27).

கோக்கம் பெ. நெல்லி. (சித்.பரி.அக.ப.86)

கோக்கடவுள் பெ. இந்திரன். கோக்கடவுட் கெட்டாத வச்சிரமு (கு.சோ.உலா 156).

கோக்கணம் பெ. ஆனைத்திப்பிலி. (சித்.பரி.அக.ப.86)

கோக்கதவு பெ. 1.தலைவாயில். கோக்கதவு இல்லாத வீடு வீடல்ல (நாஞ்.வ.). 2.பெரிய கதவு. களத்திற்குக் கோக்கதவு கூட்டிவிட்டிருக்கிறது (முன்.).

கோக்கலம் பெ. வெண்கலப்பாத்திரம். (நாஞ்.வ.)

கோக்காமரம் பெ. 1.தூக்கு மரம். (வட்.வ.) 2.கடலிற் செலுத்தும் கட்டுமரவகைகளில் ஒன்று. (முன்.)

கோக்காலி பெ. 1.மெத்தை, பாய் முதலியன வைக்கப் பயன்படும் மரத்தாலான நாற்காலி போன்ற அமைப்பு. (நகர.வ.) 2.சட்டிபானை முதலியவை வைப்பதற்குச் சுவரையொட்டி அமைக்கப்படுஞ் சட்டம். (பதிற்றுப்.43 உரை) 3.உயரமான சுவரில் வெள்ளையடிக்க அல்லது தூசியடிக்கப் பயன் படுத்தப்படும் உயர்ந்த நாற்காலி. (வட்.சொ. வி.ப.121) 4.நெட்டையானவ-ன்-ள். (நாட்.வ.)

கோக்காளி பெ. 1.இரு சிறிய கவைகளின் மீது வைக்கப்படும் பலகை. (வட்.வ.) 2.→கோக் காலி- 3.(ரா.வட்.அக)

கோக்கிவேலை பெ. சமையல்வேலை. அவர் கோக்கி வேலை செய்யிறார் (இலங்.வ.).

கோக்கு பெ. நூலோட்டுகை. (செ.ப.அக.)

கோக்குடை பெ. வெண்குடை. இனிது கவித்த கோக்குடை பழிச்சும் (இலக்.வி.617).

கோக்குமாக்கு பெ. (உருது) புரட்டுச்செயல். (செ.ப.அக.)

கோக்குறிச்சான் பெ. குறும்பு குழப்பம் செய்பவன். (இலங்.வ.)

கோக்கோ[1] பெ. ஒருவகைப் பானபண்டம். (செ.ப.அக.)

கோக்கோ[2] பெ. ஒரு வகை விளையாட்டு. (விளை.வ.)

கோக்கோதை பெ. சேரன். நச்சிலை வேற் கோக்கோதை நாடு (பெருந்.2092).

கோகக்குருகு பெ. நேமிப்புள். கோகக் குருகினா கொப்பவே (தென்பு.மணி.உலா 337).

கோகடம் பெ. முயல்வகை. (யாழ்.அக.)

கோகண்டம் பெ. நெருஞ்சில். (முன்.)

கோகணம் பெ. கையாந்தகரை. கோகண மறுபதங் கையாந் தகரை (பிங்.2918).

கோகணமுள் பெ. →கோகண்டம். (சித்.பரி.அக.ப.86)

கோகத்தனி பெ. சக்கரவாகப்புள். கோகத்தனியே நீ கேளாய் (ஐந்து.நா.ப.61).

கோகத்தி பெ. 1.பசுக்கொலையாகிய பாவம். பிரமகத்தி கோகத்தியில் பாவம் எறியும் (கொலைமறு.9.குறிப்புரை). 2.பசுக்கொலை. (யாழ்.அக.)

கோகத்தியை பெ. →கோகத்தி. (செ.ப.அக.)

கோகந்தம் பெ. கந்தகபாடாணம். (வின்.அக.)

கோகம்[1] பெ. 1.சக்கரவாகப்பறவை. கோகங்களெல்லைப் ~~சோதிர் றணந்திட (இரகு.திக்குவி.247). சக்கரவாகங்~~ கோகஞ் சக்கரம் (உரி.நி.84). கோகம் கொங்கை கணிக்கால் வரால் (சிவராத்.பு.3,66). வரிசை வரிசையா யிழையும் தளங்களிரண்டும் கோகம் (சிதம்.குற.5). கோகமும் பெடையும் சூடியிருந்தன (திருவெண்.8,7). வண்டானங்கள் கோகம் ... வீழ்ந்திழு மென விரங்கும் (திருக்கழுக்.பு.நாரத.18). கோகத்தை மானுங் குவி முலையான் (தென்பு.மணி.உலா 435). கோகமே என்றன் தேவியே (கலா.ப.222). 2.சித்திரப் புடவை. (ஆசி.நி.180) 3.செந்நாய். (இலக்.சொ.அக.) 4.தவளை. (யாழ்.அக.) 5.பல்லி. (முன்.) 6.ஆண்குறி. (முன்.)

கோகம்[2] பெ. உலர்ந்தபூ. கோகைகமுகிழ்த்த போக (திருப்பு.1147).

கோகயம் பெ. தாமரை. (மலை அக.)

கோகர்ணம் பெ. 1.→கோகரணம்-1. குடகம் கருநாடு கோகர்ணம் காசி (மூவரை.தூது 74). 2.இரசம் மோர் முதலியன பரிமாறுதற்குரிய பிடியுள்ள மூக்குச்சட்டி வகை. (செ.ப.அக.) 3.→கோகரணம்-2. (சிலேடை இலக்.ப.303)

கோகர்ணி பெ. காக்கணம். (சித்.பரி.அக.ப.86)

கோகரகித்தாசுவரூபி பெ. (இசையி.) இலதாங்கி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.227)

கோகரணம் பெ. 1.மலைநாட்டில் உள்ள ஒரு சிவதலம். கோகரணத் தானாய கோ (கபி.அந்.79). கூற்றுதைத்தார் மகிழ்ந்த கோ கரணம் பாடி (பெரியபு.28, 1027). நிருதியாங் கடவுள் கோகரணத்தில் நின்மல இலிங்க பூசனை செய்து (ஞான.உபதேசகா.171). கோவினது செவியுருவாங் கோகரணத்துடனே (சரபேந்திர.குற.330,2). 2.பசுவைப் போல் காதை மாத்திரம் அசைத்துக் காண்பிக்கும் ஒரு விந்தை. கோகரணம் கைகரணம் இந்தர காலம் (இலக்கச்.முதல்.15). பார்கோலக் கோகரணத் தானறிய (கபி.அந்.79). மயேந்திர சாலம் கோகரணம் மோடி எடுக்கும் வித்தை எல்லாம் செய்வோம் (விராலி.குற.51).

கோகருணம் பெ. →கோகரணம்-2. (யாழ்.அக.)

கோகருணி பெ. பெருங்குரும்பை. (மலை அக.)

கோகலி பெ. 1.கடம்பு. (முன்.) 2.(இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கோகழி பெ. 1.குருந்தமரம். (சித்.பரி.அக.ப.86) 2.திருவாவடுதுறை என்னும் சிவதலம். கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க (திருவாச.1,3).

கோகன்னம் பெ.→கோகரணம்-1. ஆவினது செவிபோல அவ்விலிங்க நிமிர்வுறலால் மேவினது கோகன்ன மெனும் பெயர் (பிரமோத்.2,55). கன்னலார்வய றுன்னுகோ கன்னமீ தடைந்தாள் (சிவராத்.பு.5,44). எறிந்தான் கோகன்னமதில் எய்த்து விழ (திருவளந்.விலா.17).

கோகன்னவாதனம் பெ. பசுவின் செவிபோலிரண்டு கையையு மடித்துச் சுகாதனமாய்ச் செவிகள் மூக்கு எல்லாம் புதைத்திருப்பது. (யாழ்.அக.)

கோகனகநாதன் பெ. சூரியன். மன்னிய புகழ்க் கோகன நாதன் குல முதலலோன் (நம்.திரு.50).

கோகனத்தி பெ. செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் இலக்குமி போன்ற வள்ளியம்மை. மறவர் மா தெரு ... கோகனத்தி (திருப்.153).

கோகனகம் பெ. 1.செந்தாமரை. கோகனக நகை முல்லை முகை நகைக்கும் காலம் (நந்திக்கலம்.11). கோகனகத் தவள்கேள்வன் (திருவாய்.9,8,2). கோகனகச் செறிமலரல்லிப் பொகுட்டினில் வாழுந் திருந்திழையே (நவநீதப்பாட்டியல் 65). பதுமநிதி கோகனகம் தரவே யெனவந்த சந்திர வாணன் (தஞ்.கோவை 344). கோகனகத் திருமகள் போல் (கருவூர்ப்பு.20,100). வேதன் நாவுறை சுவேத கோகனக மேவுவாணி வெளி வாரமே (ஞான.உபதேசகா.868). கோகனகத் திருவனை

யீர் ஆடிர் ஊசல் (திருச்செந்.கலம்.39). கொட்டிமலர் வாவியில் பலகூடி னாலுமொரு கோகனக மலராகுமோ (குமரே.சத.53).கோகனகச் செங்கை விரலாழிச் சேர்த்திட்டு (மூவரை.தூது 466). வண்டெழுந்து கோகனகப் பூவெனச் செங்கை மலரைச் சுற்ற (கூளப்ப.காதல் 148). கோகனத் தாளிரண்டின் கோலமுங்கண்டியேன் (பழனிவெண்.140). 2.திருமகள். கோகனகமின் குழந்தை போலும் விசித்திரவான் (மான்.தூது 126).

கோகனகன் பெ. பிரமன். கோகனகனுக்கு முன் குடிலை உபதேசம் செய்குமரகுருவை (சேத்.கோ. பிள்.1,1). குடிலையின் மெய்ப்பொருள் வினவிக் கோகனகன் நான்குமுடி குலுங்கக் குட்டி (ஞான. உபதேசகா.70). கோகனகன் விதித்த விதி தனையும் வெல்வர் (மருத.பு.1,20).

கோகனகை பெ. 1.→கோகனதை. குவிமுலை யாளொரு பாவையள் கோகனகை யனையாள் (பது.பரிண.1, 62). கோகனகை முதலான தாமகளி (திருவாந்.மங். பிள்.64). கோகனகை சேரும் அந்தக் குமாரலிங்க ராசனம்மே (குமார.குற.50,3). இலக்குமி ... கோக னகை சீதேவி ஆமே (அபி.மாலை 20). கோக நகையிருக்க எவ்வகை அய்திடுமோ என்று இருப்ப (கூபிலை.கோவை 64). கோகநகையும் என்ன மாதவம் முன்னே செய்தாள் (சோலை. குற.46). கோகநகை தங்குமிடத்தே தழுவுதுழாய் மாலையொடு (சிறுபு.உலா 105). 2.→செந்தும்பை. (சித்.பரி.அக.ப.86)

கோகனதத்தோன் பெ. →கோகனகன். கோகன தத்தோன் துண்ட மாகிய விடத்தில் (கந்தபு.6,13,17).

கோகனதம் பெ. 1.செந்தாமரை. குணிக்காற் கோகநதச் செவ்வாய் (நம்.திரு.10). கோகனதத்து அயன் (சேந்.2-10). ஆறுமுகக் கடவுள் இணைச் சரணக் கோகனத வீடு காத்து (திருச்செந்.பு.680). உன் முகம் சேர் கோகனதம் (சௌந்.9). கோகன தத்தின் மின்னை (திருமழுவாடிப்பு. தேவாதி.15). செம்பாத கோகனதந் தொழுவாருள நின்ற கொழுந்தே (குளத்தூர் அமுதா.பிள்.2,10). கோகநதச் செங்கைக் கரும்பு மலரும் (கூபி.அந்.62). கோகநதம் ஆரளறொடாறு விழியாட (சிறு.தீர.பஞ்.5,314). 2.(இசையி.) தேனுகா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.114)

கோகனதன் பெ. பிரமன். கோகனதன் பிரமலோ கத்தை யடைந்தனன் (ஞான.உபதேசகா.2034). கோகனதன் சொற் கொண்டு (கோயிற்பு.நடரா.68).

கோகனதை பெ. இலக்குமி. கோகனதை பிரியாத சூழ்கன்போல (சேதுபு.சேதுபந்.37).

கோகனநாகம் பெ. கண்ணைக் காதாகவுடைய நாகம். கோகன நாக வேகக் கொடியவன் சேனை யாவும் (பாரதம்.4,4,100).

கோகனம் பெ. 1.செந்தாமரை. (வைத்.விரி.அக.ப.121) புகழ்க் கோகன நாதன் கலமுதல்வோன் (நம்பியா. தொண்.அந்.50). கோகனக் காடுண்ட கார்க் குன்ற னையார் (ஆதி.வ.கோவை 50). புண்டரிகங் கோகனம் ... தாமரை (நாம.நி.360). 2.கரிசலாங் கண்ணி. (பிங்.) 3.நிலக்கடம்பு மரம். நிலக்கடம்பு கோகனம் (அபி.மாலை 852). 4.நிலவேம்பு. (மலை.அக.) 5.பசுவின் செவிபோல் நீண்ட உருவுடைய மூர்த்தி. நாவினிடும் பெயர் கோகனம் என்றனர் (சிவராத்.பு. 6,65).

கோகனவாதம் பெ. வச்சிரவேங்கை. (சித்.பரி.அக.ப.86)

கோகி பெ. 1.இலந்தை. (சித்.பரி.அக.ப.86) 2.தும்பை. (மூன்.)

கோகித்துலனி பெ. (இசையி.) 28 ஆவது மேளம் சரிகாம் வோதியில் பிறந்த ராகம். (இசை.வ.)

கோகிதம் பெ. குதிங்கால். (யாழ்.அக.)

கோகிருட்டி பெ. ஓரீற்றுப்பசு. (மூன்.)

கோகிருதம் பெ. 1.பசுநெய். (மூன்.) 2.மழை. (மூன்.) 3.ஆப்பி. (மூன்.)

கோகிலகந்தர்வம் பெ. (இசையி.) யோகப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.176)

கோகிலகாமவர்த்தினி பெ. (இசையி.) யோகப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.120)

கோகிலகீர்வாணி பெ. (இசையி.) கவாம்போதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.189)

கோகிலசுவராணி பெ. (இசையி.) பவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று.(புதிய இரா.ப.187)

கோகிலத்வனி பெ. (இசையி.) அரிகாம்போதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.165)

கோகிலதீபகம் பெ. 1.இசையி.) கௌரி மனோகரி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.154) 2.(இசையி.) கவாம்போதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.189)

கோகிலநாட்டை பெ. (இசையி.) சலநாட்டை என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.181)

கோகிலப்பிச்சு பெ. குயிலின் பித்தம். (தேரை.வெண்.101)

கோகிலப்பிரதாபம் பெ. (இசையி.) சாருகேசி எனனும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.159)

கோகிலப்பிரியா பெ. (இசையி.) ஓர் இராகத்தின் பெயர். (புதிய இரா.ப.120)

கோகிலபஞ்சமம் பெ. (இசையி.) சலவராளி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.185)

கோகிலபாசிணி பெ. (இசையி.) தீர சங்கரா பரணம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.170)

கோகிலபூபாளம் பெ. (இசையி.) மேசகல்யாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.234)

கோகிலம்[1] பெ. 1.துளை. (அக.நி.) 2.சிறுகுறிஞ்சா. (மலை அக.) 3.உலக்கை. (யாழ்.அக.) 4.கலப்பை. (முன்.) 5.நீர்முள்ளி. (சித்.பரி.அக.ப.86)

கோகிலம்[2] பெ. குரங்கு. குயிலுங் குரங்குங் கோகில மென்ப (பிங்.3441).

கோகிலம்[3] பெ. (இசையி.) சக்ரவாகம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.134)

கோகிலம்[4] பெ. 1.குயில். இருளாநின்ற கோகிலமே (திருக்கோவை 322). அன்னமும் கோகிலமும் போலும் குணத்தினாள் (சேர.உலா 162). மேக சாலமலி சோலைகளாகி மீது கோகிலம் மிடைந்து மிழற்ற (பெரியபு.6,92). பூவையும் கோகிலமும் மென்பிணை மானும் (அம்.கோவை 138). கோகிலம் கிள்ளைச் செருமுதல் மாதவர்க்கு (கருவூர்ப்பு.6,16). கோகிலம் அவர் மொழியெனக் ... கூவும் (செ.பாகவத.8,2,5). உளமகிழச் சாற்றுமொழி கோகிலத்தின் நன்மைபெற (மதுரைச்.உலா 324). கிள்ளை மறைசொலக் கோகிலங் கேட்டுக் கிளர்பொழில்சூழ் (நாணிக்.ஒருதுறைக்கோவை 278). கானவித்தைகள் படிப்பார் அதுக்கினம் ஆன கோகிலம் போலச் சுதிபிடிப்பார் (இராமநா.2 தீபதை 6). கோகிலமும் காக்கையினம் ஆகி (தமிழ்.தூது 110). 2.பல்லி.தென்பால் எழும் கோகில மொழி திறத்தினையே (கோடீச்.கோவை 295). கோகிலம் கெவுளி ... பல்லி (நாம.நி.265).

கோகிலவாசம் பெ. (குயிலுக்கு இருப்பிடம்) மாமரம். (மலை அக.)

கோகிலா[1] பெ. சிறு குறிஞ்சான். (சித்.பரி.அக.ப.86)

கோகிலா[2] பெ. குயில். (சித்.பரி.அக.ப.166)

கோகிலாட்சம் பெ. 1.→கொம்மட்டி மாதுளை. (மலை அக.) 2.நீர்முள்ளி. (முன்.)

கோகிலைக்கிழங்கு பெ. கிழங்குவகை. (இலங்.வ.)

கோகிலோற்சவம் பெ. (குயிலுக்கு மகிழ்ச்சியை விளைவிப்பது) மாமரம். (மலை.அக.)

கோகினி பெ. வெட்பாலை. (சித்.பரி.அக.ப.86)

கோகு பெ. 1.புயம். கொற்றவன்றன் கோகின் மேல் வெற்றி வாளின் வீசினான் (கூளா.1370). 2.கபடம். ஐவர்வந்து ... கோகு செய்ய ஆற்றவுங் கில்லேன் (தேவா.4,52,6). 3.அடைறகேடு. (திருவாய்.3,5,4 ஈடு) 4.கழுதை. வீழ்ந்து கோகிறப்புழி (உபதேசகா. உருத்திரா.193). காளவாய் வேசரி கோகு ... கழுதை (நாம.நி.230). பால் நேரப் பாடிய பண் கோகிற்கு இன்பம் பயவா (தேம்பா.1,10,7). கேகு கேழ் சும்பன் (தேவி மா.6,10).

கோகுகட்டு-தல் 5வி. ஆரவாரம் செய்தல். கோகுகட் டுண்டுழ லாதார் (திருவாய்.3,5,4). பைதலைக் கோகு கட்டிட்டு ஏட்டில் ஏற்றிய பண்பணை (சடகோபரந்.38).

கோகுத்தம் பெ. மல்லிகை. (மலை அக.)

கோகுதட்டு-தல் 5வி. ஆரவாரஞ்செய்தல். கோகு தட்டிடு தனஞ்சயன் (பாரதம்.4,4,68).

கோகுந்தம் பெ. மலைமல்லிகை. (சித்.பரி.அக.ப.86)

கோகுரவம் பெ. சதுரக்கள்ளி. (முன்.86)

கோகுல்மரம் பெ. ஒரு வகை மரம். (கலைச்.அக.2 ப.91)

கோகுலப்பிரியன் பெ. நூற்றெட்டுத் தாளவகை களுள் ஒன்று. (மத்தளவி.நூற்.)

கோகுலம்[1] பெ. 1.கண்ணன் வளர்ந்த ஆயர்பாடி. கொடிப் பசுந்துளவ நாறு கோகுலந்தன்னின் (செ. பாகவத.10,1,95). கோகுலத் தாயன் வேட்ட (திருச்செந். பு.18,26). கூறரிய கோகுலமே கோமேதக்த் தெளிவே (நம்.திருத்தாலா.120). குவிந்திலா முற்றம் காணுமே (அழகர்.கலம்.80). கோபாலன் எங்கே உண்டோ கோகுலம் அங்கு உண்டு (கண்ண.திரை.பா.1,31).

கோகுலம்[2] பெ. 1.குயில். செய்யுட்கண் தென்றற்கு ... கோகுலத்திற்கு (கோகிலத்திற்கன்றிற்) கெனவரும் (தொல்.எழுத்.279 நச்.). கோகுலமாய்க் கூவுநரும் (பரிபா.9,65).காமன் வளர்த்துவிட்ட காமனுக்குக் கார்குலமே கோகுலமே யென்னுடைய கொற்றவனைக் கண்டீரோ (காஞ்சி.அம்.ப.57). கோகுல மலமந் தேங்கக் குதலை மென் மொழியும் பேசி (சீவல.கதை 1024). 2.பல்லி. (வட.நி.612) 3.பசுக்கூட்டம். கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக் காத்தானை (பெரியதி.தமிழாக். 2,5,4). கக்கோலம் ... தொடக்கிலாமை கொண்டவர் அடைவர் (பகவற்.11,43). கோகுலாதி தட்டழிவுற விடு பயிர் தீய்வதால் இருட்கலி மழை மிக (பழனித்திரு.10,1/4, 3). 3.பசுத்தொழுவம். (இலக்.சொ.அக.)

கோகுலம்[3] பெ. →கோகிலம்[2]. பறையைச் சென்று ஒரு கோகுலம் முழக்கிட (புவனேந்திர.கா.17).

கோகுலம்[4] பெ. துளையுடைப் பொருள். (யாழ்.அக.)

கோகுலர் பெ. யாதவக்குலத்தினர். கொண்ட வளந்தரு முல்லைத் தலைவர்கள் கோகுலரே (கோகுல சத.15).

கோகுலவரங்கு பெ. அரசவைமேடை. கோகுல வரங்கிடைக் கூத்தி மானவே (இராவணகாவி.2,2,53).

கோகுலாட்டமி பெ. கண்ணன் அவதரித்த ஆவணி மாதத்துக் கிருட்ணாட்டமி. (செ.ப.அக.)

கோகுலிகண் பெ. பசுக்காத்தவன். (யாழ்.அக.)

கோகுள் பெ. மரவகை.கோகுளிலையைக்கொண்டு (திருவாய்.7,2,1 ஈடு).

கோகை பெ. முன்கையில் கட்டும் தோற்கவசம். மூரிச் சிலையும் முரட்கோதை யுங் கட்டி (பெருந்.பாரதம் 776).

கோகைசெய்கை பெ. மறுபயிருக்குக் கோடைக் காலத்தில் நிலத்தைப் பண்படுத்துகை. (வின்.அக.)

கோகொட்டை பெ. மஞ்சள் நாங்கு. (செ.ப.அக.)

கோகோ பெ. விளையாட்டு வகைளுள் ஒன்று. (விளை. அக.ப.58)

கோகோசனம் பெ. கோரோசனை. (யாழ்.அக.)

கோகோட்டம் பெ. ஆன்கொட்டில். (முன்.)

கோகோயுகம் பெ. ஓர்சோடுஎருது. (யாழ்.அக.)

கோகோவெனல் பெ. 1.இரக்கக்குறிப்பு. (முன்.) 2.பேரொலி செய்தற் குறிப்பு. கோகோவென்று வந்திருகை தலைபுடைத்து (பாரதம்.8,2,254). வாரி கோ கோ என வாய்விட (அருண.பு.பூத.வேதாள.வ.அடி.40).

கோங்கந்தட்டம் பெ. கோங்கம்பூ. கோங்கந் தட்டம் வாங்கினர் வைத்தும் (பெருங்.2,14,24).

கோங்கம்[1] பெ. →கோங்கிலவு. முறியிணர்க் கோங்கம் (ஐங்.366). பொன்னணிந்த கோங்கம் புணர் முலையாய் (திணைமாலை.63). பலவும் பூத்தன கோங்கம் பைந்து கிடன் முடியணிந்தவர் பின் உலவு காஞ்சுகியர் போல் (சீவக.1558). குழல் வேங்கையம் போதொடு கோங்கம் விராய் (திருக்கோவை 205). கொங்கிவர் கோங்கமும் செலவுடன் பருக (சேரமும்.கோவை 16,9). நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்க மெங்கும் (பெரியபு.நாட்டுச். 28). சிறுகோங் கரும்பாமென் முலைப் பூண்குடியிடையே (கலவி.காரிகை 24). குருந்தம் நரந்தங் குராமர மாமகிழ் கோங்குபுன்னை (அம். கோவை 28,1). தேன் விரவும் தளவமுங் கோங்கமும் (ஆதி.வ.கோவை 1).

கோங்கம்[2] பெ. 1.→கோங்கல். (சித்.பரி.அக.ப.86) 2.நடு. (யாழ்.அக.)

கோங்கல் பெ. நெல்லி. (சித்.பரி.அக.ப.86)

கோங்கலர் பெ. முற்காலத்து வழங்கிய ஒருவகைத் துகில். (சிலப்.14,108 உரை)

கோங்கிலவு பெ. ஓர்மரம். (யாழ்.அக.)

கோங்கு பெ. 1.கோங்கு மரவகை. மென்முகை அவிழ்ந்த கோங்கின் (குறுந்.254). முள்ளிலவம் பொன்னீன்ற கோங்கரும் பன்ன முலையாய் (நாலடி. 400). இரவு மிண்டுங் குரவுங் கோங்கும் (பெருங்.1, 52,40). கோங்கதனில் முல்லை அரும்பு அதனில் (கண்ண.கனு 255). கோங்கு அளிசூழ் பொங்கர் (திருவிடை.கலம்.21). குரவமுங் குருந்துங் கோங்கும் (செ.பாகவத.10,6,9). நெடுநீலங்கோங் குவளை ... பூரித்துச் சொரிந்தனவே (புலந்.மாலை ப.28). பாவையைக் கோங்குபொன் கொடுத்து ... மணப்ப (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.52). கோங்கரும் பன்ன குவிமுலைக் கோதையர் (அறு.இலக்.67 புலமை.). ஒரு வரிசை. கோங்கு மறுவரிசை (பிசிராந்.ப.59). 2.முள்ளிலவு. குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங் காந்தள் ... ஒளிர் கின்றதே (திருக்கோவை 1). மலர்ந்த கோங்கு அனைய குங்குமப்பூங் கொங்கையாள் (மயிலை.உலா 316). கோங்கொடு நிகர்த்த குவவுத் தனமினாரும் (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண்.115). இலங்கு முலைக்கணேய்ப் பக்கோங் கவிழ்ந்து (பெருந்.2204). வாகையுங் கோங்கு மணமலர் சொரிதலும் (சென்னி மலை.ஆற்றுப்.725). 3.கோங்கிலவு. காக்கை கோங்கு எனக் கண்டு கொய்க (தொல்.எழுத்.11 இளம்.). கங்கை கோங்கு இதழி இளம் பிறை (கரு.3,8). மாவின் கொழுந்தளி ரீன்றுபொற் கோங்கிடை வந்தரும்பி (அம்.கோவை 2). கொல்லையிற் கேங்கைக் கண்டு எம் கொங்கை கட் திளைப்பீர் என்பார் (பாத்மோ.பு.4.106). கோங்கே யனைய முலை மடவார் (பழனித்திரு.13,5,3). 4.நீர்க்கோங்கு. (செ.ப.அக.) 5.ஞாழல் மரம். பொன்வரைக் கோங்கு ஓர் முலைப் பூந்திருவே யாயினும் (சிறுபஞ்.45). கோங்கு பொற் குடை கொண்டு கவித்த (யசோதர.11). கோங்கின் அரும்பு அழித்த கொங்கை (நக்.ஈங்.மாலை 37). கனந்தனந் கோங்கு (சிவகாமி. அந்.15). பூங்காவில் வள்ளம்யோற் கோங்கு மலரும் திருநாடன் (நள.382). 6.தென்னை மரம். நாகவண் சுனை சூழ வீந்துடன்றரு நாகு கோங்கொடு பூங்கா (திருச்செங்.பு.3,5,5) கோங்கிலவலர் கமழ் சோலை மலை வளர் முகுந்தன் (சோலை.குற.80). 7.கோங்கிலை வின் அரும்பு. வில்வமுங் கோங்கமும் புன்னையும் (கோமதி.பிள்.76).

கோச்சடையன் பெ. சேரர் பட்டப்பெயர். நெடுஞ்சுடர் வேற் கொங்கர் கோமான் கோச்சடையன் மற்றவர்க்குப் புத்திரனாய் (பெருந்.889).

கோச்சி பெ. புகைவண்டி. (இலங்.வ.)

கோச்சிறா பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கோச்சீயம் பெ. நரசிங்கமூர்த்தி. கோச்சீயம் காண்ப அரியான் குன்று (நக்.ஈங்.மாலை 18).

கோச்சு பெ. (இலங்.) குதிரை வண்டி வகை. (செ.ப.அக.)

கோச்சுட்பாலன் பெ.பொக்கிசகாவற்காரன். (யாழ்.அக.)

கோச்சுடகம் பெ. பொக்கிசம். (முன்.)

கோச்சுடம் பெ. 1.பண்டசாலை. (முன்.) 2.பொக்கிசம். (முன்.) 3.ஐந்துவாசனைப் பொருள்களுள் ஒன்று.

கோர்த்திடுவாய் கோட்டமும் பூலாங்கிழங்கும் (போக. 543). ஒருவகை வாசனைச் செடி (செ.ப.அக.) 4.நீர்த் தொட்டி. (யாழ்.அக.) 5.சொந்தம். (முன்.) 6.ஆரவாரம். (நாட்.வ.) 7.→கோட்டி. (செ.ப.அக.) 8.கூட்டம். விர்தாகோட்டி யென்னிலே செல்வதெத்தனை (தாயு. ஆனந்தமான.1). 9.தெய்வசந்நிதி முதலியவற்றில் திருவாய் மொழி முதலியன சொல்வார் இருக்கும் வரிசை. (செ.ப.அக.)

கோச்சுடி-த்தல் 11வி. கோச்சுடிக்க ஒலித்தல். வேதங்கள் கோச்சுடிக்க (சங்.விறலி.தூது 112).

கோச்சுப்பெட்டி பெ. வண்டியின் முகப்புப் பெட்டி. (வட்.வ.)

கோச்சுபாதம் பெ. பசுவின் பாதச்சுவட்டினளவுள்ள நிலம். அவனுக்குக் கோட்பாதங்கூடப்பூமி இல்லை (நாட்.வ)

கோச்சுபாரா பெ. கணக்குச் சுருக்கம். (செ.ப.அக.)

கோச்செங்கட்சோழநாயனார் பெ. நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவராகிய சோழவரசர். (பெரியபு.)

கோச்செங்கணான் பெ. 1.→கோச்செங்கட்சோழ நாயனார். செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில் (பெரியதி.6,6,1). நாயன்மாருள் ஒருவன் நிம்ப நறுந்தொங்கல் கோச்செங்கணான் என்னும் நித்த னையே (நம்.திரு.82).

கோச்சுவாரா பெ. →கோட்பாரா. (முன்.)

கோசக்கம் பெ. குழப்பம். (யாழ்.அக.)

கோசகம் பெ. காசம், கோழை. (ஆசி.நி.180)

கோசகாரம் பெ. பட்டுப்பூச்சி. கோசகாரப் புழுப்போல் (ஞானவா.மனத்.22).

கோசகாரம்² பெ. 1.கரும்பு. (மூலி.அக) 2.தென்னை. (முன்.)

கோசங்கம்¹ பெ. மதிலுறுப்பு. (பிங்.)

கோசங்கம்² பெ. 1.நாணல். (சித்.பரி.அக.ப.86) 2.பீர்க்கு. (முன்.)

கோசங்கம்³ பெ. வைகறை. (யாழ்.அக.)

கோசங்கி பெ. (இராவணனைக் கொல்ல இராமருக்கு உதவபிரம்மாவின்அவதாரமாகத்தோன்றியசாம்பவானின் வழியில் வந்தவர்களாகத் தங்களைக் கூறிக் கொள்ளும்) பிச்சைக்காரர். (தென்.குல.குடி.2 ப.387)

கோசஞ்சாரபூமி பெ. பசுக்கள் மேய்வதற்கென்று விடப்பட்ட நிலம். (செ.ப.அக.)

கோசடகம் பெ. 1.நீர்த்தொட்டி (யாழ்.அக.) 2.சொந்தம் (முன்.) 3.பண்டகசாலை (முன்.)

கோசடாகாரம் பெ. பெக்கிசசாலை (முன்.)

கோசணை¹ பெ. →கோசை (வின்.அக.)

கோசணை² பெ. பேரொலி. பூச ரமரங் கோசனை யுலம்ப (பிங்.2114/ செ.ப.அக.)

கோசம்¹ பெ. 1.முட்டை. மதிலுறுப் பும்பண் டாரமு முட்டையும் (பிங்.3442). 2.புழுக்கூடு. கோசம புழுக்கூடு (கௌடலீயம் ப.224 உரை). 3.கருப்பை. சஞ்சலமான கோசத் தசையினை (பாரதம்.1,2,72). 4.உறை. சாடி நித்திரைக் கோசம் வேற (திருப்பு.494). கோசம் என்பது உறை (வேதா.சூ.102 குறிப்புரை). 5.பஞ்சகோசம். கோசத்துள் ஆகங் கொணர்ந்த கொடைத்தொழில் (திருமந்.465). கோசபாசப் பின்னலைச் சின்னமாக்கிய (கைவல்ய.174). 6.மதில் உறுப்பு. ஞாயி லெந்திர நாஞ்சில் கோசம் (பிங்.630). 7.ஆண்குறி. கோசமும் நிலனுறத் தீண்டுதல் குறியே (பன்னிருபா.166). ஐயர்தங் கோசம் நோக்கினர் (கந்தபு.6,13,54). மைந்தர்கள் மாதர்கள் கோசபகம் ஆதி மழுவுருவின் மறைத்திலேம் (கொலை மறு.19 மேற்கோள்). சிறிய வேலாயுள் கோசஞ் சங்கை நா முதுகு (திருவிளை.பு. 11,40). பங்கமார் முகரோ மத்திற்கோசமும் படையானாகி (திருக்குடந்.பு.25,4). நினைப்பினும் குறிகாட்டிடும் கோசம் நா நேரிழையாரை ... முக்கணி முதலிய உணவினை (வைரா.சத.45). கோசம் வையமே ஊழ்த்து வீழ்தல் (தேம்பா.2,11,60). கோசக் தரடம் பொழி மதமாக் கூன் வெண் பிறைக் கோட்டிடை (அய்யன்.பிள். 21). 8.காளையின் அடிவயிற்றில் நீர்த்தாரை யோடும் தொங்கும் தோல். (ரா.வட்.அக.) 9.சத்தியம். (யாழ்.அக.) 10.சட்டை. கோச மூன்றா மிதுகனா (கைவல்ய.1,32). கரிய கோசங் கழித்துமை விடுத்தாள் (திருவிரி.பு.கௌரி.95). ஓம் எனும் பொருள் முன்னான உயர் மய கோசம் ஆறும் (திருச்செந்.பு.861). நீக்கிய கோசம் என நின்ற கன்னி (ஆனந்த.வண்டு.தூது 407). கருங்கோசம் ... மாற்றி ... கவுரநிறம் பெறுதி (சிவஞா. காஞ்சிப்பு.தழுவ.419). 11.கருகூலம். பயனுறு கோச மென்னப் பார்தனில் விளங்கும் (தந்திவனப்பு.89). 12.கருவூலம். கோச மரணம் பலதெற்றி ... சிதைந்தனவே (சீகாழித்.பு.கிளி.7). வாக்கு மனாதீத காசமாய் (சதாசிவ. 150 உரை). 13.பலபண்டம் இருக்குமிடம். கோசம் என்பது பலபண்டம் இருக்குமிடம் (சிவஞான.உரை 50). ஐம்பெருங் குழுவு மத்தி கோசமும் (பெருங்.4,9,5). கோசமே பண்டாரமாகும் (அக.நி.கோமுதல் 3). 14.பொற் களஞ்சியம். நிரம்பிய கோசம் எல்லாம் நித்தமும் குறையும் (தேவிமா.1,10). 15.அகராதி முதலியபுத்தகம். காப்பியக் கோசமுங் கட்டிலும் பள்ளியும் (பெருங்.1,38,167 உரை). 16.புத்தகம். மௌவி பிணைத்த கோசமதும் (வைண.ஆசா.2, 3,25). சிவஞான கோசத்தை அருந்தவர்க்கும் அடை விக்கும் அடைவு (சிவதரு.சிவஞா.14). கோசம் எடுத்து உரை நவிற்று ஆசிரியர் (கொலை மறு.13). 17.பட்டா. (நாட்.வ.) 18.அபிநயத்துக்குரிய அலிக்கை வகை. (சிலப்.ப.92) 19.சாதிக்காய். (மலை அக.) 20.காவி. கோசம்பா இருக்கற ரயில்வே நிலத்திலே பாடுபட்டா

நல்லபடி வாழ முடியும் (நாட்.வ.). 21.சிவ பூசையில் பயன்படும் ஓர் உலோகக் கலன். குசையும் அங்கையிற் கோசமுங் கொண்டவன் (தேவா.5,71,1). 22.பொன். (இலக்.சொ.அக.) 23.செல்வம்.கோசம் மிக்க புனற் பினாகி (திருக்கோவல்.பு.இராகவ.). 24.உருத்திராக்கம். கோசம் உயர்வருவித்தைக் காக்க (உருத்.கவசம்.4). 25.குரோசம். கோசம் பத்திற் குலவிய இப்பதி (அசோக. வேதார.பு.மேன்மை.86). 26.கிராமம். கங்கையிற் கோசமென்றும் (கைவல்ய.1,72). 27.மேற்போர்வை. (யாழ்.அக) 28.ஓசை. ஆரண கோசம் ஆர்ப்ப (வேதாளக். 19,3). கூடிக்கலைகின்ற நாடக மேடையின் கோசத்தை நம்பிய ஏழை ... கோழை (கண்ண.கவி.ப.50).

கோசம்[2] பெ. வீதி. (திவா.)

கோசம்[3] பெ. 1.சங்கபாடாகணம் (முன்.) 2.இடைச்சேரி. கங்கையிற் கோசமென்றும் (கைவல்ய.தத்.79) 3.கோட்டை (யாழ்.அக.)

கோசம்பி பெ. →கௌசாம்பி. கொடிக் கோசம்பிக் கோமகன் (மணிமே.15,61).

கோசமதம் பெ. ஆண்யானையின் குறியினின்று வரும் மதநீர். (திவா.)

கோசமம் பெ. பீர்க்கு. (மலை அக.)

கோசமாற்று-தல் 5வி. பட்டா முதலியவற்றிற் பேர் மாற்றுதல். (செ.ப.அக.)

கோசயம் பெ. →கோசமம். (வைத்.விரி.அக.ப.121)

கோசர் பெ. 1.வீரக்குடியினருள் ஒரு சாரார். ஒன்று மொழிக் கோசர் போல் (குறுந்.73). மெய்ம்மலி பெரும்பூண் செம்மற் கோசர் (அகநா.15). நல்மன மிகு கோசரும் வாழ்ந்த ஆண்டது கொங்கு மண்டலமே (கொங்கு.சத.கார்.40).

கோசரபலம் பெ. (சோதிட.) சன்மராசியிலிருந்து தற்காலத்தில் கிரகங்கள் இருக்கும் நிலையின் பலன். (செ.ப.அக.)

கோசரபலன் பெ. கிரகபலனினொன்று. (யாழ்.அக.)

கோசரம்[1] பெ. 1.ஐம்பொறி மனம் இவற்றுக்கு விடய மானது. சிந்தைக்குங் கோசர மல்லன் (திருவாய்.1,9,6). புத்திக்கோசரம் எவர்க்கும் தோன்ற (பிர.5,13). 2.பொறியுணர்வு. நயன கோசர மறைதலும் (கம்பரா.1, 10,40). 3.ஊர். (யாழ்.அக.) 4.அடங்கல். (முன்.) 5.இராசி. (முன்.) 6.கோள். புவன கோசரங்கட் கெல்லாம் ... சோதியாய் விளங்கி நிற்கும் தூய சைதந்யம் (இட்சணிய யாத்திரவுள்.). 7.→கோசரபலம். (செ.ப.அக.) 8.(சோதிட.) குறித்த காலத்தில் கிரகங்கள் இருக்கும் நிலை. (முன்.)

கோசரம்[2] பெ. 1.பூந்தாது. கோசர மகரஞ் கிதரே கொங்கு (பிங்.2809) 2.மகிழமரம். (மலை அக.)

கோசரம்[3] பெ. கோத்திரம். (சைவ.பொது.331 உரை)

கோசரமா-தல் 5வி. 1.வெளிப்பட்டுத் தெரிதல். வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அது (சி.போ.9,1.அதி). 2.அறியத் தக்கதாய் இருத்தல். (சாச.அக.)

கோசரர் பெ. 1.காணத்தக்கவர். கோசரர் சூழ் கந்த கோட்டங்குமார (திருவலங்.தீரட்.58,6). 2.வானில் இயங்குவர். உரகர் கோசரர் சித்தர் இயக்கர் (கருவூர்ப்பு. 14,3). கோசரர் வீணை யோசை (திருநெல்.பு.கார்பேசுர.4).

கோசரி[1] பெ. காளத்தியார்க்குப் பூசை செய்யும் சிவகோசரியார். கோசரிக்கு அன்று அவன் நேசம் காட்ட (கல்.மறம்.24).

கோசரி[2]-த்தல் 11வி. அறிவுக்குப் புலனாதல். அனுபவஞான மாத்திரையின் விளங்கிக் கோசரிப்ப தாயும் (சி.போ.பா.6,2 ப.121 சுவா.).

கோசலம்[1] பெ. 1.ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று. கேசலத் திறைவ னெய்த (சீவக.2184). கொங்குவார் பொழிலணிந்த கோசலத்தார் கோமானிக் குவளை வண்ணன் (சூளா.182). கோசலம் திகழ் உஞ்சை வந்தி சாளக் கிராமம் (கருவூர்ப்பு.20,10). வலாசுர னென்பும் வீழ்ந்த கோசல மாதி நாட்டிற் பட்டது குணத்தான் மாண்ட தேசதாய் (திருவிளை.பு.17,59). புரவுபூண் டுயருங் கோசலத் தரசன் (குசேலோ.698). பூசுரர் சேருநற் கோசல நாடும் (பெருந்.782). 2.தமிழ்நூல்களிற் குறிக்கப்பெறும் பதினெண்மொழியுள் ஒன்று. (திவா.) 3.ஓர் இராகத்தின் பெயர். (புதிய இரா.ப.241)

கோசலம்[2] பெ. பசுவின் சிறுநீர். கோசலமும் வாரியும் ... வார்த்திடின் புனிதம் மிக வாய்க்கும் (சிவதர்ம. பரிகார.33). கோசலத்தொடு கோமயம் நெய்பால் தயில் (திருவாமத்.பு.பூர்வ.7,13). கோசல கோர்நா ளோர்நாள் கோமயம் (காசிக.வியாதன்சாப.18). கழுதை நெய்யை விட்டுக் கோசலமு மிட்டு (திருவிடை.நா.ப.32).

கோசலர் பெ. ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்றான கோசல நாட்டவர். வில்லவர் கோசலர் பாஞ்சாலர் வங்கர் (திருவிளை.பு.5,74). பூசுரர் சேருநற் கோசல நாட்டினர் (கல்.கலைச்.அக.ப.164). குச்சரரு மாரியரும் கோசலரும் கொங்கணரும் (பெருந்.897).

கோசலா பெ. (இசையி.) கோசலம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.241)

கோசலிகம் பெ. கைக்கூலி. (யாழ்.அக.)

கோசலை[1] பெ. அயோத்தி. கோலம்வினி தைவிரிசு கோசலைசா (நாம.நி.506).

கோசலை[2] பெ. தசரதன் மனைவி, இராமபிரானது தாய். கோசலையும் பார்த்திபர்கள் கோமான் (நம். திருத்தாலா.9). திருவுறப்பயந்தன டிறங்கொள் கோசலை (கம்பரா.1,5,104). கோவெழிற் கோசலை (செ.பாகவத. 9,9,3). இராமனின் தாய். அயோத்தித் தசரதன் கோசலை (குசேலோ.668). கருந்தடங்கட் கோசலையார் உளங் கனிந்தெம் குலக்கதிரே (மேகநா.4,1).

கோசலை[3] பெ. (இசையி.) தேனுகா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.114)

கோசவதி[1] பெ. →கோசமம். (தைலவ.)

கோசவதி[2] பெ. 1.நாகலோகம். (தக்க.147) 2.வீணை. கோசவதி என்பது நாகலோகத்துக்கும் வீணைக்கும் பெயர் (தக்க.147.உ.)

கோசவம் பெ. →கோமேதகம். (யாழ்.அக.)

கோசவாகாரக்கட்டி பெ. பையைப் போல உள்ள கழலைவகை. (இங்.வை.307)

கோசவில் (கோசம்+இல்) பெ. பொக்கிசசாலை. கோசவில் வாசல்கள் எங்கணுந்திறந்து (ஞான. உபதேசகா.1349).

கோசன்[1] பெ. வலைஞனுக்கும் புலைச்சிக்கும்பிறந்த புத்திரன். (யாழ்.அக.)

கோசன்[2] பெ. சீர்பந்தபாடாணம். (வின்.அக.)

கோசன்[3] பெ. ஒரு கொடையாளி. பல்லார்க்கு மீயும் பரிசிற் கொடைத் தடக்கை மல்லார் மணிவரைத் தோள் வண்கோசன் (பெருந்.1035).

கோசனி பெ. (இசையி.) சக்ரவாகம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.133)

கோசனை[1] பெ. 1.→கோரோசனை. (யாழ்.அக.)

கோசனை[2] பெ. 1.பேரொலி. கோசனைத்தரங்கவாரிக் குவலையம் முழுதும் முருகன் (பூண்டிப்பு.கருக்.5,30). 2.ஒலி. கோசனை யியந்துழனி ... ஓசை (நாம.நி.682).

கோசா[1] பெ. (உருது.) அலி. (வின்.அக.)

கோசா[2] பெ. (உருது.) அன்னிய புருடர் காணாதபடி திரையிட்டு வாழும் பெண்கள். (செ.ப.அக.)

கோசாங்கம் பெ. 1.நாணற்புல். (யாழ்.அக.) 2.பீர்க்கு. (சித்.பரி.அக.ப.86)

கோசாணி பெ. (இசையி.) சக்ரவாகம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.133)

கோசாதகம் பெ. மயிர். (யாழ்.அக.)

கோசாதகீ பெ. புடோலை. (இலக்.சொ.அக.)

கோசாப்பழம் பெ. வடஇந்தியாவில் விளையும் ஒருவகை காய்கறிப்பயிர். (காய்.ப.190)

கோசாபசரணம் பெ. செல்வங்களைபகரித்தல் (யாழ்.அக.)

கோசாம்பி பெ. கங்கைக் கரையில் குசாம்பன் என்பவனால் நிறுவப்பட்ட நகர். கொடிக்கோ சாம்பிக் கோமகனாகிய (மணிமே.15,61).

கோசாமி பெ. →கோசாயி. (யாழ்.அக.)

கோசாயி பெ. வடநாட்டுச் சந்நியாசிகளுள் ஒரு வகையார். (நாட்.வ.)

கோசாரம் பெ. →கோசரம்[1]-8. (செ.ப.அக.)

கோசாரி பெ. →கோசவதி. (மலை அக.)

கோசாலம் பெ. 1.→கோசாலை[1]. (யாழ்.அக.) 2.அகங்கை. (முன்.)

கோசாலை[1] பெ. பசுக்கொட்டில். ஒருகல்தச்சன் முன்பு கோசாலை கட்டுகிறபோது (கோயிலொ.100). குலோத்துங்க சோழன் திருக்கோசாலையிடையற்கு விட்டபசு நானூற்றொருபதினால் (கல்.கலைச்.அக. ப.160).

கோசாலை[2] பெ. →கொய்சகம். (யாழ்.அக.)

கோசாவெடு-த்தல் 11வி. வெளிநாட்டில் காரியத்தனா யிருக்க அதிகாரபத்திரம் பெறுதல். (செ.ப.அக.)

கோசி[1] பெ. 1.விலாமிச்சை. (சித்.பரி.அக.ப.86) 2.மாமரம். (முன்.)

கோசி[2]-த்தல் 11வி. ஒலித்தல். கொட்டும் ரணபேரி யெங்குங் கோசிப்ப (திருவேங்.வண்டு.தூது 153). சாத்திரத்திலும் அப்படியே கோசிக்கப்படுகிறது (ரீகேசவ. மாலை பேய்.27 உரை).

கோசி[3]-த்தல் 11 செ.குன்றி.வி. ஒலித்தல் பமாரங்கள் கோசிப்ப. (பண.தூது 71)

கோசிகம் பெ. 1.பட்டாடை. கோசிகம்போல புள்ளி விதிர்த்த வுள்ளுறு மேனியர் (பெருங்.1,43,154). காமர் பைம்பூங் கோசிகம் புனைந்து நீலப் பட்டிகை குலவ வார்த்தான் (இரகு.தசரதன் சாப.46). கொம்பன்ன நுண்ணிடையிற் கோசிகத்தைப் பம்ப (குல.உலா 188). பசும்பொன் இட்ட மணி நன்கமைத்து மிளிர் கோசிகம் (கருவூர்ப்பு.19,9). கோசிகச் செம்பொன் ஆடை (நைட. 17,4). குறுமுய லரத்த மேய்க்குங் கோசிகம் (கூர்மபு. 15,3). தேசிகன தெய்வ யானைக்கு ... சிவந்த கோசிகம் தரித்து (தென்காசித்.பு.நகரச்.38). நற்கலன ணிந்து கோசிகந் தமையுடுத்து (பது.பரிண.2,13). கோசிக மத்த மணிசூறை யிட்டெதிர் (நாணிக்.ஒருதுறைக்கோவை 186). கோசிகமும் பொன்னும் கொடுத்து (தமிழ்.மஞ்.2,526). 2.சேலை. துகில் கோசிகங் காழகஞ் சேலை (உரி.நி. 147). 3.சாமவேதம். (யாழ்.அக.) 4.ஒருபண். (முன்.) 5.கூகை. கூகைப் பெயர் கோசிகமென்பது (ஞான. உபதேசகா.சிவநாம.47). 6.மல்லிகை வேர். (தேரை. வெண்.370) 7.தென்னை. (முன்.)

கோசிகன் பெ. 1.விசுவாமித்திரன். கோகிகற் கொருமொழி சனகன் கூறுவான் (கம்பரா.1,2,64). அத்திரி கோசிகன் வசிட்டன் (செ.பாகவத.308). கோரதவக் கோசிகன் கொண்டேகி (திருவாமாத்.பு.பூர்வ.21,7). கோசிகாதி உத்தமர் பெறு திருவறுள் ஆண்மை கூடிடில் (பழனித்திரு. 10,1/4,3). 2.இந்திரன். ஆயிரங்கண்ணன் ... கோசிகன் (நாம.நி.6). 3.(இசையி.) தேனுக என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.114)

கோசிகை பெ. 1.மல்லிகை. (சித்.பரி.அக.ப.86)

2.→கோசிகம்-1. கோசிகையாம் ... அரங்கேசர்க் கரவரசே (அட்டப்.திருவரங்.மாலை 87).

கோசிலேபிடித்துவா(வரு)-தல் 13வி. காற்றின் கதியிலே செல்லும்படி கப்பற் ுக்கானைத் திருப்புதல். (வின்.அக.)

கோசிலேவா(வரு)-தல் 13வி. →கோசிலேபிடித்து வா-தல். (முன்.)

கோசினி பெ. மாமரம். (சித்.பரி.அக.ப.86)

கோசு[1] பெ. (பாக்.) கூப்பிடுதூரவளவு. சன்னிதிக்கு அப்புறத்தில் இரண்டு கோசு அளவிலிருக்கும் பாபாவிநாசனிக்கு (குருபரம்.பன்னீ.217). கோசுகளின் இயல்வாசமூள குறி (சரபேந்திர.குற.32).

கோசு[2] பெ. →கோசம்[2]. (செ.ப.அக.) 2. தெரு. வாடை கோசு மார்க்க மொவியல் (பிங்.640).

கோசு[3] பெ. 1.முறை, தடவை. போன கோசு நீங்கள் எண்ணை தந்ததுக்கு நான் உங்களுக்குக் காசு தரேல்லை (இலங்.வ.). 2.தோணிப்பாயின் முன்புறக் கயிறு. (வின்.அக.) 3.கப்பலினோர்பக்கம். (யாழ்.அக.) 4.குற்றம். மன்னிய கோசி றண்டத்த னாய் விடிற் கொற்றவன் (சூளா.625). 5.தோல்வி. (யாழ்.அக.) 6.காரியம். அவன் கோசுக்குப் போகாதே (இலங்.வ.). 7.மாட்டுவண்டி. அச்சுக்கு சில்லுக்கும் இடையி லிருக்கும் இரும்பாலன பகுதி (முன்.). 8.பெருமை. (தென்.குல.குடி.ப.389)

கோசு[4] பெ. முட்டைக்கோசு. (தொ.வ.)

கோசு[5] பெ. திறுவல், திருங்கற்றுசேர் எனப்படும் பாய்கள். (செ.க.அக.அனு.)

கோசுக்கீரை பெ. →கோசு[4]. (செ.ப.அக.)

கோசுகால் பெ. 1.பருமையின்றி நெடுகவளர்ந்தது. (யாழ்.அக.) 2.கீரையின் நீண்ட மெல்லிய கால். (இலங்.வ.)

கோசுட்டி பெ. கூட்டம். இரவிமகள் கோசுட்டியினால் வழிகள் சுத்தி (பூர்வ.நா.117).

கோசுப்பாய் பெ. கப்பலின் பின்புறப்பாய். (நாஞ்.வ.)

கோசுப்பெட்டி பெ. வில்வண்டியில் அமைந்துள்ள பெட்டி. (ரா.வட்.அக.)

கோசுபோ-தல் 4/5வி. 1.தோல்வியுறுதல். அவன் இதிலே கோசுபாய் விட்டான் (இலங்.வ.). 2.தாழ்ச்சி யாதல். (யாழ்.அக.)

கோசும்பரி பெ. ஒருவகைப் பச்சடி. (செ.ப.அக.)

கோசுமந்தில் பெ. படகின் பின் பக்கத்துப் பாய் தாங்கும் கட்டை. (நாஞ்.வ.)

கோசுமலி பெ. →கோசும்பரி. (செ.ப.அக.)

கோசுமாசு பெ. (உருது) ஏமாற்று. (நாட்.வ.)

கோசுருணை பெ. பெருங்குரும்பை. (வைத்.விரி. அக.ப.121)

கோசுபறுவான் பெ. கப்பலிற் பாயை இழுத்துக் கட்ட உதவும் அரைப்பனுவான் (முன்.)

கோசை பெ. போரொலி. (வின்.அக.)

கோஞ்சாட்டை பெ. காய்ந்த பாளையோ கோஞ் சாட்டையோ ... கிடக்கலாம் (என்.வெ.கா.ப.42)

கோட்காரன் பெ. →கோட்சொல்லி. (வின்.அக.)

கோட்கூறு பெ. 1.(சோதிட.) இராசியை முப்பது அமிச மாகப்பிரிக்கை. (யாழ்.அக.) 2.கிரகக்கோளாறு. (வின்.அக.)

கோட்சமஞ்சரி பெ.(இசையி.) இராமப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.207)

கோட்சீரம் பெ. யானைநெருஞ்சில். (சித்.பரி.அக.ப.86)

கோட்சுபாணி பெ. (இசையி.) சிம்மேந்தர மத்தியமம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.217)

கோட்சுறா பெ. முட்டாழை, கோட்சுறா எனத் திசையும் (தொல்.சொல்.17 சேனா.).

கோட்சொல்(லு)-தல் 5வி. ஒருவரைப்பற்றி மற்றவர் களிடம் இல்லாதது கூறுதல், புறங்கூறுதல். கோட் சொல்லுதல் இறுமாப்பு கலகங்கள் ஆகிய இவைகள் உங்களுக்குள்ளே உண்டாயிருக்குமோ வென்றும் ... பயந்திருந்ததேன் (பு.ஏற்.கொரிந்தி.எழு.நிரு.12,20-21).

கோட்சொல்லி பெ. குறளை கூறுவோன். (நாட்.வ.)

கோட்டகம் பெ. 1.குளம், ஆழமான நீர்நிலை. கோட்டகத்தில் தாராமல் காக்கூர் (தேவா.2,42,2). கோட்டகத்துப் பாய் வாளை (நம்.உலா 4). கொட்ட வாய்க்கால் காலெ பாயவும் (தெ.இ.க.5 எ.983). கயங்கேணி கோட்டகம் (உரி.நி.133). குலவு செங்கயல் நிறைந்திடு கோட்டகந்தோறும் (திருநெல்.பு.நாட்டு.41). புறஞ்சூழ் பெரிய கோட்டகத்துப் (சொர்ண.பிள்.3,3). 2.வயலின் புறத்தே நீர்தேங்கி நிற்கும் இடம். கோட்டகம் நிலைப்படா நிறைந்தன (சீவக.41). தோட்டமும் படுவும் கோட்டகக் கோடும் (பெருங்.1,49,2). கோட்டகக் கழனிக் கொள்ளம் பூதூர் (தேவா.3,6,2). 3.பள்ளம். (சிலப்.11,71 உரை) 4.கரை. நெடுங்குளக் கோட்டகம் (சிலப்.11,71) 5.கோயில். (யாழ்.அக.)

கோட்டங்காவலர் பெ. சிறைக்கூடங்காப்போர். கோட்டங்காவலர் ... இசைத்துமென்றேகி (மணிமே.19,48).

கோட்டத்தேவி பெ. கோட்டத்தினுள் வீற்றிருக்கும் காமாட்சி. ஒண்கோட்டத்தேவியமை தீர்த்தார்கள் (வண்ணி.11).

கோட்டம்[1] பெ. 1.வளைவு. தடவென் கிளவி கோட்டமும் செய்யும் (தொல்.சொல்.321). கோட்டங் கண்ணியும் (புறநா.275,1). சார்ந்து பரி கோட்ட மின்றிப் பதவார்ந்து (புறப்.வெண்.277). பாரபட்சம்மல்லாத நடுவுநிலைமை

யாவது கோட்மில்லாத தாய சொல்லாம் (குறள்.112 மணக்.). மரத்தின் கனக்கோட்டந்தீர்க்கு நூல் (நன்.25). கோட்டம் பிறை இதழ் தாழ் சடையான் (சி.சி.சுப. காப்பு. நிரம்ப.). கோட்டம்இல் மனத்துச் செய்ய (குசேலோ. 386). 2.வணக்கம். முன்னோன்கழற்கே கோட்டந் தருநங் குருமுடி வெற்பன் (திருக்கோவை 156). 3.பகைமை. கோட்டமுற் றழிகய முகத்தான் (சிவஞா. காஞ்சிப்பு.தலவி.5). கோட்டமுற்றமர் செய (விநாயகபு. 37,3). கோட்டமில் மனத்தால் சொல்வேன் (மனித.தேடு. ப.40). 4.நடு நிலை திறம்புகை. கோட்டமுற் றழியா தறிவுறுப் பவர் (சிவஞா.காஞ்சிப்பு.தலவி.5). கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது (தேவா.4,11,2). 5.மன மாறுபாடு. கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப (நன்.காண்டி.36,7). கொழிக்கு நூலினர் கோட்டமில் சிந்தையார் (திருக்கழுக் குன்றப்பு.நாட்டுப்.28). இன்மொழி கிளர்ந்து நன்கருளிக் கோட்டம் இன்றி வாழ் காலையில் (கச்சி.காஞ்சிப்பு.தீர்த்த.38). கிளர் மறைப் பொருட்குக் கோட்ட மாம்இது (சிவஞா.காஞ்சிப்பு. சார்ந்தா.9). வரம்பில் பாய்ந்து பரம்பில் சாய்ந்த வாட்டமும் முகக் கோட்டமும் (முக்.பள்.129,12). கோட்டமற வள்ளுவர் கோட்டம் இனிதமைத்த நாட்டமிகு நல்லரசை ... விதி (கவி.பொழில்.ப.22). கோட்டம் இல்லாக் கோதில் வாழ்வை நாட்டங் கொண்டு (பனிமொழி 1,2,60). 6.கரை. உயர் கோட்டத்து ... வான்பொய்கை (பட்டினப்.36). வெண்மீன் உருகெழு திறல் உயர்கோட்டத்து (பட்டினப்.35-36). 7.ஊர். தனுக்கோட்ட நமன்கோட்டம் (கலிங்கத்துப்.254). 8.தேயத்தின் நாடு. அன்ன கோட்டமெண் மூன்றினும் (திருக்கழுக்.நாட்டுப்.25). 9.பல்லவர் ஆட்சியிலும் சோழபாண்டியர் ஆட்சியிலும் தொண்டை மண்டலத்தின் உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த நிலப்பாகுபாடு. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து காலியூர் கோட்டத் தனியூர் உத்தர மேலூர் (கல்.கலைச். அக.ப.161). கொடுங் காளி கோட்டம் (இலக்.வி.839). 10.நகரம். புறமே நகரப் பொதுப்பெய ராகும் (பிங்.626). 11.தோட்டம். (ஆ.நி.166) 12.வயல். கோட்ட நீள் காழி மூதூர் (சீகாழித்.பு.காக.32) 13.மாக்கோலம். (யாழ். அக.) 14.யாழ். தந்தி வீனை இன்னரங் கோட்டங் கோட (பிங்.1430). 15.வீணை. (யாழ்.அக.) 16.மருத நிலத்து ஊர். (பிங்.3450) 17.திரிபு. கூறுமிக்கதை கோட்டமி லன்பினார்ற் தேறு மாறு (திருநெல்.பு.594). காட்டில் ஆணிரைக் டுன்னு கோட்டம் (வாயுசங். பஞ்சாக்.58). 18.மனக்கோட்டம். கோட்டமில மனத்தீர் (இரட்ச.சரி.69). 19.களங்கம். உள் கோட்டம் துறந்தனர் அவையில் முத்தோன் (தேம்பா.1,12,73). 20.குற்றம். கோட்டம் இல் குணத்தோர்க்கு எளிய நிர்க் குணமே (தாயுமா.பா.24,39). 21.குற்றநெறி. காழ்க்கோட்ட நீங்கக் கருதுங் குடமூக்கு (திருவருட்பா 1962,92). 22.கோபம். வாண்முகத்தினில் கோட்டலும் வருத்தமும் தோன்ற நாணி நின்றனள் (திருநெல்.பு.தச்சன்.20). 23.அறியாமை. சிந்தை வாட்டமுங் கோட்டமுந் தேறினான் (அரிச்.பு.7,42). 24.உண்பன. (பிங். 3450) 25.கூட்டம். (யாழ்.அக.) 26.பகுதி. (ஆட்சி. அக.100) 27.வருத்தம். இரக்குமுன் வீசிடுந் திறத்தால் கோட்டம் தீர்மானப் பெருந்தகை (கச்சி. காஞ்சிப்பு. நகரேற்.217). 28.அழுக்காறு. அறச் சாலையைக் கவருவான் முன்னிக் கோட்டம் கொண்டனன் (கச்சி. காஞ்சிப்பு.கழுவாய்.88). 29.கோணல். உள்கோட்டம் இன்மை பெறின் (குறள்.119). மாந்தர் மனக் கோட்டம் தீர்க்கு நூல் மாண்பு (நான்மணிக்.25). மரத்தின் கனக் கோட்டந் தீர்க்குநூல் (நன்.காண்டி.25 பொதுப்.). கோட்மி மனத்தொடுங் கேது ... வலிபடைத் திருந்தான் (சீகாழித்.பு.சேடனும்.29). கோணல் பேய்களை விரட்டி னவரால் மனக் கோட்டம் பறந்து விடுமே (அமல.சத. 75). கோட்டமின் கொள்கைப் பராசர முனிவன் (சிவஞா. காஞ்சிப்பு.பதிகம்.5). கோட்டமிலாற் கூறெண்ணிற் குடியொடு கெட்டொழிவோமே (இராவணகாவி.4,10, 36). 30.தவறு. கோல் வழியே கோட்டம் இல என்னைப் போற்றும் குணத்தவரைக் குலம் இலரே என்றீர் (தேம்பா.1,11,49). 31.நீரில் நனைத்து விதைக்க வைத்துள்ள நெற் கோட்டை. நறும் சாவிக் கோட்டம் வித்தல் செய்வாரும் (பாத்மோ.பு.3.41). 32.கடற் கொந்தளிப்பு. முந்நீர்க் கோட்ட மிசை பொலிவது தென் பிரமபுரம் (சீகாழித்.பு.அண்ட.4). 33.துன்பம். கொண்டல் வெளுக்குங் கருங்குழ லாள்மனக் கோட்டமுநின் (அம்.கோவை 335). 34.தளர்ச்சி. பசியினால் நலிந்து கோட்ட முற்றனர் (சிவராத்.பு.4,36).

கோட்டம்² பெ. 1.பாசறை. மருத நிலத்தூர் பாசறை யிடமே (பிங்.34.50). 2.1.கோவில். புத்தேளிர் கோட்டம் வலம் செய்து (கலித்.82,4). கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும் (சிலப்.14,10). தேவர் கோட்டத்தை எங்குந்துடைத்து (இறை.அகப்.7,12 உரை). சிறந்து கோட்டத்துச் செல்வ கணதரர் (நாக.காவி.22). நீல வாட்படை நீலிகோட் டங்களும் நிரந்து (பெரியபு.19,15). கோட்டத்தில் உறைந்தான் பரஞ்சோதி மலராளுடன் (வைண.ஆசா.2,6,100). 2.2.தேவாலயம். தடவுநிலைக் கோட்டம் (ஞானாமிர்.24,44). வன்னமா முலைவை ரவிகோட்டத்தில் வந்தார் (அரிச்.பு.1,281). காளிகோட் டம்மெனு முறையுள் விரவி (ஆளவந்.காஞ்சிப்பு.1004). ஆறு தானங் கோட்டம் ஆவதினால் (முதன.மாலை 151). 2.3.தேவலோகம். (யாழ்.அக.) 3.சிறைச்சாலை. கோன்றமர் நிகள மூழ்கிக் கோட்டத்துக் குரங்க

(சீவக.262). கோட்டம் புகுதல் வேட்டனென் (மானிவி. 6,218). சிறைப்படு கோட்டம் சீமின் (சிலப்.23,126). 4.இடம். (யாழ்.அக.) 5.தங்கியிருக்கும் இடம். வடமேற்கில் ஐயனார் கோட்டத்தில் (திருமந்.999). 6.கலைக் கோட்டம். என்றிருந்தேன் (மனித.தேடு. ப.76). 7.சிறைக்கோட்டம். கொண்டு போகிக் கோட்டத்தி லிட்டா னாக (திருவிளை.பு.14,42). 8.தவச்சாலை. அன்னைநோற் கின்ற கோட்டத் தணுகி (கந்தபு.6,7,15). 9.சமாதிக்கட்டடம். அரசர்க் கதைந்தன ஆயிரம் கோட்டம் (மணிமே.6,166). 10.நிலையம். கோட்டம் ஆற்றலவை குழுமிடு கழகம் (பது.பரிண.6,9). 11.ஒதுக்கிடம். (ஆ.நி.167) 12.சுடுகாடு. (முன்.) 13.கட்டம். வாழை இலையில் ஒன்பது கோட்டங்கள் செய்து ... அனுக்ஞை (சைவச்.மதி.ப.1).

கோட்டம்[3] பெ. 1.வெண் கோட்டம். (செ.ப.அக.) 2.ஒரு வகை வாசனைச் செடி. கோட்டமொடு தேவதாரம் (தெய்வச்.விறலி.தூது 48,409). 3.ஒரு வகை மரம். பயம்புங் கோட்டமுங் கயம்பல கலங்க (பெருங்.1,41,35). கூடகையுங் கோட்டமுங் குங்கும மும்பரந்து (சீவக. 1905). சந்தமென் றுணியும் கோட்டமும் (கூர்மபு.144, 63). 4.குராமரம். ஆலி கோட்டம் எலிப்பகை (திருவாச. 16,1). குராமரம் கோட்டம் (அபி.மாலை 827). 5.பச்சிலை. (செ.ப.அக.) 6.கொய்யாப்பழம். சிறிது மலையுச்சி நழுவினால் கோட்டமே (பாரதிதா.54,2(2-3)(கவி.2). 7.ஐவகை விதை. (பிங்.3450) 8.மலைபடு திரவியம். (பிங்.3450) 9.ஒருவகை வாசனைப் பண்டம். கடலிடைக் கோட்டந் தேய்த்துக் கழிவது (கம்பரா.6,15,145).

கோட்டம்[4] பெ. 1.பசுக்கூட்டம். நாடு நகரம் மானிரை படப்பை (பிங்.3450). 2.ஆன்கொட்டில். (வட.நி. 600)

கோட்டம்[5] பெ. வாட்டரவு. (யாழ்.அக.)

கோட்டரவு பெ. 1.மனவிசாரம். (இலங்.வ.) 2.வாட்டம். கோட்டரவுற்றவானவருழிக் கருணையால் (பது.பரிண. 3,18). 3.துக்கம். (யாழ்.அக.)

கோட்டலர் பெ. மரக்கிளைகளில் மலரும் பூக்கள். கோட்டுஅலர் தந்தனர் நீர் அலர் (தாக.கோவை 61).

கோட்டா[1] பெ. (உருது) கேலி. (நாட்.வ.)

கோட்டா[2] பெ. கிடைப்புப்பங்கு. (இலங்.வ.)

கோட்டாக்கினி பெ. மூலாக்கினி. (யாழ்.அக.)

கோட்டாரி பெ. கல்லாரை. (மலை அக.)

கோட்டாலி பெ. கந்தை. (கல்.வ.)

கோட்டாலை பெ. 1.துன்பம். கோட்டாலை ஆன குணம் இறந்த நிர்க்குணத்தோர் (தாயுமா.பா.45,12,3). கொள்ளாத கோட்டாலை கொண்டீர் (திருஇலஞ்சி.உலா 448). 2.உலைவு. (யாழ்.அக.) 3.தொந்தரவு. கொஞ்சமல்ல என் விரகக் கோட்டாலை (தெய்வச்.விறலி. தூது 179). 4.துக்கம். (யாழ்.அக.) 5.கிரீடை. (முன்.) 6.விகடக்கூத்து. கூத்தாடுவாயினென கோட்டாலை (பண.தூது 158). 7.சரசம். மூடநடத்தை கருவிழிமாந்தர் கோட்டாலையின்றி (திருப்பு.769). பாகே அனைய மொழியார் தரும் பொய்க் கோட்டாலையோர்க் கிதச்சொற் கூறாமல் (பழனித்திரு.1,36). 8.மூட நடத்தை. கோட்டாலை கண்டேன் (மூவரை.தூது 283,20).

கோட்டாலைக்காரன் பெ. 1.விகடன். (செ.ப.அக.) 2.தொந்தரவு செய்வோன். (முன்.)

கோட்டாறு பெ. குமரிமுனைக்கு வடக்கில் உள்ள ஊர். வெள்ளாறும் கோட்டாறும் (கலிங்கத்துப்.95). வஞ்சியர்தங் கோனுடை யாப்படை கோட்டாற்றழி வித்துங் கொண்ட வென்றி (பெருந்.872). குறுகலர் குலைய கோட்டாறு உட்பட (கல்.கலைச்.அக.ப.161). கவின் காட்டும் கோட்டாறு மேவுங் குளிர்துறையே (திருவருட்பா 1962,118).

கோட்டான் பெ. 1.கூகை. மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும் (தொல்.பொ.613). குழறி வழிமறிக்கும் கோட்டானை வீழ்த்த (சங்கர.கோவை 207). கோட்டான் கணில் ரவி காணுமோ (குருநாத. சத.58). காரிகையே நீபயந்த கோட்டானைத் தானே கொடு (பெருந்.1614). சும்மா விரு பெருங் கோட்டானை யீந்தீர் (நாணிக்.ஒருதுறைக்கோவை 88). ஒரு கோட்டானை (சிலேடை இலக்.ப.286). கோட்டானும் அங்கே குயிலாக மாறும் (கண்ண.திரை.பா.1,60). 2.கொக்குவகை. (இலங்.வ.)

கோட்டான்கோட்டான் பெ. சிறுவர் சிறுமியர் விளையாட்டு வகை. (த.நா.விளை.ப.274)

கோட்டான்திருக்கை பெ. 18அடி நீளமுள்ளதும் பச்சையும் நீலமுங் கலந்த நிறமுடையதுமான கடல்மீன்வகை. (செ.ப.அக.)

கோட்டி[1] பெ. 1.கூட்டம். குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்கு (சிலப்.16,64). இன்னன நகைமொழி யின்பக் கோட்டியோனடன்ன மென்னடையவ ளமரவாயிடை (தூரா. 1055). குழாம் கோட்டி ஒழிய எழுந்து (சேர.உலா 127). தன்றொழிலாம் கோட்டி யொழிந்து விரைந்து குலமடந்தை (குலோஉலா 250). அரும்பொன் அன்னார் கோட்டி ஆர்வுற்றக் கண்ணும் (தகடூர்யாத்.10). தம்மில் வாதிகள் வாதஞ் செய்யுங் கோட்டிமேன் மகிழ்ச்சி கூர்ந்தும் (திருவிளை.பு.4,54). தவமுனிவர் தங்கோட்டி மிகமலியு முறவோடும் (பது.பரிண.2,20). தருக்காமக் கோட்டி யெலாம் அறஎறிந்தாம் (சிவஞா.காஞ்சிப்பு.பாயி.6). கோட்டி கயம் பாயும் (சிலேடை இலக்.ப.304). நடுப்புரிந்திடு கோட்டியை அகன்று போய் (இரட்ச.சரி.304). 2.சபை. நிரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல் (குறள்.401). தோமறு கோட்டியும் (மணிமே.1,43). தானுமோர் புன்கோட்டி கொள்ளுமாங் கீழ் (நாலடி.260). கோட்டிக் கொளல் (இன்.நாற்.29). புருடர் கோட்டியில் நாணா

மோடிகள் (திருப்பு.342). பாட்டுங் கோட்டியுமறியாப் பயமில் (தொல்.சொல்.293 நச்). 3.தொகுதி. புழைக் கடைப்பின் புகார் கோட்டி உரிமை இவற்றுக்கண் செவ்வியார் (ஆசாரக்கோவை 81). கோட்டியுள் கொம்பர் குவி முலை நோக்குவோன் (பரிபா.12,50). பாட்டுங் கோட்டியு மறியாப் பயமில் (தொல்.சொல்.293 நச்.) பன்மரக் கோட்டி செறி திவ்வியவு (கோமதி.பிள்.32). 4.ஆடவர் கூட்டம். (பிங்.948) 5.பேச்சு. பனுவலாய்ந்து புலமிகு கோட்டி செய்து பொலிந்தனர் (திருவிளை.பு.5, 14). புல்லா வெழுத்தின் வறுங் கோடிப் புலனில் புலவர் (சீகாழித்.பு.கழுமலநதி.61). 6.சம்பாசணை, உரை யாடல். (யாழ்.அக.) 7.வார்த்தை.கோட்டிகொளல் புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி என்றாற்போல (குறள்.401 மணக்.). 8.ஒருவரோடு கூடியிருக்கை. கோட்டி மறவானாம் கூட்டாளி பிரியானாம் (பவளக். மாலை ப.5). 9.அழகு. (யாழ்.அக.) 10.அறை. சுடும ணோங்கிய நெடுநிலைக் கோட்டமும் (மணிமே.6,59).

கோட்டி[2] பெ. 1.துன்பம். கோட்டி மகிப் புரிந்தும் (திருவளந். உலா 113). கும்பமதயானை யெதிர் கோட்டி பல கொண்டும் (பிரபோத.26.38). 2.பைத்தியம். கோட்டி பிடித்தலைந்த காரியத்தைப் பேசுவதேன் (தெய்வச்.விறலி.தூது 613). காமக் கோட்டியால் மனங்கூசினேன் (இராமநா.உயுத். 41). 3.படி, பரிகாசம். ஈசனே ... உனக்கு ... என்ன கோட்டி எனப்புகன்று (திருநெல்.பு.திருக்கோட்டீசுர.5). 4.கோட்டாலை, விகடக்கூத்து. (செ.ப.அக.)

கோட்டி[3] பெ. 1.கோபுரவாசல். ஆயிழை கோட்டத்து ஓங்கிருங் கோட்டி இருந்தோய் (சிலப்.30,62). 2.மனை வாயில். (பிங்.681) 3.நகரவாயில். (இலக்.சொ.அக.)

கோட்டி[4] பெ. 1.கிட்டிப்புள். (செ.ப.அக.) 2.உலைவு. (பிங்.345)

கோட்டிக்காரன் பெ. பைத்தியக்காரன். (திருநெல்.வ.)

கோட்டிகொள்[1] (ளு)-தல் 2வி. சபையிற்பேசுதல். நூலின்றிக் கோட்டி கொளல் (குறள்.401). கல்லாதான் கோட்டி கொளல் (இன்.நாற்.28).

கோட்டிகொள்[2] (ளு)-தல் 2வி. 1.இகழ்தல். (வின்.அக.) 2.துன்புறுத்தல். மங்கை தனைக் கோட்டிகொளல் வல்லமையோ (தமிழ்.தூது 256).

கோட்டிப்பு பெ. →கோசை. கொட்டிய பம்மார கோட்டிப்பும் (பண தூது 247).

கோட்டியாழ் பெ. நால்வகையாழினொன்று. (யாழ்.அக.)

கோட்டிலக்கம் பெ. 1.(கணக்கி.) ஒருவகைச் சதுரக் கணக்கு.(வின்.அக.) 2.(கணக்கி.) வகுத்த மிச்சம். (நாட்.வ.)

கோட்டிறால் பெ. கொம்புத்தேன். கோட்டிறால் பல மதுவைச் சிந்து பொழிலினிடத்து (பழனித்திரு.13,1,1/10).

கோட்டினம் பெ. (கொம்புடைய கூட்டம்) எருமைக் கூட்டம். கோட்டினத்து ஆயர் மகன் அன்றே (கலித். 103,33).

கோட்டு[1] பெ. 1.சீட்டாட்டத்தில் எல்லாப்பிடிகளையும் பிடித்துச் செயிக்கை. (செ.ப.அக.) 2.இரண்டு மூன்று அரிகளின் சேர்க்கை. (புதுவை வ.)

கோட்டு[2] பெ. அட்டையின் மேலிடும் கனத்த உடை, கனமான பெரிய சட்டை. நீங்க போட்டுண்டு இருக்கிற கோட்டையாவது குடுத்துட்டு (செ.க.எ.23,19).

கோட்டு[3]-தல் 5வி. 1.வளைத்தல். நகைமுகம் கோட்டி (சிலப்.5,221). நகைமுகங் கோட்டி நின்றாள் (வேக. 1568). கோட்டிய சிலையினோடுங் கொடி மணித் தேரினோடுங் காட்டிய கோலம் (பாரதம்.1,5,24). பொன்னெடுஞ் சயிலங் கோட்டிப் புரம்பொடி படுத்தவீரர் (திருவிளை.பு.59,8). மழைக்கண் அம்பிகை மலர்க் கரங்கோட்டி ... அழைக்க (திருச்செந்.கலம்.98). மாதர் மெல் நோக்கி நாணி மதிமுகம் சிறிது கோட்டி (தேவா.12, 170). சிலைகால் கோட்டி (செ.பாகவத.8,5,18). கெழுசிலை வளையக் கோட்டி (திருக்குடந்.பு.56,2). பூ எருத்தம் கோட்டி ... கூறலுற்றான் (தேம்பா.1,5,33). நீரிபர மழலுற வரைசிலை கோட்டிய அமலன் (கமலாலயம். பிள்.3). 2.சாய்த்தல். கலனணி யெருத்தங் கோட்டி (வேக.2056). குயிலொடு மாறு கொள்ளவார் குழைமுகஞ் சுடரக் கோட்டி (சூளா.1642). 3.முறித்தல். நாட்ட மூன்றாகக் கோட்டினை (தேவா.1,128,8). 4.சித்திரம் முதலியன எழுதுதல். தன்னாம மேருவினுங் கோட்டினானே (பாரதம்.சிறப்புப்.19). சுவர்தோறுங் களிறும் பிடியுமறிப் பிணவுங் கலையுங்கோட்டி (சீகாழித். பு.திருவிழா.52). குங்குமக் கோட்டு அரம்பையர் (செ. பாகவத.9,9,117). கோட்டி வளைத்தெடுத்துக் கூட்டிக் குலைத்தடுக்கிக் காட்டவல்ல பூத கணவரும் (தாயு.உலா 95). 5.கட்டுதல். நெறிபோய் முடியுமாறொரு மண்டபங் கோட்டினேன் (பாரதம்.1,3,123). 6.சிற்பம் அமைத்தல். குணங்கிளர் சுதையின்மாணக் கோட்டிய கிளியும் (சீர்காழித்.பு.திருநகர.38). 7.சுழற்றுதல். தூயமும் சுரும் கோட்டி நேயமோடருச்சித்து (திருவிளை.பு.5,76). 8.உடுத்துதல். ஈட்டிய மேதினி என்னும் மங்கைதன் கோட்டிய ஆடையே குலவு வாரிதி (தந்திவனப்பு.60).

கோட்டுக்காறல் பெ. 1.ஒருவகைக் கடல் மீன். (செ.ப.அக.) 2.கடல் மீன்வகை. (முன்.)

கோட்டுக்கிட்டி பெ. கிட்டிப்புள் விளையாட்டு வகை. (த.நா.விளை.ப.274)

கோட்டுநாள் பெ. விதிக்கப்பட்ட தினம். கோட்டுநா ளிட்டுக் குறையுணர்ந்து வாராதால் (அறநெறி.19).

கோட்டுநூறு பெ. கிளஞ்சிற் சுண்ணாம்பு. கோட்டு நூறும் மஞ்சளுங் கூடிய வழிப்பிறந்த செய்வண்ணம் போல (தொல்.எழுத்.6 நச்).

கோட்டுப்பூ பெ. 1.மரக்கொம்புகளில் பூக்கும் ஒரு வகைப்பூ. கோட்டுப்பூச் சூடினும் காயும் (குறள்.1313). கோட்டுப் பூப்போல மலர்ந்துபிற் கூம்பாது (நாலடி.215). கோட்டுப்பூ முதலாயுள்ள பலமலர் (திருமமுவாடிப்பு. தலச்.128). கட்டுறு கோட்டுப்பூ ... தேனூறிப் புட்டரிக்க வீறும் புலியூர் (திருப்புலி.வெண்.70). கோட்டுப்பூ மதில் அந்தக் கொம்பனையாள் மாலானாள் (கூளப்ப.காதல் 153). கோட்டுப்பூ நீர்ப்பூ கொடிப்பூ (சித்.மடல் 131). அங்கோட்டுப்பூவுக்கு அரிவை மயல் ஆனாள் (நல்லதம். காதல்236). 2.வளைப்பூ, சங்குவடிவான பூ. கோட்டுப்பூச் சூடினீர் என்பதற்கு வளைப்பூச் சூடினீர் எனினும் ஆம் (குறள்.1316 மணக்.).

கோட்டுமண் பெ. பெயர்த்தெடுத்த மண். கூன் கோட்டால் கோட்டுமண் கொண்ட குளிர்த்திங்கள் (நள.100).

கோட்டுமண்கொள்(ளு)-தல் 2வி. மண்ணைக் கொம் பாற்குத்திப் பெயர்த்தல். கோட்டுமண் கொண்டிடந்து (பெரியாழ்.தி.3,3,9).

கோட்டுமண்ணெடு-த்தல் 11வி. யானை முதலியன களிப்படைந்து கோட்டினால் மண்கிண்டுதல். (யாழ்.அக.)

கோட்டுமதமா பெ. →கோட்டுமா-1. கோட்டுமத மாவுடனேதணிந் தேறிடை மேவலும் (நாணிக். ஒருதுறைக் கோவை 1).

கோட்டுமலர் பெ. →கோட்டுப் பூ. காட்டில் எறித்த நிலவாய்க் கமரிடையே கோட்டு மலர்சொறிந்த கொள்கையாய் (சிறுபு.உலா 413).

கோட்டுமலை பெ. →கோட்டுமா-1. (வின்.அக.) 2.வெண் கலமலை. (யாழ்.அக.)

கோட்டுமா[1] பெ. கொம்பையுடை யானை, யானை. கோட்டுமர வழங்குங் காட்டக நெறியே (ஐங்.282). 2.காட்டுப்பன்றி. (சிலப்.15,99 அரும்.) 3.எருமைக் கடா. கோட்டு மா ஊரவும் (சிலப்.15,98).

கோட்டுமாடு பெ. மலட்டுமாடு. (கல்.வ.)

கோட்டுமான் பெ. →கோட்டுமா-1. பாசம் இறுகு காலவாய்க் கோட்டுமான் னினம்வழங் காறும் (திருவிளை.பு.நகரச்.34).

கோட்டுமீன் பெ. சுறாமீன். மோட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கெண்டி (அகநா.10,11). கோட்டுமீ னெறிந்த வுவகையர் (நற்.49). கோட்டுமீன் குழாத்தின் மன்ன நீண்டினர் (சீவக.2325).

கோட்டுமுத்து பெ. யானைக்கோட்டிலிருந்து பெறப் படும் முத்து. (யாழ்.அக.)

கோட்டுவளை பெ. வீரவளையல். கோட்டுவளை துணிய (மூவரை.தூது 35).

கோட்டுவாத்தியம் பெ. தந்தியுள்ள வாத்திய விசேடம். (செ.ப.அக.)

கோட்டுவாய் பெ. 1.→கோடைவாய். முகத்தொழுகு கோட்டு வாயும் நெடுமூச்சும் கண்டு (இராமநா.5,4). 2.கொட்டாவி. (நாட்.வ.)

கோட்டுவாய்ப்புண் பெ. உயிர்ச்சத்துக்குறைவால் ஏற்படும் புண். (மருத்.கலைச்.அக.ப.43)

கோட்டுவான் பெ. →கோட்டான். (வின்.அக.)

கோட்டூர் பெ. பாடல் பெற்ற சைவத்திருத்தலம். செம் பொன்மதிற் கோட்டூரும் வணங்கி யேத்தி (பெரியபு.28, 574). தண்பழனத் தென்கோட்டூர் தேவ சிகாமணியே (திருவருட்பா 1962,175).

கோட்டூர்த்தி பெ. யானைத் தந்தத்தாற் செய்த பல்லக்கு. தேவிய ரேறிய பெருங் கோட்டூர்தி (பெருங்.1,38,180).

கோட்டெங்கு[1] (கோள்+தெங்கு) பெ. குலைகளை யுடையதெங்கு. கோட்டெங்கிற் குலைவாழை (பட்டினப். 16). காத நீண்டகோட் டெங்கினைக் கரும்பனை செய்தும் (திருவிளை.பு.20,18). கோட்டெங்கு சூழ்கூடற் கோமானை (பெருந்.672).

கோட்டெங்கு[2] பெ.மதிலரண். (சூடா.நி.)

கோட்டை[1] பெ. 1.மரக்கால் கொண்ட ஓர் அளவை. ஆயிரங் கோட்டையரிசி அன்றைக்கன்று சொல்லிடு வாள் (சித்.புத்.கதை ப.84). ஆடித்திரு நாளுக்கு நெல் ஆறா)யிரங் கோட்டை (முக்.பள்.143). கதிருடனெற் கோட்டை யளந்து (சமுத்திரவி.13). 2.ஒரு நிலவளவு. (செ.ப.அக.) 3.நெல்லை உள்ளே வைத்துக் கட்டிய வைக் கோல்புரி, நெற்கோட்டை. எந்தையுல வாக்கோட்டை யீந்ததுவும் (மதுரைச்.உலா 308). வன்னெல்லுக் கோட்டையும் (கதிரை.பள்.68). ஆடித்திரு நாளுக்கு நெல் ஆறா)யிரங் கோட்டை (முக்.பள்.143). ஆயிரங் கோட்டையரிசி அன்றைக்கன்று செலவிடுவாள் (சித்.அமரா. கதை ப.68). தொண்ணூறு கோட்டை விரை சொரிந்து தடகத் தளந்து (கண்.பள்.59). ஒவ்வொன்றும் பதினைந்து கோட்டை வித்து இருக்கும் (என்.வெ.கா. ப.45). பந்தமறக் கோட்டைக்குள்ளே படைகள் வெட்டி நிற்பாரோ (மலரும்.905). 4.விதை நெல்லைச் சேமித்து வைக்கும் பொருட்டு வைக்கோலால் கட்டப்படும் கூடை போன்ற அமைப்பு. (நாட்.வ.) 5.அரிசிக்கோட்டை அன்பனுக்குல வாத கோட்டை யளித்த வாறு கிளத்துவாம் (திருவிளை.பு.38,1). 6.நெற்குதிர். (பதார்த்த.) 7.நெல்லிலோர்தொகை. (யாழ்.அக.) 8.வைக்கோற் போர். வாரிக்களத்தடிக்கும் வந்து பின்பு கோட்டைபுகும் (தனிப்பா.திர.1,4,3). 9.புளி இலை முதலியவற்றின் கட்டு, இலைக்கோட்டை. (செ.ப.அக.) 10.உடம்பு. (சித்.பரி.அக.ப.34) 11.ஏராளம். (செ.ப.அக.)

கோட்டை[2] பெ. 1. அரண்மனை. கோட்டையிலே கொடி நாட்டி வளர்த்தவர் (கண்ண.திரை.பா.2,8). விடர்ப் புலி பொறித்த கோட்டை (புறநா.174,17). 2.மதிலரண். (சூடா.நி.) 3.திரிபுரம். முன் மூவர்கள் கோட்டை கொன்ற

ஒரு மந்தகாசப் படையாய் (குற்றா.மாலை 5). 4.இஞ்சி. (தைலவ.851) 5.கார்டு. கோட்டை யரணம் வல்லை துருக்க. (பிங்.537) 6.பரிவேடம். சந்திரனோர் கோட்டை கட்டிக் கொண்டிருந்தகோலமென்ன (கொண்டல் தூது 72). நிலையாத கோட்டைகொண்டோடி வருவாய் (திரு.முரு. பிள்.பா.61). 7.காட்டுத்துருக்கம். அருப்பங் கோட்டை வல்லை யாரணியம் (பிங்.538) 8.பூட்டின் ஒருறுப்பு. (நாட்.வ.) 9.உள். அகணி யகடே யகமே கோட்டை யுரைசெயி லின்னவை யுள்ளாகும்மே (பிங்.1818). 10.வீட்டின் உள்ளிடம். (பிங்.) 11.கரை. உள்ள கோட்டையொன்று நீ கடப்பையோ (சமுத்திரவி.46).

கோட்டை[3] பெ. 1.சிகரம். மலைக்கோட்டை யெற்றி வருமத்த யானை (மதுரைச்.உலா 240). கோட்டைக்குக் காக்க வைத்த அத்தளத்தை யெல்லாம் மணுவாக்கி (மான்.தூது 99). 2.கொம்பு. யானைக் கொலைக் கோட்டை யொப்பக் குலாவி (மதுரைச்.உலா 240). 3.மதில். அறிவென்னுங் கோட்டையை வைத்தேன் (திருமந். 2034). கொத்தளக் கோட்டையும் சக்ரவாளமென (திருவால.திருப்பணி.4). பொறியிற் சிறந்துள் ளாய்கோட்டை யென்புறம் போக்கினையே (ஒருதுறைக் கோவை 227). எங்கள் முன்னாக நீ என்ன கோட்டை கொண்டாய் என்று மூட மனம் மிகவும் ஏச (தாயுமா.பா. 9,12). நான் கோட்டையிலே போய் பனிரெண்டு அடிக்குந் தனி லுமிருந்து (ஆனந்த.தினசரிச்.6 ப.304). விசயாபுரிக் கோட்டைக் கபாடம் திறக்கும் களிற்று வேந்தன் (தனிப்பாடற் 2). கோட்டை கடந்து கொத்தளமும் தான் கடந்து (பவளக்.மாலை ப.19). சொற்புலவர் கூடுதலாற் சூழ்கோட்டை யேந்துதலால் (மதன.மாலை 155). வலிமை கொண்ட கோட்டை கட்டினான் (பாரதி.தேசியம். 45,2). அரண் கல்லின் மீது கட்டிய கோட்டை போல் (இயேசுகா.ப.110).

கோட்டைநெல் பெ. கோட்டை அளவான நெல். (தொ.வ.)

கோட்டைக்கட்டு பெ. அணிவகுப்பினொன்று. (யாழ்.அக.)

கோட்டைக்கடன் பெ. அறுப்புக்காலத்தில் நெற் கொடுத்துத் தீர்ப்பதாகச்சொல்லி வாங்குஞ் சிறு கடன். (நாட்.வ.)

கோட்டைக்கரை பெ. குழித்தலைப்பக்கத்திலுள்ள ஊர். குதிசையிற் கோட்டைக் கரையாம் (பெருந்.2093).

கோட்டைக்காலவண்டி பெ. ஆரக்கால் வட்டமாக உள்ள வண்டி. (வட்.வ.)

கோட்டைக்கூலி பெ. 1.கோட்டையின் பராமரிப்புக்காக வசூலிக்கப் பெறும் வரி. புறவெட்டி கொட்டைகூலி உள்பட (தெ.இ.க.8,251).

கோட்டைகட்டு[1]-தல் 5வி. 1.மதிலரண் எடுத்தல். (செ.ப.அக.) 2.மனோராச்சியம் செய்தல். (முன்.) 3.பொய்க்கதை கட்டுதல். (முன்.) 4.பரிவேடம் கொள்ளுதல். (முன்.) 5.கோலிக்கைகட்டுதல்.(யாழ்.அக.) 6.பெரும்பொருள் திரட்டுதல். உத்தியோகஞ்செய்து கோட்டை கட்டப் போகிறாயா (நாட்.வ.).

கோட்டைகட்டு[2]-தல் 5வி. 1.சதுரங்க விளையாட்டில் கோட்டை என்னும் காயினால் எதிர்காய்களை வரவிடாமல் தடுத்து நிறுத்துதல். (விளை.அக.ப.24)

கோட்டைகட்டு[3]-தல் 5வி. நெல்விதையைக் கோட்டை யாகக்கட்டி வைத்தல். (நாட்.வ.)

கோட்டைப்பவுன் பெ. பவுன் நாணயவகை. (செ.ப.அக.)

கோட்டைப்பப்பளி பெ. சேலைவகை (செ.ப.அக.அனு.)

கோட்டைப்பிடி-த்தல் 11வி. 1.இராச்சியம்பிடித்தல். (யாழ்.அக.) 2.நெல்லின் அரிகளையடித்தல். (செ.ப. அக.அனு)

கோட்டைப்பிள்ளைமார் பெ. →கோட்டை வேளாளர். (நாட்.வ.).

கோட்டைப்போர் பெ. வைக்கோற்போர். (யாழ்.அக.)

கோட்டைபிடி-த்தல் 11வி. அரிய காரியத்தைச் செய்து முடித்தல். (செ.ப.அக.)

கோட்டைபோடு-தல் 6வி. விதை தெளிக்கும் முன்பு விதையை ஊறவைக்கும் பொருட்டுக் கோட்டையைத் தண்ணீரில் போட்டு ஊற வைத்தல். (வட்.வ.)

கோட்டைமேடு பெ. அகழிக்குப் புறம்பேயுள்ள மண் மேடு. (கட்ட.நாமா.7)

கோட்டையடுப்பு பெ. காடியடுப்பு. (நாட்.வ.)

கோட்டைவாசல் பெ. கோட்டையில் நுழைவிடம். ஒன்னலர்தங் கோட்டை வாசல் படிவாங்கு மரசர்மணி முடிவாங்குஞ் சேடன்முடி படியுந் தானே (பெருந்.1294).

கோட்டைவிடு[1]-தல் 6வி. ஏமாறுதல். இன்னிக்கு வரைக்கும் ஒண்ணும் நடக்கலே கோட்டை விட்டாங்க (கண்ண.திரை.பா.3,79).

கோட்டைவிடு[2]-தல் 6வி. படிப்பு போன்றவற்றில் தேறாது போய்விடுதல்,தவறவிட்டுவிடுதல். என் மகள் படிப்பையே கோட்டை விட்டுட்டாள் (வளர்ப்.ப.108).

கோட்டைவிதைப்பாடு பெ. →கோட்டைவிரைப்பாடு. (செ.ப.அக.)

கோட்டைவிரைப்பாடு பெ. ஒரு கோட்டை விதை விதைக்கக்கூடிய நிலவளவு. (முன்.)

கோட்டைவெளி பெ. கோட்டைக்கு வெளியிலுள்ள இடம். (செ.ப.அக.)

கோப்படு-தல் 6வி. 1.கவரப்படுதல். ஆசைக்கோப்பட்டு வருந்துகின்றாய் (குசேலோ.12). 2.பிடிக்கப்படுதல். காசறு கவள மாகக் களிறுகோட் பட்டதன்றே (சீவக. 1690). புலிதானே புறத் தாக் குட்டி கோப்படா தென்ன (கம்பரா.3,5.102). கொடும்பழி கோப்பட்டான்றன் குரவனை வணங்கி (திருவிளை.பு.1,67). உயிர்ப்பினிற்

கோட்பட்டாவி பொன்றுவான் என்ன நொந்து விளிக்கின்றான் (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.98). புயபலன் பின் முதஞர் கோட்பட்டான் (முருகேச.வெண்.43). 3.கொள்ளப்படுதல். ஓட்டிடு வெண் குணனுங் கோட்பட்டுயிராவே (சீவக.1469). இடச்சீறுமையானும் பயிற்சி லானதும் பாம்பாற் கோட்படல் ஒரு தலையாம் (குறள். 890 பரிமே.). அக்காட்டிற்கின் கடறை கோட்பட்டான் (நன்.384 சங்.).செந்தீக் கோட்படும் ... கருப்பு வில்லி (சிவஞா.காஞ்சிப்பு வீராட்.36). பொய்ம்மை யெனுந் தெறுக்காலிற் கோட்பட்டார் (பாமணிக்கோவை 12,17). 4.அகப்படுதல். கோணிலவு சேர்முடிமேல் கோட்பட்ட முந்திடலும்(ஆளவந்.காஞ்சிப்பு.196). 5.அறியப்படுதல். ஞானத்தாலும் கோட்படாதமே (கம்பரா.அனுமப்.36) 6.வலிமை கொள்ளுதல். பனிமதக் குவடு கோட்பட்டெழுந்துறப் பாய்ந்த வாற்றால் (இரகு.திக்குவி.225). 7.பற்றப்படுதல். தெவ்வராற் கோட்பட்டோ சீயம் புலிகரடி (பாரி காதை 83)

கோட்படுபதம் பெ. மாட்டுக்குளம்பு. (யாழ்.அக.)

கோட்பறை பெ. 1.நெய்தனிலப் பறை. சாபறை மீன்கோட் பறைநெய் தற்பறை. (பிங்.599) கோட்பறை நாவாய்ப் பம்பை (முத்துவீ.806). 2.செய்திகளை நகரத் தார்க்குத் தெரிவிக்கும் பறை. கொள்ளென் குரலொடு கோட்பறை கொளீஇ (பெருந்.4,5,62).

கோட்பாடு பெ. 1.அனுசரிப்பு. (யாழ்.அக.) 2.கொண்டிருக்குந்தன்மை. (முன்.) 3.நிலைமை. (முன்.) 4.(மொழியி.) கண்டுகொண்ட உண்மைகளை ஒழுங்குபடுத்தப் பட்டக் கருத்துக்களாக வெளியிடும் முறை மொழி (மொழியி.கலைச்.அக.ப.86) 5.கொள்கை. இன்னாத வற்றைச் செய்யாமை குற்றமற்றா கோட்பாடு (குறள். 312 மணக்.). கோட்பாட்டுக்கு எட்டாத முதலாய் (சித்தி. பாயி.1 மறைஞா.). எவ்வெவகோட் பாடுகளும் இயம்பவல்ல ... பொன் (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.144). இராமபிரான் திருமாலினும் மிக்க கடவுட்டன்மை யுடையன் என்பதே எமது கோட்பாடு (அம்பி.அமரா.ப.44). பல் புகர் மதக்கோட்பாட்முந்திப் போனார் சில்லோர் (மீனா.சரித்.1 உரைமேற்.ப.31). 6.நடத்தை. தலைமகள் சுற்றத்தாரால் பெறப்படாத கோட்பாட்டினையும் (இலக்.வி.ப.204 உரை). 7.கருத்து. (ஆட்சி.அக.ப.69) 8.தத்துவம். (ஆட்சி.அக.ப.282)

கோட்பு பெ. 1.கொள்ளுகை. (யாழ்.அக.) 2.கொள்கை. (இலக்.சொ.அக.) 3.வலிமை. விதியின் கோட்பால் வீடினன் (கம்பரா.5,4,81). விதியின் கோட்பால் (பிரமோ. 8,32). 4.மாறுபாடு. கோட்பதுஇல நூல்முறையின் கேட்பது இனி வாழ்த்துளதோ (தேம்பா.1,5,151).

கோட்புகு-தல் 4வி. மரமுதலியன பயன் கொள்ளும் பருவத்ததாதல். கோட்புகாத கன்னிக்கமுகு (சீவக.169 உரை).

கோட்புலி பெ. →கோட்புலி நாயனார். குற்றம் அறுக்கும் நம் கோட்புலி (நம்.திரு.68).

கோட்புலிநாயனார் பெ. நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

கோட்புலியார் பெ. →கோட்புலி நாயனார். குலவு புகழ்க் கோட்புலியார் குறையிரந்து (பெரியபு.29,31).

கோடக்குத்துவா பெ. 1.கடல்மீன்வகை. (செ.ப.அக.) 2.குத்துவாமீன்வகை. (செ.ப.அக.)

கோடகசாலை[1] பெ. வெளிறிய கருஞ்சிவப்பு மலர்கள் உடைய ஒரு பூடு. (தமிழ்நாட்.தா.ப.248)

கோடகசாலை[2] பெ. கற்பூரவல்லி, நறுமணச்செடி. (சித்.பரி.அக.ப.86)

கோடகபாசியம் பெ. வேம்பு. (சித்.பரி.அக.ப.86)

கோடகம்[1] பெ. 1.முடியுறுப்பு ஐந்துனுள் ஒன்று. கோணமூன்றாகிப் பொற்புறு முகமுடை யனவய மொய்கொள் கோடகம் (திருவிளை.பு.59,89). 2.சிகர மாகச் செய்த முடிவகை. சொரிகதிர்க் கோடக முடிக டோன்றலால் (சூளா.1397). கோடக மணிந்த கோல முடியினாய் (சீவக.2989). கொற்றவர் பயில்வா சந்திக மிந்தக் கோடகம் (திருவிளை.பு.59,106).

கோடகம்[2] பெ. 1.குதிரை. பச்சைக் கோடகக் காற்றை (கல்லா.17,48). களிறும் கோடகமும் மாவாம குருகையே (குருகை.98). பரியரி கோடகம் (உரி.நி.69). கோட கந்தருவி லாழியும் (அரிச்.பு.4,21). கோடகத்தின் முகமொழிந்து (திருச்செந்.பு.9,82). உடல் கரந்து தந்த ... கோடகத் தலையைக் கொய்து கோன் நிலத்து உருமிற் பாய்ந்தான் (தேம்பா.2,3,87). குதிரை கந்துகம் கொய்யுளை குரைஜங் ... கோடகம் (அபி.மாலை 558). 2.அசுவதி நட்சத்திரம் (சங்.அக.) 3.சந்தி, பலதெருக் கூடுமிடம். கோடகமுஞ் சிராகமுஞ் சந்தியெனக் கூறுப (பிங்.642) 4.முச்சந்தி. (ஆசி.நி.163) 5.நாற்சந்தி. (யாழ்.அக.) 6.குண்டிகை. (வின்.அக.)

கோடகம்[3] பெ. புதுமை. குதிரையும் புதுமையும் முடி யுறுப்புக் கோடகம் (பிங்.3444).

கோடகம்[4] பெ. சுக்கு. (சித்.பரி.அக.ப.86)

கோடகன் பெ. வீடுவேய்வோன். (யாழ்.அக.)

கோடங்கி (கோடாங்கி[1]) பெ. 1.உடுக்கை. (தஞ்.வ.) 2.உடுக்கடித்துக் குறி சொல்வோன். குறத்தி சாத்திரம் கோடங்கி சாத்திரம் (சாத்.கும்மி.609).

கோடங்கி[2] (கோடாங்கி[2]) பெ. வரிப்புடைவை. (யாழ்.அக.)

கோடங்கிபார்-த்தல் 11வி. கோடங்கியிடம் குறிகேட்டல். (வின்.அக.)

கோடங்கிழங்கு பெ.→கோடைக்கிழங்கு. (யாழ்.அக.)

கோடசகலை பெ. பதினாறு கலை. கோடசகலையாய்த் துலங்குறு சந்திரன் மாடகத்தோங்கு மாதுரு மொழியே (பேரிசைச் சூத்.10).

கோடணம் பெ. வயிறு. கோடணம் உதரம் குக்கி வயிறு (நாம.நி.580).

கோடணை[1] பெ. 1.ஒலி. கோடணை முரச மார்ப்ப (திருக்குற்றா.பு.30,1). ஏற்றமுடன் சாகரத்தில் எழிலுடைய கோடணை போல் (சீவே.சரி.2973). 2.ஆரவாரம். கொண்டன கோடணை கொற்ற முற்றமே (சீவக.3013). 3.வெற்றிமுழக்கம். குழலவன் கோடணை யறைவாம் (சீவக.603). மாற்றக் கோட்டணை மணிமுர சறைதலின் (பெருங்.1,36,244). ஏரணி மணிக்கல மணிக யாருமென் றாரணி வளநக ரறைக கோடணை (சூளா. 902). நீள்பு விழுண்டெழு கோடணை யெனு மாநகர வீதி தனிலே (அய்யன்.பிள்.50). 4.வாச்சியப் பொது. பாடிமிழ் பனித்துறைக் கோடணை அரவமும் (பெருங். 1,41,3). 5.அலங்காரம். (மணிமே.5,94 அரும்.) 6.இசைப்பா. (கயா.நி.396).

கோடணை[2] பெ. கொடுமை. இறை பிறர்க்கு நீளும் கோடணை நிந்தையோடு அழிவுடைகுலத்தோர் ... உழுநனைத் தெரிந்தான் (தேம்பா.2,4,12).

கோடணைபோக்கு-தல் 5வி. பெருமுழக்கம் உண்டாகச்செய்தல். கோடணை போக்கி அதிர்குரன் முருசு (பெருங்.1,49,85).

கோடதகம் பெ. சுக்கு. கோடதகம் ... உயிர்க கெல்லாம் ... காப்பாகும் (சீவரப்.).

கோடபதி பெ. 1.→கோடவதி. (செ.ப.அக.) 2.உதயண னுடைய யாழ். கூட்டமை வனப்பிற் கோட பதிக்குரல் (பெருங்.4,3,123).

கோடம்[1] பெ. 1.செங்கருங்காலி. (மலை அக.)

கோடம்[2] பெ. 1.பேரொலி. இங்கய லெழுந்த கோடம் யாது (பாரதம்.7,3,155). கோடம் பெறு கடல் (சீகாழித். பு.திருவிழா.67). 2.ஒலி. வேத கோடங்கள் முழங்கிய போரூர் (போரூ.சந்.26,6). 3.வெண்கலம். (சங்.அக.)

கோடம்[3] பெ. →கோடகம்[1]-1. கோடங் களிலும் ... கோத்த முத்து. (தெ.இ.க.2,87).

கோடம்[4] பெ. ஊர். கங்கையில் கோடம் என்றும் (கைவல்ய.1,79).

கோடம்[5] பெ. கமுகு. (இலக்.சொ.அக.)

கோடம்[6] பெ. குடில். (யாழ்.அக.)

கோடம்[7] பெ. 1.குதிரை. (முன்.) 2.தவளை. (முன்.)

கோடம்[8] பெ. செல்வம்.(முன்.)

கோடம்[9] பெ. வளைவு. (முன்.)

கோடர் பெ. சிகரம். கோடரி னீண்மதிற் கோட்டாறு (இறை.23 உதா.199).

கோடரம்[1] பெ. 1.மரம். (அக.நி.) 2.மரக்கிளை. நெடிய நெடிய விழுது படு கோடரங்கள் பல நிறைந்து (திருவாலங். பு.அடவி.3). கோட ராங்குல வுற்றிடு தண்டலை (கந்தபு.3, 15,55). கோடரம் சேர் கோடரமும் (தணிகைவெண்.பா.88). கோடரத்தில் மையேந்து சோலை மதுரை நகர்க்கவுரி கையேந்து பாலனருட் காபாலன் (கடம்பர்.உலா 166). கோடரத்திலாடும் மயிலே (திரு இலஞ்சி.உலா 204). 3.சோலை. கொன்றையஞ்சடைமுக்கணாயகர் கோடரத்தரு நாண் மலர் (ஞான.உபதேசகா.1344). மாந்தருக்கள் நிறைந்த கோடரம் மன்னு ... மல்லை (திருக்கடன். பதிற்று.அந்.87). நெருங்கு கோடரம் நெடியவால் கோடரம் (சங்கர.கோவை1). குலமரக் கோட ராங்குயி னாடும் (திருக்குற்றா.பு.5,21). சோலை அரி அடவி துடவை உய்யானனம் ... கோடரம் (அபி.மாலை 140). 4.எட்டி. எட்டியும்மரக் கொம்பும் கொதும்பருங் (பிங். 3445). 5.குரங்கு. கொய் தளிர் கோதும் வாழ்க்கைக் கோடரத் துருவு கொண்டு (கம்பரா.5,10,4). கோடரங் கீசக ... வானரம் (உரி.நி.7). திண் கோ டராங்க னெண் கோடு (திருப்பு.379). கோட ராங்குல வுற்றிட வான்றொடும் ... தண்டலை (கந்தபு.3,15,55). கோட ராங்குயி னாடுங் குலமர (திருக்குற்றா.பு.5,21). கோடரம் போல் ஒன்றிலேயிருந்து ஒன்றிற் குதித்து (சூ.பா.7,4). கோதறு கனிகள் உண்ணும் கோடரம் (திருநெல்.பு.நாட்டு.52). 6.தேர் மொட்டு. குதிரையுங் தேரின் மொட்டுங் கோடரம். (பிங்.3445).

கோடரம்[2] பெ. மரப்பொந்து. அத்தருவின் கோடரத்து (பாரதம்.4,1,10).

கோடரம்[3] பெ. குதிரை. (பிங்.3445)

கோடரவம் பெ. துன்பம், பணிந்தெழுவார் தம்மனத்தில் கோடரவந் தீர்க்குமவன் (தேவா.1,62,2).

கோடரவாலி பெ. வேப்பமரம். (சித்.பரி.அக.ப.86)

கோடரி[1] பெ. 1.எட்டி. (வைத்.விரி.அக.ப.122) 2.துர்க்கை. (யாழ்.அக.) 3.நிருவாணி. (முன்.)

கோடரி[2] (கோடாரி) பெ. மரத்தை முறிக்கவும் உடைக்கவும் பயன்படுத்தும் கருவி. இறைவனின் கோடரி ஒன்று குறிவைத்துளது (இயேசுகா.ப.48). குற்றமே புரிந்து வாழும் கோடரிக் காம்பு போல்வான் (குமணசரித்.203). கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான் (விவிலி.லூக்கா 1,9).

கோடரிக்காம்பு பெ. தன் குலத்தை அழிப்பவன். கோடரிக்காம்பு குலத்துக்கு ஈனம் என்பது போல (பெண்கல்வி ப.67)

கோடல்[1] பெ. 1.கொள்ளுகை. வினையால் வினை யாக்கிக் கோடல் (குறள்.678). கவருதல் நல்லுயிர் கோடல் (சிலப்.8,62). கொள்ளானீ கோடல் கொடிது (புறப்.வெண்.254). கோலவளை கோடலிது (நந்திக்கலம். 57). வன்னிக் கடவுள் வலம்வந்து கோடன் மரபியலே (அம்பி.கோவை 11). நானம் பகர்ந்திடக்கோடல் செய்வார் (நைட.நகரப்.31). ஆதி திரவியம் கவர்ந்து கோடல்

(கருவூர்ப்பு.13,83). கைப்பணி கோடல் கருமுகில் வான் (திரிசிரா.அந்.3). அவனகத் தவிர்ந்து தன் அகத்தைக் கோடலும் இயற்கை குணமாம் (அறு.இலக்.20 பொருள்). பெண்ணாப் பிறந்தோர் யாவரும் நும்பெயர் கண்ணாக் கோடலே கடமையாம் (அனிச்சஅடி ப.89). 2.கொள்கை. ஊன் அவாய்உண்ணானேல்பேர்த்துடம்புகோடல் அரிது (சிறுபஞ்.17). 3.ஏற்றுக்கொள்கை. தாய் போற் கழறித் தழீ இக்கோடல் (தொல்.பொ.171). கோடல் மரபே கூறுங் காலை (நன்.40). 4.மணஞ் செய்து கொள்ளுகை. கொல்லனின் றிருமகன் கோடற் காகும் இந்நல்லெழின் மாது (செ.பாகவத.10,1,78). 5.கொண்டு போகை. பிள்ளையைத் தாய் அலறக் கோடலால் (நாலடி.20). 6.மனத்துக்கொள்ளுகை. கொல்லு மாற்றல ருளரெனக் கோடலுங் கோளே (கம்பரா.2,1,104). 7.மணங்குன்றல். (யாழ்.அக.)

கோடல்[2] பெ. 1.வளைவு. கடன் கோடல் குரங்குதல் (உரி.நி.167). 2.முறிக்கை. (தீவா.) 3.அழிக்கை. முழுமுதல் அரணும் முற்றலும் கோடலும் (தொல்.பொ. 66).

கோடல்[3] பெ. 1.காந்தள். கோடல் எதிர் முகைப் பசு வீமுல்லை (குறுந்.62). தண் கமழ் கோடல் தாது பிணி அவிழ (அகநா.154). கோடற் கண்ணி குரவர் பெருமகன் (புறநா.157,7). குரவுந் தளவுங் குருந்துங் கோடலும் (பெருங்.1,49,98). கோடல முகையோ டலம்வர முற்றெரிபோல் பொங்கி (புறப்.வெண்.170). தேமென் குவளையுங் கோடலு நாறுஞ் செழுஞ்சிலம்பில் (அம்.கோவை 225). கோடலும் கோகனகப் போதும் (சங்கர.கோவை 132) களிதரு கோடல் பாசரும்பு கான்றவே . (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய்.146). பூங்கு வளையும் கடோலும் (திருமுரு.பிள்.பா.13). 2.வெண் காந்தள் மலர். கோடு உடைந்தனன கோடற் பைம்பயிர் (அகநா.23,6). தண்ணறும் கோடல் துடிப்பு எடுப்ப (ஐந்.எழு.17). குருந்துங் குலைக் கோடலும் (சூளா.18). கோடல்களொ ஒழுகுவ முழுகுவதும்பி (தேவா.1,78,6). கோடன் முகையோடு (புறப்.வெண்.8,16). குலை விரிவன கோடல் (நீல.15). குலை மேம் பட்ட கோடலும் (சேர.மும்.கோவை 4,7). உரிக்கின்ற கோடலின் உந்து கந்தம் (சுகோபரந்.63). கோட லுஞ்சுனைக் குவளையும் ... புனைந்திடும் இளையோன் (கந்தபு.4,11,17). கோடல் ஏந்தக் கொன்றைபொன் சொரியும் (திருநெல்.பு.நாட்டு. 81). 3.செங்காந்தள். கொந்தண் பொழிற்சோலை யரவிற்றோன்றிக் கோடல் பூத்து (தேவா.1,45,3). அரத்தவா யாம்பல் கோடல் வல்லிசேர் மௌவற்போது (திருவிளை.பு.17,50). மேகம் முழங்கின கோடல் நிரம்பின ... தாரவர் வந்திலர் (திருச்செந்.கலம்.91). 4.வெண்கிடை. (பிங்.2894). 5.கோடலம்பாகை என்னும் ஊர். கோடல் (ஞானாமிர்.28,27). 6.பாடங் கேட்கை. கோடல் மரபு என்பது அவன் கேட்கும் முறைமை (இறை.அகப்.2,14 உரை). கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும் (நன்.காண்டி.3.பொதுப்.).

கோடலம் பெ. காந்தள். அன்பினிற் கோடலங் கண்ணி சூழ் குமரற் போற்றுவார் (திருச்செந்.பு.11,24).

கோடலி[1] பெ. 1.பண்டரெட்டி சாதிகளின் புறமணக் கட்டுப்பாடு உடைய குலம். (தென்.குல.குடி.2 ப.365) 2.→கோடரி[2]. முள்ளாலே யெடுப்பதைக் கோடலியால் எடுக்க வந்த முறைமையாமே (செயங்.சத.14).

கோடலி[2] பெ. இலந்தை. (சித்.பரி.அக.ப.86)

கோடவதி[1] பெ. வீணை. (தீவா.நி.)

கோடவதி[2] பெ. நாகலோகம். (தக்கயாகப்.147 உரை)

கோடவி பெ. 1.நிருவாணி, பைரவன். (யாழ்.அக.) 2.துர்க்கை. (முன்.)

கோடன் பெ. 1.நல்ல நெறியில் நடப்பவன், நெறி தவறாதவன். அந்தணர் செங்கைதொழும் கோடா (திருமாலை.3,2). 2.கொள்ளுகை. விசயற்கு வெங்கணை அன்றளித்த கோடனென்றாள் (நம். கோயில்.மாலை 21). பிரான்றன்னைக் கோடன்முறை குணித்தனளாய் (கந்தபு.6,7,3).

கோடன்சம்பா பெ. வேனிற்காலத்தில் விதைக்கப் பெற்று ஐந்து மாதங்களிற் பயிராகும் சம்பா நெல்வகை. (வேளாண் வ.)

கோடா[1] பெ. சாராய வண்டல். (இலங்.வ.)

கோடா[2] பெ. →கோட்டா[1](செ.ப.அக.)

கோடாகிழங்கு பெ. →கோரைக்கிழங்கு. (முன்.)

கோடாகுழிகை பெ. ஓர்மருந்து. (யாழ்.அக.)

கோடாகோடி பெ. →கோடானுகோடி. விண்ணொளிரும் கதிரவர்கள் கோடாகோடி (போகர்.173). கொம்மை பெறுங்கோடாகோடி (திருவருட்பா 1 நெஞ்சறி.85).

கோடாங்கி[1] (கோடங்கி[1]) பெ. 1.கிராமத்தில் குறிபார்க்கும் பூசாரி வைத்து அடிக்கும் உடுக்கு போன்ற கொட்டு. (வட்.சொ.வி.ப.121) 2.உடுக்கை அடித்துக் குறி சொல்பவன். நமக்கு கட்டம் வரும் போது சாமி வரவில்லையே என்று கருதி நாம் கோடாங்கிக்காரரிடம் சென்று தட்சிணை கொடுத்துக் கேட்டால் ... கூறுவார் (இராமநாத.நாட்.அள.ப.139).

கோடாங்கி[2] பெ. வரிக்கூத்துவகை. (வின். அக.)

கோடாங்கி[3] (கோடங்கி) பெ. மகளிர் வரிப்புடைவை வகை. (முன்.)

கோடாங்கிபோடு-தல் 6வி. குளிருக்குக் கை மடக்குதல். குளிர் தாங்காமல் கோடாங்கி போடுகிறான் (நாஞ்.வ.).

கோடாசரி பெ. கோடகசாலைவகை. (சங்.அக.)

கோடாசலக்குளிகை பெ. →கோடாசலம். (பதார்த்த. 1215)

கோடாசலம் பெ. பேதியைக்கட்டும் மருந்து வகை. (முன்)

கோடாசுழி பெ. →கேடாசரி. (மலை அக.)

கோடாசூரி பெ. →கேடாசரி. (வின்.அக.)

கோடாசொரி பெ. →கோடாசொரிப்பாடாணம். (மூலி. அக.)

கோடாசொரிப்பாடாணம் பெ. வைப்புப்பாடாண வகை. (வின்.அக.)

கோடாஞ்சி பெ. பெரியமரவகை. (நாட்.வ.)

கோடாடன் பெ. குத்துமல்லியைச் சாவியாக்கும் நோய். (ரா.வட்.அக.)

கோடாநீர் பெ. தடிப்பில்லாதநீர். (யாழ்.அக.)

கோடாய் பெ. செவிலித்தாய். கோடாய் தேஎத்து என்பது செவிலித்தாய் மாட்டு (இறை.அகப்.95,6).கோடாய் மடந்தையை நாட (திருக்கோவை 235 கொளு).

கோடார்[1] பெ. மனந்திரியார். கோடாரும் கோடிக் கடுவினையர் ஆகியார்ச் சார்ந்து (நாலடி.124).

கோடார்[2] பெ. →கோடாலி[2]. (சங்.அக.)

கோடாரி (கோடரி[2]) பெ. மரம் வெட்டும் கருவி. கோடாரி தன்னைத் தேடித் திகைப்பவர் போல் (பஞ்ச.திருமுக. 842). நவியங் குடாரங்கோ டரியாம் (நாம.நி.421). கொத்துவெட்டுக் காட்டுக்குக் கோடாரிக் கோர்பண மாய் வைத்து (மேழிவி.138). துத்தீட்டி ஒருபுறத்தில் குத்தவேண்டும் கோடாரி ஒரு புறத்தைப் பிளக்க வேண்டும் (நாமக்.பா.3,68).

கோடாலம் பெ. பிறைபோல் வளைந்த மாலை வகை. குளிர்முத்தின் கோடாலமும் (பெரியாழ்.தி.3,3,1). வலஞ்சுழியான் கோடாலங் கண்டணைந்த கொம்பு (நக்.மும்.கோவை 14).

கோடாலி[1] பெ. 1.பாம்பு வகை. (இலங்.வ.)

கோடாலி[2] பெ. →கோடரி. கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி (தனிப்பா.தி.53 ஔவை.). கோடாலிக் காம்பேதன் குலத்தினுக்குக் கோடான கொள்கைதானே (தண்டலை.சத.33). கோடாலி தன்னுளே மரமது நுழைந்து தன் கோத்திரம் எலாம் அழிக்கும் (குமரே.சத.91). கோடாலி தோளிலே வன்னிமரம் பிளக்க (தமி.நா.பா. ப.267). கோடாலியால் வெட்ட நமக்கு முடியுமோ (இராமநா.5,5 திபதை.5). கொடுவாள் கோடாலி தோளில்வைத்து அவ்வழி யாகவேதான் புறப்பட்டான் (சீவே.சரி.251). கூந்தல் உதரி ... கோடாலிமுடி ... போட்டு (மதுரை.கதை ப.84). கூறுகொழு முட்டிகோ டாலியுடன் (மேழிவி.76). தாலி வாழ்வைச் சிதைத்திப் பொன்னாலே செய்த கோடாலி (கண்ண.திரை.பா.2,310). முளையில் கிள்ளாததை முற்றினால் கோடாலி கொண்டு வெட்ட வேண்டும் (என்.பழ.தொ.437). 4.கூந்தலை தளரமுடி போடுகை. கோதி மயிராற்றி கோடாலி முடிபோட்டு (மின். குறம் ப.4). 5.சரளமரம், இராட்சமரம். (சித்.பரி.அக.ப.86)

கோடாலிக்காம்பு பெ. →கோடரிக்காம்பு. குலத்துக்கு ஈனும் கோடாலிக்காம்பு (என்.பழ.தொ.3254).

கோடாலிக்கரந்தை பெ. →கொட்டைகரந்தை. (செ.ப.அக.)

கோடாலிக்காம்பு பெ. →கோடரிக்காம்பு. (முன்.)

கோடாவடி-த்தல் 11வி. பட்டைச்சாராய வண்டலை நீரிலிட்டுக் கரைத்தல். (வின்.அக.)

கோடாவிதி பெ. பெ. கடுமையான அவசரச்சட்டம். (ஆட்சி.அக.ப.139)

கோடாளிக்கொண்டை பெ. பெண்கள் தலைமுடியை சுருட்டி முனையை மட்டும் உயர நீட்டி விட்டக் கொண்டை. (நாட்.வ.)

கோடானுகோடி பெ. பலகோடி. கோடானுகோடி வளம் குன்றாது குலவு குன்றக் குடிக் கோடான் (குன்றக்.முருக. பதி.3,12). கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக் கோடாமை கோடி யுறும் (பெருந்.415). கொடுத்து அழிந்தவர் கோடானு கோடியே (குமணசரித்.65). கோடானுகோடி கொடுப்பினும் (தமிழ்நா.40).

கோடி[1] பெ. 1.ஆடை. மின்னுக் கோடி உடுத்து (சிலப். 11,45). கோடி கடையு விரியார் (ஆசாரக் கோவை 44). பூசனை கந்தம் புனைமலர் மாகோடி (திருமந்.1086). மரு கோடி மன்னர் மதித்து ஏறி வந்த (பாரத வெண். 456). மேலோர் பருக்கோடி மூடி (ஐயடி.சேத்.6). நல்லபட் டாடைகண் மணிக ளுயர்த்த கோடிகொண் டருளு மென்று (பெரியபு.7,28). பயந் தருகோடி கூடப் பாகலந் தணிந்து (பாரதம்.7,3,159). பை அரைக் கோடி மின்னார்வரும் மயலால் (மறைசை அந்.15). சனிக் கிழமைக்குக் கோடி உடார் (சாத்.கும்மி 31). பட்டுச் சேலை கோடி வேட்டி பத்துவிரல் மோதிரம் (கண்ண.திரை. பா.2,471). 2.புதிய ஆடை. மந்திரக் கோடி யுடுத்து (நாய்ச்சி.தி.6,3). 3.புதுமை. கொடும் புறம் வளைஇ கோடிக் கலிங்கத்து ஒடுங்கினள் (அகநா.86). நூலவர் நொடிந்த நுழை நுன் கோடி (சிலப்.14,182). கோடிப் பட்டிற் கொள் கொடி (சீவக.2331). கோடி நூதன வங்கடி தேளபிந ... புதுமை (நாம.நி.563). தளத லென்றிடு கோடி கோடித யங்கு தேர் (நீதிநெ.பூ.சூரியன்.7). 4.இறந்த வர்கட்குப் போடும் துணி. (நாட்.வ.)

கோடி[2] பெ. 1.வளைவு. முளைத்திங்கட் கோடியென (திருவாரூர்க்கோவை 134). நீடி யுடற்றுங் கோடியிருக்கும் நெடுமுள்ளின் காடு (சானந்த.பு.3,3). 2.முடிமாலை. பாட முடிமாலை கோடி கரோடி (பிங்.1170).

கோடி[3] பெ. 1.நூறு நூறாயிரம். ஒன்றுபத்து அடுக்கிய கோடி (புறநா.18,5). கோடி மடங்கு யார் மாட்டும் கலவாமை கோடி உறும் (நாலடி.168). நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன (திருவாச.3,4). கொள்ளுங் குறையொரு கோடிசொல் லாநிற்பர் (அம்பி.கோவை 94). முந்துதமிழ் மாலை கோடிக் கோடி (திருப்பு.96). இது

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பேதம் கோடி கூறு இட்டு ஒரு கூறு உண்டோ இன்றோ என்று கூறுகின்றது (பிர.விவே.49 உரை). காகம் ஆனது கோடி கூடி நின்றாலும் (தாயுமா.பா.10,5). நாலு லட்சங் கோடுண்டு (பவளக்.மாலை ப.31). அமித கோடியா மறையவர் சிரஞ்சூழ்பதம் (திருவருட்பா 1960, 73). கோடி வைரம் தங்கத் தட்டில் வைத்தது போலும் (கண்ண.திரை.பா.2,9). 2.எண்ணின்மிகுதி. பூதசென் மங்கள் கோடி புனிதனாம் (கைவல்ய.1,4). கொம்மை மேளடகள் வலிபெறப் புனைந்துள கோடி (பாத்மோ.பு. 4,185). செஞ்சிகையிற் கண்டி கையைத் தரிக்கிலதன் பயன் கோடி (திருக்கழுக்குன்றப்பு. வசுதேவச்.46). எண்ணாத கோடி மகா தீர்த்தம் ஆடி (கபிலை.கோவை 7). கொல்லவே வந்தது கோடான கோடி பாணம் (மின். குறம் ப.53). தருபயன் கோடி (சிவஞா.காஞ்சிப்பு. வீராட்.33). கோடி குதிரையணி குறித்திருக்கும் சாலை (மதுரை.கதை ப.7). கோடிக் கொருநிமிடங் கொள்ளுகினும் (ஒழிவி.7,1). அடுத்தடுத்து ... கொடுத்தால் செல்வக்குன்று கோடியளவிருந்தாலும் குறைந்து மாயும் (புலவர்உள். ப.17). 3.தொகுதி. சீவகோடி (கைவல்ய.தத்.33). அஞ்சிறை அனி கோடி சூழும் தண்டுணர்ச் சோலை (செ. பாகவத.75). மிடைந்திடு கிரண கோடி (திருமழுவாடிப்பு. தேவாதி.48). 4.தொகை. மணிபுனை மகுட கோடி (யசோதர.42). 5.கூட்டம். என்கிற எங்கள் கோடியிலேயாக வேணும் (திருப்.அவ.மூ.பத்.2 ப.75). 6.அநேகர். தொழுவா ரழுதுநைவார் தொக்கோர் கோடி (சீவக.645). 7. 64 அக்குரோணிகொண்ட பெரும்படை (பிங்.1652) 8.இருபது. கோட்டிப் பட்டின் (சீவக.2331 உரை). 9.வரிசை. ஆயுத கோடியினும் ஆபரணகோடியிலும் (சூடா). அதிர்ந்தன புவனங்களில் கோடிகள் (திருக்கழுக் குன்றப்பு.காரூடச்.9).அநுட்டானமும் அநநுட்டானமும் உபாய கோடியில் அந்நவயியாது (பரீவசன.ப.204). 10.நுனி. சட்கோடி மாணிக்கமொன்றும் (கு.சோ.உலா 469). கூலலொன்றகழ்ந்தான் வில்லின் கோடியால் (சேதுபு.இராமனரு.95). வல்விற் கோடியாலெறிந்து சாய்த்து (செ.பாகவத.4,3,966). 11.இறுதி, முடிவு. திருக்கோடி காவி லமர்ந்த தேவர்சி காமணி தன்னை (பெரியபு.28,292). நாட்டின் கோடியில் அமைத்துள கலப்படை அறியார் பகைவர் (அனிச்ச அடி.ப.147). 12.1.வாள்முனை. (யாழ்.அக.) 12.2.முனை. இமையோர் மகுட கோடிக ளொன்றொடொன் றுரிஞ்சிடு மாண்பால் (மருதபு.நகரச்.9.) 13.விற்குதை. (யாழ். அக.) 14.கடலுட்செல்லுந்தரைமுனை. கோடிக்கரை (செ.ப.அக.). 15.திசையின் முடிவு. கானுறு கோடி கடிகமழ் சந்தனம் (திருமந்.1452). 16.முடிந்த இடம். சிவங் கோடி விட்டுச் செறிய இருந்து (திருமந்.759). 17.விளிம்பு. சட்கோடி மாணிக்கமொன்றுஞ் (கு.சோ. உலா 469). 18.வீட்டின் புறக்கோடி. (வின்.அக.) 19.சேனையின் பிற்கூழை. உரமுதற் கோடியீறாயின (குறள்.767 உரை). 20.எல்லை. காம கோடியா முடிவிற் பயில்வது வீடுபேறு (சிவஞா.காஞ்சிப்பு.வீராட். 37). அறிவின் கோடியார் (கம்பரா.2,11,13). 21.க்லிங்கு. ஏரி கோறியோடுகிறது (அரசிதழ்). 22.உச்சி. சுரர் சென்னி கோடி பட்கீடா (திருக்கண்ண.மாலை 59). 23.மலைச் சிகரம். நவகோடி மலைகளின் சிகரம் (தக்கயாகப்.4 உரை). கோடி மலையைக் கடலாக்கி (திருவேங்.வண்டு. தூது 97). 24.முடியுறுப்பு. வானவர் மகுட கோடி (திருவிளை.பு.கடவுள்.17). 25.பட்டம். சட்கோடி மாணிக்க மொன்றுஞ் (கு.சோ.உலா 469). 26.சாத்திர விவாதத்தில் மேன்மேற் கூறும் விசயம். (செ.ப.அக.) 27.வயிரக் குணங்களுள் ஒன்று. (சிலப்.74,180 உரை). 28.குறிப்பு. கோடி கண்டால் விடுவாரோ (வின்.அக.). 29.வேள்வி. கோடி முயலும் பேறு இயலும் (தந்திவனப்பு. 337). 30.பண்வகை. கோடி விளரி மேற்செம் பாலை (சிலப்.3,88). 31.இளமை. (யாழ்.அக.)

கோடி[4]-த்தல் 11வி. 1.அலங்கரித்தல். அதனை இங்ஙனம் கோடித்து ... ஆரத்தை அணிந்து (சீவக.456 உரை). கோடித் தன்ன கோடுசால் வையத்து (பெருங்.2,8,185). கொங்கலர்தண் பொழில் மூதூர் வதுவைமுகங் கோடித்தார் (பெரியபு.12,19). அபிடேக நாளென்று முழுமுர சறைந்து நகரி கோடித்து (பாரதம்.1,6,3). கடிமண்டபமுன் கோடிப்ப ... பணித்தான் (சிவஞா-காஞ்சிப்பு.திருமண.4). 2.அழகுபடுத்தல். கச்சுவாய் கோடித்து முத்துப்புரி நாற்றி (பெருங்.2,2,112). தன்னகரி கோடித்து தண்டலைகள் எண்திசையும் பொன்னகரி போலப்பொலிந்து (பாரத.வெண்.148,1). 3.அணிசெய்தல். கோடித் தன்ன கோசால் வையத்து (பெருங்.2,8,185). 4.அமைத்தல். கடிமண்டபமுன் கோடிப்ப (சிவஞா.காஞ்சிப்பு.திருமண.4). 5.மனோரதஞ்ச செய்தல். கண்ணாலங் கோடித்து (நாய்ச்சி.தி.10,9). 6.பிரார்த்தித்தல். (யாழ்.அக.)

கோடி[5]-த்தல் 11வி. 1.முழங்குதல். கூறு கடல் முரசம் கோடிக்க (மு.உலா 367). 2.ஒலித்தல். (யாழ்.அக.) 3.புதுப்பித்தல். (முன்.)

கோடிமண்வெட்டி பெ. முனை தேயாத புதிய மண் வெட்டி. (ரா.வட்.அக.)

கோடிமுரிதல் பெ. வயிரக்குற்றம் பன்னிரண்டனுள் காகபாதம், களங்கம், விந்து, அரேகை யென்னும் நான்கு குன்றமுமின்றிக் கோடியும் பலவகையு முள்ளன நல்லவயிரம். (சிலப்.14,180 உரை).

கோடி பெ. நூறு லட்சம். பல கோடிப் பொருளைப் பெறினும் (குறள்.955 மணக்.).

கோடிக்கரை பெ. 1.தனுக்கோடி முதலிய தீர்த்த கட்டம். (செ.ப.அக.) 2.ஓரூர். (யாழ்.அக.)

கோடிக்கரையான்தோணி பெ. கள்ளத்தோணி. (இலங்.வ.)

கோடிக்கல் பெ. கட்டத்தின் மூலைக்கல். (வின்.அக.)

கோடிக்கலிங்கம் பெ. புதிய ஆடை. காடி கலந்த கோடிக் கலிங்கம் (பெருங்.1,54,9).

கோடிக்காரன்[1] பெ. சீபாதந்தாங்கி. (செ.ப.அக.)

கோடிக்காரன்[2] பெ. லேவாதேவி செய்யும் மார்வாரி வியாபாரி. (முன்.)

கோடிக்குத்தல் பெ. தெருப்பாய்ச்சல். (நாட்.வ.)

கோடிக்குழகர் பெ. கோடிக்கரைச்சிவன். கோடிக் குழகரருட் கோலமே (திருவருட்பா 1962,191).

கோடிகம் பெ. 1.பூந்தட்டு. பூ நிறை செய்த செம்பொற் கோடிகம் (சீவக.2707). கொந்துமொய்ம் மலர் நிறை கோடி கங்களும் (சூளா.1886). கோடிகம் வட்டில் ... வாளிவை தாங்கி ... தானவர் நிற்ப (கந்தபு.3,12,20). குருமணிக் களாஞ்சி யம்பொற் கோடிகந் தாங்க (திருவிளை.பு.52,100). இருபுறத்தமர மாதர் கோடிக மேந்திச் சூழ (திருக்குற்றா.பு.13,78). 2.சீலை. பூவின் நட்டும் புடைவையுங் கோடிகம் (பிங்.3447) 3.அணி கலப் பெட்டி. சீர்வசன பூடணஞ் சேர்தரும் ஓர் கோடிகம் என்றனரே (வைண.ஆசா.2,6,50). 4.ஆடை. செங் கோடிகமும் வெண்பாற் றவிசும் (பெருங்.1,57,43). மந்திர விதியிற் கோடிக முடுத்து மணமாலை (பது.பரிண. ஒ.66). கோடி பஞ்சி தானைபடாங் கோடிகம் (நாம.நி. 451).

கோடிகர் பெ. ஆடை நெய்வோர். குதிரைப் பந்தியுங் கோடிகர் வரைப்பினும் (பெருங்.2,8,67).

கோடிகாட்டு-தல் 5வி. இலேசாக விளக்கினால் புரிந்து கொள்ளுதல். அவனுக்கு ஒரு விசயத்தைப் பற்றிக் கோடி காட்டினாலே பிடிச்சுக் கொள்வான் (இலங்.வ.).

கோடிகாண்பி-த்தல் 11வி. 1.குறிப்புக்காட்டுதல். (நாட்.வ.) 2.சுருங்கச் சொல்லிவிளக்குதல். (யாழ்.அக.)

கோடிகை பெ. பூந்தட்டு. கோடிகைத் தலத்தன குளிர் மணிப் பிணையலே (சூளா.467). வன்ன மணிக்கா சிட்டிழை கோடிகை மேனகை கொண்டாள் (திருவிளை. பு.5,168).

கோடிச்சீலை பெ. இறந்தவர்க்குப் போடும் துணி. கோடிச் சீலையின் நூல்கள் (சாத்.கும்மி 526).

கோடிசீமான் பெ. பெருஞ்செல்வன். (செ.ப.அக.)

கோடித்தரை பெ. விளைநிலமாகப் புதிதாய் வெட்டித் திருத்தப் பட்ட பூமி. (யாழ்.அக.)

கோடிதீர்த்தம் பெ.தனுக்கோடி முதலிய கோடிக்கரை. (சேதுபு.கோடி.1)

கோடிதூங்கி பெ. 1.வேலையில்லாது சோம்பித்திரி பவ-ள்-ன். (இலங்.வ.) 2.வீட்டுக்குவீடு போயிருக் கிறவன். (யாழ்.அக.)

கோடிதூங்கு-தல் 5வி. (தூங்கி உறங்குதல்) சோம்பித் திரிதல். (இலங்.வ.)

கோடிப்பருவம் பெ. இளமைப்பருவம். (யாழ்.அக.)

கோடிப்பாம்பு பெ. பழக்கப்படாத நாகம். வெட்ட வெளியிலே கோடிப்பாம் பாடுமோ (திருக்குற்றா.குற.124,31).

கோடிப்பாலை பெ. →கொடிப்பாலை. (சிலப்.3,71 கீழ்க்குறிப்பு)

கோடிப்பாளைக்கருக்கு பெ. கோடிகளில் ஏற்படும் சந்தை மறைப்பதற்குச் செய்யும் அணி அல்லது உத்தி. (சிற்.செந்.ப.113-114)

கோடிப்புனல் பெ. →கோடிக்கரை-1. திருமா லரனுக் கபிடேகஞ் செய்யச் சிலையதனால் வருமாறு கண்டவண் கோடிப் புனற்கண் மகாலயத்தை (பெருந்.1916).

கோடிப்போடு-தல் 6வி. கணவன் இறந்தவுடன் விதவைக்கு உற்றார் புதுப்புடைவையிடுதல். (நாட்.வ.)

கோடிபத்து பெ. அற்புதம். கோடி பத்தே யற்புத மாகும் (பிங்.2268).

கோடிமடி பெ. கூறைப்புடவை. மங்கல வனப்பினதொர் கோடிமடி தாங்கி (சூளா.1093).

கோடிமாசிலை பெ. கோடிசிலை,சுரமை நாட்டிலுள்ள ஒரு மலை. குறுகினன் கோடிமா சிலைவன் குன்றமே (சூளா.1511).

கோடிமாடம் பெ. மேல்மாடி. கொண்டகோல நீரவாய கோடிமாட மேலெலாம் (சூளா.479).

கோடிமுடி-தல் 4வி. தன்னை விருந்திற்கு அழைக்கும் படி மணமகன் முதலியோருடைய புதிய ஆடையில் பணம் முடிதல். (இலங்.வ.)

கோடிமுடிதல் பெ. ஓர்விளையாட்டு. (யாழ்.அக.)

கோடிமுரிதல் பெ. வயிரக் குற்றம் பண்ணிரண்டனுள் ஒன்று. (சிலப்.14,180 உரை)

கோடியர்[1] பெ. 1.கூத்தர், கூத்தாடுவோர். முதுவாய்க் காடியர் முழவின் ததும்பி (குறுந்.782). குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த (சிறுபாண்.109-110). கொடும்பறைக் கோடியர் (மதுரைக்.523). பயனுடை யெழாஅற் கோடியர் தலைவ (பொருந.56-57). தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும் (அகநா. 111,9). மாறுகொண்ட கோடியர் மணிமு ழாமுழங்கலின் (சூளா.796). பாணருங் கோடியரும் (கு.சோ.உலா 609). கோடியர்க்கே கூடார்நா டெல்லாங் கொடுத்து (பெருந்.499). பாணனொடு பாடினியுங் கோடியரும் மெல்லிசையா னாடும் விறவியரும் (பாரிகாதை 98). 2.யாழ்ப்பாணர். கோட்டியர்போல் யாழிற் பருக விசைதொடுமி னேழிசையில் (பாரிகாதை 395).

கோடியர்[2] பெ. கோடிக்கணக்கானவர். தன்னிடைப்பல கோடியர் வீரரைத் தந்தான் (திருக்குற்றா.பு.14,6).

கோடியர்[3] பெ. சிவிகையின் முன்பின் முனைகளைத் தாங்கிச் செல்வோர். கண நாதரா மெனையர் துன்னு பற்பல கோடியர் சூழ்வந்து தொழுதார் (ஆளவந். காஞ்சிப்பு.870).

கோடியன் பெ. பல்லக்கு அல்லது வாகனஞ் சுமப்போன். (நாட்.வ.)

கோடியில்லாமை பெ. வயிரக்குற்றம் பன்னிரண் டனுள் ஒன்று. (சிலப்.14,180 உரை)

கோடியுடம்பு பெ. மெல்லிய உடம்பு. (இலங்.வ.)

கோடியோடு-தல் 5வி. ஏரி நீர்நிரம்பி வழிதல். (செ.ப.அக.)

கோடிரம் பெ. 1.சடை. மதியணி கோடிரத்தன் (குன்றக். முருக.கலவி.வண்.1,16). 2.சதுரக்கள்ளி. (யாழ்.அக.)

கோடிரவம் பெ. →கோடிரம்-2. (மலை அக.)

கோடிலம் பெ. ஒரு வகை வாசனைப் பண்டம். (முன்.)

கோடிவங்கம் பெ. வங்கமணல். (போகர் நி.33)

கோடிவஞ்சி பெ. சிறுகுறிஞ்சான். (சித்.பரி.அக.ப.86)

கோடிவயது பெ. →கோடிப்பருவம். (யாழ்.அக.)

கோடிவெள்ளை பெ. புதிய ஆடையின் முதல் வெள்ளை. (செ.ப.அக.)

கோடீகரி-த்தல் 11வி. தொகுத்துச் சொல்லுதல். (முன்.)

கோடீச்சுரன் பெ. பெருஞ்செல்வந்தன். கோடீச் சுரனுதவு கோடி விநாயகவிக் கோடீச் சுரக்கோவை கூறுவிப்பாய் (கோடீச்.கோவை காப்பு.).

கோடீசுவரன் பெ. →கோடீச்சுரன். (செ.ப.அக.)

கோடீரம் பெ. சடை. கோடீரஞ்சேர் குழகன் மகிழ்வென்றி மணிக் கண்டிகை (ஞான.உபதேசகா.513). கோடீர மீது துனிதிரைக் கங்கை சூடி (திருவாலங்.பு.நிருத்த.5). குருக்குமதிக் கோடீரக் கடவுள் (திருச்செந்.பு.15,1). வெண்ணிலவு விரிந்த கோடீரம் (மதுரைக்.கலம்.01). கோடீரக் கமலத்தோன் (திருநெல்.பு.காம.99). கோடீர முற்றதென மதலையை (கோமதி.பிள்.9). கோளீத்தாரார் குரைகழற்கால் (சிங்.சிலே.வெண்பா.). அழகுவாய்ந்த கோடீரத் தயங்கு வாள்முகமும் (முருகன் பூண்டிப்பு. கருத்.2,53). மாகமொடு தாலம் பணிந்திடுவார் தாழ் பவளக் கோடீரமேல் அம்பு அணிந்திடுவார் வீடு (திருப்புலி.வெண்.71). சடை குடிலம் சடிலம் கோடீரம் (அபி.மாலை 500). 2.சடைமுடி. ஆயி நித்தியே கோட்டீர மாதவி (திருப்பு.1009). கோடீரத்தின் மேலேந்தி (அரிச்.பு.6,16). விந்தையார் கோடீர மதிவனைந்து (திருக்குற்றா.பு.5,38). 3.சடைமயிர். (ஆசி.நி.93)

கோடீரன் பெ. (சடையுடையோன்) சிவன். நீர்க் கோடீரன் விடுசூலை குடர் (ஞான.உபதேசகா.8). ஆறுபுனை கோடீரன் அடியவரை மதியாது (கருவூர்ப்பு.13,15).

கோடு[1] பெ. 1.வளைவு. இரு கோட்டிளந் திங்கணுதலும் (சொர்ண.பிள்.10,4). கோடாதன உயர்கோலொடு குளிர் மாறில குடையும் (தேம்பா.1,2,6). கணை கொடிது யாழ் கோடு செவ்விது (குறள்.279). உட்கோடு கேயூரத்தூடெறிப்ப (கு.சோ.உலா 470). செஞ்சடைக் கோட்டிளந் திங்கள் (பெருந்.50). கொடுவெஞ் சிலைவாய்க் கணையிற் கொடிதாய் (சீவக.1520). கோட்டிளாங் குழவித் திங்க ளிரண்டன்ன வெயிற்றுக்கோளே (சீவக.1739). 2.நடு நிலை நீங்குகை. கோடிறீக் கூற்றம் (நாலடி.5). 3.யானைப் பன்றிகளின் தந்தம். மத்த யானையின் கோடும் (தேவா.39,1). 4.விலங்கின் கொம்பு. கோட்டிடை யாடினை கூத்து (திவ்.இயற்.திருவிருத்.21). 5.ஊது கொம்பு. நீர்மணக் கோட்டினர் (பரிபா.6,34). கடுங்கட் காவலர் கொடுங் கோடு சிலைப்ப (பெருங்.1,58,25). கோடுவாய் வைத்தனன் எழுந்தான் (செ.பாகவத.10, 5,9). உகந்த தடியும் கோடும் மணி கஞ்சுகமும் (சீகாழி.பு.பூத.32). 6.மூங்கிற் கொம்பாலாக்கப்பட்ட குழல். கோமேவு திருமான்மத் தளமுழக்கித் தித்திமி தெய்க்கோடேய்ந் தூத (தென்காசித்.பு.கடவுள்.4). 7.நீர்வீசுங் கொம்பு. நீர்மணக் கோட்டினர் (பரிபா.6, 34). 8.யாழ்த்தண்டு. மகர யாழின் வான்கோடு தழீஇ (மணி.4,56). பருக் கோட்டு யாழ் (பரிபா.10,56). கருங் கோட்டுச்கீறி யாழ்ப் பாணர் ஆர்ப்ப (அகநா.331). கருங்கோட்டுச் சீறியாழ் (புறநா.127,1). சூழ் மணிக் கோட்டு வீணைச் சுகிர்புரி நரம்பும் (சீவக.728). கோடுமிலைந்தான் (திருக்கோவை 149). 9.கெகே முதலியவற்றின் தலைப்பிலுள்ள கொம்புக்குறியீடு. விலங்கு பெற்றம் கோடு பெற்றம் புள்ளிபெற்றம் (தொல். எழுத்.17 உரை). உருவுதிரித லாவது ... கோடு பெற்றும் ... உயிர்த்தலாம் (தொல்.எழுத்.17 நச்). 10.பிறைமதி. மதிதவழ் நிலவொடு மணிவெயில் பொதுளிய கோட்டனை (கமலாம்.பிள்.3). 11.சங்கு. கோடு ஈர் எல்வளைக் கொழும்பல் கூந்தல் ... மடவரல் (ஐங்.196). கோடுடையும் பூங்கானற் சேர்ப்பன் (புறப்.வெண்.308). கோடுமுழங் கிமிழிசை யெடுப்பும் (பதிற்றுப்.50,25). சங்கு தோலாக் கோட்ட (பரிபா.3,87). வலம்புரி கோடு வளை...சங்கு (உரி.நி.139). கோட்டுப் பூண் மாதர் கொழுநரொடும் கூடி (குருகை.60). கோடு புளினத் துயிர்த்த முத்தும் (ஞான.உபதேசகா.2439). கோடு கொண்டு எழும் திரைக்கடல் பவளமென் கொழுந்து (பெரியபு.19,41). கோட்டு வான்மதிக் குழவி (செ. பாகவத.8,2,9). சூற்பெறு வெண் கோடு உந்து அலை ... தலை வளைப்பார் சோர்வு (திருப்புலி.வெண்.94). 12.நத்தை. (முன்.) 8.வஞ்சனை. (முன்.) 13.சுழி. (முன்.) 14.குலை. (பிங்.) 15.மயிர்முடி. குரங் கூந்தற் கோடு (கலித்.72,20). 16.மலைச்சிகரம். பொற்கோட்

டியமும் (புறநா.2,24). கோட்டு கடபந்து தணிவரை (அழகர்.கலம்.59). கோடு உயர் பன்மலை (ஐங்.358). கோடு உயர் பிறங்கல் மலை (ஐங்.318). அண்ணல்வல நெடுங்கோட்டு இழிதரு தெண்ணீர் (குறிஞ்சிப்.54). வெள்ளியங்கோடு ஒன்று திருமாற்கு உளது (சிவப்பிர.விசா.239). 17.மலை. குமரிக் கோடும் (சிலப்.11,20). 18.குன்று. கொண்டல் பயில் மணற் கோடு சூழ்கோடிக் குழகர் தமை (பெரியபு.28,922). 19.மேட்டு நிலம். விடுகணை வில்லொடு பற்றி கோடு இவர்பு வருநர்ப் பார்க்கும் (குறுந்.274). நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய (மதுரைக்.286). 20.கோபுரங்கள். கோடுயர் மழைதவழ் மதலைய மாட மேறினான் (சூளா.1130). கோயில் முகத்தது கோடுயர் சூளிகை (சூளா.658). 21.குவடு,கோடிகம். கோடு போற் குவித்திட (திருப்பெருந்.பு.33). கோடுகாய் கடற்ற காடு இறந்தோரே (அகநா.395). கோடுயர் வெற்பன் கூப்பிய கையொடு (புற.வெண்.322 கொளு.). 22.குவியல். அடும்பு இவர் மணற் கோடு ஊர நெடும் பனை (குறுந்.248). 23.அடுப்பிலமைக்கப்படும் கொண்டைகள். பல்கோட்டு அடுப்பில் பால் உலை இரீஇ (அகநா.141). 24.புடைப்பு. புன் கோட்டு அரில் இவர் புற்றத்து (அகநா. 257,18). 25.1.கூட்டம். கோடு கழல் கண்டல் (கு.சோ. உலா 32). 25.2.திரள். கோடு கழல் கண்டல் (கு.சோ. உலா 32). 26.வரி. (முன்.) 27.வரிசூழ்ந்த விடம். (முன்.) 28.ஆட்டம் முதலியவற்றுக்காக வகுத்த தானம். கோடின்றி வட்டாடல் கொள்வதொக்கும் (தாயுமா. பா.நினை.2). 29.வரப்பு. குடந்தை அம்செவிய கோட்டு எலி (புறநா.321,5). 30.வரம்பு. கொடுந் தானைக் கோட்டழகும் (நாலடி.131). 31.எல்லை. நாடு மொழிப் போர்களால் கோடழியும் (இ.ஒ.ப.44). 32.நீர்க் கரை. குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று (குறள்.523). தோட்டமும் படுவும் கோட்கச் கோடும் (பெரும்.1,49,2). குறியார் திரைகள் வரைகள் நின்றும் கோட்டாறு கறியார்கழி சம்பிரசங் கொடுக்கும் கலிக்காழி (தேவா.1,102,6). அணி வண்டு குமிர் மணற்கோடு (பரிபா.20,23-24). 33.குளம். கோடெலா நிறையக் குவளையம் மலரும் (தேவா.425,4). 34.நீர்ப்பெருக்கு. பூங்கோடு வாழையும் கொண்டுக டந்ததே பூந்துறைப்பு.38). 35.விளிம்பு. தழை அணி பொலிந்த கோடு ஏந்து அல்குல் (அகநா. 201). 36.காலவட்டம். கலியுகக் கோட்டுநாள் (T.A.S.H.O.P.5). 37.ஆடைக்கரை. கொடுந் தானைக் கோட்டழகும் (நாலடி.131). 38.நுனி. சாந்தின்மேற் றொடுத்த தீந்தேன் றண் மதிக் கோடு போழ (சீவக.1820). கோட்டு இளம்பிறை சூடிய குழகனோ (செ.பாகவத.10, 1,6). கோட்டின் மாதுமெய் தீண்டலும் (தேவி.மா.3,4). 39.முனை. கோடுகூடு மதியம் (பதிற்றுப்.31,12). 40.மரக்கிளை. கோடு உளர் குரல் (பரிபா.22,46). ஆடு கோடாகி அதரிடை நின்றதூஉங் காழ்கொண்ட கண்ணே களிறணைக்கும் கந்தாகும் (நாலடி.192). கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக் கோடு கொடேலும் என் நெஞ்சு (குறள்.1264). குளந்தொட்டுக் கோடு பதித்து (சிறுபஞ். 66) நெடுமர நீள் கோட்டு (இன்.நாற்.31). ஒரு கோட்டின் நிற்கும் இரு கனி போல (திருவாரூர்க்கோவை 92). பூங் கோட்டுச் சந்தனமும் (குருகை.83). கொங்கவிழ் மலர்மென் கோட்டுக் குளிர் நிழற் கற்பகம் (கச்சி. காஞ்சிப்பு.தீர்த்த.73). படர் மரத்தின் கரிய கோட்டில் புள்ளுறங்கும் (அனிச்சஅடி ப.28). கோட்டுப் பூ மீதில் அந்தக் கொம்பனையாள் மாலானாள் (கூளப்ப.காதல் 153). 41.பணை. நீயுநின் கோடெலா முன்னங் குழை (புற.வெண்.243). 42.களைக் கொட்டு. கோடுடைக் கையர் துளர் எறிவினைஞர் (அகநா.154). 43.பக்கம். திருந்திழைத் தயல்வுக் கோட்டு அசைத்த பசுங்குழை (குறுந்.294,6). கோடேந்து அல்குல் (நற்.368). நின் கோடு ஏந்து புருவமொடு குலவுநுதல் நீவி (அகநா.39,2). கோடெழில் அகலல்குல் (கலித்.67,10). கோடுயரடுப்பு (புறநா.164). கோடு ஏந்து அல்குல் (ஞானாமிர்.35,9). கலைக்கோட்ட வகலல்குற் கணங்குழையார் (சீவக. 2234). என் கோடு கைப் பிரியாள் (ஐந்து.நா.ப.193). 44.பாதை. வரும் கோடு களைப் போட்டு முடித்தேன் (இயேசுகா.ப.125). 45.கொங்கை. கோடு அணிந்த முத்தாரம் (பரிபா.21,61). 46.மனைமுடி. கோடெலாங் கொடிகளில்லை (இராவண காவி.5,16, 18). 47.ஒப்பு. பிரியமுடன் ஒரு கோட்டுப் பெண்க ளெலாம் நீராடி (கண்.பள்.59). 48.அழிவு. கோடு அருஞ் சீர் நாடிதுவே (தேம்பா.1,1,59). 49.நெற்றா ளைச்சுற்றிப் பிடித்துக் கதிர் அடிக்கப் பயன்படும் கயிறு. அவன் கோடு பிடிப்பதில் திறமையானவன் (தென்.வ.). 50.பிரமனது தலையைக் கிள்ளியபின் இறைவன் ஆடும் கூத்து. பாண்டிரங் கோடு சங்காரம் (திருமந.2733). 46.மனை முடி. கோடெலாங்கொடி களில்லை (இராவண காவி.5, 16,18). 51.உமை. கோட்டு மூலையால் குறிப்படுத்திப் பூந்தாமம் ஆட்டும் பெரிய தடம் தோள் (மயிலை.உலா 234). 52.அரணிருக்கை. (வின்.அக.).

கோடு[2] பெ. 1.கொடுமை. கோடற வைத்தகோடாக் கொள்கையும் (பதிற்றுப்.37,1). 2.வஞ்சனை. (யாழ்.அக.).

கோடு[3] பெ. நீதித்தலம்.(செ.ப.அக.).

கோடு-தல்[4] 5வி. 1.வளைதல். கொடு வில் எயினர் பகழிமாய்க்கும் (குறுந்.12).செங்கோல் கோடியோ (மணிமே.28,188). கோடிச் செம்கொற் கொம்பரின் ... தொழுவாரும் (சீவக.2331). கோடாத செங்கோல் நடத்தும் தருமன் (பாரத வெண்.345,2). வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன கோடிய சிலையின்

கொற்றவம்பினன் (செ.பாகவத.பு.3,955). கோடிய வில்லெடுத்த (இறைவாச.பு.241). தெய்வ அயோத்தியை அரசாள ... பெருக சந்ததி யில்லாமல் வாடிடுவார் கள் மெத்தக்கோடிடுவார் (அயோ.கதை). கடுகளவேனும் பயிற்பொடு கோடுதல் பாவையர்க் கழகே (அறு.இலக். 32). கோடிய புருவக் குமுதவாய் காக்க ஏற்ற வினை களை யாற்றுவென் (அனிச்சஅடி.ப.158). 2.நெறி தவறுதல். நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க் கணி (குறள்.115). கோடருங் கோடிக் கடுவினைய ராகி யார்ச் சார்ந்து (நாலடி.124). கோத் தொழிலாளரோடு கொற்றவன் கோடி (சிலப்.11,60). கோல் தாங்கிக் கோடும்-அரசிற்கு உரியாமே (இன்னிலை 17). ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும் கோடு கின்றார் (ஐயடி.கேத்.). கோடாத நீதி அளகாபிரியிற் குபேரனைப் போல் (ஆதி.வ.கோவை 23.). செங்கோல் நிலைமையது கோடாமலும் ... நீள் சத்திய மிகுதானமும் (கயிலாச.சத. 4). கோரும் பல பாவம் புரி கொடியீர் (ஞானந்த.பு.3,24). 3.நடுநிலைமைப் பிறழ்தல். கோடாமை சான்றோர்க் கணி (குறள்.118). முது நெறி கோடிய மூர்க்கன் (சிவஞா.காஞ்சிப்பு. இரேணு.3). கோடாது உயிர் வகை செய்வினைக் கேற்று (பச்சை.அம்.பிள்.காப்பு.8,1). 4.வெறுப்புறுதல். வாடாமல் எவ்வுயிர்க்கும் மாப்பழுத்தால் போன்று செல்வம் கோடாது அளிக்கும் குருகையே (குருகை.93). 5.வழுவுதல். முறைநிலை கோடா அரசும் (திரிகடு.34). வென்றி வேல் போல் சிவந்து நெறிமுறை கோடிய வேந்தன் (தஞ். கோவை 68). 6.சாய்தல். மலர் மா முகம் கோடினாள் (அரிச்.பு.8,43). 7.மாறுபடுதல். கோடாக் குரு குலத்தை விளக்கிட்டானை விளக்கினாள் (சீவக.2605). கோடாத சதுருபாயம் (குமரேச சத.3). 8.வேறுபடுதல். சித்தம் கோட மலைத்தேனே (சமுத்திரவி. 60). 9.குறைதல். கோடாமல் பெரியவர் பால் நடப்பதன்றி (தண்டலை. சத.33). விண் இறையோன் கோட்டாவரத்து ஆசிசெய் (தேம்பா. 1,3,57). தினைப் பொழுதாகிலும் நாக் கோடாமல் ... தினம் நினைக்க (தெய்.மாலை அம்மன் 4). 10.வாட்டமடைதல். முகம் கோடியும் நான் இருந்தேனே (சமுத்திரவி.80). 11.குறுகியிளைத்தல். (சிலேடை இலக்.ப.258) 12.எரிதல். (யாழ்.அக.) 13.கைப் பற்றுதல். ஊர்ப் புறத்து ஒன்றிய ஒன்னலர்க் கோடாமல் கோட்டையைக் காக்கும் கொள்கை (பிரபந்ததீ.47). ஒழுந்தருளினானென்றே எண்ணங் கோடும் (குசேலோ. 327).

கோடுக்காய்ப்புளி பெ. →கொடுக்காய்ப்புளி. (செ.ப. அக.)

கோடுகச்சேரி பெ. வீணை வகை. கருவிகளுள் ஒன்றில் இசைப்பது கோடு கச்சேரிக்குக் கூட வேலை அதிகம் என்றால் பாருங்களேன் (புத்.வீ.ப.).

கோடுகீறு-தல் வி. →கோடிகாண்பி-த்தல். (நாட்.வ.)

கோடுதி பெ. நெறி தப்புதல். கோடுதியே கொள்ளாது உலகம் குறுகாள் திருநம்மை (பாரத வெண்.44,2).

கோடுபிடி-த்தல் 11வி. (கோடுபிடி) நெல் அரியைக் கயிற்றில் வாங்குதல். கோடு பிடிச்சு நெல்லை அடிங்க (நாட்டுப்.க.ந.ஆய்வு.பி.சே.).

கோடுறு-தல் வி. கோணலாதல், அரக்கர் தாழ்வுறுதல். கோடுறும் உளத்தார் அறிந்திலர் என்னா (மேகநா.3,1).

கோடுறுகரன் பெ. பாஞ்ச சன்னியம் என்னும் சங்கை ஏந்திய திருமால். கோடுறு கரனும் பண்டரங்கனை நணுகி (மருத.பு.நகரச்.2).

கோடைச்சேரு (கோட்டைச்சேரி) பெ. கட்டிய கோட்டை களை ஒன்றாக அடுக்கி (சுமார் 50 அல்லது அதற்கு மேற்பட்டு) பாதுகாக்க வைக்கோலால் கட்டப்படும் சிறுவீடு போன்ற அமைப்பு. (நாட்.வ.)

கோடை[1] பெ. 1.மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசும் காற்று, மேல்காற்று. கோடை அவ்வளிகுழல் இசை ஆக (அகநா.82). ஆடு அரைபுதையக் கோடை இட்ட ... மணல்கோடு (குறுந்.248,4). கோடை நீட்கு குன்றம் புல் என (புதிற்று.288). கோடையொடு புகுந்து கூடலாண்ட (சிலப். 14,123). கோடை தூற்றக் கூடிய வூழிலை (ஞானாமிர். 28,12). கோடையினுந் தீது (கு.சோ.உலா 238). ஓடையும் கோடையும் ஓடும் (இரட்ச.சரி.156). வாடை யொடு கோடையுமே ஊதையும் இங்குன்னைப் போலத் தென்றலே (சரபேந்திர.குற. 21,3). கோடை வசந்தா டவி தழைத்த வாறாய் (திருக்காளத்.உலா 549). 2.வேனிற் காலம். கொண்டல் கொண்ட நீர் கோடை காயினம் (புறநா.137,7). கலிக் கோடை மண் மேல் மழையும் மந்தாரமும் வந்தன (தஞ்.கோவை 99). கோடையில் ஐவகை நெருப்பின் அழுவத்து நின்று (பட்டினத்தார். பா. மும்.கோவை 19,18). வெண்ணிலாப் பொழிந்து திக்கெலாங் கோடையை மாற்றி (கமலா.பிள்.4). குளிர்மழை ... கோடையே பரந்தவாற்றால் (திருக்குடந்.பு.43,28). கோடையால் வற்றிப் பெய் கொண்டலால் ... ஒகைச்சிந்தையான் (தேம்பா.1,8,36). கோடையிற் றண்ணீரும் குடைவிசிறி தொடு தோல் கொடுப்பவன் (கறுப்பண்ண.சத.59). கோடையெலாம் என் மீதிற் கொண்டு வந்து விட்டீரே (கூளப்ப.காதல் 333). கோடை போய்விட்ட சோபனங்கொண்டு (முக்.பள். 17,5). தழல்பெயும் கோடை (பாரதிதா.குயில்.ப.12). 3.வெயில். வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப (திருவாச.3,71). 4.வெப்பம், வெம்மை. கோடையுங் கொண்டலுங் கண்டறியாத (அம்.கோவை.151). காடையுருப்ப நாவறந்து (திருவாலங்.பு.கிராதன்.16). கோடைதனில் ஒரு குடம் நீர் வண்மைதானே (தண்டலை.சத.48). தோகை மயிற் கோடை யகன்று

எய்துவபோல் பகை நீங்கிப் போனார் (தித்தோ.அம்.5 க.30). தனிலே தண்ணீர் ஓடை கண்ட மான்கள் போல (இராமநா.1,11 திதை.2). பூ மருவு புதல் பூடு கோடையில் தீய்ந்திடும் (குமரேச சத.48). கோடை வெயிலினால் ... வேர்த்த முகம் (சேத்திரக்.பிள் 5,6). புழுக்கம் நிரக்கும் கோடை (தென்காசித்.பு.நாட்டுச்.4). கோடையில் வாழ்வின் குறிக்கோளாக (மனித.தேடு.ப.107). கோடை யரிய குளிர் மென் கமழ் காலால் (ராரிகாதை 20). 6.கோடைப் பயிர். (செ.ப.அக.) 7.→கோடைக் கானல். வெள்வீ வேலிக் கோடைப் பொருந (புறநா.205,6). 8.துயிலி என்னும் ஊருக்கு அருகில் உள்ள கோட்டூர். வள் வாய் அம்பின் கோடைப் பொருநன் (அகநா.13,10). சீர் ஓங்கும் பொழில் கோடைத் திரை போக்கிய சுந்தரனே (கரு.5,1). 9.ஒளி. (யாழ்.அக.)

கோடை² பெ. குதிரை. சுருதிச்சயக் கோடையாம் பல்முத்தே (மறைசை.அந்.92). உம்பல் தேர் காலாள் வேகக் கோடை (திருக்கோவல்.புரா.மெய்ப்.14). கோடைக்கு வாடை தரும் (சிலேடை இலக்.ப.304).

கோடை³ பெ. 1. காந்தள். காந்தள் கோடை ... கந்துகமே (அபி.மாலை 999). கந்துகம் கோடல் கோடை (நாம.நி. 320). 2.வெண்காந்தள். குருகுநிலவு கோடை சூடி திருவலம் (கலியியல் 47). 3.செங்காந்தள். (செ.ப.அக.)

கோடைக்காந்திதம் பெ. சூரியகாந்தி. (சித்.பரி.அக. ப.86)

கோடைக்காலம் பெ. வேனிற்காலம். கோடைக்காலத் தின் மேகமாகிய விடிகள் இடித்தது போல (கோலாசல. பு.47 உரை).

கோடைக்காற்று பெ. முதிர் வேனிற்பருவத்தின் காற்று. (யாழ்.அக.)

கோடைக்கானல் பெ. 1.கொடைக்கானல், மலையின் உச்சியில் குளிர்ச்சிக்காகத் தங்கும் ஒரு மலை நகர். (செ.ப.அக.) 2.பழனி மலைத்தொடரின் தென்பால் 7 அடிக்குமேல் உயரமுள்ள மலைப்பகுதி. (செ.ப.அக.)

கோடைக்கீழ்நங்கு பெ. 1.→சிற்றரத்தை. (மலை அக.) 2.குட்டியிடுக்கி. (வைத்.விரி.அக.ப.122)

கோடைக்குவாடான் பெ. →ஆவிரை. (மலை அக.)

கோடைக்கொட்டை பெ. →நிலக்கடலை. (வட்.வ.)

கோடைகாலம் பெ. வெய்யில் காலம். ஓடை நீரில் ஆடிட வேண்டும் கோடை காலமடி (கண்ண.திரை.பா.3,49).

கோடைச்சம்பா பெ. வேனிற்காலத்தில் பயிராகும் சம்பாநெல்வகை. (பதார்த்த.817).

கோடைச்சவுக்கு பெ. ஆற்றுச்சவுக்கு. (செ.ப.அக.)

கோடைத்தண்ணீர் பெ. கள். (வட்.வ.)

கோடைத்திருநாள் பெ. மதுரை வைகையில் கோடை காலத்தில் கொண்டாடப்படும் விழா. மதுரை வைகையில் கோடைத் திருநாள். (சோலை.109).

கோடைப்பங்கம் பெ. கோடைச்சூடு. அங்கம் குளிர்ந்தேன் அகம் குளிர்ந்தேன் வெங் கோடைப் பங்கம் தணிந்தே பயன் அடைந்தேன் (தனிப்பா.திர.772).

கோடைப்பருவம் பெ. →கோடைகாலம். (கலை.அக. ப.2,104)

கோடைப்புரோசனம் பெ. 1.கோடைச்சாகுபடியின் விளைபொருள். (வின்.அக.) 2.கோடைக்காலத்துப் பயிர். (வின்.அக.)

கோடைப்பூசணி பெ. கோடைக்காலத்திற் காய்க்கும் பூசணிவகை. (செ.ப.அக.)

கோடைப்போகம் பெ. 1.→கோடைப்புரோசனம். (யாழ்.அக.) கொடைப் பொகம் ஒன்றுபறி (GPS.321). 2.கொடைப்பிரயோசனம். (யாழ்.அக.)

கோடைப்புழுதி பெ. கோடைக்காலத்தில் மழை பெய்தவுடன் உழும் உழவு. (புதுவை வ.)

கோடைபூபாளம் பெ. (இசையி.) மேககல்யாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.234)

கோடையடிக்காரன் பெ. ஒருவரிடத்தினின்று பிடுங்கி மற்றொருவர்க்கு ஏராளமாய்க் கொடுப்பவன். (வட்.வ.)

கோடையடிபடுதல் 6வி. வெயிலடிபடுதல். (யாழ்.அக.)

கோடையிடி பெ. 1.கோடைக் காலத்தில் இடிக்கும் ஒலி. கோடையிடி போல முழங்கிட்வே (வீர.கட்ட.கதைப்பா. ப.98). 2.கோடைப்பருவத்து மழையிடி. (செ.ப.அக.)

கோடையோடு-தல் 5வி. வெப்பம் மிகுதியால் பயிர் காய்தல். கோடை யோழன பயிரிலே (திருப்.22 மூ.பத். 169 ப.304).

கோடைவிடுமுறை பெ. வேனிற்கால விடுமுறை. (ஆட்சி.அக.ப.274)

கோடைவிழா பெ. வேனிற்விழா. (ஆட்சி.அக.ப.273)

கோடைவாகளி பெ. சிறுசெருப்பன. (சங்.அக.)

கோடைவாகனி பெ. →கோடைவாகளி. (சித்.பரி.அக.ப.86)

கோடைவாய் பெ. வாயினின்று வடியும் நீர். (செ.ப.அக.)

கோண் பெ. 1.→கொடுங்கோன்மை. (யாழ்.அக.) 2.நேரின்மை. (முன்.) 3.மாறுபாடு. கோண்டரு குறும்பர் வெம்போர் (சீவக.1079). கோண் சுமந்த கும்ப கருணன் (செ.பாகவத.9,9,99). கோணில் பிருகு மார்க் கண்டரெனப் பேசும் (தென்பு.மணி.உலா 87). குடக்கு ஓடி நீர்கரக்கும் கோணை நதம் ஒன்றும் (கச்சி ஆனந்த. தூது 43). 4.வளைவு. கோண் தணி எயிலின் காப்புச் சிறந்து (அகநா.372). கோணார் பிறை (திருவாச.16,5). ஓமவேத நான்முகனுங் கோணாகணையானும் சேமமாய் செல்வர்கா னூர் (தேவா.1,73,10). கோணுறு குறிஞ்சி யாழ் குழலொடார்ப்பவே (இராவணகாவி. 2,2,57). கோண் நாகினையும் பூண் எனவே கொண்டான் (சிவதரும.ஐவகை.17). ஒரு திண்புவி

கோணற நிற்றலின் (திருக்குற்றா.பு.20,114). கூன்கோண் குலாவல் ... வளாவல்குடி (நாம.நி.768). 5.ஊது குழல். (இலங்.வ.) 6.களங்கம். சோண் அற ... அருள் மௌன குருவாய் வந்து (தாயுமா.பா.14,17). 7.கோணம். முக்கோ ணிவர்தரு வட்டம் (திருக்குற்றா.தல.பராசத்.3). கோணுக்கள் வளர்கின்ற குயிலென்றுனைத் தினம் கோணாது பேணுகின்றேன் (மலரும்.35). 8.கோணல் நெறி. கோட் போக்கி நில்லும் (திருவருட்பா 1962,66). 9.பாத்திரத்தின் மூக்கு. (யாழ்.அக.) 10.கண். (வட.நி.606)

கோண்சணிக்கிழங்கு பெ. கலப்பைக் கிழங்கு. (சித். பரி.அக.ப.86)

கோண்டகாமியம் பெ. திகைப்பூடு. (சித்.பரி.அக.ப.86)

கோண்டம்[1] பெ. 1.காக்கை. காக்கை ... கோண்டம் (அபி.மாலை 726).

கோண்டம்[2] பெ. →நெருஞ்சி. (மலை அக.)

கோண்டம்[3] பெ. குறிஞ்சாவகை. (மூன்.)

கோண்டம்[4] பெ. 1.தூக்கு. (யாழ்.அக.) 2.பள்ளிச் சிறாரைத் தண்டிக்கும் தொங்கும் கயிறு. (மூன்.)

கோண்டன் பெ. 1.கீழ்மகன், இழிபிறப்பினன். நீசர் கோண்டனாயினுங் கீழென்றூர் குறிக் கொள்வது காட்டாட்டே (தென்காசித்.பு.நகரச்.87). 2.பெருங் கொப்பூன். (நாநார்த்த.)

கோண்டன்கிழங்கு பெ. கோரைக்காசு, முத்தக்காசு. (சித்.பரி.அக.ப.86)

கோண்டை[1] பெ. கழுகு. (யாழ்.அக.)

கோண்டை[2] பெ. இலந்தைப் பழம். (பிங்.2712)

கோண்பாய்ச்சல் பெ. குறுக்கிடுவழி. (நாட்.வ.)

கோண்மா பெ. புலி சிங்கம் முதலியன. ஆருயிர்த்துப் பில் கோண்மா வழங்கும் (அகநா.108,9). கோண்மா குயின்ற சேண்விளங்கு தொடுபொறி (புறநா.58,30). கூற்றம் அன கழுகு தொடர் குந்தமொடு கோண்மா (சீவக.101). துணை இழந்து அஞ்சி ... கோண்மாப் படு பகை வார்க்கும் (ஐந்.எழு.37). கும்பத்தின் கரியைக் கோண்மாக் கொன்றென (கம்பரா.6,3,125).

கோண்மீன் பெ. கிரகம். வாணிற விசும்பிற் கோண்மீன் (சிறுபாண்.242). நாண்மீன் ஒழுக்கும் கோண்மீன் கோப்பும் (பெருங்.1,58,56). அவன் பிறந்த ... கோண் மீன் கூடியவழி (தொல்.பொ.91 நச்). வியாழன் வெள்ளி முதலாயின கோண்மீனும் (தொல்.சொல்.56 தெய்வச்).

கோண்மை பெ. செங்கோல். கோண்மையும் நகரும் நீக்கி ... இவண் தனித்துச் சேர்ந்தான் (தேம்பா. 2,8,31).

கோண்விழு-தல் 4வி. கோணலாதல். (வின்.அக.)

கோணக்களிகிண்டு-தல் 5வி. குழப்பமுண்டாக்குதல். (திருநெல்.வ.)

கோணக்காப்பு பெ. ஸ்ககால்களில் அணியும் கோணல் வளை. (செ.ப.அக.)

கோணக்கிணாக்கி பெ. சிற்றரத்தை வகை. (மலை அக.)

கோணக்கொம்பு பெ. வாங்கால் என்னும் ஊது கருவி. (நாட்.வ.)

கோணங்கி பெ. 1.→கோடங்கி. (செ.ப.அக.) 2.கோமாளி. கூத்தாடி கோணங்கி ... யீரெட்டுப் பேர்களையும் எள்ளளவும் உள்ளூரில் உறுதி கொள்ளார் (கயிலாச. சத.41).

கோணங்கிக்கூத்து பெ. 1.ஒழுங்கற்ற நடையுடை கள். (செ.ப.அக.) 2.கோமாளிக்கூத்து. (மூன்.)

கோணங்கித்தாசரி பெ. தாசரிசாதியிலுள்ள கோணங்கி. (யாழ்.அக.)

கோணங்கிப்பல் பெ. விகாரமாய் நீண்டுள்ள பல். (வின்.அக.)

கோணங்கியம்மை பெ. உடல் உறுப்புக்களைக் குறைத்து விகாரப்படுத்தும் அம்மை வகை. (மூன்.)

கோணத்தடி பெ. அதிகாரக்குறியாகக் கொண்டு செல்லும் தடிவகை. (நாட்.வ.)

கோணத்தண்டு பெ. யோகத்தண்டு. (சித்.பரி.அக.ப. 166)

கோணத்திசை பெ. 1.வருமொழி. திசையொடு திசை புணருங்கால் ... வருமொழி கோணத்திசை எனவும் (இலக்.வி.உரை ப.481). 2.மூலைத்திசை. (செ.ப.அக.)

கோணப்பல் பெ. ஒவ்வொரு தாடையிலும் உள்ள மூன்றாவது பல். (மருத்.கலைச்.அக.ப.37)

கோணப்பிரான் பெ. திருப்புகலூரிலுள்ள சிவபெரு மான். கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடு வினையே (தேவா.4,105,10).

கோணப்புளி பெ. →கொடுக்காய்ப்புளி. (செ.ப.அக.)

கோணப்புளியங்காய் பெ. →கொடுக்காய்ப் புளி. (நாட்.வ.)

கோணம்[1] பெ. 1.வளைவு. வட்டஞ் சதுரங் கோண முதலியனவாம் (தொல்.சொல்.416 நச்). கோண மரபு அறு ஞான குரு அடி கோதை என (தேம்பா.1,5,116). கோணமிடை யெங்குமிடை பெரியதிரு மேனியை (சோலை.குற.16). 2.வளைந்தவாள், கூன்வாள். கோணம் சுமந்த கரக் கொற்றவன் (நல்லதம். காதல் 52). 3.யானைத் தோட்டி. கோணந் தின்ற வடுவாழ் முகத்த (மதுரைக்.592). குவிமுட் கருவுயுங் கோணமும் (மணிமே.18,163). 4.இயந்திரதண்டுறுப்பினொன்று. (யாழ்.அக.) 5.வீணைஇயக்கும் வில். (மூன்.) 6.முடுக்கு. (ஆசி.நி.159) 7.குறுந்தெரு. கோணமு மறுகு மெல்லாம் (சீவக.615). 8.கொங்கை. கும்பகோணம் (சிலேடை இலக்.ப.299). 9.மாப்பிலாச்சை மீன். (செ.ப.அக.) 10.குற்றம். கோணமில் குடுமித் தேவர் இருப்பர் கும்பிடலாம் என்றான் (பெரியபு.10,96).

கோணம்[2] பெ. 1.மூலை. கோணத் திருப்பினும் கோபம் பெருக்கினும் (நவநீதப்பாட்டியல் 95). கோணமொத் திலங்கோர் முழத்தினின் (திருவாலவா.பு.15,2). கோணத்தில் ... பராசரேசுரனைக் காதலினிருத்தி (சீகாழித்.பு.கொச்சை. 29). கோணம் பெற வகுத்த கோயில் (ஏகாம்.உலா 362). 2.திசை. படுவது கோணம் பரந்திடும் வாறே (திருமந்.893). 3.→கோணத்திசை. வடக்கொடு கோணம் தலைவையார் (ஆசாரக்கோவை 31). 4.ஒதுக்குப்புறமான இடம். (நாட்.வ.) 5.வயற்காடு. (நாஞ்.வ.) 6.தூரம். (யாழ்.அக.)

கோணம்[3] பெ. மூக்கு. ஓங்கிய கோணமும் பாலிகையுங் கோதின் மணிநகையும் (குல.உலா 202). குடத்தினின் றெழுந்த கோணம் (திருக்குடந்.பு.8,22). கோரங் கொள்ளாது கும்பகோணத்துறைவாய் நீ (பத்ம. தென்றல் தூது 35).

கோணம்[4] பெ. 1. குத்திரை. எறியாத கந்துகம் பத்திகோ ணாத கோணம் பறவாத கொக்கனம் (பெருந்.1247). இந்த வுத்தம கோண மாளவம் (திருவிளை.பு.59,106). துரகங் கோணம் (நாம.நி.208). 2.மான். (ஆசி.நி.103)

கோணம்[5] பெ. 1.உரோகிணி. (ஆசி.நி.32) 2.(சோதிட.) இலக்கினத்திற்கு ஐந்தாமிடம், ஒன்பதாமிடம். ஒன்றைந்தோ டொன்பது கோணம் (சுகர்நாடி ப.128). 3.சனி. (யாழ்.அக.) 4.செவ்வாய். (முன்.)

கோணமலை (கோணாமலை) பெ. திரிகோணமலை. (முன்)

கோணமாமாலை பெ. →கோணமலை. தென் கோண மாமலையைச் சூழும் மாவலிகங்கை நாடு (கதிரை. பள்.8)

கோணமானி பெ. கோணங்களை அளக்கும் கருவி. கோணமானியை அனைவரும் வெறுத்தனர் (தென். குல.குடி.ப).

கோணமொட்டு பெ. இலைக்கோணத்தில் அமைந் துள்ள மொட்டு. (தாவரவி.11 ப.9)

கோணல் பெ. 1.வளைவு. நீந்தலாகா வெள்ளமுழ்கு ... கோணற் பிறையோடரவு கொன்றையெழிலார் (தேவா. 1,73,2). கோணல் நெறி பெறு மாநதிகள் (வேதா.சூ. 174). வளைதலின் பெயர்களுள் ஒன்று (பிங்.1947). கட்டைக் கோணல் அருப்பில் நிமிர்ந்தது (என்.பழ.தொ. 2246). கோணல் கண்டிடாக் கோல் (குமணசரித்.42). கோணல் நரிக் குணத்தால் (காவியப்பாவை ப.96). 2.கூன். (பிங்.3453) 3.பொய். கோணல் நா வெய்யர் (சிவதர்ம.சுவர்க்க.137). 4.மாறுபாடு. முதல் கோணல் முற்றும் கோணல் (என்.பழ.தொ.2973). முதற் கோணல் முற்றும் கோணல் என்பார்கள் (புலவர் உள்.ப.46). 5.மன உளைச்சல். பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும் (என்.பழ.தொ.3457). 6.நன்மை யில்லாதது. இந்தக் கோணலுற்ற செயலுக்கு நாணு வதில்லை (பாரதிதா.மூன்.சம்த்.ப.202).

கோணல்குணங்கல் பெ. →கோணல். (செ.ப.அக.)

கோணல்மாணல் பெ. தாறுமாறு. (நாட்.வ.)

கோணல்மூஞ்சி பெ. வெறுப்பு சிரிப்பு முதலியவற்றைக் காட்டும் முகம். (முன்.)

கோணலங்கேள்-தல் 9வி. கிரக பலன்களைக் கேட்டறிதல். கணியார்வாய்க் கோணலங் கேப்தூஉங் கொண்கர் பெருமானார் தோணலஞ் சேர்தற் பொருட்டு (பெருந்.691).

கோணவட்டம்[1] பெ. →கோணாவட்டம்-1. கோணவட்டக் கோலமுகத்த (பெருங்.3,20,22).

கோணவட்டம்[2] பெ.கோணலாயுள்ள வட்டம். (செ.ப.அக.)

கோணவழக்கு பெ. நேர்மையற்ற வாதம். (முன்.)

கோணவாசல் பெ. அரண்மனை முதலியவற்றில் வளைந்து செல்லும் வாயில். (நாட்.வ.)

கோணவாட்டம் பெ. இருசுக் கட்டையின் இரு புறத்திலிருந்தும் ஏர்க்காலைப் பிணைத்திருக்கும் சட்டம். கோணவாட்டம் முறிந்தது (தென்னார்க்.வ.).

கோணவாய் பெ. கோணலாக உள்ள வாய். வேணுமோ கோணவாய் விக்கா (மனோன்மணீ.4,4,160).

கோணவேல் பெ. மரு என்ற மர வகை. (செ.ப.அக.)

கோணவேலன் பெ. →கோணவேல். (முன்.)

கோணற்புத்தி பெ. நேர்மையற்ற சிந்தனை. அவன் ஒரு கோணற்புத்திக் காரன் (இலங்.வ.).

கோணற்புளி பெ. மரவகை. (முன்.)

கோணன் பெ. 1.நீதிகேடன். கொடு மராதியைப் பண்ணிடும் கோணன் (சிவ தரு.பாவ.66). 2.கூனன். (பிங்.962) 3.மாறுபட்டவன். விதிகோணர் என்று அறியலாம் (விருந்தீ.சத.30).

கோணா பெ. 1.தவில்காரர் தவிலை முழக்குவதற்காக இடப்புறம் அடிக்க உபயோகிக்கும் திருவாத்தி மரக்குச்சி. (தொ.வ.) 2.யானைத்தந்தம். மதகரியின் கோணா சரத்தின் கோலாலும் (சிவதரு.சிவஞான.48).

கோணாகம் (கோள்+நாகம்) பெ. நச்சினைக் கொண்ட பாம்பு. கோணாக முன்னுயர்த்த கோ (பாரத வெண்.177).

கோணாகோணம் பெ. கோணத்துட்கோணம். (தொல். எழுத்.311 உரை)

கோணாமலை (கோணமலை) பெ. திரிகோணமலை. (யாழ்.அக.)

கோணாமாணாவெனல் பெ. தாறுமாறாதற் குறிப்பு. (செ.ப.அக.)

கோணாமுகம் பெ. சூழ்கழி யிருக்கை. சூழ்கழி யிருக்கை கோணா முகம் தோட்டி ஆம் (அபி.மாலை 1226).

கோணாய் பெ. 1.ஓநாய். (வின்.அக.) 2.ஆண் நரி. (முன்.)

கோணாவட்டம் பெ. 1.அரசவிருதுகளுள் ஒன்று. கூந்தற் பிச்சமுங் கோணா வட்டமும் (பெருங்.1, 46,62). 2.கோணத்துள் வட்டம். (தொல்.எழுத்.311 உரை)

கோணான் பெ. இடையர் பட்டப் பெயர். எந்தக் கோணான்றன் கையிற் கொடுத்தானோ (விறலி.தூது 703).

கோணி¹ பெ. கந்தை. (யாழ்.அக.)

கோணி² பெ. அத்தி மரம். (மலை அக.)

கோணி³ பெ. 1.→கோணிப்பை. கோள் சரக்கு ஒழுகும் பீறல் கோணி (பட்டினத்.1,3-28). வலியக் கோணியில் பிடித்தார் (இளை.இலக்.11). வாயியன் ஆசை கோணியும் கொள்ளாது (என்.பழ.தொ.985). கோணி முதுகினைக் கையால் ஒரு கோல் நுனியால் ... தள்ளித் தொல்லை யுற்றான் (பாரதிதா.2,7,8). 2.பை போன்ற உடல். குழக்கன்று துள்ளியக் கோணி (திருமந்.1643). 3.எட்டு மரக்கால் கொண்ட ஓர் அளவு. கோணித் தீம்பசும்பால் வாரொரித்திட்டு (தைலவ.தைல.135). 4.பதினாயிரங் கோடாகோடி. (யாழ்.அக.) 5.பூமி. (இலக்.சொ.அக.)

கோணி⁴ பெ. பன்றி. கரமேனங் கோணி ... பன்னியின் பேர் (உரி.நி.70).

கோணிக்கயிறு பெ. சாக்குத்தைக்கும் சணல் நூல். (வட்.வ.)

கோணிக்கொடு-த்தல் 11வி. மனமில்லாமற் கொடுத் தல். (வின்.அக.)

கோணிகை¹ பெ. 1. சாக்குப்பை. (யாழ்.அக.) 2.எட்டு மரக்கால் கொண்ட ஓர் அளவு. (முன்.)

கோணிகை² பெ. கிராமத்தில் ஏற்பட்டிருந்த பழைய வரிவகை. (செ.ப.அக.)

கோணிச்சாக்கு பெ. →கோணிப்பை. பொதையின் வேர்ப்பாகத்தை கோணிச்சாக்கு கொண்டு பாதுகாத்து எடுத்துவரவேண்டும் (செய்தி.வ.).

கோணித்தட்டு பெ. அம்மைவகை. (செ.ப.அக.)

கோணிப்பட்டை பெ. சாக்குத்துணி. (முன்.)

கோணிப்பை பெ. சணலால் பின்னப்படும் பை, சாக்குப்பை. ஆபரணங்களைக் களைந்து வைத்துவிட்டு கோணிப்பையில் தாங்கள் புகுந்து கொண்டிருந்தால் (மதன.கதை ப.214).

கோணியல் பெ. →கோணிப்பை. பொதி எடுக்கும் கோணியல் எத்தனையோ (வீர.கட்ட.கதைப்பா.ப.84).

கோணியலூசி பெ. →கோணியூசி. (செ.ப.அக.)

கோணியூசி பெ. சாக்குத் தைக்கும் ஊசி. (நாட்.வ.)

கோணிலை (கோள்+நிலை) பெ. கிரகங்கள் இருக்கும் நிலை. கோணிலை குறித்து நோக்கி இனி வரு மாரியில்லை (திருவிளை.பு.14,3).

கோணு-தல் 5வி. 1.கோணலாயிருத்தல். வளைந்த வள் உகிரின் பருந்து கோணல்வாய் (கலிங்கத்துப்.500). 2.மாறுபடுதல். கோணும் கனகன் (கப்.கோவை 286). கனக முடிகவித்துக் கோணாது நின்ற குறிபோற்றி (நக்.கலி.5). 3.வெறுப்புக்கொள்ளுதல். கோணாதே குலவி நுழைந்தனையே (திருவருட்பா 6 திருவடிப் புகழ்ச்.1,4). 4.வளைதல். குடைந்தசுழி நீரும்மலாற் கோணிச் சுழன்றதில்லை (இத்தோ.அம்.2,24). நடுக்கியே நாணிக் கோணியும் (திருவிடைநா.ப.22,27). சந்திரனைப் பார்த்து நாய்குலைக்கு மோடா குலைத்தால வர்க்கினம் கோணுமோடா (அயோ.கதை ப.231). அன்னமே கோணி மனம் வாடிக் குலையாதே (பஞ்ச.திருமுக. 1074). குறித்தறி வான் போற் கோணி நிற்பன் (மானவி. 3,7). முகம் கோணும் சிலருக்கு (மனித தேடு.ப.52). 5.நெறி பிறழ்தல். கற்பகமாய் நன்னெறியிற் கோணானாய்க் காத்தான் குடி (பாரிகாதை 353). கலிமுடிவி னயன்படைப்புக் கோணுமா றெழுந்ததெனக் கொதித்தெழுந்த கடலரவம் (திருவிளை.பு.9,14). 6.குறைதல். கோணாத போகமும் (திருமந்.1610).

கோணூசி பெ. (கோணியூசி) மூக்குக் குத்துதற் கான கோணூசியும் (மேழிவி.82).

கோணெழுத்து பெ. ஆங்கிலப்படிப்பு. (ரா.வட்.அக.)

கோணை¹ பெ. 1.பரிகாசம். கோணைமொழி பேசநடுக் கூத்தாடும் ஆணழகன் வேதியனோ (பழனித்திரு. 2,58). 2.மாறுபாடு. கோணை நூற்றடங்கமாட்டாக் குணமிலார் குடர் கணைய (சூளா.259). சீர்மணக் குருமணிப் பந்தரில் கோணை ஆற்றினால் இருதிசைத் தேவரும் ... வைகினான் (கச்சி.காஞ்சிப்பு.இருபத்.334). நீர் கரக்கம் கோணை நத மொன்றும் (வண்.43). நம்பு மென்பாற் கோணைத் தொழிற் செய்குமரா (பழனித்திரு.1,16). 3.வலிமை. கோணை யிருங்குண்டை (திருவேங். மாலை 58). கோணை மதமாமேற் கொண்டதுவும் (சுப்பிர.நெஞ்சு.தூது 241). நல்வரம் கொண்டவர் தவலருங் கோணை ஆற்றலர் மிண்டிய தறுகணே மிடைந்த சிந்தையார் (கச்சி.காஞ்சிப்பு.இருபத்.246). கோணைமாக் களிறும் (குசேலோ.229). 4.உபத்திரவம். கோணை பெரிதுடைத் தெம்பெம்மானைக் கூறுதலே (திருவாய்.2,5,10). 5.→கோணையன். கோணை களான எவரோடும் வீண் உறவு கொண்டிலம் (திருச்செந். நிரோ.அந்.10 உரை). 6.வளைவு. கோணை நீள்மதிற் கொடிக்கோ சம்பி (பெருங்.1,48,69). கோணை கொம்பு ஓசையினால் கொச்சி குடிவாங்க (நல்லதம்.காதல் 14,3). 7.கோணல். (செ.ப.அக.) 8.பீடை. (யாழ்.அக.)

கோணை² பெ. அழிவின்மை. கோணை வாழ்நாள் வளர்ந்தவர் (திருவலங்வஞ்சியியல்.44). குங்குலு நெய்தூப நறுங் கோணை யொளிர் தீபம் (ஞான. உபதேசகா.1305). கோணைவேங்கைகள் யாட்டினோடுறவுகொண் டோங்கும் (சிவஞா.காஞ்சிப்பு.நாட்டுப்.47). கொடி பயில் மாடப் பந்திக் கோணை உள் நகர நின்று (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண். 49). கோணைசத்துக் கன்னி குமரியழி வின்மை (நாம. நி.612). அழிவின்மை கோணை (அபி.மாலை 1934).

கோணைப்பேச்சு பெ. அன்னியமொழி. (நாட்.வ.)

கோணைமாதம் பெ. மார்கழி. (வின்.அக.)

கோணையன் பெ. வக்கிரகுணமுள்ளவன். அது யாருடா கோணையன் (தலைமுறை ப.2173).

கோத்தணிகை பெ. →கோத்தனி. (சூடா.நி.)

கோத்தந்தம் பெ. மாட்டுக்கொம்பு. (யாழ்.அக.)

கோத்தர் பெ. நீலகிரி மலைவாழ் பழங்குடியினர். கோத்தர்கள் பற்றிய ஆய்வினை மேற் கொண்டேன் (தென்.குல.குடி.):

கோத்தரம் பெ. குலம். நான் ... பென்யமீன் கோத்திரத் தான் (பு.ஏற்.பிலி.எழு.நிரு 3,5).

கோத்தரி பெ. மலை. (ஆசி.நி.147)

கோத்தருமம் பெ. 1.அரச நீதி. அரசாடல் கோத்தருமம் என்கின்றாய் கொற்றவனே (பாரத வெண்.35). 2.அரசியல் முறை. நன்று இவர்தம் கோத்தருமம் என்னா ... தருமன்பால் அணைந்தான் (பாரத வெண்.63).

கோத்தலை பெ. →கொடிமுந்திரிகை. (தீவா.)

கோத்தனி பெ. →கொடிமுந்திரிகை. (மூன்.)

கோத்தா பெ. அட்டைப்பெட்டி. சிகரட் கோத்தாக்களை பொறுக்கிக் கொண்டு வந்து (நாட்.வ.).

கோத்தாயம் பெ. அரச உரிமை. கலியின் வஞ்சனையால் ... கோத்தாயம் முன்னிழந்த கோ (நள.393).

கோத்தார் பெ. தொடர்புடையோர், சுற்றத்தார். கோத் தார்க்குக் கோத்த நிலை கொண்ட குணக்கடல் காண் (பட்டினத்தார்.பா.மகடூஉ.63).

கோத்திட்டை பெ. ஒரு ஊர். கோத்திட்டை என்றெடுத்துக் கோதில்திருப் பதிகஇசை ... பாடி (பெரியபு.37,103).

கோத்திரசம் பெ. 1.சேர்மானம். (யாழ்.அக.) 2.ஒரு குலத்தில் தோன்றியது. (மூன்.)

கோத்திரசன் பெ. ஒரு கோத்திரத்திற் பிறந்தவன். (செ.ப.அக.)

கோத்திரநாமம் பெ. எண் வகைக்குற்றம். (பிங்.430)

கோத்திரப்பெயர் பெ. தந்தையினுடைய குடிப்பெயர். கோத்திரப் பெயரே கூறுங் காலைத் தாதைகுடிப் பெயரைத் தக்கவற் றியற்றல் (பன்னிருபா.77).

கோத்திரம்1 பெ. 1.மரபு. கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன் கோத்திரம் எலாம் அழிக்கும் (குமரே. சத.91).காசிப கோத்திரத்தில் சீல மறைவாக தேவன் யான் (மூவரை.தூது 56). கோத்திரத்தான் இசைமை மேவும் ராமசா மிப்பெரியோன் (சென்னிமலை.சி.பாயி.). நாடார் களின் 130 குல கோத்திரங்கள் தரப்பட்டுள்ளன (இராமநாத.நாட்.அள.ப.69). 2.குடியிருப்பு, குடும்பம். வாழுமூர் கோத்திரம் கூறப்படும் (நாலடி.242). 3.பரம்பரை, வமிசம். மைத்துன கோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றால் மருது கொடுப்பது (இறை.அகப். 26,8 உரை). எவ்வூரெக்கோத் திரத்தீர் (பெருங்.3,6,185). ஒத்த கோத்திரத்தானாய் ... பிரமசரியங்காத்தவன் (தொல்.பொ.92 நச்). கொற்கைப் பராக்ரம மாறன் பரிவுடனங் கோத்திரந் தன்னிலுள்ளார்க்கு மடைக்கலங் கூறினனே (பெருந்.946). கோன்மையால் உயர்ந்த தாவீ கோத்திரத்து உதிக்கும் (தேம்பா.1,3,40). குழந்தையை வைத்திருந்தால் கோத்திரத்திற்கு ஆகாது (மதுரை.கதை ப.19). தன்னனைய பெருந்தவத்து கோத்திரத்தான் (திருக்குடந்.பு.22,3). அந்நேரம் கோத்திரத்தில் உள்ளோரும் கூடி மிக (சிந்.இலக்.5,30). கோத்திரம் இயல்பாம் குணம் என்று பன் மறையும் சாத்திரம் உரைத்த (நல்லதம்.காதல் 54). மன்னவர் கோத்திரங்கள் குலங்கள் (மலரும்.854). 4.நற்குடி. நாற்பத் தெண்ணாயிரம் கோத்திர நாட்ட (கொங்கு சத.வால.49). 5.குலம். தங்கள் குல கோத் திரத்தில் ஓதியசொல் கேட்டவனும் (சீவே.சரி.1094). இமவானுடைய கோத்திரம் வாழ (சிவகாமி.அந்.27). உன்னாட்டார் நன்றாலுயிர் காத்துக் கோத்திரத்தில் ... நன்றி மறவேல் (ஆத்திசூடி வெண்.21). கங்கா கோத்திரத்தி லேவந்த குலதீபன் (மேழிவி.27). உயர் கலிங்கத்தாய் கோத்திரவான் (கும்மிப்பா.மருத.17). அப்பொழுது மனுசகுமாரன் வல்லமையோடும் மிகுந்தமகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் (பு.ஏற். மத்தேயு 24,30). 6.சந்ததி மூலம். வண்மை குலங்கோத்திரங் கல்வி குணம் (அபி.அந்.67). 7.குடிவழி. கோத்திரத்தி இல்லாத குணம் படைத்து வந்தாள் (கதிரை.பள்.108). 8.ஒரு இனத்தின் பல பிரிவினர். நீங்கள் ... இசுரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார் (விவிலி.லூக்கா 22,30). 9.குடிப்பிறப்பு. கோத்திரஞ் சூத்தீரங் குடி யுரைத்துளார் (பாரதம்.1,4,33). தோம் தோற்றும் கோத்திர ஏதத்து இனியான் கூடாது அருள்முருகன் (திருத்தணிகை வெண்.பா.23). சாத்திரம் ... எங்கள் கோத்திரத்தார் செய்ததோ (பாரதிதா.மூன். சமத்.ப.190). 10.மலை. பொற்றை சிலோச்சயங் கோத்திரம் (உரி.நி.117). காத்திரங்களின் கவானிடைக் கதுமெனக் கொளுந்தியுற் றெரிகின்ற தீத்திறங்கள் (பாரதம்.1,8,34). கோத்திரத்தில் அம்மை மருங்கிற் கலைந்து தலை மோதுவ போல் (திருக்காளத்.உலா 154). கோதி னாரண கோத்திர மஞ்சன மாதி ரம்வட மாமலை யென்னவே (திருவேங்.பு.24,6). இமய கோத்திர மன்னவன் (திருநெல்.பு.மணம்.16). 11.நெட்டி மரம். (சித்.பரி.அக.ப.86) 12.வர்க்கம். வாணியும் நீரும் ஒரு கோத்திரமா (பெண்கல்வி ப.147). 13.கூட்டம். சார் போதக் கோத்திரங் காண் மாயைக் குழாம்

(ஒழிவி.4,8). 14.சீலத்துக் கவுணியர். கோத்திரம் விளங்கச் செப்பு நெறி வழி வந்தார் (பெரியபு.28,15).

கோத்திரம்[2] பெ. 1.காது (ஆசி.நி.90) 2.பூமி. (வட.நி. 601) 3.மலை. (பிங்.3455) 4.விருத்தி. (யாழ்.அக.) 5.வரகு. (ஆசி.நி.143) 6.நாமதேயம். (இலக்.சொ. அக.) 7.காடு. (முன்.) 8.வயல். (முன்.) 9.குடை. (யாழ்.அக.) 10.செல்வம்.(முன்.) 11.தெரு. (முன்.) 12.தொட்டிப்பாடாணம். (முன்.) 13.(சைன.) எண் குற்றங்களுள் ஒன்றானதும் மறுபிறப்பிற்குக் காரணமாவதுமான கருமவகை. (ஆ.நி.) 14.சிறுவரகு. (மலை அக.) 15.நெட்டி. (முன்.)

கோத்திரமின்மை பெ. 1.(சைவ.) சிவனெண்குணத் தொன்று. (பிங்.98) 2.(சைன.) அருகனெண்குணங் களுள் மறுபிறப்புக்குரிய கருமமில்லாமை. (பிங்.)

கோத்திரவம்[1] பெ. →கோசலம். (யாழ்.அக.)

கோத்திரவம்[2] பெ. வரகு. ஆயகோத்திரவஞ் சாமை (திருக்குடந்.பு.திருநாட்டுப்.52). வரகு கோத்திரவம் (அபி. மாலை 1122).

கோத்திராளி பெ. (இசையி.) இலதாங்கி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.228)

கோத்திரி[1] பெ. மலை. கொங்கின் புகழ்கோத்திரி (திருப்பு.187).

கோத்திரி[2] பெ. 1.→கோத்தனி. (யாழ்.அக.) 2.முசு முசுக்கை. (சித்.பரி.அக.ப.86)

கோத்திரி[3] பெ. தெய்வங்களுக்குப் படைப்பிட்டு அதன்பேரில் நாட்டும் தீரி அல்லது சிறுபந்தம். (நாஞ்.வ.)

கோத்திரி[4] பெ. நற்குலத்தோன். பரத்துவசனுக் குறவுரிய கோத்திரி (பாரதம்.7,4,200).

கோத்திரிகை பெ. →கோத்தனி. (மலை அக.)

கோத்திரை பெ. 1.பூமி. (பிங்.) 2.மலை. (இலக்.சொ.அக.)

கோத்திழை-த்தல் 11வி. பாய் கூடை போன்றவற்றைப் பழுதுபார்த்தல். (வின்.அக.)

கோத்து பெ. பட்டாளந்தங்குமிடம். (நாஞ்.வ.)

கோத்துக்கொடு-த்தல் 11வி. 1.இருவர்க்குள் பகை யுண்டாம்படி ஒருவர் கூற்றை மற்றவர்க்கு மாறு படுத்திக் கூறுதல். (வின்.அக.) 2.பிறருக்கு ஊசியில் நூலைக்கோத்துக் கொடுத்தல். (நாட்.வ.)

கோத்தும்பி பெ. கோத்தும்பீ என்ற தொடரைப்பாட்டின் ஈறுதோறுங் கொண்ட திருவாசகப்பதிகம். எம்பாவை யம்மானை சுண்ணாறுங்கோத் தும்பி புவனமகிழ் தெள்ளேணம் (பெருந்.2039).

கோத்துரத்து-தல் 5வி. அரசர்களை வெருட்டி யோடச்செய்தல். கோலெடுத்துக் கோத்துரத்துங் கோகனச் செங்கை வடிவேலெடுத்துங் கோத்துரத்தல் விட்டிலனே (பெருந்.894).

கோத்துவாங்கு-தல் 5வி. 1.கோணிமுதலியன தைத்தல். (செ.ப.அக.) 2.(நெசவு.) ஆடைக்கரையை வேறுநூலில் தனியாக நெய்தல். (முன்.)

கோத்துவிடு-தல் 6வி. 1. துன்பத்திற்கு உள்ளாக்குதல். (இலங்.வ.) 2.பகைமூட்டுதல். (வின்.அக.) 3.சேர்த்து விடுதல். அந்த கூட்டத்தோடு அவளையும் கோர்த்து விடு (நாட்.வ.).

கோத்துவை-த்தல் 11வி. இணைத்துவைத்தல். (ஆட்சி. அக.ப.122)

கோத்தை பெ. பழுது. கோத்தையுண்டாமோ (பரிபா.ப. 175,5).

கோத்தைமலர் பெ. நுதலணிமாலை. (ஆசி.நி.146)

கோத்தொழில் பெ. அரசாட்சி. கொலை கடிந்திவற லின்றிக் கோத்தொழி னடாத்து மன்றே (சீவக.2583). கொற்றவற்கிளைய காளை கோத்தொழிற் பாகம் பூண்டான் (சூளா.117).

கோதடி பெ. கப்பற்கயிற்றை உரைசாமற் காக்குங் கருவி. (கப்.வ.)

கோதண்டசாலை பெ. வில் வன்மை காட்டுமிடம். வையமெலாங் கோதண்ட சாலை (நள.103).

கோதண்டபாணி பெ. (கோதண்டத்தைக் கையிற் கொண்டவன்) இராமன். கோதண்ட பாணி குலமருகன் (திருப்போ.சந்நிதி.மாலை 67).

கோதண்டபாணியார் பெ. →கோதண்டபாணி. இராமபிரான் கோதண்ட பாணியார் தங்கையடி (கண். பள்.61).

கோதண்டம்[1] பெ. 1.வில். கார்முகங் கோதண்டம் தனுவில் (உரி.நி.142). கோதண்டம் பரித்தோன் (கந்தபு.1, 11,46). கோதண்ட மேருக் கோட்டிக் கொடும்புரம் பொடித்தான் வெள்ளி வேதண்ட மெய்தி (திருவிளை. பு.17,28). நின்வார் புருவத்தை மால்மதனக் கோதண்ட மென்பதிரண்டில்லையே (சங்கர.கோவை 37). சூலம் வாள் ... கோதண்டமும் (திருப்பு.91). கோதண்ட தண்ட விட கண்டன் (பாத்மோ.பு.4,149). விண்ணிற் படர்ந்து ஒலித்து வீரிய கோதண்டம் உற்று (பஞ்ச.திருமுக.ப.12). எழிலார் கோதண்டம் படையனைத்தும் மண்டு தொழில் வீரர் (சிவதரு.சுவர்க்க.81). இக்குவரிக் கோதண்டம் வாங்கி (திருவேங்.வண்டு.தூது 212). ஓங்கிய கோதண்டத்தானோர்ந் தழைவே (தென்பு.மணி.உலா 28). அண்டர் கோன் குலையும் வெய்யோர் குலந் தொலைத்தான் கோதண்டமே துணையாகக் கொண்டு (பெருந்.753). 1.2.வில்வகை. கோதண்டம் துரூணம் இவை விற்களாம் (கௌடலீயம் ப.283). 1.3.வில்லம்பு. கைவேல் கோதண்டம் பாலஞ்சூலம் (திருச்செங்.பு. 3,9,9). 1.4.இராமனின் வில். கோதண்டம் கைக் கொண்டு நாணியை இழுத்து (ஏற்றப்.ப.55). 2.போர்.

நங்கையோடு கோதண்டம் போர் புரிந்தனர் (தேவி மா.9,4). 3.புருவநடு. கோதண்டம் சானித்தல் அண்டனாம் சேடனாம் (சி.பொ.9,3 அதி.). 4.பள்ளிச் சிறாரைத் தண்டிக்குந் தொங்கு கயிறு. தீய கோதண்டமதில் போட்துவும் நானி மறந்து போகலையே (பஞ்ச.திருமுக.435). 5.சுழுமுனை. கோமலர்க் கோதையுங் கோதண்ட மாகுமே (திருமந்.1223). 6.கண்ணிமை. (யாழ்.அக.)

கோதண்டம்² பெ. 1.(இசையி.) கௌரி மனோகரி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.155) 2.வீணாதண்டம். கோதண்டத் தாகு மனோன்மணி (திருமந்.1224).

கோதண்டமுகுந்தன் பெ. திருமால். புவியாளும் கோத ண்ட முகுந்தாவர குலசேகர மாறா கூடற்பதி யிறைவா (பெருந்.913).

கோதண்டராமன் பெ. →கோதண்டபாணி. தண்டகோ தண்ட ராமன் சரிதமோர் சதகோ டிக்குள் (திருவாமாத். பூர்வ21,92). சுவ்வேல்வல் கோதண்டராமன் குலோத்துங்கன் (பெருந்.1121).

கோதந்தம் பெ. தாளகம் (பாடாணம்). (மருத்.குண.2 ப.187)

கோதந்தி பெ. 1.தாடை. (யாழ்.அக.) 2.கன்னம். (செ.ப.அக.)

கோதம்¹ பெ. 1.குற்றம். கோதரித்திடு முபாயங்கு வலையத்தில்லையாகும் (திருவாலங்.பு.தீர்த்த.14). 2.சினம். கோதமுங் கடந்தோருளங்கொள (திருக்குடந்.பு.8,29). கோதம்புரி மனத்தார் (பிரமோத்.13,12). 3.குரோதம், வெறுப்பு. ஆசை கோதமிலாய் குற்றமே குணமாகக் கொள்வது நின் குணமோ வையா (திருவிளை.பு.19,22). தூது சொல்வார் ... கோதமாய்க் கேட்பார் முன்னும் கூறுவ கூறல் வேண்டும் (பஞ்ச.தந். 3,43).

கோதம்² பெ. 1.பொல்லாங்கு. கோதஞ்செய் குடர்கள் (சீவக.1583). கோதமுங் கடந்தோருளங் (திருக்குடந்.பு. 8,29). 2.சீதாங்கபாடாணம். (வின்.அக.)

கோதம்³ பெ. நீசகோதமும் நின்றுதித்திட (மேருமந். 332).

கோதமநதி பெ. (இசையி.) தேனுகா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.114)

கோதமம் பெ. ஓர் தீவு. (யாழ்.அக.)

கோதமன் பெ. 1.கௌதம முனிவன். மாதவங்கள் செய்து முந்நூல் மன்னி ஐம்புலன் கடந்து கோதமனை ஒப்பாம் குருகையே (குருகை.39). செந்தழலில் மூழ்கி அங்கம் முடிந்ததுவும் கோதமனார் ஆம்புனலின் மூழ்கி அமிழ்ந்ததுவும் (சிறுபு.உலா 260). இருந்தனன் ... கோதம முனிவன் (செவ்வந்திப்பு.1,7). 2.சாதனந்த முனிவன். கோதமன் காதலன் கூறல் மேயினான் (கம்பரா.1,12,11). 3.ஒரு முனிவர். வேதமுனி கோதமனுந் தலைப்பட்டு மீள்வானோர் போதளவில் (திருவிளை.பு. 9,3). 4.சப்தமுனிவர். (ஆசி.நி.42)

கோதமி பெ. →கோதாவரி. துன்னுபுனற் கோதமியிற் படிந்தாடி (திருக்குற்றா.பு. 21,12).

கோதமை பெ. → கோதமி. சந்தப்போ ஓதாவரு நதி ஒரு கோதமையுடன் (கலிங்கத்துப்.371). கோதமை தீரத்து உற்றோன் (கருவூர்ப்பு.11,3). கோதமை கயை கங்கையா திநீர்க்கரை (திருக்கழுக்.பு.வசுதேவச்.66). யமுனை பொன்னி கோதமை ஆதி பகீரதி (குடந்தையந்.14).

கோதல் பெ. 1.கேடடைந்த பொருள். (வின்.அக.) 2.குற்றம். கோதல் மனத்தை நாட்டம் கொண்ட தஞ்சன் திருத்தி ... வாழ்வை ஈந்த (பணிமொழி 4,4,166).

கோதளம் பெ. பசுக் கன்று. கோதளத்தை யெறிந்து வெள்ளில் குறும்பலத்தையுகுத்திடும் (திருக்கடல்.ம. பதிற்றுப்.அந்.81).

கோதன்னம் பெ. →கோதளம். (வின்.அக.)

கோதனம் பெ. 1.→கோதன்னம். மழவிளங் கோதனம் போல் (குசேலோ.கு.வை.716). ஒரு தலத்திடைக் கோதனக் குளம்படி (திருக்குடந்.பு.52,26). 2.பசுக் கூட்டம். (பிங்.) 3.எருதின் கூட்டம். (ஆசி.நி.111) 4.பசுச் செல்வம். மாதனங் கோ தனங்கள் (திருவாலவா. பு.40,4). மாதவரும் கோதமும் மன்னி வாழ்க (சிவ. தரு.பாயி.1,5). 5.பசுமடி. (யாழ்.அக.)

கோதனன் பெ. பசுக்களை உடையவன். கோதனராய் இருக்கிற இடையர் (திருப்பா.அவ.மூ.ப.5).

கோதா¹ பெ. உடும்பு. உரமிகு கோதா வுடும்பு (உரி.நி. 74). தடி கோதா உடும்பு (நாம.நி.219). உடும்பு அண்டசம் தடி கோதா (அபி.மாலை 645).

கோதா² பெ. மற்கட்டும் களம்.கோதாவிலே குச்சுதி வெச்சான் குமுகுமு குமுன்னு குத்தவெச்சான் (கண்ண. திரை.பா.3,340).

கோதாகொடு-த்தல் 11வி. ஏமாற்றிவிட்டுப்போதல். (செ.ப.அக.)

கோதாட்டம் பெ. →கோதாட்டு¹. (வின்.அக.)

கோதாட்டல் பெ. சீராட்டுதல். (இலக்.சொ.அக.)

கோதாட்டு¹ பெ. 1.குறும்பு விளையாட்டு. கோதாட்டொழி (ஆத்திசூடி). 2.வருத்துகை. (செ.ப.அக.) 3.வஞ்சிக்கை. (வின்.அக.)

கோதாட்டு² பெ. சீராட்டு. (யாழ்.அக.)

கோதாட்டு³-தல் 5வி. 1.பாராட்டுதல். குணங்கொண்டு கோதாட்டி (திருமந்.1538). மாகக் குருவி பறவாமல் கோதாட்டி (பட்டினத்தார்.பா.5 அன்னை 8,3). 2.சீராட்டுதல். குருவி பறவாமற் கோதாட்டி (பட்டினத்தார்.பா.17,8). 3.குற்றத்தைக் குணமாகப் பாராட்டுதல். ஏறாரு

மவனினிது கோதாட்ட வருமெங்க ளேறே (திருக்கதிர். பிள்.10). 4.பாவம் முதலிய குற்றங்களைப் போக்குதல். நந்தம்மைக் கோதாட்டி (திருவாச.7,17). இவ்வுலகைக் கோதாட்டத் தண்டதனை (பழனி.வெண்.118).

கோதாணி பெ. பெருங்குரும்பை. (சங்.அக.)

கோதாநதி பெ. கதுப்பு. (யாழ்.அக.)

கோதாரணம் பெ. 1.கலப்பை. (முன்.) 2.மண்வெட்டி. (முன்.)

கோதாரன் பெ. சிறந்த பிரணவத்தை யுடையவன். கோதார நின் குறியென்பர்காண் குரு நாதனே (குருநாத.சத.39).

கோதாரி[1] பெ. 1.வாந்தி பேதி, கொள்ளை நோய். (இலங்.வ.) 2.திட்டுதற்குப் பயன்படும் சொல். (முன்.)

கோதாரி[2] பெ. கஞ்சம், விசாகப்பட்டினம் பகுதியைச் சார்ந்த தோல் தொழிலாளர்கள். (தென்.குல.குடி.2 ப.365)

கோதாரி[3] பெ. (இசையி.) சாலகம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.182)

கோதாரிவிழுவான் பெ. கொடியவன். அந்தத் கோதாரி விழுவானாலைத்தான் எனக்கு இந்த கசுட்டம் (இலங்.வ).

கோதாவரி பெ. ஒரு பேராறு. சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவிரி (கம்பரா.3,5,1). கோதாவரி உவந்து நோக்கினார் (செ.பாகவத.9,9,41). மங்களம் செய் கொடிலநதி கோதாவரியே (சரபேந்திர.குற.42,2). செழிப்பு வாய்ந்த கோதாவரி கிருட்டிணா காவேரி இவைகளின் கழிமுகங்கள் இருக்கின்றன (இந். பண்பாடு 1 ப.21).

கோதாவிரி பெ. →கோதாவரி. அணி மணி தரளம் செம்பொன் தமின் அவிர்தரங்கக் கோதாவரி துறைத் தீர்த்தம் ஆடி (அரிச்.பு.9,53).

கோதாளை பெ. கப்பற்குழாயின் வாய். (கப்.வ.)

கோதானம் பெ. பத்துத்தானங்களுள் ஒன்றான பசுக்கொடை. கோதனமும் வேண்டேன் கொலைக் களிறும் யான் வேண்டேன் (பாரத வெண்.262,3). கோதானம் பூரிதானம் வித்தின் (நம்.திருத்தாலா.61). பூமிதானங் கோதானம் ... விரிவாலாற்றி (சீகாழித்.பு. கிளி.36). ஒன்றுமாயிரங் கோதான முதலிய பலன் களுண்டாம் (திருச்செங்.பு.3,2,21). அதிக கோதானங்கள் நூறாயிரம் (திருக்கழுக்.பு.வசுதேவச்.37). கோதானம் பிறதானங்கள் ... புரிவோர் பேற்றைப் புகலுதற் கெளிமை யன்றே (திருமழுவாடிப்பு.தலச்.96). ஓர் நாண் மருவினோர் கோதான பலன்பெறுவர் (இறைவாச.பு. 144). வெள்ளியுடன் கோதானம் அரிதான மாணிக்கம் ... நாவலர்க்கும் பாடகர்க்குமே கொடுத்து (சீவே.சரி.732). கோதானம் கொண்டன்றோ கும்பிடுவேன் (செவி.11).

கோதி[1] பெ. நெற்றி. (இலக்.சொ.அக.)

கோதி[2] பெ. →கோதுமை. அம்புனல் தன்னில் மூழ்கி அளிப்பது கோதி தானம் (தந்திவனப்பு.434). கோதும்பை கோதி கோதூமம் ஆம் (அபி.மாலை 1117).

கோதி[3] பெ. கள்வகை. நெல் கோதி ... கட் பாகுபாடு என்ப (அபி.மாலை 1582).

கோதி[4] பெ. முதலை. (யாழ்.அக.)

கோதி[5]**-த்தல்** 11வி. கோபித்தல். (இலக்.சொ.அக.)

கோதிகை பெ. 1.உடும்பு. (தலைவ.பாயி.57) 2.முதலை. (யாழ்.அக.)

கோதிமுடி-த்தல் 11வி. மயிர் சீவிக்கட்டுதல். (முன்.)

கோதியார் பெ. பகை கொண்டவர். வினை கோதியார் மதில் கூட்டழித்தவர் (தேவா.2,26,7).

கோதிலாச் சுக்கரன் பெ. வெள்ளி. (ஆசி.நி.27)

கோது[1] பெ. 1.குற்றம். மடன் உடையார் கோதகற்றி (இன்னிலை 9). கோதியல் காமம் (சீவக.233). கோதறு குணாங்கள் பெய்த (யசோதர.56). கோது சாற்றித்திரிவார் அமண் குண்டர் ஓதும் ஒத்தை யுணராது எழு நெஞ்சே கோதில் நம் பாடவே கொள்ளுங்குந்தமே (சுட்டி.25). சுருள்வாழை கோதி னறவேற்குங் குப்பியென (நள.193). கோது உறவே சுடுதீ நகர் கோபம் (பகவற்.16,19). காலவொரு சற்றுங்கோது இல்லை காண் (திருக்காளத். உலா 282). குணிக்க அரிதாம் இருள் ஈனும் கோது இனிமை நசை வெறுத்தேன் (தேம்பா.1,6,14). குழந்தை மழலை பயில அதில் கோதிலா ஞானங் குழைதலை மாந்தேன் (புதுமைவே.5,8). 2.1.பழ முதலியவற்றின் தோல். சங்கெட்கோது (தலைவ.தைல.18). கோதற்ற தாளத் தையும் திணித்து (சாத்.கும்மி.289). வெற்றும் கோது நிறைந்திருக்கும் (இளை.இலக்.54). வேர் முழுதினையும் கோது அறக் களைந்திடில் (மகா.துறவு). 2.2.பூ முதலியவற்றின் நரம்பு. கோது குலாவிய கொன்றை (திருமந்.16). 3.கூந்தல். சென்ற புகழ் ... என்றும் வழி வந்தார் பூங்கோதாய் ஆறு மறையின் வழி வந்தார் கண்ணே வனப்பு (ஏலாதி 1). 4.பாவம். தவப் பன்னியைக் கோறல் ஆற்றிய கோது (திருக்கழுக்.பு. நாராயணச்.26). 5.சக்கை. நிறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல் (புறநா.114,4). கரும்பூர்ந்த சாறுபோல் சாலவும் பின்னுதவி மற்றதன் கோது போல் போகு முடம்பு (நாலடி.34). கரும்பின் கோதாயினேம் யாம் (திணைமொழி.39). கலக்குங் கோதறவடிக்கும் (திருப்பு. 383,1). கோதுறு மிலிங்க மென்று கூறுடல் மாய்க்க வேண்டும் (செ.பாகவத.4,5,77). கோதைப் பிழிந்து தறி வடியிடு கரும்பின் கொழுஞ்சாறு தெளியவைத்து (குருகூர்.பிள்.59). தித்திக்கும் கோதிலாத் தேறலே (சிவஞா.நெஞ்சு.தூது 232). வேழக் கோது போல் கழிய நீப்பார் (சிவஞா.காஞ்சிப்பு.நகரப்.52). பெருங் கோதென்றுமிழ்ந்திடுதலால் (சொர்ண.பிள் 7,6).

மதுப்பிழந்த கோது அசும்புவார் மூன்றில் (பாரிகாதை 532). 6.சாரமுற்ற பொருள். தோகை யைத்தன் ஆகத்தாற் கோதாக வென்றானக் கோ (நள.76). 7.பயனின்மை. கோது செய்குணக்கோதினுட் கோதனான் (சீவக.240). 8.ஐயம். தீதறு செயல்கள் கோதில் அசேதன்மாகலின் (ஞானாமிர்.21,12). 9.குன்றாப் பகை. கொள்ளுங் கோதுடையார் மாட்டும் (கண்ண. கனு.232). 10.குள்ளம். கோதாட்டொழி (ஆத்திசூடி.42). 11.குறை. கோதிலா வனத்தும் தன்னைக் கொணர்ந்த கால் விளையும் வெம்போர் (தேம்பா.1,4,38). 12.குறைவு. கோது அகன்று அளிக்குவார் அருத்திக் கொள்கைபோல் (தேம்பா.1,2,19). 13.கேடு. கோதெல்லாஞ் சூழுமாறல்லாற் குலமகளிர் தொல்லறத்தே வாழுமாறு (பாரிகாதை 210).

கோது[2] பெ. 1.தோண்டுதல். 2.நெறிதவறுகை. (செ.ப. அக.) 3.→கோதுகம். வானவர் தங் கோதா (பெரியதி. 6,2,9). 4.சங்கை. (யாழ்.அக.) 5.கோதென்னேவல். (முன்.) 6.ஓடு. (முன்.)

கோது[3]**-தல்** 5வி. 1.வகிர்ந்து முடித்தல். கார் போல் குழலைக் கோதி (சமுத்திரவி.87). 2.விலக்குதல். மென்மலரைக் கோதிப்போய் மேதி குருகெழுப்புந் திண்பணை (நள.310). 3.குதப்புதல். மென் கரும்பைக் கோதிக் கடித்து (நள.26). 4.கிளறுதல். புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு (நள.334). கோதும் தினைக் கொல்லையினிற் பம்பைகள் எடுத்து குரங்குகள் அடிப்பதும் (இராமநா.2,12 தரு 1). 5.அலகால் அளைதல். கோதும் வரிக்குயில்கள் மாவின் இளம் தளிர் கோதும் காலம் (நந்திக்கலம்.56). 6.மூக்கால் குடைதல். மாவின் தளிர்கோதிக் கூவாதிருந்த குயிற்பிள்ளாய் (நக்.அந்.80). 7.கொத்துதல். வடிவாய வேலாற்கு மலர்ச்சின்னஞ் சொரிவனபோற் கொடுவாய கிளிகோதிக் குளிர்நறும் போது குத்தனவே (சூளா.171). கூரிதாய வாய வாயத ஆதி கோதியும் ஈர ... தீரும் ஆறு தேடுவார் (சிவ.தர்ம.சுவர்க்க. 135). 8.தூண்டுதல். கோது தீபமும் பவுபசாரமுங் கொடுத்தான் (திருவிரி.பு.பால.36). 9.துளைத்தல். வாயால் மலர்கோதி வாவிதொறும் மேயும் (108 திருப். அந்.53,1). 10.சரி செய்தல். மீசை கோதி ... தோற்றி னானே (கதிரை.ப.5). 11.1.உண்ணுதல். பானாறு மலர்ச்சூதப் பல்லவங்க ளைவைகோதி ஏனோர்க்கு மினிதாக மொழியுமிழில் விளங்குயிலே (தேவா.1,60,8). புனித அப்பம் கோதி எடுத்து உண்டாரே (இயேசுகா.ப.87). 11.2.சிறிது சிறிதாக உண்ணுதல். குழந்தை சோற்றைக் கோதுகிறது (நாட்வ). 12.1.தலை முடியின் சிக்கெடுத்தல். கோதி முடிந்த குடுமி (தெய்வச்.விறலிதூது214). 12.2.கூந்தல் சிக்கெடுத்தல். கொண்டை கோதி முடிக்கும் (தெய்வச். விறலி.தூது 338). 12.3.மயிர்ச் சிக்கெடுத்தல். ஓதி கோதி முடித்த இலைச்சுருள் (திருப்பு.146). கோதிவாரி முடித்த பாரிய கொண்டை (அரிச்.பு.2,16). கோதுபடு குழல் போக விளங்குதலை (அழகர் கலம்.90). கோதி முடித்து வைத்த கொண்டை வந்து தோளசைய (பவளக். மாலை ப.68). கோதி மயிர்முடித்துக் கூர்விழிக்கு மையெழுதி (காஞ்சி.அம்.ப.34). கோதிச் சிக்கின்றி முடிக்கின்ற மாலைக் குழலி (பெருந்.1323). கோதிக் குழல் முடிக்க (கூளப்ப.காதல் 157). பத்தினிப் பெண்டிர் கோதி வளர்த்த கூந்தலின் மயிர்கள் (ஆசிய.ப.74). அவன் குளித்து முடித்தான், நிலையைக் கோதி விட்டுக் கொண்டான் (மீண்.தொட்.ப.27). 13.காற்றினால் சிதறுதல். கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தை (நாலடி. 47). 14.நீவுதல். பூ அதனைச் சேரப் பிடித்து அவள்தன் கொண்டை தனிலே சொருகிக் கோதி யிட்டார் (சீவே.சரி. 2018). 15.வாணி. கோதி நின்றாற்றுகின் றனள் கூந்தல் (மனோன்மணீ.5,2,68). 16.ஒழுங்கு செய்தல். தலையமயிரைக் கோதுமென்று தாசிதானே சொல்லும் வேளையிலே (தமிழ்வில்.பா.ப.270). 17.மூக்கால் இறகைக் குடைந்து நேராக்குதல். மயில்கோது கயிலாயம் (தேவா.1157, 6). 18.வெளிச்சிதறல். கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தை (நாலடி.47). 19.கொன்று தின்னுதல். தன்னைப்போ கோதிக்கோல் என்னா (முப்.உலா 30). 20.ஒதுக்குதல். மயிர்க்கோதும் சாடை இவன் உற்றுணர்ந்து (பஞ்ச.திருமுக.705). 21.வருடுதல். தும்பிகுதி மகிழ்வன குவிகுடையன நுதி கோதுபு குயில்கள் (சூளா.436). 22.திருத்துதல். கோதுகுலாய கொன்றை (திருமா.51).

கோது[4]**-தல்** 5வி. 1.கோதல். (யாழ்.அக.) 2.துளைத்தல். (முன்.) 3.மயிர்வகிர்தல். (முன்.) 4.தோண்டுதல். (இலங்.வ.)

கோதுக்கொடி பெ. குறைந்த அளவு தங்கத்தால் செய்யப்பட்ட தாலிக்கொடி. (இலங்.வ.)

கோதுகம் பெ. உள்ளக்களிப்பு. கோதுக மியாவர் கொண்டாடுவார் (சூளா.2105).

கோதுகலம் பெ. →கோதுகம். கோது கலமுடைக் குட்ட னேயோ (பெரியாழ்.தி.2,9,6).

கோதுகுலம் பெ. 1.→கோதுகலம். கோதுகுலமுடைய பாவாய் (திருப்பா.திர.8). 2.அசுத்தமாயை. கோது குலத்தொடுங் கூட்டிக் குழைத்தனர் (திருமந்.408).

கோதுகுலாவு-தல் 5வி. மகிழ்ந்து பாராட்டுதல். கோது குலாவிக் குணம்பயில் வாரே (திருமந்.16).

கோதுநரம்பு பெ. செடி முதலியவற்றின் நரம்பு. (செ.ப.அக.)

கோதும்புமாலை பெ. கோதுமைத் தானியம் போன்ற பொன் மணியால் அமைந்த கழுத்தணி வகை. (தொ.வ.)

கோதும்பை பெ. →கோதுமை. தூவெண்ணிறத்த கோதும்பை யவையால் அமைத்த (திருவுத்தர.பு.4,30).

தேசத்து முந்திரிச் சாராயம் அதில் செய்திடும் கோதும்பை ரொட்டிகளும் (வீர.கட்ட.கதைப்பா.ப.48). கோதும்பை யிறுங்கு செந்நெல் (முகியித்தீன் பு.134).

கோதுமம்[1] பெ. தேன்தொடை. (யாழ்.அக.)

கோதுமம்[2] பெ. →கோதுமை. (முன்.)

கோதுமை பெ. 1.எட்டுயூகை கொண்ட அளவு. (கந்தபு. 2,11,5 உரை) 2.ஒரு வகைத் தானியம். சந்தாசாயபு அவர்கள் கோதுமை மாற்றிக் கொடுக்கச் சொல்லி (ஆனந்த.தினசரிச்.குறி 3 ப.80). ஏழாயிரம் பொன் பெற்ற குதிரை இறப்பைப் பிடுங்கையில் குருட்டுக் குதிரை கோதுமை ரொட்டிக்கு வீங்கினதாம் (என்.பழ.தொ. 1684). கோதுமை தன்னைத் தூற்றிக் கொடுப்பார் (இயேசுகா.ப.50). குதிரைவாலி ராகி சாமை கோதுமை (மேழிவி.140). பல கோதுமை மணி ஒன்றித்து அப்பம் தருவது போல (வழிபாடு ப.213). கங்கை நதிப்புறத்துக் கோதுமை பண்டம் (பாரதி.தேசியம் 5,6). நம்நாட்டில் இன்று கோதுமை கணிசமாக விளைகிறது (செய்தி.வ).

கோதுமைநாகம் பெ. கோதுமைத்தானியம் போன்ற புள்ளியுடைய பாம்புவகை. (செ.ப.அக.)

கோதுமைமணி பெ. 1.கோதுமைத்தானியம். (முன்.) 2.கோதுமைத்தானியம் போன்ற பொன் மணிகளால் அமைந்த கழுத்தணி. (முன்.)

கோதுமைமுளையெண்ணெய் பெ. கோதுமை தவிட்டில் இருந்து யெடுக்கப்படும் எண்ணெய். (கலைச்.அக.ப.2,119).

கோதுவி-த்தல் 11வி. நீக்குவித்தல். வினையாயின கோதுவித்தாய் நீறெழ (தேவா.1139,2).

கோதுறு-தல் 6வி. 1.பாவமடைதல். வாதாவியென் கொறியுண்டு கோதுறுவனோ (சீவக.86). 2.தீமை செய்தல். கோது உற்றமால் இருள் கைம்மா (தாக. கோவை 38). உளம் கோதுறாமல் ஒழுகு செங்குட்டுவற்கு ஓர் துணையாம் (கொங்கு.சத.கார்.61).

கோதூமம் பெ. →கோதுமை. நலத்தகு பொருள் கோதூமம் (திருவானைக்.பு.நானவி.25). அரிசி கோதூமம் பொன் புரையவமும் (அகோர.வேதார.பு.தோற்ற.93). தூய கோதூம மேலாற் பழங்களைச் சுமத்தி வைத்து (திருக்குடந்.பு.21,5).

கோதூளி பெ. (வீட்டுக்குத் திரும்பி வரும் பசுக்களின் நடையில் துளியெழுங்காலம்) அந்திநேரம். (பிங்.217)

கோதூளிசமயம் பெ. →கோதூளி. (செ.ப.அக.)

கோதூளிலக்கினம் பெ. →கோதூளி. கோதூளி லக்கினம் பார்த்தன் பாயெழுந்தருள் வாய் (பத்ம.தென்றல். தூது 51).

கோதேரன் பெ. காவற்காரன். (யாழ்.அக.)

கோதேனு பெ. பாற்பசு. (முன்.)

கோதை பெ. 1.சேரன், சேர அரசன். மா வள் ஈகைக் கோதையும் (புறநா.172,10). தாமந்தாழ் கோதை வருவானை (பெருந்.602). கோதை அரசர் மகோதை எனக் குலவு பெயரும் உடைத்துலகில் (பெரியபு.37,4). கோதைகுட்டு வன்குடகன் கொங்கன் (நாம.நி.148). 2.1.கூந்தல். நானக் கோதை நங்கை பிறந்த நாளானே (சூளா.310). மதங்கமழ் கோதை (சீவக.2584). அவிழ்பூங் கோதையொடு டவிரிழை பொங்க (பெருங். 1,40,111). கோதை சுமந்த கொடிபோல் ... வீழ்ந்தாள் (நள.54). மவ்வலங் கோதையாள் மகிணன் (சீகாழித்.பு. சூரியன்.9). அங்கிருக்குங் கோதை அபிராமவல்லி (பத்ம.தென்றல்.தூது 84). கொந்தாரும் கோதை சரிய மலர்க்கோதை போலே பணிந்தாள் (திரு இலஞ்சி.உலா 445-446). பட்டாரும் இட்டிடையார் பார்வையிலும் கோதையிலும் கள் தார் இவரும் (கலைசைச்.வெண். 83). கனம் போலுங் கோதைமுன் (சங்கர.கோவை 27). மன்றலங் கோதையோடு மன்ன நீ வருத்தம் கொண்டே (சீவல.கதை 165). விஞ்சு கோதை விரித்து (கதிரை.பள்.6). போதுறு கோதை வேற்கட் பொற்றொடி (மருத.பு.5,25). 2.2.கூந்தலை உடையவள். குரவங் கமழ்கோதை (சேர.மும்.கோவை 17). 3.1.பெண் பெண்கள் தலைமயிர். தயங்கினர் கோதை தன்துயர் பொறாஅன் (சிலப்.25,80). கோதை ஆயமும் அன்னையும் அறிவுற (கலித்.122,1). விலத்தகைப் பூந்துணர் விரிந்த கோதையர் (சூளா.47). தண்மதி யேர் பலவாய் மடலவிழ் கோதை (யாப்.காரிகை 43). சிகண்டினி யென்னும் பசிய கோதையை மணந்து (செ.பாகவத.4,3,1004). தலைமயிர் கள்ளவிழ்பூங் கோதையார் (முதுமொழி மேல் 123). கோவைக் கனித்துவர்வாய்க் கோதை (மதுரைச்.உலா 406). தேற்றுவார் இல்லாத பூங்கட்ணேதை ... திருமேனிமிசை வீழ்ந்தாள் (மேக.நா.4,34). மருக்கிளர் கோதை (சங்கர. கோவை 18). என் கோதை கண்ணீர் ஆறாய் வளைந்து இடையூறாகும் (திருவாரூர்க்கோவை 508). கொடியிலும் செடியிலும் கோதையர் தோன்ற (அவளும் அவனும் ப.103). நனி மலன் முடித்த கோதை (புல்லையந்.91). கொந்தவிழ் கோதாய் (யாப்.காரிகை. 21). கோதை நெற்றி மீதில் வைத்த குங்குமம் போலும் (கண்ண.திரை. பா.2,9). தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள் (பெரியபு.28,1117). காணமரபு அறு ஞான குரு அடி கோதை என அணி கோதையும் ... ஈசன் அடியுற ஏத்தினாள் (தேம்பா.1,5,116). பூவரை ஏறிய உள்ளம் புகுந்தார் (சடகோபரந்.36). காவலூர் கோதை கட் கானே கைப்பற்ற என் ஆவிக் கோர்தேன் துளியேயாங்கு (திருக்திருக்காவ.கலம்.85). பனி கொள் கோதையார் (தேம்பா.1,1,50). அந்தக் கோதை வராவிடில் என் செய்கேன் (பாரதி.பாஞ்சாலி.59). 3.2.பொதுமகளிர்.

கொங்கேர் நறுங்குழற் கோதையர் கண்டு குவித்தகையும் (அம்.கோவை பா.448,2). 4.தோழி. நறுமலர்க் கோதைக்கு நல்லற முரைத்து (மணி.பதி.81). சுரிகுழற் கோதை (திருமந்.1214). வில்லாடுவான் கோதைய ரகலத்தே (சீகாழித்.பு.பூத.3). கோதாய்! இரைந்தெழும் கோதாய் (சங்கர.கோவை 21). மஞ்சரிக் கோதைக் குறப்பிடியுமே (திரு.முரு.பிள்.பா.13). சனகன் ஈன்ற கோதை (சிவஞா.காஞ்சிப்பு.வீர.4). 5.உறை. கோதை வேனம்பிக் கல்லதை யிப்பொருள் (சீவக.1815). கோதை வார்சிலைப் பொலங்கிரி (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண். 161). கோதைவார்சிலைப் பொலங்கிரி குழைத்து (காஞ்சிப்.திருக்கண்.161). 6.1.மாலை. முண்டகக் கோதை நனைய ... பௌவம் பாய்ந்து நின்றோளே (ஐங்.121). மானக் கோதை மாசறு வேலோய்வர வெண்ணி (ஔவை.310). தடமலர்க் கோதையாய் (கைந்நிலை 36). மன்னர்தங் கோதைத் தாதுவேய்ந் தழிநிலம் பெருத தோர் செல்வ மார்ந்ததே (சீவக.2407). மைம்மலர்க்கோதை மார்பினரெனவும் (தேவா.1,77,4). தேன் அடைந்த கோதைத் திருவனையார் (பாரத வெண்.712). கொங்கலர் கோதைக் குமரி (புறப்.வெண்.224). சுரும்பு விரும்புமைங் கோதை விளங்கிழையாய் (அம்பி.கோவை 282). தாது அவிழ் கோதை (கபிலை.கோவை 42). நறை மலர்க் கோதையுந் திகழிழில கோதை யெனு நங்கை மடி மீதுவைத்துக் (வைகுந்த பிள்ளைத்.சிறுபறை.183,3). நீலக் கோதை ... சாத்தி (சிவஞா.காஞ்சிப்பு.திருமண.50). மலாழக் கோதை மற்றவனடியார் மார்பொடு தோளுரத் தழுவும் (அம்.கலம்.73). தேனொழுகுங் கோதையனாள் (தித்தேரி.அம்.6 க.14). ஐது தொடைமாண்ட கோதை போல (குறுந்.62,3). இணைத்த கோதை அணைத்த கூந்தல் (முருகு.200). நினது கோதையில் சூடிக் கொடுத்தருள் கோதையை விரும்பி (நாய்ச்சியார் தோத்திரப்.20). மாலையையுடைய அம்பை மன்றலங் கோதையாள் (பாரதம்.ஆதி.135). துணர் மலர்க் கோதை தாமம் சுரும்பு அணை தோளினாளை (பெரியபு. 6,12). மாலை கோதை சோரில் (நந்திக்கலம்.10). மாலை (ளம்பெருமானுக்கு மாலை போன்றவள்). விண்டு சித்தன் வியன் கோதை வெற்றி, செய் அங்கை வேல் கலியன் (திருவர.அந்.3,3). கோதை மதுகரங்காள் (கு.சோ. உலா 598). கோதையில் தனது கோதை கூடலில் இருந்தும ஓமஞ்செய் மாதவர் (திருச்செங்.பு.1,1,51). சூட்டிய கோதை மின்னாராய (சங்கர.கோவை 29). நறுமலர் மொய்த்த குழற் கோதாய் (குளத்தூர் அமுதா.பிள்.4,10). பண்டமறியார் படு சாந்துங் கோதையுங் கொண்டு பாராட்டுவார் (நாலடி.48). 6.2.பூமாலை. தலைமகனாற் கொடுக்கப்பட்ட தழையுங் கோதையுந் தாரும் (தொல்.பொ.264 பேரா.). கோதை மார்பின் கோதையானும் (புறநா.48,1). மதங்கமழ் கோதை (சீவக.2584). கூந்தல் வேய்ந்த கோதையும் (பெருங்.1,48,77). போல் அழகிய பெண் கோதை குறமாது (திருப்பு.714,4). கோதை வேற் கஞ்சன்ருனுங் (செ.பாகவத 10,1,22). கொங்கு இட விம்மிய கோதை (தேம்பா.1,2,26). 6.3.மலர்மாலை.சோதி வாள்முகம் கோதை ஓதி (கலிங்கத்துப்.294). தேன் உருக்கோதை ஒத்தான் (தேம்பா.1,4,144). கோதையு மகலாத கரியகுழலை (கோமதி.பிள்.95). 6.4.மகளிர் அணியும் மாலை. மகளிர் கோதை மைந்தர் புனையவும் (பரிபா.20,20). 7.ஒருகட்பறை. பணவம் கோதை ... வயின்தொறும் இயம்பி (சிவஞான.காஞ்சிப்பு. தக்கே. 46). 8.குற்றம். நம் குலத்துக் கோதை வேட்டவர்கள் கோதையே யடைவது மெய்யே (அம்.கலம்.73). 9.கோதை. பார்வதி கோதை ஒரு கூறு உடையாய் (தாயுமா.பா.42,3). குலாவிக் குழல விடி (திரிசிரா அந்.89). 10.கோதாவரி. முதல்வியே கோதையாயு நர் மதையா முதல்வனுக்கு ஆகின்றாய் ஆல் (நாய்ச்சி தோத்திரப்.6). 11.ஒழுங்கு. கறங்கு நீர்க்கோதை வெள்ளருவி (சீகாழித்.பு.திருநாட்டு.5). 12.1.விரற்கூடு. சிவந்த கோலமணி விரல் கோதை தாங்கி (சீவக.459). 12.2.முன்கைத் தோள்கட்டு. முரண் கோதையும் கட்டிப் பூரித்த கண்டம் (பாரத வெண்.776,1). 13.ஆண்டாள், பெரியாழ்வாரின் பெண். மங்களம் கோதை புணர் மணவாளருக்கு (சோலை.குற.174). பட்டர்பிரான் கோதை தொண்டர் பாதப்பொடி நூற்றெட். அந்.2,3). குறித்த ஒருவர் கொண்டாடும் கொள்கைத்தோ கோதை நிறத்த ஊர் (நூற்றெட்.அந்.55,1). கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர் (பெருந்.1846). 14.விண்ணாண். தாக்காது முழங்கையின் கீழிடும் தோற்கவசம் (இலக்.சொ.அக.) 15.1.முத்துமாலை. கோதை வெண்குடையான் கூற (செ.பாகவத.270). 15.2.முத்தாரம். கோதை சூடிப் பூண்சுமந்து (பதிற்றுப். 88,31). 15.3.கைத் தோலுறை. உமைப் பகைத்த கோதை வேலினர் கொல்ல ... என அயிர்ப்புற்றான் (தேம்பா.2,4,13). வில்லாளர் கையில் பூணும் தோலுறை (வட.நி.605). மூரிச்சிலையு முரட் கோதையுங் கட்டி (பாரத வெண்.776). 16.தீவினை. கோதை கழுநீர் பெய் (சிலேடை இலக்.ப.305). 17.மரக் காற்பறை. மரக்கா ல்ன்ன வொருவாய்க்கோதை (கல்லா.8). 18.காற்று. அழல் பானு நீர் கோதை விண்டல மண்டலி கோதரித்தவனே (திருக்கடல். ம.பதிற்று.82அரசு.அந். கொ.). 19.யசோதை.மேதாவி யான வசு தேவர்க்கு மகனாகி மெல்லியல் கோதை யென்னுங் (வைகுந்தபிள். செங்கீ.115). 20.கொண்டை மாலை. (பிங்.3029) 21.கைச் சல்லடம். கோதை வேலோன் (சேர.மும்.

கோவை 17,1). 22.மனைவி. கோதையிற் றனது கோதை கூடலில் லிருந் தோமஞ் செய் மாதவர் (திருச்செங்.பு.1,1,51).

கோதை[1] பெ. நெற்சுமை. (முன்.)

கோதை[2] பெ. பூதம். துரகமுகக் கோதைக்கிடை (திருப்பு. 137).

கோதை[3] பெ. உடும்பு. (பிங்.)

கோதை[4] பெ. 1.(இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராக்ங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152) 2.மகள். அருமறையோன் கோமைந் தனோடு இளைய கோதையைக் கொண்டேகினான் (நள.246).

கோதைபுரம் பெ. அசுரரது நகர். அசுரர் தங்களது கோதைபுரத்தினின்றும் முதலிட்டு (தக்கயாகப்.248 உரை.).

கோதைமார் பெ. மகளிர். குருண்ட வார் குழல் கோதை மார் (திருவாலி.1,3).

கோதையர்[1] பெ. மாலையணிந்த மகளிர். கண்ணியர் தாரர் கமழ்நறுங் கோதையர் (பரிபா.16,50). கொங்கலர் கோதையர் கொண்டக மெய்தி (சீவக.1479உரை.). விரையமர் கோதையர் வேணுக்கோலினர் (சூளா.90). தாரண வுறுபூங் கோதையர் மணாளர் (மருத.பு.7,66). மணங்கமழ் கோதையர் வந்தனர் (மனோன்மணீ.ப.16). கோதையர்க்கன்றிக் கூற வொண்ணாதே (அறு.இலக்.22 அணி).

கோதையர்[2] பெ. குற்றத்தையுடையவர். கோவினை யன்றி யெந்நாக் கோதையர்க் கூற லுண்டே (சீவக.3098).

கோதையள் பெ. கூந்தலையுடையவள். காரியல் கோதையள் (திருமந்.1110).

கோதையன் பெ. பயனில்லாப் பொருளைக் கூறு வோன். எந்நாக் கோதையர்க் கூறலுண்டே (சீவக.3098).

கோதையார் பெ. 1.மகளிர். சுரும்பொலி கோதையார் தமனை வயிற் றூண்டொறூட்டும் (சீவக.2926). 2.பாங்கியர். கோதையார் சொன்னாலும் கூடாதே (பத்ம.தென்றல்.தூது 117).

கோதையாள் பெ. மாலையினையுடையவள். எத்திறத் தாள் ஈர்ங்கோதை யாள் (நாலடி.46).

கோந்தச்சார் பெ. அற்பன். (செ.ப.அக.)

கோந்தம்[1] பெ. விளக்கு. தனிக்கோந்தம் பத்தெரியும் (மே.தமி.நாட்.ப.312).

கோந்தம்[2] பெ. அணில் முதலிய பிராணிகளாற் கொஞ்சம் கடிக்கப்பட்ட கொட்டை பழம் முதலியன. (இலங்.வ.)

கோந்தளங்காய் பெ. 1.சமுத்திராப்பழம். (மலை அக.) 2.குறுந்தேங்காய். (வைத்.விரி.அக.ப.122)

கோந்தனை பெ. பேய்க்கொம்மட்டி. (மலை அக.)

கோந்தி பெ. குரங்கு. (யாழ்.அக.)

கோந்து[1] பெ. 1.மரத்திலிருந்து எடுக்கப்படும் பிசின். (ஆட்சி.அக.ப.137) 2.மரப்பிசினில் ஊறவைக்கும் ஒட்டுப்பசை. (வட்.சொ.வி.ப.122)

கோந்து[2] பெ. முப்பாட்டன். (இலங்.வ.)

கோந்துக்குப்பி பெ. ஒட்டும் தன்மையுள்ள பொருள் வைக்கப்படும் குப்பி. (ஆட்சி.அக.ப.137)

கோந்துத்தான் பெ. →கோந்துக்குப்பி. (செ.ப.அக.)

கோந்துப்பை பெ. பசைப்பை. (கலைச்.அக.2 ப.101)

கோந்துரு[1] பெ. குடாசகம், வஞ்சகம். (யாழ்.அக.)

கோந்துரு[2] பெ. 1.பாட்டனுக்குப்பாட்டன். (இலங்.வ.) 2.பரிகாசம். (வின்.அக.)

கோந்துரு[3] பெ. கோளாறு. (யாழ்.அக.)

கோந்துலா பெ. மராட்டியப் பிச்சைக்காரர் உபயோகிக்கும் டமாரவகை. (நாட்.வ.)

கோந்தை பெ. நுங்கு எடுத்த பின் உள்ள பனம்பழத் தோடு. (இராம.வட்.வ.)

கோநகர் பெ. 1.மதுரை. கோநகரை நான்மாடக் கூடலென வைத்ததுவும் (மதுரைச்.உலா 204). 2.தலைநகரம். கோநக ரெதிர்கொள (சிலப்.27,255). கொடிமுகி றுழாவு மிஞ்சிக் கோநகர் வடகீழ் (திருவிளை.பு.நகரச்.81). கோநகர்க் காஞ்சி (சிவஞா.காஞ்சிப்பு.சலந்த.2). பொன்னி மாலையா சூழ்ந்தநெடுங் கோநகரா (சொக்க. பண.தூது 57). 3.திருக்கோயில். பிரான் உரைகோ நகர்புக்கனன் (தக்கயாக்கப்.322). மாயோன் கோநக ரெட்டும் (கந்தபு.திருநகரப்.88).

கோநசம் பெ. ஓர்பாம்பு. (யாழ்.அக.)

கோநதம் பெ. தாமரை. (சித்.பரி.அக.ப.87)

கோநதி பெ. பசு பூசித்தநதி. கோநதி தீர்த்தம் முன்னர்க் கூறு அவற்றினுள் விசிட்டம் (கருவூர்ப்பு.12,11).

கோநாகம் பெ. 1.கண்குத்திப் பாம்பு. (அம்.அக.) 2.ராசநாகம். ஆதிசேடன் கோநாக அணை கிடந்த கோ (பாரத வெண்.143).

கோநாதன் பெ. 1.இடபம். (யாழ்.அக.) 2.இடையன். (முன்.)

கோநாய் பெ. ஓநாய். கோநாயினம் வெரூஉம் வெற்ப (பழ.292).

கோநிரை பெ. பசுக்கூட்டம். வேயிசை கொண்டு கோநிரை புரந்து (திருப்பு.196).

கோநேரி பெ. கோநேரிமலை. நன் மீனவனும் புறஞ் சாய்ந்து ... கோநேரியினுங் குடியேற (திருச்செந்.பு.3, 23,5).

கோப்பணன் பெ. பெருங்களந்தையில் வாழ்ந்த ஒரு கொடையாளி. களந்தைக் கம்பக் கரிக் கோப்பணன் வரையீர் (பெருந்.135).

கோப்பத்தை பெ. கமுகு ஓலையின் அடிமடல். கோப்பத்தையிலை புளி காயவிட்டிருக்கு (இலங்.வ.).

கோப்பதவாரம் பெ. அரசர்க்கு உரிய இறை. (சாச.அக.)

கோப்பயன் பெ. காளமேகப்புலவரை ஆதரித்த ஒரு கொடை வள்ளல். திருமலை ராயன் மந்தர புயனாங் கோப்பய னுதவு மகிபதி விதரண ராமன் (பெருந்.1238).

கோப்பழி-த்தல் 11வி. சீரழித்தல். குருமாமணி யூசலைக் கோப்பழித்து (திருக்கோவை 161).

கோப்பன் பெ. 1.ஒரு தொழிலில் அல்லது செயலில் தனித்திறம் படைத்தவன். தேர்ந்த போக்கிரி (வட்.சொ. வி.ப.122). 2.வல்லவன், கெட்டிக்காரன். (ரா.வட்.அக.)

கோப்பாடி பெ. ஒரு சிவத்தலம். கோப்பாக் கோகரணங் குற்றாலம் (கபி.அந்.80).

கோப்பாடை பெ. நஞ்சுக்கொடி. கோப்பாடை தானும் நீக்கி நல்ல குழந்தைகளை எடுத்தார்கள் (தமிழ்வில்.பா. ப.107).

கோப்பாண்டியன் பெ. பாண்டியன். (திவா.)

கோப்பாரம் பெ. கோபுரம் என்பதன் பழிப்புச் சொல் வடிவம். (ரா.வட்.அக.).

கோப்பாளி பெ. 1.வரிக்கூத்து வகை. கேசம்பறி கோப்பாளிகள் யாரும் (திருப்பு.692). 2.→கோப்பன். (செ.ப.அக.)

கோப்பி[1] பெ. 1.(ஆங்) காப்பி. அப்பனுக்கு கோப்பி போட்டுக் கொடுத்து (வட்.வ.). 2.ஒரு வகைச்செடி. (இலங்.வ.)

கோப்பி[2] பெ. →கோபி[3]-1,2. (செ.ப.அக.)

கோப்பிக்கத்தி பெ. கள்ளெடுப்பதற்கு பாளை சீவும் கத்தி. (இலங்.வ.)

கோப்பிடு-தல் 6வி. ஏற்பாடு செய்தல். கூட்டுக்குளே யடைக்கக் கோப்பிட்டான் (விறலி.தூது 603).

கோப்பிதம் பெ. அழகு. கோப்பிதமாய்ப் பன்னீரும் குங்குமமும் (மேழிவி.353).

கோப்பியகன் பெ. அடிமை. (யாழ்.அக.)

கோப்பியம் பெ. 1.இரகசியம். எல்லாம் கோப்பியமாக நடக்கிறது (செ.ப.அக.). 2.காப்பு. (யாழ்.அக.) 3.கோலம். (முன்.) 4.அடக்கம், கோப்பியமான குடித்தனம் (செ.ப.அக.).

கோப்பியன் பெ. →கோப்பியகன். (யாழ்.அக.)

கோப்பியாதி பெ. ஈடு. (முன்.)

கோப்பிராணி பெ. குறும்பு செய்பவ-ள்-ன். அவன் ஒரு கோப்பிராணி (இலங்.வ.).

கோப்பிராளி பெ. →கோப்பிராணி. (முன்.)

கோப்பிரியா பெ. (இசையி.) ரிசபப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.225)

கோப்பிறேசன் பெ. கூட்டுக்கழகம், கூட்டுநிறுவனம். (இலங்.வ.)

கோப்பு பெ. 1.உபாயம். வேந்தர் பொன்னைக் கொள்ளை கொள்ளக் கள்ளியிந்தக் கோப்படுத்தாள் (விறலிதூது 421). காப்பைக் காட்டென்ற கையைப் பிடிக்கும் கோப்பைப் பாரும் பள்ளீரே (முக்.பள்.132). 2.தோள் முதலியவற்றிற் கோக்கப்படும் சுமை. தோட்கோப்புக் கொள்ளார் (நாலடி.328). 3.நீர் வெளிவரும் பகுதி. (செய்தி.வ.) 4.உல்லாசம். கோப்புள வினோதமுடை யோரும் (அறப்பளீ.57). 5.அடுக்கு. (விளை.அக. ப.120) 6. சிறப்பு. கோப்பெலாங் குலைந்தோர் தம்மை (கலிங்கத்துப். 262). 7.பல குறிப்புகள் அடங்கிய காகிதங்களின் தொகுப்பு. (கலை.அக.2 ப.78). 8.காகிதக் கோவை. (கலைச்.அகப்.2 ப.79) 9.வகைகள். ஆணித்தரமாய் அறிந்திருக்கும் கோப்பெல்லாம் தரமாக ஏற்றுவித்து (மு.ப.வி.தூது 180). 10.1.பெருமை. கோப்பு அமைந்த கொற்றவேல் அந்தரர் தம் கோமான் (பாரத வெண். 242,2). கோவைத்த தலைமாலைக் கோப்பிலங்க (கைலாயமாலை 295). 10.2.பெருமைக்குணம். காயாம்பு மேனியர்க்குக் கட்டிலொன்று தான்போட்டு தாயோடு தான் பிறந்த தாய்மாமன் தனையிருத்தி கோப்புக்குண்டான குருவரிசை தான் கொடுத்து (தமி.நாட்.கலை ப.39). 11.அமைப் பழகு. கந்தமா புராணத்து பொழிப்புரைக் கோப்பிருந் திசைப்போன் (தென்காசித்.பு.வர.14). 12.வாரை இழுத்துப் பிணிக்கை. கோப்புச் சீரமை மத்தளம் (சிவஞா. காஞ்சிப்பு. தழுவ. 298). 13.அலங்காரம். கோப்பணி வான் றோய்குடி (திருக்கோவை 196). கோட்புடை யவிர் மதிக் குடையினீழல் (இராவணகாவிய 3,26). 14.கோக்கை. பச்சைக் கோப்பமை தெரியல் (சிவஞா.காஞ்சிப்பு.திருமண.50). கொண்டு வந்த கடுதாசியை நான் கொடுத்துக் கோப்புடனே திருச்சினாப்பள்ளி ஜே (திருவிடைநா.ப 43). 15.அலுவலக ஆவணத் தொகுப்பு. சிக்கலான கோப்புகளில் சுலபமாகத் துறைத் தலைவரிடம் கையெழுத்து வாங்க (செய்தி.வ.). 16.இடம்பம், பகடி. அவள் எடுத்த கோப்பு எனக்கு நல்ல தோ (தெய்வச். விறலி.தூது 293). 17.அரசு ஊழியர்களுக்கு அரசால் ஏற்படும் படித்தரம். (இலங்.வ.) 18.சேர்க்கை, கூட்டு. கங்கையும் ... யமுனையுமே கூடிய கோப்பொத்த தால்உமை பாகம்எம் கொற்றவற்கே (சேரபொன்.அந்.90). 19.சீர். கோப்பணிவான் றோய்கொடி முன்றில் (திருக்கோவை 196). 20.வகை. ஆணித்தரமாய் அறிந்திருக்கும் கோப்பெல்லாம் மேனித்தரமாக வேற்றி வித்து (சொக்க.பண.தூது 180). 21.கோவை. கோப்பு உள விநோதம் உடையோர் அருகு (அறப்பளீ.சத.57). மனவுக் கோப்பு அன்ன நல் நெடுங் கூந்தல் (குறுந்.23). 22.ஒழுங்கு. மரகத மாலையுங் கோப்பமை யாரமுந் தூக்குவார் (திருவிளை.பு.5,53). வியாசன் கோப்பாய் நற் காந்தந் தனிலுள நாகர காண்டத்தில் (திருவாமாத்.பு.பூர்வ.22,29). விரதத்தின் கோப்பனைத்தும் (விநாயகபு.62,15). 23.கட்டப்பட்ட

வேலைப்பாடு. மேகலை அணி சிற்றாடையுடன் கோப்பு அமைகிண்கிணி அசைய (பெரியபு.12,13). 24.கவிவு. நீப்பருந்துயர் கோப்புக் கொள்ளலும் (விநாயக.பு.7,3).

கோப்புக்கூட்டு-தல் 5வி. சித்தஞ் செய்தல். (செ.ப.அக.)

கோப்புசம் பெ. வீட்டுக்கூறையின் மரச்சட்ட அமைப்பு. பாழிசேர் கோப்புசம் புரையவே (புயற்.6,22).

கோப்புண்(ணு)-தல் 7வி. கோக்கப்படுதல். சூலத்திற் கோப்புண்டு கிடந்த வாறே (சிவஞா.காஞ்சிப்பு.அந்த.30).

கோப்பெண்டு பெ. அரசன் மனைவி. பெருங்கோப் பெண்டுமொருங்குடன் மாய்ந்தனள் (சிலப்.25,86).

கோப்பெருங்கணக்கர் பெ. இராசாங்கத்துத் தலைமைக் கணக்கர். கோப்பெருங் கணக்கரைக் குழுவிடை விளங்க (பெருங்.5,7,122).

கோப்பெருங்கிழவோள் பெ. →கோப்பெருந்தேவி. குன்றாக் கற்பினெங் கோப்பெருங்கிழவோள் (பெருங். 2,11,47).

கோப்பெருந்தெரு பெ. இராசவீதி. கோப்பெருந் தெருவின் இருமருங்கினும் கோலேந்திய வீரர்கள் நின்று (கௌடலீயம் ப.126). கோப்பெருந்தெருவின் தனி விளக்காய்ச் சார்ந்தான் அன்னாள் (மண்ணியல்.ப.14).

கோப்பெருந்தேவி பெ. பட்டத்தரசி. ஒர்த்துடனிருந்த கோப்பெருந்தேவி (சிலப்.27,251).

கோப்பெருமுதியர் பெ. 1.இராசங்கத்தில் அனுபவ முதிர்ந்த விருத்தர். வணிகர்க்கறையுங் கோப்பெரு முதியர் (பெருங்.2,2,164). 2.அரசுக்கு உதவும் அனுபவமுதியர். கோயின் மகளிரும் கோப்பெரு முதியரும் (பெருங்.5,6,88).

கோப்பெருவேந்தன் பெ. இராசாதிராசன். கோப்பெரு வேந்தன் யாப்புறுத் தமைத்தபின் (பெருங்.3,22,78).

கோப்பை பெ. பிடிவைத்த கிண்ணம். கோப்பையில் ... மதுவை மாந்தி (இயேசுகா.ப.66). சீனத்துப் பால் கோப்பை நீ (குடும்பவி.4 ப.88). ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு (கண்ண.திரை.பா.3,428).

கோபக்காரன் பெ. கோபமிகுதியுள்ளவன். (செ.ப.அக.)

கோபக்கிரமன் பெ. →கோபக்காரன். (யாழ்.அக.)

கோபகன் பெ. →கோபன். (முன்.)

கோபகுண்டம் பெ. எட்டிமரம். (மலை அக.)

கோபகுலம் பெ. பசுவைக்காக்கிற இடையர் குலம். நந்தன் குல மதலையாய் கோபகுலத்திலே வளர்ந்த ருளினாற் போலே (குரு.ப.ஆறா.ப.13).

கோபங்கம் பெ. சரகண்டபாடாணம். (யாழ்.அக.)

கோபங்காய்ந்தோர் பெ. முனிவர். கோபங்காய்ந்தோர் முனிவரறவோர் (உரி.நி.44).

கோபங்கொள்(ளு)-தல் 2வி. 1.புண் முதலியவை உக்கிரமாதல். (இலங்.வ.) 2.சினங்கொள்ளுதல். (நாட்.வ.)

கோபச்சுரம் பெ. கோபம் வரும்படி பித்தம் மிகுந் திருக்கும் சுரம். (சீவரட்.32)

கோபச்சுவாலிதம் பெ. பெருங்கோபம். (யாழ்.அக.)

கோபஞ்செலுத்து-தல் 5வி. கோபத்தை வெளிப் படுத்துதல். (வின்.அக.)

கோபணை பெ. கவண். (யாழ்.அக.)

கோபத்தகிதம் பெ. கழற்சி. (சங்.அக.)

கோபத்திரம் பெ. தாமரை நூல். (யாழ்.அக.)

கோபத்திரீ பெ. இடைப்பெண். (செ.ப.அக.)

கோபத்திரை பெ. வாகை. (சித்.பரி.அக.ப.87)

கோபத்தீ பெ. →கோபாக்கினி. (கூடா நி.)

கோபதாபம் பெ. மிகுசினம். (செ.ப.அக.)

கோபதி பெ. 1.எருது. விடை எருது கோபதி (உரி.நி.78). 2.சிவன். (யாழ்.அக.) 3.இந்திரன். மன்று கோபதி தனக்கபரம் வந்தெவர் செய்தார்...அருச்சனை (திருக்கழு. பு.இந்திர.50). 4.சூரியன். (யாழ்.அக.) 5.(இசையி.) இரகுப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.188)

கோபதீத்தம் பெ. →கோபதாபம். (யாழ்.அக.)

கோபநாள் பெ. சூரிய வெப்பம் மிக்க நாள். கோப நாள் குளிர்ச்சியாயும் (நீதிசா.68).

கோபப்பிரசாதம் பெ. சிவபிரானது கோபச்செயல் களையும் அருட்செயல்களையுங் கூறுவதும் நக்கீர தேவரால் இயற்றப்பட்டதும் பதினோராந் திருமுறை யுள் சேர்ந்ததுமான ஒரு நூல். எங்கள் ஈசன் கோபப் பிரசாதம் கூறும் காலை (நக்.கோப.1,42).

கோபம்¹ பெ. பசுக்கள் விருத்தியாகுமிடம். கோபத்திற் பிறந்தன பாலவா வேறொடு பதினாறாயிரம் காவல் வேந்தண்குச் ... கொடுக்கென (பெருங்.4,11,32-33).

கோபம்² பெ. 1.சினம். கொண்டதோர் பித்த வார்த்தை கோபமுடனே யாக்கும் (பெரியபு.6,42). கோபம் ஞானம் (தொல்.சொல்.401 நச்.). கற்றவர்க்குக் கோப மில்லலை (தண்டலை.சத.60). செழுந் திங்கள் உங்கள் முருந்து ஒன்று கோப முகம் கண்டு நாணி (தஞ்.கோவை 9). கோபத்தை வெல்லும் குருகையே (குருகை.6). குறைவிலா மயக்கத் கேதாடு கோபத்தை அடைந்து (பகவற்.16,9). விழிப்பகை யாய கோபமோ (திருமழு வாடிப்பு.வைத்தி.10). கோல வீதியின் வடிவாய் ... நீதியின் வடிவாய் நின்ற நிமலனே (தேம்பா.2,2,121). கோபத்திற் பாண்டுவெனுஞ் சந்த்ரகுலன்... ஆண்டு (மான்.தூது 35-36). அதில் உற்றவர் கோபம் வளராதோ (கண்ண. திரை.பா.1,175). 2.வெறுப்பு. (வின்.அக.) 3.வெகுளி. பழுது நெஞ்சுறு கோபமே மிக மிகு முனிவரன் மகிழ் வெய்தப் பழுதுதிலன் புடனியற்றினன் (பாரதம்.1,2, 28). என் தன் கோபம் பொல்லாதே (இராமநா.6,3தரு 3). காமஉட் பகைவனும் கோபவெங் கொடியனும்

(திருவருட்பா 6,). 4.பகை. புதனுடன் மேவித் திரியோனும் கோபம் உற புதனுடன் முக்குடையவன் கூடிப்பகை அடையவும் (சுகர்நாடி 1143 உரை). 5.எரிச்சல். பரவை கோபமும் சோபமுடம் தீர்த்திலார் (தில்.கலம்.30). 6.வாதபித்த சிலேட்டு மங்கள் அளவில் மிக்கிருக்கை. (செ.ப.அக.) 7.உக்கிரம். அங்கியின் கோபம் தணிப்பான் (திருமந்.462). 8.துத்தபாடாணம். (வின்.அக.) 9.காத்தல். (யாழ்.அக.) 10.சடத் தீயினொன்று. (முன்.)

கோபம்[3] பெ. 1.இந்திரகோபம் என்னும் தம்பலப்பூச்சி. கொல்லை நெடுவழிக் கோப மூரவும் (சிறுபாண்.168). கோபந் தவமும் தகைய புறவு (கார்.நாற்.5). பரப்பி யிட்டன போலக் கோபங்கள் பயிர்மிசைப் பரவ (சீவக.1564). அருஞ்சிலை கொண்டுமன் கோபமுங் காட்டிவருஞ் செயலோன் (திருக்கோவை 327). அம்திருமகன் கோபம் வாய் மலர்ந்து (கல்லாடம் 15,19). வெருவிச் சிவந்து பசந்ததுங் கோபம் வெளுத்ததுமே (கப்.கோவை 53). கோளரிய கச்சோத நரந்தநறும் பலந்தீபங்கோப மென்ன (திருவிளை.பு.17,37). கோபம் எனத் திங்கள் முகத்து ஒளிரும் செவ்வாயாள் (மயிலை.உலா 365). மண்டலம் எங்கணும் மலிந்த கோபங்கள் (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய்.136). நீருண் டெழுந்தகாரிணர்முல்லை கோபமென்ன (கோமதி.பிள். 95). 2.மாணிக்கத்தில் காணப்படும் ஒரு குற்றம். (குண.2 ப.278) 3.ஒரு வகை துகில். கோபத்தை மிக்க பகடு அளித்தாய் (நாணிக்.ஒருதுறைக் கோவை 260). 4.செவ்வல்லி. (ஆசி.நி.138)

கோபம்[4] பெ. 1.களவு. கள் காமம் கோபம் விட்டால் அன்றோ ... நின் அருள் தான் வாய்க்கும் (தாயுமா.பா. 43,288). 2.துக்கம். அரசனை நான் சுமக்க வந்த கோபத்தால் இங்கிருந்தேன் (பஞ்ச.தந்.162).

கோபம்[5] பெ. பாவனை செய்கை. (யாழ்.அக.)

கோபலர் பெ. முல்லைநில மாக்கள். (பிங்.545)

கோபலன் பெ. கண்ணை நெற்றியில் உடையவன். (சிலேடை இலக்.ப.306)

கோபவல்லி பெ. 1.பெருங்குரும்பை. (சங்.அக.) 2.நன்னாரி. (சித்.பரி.அக.ப.87)

கோபன் பெ. 1.இடையன். கோபர் ஆவுய்யக் கோவர்த் தனகிரி தன்னை ஏந்தி (வரத.பாகவதம்.1,75). 2.அதிகாரி. (யாழ்.அக.) 3.கோபத்தை யுடையவன். அடல் உக்ர கோபன் அடங்கலர் போல (நந்திக்கலம்.20). 4.சிவன். கூன்மதியர் கோபர் (தேவா.542,4). 5.காப்போன். (யாழ்.அக.)

கோபன்கன்னிகை பெ. இடைச்சி. (முன்.)

கோபனம் பெ. 1.நிந்தை. (யாழ்.அக.) 2.வெளிச்சம். (முன்.) 3.தற்காத்தல். (முன்.) 4.→கோபனீயம். (செ.ப.அக.)

கோபனீயம் பெ. இரகசியம். (யாழ்.அக.)

கோபனை பெ. கவண். (முன்.)

கோபாக்கினி பெ. 1.மகா கோபம். (முன்.) 2.உயிர்த் தீக்களுள் ஒன்றான சினம். (சூடா.நி.)

கோபாக்கினை பெ. 1.இறை கோபத்தால் ஏற்படும் தீர்ப்பு. தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே (பு.ஏற்.ரோமர் 13,4).

கோபாட்டமி பெ. கார்த்திகை மாதத்துப் பூருவ பக்கத் தட்டமி. (யாழ்.அக.)

கோபாடவிகன் பெ. இடையன். (முன்.)

கோபாயகன் பெ. காப்போன். (முன்.)

கோபாலகன் பெ. 1.கிருட்டிணன். (முன்.) 2.பசுக்காப் போன். (முன்.) 3.இடையன். குருந்தொசித்த கோபாலகன் (இயற்.3,32).

கோபாலதாபனம் பெ. நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று. (செ.ப.அக.)

கோபாலதாபினி பெ. →கோபாலதாபனம். (முன்.)

கோபாலம் பெ. 1.தோகடர்களின் புறமணக்கட்டுப் பாடு உடைய ஒரு குலம். (தென்.குல.குடி.2 ப.385) 2.புரட்டாசியிற் சனிக்கிழமை தோறும் பிச்சை யெடுக்கும் விரதம். எடுக்கிறது கந்தை கோபாலம், எறுகிறது தந்தப்பல்லக்கா (என்.பழ.தொ.1635).

கோபாலர் பெ. 1.இடையர். கோபாலர் என்பது இடையர் ஆகும் (அக.நி.கோமுதல் 16). கோபாலரானிடை யராயர் பெயராம் (உரி.நி.52). கோபாலரினும் வாணிகஞ் செய்வாருளராதலின் (சீவக.484 உரை). மருள் அகன்ற உணர் கோபாலர் ... பரிசை கொண்டார் (ஞான உபதேசகா.122). 2.முல்லை நில மாக்கள். (ஆசி.நி.7)

கோபாலவார்னிசு பெ. பசைமிகுந்த குங்கிலியத் தையும் சூடத்தையும் ஆறுக்கு ஒன்றாகக் கூட்டிச் சூரணமாக்கிச் சாராயத்தை விட்டுக் குழைத்துச் சுத்தஞ்செய்யும் வார்னிசு வகை. (நாட்.வ.)

கோபாலன் பெ. 1.கண்பொருந்திய நெற்றியை யுடைய சிவபெருமான். இடை மருதீச னெனு மெற்றி கோபாலனே (திருவிடைகலம்.9). 2.திருமால். கோபாலன் அத்தனார் (சிலேடை இலக்.ப.306). கோபாலன் எங்கே உண்டோ கோகுலம் அங்கு உண்டு (கண்ண.திரை.பா 1,31). 3.கிருஷ்ணன். கோபாலா போரேறே (பாரதம்.5, 4,34). 4.கண்ணபிரான். நட்புறு கோபாலன் துதித்தும் (திருக்கழுக்.சி.வெண்.97). 5.பூமியைப் பாதுகாப்பவன். கோபால நிற்கும் பின்னவற்கும் கூறுவல் (தேவி மா.1,3) 6.இடையர் களுக்கான பெயர். (தென்.குல.குடி2 ப.386) 7.இடையன். (சூடா.நி.)

கோபாலன்மைந்தன் பெ. பிரமன். குமுதமலை தன்னதிலே அந்த கோபாலன் மைந்தனு வந்தல்லவே (தமிழ்வில்.பா.ப.166).

கோபாலனம் பெ. பசுக்களைக் காக்கை. உழவாதிகளும் என்றமையால் வாணிப கோபாலனம் ஆதிகளும் ... கொள்க (வேதா.சூ.156 விளக்கம்).

கோபாலி பெ. வேணுகோபாலனது உருவம்பொறிக்கப் பெற்றுச் சேலம் மாவட்டத்தில் வழங்கிய ஒருவகை நாணயம். (செ.ப.அக.)

கோபாலிகை பெ. இடைச்சி. (யாழ்.அக.)

கோபாவேசம் பெ. சினமயம். (கலைச்.அக.2.ப.16)

கோபி[1] பெ. 1.இடைச்சாதிப் பெண். கோகுலத்தில் கண்களுக்கு கோபி என்னும் பெண்களுக்கு (கண்ண. திரை.பா.3,97). 2.நன்னாரி. (தைலவ.)

கோபி[2] பெ. சினமுள்ளவன். (யாழ்.அக.)

கோபி[3] பெ. 1.→கோபிசந்தனம். (செ.ப.அக.) 2.→கோபி நாமம். நீறு கோபி திருநாம நெற்றிக் கணியா (பிரபோத. 6,31). 3.கருநொச்சி. (மலை அக.)

கோபி[4]**-த்தல்** 11வி. கடிதல். பகைவரைக் கோபித்த வாளுழவன் (இலக்.வி.615 உரை).

கோபி[5]**-த்தல்** 11வி. 1.கோபமாதல். மணையாள் அரையில் துகிலுரிந்தும் ஐவர் மனம் கோபித்தாரோ (தண்டலை.சத.17). சிலரொடு கோபித்தல் செய்வதே னென்றாயேல் (கைவல்ய.2,60). 2.புண் முதலியன சினத்தல். எனைக் கோபியேல் (வைரா.சத.தோத்.43). குற்றம்மிகச் செய்ததனால் கோபித்தே அம்முனிவன் ... சாபமிட்டான் (சீவே.சரி.1549). தாவிப் பறந்து பணிகள் பதுங்கக் கோவித் தெழுந்த கருடனும் (முக்.பள்.38,10).

கோபிகம் பெ. அசோகு. (சித்.பரி.அக.ப.87)

கோபிகாகுசுமம் பெ. (இசையி.) மாயாமாளவ கௌளை என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.129)

கோபிகாத்திரி (கோபிகாத்திரீ) பெ. இடைச்சி. (யாழ். அக.)

கோபிகாத்திரீ (கோபிகாத்திரி) பெ. →இடைச்சி. (முன்.)

கோபிகாதிலகம் பெ. (இசையி.) சண்முகப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.214)

கோபிகாபரணம் பெ. (இசையி.) கவாம்போதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.189)

கோபிகாமனோரஞ்சினி பெ. (இசையி.) சுசரித்ரா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.237)

கோபிகாவசந்தம் பெ. (இசையி.) நட பைரவி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.141)

கோபிகை பெ. →கோபத்திரி. (முன்.)

கோபிசந்தனம் பெ. ஒருசார் விட்டுணுபத்தர்கள். ஊர்த்துவ புண்டரமாக நெற்றியிலணிவதும் வெண்மை கலந்த மஞ்சள் நிறமுள்ளதுமாகிய ஒரு வகைத் திருமண். தாமரைத் திருமணியு மெய்க்கோபி சந்தனமும். (பிரபோத.10,13).

கோபிசாற்று-தல் 5வி ஏமாற்றுதல். (செ.ப.அக.)

கோபிட்டன் பெ. கடுங்கோபமுள்ளவன். (நாட்.வ.)

கோபிதம் பெ. கோபம். (யாழ்.அக.)

கோபிதாகம் பெ. தில்லைமரம். (சித்.பரி.அக.ப.87)

கோபிதாரம் பெ. குராமரம். கோபி தாரமுங் குராமர மாகும் (பிங்.2676). கோபிதார வனத்திடைக் கதிர்வேல் (கருவூர்ப்பு.12,15).

கோபிநாதன் பெ. (இடைச்சியர் நாயகன்) கிருட்டினன். (செ.ப.அக.)

கோபிநாமம் பெ. விட்டுணுபத்தருள் ஒரு சாரார் கோபி சந்தனத்தால் அணியும் நெற்றிக்குறி. (முன்.).

கோபிப்பெண் பெ. →கோபிகாத்திரி. கோபிப் பெண்கள் கோடி உண்டு (கண்ண.திரை.பா.1,31).

கோபிபோடு-தல் பெ. →கோபி சாற்று-தல். (செப. அக.அனு.)

கோபியடி-த்தல் 11வி. சுவர்க்கு மஞ்சட்காவி பூசுதல். (செ.ப.அக.)

கோபியர் பெ. →கோபிகாத்திரி. நல்ல கோபியரக் கேலி செய்யும் கோபால கிருட்டிணனாம் (நகர்.நாட்.கதைப்பா. ப.76). புல்லாங் குழலின் மெல்லிசை கேட்டு ... கோபியர் அருகில் வருவார் (கண்ண.திரை.பா.2,275).

கோபிலன் பெ. காவற்காரன். (யாழ்.அக.)

கோபினை பெ. கோபம். (முன்.)

கோபீகன் பெ. →கோபிட்டன். பொறையிலாத கோபீகன் (திருப்பு.530).

கோபீதம் பெ. சுத்ததலம். (யாழ்.அக.)

கோபுச்சம் பெ. பசுவால். (முன்.)

கோபுரக்கல் பெ. செங்கல். (முன்.)

கோபுரக்கலசம் பெ. கோயில் கோபுரத்தின் மேல் அமைக்கப்படும் குடம். மாமணிக் கோபுரக்கலசத்தில் அருள் ஒளி கண்டோம் திருமுருகா (கண்ண.திரை.பா. 2,12).

கோபுரத்தும்பை பெ. அடுக்குத்தும்மை. (மலை அக.)

கோபுரந்தாங்கி பெ. 1.பீத்தும்பை. (சித்.பரி.அக.ப.87) 2.→கோபுரந்தாங்கிப்பதுமை. (யாழ்.அக.) 3.காரிய நிர்வாகியாக நடிப்போன். (செ.ப.அக.)

கோபுரந்தாங்கிப்பதுமை பெ. கோபுரத்தைத் தாங்குவது போல அமைக்கப்படும் பிரதிமை. (முன்.)

கோபுரபுடம் பெ. காட்டெருவைக் கோபுரம் போலக் குவித்து நிரப்பி இடும் புடம். (முன்.)

கோபுரம் பெ. 1.நகரத்தின் வாயிலிலும் கோவிலின் வாயிலிலும் அமைக்கப் பெறும் சிகரம். கோபுரமுங்

கழிந்துகுளிர் நகரை வலங்கொடு வீதி குடையோன் செல்ல (சூளா.1529). கொடி நகரின் ... கோபுரம் போன்றதே (பெருந்.பாரதம் 474). வம்புலாம கோயில் கோபுரம் கூடம் (கரு.1,10). வாசலில் உயர்ந்தாங் இடத்ஷோக அமைக்கப்பட்டிருப்பது மாடக்குச் சித்திரமும் மாரகர்க்குத் கோபுரமே (நன்.55). சாற்புநூற் றொடர்பால் நன்ன ராலய மண்டபங் கோபுர நகரம் (திருவிளை.பு. 3,35). ஆதவன் கதிர் ... கோபுரங்கிளர் (திருப்பு.106). பொங்குமணிக் கோபுரமும் பூங்கிடங்கும் (மதுரைச். உலா 23). மாமணி கொண்டே நின்ற கோபுரமும் (நகுல.பு.நகுல.16). கோபுரம் போல் அதில் சாய்க்கட்டுமா (கண்ண.திரை.பா.1,37). 2.விமானம், மேனிலை மண்ட உச்சிப்பகுதி. வயிரவேதிகை மலைவது கோபுர வாய்தலின் படி தீண்டி (சூளா.879) சாய்வு இலாது வான் முகடுறத் தயங்கு கோபுரமே (வரத.பாகவதம்.5.12). கூட சாலைகள் கோபுரத் தெற்றிகள் (பெரியபு.4,4). திருவரங்கு திருமதில் கோபுரம் ... காண்டைவர் (சிவபுண்ணிய. 67). திருவருணை வல்லாளன் கோபுரத்தின் (அருணகிரி.பு. சி.பாயி.2). மதிலுடன் கோபுரமும் வாலியும் புடைசூழ மருவு சோணாட்டதிபனே (குமர.சத.68). உயர் கோபுரம் ஏறிக்கண்டேன் (மலரும் 37). தங்கத்தினால் கலசம் வைத்த கோபுரம் (கண்ண.திரை.பா.3,149). 3.திரு மதில். கோபுரங்களும் கவினப் புதுக்கி (தனிப்பா.திர. 97). எயினலம் புனை கோபுரமா புரத்தெழுது மாளிகை (பாரதம்.1,2,119). 4.பெருவாயில். குன்றகோ புரங்களரம் பையின் வருக்கக் குலை கடாம் பழுத்து (கோலாசல. பு.305). கோபுர மணியொளி குன்ற (தேம்பா.2,6,1). 5.பசுக்கள் தங்குமிடம். ஆன் கொட்டிலாகிய கோபுரத்தைச் செய்க (சிவதர்ம.கோபுர.உரை 136). 6.சுவர்க்கம்.கோபுர வுயர்ந்தநிலை கோபுர மிசைப்போய் (திருக்குற்றா.பு.2,37). நீடொளிய கோபுரங்கள் (குசேலோ.31).

கோபுரவத்து பெ. (கோரத்தில் வசீப்பது) குரங்கு. (நாட்.வ.)

கோபுரவாசல் பெ. கோபுரத்தின் கீழ்நிலை. (செ.ப.அக.)

கோபுரவாயில் பெ. →கோபுரவாசல். கோபுர வாயிலுக்கு ஓர் படி மிக்க வெண்கலத்தால் அமைத்தான் (திருவால. திருப்பணி.76). கோபுரத்தின் கீழ் நிலை பதவுயர் கோபுர வாயில் (உரி.நி.130) சென்று கோபுர வாயிலின் புறம்பு போய்த் திரண்டு (திருவிளை.பு.59,60).

கோபுருட்டம் பெ. ஆப்பி, பசுவின் சாணி. (யாழ்.அக.)

கோபுளகம் பெ. தாலாபாடாணம். (சங்.அக.)

கோபேந்திரன் பெ. கிருட்டினன். (யாழ்.அக.)

கோபை பெ. ஒளி. இருநிலம் வழங்கு கோபையது (தக்கயாகப்.142).

கோம்பத்தை பெ. கமுகு ஓலையின் அடிமடல். (இலங்.வ)

கோம்பல் பெ. 1.முன்கோபம். (திவா.) 2.தணியாக் கோபம். (பிங்.1875) 3.சினக்குறிப்பு. (யாழ்.அக.)

கோம்பலன் பெ. பெரும் சினத்தையுடையவன். ஏழையின் வாழ்வில் வதிவராயினும் ... கோம்பலன் அல்லர் (பனிமொழி 4,4,146).

கோம்பறை பெ. 1.பயனற்றது. (யாழ்.அக.)

கோம்பி பெ. 1.ஓந்திப் பொது. வரிநிறக் கோம்பி வாலிமிழ்ப்பு வெரீஇ (பெருங்.1,54,142). கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை (திருக்கோவை 21). கோம்பி பாம்பிடைக் கோத்தணி (கலிங்கத்துப்.141). கோம்பிசரடம் ... பகை யோந்தி (உரி.நி.77). ஆய கோம்பி கண்டுசினந் துடலஞ் சிவப்புற் றடங்கல்போல் (பிரபு.லீலை 5,55). கற்றைப் பசுந்தோகை மாமயிலும் கோம்பியும் நப்பாம் குருகையே (குருகை.85). கோம்பியலது இது நாசி (சிவஞா. காஞ்சிப்பு.சுந்த.18). கோம்பியாய் கிடந்தோன் (குசேலோ. 400). குட வாசல்விண் ணாள்வரைக் கோம்பியனீர் (பெருந்.1617). 2.பச்சோந்தி. (பிங்.2528)

கோம்பு[1] பெ. சினக்குறிப்பு. கோம்பு படைத்த மொழிச் சொல் பரத்தையர் (திருப்பு.268).

கோம்பு[2]**-தல்** 5வி. சினத்தல். (பிங்.)

கோம்புலன் பெ. சிவஞானம். கோம்புல னாடிய கொல்லையும் (திருமந்.1515).

கோம்பை பெ. 1.தேங்காய் முதலியவற்றின் மேலோடு. எடுத்தெறிந்த கோம்பையிலுள்ளிருக்கும் சாரம் என்றே நுங்க (ஞான.உபதேசகா.1668). 2.அறிவற்றவன். (தஞ்.வ.) 3.காட்டிலுள்ள மரக்கட்டைவேலி. (வட்.வ.)

கோம்பை[2] பெ. 1.ஓர் ஊர். (செ.ப.அக.) 2.குமட்டி. (சித்.பரி.அக.ப.87) 3.→கோம்பைநாய். (தென்.வ.).

கோம்பைக்கலயம் பெ. 1.அடியற்ற மட்பாண்டம். (செ.ப.அக.) 2.→கோம்பை[1]-2. (முன்.)

கோம்பைநாய் பெ. கோம்பைநகரிலுள்ளதும் காவல் புரிவதிற் சிறந்ததுமான ஒருவகைச் செந்நாய். (நாட்.வ.)

கோமக்கள்ளி பெ. சதுரக்கள்ளி. (சித்.பரி.அக.ப.87)

கோமகள்[1] பெ. 1.தலைவி. ஏடவிழ் தாரோய் எங்கோமகள் முன் (மணிமே.19,3). 2.அரசி. எம்கோ மகளை ஆட்டிய அந்நாள் (சிலப்.25,161). 3.அரசிளங்குமரி.அண்ணலங் கோமகளருச் சித்தாயிடை (சூளா.213). கோமகளைத் தன் மனத்தே கொண்டு (நள.59) 4.இலக்குமி. கோமகளும் கொண்டார்கைக் குஞ்சரமே (சுவாமிநா.1). 5.நாககன்னி. பணம்புணர்ந்த மோலியான் கோமகளைப் (கு.சோ.உலா 37).

கோமகள்[2] பெ. (இசையி.) கரகரப் பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கோமகன் பெ. 1.தலைவன். (யாழ்.அக.) 2.அரசர். கோமகன் கொற்றங் குறைவின் றோங்கி (சிலப்.30,6).

அரசன் உதியர் கோமகன் முடிக்கண் (கலிங்கத்துப்.16). கோமகன்றன் தலைவாயில் (குசேலோ.194). கோமகன் இயேசு கண்டு (இயேசுகா.ப.117). 3.அரசகுமாரன். கோமகற் பெற்று (பெருங்.5,7,36). அரசகுமாரனாகிய சந்தனு பூருவின் மரபில் பிறந்த கோமகன். (பாரதம். 1,1,101). கோமகன் திண்கையில் தங்குறும் (கருவூர்ப்பு. 14,12). கோமகன் வளர்கின்றானால் (செ.பாகவத.184). கோமகற்குத் தெய்வீகப் புரவலனென் றுயர்நாமங் குறித்து (இறைவாச.பு.153). குழந்தையில் இருந்து கோமகன் வயதில் ஆறிரண்டு அடைந்தார் (இயேசுகா. ப.38). பாங்கி செங்கையாலணைத்துக் கோமகன் தெய்வத்திறலை நீ யறிந்திலைபோலும் (மேகநா.3,13). 4.ஞான வேந்தன். ஞானமாமுடி சுமந்த கோமகன் (ஞானா.33,15). 5.இந்திரன். கண்ணா யிரங்கொண்ட விண்ணாடர் கோமகன் (குளத்தூர் அமுதா.பிள்.1,5).

கோமகூரிகை பெ. கால்நடைகளுக்கு வரும் அம்மை வகை. (கால்.வி.)

கோமட்டி (கோமுட்டி) பெ. தெலுங்கு வைசிய சாதியார். (யாழ்.அக.)

கோமடந்தை பெ. 1.இராச்சியலட்சுமி. கோமடந்தை களிகூர (பாரதம்.1,7,40). 2.நிலமகள். கோமடந்தை முகமெனவாழ் வழுதிவள நாடு (திருக்குற்றா.பு.31,2).

கோமண்டலம் பெ. பூமி. (யாழ்.அக)

கோமணம் (கோவணம்) பெ. →கௌபீனம். தலைக்கு மிஞ்சின ஆக்கினையில்லை கோமணத்துக்கு மிஞ்சின தரித்திரமில்லை (என்.பழ.தொ.3379).

கோமணாண்டி (கோவணாண்டி) பெ. (கோவணமட்டு முடைய பிச்சைக்காரன்) கதியற்றவன். (செ.ப.அக.)

கோமணி பெ. சிவரகசியம். (பிரவணாலிங்கசருக்கம் 1,24)

கோமணிக்குன்றம் பெ. வெண்கலமலை.(யாழ்.அக.)

கோமதல்லிகை பெ. நற்பசு. (முன்.)

கோமதி பெ. ஒருநதி. ஆனகோமதி வந்தெய்து மரவம் (கம்பரா.1,8,5)

கோமதிகப்பிரியா பெ. (இசையி.) நடனபரவி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.142)

கோமதை பெ. →கோமதி. (யாழ்.அக.)

கோமந்திரம் பெ. →கோரோசனம். (குண.2 ப.364).

கோமயம் பெ. 1.→கோமூத்திரம். அற்பொடும் திகழ் கோமயம் மாசறக் கொணர்ந்து (கருவூர்ப்பு.15,6). ஆலயங்கள் முழுதும் ... கோமயங்கொண்டு தெளிக்கு மிடங்க டனிற்றெளித்தும் (திருப்பனந்.பு.தடாகை.28). தாடகையாள் வந்துவேள்விதனில் அப்போகோமயத்தைப் பெய்து (ஏற்றப்பா.ப.45).. 2.சாணம். அஞ்ஞாழியும் கோமூத்திரத்துக்கும் கோமயத்துக்கும் நெல் உரியும் (தெ.இ.க.14,192). புல் அனைத்துந் துகளறத்தின்று கோமயமிட்டு (ஞான.உபதேசகா.611). கோமயத்தை புனித தலத்து அலங்கு வில்வத்து ஊனமில் மெல்லிலை யொடு சேர்த்து உண்டையமைத்து (சீகாழித்.பு.அண்ட. 18). கோமயத்துடனே வீழ்ந்த தண்டுல மெடுத்துக்குத்தி (அரிச்.பு.7,70). ஆசார நலங்கருதிக் கோமயத்தை விரும்பு வாரே (திருவாமாத்.பு.பூர்வ.316). கோமயப் பூச்சுச் செய்தே (இரகு.கடிம.79). கோமயம் விழாத முன் ... ஏற்று (திருக்கழுக்.பு.வசுதேவச்.66). கோமயத்தால் சிந்தை உவந்து தைவந்து (திருக்காளத். பு.25,2).

கோமயவருணம் பெ. →கோமேதகம். (யாழ்.அக.)

கோமரத்தாடி பெ. சாத்தா முதலிய தெய்வங்களின் ஆவேசத்தால் ஆடுபவன். (தஞ்.அரசி 1,109)

கோமரம்[1] பெ. தெய்வ ஆவேசம். கோமரம் வந்து விட்டால் பாவிமட்டையை முக மேறிட்டுப் பார்த்துவிட முடியாது (வாக்.பொ.ப.58).

கோமரம்[2] பெ. சதுரக்கள்ளி. (மலை அக.)

கோமலகம் பெ. தாமரை நூல். (யாழ்.அக.)

கோமலகீதம் பெ. இன்னிசைப்பாட்டு. (முன்.)

கோமலதை பெ. மிருது. (முன்.)

கோமலம் பெ. 1.→கோமலதை. (முன்.) 2.அழகு. (முன்.)

கோமலமூலகம் பெ. முருங்கை. (சங்.அக.)

கோமலர் பெ. தாமரை. குன்றக்குடிக் குகன் தாள் கோமலரிற் சீரியதோ என்றற்கு உயிரனை யாளே (குன்றக்.முருக.கலம்.75).

கோமலி பெ. 1.அழகு. கோமலிப் பிறை தவழ் எயில் மழிசை (திருமழிசை.பதிற்று.அந்.60). 2.(இசையி.) இலதாங்கி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.227)

கோமலை பெ. மேருமலை. கோமலையு மஞ்சிக் குலைந்தனவே (பாரத வெண்.739).

கோமளக்கூத்தன் பெ. இராமபிரான். அங்கை யிற்றிகிரி விடுத்தொடு சிலை கொண்டு அருள்புரி கோமளக்கூத்தன் (மேகநா.3,45).

கோமளக்கொம்பு பெ. அழகிய இளம் பூங்கொம்பு. கோதிலா வாரமுதைக் கோமளக்கொம் புடன்கூடக் கும்பிட் டேத்தி (பெரியபு.28,464).

கோமளசுரம் பெ. (இசையி.) மென்சுரம், குறைசுரம். (புதிய இரா.ப.445)

கோமளப்புனல் பெ. அந்தர்வாகினி. குச்சகன் படிந் துய்ந்தகோ மளப்புனல் (தென்காசித்.பு.தீர்த்.54).

கோமளம்[2] பெ. 1.மென்மை. குறியொன்றி நின்றிடும் கோமளக் கொம்பு (திருமந்.1182). கோமளக்கொழுந்து (திருவாச.5,68). நந்தாத கோமளமே நாடரிய சொற்பொருளே (நம்.திருத்தாலா.121). திருமகட்கும் மாலாக்குங் கோமளஞ்சேர் மங்கை நல்லார் (சூலோ.உலா 279).

கோமளமாய்த் தோன்றுங் (சித்.மடல் 47). கோமள ஈராறு புலக் குன்றிலுறச் சேர்ப்போனே (திருப்போரூர். சந்.திர.183). கோமளக் கோதை சூடிக் கொடுத்தாள் (ஆண்டாள் பிள்.3). மென் தளிர்ச் செழுங் கோமளத் திருவடி (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.158). கோமளம் ஆகியதோர் விரதம் குலையாமல் சென்றேன் (சீவே.சரி.265). 2.சாயல். அற்புதமாங் கோமள மலிவிமா னத்தை (திருவேங்.பு.11,4). 3.இளமை. கோமா ஆண்கன்றைப் புல்கி (திருவாய்.பு.4,5) கோங்கார் வனமுலைக் கோமள மேநங் குலதெய்வமே (அம்பி.கோவை 1). கோமள மணிசெய்யாள் வீறுமா பரந்தாமம் (திருமழிசை.பதிற்று.அந்.44). அழகு கொள்ளா தெதிர்கொள்வ தேகுண மாவது கோமளமே (தஞ்.கோவை 385). கோமளக்கொடி கோமளவல்லி இமையவல்லி (ஞானாமிர்.6). கவின் தரும் சாமளக் கோமளத் திருமேனி (சிவராத்.பு.9,25). கோமளப் பைந்தொடியை முன்னந் தருந் தெய்வம் (சங்கர.கோவை 34). தய வருவார் கோமள நிறை செல்வீ (பச்சை அம்.பிள். தாலப்.8,4). திருமுடிக் கோமள யாமளை (அபி.அந்.71). அகிலத்தவரும் மெச்சு கோமள மார்ந்த தோள்களிற் சேர்ப்பதாம் மெய்ப்படு திருப்புகழ் (பாண்டிநா.பிள்.1,2). 4.வெளுப்பு. கோமள மெய் நாரதனுடன் கூடி வைகினன் குமரவேள் (திருச்செங்.பு.2,3,11). 5.அழகு. கொண்ட குழவியும் கோமள மாயிடும் (திருமந்.483). குவளை மலர்ந் தனைய விழிக் கோமளத்தின் வடிவு இது (இரணியவதைப்.115). முக்கண்ணுடைக் கோமளக் கொழுந்தே (சேந்.திருவிசை 3,10). குயிலே தருநிறால் கோமளமே குழற் சாமளமே (அம்பி.கோவை 65). கோமளஞ்செய் வள்ளங் கமல மலர்த்தஞ்சை (தஞ். கோவை 404). குழல் அன்ன மென் மொழிக் கோமளம் (கப்.கோவை 181). பசு சுத்தகோ மளத்தின் பயத்தினாற் கரைத்து (திருவேங்.பு.18,23). இந்தக் கோமளவல்லி தனக்கு இணை யார் என்று கூறுவதே (திருவாரூர்க் கோவை 212). கோமளப்புதுமலர்க்கொடியை (மருத.பு. 40,70). செய்ய வாய் குமுத வலர் பொருங் கோமளக் கோதாய் (கச்சி.காஞ்சிப்பு.திருக்கண்.185). தெறுகதிராற் றளர்வற்ற ... கோமளப்பூ வாடுதல் போல் (மேகநா.2,2). 6.அழகும் இளமையும் உடையவள். கொற்றவையே யென்றும் கோமளையே யென்றும் (கருணையந்.53). 7.சந்தோசம். (யாழ்.அக.) 8.கறவைப்பசு. (ஆடா.நி.) 9.ஒருவகை மாணிக்கம். கோமளம் கவின்ற மேனி (சிவஞா.காஞ்சிப்பு.அனந்த.5).

கோமளம்² பெ. (இசையி.) கௌரி மனோகரி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.155)

கோமளமடவார் பெ. இளமங்கையர். கோமள மடவார் மறுகிடை (குசேலோ.175).

கோமளாங்கி பெ. (இசையி.) சாருகேசி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.159)

கோமளாட்தி பெ. முருந்து. (வின்.அக.)

கோமளை பெ. 1.உமையம்மை. கோமளை கொள் பிரமாணி யிடபவாகனத் தம்மை (கமலா அம்.பிள்.51). சிவபிரானி டமமர்ந்தாள் ... கோமளை (கருமாரி.பிள்.). முலைக் கோமளையே யாமளையே (பாகம் பிரியா. பிள்.5,5). 2.இளமைச் செல்வி. யாமளை கோமளை யாரணங்கு (கும்மிப்பா.சீரணி.51).

கோமறுகு பெ. அரசவீதி. கோமறுகு களி தூங்கச் சுண்ணமொடு... நல்கி (திருவிளை.பு.4,30). ஏற்றிடும் அக்கோமறுகில் ஓர் பெதும்பை (தஞ்.உலா 124).

கோமாட்டி பெ. 1.→கோமகள்'-3. கவிரிதழ்க் குறக் கோமாட்டி கணவனை (திக்குற்றா.தலநூற்.49). 2.தலைவி. (ஆசி.நி.72)

கோமாணங்கையர் பெ. அரசன், பெருந்தேவியர். பைந்தொடிக் கோமா ணங்கையர் (பெருங்.1,40,63).

கோமாதா பெ. பசுவாகியதாய். நந்தை முதலிய ஐந்து கோமாத்தக்கள் (சிவதர்ம.கோபுர.2). ஐந்துகோ மாதாசூழ்ந் தணுகி வைகவாழ் ... விடை (சிவஞா. காஞ்சிப்பு.தழுவ.86). கோமாதா எங்கள் குலமாதா (கண்ண.திரை.பா.1,25).

கோமாதாக்கள் பெ. நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்ற ஐவகைப் பசுக்கள். கோமாதாக் களாயினரை (வாயுசங்.பாசுபத.20).

கோமாது பெ. தலை சிறந்த பெண். நீ கமலம் திகழ் தாள் வருடு என்று அரன் நீர்மையின் விஞ்சிய கோமாதே (சௌந்.6).

கோமாமிசபட்சணி பெ. மாட்டிறைச்சி உண்பவன். (யாழ்.அக.)

கோமாமிசம் பெ. மாட்டிறைச்சி. (முன்.)

கோமாயம் பெ. →கோமூத்திரம். (தஞ்.வ.)

கோமாயு பெ. நரி. நரி இகலன் கோமாயு (உரி.நி.73). கோமாயு என்பது நரி யெனலாகும் (அக.நி.கோமுதல் 8). கோமாயுவின் களவும் மான வோடிய வலம் (திருக்குற்றா.பு.17,5). ஆயின் என்னை அருந்து என ... கோமாயு ஓத (பஞ்ச.கதை 1,167).

கோமாரி பெ. பசுக்களின் பாதங்களிலும் வாயிலும் காணும் நோய்வகை. கால்நடைகளுக்கு கோமாரி, கருநோய் தலாயினவும், மக்களுக்கு வெக்கை முதலாயினவும் (நீல.366 உரை) குழை தூங்கு கழைமென்றோட் கோமாரி (சிதம்பரச்.கோவை 65). கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி இலவசமாக போடப்படும் (செய்தி.வ.).

கோமாள் பெ. தலைவி. பைந்தொடிக் கோமாண் னங்கையர் நடுவன் (பெருங்.1,40,63).

கோமாளம்[1] பெ. பேய்க்கழுகு. மிகப்படர்ந்த அழகிய கையென்பது பேய்க்கழகு இது கோமாளமென உணர்க (தக்கயாகப்.100 உரை).

கோமாளம்[2] பெ. 1.சந்தோசம். (யாழ்.அக) 2கொண்டாட்டம். (வின்.அக.) 3.பரிகாசவிளையாட்டு. (யாழ்.அக.) 4.கும்மாளம், குதித்து விளையாடுகை. கோமாள மூளிகள் (திருப்பு.334).

கோமாளி பெ. கோணங்கி, நகைக்க வைப்போன். நிலையிலாத கோமாளி (திருப்பு.530). கோமாளி வேடம் போடுகிறவன் பேசுவதைக் கேட்டு (அம்.வ.ப.166). அறிவற்ற கூட்டம் அருகில் இருந்தால் அறிஞனும் கோமாளி (கண்ண.தீரை.பா.2,415).

கோமாளிக்கூத்தாடி பெ. கூத்தில் நடிப்போன். எல்லாராகவும் ஒருவன் தானே நடித்தல் தமிழர்க் காக்கும் ஆரியன் என்னவே கோமாளிக் கூத்தாடினானே (இராவணகாவி.5,16,4).

கோமாளிச்சிறா பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கோமாளி-த்தல் 11வி. கோமாளித்தனஞ் செய்தல். (செ.ப.அக.அனு.)

கோமாளித்தனம் பெ. நகைப்புக்குரிய செயல் முறை. அது ரொம்பக் கோமாளித் தனமாத் தோணுது (நாட்.வ).

கோமான் பெ. 1.அரசன். வென்ற கோமான் முன்தேர்க் குரவையும் (தொல்.பொ.75). பறம்பின் கோமான் பாரியும் (சிறுபாண்.91). அவனி நாராயணன் பார் அளும் கோமான் (நந்திக்கலம்.64). பார்த்திபர்கள் கோமான் தசரதனும் (நம்.திருத்தாலா.9). வடிவுடைய கோமான்கள் (தனிப்பா.தீர.31 கம்பர்). குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான் (நள.64). கோதையின் வாய்த் தேன்பொழி வேல் கோமானே (தித்தேரி.அம்.6 க.126). கொற்றவர்கள் கோமான் குலையிலே வாளை வைக்க (புலந்.மாலை ப.93). தேர் விசயன் கோமானும் திடுக்கிட்டுத் தான் எழுந்தார் (வளக்.மாலை ப.14). குத்து மணி விளக்கைக் ... கொண்டு சென்ற அப்பொழுதே கோமான் அமைச்சரெல்லாம் (காஞ்சி.அம்.ப.14). அங்கிருந்து கோமான் அரண்மனையின் உட்புகுந்து (கூளப்ப காதல் 42). 2.பெருமையிற் சிறந்தோன். அறிவிலோன் கோமா னலன் (திருமந்.2046). கோமாற்கே நாமென்ற மீளா வாளாய் (தேவா.6,98,1). 3.தலைவன். பொய்யா யாணர் மையற் கோமான் (புறநா.71,11). ஐயிரு தலையின் அரக்கர் கோமான் (கலித்.38,3). தேவர் கோமான் (சிலப்.2,47). பணி யமரர் கோமான் இரண்டாம் (திருவந்.2). மாதொரு பாகரன்பின் வழிவரு மலாடர் கோமான் (பெரியபு.2,5,1). பார் மடந்தை கோமானை (நள.199). செய்யவள் கோமான் அரங்கம் பயில்கை நன்றே (திருவர.அந். 54,4). வீட்டினிப மடைந்தன னரசர் கோமான் (செ. பாகவத.4,5,79). கொண்டீச் சுரத்தமர்ந்த கோமானே (திருவருட்பா 1962,137). 4.தந்தை. கோமானே எனவே என்னைக் கோடல் நீ வேண்டும் (உ.கு.கா.212). 5.இறைவன். விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி (குறள்.25). 6.திருமால். பாக்கியமாம் பாவலர்கள் கோமானை (நம்.திருத்தாலா.271). 7.செல்வந்தன். ஆளு அம்பு சேனை வச்சி காரு வச்சி போரடிக்கும் கோமானே (கண்ண.தீரை.பா.2,483). 8.மூத்தோன். (திவா.) 9.குரு. (பிங்.782)

கோமான்[2] பெ. சதுரக்கள்ளி. (சித்.பரி.அக.ப.87)

கோமான்[3] பெ. பன்றி. (ஆடா.நி.)

கோமி பெ. →கோமதி. கோமியு முறையுங் குடமூக்கிலே (தேவா.5,22,8).

கோமியம் பெ. 1.→கோமயம். மாட்டுச் சாணியும் கோமியமும் கொண்டு வான் கதி பெறக்கூடும் (சாத். கும்மி 5,2). 2.→கோமேதகம். (சங்.அக.)

கோமியவண்ணம் பெ. →கோமேதகம். (யாழ்.அக.)

கோமியவர்ணம் பெ. → கோமேதகம். (போகர் நி.33)

கோமிலாய் பெ. காட்டுவிலங்கின் தன்மையன். (யாழ்.அக.)

கோமுகம் பெ. 1.ஒருவகை வாத்தியம். மங்கள வாத்தியமாகிய பேரிகை ... கோமுக வாத்தியம்...முழங்க (கோலாசல.பு.45 உரை). 2.→கோமுகாசனம். பதுமம் கோமுகம் ... ஞான சாதனத்துக்குரிய ஆசனமாகும் (சித். பா.2 சிவயோக.ப.420). திருந்து பத்திரம் கோமுகஞ் சுகம் மயூரம் ... ஆசனம் (ஞான.உபதேசகா.2485). 3.→கோமுகி-1. ஒரு விரல் உசரத்துக் கோமுகம் ஒன்று (தெ.இ.க.176,6). கோமுகமும் இலிங்கமுமா நின்ற உண்மை குறியாராய் (திருவாமாத்.பு.பூர்வ.22,11).

கோமுகாசனம் பெ. (பசுவின் முகம் போன்ற இருக்கை) கணுக்கால்களை இடுப்புச் சந்தீற் சேர்க்கும் ஆசன வகை. (செ.ப.அக.)

கோமுகாதனம் பெ. →கோமுகாசனம். (யாழ்.அக.)

கோமுகி பெ. 1.பசு முதலியவற்றின் முகமாகச் செய்யப்பட்ட நீர்விழும் வாய். (செ.ப.அக.) 2.மணி பல்லவத்தீவிலிருந்த ஒரு பொய்கை. கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி (மணிமே.11,39). 3.(இசையி.) மாயாமாளவ கௌளை என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று.(புதிய இரா.ப.129)

கோமுகை பெ. →கோமுகி-1. ஒருமுழங் கோமுகை யோடும் (சைவச.பொது.505).

கோமுச்சிரவல்லி பெ. சதுரக்கள்ளி. (சித்.பரி.அக.ப.87)

கோமுட்டி (கோமட்டி) பெ. செட்டிமார்களில் தெலுங்கு மொழி பேசும் வணிகர். சென்னையில் செட்டிகள்

வீதியில் வந்த கோமுட்டிகள் தடுக்கப்பட்டார்கள் (ஆனந்த. தினசரிச்.3) காசுகொளும் செட்டிகளே கோமுட்டிகளே (சோலை.குற.129). கோமுட்டி மெய்க்காவலாள் ... இவர் தம்மைக் கூட்டி (அன்னீத.ப.66). கோமுட்டி கருணையுடன் உபசரிக்க (பஞ்ச.தந் 3,90). தென்னாட்டில் ... கோமுட்டிகள் என்பவர்கள் பால்யசதிபதிகளிடம் உற்பத்தியானவர்கள் (மானுடம்.ப.107).

கோமுட்டிக்குட்டு பெ. கோமுட்டிகளின் வியாபார ரகசியம். (செ.ப.அக.)

கோமுட்டிச்சாட்சி பெ. (கோ முட்டிச் சொல்லும் சாட்சி) வாதிபிரதிவாதிகளிருவருக்கும் ஏற்ப உரைக்கும் சாட்சியம். (முன்.)

கோமுட்டிநாய்க்கன் பெ. →கோமுட்டி. செட்டி கோமுட்டி நாய்க்கன் சேணியன் உயர்வென்றே (பாரதிதா.மூன். சமத்.ப.193).

கோமுணம் பெ. →கோவணம். (மாயத்தாகம் 1965 ப.21)

கோமுத்தரம் பெ. → கோமுத்திரம்-1. திருவண்ணா மலையென்னும் நாழியால் கோமுத்திரம் உழக்கும் கோமயம் ஆழிக்கும் பால்நாழி உழக்கும் (தெ.இ.க.8,66).

கோமுத்தி பெ. திருவாவடுதுறை. உயிர்தோறு அங்க அங்கு ஆன திகம்பர கோமுத்தி (தமிழ்ப்.மஞ்.1,160).

கோமுற்றவர் பெ. அரசர். கோமுற்றவர்-கொள்ளுதல் (அட்டாதச.ப.71).

கோமுறை பெ. 1.அரசனது நெறி தவறாத ஆட்சி. கோமுறையன்றிப் படுபொருள் வெளவிய (சிலப்.20, 101). கோமுறை கோடக் கொற்றவ ரேறே முறையேயோ (திருவிளை.பு.25,17). 2.அரசிறை-1. (சாச.அக.)

கோமுறைமை பெ. →கோமுறை. கோமுறைமைக் குறுநில மன்னரில் ஐவர் (பெருந்.1872).

கோமுனி பெ.இராசரிசி, அரசர் குல குரு. சரங்களேகொடு கோமுனி யிருக்கையோர் கூடமாக்கினான் (கம்பரா.1, 8,49).வசிட்டனை நோக்கி...கோமுனியே யாரென்றெடுத் தருள்க என்றாள் (அரிச்.வெண்.55).

கோமுனை பெ. வான் உலகு. கோமுனையின் மாதர்க் கமலத்து மாமறையோன் (பாரத வெண்.681).

கோமூத்திரம் பெ. 1.→கோமூத்திரிகை[1]. (யாழ்.அக.) 2.பசுவின் சிறுநீர். தயிர் உரிக்கு நெல் நாழியும் நெய் உழக்குக்கு நெல் அஞ்ஞாழியும் கோமூத்திரத்துக்கும் கோமயத்துக்கும் நெல் உரியும் (தெ.இ.க.14,192). மருவிப் போந்தன ஆப்பி, கோமூத்திரம் என்றாற் போல் வன (தொல்.சொல்.436 தெய்வச்.).

கோமூத்திரி பெ. →கோமூத்திரிகை[1]. கூட சதுர்த்தம் கோமூத்திரியே (யாப்.விருத்தி 96).கோமூத்திரியே கூடசதுக்கம் ... அவற்றின்பால் (தண்டி.98,).ஏகபாதம் ... கோமூத்திரி முதல் தெரிந்து பாடுவோன் சித்திரகவியே (முத்துவீ.1019). இரண் டிரண்டாய் மேல் கீழ் ... பாட்டொத்தல் கோமூத்திரி (சுவாமிநா.196).

கோமூத்திரிகை[1] பெ. (செய்.) ஒரு செய்யுளின் முன்னிரண்டடி மேல்வரியாகவும் பின்னிரண்டடி கீழ் வரியாகவும் எழுதி அவ்விரண்டு வரியின் எழுத்துக்களையும் கோமூத்திரரேகை போல்மாறி மாறிப் படிக்க அச்செய்யுளாகும்படி அமைத்துப் பாடுஞ் சித்திரகவி.(தண்டி.95)

கோமூத்திரிகை[2] பெ. ஓர்புல். (யாழ்.அக.)

கோமேதகத்தீவு பெ. சத்த தீவுகளுள் ஒன்று. (சி.போ.பா.ப.209)

கோமேதகம் பெ. 1.நவமணிகளுள் ஒன்று. கூறரிய கோகுலமே கோமேதகத் தெளிவே (நம்.திருத்தாலா.120). மரகதங் கோமேதகந் துகிர் தரளம் ... என் றிவற்றிற் காகர மிந்த மாநகர் (பாரதம்.1,6,12). பவளம் கோமேதகம் ... நவ மணியி னாமங்களாம் (உரி.நி.140). குறி வெயிற் கற்றை கால் வச்சிரம் புரை யொருவு கோமேதகம் (ஞான.உபதேசகா.1059). வேல்மணிவயிரம் கோமேதகம் மிளிர் பால்மணி (தேம்பா.1,2,31). கோ மேதகஞ் சேர் குழை யீரி (நாணிக்.ஒருதுறைக்கோவை 119). கொம்புக்கு நல்ல கோமேதகமமுத்தி (சித்.புத்.கதை ப.25). நவ மணிகளுள் தழைத்த கோமே தகஇனம் தர (ஆண்டாள் பிள்.61). கொக்கும் அறிவுமோதான் கோமேதகத்தின் ஒளியை (மாரியம்மன்.ப.31). 2.→கோமிய வர்ணம். (போகர் நி.11) 3.புலிக்கண். (போகர் நி.11)

கோமேதகமணி பெ.→கோமேதம்-1. கோமேத கமணிக் கொங்கைநல் லாய்நின் (திருவாரூர்க்கோவை 321).

கோமேதம்[1] பெ. பசுவின் வகையை அவியாகக் கொடுத்துப் புரியும் யாகம். விச்வசித்து கோமேத மத்த மாகும் (கோலாசல.பு.104). கோமேத மிராசசூயம (உத்தரரா.திக்குவி.117).

கோமேதம்[2] பெ. → கோமேதகம்-1. வெண் ணிணங்கோ மேதந் தசைதுகிர் (திருவிளை.பு.17,35). கோமேதம் நிலவு நிழற்கும் பகட நின்று (தென்பு மணி உலா 169).

கோமைந்தன் பெ. அரசகுமாரன். வருமறையோன் கோமைந்த னோடு...டேகினான் (நள.243).

கோய் பெ. 1.பரணிச்செப்பு, வாசனைப்பொருள் வைக்கும் செப்பு. குகை, பேழை கோத்து நீர் பிலிற்றுங் காந்தங் குங்கும வைரப் பொற்கோய் (சீவக.1906). கோலக் கோயுட் கொண்டுநிறை யமைத்த கூடமை சாந்து (பெருங்.3,9,43-44). 2.ஆபரணம் வைக்கும் செப்பு. கோய்திற வாவிடில் கோழையு மாமே (திருமந். 593). 3.கள்முகக்கும் பாத்திரம். ஓர் இல் கோயின் தேருமால் நின்னே (புறநா.300). கோய் வாயிற்

கீழுயிர்க்கு ஈதுற்றுக் குரைத்தெழுந்த நாய்வாயுள் நல்ல தசை (சிறுபஞ்.17). பரணிச்செப்பு சாந்துக்கோய் புகிய செல்வ (சீவக.764). 4.பரணிநாள். (பிங்.1270) பரணி. (யாழ்.அக.)

கோயக்கண் பெ. மாறுகண். (செ.ப.அக.)

கோயமுத்தூர்சம்பா பெ. ஆறு மாதங்களில் பயிராகி மிக அதிகமாய் விளைவு தந்து நோயினால் பெரிதும் பாதிக்கப்படாமல் பெருவாரியாய் பயிரிடப் பட்டு வந்த ஒரு நெல் வகை. (நாட்.வ.)

கோயல் பெ. கோவில். ஈசுவரியா கோயலிலே (மே.தமி. நாட்.ப.313).

கோயானம் பெ. பண்டி. (யாழ்.அக.)

கோயில் பெ. 1.ஆலயம். அரும்கொகுட்டனைத்தே யண்ணல் கோயில் (பரிபா.ப.174 செய்யுள் 2). கோயிற் தலைக்கடைச் சென்று நின்று (இறை.அகப்.7,21 உரை). பலி கொண்டுணுங் கள்வன் னுறைகோயில் (தேவா.1,3,2). தன் குலமுறை வழிபடுந் தெய்வக் கோயிலை (ஞளா.179). கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடும்எங் கூத்தப் பிரான் (திருக்கோவை 204). கோமுதல்வ ரோடும்போய்க் கோயிற் புறமாக (நம்.திருத்தாலா.220). வரம் அளிக்கும் தண்டலையார் திருக்கோயில் (தண்டலை. சத.1). துளபத் தாரான் குந்திவாழ் கோயில் புக்கான் (பாரதம்.2,1,84). தாயின் சிறந்த ஒரு கோயிலும் இல்லை (கொன்றை.38). மீனிறையோர் வான்பலவாய் வேய்ந்தனபல் கோயில்கள் (தித்தேரி.அம்.2 க.37). பரமன் கோயில் இடிப்பதேயாகும் (புதுமைவே.9,7). 2.அரண்மனை. வாயில் விடாது கோயில் புக்கு (புறநா. 67,10). அரண்மனை கோயின் மன்னனைக் குறுகினள் (சிலப்.20,47). ஆய் பொற் புரிசை யணி யாரகன் கோயிலெல்லாம் (சீவக.2350). தன் கோயில் வாயில் காக்கும் காவலரை அழைத்து (பாரத வெண்.72). கோயிலும் அந்தப்புரமும் கொடி நுடங்கும் வாயிலும் (நள.318). வன்றிற லரசன் கோயின் மன்னவை வந்து சேர்ந்தார் (பாரதம்.2,1,4). வேட்ட பூந் தெரியல் வேந்தன் விழுமணிக் கோயில் புக்கான் (செ.பாகவத.10,1,18). பண்டு போல் சீறிப் பனையை முறித்தெடுத்து கொண்டு போய்க் கோமான்றன் கோயில் முன்னே போட்டதுவே (காஞ்சி.அம்.ப.31). ஒருவன் நின் கோயில் வாயில் உற்றனன் (குமணசரித்.286). 3.தலைமை யிடம். மாயக்களங்கோயில்நெஞ்சக்கயவர்மருவாஇளங்கோயில் திருவருட்பா 1962,122). 4.அந்தப்புரம். மருந்தனாளுறை யுங்கோயின் மடுத்துடன்கொண்டு புக்கான் (சீவக. 1729). நும் மவ்வைதன் கோயில் புக் கடிசிலுண் கென (ஞளா.226). துய்ய சுடராழி மாலுக்குங் கோயில் வகத்தமைத்து (மதுரைச்.உலா 27). 5.திருவரங்கக் கோயில். திருக்காரைக் காடுடைய நாவனார் கோயில் (தெ.இ.க.8,2,3). கோயிற் பிள்ளையிங்கே போதராயே (பெரியாழ்.தி.2,9,4). பாயல் வடத்தானும் கோயில் இடத்தானே (திருவர.கலம். 16,4). கோயில் நண்ணி வடுவில்சீர்ச் செம்பொன் மாட மந்திர இருக்கை புக்கான் (ஆளவந்.காஞ்சிப்பு.69). திருப்புலியூர்க் கோயிலமர்ந்த குணக்குன்றமே (திருவருட்பா 1962,2). 6.சிதம்பரம். (தேவா.) 7.கோயிற்பற்று. (இலங்.வ.) 8.வீரசைவர்கள் தரிக்கும் இலிங்க பீடம். மையணி கோயில்மணி விளக்காமே (திருமந்.820). 9.(இசையி.) நாற்சீர்த்தூக்கு. (முனிமே.2,19உரை) 10.விபூதிப்பை. (யாழ்.அக.) 11.கர்ப்பக் கிருகம். உள்ளம் பெருங்கோயில் (திருமந்.1823).

கோயில்தானத்தார் பெ. கோயில் நிர்வாக சபையினர். திருவிலிக்குப்புறமாய் ஒட்டுக்கடைத்து கோயில்தானத் தார் உடல் கொண்டு வருகிற பொத்தகப்படி (தெ.இ.க. 17,604).

கோயில்பெண்டு பெ. திருக்கோயில்களில் பணி செய்யும் மகளிர். தன் ஈசுவரமுடைய நாயனார் கோயில் தானத்தோம் கோயில் பெண்டுகள் மக்களும் புத்திர புத்திரரும் (கல்.கலைச்.அக.ப.162).

கோயில்மகாசனம் பெ. பெருமாள் எழுந்தருளும் போது வழியில் உள்ள அடியார் கூட்டத்தை விலக்கி வழி ஏற்படுத்த மட்டையடி அடிக்கும் பணியாள். (அரையர் பின்.4)

கோயில்மாடு பெ. 1.கோயிற்கு விடப்படும் மாடு. (நாட்.வ.) 2.பெருமாள் மாடு. (முன்.) 3.→கோயிற் காளை. (முன்.) 4.கோயிற்பணிவிடைக்காரர். (யாழ். அக.)

கோயில்முறைகாலம் பெ. கோயிலில் பூசை செய்யும் நேரம். கோயில் முறை காலம் கூடியிரு (மூவரை.தூது.148).

கோயில்மேளம் பெ. 1.மங்கல வாத்தியம். (நாட்.வ.) 2.அழைத்த மாத்திரத்தில் உடன்பட்டு நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கு கொள்பவர். (இலங்.வ.)

கோயில்வலம்வரல் பெ. ஆலயப்பிரதட்சணம். (யாழ். அக.)

கோயில்வாசி பெ. அரண்மனைக்குரிய சீல் இறை. (சாச.அக.)

கோயில்வாரியம் பெ. கோயில் விசாரணைச்சபை. (தெ.இ.க.3,188)

கோயிலண்ணன் பெ. இராமாநுசன். மும்மைச் செங்கோல் கோயிலண்ணன் எனத்தழைத்த கொற்ற வேந்தே (ஆண்டாள் பிள்.1).

கோயிலறம் பெ. கோயிற்பராமரிப்பு. நட்டூரிற் சோமேசர் கோயிலற மானதனை நகத்தாற் செய்து (பெருந்.1298).

கோயிலார் பெ. →கோயில்மடு. (யாழ்.அக.)

கோயிலாழ்வார் பெ. 1.ஆராதனைப்பெட்டி. (செ.ப.அக.)

2.கருப்பக்கிருகம். கோயிலாழ் வார்க்குள்ளே பெரிய பெருமாள் கண்வளர்ந்தருளுகிறபடி (திருமாலை.21 வியாக்.76).

கோயிலாள் பெ. 1.பட்டத்தரசி. தானுங் கோயிலாளும் புறம் போந்துநின்று (பதிற்றுப்.8 பதி.இறுதி). 2.அரசனது பெருந்தேவி. தானும் கோயிலாளும் புறம் போந்து நின்று ... அரசுகட்டில் கொடுப்ப (பதிற்.எட்டாம்பத்து.பதி குறிப்புரை). 3.இலக்குமி. (யாழ்.அக.)

கோயிலொழுகு பெ.சீரங்கத்துக் கோயிலின் வரலாறு கூறும் நூல். (செ.ப.அக.)

கோயிற்கட்டணம் பெ. அந்தப்புரம். பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயிற்கட்டணமாய் (திருவாய். 10,10,9 ஈடு).

கோயிற்கட்டி பெ. உண்டைக்கட்டி. (செ.ப.அக.)

கோயிற்கணக்கு பெ. 1.கோயிலுக்குரிய வரவு செலவு கணக்குகளை எழுதுபவன். இக்கோயிற் கணக்கு காணியுடைய நெற்குப்பை உடையான் (கல்.கலைச். அக.ப.163). 2.ஊர்தோறும் கிறித்தவரின் விவாகம் பிறப்பு இறப்பு முதலியவற்றைப் பதியும் கோயிலி லுள்ள கணக்குப் புத்தகம். (யாழ்.அக.)

கோயிற்கம்பலை பெ. அரசனது அரண்மனையில் எழும் பேரொலி. பாஞ்சால னெடுமுதற் புதல்வனைக் கழுத்தெழத் திருகிப் பறித்த காலைக் கோயிற் கம்பலை யூர்முழு துணர்த்தலில் (பெருந்.762).

கோயிற்கலஞ்செய்-தல் 1வி. கோயிலிடித்தல். மாந்தரைக் குழியுளுந்துதல் கோயிற்கலஞ் செய்தல் (நீல.540).

கோயிற்காலம் பெ. கோயில்களில் அவ்வக் காலத்துச் செய்யப்படும் பூசை. (நாட்.வ.)

கோயிற்காளை பெ. அடங்காத்தடியன். (யாழ்.அக.)

கோயிற்கிடங்கு பெ. கோயிலுக்குச் சொந்தமான அகழ். வாயிற்கிடங்கொடுக்கிமாற்றினார் தம்பிணத்தாற் கோயிற் கிடங்கொடுக்கிக் கோண்மறவர் ஞாயிற் கொடுமுடிமேற் குப்புற்றார் (பெருந்.486).

கோயிற்கிராமம் பெ. கோயிலுக்குச் சொந்தமான ஊர். (செ.ப.அக.)

கோயிற்குட்டி பெ. →கோயிற்பிள்ளை. (கிறித்.வ.)

கோயிற்குறுணி பெ. களத்தில் முதன்முதலாகக் கோயிலுக்குக் கொடுக்கும் குறுணியளவுள்ள தானியம். (நாட்.வ.)

கோயிற்கூட்டி பெ. கோயிலைப் பெருக்கிச் சுத்தஞ் செய்பவள். (கிறித்.வ.)

கோயிற்கூழைத்தனம் பெ. அரசன் சமுகத்தி லுள்ளார் காட்டும் போலி வணக்கம். நீங்கள் கோயிற்கூழைத்தனம் அடிக்கிறபடி இதுவோ! (இயற். திருவிருத்.99 வியாக்.468).

கோயிற்கேள்வி பெ. கோயில் விசாரணைக்காரன். (செ.ப.அக.)

கோயிற்கொத்து பெ. அரண்மனை அல்லது கோயில் பணியாட்கள். கோயிற்கொத் தடிமைத்தாசி இருக்கு மனை (சரவண.பண.தூது 192)

கோயில்கொள்(ளு)-தல் 2வி. வாழிடமாகக் கொள்ளுதல். திருக்கடித் தானத்தைக் சொயில் கொண்டான் (திருவாய்.8,6,5).

கோயிற்சாந்து பெ. அரசர் அணிதற்குரிய கலைவைச் சந்தனம். கோயிற் சாந்தை யுன்னா லொளிக்கப் போமோ (திருப்பா.10 மூ.பத்.102 ப.151).

கோயிற்சுற்று பெ. கோயிலை அடுத்துள்ள இடம். (செ.ப.அக.)

கோயிற்சேரி பெ. கோயிலுக்குச் சொந்தமான கிராமப்பகுதி. (முன்.)

கோயிற்பட்சி பெ. புறா, வௌவால். (சித்.பரி.அக.ப.167)

கோயிற்படி பெ. கோயிலிற்கிடைக்கும் நித்தியக் கட்டளை. (வின்.அக.)

கோயிற்பண்ணியர்விருத்தம் பெ. நம்பியாண்டார் நம்பியால் இயற்றப்பெற்றுப் பதினொராந்திரு முறையுள் சேர்க்கப்பெற்றுள்ள ஒரு பிரபந்தம். (முன்.)

கோயிற்பழக்கம் பெ. சபைப்பழக்கம். (யாழ்.அக.)

கோயிற்பற்று பெ.1.கோயிலுக்குரிய நிலம் முதலியவை. (நாட்.வ.) 2.கிறித்தவக் கோயிலின் அதிகாரத்துக்குட் பட்ட ஊர்ப்பகுதி. (கிறித்.வ.) 3.ஊர். (யாழ்.அக.)

கோயிற்பிரதிட்டை பெ. →குடமுழுக்கு. (முன்.)

கோயிற்பிராகாரம் பெ. கிறித்தவர் கோயிலுள் சவம் புதைக்குமிடம். (கட்ட.நாமா.5)

கோயிற்பிள்ளை பெ. கிறித்தவக்கோயிலின்அதிகாரி. (கிறித்.வ.)

கோயிற்புராணம் பெ. சிதம்பர மான்மியத்தைக் குறித்து உமாபதி சிவாசாரியர் இயற்றிய புராணம். (சமய.அக.)

கோயிற்புறம் பெ. கோயிலுக்குத் தருமமாக விடப் பெற்ற நிலம். (நாஞ்.வ.)

கோயிற்பூனை பெ. மதவேடதாரி.(வின்.அக.)

கோயிற்பெருச்சாளி பெ. கோயிற்சொத்தை அபகரிபோன். உங்களப்பன் கோயிற்பெருச்சாளி (தனிப்பா.திர.).

கோயிற்றளியுளார் பெ. கோயிலிற் பணிபுரியும் உருத்திர கணிகையர். பூவணக் கிழவர்தங் கோயிற் றளியுளார்தவப் பேறனா பாதுகு பூந்தார் (திருவிளை.பு.36,4).

கோயிற்றூக்கு பெ. தாளவகை. (சிலப்.14,150 உரை)

கோயின்மகமை பெ. கோயிற்காகத் தண்டப்படுந் தருமப்பணம். (யாழ்.அக.)

கோயின்மானியம் பெ. கோயிற்கென்றுவிடப்பட்டது. (முன்.)

கோயின்மேரை பெ. கோயிலுக்குக் கொடுக்கும் மாசூல் பகுதி. (செ.ப.அக.)

கோயின்மை பெ. 1.பெருமை. அடிமை யென்னும் அக்கோயின்மை யாலே (பெரியாழ்.தி.5,1,4). 2.செருக்கு. கொங்கை நஞ்சுண்ட கோயின் மைகொலோ (பெரியதி. 11,1,4).

கோயினான்மணிமாலை பெ. சிதம்பரத்துள்ள சிவபிரான்மீது பட்டினத்தடிகள் பாடிய ஒரு பிரபந்தம். (செ.ப.அக.)

கோர்-த்தல் 11வி. 1. தொடுத்தல். மார்பில் கோர்த்த முத்தாரம் துலங்கிடவே (கும்மிப்பா.மருத.13). 2.சேர்த்துக் கட்டுதல். கோர்த்த நிலை குலைத்த கொள்கை அறியேண்டி (பட்டினத்தார் பா.மகடூஉ.42). 3.மணி முதலியவற்றினோடு நூலைப் புகுத்தியிணைத்தல். இராசகுமாரத்தி அரசன் மனைவியிடத்துச் சென்று தானும் முத்துக்கோர்த்துத் தருகிறேனென்று கேட்டாள் (முதன. கதை ப.163). கொத்துச் சரப்பளியாம் கோர்த்த மணித் தாவடமாம் (பவளக்.மாலை ப.69). சங்குவளை கோர்க்கும் சாரைக்குடல் நானெனவே (காஞ்சி.அம். ப.27). 4.முறையாக இணைத்தல். குத்துமணி விளக்குக் குறைவறவே தான் சமைக்க சந்தனதூண் தன்னைச் சதிராகத் தானிறுத்தி ... கொம்பைக் கடைந்து நின்றாய் கோர்த்தார் (காஞ்சி.அம்.ப.11). 5.பிணைத்தல். கைகள் கோர்த்து களித்து நின்றாடுவோம் (பாரதி. பல்வகைப்.5,3).

கோர்க்கலம் பெ. மட்கலம். (இலங்.வ.)

கோர்க்காலி பெ. →கோக்காலி. (செ.ப.அக.)

கோர்ட் பெ. நீதிமன்றம். அவருக்குக் கோர்ட் விடுமுறை தான் என்றாலும் மாலையில் (செ.பா.போ.126-1).

கோர்ட்டார் பெ. நியாயாதிபதி. (செ.ப.அக.)

கோர்ட்டு பெ. நியாயம் வழங்கும் இடம். கோர்ட்டு வாசலை எட்டி மிதிக்க மாட்டோம் (மலரும் 809). கோர்ட்டுத் திறந்து குரிச்சியிலே உட்கார்ந்து சர்ச்சியோ வாதாடும் வம்மிசமோ (தமி.நா.பா.ப.18). கோர்ட்டுகள் புறக்கணிப்பு (செய்தி.வ.).

கோர்ட்டுமௌகூப்பு பெ. (உருது) கோர்ட்டுச் சாத்துகை. (செ.ப.அக.)

கோர்த்துப்பிடி-த்தல் 11வி. சேர்த்துப்பிடித்தல். (விளை. அக.ப.35)

கோர்வை[1] பெ. 1.(இசையி.) நெட்டிசை. நெட்டிசையைக் கோர்வை என்று குறிப்பிடுவர் (மத்தளவி.76 உரை). 2.சேர்ப்பு. பல மணிகள் கோர்வை செய்திட்ட கண்டி (இராமநா.6,101 தரு 2). கோடானு கோடிதனம் கோர்வை அவர் தான் செய்து (சீவே.சரி.1055). 3.வரிசை. கோர்வையாய் நிற்பவர்தான் ஆர்தான் (போக.162). அக்குமணிக் கோர்வைகள் அதிசீராய்த் தரிப்போம் (விராலி.குற.37). மூவகை மணிகளின் முறை பொருந்திய கோர்வை போன்று (பிரபந்ததீ.24 உரை).

கோர்வைப்புகையிலை பெ. புகையிலை அடுக்கு. (வின்.அக.)

கோர்வை[2] பெ. அன்னவெட்டியென்னும் பாத்திரம். (செ.ப.அக.)

கோர்னீசு பெ. →கொர்னிசு. (செ.ப.அக.அனு.)

கோரக்கநாதர் பெ. நவநாதசித்தருள் ஒருவர். (சதுர. அக.)

கோரக்கம் பெ. ஒருநாடு. பலர் புகழுங் கோரக்க மகதஞ் சிங்கள மலயம் பாரசீகம் (திருவிளை.பு.17,78).

கோரக்கர்[1] பெ. →கோரக்கநாதர். (செ.ப.அக.)

கோரக்கர்[2] பெ. பசளைப்புளி. (சித்.பரி.அக.ப.166)

கோரக்கர்மூலி பெ. →கோரகை[3] கஞ்சா விசையை பங்கி கோரக்கமூலி (நாம.நி.321).

கோரக்கன் பெ. சித்தன். மூண்டுவினை வாரதெல்லாம் முன்னேயறிந்து தட்டான் கூடுவிட்டுக்கூடு கோரக்கன் பாய்ந்தாற்போல் (காஞ்சி.அம்.ப.25).

கோரகம்[1] பெ. 1.வட்டில். கோரகம் என்பது வட்டிலாகும் (அக.நி.கோமுதல் 10). 2.→கோரம். (வின்.அக.)

கோரகம்[2] பெ. 1.அரும்பு. (பிங்.) 2.சிவல். இதல் கோரசம் புல் ஒண் சிவலாம் (நாம.நி.242).

கோரகை[1] பெ. குயில். கோரகைநி னிசையமு தினைப் பெரி துவந்து (கோமதி.பிள்.79). குயில் ... கோரகை (அபி.மாலை 71).

கோரகை[2] 1.பௌத்தபிட்சுக்களின் பிச்சைப்பாத்திரம். (மணி.5,59 அரும்.) 2.அகப்பை. கோரகைக்குட் பதிசுடுகற்கம் (தைலவ.பாயி.14). கொள்ளு மாறுந்தன் கோரகை யுட்கஞ்சி மொள்ளு மாறு (நீல.237).

கோரகை[3] பெ. கஞ்சா. (தேரை.வெண்.200)

கோரகை[4] பெ. அரும்பு. கோரகை மொட்டு முகிள் (உரி.நி.93). கோரகை மொட்டு ... அரும்பு (நாம.நி.367).

கோரங்கம்[1] பெ. ஏலம். ஏலம் ஆஞ்சி துடி கோரங்கம் (நாம.நி.357).

கோரங்கம்[2] பெ. நெல்லி. (மலை அக.)

கோரங்கி பெ. 1.ஓர்பட்டணம். (யாழ்.அக.) 2.சிற்றேலம். (மலை அக.)

கோரங்கிழங்கு பெ. →கோரைக்கிழங்கு. உணவு செய் கோரங் கிழங்காய உடுபதியைப் பன்றி (சோலை.குற.88).

கோரசம் பெ.1.சிவல் எனும் பறவை வகை. (பிங்.237) 2.கவுதாரி. கவுதாரி சிரவம் ... கோரசம் (அபி.மாலை 722).

கோரசொரூபம் பெ. விகார வடிவம். ஆக்கல் அழித்தலை செய்யும் இறைவன் அழகாகவும் கோர சொரூபம் உடையவனாகவும் காண்பான் (இந்.கலை ப.5).

கோரட்சகன் பெ. 1.பசுக்கரப்பவன். (யாழ்.அக.) 2.சிவன். (முன்.)

கோரட்சணை பெ. பசுக்காவல். வாணிபம் விவசாயம் கோர்ட்சணை வழியினில் நிற்போர் அரங்க (பாரதம். காங்கேய.40).

கோரட்சன் பெ. →கோரட்சகன். (யாழ்.அக.)

கோரண்டகம் பெ. மருதோன்றி. (சீவரட்.ப.431)

கோரண்டம் பெ. 1.குறிஞ்சி. கோரண்டந்தான் குறிஞ்சி யெனப்படும் (அக.நி.கோமுதல் 9). கோரண்டத் தாடுமலர் வாயிலங்குமிறால் (சீகாழித்.பு.கழுமலநதி.75). கோரண்டம் பாணங் குரவகம் குறிஞ்சி (நாம.நி.317). 2.பெருங்குறிஞ்சி. (பிங்.) 3.மருதோன்றி. மருதோன்றி தோன்றி கோரண்டம் (அபி.மாலை 842). 4.செம்முள்ளி. (தைலவ.10)

கோரணி பெ. 1.கேலிக்கூத்து. தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு (பட்டினத்தார்.பா.உடற்கூற்று. வண்ணம்.3). ஞாலம் மயங்கு உன்மத்தக் கோரணி பார்த்து ஓகோ வெனச் சிரிப்பர் (ஒழிவி.8,15). கோரணி யான சமயிகள் (சிவகாமி அந்.52). 2.குறும்புச் செய்கை. கோரணி பண்ணாதே இதுவரை கோபம் பொறுத்திருந்தேன் (சிந்.இலக்.3,104). 3.முகங் கோட்டுகை. (செ.ப.அக.) 4.செய்கைச் சித்திரம். (யாழ். அக.) 5.முணுமுணுப்பு (வின்.அக.) 6.இழிவு. புன்பிறப்பிற் கோரணி நான் கொள்ளலாமோ (கருணையந்.79). 7.சட்டை. (யாழ்.அக.) 8.கோளாறு. (முன்.) 9.திமிர் வாதம். (வின்.அக.)

கோரதந்தம் பெ. வக்கிரதந்தம். (யாழ்.அக.)

கோரதம் பெ. பெரும்பாலும் எருதுகளால் இழுக்கப்படும் இரதம். (செ.ப.அக.)

கோரதர்சிணி பெ. (இசையி.) சல நாட்டை என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.181)

கோரதரம் பெ. நரகவிசேடம். (சிவதரு.சுவர்க்கநாரக. 107)

கோரப்பல் பெ. 1.→கோரதந்தம். (யாழ்.அக.) 2.விகார மான பல். தனது கோரப் பல்லினா லவனு டலைப் பிளந்து (கோலாசல.பு.76 உரை). 3.வேட்டைப் பல். (உடற்.சொற்.) 4.பாம்பின் நச்சுப்பல். (வின்.அக.)

கோரபுட்பம்[1] பெ. ஊமத்தைப்பூ. (சித்.பரி.அக.ப.87)

கோரபுட்பம்[2] பெ. வெண்கலம். (யாழ்.அக.)

கோரம் பெ. 1.கொடுமை. கோரமே வாழி குதிரை (கலித்.96,26). முற்றிய கோரம் செய்தனர் மின்னே (ஞான.உபதேசகா.119). கூடு கோர கும்பியிலே விழுந்திட (திருப்பு.107). கோர வெம் கொலைக் கூறல் (பாத்மோ. பு.5,32). கோரம் அவை யோரிரண்டும் கொண்ட மதர் விழியார் (திருச்செந்.கலம்.38). கோரம் எத்தனை ... வன்குணங்கள் எத்தனை, கொடிய... கல்லாமை எத்தனை (தாயுமா.பா.8,1). வன்கொலைசூழ் கோரத் தொடையென வோபுதைத் தீர்மைக் குவலயமே (நாணிக். ஒருதுறை கோவை 9). கோர வல்விடம் மிடற்றிடை அமைத்தனன் (சிவஞா.காஞ்சிப்பு.மணி கண்.54). கோரமா மழை தனைக் குறைத்து (நீடூர்.பு.திருப்புன்.16). ஓட்டுப் பன்றியைக் கட்டி ஒடுக்கி உறுத்துக் குத்த உருமிடுங் கோரம் (புதுமைவே.9,9). 2.அச்சம். மூடமுங் கோரமுஞ் சாந்தமும் மபிதான மாகும்மகனே (கைவல்ய.2,109). கோரமுறும் ஆர் அழல் என ... நிலவதென் செயும் (சிவராத்.பு.3,86). கோரம் அவை யோரிரண்டும் கொண்ட மதர் விழியார் (திருச்செந்.கலம்.38). கோரச்சிறை வீரப்புயம் (முக்.பள்.2,10). கோரமியத்தால் விளைப்பையென (சமுத்திரவி.63). 3.அச்சம் தருவது. வெங்கோரமு கத்து வியன் புதல்வன் (கந்தபு.4,8,12). கான் மலைக்கண் மேவி நாளுங் கோரமுறுந் தவம் புரியும் கொள்கை கொண்டீர் (திருவிடை.கலம்.25). கோரம் அடுப்பு உட்கு ... அச்சம் (நாம.நி.639). கோரத்தை வீரத்தின் பேரென்று சொல்வார் (நாமக்.பா. 5,110). அருணாசல் தலைநகர் அருகே கோர விபத்து (செய்தி.வ.). நின்முகக் கமலமுங் கோரமாம் (திருச்செந். பு.13,17). 4.பயங்கரம். கோரச்சின மிக்காகிய கொக்கின் சிறை (சிவராத்.பு.9,28). தென்னாப்பிரிக்காவில் கோர விபத்து (செய்தி.வ.). 5.விகாரமானது. அவள் கோரவடிவாக உதித்தாளோ (கண்ண.திரை.பா.2,20). 6.அழகற்றது. கோரவெஞ் சிலைக்கை வேடர் குலமுய வந்தாய் (திருச்செந்.பு.8,39). கோரவல் அரக்கி தன்னால் குகையினுட் குறுகி (அருணகிரிபு.1,43). அவன் கரப் படைப்பில் கோரமாய் நிலவும் ... சீவிதம் (தெய்வசன.ப.5). கோரமென் றுலகோர் நின்னைக் கொக்கெனப் பகர்த லென்றாள் (முகியித்தீன் பு.991). 7.அகோரமுகம் (சிவபிரானின் ஐந்து முகங்களுள் ஒன்று). மத்தகு கோரம் (திருமந்.1741). 8.மிக அசிங்கம். ராட்சதன் கோரமிக உறுமிய பூமியில் (கொங்கு.சத.கம்ப.27). 9.அகோர மென்னும் மந்திரம். (திருத்தணிகைப்பு.அகத்.39) 10.கோரமாகிய ஆண்மை. கோரமுங் கோரமும் கொற்றவர் ஏற (திருச்செங்.பு.3,18,12). 11.கோரவிருத்தி, முக்குணத்தால் வரும் விருத்தி. மூடமுங் கோரமும் சாந்தமுஞ் (கைவல்ய. 2,109). 12.கொடுந்தண்டனை. கோரம் தரும் என்று ... குடபால் ஒளித்தான் அடல் வெய்யோன் (சீகாழித்.பு. குமர.13). 13.சோழன் குதிரை. விடமேறு கோரத்தை யன்றடக்கு வதால் மிஞ்ச விடலாகாதுகாண (குமரே. சத.12). கோரத்தைக் காறமுவி (கு.சோ.உலா 733). கற்றவர் புகழ்சவ் வீரமிக் கோரம் (திருவிளை.பு.59, 106). கோரமுங் கோரமுங் கொற்றவர் ஏற (திருச்செங். பு.3,18,12). முகைமலரக் கோழி யநுபமன் கோரம் புலிவாழி (பெருந்.794). ஒத்த நின்னுடைக் கோர

மேலிவர்ந்து (திருக்குடந்.பு.52,8). கோரத்தை யூர்ந்த வளவர் (ஒருதுறைக்கோவை 323). கோபம் வரச் சீறுதலாற் கோரமாய் (முதன.மாலை 163). கோழி வேந்தன் குதிரை கோரம்மே (அபி.மாலை 576). கோரம் மா வாசி என்கிற குதிரைகளுக்குள்ள பல பெயர்களை (பெண்கல்வி ப.27). 14.விரைவு. கோரமொடு சங்கரன் தூதர் ... அணுகினார் (ஞான.உபதேசகா.1070). 15.வட்டில். அமுதுடைக் கோரம் நீக்கி (கம்பரா.2,1,25). 16.வட்டில் வளைவு. (யாழ்.அக.) 17.நரகவகை. கோர மதுதான் முதனரகம் (சிவதரு.சுவர்க்கநரக.107). அரோதம் படர் கோரம் ஓலி டின்னவை யாதிய நரகெலா முழன்றோம் (மருத.பு.9,35). 18.உட்டணம். (யாழ்.அக.) 19.கோளக பாடாணம். (சங்.அக.) 20.நஞ்சு. (யாழ்.அக.)

கோரம்பர் பெ. கழைக்கூத்தர். கழைக் கூத்தர் ... கோரம்பர் (அபி.மாலை 272).

கோரம்பலம் பெ. 1.கோளாறு. (யாழ்.அக.) 2.கேளிக்கை. (இலங்.வ.) 3.தந்திரம். (முன்.) 4.வாய்ச்சண்டை. (முன்.)

கோரம்பாய் பெ. →கோரைப்பாய். விரிக்கட்டா கோரம் பாயை விரிக்கட்டா (திருநெல்.நாட்டுப்.தெம்மாங்குப். 74). படுக்கும் கோரம்பாயைச்சுருட்டி (என்.வெகா.ப.30).

கோரம்பு பெ. தீம்பு. அதுவுமுன்கோரம்புக்கேற்குமன்றே (பெருமாள்.தி.6,4).

கோரமகம் பெ. யாமுறுப்பு. யாமுறுப்பு உந்திர கோரமகம் என்ப (அபி.மாலை 1789).

கோரமுகம் பெ. அழகற்ற பார்ப்பதற்குக் கொடூரமான முகம். கணேசனின் அந்தக் கோரமுகம் செய்சியைக் கூடத் திடுக்கிட வைத்தது (கனவு.வேண்.ப.136).

கோரராசனம் பெ. நரி. (யாழ்.அக.)

கோரரூபம் பெ. 1.நரகவிசேடம். (சிவதரு. சுவர்க்க நரக.107) 2.பயங்கரமான வடிவம். (செ.ப.அக.)

கோரரூபை பெ. அண்ட கோள பகுதிகளுள் ஒன்று. தரளதாரங் கோரரூபை ... எய்துங் கழியாழமும் (அண்ட.விலா.10).

கோரவாரம் பெ. சந்தனமரம். (யாழ்.அக.)

கோரன் பெ. 1.சிவன். (முன்.) 2.கீழ்மக்கள். (ஆசி.நி.69)

கோரா பெ. 1.சாயமிடாத நூல். (செ.ப.அக.) 2.சலவை செய்யப்படாத ஆடை.(முன்.) 3.பழக்கப்படாத புதிய குதிரைமுதலிய விலங்கு. (முன்.)

கோராகோரம் பெ. →கோரரூபம் 1. (சிவதரு.சுவர்க்க நரக.107)

கோராசன் பெ. இடபம். (யாழ்.அக.)

கோராணிக்கம் பெ. நையாண்டி. (வட்.சொ.வி.ப.122)

கோராதனம் பெ. யோகாசனவகை. (தத்துவப்.109 உரை).

கோராலி பெ. வரகு. (மே.கிளைமொழியி.)

கோராவாரி பெ. பெரும்புயல். (இலங்.வ.)

கோரான்[1] பெ. 1.ஓர்செடி. (யாழ்.அக.) 2.சுளுந்து மரம். (வைத்.விரி.அக.ப.122)

கோரான்[2] பெ. குறான், இசுலாம் சமயத்தின் முதல் நூல். (செ.ப.அக.)

கோரான்குச்சு பெ. →கோரான்[1]-2. (யாழ்.அக.)

கோரான்சுளுந்து பெ. →கோரான்சூள்[1]-2. (முன்.)

கோரி[1] பெ. 1.கூடை. (முன்.) 2.பிரேதங்குழியின் மேற்கட்டுவது. பெரிய கோரி கட்டச் சொன்னான் ராசாதேசிங்கு (தேசிங்கு.கதை ப.66). 3.(உருது) முசுலீம் பெரியாரின் கல்லறைக்கு மேலாகக் கட்டப்படும் கும்மட்டம். மகுபறாவில் தரித்திரு கோரி (கட்டி தீன் விளக்கம் 21,2).

கோரி[2] பெ. பார்வதி. கோரியென் உள்ளங் குலாவிநின் றாளே (திருமந்.1110).

கோரி[3]**-த்தல்** 11வி. கடுமையாதல். பூரித் தாகுதி பண்ணிய தழலெனப் பொங்கிக் கோரித் தொன்பது வாயிலும் பசித்தழல் (திருவிளை.பு.7,16). கவர்த்து மேற் கொரித்துப் பூரித்து ... பூணிட்டு (திரு இலஞ்சி.உலா 299).

கோரிக்கை பெ. 1.வேண்டுகோள். பொங்கும் நிலா எனப் பூரிக்கும் நெஞ்சிற் புதுப்புதுக் கோரிக்கை (பாரதிதா.60,1,9). கோரிக்கை ஒன்று கொடுக்க வேண்டும் (அவளும் அவனும் ப.330). 2.வேண்டுகோள் மனு. (ஆட்சி.அக.ப.84) 3.விருப்பம். அடடா ... ஆமாம் ... அப்ப சோடா இருந்தா பெட்டர் என்று கோரிக்கை கை மாறியது (மீண்.தொட்.ப.18). பதவி விலக கோரிக்கை (செய்தி.வ.).

கோரிகை[1] பெ. அகப்பை. கோரிகை தானே லகப்பை யெனலாம் (அக.நி.கோ முதல் 1). பற்றுகோ ரிகையால் மொண்டு (குசேலோ.69). முக்கோரிகை நெய்யூற்று (தைலவ.135,137). அகப்பை மூழி மூழை கோரிகை (அபி.மாலை 1812).

கோரிகை[2] பெ. மாக்குதிரையில் மேல் வைக்கும் ஓலை நெற்கூடை. (இலங்.வ.)

கோரிதம் பெ. 1.துகள். (யாழ்.அக.) 2.விள்ளல். (முன்.)

கோரிப்போடு-தல் 6வி. வரப்பில் மண்ணையள்ளிப் போடுதல். (தொ.வ.)

கோரியை[1] பெ. →கோரிகை[1]. (யாழ்.அக.)

கோரியை[2] பெ. →கோரிகை[2]. (இலங்.வ.)

கோரு[1]**-தல்** 5வி. 1.கூறுதல். தென்றல் மெதுவாயடித்த படியால் தாங்கள் கோரினது கைகூடி வந்ததென்று எண்ணி (பு.ஏற்.அப்போஸ்.நட.27,13). சுகாதார மந்திரியின் ராசினாமாவை ... கோருகிறார் (செய்தி.வ.). 2.பணிவன்புடன் கேட்டல். என் ஆத்துமாவின் பேரில் தேவனையே சாட்சியாகக் கோருகிறேன் (பு.ஏற். கொரிந்தி.எழு.நிரு 2,1,23). 3.விரும்புதல். இக்கதை

அக்கரைப் பொருளெலாம் வணிகர் கோரி வைத்தருள் கடைத்தெரு (தென்காசித்.பு.நகரச்.70). செந்நெல் வெண்ணெல் கோரித் தெளித்ததுஅங் குரமாய் (ஆண்டாள் பிள்.67). குன்றக் குருபரன் கோதையாள் வள்ளியைக் கோரி வழி நடந்து (சிந்.இலக்.2,3). மாறுதல் கோருதல் மக்களின் இயல்பே (அவளும் அவனும் ப.49). கோரி வந்து குடதிசை மேட்டிலே கோலம் காட்டி குறுநகை சிந்திடும் சூரியன் உதயம் (இருள்.1). 4.வேண்டிக்கொள்ளுதல். கூட மாபது மாதி நிதிகளைக் கொண்டு யான்நிதம் கோரும் வரும் (சோலை.குற.13). குளிர் வெண் நகையான் கோரியதே (கிரு.கர்.62). வாழ்வின் பலனைக்கோரி உன் வரவை நோக்கி யிருந்தோம் (பாரதிதா.குயில்.பா.ப.54).

கோரு²-தல் 5வி. நீர் முதலியவற்றை முகந்து அள்ளுதல். நாங்கு எண்ணை கோங்கு எண்ணை நறுநெய்யும் ... கோரியங்கே தானும் விட்டு (சின்ன.கதை ப.40). பாசி படர்ந்த தண்ணீர் பலரும் கோரும் தண்ணீர் (தமி.நா.பா.ப.214). கிணற்றிலிருந்து தண்ணீர் கோருகிறான் (நாட்.வ.).

கோருவை பெ. 1.வரிசை. வெகு கோருவையாகப் புனலெடுத்து வந்தனர் (கும்மிப்பா.நல்லாண்.23).

கோரெண் பெ. குறைவெண். (ஆட்சி.அக.ப.233)

கோரை பெ. 1.நதி ஓரங்களில் வளரும் ஒரு வகைப்புல். கோரை எழுந்து கிடந்த குளத்தினில் (திருமந்.2911). கோரைவாய்ப் பொன் சொரியும் (தனிப்பா.திர.43 கம்பர்). எருவைசாய் கோரை (உரி.நி.98). கோரைக் கால் பாயும் குருகையே (குருகை.28). நட்டாற்றுக் கோரை போல் நடுங்கி விழுந்தாயிழை தான் தட்டானை யென் சொல்வேன் (காஞ்சி.அம்.ப.16). கோரைக் குண்டோடை (முக்.பள்.92,13). கோரைவாய் பொன் சொரியுங் கொற்றவன்றன் கண்டி யூரைவாய் (பெருந். 1457). ஆத்தில் நட்ட கோரைகள் போல் அலையது சுல மெல்லாம் (சிந்.இலக்.5,78). கவுதாரி ... கோரையில் மேயிது (சின்ன.குளுவ.29). வயலில் ஆலக்கொடி கோரை ... களையெடுத்தும் மாளாமல் இருந்தன (செய்தி.வ.). 2.அண்ட கோள பகுதிகளுள் ஒன்று. குருசு கோரை கோரையெல்லைக் கோடி இருபத் தெட்டுக்காய் (அண்ட.விலா.10). 3.மதுவுண்ணும் பாத்திரம். ஏந்துபவள் கோரை சங்கினியே போற்றி (தேவி.மான்.1,42). 4.சூட்சுமம். பரிந்துடன் போகின்ற பங்கோரை யாமே (திருமந்.3029). 5.முதுகு. கோரை புறம் வீரம், முதுகாம் (நாம.நி.585).

கோரைமயிர் பெ. சுருள் அல்லாத (கோரை புற்களைப் போன்ற) முடி. (மானிட.கலைச்.அக.ப.12)

கோரைக்கிண்டி பெ. →கோரையுள்ளான். (செ.ப.அக.)

கோரைக்கிழங்கு பெ. முத்தக்காசு. (பதார்த்த.443)

கோரைக்குண்டு பெ. கோரையடர்ந்த வயல். கோரைக் குண்டோடை யோரத்திற் புரவும் (முக்.பள்.92,13).

கோரைகுத்தி பெ. →கோரையுள்ளான். (செ.ப.அக.)

கோரைச்சம்பா பெ. சம்பா நெல்வகை. (பதார்த்த.811)

கோரைச்சூரை பெ. கோரை மீன் வகை. (தொ.வ.)

கோரைப்பல் பெ. கூர்மையான பல். கோரைப்பல் ஆற்றிய கோரக் கொடுமைகளின் (இ.ஓ.ப.47).

கோரைப்பாசி பெ. பாசிவகை. (வின்.அக.)

கோரைப்பாய் பெ. கோரைப்புல்லாற் பின்னப்படும் பாய். (நாட்.வ.)

கோரைப்புல் பெ. புல் வகையில் ஒன்று. (கலைச்.அக. 2 ப.105)

கோரையுள்ளான் பெ. உள்ளான் பறவை வகை. (பதார்த்த.885)

கோரைவட்டம் பெ. ஒரு வகை விருது. கூந்தல் பிச்சமும் கோரை வட்டமும் (பெருங். 1,46,62).

கோரைவெட்டி பெ. →கோரையுள்ளான். (செ.ப.அக.)

கோரோசனம் பெ. →கோரோசனை. (வைத்.சத.ப.77)

கோரோசனை¹ பெ. முன்னுரை.கோரோசனை முருகர்க்கு முழுச்சாத்தி (திருச்செங்.பு.3,7,24).

கோரோசனை² பெ. பசுவின் வயிற்றினின்று எடுக்கப் படும் மஞ்சணிறமுள்ள வாசனைப் பண்டம். உறு நறுங் கோரோசனை தனை அனைய ... நாயகன் எழில் திருமேனி (நாய்ச்சியார்.தோத்திரப்.22). சாம்பிராணி கோரோசனை கந்த பொடி (கறுப்பண்ண.சத.10). சாற்றிய புலாலொடு பிறந்த கோரோசனை சவாது புழு கன்னவர்க்கும் ஆம் (குமர.சத.59). கோரோசனை நரட்டிவை எடுத்து (இரு.விருத்.18). மாட்டில் அல்லோ கோரோசனை கதித்துண்டாச்சடி (சாத்.கும்மி 518).

கோரோசனை³ பெ. தாமரை. பொன் முத்துச் சரவம் கோரோசனை ... எங்கே பிறந்தாலும் என் (நீதிவெண்.1).

கோல் பெ. 1.கம்பு. காயாம்பூங் கண்ணிக் கருந் துவர் ஆடையை மேயும் நிரை முன்னர்க் கோல் ஊன்றி நின்றாய் (கலித்.108,9-10). குலவுகோற் கோவலர் கொன்றைத் தீங்குழல் (சூளா.34). ஒரு கை கோல் ஊன்றி (ஐயடி.சேத்.3). விடக்கோ கிடந்தன்ன வேலர் (திரிசிரா.அந்.7). கோலைப் பிடித்து விடைக் குலங்களை மேய்க்கு (சோலை.குற.51). கோலெனவே ஓடினவும் ... பரிமாத்திரள் (இத்தேரி.அம்.2 க.40). அவன் நிற்பதுவோ ஒரு கோலின் துணை (காவியப் பாவை ப.22). இழுக்க லுடையுழி ஊற்றுக்கோல் (முதுமொழி.மேல்.72). திருமகளும் வளர்கெழும் கலைமகளும் எழுது கோல் போல் (சொர்ணபிள்.10,50). 2.மரக்கொம்பு. வைதிரத்துக் கண்விடு கதைக் கோல் (ஐங்.278). குமரி வாகைக் கோலுடை நறுவீ (குறுந்.347). மடலாய்க் குழலாகிக் கோல் சுரியாய்க் கூர்ந்து (திணைமாலை.98). நாளந்தி

கோல் தின்று கண் கழீஇ (ஆசாரக்கோவை 9). கோல் தேன் பாய்ந்தொழுகும் குளிர் சோலை சூழ் வேங்கடவா (பெரியதி.தமிழாக்.1,9,88). இன்னிசையும் கோல் தேனும் (தேம்பா.1,6,10). 3.மாடு வோட்டும் கொம்பு. மடந்தை கோல்கொள்ள யைம் (சீவக.2054). கோலொருகைக் கொண்டு கடைக் காலுமொரு கைதூக்கி (முக்.பள்.82,13). 4.முரசை அடிக்க உதவும் குச்சி. தோலையும் கோலையும் முறையால் உன்னி (பஞ்ச. தந்.1,41). 5.ஓடத்தைத் தள்ள உதவும் துருபிடி, ஓடக்கோல். ஓடமும் உடைந்தபோது ... கோலுமில்லை யாருமில்லையானதே (பெருங்.2,27). கோல் கொன்றலையெறியுங் காவேரி (கு.சோ.உலா 28). கோல் ஒரு தலையும் குடம் ஒரு தலையும் கூன்புறத்திமில் இரு தலையும்... இருத்தி (சீகாழித்.பு.சொச்சை.6). 6.முனிவர்கள் தாங்கும் முக்கோல். கோல் காக்கரகம் குடை செருப்பு (அறநெறி.63). 7.விளக்குத் தூண்டும் குற்றி. தெம் முனையுள் பேலினுங் கோடாது வேந்தன் மனை விளங்கக் கோலினுங் கோடா கொழுந்து (பெருந். 578). 8.மலர் பறிக்கும் கோல். ஆய் கோல் வயவர் (பரிபா.11,24,25). 9.1.தண்டு. செம் கோல் பதவின் வாக்குதல் கறிக்கும் (குறுந்.363). பெருங்கோல் குறிஞ்சி (நற்.301). புரிமுத்த மாலைப் பொற்கோல் விளக்கினுட் பெய்த நெய்யும் (சீவக.2316). கரைந்த கண்ணும் கரத்து ஒரு கோலுமாய் (அருணகிரிநாத.பு.9.11). கோலினான் மொத்துண்டு (திருவருட்பா 23,2). 9.2.தடி. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அன்றே (குறள்.415). காக்கை கடிவதோர் கோல் (நாலடி.41). பணை கோலின் பண் கொளுவார் (இராவணகாவி. 5,6,3). 9.3.குச்சி. கோல்புரை வெளியும் இன்றிக் குடர் நிரம்பிய பேய் (இரணியவதைப்.677). ஒரு கோல் நுனியால் மலை போன்ற தோணியை ... பின்புறத்தில் (பாரதிதா.7,8). கோலெடுத்த கைம்மேல் அது கதித்து ஏறிடும் சுவர்மேல் (இளை.இலக்.125). 10.கோற்றொழில். கோல் திரள் முன்கைக் குறுந்தொடியார் (பாரிகாதை 531). 11.ஊன்றுகோல். கோலூன்றி (நாலடி.13). புள்ளி நஞ்சினை பைங்கோல் மணி வளையார் தணியார் அல்லர் பார்வை கொண்டே (தஞ்.கோவை 55). கோல் துணையா முன்னடி நோக்கி வளைந்து (பெரியதி.தமிழாக்.1,3,21). வனையாக் கோல் (தொல். சொல்.156 சேனா.). குருடர்க் கொளி பகையாய்க் கூசிக் கோல் போடார் (ஒழிவி.3,22). 12.செங்கோல். கொடிது கடிந்து கோல் திருத்தி (புறநா.17,5) மன்னவன் கோனோக்கி வாழும்குடி (குறள்.542): படுகடல் வனாக மெல்லாம் கோல் வளையாமற்காத்து (சீவக.2906). செய்யகோல் செலுத்தும் என்பர் (நந்திக்கலம்.39). வேல்வேந்தன் வந்து வெளிப்பட்டான் மற்று இளைய கோல் வேந்தர் ஓடும் குறித்து (பாரத வெண்.5,4). செய்ய கோல் அபயன் திருமணத்து ஓங்கும் திருக்கயிலாய நீள் சிலம்பு (பெரியபு.1,12). அவனியை ஓர் கோல் ஒச்சி ஆளும் என்று முனிவர் கூற (பாரதம்.1,2,67). படக்கோனில மன்னர் பாவையைப் (தீரிசிரா.அந்.7). கோல் திருந்தினர்க் கெலாம் கோன் என்பான் (தேம்பா. 1,6,28). கோலெனக் கையில் ஒரு கோலை நல்கினார் (இரட்ச.சரி.328). கோல் கோடி அன்றினர் இஞ்சி அழித்தருள் அங்கணர் (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.47). 13.1.அளவுகோல். கோல் அளவு இருபத்துநால் விரலாக (சிலப்.3,100). கோலிடை யுலக மளத்தலின் (கம்பரா. நகரப்.11). இருபத்தொரடிக்கோலால் பெர் ஒன்றுக்கு ஒருமா அரை நிலமாக (தெ.இ.க.5 எ.762). முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளமகல நின்று கொண்டு வருக (தொல்.எழுத்.சிறப்.பாயி.நச்.). நீட்டி அளப்பதோர் கோல் (முதுமொழி.மேல்.125). அங்கங்கே பயிரேறும் நிலங்கள் கோலிட்டு அளந்து (அன்னீத.ப.35). 13.2.முழம் நான்கு கொண்ட நீட்டலளவை. முழம் நான்கு கொண்டது ஒரு கோல் (யாப்.விருத்தி.ப.505 உரை). இரு கோல் அளவாய் ஒரு வாவி செய்து (சீகாழித்.பு. சிரபுர.11). நாலிரு சாண் கொண்டது நற்கோலாம் (திருவலங்.கலியியல் 12 மேற்.). 14.1.சித்திரம் தீட்டுங் கோல். மென் கோல் வளையார் வண்டலம் பாவை (கப்.கோவை 114). 14.2.எழுது கோல். கண் எழுதுங் காலத்துத் தன் இமையகத்துப் புகுந்த கோலைக் காணாத கண்ணைப் போல (குறள்.1288 மணக்.). புருவளர் கதிர்கள் கோலால் பொறித்ததோர் படத்தின் சாயல் (தேம்பா.1,9,79). 14.3.மைதீட்டும் கருவி. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல் (முதுமொழி மேல். 122). விழி எழுதும் கோல் போல (இயேசுகா.ப.87). 15.முத்திரைக்கோல். (வின்.அக.) 16.தீக்கடைக்கோல். கைக்கோ லுமிழ்ந்த வெற்படு சிறுதீ (பெருங்.5,8,134). கன்னமும் அழற்கோல் வைத்த தொத்தது (பாரதம். 1,1,95). 17.பிரப்பங்கோல். கட்டெழிற் கோலும் கைம் முதலணைத்து (செ.பாகவத.10,6,2). 18.மூங்கில். குடவளையற்றிகிரி கொண்டகையிரண்டினுங் கோல் குழலெடுத்தடவி (வைகுந்தபிள்ளைத்.முத்தப்.147,2). 19.வாட்கோல். (வடநி.618) 20. செண்டு என்ற ஆயுதம். திரித்த கோலில் வளைவுண்டு (கலிங்கத்துப்.273). 21.குதிரையை ஓட்டுவோர் கைக்கொள்ளும் தாற்றுக் கோல். கொள்வார் கோல் கொள்ள (பரிபா.11,51). கோமுனிவர்க் குற்றுரைத்தான் கோற்பாகன் (பெருந். பாரதம் 668). மால்கொண்டான் கோல் கொண்டமா (நள.367). 22.கொழு. (செ.ப.அக.) 23.அம்பு. வார்கோற் கொடு மர மறவர் (புறநா.43,10). அரிமாப் பிழைப் பெய்த கோல் (நாலடி.152). வல்லாய் எரி

காற்றீர்க்கு அரிகோல் வாசுகி (தேவா.1,11,6). சிலையை இருந்தெடுத்துக் கோல் தெரியும் ஈங்கோயே (நக்.ஈங். மாலை 62). எரிமுத்தலை கப்பணம் எற் பயில் கோல் முரிவுற்றன துற்றன மொய்க்களமே (பெரியபு.41,26). எய்த விலக்கிற்றப்பிய கோல் தானேறுண்டிம் மைதவழ் கண்ணாள் மாய்ந்தனளேயோ (திருவிளை.பு.25,28). சுருப்பு நான் இடுவது ஐந்து கோல் (சௌந்.5). கோலைப் பழித்த விழி (சீகாழித்.பு.சீகாளி.35). தென்பால் கோலி ரண்டுடன் ஒன்று வீழ் சேய்மையிற் குலவும் (மருத. பு.20,1). கோலே யனைய விழியினையாக் கொடி (பாண்டிநா. பிள்.8,1). 24.ஈட்டி. கோலும் குந்தமும் (சிலப்.15,216). 25.குடைமுதலியவற்றின் காம்பு. அருள் குடையாக அறம் கோலாக (பரிபா.3,74). 26.யாழின் நரம்பு. திருந்து கோல் நல்லியாழ் (சிலப்.6,172). கோல் பொரச்சிவந்த ... விரல் (சீவக.459). 27.நடுநாடி, சுழுமுனை. கோலால் டத்திக்குறிவழியே சென்று (திருமந்.1956). 28.முதுகந்தண்டு. (வீணா தண்டம்) கோல் ஒன்ற பற்றினால் கூடாப் பறவைகள் (திருமந்.295). 29.திறவுகோல். திரு மாளிகையை திறக்க ஒரு கோல் கொண்டு வந்திலம் (திருவாரூர்க்கோவை 225). 30.வளையம். முத்துக் கோல் அவிர் தொடி (கலித். 59,2). 31.துலாக்கோல். ஒரு திறம் ஒல்காத நேர் கோல் (கலித்.42,16). தெரிகோல் ஞமன் போல (புறநா.7,9). புலவர் புலாக் கோலால் தூக்க (பரிபா.திர.6,2). நிறை கோல் துலாத்தர் (சிலப்.14,208). தூக்கிப் பார்க்கப் படுகின்ற கோலைப் போல (குறள்.11 மணக்.). தூராசு சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் (முதுமொழி மேல்.25). இவ்வூர் வெள்ளிக் கோல் காஞ்சி புரத்து நின்றா னொடொக்கும் கோலால் எடுக்க (கல்.கலைச்.அக.ப.1 63). 32.தனராசி. (திவா.) 33.ஐப்பசிமாதம். (தைலவ. 55). 34.அரசாட்சி. கோல்வாய் கோடா நீதி நெறி கொண்டு எவ்வுலகும் புரந்தோய்நீ (தேம்பா.1,10,14). கோல் நோக்கி வாழும் குடியெல்லாம் (நான்மணிக். 29). கோலியலுஞ் சீரியலுங்கொண்ட ... வீற்றிருந்தான் அக்கோமான் (சித்தேரி.அம்.2 க.45). உனது கோலை இகழ்ந்தவர் யார்? (தமிழகத்தி.ப.106). 35.அரசன். கோல் நோக்கி வாழும் குடி (நான்மணி.28). 36.ஆணை. யூதர் தம் கோல் நிமிர் கோயிசன் குவட்டில் ஏறினான் (தேம்பா.26,12). 37.தறி. கோலிங்க மைஞ்சருள் கூடலுமாமே (திருமந்.375). 38.சாணம். (நீரரர்நி.3, 21). 39.அணியின் சித்திர வேலை. வார்கோல் ... குறந்தொடி மகளிர் (புறநா.36,2). 40.வலிமை. கோல்வளைக்கை மாதராள் (தேவா.2,44,4). 41.திரட்சி. நுண்கோல் அவிந் தொடி (அகநா.338). திருந்து கோல் எல்வளை தெழிப்ப (குறிஞ்சிப்.167). குழியப் பெரிய கோன் முன்னக மாறியார் காந்தட் குவிவிரன் மேல் (சீவக.2696). குறைபடாத வேட்கையோடு கோல் வளையாள் ஒரு பால் (தேவா.1,47,7). கோல்வளை தன் மாலை குறித்து (நளா.73). கோற் னருடி குமுதச் செவ்வாய் (செ.பாகவத.4,3,1037). கோல் வளையார் கூறுவது தோழிக்கு (முதுமொழி மேல்.169). கோல்விளை களுங்க ... பந்தாடும் மாநரார் (சிவஞா.காஞ்சிப்பு.நகரப்.25). கோற்றொடி மனையும் (கச்சி.காஞ்சிப்பு.தீர்த்த.44). 42.திரண்ட வடிவு. (வட.நி.618). 43.மெய். சென்று தாக்கும் வியன் கோலடி (நன்னெறி.31).

கோல்[2] பெ. 1.இலந்தை. (யாழ்.அக.) 2.தெப்பம். (வின்.அக.)

கோல்காட்டு-தல் 5வி. கோலால் வழி தெரிவித்தல். குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர் (திருமந்.2048).

கோல்கூலி பெ. அளவுகோலுக்கான வரி. (சாச.அக.)

கோல்கொடு-த்தல் 11வி. குருடருக்குப்பற்றுக்கோடு கொடுத்தல். (வின்.அக.)

கோல்கோடு-தல் 5வி. 1.கொடிய ஆட்சி நடத்தல். வேந்தர்கோல் கோடிச் செம்மை மாறினும் (திருவிளை.பு. நாட்டுச்.59). 2.நீதியிற் பிறழ்தல். சால்புடையார் பல்கித் தளி பொய்யா நாடுதான் கோல்கோடாது தென்னாங் கோலோ (பாரிகாதை 536).

கோல்தலை பெ. கூடு அடிக்கும் இடம். கோல் தலையே ஆயினும் கொண்டீக (பழமொழி.333).

கோல்தின்(னு)-தல் 8வி. பல் விளக்குதல். வெண்பல் கோல் தின்னும் போதும் ... பேசல் செய்யார் (சிவஞா. காஞ்சிப்பு.ஒழுக்க.7).

கோல்தொடி பெ. கோலில் அமைத்துச் செய்யப்படும் தொடி. நினைபவர்க்கருள் கோமளக்கோல் தொடி (திரு.முரு.பிள்.பா.3).

கோல்நிறைகூலி பெ. கோலால் நிறுத்து விற்கும் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரி. (சாச.அக.)

கோல்பிடி-த்தல் 11வி. குருடருக்குக் கோல் கொடுத்துக் கூட்டிப் போதல். (யாழ்.அக.)

கோல்மட்டம் பெ. கோலளவு. (செ.ப.அக.)

கோல்மரம் பெ. வண்டியின் ஏர்க்கால் மரம். (முன்.)

கோல்லர் பெ. முல்லை நிலஞ்சார்ந்த தெலுங்கு பேசும் இடைக்குலச் சாதியார். (தென்.குல.குடி.2 ப.366)

கோல்வரி பெ. →கோல் நிறைகூலி. (தெ.இ.க.4,648)

கோல்வரை பெ. சக்கரவாளகிரி. கோல்வரை நிகர்க்கும் குவிதனத்து இரதி (சிவரா.பு.4,73).

கோல்வலி-த்தல் 11வி. தண்டால் ஓடந்தள்ளுதல். (செ.ப.அக)

கோல்வள்ளம் பெ. விளிம்பு பிரம்பு கட்டின வட்டில். மணிக்கோல் வள்ளத்தவ னேந்த (சீவக.2700).

கோல்வளை பெ. 1.அழகிய வளையல்வகை. கோல் வளையார் கூத்தாட (தேவா.1,130,9). குழலார் சிறு புறத்துக் கோல்வளையை (காரை.அந்.51). திரட்சி கோல்

வளை (சிவஞா.காஞ்சிப்பு.மாசா.7). கோல் வளை தனக்கரு ளாற்றேவர் (திருவாலங்.பு.தேவர்துதி.30). 2.திரண்ட வளையலை உ டையவள். கோல்வளைக்கு முன் பிறந்த கோமான் (பாரத வெண்.516). கொண்டான் தலையொடு கோல்வளை முடிந்தன்று (புறப்.வெண்.73 கொழு). தந்து நம் கோல்வளை பால் நாடிய வந்தனர் (தாக.கோவை 49). 3.பெண். (யாழ்.அக.) 4.சிற்சத்தி (சிவனை விட்டு நீங்காத பராசத்தி சுவர்ந்தெழுகின்றனள் கோல்வளை தானே (திருமந்.1173). மடக்கோல் வளையிடத் தான்றன் (திரிசிரா.அந்.7).

கோல்விழுக்காடு பெ. தற்செயல். இவர்களுக்குக் கோல் விழுக்காட்டிலே சேர விழுந்தது. (திருப்.1 மூ.ப.2). கோல்விழுக் காட்டாலே பரிகாரமாயிருக்கை யன்றிக்கே (திருவாய்.4,10,5 ஈடு.).

கோலக்கல் பெ. கோலப்பொடியாக இடித்தற்குரிய கல். (செ.ப.அக.)

கோலக்கா பெ. திருஞான சம்பந்தர்க்குப் பொற்றாளம் கொடுத்தருளிய நிகழ்ச்சி நடைபெற்ற சைவத் திருத்தலம். மடையில் வாளை பாய மாதரார் குடையும் பொய்கைக் கோலக் காவுளான் (தேவா.1,23,1). தம் மகனார்க்கு இக்கோக் காவிற்றம் பொற்றாளம் (கோடீச். கோவை 13). பாலற்கா வன்று பசும்பொற்றா ளங்கொடுத்த கோலக்கா (திருவருட்பா 1962,16).

கோலக்காரன் பெ. கேலிக்காரன். (நாட்.வ.)

கோலக்கிருதும் பெ. 1.நில வேம்பு. (சித்.பரி.அக.ப.87) 2.மஞ்சள். (முன்.)

கோலகப்பை பெ. நீண்ட காம்பையுடைய அகப்பை. (நாட்.வ.)

கோலகம் பெ. திப்பலி. (மலை அக.)

கோலகர் பெ. தென் கன்னடத்தைச் சேர்ந்த நாட்டியல் மகளிருக்குப் பிறந்த மொய்லியர். (தென்.குல.குடி. 2 ப.365)

கோலகருடவேர் பெ. அமுக்குறாக்கிழங்கு. (சித்.பரி. அக.ப.87)

கோலங்கட்டு-தல் 5வி. நாடகம் முதலியவற்றிற்கு வேடம் பூணுதல். (இலங்.வ.)

கோலங்காட்டு-தல் 5வி. 1.வதூவரர்களை மணப் பந்தர்க்கு அழைத்துக் கொண்டு வருதல். (நாட்.வ.) 2.அழகு செய்தலை வெளிப்படுத்திக் காட்டுதல். புதல்வனைக் கோலங்காட்டிய செல்வாள் போல (தொல்.பொ.172 நச்.). 3.மாதிரிகாட்டுதல். (யாழ்.அக.) 4.சாயல்கொள்ளுதல். (முன்.)

கோலங்காண்(ணு)-தல் 13வி. 1.அலங்கரித்தல். கோலங்காண்படலம் (கம்பரா.1,21). 2.துன்பத்திற்கு உள்ளாக்குதல். அவன் என்னை இக்கோலங்கண்டான் (நாட்.வ.).

கோலங்கெடு-தல் 6வி. 1.சீரழிதல். (யாழ்.அக.) 2.அழகு கெடுதல். (முன்.)

கோலங்கொள்(ளு)-தல் 2வி. 1.சந்தர்ப்பத்திற்கேற்ற வேடம் பூணுதல். கொற்றவை கோலங் கொண்டு (பரிபா.11,100). 2.மாந்தாராமாயிருத்தல். (இலங்.வ.) 3.பொய்த்தோற்றங் காட்டுதல். (செ.ப.அக.) 4.சாயல் கொள்ளுதல். (யாழ்.அக.) 5.அலங்கரித் தல். மாலையும் சாந்தும் மதமும் இழைகளும் கோலங்கொள நீர்க்குக் கூட்டுவார் (பரிபா.10,93).

கோலச்சங்கம் பெ. முட்சங்கு. (யாழ்.அக.)

கோலச்சங்கு பெ. →கோலச்சங்கம். (செ.ப.அக.)

கோலச்சாரி பெ. வேட்டுவமகள் கொற்றவை யுருக் கொண்டு ஆடுங் கூத்து. (சிலப்.பதி.73 உரை)

கோலஞ்செய்வாள் பெ. தலைவிக்கு அலங்காரஞ் செய்பவள். (சூடா.நி.)

கோலடி பெ. கையாலடித்த தானியத்தைக் குவித்துக் கோலாலடிக்கை. (செ.ப.அக.)

கோலத்தனு பெ. வராகவடிவம். கோலத்தனு வினை முன் கொண்ட சதுரன் (தென்பு.மணி.உலா 69).

கோலநகுடவேர் பெ. →கோலகருடவேர். (இராசவைத்.)

கோலப்பொடி பெ. கோலமிடுதற்குதவும் அரிசிமா அல்லது ஒருவகை வெள்ளைக் கற்பொடி. (செ.ப.அக.)

கோலபுச்சம் பெ. ஓர் நாரை. (யாழ்.அக.)

கோலம்[1] பெ. 1.அழகு. கோலச் செவி (பரிபா.11,97). தாழ்தரு கோலத்துத் தமரொடு சிறந்து (சிலப்.26,122). கோலம் பொழிற் சோலைப் பெடையோடாடி (தேவா.1, 45,4). கொள்ளிய லமைந்த கோலம் (யசோதர.27). கோலமலை போற்பொலிந்து கோதிலாப் (நம். திருத்தாலா.148). பைங்கோலம் சேர் கனகப் பஞ்சதரு (சிலையெழு.38). நங்கோலக் காதலரைப் போக்கி அருள் (நள.239). கோலப் பெண் ஆண் அலி என்று இவை ஆகும் குறிவசனம் (பிர.விவே.43). வாழ்வுமோர் இந்திரசா லக்கோலம் (தாயுமா.பா.12,3). நீலவான் குடையின் கீழே நின்றாடும் உலகம் எங்கும் கோலமோர் கோடி (கண்ண.கவி.ப.148). 2.வண்ணம், நிறம். களக் கோல வல்விடமூண்டு அருள் களத்தாய் (சிவராத். பு.9,25). மதன் கோலத்தை யொத்த கருங்கூந்தலாள் (மதுரைச்.உலா 342). கார்க் கோல மேனியானை (கம்பரா.6,5,154). கலத்தின் வந்திழிந்த, கோல நீர்ப் பவளக் குளம் புடையன குதிரை (சீவக.2159). 3.வடிவம், உருவம். கூடிய கோலத்து ஒருங்கு நின்று இயலாது (சிலப்.28,166). ஞால முண்ட மாலும் ... கோலமண்டர் சிந்தைகொள்ளார் (தேவா.1,53,9). என்பறாக் கோலத்து (காரைக்.அந்.2). பொற்றொடியைக் கொடுவந்து போர்க்கோலச் வேசகராய் (பெரியபு.28, 312). உரையிகந்த கோலத்தாற் கோயில் பணிகுயிற்றி (கு.சோ.உலா 92).

கோலத்தால்வே றாகவுமெய்க் குறியாலொன்றுகவும் ... தாழ்வார் (பகவற்.9,1). பார்த்தனுக்காகக் கொண்டு நடந்த கோலம் (பட்டினத்தார். பா.கோயில்.40,22). கோலமும் அறிவார் இல்லை (சி.சி.சுப.49). கருமுகிற் கப்பு விட்டனைய கோலமும் (அரிச்.பு.9,36). சரணகோகணகம் கற்பகம் நாற ... வந்த நின் கோலம் நான் மறவேன் (அழகர் கலம்.92). இறை முன்னிட்ட கோலமாகி வழக்கோடு பேசிட (கலா.அம். பிள்.35). கோலம் மாறும் காலம் என் (திருக்கட.பு.பாயி.7). தொல்யோகம் தாங்கிஅவர் கோலமுட னேதபசு கொண்டிருந்த பின் (சீவே.சரி.3255). 3.2.காட்சி. கோலம் பல காட்டும் (சிலேடை.இலக்.ப.306). கதா நாயகன் கதறி புலம்பிய கோலம் (நா.கலை.ப.86). பாலத்தை கடல் மடக்கி எறிந்த கோலம் (நகர்.நாட்.கதைப்பா.ப.72). 4.தன்மை.ஊடற் கோலமோடு இருந்தோன் உவப்ப (சிலப்.6,75). படுங்கோலம் அறியாமல் தண்டலையார் திருப்பணிக்கும் பங்கம் செய்வார் (தண்டலை.சத.55). உன் கோலத்தை யாரறிவார் (திருக்குற்றா.மாலை 53). பேய் கொண்டா மென்பா ... நோய் கொண்ட கோல மெண்டர் (இரட்ச. யாத்.1,2,43). அப்பாலைக் கோலமாய்க் கோலக் குணக்குன்றாய் (திருகாளத்.உலா 2). நீ போன கோலம் என்ன கோலமோ (பட்டினத்தார்.பா.அந்.14). 5.1.வேடம். கொற்றவை கோலம் கொண்டு (பரிபா.11,100). உள்வரிக் கோலத்து (சிலப்.5,216). ஐயிரண்டாய் அமைந்த கோலத்திலே முளைத்து (சடகோபரந்.40). சகம் தவர் என்னக் கோலம் சமைந்து (சிவதரு.பலவிசிட்.32). பவளா சலத்தின் கோலம் புனைபவ ராரூர்த் தியாகர் (திருவாரூர்க்கோவை 18).திரு நீற்றுக் கோலம் பூண்டு (சிவஞா.காஞ்சிப்பு.தான்.14). நாதங் கடந்தவிறை முன்னிட்ட கோலமாகி (கலா.அம்பிள்.35). 5.2.பொய்யழகு. பூச்சூடிப் பொய்க் கோலஞ் செய்ய வொழியுமோ (நாலடி. 43). 6.1.ஆபரணம். குறங்கினை திரண்ட கோலம் பொறாஅ (சிலப்.30.18). 6.2.மங்கல அணி. குலங் கெழு மகளிர் தங்கோல நீப்பவும் (சீவக.2221). 6.3.அணி. கோல நேர் செய்யார் (ஆசாரக்கோவை 66). எங்கோலந் தீண்ட லினி (புறப்.வெண்.238). தோற்றம் அங்கோலக் காவற் கொடை வேந்தே (நள.440). 7.1.அலங்காரம். கோலஞ் செய் மருப்பு (கலித்.106,26). ஊர் அணி கோலம் (பரிபா.தீர.2,7). ஓவதாள் கோலம் ஒருபொழுதும் (சிறுபஞ்.42). தலைமகன் பரத்தையைக் கோலச் சிறப்புச் செய்தான் (இறை.அகப்.202,19 உரை). சீருலாங் கோதை செய்தார் செப்பினார் வதுவை நன்னாள் (சீவக.1687). திருமண நிறை கோலம் (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ. 263). கோலமுறு குமரனுரு வாய்அன்பர் போற்றியே (கொளஞ்.பிள்.2,5). 7.2.ஒப்பனை. மாதர் கோலத்து வலவையின் உரைக்கும் (சிலப்.5,74). வேசையர்கள் கோலமும் தம் ஒளி வேண்டுவோர் நோக்கார் (ஆசாரக்கோவை 51). கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை (திருமந்.162). போது அவிழ்ந்து கோலம் குயின்ற குழல் (வளையாபதி.3). இது கோலம் செய்யினும் குற்றம் என்று கூறியது (குறள்.1316 மணக்). 8.மா, கற்பொடி முதலியவற்றாலிடுங் கோலம். சிந்துரத்தால் கோலமே புனைந்து (மகா.துறவு 16). ஆன சங்க மிடு மருங் கோலமே (தந்தி.பு.56). கோலம் மூடிய அங்கக் குடத்துஇணை (தேம்பா.1,10,35). சிறையிருந் தோமானாலும் ... வாசற்படியக் கோலம் மற்றோர் மனைபுக்கோம் (மின்.குறம்.ப.71). நிலக்கோல மிட்டார்கள் நிலத்தின் மேல் பூத் தெளித்தார் (பவளக். மாலை ப.65). தரைமெழுகிக் கோலமிட்டு (குமர.மீனா குறம்.25). அமைத்த கோலம் இனித்தது விழியெலாம் (பாரதிதா.2,5,9). கொண்ட வழக்கமாய்க் கோலம் புனைந்து (அவளும் அவனும் ப.107). மங்கை நிண்ணு கோலமிட (தமி.நா.பா.ப.39). 9.கர்ப்பிணி களுக்குச் செய்யும் வளைகாப்புச்சடங்கு. (செ.ப.அக.) 10. பெருந்துன்பநிலை. ஆலக் கோலத்தி னஞ்சுண்டு (தேவா.1,81,3). கோவைகக் கனி பறித்து தின்பமடா மகனே பசிக்கு உண்பமடாசுதனே இந்த கோலத்துக்கோ என்னை நீ ஆக்கி வைத்தாய் சிவனே (இராமநாத. நாட்.அள.ப.473). 11.காரியம். துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங் கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் (பு.ஏற்.கொலோ. எழு.நிரூ.2,15). 12.தொடை. (முன்.) 13.தழுவல். (முன்.) 14.மாதிரி. (முன்.)

கோலம்[2] பெ. 1.முயற்சி. கோலங்கொள் உயிர்களும் (திருவாய்.5,6,10). 2.சிறு நீரோட்டம். கோலம் உறு கோலம் அதில் கோல் வய (வீரர் வீர.விச.11,32).

கோலம்[3] பெ. 1.பன்றி. கேழ றிகழ்வரக் கோலமொடு பெயரிய (பரிபா.2,16). கோலமுடி நெடுமாலொடு கொய்தா மரையானும் (தேவா.1,15,9). பாற்கோலக் குட்டிக்கங் கூட்டினார் (திருப்புலி.வெண்.86). கோலஞ் சூகரமேனங் பன்றியின் பேர் (உரி.நி.70). கொம்புறு கோலம் (திருவிடை.கலம்.59). கோலமாவிளம் கோளரி (செ.பாகவத.8,2,22). கோல மாயவன்றுன் குளப்படி காட்டும் பிறைமருப் போல் (திருவர.அந்.89). கருங்கோலங் கண்ட ஞமலி அன்றோ (திருவாரூர்க் கோவை 445). மன்னங் கோலந் தொடருமோர் தேவ தேவர் (திருக்குற்றா.பு.6,60). கோலத்தினுரையைக் கேளா கோசிகன் (அரிச்.பு.5,3). திறல் கெழு கோலமும் அனமும் (முருகன் பூண்டிப்பு.கடுக்.6,4). 2.முள்ளம் பன்றி. (திவா.) 3.வராக அவதாரம். ஆதித் தனிக்கோல

மானான் (நள.திருமால்.வணக்.) 4.இலந்தையைத் தலவிருட்சமாக் உடைய திருக்கோலந்தா எனும் பாடல்பெற்ற தலம். இலந்தையினேரார் இன்கனி ... கோலம் (அபி.மாலை 906). 5.களம் பெருக்குவதற்குப் பயன்படும் விளக்குமாறு போன்றக்கருவி (இலங்.வ.). 6.தெப்பம். தெப்பம்...கோலம் (அபி.மாலை 1909). கோலம் உறு கோலம் அதில் கோல்வய (வீரர் வீர.விச.11,32). 7.தருப்பைப்புல். கோலப் படுக்கை நிரைத்து (குடந்தையந்.100). 8.பறவை. கொம்பிலாக் கோலக் கோலந் தாங்கி (திருவிடை.கலம்.59).

கோலம்[4] பெ. குரங்கு. (பிங்.)

கோலம்[5] பெ. 1.பாக்கு. தணிவில்பைங் கோல மெங்கும் (மருத.பு.நைமிசா.6). பாக்கு கோலம் (அபி.மாலை 1085). 2.பீர்க்கு. (பிங்.)

கோலம்[6] பெ. விளையாட்டு. அல்லமன்றன் கோலமென் சொல்வேன் (பிரபுலீலை.புரபுதே.73).

கோலம்[7] பெ. செங்கழு நீர். செங்கழுநீர் கோலமுகல் லாரமும் (நாம.நி.363).

கோலம்[8] பெ. 1.சனி. (யாழ்.அக.) 2.பாம்பு. (முன்.)

கோலம்[9] பெ. மிளகு. (முன்.)

கோலம்[10] பெ. 1.ஓராயுதம். (யாழ்.அக.) 2.வினதை நகர். (முன்.)

கோலம் பண்ணு-தல் 5வி. அலங்கரித்தல். (யாழ்.அக.)

கோலம்புனை-தல் 4வி. →கோலம்போடுதல். (முன்.)

கோலம்போடு-தல் 5வி. 1.→கோலங்கொள்ளு-தல்-1. புறவந் திருப்பதியில் பொற்கோலம் கொண்டாரோ (திருஞானசம்பந்தர் திருத்தாலாட்டு.2) 2.தரை முதலியவற்றில் மாமுதலியவற்றால் அலங்காரவரி இடுதல். (செ.ப.அக.)

கோலம்வா-தல் (கோலம் வருதல்) 13வி. ஊர்வலம் வருதல். (வின்.அக.)

கோலம்வை-த்தல் 11வி. வயற்களத்தைக் கோலம் என்கிற விளக்குமாற்றால் சுத்தம் செய்தல். (இலங்.வ.)

கோலமணி பெ. அழகிய நீலமணி. மைவரை யொன்று கோல மணிதயங் கருவி தாழ (சூளா.1665).

கோலமா பெ. →கோலப்பொடி. (செ.ப.அக.)

கோலமாலம் பெ. மலையாமணக்கு. (மலை அக.)

கோலமாறு-தல் 5வி. 1.முன்கொண்ட தோற்றம் மாறுதல். நகுடனுங் கோலமாறினான் (தனிப்பா.தீர.). 2.வேடம் போடுதல். (வின்.அக.)

கோலமிடு-தல் 6வி. →கோலம்போடு-தல்-1. பிரியமுடன் றரைமெழுகிக் கோல மிட்டு (திருவிடை.கலம்.38). கோலமிடுதல் குடைபிடித்தல் (சினேந்.மாலை 458). கோலமிட்டார் கொடி தூக்கி விட்டார் (ஆசிய.ப.16). முத்தாரம்மன் வாசலெங்கும் கோலமிட்டு (திருநெல்.நாட்டுப்.குழந்தைப்.4).

கோலமுத்திரை பெ. வராகமுத்திரை, அனுட்டானத்தில் தரிப்பணம் செய்து எஞ்சிய நீரிலுள்ள அமுதத்தை ஒடுக்குவதற்கான முத்திரை. கோல முத்திரையில் உறைவிந்தமுதம் ஒடுக்கு (நிதி.கள்.246).

கோலமூலம் பெ. திப்பிலிவேர். (யாழ்.அக.)

கோலமெழுது-தல் 5வி. தொய்யிறீட்டல். (முன்.)

கோலரக்கு பெ. →கொம்பரக்கு. (செ.ப.அக.)

கோலரம் பெ. முளை. (சதுரக.)

கோலலவணம் பெ. துரிசு. (வின்.அக.)

கோலவர் பெ. கம்பையுடைய காவல் வீரர்கள். கோலவர் கைதொழக் கோயில் போகி (பெருங்.1,37,1).

கோலவல்லி பெ. ஓர்கொடி. (யாழ்.அக.)

கோலவுணவு பெ. →கோரைக்கிழங்கு. (இராசவைத்.)

கோலவேர் பெ. நிலப்பனை. (மலை அக.)

கோலறை பெ. 1.கூலியாள் வேலை செய்தற்காக அளவு கோலால் அறுதி செய்து கொடுக்கப்பட்ட நிலம். வாணிச்சிக் கிடுங்கோ லறைக்கோ ராளின்றி (திருவாலவா.பு.30,8). கோலறை யடைப்ப தின்றி (திருவாத.பு.4,23). 2.குழித்தரை. (யாழ்.அக.)

கோலறையிடு-தல் 6வி. வேலைசெய்யும் இடங் களைக் கூலியாட்களுக்கு வகுத்துக்கொடுத்தல். மனைகடொறுங்கோலறையிட்டுவேண்டியடைப்பாயென (திருவாலவா.பு.30,6).

கோலன்வல்லி பெ. ஆனைத்திப்பிலி. (சித்.பரி.அக. ப.87)

கோலன்வைப்பு பெ. சிவனார்வேம்பு. (முன்.)

கோலா[1] பெ. 1.பறவைமீன். (யாழ்.அக.) 2.மீன்வகை. (செ.ப.அக.)

கோலா[2] பெ. திப்பலி. (மலை அக.)

கோலா[3] பெ. (இலங்.) ஒருவகைப்பானம். (செ.ப.அக.)

கோலாக்கட்டா பெ. 18 அங்குல நீளம் வளர்வதும் நீலமிடையிட்ட பச்சைநிறமுள்ளதுமான கடல் மீன்வகை. (முன்.)

கோலாகலம் பெ. 1.ஆடம்பரம். கோலா கலமாங் குருகைப் பெருமானோ (நம்.திருத்தாலா.96). பழநி வருகற்பூர கோலாகலா (திருப்பு.142) கூராரும் வேல்விழியார் கோலாகலங்க ளெல்லாம் (பிரபோத.27,14). கோலா கலப்பார்ப் பதியாள் பிள்ளை அனம் போல் நடந்து (திருவாமாத்.பு.பூர்வ.8,16). கோலாகலப் பிரபலயோக மகராசன் (குருகூர்.பிள்.9). கோலாகலப் புலி நான்-கையடக்கங் கொண்டு (திருவிடை.நா.ப.41,23). கோலாகலக் கலப மயிலேறி அரன் முன்பு குவலயம்சுற்றி வந்தாய் (முண்டிநா.பிள்.4,3). கூறுபதமுந் துலங்கக் கோலா கலச் சிகியில் (முசு.நா.நூல்.12). இத்தனை கோலா கலமென் சபைக்கு (மனோன்மணீ.5,3,64). தமிழ்நாடு முழுவதும் ... காமராசர் பிறந்ததினம்

கோலாகலமாக கொண்டாடப்பட்டது (செய்தி.வ.). 2.அழகு. கோலாகலம் பொருந்தும் குன்றக் குடி (குன்றக்.முருக.கலம்.33). கோலா கலமா மயிலூரும் குருந்தே (கொளஞ்.பிள்.10,4). 3.பேரொலி. தாபருங் கோலாகலமாகி வருங்குரை நீர் (கச்சி.காஞ்சிப்பு.பன்னிரு.148). கோலா கலப்புலமை பெருகுசீ பாடியக் கொண்டல் (ஆண்டாள் பிள்.93). 4.கூக்குரல். (பிங்) 5.விலங்கொலி. கழிபெறுங் கோலாகலமே குழுவிலங் கின்னஞ் சத்தம் (உரி.நி.205). 6.குதூகல கொண்டாட்டம். ஏழு நாள் விருந்து கோலா கலத்துடன் செய்து (தனிப்பா.தீர.17). கோலாகலத்துடனே கொணரும் எழில் காதலியை (தெய்வசன.ப.33). 7.ஆரவாரம். குறை யோர்தன் மற்றுள கோலா கலம் (திருமந்.233). 8.சிவரகசியம். (சிவதன்.சருக்கம்.1,33) 9.கலப்புக் கட்டோசை. (பிங். 2118) 10.(இசையி.) தீர சங்கரா பரணம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று.(புதிய இரா.ப.170)

கோலாகலம்பண்ணு-தல் 5வி. ஒழுங்கீனமாய் நடத்தல். (வின்.அக.)

கோலாகலன் பெ. 1. ஆடம்பரத் தலைவன். கோலா கலன்மின்னை யென்மனைக் கேயுறக் கூட்டிடுமோ (கோவை.கோவை 364). கோலா கலன்றன் குடிப்பிறந்தோன் (பந்தனந்.81).

கோலாகாலி பெ. ஆடம்பரமாய் நடப்பவ-ன்-ள். (செ.ப.அக.)

கோலாச்சி பெ. மீன்வகை. (முன்.)

கோலாச்சுறா பெ. மீன்வகை. (முன்.)

கோலாசெராகுட்டி பெ. மீன் வகை. (பரத.வ.)

கோலாஞ்சம் பெ. கலிங்கம். (யாழ்.அக.)

கோலாஞ்சி பெ. 1.அதிகோலம். (முன்.) 2.இடம்பம். (இலங்.வ.) 3.அடுக்கு. (யாழ்.அக.) 4.அணியம். (முன்.)

கோலாட்டம் பெ. 1.வர்ணமிட்ட கோல்களைக் கொண்டு தாளத்திற்கும் பாட்டிற்குமிசையச் சிறுவர் சிறுமியர்கள் தட்டி விளையாடும் ஒரு வகை விளையாட்டு. செவ்வாய்ச்சியர்கோ லாட்டம் (சிவஞா.காஞ்சிப்பு.வாணேச.54). கோலாட்டங்களைப் போடச் சொன்னாய் (சாத்.கும்மி 398). 2.ஐப்பசி கார்த்திகை மார்கழி மாதங்கள் ஒன்றில் கோலாட்டத்துடன் இளம் பெண்கள் கொண்டாடும் ஒரு விழா. (செ.ப.அக.)

கோலாடி பெ. அரசாணை செல்லும் இடம். என் கோலாடி குறுகப் பெறா (பெரியாழ்.தி.5,4,4).

கோலாடு பெ. ஆட்டுவகை. (நாட்.வ.)

கோலாபணி பெ. (இசையி.) நாகநந்தினி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.175)

கோலாமாலாவெனல் பெ. குழப்பக்குறிப்பு. கலியாணத்தைக் கோலாமாலாவென்று நடத்தி விட்டான் (நாட்.வ.).

கோலாரிக்கம் பெ. 1.இருவர் இடும் சண்டை. (செ.ப.அக.) 2.போர்க்கறைகூவல். (யாழ்.அக.)

கோலாரிவண்டி பெ. திருமண ஊர்வல அலங்கார வண்டி. நற்கதிர் கொடிமுடி யிலங்குங்கோ லாரி வண்டில்கள் (முகியித்தீன் பு.982).

கோலாலாம் பெ. கூக்குரல். கோலால மாகிக் குரை கடல்வாய் அன்றெழுந்த ஆலாலம் (திருவாச.12,8).

கோலாவலை பெ. கோலாமீன் பிடிக்கும் வலை. (நாட்.வ.)

கோலாள் பெ. 1.வில் வீரன். கொடியுங் குனிசிலையுங் கோலாளுந் தேரு மடியும் படிவாளி விட்டான் (பாரத வெண்.694). 2.தேர்ப்பாகன். அங்கவன்றன் கோலாளைக் கொன்று (பாரத வெண்.799).

கோலான் பெ. தடி ஏந்தியவன். சுலாக்கோலாற் கானும் (அறநெறி.183).

கோலி[1] பெ. தீப்பலி, மருந்துக் கொடிவகை. கோலி தேட்கடை (திருவ.16,1).

கோலி[2] பெ. குதிரை. கோலியுந் தும்கொடித் தேர் (சங்கர.கோவை 269).

கோலி[3] பெ. மயிர். கோலி என்பது மயிரெனப்படுமே (அக.நி.கோமுதல் 13).

கோலி[4] பெ. பித்தம். (உடற்.சொற்.)

கோலி[5] பெ. சிறு குண்டுவடிவான விளையாட்டுக் கருவி. (செ.ப.அக.)

கோலி[6] பெ. சிற்றழிஞ்சில். (முன்.) 2.புன்குவகை. (முன்.)

கோலி[7] பெ. இலந்தை (ஆசி.நி.132)

கோலிக்கற்றை பெ. சாமரம். (சங்.அக.)

கோலிக்குண்டு பெ. →கோலி-5. ஒரு கோலிக் குண்டைத் தரையில் உருட்டி விடும்போது (செய்தி.வ.).

கோலிக்கொள்(ளு)-தல் 2வி. சேர்த்துக் கொள்ளுதல். (வின்.அக.)

கோலிக்கருவி பெ. நெசவுக் கருவி. கோலிக் கருவி ... என்று ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்கன (தொல்.எழுத்.154 இளம்.).

கோலிகப்பறையன் பெ. மட்டமான ஆடை நெய்யும் பறைச்சாதியான். (முன்.)

கோலிகன் பெ. 1.நெசவுத்தொழில் செய்யும் கீழ்ச்சாதி. (நேமிநா.எழுத்.16 உரை) 2.கோலிகரால் நெய்யப்பட்ட ஆடை. (தொல்.தொல்.114 உரை)

கோலியடி-த்தல் 11வி. கோலியுண்டையால் விளையாடுதல். (செ.ப.அக.)

கோலியப்பறை பெ. →கோலிகப் பறையன். (வின்.அக.)

கோலியள்ளு-தல் 5வி. வாரியெடுத்தல். (இலங்.வ.)

கோலியன் பெ. →கோலிகன். (செ.ப.அக.)

கோலிவா-தல் (கோலிவருதல்) 13வி. சுற்றிவருதல். (நாட்.வ.)

கோலிவை-த்தல் 11வி. கட்டுதல். வெள்ளம் அரு முன்னணையைக் கோலிவைப்போர் காரியங்கள் மிக நன்றாமே (செயங்.சத.54).

கோலிளகுதல் பெ. (செங்கோல் நெகிழ்கை) அரச னிறக்கை.கோலிளகுதல் மங்கல மரபு (சீவக.2146 உரை).

கோலினர் பெ. ஆட்சியாளர். கோலினர்வாய் வஞ்சமிகக் கொல்லாமைக்கு அஞ்சுவனே (தித்தேரி அம்.7க.11).

கோலு-தல் 5வி. 1.1.வகுத்தல். வெள்ளம்வரு முன்ன ணையைக் கோலிவைப்போர் காரியங்கள் ... நன்றாமே (செயங்.வ.54). 1.2.பாத்தி முதலியன வகுத்தல். (செ.ப.அக.) 1.3.திட்டம் வகுத்தல். கோலிப் பதிவிருந்த கொற்றவனே (பெரியதி.தமிழாக்.தனியன்.5). 1.4.வழி வகுத்தல். கோலி னார்குறு கச்சிவன் சேவடி (தேவா.2,8, 9). 2.1.வளைத்தல். திருவில் கோலி ஆர்கலி எழிலி சோர் தொடங்கின்றே (ஐங்.428). பூவுண்ட கண்ணாள் புருவச்சிலை கோலி யெய்ய (சீவக.1965). கோலிய வல்விற் குமரரை மாட்டியும் (பெருங்.1,56,264). முதலோரை அடையக் கோலிவெஞ் சிறையிலிட்டு (இரணியவதைப்.414). வெம் சிலை கோலி (சேர.மும். கோவை 4,3). வனப்ணீரம் தீ எழச் சிலை கோலி (திருவால. 1,9). தொண்டர்களும் மெய்த்திறமை கோலும் படையசுரர் கொற்றமெலாம் (மதுரைச்உலா 97). வயங்க விளாக்கள் பலகோலி (திருக்குடந்.பு.திருநாட்டுப்.76). முழுமதியக் கொற்றக் குடையான் வில்கோலி மலர்வாளி ... சொரிந்தான் (மயிலை.உலா 345). அக்காலத்தை யெமக்குக் கோலி யேபிரித் தருளுதி (ஆளவந்.காஞ்சிப்பு. 540). கோலொடு கோலிய கொல்கரி சாய்ந்துபொர (தேம்பா.2,3,64). 2.2.சுற்றி வளைத்தல். கோலிய கட்டாப்பில் (கூளப்ப.காதல் 78). கோலித் திரியும் பெருச்சாளி தான் ஒத்தைக் கொம்பனைத்தாங்கிக் குலாவி (சின்ன.குளுவ.17). 2.3.வளைத்து பிடித்தல். கோலியேக முதை ஏறல் (நீதிசா.65). 2.4.சூழ்தல். கோலும் மலர் சுனை (பரிபா.20,100). வேள்விக் குண்ட வாரழற் கொழும்புகை கோலுமக் குன்றில் (திருவிளை.பு. நாட்டுச்.48). கோலி வளைக்கும் பலகோடிக்கு வரும் (சேயூர் பிள்.5). காலினில் விலங்கும், பருக்கவே கோலுவீ ராண்டே (முக்.பள்.87). 2.5.சுற்றியமைத்தல். வேழ்விமுதற் குறையாவேலி புறங்கோலி (சீகாழித்.பு. கிளி.3). 2.6.அமைத்தல். அன்பெனும் பாத்தி கோலி (பட்டினத்தார் இடை 10.5). சமயிகள் தங்கள் சித்த விகற்பத்தால் கோலிய அறுவகைச் சமயம் (வைரா.சத. 14). கோலி நாமிட்டதே சட்டமடா (பஞ்ச.திருமுக.135). 2.7.சுற்றுதல். முன்தைக்க வெய்ய சரங்கோலும் (சங்கர.கோவை 119). தடமதில் எரியாற் கோலப் பெற்றவன் (சிவஞா.காஞ்சிப்பு.வாணேச.39). கோலி வந்த பல பிணிகளும் (வேதாளக்.12,1). கிழக்காலேயும் மேக்காலேயும் போயிகோலிட்டு வாங்க தெரியும் (உயிர்த்.ப.33). 3.கைப்பற்றவிரும்புதல். மதிலையம் பதியான் கோலிய மருவலர் கோட்டை கொந்தளத்தைக் காலினால் எத்துங் கட்குஞ்சரத்தான் (சின்ன.குளுவ.9). 4.1.திரட்டி வைத்தல். வெண்கோ வணங்கொண் டொருவெண் டலையேந்தி அங்கோல் வளையா ளையொர் பாகம் அமர்ந்து (தேவா.1,32,3). கோலாப் பிரசமன் னாட்கை (திருக்கோவை 110). பிணத்தினைக் கோலிப் புண்ணீ ராற்றினைப் பெருக்கி யுண்பேய்க் கணத்தினை (திருவிளை.பு.50,38). 4.2.சேர்த்தல். ஆலும்மயிலின் பீலியமண ரறிவில்சிறுதேர் கோலும் மொழிக ளொழிய ... வடிவு முடையான் (தேவா.1, 74,10). 5.1.விரித்தல். ஒண் கதிர் தெறாமைச் சிறகரின் கோலி (அகநா.208,11). இருபாலும் கோலி ... மஞ்ஞை ... ஆட (பரிபா.21,31-32). கணமயில் தொக் கெண்ணுழை யாத்தழை கோலிநின் றாலும் (திருக்கோவை 347). 5.2.வியாபித்தல். கோலிய ஐம்முகன் (திருமந்.708). 5.3.வீசுதல். கண்ணென்னும் மாசாலங் கோலி (சேர. உலா 75). 6.நீர் முதலியவற்றை முகந்து அள்ளுதல். கோலித் தண்ணீர் குடிக்கப்பட்ட ... குடை (கலித்.23 உரை). 7.பற்றிக் கொள்ளுதல். இருநிலம் முழுவதுந் தனதெனக் கோலி (நன்.காண்டிபாயி). 8.ஆலோசித்தல். முற்கோலிப் பாண்டு புத்திரர்க் கோறும் (பாரதம்.3,8,3). எவையும் தன் வடிவாய்க் கோலி (மகா.துறவு 79). 9.1.தியானித்தல். மாலைக் கோலித் திரியும் (அட்டப். திருவேங்.மா.3). 9.2.எண்ணு தல். அநுபவிக்கக் கோலி (திருப்.மூ.பா.5 பத்.6 ப.89). யெழுப்பக் கோலி (திருப்பா. 13). 10.1.தொடங்குதல். பரசுவரூபத்தை நிரூபிக்கக் கோலி (திருவாய்.ஈடு.அவ.). வெஞ்சமர் கோலிய தாமென வன்களி றானவை பாய்மலை வாழ்தேவா (திருவிரிஞ்சை. பிள்.29). கனமனைகள் கோல்பவர்க் கிவை நல்ல சகுனமாம் (கயிலாச.சத.68). 10.2.ஏற்படுத்துதல். கோலிய களத்திடைக் குவிக்கு வீரென (இராவணகாவி.5,5,18). 11.தொடுத்தல். முடிதோன்றத் தோன்றச் சரங்கோலும் (சங்கர.கோவை 63). 12.திருத்துதல், பண்படுத்துதல். கோலிய செய் கன்னலொடும் (தணிகை வெண்.பா.8). 13.விளங்குதல். நீல வாலவட்டத்தினிறங்கொளக் கோலும் பீலிய (சூளா.21). 14.துழாவி எடுத்தல். தருப்பைநுனி கோலியநீர் தனையருந்தி (திருச்செந்.பு.15,29). 15.குழி செய்தல், குழித்தல். உட்கைச் சிறு குடை கோலிக் கீழிருந்து (குறுந்.60,3). 16.உண்டாக்குதல். (இலங்.வ.)

கோலுபட்டை பெ. 1.இறைகூடை வகை. (இலங்.வ.) 2.ஓர்பூட்டை. (யாழ்.அக.)

கோலுமை பெ. தொடக்கம். (வின்.அக.)

கோலூன்று-தல் 5வி. நிலை கொள்ளுதல். வாணி மிதித்துநின் றைவர்கோ லூன்றலும் (திருமந்.2935).

கோலெதிர்கையவன் பெ. காவற்காரன். கோலெதிர் கையவன் றொழுது கூறினான் (சூளா.125).

கோலொளி பெ. விளக்குத் தண்டின்மேல் உள்ள தீபம். கோலொளி கொளைநறை (பரிபா.17,6).

கோலெழுத்து பெ. மலையாள நாட்டில் வழங்கும் ஒருவகை எழுத்து. (செ.ப.அக.)

கோலை பெ. மிளகு. (தைலவ.135,91)

கோலைமகள் பெ. துர்க்கை. கொலை மகளின் கவினை நீடிலலங் கொண்டன (பிரபோத.26).

கோலொற்று-தல் 5வி. அம்பு தொடுத்தல். கோலொற்றக் குனிந்தவாறே (சீவக.797).

கோலோகம் பெ. பசுக்களுக்குரிய விண்ணுலகம். கோலோகம் விட்டிழிந்து (காசிக.விச்சுவநா.8).

கோலோச்சு-தல் 5வி. அரசாட்சி செய்தல். குடிதழீ இக் கோலோச்சும் மாநில மன்னன் (குறள்.544). செற்றந் தீர்ந்து செங்கோலோச்சுதல் (பாரத வெண்.104,6). ஒரு கோலோச்சி உலகாண்ட அரசன் (கம்பரா.1,10,75). ஞால முழுவதுமொரு கோலோச்சி முறைவழா தளித்தான் (நைட.20,5). உலகெலாம் வணங்கும் பொதுவற, தனிக்கோல் ஓச்சிய இறைவனை வணங்க (தேம்பா.1, 2,50). கோலோச்சும் இவ்வரசன் மக்களெனா (இத்தேரி. அம்.3 க.35).

கோலோர் பெ. மத யானையை அடக்கி நடத்தும் குத்துக்கோற் காரர். கோலோர்க் கொன்று மேலோர் வீசி (மதுரைக்.381).

கோலோன் பெ. செங்கோல் அரசன். கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக (மணிமே.1,34).

கோவங்கிழங்கு பெ. கோவையின் கிழங்கு. (நாட்.வ.)

கோவசதி பெ. பீர்க்கு. (தைலவ.)

கோவசூரி பெ. மாடுகளுக்கு வரும் வசூரிவகை. (யாழ்.அக.)

கோவணக்கீள் பெ. கால்களுக்கிடையே கட்டும் சிறுதுணி. கொடிமேல் இடபமுங் கோவணக் கீளும்ஓர் கொக்கிறகும்... என் கண்ணுள்ளப் போதும் வருகின்றவே (சேர.பொன்.அந்.20).

கோவணக்குண்டியன் பெ. →கோவணாண்டி. (வின். அக.)

கோவணச்சீலை பெ. கோவணத்துணி. எல்லாம் வைத்துவிட்டுக் கோவணச் சீலையுடனே உள்ள பெண்டு களிருக்கிற விடத்திலேயிருக்கிற பெட்டியிலே (ஆனந்த. தினசரிச்.3 ப.64).

கோவணத்தான் பெ. கௌபீனம் தரித்தவன், சிவன். பட்டார்ந்த கோவணத்தான் சொல்லேற்றன் என்றென்று நெஞ்சமே (கபி.அந்.83). கோவணத்தான் போர்வையான் (திருக்காளத்.உலா 93).

கோவணம் பெ. 1.கௌபீனம், ஆடவர் உள்ளாடை வகை. கோவண வாடையு நீறுப்பூச்சும் (தேவா.1,7,7). துன்னம்பெய் கோவணம் (திருவாச.12,2). கீளொடு கோவணஞ் சாத்திக் கேடிலா வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனி (பெரியபு.2,2,11). எறிசுடர் மழுவா ளென்னக் கோவணம் யாத்த கோலர் (திருவிளை.பு.நகரச்.86). கந்தனருட் கலைபுனை சேய் துன்னம் பெய் கோவணம் என் கவின் சொற்றொட்டும் (திருவாமாத்.பு.உத்தர. 3,23). எப்பொழுதும் கோ வணத்தான் (திருக்காளத். உலா 93). கோவண மரைநாண் கற்றோய் கொழுங்கலை (சானந்த.பு.4,44). மாமறை தம்மை ... கோவணம் நூபுர மாதியா ... மெய்யணி யாக்கி (சிவஞா.காஞ்சிப்பு. திருவே.73). உறையுளிற் றண்டொடு கமண்டலங் கோவண மரவுரி குலவு (அறு.இலக்.69 பொருள்). ஒரு கோவணத்துக்கும் வழியில்லாமல் (பெண்கல்வி ப.48). 2.சிவத்தலம். கோவணத்து நம்பனையே கூறு (கபி. அந்.83). 3.கல்லழுத்தும் குழிவட்டம். (ஆசி.நி.185)

கோவணவர் பெ. விட்ணு கோயிலில் ஊழியம் புரிந்தவர்களுள் ஒரு வகையினர். (சாச.அக.)

கோவணவன் பெ. →கோவணன்¹. இஞ்ஞின்ற கோவணவன் (திருவிசை.கருவூர்.46).

கோவணன்[1] பெ. (கோவணந்தரித்தவன்) சிவன். (சதுரக.)

கோவணன்[2] பெ. (காமதேனுவைப் பொருந்தியவன்) வசிட்டன். (முன்.)

கோவணன்[3] பெ. கதியற்றவன். அய்யமுறக் கோவண னாக்கி விட்டாள் (மூவரை.தூது 306).

கோவணாண்டி பெ. →கோவணன்³. (செ.ப.அக.)

கோவணி பெ. ஆத்தி. (மூலி.அக.)

கோவத்தி பெ. →கோவதை-2. (செ.ப.அக.)

கோவதை பெ. 1.→கோகத்தி. (யாழ்.அக.) 2.பசுக் கொலை. கொந்தலர்த்தார் மைந்தனைமுன் கோவதை செய்தார்க்கு (பெரியபு.மநுநீதி.34).

கோவம்[1] பெ. 1.ஊழி முடிவில் வரும் வெள்ளநீர், பிரளயநீர். கோவமென்பது புணரிக்கொள்ளை நீரையே (சோலை.குற.107). 2.கோபம். மாநகர் காய்ந்துவெங் கனல்படக் கோவமிக்க நெற்றியான் (தேவா.2,99,6). கோவந் தோன்றிற் றாறையு முயிருணுங் கொடியோர் (கம்பரா.6,27,23). கோவத்தை முனிவு செய்தக் கடவுளர் குரவன் கூறும் (திருவிளை.பு.45,6). கேவ வெங்கனல் கொட்டி (பாத்மோத்.பு.4,24). கோவம் வந்தால் ஆற்றிலே குதிப்பார் (அவளும் அவனும் ப.156).

கோவம்[2] பெ. பொன். (பிங்.1232)

கோவம்[3] பெ. தம்பலப்பூச்சி. கோவத் தன்ன கொங்கு சேர் புறைத்தலின் (சிறுபாண்.71). கோவத் தன்ன குழவிக் கோலமொடு (பெருங்.1,53,158).

கோவர்த்தனகிரி பெ. இந்திரன் சினந்து விடுத்த பெருமழையைத் தடுத்துக் கோக்களையும் கோவலரையும் காப்பதற்காகக் கண்ணனாற் குடையாகத் தாங்கப்பட்டதும் வடமதுரைப் பக்கத்துள்ளதுமான ஒரு மலை, கோவர்த்தன மலை. தனிக்குடையானது கோவர்த்தனகிரி (சரபேந்திர.குற.38 உரை). கொண்டற் குலம் விளையாடிய கோவத்தன கிரியும் (செ.பாகவத.10,5,2). கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்த (கண்ண.திரை.பா.12,37).

கோவர்த்தனதரன் பெ. கிருட்டிணன். (யாழ்.அக.)

கோவர்த்தனம் பெ. →கோவர்த்தனகிரி. கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (பெரியாழ்.தி.3,5,1). கன் மாரியை முன்னங் கோவர்த்தன மேகுடையாக ... தடுத்தான் (பாரதம்.2,1,121). கவுஞ்சங் கோவர்த்தனந்திரி கூடம் (திருவிளை.பு.22,7). தடப்பெரும் கோவர்த் தனங்கரத் தேந்தி (குசேலோ.பாயி.2). 2.மாதுளை. (சித்.பரி.அக.ப.87)

கோவர்த்தனர் பெ. →கோவைசியர். (பிங்.)

கோவரக்கி பெ. வாகை. (சித்.பரி.அக.ப.87)

கோவரகழுதை பெ. கழுதையுங் குதிரையுங்கூடிப் பிறந்த குட்டி. (யாழ்.அக.)

கோவரங்கம் பெ. அரசவை. நான்கு நிறமான கோவரங் கத்தினாலுஞ் செய்தமைந்த (கோலாச.பு.94 உரை).

கோவல் பெ. →கோவலூர். துஞ்சா முழவின் கோவற் கோமான் (அகநா.35,14). கோவல் இடைகழியே பற்றி (இயற் பா.1,86). கோவலுள் மாமலராள் தன்னொடும் ஆயனைக் கண்டமை காட்டும் தமிழ்த்தலைவன் (இராமாநுச.நூற்றந்.10). கோவலையே தெரியுமெற்கு (நாணிக்.ஒருதுறைக்கோவை 11). பூமன் நிருக்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை (பெருந்.88). சீரெளவை யம்மகளிர் செய்திகேட் டக்கோவ லெய்துதிறஞ் ... சொல்வேம் (பாரிகாதை 58,3).

கோவல்நகர் பெ. →கோவலூர். கோவல்நகர் நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற் கிடம்மாமலை யாவது நீர்மலையே (பெரியதி.தமிழாக்.2,4,131).

கோவலகணவாய் பெ. கணவாச்சிப்பிமீன் வகை. (வின்.அக.)

கோவலர் பெ. 1.இடையர், முல்லை நில மாக்கள். பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர் (ஐங்.87). மாலைவாய் கோவலர்வாய் வைத்த குழல் (முத்தொள்.92). கோனுடை யின நிரை காக்குங் கோவலர் (சீவக.1849). கோவலர் கூறுகொண்டெழு கொன்றையந் தீங்குழல் (சூளா.14). கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம்பேணும் காவலர் (பெரியபு.14,12). பின்னிய குஞ்சிக் கோவலர் பயந்த பேதையர் (பாரதம்.2,1,120). கோவலர் வாய்க் குழலோசைக்கு ஆநிரைகள் (திருவரங்.கலம்.95,3). மேலவர் வாயலர் கோவலர் வேயலர் (சங்கர.கோவை 229). கோவலர் சீதஇன்பமோடு இரங்கும் தேனமிழ்தம் ஈகலும் (தேம்பா.1,11,10). கோவலர் வாய்க் குழல்போலக் கேட்டார் (ஊன்று.8,11). 2.ஆயரிடையேவளர்ந்த கண்ணன். மனுமரபினில் காவலர் கோவலர் (முக்.பள்.1,2).

கோவலர்பாடி பெ. ஆயர்பாடி. கோவலர்பாடித்தயிர் நெய் (குசேலோ.541).

கோவலன் பெ. 1.பசுக்களைப் பாதுகாப்பவன். கோவல காவல (பரிபா.3,83). கோவலனாய் மேவி (இரண்டாம் திருவந்.98). குரவை பிணைந்தஎம் கோவலன் ஏத்துவார் (பெரியதி.தமிழாக்.1,8,74). விண்டு வின் இழல் மேவிய கோவலன் (சீவல.கதை 115). 2.கிருட்டிணன். மெய்கரிய கோவலன் (பாரதம்.1,2,1). 3.திருமால். ஆவியினும் அடைவுடையார் அடிக்க மலத்து தருள்போற்றிக் கோவலனான் முகன் எடுத்துப் பாடியே கும்பிட்டார் (பெரியபு.29,170). 4.வைசியன். இச்சியன் சீரகத்தாமன் கோவலன் (நாம.நி.151). 5.சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன். (செ.ப.அக.)

கோவலி பெ. பற்கிட்டுகை. (நாட்.வ.)

கோவலூர் பெ. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ளதும் பழமையுடையதுமாகிய திருக்கோவலூர். முரண்மிகு கோவலூர் நூறி (புறநா.99). பொய்கை வேலிப் பூங்கோவலூர் (திருநெடுந்.6). கொடிக்குல வும்மதிற் கோவலூர் வீரட்ட (கபி.சிவ.இரட்மாலை 34). செழும்பூந் திருக்கோவலூரளவுந்தான் வருகவுட்காதே (பெருந்.1408). திருப்பதிநம் கோவலூர்ப்பட்டர்பிரான் சீர்பதம் (குருகை.). அறிஞன் பூங்கோவ லூர்க்குப் புறப்பட்டான் (பாரிகாதை 580).

கோவலை பெ. ஒரு வகை வலை. (பரத.வ.)

கோவவனிதையர் பெ. கண்ணனோடு விளையாடிய கோபிமார். வசைக் கோவவனிதையர்கள் தரத் தாடல்புரியும் அரி (திருப்பு.158).

கோவளம் பெ. 1.கடற்குள் நீண்ட தரை முனை. (செ.ப.அக.) 2.தரைமுனையிலுள்ள ஊர். (முன்.) 3.ஓர்பட்டினம்.(சிலேடை இலக்.ப.307) 4.சென்னையிலுள்ள ஒரு சுற்றுலாத்தலம். கவர்னர் அதிகாரிகளுடன் ஒரு மணி நேரம் கோவளம் பீச் மற்றும் அருகாமையிலுள்ள கவ்லா பீச் இரண்டையும் சுற்றிப்பார்த்தார் (செய்தி.வ.).

கோவளை பெ. நரிவாழை. (செ.ப.அக.)

கோவற்சை பெ. மலட்டுப்பசு. (யாழ்.அக.)

கோவன் பெ. 1.வசிட்டன். (அக.நி.) 2.சிவன். (முன்.) 3.இடையன். கோவ னிரைமீட்டனன் (சீவக.455).

அன்னை ஈன்ற வேத நாதனைத் தொழ உன்னலாத கோவர் இன்பம் உண்ண உற்று அழைத்தனர் (தேம்பா.1,11,1). கோவர் இசை ஏற்க வரும் (சிலேடை இலக்.ப.307). 4.அரசன். கோவனும் மக்களும் (சீவக. 1842). 5.பத்து அல்லது ஐந்து கிராமங்களுக்குத் தலைவன். (கௌடலீயம் ப.130)

கோவனந்தனன் பெ. விட்ணு. புல்லையின் மருவு மானந்த கோவனந்தனன் (புல்லையந்.81).

கோவா பெ. 1.குடுபிகளின் ஓர் உட்பிரிவு. (தென்.குல. டி.ப.362) 2.ஒட்டுமாம்பழ வகை. (செ.ப.அக.)

கோவாங்கம் பெ. படிதம் என்னும் மாணிக்க விசேடம். கோவாங்கமாகிய நான்கு வகையாயுள்ள மாணிக்க மாலைகள் (கோலாசல.பு.410 உரை).

கோவாங்காடு பெ. வடமேற்கு. (ரா.வட்.அக.)

கோவாங்கு பெ. படிதம் என்னும் மாணிக்கவிசேடம். (சிலப்.14,186 உரை)

கோவாடு-தல் 5வி. அதிகாரம் செய்தல். கோவாடிக் குற்றே வல்செய்கென் றாலும் (தேவா.6,98,10).

கோவாதி பெ. பசு முதலிய விலங்குகள். கோவாதி மாந்தர்க்கு அடங்கிய விதம் என் கொல் (கொலை மறு.7)

கோவார் பெ. வானோர். நின்னாற் பின கொலப்படுவர் அலல்ரோ கோவார் ஆல் என்று (பாரத வெண்.540,3).

கோவாரி பெ. மாடுகளுக்கு வரும் வசூரிநோய். (செ.ப.அக.)

கோவாலவண்டி பெ. →கொல்லாப்பண்டி. (சிலப்.14, 186 உரை)

கோவாவித்திரி பெ. பசுவைத் துதிக்கும் மந்திரம். கோசாவித்திரி முதலிய தோத்திரங்களைச் செய்து (சைவச.பொது.168 உரை).

கோவி[1] பெ. கோபத்தையுடைவ-ன்-ள். புலையனே யாவன் கோவி (சிவதர்ம.சுவர்க்க.விசே.26). கோவியவாவன் (சைவச.ஆசாரக்.128).

கோவி[2] பெ. இடைச்சி. கோவி நாயகன் (பெரியதி.2,1,4).

கோவி-த்தல் 11வி. சினத்தல்.கோவியாவருங் சொல்லுங் கூற்றமே (தேவா.2,27,9). கோவிக்கும் காலனும் முன்வர (திருக்கண்ண.மாலை 12). முத்திக் கொண் டேனைக் கண் சிவந்து கோவித்தாள் (தெய்வச்.விறலி. தூது 302). மாதர் எனைக் கோவித்தாரே (சமுத்திரவி. 79). மந்திரி சொல் மற்றவனும் கேளாமல் கோவித்துக் கண்சிவந்தே (சீவே.சரி.495).

கோவிக்கேவியழு-தல் 1வி. விம்மி விம்மி அழுதல். (ஒலிக்.அக.)

கோவிசந்தனம் பெ. →கோபிசந்தனம். கோவிசந்தனத் தினைக் கோடு நெற்றியில் (சேதுபு.சேதுபல.128).

கோவிசு பெ. முட்டைக்கோசு. (செ.ப.அக.)

கோவிட்டு பெ. பசுச்சாணம். (தைலவ.பாயி.41)

கோவிடம் பெ. அரசன் மாளிகை. கோவிட மாட முபரிகை மேடை கோபுர மரங்கெலாம் (திருவிளை.பு.28,18).

கோவித்தியர் பெ. முல்லை நிலமகளிர். முல்லைக்குக் கோவலர் ... கோவித்தியர் ஆய்ச்சியர் பொதுவியர் (தொல்.பொ.20 நச்.).

கோவிதம் பெ. கலையறிவு. (யாழ்.அக.)

கோவிதன் பெ. அறிஞன். (முன்.)

கோவிதாரம் பெ. 1.காட்டாத்தி. குற்றாலம் கோவி தாரம் சமருகம் ... வரையாத்தி நீழல் (திருக்குற்றா.பு.10,10). 2.குரா மரம். துணர்ப்பூங் குராமரமாம் கோவிதாரம் (உரி.நி. 106). கோவிதாரம் குரவம் ... கோட்டமாம் (நாம.நி.300).

கோவிந்தக்கொள்ளி பெ. கோவிந்தசத்தமிட்டு அநாதப்பிணத்துக்கிடுங் கொள்ளி. (செ.ப.அக.)

கோவிந்தசதகம் பெ. நாராயணபாரதியார் இயற்றி யதும் ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு பழ மொழியைக் கொண்டு கோவிந்தனே யென்று முடியப்பெறுவதுமாகிய ஒரு சதகநூல். (முன்.)

கோவிந்ததன்யாசி பெ. (இசையி.) இல தாங்கி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.228)

கோவிந்தநாராயணி பெ. (இசையி.) இராமப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.207)

கோவிந்தம் பெ. பன்றிக்கிழங்கு. (சித்.பரி.அக.ப.87)

கோவிந்தம்போடு-தல் 6வி. கோவிந்தா என்று ~~சொல்லிக் கையால்~~ வணங்குதல். ஆயிரம் கோவிந்தம் போரட்டாறும் அமுது படைக்கிறவனுக்குத் தெரியும் (என். பழ.தொ.2345).

கோவிந்தர் பெ. முல்லைநிலமாக்கள். (திவா.)

கோவிந்தராயன் பெ. தில்லைத் திருச்சித்திர கூடத் திருமால். தில்லையம் பதிக்கே ... வயங்கு கோவிந்த ராயன் (வரத.பாகவதம்1,69).

கோவிந்தன் பெ. திருமால். கோவிந்தன் படியிடந் தோன் ... கேசவன் (உரி.நி.15). குலம் புரந்தளித்த கோவிந்தன் கனக்கவே (செ.பாகவத.6,4,16). கோவிந்தன் முகில் வண்ணன் (நாம.நி.46). கொண்டல் மேனியிற் கோவிந்தனீடுக் கொண்டு நின்றிடு கொள்கை (நகுல.பு. நகரப்.19).

கோவியர் பெ. 1.ஆயர்பாடிப் பெண்கள். கருந்துகிலக் கோவியரைக் கொள்வாய் (கு.சோ.உலா 507). கோவியர் பூந்துகில் கொண்ட வண்ணமும் (செ.பாகவத.378). சுக குளாங் கோவியர் (அழகர் கலம்.1,2). குருந்திடைக் கோவியர் (ஆதி.வ.கோவை 17). கோவியர் கலை கவர்ந் தொளிக்கும் தேவன் (புல்லையந்.81). கோவியரைக் கூறை கொண்ட கோ (திருவேங்.வண்டு.தூது 180). கோவியரோடுங் குரவை கோத்தான் (தென்பு.மணி.உலா 252).

கோவியர் தேற்ற உத்தவன் போக்கி (குசேலோ.689). 2.ஒருவகை சாதிப்பிரிவு. (இலங்.வ.)

கோவியல் பெ. அரசியல். காணந்தோறுங் கோவியல் கண்ணன் (குசேலோ.397).

கோவிரசம் பெ. ஆனிலை. (யாழ்.அக.)

கோவிரம் பெ. கோபுரம். கருங்கல்லுக் கட்டிடங்கோ களசமுள்ள கோவிரங்கோ (கொங்கு.நா.பா.2 ப.328).

கோவிருசம் பெ. எருது. (யாழ்.அக.)

கோவிருந்தம் பெ. ஆன்கூட்டம். (முன்.)

கோவில் பெ. இறைவழி பாட்டிற்கென தெய்வங்கட்குக் கட்டப் பெறும் ஆலயம். கோவிலும் கட்ட வில்லை (திருவேங். திருப்பா.54). மகாநாட்டுக் கோன்சேரிலே மூன்று கோவில் பாதிரிகள் கூடினார்கள் (ஆனந்த.தினசரிச்.3 ப.62). தேவதலம் நிலையம் ... கோவில் (நாம.நி.492). காணாத கோவிலுக்கு காணிக்கையனுப்பி வைத்தார் (பவளக்.மாலை ப.28). ஒற்றைக் கொம்பனைத் தாண்டவ ராயன் உள்ளூர்க் கோவிலுக் குள்ளே யடைத்தான் (முக்.பள்.7,3). என்னுடைய கோவிலியே தையலரை வையாமல் (புலந்.மாலை ப.87). மின்னுலவு கோவில் (பஞ்ச.திருமுக.1382). கோவிற் காக்கங் குலவு கோபுரம் (அறு.இலக்.108 அணி). கோவாழும் இல்லொன்றே கோவிலாம் (பாரதிதா.மூன்.திராவிடர்.ப.168). கோவில் முழுதுங் கண்டேன் (மலரும் 37). இறைவன் கோவில் களை நாடினேன் (கண்ண.திரைபா.2,18). 2.அரண்மனை. (யாழ்.அக.)

கோவில்மணி பெ. இட்டலிங்கம். கோயில் மணிவிளக் காமே (திருமந்.820).

கோவில்வாசல்மறியல் பெ. நாட்டுக்கோட்டைச் செட்டிகள் கோயிலதிகாரியை முன்னிட்டுக் கொண்டு நடத்தும் பஞ்சாயத்து வகை. (செ.ப.அக.).

கோவில்வீடு பெ. 1.வீட்டிலமைந்த குல தெய்வங் களின் கோயில். (முன்.) 2.கோயிலுக்குத் தருமமாக விடப்பெற்ற வீடு. (முன்.)

கோவிலங்கு பெ. சிங்கம். கோவிலங்கு பொர வஞ்சுமோ (பாரதம்.5,4,122).

கோவிலன் பெ. கணவன். (மே.தமி.நாட்.ப.224)

கோவிலார் பெ. இலங்கை வாழ் முக்குவர் என்ற இனமக்களின் ஒரு பகுப்பினர். முக்குவக் குடிகள் தம்முன் நிற்கும் ... கோவிலார்கள் (நீரரர்நி.1,7).

கோவிலாழ்வார் பெ. →கோயிலாழ்வார். (செ.ப.அக.)

கோவிற்குடியாள் பெ. சங்கூதும் பணிசெய்வோன். (வின்.அக.)

கோவிற்புறா பெ. மாடப்புறா. (செ.ப.அக.)

கோவிற்றுறையார் பெ. கோயில் வேலைக்காரர். (முன்.)

கோவின்மை பெ. →கோயின்மை. கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ (யாப்.விருத்தி.22 உரை).

கோவினான் பெ. பெரிய மனிதன். கோவினார் செயும் கொடுமையை மடித்தேன் (பெரியதி.தமிழாக்.1,6,58).

கோவினீர் பெ. கோமயம். (வைத்.சத.ப.77)

கோவுகந்தம் பெ. தாலமப்பாடாணம். (யாழ்.அக.)

கோவூர்கிழார் பெ. கடைச் சங்கப் புலவருள் ஒருவர். (புறநா.)

கோவூர்தி பெ. (இட்ப வாகனத்தை உடைய) சிவபிரான். கோவூர்தியடிக் குளமேவல் செய ... ஓர் குடை கொண்டு புரந்தருணாள் (சீகாழித்.பு.புறவ.4).

கோவெனல் பெ. 1.இரங்கற்குறிப்பு. (யாழ்.அக.) 2.பேரொலி செய்தற் குறிப்பு. கூருந் துயரினுடன் வீழ்ந்து கோகோ வென்று கோச்சபையிற் சோ ருங்கொடி (பாரதம்.2,2,231). மதுரையில் முன் வரு சமண மத மகளிர் கோவென்று மண்ணில் உருளப் பணித்தாய் (பாண்டி நா.பிள்.10,4).

கோவே கோவேயெனல் பெ. இரங்கற் குறிப்பு. கோவே கோவே யென்றரற்றி (ஞான.உபதேசகா.2475).

கோவேந்தன் பெ. 1.மன்னர்க்கு மன்னன். கோவேந்தர் தம்மை ... சிந்தித்தான் (நற்.55). 2.அரசன். சேரலரைக் குறைகூற வைத்திடுவார் கோவேந்தர் (மேழிவி.159). 3.கொங்கு வேளாளர் குலப்பிரிவுகளுள் ஒன்று. நலமிகும் கோவேந்தர் ஓதாளர்குற (கொங்குவே. வர.ப.200).

கோவேள் பெ. குயவர். இருங்கோ வேட்களும் செம்பு செய்ஞ்ஞரும் (மணிமே.28,34).

கோவேறி பெ. →கோவூர்தி. கோவேறி கோபமோ (அரி. வெண்.137).

கோவேறுகழுதை பெ. (அரசர் ஏறும் வாகனம்) கழுதைவகை. பிறவாவன கோவேறு கழுதையுஞ் சிவிகையும் முதலியனவாம் (தொல்.பொ.212 நச்.).

கோவை பெ. 1.கோக்கை. கோவை யார்வடக் கொழுங் கவடு (கம்பரா.வரைக்.1). 2.கோர்வை. தொகுப்பு திருப் பணிக்கோவை (கோ.பெ.சி.பா.1229). 3.கொடிவகை. கோவை வந்தாண்ட செவ்வாய்க் கருங் கண்ணி குறிப்பறியேன் (திருக்கோவை 200). கோவையின் பழத்தினை யொத்த திருவாய் மலரினை யலர்த்தி (கோலாசல.பு.237 உரை). தேனிரசக் கோவையிதழ் (திருப்பு.593). கோவை இலை மேலே கொள்ளும் பனிநீரே (தமி.நா.பா.ப.284). 4.வரிசை. ஒரு வழி முடிந்த பொருளை ஓர் உபகார நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது சார்பு நூல் (இறை.அகப்.13,2 உரை). 5.தொடர்ச்சி. கோவாக் குதலை (நம்.தொகை 2). 6.தொடர். கோத்த கோவை நன்றாயினும் தகுவதோ குருகுலந் தனக்கு (பாரதம்.சூதுபோர்.64). 7.ஒழுங்கு. பன்னுமசதி நன்றி பாராட்டிக் கோவை நூல் சொன்னாளே யௌவை (சோமே.வெண்.11). கொன்றை பூத்த தங்கக் கோவை

தென்றவால் ஆடும் (பாரதிதா.குயில்.ப.24). 8.நிரை. (யாழ்.அக.) 9.தொகுதி. துடி வைத்து உழும் ஏர்க் கோவை வைத்து (குருகூர்.பிள்.61). 10.ஒன்றன் பின் ஒன்றாய் தொடர்ந்து வரும் நிலை. (மேலை.அக.ப.21) 11.கோத்த வடம். மையில் செந்துகிர்க்கோவை (கலித்.85,4). செயத்தகு கோவையில் சிறுபுறம் மறைத்து (சிலப்.6, 102). காசணி கோவைகள் கனக மாலிகை ... தூக்கினார் (ஆளவந்.காஞ்சிப்பு.1144). மாலை போன்றவை கோலம் கோடலும் கோவையின் கோப்பும் (மணிமே.2,28). கோவை அடைவெ குரோங் சிரோங் கென்றிட்டு (திருமந். 1314). குருமணிக் கோவை யுங்குளிர் பொற் குன்றமும் (சூளா.1722). கோவை நித்திலக் கொற்றவெண் இடை மனு வேந்தன் (செ.பாகவத.579). இலந்தை மரம். மா, மகிள், பலவு, சுள்ளிகள், கோலைகள், சந்தனம் ... தொகுக்கும் வண்ணமே (தேம்பா.1,1,37). திருக்கோவையார் வைத்த வருளாற் கோவை வாதவூரன் புகலப் புத்தகத்திற் றீட்டும் புலியூர் (திருப்புலி.வெண்.36). சங்கரமூர்த்தி கொண்ட கோவையொப்பாய் (சங்கர.கோவை 256). 12.வளை. (ஆசி.நி.183) 13.அகப் பொருள் இலக்கணத்தைத் தழுவி கட்டளைக் கலித்துறையில் நானூறு செய்யுள் கொண்டதாகச் செய்யப்படும் நூல், அகப்பொருட் கோவை. கோவை என்பது கூறுங் காலை ... முந்திய கலித்துறை நானூ றென்ப (பன்னிரும்பா. 22). குறையாத தமிழ்க் கோவை தம்பெயரால் குலவும் வைக முறையாலே (பெரியபு.49,1). மடல் பரணி கோவையார் (திருப்பு.53). கோவைக்குப் பேறுடனே வாக்குதவும் ஐந்து கர வாரணமும் (திருவாரூர்க் கோவை காப்பு). சரம் வெண் நித்திலக் கோவை நன் மதாணி ... எழில் உருப்பிடை கவின (சானந்த.பு.4,14). கடுத்துவர்த்த தேனுங் கடும் பிணிதீர்த் தின்பம் கொடுத்தது போல் யானுரைத்த கோவை யெடுத்துணர்ந்தோ (பெருந். 2067). அத்தர் கையாலெமுத உமை விளக்கேந்த வரதர் ஓரானே கூறும் கோவை (செயங்வ.77). 14.சிவபெருமாள். குன்றுவளை மலர்க்கரத்துக் கோவையும் நின்னையு மதியாது (கயற்.மாலை அங்மயற்.மாலை 4). 15.கோவைக்கனி. கோவை வாய்க்குழலங்குளிர் கொம்பனாள் (சூளா.148). கோவை குங்குமம் கஞ்சில் கோவாங்கு குணமாம் (கல்.47,38-39). கோவையும் அன்ன செவ்வாய் நவ்வி (அம்.கோவை 117,3). கோவைவாய்ப் பரவையார் தாம் மகிழும் படி கூறி (பெரியப்பு.29,24). கோவை யமுத்தையேன் (சித். மடல் 90). கோவைக் கனித்துவர்வாய்க் கோதை (மதுரைச். உலா 406). கோவை வா யணங்கைச் செவ்வேற் குமரனை மூத்தோன்றன்னை (திருச்செங்.பு.3,8,32). கோவை வாய் முத்தம் அருளே (ஆண்டாள் பிள்.60). கோவை போல் வாய் திகழ (திருஇலஞ்சி.உலா 144). கோவை படர்ந்திட்ட கொய்யாப் பழந் தரும் தோட்டம் (தமிழ.கத்தி ப.42). கோவைபோல் இதழைக் கண்டேன் குங்குமச் சிமிழைக் கண்டேன் (கண்ண.திரை.பா.2,95). 17.முன்னாளில் வழங்கிய பொன் நாணயம். (சாச.அக.)

கோவைக்கலித்துறை பெ. (யாப்.) ஒவ்வோரடியிலும் முதற்சீரும் இரண்டாஞ் சீரும் வெண்டளையால் வந்து இறுதி சீர் கூவிளங்காய் கருவிளங்காய் என்பவற்றுள் ஒன்றைப் பெற்று நேர்முதலாயின் பதினாறும் நிரை முதலாயின் பதினே முமாகிய எழுத்துகளைப் பெற்று வருவது. (வீரசோ.122).

கோவைக்கீச்சான் பெ. ஒருவகை கடல்மீன். (செ. ப.அக.)

கோவைசியர் பெ. பசுக்களைப் பரிபாலனஞ் செய்து வாழும் வைசிய வகையார். ஆசுரத்திற் கோவைசிய ரணங்காரை மணஞ்செய்தான் (திருக்குற்றா.பு.12,23).

கோவைசூரி பெ. →கோவசூரி. (செ.ப.அக.)

கோவைத்தரளம் பெ. முத்துமாலை. கோவைத்தரளங் கொட்டையொடு துயல்வரும் (பெருங்.1,57,55).

கோவைத்தாலி பெ. கோத்த தாலி. நீலவடக் கல்லுடன் கோவைத் தாலி (முக்.பள்.8,11-12).

கோவைத்துறை பெ. தலைவனுந்தலைவியுங் களவிய லானடக்கு மொழுக்கத்தைக் கூறும் கோவை நூலில் அமைந்த அகப்பொருட்டுறை. (யாழ்.அக.)

கோவையாணி பெ. கைமரங்களை இணைக்கும் முளை பிணையலாணி. (வின்.அக.)

கோழ் பெ.அ. 1.செழிப்பான கோழிலை. கோழிலை வாழை (அகநா.2). கோழிண ரசோகம் வாசம் உமிழ்தர (திருவிளை.பு.5,117). குலுங்கு வாழையின் கோழிலை (திருச்செந்.கலம்.29). 2.வழுவழுப்பான. கோளி யாலமுங் கோழரை மரங்களும் (நீல.32). மறிக் கோழ் ஊன் துவை (ஞானாமிர்.43,14). வெண்பொனாற் கோழரை குயின்ற பூகம் (திருவிளை.பு.திருமணப்.65). 3.மிகுந்த. தகளிவாய்க் கொழுஞ்சுடர் தனித்துக் கோழிருண் நிகளவாய்ப் பிளந்தகஞ் சுடர நிற்குமே (சூளா.416).

கோழக்குறிஞ்சி பெ. (இசையி.) நீதிமதி என்னும் இராகத்தின் இளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.222)

கோழக்கௌத்தி பெ. கௌுத்தி மீன்வகை. (பரத.வ.)

கோழம் பெ. சங்கபாடாணம். (யாழ்.அக.)

கோழம்பம்¹ பெ. பாடல் பெற்ற சைவத்திருத்தலம். கொன்றை வார்சடை முடியரைக் கோழம்பத் திறைஞ்சி (பெரியபு.28,432). ஏத்தும் கோழம்பம் வாழ்கருணைக் கொண்டலே (திருவருட்பா 1962,100).

கோழம்பம்² பெ. குழப்பம். கொடிராகில் கோழம்பமே (பெரியாழ்.தி.3,4,5).

கோழம்பர் பெ. கழாயர், கழைக்கூத்தர். கோழம்பர் என்பது கழாயர் ஆகும் (அக.நி.கோ முதல் 15).

கோழரை பெ. வழுவழுப்பான மரத்தினடி. கொழுவிய அரை கோழரை மணிம்மடல் கூர்ங்கல் நெற்றி (சீவக.147). அரத்தவாய்க் கொம்பனார் கொடுத்த முத்த நீரவாய கோழரை (சூளா.131). கோழரை மரங்களும் குழுமி (நீல.32). கோழரை குயின்ற பூகம் (திருவிளை.பு. திருமணப்.65). கோழரை யரம்பை (சீகாழித்.பு.திருநகர. 11). கோழரை யகிலுஞ் சந்து (திருக்குடந்தைப்பு.38,11). கோழரைச் சண்பகச் சோலைசூழ் புதுவையாய் (ஆண்டாள் பிள்.61). கரும்பின் வாய்த்த கண்டிரன் முத்தமொடு கோழரைக் குங்கும (சொர்ண.பிள்.9,4). கோழரைத் தனிமா (சிவஞா.காஞ்சிப்பு.தழுவ.299). கருணை யொரு கோழரையாய் (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய்.232).

கோழி பெ. 1.பறவை வகை. கோழி கூகை ஆயிரண் டலல்லவை (தொல்.பொ.600). குக்கூ என்றது கோழி (குறுந்.157). கோழியும் நாயும் புகல் இன்னா (இன்.நாற்.2). கம்புட் கோழியும் ... கானக் கோழியும் (சிலப்.10,114,116). விட்டில் விளக்கத்திற் கோழி போன்றேன் (தேவா.4,31,5). கோழி குரலடைத்த தோவென்னும் (நள.108). பாறையினுங் கோழி கிழிக்கும் பொலியைக் கிளறும் (ஒழிவி.3,22). குப்பை கிண்டும் கோழி என்பதைப் புதுக்கினாள் (மூக்.பள்.94, 6). வல்லிரவு விடிவதெங் கேகோழி எங்கே மகிழ்ந்துகூ விடுதல்என்ன (குமரே.சத.68). செழுங் கோழிக் கொடியுடைய கொற்றவனாம் (மேழிவி.14). 2.சேவல். கோழிவெல் கொடியோன் (சேந்.திருவிசைப்பா 3,3). 3.சண்முகற்கொடியோன். (போகர் நி.11) 4.கோழி-யானையை வென்றதாகக் கூறப்படும் இடமும் சோழர் தலைநகராகிய உறையூர். கோழி உயர் நிலை மாடத்து (புறநா.67,8). கூட்டினுள் இருந்த மற்ற கோழிகள் பிறப்பு உணர்ந்து (யசோதர.254). மேற்சேக் கோழி யலைத்தது (தொல்.சொல்.49 சேனா). பொன்னிக் குளிர்புனற் கோழி வேந்தும் வடபுலத் தரசர் யாரும் (திருவிளை.பு.11,17). வஞ்சிக் கிறை கோழிக் கிறை மதுரைக் கிறை (திருச்செங்.பு.3,22,13). கோழிக் குலோத்துங்க சோழனை (குலோத்.கோவை காப்பு.). தெள்ளுதமிழ் கொல்லிக்கும் வஞ்சிக்கும் கோழிக்கும் கூடற்கும் (சிறுபுஉலா 121). கோழி மீதினில் இருந்தனன் (செவ்வந்தி.பு.9,71). குறைவிரிற் புவிக்கந்நாளிற் கூவிடா திருக்குங் கோழி (ஆளவந்.காஞ்சிப்பு.1013). அப்பகல் நாழிகை யிறவாமைக் கோழியுள்வென்று கொண்டும் (பெருந்.889). சென்னியனீகத்தை மோதிச் சிதைத்ததோர் கோழி (முருகேச.வெண்.50). கோழி என்பது உறையூரின் பெயரும் ... ஆகும் (சேரன்வஞ்சி ப.174). 5.ஆண்டலைப்பறவை. (வடநி.614) 6.விட்டில் விளக்கத்திற் கோழிபோன்றேன் (தேவா.52,35) 7.→கோழியவரை.(செ.ப.அக.) 8.வெருகங்கிழங்கு. (மலை அக.) 9.பன்றிமோந்தான்கிழங்கு. (முன்.)

கோழிக்கண் பெ. குன்றிமணி. (சித்.பரி.அக.ப.87)

கோழிக்கரணம் பெ. (சோதி.) கரணம் பதினொன்றனுள் சுக்கிலபட்சத்து சதுர்த்தி, ஏகாதசி கிருட்டினபட்சத்து திருதியை, தசமி இவற்றின் பிற்பாதியும் சுக்கில பட்சத்து அட்டமி, பூர்ணிமை, கிருட்டின பட்சத்து சப்தமி, சதுர்த்தசி இவற்றின் முற்பாதியுமான காலம். (யாழ்.அக.)

கோழிக்கல் பெ. 1.ஈரல்கல். (போகர் நி.33) 2.குறுஞ் சிலைக்கல். (வின்.அக.)

கோழிக்காசிரைக்கீரை பெ. உமரிக்கீரை. (செ.ப.அக.)

கோழிக்காமம் பெ. →கோழிப்போகம். (முன்.)

கோழிக்காரம் பெ. 1.கோழிக் கூட்டிலிருந்து அள்ளப் படும் காய்ந்த மலங்கள். (வட்.சொ.வி.123) 2.கஞ்சாப் பயிருக்கு உரமாகும் கோழி யெரு. (இலங்.வ.) 3.கோழி மலம் சேர்ந்து செய்யும் மருந்து. கோழிக் காரமில் கூட்டிடு (இலக்க.முதல்.60). 4.மருந்தாக உட்கொள்ளுங் கோழியாணம். (யாழ்.அக.)

கோழிக்கால்[1] பெ. 1.→கொடியரசு. (மலை அக.)

கோழிக்கால்[2] பெ. நொண்டியடித்து விளையாடும் சிறுவர் சிறுமியர் விளையாட்டு வகை. (த.நா.விளை. ப.274)

கோழிக்கால்[3] பெ. கோழிக்கால் போன்ற அடையாளக் குறிவகை. (செ.ப.அக.)

கோழிக்கால்கோரை பெ. பயிரோடு வளரும் புல்வகை. (தொ.வ.)

கோழிக்காற்புல் பெ. கோழிக்கால்கோரை. (வின்.அக.)

கோழிக்கிறை பெ. கோழிக் கொடியையுடைய முருகன். கோழிக்கிறை தன் தாரை வரை (சிலையெழு.42).

கோழிக்கீரை பெ. பருப்புக்கீரை. (பதார்த்த.604)

கோழிக்குடாப்பு பெ. →கோழிக்கூடு-1. (நாட்.வ.)

கோழிடக்குடாப்பு பெ. →கோழிக்கூடு-1. (செ.ப.அக.)

கோழிக்குடி பெ. அசோகு. (செ.ப.அக.)

கோழிக்குடில் பெ. →கோழிக்கூடு-1. கோழிக்குடில் களில்கோழிகள் இலையுதிர் காலத்தில் ஒவ்வோர் இடமாக இட்டுச் செல்லப்படுகின்றன (விலங்கி.ப.126).

கோழிக்குரல் பெ. →கோழிகூவுநேரம். (யாழ்.அக.)

கோழிக்குறும்பான் பெ. கோழிக்கீரை. (சித்.அக.)

கோழிக்கூட்டுப்பழம் பெ. வாழைப் பழவகை. (வின்.அக.)

கோழிக்கூடு[1] பெ. 1.கோழியை அடைத்துவைக்கும் இடம். (நாட்.வ.) 2.கேரளநாடு. மத்திரம் கோழிக்கூடு திரி கூடம் (வருணா.குற.86). 3.ரசத்தாளி வாழைப்பழம். (கோவை வ.)

கோழிக்கூடு[2] பெ. 1.ஐயனார்கொடி. (பிங்.118) 2.முருகன் கொடி. (யாழ்.அக.) 3.கோழிமுளையான். (மூன்.) 4.→கோழியவரை. (மலை அக). கோழியின் வடிவத்தை எழுதிய கொடி. கோழிவெல் கொடியோன் (சேந். திருவிசை.3,3). ககன வளாகத்து அளவிய கோழிக் கொடிவளர் கம்பத் தம்பம் (திருச்செந்.கலம்.7,14). கோரந்தருமயில் வாகன கோழிக் கொடியுடைய யோற்றி (திருச்செங்.பு.3,21,19).

கோழிக்கொடியோன் பெ. 1.ஐயனார். (பிங்.117) 2.(கோழியைக் கொடியிற் கொண்டோன்) முருகக் கடவுள். கோழிக் கொடியோன் தன்தாதை போலும் (தேவா.6,89,2).

கோழிக்கொண்டை பெ. 1. சாவற்சூட்டுப்பண்ணை. (மலை அக.) 2.காதில் உள்ள ஒரு பகுதி. (மருத். கலைச்.அக.ப.62)

கோழிக்கொண்டைச்செடி பெ. கோழிக் கொண் டையைப் போன்று இருக்கும் ஒரு வகைச் செடி. (கலைச்.அக.ப.2).

கோழிக்கோடு பெ. கேரளத்திலுள்ள ஓரூர். வடக்குத் திசை பழனி வான்கீழ் தென் காசி குடக்குத் திசைகோழிக் கோடாம் (பெருந்.2091).

கோழிக்கோன் பெ. சோழன். சென்னி கிள்ளி ... கோழிக் கோன் (நாம.நி.147).

கோழிகிண்டு-தல் 5வி. உருத்தெரியாதபடி எழுதுதல். (நாட்.வ.)

கோழிகூவல் பெ. →கோழிகூவுநேரம். (யாழ்.அக.)

கோழிகூவுநேரம் பெ. விடியற்காலம், காலை 4 மணி முதல் 5 மணி வரை. (நாட்.வ.)

கோழிச்சாரம் பெ. மாகாளிக்கிழங்கு. (சித்.பரி.அக. ப.87)

கோழிச்சிலைநாகம் பெ. கூடலைக்கல். (போகர் நி.33)

கோழிச்சூடன் பெ. 1.→கோழிக்கொண்டை-1. (இலங்.வ.)

கோழிச்செள் பெ. கோழியின் மேல் இழையும் ஒரு சிறுபூச்சி. கோழிச்செள் இரக்கிறது மேலெல்லாம் இழைகிறது (நாட்.வ.).

கோழிச்சேவல் பெ. ஆண்கோழி. கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும் (சிலப்.14,10).

கோழிடவேந்தன் பெ. சோழன். (பிங்.747)

கோழித்தலைக்கந்தகம் பெ. வைப்புப்பாடாண வகை. (வின்.அக.)

கோழித்திருநகர் பெ. →கோழி-3. கல்லரணக் கோழித் திருநகரக் கொற்றவற்கு (கு.சோ.உலா 297).

கோழித்தூக்கம் பெ. 1.நல்ல உறக்கமில்லாது சிறிதளவு அயர்வதாகிய தூக்கம். (நாட்.வ.) 2.கிடை காவல் முதலிய பணியில் இருப்போர் சிறிது நேரம் ஒரு கம்பை ஊன்றியோ முழங்காலைக் கட்டிக் கொண்டோ நின்றோ அல்லது இருந்தோ தூங்கும் அரைத் தூக்கம். (ரா.வட்.அக.)

கோழிநாமத்தரவு பெ. குக்குட சர்ப்பம். அரிகுரற் கோழி நாமத்தர விவட் கடித்ததாக (சீவக.1755,199).

கோழிநூல் பெ. கோழிகளின் போர்த் திறங்களைக் கூறும் நூல். (புற.வெண்.12 வென்றி.ப.6 உரை)

கோழிநெஞ்சு பெ. அஞ்சிநடுங்கும் மனம். (யாழ்.அக.)

கோழிப்பசளை பெ. உமரிக்கீரை. (செ.ப.அக.)

கோழிப்பட்மம் (கோழி பட்மம்) பெ. கோழி முட்டைக் கருவினின்று செய்யும் பட்மம். (யாழ்.அக.)

கோழிப்பண்ணை பெ. கோழிகளை வளர்க்குமிடம். (கலைச்.அக.2 ப.111)

கோழிப்பறவை பெ. கோழி பறக்குந் தூரவளவு. (இலங்.வ.)

கோழிப்பாம்பு பெ. குக்குடசர்ப்பம். (மேருமந்.479 உரை)

கோழிப்பிராணன் பெ. சத்தியற்றவ-ன்-ள்-து. (செ.ப. அக.)

கோழிப்புடம் பெ. →குக்குடபுடம். (மூலி.அக.)

கோழிப்பூ பெ. கோழியின் தலைச்சூட்டு. (வட்.வ.)

கோழிப்பூண்டு பெ. குப்பைமேனி. (சித்.பரி.அக.ப.87)

கோழிப்போகம் பெ. விரைவில் இந்திரியக்கலிதம் உண்டாம்புணர்ச்சி. (செ.ப.அக.)

கோழிபட்மம் (கோழிப்பட்மம்) பெ. கோழிமுட்டைக் கருவினின்று செய்யும் பட்மம். (யாழ்.அக.)

கோழிமன் பெ. உறையூர்க்கு அரசன், சோழன். கோழிமன் தொடுகழல் வீர சோழன் (கல்.கலைச். அக.ப.164).

கோழிமாநகர் பெ. உறையூர். கோழி மாநகர் கண்டதுங் கூறுவாம் (செவ்வந்தி.பு.9,1).

கோழிமீன் பெ. பதினெட்டங்கல நீளமும் கருநிற முள்ள கடல் மீன்வகை. (பாரத.வ.)

கோழிமுட்டை பெ. பூச்சியம், வட்டவடிவு. என்னைக் கொஞ்சாதே கோழி முட்டைக் கண்ணாலே (கண்ண. திரை.பா.1,224).

கோழிமுட்டைத்தயிலம் பெ. →கோழிமுட்டைத் தைலம். (யாழ்.அக.)

கோழிமுட்டைத்தைலம் பெ. மாந்தம் வலிப்பு முதலியவற்றுக்கு மருந்தாகக் கோழி முட்டையி லிருந்து இறக்கும் தைலம். (வின்.அக.)

கோழிமுள் பெ. கோழிக்காலிலுள்ள கூரிய நகம். (வட்.வ.)

கோழிமுள்ளி பெ. கழுதைமுள்ளி. (செ.ப.அக.)

கோழிமுளையான் பெ. ஒருவகைப்பூடு. (யாழ்.அக.)

கோழியங்கொடி பெ. முருகனுக்குரிய சேவற்கொடி. கதிர்வேலும் மயிலும் ஒரு கோழியங் கொடியும் (திருவருட்பா 12,3).

கோழியர் பெ. உறையூரில் வசிப்பவர். ஐயன் மழிசைமன் கோழியர் கோனருட் பாண்பெருமான் (திருவர.அந்.2).

கோழியர்கோன் பெ. உறையூரினருக்கு மன்னன், குலசேகராழ்வார். ஐயன் மழிசைமன் கோழியர் கோனருட் பாண்பெருமான் (திருவர.அந்.2).

கோழியவரை பெ. பெருங்கோழியவரைக்கொடி. (பதார்த்த.572)

கோழியாகக்கூவு-தல் 5வி. (கோழிபோலக் கூவுதல்) மன்றாடுதல். (செ.ப.அக.)

கோழியாணம் பெ. கோழிக்குஞ்சு ரசம். (வின்.அக.)

கோழியாமரை பெ. மீன்வகை. (நாஞ்.வ.)

கோழியாவாரை பெ. அவரை வகை. மிக்க கோழியா வாரையும் (திருவிடை.நா.ப.29,18).

கோழியான்[1] பெ. சிலந்தி. வீடெல்லாம் கோழியான் வலையாக இருக்கிறது (நாஞ்.வ.).

கோழியான்[2] பெ. கோழிக்கொடியையுடைய முருகன். கோழியான் குறுகாருயிர் குழை தரச் செலுத்தும் ஆழியானென (கச்சி.காஞ்சிப்பு.நகரேற்.216).

கோழியுள்ளான் பெ. ஒரு வகை உள்ளான் பறவை. (வின்.அக.)

கோழியெச்சம் பெ. கோழியின் மலம். (வைத்.சத. ப.77)

கோழிலை பெ. வளமான இலை. வளர்த்த மாலதிக் கோழிலைக் கொழுந்துபோய் வளர்ந்து (ஆளவந். காஞ்சிப்பு.883).

கோழிவிழுங்கல் பெ. நாணயவகை. (பண.தூது.138)

கோழிவென்றி பெ. (புறப்). கோழிகளின் திறமறிந்து கோழி நூல் வல்லார் விட்ட கோழிகளைப் புறங் காணும் கோழிகளின் போரைப்பற்றிக் கூறும் துறை. இகல்புரி யேறொடு கோழியு மெதிர்வன் (புற.வெண்.சூ. 18,7).

கோழிவேந்தன் பெ. சோழன். (ஆசி.நி.48)

கோழிவேந்து பெ. →கோழிவேந்தன். ஆனையி னெழுந்தான் றென்னன் கோழிவேந் தாழ்ந்து போனான் (திருவிளை.பு.37,21).

கோழுன் பெ. கொழுப்பு. நஞ்சின் உடம்புடை யுயிரின் கோழுன் கறிப்பொடி யூறு மெண்ணெய் (திருவிளை.பு. 22,12).

கோழை பெ. 1.சளி, கபம். கோழை மிடறாக (தேவா.3,71,1). உமிழ்நீர்க் கோழை ஒழுகும் ஒரு பொறி (பட்டினத்தார். பா.1,1,29). கொக்கென் றிரும்புவான் கோழைவந் துமாரடைக்க (பிரபுலிங்.மாலை ப.65). திரண்டஞ்சிலக் கோழை யடைக்கும் (சிந்.இலக்.4,202). 2.காசம் (இலக்.சொ.அக.) 3.உமிழ்நீர், கோழை வடிதல். (நாட்.வ.) 4.சுக்கிலம். கோழை ஒழுக்கம் ... ஆழ நடுவர் (திருமந்.208). 5.1.மனத்திட்பமின்மை. கோழை மனத்தை (திருப்பு.306). 5.2.தைரியம் அற்றமை. ஆண்மையற்ற கோழை நெஞ்சத்தால் (நேற்றின்.ப.25). 6.மனத்திடமில்லாதவன். இருகைக் கொடுண் கோழை மாரொடுங் கூடிய குற்றம் (தேவா.5,64,8). கோழை களாயிருப் பாரை (திருவாய்.9,3,6 ஈடு). தழுதழுத்த கோழைக் குரற்பெரும் பாணனை யுங்கொளல் (திரிசிரா. அந்.76). சபைக் கோழையவர் மோழை மதி (திருவிடை நா.ப.8,4). கோழைகள் அல்லவம்மா குறைச்சல் உனக்கேதுமில்லை (அவளும் அவனும் ப.141). இவற்கொடு பிலாத்துறையுழை மருவிக் கூறுமின் என விடுத்தனன் ஏரோது எனுங்கோழை (இரட்.சரி.292). உரமிழந்த கோழையைப் போல் ஒளிந்து வாழ ஒப்பிய தேன் குமணறுளம் (புலவர் உள்.ப.64). தங்கவேல் என்னும் தமிழனைக் காண்கிலேன் இங்கொரு கோழையை யான் காண்கிறேன் (கா.கடமை.ப.587). கோழை என்ற பெயர் கொள்ளாதே (கண்ண.திரை.பா. 2,500). 7.குறைவு. ஒப்பமுடன் சொல்வேனா னுடன் பிறப்பு நீ எனக்கு வாழ நிதி தருவேன் ... கோழைப்படாமல் கொடுத்தான் திரவியத்தை (காஞ்சி.அம்.ப.5). கோழை மதி பேசாதே குமாரங்கன் தேவியரே (கள்ள.அம்.ப.80). 8.இரக்கம். (நாட்.வ.) 9.பெண்மை. ஆண்மையிலி கோழை பெண்மையாம் (நாம.நி.618). 10.அச்சம். (யாழ்.அக.) 11.கண் முதலியவற்றின் குழி. (முன்.) 12.கொடுமை. (முன்.) 13.தவறு. (முன்.) 14.நாணம். (முன்.) 15.சிறுபிள்ளை. பருவமுறாக் கோழை யறியுமோ (விநாயக.பு.72,132). 16.குற்றம். மேழிச் செல்வம் கோழை படாது (கொன்றைவே.71).

கோழைக்கட்டு பெ. சுவாசக்குழலிற் கட்டும் கபத் திரட்சி, சிலேற்பனக்கட்டு. (யாழ்.அக.)

கோழைக்குத்து பெ. 1.ஓர்நோய். (முன்.) 2.கவலைக் களாலுண்டாகும் மார்புக்குத்து. (இலங்.வ.)

கோழைச்செல் பெ. சளிப்படல உயிர் அணு. (கலைச். அக.2 ப.107)

கோழைத்தனம் பெ. 1.மனத்திடமின்மை. (நாட்.வ.) 2.நாணம் கலந்த அச்சம். (கலைச்.அக.2 ப.43) 3.அச்சத்தன்மை. (யாழ்.அக.) 4.சின்னத்தனம். (முன்.)

கோழைதீர்-தல் 4வி. மனத்திடம் பெறுதல். (செ.ப.அக.)

கோழைபடு-தல் 6வி. கீழ்மையடைதல். மேழிச் செல்வம் கோழைபடாது (கொன்றைவே.22). கோழை படாதிருபாலார் கூடிவாழும் குடும்பத்தில் ஒன்றிரண்டு குழந்தை போதும் (கவி.பொழில்.ப.29).

கோழைபோக்கி பெ. நறுந்தாளி. (சங்.அக.)

கோழைமொழிமூர்க்கன் பெ. தவளை. (சித்.பரி.அக.ப.166)

கோழையர் பெ. உறுதியற்றவர். குற்றம் உள்ளோர் கோழையர் (மனோன்மணீ.ப.3,1,164).

கோழையறுக்குஞ்சூரன் பெ. திப்பிலி. (சங்.அக.)

கோழையறுப்பான் பெ. கோழையைப் போக்கும் பூடு. (செ.ப.அக.)

கோழையன் பெ. 1.நாணமுள்ளோன். (யாழ்.அக.) 2.அச்சமுள்ளோன். (முன்.) 3.மனத்திடமற்றவன். (செ.ப.அக.)

கோழையிருமல் பெ. கபக்கட்டால் வரும் இருமல். (இலங்.வ.)

கோழைவிந்து பெ. துளசி. (மலை அக.)

கோள்[1] பெ. 1.கொள்ளுகை. கோள் இருள் இருக்கை ஆய்மணி (பரிபா.4,57). கோளில் பொறியில் குணமிலவே (குறள்.9). கோள் வயிரம் நீளருவிக் குன்றிவர்ந்த செஞ்சுடர் (சீவக.645). 2. பிணிப்பு. கோள் இழுக்குப்பட்டுப் புரைத்து எழுந்து போகினும் (பழமொழி.280). 3.மனைவி. கொத்து அலர் குழலியோடும் கோளொடும் குமரனோடும் (அரிச்.பு. 7,10). வெருக்கோளுற்றது நீங்க ஆரூர்மேல் செலவிரும்பி (பெரியபு.6,114). 4.கற்பு. கோல் தொடியார் கோள் அழியுமாறு (அறநெறி.162). 5.துணிபு. ஏற்றம் உடைமை எதிர் கோளின் அறிப (முதுமொழிக். 2,5). 6.1.மதிப்பு. அந்திவண்ண னூலா லருகர் பிறர் கோள் சிதைய (முதுமொழிமேல் 89). தம்மைத்தாங் கொள்வது கோளன்று (நாலடி.165). 6.2.கருத்து. பைந்தமிழ் தேர் வாணன் கொடைக்கெல்லை யேற்பவர் தங்கோள் (பெருந்.1180). அனுபவம் என்னாருயிர் கோருண்டே (திருவாய்.9,6,7). 7.ஞானம். கோள் கொடுத்து இன்பம் கொடுத்து (திருமந்.376). 8.1.வலிமை. கோள் அரா நேர் கருத (திணைமொழி.29). கோளாகத் தாள் கொடுத்தான் (திருமந்.379). கோள் நாகப் பேர் அல்குல் கோல்வளைக்கை மாதராள் (தேவா.2,44,4). பல்லவர் கோளரி (நந்திக்கலம்.59). கோள் ஆர் பொறி ஐந்தும் குன்றி உடலம் பழுத்து மாளா முன் (நூற்றெட். அந்.66,1). கோளுடைக் குரவனே போற் சித்தனைக் குறுகி (திருவிளை.பு.27,11). கோள் அரி ஏறென நிவந்த விண்டொடு கொடிஞ்சித் தேரினின்று இழிந்து (நைட. 12,86). மடமானாய் வானாரேத்துங் கோளரி யீன்றாள் வரத்தென்றார் (திருக்காவ.கலம்.56). துத்திப் படக்கோள் அராத்தொகை (செங்கழு.பிள்.32). கோட்டரும் பொன் மாமதிலும் (சிங்.சிலே.வெண்.15). 8.2. வல்லமை. கூற்றம் துரக்கின்ற கோள் பைந்தொடியே (திருமந்.1150). 8.3.வலி. கோள் அரவு ஏந்து உலகில் இந்தப் புதுமை யுண்டோ (தனிப்பா.திர.11 அந்தகக்கவி). கோள் உறு தண்டம் (சிவஞா.காஞ்சிப்பு.பரசி.23). 9.1.தன்மை. வெண்கோள் தோன்றா குழிசியோடு (புறநா.257,12). யாக்கைகோ ளெண்ணார் (நாலடி.18). கோள் இல் எழுக்களைப் போல ஏந்திய கோள் (பாரத வெண்.218,2). 9.2.கொள்கை. தன் கோள் உறல் உடம்பொடு புணர்த்தல் (தொல்.பொ.656). நலமாட்சி நல்லவர் கோள் (திரிகடு. 21). கோள் கருது மால்வரை யாளிக் குருளை (புறப். வெண்.245). ஞாலம் கோள் ஆய் உள்ள நல்வேந்தர் (பாரத வெண்.45,3). ஆழ் நரகுய்க்கும் அகம் பிரமக் கோள் முத்தல (திருக்கோவை 1,7). ஓர் நெறிக்கே ... செலுத்து பேரானந்தம் கோள் போல் (சிவஞான. காஞ்சிப்பு.நாட்டுப்.69). நமன் கோளை அரன் கால் அங்கு அழிக்கும் (திருக்கழுக்.சி.வெண்.86). கோள் துணிய விரல் துணிய வெற்றி சொன்ன (மான்.தூது 109). முன்னாட் கொள்கையிந்நாட் கோளொடு (மான வி.6,359). 9.3.கோட்பாடு. சான்றோர் பெரியராக் கொள்வது கோள் (நாலடி.165). குணம் நோக்கிக் கொண்டவர் கோள் விட்ட உழியும் (ஆசாரக்கோவை 55). சினந்தலைப் பெருக்கித் தீக்கோ ளுறுப்பினைச் சுருக்கி (சீவக.1750). கோட்புலி யன்ன குருசில்கல் (புறப்.வெண்.253). யாவரும் விழையாக்கோள் வாய் நிரயம் (ஞானாமிர்.26 -27). கோள் அரிக்கும் காண்பரியான் (நக.ஈங்.மாலை 16). 9.4.குணம். கோளெல்லாம் தான் ஒருங்கே கொள்ளுமேல் (நீல.436). 10.அனுபவம். என்னுயிர் கோளுண்டோ (திருவாய்.9,6,7). 11.1.குறளை. கோட்செவிக் குறளை காற்றுடனெருப்பு (கொன்றவே.) 11.2.வீண் பழி. மூட்டுகை கோளும் புரளியும் பேசி (பெண்கல்வி ப.13). 12.பொய். எச்சமும், கோளும் இன்மையும் உரிய (இறை.அகப்.203,4 உரை). மிடுக்கு கோள் நாகம் (இரண்டாம் திருவந்.68). கோளப்பா சொல்லவில்லை மங்கை தானும் குளித்தமஞ்சள் வாசமது வீசுந்தானே (போகர்.271). கோள் நிகர் உணர்வில் ... சிறிய வாணிகர் தொழிலாம் (தேம்பா.1,12, 69). இங்கே நடந்திருக்கிற காரியங்களை வாய் பதறி சொல்லப் போகிறாய் அதன் பிற்பாடு கோள் என்று ஒருத்தரும் நம்பார்கள் (ஆனந்த. தினசரிச்.குறி.6 ப.22). நாளெல்லாம் அவள் நடத்தையில் நலங்கண்ட நீ, கோள் சொன்னது கொண்டு (பிசிராந்.ப. 87). 13.இடையூறு. ஆணவத்தை உடையார் இயற்றிடும் கோள்களும் (கருணையந்.70). 14.மாறுபாடு. நம்கிளை கிளைக்கும்...கோள்ஆயநீக்குமவன்கோளிலெம்பெருமான் (தேவா.1,62,2). 15.தடை, துன்பம். மதயானை கோள் விடுத்து மாமுதலை கொன்ற (நூற்றெட்அந் 51,1). எதிர் சென்று ஒரு கோள் செய்தே...வரு கென்றார் (சிவராத்.பு. 6,59). ஆசான் இயல்பும் ... அவனைப் பிழைத்தான் படு கோளும் (சீகாழி.பு.குரு.5). குருவார்த்தை மேற்கொண்டு அடர் பிசிதாநர் கோளை வென்று (நாணிக்.ஒருதுறைக் கோவை 224). 16.தீமை. மதுரை கோள் இழைத்தாள் (சிலப்.24,21,5). காலக் கோளாகக் கருது (பாரத.வெண். 45). கடுங்கோள் இழைத்து மனச் செருக்கால் (கருவூர்ப்பு.13,16). வ.சி.ய.நம என்று ... செயித்தாயானால்

கோள் அப்பா இல்லை (போகர்.180). கோளதரு கள்ளும் நாளும் குடிப்பவர் தம்மை ... யாவரே விலக்க வல்லார் (சிவராத்.பு.8,14). கங்கினிப்பெண் ... கொள் பொய்யுரை பொருந்தியிடு நாவினாள் (கயிலாச.சத.89). கோளுக்கும் அஞ்சாத வலியுறுபு கவுமாரா குலதிலகர் (குன்றக்.முருக. கலம்.8). 17.கொடுமை. கோளரவின் முள்ளெயிறோ மூரிநிலா (நள.106). 18.குற்றம். கோளரிய கச் சோதம் நரந்தம் நறும் பலந்தீபம் (திருவிளை.பு.17,37). கோள் உரைத்து நல்லோரைக் கெடுத்த பரவாதி (சானந்த.பு.5, 23). நல்வினை செய் கோளிலாப் பெரு மஞ்சிகர் குலம் பல துறுத்தாள் (கச்சி.காஞ்சிப்பு.கழுவாய் 269). கோளை முற்றும் பொறுக்கிலான் (பழனித்திரு.14,78). 19.ஊனம். உறுதி உடையவை கோள் முறையாற் கோடல் இனிது (இனி.நாற்.27). 20.கொலை. கொடுவாய் இரும்பின் கோள் இரை துற்றி (அகநா.36,2). கோள் நிலத்து வெய்யவாம் கொடுஞ் சுறத்தாடங்கிடங்கு (சீவக.142). கோளி மிழ் கனலி சூழ்திசைப் பொத்தி (பெருங் 1,56,12). கோள்வித்து அனைய கூற்றம் தன்னை (தேவா. 2,61,7). கோள் செய்ய லாவதுண்டே என்றன் ஆருயிர் கூற்றினுக்கே (சடசோபரந்.60). கோட்களவிலே புரி குருத்துவம் மிகுத்தோன் (கருவூர்ப்பு.14,8). கோட்புலி முழக்கென வெருவியே யகலும் (திருவாலங்.பு. நைமி.61). ஆறைந்து காவதத்தின் கோளுறும் உழுவை முதலிய விலங்கின் (திருவேங்.பு.53,2). கோவதை செய்யப்பிடித்தகோளரிக்குத்தன்னுடலைஈவனென்றானே திலிபனென்னு மன்னன் (ஆத்திசூடி வெண்.83). கோள் வலம்படு கோசிகன் எனும் முனி குறுகி வேள்வி செய்தனன் (இராவணகாவி.3,6,18). 21.முடிவு. பிறர்க்கு இன்னா செய்யாமை மாசற்றார் கோள் (குறள்.311). 22.பாம்பு. கோள் - பாம்புமாம் (சீவக. 320 உரை). 23.விடம், நஞ்சு. பெருந்தோரில் கோள் நாகம் முன் உயர்த்த கோ (பார.வெண்.177,4). கோள் நாகம் (பதி.திரு.காரை.இரட்.மாலை 4). கோளில் அன்பர்கள் இழுக்கிய புரியினும் (கந்தபு.1,5,7). 24.இராகு. கோள்வாய் மதியம் நெடியான் விடுத்தாங்கு (சீவக.454). கோளொடு மடுத்த குளிர் மாமதிய மொப்ப (சூளா.1293). குலவும் அந்தரத்து வருங் கோள் அரவைக் கண்டு (திருக்கழுக்.சி.வெண்.21). 25.விண்மீன். கோடிக் கோடுங் கூம்புயர் நாவாய் (சீவக.2331). கோள் கடைந்து அமுத்திய மகுடக் கோதையாள் (தேம்பா.1,8, 37). கோளணிந்த குழலணிதார் குடை வண்டாப் புகழ்பாடி மதுவுண்ணேனோர் (திருக்காவ.கலம்.36). மடந்தையர் உகுத்த குரூஉச் சுடர் மணி யொடும் (கச்சி.காஞ்சிப்பு.இருபத்.108). கோளடங்கும் வெங் கூற்று மடங்குமே (புல்லையந்.69). 26.கூட்டம். நிரைகோள் கேட்டு (இலக்.வி.604). 27.சுக்கிரீவன். கைலாகு தந்து கோள் பிடிக்க (இராமநா.6,100.3). 28.மண்டலம். எல்லோர்க்கும் காலக் கோள் ஆகக் கருது (பாரத வெண்.45,4). 29.நாள். நவக்கிரகமும் நேலியும் கோள் இதுவென்று எண்ணிக் குறிப்பரோ (உமா.நெஞ். தூது 12,6). 30.கிரகம். நாளுங் கோண்மீன் தகைத்தல் (கலித்.5,9). கோளு மோரையுங் கொண்ட நிமித்தமும் (சீவக.1775). எல்லாக் கோளு நல்வழி நோக்க (பெருங். 2,11,70). வானக் கோளின் மாண்புணர் வார்கண் மறுவில்லாத் தானக் கோளிற் சாதகவோலை தலை வைத்தார் (சூளா.310). வரு கோள் தரு பெருந் தீமையும் (கபி.மூத்.18) உருவம் சிறந்து பல கோளும் உதிக்கும் (பாரதம்.சம்பவ.44). ஒன்பது கோள் ஏற்க வணங்கு மெழில் (மதுரைச்.உலா 49). வாளிரண்டுங் காதிரண்டில் வந்து அமைக்கும் கோள் இரண்டும் (திருவர.கலம்.63, 2). கோள் நெறி ஒளி முகக் குழவி ஏந்தினர் (தேம்பா.2,2, 126). கோளை ஆளவும் வல்ல சேந்தன் (பழனித்திரு.14, 78). 31.அரசன். கோனமர் மகளிர் கானிற் குழா மயில் பிரிவதொத்தார் (சீவக.2714). 32.மேகம். கோளுறு திங்கள் வான் மேல் குளிர்முகம் காட்டிற்று அன்றே (தேம்பா.2,4,2). 33.ஒளி. முன்னைக் கோளரியே (திருவாய்.2,6,6). 34.பரிவேடம். மதியங் கோள்வாய் விசும்பிடை (சீவக. 1098). 35.குலை. கரிக்குறட்டு இறைஞ்சிய செறிகோள் பைங்குரல் (குறுந்.198). செழுங்கோள் வாங்கிய மாச்சினைக் கொக்கு (நற்.326). செழுங்கோள் வாழை (புறநா.168,13). கோள்தெங்கின் குலை வாழை (பொருந. 208). தாழ் கோள் பலவின் ... பழம் (பெரும்பாண்.356). முதிர்கோட் டெங்கொடு முன்றி னிநிவந்து (பெருங்.2,15,27). 36.காவட்டம்புல். (சித்.பரி.அக.ப.87) 37.கொழு. (தீவா.)

கோள்[2] பெ. 1.நிமித்தம். சகுனம் விரிச்சி கோள் (நாம.நி. 667). 2.பார்வை. கண்கள் கோள் இழித்தாற் போற் (திருக்கோவை 382).

கோள்[3] பெ. 1.பொருள் கோள். (இலக்.கலைக். ப.45) 2.நிறை. பாணியின் இசை கோள் புணர் நீடும் புகல் வகையால் (பெரியபு.6,75).

கோள்[4] பெ. உளவு. செய்தி ஏகமாய் ஆயிரம் சொல் தூதுகள் புறப்பட்டுத் திரிகிறார்களென்று கோள் பிறந்து (ஆனந்த.தினசரிச்.குறி.3 ப.112).

கோள்[5] பெ. 1.காய். விழுக் கோள் பலவின் பழுப்பயன் கொண்மார் (அகநா.12). கோள் பவர் ஒடுங்கி இன்துயில் எழுந்து (அகநா.284,4). 2.காய்ப்பு. வாழைக்கோள் மிகு பெருங்குலை (அகநா.2). 3.பத்தியம். அனங்கன் வாளி பாய்ந்த புண் ... செவ்வாய்க் கோள் இலா மருந்து ஊட்டியும் தணிப்பர் (சீகாழித்.பு.திருநகர.26).

கோள்[6] இ.சொ. கள் என்பதன் திரிபு, முன்னிலைப் பன்மை விகுதி. தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளிமை (கந்.அலங்.16).

கோள்காரன் பெ. புறங்கூறுபவன். சூதுகாரன் கையும் கோள்கா ரன்வாயும் சும்மா இராது (என்.பழ.தொ.231).

கோள்குண்டணி பெ. புறங்கூறுகை. (செ.ப.அக.)

கோள்கொள்(ளு)-தல் 2வி. தேர் முதலியன செலுத் துதல். கொள்வார் கோல்கொள்ளக் கொடித் திண்டே ரேறுவோர் (பரிபா.11,51). பாகனை யொழித்துக் கூன்மகள் கோல்கொள (பெருங்.3,5,97).

கோள்முடி-த்தல் 11வி. 1.கோட்சொல்லி இருவருக்குள் கலகம் விளைத்தல். (நாட்.வ.) 2.புறந்தூற்றுதல். (முன்.)

கோள்முறை பெ. இன்னார்க்கு இத்துணை எனத் தொன்று தொட்டுப் பகுத்துக் கொடுக்கும் முறை. வில் கெழு குறும்பில் கோள் முறை பகுக்கும் (அகநா.89).

கோள்மூட்டி பெ. கோள் சொல்பவன். அவர் ஒரு கோள்மூட்டி (இலங்.வ.).

கோள்மூட்டிவிடு-தல் 6வி. சொல்லாத ஒன்றைச் சொன்னதாகக் கூறி மனத்தாங்கலை ஏற்படுத்துதல். இதனைப் பார்க்கப் பொறுக்காத ஒருவன் மாணவனிடம் ஆசிரியர் மாணவனைப் பற்றி ஏதோ சொன்னதாகக் கோள்மூட்டி விட்டான் (பாதை.பாறை.ப.67).

கோள்வாய் பெ. புதுப்புண். கலந்துபிரிந்த கோள்வாய் பொறுக்க வரி தாயிருக்கும். (திருவாய்.6,2 ஈடு).

கோள்வினை பெ. கொலைத்தொழில். கோள்வினை பயின்ற கூற்றங் குறுகல தாயி னென்றாள் (சூளா.1855).

கோளக்கட்டி பெ. புண்வகை. (இங்.வை.307)

கோளக்காய்ச்சல் பெ. கழுத்து அக்குள் போன்ற இடங்களைத் தாக்கும் தொற்று நோய். (மருத்.கலைச். அக.ப.108)

கோளகசிரிசம் பெ. மாசிபத்திரி (சித்.அக.)

கோளகபாடாணம் (கோளகாபாடாணம்) பெ. பிறவிப் பாடாணவகை. (மூலி.அக.)

கோளகம்[1] பெ. 1.மிளகு. காயம் மரீசம் கலினை கோளகம் ... மிளகு (நாம.நி.325). மிளகு ... கோளகம் (அபி.மாலை 995). 2.திப்பிலி. (மலை அக.)

கோளகம்[2] பெ. 1.→கோளகாபாடாணம். (யாழ்.அக.) 2.தாளகம். (சங்.அக.) 3.மண்டலவிரியன். மண்டலி யாவுங் கோளக மாகும் (பிங்.2604).

கோளகம்[3] பெ. பட்டுச்சீலை. (யாழ்.அக.)

கோளகம்[4] பெ. 1.உருண்டை. பிரம்மாண்ட கோளகந்தான் ஓவில் சதக்கோடியாம் (சிவப்பிர.விசா.272). 2.உறுப்பு. மகபதி இரவி மிருத்தியு பிரசேசன் அதி தெய்வம் வாய் முதலாம் கோளகங்கள் தானம் (வேதா.சூ.74). 3.தங்குமிடம். இந்திரியம் ... செவி உடல் கண் காலு மூக்கு எனும் பெயர்க் கோளகத்தில் உற்றன (சிவப்பிர.விசா.217).

கோளகம்[5] பெ. அண்டவட்டம். ககன கோளகை. (திருக்கருவை.அந்.22).

கோளகவச்சிரம் பெ. கருந்தண்ணீர்க்கல். (யாழ்.அக.)

கோளகன் பெ. வேட்கையோடு கைம்பெண் பெற்ற மகன். கிருத்தர் கோளகர் பெற்று (திருப்பு. 313).

கோளகாபாடாணம் (கோளகபாடாணம்) பெ. பிறவிப் பாடாண வகை. (மூலி.அக.)

கோளகாயம் பெ. எழுத்தாணிப்பூடு. (சித்.பரி.அக.ப.87)

கோளகை[1] பெ. 1.வட்டவடிவம். அண்டகோளகைப் புறத்தாய் (கம்பரா.1,9,60). ககனக் கோளகைக் கணவிரு (திருப்பு.36). அண்டகோளகை கிழித்திட (செ.பாகவத. 6,5,31). கோழியுருப்பொலி தானை வயக்கொடி கோளகை உச்சியில் வாழ் சீர்தரலே (குன்றக்.முருக. வகுப்பு 4,15). அண்ட கோளகையும் எண்சாமுகமும் (குமர.பண்டார.மும்.கோவை 2,21) கோளகை தட்டாழி ... வட்டம் (நாம.நி.766). போயண்ட கோளகையின் மேல் (திருமுரு.பிள்.பா.93). 2.வட்ட வடிவமுள்ள இடம். கோளகைவெ டிக்கமொழி வார்களெம தூதர் (கோலாசல.பு.203). 3.யானையின் தந்தத்தில் அணியும் பூண். பது முகன் கற்றைக் குத்தலின் அதன் கோளகை போயிற்றென்க (சீவக.2275 உரை). மதம் கொள் கரியின் கோளகையை மணிச் சூடகமா (கலிங்கத்துப். 510). 4.சிவலிங் கத்திற்கு சாத்தப்படும் உறை. அரத னப்பெருங் கோளகை மகரதோ ரணம் ... பொலிவுறக் கண்டாள் (ஆளவந்.காஞ்சிப்பு.109). 5.கவசம். நெடிய கோளகை கீழ்வாணிமுன் (திருவிளை.பு.49,27). 6.தேர்வலயம். வயிரமணிக் கோளகையுங் குண்டலமுந் தண்டரளக் குடைநிரையும் (திருவிளை.பு.30,9). 7.மேற்கடாகம். அண்டச் சுவர் மதில் மிசைப் பால் இலங்குறும் அண்டகோளகை (கோணைசல.16). 8.மண்டலிப்பாம்பு. (யாழ்.அக.)

கோளகை[2] பெ. பகை. ஆம் மைத்துனன் முடியை விளங்கு கோளகை யுறவீசி (பாரதம்.2,1,138).

கோளச்சுற்றழல் பெ. சுரப்பிகளைச் சுற்றியுள்ள தசைகளில் ஏற்படும் வீக்கம். (மருத்.கலைச்.அக.ப.198)

கோளநோய் பெ. சுரப்பிகளில் ஏற்படும் வீக்கத்தால் வரும் நோய். (மருத்.கலைச்.அக.ப.5)

கோளப்புத்து பெ. சுரப்பிகளின் வளர்ச்சியால் ஏற்படும் புற்று நோய் வகை. (முன்.)

கோளபுட்பம் பெ. ஒரு தலம். கிரீசனந்த தானத்து தித்தோர் ஆம் அடுத்த கோளபுட்பம் தங்கி முன் (ஞான. உபதேசகா.1149).

கோளம் பெ. 1.உருண்டை. சூழ் கோளம் அதனில் உள் நிறைந்து குறித்த பூசை கொள்கின்றார் (பெரியபு.20,36). அண்ட கோள மட்டும் ... உற்றவே (அரிச்.பு.1,213). வான்முக டளந்து அண்டகோள மேல் (சொர்ண.பிள்.10,).

ககன கோளங்கள் முதல் வெடிப்பட வுறற்று நெடுகைம் மதம் பொழில் வேதம் (வைகுந்தபிள்.வாரானைப். 157,3). 2.வளைவாகத் தோன்றும் ஆகாயம். ஏழ்கடல் முழுதும் மஞ்சன ாலை .. கோளம் நின்கவிகை (காதம்பரி.34). 3.பிராணிகளின் உடலில் நீரூறுந் தசைப்பற்று. கோளக்கட்டி (செ.ப.அக.). 4.கொழப்பு. (ஆசி.நி.115)

கோளம்பம் பெ. கிரகணம். (யாழ்.அக.)

கோளமனையம் பெ. மூக்கிற்குப் பின்புறம் அமைந்துள்ள உறுப்பு. (மருத்.கலைச்.அக.ப.5)

கோளயோகம் பெ. ஓர் இராசியிலே ஏழுகிரகங்கள் நிற்கவரும் யோகம். ஒருராசி தன்னிலேதா னேர்ரேழு கோளு நிற்கி லிருமையாங் கோளயோகம் (சாதகசிந். 2045).

கோளரவம் பெ. நவக்கோள்களில் ஒன்றாகிய ராகு கேதுக்கள். கோள் அரவம் மஞ்ஞைக் கொடிக்கு அஞ்சி கோபுரத்தின் சாளரம் புக்கு ஓடும் தணிகையே (திருத் தணிகை வெண்பா.17).

கோளரி பெ. சிங்கம். கோவத் தனமெடுத்த கோளரியைச் சென்றிறைஞ்சி (பாரத வெண்.357). குடர்கோலிய தொடைமாலைகள் புனைகோ ளரிபிரியா (இரணிய வதைப்.20). மச்சுதரென் றாதரிக்குங் கோளரியோ (நம்.திருத்தாலா.76). கோளரியாய் (இரண்டாந்.திருவந். 18). குஞ்சர மெட்டு மஞ்சக் கோளரி முழக்கங் காட்டி (திருவிளை.பு.22,29). கோளரியின் உரமுகத்தினர் (ஞான.உபதேசகா.42). குணத்துர வோர்தங்கள் கோளரியே (திரிசிரா.அந்.8). கோள ரியின் றமிழ்க்குப் பெய்யும் புயக்கரன் (நாணிக்.ஒருதுறைக்கோவை 124). ராமன் கணன்று விரைந்தெதிர் கொண்டு சென்றிரு கோளரிபோல (இராவணகாவி.5,13,16). கோளரி அனையாய் நீயும் குலத்துறு வீரர் தாமும் ... நினைந்து இது கொண்டேன் அல்லேன் (மேகநா.1,27).

கோளரிக்கொடியோன் பெ. வீமன். கோளரிக் கொடியோ னிடும்பி கொழுநன் (பிங்.742).

கோளரிஞ்சான் பெ. 9 1/2 அங்குல நீளமும் சாம்பனிறத்ததுமான ஆற்றுமீன்வகை. (பரத.வ.)

கோளவங்கம் பெ. ஈயமணல். (சங்.அக.)

கோளவியூகம் பெ. எட்டுப்பக்கத்தும் முழங்களை யுடையதாக அமைக்கும் படைவகுப்பு. (சுக்கிரந்தி. 339)

கோளன்[1] பெ. 1.குறளை கூறுவோன். கோள் கூறுபவன் கோளன் அறிவிலியு (திருப்பு.197). துர்ச்சனர் கோளர் (அறப்பளீ.சத.92). உலவுநல் குடிதனிற் கோளர்கள் இருந்துகொண் டுற்றாரை யீட்டிப்பர் (குமரே.சத.91). பெருமஞ்சிகன் கோளன் (தணிகைப்பு.அகத்.345). 2.தீயவன். கோளன் மேவிய பாதலத்து ... சென்று ... தாக்கினான் (சீகாழித்.பு.பூந்தரா.7).

கோளன்[2] பெ. →கோளகன். கோளரிருக்கு மூர் (தனிப்பா. திர.1,64,127).

கோளன்[3] பெ. நெசவுத் தொழில் செய்வோன். கைக் கோளர் ... கோளர் காருகர் (அபி.மாலை 331).

கோளன்[4] பெ. (இசையி.) ஏமவதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.220)

கோளா பெ. 1.வாசனைப் பண்டங்கலந்ததும் இறைச்சி முதலியவற்றை உருண்டையாகக் கொண்டதுமான ஒருவகை உருண்டையுணவு. (சமைய.வ.) 2.அரைத்த துவரம் பருப்பு, கீரை போன்றவை கலந்து உருட்டி எண்ணெயில் வருக்கப்படும் உருண்டை. (முன்.) 3.மயக்கத்தை யுண்டுபண்ணும் கஞ்சாவுருண்டை. (தொ.வ.)

கோளாங்கம் பெ. கூளாங்கல். (இலங்.வ.)

கோளாம்பி பெ. 1.தாம்பூல எச்சில் நீர். கோமானின் ஊர்தியது கோளாம்பியாலே...பசும் கோலமது (காணீர் செவி.170). 2.படிக்கம், எச்சில் உமிழுங் கலம். (வட்.வ.)

கோளார்த்தம் பெ. பூகோளத்தின் பாதி. (செ.ப.அக.)

கோளாளன் பெ. 1.கொள்கைபிடிப்புடையவன். வல்ல பெருங் கோளாளர் நீலகண்டர் (சுப்பிர.நெஞ்சு.தூது 180). 2.நூற்பொருள் முதலியவற்றை மறவாது உட்கொள்பவன். கோளாள என்பான் மறவாதான் (திரிகடு.12).

கோளாறு பெ. 1.தாறுமாறு. (நாட்.வ.) 2.குறைபாடு, குற்றம். குறிப்பிட்ட எவரையும் பார்ப்பது ... நடிப்பிலே கோளாறு ஏற்பட்டு விடும் (நா.கலை.ப.97). குழந்தை உடம்பில் கோளாறென்ன (இருண்ட வீடு ப.15). மூளைக் கோளறப்பா ... பாவம் (புலவர் உள்.ப.110). சூதகக் கோளாறாலே துயருற்று (இயேசுகா.ப.149). 3.குழப்பம். (யாழ்.அக.) 4.சண்டை. (இலங்.வ.) 5.அறிகுறி. (தொ.வ.) 6.குடாசகம், கபடம். (யாழ்.அக.) 7.கிரகசாரம். இதற்கோ தாயே யித்துணை யச்சம் மதிக்கோ ளாறிது (மானவி.4,26). 8.உபாயம். அந்தக் காரியம் முடியும் படி நான் ஒரு கோளாறு சொல்லுகிறேன் (நாட்.வ.). 9.முறை. பிறழ்வு மக்கள் உள்ளத்தின் திடீரென நன்மை செய்வதும் தீமை செய்வதும் ஆகிய கோளாறுகள் ஏற்படும் (பிசிராந்.ப.44). 10.இலக்கு. (த.நா.விளை.ப.275)

கோளாறுக்காரன் பெ. கெட்டிக்காரன், திறமை மிக்கவன். (கோவை வ.)

கோளி[1] பெ. யமுனையாறு. யாகப் பலனுடன் கோளி கோதம தீர்த்தமுங் கங்கையும் (திருச்செங்.பு.3,4,8).

கோளி[2] பெ. 1.கொள்வோன். (சூடா.நி.) 2.(இலக்.) நான்காம் வேற்றுமை. ஒண்கோளியொடு (வீரசோ. வேற்.1). 3.ஆலமரம். கோளிப் பெரும்பணை (ஞானாமிர். 25,11). பூவுலகம் எங்குநிழல் போக்கி ... நின்றதுயர் கோளியெனுங் குன்றம் (கந்தபு.6,14,195).

கொப்படி விரித்த நெடுங் கோளி நுனி நின்றாய் (ஞான. உபதேசகா. 152). கோளிப்பத்திர சயனன் என்ன (சிவராத்.பு.6,4). வம்பு ஓடு கோளி மருவுகிலாய் (ஆனந்த.வண்டு.தூது 428). ஆலமரம் ... கோளி (அபி.மாலை 912). 4.அரசு. கோளிசா லந்த மாலங் குளிர்மலர்க் குரவமெங்கும் (பெரியபு.நாட்டுச்.28). 5.பூவாமற் காய்க்கும் மரம். முழு முதல் தொலைந்த கோளி ஆலத்து (புறநா.58,2). கோடுபல முரஞ்சிய கோளி யாலத்து (மலைபடு.268). கொழுமென் சினைய கோளி யுள்ளும் (பெரும்பாண். 407). 6.அத்தி. அத்தி அதம் கோளி (நாம.நி.290). 7.கொழிஞ்சி. கொஞ்சியு மென்றிவை கோளி யென்ப (பிங்.3458). 8.பசலைக் கீரை. (தென்.குல.குடி.2 ப.366)

கோளி[3] பெ. →கோளகன். (தீவா.)

கோளி[4] பெ. கோளிகை. குண்டடேழுங்கோளியோ ராறும் (திருக்காளத்.பு.13,30).

கோளி[5] பெ. பெண்குதிரை. தயங்கு குண்டு ஏழும் கோளி ஓர் ஆறும் ... வேண்டிடல் (திருக்காளத்தி.பு.13,30).

கோளிக்காரகம் பெ. (இலக்.) நான்காம் வேற்றுமை. (இலக்.கலைக்.ப.45)

கோளிகை பெ. 1.பெண்தன்மை. குண்டிகை கோளிகை கண்டத னாலே (திருமந்.1210). 2.குதிரை கழுதை களின் பெட்டை. (யாழ்.அக.)

கோளிப்பாகல் பெ. பூவாதே காய்க்கும் பலா. கோளிப்பாகல் (சிலப்.2,16,24 உரை).

கோளிப்பாகம் பெ. 1.குப்பைமேனி (சித்.பரி.அக.ப.87) 2.பெருங்குறிஞ்சான். (முன்.)

கோளிப்பொருள் பெ. (இலக்.) கோடற்பொருள். கோடற்பொருள் கோளிப்பொருள் என்பன ஒரு பொருட் சொற்கள் (நன்.298 காண்டி.).

கோளியம் பெ. துத்தி. கோளியந் துத்தி (பிங்.2867).

கோளிலி பெ. பாடல் பெற்ற சோழநாட்டுச் சைவத் திருத்தலம். கோளிலியெம் மாதி குறிபரவ வல்லையே கோளிலியெம் மாதி குறி (பர.அந்.49). கோளிலியின் அன்பர்குலங் கொள்ளுவப்பே (திருவருட்பா 1962,186).

கோளிழை[1]-த்தல் 11வி. கொல்லுதல். குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பை (திருக்கோவை 21). கோள் இழைப்ப என வெருவிப் போம்பரிசு நினையாதீர் (சிவஞா.காஞ்சிப்பு.அந்த.18). படுக ராழ்நிலத்திற் கோளிழைப்ப (பாமணிக்கோவை 12,19).

கோளிழை[2]-த்தல் 11வி. கொள்ளுதல். வந்துகோ ளிழைத்தீர் (சேர.பொன்.அந்.)

கோளிளர் பெ. கொள்கையர். தாள் தலை தரித்த கோளிளர் (கல்லாடம் 6,42).

கோளிறுங்கு பெ. தட்டை. கோளிறுங்கு ... தட்டை (அபி. மாலை 1124).

கோளினர் பெ. தீயவர். கோளினர் தமக்கு நன்மை செய்வது குற்றமாமே (விவேக.சிந்.53).

கோளுரை பெ. குறளைமொழி. கோளுரைகள் பேசொணாது (அறப்பளீ.சத.8).

கோளுவா பெ. வடலியில் பத்தையறுக்கும் போது வடியும் ஒருவகைத் திரவம். (தொ.வ.)

கோளுறு-தல் 6வி. மேலேறிச்செல்லுதல். குலந்தரும் கீழங்கி கோளுற நோக்கி (திருமந்.357).

கோளூர் பெ. திருக்கோளூர். கொன்றைக் கடிகமழ் புறவிற் கனைவண் டார்க்கும் யாணர்க் கோளூ ரென்ப பாணர்ப் பாரந் தாங்கியோன் பதியே (பெருந்.2138).

கோளூர்முனி பெ. திருக் கோளூரில் உதித்த மனை சீலராகிய மதுரகவியாழ்வார். கலைபுகலும் சம்பந்தன் றனைமுன் வென்ற கலியனும்கோ ளூர்முனியும் (சோலை.குற.7).

கோளேசம்[1] பெ. குங்குமப்பூ. (மலை அக.)

கோளேசம்[2] பெ. (இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கோளேசுரன் பெ. சேரன். (தக்கயாகப்.8 உரை)

கோளை[1] பெ. குவளை. (செ.ப.அக.)

கோளை[2] பெ. எலி. (யாழ்.அக.)

கோளை[3] பெ. குறைவு. கோளைப்படாதபடி அரிராமன் குருவாய் வந்தெனக் கருள் புரிவாய் (அயோ.ப.5).

கோளை[4] பெ. ஒரு வகை மீன். வாளை கோளை தேளி மீன் (முக்.பள்.52).

கோளைக்குத்து பெ. கபகடட்டாலுண்டாகும் மார்புக் குத்து. (இலங்.வ.)

கோளோட்டச்சி பெ. சம்பந்தி பெண். (நாஞ்.வ.)

கோளோட்டயன் பெ. சம்பந்தி ஆண். (முன்.)

கோற்கண் பெ. கூர்மையான கண். வேற்கண் மடவார் ... கோற்க ணெறிகாட்டக் கொல்கூற் றுழையதா (பெருந். 305).

கோற்கணக்கு பெ. நிலமளக்கும்கணக்கு. (யாழ்.அக.)

கோற்கணக்குக்குழிக்கணக்கு பெ. கோலால் அளந்து கொள்ளப்பட்ட நிலத்தின் குழிக்கணக்கு. (செ.ப.அக.)

கோற்காரன் பெ. 1.ஒடந்தள்ளுவோன். (நாட்.வ.) 2.கிராம ஊழியக்காரன். (செ.ப.அக.)

கோற்குத்து பெ. 1.கோல்முனையாற் குத்தப்படும் அளவுள்ள நிலம். பந்துக்களுக்கு ஒரு கோற்குத்துங் கொடேன் (திருவாய்.7,5 ஈடு பிர.). 2.வரிக்கூத்துவகை. கோத்த பறைக்குடும்பு கோற்கூத்து (சிலப்.3,13 உரை).

கோற்குறிப்பு பெ. நிலவளவுக்கணக்கு. (வின்.அக.)

கோற்கூலி பெ. வரிவகை. (தெ.இ.க.1,5,30)

கோற்கொடி[1] பெ. 1.கொடிவகை. கோற்கொடி மென்கொடி கொடியென்றாகும் (பிங்.2934). 2.சுரை. (மலை அக.)

கோற்கொடி² பெ. இலந்தை. (செ.ப.அக.)

கோற்பிரமாணம் பெ. கிராமத்தின் நில பரப்புக் கணக்கு. (வட்.வ.)

கோற்புழு பெ. உலண்டு. கோற்புழு வுலண்டு கீடமாகும் (பிங்.2614).

கோற்றகைமாக்கள் பெ. கோல்கொண்டு காக்கும் வீரர். மிலைச்சருஞ் சிலதரும் கோற்றகை மாக்களும் (பெருங்.1,42,24).

கோற்றேன் பெ. 1.கொம்புத் தேன். கோற்றேனிசை முரலக் கேளாக் குயில்பயிலும் (தேவா.2,71,6). கோற்றேனிற் கனியிற் கனிந்த கவிபாட (திருக்கருவை அந்.6). கோற்றேன் குதலைப் பேதையொடும் (கூர்மபு. 1,30,56). 2.தேன்கூடு. (இலக்.சொ.அக.)

கோற்றொடி பெ.1.வேலைத்திறமமைந்த கை வளையல். கோற்றொடி மாதரொடு (சிலப்.26,121). கோற் றெடிக்கை மாதர் குழுமியே (தென்பு.மணி.உலா 449).2.வேலைத் திறமமைந்த கை வளையலை அணிந்த பெண்கள். கலனணிந்து வேற்றூர் புகுதல் விழாக்காண்டனோன் பெடுத்தல் கோற்றொடியார் கோளழியு மாறு (பெருந். 241). கோற்றொடி சீற்றல் கொண்டாள் (சிவஞா. காஞ்சிப்பு.அனந்த.5).

கோற்றொழில் பெ. 1.அம்பு விடுகை. அரிபவங்கள் பட்டுடைந்து கோற் றொழிலுந் தாமறந்தார் கூர்ந்து (பாரத வெண்.563,3). 2.அரசாட்சி செய்கை. (செங்கோல் செலுத்துதற்றொழில்) கோற்றொழிற் கொற்றம் (பெருங்.1,23,60). 3.அரிய வேலைப்பாடு. கோற்றொழில் விளங்குந் தொடி (கலித்.100 உரை).

கோற்றொழிலவன் பெ. ஆசாரவாசலிற் கோல் கொண்டு காவல்செய்பவன். கோற்றொ ழிலவற்குக் கூறின னிற்ப (பெருங்.1,47,10).

கோற்றொழிலாளர் பெ. தண்டத்தைக் கையேந்தி அரசர்க்குமுன் வழிவிலக்குவோர். கோற்றொழிலாளர் மாற்றுமொழியியம்ப (பெருங்.1,58,76).

கோறணமேந்து பெ. அரசு, அரசாங்கம். (இலங்.வ.)

கோறணி[1] (கோரணி) பெ. கேலிக்கூத்து. கூட்டிவந்து உன்னைக் கோறணிகள் செய்கின்றார் (சித்திரபுத்.ப.96).

கோறணி[2] பெ. குண்டணி, குறளைச்சொல். (யாழ்.அக.)

கோறம்பு பெ. நெற்றிப்பட்டம். நெற்றிமேல் திருத்திய கோறம்பும் திருக்குழலும் (பெரியாழ்.தி.3,4,6). கேசச் சுருளருகே கோறம்புஞ் சூட்டி (சிறுபு.உலா 100).

கோறல் பெ. 1.கொல்லுகை. கோறல் பிறவினை எல்லாம் தரும் (குறள்.321). இகழ்தலின் கோறல் இனிதே (நாலடி.219). பார்த்தனையான் கோற லவன்கைப் படுதல் (பாரதவெண்.324). உயிர்ப் பொருள் வடிவு கோற லுயிர்க்கொலை (யசோதர.144). பழிபடக் கோறல் பார்த்தல் (கருவூர்ப்பு.13,79). ஆயிரறை ... கோறல்புரிந் தானெனது கொற்றமுழு தெள்ளி (கந்தபு.3,13,2). சூது உயிர் கோறல் பானம் துவரெனத் துவர்த்த செவ்வாய் (செ.பாகவத.270). ஊன் வயிறு ஆர் வேல்வேந்தன் இளவல் கோறல் உள்ளினன் (தேம்பா.2,1,4). கார்த்தவீ ரியன்கோறல் புரிந்தான் (சிவஞா.காஞ்சிப்பு.பரசி.3). சூறையின் நகரெலாம் கொண்ட சோரனைக் கோறலே அல்லது விடுத்தல் கூடுமோ (வேதாளக்.14,27). 2.கொலை. பெரும் பூசை மறுத்தவர்க் கோறல் முத்தி தருதன் மையதாதல் சண்டீசர் தஞ் செய்கை (பெரியபு. 28,839). 3.வதை. அடல் கோறல் வதை (உரி.நி.175). 4.தண்டிக்கை. கூற்றுவன் அறம்பிழைத் தோரைக் கோறலான் (செ.பாகவத.4,3,947).

கோறிக்கை பெ. நினைவு. (யாழ்.அக.)

கோறின்னல் பெ. (கோலை மெல்லுகை) பல்விளக்குகை. விதித்தகோல்தின்று (சிவஞா.காஞ்சிப்பு.ஒழுக்.8).

கோறை பெ. 1.பழுது. (வட்.வ.) 2.சிராய்த்த காயம். (முன்.) 3.துவாரம். (வின்.அக.) 4.புண். கோறைவாய்ப் பீறற் பிண்டப் பிணங்களை (திருமா.4,1). 5.மணிபதிக்குங் குவளை. (வின்.அக.)

கோறைபடு-தல் 6வி. 1.பழுதுபடுதல். கோறை பட வில்லையிங்கே பாருங்களண்ணே (பூர்வ.நா.105). 2.சிராய்த்த காயமுண்டாதல். (செ.ப.அக.) 3.குழியாதல். (இலங்.வ.)

கோறையா-தல் 5வி. 1.பழுதுபடுதல். (செ.ப.அக.) 2.குழியாதல். (இலங்.வ.)

கோறைவை-த்தல் 11வி. →கோறையா-தல். (முன்.)

கோன் பெ. 1.தலைவன். இயல் குணன் எங்கோன் (சிலப்.10,184). கன்னியர் தாங்குடை காட்டுப்பள்ளிக் காதல னைக்கடற் காழியர் கோன் (தேவா.1,5,11). வான்மகிழ் மணங்கொண்மேனி யணங்கினுக்குரிய கோனை (கூளா.277). உண்மையாய் கின்மையுமாய்க் கோனாகி (திருவாச.5,15). ஆகி நின் றமரர் கோன் (பெரியதி.தமிழாக்.1,8,78). நாளும் புள்ளும் கேளா ஊக்கமோடு எங்கோன் ஏயினன் (தகடூர்யாத்.11). சிவனே யயனே இருவருக்கும் கோனே (செ.பாகவத.4,3,861). இலிங்கத் தெங்கோன் ஒன்றினன் (சிவஞா.காஞ்சிப்பு. சிவா.47). அங்கர் கோனாய் (ஞானாமிர்.39,10). எங்கோன் மாமன் மார்பகத்தில் (திருமுரு.பிள்.பா.5). 2.அரசன். எங்கோன் வளவன் வாழ்க (புறநா.34,16). வச்சிர நன்னாட்டுக் கோன் இறை கொடுத்த (சிலப்.5, 100). கோனுடை யினநிரை காக்குங் கோவலர் (சீவக. 1849). தென்னவர்கோன் தன் குறும்பு (நந்திக்கலம்.4). மூவாயிரவர் தெய்வக் கோனே என்னும் (திருமா.3,3). கொற்றவர் கோன் (கலிங்கத்துப்.174). கோன் முறை காட்டி வாட்டித் தொறுகலி (கருவூர்ப்பு.16,42). கோனிவணெடு வாழ்தி (செ.பாகவத.4,3,987). கோன் ஆகும் மன்ன

வனைக் கொன்றுவிடும் (சீவே.சரி.500). குளிறுகின்ற தன் கோன் களிற்றினில் வெளிறுகின்றது வானமே (முக்.பள்.38,15). 3.இறைவன். பொங்கா வருகா விரிக்கோ லக்கரைமேல் எங்கோ னுறைகின் றவிடை மருதீதோ (தேவா.1,32,3). விற்பா விலங்கலெங் கோனை (திருக்கோவை 310). பரவரிய எங்கோன் மறைமுரசன் (மதுரைச்.உலா 13). படைத்து அளிக்கும் தலைமையது ஆன கோன் ஆக (தாயுமா.பா.17,9). யானை முகம் ஒன்றியவிர் கோனை, முதிர் சோனை நிகர் என்றருள் மதம் பெய் வானை (பச்சை.அம்.பிள்.பாயி.). 4.சிவபெருமான். மின்கூறாளன் பிஞ்ஞகன் கோன் (உரி.நி.7). 6.நாயகன். எங்கோன் கடிமுரசங் காலை செய (புறப்.). 5.கணவன். தருமனும் தம்பியும் தாமரையாள் கோனும் (பாரத வெண்.380). கோனொடு பேறுறத் தொழுதுமென் மொழிகள் பேசுவாள் (சானந்த.பு.1,10). பின்னைகோன் (சிவஞா. காஞ்சிப்பு. சலந்த.7). 7.அதிபதி. கவுடர் கோன் செழுஞ்சாம் பூனதத்தாற் செய்யும் புலியூரே (திருப்புலி. வெண்.41). 8.வல்லோன். நற்றமிழ் நாவலர் கோன் (பெரியபு.6, 125). 9.இடையன். கோனந்தன் மகனரசர் குலமைந்தன் (பகவற்.7,20). இன்பமிகு பசுவிலே கன்று சென்றூட்டுதற்கு இனிய கோன் அது தடுக்கம் (குமரே.சத.78). கரடி யாறொழுகக் கோன் குதித்துக் கட்டிப் புதைந்த கதையாகும் (ஒழிவி.1,4). கோனைக் கண்டவனோ கோன் தலைப் பேனைக் கண்டவனோ (முக்.பள்.89,9). 10.பெருமை. கோன் பொழில் ... பெருமைப்பேர் (நாம.நி.). 11.முறைமையினையுடைய யியற்பெயர். பேன் கோன் என்பன விக்காலத்தரிய வென்க (தொல்.எழுத்.351 நச்.). 12.வளி. (பிங்.176) 13.மிக்க கெடுதி. கோனூறு மந்திரம் குறுகல் செய்திலன் (கந்தபு.4,3,380). உண்டாம் கோன் மடிவன் (அறுபது வருட.26). 14.(இசையி.) கரகரப் பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152) 15.(செய்.) ஒரு பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை. (இறை.அகப்.57)

கோன்சேல் பெ. குழு. எட்டு மணிக்குக் கோன்சேல் கூடி காரித மெழுதினானர்கள் (ஆனந்த.தினசரிச்.3 ப.).

கோன்மனை பெ. அரண்மனை. கோன்மனையுள் கோன்மகளாய்க் கொண்டதிரு ... நாடினளால் (சித்தேரி. அம்.6 க.41).

கோன்மை பெ. 1.அரசாட்சி. பாய்திரையுலகக் கோன்மை (உபதேசகா.சிவத்துரோ.276). அன்னான் வாயினால் நவிலாக் கோன்மை வரம்பெற அளிப்பேன் (தேம்பா. 1,3,38). 2.ஆளுமை. தன்னுருவால் இன்பந் தருங் கோன்மைக் கொண்டீர் (சித்தேரி அம்.3 க.36). 3.ஆட்சியுரிமை. கோண்மையிழந் தோமென ... வீட்டுரியோர் ஆனோமே (சித்தேரி அம்.3 க.50). 4.இராசநீதி.(யாழ்.அக.) 5.பெருமை. கோன்மைவளர் மேன்மை மகாராணி (பஞ்ச.திருமுக.129).

கோனடிதொடு-தல் 6வி. அரசனடிமேல் ஆணை யிடுதல். உசாவுவங் கோனடி தொட்டேன் (கலித். 94,36).

கோனம் பெ. மான். (ஆசி.நி.103)

கோனன் பெ. இடையன். ஆயர் பாடியினில் வந்துடன் கோனரையும் கண்டு (செங்.பள்.434).

கோனாட்சி பெ. அரசர் இருந்து ஆட்சி புரிவது. கோனாட்சி நல்ல குடியாட்சி என்று சொலல் நானாவித மயக்கு (இ.ஒ.ப.19).

கோனாடர் பெ. சோணாட்டு உட்பிரிவுகளுள் ஒன்றான கோனாட்டார். சேப்நாடு தாமூர்ந்த மாநாடக் கண்ணனூர்க் கோனாடர் புக்கொளித்த குன்று (பெருந்.1018).

கோனாடு பெ. கோனாட்டு உட்பிரிவுகளுள் ஒன்று. தேமாவின் கொழுந்துணர்கோ திக்கொண்டு குயில்நாடும் கோனாடு (பெரியபு.54,1).

கோனாய் பெ. ஓநாய். ஆட்டுக் கிடையிலே கோனாய் புகுந்தது போல (என்.பழ.தொ.752).

கோனான்[1] பெ. 1.இடையர் பட்டப் பெயர். எந்தக் கோனான் றன்கையிற் கொடுத்தானோ (விறலி.தூது 703). 2.ஆட்டிடையன். மந்தை வாழ் கோனா ரடைந்த பேறுந்திவ்ய வலது கள்ளன் மோட்சத் தலைமை பெற்ற பேறு (அந்தோனி.அண்.14). அருமையுள்ள கோனாரும் ஆத்தில் ஒரு வெள்ளாட்டை அதட்டியே மேய்த்து (பூர்வ.நா.244).

கோனான்[2] பெ. தலைவன். எம் கோனார் பறிப்ப நலம் பூத்த இக்கொடி இனிப்பூவா பிறர் பறிப்பவே (சீவக.296).

கோனிச்சி பெ. இடைச்சி. கோனிச்சியார் தயிர் பால் விலைக்கூறி விற்று (தில்.கலம்.37).

கோனீப்பூடு பெ. சணல். (சித்.அக.)

கோனேரி பெ. திருப்பதியிலுள்ள சுவாமிபுட்பகரிணி என்னும் பொய்கை. கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே (பெருமாள்.தி.4,1).

கோனேரிக்கோன் பெ. இடையன். கோனேரிக் கோன் வந்து தோன்றினனே (முக்.பள்.82).

கோனேரியப்பமுதலியார் பெ. தமிழில் உபதேச காண்டம் பாடிய ஆசிரியர். (செ.ப.அக.)

கோனேரியப்பன் பெ. →கோனேரியப்பமுதலியார். குழுமூரன்கோனேரியப்பன்கொடையினாற்கல்வியினான் ஆனேறி பேரன் பினால் (பெருந்.1372).

கோனை பெ. ஒலி. கோனை யென்ப தொலியென லாகும் (அக.நி.கோ முதல் 6).

கோனோலை (கோன் + ஓலை) பெ. அரசாணை எழுதப்பட்ட திருமுகம். (தெ.இ.க.2,351)

கௌ

கௌ[1] பெ. 'க்' எனும் மெய்யும் 'ஔ' எனும் உயிரும் இணைந்த கூட்டெழுத்து, க் + ஔ = கௌ.

கௌ[2] பெ. 1.மனத்தாபம் (யாழ்.அக.) 2.கிருத்தியம். (முன்.) 3.தீங்கு. (முன்.)

கௌ[3] பெ. கொள்ளு. (மலை அக.)

கௌகணம் பெ. →கொங்கணம். (யாழ்.அக.)

கௌங்குமம் பெ. குங்குமம். (இலக்.வி.ப.294 உரை)

கௌசல்யம் பெ. திறமை. சிற்பகௌசல்யத்துடனே குண்ட மண்டபவேதிகளைச் சமைத்து (சி.சி.8,3 சிவாக்.).

கௌசலம் பெ. 1.தந்திரம். (நாட்.வ.) 2.→கௌசல்யம். அரைநொடிப் போதில் உன் கரதலமாம் ஒரு கௌசலம் காட்டுகேன் (மனோன்மணி.5,1,126). 3.ஓர் தேசம். (யாழ்.அக.) 4.வாழ்த்து. (முன்.)

கௌசலர் பெ. வேள்குலச் சளுக்கியர். வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர் (பெருந்.783).

கௌசலேயன் பெ. இராமன். (யாழ்.அக.)

கௌசலை பெ. இராமபிரான் தாய். மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே (பெருமாள். தி.8,1). கௌசலை மணந்த திண்டோள் ... தசரதன் (சிவஞா.காஞ்சிப்பு.வீர.6).

கௌசவிகை பெ. கொடை. (யாழ்.அக.)

கௌசனம் பெ. →கௌபீனம். (நாட்.வ.)

கௌசனை பெ. 1.கௌபீனம். (யாழ்.அக.) 2.உறை. (செ.ப.அக.) 3.குதிரை முதலியவற்றின் மேற்றவிசு, சேணம். (வின்.அக.)

கௌசாம்பி பெ. கங்கைக் கரையிலுள்ள ஒரு பழைய நகரம். (செ.ப.அக.)

கௌசிகபலம் பெ. தெங்கு. (சித்.பரி.அக.ப.87)

கௌசிகம்[1] பெ. பாம்பாட்டி. (யாழ்.அக.)

கௌசிகம்[2] பெ. விளக்குத்தண்டு. (வட.நி.619)

கௌசிகம்[3] பெ. 1.(இசையி.) மருதயாழிசை. (சிலப்.6, 35 உரை) 2.சாமவேதம். (யாழ்.அக.) 3.பட்டாடை. (பிங்.3460) 4.கூகை. விண்ணிடைக் கௌசிகம் எதிர்தர (அகோர.வேதார.பு.38,12).

கௌசிகம்[4] பெ. 1.தென்னை. (சித்.பரி.அக.ப.87) 2.குங்கிலியம். (வைத்.விரி.அக.ப.124)

கௌசிகன்[1] பெ. 1.பாம்பாட்டி. (யாழ்.அக.) 2.இந்திரன். (பிங்.160) 3.விசுவாமித்திரன். கௌசிகன் சொல்லுவான் (கம்பரா.1,10,87). கௌசிகன் தன்னால் மறங் கொணீர்மை சாயிரா மனும் (நகுல.பு.இராம.14).

கௌசிகன்[2] பெ. விளக்குத்தண்டு. (பிங்.1683)

கௌசிகேயம் பெ. வெள்ளைக் கிலுகிலுப்பை. (சித்.பரி.அக.ப.87)

கௌசுகம் பெ. குங்கிலியம். (மலை அக.)

கௌசுதப்பிரியா பெ. (இசையி.) கோசலம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.241)

கௌசேயம் பெ. பட்டு வகை. கௌசேயம் என்னும் பட்டும் (கௌடலீயம் ப.224).

கௌஞ்சம் பெ. கிரவுஞ்சம், அன்றில். (சூடா.நி.26)

கௌடகிகன் பெ. புலைஞன். (யாழ்.அக.)

கௌடசாட்சி பெ. பொய்ச்சாட்சி. (முன்.)

கௌடதம் பெ. வெள்ளுள்ளி. (சித்.பரி.அக.ப.87)

கௌடதருக்கம் பெ. ஓர்தருக்கசாத்திரம். (யாழ்.அக.)

கௌடநடை பெ. →கௌடநெறி. (வின்.அக.)

கௌடநெறி பெ. செறிவு முதலிய வைதருப்ப நெறிக் குரிய குணங்கள் நிரம்பிவாராமல் சொற் பெருகத் தொடுக்குஞ் செய்யுள் நெறி. (தண்டி.12 உரை)

கௌடம்[1] பெ. மாலை. புனித கௌடம் தொடுத்து (ஐந். நா.ப.54).

கௌடம்[2] பெ. வங்காளமத்தியத்தில் உள்ள ஒரு தேசம். (செ.ப.அக.)

கௌடம்[3] பெ. மூலிகை வகை. (முன்.)

கௌடம்[4] பெ. →கௌடநெறி. தூதெலாஞ் சந்தமஞ் சரியெலாம் கௌடமா (பெருந்.1793). செய்யுள் இப்படித்தான் இருக்க வேண்டும் வைதருப்பம்மோ கௌடம் என்றாங்கு எய்திய நெறி (இலக்.வி.633).

கௌடம்[5] பெ. கன்னற்கட்டியிலிருந்து எடுக்கும் கள். கன்னற்கட்டியினடுகள் கௌடம் ஆம் (அபி.மாலை 579).

கௌடன் பெ. கிழவன். (தென்.கி.மொழி.)

கௌடி[1] பெ. (இசையி.) 1.குறிஞ்சி யாழ்த்திறனில் காந்தாரம் என்னும் இரண்டாவது திறனின் அருகியல் பிரிவாகிய கௌடி 43 எண்ணுடையப் பண். (யாழ். நூல்.ப.145) 2.(இசையி.) செம்பாலையில் பிறக்கும் பண்களுள் ஒன்று. (புதிய இரா.ப.37)

கௌடி[2] பெ. கிழவி. (தென்.கிளைமொழியி.)

கௌடிகம்[1] பெ. வெள்ளி வகைகளுள் ஒன்று. கௌடிகம் காம்புகம் ... என வெள்ளி நான்கு வகைப்படும் (கௌடலீயம் ப.240).

கௌடிகம்[2] பெ. கண்ணி. (யாழ்.அக.)

கௌடிகன் பெ. புலைஞன். (முன்.)

கௌடில்லியம் பெ. 1.அவமதி. (முன்.) 2.→கொடிலம். (முன்.)

கௌடிலம் பெ. வளைவு. (மணிமே.அரும்.)

கௌடிலியர் பெ. வடமொழியில் அர்த்தசாத்திரம் இயற்றிய சாணக்கியன். (செ.ப.அக.)

கௌடோ பெ. கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த முல்லை நிலச் சாதியார். (தென்.குல.குடி.2 ப.351)

கௌண்டன்[1] பெ. சண்டாளன். (ஆசி.நி.61)

கௌண்டன்[2] பெ. கவுண்டன், தமிழர் கன்னடர் சிலர்க்குள் வழங்கும் பட்டப் பெயர். (செ.ப.அக.)

கௌணப்பொருள் பெ. இலக்கணை வகையாற் கொள்ளம் பொருள். (சி.சி.பாயி.2 ஞானப்.)

கௌணபன் பெ. இராட்சசன். (யாழ்.அக.)

கௌணம் பெ. 1.முக்கிய மல்லாதது. (செ.ப.அக.) 2.குணம் முதலிய சம்பந்தங்களால் ஒரு சொல் வேறு பொருள் தருவது. வேதம் உனைக் கௌணம் முக்கியமாய் உரைப்பது (தேவிமான்.11,14).

கௌணவிருத்தி பெ. சத்தியனால் நிகழும் மேன்மை. சோமக் கொடிக்கு விண்டு விற்மாட்டு உற்பத்தி கூறியது கௌணவிருத்தி பற்றியாகலின் (சதுர்.சங்.ப.47).

கௌணாவதாரதம் பெ. ஒரு நிமித்தம் பற்றித் தன் சக்தியை ஒருவர்பால் ஏறிட்டு நிகழ்த்தும் தெய்வ அவதாரம். (சமய.அக.)

கௌணி பெ. பூமி. கௌணியர்க்குத் தமிழ் சுரக்கும் (சேதுபு.கடவுள்.3).

கௌணிபக்தி பெ. முக்கியமில்லாத பக்தி. கௌணி பக்தி நாளடைவில் பரபக்தியாக மலரும் (இந்துமத. ப.82).

கௌணியக்குலம் பெ. 1.கௌண்டிண்ணிய கோத்திரம். கௌணி யக்குலத் தினிலுதித்த (கோமதி.பிள்.98). 2.கௌண்டினிய கோத்திரத்தான். கௌணியர்கள் குலமணிக்கு (குளத்தூர் அமுதா.பிள்.4,4). 3.பூமி யிலுள்ளான். (இலக்.சொ.அக.)

கௌத்தமியன் பெ ஒரு முனிவன். தமிழ்ப்பனுவல் எல்லாம் தக்கவர் கௌத்தமியன் உதவவும் (பாண்டிநா.பிள்.5,7).

கௌத்துபம் பெ. →கௌத்துப மணி மாலை. திரு வொடுந் தெள்ளமிர்த்தத் தொடுஞ் செங்கதிரொளிக் கௌத்து பத்தொடும் (பெருந்.892). கழுத்தில் விளங்கும் கௌத்துபமணியை (பரீகேசவ.மாலை 10 உரை).

கௌத்துபமணிமாலை பெ. விட்டுணு மூர்த்தியின் கழுத்தில் அணிவிக்கப்படும் மணி மாலை. (சிற். செந்.ப.94)

கௌத்துவக்காரன் பெ. வஞ்சகன். (செ.ப.அக.)

கௌத்துவம்[1] பெ. கவத்துவம், வஞ்சகம். (யாழ்.அக.)

கௌத்துவம்[2] பெ. அத்தநாள். (ஆசி.நி.34)

கௌத்துவம்[3] பெ. 1.துளசிமணி. (யாழ்.அக.) 2.பது மராகம். (முன்) 3.→கௌத்துப மணி மாலை. கௌத்து வம்உடைக் கோவிந்தன் (பெரியாழ்.தி.4,5,8). நிதம் பொன்னுங் கௌத்துவமும் பூண்டோன் (திருவருட்பா 1962,55).

கௌத்துவவழக்கு பெ. பொய்வழக்கு. (நாட்.வ.)

கௌத்துவாபரணம் பெ. →கௌத்துப மணி மாலை. அரங்க நாயக ரருளினாலே யவரது கௌத்துவா பரண மார்பின் நடுவின் வீத்திருக்கப் பெற்றாள் (கோலாசல. பு.80 உரை).

கௌதகம் பெ. போதிகை. (நாஞ்.வ.)

கௌதம்[1] பெ. வீட்டுச்சுவர்களில் நாற்புறழுஞ் சுற்றி யமைக்கப் பெறும் கட்டுமான வகை. (திருநெல்.வ.)

கௌதம்[2] பெ. சிச்சிலிக்குருவி, கவுதம். (யாழ்.அக.)

கௌதம பெ. பிராமணர்களின் ஒரு கோத்திரம். (தென்.குல.குடி.2 ப.356)

கௌதமம் பெ. தருமநூல் பதினெட்டனுள் கௌத மரால் இயற்றப்பட்ட நூல். (பிங்.446)

கௌதமன் பெ. 2.(இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கௌதமன் பெ. 1.முனிவன். தவமுறு நெடுமாலும் கௌதமன் சதுர்முகன் பருதி (சிந்.இலக்.4,303). 2.நியாய சாத்திரஞ் செய்த அக்கபாதர் (செ.ப.அக.) 3.கிருபாசாரியர். முன்னிருந்த கௌதமன் (பாரதம். 1,3,66). 4.புத்தன். தவமுறு நெடுமாலும் கௌதமன் சதுர்முகன் பருதி (சிந்.இலக்.4,3,3). 5.இந்திரனால் கற்பிழக்கச் செய்யப்பட்ட அகலியையின் கணவன். (தென்.குல.குடி.2 ப.356) 6.விபுலமலைச் சமவசர ணத்தைச் சார்ந்த ஒரு முனிவன். நற்றவர்க் கிறை யானந்த கௌதமர் (நாக.காவி.23). 7.விளரிக்கு உரிய இறைவன். (பிங்.1418)

கௌதமனார் பெ. தலைச்சங்கப் புலவருள் ஒருவர். (தொல்.பொ.75 உரை)

கௌதமி பெ. 1.கோதாவரி எனும் நதி. (பிங்.) 2.ஓர்பசு. (யாழ்.அக.) 3.→கோரோசனை. (வின்.அக.) 4.(இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங் களுள் ஒன்று. (புதிய இரா.ப.152) 5.(இசையி.) கனகாங்கி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.102)

கௌதமை பெ. →கௌதமி-1,2,3. (யாழ்.அக.)

கௌதாரி பெ. கவுதாரி எனும் ஒரு வகை பறவை. காடை கௌதாரி மைனா (தமி.நா.பா.ப.188).

கௌதாலிகன் பெ. பரதவனும் வண்ணாத்தியுங் கூடிப் பெற்ற புத்திரன். (யாழ்.அக.)

கௌதுகபந்தனம் பெ. இரட்சாபந்தனம், காப்பக மணிக்கட்டிற்கட்டும் நூல். (முன்.)

கௌதுகபேரம் பெ. 1.தினசரி பூசைக்குரிய படிமம். (சிற்.செந்.ப.23) 2.அனுபவகாலம். (யாழ்.அக.)

கௌதுகம் பெ. 1.மகிழ்ச்சி. எல்லார்க்கு மொக்க கிருட்ண நுபவத்தில் கௌதுகம் அவிசிட்ட மாயிருக்கு மாயில் (திருப்.6 ஆ.பத்.78 ப.104). 2.சாலவிளையாட்டு. கதுமெனத்தரும் விஞ்சையர் கௌதுகம் போல (சேதுபு. காசி.ப.37). 3.மங்கலம். (இலக்.சொ.அக.) 4.நூதனம். (யாழ்.அக.) 5.→கௌதுகபந்தமை. (சங்.அக.)

கௌதுவம் பெ. 1.பொழுதுபோக்கு. (யாழ்.அக.) 2.திருவிழா. (முன்.) 3.வாஞ்சை, விருப்பம். (முன்.)

4.இணக்கம். (முன்.) 5.மங்கிலிய சூத்திரம். (முன்.) 6.உபசரிக்கை. (முன்.)

கௌதூகலம் பெ. பெருமகிழ்ச்சி. (இலக்.சொ.அக.)

கௌதூசலம் பெ 1.→கௌதுவம்-3. (யாழ்.அக.) 2.நூதனம். (முன்.)

கௌந்தி[1] பெ. 1.குந்திதேவி. (முன்.) 2.தவப்பெண். உன்னை உயிராய் மணந்தால் கௌந்தி (புது.பரிண.4,62).

கௌந்தி[2] பெ. 1.வால்மிளகு. (மலை அக.) 2.கடுக் காய்வேர். (மூலி.அக.)

கௌந்தி[3] பெ. (இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கௌந்திகன்[1] பெ. ஈட்டிக்காரன். (யாழ்.அக.)

கௌந்திகன்[2] பெ. குந்திபுத்திரன். (முன்.)

கௌந்தியம் பெ. வெண்மருது. (சித்.பரி.அக.ப.87)

கௌந்திரியம் பெ. வால்மிளகு. (முன்.)

கௌந்தேயன் பெ. →கௌந்திகன்[2]. (இலக்.சொ.அக.)

கௌப்பு பெ. பெருமை. (யாழ்.அக.)

கௌபம் பெ. கூபம். (முன்.)

கௌபீனசுத்தம் பெ. அயற்பெண்களின் கூட்டுற வற்றிருக்குந் தூயதன்மை. (செ.ப.அக.)

கௌபீனசுத்தன் பெ. பிறபெண்களைச் சேராதவன். (முன்.)

கௌபீனதோசம் பெ.பிறபெண்களைச் சேர்தலாகிய குற்றம். (முன்.)

கௌபீனம் பெ. 1.கோவணம். (கோவை வ.) 2.கச்சைச் சீலை. (யாழ்.அக.) 3.தவறு. (முன்.) 4.பாவம். (முன்.)

கௌபேரம் பெ. குபேரன் ஆட்சி. நினைய வரிய கௌபேரம் (தேவி.மான்.5,2).

கௌமாரபுரி பெ. முருகக் கடவுளின் உலகம். போகங் களுடன் கூடியிருக்கிற கௌமார புரி இருக்கும் (சிவதர்ம. கோபுர.உரை 195).

கௌமாரம் பெ. 1.இளம் பருவம். (யாழ்.அக.) 2.முருகக் கடவுளே பரம்பொருள் என்று வழிபடும் சமயம். (சமய.அக.) 3.பதினாறுவயதின் மேலுமுப்பத் திரண்டு வயதினுள்ளு மாகிய பெண்பருவம். (யாழ்.அக.) 4.ஒன்றுமுதற் பதினாறுவரையுமாகிய பருவம். (முன்.) 5.பதினெண்கீத புராணத்தொன்று. (முன்.)

கௌமாரர் பெ. முருகவழிபாட்டினர். காணாபத்திய ரொடு கௌமாரர் தாமும் (திருவாமாத்.பு.பூர்வ.3,17).

கௌமாரி பெ. 1.இறைவி. திரிசூலி கௌமாரியொரு (திரு.முரு.பிள்.பா.8). 2.மாகாளி. (பிங்.119) 3.பார்வதி. கௌமாரி கமலாசன (அருண.வேல்விருத்.2,3). 4.(இசையி.) கோகிலப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.120)

கௌமுதி பெ. நிலாக்கிரணம். (இலக்.சொ.அக.)

கௌமை பெ. கிழமை. வெள்ளிக் கௌமை ஒங்க செடிய புடுங்கிருவோம் (மழைக்கஞ்சி ப.11).

கௌமோதகட்கதரினி பெ. (இசையி.) காங்கேய பூசணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.178)

கௌமோதகி பெ. 1.திருமாலின் தண்டாயுதம். (பிங்.137) 2.(இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்கள் ஒன்று. (புதிய இர.ப.151)

கௌமோதம் பெ. 1.கார்த்திகைமாதம். (யாழ்.அக.) 2.(இசையி.) மேசகல்யாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.233)

கௌமோதி பெ. 1.நிலா. (யாழ்.அக.) 2.கார்த்திகைத் திருவிழா. (முன்.) 3.திருவிழா. (முன்.)

கௌரதை பெ. மேன்மை. பொருளளித்துக் கௌரதை யாம் புகழும் கொண்டு (மருத.பிரபந்.சாற்றுக்.).

கௌரம்[1] பெ. 1.வெண்மை. பாண்டுரங் கௌரஞ் சிதம் ... வெளுப்பு (உரி.நி.153). நகைத்தநகை யுங்கௌர நன்னிறத் திருமேனியும் (கோமதி.பிள்.35). 2.பொன்னிறம். கௌர வருணம் அடைந்து கௌரி ஆகினாள் (திருக்கோவல்.பு.அந்தகன்.92).

கௌரம்[2] பெ. சுத்தம். (யாழ்.அக.)

கௌரம்[3] பெ. உயரம். (தொ.வ.)

கௌரமம் பெ. கூர்மம். (யாழ்.அக.)

கௌரவ்யம் பெ. 1.நன்மதிப்பு. பகவத் சம்பந்தம் உடையாரைக் கௌரவ்ய மென்கிறது (திருப்.மூ.பத். 12.ப.16). 2.கௌரவிக்கத் தகுந்தவர்கள். கௌரவ்யரை அதிநிர்பந்தம் பண்ணலாகாது (திருப்.15 மூ.ப.200).

கௌரவப்படுத்து-தல் 5வி. மரியாதை செய்தல். கமலாம் பாளைக் கௌரவப் படுத்தி ... மரியாதை காட்டி (அவளும் அவனும் ப.342).

கௌரவம் பெ. 1.கண்ணியம். கவிஞருக் கரசர்க் கரசெனப் புகழுங் கௌரவ மெய்தினான் (நாய்ச்சி.கோத்திரப்.7). 2.பெருமிதம். அடர்ச்சிமிகுங் கௌரவம் (சிலப்.பிர. பொது.30). ரங்கசாமி பிள்ளை ... மடத்துக்கு வந்து போவதே நமக்குக் கௌரவம் (மீனா.சரித்.1 ப.254-255). மகரந்தனும் கௌமாயிருப்பதே கௌரவம் என்று உள்ளே போனான் (மீண்.தொட். ப.44). 3.மானம். காலம் மாறினால் கௌரவம் மாறுமா (கண்ண.திரை.ப. 3,480). 4.பெருமை. (இலக்.சொ. அக.) 5.மேன்மை. அந்தக் கௌரவம் எனக்கும் சரிபாதி (கண்ண.திரை. பா.2,468).

கௌரவர் பெ. 1.கவுரவர்,குருகுலத்து அரசர். வரி வெஞ்சிலைக்கைக் கௌரவர் (பாரதம்.ஒன்பதாம்.31). கௌரவர் படைகண்டான் விசயன் மைந்தன் (கண்ண. திரை.பா.1,335).

கௌராத்திரம் பெ. நஞ்சு வகை. கௌராத்திரம் பாலகம்

மார்க்கடம் ... ஆகிய இத்துணை நஞ்சு வகைகளும் (கௌடலீயம் ப.278).

கௌரி பெ. 1.உமை. கௌரி நாயக (பட்டினத்தார்.பா. திருவிடை28,9). இப்பங்கொள் கௌரிமுகம் விருத்தனிளை யோன்குழவி யான வாறும் (திருவிளை.பு.பதி.5). கௌரி மாற்ற நினைந்திது கேழ்க்கலுற்றாள் (திருவாலங்.பு. நிருத்த.35). பரை மனோன்மனி புவனிநாரணி சுகாசனி கௌரி பூசனை பண்ணும் உண்மகிழ் வெளியதோ (திருச்செந்.கலம்.41). சமய முதல்வி தலைவி–உமை கௌரி (மதுரைச்.உலா 4). கௌரி ... தன் அருளினாலே விண் நிலவும் மதி அமுதம் ஒழியாது பொழியவே (தாயுமா.பா.7,4). கௌரியை யீன்ற இமயம் வைகும் (பாமணிக்கோவை 15,46). கைச்சக்கரக் கௌரி (திருமுரு.பிள்.பா.8). வரமகள் கௌரிதன் மைந்தன் (கதிரை.பள்.76). சிவனின் மனைவியான கௌரியின் பெயரை உடைய ஒக்கிலியர் பிரிவு (தென்.குல.குடி.2 ப.355). 2.பச்சை நாயகி. விலைமதியா மாமணி நிகர் கௌரி (பச்சை.அம். பிள்.அம்புலிப்.8,2). 3.காளி. காளி அம்பிகை மாதரி கௌரி (அரிச்.புதுதி. 4.துர்க்கை. (பிங்.124) 5.சரசுவதி. (இல.சொ.அக.) 6.துளசி. (முன்.) 7.கடுகு. (மலை அக.) 8.புளிநாறளை. (யாழ். அக.) 9.மஞ்சனிறம். (முன்.) 10.(இசையி.) மாயாமாளவ கௌளை என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.129)

கௌரிகாந்தாரி பெ. (இசையி.) இரத்னாங்கி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.103)

கௌரிகாளை பெ. எக்காளவகை. (சென்.வ.)

கௌரிகேணி பெ. வெள்ளைக்காக்கணம். (மலை அக.)

கௌரிச்சிற்பு பெ. →கௌரிபாத்திரம். (யாழ்.அக.)

கௌரிசங்கம் பெ. →கௌரிபாத்திரம். (செ.ப.அக.)

கௌரிசங்கர் பெ. (இசையி.) கீரவாணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.146)

கௌரிசங்கரமணி பெ. இரட்டையருத்திராட்சம். (யாழ்.அக.)

கௌரிசங்காமணி பெ. →கௌரிபாத்திரம். (செ.ப.அக.)

கௌரிசாதம் பெ. (இசையி.) கோசலம் என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.241)

கௌரிசிப்பி பெ. →கௌரிபாத்திரம். (யாழ்.அக.)

கௌரிசீமந்தினி பெ.(இசையி.) நாசிகா பூசணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.240)

கௌரிசேய் பெ. 1.வினாயகன். (ஆசி.நி.8) 2.முருகன். கருங்கண் வார்முலைக் கௌரிசேய் செந்தில் (திருச்செந். கலம்.44).

கௌரிசேயன் பெ. →கௌரிசேய். (யாழ்.அக.)

கௌரிதனைவன் பெ.→கௌரிசேய்-2. (ஆசி.நி.9)

கௌரிநந்தனன் பெ. →கௌரிசேய்-2. (யாழ்.அக.)

கௌரிபங்களா பெ. (இசையி.) தேனுகா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.113)

கௌரிபந்து பெ. (இசையி.) காமவர்த்தினி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.204)

கௌரிபாடாணம் பெ. வைப்புபாடாணவகை. (வின்.அக.)

கௌரிபாத்திரம் பெ. பூசா பாத்திரமாக உபயோகப் படும் பெருஞ்சங்கு. (யாழ்.அக.)

கௌரிமனோகரி பெ. (இசையி.) ஓர் இராகத்தின் பெயர். (புதிய இரா.ப.154)

கௌரிமாயூரம் பெ. ஓர் தலம். (யாழ்.அக.)

கௌரிமைந்தன் பெ. →கௌரிசேய்-2. (பிங்.110)

கௌரியம் பெ. கருவேம்பு. (மலை அக.)

கௌரியன் பெ. பாண்டியன். பாண்டியன் பட்டப்பெயர் தவிரா ஈகைக் கௌரியர் மருக (புறநா.3,5). வெப்புயிரையு முருக்குவ தாகக் கருத்தொழிந்துரை மறந்தனன் கௌரியர் தலைவன் (பெரியபு.28,713). கௌரியன் ஈன்ற மயிலேதென் கூடற் கயற்கண்ணி (கயற்.மாலை 97).

கௌரியனி பெ. (இசையி.) கரகரப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.152)

கௌரிவாற்புல் பெ.அதிக சுணை உடைய ஒரு தோட்டப்புல். (குண.1 ப.295)

கௌரிவிரதம் பெ. ஐப்பசி மாதத்தில் கௌரியை நோக்கிப் புரியும் நோன்பு. (செ.ப.அக.)

கௌரிவேம்பு பெ. மலைவேம்பு. (சித்.பரி.அக.ப.87)

கௌரிபுத்திரர் பெ. தெலுங்கு வைசியருள் ஒரு சாதியினர். (செ.ப.அக.)

கௌரீமனோகர் பெ. (இசையி.) 23ஆவது மேளகர்த்தா ராகம். (சங்.சஞ்.47)

கௌரீமாருவ பெ. (இசையி.) நாமநாராயணி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.201)

கௌல்[1] பெ. கவுல், தீ நாற்றம். (செ.ப.அக.)

கௌல்[2] பெ. உருது) நிலக்குத்தகை உடன்படிக்கை. (முன்)

கௌல்தார் பெ. கவுல்தார், நிலக் குத்தகை யெடுத்தவன். (முன்.)

கௌலகேயன் பெ. வேசிபுத்திரன். (யாழ்.அக.)

கௌலவம்[1] பெ. பன்றி. (முன்.)

கௌலவம்[2] பெ. (சோதிட.) கரணம் பதினொன்றனுள் ஒன்றாகிய காலப்பகுதி. (செ.ப.அக.)

கௌலாலகம் பெ. மட்பாண்டம். (யாழ்.அக.)

கௌலிகம் பெ. பாதிரிமரம். (சித்.பரி.அக.ப.87)

கௌலிகன் பெ. எத்தன். (யாழ்.அக.)

கௌலேயகன்[1] பெ. இல்லொழுக்கத்திற் பிதா மாதா விடத்திற்பிறந்தவன். (முன்.)

கௌலேயகன்[2] பெ. நாய். (முன்.)

கௌவகம் பெ. குதிரையுடலின் ஒரு பக்கத்திலிருக்கும் சுழிவகை. (அசுவசா.149)

கௌவப்படு-தல் 6வி. கவரப்படுதல். தமது அரசு வேற்றாரால் கௌவப்பட்டு நிலை குலையும் என்பதைக் கனவிலும் அவர் நினைத்திலர் (மானுடம்.ப.264).

கௌவலம் பெ. இலந்தை. (முன்.)

கௌவாணம் பெ. குறிஞ்சியாழ்த்திறன் வகை. (பிங்.1382)

கௌவாளன் பெ. மீன்வகை. (பரத.வ.)

கௌவிடம் பெ. பழிச்சொல். உலகாடுங் காவலனோ கௌவிடமுஞ் சொலச் செல்லாது (கபிலை.கோவை 24).

கௌவியம் பெ. 1.பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய பசுவினின்று பெறப்படும் பொருள்கள். நிறை புண்ணியாகவாசனம் ... பௌவியம் (திருக்குடந்.பு.11,6). தென்புலத்தவரங் கொவியங் கறந்தார் செஞ்சுடாரியமாக் கன்றா (செ.பாகவத. 4,3,963). தீதில் கௌவியங் கூட்டுபு பிசைந்தனர் (சூத.சிவமா.2,23). அய்ய காபில கௌவியம் சோதி சேர்செய்ய (சிவபுண்ணிய.56). 2.→கோரோசனை. (யாழ்.அக.) 3.உயர்குலம். (முன்.) 4.துர்ச்செய்கை. (முன்.) 5.மறைவிடம். (முன்.)

கௌவு-தல் 5வி. 1.வௌவுதல், பற்றுதல். கௌவிற்றுக் காலைக் கடுந்தேள் ஒன்று (இருண்ட வீடு ப.41). 2.கவர்தல். பேய் வரிதே உடல் கௌவினது (கலிங்கத்துப். 171). கௌ-வாயாற் பற்று (நன்.காண்டி.108). நான்முகன் வாகனந் தன்னை முன் பற்றிக் கௌவி (தனிப்பா.தீர. 14 அந்தகக்கவி.). கொடியையிரண் டோதிமம் கௌவிப் பறக்க (செயங்.சத.68). கௌவிடக் கொங்கை மினை நீத்து எம்பால் வரல் கண்டிருந்தே (கபிலை.கோவை 24). எழுகதிர்ப் பரிவாய்க் கௌவ (குசேலோ.297). பிணங்களின் நிணங்கள் கௌவ (வேதாளக்.வர.16). கௌவிய புல்லையும் தின்ன வொட்டீர் (மலரும்.518). அரவு கௌவிய தேரையை மீட்டென ... கரையேற்றிய தோன்றால் (இரட்சணிய யாத்.1,11,35). 3.கடித்து இழுத்தல். சோர்ந்த குடர் கௌவ (காரைக்.பதி.2,1). 4.கலத்தல். திவ்விய நரம்பும் ... எழாலுந் தம்மிற் கௌவிய நீர வாகிக் காளையர் செவிக் காலோடி (திருவிளை.பு.நகரச்.52). 5.உண்ணுதல். கௌவு நீரதொத்து (சீவக.2831). 6.மடித்தல். எயிறமுந்தச் செவ்வாய் கௌவி வாளுரீ இனானே (சீவக.2247).

கௌவுகண் பெ. கீழ்ப்பார்வை. கௌவுகண் போட்டுப் பார்க்கிறான் (நாஞ்.வ.).

கௌவுடு பெ. தங்கத்தில் கட்டிய உருத்திராட்ச மணி. (நகர.வ.)

கௌவுதுடி பெ. சுவைக்கோல், கவரானகழி. (வின்.அக.)

கௌவை[1] பெ. 1.ஒலி. குயிற் கௌவையிற் பெரிதே (ஐங்.369). கனை சிலை சும்மை கௌவை கம்பலை (நன்.459). தனித்து இருப்பார் உறக்கம் காரணமாக எழுந்த கௌவை கேளாது வரைந்தெய்திய (தொல். பொ.107 நச்.). மங்கல வணிக ளாகக் கௌவைமங் கலங்க ளார்ப்பக் கடிநகரெங்கும் பொங்க (திருவிளை. பு.11,22). பைம்பொன் மாமதில் ... கௌவைகொள் திருநகர்க் காட்சித் தாயதே (கந்தபு.4,4,370). கௌவையங் கடல் முகட்டில் (செ.பாகவத.8,8,14). கௌவை நெடுந்திரைக் கங்கை (சிவஞா.காஞ்சிப்பு. தழுவ.325). 2.பலர் சேர்ந்து கூக்குரலிடும் ஒலி. (திருநெல்.வ.) 3.வெளிப்பாடு. கற்போடு புணர்ந்த கௌவை (தொல்.பொ.41). கற்பொடு புணர்ந்த கௌவையை வகைத்தே (நம்பியகப்.183). நாடறியக் கௌவை யொருங்கு (தொல்.சொல்.245 சேனா.). 4.அலர். சேரியம் பெண்டிர் கௌவையும் ஒழிக (அகநா.65,4). பெருங் கௌவை ஆகின்று நம் மூரவர்க்கு (கார் நாற்.39). ஊரறி கௌவை தரும் (திணைமொழி.7). கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட (தொல்.பொ.44 இளம்.). ஊரவர் கௌவை எருவாக (குறள்.1147 பரிமே.). காதலர் யாம் வேண்டும் கௌவை எடுக்கும் இவ்வூர் (முதுமொழி மேல் 168). 5.பழிச்சொல். கௌவை யாகின்றது ஐயநின் நட்பே (நற்.354). கல்லென் கௌவை எழா அக்காலே (ஐங். 131). யாம் வேண்டும் கௌவை எடுக்கம் இவ்வூர் (குறள். 1150). கௌவை அகற்று (ஆத்திசூ.43). கௌவைபடாது உலகம் காத்த கண்ணன் (ஆதி.வ.கோவை 51). கௌவை சொல்லினெவ்வருக்கும்பகை (கொன்றைவே. 25). வழுதி தன்னுள்ளே கௌவை யுறவே கருதினான் (பாரிகாதை 356). 6.துன்பம். கௌவை வேந்தனுங் காற்றொலி யஞ்சி (பெருங்.1,44,72). கௌவை இல் உலகு எய்துதல் கண்டதே (வளையா.32). கௌவை வினை யகற்றி (இறைவாச.பு.19). கௌவையில் காலச் செந்தீப் பிரான் (சிவஞா. காஞ்சிப்பு.கச்சி.18). மின்னார் அயினிகொடு வரவாங் கௌவைத் தவிர்த்த ... எய்தினர் மாநகர்க்கே (கபிலை. கோவை 76). கௌவையறச் செங்கமலத் தோனை நோக்கி (ஆளவந்.காஞ்சிப்பு. 363). நம்மைக் கவ்விய கௌவையும் கவலையும் (மனோன்மணீ.5,3,142). கௌவை யின்றிக் கருத்தாய் வளர்ந்த ... மங்கை (பணிமொழி 5,3,72). 7.துக்கம். கடுங்கொலை கண்டே (தக்கயாகப்.553). 8.வருத்தம்.

தமியர் உறங்கும் கௌவை இன்றாய் (குறுந்.34). 9.கலக்கம். கௌவை காட்டுங்கன்ம வருத்தத்தை மாற்ற வோர் மாற்றங் கொடாய் (திருக்குற்றா.மாலை 18). 10.கள். (பிங்.1146) 11.ஆராவரம். கலை ... கொண்டல் கோதை கௌவை எனவும் (இலக்.வி.ப.186 உரை).

கௌவை² பெ. 1.காரியம். (யாழ்.அக.) 2.ஆயிலியம். கௌவை ஆயிலியப் பேர் (சுகர்நாடி ப.110). 3.எள்ளிளங்காய். (வட.நி.620)

கௌவைமரம் பெ. விலங்குகள் அடைபுக்குள் வாராமல் தடுக்குங் கட்டை. (நாட்.வ.)

கௌள சந்திரிகா பெ. (இசையி.) சேனாவதி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.108)

கௌளபஞ்சமம் பெ. (இசையி.) வருணப்பிரியா என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.157)

கௌளம் பெ. 1.சக்தியை வாம தந்திரமுறைப்படி பூசிக்கும் ஆகம முறை. மானுட சித்தர் செய்த கௌள யாமளங்களாதி வானமர் வாம தேவி மகிழ் வணம் (சீவயா.65). 2.(இசையி.) இராக வகை. (பரத.இராக.55)

கௌளமாளவி பெ. (இசையி.) தானரூடி என்னும் இராகத்தின் கிளை இராகங்களுள் ஒன்று. (புதிய இரா.ப.107)

கௌளி¹ பெ. 1.பல்லி. கௌளி சத்தமிட்டுன் வலப்புறத்திற் கத்துதல் கேள் (சரபேந்திர.குற.49). கௌளியின் சாத்திரத்தை ஆராய்ந்து பாரடி (பவளக்.மாலை ப.49). வண்டுலாவு சோலை சூழ் மல்லி வளநாடியே வாசல் கௌளி சொல்லுது (அரையர்.ப.51).

கௌளி² பெ. (இசையி.) ஓர் இராகம். (பரத.இராக.50)

கௌளிக்கட்டாய்ச்சொல்லு-தல் 5வி. குறிசொல்லி ஏமாற்றுதல். (வட்.வ.)

கௌளிக்கட்டு பெ. →கௌளிக்காதல். (செ.ப.அக.)

கௌளிக்காதல் பெ. நன்மை தீமைகளை அறிவிக்கும் பல்லிச்சத்தம். (வின்.அக.)

கௌளிச்சொல் பெ. →கௌளிக்காதல். (வட்.வ.)

கௌளிசாத்திரம் பெ. பல்லிச்சொற்குப் பலன் கூறும் நூல். (செ.ப.அக.)

கௌளிபத்திரம் பெ. வெள்ளை வெற்றிலை வகை. (வட்.வ.)

கௌளிபந்து பெ. 1.(இசையி.) ஓர் இராகம். (செ.ப.அக.) 2.(இசையி.) பதினைந்தாம் மேளம் மாயா மாலை கௌளத்தில் பிறந்த ராகம். (செ.ப.அக.)

கௌளிபாத்திரம் பெ. 1.தேங்காயோட்டினால் செய்யப் பட்டுத் துறவிகள் நீர் அல்லது உணவு கொள்ள உபயோகிக்கும் பாத்திரம். (செ.ப.அக.) 2.மஞ்சள் நிறமான காய்கள் காய்க்குந் தெங்கு வகை. (முன்.)

கௌற்று பெ. கீழ்வாதம். (உடற்.சொற்.)

கௌனம்¹ பெ. அப்பிரகம். (குண.2 ப.297)

கௌனம்² பெ. (இசையி.) ஓரிராகம். (யாழ்.அக.)

ங்

ங் 'ங்' எனும் மெய்யும் 'அ' எனும் உயிரும் இணைந்த கூட்டெழுத்து ங் + அ = ங

ங்¹ பெ. ஙகரமெய்யெழுத்து. கசதப ஙஞநம ஈரொற்றாகும் (தொல்.எழுத்.48).

ங்² பெ. குறுணியைக் குறிக்கும் குறி. (செ.ப.அக.)

ஙகரம் பெ. குறுணியளவு. (தைலவ.6)

ஙகாரம் பெ. 1.ங் என்பதன் ஒலிவடிவம். ககார ஙகாரம் முதல்நா அண்ணம் (தொல்.எழுத்.89). 2.காரம் என்னும் சாரியை பெற்று வரும் ங் முதலா கெழுத்து. ஙகாரமொடு தோன்றும் (தொல்.எழுத்.29).

ஙனம் இ.சொ. சுட்டெழுத்துக்களை ஒட்டித் தன்மை, இடம் முதலிய பொருள்களைத்தரும் இடைச்சொல். (நன்.106.சங்.)

ஙொக்காள் பெ. உன் அக்கா. (கிளைமொழியி.49)

ஙொண்ணென் பெ. உன் அண்ணன். (கிளை மொழியி.49)

ஙொப்பென் பெ. உன் அப்பா. (கிளைமொழியி.48)

ஙொம்மா பெ. உன் அம்மா. (கிளைமொழியி.49)